ஊராட்சி நடைமுறை நூல்

பாகம் II—ஊராட்சி ஒன்றிய மன்றங்கள்

(1966, அக்டோபர் 1ஆம் தேதி வரையில் திருத்தப்பட்டது)

©
தமிழ்நாடு அரசு
1973

விலை ரூ. 12·90

தமிழ்நாடு அரசாங்கத்திற்காகத் தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத்துறை
இயக்குநரால் அச்சிடப்பட்டது.

ஊராட்சி நடைமுறை நூல்

பாகம் II—ஊராட்சி ஒன்றிய மன்றங்கள்

(1966, அக்டோபர் 1 ஆம் தேதி வரையில் திருத்தப்பட்டது)

©

தமிழ்நாடு அரசு

1973

பொருளடக்கம்.

பாகம் II—ஊரராட்சி ஒன்றிய மன்றங்கள்.

அத்தியாயம் I.

அமைப்பும் கட்டுப்பாடும்.

	பத்திகள்	பக்கங்கள்
பொது		
அலுவல் நடத்தும் விதம்		23
ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தலைவர்களையும் துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுப்பது ..	2	57
ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் தலைவரை இடைக் கேள்விகள் கேட்பது	3	76
ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டங்களில் தீர்மானங்கள் கொண்டு வருவது ..	4	78
தலைவருடைய அலுவல்கள் பிறரைச் சேருவது.	5	83
ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவரும் துணைத் தலைவரும் உறுப்பினர்களும் பதவி விலகல்	6	83
வெளியேறும் தலைவர் முதலியவர்களிடமிருந்து, ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உடைமைகளை வாங்கி வைத்துக் கொள்வதற்குரிய அதிகாரி.	7	84
ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தங்கள் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும், தங்கள் மன்றங்களின் உறுப்பினர்களுக்கும் பயணப்படி கொடுப்பது.	8	84
தேர்தல்அதிகாரிகள்	9	92
சிலபோதுகளில் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது ..	10	92
ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தொடர்பான தேர்தல் தகராறுகளைத் தீர்த்து வைப்பது ..	11	93

506-18—1a

	பத்திகள்	பக்கங்கள்
தேர்தல் இரகசியத்தை வெளிப்படுத்துவது ..	12	102
அமலில் இருக்கிற சில ஒப்பந்தங்களையுடைய ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களுடைய தகவின்மையை நீக்குவது ..	13	102
உறுப்பினர்களின் தகவின்மை பற்றிய ஐயப்பாடுகளைத் தீர்ப்பதற்குரிய நீதிமுறை அதிகாரி ..	14	103
தங்கள் கட்டுப் பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுக்கு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் விடுமுறைகள் வழங்குவது	15	103
ஏதேனும் தகவல் முதலியவை கேட்டனுப்ப ஆணையாளருக்குள்ள அதிகாரம்	16	104
நடவடிக்கைக் குறிப்புகள் அல்லது பதிவுகளுக்குப் படிகள் வழங்குவது	17	104
விளம்பரம் அல்லது அறிவிக்கையை வெளியிடும் விதம்.	18	106
ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் ஆணையாளர், அலுவலர்கள் ஆகியோருடைய கையொப்ப அச்சுக்களின் பயனீடு	19	108
நுழைவதற்கு ஆய்வு செய்வதற்குமான அதிகாரங்கள் பற்றிய வரையறைகளும் கட்டுப்பாடும்	20	108
தணிக்கையாளர்கள், ஆய்வு அலுவலர்கள், மேற்பார்வை அலுவலர்கள் முதலியோருடைய அதிகாரங்கள்	21	110
ஆய்வாளர், மாவட்ட ஆட்சியாளர் ஆகியோருடைய நெருக்கடிக்கால அதிகாரங்கள் மீதான கட்டுப்பாடு	22	112
கிராம அலுவலர்களிடமிருந்து கேட்டனுப்பக் கூடிய தகவல்	23	112
ஆணையாளர் ஆவணங்களைத் தாக்கல் செய்தல்	24	113
அறிக்கைகள் அல்லாத வேறு ஆவணங்களைச் சேர்ப்பிக்கும் விதம்	25	113
ஆணையாளருக்கும் நியமனக் குழு உறுப்பினர்களுக்கும் இடையே கருத்து வேற்றுமை இருந்தால் பின்பற்ற வேண்டிய நடைமுறை ..	26	114

அத்தியாயம் II.

வரவு-செலவுத் திட்டம்—ஆட்சி அறிக்கை—தணிக்கை.

	பத்திகள்	பக்கங்கள்
வரவு செலவுத் திட்டமும், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் சம்பந்தமாக நிதிகளின் ஒதுக்கீடும்	27	117
ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் ஆட்சி அறிக்கைகளைத் தயாரித்து அனுப்புதல்	28	139
ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தணிக்கை அறிக்கைகளை வெளியிடுவதும் தீர்வு செய்வதும்	29	191
பொறுப்பு ஏற்கும்படி செய்வதையும் ஒப்புக் கொள்ள மறுப்பதையும் பற்றிய விதிகள் ..	30	197

அத்தியாயம் III.

பணியாளர் தொகுதி.

தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் பணியாளர் தொகுதிகள் (தேசியக் காப்புறுதியைப் பாதுகாப்பது) பற்றிய விதிகள். ..	31	235
இரண்டு அல்லது பல ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்காகப் பொதுவான அலுவலர் அல்லது பணியாளரை நியமிப்பது	32	237
ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோருடைய தனிப்பட்ட நடத்தை.	33	246
ஊராட்சி ஒன்றியக் குழுப் பணியாளர் தொகுதியின் உரிமைக் கோரிக்கைப் பண நிலுவைகளைக் கொடுப்பது.	34	272
ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் பணியாளர் தொகுதி சம்பந்தமாக விதி அல்லது ஒழுங்கு முறையைத் தளர்த்த அரசினருக்குள்ள அதிகாரம்.	35	275
ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர்களையும் பணியாளர்களையும் மாற்றுவது ..	36	275
ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்குட்பட்ட பூங்காக் கண்காணிப்பாளர்களின் தகுதிகளை நிர்ணயிப்பதற்கான விதி.	37	280

	பத்திகள்	பக்கங்கள்
ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குட்பட்ட நில அளவையாளர்களின் தகுதிகளை நிர்ணயிப்பதற்கான விதி	38	280
ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்களும் பணியாளர்களும் வெறி விலங்குக் கடி மருத்துவம் செய்து கொள்ள, அவர்களுக்கு விடுப்பும் விடுப்புப்படிகளும் வழங்குவதை முறைப்படுத்துவதற்கான விதி.	39	282
தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (பணியாளர் தொகுதி) விதிகள்	40	285
ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குட்பட்ட பணியாளர் தொகுதிகளில் பின்னிலை வகுப்பினர்களுக்கும் அட்டவணையில் கண்ட இனங்களுக்கும் அட்டவணையில் கண்டபடி பழங்குடிகளுக்கும் நியமனங்களை ஒதுக்கி வைப்பது பற்றிய விதிகள் ..	41	309
ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தங்கள் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் பணிக் கொடைகள் வழங்குவதை முறைப்படுத்துவதற்கான விதிகள்	42	324
கால்நடை மருத்துவர்களின் நியமனத்தையும் தகுதிகளையும் பற்றிய விதி	43	336
தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியப் பணியமைப்பில் உள்ளவரை (நியமிப்பதையும் தண்டிப்பதையும்) பற்றிய விதிகள்	44	336
தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்களின் வருங்காலச் சேம நிதி விதிகள்	45	351

அத்தியாயம் IV—வரிகளையும் மற்ற வருவாய்களையும் விதிப்பதும் வசூலிப்பதும்.

ஊராட்சிப் பரப்புகளில் நெடுஞ்சாலை—இராமப் பொதுப் பணித் துறையினரிடம் உரித்தாக்கப் பட்டுள்ள சாலை ஓரங்களில் உள்ள பந்தல்களுக்கும் தற்காலிகக் கட்டுக்கோப்புகளுக்கும் உரிமம் வழங்குவது	46	375

	பத்திகள்	பக்கங்கள்
பொது அல்லது தனியார் அங்காடி சம்பந்தமாக அதன் அனுபவ பாத்தியதை சம்பந்தமாக ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது ஆணையாளர் செலுத்தக்கூடிய அதிகாரங்கள்	47	377
தனியார் அங்காடிகளின் கணக்குகள்—வைத்து வருதல், தணிக்கை, ஆய்வு	48	381
உரிமங்கள், அனுமதிகள் முதலியவற்றின் படிவமும் உள்ளடக்கங்களும்	49	384
இயந்திர நிறுவனம்—அனுமதியினின்றும்விலக்கு	50	387
மின்சாரத்தினால் அல்லது வேறு ஆற்றலினால் செலுத்தப்படும் யந்திரங்களுக்கான பெறும் உரிமக் கட்டணம்	51	387
உரிமங்களுக்கும் அனுமதிகளுக்குமான விண்ணப்பங்களின் மீதான ஆணைகளை அனுப்புதற்குரிய காலவரையறை	52	393
ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் குடிமராமத்து செய்வது பற்றிய வரையறைகளும் கட்டுப்பாடும்—ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் கட்டணங்களை விதித்து வாங்குவது	53	393
குத்தகைதாரர்களுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் தள்ளிக்கொடுப்பது (வஜா வழங்குவது) ..	54	397
பொதுச்சாலைகளில் அல்லது அவைகளின் மீதுள்ள தடங்கல்களுக்குத் தடை, ஆக்கிரமிப்புகளை அகற்றுவது முதலியன	55	398
ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குச் சேர வேண்டிய தொகைகளை வசூலிப்பது	56	406
வசூலிக்க முடியாத வரிகள், கட்டணங்கள் முதலியவற்றைத் தள்ளுபடி செய்ய அதிகாரம்—வரையறைகளும் கட்டுப்பாடும்	57	442
III—ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட (i) பகுதியின் காரியங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி	58	444
உரிமங்களையும் அனுமதிகளையும் வழங்குவதைத் தடுப்பதற்கான அல்லது முறைப்படுத்துவதற்கான விதிகள்	59	444

	பத்திகள்	பக்கங்கள்
அத்தியாயம் V—வரவினங்களும் செலவும்.		
ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் வரவினங்களும் செலவும்	60	462
ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் வெளியார் ஒப்பளிப்பின்றிச் செய்தற்குரிய வழக்குச் செலவுகளுக்கு வரையறை	61	485
சிலவற்றில் வழக்கறிஞர் நியமனமும் கட்டணங்கள் செலுத்துவதும்	62	87
அத்தியாயம் VI—அரசினர் பொதுப் பணிகளும் பலவகையும்.		
தமிழ்நாடு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் (அமைப்புப் படங்கள் மதிப்பீடுகள் முதலியவற்றைத் தயாரிப்பது) பற்றிய விதிகள் ..	63	488
தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் ஒப்பந்தங்கள் (முறையும் நிபந்தனைகளும்) பற்றிய விதிகள்	64	498
உதவுபொருட்கள் சரக்குகள் முதலியவற்றை ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு வழங்குவது	65	518
குற்றங்களை இணக்கம் செய்து கொள்ளுதல் ..	66	522
மேல் முறையீடுகளுக்கான காலவரையறை ..	67	526
ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் துணைச் சட்டங்கள் செய்வது	68	527
அசையாப் பொருளை அடைவதும் மாற்றுவதும்	69	531
பொதுச் சாலைகள், காட்சிக் கடைகள், திருவிழாக்கள் ஆகியவற்றின் வகைப்பாடு ..	70	576
மரங்களைக் கள்ளத்தனமாக வெட்டுவது ..	71	581
பாசன அலுவல்களை ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு மாற்றுவது	72	582
இணை வளர்ச்சி ஆணையாளர், கூட்டு வளர்ச்சி ஆணையாளர் பற்றிக் குறிப்பீடுகளுக்குப் பொருள்கொள்ளும் முறை	73	611
ஊராட்சிகளிடம் உரித்தாக்கப்பட்டுள்ள நிலங்களில் கல்வெட்டியெடுக்கும் உரிமைகளின் பயனீட்டை முறைப்படுத்துவது	74	611

	பத்திகள்	பக்கங்கள்
ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் பெண்களையும் அட்டவணையில் கண்ட இனங்களைச் சேர்ந்தவரையும் அட்டவணையில் கண்ட பழங்குடிகளைச் சேர்ந்தவரையும் சேர்த்துக் கொள்வது ..	**75**	622
ஊராட்சி ஒன்றியங்களில் (நியமனக் குழு அல்லாத வேறு) குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றிய 1966 ஆம் ஆண்டின் விதிகள்	76	623
ஊராட்சி ஒன்றியத்தின் நியமனக் குழுவுக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் ..	**77**	628

பாகம் II

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள்.

அத்தியாய I —அமைப்பும் கட்டுப்பாடும்.

அ. பொது.

(1) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகள் வெவ்வேறு பரப்புகளில் அமலுக்கு வரத் தொடங்கும் தேதிகள்.— 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 1 ஆவது, 196 ஆவது பிரிவுகள் இம் மாநிலத்தில் கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டைத் தாலுகா ஆகியவை தவிர மற்றெல்லாப் பரப்புகளிலும் 1959 சனவரி 31 ஆம் தேதியிலிருந்து அமலுக்குக் கொண்டுவரப்பட்டன.

(1959 சனவரி 30 ஆம் நாளிட்ட 188 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

அச் சட்டத்தின் மற்ற நிபந்தனைகள் அப் பரப்புகளில் 1960 சனவரி 1 ஆம் தேதி முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டன.

(1959 டிசம்பர் 29 ஆம் நாளிட்ட 2182 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(2) 1961 ஆம் ஆண்டின் 28 ஆவது தமிழ்நாடுச் சட்டம் அமலுக்குக் கொண்டுவரப்பட்ட தேதி.— 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்திலும், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டத்திலும் கண்ட நிபந்தனைகளை, ஆந்திரப் பிரதேசத்திலிருந்து மாற்றப் பட்ட பகுதிகளுக்கும், அதாவது (1959 ஆம் ஆண்டின் 56 ஆவது மையச் சட்டமாகிய) 1959 ஆம் ஆண்டின் ஆந்திரப் பிரதேசம் தமிழ்நாடு (எல்லைகள் மாற்ற) சட்டத்தில் கண்ட இரண்டாவது அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பிரதேசங்களுக்கும் பொருந்தும்படி செய்வதற்கான (1961 ஆம் ஆண்டின் 28 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1961 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட வருக்கும் ஆணைகளுக்கு மேலோங்குமென்றும், விளம்பரத்தில் ஏதேனும்

பொருந்தும்படி செய்யும்) சட்டம் 1961 அக்டோபர் 2 ஆம் தேதி முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டது.

(1961 செப்டம்பர் 30 ஆம் நாளிட்ட 2683 ஆம் எண்ணுள்ள கிராம முன்னேற்றம், உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1961 செப்டம்பர் 30 ஆம் நாளிட்ட 2684 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(3) **1961 ஆம் ஆண்டின் 27 ஆவது தமிழ்நாடு சட்டம் அமலுக்குக் கொண்டுவரப்பட்ட தேதி.**—(1961 ஆம் ஆண்டின் 27 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1961 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் (மாற்றப்பட்ட பிரதேசத்துக்கும் பொருந்தும்படி செய்தல்) ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (முதலமைப்புக்கான தனி நிபந்தனைகள்) திருத்தச் சட்டம் 1962 எப்ரல் 1 ஆம் தேதி முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டது.

(1962 மார்ச் 21 ஆம் நாளிட்ட 683 ஆம் எண் கிராம முன்னேற்றம், உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(4) **வட்டாரங்களுக்கு மீண்டும் எல்லை வகுத்தல்.**—ஊராட்சி ஒன்றிய மன்றங்களை அமைப்பதற்காக, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 7 (3) பிரிவின்படி விளம்பரங்கள் பிறப்பிக்கப்படுவதற்கு முன் பெரும்பாலானவற்றில் வட்டாரங்களுக்கு எல்லை வகுக்கும் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. சிலவற்றில் மீண்டும் எல்லை வகுக்கும் ஆணைகளில் சேர்க்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கும் விளம்பரங்களில் வெளியிடப்பட்ட பிரதேசங்களுக்கும் மாறுபாடுகள் உள்ளன என்று தெரிய வந்திருக்கிறது. விளம்பரங்களின் காரியங்களுக்காக மாவட்ட ஆட்சியாளர் அனுப்பிய விவரங்களைச் சரியென்று கொள்ளலாமென அவர்கள் பொதுவாக வற்புறுத்தியிருக்கிறார்கள். விளம்பரங்களை வெளியிட்டதனால் செய்ய நேர்ந்த திருத்தங்களைச் சேர்த்துக் கொள்வதற்காக, மீண்டும் எல்லை வகுக்கும் ஆணைகளை மறுபடியும் பிறப்பிக்க வேண்டுமா என்னும் கேள்வி எழுப்பப் பட்டிருக்கிறது. 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு பிறப்பிக்கப்பட்ட விளம்பரம் சட்டத்தின் ஆற்றலுடையதென்றும், அச் சட்டத்தில் கண்டுள்ள நடை முறையைப் பின்பற்றி மற்றொரு விளம்பரத்தினால் அது திருத்தப்படுகிற வரையில் அதை அறுதியானதாகவும் முடிவானதாகவும் கருத வேண்டுமென்றும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகையால், இவ்விளம்பரங்கள் எல்லை வகுக்கும் ஆணைகளுக்குமேலோங்குமென்றும், விளம்பரத்தில் ஏதேனும்

மாறுதல் செய்ய வேண்டியிருந்தால், அச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி மற்றொரு விளம்பரம் வெளியிட வேண்டுமென்றும் கூட எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, விளம்பரங்களில் வெளியிடப் பட்ட விவரத்துக்கு ஒத்திருக்கும்படி மீண்டும் எல்லா வகுக்கும் ஆணைகளைப் புதிதாக வெளியிட வேண்டிய அவசியம் எதுவும் இல்லையெனவும், வட்டாரங் களின் பிரதேச அதிகார வரம்பின் காரியங்களுக்காக அவ்விளம்பரங்கள் முடிவானவை என்று கொள்ளவேண்டுமெனவும் அரசாங்கத்தார் கருதுகிறார்கள்.

ஊராட்சி ஒன்றிய மன்றங்களை அமைப்பது.—கீழ்க்கண்ட முதல் தொகுதி யைச் சேர்ந்த 75 ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் 1960 அக்டோபர் 2 ஆம் தேதி யிலிருந்து அமைக்கப்பட்டன.

(1960 செப்டம்பர் 19 ஆம் நாளிட்ட 1553 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் முதல் தொகுதி.

1. கே. வி. குப்பம்
2. ஆர்க்காடு
3. துரிஞ்சாபுரம்
4. கலசப்பாக்கம்
5. வேம்பாக்கம்
6. ஆரணி
7. போளூர்
8. பண்ணுருட்டி
9. ஓரத்தூர்
10. கள்ளக்குறிச்சி
11. சின்ன சேலம்
12. மேல்மலையனூர்
13. செஞ்சி
14. திருநாவலூர்
15. திருக்கழுக்குன்றம்
16. உத்திரமேரூர்
17. ஸ்ரீபெரும்பூதூர்
18. பூவிருந்தவல்லி
19 திருவள்ளூர்

20. கடம்பத்தூர்
21. பெரியநாயக்கன்பாளையம்
22. அவினுசி
23. பல்லடம்
24. திருப்பூர்
25. கோபிசெட்டிபாளையம்
26. சத்தியமங்கலம்
27. பெருந்துறை
28. ஈரோடு
29. மதுரை கிழக்கு
30. மதுரை மேற்கு
31. மேலூர்
32. உசிலம்பட்டி
33. டி. கல்லுப்பட்டி
34. வாடிப்பட்டி
35. அலங்காநல்லூர்
36. திருமங்கலம்
37. உதகமண்டலம்
38. சிங்கம்புணரி
39. திருவாடானை
40. பரமக்குடி
41. கமுதி
42. சிவகாசி
43. ஸ்ரீவில்லிபுத்தூர்
44. கரியப்பட்டி
45. ஹோசூர்
46. காவேரிப்பட்டணம்
47. தர்மபுரி
48. கொளத்தூர்
49. பெத்துநாய்க்கன்பாளையம்
50. நாமகிரிப்பேட்டை
51. கிருஷ்ணகிரி
52. கங்கவல்லி
53. இடைப்பாடி
54. கீவளூர்
55. திருத்துறைப்பூண்டி
56. வேதாரண்யம்

57. பட்டுக்கோட்டை.
58. கும்பகோணம்.
59. பாபநாசம்.
60. மாயூரம்.
61. சீர்காழி
62. கே. பரமத்தி.
63. குளித்தலை.
64. திருவரங்குளம்.
65. தொட்டியம்.
66. முசிரி.
67. லால்குடி.
68. வேப்பந்தட்டை.
69. தூத்துக்குடி.
70. கோயில்பட்டி.
71. சங்கரன்கோயில்.
72. குருவிக்குளம்.
73. சேரன்மகாதேவி.
74. பாப்பாக்குடி.
75. மானூர்.

மேற்படி சட்டத்தின்படிக்கான பல்வேறு விளம்பரங்கள் அரசிதழில் வெளியிடப்பட்ட தேதிகள் அடியில் தெரிவிக்கப்படுகின்றன :—

மேற்படி சட்டத்தின் 7 (1) பிரிவின்படிக்கான விளம்பரம்.	மேற்படிச் சட்டத்தின் 7 (3) பிரிவின்படிக்கான விளம்பரம்.	மேற்படிச் சட்டத்தின் 11 (1) பிரிவின்படிக்கான விளம்பரம்.
(1)	(2)	(3)
	முதல் தொகுதி	
1960 சனவரி 13-ஆம் நாளிட்ட மாநில அரசிதழின் தனி வெளியீட்டின் அ I பாகத்தில் வெளியிடப்பட்டது.	1960 ஏப்ரல் 13-ஆம் நாளிட்ட மாநில அரசிதழ் தனி வெளியீட்டின் I அ பாகத்தில் வெளியிடப்பட்டது.	1960 செப்டம்பர் 26-ஆம் நாளிட்ட மாநில அரசிதழ் தனி வெளியீட்டின் II–ஆம் பாகம் 2-ஆவது பிரிவில் வெளியிடப்பட்டது.

Recd Recd

அடியிற் கண்ட இரண்டாவது தொகுதியைச் சேர்ந்த 129 ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் 1961 ஏப்ரல் 14-ஆம் தேதி முதல் அமைக்கப்பட்டன.

ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் இரண்டாவது தொகுதி.

1. நெமிலி.
2. கணியம்பாடி.
3. காவேரிப்பாக்கம்.
4. சோளிங்கபுரம்.
5. திருப்பத்தூர்.
6. வாலாஜா.
7. சேத்துப்பட்டு.
8. செய்யாறு.
9. பேர்நரமல்லூர்.
10. கணை.
11. கோழியனூர்.
12. மரக்கானம்.
13. உளுந்தூர்ப்பேட்டை.
14. குறிஞ்சிப்பாடி.
15. மங்களூர்.
16. மேல்புவணகிரி.
17. நல்லூர்.
18. பரங்கிப்பேட்டை.
19. தியாகதுர்க்கம்.
20. கும்மிடிப்பூண்டி.
21. காஞ்சிபுரம்.
22. குன்றத்தூர்.
23. காட்டாங்கொளத்தூர்.
24. மதுராந்தகம்.
25. மீஞ்சூர்.
26. பூண்டி.
27. பரங்கிமலை.
28. ஊத்துக்கோட்டை.
29. வில்லிவாக்கம்.
30. அம்மாப்பேட்டை (கோயம்புத்தூர் மாவட்டம்.)
31. பவானி.
32. பவானிசாகரம்.
33. தாராபுரம்.

34. காங்கயம்.
35. கொடுமுடி.
36. குண்டாடம்.
37. மோடக்குறிச்சி.
38. மூலனூர்.
39. துக்கநாய்க்கன்பாளையம்.
40. வெள்ளக்கோயில்.
41. கிணத்துக்கடவு.
42. லட்சுமிநாய்க்கன்பாளையம்.
43. பொங்கலூர்.
44. சூலூர்.
45. தொண்டமுத்தூர்.
46. உடுமலைப்பேட்டை.
47. ஆத்தூர் I (செம்பட்டி).
48. ஆத்தூர் II (ரெட்டியார்சத்திரம்).
49. வத்தலகுண்டு.
50. திண்டுக்கல்.
51. கோடைக்கானல்.
52. நிலக்கோட்டை.
53. பழனி.
54. வேடசாந்தூர்.
55. ஆண்டிப்பட்டி.
56. போடிநாய்க்கனூர்.
57. செல்லம்பட்டி.
58. கள்ளிகுடி.
59. சேடப்பட்டி.
60. திருப்பரங்குன்றம்.
61. கூனூர்.
62. கூடலூர்.
63. கோட்டகிரி.
64. போகலூர்.
65. தேவகோட்டை.
66. காளையார்கோயில்
67. கல்லல்.
68. கடலாடி.
69. கண்ணன்குடி.

70. மானுமதுரை.
71. மண்டபம்.
72. முதுகுளத்தூர் .
73. இராமநாதபுரம்.
74. இராசசிங்கமங்கலம்.
75. இராசபாளையம்.
76. சாத்தூர்.
77. வேம்பக்கோட்டை.
78. விருதுநகர்.
79. வர்த்தராயிருப்பு.
80. பருகூர்.
81. மேச்சேரி.
82. மோரப்பூர்
83. பாப்பிரெட்டிப்பட்டி.
84. பெண்ணுகரம்.
85. வேப்பனப்பள்ளி.
86. ஊத்தங்கரை.
87. ஆத்தூர்.
88. பரமத்தி.
89. சேந்தமங்கலம்.
90. தலவாசல்.
91. திருச்செங்கோடு.
92. வாளப்பாடி.
93. ஆனைக்காரன் சத்திரம்.
94. கோட்டூர்.
95. குத்தாலம்.
96. முத்துப்பேட்டை.
97. செம்பனார்கோயில்.
98. நாகப்பட்டினம்.
99. ஆவுடையார்கோயில்.
100. அம்மாபேட்டை (தஞ்சாவூர் மாவட்டம்.)
101. பூதலூர்.
102. ஒரத்தநாடு.
103. சேதுபாவசத்திரம்.
104. திருப்பனந்தாள்.

105. திருவிடைமருதூர்.

106. ஆண்டிமடம்.

107. அரியலூர்.

108. மணிகண்டம்.

109. பெரம்பலூர்.

110. தாத்ன்தயங்கார்பேட்டை

111. துறையூர்.

112. திருமானூர்.

113. உப்பிலியபுரம்.

114. அரவக்குறிச்சி.

115. கரம்பக்குடி.

116. கீரனூர்.

117. தான்தோணி.

118. கருங்குளம்.

119. மேல நீலிடநல்லூர்.

120. புதூர்.

121. ஒட்டப்பிடாரம்.

122. சாத்தன்குளம்.

123. வாசுதேவநல்லூர்.

124. உடங்குடி.

125. ஆலங்குளம்.

126. இராதாபுரம்.

127. தென்காசி.

128. வள்ளியூர்.

129. கொடவாசல்.

(1961 ஏப்ரல் 7-ஆம் நாளிட்ட 1027 எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1961 ஏப்ரல் 10-ஆம் நாளிட்ட 1034 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

மேற்படிச் சட்டத்தின்படிக்கான பல்வேறு விளம்பரங்கள் அரசிதழில் வெளியிடப்பட்ட தேதிகள் அடியில் தெரிவிக்கப்படுகின்றன :—

மேற்படி சட்டத்தின் 7 (1) பிரிவின்படிக்கான விளம்பரம்.	மேற்படி சட்டத்தின் 7 (3) பிரிவின்படிக்கான விளம்பரம்.	மேற்படி சட்டத்தின் 11 (1) பிரிவின்படிக்கான விளம்பரம்.
இரண்டாம் தொகுதி		
1960 ஆகஸ்ட் 20 ஆம் நாளிட்ட மாநில அரசிதழ் தனி வெளியீட்டின் II ஆம் பாகம்—2 ஆவது பிரிவில் வெளியிடப்பட்டது.	1960 அக்டோபர் 2 ஆம் நாளிட்ட மாநில அரசிதழ் தனி வெளியீட்டின் II ஆம் பாகம்—2ஆவது பிரிவில் வெளியிடப்பட்டது.	1961 ஏப்ரல் 11 ஆம் நாளிட்ட மாநில அரசிதழ் தனி வெளியீட்டின் II ஆம் பாகம்—2 ஆவது பிரிவில் வெளியிடப்பட்டது.

மூன்றும் தொகுதியைச் சேர்ந்த அடியிற்கண்ட 155 ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் 1961 அக்டோபர் 2-ம் தேதி முதல் அமைக்கப்பட்டன.:—

Recd

மூன்றும் தொகுதியைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியக் குழுக்கள்.

வட ஆர்க்காடு மாவட்டம்.

1. கந்திலி.
2. வாணியம்பாடி.
3. ஆலங்கலம்.
4. காட்பாடி.
5. குடியாத்தம்.
6. பேர்ணும்பட்டு.
7. மாடனூர்.
8. அணைக்கட்டு.
9. வேலூர்.
10. திமிரி.
11. அரக்கோணம்.
12. புதுப்பாளையம்.
13. தண்ட்ராம்பேட்டை.
14. திருவண்ணமலை.
15. கீழ் பெண்ணுத்தூர்.

K'giri—2
Cuddalore—2
D.puri—

16. கஸ்தம்பாடி.
17. வந்தவாசி.
18. தெள்ளாறு.
19. அனக்காவூர்.
20. செங்கம்.

தென் ஆர்க்காடு மாவட்டம்.

21. வல்லம்.
22. திருவெண்ணெய்நல்லூர்.
23. முகையூர்.
24. திருக்கோயிலூர்.
25. வானூர்.
26. மயிலம்.
27. ஒலக்கூர்.
28. கண்டமங்கலம்.
29. விக்கிரவாண்டி.
30. கடலூர்.
31. நெல்லிக்குப்பம்.
32. குமராட்சி.
33. காட்டுமன்னார்கோயில்.
34. விருத்தாசலம்.
35. கம்மாபுரம்.
36. ரிஷிவந்தியம்.
37. சங்கராபுரம்.

செங்கல்பட்டு மாவட்டம்.

38. திருவொற்றியூர்.
39. வாலாஜாபாத்.
40. திருப்போரூர்.
41. சித்தாமூர்.
42. வாத்தூர்.
43. அச்சிறுபாக்கம்.
44. சோழவரம்.

கோயம்புத்தூர் மாவட்டம்.

45. பெருந்துறை II
46. ஊத்துக்குழி.

47. நம்பியூர்.
48. தாளவாடி.
49. ஆந்தயூர்.
50. அன்னூர்.
51. காரமடை.
52. பேரூர்.
53. சிங்காநல்லூர்.
54. சிர்கார்சாமக்குளம்.
55. மதுக்கரை.
56. குடிமங்கலம்.
57. மடத்துக்குளம்.
58. பொள்ளாச்சி.
59. ஆனைமலை.

மதுரை மாவட்டம்.

60. தெங்கரை.
61. தேனி.
62. சின்னமனூர்.
63. உத்தமபாளையம்.
64. கம்பம்.
65. சாணார்பட்டி.
66. வடமதுரை.
67. பாளையம்.
68. தொப்பம்பட்டி.
69. ஒட்டன் சத்திரம்.
70. மேலூர் II
71. நத்தம்.

இராமநாதபுரம் மாவட்டம்.

72. அருப்புக்கோட்டை.
73. திருச்சுழி.
74. நரிக்குடி.
75. இளையான்குடி.
76. திருப்புவனம்.
77. சிவகங்கை.
78. திருப்பத்தூர்.

79. சாக்கோட்டை.
80. திருப்புல்லணை.

சேலம் மாவட்டம்.

81. சூலகிரி.
82. கெலமங்கலம்.
83. தளி.
84. பாலக்கோடு.
85. நல்லம்பள்ளி.
86. ஹரூர்.
87. நங்கவல்லி.
88. ஓமலூர்.
89. தாரமங்கலம்.
90. காடையம்பட்டி.
91. காரிப்பட்டி.
92. வீரபாண்டி.
93. சேலம்.
94. ஏர்க்காடு.
95. பனமரத்துப்பட்டி.
96. இராசிபுரம்.
97. வெண்ணந்தூர்.
98. புதுச்சத்திரம்.
99. எருமைப்பட்டி.
100. நாமக்கல்.
101. மோகனூர்.
102. கபிலமலை.
103. கொல்லிமலை.
104. பள்ளிப்பாளையம்.
105. மல்லசமுத்திரம்.
106. எளச்சிபாளையம்.
107. மக்டொனல்டு சத்திரம்.
108. சங்ககிரி.
109. கொங்கணாபுரம்.

தஞ்சாவூர் மாவட்டம்

110. தஞ்சாவூர்.
111. திருவையாறு.
112. திருவோணம்.
113. மதுக்கூர்.
114. பேராவூருணி.
115. அரந்தாங்கி.
116. திருமருகல்.
117. நன்னிலம்.
118. கொரடாச்சேரி.
119. திருவாரூர்.
120. மன்னார்குடி.
121. நீடாமங்கலம்.
122. தலைநாயர்.
123. வலங்கிமான்.
124. கரூர்.
125. கிருஷ்ணராயபுரம்.
126. மணப்பாறை.
127. வையம்பட்டி.
128. மருங்காபுரி.
129. கடவூர்.
130. அரிமனம்.
131. திருமயம்.
132. பொன்னமராவதி.
133. அன்னவாசல்.
134. விராலிமலை.
135. புள்ளம்பாடி.
136. மனச்சநல்லூர்.
137. ஆலத்தூர்.
138. வரலூர்.
139. ஜயங்கொண்டான்
140. செந்துறை.
141. டி. பாலூர்.
142. திருவரம்பாடி.
143. ஸ்ரீரங்கம்.

திருநெல்வேலி மாவட்டம்

144. திருச்செந்தூர்.
145. ஆழ்வார்திருநகரி.
146. கயத்தாறு.
147. ஸ்ரீவைகுண்டம்.
148. விளாத்திக்குளம்.
149. நாங்குனேரி.
150. கனக்காடு.
151. அம்பாசமுத்திரம்.
152. கடையம்.
153. பாளையங்கோட்டை.
154. கடையநல்லூர்.
155. கீழப்பாவூர்.

(1961 செப்டம்பர் 22 ஆம் நாளிட்ட 2548 ஆம் எண் கிராம முன்னேற்றம்— உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1961 செப்டம்பர் 25 ஆம் நாளிட்ட 2587 ஆம் எண் கிராம முன்னேற்றம்— உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1961 செப்டம்பர் 25 ஆம் நாளிட்ட 2588 ஆம் எண் கிராம முன்னேற்றம்— உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

மேற்படி சட்டத்தின்படிக்கான பல்வேறு விளம்பரங்கள் அரசிதழில் வெளியிடப்பட்ட தேதிகள் அடியில் தெரிவிக்கப்படுகின்றன :—

மேற்படி சட்டத்தின் 7 (1) பிரிவின்படிக் கான விளம்பரம்.	மேற்படி சட்டத்தின் 7 (3) பிரிவின்படிக் கான விளம்பரம்.	மேற்படி சட்டத்தின் 11 (1) பிரிவினபடிக் கான விளம்பரம்.
மூன்றும் தொகுதி		
1961 பிப்ரவரி 27 ஆம் தேதியுள்ள மாநில அரசிதழ் தனி வெளியீட்டின் II ஆம் பாகத்தின் 2 ஆவது பிரிவில் வெளியிடப்பட்டது.	1961 எப்ரல் 2 ஆம் தேதியுள்ள மாநில அரசிதழ் II ஆம் பாகத்தின் 2 ஆவது பிரிவில் வெளியிடப் பட்டது.	1961 செப்டம்பர் 27 ஆம் தேதியுள்ள மாநில அரசிதழ் தனி வெளியீட்டின் II ஆம் பாகத்தின் 2 ஆவது பிரிவில் வெளியிடப் பட்டது.

(5) (1958 ஆம் ஆண்டின் XVIII ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டத்தின்படிக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் இதனால் கட்டளையிடுவது என்னவென்றால்—1961 அக்டோபர் 2 ஆம் தேதிக்கு முன் மேற்படி சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்டு அமலில் இருந்துவரும் எல்லா விளம்பரங்களும் ஆணைகளும் (1959 ஆம் ஆண்டின் 56 ஆவது மைய சட்டமாகிய) 1959 ஆம் ஆண்டின் ஆந்திரப் பிரதேச-தமிழ்நாடு (எல்லைகள் மாற்றச்) சட்டத்தில் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பிரதேசங்களுக்கும் கூடிய வரையில் பொருந்தும்.

(1962 அக்டோபர் 30 ஆம் தேதியுள்ள 2353 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(6) (1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படிக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் இதனால் கட்டளையிடுவது என்னவென்றால்—1962 ஏப்ரல் 1 ஆம் தேதிக்கு முன் மேற்படி சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்டு அமலில் இருந்து வரும் எல்லா விளம்பரங்களும் ஆணைகளும் கன்னியாகுமரி மாவட்டத்துக்கும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டைத் தாலூகாவுக்கும் கூடிய வரையில் பொருந்தும்.

(1962 அக்டோபர் 30 ஆம் தேதியுள்ள 2354 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(7) (1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படிக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் இதனால் கட்டளையிடுவது என்னவென்றால்—1961 அக்டோபர் 2 ஆம் தேதிக்கு முன் மேற்படி சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்டு அமலில் இருந்துவரும் எல்லா விளம்பரங்களும் ஆணைகளும் (1959 ஆம் ஆண்டின் 56 ஆவது மைய சட்டமாகிய) 1959 ஆம் ஆண்டின் ஆந்திரப் பிரதேச-தமிழ்நாடு (எல்லைகள் மாற்றச்) சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பிரதேசங்களுக்கும் பொருந்தும்.

(1962 அக்டோபர் 30 ஆம் தேதியுள்ள 2355 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(8) **சேர்க்கப்பட்ட பிரதேசங்களில் ஊராட்சி ஒன்றிய மன்றங்களை அமைப்பது.**—சேர்க்கப்பட்ட பிரதேசத்திலுள்ள திருத்தணி, திருவாலங்காடு,

பள்ளிபப்பட்டை, இராமகிருஷ்ணராஜபேட்டை வட்டாரங்களில், 1961 ஆம் ஆண்டின் 28 ஆவது தமிழ்நாடு சட்டம் அமலுக்கு வந்த தேதியாகிய 1961 அக்டோபர் 2 ஆம் தேதி முதல் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக்கப் பட்டன.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது வட்டாரங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டாரத்திலும், 1961 ஆம் ஆண்டின் 27 ஆவது தமிழ்நாடு சட்டம் அமலுக்கு வந்த தேதியாகிய 1962 ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக்கப் பட்டன.

(9) **முதல் தொகுதி ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தொடக்கக் கூட்டத்தையும், தலைவர், துணைத் தலைவர் ஆகியோரின் தேர்தலையும் நடத்துவது பற்றிய விளக்க உரைகள்.**—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 7 (3) பிரிவின்படி அறிக்கையிடப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றுக்காகவும் 1960 அக்டோபர் 2 ஆம் தேதி முதல் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக்கப்படுமென்று குறிப்பிட்டு, அச்சட்டத்தில் கண்ட 11 (1) பிரிவின்படி விளம்பரம் ஒன்று பிறப்பிக்கப்படும். அந்த ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்கள் 1960 அக்டோபர் 2 ஆம் தேதியன்று தங்கள் பதவியை வகிக்கத் தொடங்குவார்கள். மேற்படி சட்டத்தின் 37 (2) பிரிவு சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுகிறது ; 1960 அக்டோபர் 2 ஆம் தேதியன்று அவர்கள் தங்கள் அலுவல் காரணமாகத் தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களாகி, அவற்றின் தலைவர்கள் ஆவார்களென்று அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் ஏழு முழுமையான நாட்களுக்குக் குறையாமல் முன்னதாக உறுப்பினர்களுக்கு அறிக்கை கொடுத்த பிறகு, தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு கூட்டம் கூட்ட வேண்டும். தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டத்துக்கு, கோட்ட ஆட்சியாளர் அலுவல் காரணமான தலைவர் என்னும் தமது முறைமை யில் தலைமை வகிக்க வேண்டும்.

கோட்ட ஆட்சியாளர் 1960 அக்டோபர் 2 ஆம் தேதியன்று ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்ட வேண்டுமென, மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் கோட்ட ஆட்சியாளர்களுக்கும் தெரிவிக்கப் படுகிறது. அக் கூட்டத்தைத் தொடக்கக் கூட்டமெனக் கருத வேண்டும். பஞ்சாயத்து ஒன்றிய மன்ற உறுப்பினர்களில் வயதில் மிகப் பெரியவர் இக்கூட்டத்துக்குத் தலைமை வகிக்க வேண்டும். அவர் முதலில் தாமே

பற்றுறுதி மொழி) விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும். அக் கூட்டத்துக்கு வந்துள்ள மற்ற உறுப்பினர்கள் அடியிற் கண்ட படிவத்தி லுள்ளபடி விசுவாசப் பிரமாணம் அல்லது பற்று உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

"அ.ஆ. என்னும் நான் இம்மன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பின ராக/என் அலுவல் காரணமாக உறுப்பினராகி இருப்பதால், சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட இந்திய அரசியல் அமைப்பில் உண்மையான நம்பிக்கையும் விசுவாசமும் (பற்றும்) கொண்டிருப்பேனென்றும், நான் இப்போது ஏற்கப் போகும் கடமையை நேர்மையாக நிறைவேற்றுவேன் என்றும் கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன்/மனப்பூர்வமாக உறுதி கூறுகிறேன்."

உறுதிமொழி (பிரமாணம்) எடுக்கும் வினைமுறை முடிந்தவுடனே, அக் கூட்டத்தில் தலைமை வகிக்கும் அலுவலர், அக் கூட்டத்துக்கு வந்திருக்கிற உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து, தகுதியான தேதியொன்றைத் தெரிந் தெடுக்க வேண்டும்; அவ்வாறு தெரிந்தெடுக்கையில், அத் தேதிக்கு முன், (அலுவல் முறைமையில் தலைவராயிருக்கிற) கோட்ட ஆட்சியாளர் அறிக்கை அனுப்புவதற்கும், தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் நடத்துவதற்கு உறுப்பினர்களுக்கு அறிக்கை அனுப்புவதற்காக மேற்படி சட்டத்தில் குறிப்பிட் டிருக்கிற ஏழு முழு நாட்கள் (கால) அளவு இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட வருவாய்த் துறைக் கோட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் இருந்தால், தலைவரைத் தேர்ந் தெடுப்பதற்கான கூட்டங்களுக்காக வெவ்வேறு தேதிகளை நிச்சயிக்க வேண்டும். அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட தேதியையொட்டி, அக் கூட்டத்தின் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் உறுப்பினர்கள் எல்லாருக்கும் கோட்ட ஆட்சியாளர்கள் சட்டபூர்வமான அறிக்கை யனுப்ப வேண்டும். மேற்படி சட்டத்தின் 37 (2) பிரிவைப் பார்க்கவும்.

அவசியமான செயலாற்றுவதற்காக, சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களுடைய பெயா களையும் முகவரிகளையும் சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளர்களுக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(1960 செப்டம்பர் 19 ஆம் தேதியுள்ள 1556 ஆம் எண் கிராம முன்னேற்றம்— உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(10) விசுவாசப் பிரமாணத்தின் (பற்றுறுதியின்) தமிழாக்கம்.—1960 செப்டம்பர் 19-ம் தேதியுள்ள 1556-ம் எண் ஊராட்சித் துறைப் பல்வகை அரசாணையின் 2-வது பாராவில், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்கள் தொடக்கக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய விசுவாசம் பற்றிய பிரமாணத்தின் அல்லது உறுதிமொழியின் படிவம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களில் பெரும்பாலோருக்கு ஆங்கிலம் நன்கு தெரியாததாகையால் அவ்வுறுப்பினர்கள் விசுவாசப் பிரமாணத்தைத் தமிழில் எடுத்துக் கொள்ளும்படி செய்யலாமென்று ஆலோசனை சொல்லப் பட்டிருக்கிறது. அரசினர் அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்கிறார்கள். விசுவாசப் பிரமாணத்தின் தமிழாக்கம் இணைக்கப்பட்டுள்ளது; இரண்டாவது, மூன்றாவது தொகுதிகளைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தொடக்கக் கூட்டத்தில் பயன்படுத்துவதற்காக, அது கோட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்பப்படுகிறது.

"(அ.ஆ.) என்னும் நான் இம்மன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இருப்பதால்/என் அலுவல் காரணமாக உறுப்பினராக இருப்பதால் சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட இந்திய அரசியலமைப்பில் உண்மையான நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டிருப்பேன் என்றும், நான் இப்போது ஏற்கப்போகும் கடமையை நேர்மையாக நிறைவேற்றுவேன் என்றும் கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறேன்/மனப்பூர்வமாக உறுதி கூறுகிறேன்.

(1960 அக்டோபர் 27 ஆம் தேதியுள்ள 1754 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(11) சட்டசபை உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுவது.—1960-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (முதல் அமைப்புக்கான தனி நிபந்தனைகள்) சட்டத்தில் கண்ட நிபந்தனைகளின்படி, ஊராட்சி ஒன்றிய மன்றத்தை அமைப்பதற்காக, 1958-ம் ஆண்டின் XXXVவது தமிழ்நாடு சட்டத்தில் கண்ட 11 (1) பிரிவில் குறிப்பிட்டிருக்கிற தேதியன்று ஊராட்சிகளின் தலைவர்களாகப் பதவி வகிப்பவர்கள் மட்டும், 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி முதல் தடவையாக ஒரு ஊராட்சி ஒன்றியத்துக்கு அமைக்கப்படும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களாயிருப்பார்கள். ஆகையால், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் தலைவர்கள், 1958-ம் ஆண்டின் XXXV -வது தமிழ்நாடு சட்டத்தின்படி முதல்

தடவையாக அமைக்கப்படும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களாய் விடுவார்கள் ; ஆகையால், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களாக, 1958-ம் ஆண்டுச் சட்டத்தில் கண்ட 12 (1) பிரிவின்படி சில பேர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை.

ஊராட்சி ஒன்றிய மன்றம் தன் உறுப்பினர்களிலிருந்து, நிர்ணயிக்கப்படக் கூடிய நடைமுறையின்படி அக்குழுவிற்குத் தலைவரையும் துணைத் தலைவரையும் தேர்ந்தெடுக்க வேண்டுமென, (1958-ம் ஆண்டின் XXXV -வது தமிழ்நாடு சட்டமாகிய) 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 36 (2) பிரிவில் சொல்லியிருக்கிறது.

சட்டசபை உறுப்பினராவது சட்டமன்ற உறுப்பினராவது, ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படலாமா என்னும் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. சட்டப் பேரவையின் ஓர் உறுப்பினர் ஓர் ஊராட்சியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு (1958-ம் ஆண்டின் XXXV -வது தமிழ்நாடு சட்டமாகிய) 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் தடை விதிக்கவில்லை. ஆகையால், ஓர் ஊராட்சியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சட்டப் பேரவை உறுப்பினர் ஊராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதி யுள்ளவராவார். தமது தலைவர் பதவி காரணமாக அவர், 1960-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (முதல் அமைப்புக்கான தனி நிபந்தனைகள்) சட்டத்தின்படி, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழுவின் உறுப்பினராகி விடுவார். ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர் என்னும் முறைமையில், அவர், 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 36 (2) பிரிவின்படி, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவர் தகுதி உள்ளவராகி விடுகிறார். ஊராட்சி களின் தலைவர்களாயிராத சட்டப் பேரவை உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களாக மாட்டார்கள்; ஆகையால் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்களாக அவர்களைத் தேர்ந்தெடுக்க முடியாது. ஆயினும், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களாயிராத சட்டப் பேரவை உறுப்பினர்கள் அந்தந்த மன்றங்களின் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை உள்ளவர்களாவார்கள்; ஆனால், வாக்களிக்கவோ, மன்றத்தின் தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படவோ உரிமை யுள்ளவர்களாகமாட்டார்கள். 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 12 (2) பிரிவைப் பார்க்கவும். (ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களாயிருக்கிற) சட்டப் பேரவை உறுப்பினர்கள், தாங்கள்

உறுப்பினர்களாயுள்ள மன்றத்தின் தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, 12 (2) பிரிவினால் தடை உண்டாகமாட்டாது.

(1960 செப்டம்பர் 21 ஆம் தேதியுள்ள 1557-ஆம் எண் உள்ளாட்சி துறைப் பல்வகை அரசாணை.

(12) முதல் முறையாக அமைக்கப்படும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களின் பதவிக் காலம்.—முதல் தடவையாக அமைக்கப்படும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களின் பதவிக்காலமானது, மாநில அரசினராவது அவர்களிடமிருந்து இதன்பொருட்டு அதிகாரம் பெற்றுள்ள ஓர் அலுவலராவது விளம்பர மூலமாகக் குறிப்பிடக்கூடியபடி இருக்க வேண்டுமென, (1960-ம் ஆண்டின் 17-வது தமிழ்நாடு சட்டமாகிய) 1960-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (முதல் அமைப்புக்கான தனி நிபந்தனைகள்) சட்டத்தில் 2 (1) (ஆ) பிரிவில் சொல்லியிருக்கிறது.

2. 1960-ம் ஆண்டின் 17-வது தமிழ்நாடு சட்டத்தின்படி ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களின் பதவிக் காலம் அரசினரால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதா, ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம் 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 19-வது பிரிவின் நிபந்தனைகளினால் முறைப்படுத்தப்படுமா என்னும் கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

3. 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தில் கண்ட 19-வது பிரிவின்படி, ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றின் உறுப்பினர்களின் பதவிக்காலம், அச்சட்டத்தில் வெளிப்படையாக வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறபடியன்றி மற்றப்படி, ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றையும் பொருத்தவரையிலும் ஆய்வாளர் அறிக்கையிடக்கூடிய தேதியன்று தொடங்கி ஐந்தாண்டுக் காலமாகும். ஊராட்சிகளில் இருப்பதைப் போலவே ஐந்தாண்டுக் காலத்தை நிச்சயிக்கும் மேற்படி நிபந்தனைகளின் கருத்து என்னவென்றால், ஊராட்சிகளின் உறுப்பினர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள் ஆகியோரின் தேர்தல்களும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினராகப் போகிறவருடைய தேர்தலும் ஒரே ஆண்டில் அடுத்தடுத்து நடத்தப்பட வேண்டுமென்பதும், அவர்களுடைய பதவிக் காலம் ஒரே தேதியன்று முடிவாக வேண்டுமென்பதுமேயாகும். ஆகையால், 1960-ம் ஆண்டின் 17-வது தமிழ்நாடு சட்டத்தின்படி முதல்தடவையாக அமைக்கப்படும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களின் பதவிக் காலம், 1963-ம் ஆண்டில் பலவற்றில் ஊராட்சி உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவாகும் ஏதாவதொரு காலவரம்பில் நிச்சயிக்கப்படும்.

4. முதல் தடவையாக அமைக்கப்படும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம், அம் மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலமென்று, 1960-ம் ஆண்டின் 17-வது தமிழ்நாடு சட்டத்தில் கண்ட 2 (1) (ஆ) பிரிவின்படி விளம்பரத்தினுல் குறிப்பிடப்பட்ட பதவிக் காலமாகவே இருக்கும். சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலமானது, 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 19-வது பிரிவை, 1960-ம் ஆண்டின் 17-வது தமிழ்நாடு சட்டத்தில் கண்ட 2 (1) (ஆ) பிரிவின்படி பிறப்பிக்கப்படும் விளம்பரத்துடன் சேர்த்து வாசித்து, மேற்படி 19-வது பிரிவின்படி தானுகவே நிச்சயிக்கப்படுமாதலால், சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலத்தைக் குறிப்பிடுவதற்கோ அதன் பொருட்டுத் தனியாக விளம்பரம் பிறப்பிப்பதற்கோ அவசியம் ஏதுமில்லை.

(1961 பிப்ரவரி 13 ஆம் தேதியுள்ள 19668–L2/61–2 எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

1. 1962 மார்ச் 27 ஆம் தேதியுள்ள 5306 Lதனி/62–4 எண் அரசுக் குறிப்பாணை.

2. 1963 சனவரி 22 ஆம் தேதியுள்ள 206917,Lதனி/62–4 எண் அரசுக் குறிப்பாணை.

3. 1963 சூன் 27 ஆம் தேதியுள்ள 107600,L தனி/63–2 எண் அரசுக் குறிப்பாணை.

(12–அ) 1961-ம் ஆண்டின் 27-வது தமிழ்நாடு சட்டத்தில் கண்ட 5-வது, 6-வது பிரிவுகளின் பரப்பு.—ஓர் ஊராட்சி ஒன்றியத்துக்கு முதல் தடவையாக அமைக்கப்படும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தில், 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 11 (1) பிரிவின்படி ஊராட்சி ஒன்றிய மன்றம் அமைக்கப்படும் தேதியன்று அம்மன்றத்திலுள்ள ஊராட்சிகளின் தலைவர்களாகப் பதவி வகிப்பவர்கள் இருக்க வேண்டுமென (1960-ம் ஆண்டின் 17-வது தமிழ்நாடு சட்டமாகிய) 1960-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (முதல் அமைப்புக்கான தனி நிபந்தனைகள்) சட்டத்தின் 2-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. ஆகையால், முதல் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினராயிருக்க ஒருவருக்கு இருக்கவேண்டிய தகுதி என்னவென்றுல் அந்த ஊராட்சி ஒன்றியத்துக்காக ஊராட்சி ஒன்றிய மன்றம் அமைக்கப்படும் தேதியன்று அவர் ஓர் ஊராட்சியின் தலைவராயிருந்திருக்க வேண்டுமென்பதேயாகும்.

2. மேற்படி சட்டத்துக்கு எழுத்துக்கு எழுத்து பொருள் கொண்டதனுல், அடியிற் கண்டவாறு சில முறைகேடுகள் தோன்றியுள்ளன.

(i) ஊராட்சி ஒன்றிய மன்றம் அமைக்கப்பட்ட தேதியன்று ஒருவர் ஓர் ஊராட்சியின் தலைவராயிருந்தார்; அக் காரணத்தினுலேயே அவர் அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினராகிவிட்டார்; பின்னர் அவர் சம்பந்தப்பட்ட ஊராட்சியின் தலைவராக அல்லது உறுப்பினராக இருக்கவில்லை; எனினும் அவர் தொடர்ந்து அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினராக இருந்து வந்தார்.

(ii) முதல் ஊராட்சி ஒன்றிய மன்றம் முதல் தடவையாக அமைக்கப்பட்ட தேதியன்று அந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒரு ஊராட்சித் தலைவர் பதவி காலியாயிருந்தது; பின்னர் அந்த ஊராட்சிக்கு ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தபோதிலும், அந்த ஊராட்சிக்கு அந்த ஊராட்சி ஒன்றிய படியுள்ள 1960-ம் ஆண்டின் 17-வது தமிழ்நாடு சட்டத்தில் கண்ட 2 (1)(அ)(i) அமைப்புப்படி அவர் அக்காலத்தில் தலைவராயிருக்கும் என்றும் அதனுல் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர் ஆகிவிடுகிருரென்றும் சொல்ல முடியாது.

3. 2 ஆவது பத்தியில் காட்டப்பட்டிருக்கிற நிலை, தற்காலிகத் தலைவர் நிலைமைக்கும் பொருந்தும்.

(1963 சனவரி 22 ஆம் தேதியுள்ள 206417/எல்/தனி 62-4 ஆம் எண் குறிப்பாணை.)

1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 169 (2) பிரிவின்படி ஊராட்சித் தலைவர் என்னும் முறைமையில் தமது அலுவல்களைச் செய்ய முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கிற அத்தலைவர், தலைவர் என்னும் முறைமையில் தமது அலுவல்களை மீண்டும் செய்யத் தொடங்க அனுமதிக்கப் படுகிற வரையில், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர் அலுவல்களைச் செய்ய முடியாது என்னும் ஊகம் சரியானது.

(1963 சூன் 27 ஆம் தேதியுள்ள 107600/எல்/தனி/63-2 ஆம் எண் குறிப்பாணை.)

1. அலுவல் நடத்தும் விதம்.—(1) அரசினர் ஆணையில் வேறுவிதமாய்க் கட்டளையிட்டாலன்றி, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலகம், சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் இருக்க வேண்டும்.

(2) விடுமுறை நாளென்று அரசினரால் அறிவிக்கப்பட்ட எந்த நாளிலும், மாவட்ட ஆட்சியாளரால் அறிவிக்கப்பட்ட வேறு உள்ளூர் விடுமுறை நாட்களிலும் கூட்டம் எதையும் நடத்தக் கூடாது.

(3) ஊராட்சி ஒன்றிய மன்றம் அவ்வாறு இடம் அமைத்துக் கொடுக்கப் பட்ட அலுவலகத்திலே, அலுவல் நடத்துவதற்காக, அது ஏற்படுத்தக்கூடிய நாள்களிலும் காலங்களிலும் கூட வேண்டும். மேலும் மன்றம் கூட வேண்டு மென்று தலைவர் கூறும் அத்தனை தடவைகளிலும் அது கூட வேண்டும்.

2. (1) கூட்டம் நடக்கப்போகும் நாளைப் பற்றியும் காலத்தைப் பற்றியும், அதில் நடத்தப்படப்போகும் அலுவலைப் பற்றியும் கூட்ட நாளுக்குக் குறைந்தது முழுமையாக ஐந்து நாட்களுக்கு முன்னதாக அறிக்கை கொடுக்கப் பட்டிருந்தாலன்றி, மற்றப்படி, கூட்டம் எதையும் நடத்தக் கூடாது.

(2) அவசர சந்தர்ப்பங்களில், தலைவர், இருபத்து நான்கு மணி நேரத்துக்குக் குறையாமல் அறிக்கை கொடுத்து ஒரு கூட்டத்தைக் கூட்டலாம்.

(3) ஆணையர், தலைவருடன் கலந்தாலோசித்து, கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்க வேண்டும். மன்றத்தின் ஆலோசனைக்குரியதென்று ஆணையர் கருதுகிற பொருளை அவர் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கலாம்; தலைவர் குறிப்பிடுகிற எப்பொருளையும் அவர் அதில் சேர்க்க வேண்டும். நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ள எப்பொருளைப் பற்றியேனும், ஒரு குறிப்பில் தமது கருத்துக்களை எழுதி வைக்க, தலைவருக்கும் ஆணையருக்கும் உரிமை உண்டு; அந்தக் குறிப்பினை, உறுப்பினர்களுக்குச் சுற்றறிக்கையின் மூலம் அறிவிக்க வேண்டும் அல்லது மன்றம் அப்பொருளைப் பற்றி ஆலோசனை செய்வதற்கு முன் அல்லது ஆலோசனை செய்யும் காலத்தில் அதற்கு முன் வைக்க வேண்டும்.

3. (1) மன்றத்தில் அந்தக் காலத்திலிருக்கிற உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாதவர்கள் எழுதிக் கேட்டுக் கொள்வதன் மேல் தலைவர் மன்றத்தின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும், ஆனால், அக் கூட்டம் நடத்தப்படப் போகிற காலத்தையும் நோக்கத்தையும் அந்த வேண்டுகோளில் குறிப்பிட்டிருக்க வேண்டும். அந்த வேண்டுகோளை, கூட்டத்தின் தேதிக்குக் குறைந்தது பத்து முழுமையான நாட்களுக்கு முன்னதாக ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே அலுவலக நேரங்களில், தலைவரிடமாவது அக் காலத்தில் அலுவலகத்தின் பொறுப்பு வகிக்கக் கூடிய வேறொருவரிடமாவது ஒப்புவிக்க வேண்டும்.

(2) அந்த வேண்டுகோள் ஒப்புவிக்கப்பட்டதிலிருந்து நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குள், அதில் குறிப்பிட்டுள்ள நாளன்று அல்லது அதற்குப் பிறகு மூன்று நாட்களுக்குள், தலைவர் கூட்டம் கூட்டத் தவறினால், அவ்

வேண்டுகோளில் கையெழுத்திட்டிருக்கிற உறுப்பினர்கள், 2 ஆவது விதியைச் சேர்ந்த (1) உள் விதியில் சொல்லப்பட்டிருக்கிற அறிக்கையை, மன்றத்தின் மற்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்தபிறகு அக் கூட்டத்தைக் கூட்டலாம்.

4. மன்றத்தின் எல்லாக் கூட்டங்களும் பொதுமக்கள் வரக் கூடியவை களாயிருக்க வேண்டும். ஆனால், தலைமை வகிக்கும் உறுப்பினர், குறிப்பிட்ட எச்சந்தர்ப்பத்திலேனும், சில காரணங்களுக்காக, பொதுவாக எல்லோரும் அல்லது குறிப்பிட்ட ஒருவர் கூட்டத்தை விட்டுப் போய்விட வேண்டுமெனக் கட்டளையிடலாம். மன்றம் கேட்டுக்கொண்டாலும் அவ்வாறே கட்டளையிட வேண்டும். 9 ஆவது விதியின்படி வைத்துவரப்படும் நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் அக் காரணங்களை எழுதி வைக்க வேண்டும்.

5. எந்தக் கூட்டத்திலும் மன்றத்தின் முன் வரக்கூடிய வினாக்கள் எல்லா வற்றையும் அக் கூட்டத்துக்கு வந்து வாக்களிக்கிற பெரும்பான்மை உறுப்பினர் கள் தீர்மானிக்க வேண்டும்; வாக்குகள் சமமாக இருக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தலைமை வகிக்கும் உறுப்பினருக்கு இரண்டாவது அல்லது முடிவு வாக்கு ஒன்று உண்டாகையால் அதை அவர் செலுத்த வேண்டும்.

6. நடைமுறைக் காலத்தில் மன்றத்திலிருக்கிற உறுப்பினர்களில், குறைந்தது மூன்றில் ஒரு பகுதியினரேனும் ஒரு கூட்டத்துக்கு வந்திருந்தா லன்றி அக் கூட்டத்தில் அலுவல் எதையும் நடத்தக் கூடாது.

7. ஒரு கூட்டத்துக்காகவென்று நிச்சயிக்கப்பட்ட காலத்துக்குப் பிறகு அரை மணி நேரத்துக்குள், குறைந்தபட்ச எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் வந்திராவிட்டால், வந்திருக்கிற எல்லா உறுப்பினர்களும் இன்னும் காத்திருப்ப தற்கு ஒப்புக் கொண்டாலன்றி, அக் கூட்டத்தை ஒத்தி வைக்க வேண்டும்.

8. மன்றத்தின் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு மூன்று மாதத்துக்குள் அதை மாற்றியமைக்கவோ ரத்து செய்யவோ கூடாது. ஆனால், இதன்பொருட்டுத் தனியாகக் கூட்டப்பட்டுள்ள ஒரு கூட்டத்திலே, ஒப்பளிக்கப் பட்ட எண்ணிக்கையுள்ள உறுப்பினர்களில் பாதிக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட மன்றத்தின் தீர்மான மூலமாக அவ்வாறு மாற்றியமைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம்.

9. மன்றத்தின் ஒவ்வொரு கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகளை எழுதி, இதற்கென வைத்திருக்க வேண்டிய ஒரு குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும்; தலைமை வகிக்கும் உறுப்பினராவது அவர் வந்திராவிட்டால்,, அங்கே வந்திருக்கிற உறுப்பினர்களில் ஒருவராவது அவற்றில் கையெழுத்துச் செய்ய

வேண்டும்; ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் எந்த ஓர் உறுப்பினரும், இச் சட்டத்தின் படி ஊராட்சி ஒன்றியத்துக்கு வரி செலுத்துகிற எவரும் நியாய மான எல்லாக் காலங்களிலும் கட்டணம் செலுத்தாமலும் ஊராட்சி ஒன்றியத் தின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியபடி அந்த நிகழ்ச்சிக் குறிப்பேட்டினை வைத்திருக்க வேண்டும்.

10. மன்றத்தின் நடவடிக்கைக் குறிப்புகளையும் ஆவணங்களையும் ஆணையர் தம் பொறுப்பில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்; மன்றம் பொது அல்லது தனி ஆணை மூலமாக நிச்சயிக்கக் கூடிய கட்டணம் செலுத்தப்படுவதன் பேரில், அவர், அந்த நடவடிக்கைக் குறிப்புகளுக்கும் ஆவணங்களுக்கும் படிகள் வழங்கலாம். 1872 ஆம் ஆண்டின் இந்திய சாட்சிய சட்டத்தின் 76 ஆவது பிரிவில் சொல்லியிருக்கிறபடி; ஆணையர்கள் படிகளுக்குச் சான்றிட வேண்டும்; அவ்வாறு சான்றிடப்பட்ட படிகளை மன்றத்தின் நடவடிக்கைக் குறிப்புகளை மெய்ப்பிப்பதற்கு அச் சட்டத்தைச் சேர்ந்த 78 ஆவது பிரிவில் கண்ட (5) உட்பிரிவின்படி பயன்படுத்துவதைப் போலவே, மன்றத்தின் ஆவணங்களை மெய்ப்பிப்பதற்கும் பயன்படுத்தலாம்.

11. 53 ஆவது பிரிவின்படி மன்றத்தால் அமைக்கப்படும் குழுக்கள் 1 ஆவது விதியின்படி ஊராட்சி ஒன்றியத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் அலுவலகத் தில் கூட வேண்டும்.

12. 53 ஆவது பிரிவின்படி மன்றத்தால் அமைக்கப்படும் அல்லது நியமிக்கப் படும் ஒவ்வொரு குழுவும் அதன் நடவடிக்கைகளை எழுத்து மூலம் பதிவு செய்து குறிப்புகளையும் எழுதி மன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1962 பிப்ரவரி 22 ஆம் தேதியுள்ள 435 ஆம் எண் கிராம முன்னேற்றம் —உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1962 நவம்பர் 5 ஆம் தேதியுள்ள 1400 ஆம் எண் கிராம முன்னேற் றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1965 ஜனவரி 21 ஆம் தேதியுள்ள 155 ஆம் எண் கிராம முன்னேற் றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை)

(1965 நவம்பர் 5-ஆம் தேதியுள்ள 2388-ஆம் எண் கிராம முன்னேற் றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(13) ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்காக அலுவலக இட வசதி.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 66 ஆவது பிரிவின்படி,

தேசிய வளர்ச்சித் திட்டம் தொடர்பான பணி ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படும். ஆகையால், ஊராட்சி ஒன்றிய அலுவலகமும் ஏற்கெனவே யுள்ள வட்டார வளர்ச்சி அலுவலகமும் ஒரே அலுவலகமாக ஒரே கட்டிடத்தில் செயலாற்ற வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள்.

வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கான கட்டிடங்கள் பல வட்டாரங்களில் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கின்றன. இந்த வட்டாரங்களில், ஊராட்சி ஒன்றியக் குழு மண்டபத்துக்காகவும், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களின் அதிகப்படியான பணியாளர்களுக்கு அலுவலக இடவசதி செய்து கொடுப்பதற் காகவும் மேற்கொண்டு கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும். வட்டார அலுவலகத்துக்காகக் கட்டிடங்கள் எவையும் இதுவரையில் கட்டப்பட்டிரா விட்டால், முற்றும் புதிய கட்டிடங்களைக் கட்டியாக வேண்டும்.

(1960 ஜூன் 28 ஆம் தேதியுள்ள 503 ஆம் எண் கிராம முன்னேற்றத் துறை அரசாணையைப் பார்க்கவும்.)

(14) **அரசாங்கக் கட்டிடங்களை அனுபவித்துக் கொள்வதற்காக ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் வாடகை செலுத்துவது.**—ஊராட்சி ஒன்றியங்கள் அலுவலகக் காரியங்களுக்காக அரசாங்கக் கட்டிடங்களை அனுபவித்துக் கொள்வதற்கு வாடகை எதுவும் செலுத்த வேண்டியதில்லையென அரசாங்கத் தார் கட்டளையிடுகிறார்கள்.

(1961-ம் ஆண்டு ஜூன் 3-ம் தேதியுள்ள 1573-ம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(15) **ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் சுற்றுச் சுவரையும் கொடி மரத்தையும் அமைப்பது.**—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 139 (1) பிரிவின்படி, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நிதிகள் பயன்படுத்தப் படக்கூடிய காரியங்களில், கட்டாயமானவையென்று அல்லது விருப்பம்போல் செய்யத்தக்கவையென்று, மேற்படி சட்டத்தினால் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளினால் அல்லது வேறொரு சட்டத்தினால் அல்லது விதிகளினால் வெளிப்படையாக அறிவிக்கப்பட்ட எல்லா நோக்கங்களும் அடங்கும். ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்துக்குள் அவைகளுக்காக அந்த நிதிகளைப் பயன்படுத்தலாம். இதைக் கருதி ஊராட்சி ஒன்றிய மன்ற நிதிகளைக் கொண்டு சுற்றுச் சுவரையும் கொடிமரத்தையும் அமைக்க செலவு செய்வதற்கு அரசினரின் ஒப்பளிப்பைப் பெறுவது தேவையில்லை.

(1961 ஜூலை 3-ம் தேதியுள்ள 107842/பி-6/61-ம் எண் குறிப்பாணை.)

(16) ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் தந்தி முகவரி.—ஊராட்சி ஒன்றிய வட்டாரங்களுக்கு தந்தி முகவரியாக 'பஞ்சோம்' என்னும் சொல்லைப் பதிவு செய்ய வேண்டுமென அரசினர் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

பதிவு செய்வதற்கான செலவை, அந்தந்த ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் "சில்லறைச் செலவுகள்—மீள்வன" என்னும் தலைப்புக்குப் பற்றாக எழுத வேண்டும்.

(1961 மார்ச் 16-ம் தேதியுள்ள 798-ம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறை அரசாணை.)

(17) சாதாரண பொதுக் கூட்டங்கள்.—ஊராட்சி ஒன்றிய மன்றம் நிர்ணயிக்கப்படக்கூடிய காலங்களில் மன்றம் கூட வேண்டுமென, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், மன்றத்தின் இரண்டு கூட்டங்களுக்கிடையே அறுபதுக்கு மேற்பட்ட நாட்கள் இருக்கக் கூடாது. சிறப்பாக, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 66 ஆவது பிரிவின்படி ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மிகப் பெரும் பொறுப்புக்களைக் கருதி ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றும் மாதத்தில் ஒழுங்காக ஒரு முறை கூட வேண்டுமென அரசாங்கத்தார் கருதுகிறார்கள். கூட்டத்துக்காக தேதியை மன்றத் தலைவர் நிச்சயிப்பார். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவர் ஒவ்வொருவரும், தமது வட்டாரத்தில் நடக்கும் பணியின் முன்னேற்றத்தைப் பற்றி மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்குத் தெரிவிப்பதற்காகவும், பற்பல திட்டங்களைச் செயற்படுத்துவதில் அந்த வட்டாரத்தில் சமாளிக்க வேண்டிய இடர்ப்பாடுகளையும், சிக்கல்களையும் மன்றத்தின் முன் கொண்டுவருவதற்காகவும், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்துக்கு வந்திருக்க வேண்டும். தலைவர் இதனைச் செம்மையாகவும் வெற்றிகரமாகவும் செய்வது சாத்தியமாயிருக்கும் பொருட்டு, ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றினுடைய சாதாரண பொதுக் கூட்டத்தை, ஒவ்வொரு மாதத்திலும் 11 ஆவது, 20 ஆவது தேதிகளுக்கிடையில் நடத்துவது நல்லதென அரசினர் கருதுகிறார்கள்.

(1961 ஜூன் 16-ம் தேதியுள்ள 1694-ம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(18) தலைவரால் ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது.—தலைவரால் ஒத்திவைக்கப்பட்ட ஒரு கூட்டம் தனது அமர்வினைத் தொடர்ந்து நடத்தலாமா, நிகழ்ச்சிக்குறிப்புச் சுவடியை ஆணையரிடமிருந்து கேட்கலாமா என்பது பற்றியும், மேற்கொண்டு கூட்டம் கூட்டுவதானால் முறைப்

படி அறிவித்துக் கூட்டம் கூட்ட வேண்டுமெனக் கேட்கும் நடைமுறையைப் பின்பற்றுவது அவசியமல்லவா என்பது பற்றியும் ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

2. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கூட்டங்களில் அலுவல் நடத்துவதற்கான விதத்தைப் பற்றி, 1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையின் 10 ஆவது அறிவிக்கையில் வெளியிடப்பட்ட விதிகளில், சிறு எண்ணிக்கையுள்ளவர்கள் வாராதபோது தவிர மற்றப்படி தலைவர் கூட்டங்களை ஒத்திவைப்பது பற்றி, ஒன்றும் சொல்லியிருக்கவில்லை. நகராட்சி மன்றங்களைப் பொறுத்தவரை, நகராட்சி மன்றங்களின் கூட்டங்களில் அலுவல் நடத்துவதற்கான மாதிரி ஒழுங்குமுறை விதிகள் சிலவற்றை அரசினர் செய்து, அவற்றைப் பயன்படுத்தும்படி நகராட்சி மன்றங்களுக்குப் பரிந்துரைத்தார்கள். மேற்குறிப்பிட்ட மாதிரி ஒழுங்குமுறை விதிகளைச் சேர்ந்த 3 ஆவது ஒழுங்குமுறை விதியின்படி, தலைவர் நியாயமான காரணங்களை முன்னிட்டு, நகராட்சி மன்றக் கூட்டம் எதையேனும் ஒத்தி வைக்கலாம். அக் காரணங்களை நிகழ்ச்சிக் குறிப்புச் சுவடியில் எழுதி வைக்க வேண்டும். இந்த மாதிரி ஒழுங்குமுறை விதிகள் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கூட்டங்களுக்குப் பொருந்தாவிட்டாலும், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவர் ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் எக் கூட்டத்தையும் நியாயமான காரணங்களுக்காக ஒத்தி வைக்கலாமெனக் கருதப்படுகிறது; அக் காரணங்களை நிகழ்ச்சிக் குறிப்புச் சுவடியில் எழுதி வைக்க வேண்டும். அந்த வகையில் எழுதி வைக்கப்பட வேண்டிய நியாயமான காரணங்களுக்காகத் தலைவர் ஒரு முறை கூட்டமொன்றை ஒத்தி வைத்துவிட்டால், அது தன் அமர்வைத் தொடர்ந்து நடத்த முடியாது. மற்றொரு கூட்டத்தைக் கூட்ட வேண்டுமானால், தொழில் நடத்தும் விதம்பற்றி 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நடைமுறையைப் பின்பற்றுவது அவசியமாகும். இனிமேல் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கூட்டங்களை நடத்துவது பற்றி மேற்சொன்ன விளக்க உரைகளைப் பின்பற்றலாம்.

(1961 ஆகஸ்ட் 19-ம் தேதியுள்ள 2282-ம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(19) ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கூட்டங்களுக்கு வட்டாரப் பொறியாளர்களும் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளர்களும் வந்திருப்பது.— (i) ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர் கூட்டங்களுக்கு வட்டாரப் பொறியாளர்கள் வந்திருக்க வேண்டுமெனவும், கூட்டத்தைப் பற்றிக் கோட்ட ஆட்சியாளர் சம்பந்தப்பட்ட (நெடுஞ்சாலை (i)

பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளர்களுக்கும் அறிவிக்க வேண்டு மெனவும், இயன்ற வரையில் அதிகமான பணியாளர் கூட்டங்களுக்கு அவர்கள் வந்திருக்க வேண்டுமெனவும் அரசினர் கட்டளையிடுகிருர்கள்.

(1961 அக்டோபர் 4-ம் தேதியுள்ள 2700-ம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(20) **ஊர்க் கூட்டங்கள்.**—முதல் தொகுதி ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்களின் மாநாடு 1961 நவம்பர்-டிசம்பர் மாதங்களில் நடைபெற்றது; ஊராட்சி ஒன்றியங்கள் சிலவற்றில், தலைவரும் ஆணையரும் வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்களும், குறிப்பிட்ட காலங்களுக்கிடையில் வெவ்வேறு ஊர்களில் கூட்டங்கள் நடத்துவது வழக்கமாயிருந்து வருகிறதென அப்போது தெரிய வந்தது. சம்பந்தப்பட்ட ஊரிலும் அக்கம்பக்கத்திலுள்ள ஊர்களிலும் வசிப் பவர்கள் தங்களுடைய இடர்ப்பாடுகளை ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்களுக்கும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கும் எடுத்துச் சொல்ல இக் கூட்டங்களில் வாய்ப்பளிக்கப்படுகிறது. வளர்ச்சித் திட்டங்களில் ஊரார் தீவிரமாகப் பங்குகொள்ளச் செய்வதிலும், உள்ளூர்க் குறைகளை விரைவாகத் தீர்ப்பதிலும், இந்த ஊர்க் கூட்டங்களினால், நல்ல பலன் இருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த ஊர்க் கூட்டங்கள் ஏற்பாட்டை, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் எல்லாம் மேற்கொள்ளுதல் நலமென்று அரசினர் பரிந்துரைக் கிருர்கள்.

(1962 சனவரி 16-ம் தேதியுள்ள 2000/எல்.தனி/62-1 ஆம் குறிப்பாணை.)

(21) **ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கூட்டத்துக்கு ஆணையர்களும் வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்களும் வந்திருப்பது.**—ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டங்களிலும் அம் மன்றத்தின் குழுக்களிலும் நன்கு அலுவல் நடக்கும்படி செய்யும்பொருட்டு, எந்தக் கூட்டங்களுக்கும், மன்றத்தின் குழுக் களின் எந்தக் கூட்டங்களுக்கும் ஆணையாளர் வந்திருக்க வேண்டுமென தலைவர் திட்டவட்டமாகச் சொல்லாத அந்தக் கூட்டங்களுக்குங் கூட ஆணையாளர் கூடுமான வரையில் வந்திருப்பது நல்லதென்று அரசினர் கருதுகிருர்கள்.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அந்த ஒன்றியத்தின் நிருவாகத் தலைவர் என்னும் முறைமையில், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கூட்டங்களிலும் அதன் குழுக்களின் கூட்டங்களிலும் தேவைப்படுகிற எல்லாத் தகவலையும் அக் கூட்டங்களில் கிடைக்கும்படி செய்வது அவருடைய பொறுப்பாகும். ஆணை யாளர் குறிப்பிட்ட ஒரு கூட்டத்துக்கு வந்திருந்தாலும் வராவிட்டாலும், அவர் இந்த அலுவலைச் செய்து தீர வேண்டும். கூட்டங்களில் எதிலாவது வட்டார வளர்ச்சி உதவி அலுவலர் ஒருவர் அல்லது வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்கள்

எல்லாரும் வந்திருப்பது அவசியமென ஆணையர் கருதினால், இதற்காக ஏற்பாடுகள் செய்வது அவருடைய பொறுப்பாகும்; ஆனால், கூட்டத்துக்கு வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்(கள்) வந்திருந்து, சந்தர்ப்பத்துக்கேற்ப ஒன்றிய மன்றத்திற்கோ அதன் குழுவிற்கோ தடையாக இருக்கக் கூடாது. இச் சந்தர்ப்பங்களில், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கூட்டத்துக்கோ அதன் குழு வின் கூட்டத்துக்கோ வந்திருக்கும்படி வட்டார வளர்ச்சி உதவி அலுவலர் எவரையும் நேரடியாகக் கேட்கத் தலைவருக்கு வாய்ப்பு இருக்காது.

(1962 சனவரி 29-ம் தேதியுள்ள 249429 இ-4/61-1-ம் எண் குறிப்பாணை.)

(22) பொருள் நிரலின் படிகளை உள்ளூர்ச் செய்திதாள்களுக்கு வழங்குவது.—ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கூட்ட அறிவிப்புகள், கூட்டப் பொருள் நிரல் ஆகியவைகளின் படிகளை உள்ளூர்ச் செய்தித்தாள் நிருபர்களுக்கு வழங்க வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள்.

(1962 மார்ச் 14-ம் தேதியுள்ள 587-ம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(23) ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் நடவடிக்கைக் குறிப்புகளை அனுப்புவது.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 49 ஆவது பிரிவில் கொடுத்துள்ள அதிகாரங்களைக் கொண்டு, இணை வளர்ச்சி ஆணையாளர் கட்டளையிடுவது என்னவென்றால், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் நடவடிக் கைக் குறிப்புகளை, ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள், சம்பந்தப்பட்ட வளர்ச்சி மாவட்டத்தின் வளர்ச்சி மன்றச் செயலாளருக்கு அனுப்ப வேண்டும்; அச் செயலாளர் அந்த நடவடிக்கை குறிப்புகளின் படிகளை, மாவட்ட ஆட்சியாளரும் இணை வளர்ச்சி ஆணையரும் தெரிந்து கொள்வதற்காக அவர்களுக்கு அனுப்ப வேண்டும்; அன்றியும், மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதலைப் பெற்றுக்கொண்டு, பொருத்தமான குறிப்புகளை மாவட்ட மட்டத்தில் செயலாற்றப்பட வேண்டுமெனில் தலைமை மாவட்ட அலுவலர்களுக்கும், அரசாங்க மட்டத்தில் செயலாற்றப்பட வேண்டுமெனில் அரசினருக்கு அனுப்ப வேண்டும்.

(1961 ஜூலை 17-ம் தேதியுள்ள 230314/எல்.தனி/60-1-ம் எண் நடவடிக்கைக் குறிப்புகள்.)

(24) தற்போதைய தேசிய நெருக்கடியைக் கருதி தாள், மற்ற எழுது பொருள்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் சிக்கனம் கடைப்பிடிப்பது பற்றி, அரசினர் அவ்வப்போது விவரமான விளக்க உரைகள் வெளியிட்டிருக் கிறார்கள். இந்த விளக்க உரையையொட்டி, கூட்டு வளர்ச்சி ஆணையர்

கட்டளையிடுவது என்னவென்றால், ஊராட்சிகளின் நடவடிக்கைக் குறிப்புகளின் முழுப்படியொன்றைத் துணை வளர்ச்சி ஆணையருக்கு அனுப்பும் வழக்கத்தை உடனடியாக நிறுத்திவிட வேண்டும். எல்லா மாவட்டங்களிலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிற, நடவடிக்கைக் குறிப்புகளின் பொருத்தமான குறிப்புகளை மட்டும், சம்பந்தப்பட்ட அரசாங்க அலுவலர்களுக்குத் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்க வேண்டும். துணை வளர்ச்சி ஆணையரின் 1961 ஜூலை 17 ஆம் தேதியுள்ள நடவடிக்கைக் குறிப்புகளில் வெளியிடப் பட்ட விளக்க உரைகள், அவ்வண்ணமே, மறு ஆணை வரையில், இந்த அளவில் மாறுதலடையும்.

(1963 சனவரி 16-ம் தேதியுள்ள 232680/எல்.தனி/62-1-ம் எண் நடவடிக்கைக் குறிப்புகள்.)

(25) ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கூட்டங்களின் நடவடிக்கைக் குறிப்புகளின்படி ஒன்றை மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பும்படி மாவட்ட வளர்ச்சி மன்றச் செயலாளருக்குக் கட்டளையிடுவதன் நோக்கம் என்னவென்றால், நடவடிக்கை முழுவதையும் மாவட்ட ஆட்சியாளர் அறிந்திருப்பதற்காக அதை அவருக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதேயாகும்; எந்த ஒன்றிலேனும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள மாவட்ட ஆட்சியாளர் தாமே விரும்பினாலன்றி இதன் பேரில் சாதாரணமாக நடவடிக்கை எதுவும் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. நடவடிக்கை குறிப்புகளிலிருந்து எழும் குறிப்பிட்ட எதைப் பற்றியாவது செயலாற்ற வேண்டியிருந்தால், மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் செயலாளர், மாவட்ட ஆட்சியாளரின் ஆணைகளைப் பெற்றுக் கொண்ட பிறகு, சந்தர்ப்பத்துக்கேற்ப சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலருடன் அல்லது அரசினருடன் கலந்து ஆவண செய்யப் பொறுப்புள்ளவராவார்.

(1961 ஆகஸ்ட் 24 ஆம் தேதியுள்ள 143898/எல்/தனி/61-1 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(26) முக்கியமான அரசாணைகளையும் குறிப்பாணைகளையும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு வழங்குவது.—ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தலைவரும் உறுப்பினர்களும் ஊராட்சி ஒன்றியங்களின் நிருவாகத்தில் வெற்றிகரமாகப் பங்குகொள்ளும்படி செய்யும்பொருட்டு, அரசினர் அவ்வப்போது வெளியிடும் பல்வேறு விளக்க உரைகளை அவர்கள் முறையாகவும் வேண்டிய அளவு தெரிந்து வைத்திருக்கும்படி செய்வது இன்றியமையாததாகும்.

2. மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் ஒவ்வொர் உறுப்பினருக்கும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஒவ்வொர் உறுப்பினருக்கும் மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின்

உறுப்பினர் ஒவ்வொரு வருக்கும் தெரிவிக்க வேண்டிய முக்கியமாக அரசாணை களுக்கும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கும் முகவரியிட்டனுப்பப்படு வதற்காகத் திட்டமாய்க் குறியிட வேண்டும். மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு அவ்வாறு முகவரியிட்டனுப்பப்படுகிற அத்தகைய எல்லாக் குறிப்பீடுகளும் முக்கியமானவையென்று தாங்கள் கருதக்கூடிய மற்ற குறிப்பீடுகளும் முந்திய கூட்டத்தின் தேதியிலிருந்து பின் சேகரிக்கப்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்றத் தின் கூட்டத்தில் உறுப்பினர்களுக்குப் படித்துக் காட்டி விளக்கப்பட்டு, அவ் வாறு படிக்கப்பட்ட பிறகு முறைமையாகப் பதிவு செய்யும்படி மாவட்ட பிறகு முறைமையாகப் பதிவு செய்யும்படி மாவட்ட ஆட்சியாளர் பார்த்துக் கொள்ள வேண்டும். எல்லா ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்களும், ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு முகவரியிட்டனுப்பப்படுகிற ஆணைகள் தொடர்பாக அதே மாதிரி நடை முறையைப் பின்பற்ற வேண்டும்.

(1961 டிசம்பர் 20 ஆம் தேதியுள்ள 245328/எல்.தனி/61-1 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(27) **ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர் கூட்டங்கள்.**—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தைச் செயற்படுத்துவதில் இதுவரை பிறப்பிக்கப் பட்டுள்ள பல்வேறு விளக்க உரைகளினால், ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக நிருவகிப்பதற்கு, கோட்ட மட்டத்தில், கோட்ட ஆட்சியாளர் முற்றும் பொறுப்பாளியாக்கப்பட்டிருக்கிறார். கோட்ட ஆட்சியாளர்கள் இத் துறையில் பயனுள்ள வகையில் செயலாற்றுவதற்குத் துணை செய்யும்பொருட்டு, மேற்கொண்டு சில விளக்க உரைகளை வெளியிடுவதற்கான அவசியத்தைப் பற்றி அரசினர் ஆய்வு செய்திருக்கின்றனர். அவ்வகையில் பின்வரும் விளக்க உரைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

(2) கோட்ட ஆட்சியாளர் அலுவலகத்தின் வளவிடத்திலேயே கோட்ட ஊராட்சி அலுவலருக்காக அதிகப்படியான இடவசதியை அமைத்துக் கொடுப் பதற்காக ஆகும் செலவுக்கு ஒப்பளித்து ஏற்கெனவே ஆணைகள் பிறப்பிக்கப் பட்டிருக்கின்றன. ஒருங்கிணைக்கப்பட்ட அலுவலகத்தை, ஊராட்சி வளர்ச்சிப் பிரிவு என்றும் பொதுப் பிரிவு என்றும் இரண்டு பிரிவுகளாகத் திருத்தியமைக்க வேண்டும். கோட்ட ஊராட்சி அலுவலர், தமக்கு உரித்தாக்கப்பட்டுள்ள சட்ட பூர்வமான தணிக்கை அலுவல்களைச் செய்வதுடன்கூட, ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம் முழுவதுக்குமாக, கோட்ட ஆட்சியாளருக்கு நேர்முக உதவி அலுவலராகவும் பணியாற்ற வேண்டும். ஊராட்சி வளர்ச்சிப் பணியின் பொறுப்பு வகிக்கிற தலைமை எழுத்தர், கோட்ட ஊராட்சி அலுவலரின் நேர் மேல் விசாரணைக்குட்பட்டுப் பணியாற்ற வேண்டும்.

(3) ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலிருந்து மாவட்ட ஆட்சியாளருக்கு முகவரியிட்டு அனுப்பப்படுகிற அலுவல் முறையான கடிதங்களை எல்லாம் கோட்ட ஆட்சியாளர் அலுவலக மூலமாக அனுப்ப வேண்டும்; ஆனால், இவ்வாறு அனுப்ப வேண்டியதில்லையென்று மாவட்ட ஆட்சியாளர் திட்டவட்டமாக ஆணை பிறப்பித்திருக்கிற தனிச் சந்தர்ப்பங்களில் இவ்வாறு அனுப்ப வேண்டியதில்லை.

(4) கோட்ட ஆட்சியாளருடைய கோட்டத்திலுள்ள வட்டாரம் ஒவ்வொன்றிலும் ஊராட்சி வளர்ச்சி நிருவாகம் பற்றிய குறிப்பிட்ட சிக்கல்களையெல்லாம் அந்த ஆட்சியாளர் ஒவ்வொருவரும் நேர்முகமாக விவரமாய்த் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும்படி செய்வது அவசியமாகும். அன்றியும் இந்த வினை முறையில், ஊராட்சி வளர்ச்சியை ஊக்குவிப்பதில் வட்டாரப் பணியாளர்களும் தாலுக்கா வருவாய்த் துறைப் பணியாளர்களும் நெருங்கி ஒத்துழைத்து ஒருங்கிணைந்து பணிபுரியும் பொருட்டு அவர்களை ஒன்றாகச் சேர்ப்பதும் அவசிய மாகும். ஒன்றோடொன்று தொடர்புள்ள இந்த இரண்டு முக்கியமான காரியங் களும் நிறைவேறும்படி செய்யும்பொருட்டு, ஒரு திட்ட நிறுவனமாக, "ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர் கூட்டங்கள்" மாதத்துக்கொருமுறை நடத்தப்பட வேண் டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள்.

(5) ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர் கூட்டம், மாதத்துக்கொரு முறை, தக்கவாறு நிச்சயிக்கப்பட்ட தேதிகளில் தாலுகா தலைமையிடத்தில் நடத்தப் படவேண்டும். அக் கூட்டத்துக்கு கோட்ட ஆட்சியாளர் தலைமை வகிக்க வேண்டும்; கோட்ட ஊராட்சி அலுவலரும், கோட்ட ஆட்சியாளர் அலுவலகத் திலிருந்து ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தரும், வட்டாட்சியாளரும், கருவூல அலுவலகத்திலிருந்து கீழ்நிலைக் கருவூல அலுவலரும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரும், ஊராட்சி வளர்ச்சி அலுவலரும், குறிப்பிட்ட தாலுகாவிலுள்ள எல்லா வட்டாரங்களின் ஊராட்சி ஒன்றிய அலுவலக மேலாளரும் அக் கூட்டத் துக்கு வந்திருக்க வேண்டும்.

(6) மாதக் கூட்டம் ஒவ்வொன்றிலும் முறையாக நடத்தப்படுவதற்குரிய அலுவல் அடியிற் கண்டதாகும் :—

(i) **பற்று வரவுச் சீட்டையும் நிதி பற்றிய மாத விவர அறிக்கை களும்.**—பற்று வரவுச் சீட்டையை ஒவ்வொரு வட்டாரத்துக்காகவும் எழுதிப் பூர்த்தி செய்ய வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நிதி பற்றிய மாத விவர அறிக்கை களைத் தயாரித்து (அவசியமானால்) கீழ்நிலைக் கருவூலத்துக்கும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்துக்கும் ஒத்துப்பார்த்துச் சரிக்கட்டி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்துக்கு அனுப்புவதற்காக கோட்ட ஆட்சியாளர் ஒப்புதல் பெற வேண்டும்.

(ii) நிருவாக விவர அறிக்கைகள்.—ஊராட்சி வளர்ச்சி நிருவாகத்துக்குத் தொடர்பான பயண நாட்குறிப்புகள், நிர்ணயிக்கப்பட்ட வேறு கால முறை விவர அறிக்கைகள் ஆகியவற்றின் மறு ஆய்வினை வட்டாரங்களில் தயாரித்து, வரைவுகளைக் கூட்டத்துக்குக் கொண்டு வர வேண்டும். கூட்டத்தில் அவைகளை நுண்ணாய்வு செய்த பிறகு, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்துக்கு அனுப்புவதற்காக வரைவுகளை முழுமையாக்க வேண்டும்.

(iii) மேற்சொன்னவாறு வாலாயமான அலுவல் நடத்திய பிறகு, மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் மத்திய கூட்டத்தில் எழுப்பப்பட்டிருந்த அல்லது மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் கொண்டுவரப்படுமென்று எதிர்பார்க்கக்கூடிய பிரச்சினைகளைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திலுள்ளமுள்ள நிலைமையைப் பற்றிக் கோட்ட ஆட்சியாளர் நன்கு தெரிந்து கொண்டு, தொடர்புடைய அலுவலர்களுக்கு வேண்டியவாறு வழிகாட்ட வேண்டும்.

(iv) ஊா அலுவலாகள் செய்ய வேண்டிய வசூல் பணி அல்லது வேறு பணி சம்பந்தமான அல்லது அவர்களுக்கும் ஊராட்சிகளுக்கும் இடையிலுள்ள உறவுகள் சம்பந்தமான எதிலாவது ஏதேனும் தனிச் சிக்கல் எழுந்தால், அதை இக் கூட்டத்தில் கொண்டுவர வேண்டும். அதுபோலவே (அடைதல், ஒப்படை செய்தல், பராதீனம் செய்தல் அல்லது குத்தகை, ஆக்கிரமிப்பை நீக்குதல் முதலியவைகளைப் போல்) பொது நில நிருவாகம் பற்றி எந்த ஊரிலாவது எழுந்திருக்கிற அல்லது எந்த ஊராட்சியினாலாவது எழுப்பப்பட்டிருக்கிற ஏதேனும் பிரச்சினையை அக் கூட்டத்தில் கொண்டுவர வேண்டும். மேலும் எதில் மாவட்டத்தின் வருவாய்த் துறைப் பணியாளர்கள் செயல்முறையால் பொறுப்பு வாய்ந்தவர்களாயிருக்கிறார்களோ அது ஒரு பிரச்சினையாயிருக்கக் கூடுமானால் அது பற்றியும் விவாதிக்க வேண்டும். [குறிப்பு.—இந்தப் பணி இனத்தின் முக்கியத்துவம் சிறப்பாக வற்புறுத்தப்படுகிறது. இந்த அன்றாடப் பிரச்சினைகளை உடனுக்குடனும் ஊர்வாசிகளின் பொதுக் கருத்துக்கிணங்க தீர்த்து வைப்பதில் கோட்ட ஆட்சியாளர் அடையும் வெற்றியையொட்டியும், ஊராட்சி வளர்ச்சி முன்னேறும் வகையில் வட்டப் (தாலுகாப்) பணியாளர்கள்—வட்டாரப் பணியாளர்கள்—ஊர் வருவாய்த் துறைப் பணியாளர்கள் ஆகியவர்களுக்கு இடையே இணக்கமான கூட்டுறவை உண்டாக்க அவருக்குள்ள திறமையையொட்டியும் அவருடைய பணியின் தரத்தைப் பற்றித் தீர்மானிக்க வேண்டுமென்பதைத் தெரிந்துக் கொள்ள வேண்டுமென்று அரசினர் கருதுகிறார்கள்.]

(v) இந்த மாதாந்தரப் பணியாளர் கூட்டங்களின் நடவடிக்கைகளைப் பற்றிய விவரமான பதிவுக் குறிப்புகள் கோட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில்

எழுதி வைத்திருக்கப்பட வேண்டும். இந்தப் பதிவுக் குறிப்புகளைத் தொடர்ந்து செய்தற்குரிய பணியை செயலாக்கும்படி பார்த்துக் கொள்வதற்கு, கோட்ட ஊராட்சி அலுவலர் பொறுப்பாளியாகக் கொள்ளப்படுவார்.

(7) கோட்ட ஆட்சியாளர் ஆண்டிற்கொருமுறை, அந்தக் கோட்டத்தி லிருக்கிற ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஒவ்வொன்றையும் முழுமையாகப் பார்வையிட வேண்டும்.

(8) கோட்ட ஆட்சியாளர் பயணங்கள் மேற்கொள்ளும்போது ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்குச் சென்று, ஊராட்சி ஒன்றியத் தலைவருடனும் ஊராட்சி ஒன்றிய ஆணையருடனும், வட்டார வளர்ச்சி உதவி அலுவலர் களுடனும் நேர்முகப் பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டும். சாதாரணமாக, அவர் ஒரு சமயத்தில் மூன்று மாதத்துக்கு மேற்பட்டு, ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதையும் போய்ப் பார்க்காமலிருக்கக் கூடாது.

(1961 ஜுன் 5 ஆம் தேதியுள்ள 1588 ஆம் எண் கிராமம் முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(28) நியமனக் குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் பதவிக் காலம்.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 53 (1) பிரிவின்படி, நியமனக் குழுவின் மூன்று உறுப்பினர்களில் ஒருவர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட அக் குழுவின் உறுப்பினராவார் ; ஆகவே, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர், அடுத்த ஆண்டில் நியமனக் குழுவிற்கு வேறோர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் படுகிற வரையில் அக் குழுவின் உறுப்பினராகப் பதவி வகிக்கலாம்.

(1961 மார்ச் 15 ஆம் தேதியுள்ள 767 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(29) சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களின் உரிமைகளும் சலுகை களும்.—சேர்த்துக் கொள்ளப்பட்ட மன்ற உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குரிய எல்லா உரிமைகளையும் சலுகைகளையும் உடையவர்களா வார்கள்.

சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கூட்டங்களுக்கு வந்தால், ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படத்தக்க வீதங்களின்படி அவர்களுக்கும் பயணப்படி கொடுக்கலாம்

(1961 மார்ச் 4 ஆம் தேதியுள்ள 203684/எல்-2/60-2 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(30) நியமனக் குழுவில் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதல்.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 53 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் சொல்லமைப்பு மிகப் பொதுப்படையாயிருக்கிறது; வெளியார்களைக் கூட நியமனக் குழு உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அதில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசினரின் நோக்கம் என்னவென்றால், சேர்த்துக் கொள்வதற்காக (2) உட்பிரிவில் கொடுத்துள்ள அதிகாரம், அப் பிரிவில் கண்ட (1) உட்பிரிவின் (ஆ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள குழுக்களுக்கு மாத்திரம், அதாவது, கல்விக் குழு, பொதுக் காரியங்கள் குழு (ஆ) பகுதியில் குறிப்பிட்டிருக்கிற மற்றக் குழுக்கள் ஆகியவைகளுக்கு மாத்திரம் பொருந்த வேண்டுமேயல்லாமல், (அ) பகுதியின்படி அமைக்கப்படும் நியமனக் குழுவிற்குப் பொருந்தக் கூடாது என்பதே யாகும். இந்த நோக்கத்தைத் தெளிவாக வெளிப்படுத்தும்பொருட்டு, (2) உட்பிரிவைத் தக்கவாறு திருத்த அவசியமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். அந்த உட்பிரிவு இவ்வாறு திருத்தப்படுகிற வரையில், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், மேலே விளக்கப்பட்ட நிலையைக் கவனித்து, எவரையேனும் நியமனக் குழு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளாதிருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(1961 பெப்ரவரி 9 ஆம் தேதியுள்ள 375 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(31) நியமனக் குழுவிற்கு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.—ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒன்றின் நியமனக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர், தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டுக் காலத்துக்கு மட்டும் பதவி வகிப்பார் என்று கொள்ளப்படுமானால், குறிப்பிட்ட ஓர் ஆண்டில் உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படாதபோது, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இல்லாமல், தலைவரும் ஆணையாளரும் நியமனக் குழுவாய்ச் செயலாற்றுவதாக ஏற்படும். குழுவின் மூன்று உறுப்பினர்களில் இரண்டு பேர் மட்டும் குழுவாகச் செயலாற்ற விடுவதைவிட குறிப்பிட்ட ஓர் ஆண்டுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், மற்றொருவர் தேர்ந்தெடுக்கப்படுகிற வரையில் தொடர்ந்து பதவி வகித்துவர விடுவது உசிதமெனக் கருதப்படுகிறது.

(1962 அக்டோபர் 22 ஆம் தேதியுள்ள 169078/எல்.தனி/62-2 ஆம் எண் குறிப்பாணை.)

(32) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மாவட்ட ஆட்சியாளர்கள், கோட்ட ஆட்சியாளர்கள், துறைகளின் தலைவர்கள் ஆகியவர்களுக்கிடையே நடக்கும் கடிதப் போக்குவரத்துக்கள் எல்லாம் தலைவர் வழியாகப் போக வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள். இந்தப் பொது விதிக்கு அரசினர் அளிக்கும்

ஒரே ஒரு விலக்கு என்னவென்றால், சட்டத்தையும் அமைதியையும் காக்க வேண்டியவைகளிலும், தாமதம் ஏற்படக் கூடாத ஏனைய அவசரமாயுள்ளவற்றி லும் ஆணையாளருக்கும் மாவட்ட ஆட்சியாளருக்கும் இடையில் நடக்கும் கடிதப் போக்குவரத்தும், நேர்முகக் கடிதங்களும் ஆகும். அத்தகைய கடிதப் போக்கு வரத்து தலைவர் மூலமாகச் செல்ல வேண்டியதில்லை.

2. ஆயினும், அவசியமானபோதெல்லாம், ஆணையாளர்கள் நிருவாகப் பிரச்னைகளைக் குறித்து மாவட்ட ஆட்சியாளர்களிடம் நேரில் விவாதிக்கலாம்.

(1961 பெப்ரவரி 9 ஆம் தேதியுள்ள 332 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(33) அரசினரோடும் துணை வளர்ச்சி ஆணையாளரோடும் தொடர்பு கொள்ளும் விதம்.—1955 மார்ச் 9 ஆம் தேதியுள்ள 1080 RDP 1.155-1 ஆம் எண் குறிப்பாணையில் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்குப் பின் வருமாறு விளக்கவுரைகள் பிறப்பிக்கப்பட்டன; அதாவது, மிக அவசரமானவற்றில் தவிர மற்றப்படி, அவர்கள் அரசினருடன் நேர்முகமாகத் தொடர்பு கொள்ளக் கூடாது என்பதும், மாவட்ட ஆட்சியாளர் மூலமாகவே தொடர்பு கொள்ள வேண்டு மென்பதுமேயாகும். சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளர்கள் அல்லது மாவட்ட ஆட்சியாளர்கள் எளிதில் விளக்கவுரைகள் கொடுத்திருக்கும் பொருள் களில் கூட, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தொடர்ந்து அரசினருடன் நேர்முக மாகத் தொடர்பு கொள்வதாகத் தெரிய வந்திருக்கிறபடியால், 1961 பெப்ரவரி 15 ஆம் தேதியுள்ள 29563 1/61–1 ஆம் எண் குறிப்பாணையில் மேற்சொன்ன விளக்கவுரைகள் மீண்டும் வற்புறுத்தப்பட்டன.

2. பலமுறை இவ்வாறு விளக்கவுரைகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும் மிக வாலாயமானவற்றில் கூட, வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்தும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களிடமிருந்தும் தொடர்ச்சியாகக் கடிதங்கள் அரசினருக்கு நேரடியாய் வந்துகொண்டே யிருக்கின்றன. ஆயினும், வட்டார வளர்ச்சிக் கட்டத்திலிருந்து ஊராட்சி ஒன்றியக் கட்டத்துக்கு மாறுதல் நடக்கும் காலத்தில் நிருவாகத்தில் பல இடங்களில் பலவித ஐயப்பாடுகள் எழுந்துள்ளன எனத் தெரிய வந்தது. மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து அறிக்கைகள் வருமென்று காத்திராமல் கூடிய வரையில் கொஞ்சங் கூடக் கால தாமதமின்றி அரசாங்கத்தார் இந்த ஐயப்பாடுகளைத் தெளிவிப்பது உகந்த தெனக் கருதப்பட்டது; இக் காரணங்களினால், இது வரையில் அரசினர் அக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டு, அவற்றின் மேல் ஆணைகள் பிறப்பித்தார்கள். பல்வேறு நிருவாகப் பொருள்களில் நடைமுறை இன்னதென்று இதற்குள் ஏறத்தாழ நிச்சயிக்கப்பட்டு, மிக விரிவான விளக்க உரைகள் வெளியிடப்

பட்டிருக்கின்றன. கோட்ட ஆட்சியாளர்களும் மாவட்ட ஆட்சியாளர்களும் இப்போது ஊராட்சி ஒன்றியங்களை நெறிப்படுத்தக் கூடியவர்களாயிருக்கிறார்கள். ஆகையால், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் இனிமேல் ஒவ்வொரு தடவையும் விளக்கவுரைகளும் ஆலோசனையும் பெறுவதற்காக நேரடியாய் அரசினரை நாட வேண்டியதில்லை. கேட்கப்படுகிற ஆலோசனையை அல்லது விளக்கவுரைகளை வழங்க கோட்ட ஆட்சியாளர்களும் மாவட்ட ஆட்சியாளர்களும் இயலாதவர்களாயிருக்கிற அத்தகைய செய்திகளில் மாவட்ட ஆட்சியாளர்கள் அரசினரை அணுகலாம்.

3. ஆகையால், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் ஊராட்சி ஒன்றிய துணையாளர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், அவர்கள் அரசினருக்கு நேரடியாக எழுதும் கடிதங்கள் இனிமேல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. ஆயினும், உடனடியாக ஆணைகள் பிறப்பிக்க வேண்டியிருக்கும் உதவித் தொகை ஒப்பளிப்புகளிலும் அதுபோன்ற ஏனைய அவசரமாயுள்ளவற்றிலும் வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்தும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களிடமிருந்தும் வரும் நேரடிக் கடிதங்கள் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளப்படும்.

(1962 மே 7 ஆம் தேதியுள்ள 45917/இ-4/62-1 ஆம் எண் குறிப்பாணை.)

(34) 1962 செப்டம்பர் 29 ஆம் தேதியுள்ள 2147 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணையில், தல ஆட்சித் துறை தலைமை ஆய்வாளர் அலுவலகத்துக்கு, துணை வளர்ச்சி ஆணையாளர் அலுவலகமென்று பெயர் மாற்றி வைக்கப்பட்டது. தலைமைத் தேர்தல் அதிகாரியாகவும் அலுவல் மொத்தப் பொறுப்பு வகிப்பவராக அமர்த்தப்பட்டிருக்கிறார். 1962 செப்டம்பர் 28 ஆம் தேதியுள்ள 2143 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணையில் உள்ளாட்சித் துறைத் தலைமை ஆய்வாளரின் நேர்முக உதவியாளர் பதவிக்கு, துணை வளர்ச்சி ஆணையாளரின் நேர்முக உதவியாளர் எனப் பெயர் மாற்றி வைக்கப்பட்டிருக்கிறது.

2. நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் பற்றியவைகளில் துணை வளர்ச்சி ஆணையாளரின் அலுவலகத்துக்குக் கடிதம் எழுதும் முறை பற்றிப் பின்வரும் விளக்க உரைகள் பிறப்பிக்கப்படுகின்றன :—

(i) தலைமை தேர்தல் அலுவலர், இந்த மாநிலத்திலிருக்கிற எல்லா நகராட்சிகளின் நடவடிக்கைகளையும் ஆய்வு செய்து கண்காணிக்கும் அலுவலராக நியமிக்கப்பட்டிருக்கிறார் ; துணை வளர்ச்சி ஆணையாளரின் அலுவலகத்தில் நகராட்சி நிருவாகத்தைப் பற்றி விவரிக்கிற பிரிவு அவருக்குட்பட்டுப் பணியாற்றும் இக் காரணங்களினால், நகராட்சி நிருவாகம் பற்றிய கடிதப் போக்கு

வரத்துக்களை யெல்லாம் 'தலைமை தேர்தல் அலுவலர், துணை வளர்ச்சி ஆணையாளர் அலுவலகம், பழைய உயர்நீதிமன்றக் கட்டிடம், சென்னை-1' என்று முகவரியிட்டு அனுப்ப வேண்டும்.

(ii) ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் பற்றிய கடிதப் போக்கு வரத்துக்களையெல்லாம், 'துணை வளர்ச்சி ஆணையாளர், துணை வளர்ச்சி ஆணையாளர் அலுவலகம், பழைய உயர்நீதிமன்றக் கட்டிடம், சென்னை-1' என்று முகவரியிட்டு அனுப்ப வேண்டும்.

3. கூட்டு வளர்ச்சி ஆணையாளர், அலுவல் முறைமையில், கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறையில் அரசாங்கக் கூட்டுச் செயலாளருமாவர். இந்த இரண்டு பதவிகளின் அலுவல்களும் அதிகாரங்களும் தனித்தனியானவையும் வெவ்வேறானவையுமாகும். ஆயினும், கூட்டு வளர்ச்சி ஆணையாளருக்கும் அரசாங்கக் கூட்டுச் செயலாளருக்கும் அனுப்பப்படும் கடிதப் போக்கு வரத்தில் இவ்வேறுபாடு கவனிக்கப்படுவதில்லையெனத் தெரிய வருகிறது. கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறையில் அரசாங்கத்தின் ஆணை பெறும் நோக்கத்துடன் அனுப்பப்படும் கடிதங்கள் சில சமயங்களில் கூட்டு வளர்ச்சி ஆணையாளருக்கு முகவரியிட்டு வருகின்றது. அது போலவே, வட்டார வளர்ச்சி அலுவலர்கள்—கல்வி வளர்ச்சி அலுவலர்கள்—கிராம சேவகர்கள் முதலியவர்களுக்கான துறையின் தலைவர் என்னும் தமது முறைமையிலாவது, ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் ஆய்வாளர் என்னும் தமது முறைமையிலாவது கூட்டு வளர்ச்சி ஆணையாளருக்கென்று கருதப்படும் கடிதப் போக்குவரத்துகள், அரசாங்கக் கூட்டுச் செயலாளர் என்று முகவரியிட்டு வருகின்றன. இந்த வேறுபாட்டினைக் கவனிக்க வேண்டும்; கூட்டு வளர்ச்சி ஆணையாளருக்கென்று கருதப்பட்ட எல்லாக் கடிதங்களையும் 'கூட்டு வளர்ச்சி ஆணையாளர் அலுவலகம், பழைய உயர்நீதிமன்றக் கட்டிடம், சென்னை-1' என முகவரியிட்டு அனுப்ப வேண்டும். கிராம முன்னேற்றம், உள்ளாட்சித் துறையில் அரசாங்கக் கூட்டுச் செயலாளருக்கு உத்தேசிக்கப்பட்ட எல்லாக் கடிதங்களையும் 'செயண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9' க்கு முகவரியிட்டு அனுப்ப வேண்டும்.

(35) ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அஞ்சல் வில்லைகளைப் பயன்படுத்துவது.—ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்கள் 1961 மார்ச் 31 ஆம் தேதி வரையில் அரசுப் பணி அஞ்சல் வில்லைகளைப் பயன்படுத்தலாம்; அதற்குப் பிடிக்கும் செலவை, வட்டார ஏற்பாட்டு வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக எழுதலாம். 1961 எப்ரல் 1 ஆம் தேதி முதல், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்குத் தொடர்பான கடிதப் போக்குவரத்துக்காக, வரித் துளையிட்ட சாதாரண அஞ்சல் வில்லைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

வரித் துளையிடும் பொறியை ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு வழங்குவது சம்பந்தமாக, அந்தந்த ஊராட்சி ஒன்றிய வரவு-செலவுத் திட்டங்களில் 'சில்லறைச் செலவுகள்' என்பதன் கீழுள்ள ஒதுக்கீட்டிலிருந்து ஆணையாளர்கள் இதற்காகச் செலவு செய்யலாம்.

(1960 டிசம்பர் 7 ஆம் தேதியுள்ள 185366/எல்-2 ஆம் எண் குறிப்பாணை.)

(36) வரித் துளையிடும் பொறியை வாங்குவது.—ஊராட்சி ஒன்றியங்களின் அலுவல் முறையான கடிதப் போக்குவரத்துக்கள் எல்லாவற்றிலும் பயன்படுத்தப்படும் சாதாரண அஞ்சல் வில்லைகளில், LFD என்னும் எழுத்துக்களை வரித் துளையிட வேண்டுமென அரசாங்கத்தார் கட்டளையிடுகிறார்கள். அஞ்சல் வில்லைகளை வாங்குவது, கணக்குகள் வைப்பது ஆகியவை சம்பந்தமாக உள்ளாட்சிக் கழக நடைமுறை நூலின் 324 ஆவது விளக்க உரையில் கண்ட நடைமுறையைப் பின்பற்றும்படி, ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஊராட்சி ஒன்றியங்கள் வரித் துளையிடும் பொறிகளை, அரசினர் பொறியியல் பணிப் பட்டறைகளிலிருந்து மட்டும் பெற வேண்டும்.

(1961 மார்ச் 5 ஆம் தேதியுள்ள 3558/எல்-2/61-8 ஆம் எண் குறிப்பாணை.)

(37) இம் மாநிலத்திலிருக்கிற ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் எல்லாவற்றின் தலைவர்களுடைய மாநாடு ஒன்று தமிழ்நாடு மாநில ஊராட்சிகள் ஒன்றியத்தின் ஆதரவில் 1962 ஜூலையில் திருச்சிராப்பள்ளியில் நடந்தது. ஊராட்சிகளின் தாலூக்கா சங்கங்களின் தலைவர்கள் கூட அந்த மாநாட்டுக்கு வந்திருந்தார்கள். ஊராட்சி ஒன்றிய நிருவாகத்தைப் பாதிக்கிற முக்கியமான விஷயங்கள் பற்றிய தீர்மானங்களை அம் மாநாடு நிறைவேற்றியது. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள் அம் மாநாட்டுக்கு முன் கொணர்ந்த வேறு சில விஷயங்களைப் பற்றித் தலைமைச் செயலாளருடன் விவாதிக்க ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தலைவர்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட 21 பேர் கொண்ட அதற்கென அமைந்த குழு ஒன்றினை அம் மாநாடு நியமித்தது. அந்தக் குழு தலைமைச் செயலாளரைச் சந்தித்து, மாநாடு அதன் ஆலோசனைக்கு அனுப்பிய விஷயங்களைப் பற்றி அவருடன் விவாதித்தது. தலைமைச் செயலாளர் அக் குழுவுடன் நடத்திய விவாதங்கள், ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிருவாகத்துக்குச் சம்பந்தப்படுகிற வரையில் அவ் விவாதங்களின் பதிவுக் குறிப்பிலிருந்து எடு குறிப்புகள் இந்த ஆணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. (பிரிவு VI பத்தி 14 முதல் 21 வரையில், பிரிவு X, பாரா 42, பிரிவு XV, பத்தி 57) அவ் விவாதத்தின் போது எழுந்த சிறப்பியல்புக் கூறுகளை அரசினர் ஆய்ந்து பார்த்து, பின்வரும் ஆணைகளைப் பிறப்பிக்கத் தொடங்குகிறார்கள்.

2. தலைவர், ஆணையாளர் ஆகியவர்களுடைய பொறுப்புகள் இன்னவை யென்பது.—ஊராட்சி ஒன்றியத்தின் நிருவாக அதிகாரியாக முழு நேர அலுவலர் ஒருவரை—ஊராட்சி ஒன்றிய ஆணையாளரை அமர்த்திக் கொடுப்பதில் 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட திட்டத்தை வரையறுப்பதற்கும், தலைவருக்கும் ஆணையாளருக்கும் இடையில் நல்லுறவு ஏற்படுத்துவதற்காக நடைமுறை பற்றிய தக்க சில விளக்க உரைகள் கூறுவதற்கும் இது உரிய காலமென்று அரசினர் கருதுகிறார்கள். அம் மாநாட்டில் சொல்லப்பட்டவாறு, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் திட்டம் அடியிற் கண்டதாகும் :—

(i) மன்றமானது ஊராட்சி ஒன்றியத்தின் ஆளும் சபையாகும்; நிருவாக அதிகாரிக்குக் கட்டளைகள் பிறப்பிக்க அதற்கு உரிமையுண்டு.

(ii) ஆணையாளர் நிருவாக அதிகாரியாவார்; ஊராட்சி ஒன்றியத்தின் நிருவாக அலுவல்கள் அவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன; மன்றத்தின் நியாயமான தீர்மானங்கள், கட்டளைகள் எல்லாவற்றையும் அவர் நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) மன்றத்தின் தலைமை வகிக்கும் அலுவலர் என்னும் முறைமையில் தலைவர் ஊராட்சி ஒன்றியத்தின் அன்றாட நிருவாகத்தில் மன்றத்திற்கும் பிரதிநிதியாயிருக்கிறார்; நிருவாக அதிகாரியின் செயல்களைப் பற்றி எப்போதும் தெரிவிக்கப் பெற அவர் உரிமை உள்ளவராவார். எந்த விஷயங்களில் ஆணையாளர் தலைவருடன் கலந்தாலோசித்தால் ஆணையாளரும் தலைவரும் மன்றமும் திட்டத்தை அமைதியாகச் செயற்படுத்துவதற்கு ஏற்றதாயிருக்குமோ அந்த விஷயங்கள் சம்பந்தமாக முன்னதாய் அவ்வாறு கலந்தாலோசிக்க வேண்டுமென அரசினர் நிர்ணயிப்பது இத் திட்டத்துக்குப் பொருத்தமாயிருக்கும்.

மேற்படி சட்டத்தின் திட்டத்தையும் மேற்சொன்னவாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ள அரசினர் கொள்கையையும் செயற்படுத்தும்படி சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் அதாவது, ஆணையாளருக்கும் தலைவருக்கும் மன்றத்திற்கும் வற்புறுத்திச் சொல்ல அரசினர் விரும்புகிறார்கள்.

3. கோட்ட ஆட்சியாளர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆகியோரின் திங்கள் இருமுறைக் கூட்டம்.—தமது கோட்டத்திலிருக்கிற வட்டாரம் ஒவ்வொன்றிலும் ஊராட்சி வளர்ச்சி நிருவாகம் பற்றிய குறிப்பிட்ட பிரச்சினைகள் எல்லாவற்றைப் பற்றியும் கோட்ட ஆட்சியாளர் விவரமாகவும் நேர்முகமாகவும் தெரிந்து வைத்திருக்கும்படி செய்யும்பொருட்டும், வட்டாரப் பணியாளர்களையும் தாலுகா வருவாய்த் துறைப் பணியாளர்களையும் ஒருங்கிணைக்கும் பொருட்டும், கோட்ட ஆட்சியாளர் தாலுகாத் தலைமையிடம்

ஒவ்வொன்றிலும் மாதத்துக்கொரு முறை ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர் கூட்டங்களை நடத்த வேண்டுமெனவும், கோட்ட ஊராட்சி அலுவலரும் கோட்ட அலுவலகத்தின் ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தரும் தாசில்தாரர்களும், கீழ்நிலைக் கருவூல அலுவலரும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும், வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்களும் (ஊராட்சிகள்), அந்த தாலூகாவிலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாவற்றின் ஊராட்சி ஒன்றிய அலுவலக மேலாளர் களும் இக் கூட்டங்களுக்கு வர வேண்டுமெனவும், 1961 ஜூன் 5 ஆம் தேதியுள்ள 1588 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை யில் விளக்க உரைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஊராட்சி வளர்ச்சிப் பணி யாளர்கள் கோட்ட ஆட்சியாளருடன் தங்கள் பிரச்சினைகளை விவாதிக்க இக் கூட்டங்கள் ஒரு வாய்ப்பளிக்கின்றன. இணைப்பின் 42 ஆவது பத்தியில் பதிவு செய்யப்பட்ட விவாதங்களை முன்னிட்டு, கோட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் திங்கள் இருமுறைக் கூட்டம் ஒன்றை மேற்கொண்டு நடத்த வேண்டுமெனவும், கோட்ட ஆட்சியாளர் இக் கூட்டத்துக்குத் தலைமை வகிக்க வேண்டுமெனவும், இக் கூட்டத்துக்கு வரும்படி அந்தக் கோட்டத்திலிருக்கிற ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் எல்லாவற்றின் தலைவர்களையும் கேட்டுக் கொள்ள வேண்டுமெனவும் அரசினர் கட்டளையிடுகிறார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைத் தவிர வேறு யாரும் இக் கூட்டங்களுக்கு வரலாகாது. இக் கூட்டங்களைச் சாதாரணமாக சனவரி, மார்ச், மே, ஜூலை, செப்டம்பர், நவம்பர் மாதங்களில் நடத்த வேண்டும். இக் கூட்டங்களில் அடியிற் கண்டவைகள் கவனிக்கப்படலாம் :—

(i) [illegible] படவிருக்கிற விஷயங்களைப் பற்றிய முன்னணியான விவாதம், (ii) ஊராட்சி ஒன்றியங்களின் அன்றாட நடைமுறை சம்பந்தமாகக் கோட்ட ஆட்சியாள ராவது ஊராட்சி ஒன்றியத்தின் எந்தத் தலைவராவது கொண்டுவரக் கூடிய விஷயங்கள்.

4. **ஊராட்சி ஒன்றியக் கடிதப் போக்குவரத்து.**—1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 36 (4) பிரிவின்படி, ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் (அதாவது, அதன் நிருவாக அதிகாரி என்னும் முறைமையில் ஆணையாளருக்கும்) அரசினருக்குமிடையே, தலைவர் மூலமாகவன்றி மற்றப்படி, அலுவல் முறையான கடிதப் போக்குவரத்து எதுவும் நடக்கக் கூடாது. 1961 பெப்ரவரி 9 ஆம் தேதியுள்ள 332 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் அரசினர் மேற்கொண்டு கட்டளையிட்டிருப்பது என்னவென்றால், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கும், மாவட்ட ஆட்சி யாளர்களுக்கும், கோட்ட ஆட்சியாளர்களுக்கும், துறைகளின் தலைவர் களுக்கும் இடையேயான கடிதப் போக்குவரத்து எல்லாம் தலைவர் மூலமாகச்

செல்ல வேண்டும்; ஆனால் சட்டத்தையும் அமைதியையும் காப்பதற்கும், தாமதம் நேரிடக் கூடாத அவசர விஷயங்களுக்கும் தொடர்பான கடிதங்களும், நேர்முக கடிதங்களும் அவ்வாறு தலைவர் மூலமாகச் செல்ல வேண்டியதில்லை. இப்போது பின்வரும் விளக்க உரைகள் மேற்கொண்டு பிறப்பிக்கப் படுகின்றன.

(i) வருகிற கடிதங்கள்.—நேரடியாக ஆணையாளருக்கோ, தலைவர் மூலமாக ஆணையாளருக்கோ, தலைவருக்கோ முகவரியிட்டு வருகிற கடிதங்களை யெல்லாம் ஆணையாளர் திறக்க வேண்டும். ஆணையாளருடைய பெயர் எழுதி முகவரியிட்டு வருகிற கடிதங்களை ஆணையாளர் மட்டுமே திறக்க வேண்டும். தலைவருடைய பெயர் எழுதி முகவரியிட்டு வருகிற கடிதங்களைத் திறக்காமல் தலைவருக்கு அனுப்பிவிட வேண்டும். நடைமுறையில், பெயர் எழுதி அனுப்பப் படுபவையல்லாத மற்றக் கடிதங்களை, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் மேலாளர் திறக்கிறார்; 1961 ஏப்ரல் 6 ஆம் தேதியுள்ள 1642/ 1/59–6 ஆம் எண் அரசுக் குறிப்பாணையின் 14 ஆவது பத்தியின்படி அவர் அவ்வாறு திறக்கிறார். மேலாளர் திறந்த கடிதங்களை ஆணையாளர் படித்துப் பார்த்த உடனே, தலைவர் படித்துப் பார்ப்பதற்கு, அவர் அலுவலகத்துக்கு வந்திருந்தால் அங்கும் அல்லது அவருடைய வீட்டுக்கும் அவைகளை அனுப்ப வேண்டும். சட்டத்துக்கும் அமைதிக்கும் சம்பந்தப்பட்டவைகளைப் போல, மிக முந்தனத் தன்மை வாய்ந்தவைகளாய் ஆணையாளரால் பெறப்படும் கடிதங்களைத் தலைவருக்கு அனுப்ப வேண்டியதில்லை. அவசர நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ள விஷயங்களை கடிதத்தின்படி ஒன்றை எடுத்துக் கொண்டு, தக்க நடவடிக்கை மேற்கொண்டு, மூலக் கடிதத்தைப் படித்துப் பார்ப்பதற்காகத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். கடிதங்களைத் தாம் படித்துப் பார்த்து, கொஞ்சங் கூடத் தாமதமின்றி எப்படியும் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் அவைகளை அலுவலகத்துக்குத் திருப்பி அனுப்பிவிடுவது தலைவருடைய கடமையாகும்.

(ii) அனுப்பும் கடிதங்கள்.—ஏற்கெனவே சொல்லியபடி, அரசினருக்கும், மாவட்ட ஆட்சியாளருக்கும், கோட்ட ஆட்சியாளருக்கும், துறைகளின் தலைவர்களுக்கும், ஆணையாளர் விடுக்கும் கடிதங்களையெல்லாம் தலைவர் மூலமாக அனுப்பவேண்டும். இது சம்பந்தமாக ஒரு கேள்வி எழுப்பப் பட்டிருக்கிறது; அதாவது, ஒரு கடிதத்தை அனுப்பும்போது தலைவர் அதன் மீது தம் சொந்தக் கருத்தை எழுதலாமா என்பதுதான். தலைவருக்குள்ள இவ்வுரிமையை அரசினர் ஒப்புக்கொள்கிறார்கள்; ஆனால், தலைவரும் ஆணையாளரும் வெவ்வேறு கருத்துடையவர்களாயிருக்கும் விஷயங்களில்

நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையின்படி அவர்கள் அந்த விஷயத்தை விவாதித்து, கூடிய விரைவில் உடன்பாடான முடிவையே வெளி அலுவலகத்துக்கு அனுப்பக் கூடியவர்களாயிருப்பது அதிகப் பொருத்தமாயிருக்குமென்று அரசினர் கருதுகிறார்கள். இதற்கு வசதியளிக்கும் வகையில் அரசினர் கட்டளையிடுவது என்னவென்றால், வெறும் வாலாயமான தன்மைவாய்ந்த கடிதங்களும் இடைக்கால பதில்களுமல்லாத மற்ற விஷயங்களில் ஆணையாளர் வெளிச் செல்லும் கடிதத்தின் கையெழுத்திட்ட சுத்தப் படியையும் அலுவலகப் படியையும் தொடர்பான தாள்களையும் தலைவருக்கு அனுப்ப வேண்டும்; இப்போது நடப்பதைப் போலவே தலைவர் அவைகளைப் படித்துப் பார்த்து கடிதத்தை அனுப்புவார். தலைவரும் ஆணையாளரும் வெவ்வேறான கருத்துக்கள் கொண்டிருந்தால், அவர்களிருவரும் அந்த விஷயத்தை விவாதித்து, ஓர் உடன்பாட்டுக்கு வர முயல வேண்டும். உடன்பாட்டுக்கு வர முடியாவிட்டால் தலைவர் பொருத்தமான கோப்பினை வரவழைத்து, அந்த விஷயத்தில் தமது சொந்தக் கருத்துக்களை அலுவலகப் படியிலும் சுத்தப் படியிலும் எழுதி வைத்து சுத்தப் படியை அனுப்ப வேண்டும்.

கடன்களுக்கு ஒப்பளிப்பது போன்ற சில விஷயங்கள், வட்டார வளர்ச்சி அலுவலர் என்னும் முறைமையில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. வட்டார வளர்ச்சி அலுவலர் தம் சொந்தப் பொறுப்பில் இவற்றைப் பற்றித் தொடர்ந்து விவகரித்துக் கொண்டு வருவார். ஆனால், இவை சம்பந்தமாகவுங்கூட, தகவல் கொடுக்கும்படி தலைவர் கேட்கும்போதெல்லாம் அதை உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டும்.

(iii) **தீர்வுகள் பற்றிய வார அட்டவணை.**—ஆணையாளர், தீர்வுகள் பற்றிய வார அட்டவணை ஒன்றைத் தயாரிக்க ஏற்பாடு செய்து, படித்துப் பார்ப்பதற்காக அதைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

5. வட்டார 'ஜீப்'.—ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளையும் பிற நிறுவனங்களையும் போய்ப் பார்ப்பதற்கு, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தையும், அத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவது நேரடியாகவா ஊராட்சிகள் மூலமாகவா என்பதையும் தெரிந்துகொள்ளும்பொருட்டு, அவர்கள் கிராமங்களுக்குப் போய்ப் பார்ப்பதும் அவசியமாயிருக்கும். இப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு, தலைவர் அவ்வப்போது வட்டார 'ஜீப்'பைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். தலைவரும் வட்டாரப் பணியாளர்களும் வட்டார 'ஜீப்'பை மிகச் சிக்கனமாகவும் சிறந்த

முறையிலும் பயன்படுத்தும்படி செய்யும்பொருட்டு, ஆணையாளர் தலைவருடன் கலந்தாலோசித்து, 'ஜீப்'புக்கான வார நிகழ் முறையை முன்னதாகத் தயாரிக்க வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள்.

6. ஊராட்சி ஒன்றிய வேலையாட்கள் பற்றிய சில பிரச்சினைகள்.—ஊராட்சி ஒன்றியத்தின் வேலையால் ஒருவரை அமர்த்துவது, மாற்றுவது அல்லது தண்டிப்பது சம்பந்தமாக ஆணையாளர் பிறப்பிக்கிற ஆணைகள்பற்றி ஆணையாளர் தலைவரை முன்னதாகக் கலந்தாலோசிப்பதன் அவசியத்தை அரசினர் கோட்பாட்டளவில் ஒப்புக் கொள்கின்றனர் ; இணைப்பிலுள்ள பதிவுக் குறிப்பின் 17 ஆவது, 20 ஆவது பத்திகளில் நிமித்தக் குழுவினர் குறிப்பிட்டிருக்கிற நடைமுறை பின்பற்றப்பட வேண்டுமெனக் கட்டளையிடுகிறார்கள். வளர்ச்சிப் பணிச் சிப்பந்திகளின் பட்டியலில் கண்டுள்ள எந்த அரசு ஊழியர்களின் சேவைகள் ஊராட்சி ஒன்றியங்களின் வசம் விட்டுவைக்கப்படுகின்றனவோ அந்த ஊழியர்களுக்கு இந்தக் கோட்பாடும் நடைமுறையும் பொருந்தா என்று அரசினர் அறிவிக்கிறார்கள்.

7. காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள்.—ஊராட்சி ஒன்றியத்தின் செலவுக்கு ஒப்பளிப்புத் தந்து அதன் கணக்குகளை ஒப்புக் கொள்கிற முகவா என்னும் முறைமையில் ஊராட்சி ஒன்றிய மன்றம் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றத்தை ஒழுங்காக அறிந்துகொள்வதற்கான உரிமையும் பொறுப்பும், அந்த முன்னேற்றத்தை முறையாக ஆய்வு செய்யும் கடமையும் உடையதாகும். ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளர் பின்வரும் முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்து மன்றத்தின் முன் வைக்க வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள்.

(i) **பணிகள் திட்டம் பற்றிய காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள்.**—சனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் மாதங்களில்.

(ii) **உற்பத்தித் திட்டங்கள் பற்றிய காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள்.**—பெப்ரவரி, மே, ஆகஸ்ட், நவம்பர் மாதங்களில்.

(iii) **கல்வி, உடல் நலம், சேம நலத் திட்டம் பற்றிய காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள்.**—மார்ச், ஜூன், செப்டம்பர், டிசம்பர் மாதங்களில்.

அனுப்பப்பட வேண்டிய இந்த முன்னேற்ற அறிக்கையின் படிவத்தையும் உள்ளடக்கத்தையும், பின்னர் மாநில முழுவதுக்குமான அடிப்படையில் தரஅளவுப்படுத்த வேண்டியிருக்கும். ஆயினும், அடுத்த ஆண்டில் அவ்வாறு தர

அளவுப்படுத்தக் கருதவில்லை. ஆகையால், மாவட்ட ஆட்சியாளர்கள், இந்த முன்னேற்ற அறிக்கைகளின் படிவம், உள்ளடக்கம் சம்பந்தமாகத் தாங்கள் தகுதியெனக் கருதக்கூடிய விளக்க உரைகளைப் பிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. **முன்னேற்ற அறிக்கைகளின் காலாண்டு மறு ஆய்வு.**—ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு முன் வைக்கப்பட்ட காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளின் படிகளும், அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு எடு குறிப்புகளும் காலந் தவறாமல் தங்களுக்கு அனுப்பப்படுவதற்கு ஏற்பாடு செய்யும்படியும், தனித்தனியாக வளர்ச்சி மாவட்டம் ஒவ்வொன்றின் வட்டாரம் எல்லாவற்றிற்குமான அத்தகைய எல்லா முன்னேற்ற அறிக்கைகளுக்கும் மறு ஆய்வுகள் தயாரித்து அனுப்பும்படியும்கூட மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த மறு ஆய்வுகளின் படிகள் மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கும், தகவலுக்காக அரசினருக்குங் கூடக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

9. **மன்றக் கூட்டத்திற்கு முன்னதான பணியாளர் கூட்டங்கள்.**—வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்களின் பணியைப் பற்றி நேர்முகமாகத் தெரிந்து கொள்ளத் தலைவருக்கு வாய்ப்பளிப்பது அவசியமென அரசினர் கருதுகிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் இப்போது கைக்கொள்ளப்படும் வழக்கம் என்னவென்றால், இரண்டு வாரத்துக்கொரு முறை பணியாளர் கூட்டம் ஒன்று நடத்தப்படும்; இதில் ஆணையாளர் தலைமை வகிப்பார். அந்த வட்டாரத்திலுள்ள எல்லா வளர்ச்சி உதவி அலுவலர்களும் கிராம சேவகர்களும் இக் கூட்டத்துக்கு வருவார்கள்; பணிகள், திட்டங்கள் ஆகியவற்றின் முன்னேற்றம் இக் கூட்டத்தில் மறு ஆய்வு செய்யப்படும். இக் கூட்டங்களில் ஒன்றிற்கு 'மன்றக் கூட்டத்திற்கு முன்னதான பணியாளர் கூட்டம்' எனப் பெயரிடுவதும், அதில் ஆணையாளருக்குப் பதிலாகத் தலைவர் தலைமை வகிப்பதும் நல்லது. இதனால், ஒன்றியத்தில் தலைவரது பணிகள், திட்டங்கள் ஆகியவற்றின் விவரங்களைப் பற்றி அவர் தெரிந்து கொள்ளவும், ஆணையாளருக்கும், பிற வளர்ச்சிப் பணியாளர்களுக்கும் அவர் தக்க யோசனை கூறி அவர்களை நெறிப்படுத்தவும் வாய்ப்பு ஏற்படும். மன்றக் கூட்டத்திற்கு முன்னதான பணியாளர் கூட்டங்கள் என்று சொல்லப்படும் இக் கூட்டங்களில் முந்திய பத்தியில் சொல்லப்பட்டிருக்கிற காலமுறை முன்னேற்ற அறிக்கையின் வரைவைப் பற்றி, தலைவர் ஆணையாளருடன் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்களுடனும் விவாதிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அடுத்த கூட்டத்துக்கு முன் வைக்கப்பட வேண்டிய வரைவு அறிக்கையை, பணியாளர் கூட்டத்தில் அது முடிவு செய்யப்பட்ட பிறகுதான் அவ்வாறு வைக்க வேண்டும்.

இணைப்பு.

பிரிவு VI

ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கும் ஆணையாளருக்கும் இடையே நல்லுறவு ஏற்படுத்தும்பொருட்டு—

(அ) ஊராட்சி ஒன்றியத்துக்கென்று உத்தேசிக்கப்பட்ட (அஞ்சல்) கடிதங்களில் ஆணையாளரின் முகவரி எழுதப்பட்டிருந்தபோதிலும், தலைவர் படித்துப் பார்த்த பிறகுதான் அதை ஒன்றிய அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும்.

(ஆ) மாவட்ட அலுவலர்களுக்கும் மற்றெல்லா அலுவலர்களுக்கும் உத்தேசிக்கப்பட்ட கடிதங்களை ஒன்றியத் தலைவர் மூலமாக அனுப்ப வேண்டும்.

(இ) ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களையும் என்.இ.எஸ். (N.E.S.) பணியாளர்களையும் மாற்றுவதை ஒன்றியத் தலைவருடைய உடன்பாட்டைப் பெற்றுக் கொண்ட பிறகுதான் செய்ய வேண்டும். ஓர் ஒன்றியத்தில் புதிதாக நியமிக்கப் படுகிற ஆசிரியர்கள், பணியாளர்கள் விஷயத்தில், தலைவருடைய உடன்பாட்டை பெற்றுக் கொண்ட பிறகுதான் ஆணையாளர் அவர்களைக் குறிப்பிட்ட இடங்களில் அமர்த்த வேண்டும்.

(ஈ) ஊராட்சி ஒன்றியத்தின் வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்கள் எல்லோருடைய பயணத் திட்டத்தையும் மாத நாட்குறிப்புகளையும் படித்துப் பார்த்து மறு ஆய்வு செய்வதற்காக அவைகளைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

(உ) ஒன்றிய ஆணையாளரால் பிறப்பிக்கப்படுகிற முடிவான ஆணைகளையெல்லாம், குறிப்பாக ஒன்றியப் பணியாளர்களைத் தண்டிப்பது, ஒன்றியப் பணியாளர்களை வேலையிலிருந்து நீக்குவது, பணியாளர்களை உயர்த்துவது பொறுப்புக்களை வகுத்துக் கொடுப்பது சம்பந்தமான ஆணைகளையெல்லாம் தலைவர் ஒப்புக் கொண்டபிறகுதான் பிறப்பிக்க வேண்டும்.

(ஊ) ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருக்கிற 'ஜீப்' வண்டி தலைவருடைய கட்டுப்பாட்டுக்குட்பட்டிருக்க வேண்டும்.

14. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கும் தலைவர்களுக்குமிடையே நல்லுறவு நிலவுவதற்காக மேற்சொன்ன குழு பல ஆலோசனைகளைத் தெரிவித்தது. சில சமயங்களில் ஆணையாளர்கள் தலைவர்களை முழுவதும் புறக்கணித்தார்களென்றும், வளர்ச்சிப் பணியின் முன்னேற்றத்தை அறியத் தலைவருக்குள்ள உரிமையைக் கூட மறுத்தார்களென்றும் சொல்லப்பட்டது. வேறு

சில சமயங்களில் நம்பிக்கையின்மைத் தீர்மானங்களுக்கு ஆணையாளர்கள் ஆதரவு தேடினர்களென்றும் சொல்லப்பட்டது. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ஆதரவு செய்யும் பெருங் குற்றங்களைத் தவிர்க்க வேண்டுமானால் அதற்கு மாவட்ட ஆட்சியாளர்களை நேரடியாகப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டுமென்றும், வட்டாட்சியாளர்கள் விஷயத்தில் மாவட்ட ஆட்சியாளர்கள் இப்போது எவ்வாறு வலிமையுடன் செயலாற்றுகிறார்களோ அப்படியே ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மீது ஒழுங்குக் கட்டுப்பாடு செலுத்த வேண்டுமென்றுங்கூட ஆலோசனை சொல்லப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்கள்கூட மாவட்ட ஆட்சியாளரின் கட்டுப்பாட்டுக்குட்பட்டிருக்க வேண்டும். தற்போது ஆணையாளர்களையாவது வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்களையாவது மாற்றுதல் செய்யக்கூட தங்களால் முடியவில்லையென்று மாவட்ட ஆட்சியாளர்கள் சொல்லுகிறார்கள். இது பற்றி ஆய்ந்து, தக்க ஆணைகள் பிறப்பிக்கப் போவதாகத் தலைமைச் செயலாளர் வாக்களித்துள்ளார்.

15. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் ஆணையாளர்களுக்கு மிடையில் தக்க மன ஒத்திசைவு இருக்கும்படி செய்வதற்கான உருப்படியான ஏற்பாடுகள் என்னும் வகையில், குழுவினர் பல ஆலோசனைகளைத் தெரிவித்தார்கள்; அவற்றுள், (அ), (ஆ) என்பவைகளின் கீழ், எல்லா முகாந்தரங்களிலிருந்தும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வரும் கடிதங்களைப்பற்றி மட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சியாளர்களும் அரசினரும் உட்பட பல்வேறு அலுவலர்களுக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து போகும் கடிதங்களைப் பற்றிக் கூடி தலைவர்களுக்குத் தெரிவித்து வைக்க வேண்டுமெனக் குழுவினர் விரும்பினார்கள். இந்த நோக்கங்களுக்கு வசதி செய்யும் பொருட்டு அல்லது அவைகளை எய்தும் பொருட்டு, தமக்கோ தலைவருக்கோ முகவரியிட்டு அனுப்பப்படும் கடிதங்களையெல்லாம் ஆணையாளர் திறந்து, தலைவர் படித்துப் பார்ப்பதற்காக அவைகளை அவர் முன் வைப்பது நல்லதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. ஒரு நாள் கூட தாமதம் செய்யக்கூடாத அவசரக் கடிதங்கள் விஷயத்தில், அக் கடிதங்களுக்குப் படிகள் எடுப்பது மூலமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்; மூலக் கடிதங்களை மற்றக் கடிதங்களுடன்கூட தலைவருக்கு அனுப்ப வேண்டும். தலைவர் கடிதங்களைப் படித்துப் பார்த்தவுடனே திருப்பி அனுப்பி விடுவாரென்றும் (கூட) குழுவினர் உறுதியளித்தார்கள்.

16. அனுப்பப்படும் கடிதங்களைப் பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டது. என்ன நடக்கிறதென்பதைத் தலைவர் முழுவதும் தெரிந்துகொள்ளும்படி செய்வதையும், அவருடன் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் அரசினர்

நிர்ணயித்திருக்கக் கூடிய விஷயங்களில் அவர் கலந்தாலோசிக்கப்படும்படி செய்வதையும் முன்னிட்டு, ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் அனுசரிக்கப்படும் நடைமுறை பற்றிய குழு பிரச்சினையும் மறு ஆய்வு செய்யப்படுமென்று தலைமைச் செயலாளர் வாக்களித்தார். மேற்படி சட்டத்தின் ஏற்பாடு அடியிற் கண்டதாகுமெனத் தலைமைச் செயலாளர் விளக்கினர்:—

(i) நிருவாக அதிகாரி ஆணையாளரே ஆவர்; தலைவர் அல்லர்.

மன்றம் ஆளும் சபையாகும்; நிருவாக அதிகாரிக்குக் கட்டளைகள் பிறப்பிக்க அதற்கு உரிமையுண்டு.

(iii) தலைவர், மன்றத்தின் பிரதிநிதியாவார். மன்றம் கூடாமலிருக்கையில் நிருவாக அதிகாரியின் செயல்களைப் பற்றி எப்போதும் தெரிவிக்கப்பெற உரிமை உள்ளவராவார்.

அரசினர் பின்வருமாறு நிர்ணயிப்பது இந்தத் திட்டத்துக்குப் பொருத்தமானதாயிருக்கும்; அதாவது எவை பற்றி ஆணையாளர் தலைவருடன் முன்னதாகக் கலந்தாலோசிப்பது, ஆணையாளரும் தலைவரும் மன்றத்தினரும் இத் திட்டத்தை இடர்ப்பாடின்றிச் செயற்படுத்துவதற்கு உகந்ததாயிருக்குமோ அவைகளில் அவ்வாறு கலந்தாலோசிக்க வேண்டுமென்பதேயாகும்.

அனுபவம் முதிர்வதற்கும் அனுபவத்தின் அடிப்படையில் இயல்பான மரபுகள் வளர்வதற்கும் கொஞ்சம் காலம் ஆவது அவசியமாகும். ஆகையால் கண்டிப்பான விதிகள் எவையும் இதுவரையில் நிர்ணயிக்கப்படவில்லை.

உண்மையில் பல ஊராட்சி ஒன்றியங்களில் நல்ல மரபுகள் உருவாகி அவை ஆணையாளருக்கும் தலைவருக்கும் உதவியாய் இருந்து வந்திருக்கின்றன. நாம் இப்போது ஒருபடி முன்சென்று இதன் நடைமுறை பற்றிய, தக்க சில விளக்க உரைகளைப் பிறப்பிக்க வேண்டும்.

17. பள்ளி ஆசிரியர்களை மாற்ற ஆணையாளருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு பள்ளி ஆசிரியர்கள் மாற்றப்பட்டு, சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தலைவர்களிடம் முறையிட்டுக் கொள்ளும்போது, தலைவர்களுக்குச் சற்று இக்கட்டான நிலைமை உண்டாகிறதென்று குழுவினர் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பிட்ட ஓர் ஆசிரியர் எந்த சூழ்நிலையில் மாற்றப்பட்டாரென்பது தெரியாத காரணத்தினால் அந்த மாற்றுதலுக்கு ஆதாரமாகத் தலைவர் எவ்விதப் பதிலும் கொடுக்க முடியாதவராயிருக்கிறார், ஆகையால்,

ஆணையாளர்கள் தலைவர்களுடன் கலந்தாலோசித்த பிறகுதான் ஆசிரியர்களை மாற்ற வேண்டுமென்று குழுவினர் தெரிவித்தார்கள். இந்த இடர்ப்பாடு ஏற்கெனவே தெரிய வந்திருக்கிறதென்றும், இது பற்றித் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறதென்றும் தலைமைச் செயலாளர் சொன்னார். இது வரையில் இது பற்றிய சிந்தனையின் போக்கு அடியிற் கண்டதாகும்.

பள்ளி ஆசிரியர்கள் பள்ளி ஆண்டின் இறுதியில் ஆண்டுக்கொரு முறை மாற்றப்படுவதற்கும், அந்த ஆண்டுக்குள்ளாகவே அவர்கள் மற்றப்படி தற்செயலாக மாற்றப்படுவதற்கும் வேறுபாடு காண வேண்டும். ஆண்டுதோறுமுள்ள மாற்றல்களை ஒரு சிறு குழுவுடன் கலந்தாலோசித்துச் செய்யலாம். இக் குழு நியமனக் குழுவாக இருக்கலாம். (பொதுக் காரணங்களை முன்னிட்டோ தனிப்பட்ட காரணங்களை முன்னிட்டோ) பள்ளி ஆண்டுகள் முடிவதற்கு முன்னே அவசியமேற்படும்போதெல்லாம் செய்யப்படும் தற்செயல் மாற்றங்களை, தலைவருடன் கலந்தாலோசித்த பிறகே செய்வது நல்லது. தலைமைச் செயலாளருடைய கருத்துக்களைக் குழுவினர் ஏற்றுக்கொண்டனர். ஆனால், தலைவரும் ஆணையாளரும் ஒத்துப் போகாதபோதுதான் சிக்கலான அல்லது நொய்மைவாய்ந்த நிலைமை உண்டாகிறது. இப்படி நேர்ந்தால் என்ன ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதைக் குறித்து நீண்ட நேரம் விவாதம் நடந்தது. முடிவாக, குழுவினர் தங்கள் ஒருமுகமான விருப்பத்தைப் பின்வருமாறு தெரிவித்தார்கள். அதாவது—ஆணையாளர் தலைவருடன் கருத்து மாறுபாடு கொண்டால், அவர் கருத்து மாறுபாட்டினைக் கோட்ட ஆட்சியாளருக்குத் தெரிவித்து, பிறகு முன்னதாக அவர் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டு ஆணைப் பிறப்பிக்கவேண்டும்.

18. ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்களின் பயணத் திட்டங்களையும் மாத நாட் குறிப்புகளையும் தலைவர், படித்துப் பார்த்து மறு ஆய்வு செய்வதற்காக அவர் முன் வைக்க வேண்டுமெனக் குழுவினர் ஆலோசனை தெரிவித்தார்கள். சிறிது நேர விவாதத்துக்குப் பிறகு பயனுள்ள மறு ஆய்வுத் திட்டமொன்றை வகுக்க வேண்டுமெனத் தலைமை செயலாளர் சொன்னார். வெறும் பயணத்திட்டங்களை அல்லது நாட்குறிப்புகள் தலைவர் சில கருத்துக்களைத் தாளில் எழுதுவதற்குத்தான் வாய்ப்பளிக்கும், இதனால் செயல் முறையில் பயன் உண்டாகலாம் அல்லது உண்டாகாமலும் இருக்கலாம். இதற்கு மாறாக, ஆணையாளர் நடத்துகிற அரை மாதப் பணியாளர் கூட்டங்கள் இரண்டில் ஒன்றைத் தலைவர் கூட்டமாக மாற்றிவிட்டால் வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்கள் ஒவ்வொருவரும் செய்த வேலையின் முன்னேற்றத்தை மறு ஆய்வு செய்யத் தலைவருக்கு வாய்ப்பிருக்கும். தலைவர் தமது கருத்துக்களையும் ஆலோசனையையும் சொல்லலாம். அன்றியும், (அந்த மாதத்தின் 11 ஆம்

தேதிக்கும் 20 ஆம் தேதிக்குமிடையே) அடுத்துவரும் மன்றக் கூட்டத்தில் விவாதத்துக்கு வரக்கூடிய செய்திகளின் விவரங்களை அவர் அறிந்து வைத்துக் கொள்ளக்கூடும்.

19. மேற்சொன்னவைகளிலிருந்து எழுந்த செய்தியொன்றைத் தலைமைச் செயலாளர் குறிப்பிட்டார்; அதாவது தற்போதைய ஏற்பாடுகளின்படி ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு முன்னேற்ற அறிக்கை எதுவும் அனுப்பப் படாத நிலையும் அது அவர்களால் விவாதிக்கப்படாத நிலையும் உள்ளது என்பதாகும். இதனை வெகு காலத்துக்கு முன்னே கொண்டுவந்தார். ஆனால் அதைப் பற்றித் தொடர்ந்து கவனம் செலுத்தப்படவில்லை. ஊராட்சி ஒன்றிய மன்றம் செலவுக்கு ஒப்பளிப்பு வழங்குவதும் கணக்குகளுக்குச் சம்மதம் தெரிவிப்பதும் முக்கியமானவை என்பதில் சந்தேகமில்லை; ஆனால், அம் மன்றம் இதை மட்டும் செய்யச் சொல்வது போதாது. அவசியமானது என்ன வென்றால் அச் செலவின் பலனை விளைந்தது என்ன? உற்பத்தித் திட்டம்—பணித் திட்டம்—கல்வி மற்ற ஊழியங்கள் திட்டம் ஆகியவற்றில் ஏற்பட்டு வரும் முன்னேற்றம் யாது? என்பவற்றை மன்றத்தினர் எல்லாரும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் குழுவின் உறுப்பினர்கள்—ஊராட்சித் தலைவர்கள்—நேரில் தொடர்பு கொண்டவர்களாகி, அதன் மூலமாக வட்டார வளர்ச்சியில் பயனுள்ள பங்கு கொண்டவர்கள் ஆவார்கள். அத்தகைய முன்னேற்ற அறிக்கைகளை அனுப்ப வேண்டுமென நிர்ணயிக்காதிருப்பது மிகப் பெரிய விடுபாடு ஆகும். இதனை நாம் உடனடியாகத் திருத்தியமைக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு முன்னர் வைக்கப்பட வேண்டிய முன்னேற்ற அறிக்கைகளின் புதிய ஏற்பாடு ஒன்றை வகுத்து நிர்ணயிக்க வேண்டும். தலைவர் வரைவு முன்னேற்ற அறிக்கை ஒவ்வொன்றையும் பற்றி, சம்பந்தப்பட்ட ஆணையாளருடன் அல்லது வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்களுடன் கலந்தாலோசிக்கக் கடமைப்பட்டவராவார். அவ்வாறு கலந்தாலோசித்த பிறகு அவ் வரைவினை முடிவு செய்ய வேண்டும். இப்படிச் செய்தால்தான் வளர்ச்சிப் பணிகள் நன்கு செயற்படும். அப்போதுதான் நிருவாக அதிகாரி யுடன் மன்றத்திற்குள்ள உறவு சம்பந்தப்பட்டவரை, மன்றத்தின் அதிகார பூர்வமான பிரதிநிதி என்னும் வகையில் தலைவர் உண்மையிலேயே பயனுள்ள அலுவல்களைச் செய்யக்கூடியவராயிருப்பதை உணர்வார்.

20. குழுவினர் அடுத்தபடியாக எழுப்பிய பிரச்சினை, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் பிறப்பிக்கும் முடிவான ஆணைகள்—குறிப்பாக, பள்ளி ஆசிரியர் கள் உட்பட, ஒன்றியத்தின் பணியாளர்களைத் தண்டிப்பதற்குச் சம்பந்தப்பட்ட ஆணைகள்—பற்றியதாகும். மாற்றல்கள் விஷயத்தில் முடிவானது போலவே எல்லா விஷயங்களிலும் தலைவரைக் கலந்தாலோசித்தபிறகுதான் ஆணையாளர்

தண்டனைகள் விதிக்க வேண்டுமென ஒப்புக் கொள்ளப்பட்டது. அவர்களுக்கிடையே கருத்து வேற்றுமை உண்டானால், கோட்ட ஆட்சியாளரின் உடன்பாட்டை முன்னதாகப் பெற்றுக் கொண்ட பிறகுதான், ஆணையாளர் செயலாற்ற வேண்டும்.

21. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலுள்ள 'ஜீப்' தலைவரின் கட்டுப்பாட்டுக்குட்பட்டிருக்க வேண்டுமெனக் குழுவினர் விரும்பினார்கள். பல தடவைகளில் தலைவர் 'ஜீப்'பைப் பயன்படுத்த முடியாதபடி, ஆணையாளர் தடுத்துவிட்டாரென்றும், அதுமட்டுமன்றி, தலைவர் ஆணைகளை நிறைவேற்ற ஓட்டுநர்கள் கூட மறுத்து விட்டார்களென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பின்னர், இப்போது வட்டார ஜீப்புகள் பயன்படுத்தப்படும் பல்வேறு விதங்களைப் பற்றி விவாதம் திசை மாறிற்று. வட்டாரத்தில் பயணம் செய்யும் பல்வேறு மாவட்ட அலுவலர்கள் 'ஜீப்'பை பயன்படுத்துவதைக் கருதியும், பிரமுகர்கள் வருகை சம்பந்தமாகப் பயன்படுத்துவதற்கு அது அவ்வப்போது தேவைப்படுவதைக் கருதியும், தலைமைச் செயலாளர் பின்வருமாறு ஆலோசனை கூறினர்; அதாவது ஆணையாளர் தலைவருடன் கலந்தாலோசித்து, 'ஜீப்'புக்கான வாரத் திட்டம் ஒன்றை முன்னதாகத் தயாரிக்க வேண்டும். பிரமுகர்கள் வருகை சம்பந்தமாக மாவட்ட அலுவலர்கள் மாவட்ட ஆட்சியாளர் ஆகியவர்களின் தேவைகளை மட்டுமல்லாமல்; தலைவர், வட்டாரத்திலிருக்கிற வளர்ச்சிப் பணியாளர்கள் ஆகியவர்களின் தேவைகளைக் கூட கவனிப்பது அப்போது சாத்தியமாயிருக்கும். குழுவினர் இந்த ஆலோசனையை வரவேற்றார்கள். அவ்வண்ணமே ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

பிரிவு X.

42. முடிவாகாமலிருக்கிற விஷயங்களைத் தீர்வு செய்ய வசதியாயிருக்கும் பொருட்டு, கோட்ட அலுவலர்கள் தங்கள் ஆட்சி எல்லைக்குள் தலைவர்களுடன் மாதந்தோறும் கூடிப் பேச வேண்டுமென்றுங்கூட குழுவினர் ஆலோசனை தெரிவித்தார்கள். இரண்டு மாத இடைவேளையில் (சிறப்பாக இரண்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்கு இடைப்பட்ட மாதத்தில்) கோட்ட ஆட்சியாளர்கள் இக் கூட்டங்களை நடத்தினால் மிக உதவியாயிருக்குமென்று தலைமைச் செயலாளர் கருதினர். இந்த வகையில் எல்லா மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்படும்.

பிரிவு XV.

57. **தலைவர்களுக்கும் வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்களுக்கும் இடையே அமையும் உறவு.**—இது, ஏறத்தாழ, தலைவருக்கும் வட்டார வளர்ச்சி உதவி

அலுவலர்களுக்கும் இடைப்பட்ட உறவு பற்றி, (6 ஈ)யின் விரிவாகும். தலைவர் தலைமை வகித்து நடத்தும் மாதக் கூட்டங்களினால் வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்களுடன் அவர் நெருங்கிய தொடர்பு கொள்வாரென்றும், அதன் விளைவாக இருவருக்கும் இடைப்பட்ட உறவு தக்கவாறு வளர்ச்சியடையு மென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

(38) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு தற்செயல் விடுப்பு வழங்கு வது :—ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு தற்செயல் விடுப்பு தேவைப் படும் போதும் அல்லது விடுமுறைகளைப் பயன்படுத்திக் கொண்டு ஊரை விட்டுப் போகக் கருதும்போதும் அவர்கள் தலைவருடைய ஒப்பளிப்பை முன்னதாகப் பெற வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள். ஆயினும், அவசர காலங் களில், அத்தகைய முன் ஒப்பளிப்பை உரிய காலத்தில் பெற முடியாவிட்டால் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் தலைவருடைய ஒப்பளிப்பை எதிர்பார்த்து, தற்செயல் விடுப்பையோ, விடுமுறைகளையோ பயன்படுத்திக் கொண்டு, ஊரை விட்டுப் போகலாம், அப்படிப் போவதற்குமுன், அவ்வாறு செய்ய வேண்டி யிருந்த காரணங்களை எழுதி வைக்க வேண்டும். ஒவ்வொன்றிலும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளருக்கு முன்னதாகச் செய்தி தெரிவிக்க வேண்டும்.

(1961 சனவரி 22 ஆம் தேதியுள்ள 23 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(39) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களின் நாட்குறிப்புகளை மறு ஆய்வு செய்தல்.—ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் நாட்குறிப்பை மறு ஆய்வு செய் வதற்காக அதன்படி ஒன்றை, ஊராட்சி ஒன்றியக் குழுவின் தலைவர் மூலமாகக் கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார் கள். மேற்படி தலைவர் அந்த நாட்குறிப்பினைக் கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்பும்போது தமது கருத்துக்களை எழுதிச் சேர்க்கலாம்.

மேற்கொண்டு அரசினர் கட்டளையிடுவது என்னவென்றால், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஒவ்வொரு மாதமும் தாம் செய்யும் புறமுக வேலை பற்றிய நாட்குறிப்பை, ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் அறிவதற்காக, அடுத்துவரும் மாதத்தில் அம் மன்றத்தின் முதற் கூட்டத்தில் அவர்களுக்கு முன்வைக்க வேண்டும்.

(1961 சனவரி 22-ஆம் தேதியுள்ள 231-ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(40) பயணத் திட்டங்களின் படியைத் தலைவருக்கு அனுப்புதல்.—வட்டார வளர்ச்சி அலுவலர்களும் (ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும்) வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்களும் தங்கள் பயணத் திட்டத்தின் படி ஒன்றை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்களுக்குத் தவறாமல் முன்னதாக அனுப்ப வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள்.

(1961 பெப்ரவரி 13 ஆம் தேதியுள்ள 5432 | 1-61-2 ஆம் எண் குறிப்பாணை.)

1. மாவட்ட அலுவலர்களில் சிலர் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒழுங்காக வந்து பார்ப்பதில்லையென்றும், அரசினர் துறைகள் சம்பந்தமாக அந்த ஒன்றியங்களில் மேற்கொள்ளப்பட்ட பணிகளையும் திட்டங்களையும் ஆய்வு செய்வதில்லையென்றும் அரசினருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட அலுவலர்கள் அவ்வப்போது போய்ப் பார்ப்பதனாலும், அரசினர் துறைகள் சம்பந்தப்பட்ட பணிகளையும் திட்டங்களையும் ஆய்வு செய்வதனாலும், அப் பணிகளும் திட்டங்களும் நல்லவிதமாக முன்னேறுமென அரசினர் கருதுகிறார்கள். இந்தத் திட்டம் வெற்றியடையும்படி செய்வதில் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்கள் தங்களால் இயன்ற அளவு புரியும்படி செய்வதற்கு அவ்வாறு போய்ப்பார்ப்பது அவசியமாகும்.

2. ஆகவே, அரசினர் கட்டளையிடுவது என்னவென்றால், உழவு, கால்நடை பராமரிப்பு, கூட்டுறவு, கல்வி, கிராமப் பொதுப் பணி, மகளிர் நலம், பொது சுகாதாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்த மாவட்ட அலுவலர்கள், தங்கள் ஆட்சி வரம்புக்குட்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாவற்றிற்கும் ஆறு மாதத்துக்கொரு முறையேனும் போய், குறைந்தது இரண்டு இரவுகளேனும் ஊராட்சி ஒன்றியத்தில் தங்கி, வேண்டிய ஆய்வு செய்து, தங்கள் துறைக்குச் சம்பந்தப்பட்ட வளர்ச்சிப் பணியின் எல்லாக் கூறுகளையும் மிக நுட்பமாக மறு ஆய்வு செய்ய வேண்டும். உழவுத் துறை இயக்குநரும், கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும், கல்வித் துறை இயக்குநரும் (நெடுஞ்சாலைகள், கிராமப் பொதுப் பணிகள்), தலைமைப் பொறியாளரும், மகளிர் நலத் துறை இயக்குநரும், பொது சுகாதாரத் துறை இயக்குநரும், தங்கள் தங்கள் துறைகளுக்குட்பட்ட மாவட்ட அலுவலர்களுக்கு இது விஷயமாகத் தக்க விளக்க உரைகள் பிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3. பார்வையாளர் சுவடி ஒன்றை ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் எல்லாவற்றிலும் வைத்திருக்க வேண்டும்; காண வரும் மாவட்ட அலுவலர் தமது ஆய்வு அறிக்கையை அந்த இடத்திலேயே அச் சுவடியில் எழுத வேண்டும்.

அப்படிப் பட்ட சந்தர்ப்பங்களில், முறையோடு கூடிய ஆய்வு அறிக்கையை எழுத வேண்டியதில்லை. பார்வையாளர் சுவடியில் எழுதப்பட்ட கருத்துக்களை யொட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவசியமான நடவடிக்கை எடுத்துக் கொண்டு, அவ்வாறு எடுத்துக் கொண்ட செய்தியைப் பார்வையாளர் சுவடியில் எழுத வேண்டும். மாவட்ட ஆட்சியாளர்களும் கோட்ட ஆட்சியாளர்களும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு வரும்போது பார்வையாளர் சுவடியைக் கூராய்வு செய்து, காண வந்த மாவட்ட அலுவலர்கள் எழுதிய கருத்துக்களை யொட்டி உடனடியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள் சம்பந்தமாக, பல ஊராட்சி ஒன்றியங்கள் நினைவு மலர்கள் வெளியிட்டிருப் பதையும் அவைகளில் பலவற்றில் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர், அரசுப் பணியாளரல்லாத பிறர் ஆகியோரின் புகைப்படங்கள் விலையுயர்ந்த தாளில் அச்சிடப்பட்டிருப்பதையும் அரசு கவனித்துள்ளது. நினைவு மலரை வெளியிடுவதற்குப் பிடிக்கும் செலவை ஈடு செய்வதற்காக, ஊராட்சித் தலைவர் களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் நன்கொடைகளும், தொழில் நிறுவனங் களிடமிருந்து விளம்பரக் கட்டணங்களும் வாங்கப்படுகின்ற போதும் ஆணை யாளர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் அத்தகைய நினைவு மலர்களை வெளியிட ஒப்புக்கொள்ளாமலிருப்பது நல்லதென்று கருதப்படுகிறது. நினைவு மலர்களை வெளியிட ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் விரும்பினால், அடியிற்கண்ட நடை முறையைப் பின்பற்றலாம் :—

(i) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உட்குழு ஒன்றை இதற்கென அமைக் கலாம் ; இதில், ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரும், அவசியமெனக் கருதப் படக்கூடிய மன்றத்தின் பிற உறுப்பினர்களும் இருக்கலாம்.

(ii) நினைவு மலரை வெளியிடுவதற்கென வரும் பணத்தை தலைவர் மாத்திரம், அல்லது உட்குழுவிடமிருந்து இதன்பொருட்டு அதிகாரம் பெற்றுள்ள அரசுப் பணியாளர் அல்லாத உட்குழு உறுப்பினர் ஒருவர் மாத்திரம் கையாள வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் எக்காரணத்தைக் கொண்டும் ரொக்கப் பணத்தைக் கையாளக் கூடாது.

(iii) வசூலிக்கப்பட்டவையும் செலவிடப்பட்டவையுமான தொகைகளுக்கு சரியான கணக்கு வைத்துவர வேண்டும்; ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் அறிவதற்காக அதை அவர்கள் முன் வைக்க வேண்டும்.

2. இந்தக் குறிப்பாணையில் கண்டுள்ள விளக்க உரைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றும்படி, ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

(41) இதுவரையில் உள்ளாட்சிக் கழகங்களால் பராமரிக்கப்பட்டு, (பராமரிப்புக்காக) இந்த மாநிலத்திலிருக்கிற எல்லா கிராம மாவட்டங்களிலும் இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்டுள்ள நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் ஊராட்சி ஒன்றியப்பள்ளி; 'ஊராட்சி ஒன்றிய மருந்தகம்' என்பனபோன்று தக்கவாறு மாற்ற வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள்.

இதற்குப் பிடிக்கும் செலவை ஊராட்சி ஒன்றிய நிதிகளிலிருந்து கொடுக்க வேண்டும்.

(1961 ஜூன் 22 ஆம் தேதியுள்ள 1739 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(42) மாநில அரசிதழ் வாங்குவது.—ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் தங்கள் உபயோகத்துக்காகவென்று, ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து மாநில அரசிதழின் முழுப்படி ஒன்றை வாங்குவதற்கு அரசினர் இசைவளிக்கிறார்கள்.

(1961 ஏப்ரல் 17 ஆம் தேதியுள்ள 1114 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(43) ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மாவட்ட அரசிதழ் வாங்குவது.—ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தங்கள் உபயோகத்துக்காக, ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து, சம்பந்தப்பட்ட தங்கள் மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ் படிகளை வாங்குவதற்கு அரசினர் இசைவளிக்கிறார்கள்.

(1961 ஜூலை 10 ஆம் தேதியுள்ள 1967 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

2. ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தலைவர்களையும் துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுப்பது.—1. இந்த விதிகளை, தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தலைவர்களையும் துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுப்பது பற்றிய) 1960 ஆம் ஆண்டின் விதிகள் என்று சொல்லலாம்.

2. ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இதற்கெனத் தனியாகக் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்திலே தலைவர் அல்லது துணைத் தலைவர் தேர்தலை நடத்த வேண்டும்.

3. (1) ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர் தேர்தலுக்கான கூட்டத்தை, காலியிடம் நேரிட்ட பிறகு கூடிய விரைவில்—

(அ) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் புதிதாக அமைக்கப்பட்டிருந்தால் அல்லது சாதாரண காலியிடத்தை நிரப்புவதற்காகத் தேர்தல் நடத்தப்படுவதாயிருந்தால், கோட்ட ஆட்சியாளரும்,

(ஆ) மற்றெல்லாவற்றிலும் துணைத் தலைவரும், துணைத் தலைவர் பதவியில் காலி நேரிட்டிருந்தால் அல்லது அவர் தொடர்ந்து முப்பது நாட்களுக்கு மேற்பட்டு ஆட்சி எல்லையை விட்டுப் போயிருந்தால் அல்லது அவர் ஆற்றலற்றவராக்கப்பட்டிருந்தால், கோட்ட ஆட்சியாளரும் கூட்ட வேண்டும்.

(2) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத் துணைத் தலைவர் தேர்தலுக்கான கூட்டத்தை, காலியிடம் நேரிட்ட பிறகு கூடிய விரைவில், தலைவர் கூட்ட வேண்டும்.

(3) கூட்டத்துக்கான தேதியையும் மணி நேரத்தையும் பற்றிய அறிவிப்பை, அக் கூட்டத்தின் தேதிக்குக் குறைந்தது முழுமையான ஏழு நாட்களுக்கு முன்னதாகக் கொடுக்க வேண்டும்.

(4) (1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் தலைவர் தேர்தலுக்கான கூட்டத்திலே—

(i) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் புதிதாக அமைக்கப்பட்டிருந்தால், அல்லது சாதாரண காலியிடத்தை நிரப்புவதற்குத் தேர்தல் நடத்துவதாயிருந்தால் கோட்ட ஆட்சியாளரும்,

(ii) மற்றெல்லாச் சந்தர்ப்பங்களிலும் துணைத் தலைவரும், துணைத் தலைவர் பதவியும் காலியாயிருந்தால் அல்லது தொடர்ந்து முப்பது நாட்களுக்கு மேற்பட்டு அவர் ஆட்சி எல்லையை விட்டுப் போயிருந்தால் அல்லது அவர் சக்தியற்றவராக்கப்பட்டிருந்தால், கோட்ட ஆட்சியாளரும்,

(iii) தேர்தலில் ஒரு வேட்பாளராகத் துணைத் தலைவர் தாமே நிற்கக் கருதினல், அல்லது அவர் கூட்டத்துக்கு வராமலிருந்தால், தேர்தலில் ஒரு வேட்பாளராக நிற்கக் கருதாதவரும் அச் சமயம் அக் கூட்டத்துக்கு வந்திருக்கிற உறுப்பினர்களால் தலைமை வகிக்கத் தெரிந்தெடுக்கப்பட்டவருமான ஓர் உறுப்பினரும் தலைமை வகிக்க வேண்டும்.

(2) துணைத் தலைவராக தேர்ந்தெடுப்பதற்கான கூட்டத்திலே, தலைவ ராவது, அவர் வந்திராவிட்டால், தேர்தலிலே ஒரு வேட்பாளராக நிற்கக் கருதாதவரும் அச் சமயம் அக் கூட்டத்துக்கு வந்திருக்கிற உறுப்பினர்களால் தலைமை வகிக்கத் தெரிந்தெடுக்கப்பட்டவருமான ஓர் உறுப்பினராவது தலைமை வகிக்க வேண்டும்.

(3) இந்த விதிகளிலே "கூட்டத்தின் தலைவர்" என்னும் சொற்றொடர், இவ் விதிகளின்படி, சந்தர்ப்பத்துக்கேற்ப, தலைவரை அல்லது துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டத்தில் தலைமை வகிக்கிற கோட்ட ஆட்சியாளர், தலைவர், துணைத் தலைவர் அல்லது உறுப்பினர் எனப் பொருள் படும்.

5. தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வேட்பாளர் ஒவ்வொருவரும், எழுத்து மூலமாக நியமனம் செய்யப்பட வேண்டும்; முன்மொழிபவர், வழிமொழிபவர் என்னும் முறைமையில் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் இரண்டு உறுப்பினர்கள் நியமனச் சீட்டில் கையெழுத்திட வேண்டும். முன்மொழிபவர், வேட்பாளர் ஒருவருடைய பெயரை முன்மொழியும் போது சந்தர்ப்பத்துக்கேற்ப தலைவரா அல்லது துணைத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப் பெற வேட்பாளரின் விருப்பத்தைத் தெரிவிப்பதும், வேட்பாளரும் முன்மொழிபவரும் வழிமொழிபவரும் கையெழுத்திட்டிருப்பதுமான எழுதி யுள்ள உறுதிமொழியைக் கூட்டத்தின் தலைவரிடம் கொடுக்க வேண்டும்.

6. முன்மொழிந்து வழிமொழியப் பெற்றிருக்கிற வேட்பாளர்கள் எல்லா ருடைய பெயர்களையும் கூட்டத்தின் தலைவர், அக் கூட்டத்துக்கு வந்திருக்கிற உறுப்பினர்களுக்குப் படித்துக் காட்ட வேண்டும்.

7. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவர் அல்லது துணைத் தலைவர் பதவிக்கு ஒரேவொரு வேட்பாளர் முறைப்படி நியமனம் செய்யப்பட்டால், வாக்கெடுக்கக் கூடாது; அந்த வேட்பாளர், சந்தர்ப்பத்துக்கேற்ப, தலைவராக அல்லது துணைத் தலைவராய் கிரமப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும்.

8. வேட்பாளர்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்பட்டிருந்தால், பின்வரும் விதிகளில் கண்டுள்ள விதமாய் இரகசிய வாக்கெடுப்பு மூலமாக கூட்டத்துக்கு வந்திருக்கிற உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற வேண்டும்.

9. கூட்டத்தின் தலைவர், கூட்டம் நடக்கிற இடத்திலே, வாக்களிப்பு அறை ஒன்றை ஏற்படுத்தி வைக்க வேண்டும்; இது உறுப்பினர்கள், பிறர் பார்க்காதபடி வாக்களிக்கக் கூடியபடி இருக்க வேண்டும். அன்றியும், கூட்டத்தின் தலைவர், வாக்குச் சீட்டுகளைப் போடுவதற்கான வாக்குச் சீட்டுப் பெட்டி ஒன்றை கூட்டத்தின் தலைவரும் உறுப்பினர்களும் பார்க்கும் விதத்தில் வைக்க வேண்டும். வாக்குச் சீட்டுப் பெட்டியானது, வாக்குச் சீட்டுகளை அதில் போடக் கூடிய படியும், ஆனால், அதன் பூட்டை அகற்றாமல் அல்லது அதைத் திறக்காமல் அச் சீட்டுக்களை அதிலிருந்து எடுக்க முடியாதபடியும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

10. கூட்டத்தின் தலைவர், வாக்கெடுப்பு நடப்பதற்கு அடுத்து முன்னதாக, வந்திருக்கக் கூடிய உறுப்பினர்கள் வாக்குச் சீட்டுப் பெட்டி வெறுமையா யிருப்பதைப் பார்க்கக் கூடியவாறு, அது வெறுமையாயிருப்பதைப் அவர் களுக்குக் காட்ட வேண்டும்; பிறகு அதைப் பூட்டி, அதன் மீது முத்திரை வைக்க வேண்டும்; அந்த முத்திரையை உடைக்காமல் அப் பெட்டியைத் திறக்க முடியாதபடி அதை வைக்க வேண்டும்.

11. வாக்களிக்க விரும்புகிற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் வாக்குச் சீட்டு ஒன்றைக் கொடுக்க வேண்டும்; அதில், வேட்பாளர்கள் எல்லாருடைய பெயர் களும், அவர்கள் எந்த ஊராட்சிகளுக்குப் பிரதிநிதிகளாயிருக்கிறார்களென்பதும் பின்வரும் படிவப்படி ஆங்கிலத்திலும் தமிழிலும் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

வாக்குச் சீட்டு.

. . . . ஊராட்சி ஒன்றிய மன்றம் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் பெயர்களும், அவர்கள் இன்ன ஊராட்சிக்குப் பிரதிநிதிகளாயிருக்கிறார்களென்பதும்.

(1) அ (ஆ ஊராட்சித் தலைவர்)

(2) இ (ஈ ஊராட்சித் தலைவர்)

கூட்டத்தின் தலைவர்.

வாக்குச் சீட்டை உறுப்பினருக்குக் கொடுப்பதற்குமுன், கூட்டத்தின் தலைவர் அதில் கையெழுத்திட வேண்டும்.

12. உறுப்பினர், வாக்குச் சீட்டைப் பெற்றுக் கொண்டதும், தமது வாக்கைப் பதிவு செய்வதற்காக, வாக்களிக்கும் அறைக்குப் போய், தாம் வாக்களிக்க விரும்புகிற வேட்பாளரின் பெயருக்கெதிரே வாக்குச் சீட்டில் ஒரு சிலுவைக் குறி (Cross mark) போட வேண்டும். அவர், வாக்களிக்கும் அறையை விட்டு வெளியேறுவதற்குமுன், சிலுவைக் குறி தெரியாதபடி வாக்குச் சீட்டை மடித்து அவ்வாறு மடிக்கப்பட்ட வாக்குச் சீட்டை, கூட்டத்தின் தலைவர் முன்னிலையில் இருக்கும் வாக்குச் சீட்டுப் பெட்டிக்குள் போட வேண்டும்.

13. கூட்டத்தின் தலைவர், வாக்கெடுப்பு இரகசியமாக நடைபெறுவதற்கும், ஏற்கெனவே வாக்களித்திருக்கிற உறுப்பினர்கள் இனி வாக்களிக்க விருக்கிற உறுப்பினர்களை நெருங்கவொட்டாதபடி தடுப்பதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்விக்க வேண்டும்.

14. (1) எழுதப் படிக்கத் தெரியாமலிருப்பது அல்லது குருடாயிருப்பது அல்லது வேறு உடல் நலக் குறைவு காரணமாக ஓர் உறுப்பினர் வாக்குச் சீட்டைப் படித்து, அதில் குறியிட முடியாதவராயிருந்து, அப்படிச் செய்வதற்கு உதவி வேண்டுமெனக் கேட்டால், கூட்டத்தின் தலைவர், அவ் வுறுப்பினரின் விருப்பத்துக்கிணங்க வாக்குச் சீட்டில் வாக்கினைப் பதிவு செய்து, வாக்கு மறைந்திருக்கும்படியாக அதை மடிக்க வேண்டும்.

(2) பிறகு அவ் வுறுப்பினர் தாமேயாவது கூட்டத்தின் தலைவருடைய உதவியைக் கொண்டாவது, வாக்குச் சீட்டினை வாக்குச் சீட்டுப் பெட்டிக்குள் போட வேண்டும்.

(3) இவ் விதியின்படி செயலாற்றும்போது கூட்டத்தின் தலைவர் கூடிய வரை இரகசியத்தைக் காக்க வேண்டும்; அத்தகைய ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பற்றிச் சுருக்கமாக எழுதி வைக்க வேண்டும்; ஆனால், வாக்கு அளிக்கப் பட்டிருக்கிற விதத்தைப் பற்றி அதில் குறிப்பிடக் கூடாது.

15. உறுப்பினர்கள் வாக்களிப்பது முடிந்த பிறகு, கூட்டத்தின் தலைவர் வந்திருக்கிற உறுப்பினர்கள் முன்னிலையில் வாக்குச் சீட்டுப் பெட்டியைத் திறந்து, அதிலிருந்து வாக்குச் சீட்டுகளை வெளியே எடுத்து, வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையை ஒரு விவரப் பட்டியலில் பதிவு செய்ய வேண்டும்.

16. ஒரு வாக்குச் சீட்டிலே—

(அ) சிலுவைக் குறி இராவிட்டால், அல்லது

(ஆ) பல வேட்பாளர்களின் பெயர்களுக்கெதிரே சிலுவைக் குறி போடப் பட்டிருந்தால், அல்லது எந்த வேட்பாளரைக் கருதி அது போடப்பட்டதென் பதில் ஐயம் தோன்றும்படியாக அது போடப்பட்டிருந்தால், அல்லது

(இ) ஒரே வேட்பாளரின் பெயருக்கெதிரே சிலுவைக் குறியும் வேறொரு குறியும் போடப்பட்டிருந்தால், அல்லது

(ஈ) ஏதேனும் ஒரு குறி இடப்பட்டிருந்து, அதைக் கொண்டு பின்னர் உறுப்பினர் யாரென்பது தெரிந்து கொள்ளக் கூடுமானால், அந்த வாக்குச் சீட்டு செல்லாது.

(17) (1) வேட்பாளர்களின் எண்ணிக்கை இரண்டு என்றால் மிக அதிக எண்ணிக்கையுள்ள வாக்குகள் பெற்றிருக்கிற வேட்பாளர் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும். இரண்டு வேட்பாளர்கள் சமமான எண்ணிக்கையுள்ள வாக்குகள் பெற்றிருந்து, அந்த வேட்பாளர் களில் எவருக்கேனும் ஒரு வாக்குக் கூட்டினால் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதாக அறிவிக்கப் பெற அவர் உரிமையடைவதாயிருந்தால், கூட்டத் தின் தலைவர் உறுப்பினர்களின் முன்னிலையில் திருவுளச் சீட்டுப் போட வேண்டும்; யாருடைய பெயர் முதலில் எடுக்கப்படுகிறதோ அவர் கூடுதலான வாக்குப் பெற்றிருப்பதாகக் கருதப்பட்டு, முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருப் பதாக அறிவிக்க வேண்டும்.

(2) வேட்பாளர்களின் எண்ணிக்கை மூன்றாக இருந்து, அவர்களில் ஒருவருக்கு வாக்குகளின் எண்ணிக்கையில் பேர்பாதிக்கு மேல் கிடைத்திருந் தால், அவர் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும். வாக்குகளின் எண்ணிக்கையில் பேர்பாதிக்கு மேல் அவர்களில் யாருக்கும் கிடைக்காவிட்டால், மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள வாக்குகளைப் பெற்றிருக்கிற வேட்பாளரை நீக்கிவிட்டு, இரண்டாவது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். வேட்பாளர்கள் எல்லாருக்கும் சமமான எண்ணிக்கையுள்ள வாக்கு கள் கிடைத்திருந்தால், கூட்டத்தின் தலைவர், வந்திருக்கிற உறுப்பினர்கள் முன்னிலையில் திருவுளச் சீட்டுப் போட வேண்டும்; எந்த வேட்பாளருடைய பெயர் முதலில் எடுக்கப்படுகிறதோ அவரை விலக்கிவிட வேண்டும்.

(3) மூவருக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் இருந்து, வேட்பாளர்களில் எவருக்கேனும் வாக்குகளின் எண்ணிக்கையில் பேர்பாதிக்கு மேல் கிடைத் தால், அவர் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும். வேட்பாளர்களில் எவருக்கும் வாக்குகளின் எண்ணிக்கையில் பேர்பாதிக்கு

மேல் கிடைக்காவிட்டால், மிக அதிக எண்ணிக்கையுள்ள வாக்குகளைப் பெற்றிருக்கிற முதல் வேட்பாளரையும், அடுத்தாற்போல் அதிக எண்ணிக்கையுள்ள வாக்குகளைப் பெற்றிருக்கிற இரண்டாம் வேட்பாளரையும் வைத்துக் கொண்டு, மற்றவர்களை நீக்கிவிட்டு, இரண்டாவது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். ஒருவருக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்குச் சமமான எண்ணிக்கையுள்ள வாக்குகள் கிடைத்திருந்து, அதனால், அவர்களில் யாருக்கு இரண்டாவதாக அதிக எண்ணிக்கையுள்ள வாக்குகள் கிடைத்திருக்கின்றன என்பதைத் தீர்மானிக்க முடியாவிட்டால், கூட்டத்தின் தலைவர், வந்திருக்கிற உறுப்பினர்களின் முன்னிலையில் திருவுளச் சீட்டுப் போட வேண்டும்; எந்த வேட்பாளருடைய பெயர் முதலில் எடுக்கப் படுகிறதோ அவர் இரண்டாவதாக அதிக எண்ணிக்கையுள்ள வாக்குகளைப் பெற்றிருப்பதாகக் கருதப்படுவார். பிறகு இரண்டாவது வாக்கெடுப்பை நடத்தி, மேற்படி (1) உள்விதியில் கண்ட நிபந்தனைகளின்படி முடிவுகளை அறிவிக்க வேண்டும்.

18. கூட்டம் நடந்து முடிந்தவுடனே, கூட்டத்தின் தலைவர்—(அ) கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு ஒன்றைத் தயாரித்து, அதில் கையெழுத்திட்டு, அதில் செய்யப்படும் ஒவ்வொரு திருத்தத்துக்கும் தமது சுருக்கொப்பத்தினால் சான்றிட வேண்டும்; கூட்டத்துக்கு வந்திருக்கிற ஓர் உறுப்பினர் அப்பதிவில் தாம் கையெழுத்துச் செய்யும் விருப்பத்தைத் தெரிவித்தால் அவ்வாறே செய்ய அவருக்கு அனுமதி கொடுக்கவும் வேண்டும்.

(ஆ) தேர்தல் முடிவு பற்றிய அறிக்கை ஒன்றை ஆய்வாளருக்கும் பொது அல்லது தனி ஆணை மூலமாக அரசினர் குறிப்பிடக்கூடிய வேறு அலுவலர் அல்லது அதிகாரிக்கும் அனுப்ப வேண்டும்.

(இ) ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அறிக்கைப் பலகையில் தாம் கையெழுத்திட்டுள்ள அறிவிக்கை ஒன்றை வெளியிட வேண்டும்; அதில் தலைவராக/துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் பெயர் கண்டிருக்க வேண்டும். மேலும், பொது அல்லது தனி ஆணை மூலமாக அரசினர் குறிப்பிடக் கூடிய விதமாகவும் அந்த அறிவிக்கையை வெளியிட வேண்டும்.

19. (1) பிறகு, கூட்டத்தின் தலைவர், வாக்குச் சீட்டுகளைத் தனிச் சிப்பமாகக் கட்டி, அச்சிப்பத்துக்கு முத்திரை வைத்து, அதில் இருப்பவைகளின் விவரத்தையும், அது சம்பந்தப்படுகிற தேர்தலையும், அது நடந்த தேதியையும் அதன் மேல் குறிக்க வேண்டும்.

(2) ஒரு தேர்தல் அல்லது தகுதி வாய்ந்த வேறு நீதிமன்றத்தாரின் ஆணைகளின்படியன்றி மற்றப்படி, இச் சிப்பங்களைத் திறக்கவுங் கூடாது, அவைகளில் உள்ளவைகளைப் பார்வையிடவுங் கூடாது, காட்டவுங் கூடாது.

(3) இச் சிப்பங்களை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஓர் ஆண்டுக் காலம் காப்பாக வைத்திருந்து, பின்னர், தகுதி வாய்ந்த நீதிமன்றத்தார் ஆணை மூலமாக வேறுவிதமாய்க் கட்டளையிட்டாலன்றி மற்றப்படி, அவைகளை அழித்துவிட வேண்டும்.

(1960 செப்டெம்பர் 27 ஆம் தேதியுள்ள 161 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(1962 ஆகஸ்ட் 2 ஆம் தேதியுள்ள 218 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறை அரசாணை.)

(1962 சூன் 21 ஆம் தேதியுள்ள 1409 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறை அரசாணை.)

(1962 மார்ச் 30 ஆம் தேதியுள்ள 49348, தனி/62-2 ஆம் எண் குறிப்பாணை.)

(1963 ஏப்ரல் 19 ஆம் தேதியுள்ள 885 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1966 ஏப்ரல் 12 ஆம் தேதியுள்ள 962 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(44) ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடுகிற இரண்டு வேட்பாளர்களுக்கு ஒரே பெயரும் தலைப்பு எழுத்துக்களும் இருந்தால் பின்பற்ற வேண்டிய நடைமுறை சம்பந்தமாக ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. வாக்குகள் கொடுக்கப் பெற்றுள்ளவர் இவர்தான் என்பது பற்றிக் குழப்பத்துக்கு இடமில்லாதிருப்பது நல்லது. ஆகையால், அத்தகைய சந்தர்ப்பங்களில், அரசினர் கட்டளையிடுவது என்னவென்றால், தேர்தல்களில் போட்டியிடுபவர்களின் பெயர்களையும், இன்ன ஊராட்சிகளுக்கு அவர்கள் பிரதிநிதிகளாயிருக்கிறார்களென்பதையும் வாக்குச் சீட்டில் அடியில் கண்டவாறு எழுதலாம் :—

(1) வி. இராமன் (அ. ஊராட்சித் தலைவர்).

(2) வி. இராமன் (ஆ. ஊராட்சித் தலைவர்).

2. கோட்ட ஆட்சியாளர்களும் எல்லா ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்களும் மேற்சொன்ன விளக்க உரைகளைப் பின்பற்றும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(1966 மார்ச் 4 ஆம் தேதியுள்ள 20253 சி1/66-2 ஆம் எண் குறிப்பாணை.)

(45) **தலைவரையும் துணைத் தலைவரையும் தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறை.**—ஓர் ஊராட்சி ஒன்றியக் குழுவின் தலைவரைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாய் மிக முக்கியமான விதிமுறைகள் அடியிற் கண்டவையாகும்:

(i) தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடக்க வேண்டும்—2 ஆவது விதியைப் பார்க்கவும். வட்டார வளர்ச்சி அலுவலகக் கட்டிடம், கட்டப்பட்டிருக்கிற தற்காலிகக் கட்டிடம் அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் காரியங்களுக்காக வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கட்டிடம்—இவற்றில் எது கூட்டம் நடத்துவதற்குத் தகுதியாயிருக்கிறதோ அது இதன்பொருட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எனக் கருதப்படலாம். தாம் அலுவலால் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவர் என்னும் முறைமையில் கோட்ட ஆட்சியாளர் அக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்—3 (1) (அ) விதியைப் பார்க்கவும்.

(ii கூட்டத்தைப் பற்றியும் அது நடக்கும் மணி நேரத்தைப் பற்றியும் முழுமையான ஏழு நாட்களுக்குக் குறையாமல் முன்னதாக உறுப்பினர்களுக்கு அறிவிப்புக் கொடுக்க வேண்டும்—மேற்படி சட்டத்தின் 37 (2) பிரிவையும் 3 (2) விதியையும் பார்க்கவும். ஒரு வருவாய்த் துறைக் கோட்டத்தில் பல ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் இருந்தால், தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் நடத்துவதற்காக ஒரே தேதியையும் மணி நேரத்தையும் நிச்சயிப்பதைத் தவிர்க்கும் விஷயத்தில் கவனமாயிருக்க வேண்டும். கோட்ட ஆட்சியாளர் சுற்றிப் போய்ப் பார்த்து வருவதற்குப் போதுமான இடைவேளை இருக்க வேண்டும்.

(iii) தலைவரைத் தேர்த்தெடுப்பதற்கான கூட்டத்துக்குக் கோட்ட ஆட்சியாளர் தலைமை வகிக்க வேண்டும் 4 (1) (i) விதியைப் பார்க்கவும்.

(iv) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வேட்பாளர் ஒவ்வொருவரும் எழுத்து மூலமாய்க் முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டும். முன் மொழிபவர், வழி மொழிபவர் என்னும் முறைமையில் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் இரண்டுபேர் நியமனத் தாளில் கையெழுத்திட வேண்டும். ஒரு வேட்பாளருடைய பெயர் முன் மொழியப்படும்போது, தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட அந்த வேட்பாளருடைய விருப்பத்தைத் தெரிவிப்பதும், வேட்பாளரும் முன் மொழிபவரும் கையெழுத்திட்டிருப்பதுமான உறுதிமொழி தம்மிடம் கொடுக்கப்படும்படி கோட்ட ஆட்சியாளர் பார்த்துக் கொள்ள வேண்டும்—5 விதியைப் பார்க்கவும்.

(v) கூட்டத்தின் தலைவர் என்னும் முறையில், கோட்ட ஆட்சியாளர், முன்மொழிந்து வழிமொழியப் பெற்ற வேட்பாளர் பெயரை அல்லது வேட்பாளர்கள் பெயர்களை கூட்டத்துக்கு வந்திருக்கிற உறுப்பினர்களுக்குப் படித்துக் காட்ட வேண்டும்—6 ஆவது விதியைப் பார்க்கவும். பல வேட்பாளர்கள் இருந்து, வாக்கெடுப்பு நடத்த வேண்டியதாகிவிட்டால், கோட்ட ஆட்சியாளர் கூட்டம் நடக்கிற இடத்திலே வாக்களிப்பு அறை ஒன்றை ஏற்படுத்தி வைக்க வேண்டும். மேலும் அவர், வாக்குச் சீட்டுகளைப் போடுவதற்கான வாக்குச் சீட்டுப் பெட்டி ஒன்றைத் தமது மேசைமேல் கோட்ட ஆட்சியாளரும் உறுப்பினர்களும் நன்கு பார்க்கும்படி வைக்க வேண்டும். ஆகையால், கூட்டம் நடப்பதற்கு முன்னதாகவே, வாக்களிப்பு அறையையும் வாக்குச் சீட்டுப் பெட்டியையும் ஆயத்தமாக வைத்திருக்க வேண்டும்.

(vi) போதுமான எண்ணிக்கையுள்ள வாக்குச் சீட்டுகளை 11 ஆவது விதியில் கண்டுள்ளபடிவத்தில் தயாரித்து, ஆயத்தமாக வைத்திருக்க வேண்டும். அது ஆங்கிலத்திலும் தமிழிலும் இருக்க வேண்டும். கூட்டத்திலே வாக்களிக்கிற உறுப்பினருக்கு வாக்குச் சீட்டைக் கொடுப்பதற்குமுன் கோட்ட ஆட்சியாளர் அதில் கையெழுத்திட வேண்டும். கோட்ட ஆட்சியாளர் வாக்குச் சீட்டுகளைக் கவனமாகக் கூர்ந்தாய்வு செய்ய வேண்டும். ஒரு வாக்குச் சீட்டு 16 ஆவது விதியில் கண்டுள்ள நிபந்தனைகளில் எதையேனும் மீறினால் அதைச் செல்லாததாக்கிவிட வேண்டும். கோட்ட ஆட்சியாளர் வாக்குச் சீட்டு ஒன்றைச் செல்லாத தாக்குவதற்குமுன் தாமே ஐயமறத் தெரிந்து கொள்ள வேண்டும். தேர்தல் நீதிமன்றத்திலே அவர் செயல் கண்டிக்கப்படுவதற்குட்பட்டதாகும்.

(vii) 17 ஆவது விதியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள "இரண்டாவது வாக்கெடுப்புக் கோட்பாடு" மிக அக்கறையாக கவனிக்கப்பட வேண்டும். பின் வரும் பத்திகளில் இது விளக்கப்படுகிறது.

(viii) தேர்தல் முடிவை, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அறிக்கைப் பலகையில் வெளியிட வேண்டும். அதை மாநில அரசிதழிலும் மாவட்ட அரசிதழிலுங்கூட வெளியிட வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் இரண்டாவது வாக்கெடுப்பு நடத்துவதற்கு; தேர்தல் விதிகளின் 17 ஆவது விதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வந்திருந்து வாக்களிக்கிற சிறுபான்மை உறுப்பினர்கள் அளிக்கிற வாக்குகளின் பலத்தைக் கொண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவராக எவரும் தேர்ந்தெடுக்கப்பட முடியாதபடிச் செய்வதே இந்த விதியின் நோக்கமாகும். எந்த உறுப்பினர்களுக்கு அறுதியான பெரும்பான்மை கிடைக்கவில்லையோ அவர்களை ஒரு

முறைப்படி நீக்கிவிடுவது மூலமாகவும் முதல் வாக்கெடுப்பில் மிக அதிக எண்ணிக்கையுள்ள வாக்குகளைப் பெற்ற இரண்டு வேட்பாளர்களில் ஒருவரைத் தெரிந்தெடுப்பதற்கு இரண்டாம் வாக்கெடுப்பு நடத்துவது மூலமாகவும் இம் முடிவை எய்தப் பெறுவதற்கு முயற்சி செய்யப்படுகிறது; 17 ஆவது விதியின் உப விதிகளில் கண்டுள்ள கோட்பாடுகள் கீழே விளக்கப்பட்டுள்ளன :—

17 ஆவது விதியின் (1) உள் விதி.—இந்த உள்விதி தெளிவாயிருக்கிறது. இரண்டு வேட்பாளர்களுக்கிடையே நேரடிப் போட்டி நடக்கும் சந்தர்ப்பங்கள் கூட இதில் அடங்கும். மிக அதிக எண்ணிக்கையுள்ள வாக்குகளைப் பெறுகிற வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்க வேண்டும். இருவர் சம நிலையிலிருந்தால், திருவுளச் சீட்டுப் போட வேண்டும்; யாருடைய பெயர் முதலில் எடுக்கப்படுகிறதோ அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்க வேண்டும்.

17 ஆவது விதியின் (2) உள்விதி.—இரண்டாம் வாக்கெடுப்புக் கோட்பாட்டை இந்த உள்விதி புகுத்துகிறது. மூன்று வேட்பாளர்கள் உள்ள சந்தர்ப்பங்கள் கூட இதில் அடங்கும். பின்வரும் எடுத்துக்காட்டுகள் இவ் விதிகளின் கோட்பாட்டைத் தெளிவாக விளக்கும்.

எடுத்துக்காட்டு 1.—குழுவின் உறுப்பினர்கள் அறுபது பேர் எனவும், அவர்கள் எல்லோரும் தங்கள் வாக்குரிமையைச் செலுத்துகிறார்களெனவும், அவர்கள் வாக்குகள் எல்லாம் சரியாயிருப்பதாகத் தெரிய வருகிறதெனவும், 'அ' என்பவர் 20 வாக்குகளையும், 'இ' என்பவர் 5 வாக்குகளையும் பெற்றார்களென்று முடிவுகள் காட்டுகின்றன. வாக்குகளின் எண்ணிக்கையில் பேர் பாதிக்கு மேற்பட்டு 'அ' என்பவருக்குக் கிடைத்திருக்கிறபடியால், அவர் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும்.

எடுத்துக் காட்டு 2.—'அ' என்பவருக்கு 25 வாக்குகளும் 'ஆ' என்பவருக்கு 20 வாக்குகளும் 'இ' என்பவருக்கு 15 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன என்று முடிவுகள் காட்டுவதாக வைத்துக் கொள்வோம். இந்த மூன்று வேட்பாளர்களில் எவருக்கும் வாக்குகளின் எண்ணிக்கையில் பேர்பாதிக்கு மேல் கிடைக்கவில்லை. ஆகவே, மிகக் குறைவான வாக்குகளைப் பெற்றிருக்கிற 'இ' என்பவரை நீக்கிவிட்டு, இரண்டாம் வாக்கெடுப்பு நடத்த வேண்டும். 'அ' என்பவருக்கு 26 வாக்குகளும், 'ஆ' 'இ' என்னும் இருவருக்கு ஒவ்வொருவருக்கும் 17 வாக்குகளும் கிடைத்தால் கோட்ட ஆட்சியாளர், 'ஆ' 'இ' என்னும் இரு வேட்பாளர்களில் எவரை நீக்க வேண்டுமென்பதைத் திருவுளச் சீட்டு போட்டு நிச்சயித்தறிய வேண்டும்; பின்னர் இரண்டாம் வாக்கெடுப்பு

நடத்த வேண்டும். மூன்று வேட்பாளர்களுமே ஒவ்வொருவரும் 20 வாக்குகள் பெற்ருல், கோட்ட ஆட்சியாளர், அந்த வேட்பாளர்களில் யாரை நீக்கிவிட வேண்டுமென்பதைத் திருவுளச் சீட்டுப்போட்டு நிச்சயித்தறிந்து, பின்னர், மூன்று வேட்பாளர்களில் ஒருவரை நீக்கியபிறகு, இரண்டாம் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

குறிப்பு.—சம நிலை ஏற்பட்டால், நீக்கப்பட வேண்டிய வேட்பாளர்கள் இன்னுரென்பதைத் திருவுளச் சீட்டுக்கள் நிச்சயிக்கும்; இரண்டாம் வாக்கெடுப்புக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட வேட்பாளரை அன்று பின்னுல் 7 ஆவது பத்தியின் கீழ் உள்ள குறிப்புடன் வேறுபடுத்திப் பார்க்கவும்.

17 ஆவது விதியின் (3) உள் விதி.—மூவருக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் இருக்கும் சந்தர்ப்பங்கள் இந்த உள்விதியில் அடங்கும்.

எடுத்துக்காட்டு 1.—நான்கு வேட்பாளர்கள் இருக்கிறுர்களென்றும், செல்லுபடியாகும் வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 60 என்றும் வைத்துக்கொள்வோம். 'அ' என்பவருக்கு 35 வாக்குகளும், 'ஆ' என்பவருக்கு 12 வாக்குகளும், 'இ' என்பவருக்கு 10 வாக்குகளும். 'ஈ' என்பவருக்கு 3 வாக்குகளும் கிடைத்தால் வாக்குகளின் எண்ணிக்கையில் பேர்பாதிக்குமேல் பெற்றிருக்கிற 'அ' என்பவர் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு 2.—'அ' என்பவருக்கு 25 வாக்குகளும், 'ஆ' என்பவருக்கு 20 வாக்குகளும், 'இ' என்பவருக்கு 10 வாக்குகளும், 'ஈ' என்பவருக்கு 5 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். அவர்களில் எவருக்கும் வாக்குகளின் எண்ணிக்கையில் பேர்பாதிக்குமேல் கிடைக்காததால், மிக அதிக எண்ணிக்கையுள்ள வாக்குகளைப் பெற்றிருக்கிற 'அ' என்பரையும், அடுத்து அதிக எண்ணிக்கையுள்ள வாக்குகளைப் பெற்றிருக்கிற 'ஆ' என்பவரையும் வைத்துக் கொண்டு, 'இ', 'ஈ' என்பவர்களை நீக்கிவிட்டு இரண்டாம் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

எடுத்துக் காட்டு 3.—'அ' என்பவருக்கு 30 வாக்குகளும், 'ஆ' 'இ' என்பவர்கள் ஒவ்வொருவருக்கும் 12 வாக்குகளும், 'ஈ' என்பவருக்கு 6 வாக்குகளும் கிடைத்தால், ஒருவருக்குமேற்பட்ட வேட்பாளர்களுக்குச் சமமான எண்ணிக்கையுள்ள வாக்குகள் கிடைத்திருக்கின்றன; இதனுல், இரண்டாவதாக அதிக எண்ணிக்கையுள்ள வாக்குகளைப் பெற்றவர் அவர்களில் யார் என்பதை நிச்சயிக்க முடியாமலிருக்கிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கோட்ட ஆட்சியாளர் 'ஆ', 'இ' என்னும் இரு வேட்பாளர்களிடையே திருவுளச் சீட்டு

போடவேண்டும். எந்த வேட்பாளருடைய பெயர் முதலில் எடுக்கப்படுகிறதோ அவர் அதிக எண்ணிக்கையுள்ள வாக்குகளைப் பெற்றிருப்பதாகக் கருதப்படு வார். பின்னர், இரண்டாவது வாக்கெடுப்பை நடத்த வேண்டும்.

எடுத்துக்காட்டு 4.—நான்கு வேட்பாளர்களுக்குமே சமமான எண்ணிக்கை யுள்ள வாக்குகள் கிடைத்திருந்தால் கோட்ட ஆட்சியாளர் இரண்டு வேட்பாளர்களில் எவருக்கு மிக அதிக எண்ணிக்கையுள்ள வாக்குகளும் இரண் டாவதாக அதிக எண்ணிக்கையுள்ள வாக்குகளும் கிடைத்திருக்கின்றன என்பதை, வந்திருக்கிற உறுப்பினர்களின் முன்னிலையில் திருவுளச் சீட்டுப் போட்டு நிச்சயித்தறிந்து பின்னர் இரண்டாவது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

குறிப்பு.—சமநிலை உண்டானால், இரண்டாம் வாக்கெடுப்புக்குத் தெரிந்தெடுக் கப்பட வேண்டிய வேட்பாளர்களை திருவுளச் சீட்டு நிச்சயிக்கும்; நீக்கப்பட்ட வேட்பாளர்களை அன்று—மேலே 6 ஆவது பாராவின் கீழ் உள்ள குறிப்புடன் வேறுபடுத்திப் பார்க்கவும்.

(1960 அக்டோபர் 1 ஆம் தேதியுள்ள 170027, Z 1/60 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

*(46) **துணைத் தலைவர்களும் தற்காலிகத் தலைவர்களும், முதல் தடவையாக அமைக்கப்படும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் உறுப்பினர்கள் ஆகலாமா என்பது.***—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் முறையே கண்டுள்ள 34 (1) பிரிவின் அல்லது 34 (2) பிரிவின்படியும், 34 (3) பிரிவின் படியும் தலைவராகப் பொறுப்பு வகிக்கிற துணைத் தலைவர்களும் தற்காலிகத் தலைவர்களும், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி முதல் தடவையாக அமைக்கப்படும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப் பினர்கள் ஆகத் தகுதி உள்ளவர்களா என்பது பற்றியும், தலைவர் துணைத் தலைவர் தேர்தலில் அவர்கள் பங்கு கொள்ளலாமா அல்லது தலைவர் பதவிக்கு அல்லது துணைத் தலைவர் பதவிக்கு நிற்கலாமா என்பது பற்றியும் ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. "தலைவர்" என்னும் சொல் ஓர் ஊராட்சியின் தலைவர் எனப் பொருள்படுமென்று, 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின் 2 ஆவது பிரிவைச்சேர்ந்த (26) பகுதியில் அர்த்தம் சொல்லப் பட்டிருக்கிறது. 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின் IV ஆவது அட்டவணையில் கண்ட 8 ஆவது விதியில் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், 11(1) பிரிவின்படிப் பிறப்பிக்கப்படும் அறிவிக்கையில் குறிப் பிட்டிருக்கிற தேதியன்று பதவி வகித்துக் கொண்டிருக்கிற ஓர் ஊராட்சியின் தலைவரும் துணைத் தலைவரும், ஊராட்சி உறுப்பினர் பதவிக் காலம் கழிந்து

போகிற தேதி வரையில் அப்படிப்பட்ட தலைவராக அல்லது துணைத் தலைவராகப் பதவி வகிக்க வேண்டும். 1960 ஆம் ஆண்டின் 17 ஆவது தமிழ் நாடு சட்டத்தில் கண்ட 2 (அ) பிரிவில் வரும் "தலைவர்" என்னும் சொல், அத்தகைய தலைவரைக் குறிப்பிடுகிறதேயன்றி, துணைத் தலைவரையோ தற்காலிகத் தலைவரையோ குறிப்பிடப்படவில்லை.

1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின் 34 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பங்களில், ஒரு புதிய தலைவர் பதவி வகிக்கிற வரையில் தலைவரின் அலுவல்களைத் துணைத் தலைவர் செய்ய வேண்டுமென்று மட்டுந்தான் அந்த உட்பிரிவில் சொல்லப் பட்டிருக்கிறது, அந்த உட்பிரிவின் காரணமாக, துணைத் தலைவர் தாமாகவே தலைவராகிவிடமாட்டாரென அந்த உட்பிரிவு தெளிவாக்குகிறது; அதில் சொல்லியிருப்பதெல்லாம், தலைவரின் அலுவல்களைத் துணைத் தலைவர் செய்வதைப் பற்றித்தான் தற்காலிகத் தலைவரை அந்த முறைமையில் ஊராட்சி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கவில்லை. ஆகையால் தற்காலிகத் தலைவரின் தகுதி துணைத் தலைவர் தகுதியைக் காட்டிலும் மிகக் குறைந்ததாகும். அவர், அரசாங்க அலுவலர் ஒருவரின் நியமனதாரர் மட்டுமே. 34 ஆவது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவினால், தற்காலிகத் தலைவருககுத் தலைவரின் தகுதி உண்டாகிவிட மாட்டாது.

மேற்கூறிய சந்தர்ப்பங்களில், 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ் நாடு சட்டத்தில் கண்ட 34 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படித் தலைவர் அலுவல்களைச் செய்கிற துணைத் தலைவராவது, அப் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி அரசாங்க அலுவலர் ஒருவரின் நியமனதாரராக மட்டு மிருக்கிற தற்காலிகத் தலைவராவது, 1960 ஆம் ஆண்டின் 17 ஆவது தமிழ்நாடு சட்டத்தில் கண்ட 2 (அ) பிரிவின் காரியங்களுக்காகத் தலைவராகக் கருதப்பட மாட்டார்.

(1960 அக்டோபர் 11 ஆம் தேதியுள்ள 1962 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(47) துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிக்கத் தலைவருக்குள்ள தகுதி.— ஊராட்சி ஒன்றியக் குழு ஒன்றின் தலைவர், துணைத் தலைவர் தேர்தலுக்கான கூட்டத்தில் தலைமை வகிக்கும்போது வாக்களிக்கலாமா என்னும் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினராயிருக்கிற தலைவர், அந்த ஊராட்சி ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிப் பதற்குத் தடை ஒன்றுமில்லை.

(1961 பெப்ரவரி 6 ஆம் தேதியுள்ள 331 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(48) **தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட நிற்பதற்காக, சேர்த்துக் கொள்ளப் பட்ட உறுப்பினர்களுக்குள்ள தகுதி.**—ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினராக, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 12 (1) பிரிவின்படி சேர்த்துக் கொள்ளப்பட்ட பெண் உறுப்பினராவது, அட்டவணையில் கண்ட இனத்தாராவது ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர் பதவியில் தற்செயலாக ஏற்படும் காலி இடத்தை நிரப்புவதற்காக நடத்தப் படக்கூடிய தேர்தலில் போட்டியிடலாமா என்னும் கேள்வி எழுப்பப் பட்டிருக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குள்ள சலுகைகளும் உரிமைகளும் சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களுக்கும் இருக்கிறபடியால், சேர்த்துக் கொள்ளப்பட்ட பெண் உறுப்பினர்களும் அட்டவணையில் கண்ட இனத்தின் உறுப்பினர்களும் ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர் பதவியில் தற்செயலாக ஏற்படும் காலி இடத்தை நிரப்புவதற்கான தேர்தலில் போட்டியிடுவதற்குத் தடை ஒன்றுமில்லையெனக் கொள்ளப்பட்டிருக்கிறது.

(1961 நவம்பர் 23 ஆம் தேதியுள்ள 184189/சி2-61 ஆம் எண் குறிப்பாணை.)

(49) **தலைவர் தேர்தலுக்கான குறைவெண்வரம்பு, அறிக்கை சேர்ப்பிக்கும் விதம் முதலியன.**—பின்வரும் விவரக் கூறுகளைப் பற்றி அரசினர் அடியிற் கண்ட தெளிவுரைகளைப் பிறப்பித்திருக்கிறார்கள் :—

(i) ஓர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்தலுக்காகக் கோட்ட ஆட்சியாளர் கூட்டும் கூட்டத்துக்குக் "குறைவெண் வரம்பு" இருக்க வேண்டுமென வற்புறுத்துவது அவசியமா என்பது;

(ii) கூட்ட அறிக்கையை ஊராட்சிய ஒன்றிய மன்ற உறுப்பினரிடம் நேரில் சேர்க்க முடியாவிட்டால், அந்த அறிக்கையை அவ்வுறுப்பினரின் வீட்டில் ஒட்டி, அல்லது அவ்வீட்டிலிருக்கிற வயது வந்த ஆடவர் ஒருவரிடம் சேர்ப்பித்து, அது செய்தியை, தேர்தல் அறிக்கையில் மேற்குறிப்பு எழுதுவதன் மூலம் சான்றிடலாமா என்பது ;

(iii) தலைவர் தேர்தலுக்கான ஓர் உறுப்பினரின் நியமனத்தை முன் மொழிகிற அல்லது வழிமொழிகிற வேறோர் உறுப்பினர், அதே தேர்தலுக்காக வேறு சில உறுப்பினர்களைக் கொண்டு தம் பெயரையும் முன்மொழியவும் வழிமொழியவும் விடலாமா என்பது.

விவரக்கூறு i).—ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவரையும் துணைத் தலைவரையும் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாக, 1960 செம்டம்பர் 27 ஆம் தேதியுள்ள 1611 எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட விதிகளைச் சேர்ந்த 2 ஆவது விதியில் சொல்லியிருப்பது என்னவென்றால்; இதன் பொருட்டுத் தனியாகக் கூட்டப்பட்டுள்ள ஒரு கூட்டத்திலே ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தலைவரை அல்லது துணைத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதாகும். தலைவரை அல்லது துணைத் தலைவரைத் தேந்தெடுப்பதற்கான கூட்டமானது ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரை அல்லது துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காகவென்று கூட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டமெனக் கருதப்பட வேண்டுமாகையால், ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டத்துக்காக, ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கூட்டங்களில் அலுவல் நடத்தும் விதம் சம்பந்தமாய், 1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் வெளியிடப்பட்ட 10 ஆம் எண் விளம்பரத்தில் கண்ட விதிகளைச் சேர்ந்த 6 ஆவது விதியில் நிச்சயிக்கப்பட்ட குறைவெண் வரம்பு, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவரின் அல்லது துணைத் தலைவரின் தேர்தல் சம்பந்தமாகவும் பொருந்தும்.

விவரக்கூறு (ii).—உறுப்பினர்களிடம் கூட்ட அறிக்கையைச் சேர்ப்பிக்கும் விதம் சம்பந்தமாக, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி சட்டத்திலாவது, 1960 செப்டம்பர் 27 ஆம் தேதியுள்ள 1611 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட விதிகளிலாவது திட்டவட்டமாக ஏதுவும் சொல்லப்பட்டிருக்கவில்லை. சேர்ப்பிக்கும் விதத்தைப் பற்றி மேற்சொன்ன விதிகளில் ஏற்பாடு செய்யப்படுகிற வரையில் மாவட்ட ஆட்சியாளர் சொன்ன நடைமுறையைப் பின்பற்றும்படி அவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்; அதாவது—அறிவிப்பை வீட்டில் ஒட்டுவது மூலமாக அல்லது வீட்டிலிருக்கிற வயது வந்த ஆடவர் ஒருவரிடம் கொடுப்பது மூலமாக அதைச் சேர்ப்பிப்பது, தேர்தல் அறிக்கையில் மேற்குறிப்பு எழுதுவது மூலமாக அச் செய்திகளுக்குச் சான்றிடுவதாகும்.

விவரக்கூறு (iii).—தேர்தலுக்காக ஒருவருடைய நியமனத்தை முன்மொழிந்திருக்கிற அல்லது வழிமொழிந்திருக்கிற ஒருவர், தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நிற்கக் கூடாதென, ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவரையும் துணைத் தலைவரையும் தேர்ந்தெடுப்பது சம்பந்தமான விதிகளில் வெளிப்படையான தடை ஏதுவுமில்லை.

(1961 ஏப்ரல் 25 ஆம் தேதியுள்ள 74701 எல் தனி 61-2 ஆம் எண்ணுள்ள கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(50) *தலைவருக்குட்பட்டுப் பணியாற்ற ஏவலரைத் தெரிந்தெடுப்பது*.—ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியாற்றுகிற ஏவலர்களில் ஒருவரை, தலைவருக்குட்பட்டுப் பணியாற்ற அனுப்ப வேண்டுமென, 1961 ஏப்ரல் 6 ஆம் தேதியுள்ள 164207 T 1/59-6 ஆம் எண் அரசுக் குறிப்பாணையில் சொல்லப் பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியாற்றுகிற ஏவலர் களிலிருந்து தமது ஏவலரைத் தெரிந்தெடுத்துக் கொள்ள, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருக்கு முழு உரிமை கொடுக்க வேண்டுமென, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. தலைவருக்குட்பட்டுப் பணி யாற்றுகிற ஏவலரை மாற்ற வேண்டுமானால், தலைவர் ஒப்புதல் பெற்றுக் கொண்டுதான் மாற்ற வேண்டும்.

(1961 டிசம்பர் 8 ஆம் தேதியுள்ள 235421 E5/61-1 ஆம் எண் குறிப்பாணை.)

(51) *ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கூட்டத்துக்கு வராதிருக்கின்ற உறுப்பினர்களின் தகுதிக் குறைவு*.—1. ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு, அல்லது அக் காலத்தில் மூன்று கூட்டங் களுக்குக் குறைவாக நடத்தப்பட்டிருந்தால் தொடர்ந்து மூன்று கூட்டங் களுக்கு வராமலிருந்தால், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 26 (ஒ) பிரிவின்படி அவர்கள் தகுதிக் குறைவு பெற்று, ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர்களாகப் பதவி வகிப்பது நின்று போகுமா என்னும் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அரசினர் இதனைப் பின்வருமாறு தெளிவு படுத்துகிறார்கள்.

2. 1961 ஆம் ஆண்டின் 27 ஆவது தமிழ்நாடு சட்டத்தினால் திருத்தப் பட்டபடியுள்ள (1960 ஆம் ஆண்டின் 17 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1960 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (முதல் அமைப் புக்கான தனி நிபந்தனைகள்) சட்டத்தில் கண்ட 2 ஆவது பிரிவின்படி, அந்தக் காலத்தில் ஓர் ஊராட்சியின் தலைவராயிருப்பவர், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினராவார். ஆகையால், மேலே 1 ஆவது பாராவில் சொல்லியிருக்கிறபடி, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர் ஊராட்சி ஒன்றிய மன்ற கூட்டங்களுக்கு வராமற்போனாலும், அந்தக் காலத்தில் ஒன்றியத்தில் ஓர் ஊராட்சியின் தலைவராக அவர் இருக்கிற வரையில், அவர் அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினராக இருந்து வருவார். 1961 ஆம் ஆண்டின் 27 ஆவது தமிழ்நாடு சட்டத்தினால் திருத்தப்பட்ட படியுள்ள (1960 ஆம் ஆண்டின் 17 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1960 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (முதல் அமைப்புக்கான

தனி நிபந்தனைகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவு அமலில் இருக்கிற வரையில், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 26 (ஒ) பிரிவின்படியுள்ள நிபந்தனை அமலற்றதாக்கப்பட்டு, பயனுடையதல்ல வெனக் கருதப்பட வேண்டும்.

3. ஊராட்சி ஒன்றியக் குழுவின் உறுப்பினர், தமது ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் பதவியினின்றும் விலகல் செய்யலாமா என்னும் கேள்வியும் எழுப்பப்பட்டிருக்கிறது. அரசினர் தெளிவாக்க விரும்புவது என்னவென்றால் 1961 ஆம் ஆண்டின் 27 ஆவது தமிழ்நாடு சட்டத்தினால் திருத்தப்பட்ட படியுள்ள (1960 ஆம் ஆண்டின் 17 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1960 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (முதல் அமைப்புக்கான தனி நிபந்தனைகள்) சட்டத்தில் கண்ட 2 ஆவது பிரிவின்படி, ஒருவர் அந்த ஒன்றியத்திலே ஊராட்சித் தலைவர் பதவி வகித்து வருகிற வரையில், அவர் தமது ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர் பதவியினின்றும் விலகல் செய்வது பயனுடையதாக மாட்டாது.

(1962 ஜூலை 4 ஆம் தேதியுள்ள 75235, Z தனி/62-4 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(52) கூட்டங்களுக்கு வாராததனால் உறுப்பினர்களுக்கு ஏற்படும் தகுதிக் குறைவு சம்பந்தமாக, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 26 (ஒ) பிரிவில் கண்ட நிபந்தனை, ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு உண்மையில் பொருந்துமா என்னும் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. மேற்படி சட்டத்தில் கண்ட 12 (1) பிரிவின்படி, ஓர் ஊராட்சி ஒன்றியப் பரப்பிலுள்ள ஊராட்சிகளின் தலைவர்கள், தங்களுடைய அந்தப் பதவி காரணமாக, அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் அலுவலால் உறுப்பினர்களாயிருக்கிற இவர்கள், அச் சட்டத்தில் 26 (ஒ) பிரிவில் சொல்லப்பட்டுள்ள தகுதிக் குறைவுக்கும் உட்பட்டவர்களாகிறார்கள். அத்தகைய ஓர் உறுப்பினருக்கு 26 (ஒ) பிரிவில் குறிப்பிட்டுள்ள தகுதிக் குறைவு ஏற்பட்டால், அவர் அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினராயிருக்க மாட்டார்; ஆனால், அவர் சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவராகத் தொடர்ந்து பதவி வகித்து வருவார். மேற்படி சட்டத்தில் கண்ட 27 (2) பிரிவின்படி தம்மை மீண்டும் உறுப்பினராக்குமாறு, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அவர் விண்ணப்பம் செய்து கொள்ளலாம்; அவ்வாறு அவர் மீண்டும் உறுப்பினராக்கப்படுகிற வரையில், அவரைத் தலைவராகப் பெற்றிருக்கிற ஊராட்சிக்கு, ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் பிரதிநிதித்துவம் இருக்காது.

(1966 செப்டம்பர் 13 ஆம் தேதியுள்ள 9129 சி 1/65-17 ஆம் எண் குறிப்பாணை.)

(53) **தலைவருக்கு நேர்முக எழுத்தரை அமர்த்துவதற்கு ஒப்பளிப்பு.**—பின் சொல்லியுள்ளவாறு ஊராட்சி ஒன்றிய நிதிகளிலிருந்து செலவிட்டு எழுத்தர் உதவியை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமெனவும் நியாயமெனவும் ஊராட்சி இணைக் கீழ்நிலை எழுத்தர் ஒருவரை அமர்த்துவதற்கு ஒப்பளிப்பு வழங்க அரசினர் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு அனுமதி கொடுக்கிறார்கள். அந்த எழுத்தர் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களில் ஒருவராகச் சேர்க்கப்படுவார்; ஊராட்சி ஒன்றிய நிதிகளிலிருந்து அவருக்குச் சம்பளம் கொடுக்கப்படும். அவர் ஊராட்சி ஒன்றியத்தின் முறையான பணியாளர்களில் ஒருவராயிருப்பார்; ஒழுங்கு முறைக் கட்டுப்பாடு முதலியவை போன்றவற்றில் மற்ற அலுவலகப் பணியாளர்களைப் போலவே அவர் இருந்து வருவார். அலுவலகத்தில் அமர்த்தப் பட்டிருக்கிற கீழ்நிலை எழுத்தர்களிலிருந்து, நேர்முக எழுத்தாராக அமர்த்தப் படுவதற்குரியவரைத் தெரிந்தெடுக்கும்போது, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தம் விருப்பப்படி செயலாற்றலாம். இப் பதவியிலுள்ள வரை மாற்றுவதானால், தலைவர் ஒப்புதலைப் பெற்றுக்கொண்டுதான் மாற்ற வேண்டும்.

(1961 டிசம்பர் 8 ஆம் தேதியுள்ள 3223 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(54) **தலைவருடைய நேர்முக எழுத்தருக்கும் ஏவலருக்கும் தலைமையிடம்.**—1961 டிசம்பர் 8 ஆம் தேதியுள்ள 3223 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையிலும், 1961 டிசம்பர் 8 ஆம் தேதியுள்ள 235421 இ-5/61 ஆம் எண் குறிப்பாணையிலும், நேர்முக எழுத்தாராகப் பணியாற்றுவதற்குக் கீழ்நிலை எழுத்தர் ஒருவரையும், தலைவருக்குட்பட்டுப் பணியாற்றுவதற்கு ஏவலர் ஒருவரையும் அமர்த்துவதற்கு அரசினர் ஒப்பளிப்பு வழங்கினார்கள். நேர்முக எழுத்தரும் ஏவலரும் தலைவர் வீட்டையே தங்கள் இருப்பிடமாகக் கொள்ள வேண்டுமென, ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்களில் சிலர் கேட்டுக்கொண்டார்கள். எழுத்தரும் ஏவலரும் பணியாற்றுவது ஊராட்சி ஒன்றிய மன்றம் அலுவலகத்திலா, தலைவர் வீட்டிலா என்பதைத் தெளிவுபடுத்தும்படி சில ஊராட்சி ஒன்றியக் குழு ஆணையாளர்களும் கேட்டுக் கொண்டார்கள். அரசினர் இது பற்றி ஆய்ந்திருக்கிறார்கள்.

தலைவர் எல்லா நாட்களிலும் அலுவலகத்துக்கு வருவாரென்று எதிர் பார்க்கக் கூடாதாகையால், அவர் அலுவலக வேலையை பெரும்பாலும் அவர் வீட்டிலேயே செய்ய வேண்டியிருக்கும். கடிதங்களையெல்லாம் ஆணையாளர் படித்துப் பார்த்த பிறகு, தலைவர் படித்துப் பார்ப்பதற்காக அவருக்கு அனுப்ப வேண்டுமென்று, 1962 நவம்பர் 16 ஆம் தேதியுள்ள 2496 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறை அரசாணையில் விளக்கவுரைகளும் பிறப்பிக்

கப்பட்டுள்ளன. ஆகையால், தலைவர் தமது அலுவல்களை கவனிப்பதற்கு நேர்முக எழுத்தரின் உதவி அவருக்குப் பெரிதும் வேண்டியிருக்கும். எனவே, நேர்முக எழுத்தரும் ஏவலரும் தலைவர் வீட்டிலிருப்பது அவசியமாகும். ஆகவே தலைவர் வீடு இருக்கும் இடமே, தலைவருடைய நேர்முக எழுத்தருக்கும் ஏவலருக்கும் தலைமையிடம் ஆகுமென்று அரசினர் கட்டளை யிடுகிறார்கள்.

(1963 மே 25 ஆம் தேதியுள்ள 1166 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

3. ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் தலைவரை இடைக் கேள்விகள் கேட்பது.—1. ஊராட்சி ஒன்றியத்துடன் தொடர்பற்றவையாயுள்ள எவ்விஷயங்களைக் குறித்தும் ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டத்திலே கேள்வி எதுவும் கேட்கவுங் கூடாது; அக் கேள்விக்குப் பதில் சொல்லவுங் கூடாது; உண்மை நிகழ்ச்சிகள் பற்றியல்லாமல் மற்றப்படி கேள்வி எதுவும் கேட்கக் கூடாது; உண்மை நிகழ்ச்சிகளைச் சொல்வதோடு மட்டும் பதிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஏற்பாடு செய்துள்ளபடியின்றி மற்றப்படி, ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர் ஒருவர், பின்வரும் விதிகளில் குறிப்பிட்டிருக்கிற திட்டங்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு, எக் கேள்வியையேனும் கேட்கலாம்.

2. கேள்வி கேட்க விரும்புகிற ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர் குறைந்தது பத்துத் தெளிவான நாட்களுக்கு முன் அறிக்கை கொடுப்பது மூலமாக, தம் எண்ணத்தைத் தலைவருக்கு எழுதித் தெரிவிக்க வேண்டும்; அவர் கேட்க விரும்புகிற கேள்வியின் படி ஒன்று அந்த அறிக்கையில் அடங்கியிருக்க வேண்டும்.

3. ஒரு கேள்வி ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாயிருக்க வேண்டுமானால், அது பின்வரும் நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டும்; அவையாவன :—

(1) கேள்வி விளக்கமாயிருப்பதற்குக் கண்டிப்பாய் அவசியமாயிராத எந்தப் பெயரையும் அல்லது செய்தியையும் அதில் சொல்லியிருக்கக் கூடாது;

(2) ஒரு கேள்வியில் செய்தியொன்று அடங்கியிருக்குமானால் அக் கேள்வியைக் கேட்கும் உறுப்பினர், அச் செய்தி சரியானதுதான் என்பதற்குத் தம்மையே பொறுப்பாளியாக்கிக் கொள்ள வேண்டும்;

(3) வாதங்கள், அனுமானங்கள், வஞ்சப் புகழ்ச்சியான சொற்றொடர்கள் அல்லது அவதூறான செய்திகள் அதில் இருக்கக் கூடாது;

(4) கருத்தைத் தெரிவிக்கும்படியோ கருத்தியலான சட்டப் பிரச்சனைகளை விளக்கும்படியோ ஐயநிலையான யோசனைக்குத் தீர்வு சொல்லும்படியோ அதில் கேட்கக் கூடாது;

(5) ஒருவருடைய அலுவல் தொடர்பான அல்லது பொதுத் தொடர்பான முறையிலன்றி மற்றப்படி அவருடைய ஒழுக்கம் அல்லது நடத்தையைப் பற்றி அதில் கேட்கக் கூடாது;

(6) அது மிக நீளமாயிருக்கக் கூடாது;

(7) ஒரு முறை முழுவதும் பதில் அளிக்கப்பட்ட ஒரு கேள்வியை மீண்டும் கேட்கக் கூடாது.

4. ஒரு கேள்வி ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதுதானா என்பதைத் தலைவர் நிச்சயிக்க வேண்டும்; அடுத்த எந்தக் கூட்டத்துக்கு அது 2 ஆவது விதியின்படி உரிய காலத்தில் வந்திருக்கிறதோ அதற்காக நிச்சயிக்கப்பட்ட தேதிக்கு முன் அதற்கு இசைவு கொடுக்க வேண்டும் அல்லது அதைத் தள்ளிவிட வேண்டும். ஏதேனும் கேள்வியானது கேள்வி கேட்கும் உரிமையைத் தவறாகப் பயன் படுத்துவதாகுமெனத் தாம் கருதினால், அல்லது பொதுநலனுக்குப் பொருந்தும் விதமாக அதற்குப் பதிலளிக்க முடியாதெனக் தாம் கருதினால், தலைவர் அதைத் தள்ளி விடலாம்; எக் கேள்வியேனும் இவ் விதிகளில் ஒன்றை மீறுவதாயுள்ளது எனத் தாம் கருதினால், தலைவர் அதைத் தள்ளிவிட வேண்டும்; அப்படிப்பட்ட விஷயத்தில், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகளில் அக் கேள்வியை எழுதக் கூடாது.

5. தலைவரால் அனுமதிக்கப்பட்ட கேள்விகளை அந்த நாளுக்குரிய நிகழ்ச்சி நிரல் தாளில் எழுத வேண்டும்; கூட்டத்தில் மற்ற வேலை எதனையும் தொடங்குவதற்குமுன்; தலைவர் அவ்வாறு எழுதப்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும், அது தாளில் இருக்கிற வரிசைக் கிரமத்தில்—அதைக் கேட்ட உறுப்பினர் அதை முன்னதாகத் திரும்பப் பெற்றுக் கொண்டிராவிட்டால் பதில் சொல்ல வேண்டும்.

ஆனால், தலைவர், தமக்கு உசிதமாகத் தோன்றினால், பொருள் நிரல் தாளில் உள்ள ஒரு கேள்வி திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், பொதுநலனை முன்னிட்டு அதற்குப் பதில் சொல்லலாம்.

6. கூறப்பட்ட பதிலையொட்டிய உண்மைகளில் மேலும் விளக்கம்பெற அதைக் குறித்து எந்த உறுப்பினரும் தொடர் கேள்வி ஒன்றைக் கேட்கலாம்.

ஆனால், கேள்விகளின் பொருள் பற்றிய விதிகளை ஒரு தொடர் கேள்வி மீறுவதாயுள்ளதென்று தலைவர் கருதினால், அவர் அதைத் தள்ளிவிடலாம்.

மேலும், அறிவிப்பின்றி ஒரு தொடர் கேள்விக்குப் பதில் கூற அவர் மறுத்துவிடலாம். அப்படிப்பட்டதில் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பிந்திய ஒரு கூட்டத்தில் புதுக் கேள்வி வடிவத்தில்தான் அதைக் கேட்கலாம்.

7. இவ்விதிகளின்படிக் கேட்கப்பட்ட ஒரு கேள்வி அல்லது அக் கேள்விக்குச் சொல்லப்பட்ட பதில் சம்பந்தமாகி விவாதம் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது.

8. கேட்கப்பட்ட கேள்வியையும் அதற்குச் சொல்லப்பட்ட பதிலையும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகளில் எழுத வேண்டும்.

9. இவ் விதிகளில் "தலைவர்" என்பதில், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 37 ஆவது பிரிவைச் சேர்ந்த (1), (2), (4), (5) (6) உட்பிரிவுகளின்படி அக்காலத்தில் தலைவர் பதவியை வகிப்பவர் என்பதும் அடங்கும்.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

4. ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டங்களில் தீர்மானங்கள் கொண்டுவருவது.—(1) தீர்மானம் கொண்டுவர விரும்புகிற ஓர் உறுப்பினர், குறைந்தது பத்து தெளிவான நாட்களுக்கு முன்னதாக அறிவிப்புக் கொடுப்பது மூலமாய்த் தமது எண்ணத்தைத் தலைவருக்கு எழுதித் தெரிவிக்க வேண்டும்; அவர் கொண்டுவர விரும்புகிற தீர்மானத்தின்படி ஒன்று அந்த அறிவிப்பில் அடங்கியிருக்க வேண்டும்.

ஆனால், பத்து நாட்களுக்குக் குறைவான அறிவிப்புள்ள தீர்மானத்தை அலுவல் பட்டியலில் எழுதுவிக்கத் தலைவர் அனுமதி கொடுக்கலாம்.

(2) பின்வரும் நிபந்தனைகளின்படியிராத எத்தீர்மானத்தையும் அனுமதிக்கக் கூடாது ; அவையாவன :—

(அ) அது தெளிவாகவும் சரி நுட்பமாகவும் சொல்லப்பட்டிருக்க வேண்டும்; அதில் திட்டமான ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டிருக்க வேண்டும்;

(ஆ) வாதங்கள், அனுமானங்கள், வஞ்சகப் புகழ்ச்சியான சொற்றொடர்கள் அல்லது அவதூறான செய்திகள் அதில் இருக்கக் கூடாது; சிலருடைய அலுவல் முறைமையிலன்றி அல்லது பொது முறைமையிலன்றி மற்றபடி அவர்களுடைய ஒழுக்கம் அல்லது நடத்தையைப் பற்றி அதில் குறிப்பிட்டிருக்கக் கூடாது.

(3) ஒரு தீர்மானம் ஏற்றுக் கொள்ளக் கூடியதுதானா என்பதைத் தலைவர் தீர்மானிக்க வேண்டும். 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளை அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளை மீறுவதாகுமென்று தாம் கருதுகிற தீர்மானத்தை அவர் தள்ளிவிட வேண்டும்; தலைவருடைய தீர்ப்பு முடிவானதாகும்.

ஆனால், ஒரு தீர்மானம், ஊராட்சி ஒன்றிய நிருவாகத்துக்குத் தொடர் பற்ற ஒரு விஷயத்துக்குச் சம்பந்தப்படுகிறதென்று தலைவர் கருதினால் தலைவர் அத் தீர்மானத்தை மாநில அரசினரின் ஆலோசனைக்கு அனுப்பி, அது ஏற்றுக் கொள்ளக் கூடியதா என்பதைப் பற்றி அவர்கள் ஆணைகளைப் பெற வேண்டும்.

(4) தலைவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற தீர்மானத்தைக் கூட்டத்தைப் பற்றிய அறிவிப்பிலுள்ள அலுவல் பட்டியலில் எழுத வேண்டும்.

(5). (1) அலுவல் பட்டியலில் எந்த உறுப்பினர் பெயரில் ஒரு தீர்மானம் இருக்கிறதோ அவர், அழைக்கப்படும்போது,

(அ) அத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்; அப்படியானால், அவ்வாறு செய்யப் போவதாகச் சொன்னால் மட்டும் போதுமானது; அல்லது

(ஆ) அத் தீர்மானத்தைக் கொண்டு வரலாம்.

(2) அந்த உறுப்பினர் அழைக்கப்படும்போது அங்கே இராவிட்டால், அல்லது அதைக் கொண்டுவர விருப்பமில்லாதவராயிருந்தால் அல்லது அக் கூட்டம் நடப்பதற்கு முன்பாகவே அவர் உறுப்பினராயிராமற்போய் விட்டால், அக் கூட்டத்துக்கு வந்திருக்கிற எந்த உறுப்பினரேனும் அத் தீர்மானத்தைக் கொண்டு வரலாம்; எந்த உறுப்பினரும் அதைக் கொண்டு வராவிட்டால், அது திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(5) கொண்டு வரப்பட்டிருக்கிற ஒவ்வொரு தீர்மானத்தையும் வழிமொழிய வேண்டும்.

(6) தலைவருடைய அனுமதியின்படியின்றி மற்றப்படி பதினைந்து நிமிடங்களுக்கு மேல் எவரும் பேசக் கூடாது;

ஆனால், ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருபவர் அதைக் கொண்டு வரும்போது முப்பது நிமிடங்களுக்கு மேற்படாமல் பேசலாம்.

(7) ஒரு தீர்மானத்தைப் பற்றிய விவாதம், கண்டிப்பாக அத் தீர்மானத்தின் பொருளைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்.

(8). (1) தீர்மானம் ஒன்று விவாதிக்கப்பட்டு வரும்போது, எந்த உறுப்பினரேனும், 2 ஆவது, 3 ஆவது, 6 ஆவது, 7 ஆவது விதிகளுக்குட்பட்டு, அத் தீர்மானத்துக்கு ஒரு திருத்தம் கொண்டுவரலாம்.

(2) கொண்டுவரப்பட்டிருக்கிற ஒவ்வொரு திருத்தமும் வழிமொழியப் பெற வேண்டும்; இன்றேல் அதை விவாதிக்கக் கூடாது.

(9). (1) தீர்மானத்தை அல்லது ஒரு தீர்மானத்துக்குத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிற ஓர் உறுப்பினர், ஊராட்சி ஒன்றியக் குழுவின் அனுமதியுடன் அன்றி மற்றப்படி அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளக் கூடாது.

(2) திரும்பப் பெற்றுக் கொள்ள அனுமதி கோரும் பிரேரணையின் மீது, தலைவருடைய அனுமதியுடனன்றி மற்றப்படி, விவாதம் நடக்கவிடக் கூடாது.

(10). (1) ஒரு தீர்மானத்துக்குத் திருத்தம் கொண்டுவரப்படும்போது அல்லது அத்தகைய இரண்டு அல்லது பல திருத்தங்கள் கொண்டுவரப்படும் போது, தலைவர் அவைகளைப் பற்றி ஊராட்சி ஒன்றியக் குழுவினரின் கருத்தைத் தெரிந்து கொள்வதற்குமுன், மூலப் பிரேரணையின் வாசகத்தையும், பிரேரேபிக்கப்பட்டுள்ள திருத்தம் அல்லது திருத்தங்கள் வாசகத்தையும் ஊராட்சி ஒன்றியக் குழுவினருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் அல்லது படித்துக் காட்ட வேண்டும்.

(2) சாதாரணமாக தலைவர் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கிற வரிசை முறையில் அவைகளை வாக்கெடுப்புக்குவிட்டு, எல்லாத்திருத்தங்களும் தோற்றுப்போனால், கடைசியாக மூலப் பிரேரணையை வாக்கெடுப்புக்குவிட வேண்டும். ஆனால் தலைவர் விருப்பத்தின்படி எதிலேனும் மூலப் பிரேரணையையும் திருத்தங்களையும் அவர் தகுதியெனக் கருதுகிற வரிசைக் கிரமத்தில் வாக்கெடுப்புக்கு விடலாம்.

11. பல விவரக் கூறுகள் கொண்டதாயுள்ள தீர்மானம் விவாதிக்கப்பட்டிருந்தால், தலைவர் தமக்கு யுக்தமாகத் தோன்றினால், அத் தீர்மானத்தை விவரக்கூறுகளாகப் பிரித்து, அவ் விவரக் கூறுகள் ஒவ்வொன்றையும் தனித் தனியாக வாக்கெடுப்புக்கு விடலாம்.

12. இவ் விதிகளில் "தலைவர்" என்பதில், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 37 ஆவது பிரிவைச் சேர்ந்த (1), (2), (4), (5) அல்லது (6) உட்பிரிவுகளின்படி அக் காலத்தில் தலைவர் பதவியின் பொறுப்பு வகிப்பவர் என்பதும் அடங்கும்.

(1960 ஆக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1961 நவம்பர் 27 ஆம் தேதியுள்ள 218244/61-L தனி எண் குறிப்பாணை.)

(1963 ஏப்ரல் 3 ஆம் தேதியுள்ள 754 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(55) சட்டசபை உறுப்பினர்களும் சட்ட மன்றங்களின் உறுப்பினர்களும் தீர்மானங்கள் கொண்டுவருதல்.—1958 ஆம் ஆண்டின் XXXV-ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 12 (2) பிரிவின்படி, சட்டசபை உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ள உரிமை உள்ளவர்களாவார்கள்; ஆனால், வாக்களிக்கவோ, ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெறவோ அவர்களுக்கு உரிமையில்லை. தீர்மானங்களைக் கொண்டு வருவது மன்றத்தின் நடவடிக்கைகளின் பாகமாகும்; அவ்வாறு கொண்டு வருவதற்கு ஊராட்சி ஒன்றிய மன்றம் உறுப்பினர்கள் என்னும் முறைமையில் சட்டசபை உறுப்பினர்களின் அல்லது சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமைகளை வரையறுப்பதற்காக, மேற்படி சட்டத்தில் திட்டவட்டமான நிபந்தனை எதுவுமில்லை.

இதன்பொருட்டு வெளிப்படையான தடை எதுவும் இராமையால், சட்டசபை உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் மன்றத்தின் தீர்மானங்கள் கொண்டு வரலாமென அரசினர் கருதுகிறார்கள்.

(1961 ஏப்ரல் 3 ஆம் தேதியுள்ள 20493/L 2/61-3 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(56) தலைவர் முடிவு வாக்கு அளிப்பது.—குறிப்பிட்ட ஒருவரை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளும் விஷயத்தில் மன்றத்தினர் கருத்து வேறுபாடு கொண்டிருந்து, குறிப்பிட்ட அந்த உறுப்பினரைச் சேர்த்துக்கொள்வதற்கு ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் சமமான எண்ணிக்கையுள்ள வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தால், முடிவு வாக்களிக்கும் உரிமை ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவருக்கு இருக்கிறதா என்னும் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

2. 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்திலாவது அதன் படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகளிலாவது திட்டவட்டமான நிபந்தனை எதுவும் இராததால், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டத்தில் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்; ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டங்களில் அலுவல் நடத்தும் விதம் சம்பந்தமாக, மேற்படி சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட விதிகளை, அவ்வாறு சேர்த்துக் கொள்ளும் விஷயத்தில் பின்பற்ற வேண்டும். மேற்படி விதிகளைச் சேர்ந்த 5-ஆவது விதியின்படி, மன்றத்திற்கு முன் வருகிற எல்லாப் பிரச்சினைகளும் கூட்டத்துக்கு வந்து வாக்களிக்கிற உறுப்பினர்களில் பெரும்பான்மையோரால் தீர்மானிக்கப்பட வேண்டும். வாக்குகள் சமமாகவுள்ள ஒவ்வொன்றிலும் தலைமை வகிக்கும் உறுப்பினருக்கு முடிவுவாக்கு இருப்பதால் அதை அவர் அளிக்க வேண்டும். ஆகையால், மேலே 1-ஆவது பத்தியில் குறிப்பிட்டிருக்கிற விஷயங்களில் ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர் முடிவு வாக்கு அளிக்கலாம்.

(1961 சூலை 6 ஆம் தேதியுள்ள 86648/L தனி/61-3 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(57) உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வது பற்றிய தீர்மானத்தை ரத்து செய்தல்.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளின்படி ஓர் ஊராட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஓர் உறுப்பினர் அந்த ஊராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் என்று சொல்ல முடியாதென மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. இதைக் கருதி உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வது சம்பந்தமாய் ஓர்

ஊராட்சியின் தீர்மானத்தை ஆய்வாளர் (மாவட்ட ஆட்சியாளர்) ரத்து செய்வதற்கு, மேற்படி சட்டத்தில் கண்ட 147 (1) பிரிவின் விலக்கு நிபந்தனை தடையாக இருக்காது.

2. மன்றத்தில் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தீர்மானங்களுக்குக்கூட மேற்படி தெளிவுரை பொருந்தும்; இப்படிப்பட்டவற்றில் இதன் பொருட்டு ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் ஆய்வாளர் என்று பெயரிடப்பெற்றுள்ள கூட்டு வளர்ச்சி ஆணையாளர், மேற்படி சட்டத்தில் கண்ட 147 (1) பிரிவின்படி தீர்மானங்களை ரத்து செய்ய அதிகார முடையவராவார்.

(1962 செப்டம்பர் 10 ஆம் தேதியுள்ள 1993 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

5. தலைவருடைய அலுவல்கள் பிறரைச் சேருவது.—ஊராட்சி ஒன்றியம் தொடர்பான அலுவலில் தலைவர் தமிழ்நாடு மாநிலத்துக்குள் ஆட்சி எல்லையை விட்டுப் போயிருந்தால், அவருடைய அலுவல்கள் துணைத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் அளவு வரையிலன்றி மற்றப்படி அந்த அலுவல்கள் மேற்படி துணைத் தலைவரைச் சேர மாட்டா.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

6. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவரும் துணைத் தலைவரும் உறுப்பினர்களும் பதவி விலகல்.—(1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவர் அல்லது துணைத் தலைவர் அல்லாத அக் குழுவின் வேறு எந்த உறுப்பினரேனும், தலைவருக்கு எழுத்து மூலமாக அறிவிப்புக் கொடுத்துத் தமது பதவியினின்றும் விலகலாம். அப் பதவி விலகல் செய்தி தலைவருக்குக் கிடைத்த தேதியிலிருந்து அது அமுலுக்கு வரும்.

(2) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவர் அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு எழுத்து மூலமாக அறிவிப்புக் கொடுத்துத் தமது பதவியினின்றும் விலகலாம். அந்தப் பதவி விலகல் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முன் வைக்கப்படுகிற தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

7. வெளியேறும் தலைவர் முதலியவர்களிடமிருந்து ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உடைமைகளை வாங்கி வைத்துக் கொள்வதற்குரிய அதிகாரி.—(1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 182 ஆவது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் காரியங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி, விசாரணை அதிகாரமுள்ள ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் விஷயத்தில் கோட்ட ஊராட்சி அலுவலர் ஆவார்.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

8. ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தங்கள் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும், தங்கள் மன்றங்களின் உறுப்பினர்களுக்கும் பயணப்படி கொடுப்பது.—(1) (அ) தலைவர், துணைத் தலைவர், தலைவர் அதிகாரம் பெற்றவர் உட்பட ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களுக்கு,

(ஆ) தலைவர் உட்பட ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் நிலையான அல்லது மற்ற குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்படத்தக்க பயணப்படி, 2 முதல் 9 வரையுள்ள விதிகளில் குறிப்பிட்டிருக்கிற மாறுதல்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு, தமிழ்நாடு பயணப்படி விதிகளில் கண்ட நிபந்தனைகளினால் முறைப்படுத்தப்படும்.

(2) 1 ஆவது விதியைச் சேர்ந்த (அ), (ஆ) பகுதிகளில் சொல்லப்பட்டிருப்பவர்கள், தாங்கள் பெறுவதற்கு உரிமை உள்ளவர்களாயிருக்கிற பயணப்படி வீதங்களை நிச்சயிக்கும் காரியத்துக்காக, பின்வருமாறு மூன்று தரங்களாகப் பிரிக்கப்படுவார்கள்; ஒவ்வொரு தரத்திலும் உள்ளவர்கள் சம்பந்தப்பட்ட தரத்துக்கு எதிரே குறிப்பிட்டுள்ள பயணப்படி வீதங்களைப் பெறுவதற்கு உரியவர்களாவார்கள்.

ஆனால் ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், II ஆவது III ஆவது தரங்கள் சம்பந்தமாகக் குறிப்பிட்டிருக்கிற வீதங்களைக் குறைத்துவிடலாம்.

தரமும் பதவிப் பெயரும்.	நாட்படி	மைல் தொலைவு.	ரயில் அல்லது நீராவிக் கப்பல் பயணம்.
தரம் I. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவரும் துணைத் தலைவரும் சட்டசபை உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும்.	5. தங்குமிடம் இருப்பபிடமாயிராவிட்டால், அல்லது இருப்பிடத்திலிருந்து சுற்றிலும் 5 மைலுக்குள் இராவிட்டால்.	சாலை வழியாக 25 காசும் கால்வாய் வழியாக 19 காசும்.	ஒற்றை முதல் வகுப்புக் கட்டணம்.
	3. தங்குமிடம் இருப்பிடமாயிருந்தால் அல்லது இருப்பிடத்திலிருந்து சுற்றிலும் 5 மைலுக்குள் இருந்தால்.	,,	,,
தரம் II. தலைவர் அதிகாரம் பெற்றவர்.	5. தங்குமிடம் இருப்பிடமாயிராவிட்டால் அல்லது இருப்பிடத்திலிருந்து சுற்றிலும் 5 மைலுக்குள் இராவிட்டால்.	,,	,,
	3. தங்குமிடம் இருப்பிடமாயிருந்தால் அல்லது இருப்பிடத்திலிருந்து 5 மைலுக்குள் இருந்தால்.	,,	,,
தரம் III. (அ) தலைவரும் துணைத் தலைவரும் நீங்கலாகவும் தற்காலிகத் தலைவர் உட்படவும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்கள்.	4. தங்குமிடம் இருப்பிடமாயிராவிட்டால் அல்லது இருப்பிடத்திலிருந்து சுற்றிலும் 5 மைலுக்குள் இராவிட்டால்.	சாலை அல்லது கால்வாய் வழியாக 13 காசு.	ஒரு இரண்டாம் வகுப்புக் கட்டணம்.
(ஆ) தலைவர் உட்பட, நிலைக் குழுக்களின் மற்றக் குழுக்களின் உறுப்பினர்கள்.	2. தங்குமிடம் இருப்பிடமாயிருந்தால் அல்லது இருப்பிடத்திலிருந்து சுற்றிலும் 5 மைலுக்குள் இருந்தால்.	,,	,,

குறிப்பு.—மேற்படி வீதங்கள் தமிழ்நாடு பயணப்படி விதிகளின் I ஆவது இணைப்பில் கண்டுள்ள வீதங்களைப் போலவே, அவ்விதிகளின் 47 ஆவது விதியினால் முறைப்படுத்தப்படும்.

3. 1 ஆவது விதியைச் சேர்ந்த (அ), (ஆ) பகுதிகளில் சொல்லப்பட்டிருப்பவர்கள் வட்டார ஜீப்பிலாவது வேறு எந்த அரசாங்க ஊர்தியிலாவது செலவில்லாமல் பயணம் செய்து, அதே நாளில் தலைமையிடத்துக்குத் திரும்பி வந்துவிட்டால், அவர்களுடைய தினப்படி பின்வருமாறு கணக்கிடப்படும் :—

(அ) தலைமையிடத்தை விட்டுப்போயிருப்பது நான்கு மணி நேரத்துக்கு மேற்படாவிட்டால்.	ஒன்றுமில்லை.
(ஆ) தலைமையிடத்தை விட்டுப் போயிருப்பது நான்கு மணி நேரத்துக்கு மேற்பட்டு ஆறு மணி நேரத்துக்கு மேற்படாவிட்டால்.	நாட்படியில் மூன்றில் ஒரு பங்கு.
(இ) தலைமையிடத்தை விட்டுப் போயிருப்பது ஆறு மணி நேரத்துக்கு மேற்பட்டு பன்னிரண்டு மணி நேரத்துக்கு மேற்படாவிட்டால்.	நாட்படியில் பேர்பாதி.
(ஈ) தலைமையிடத்தை விட்டுப் போயிருப்பது பன்னிரண்டு மணி நேரத்துக்கு மேற்பட்டால்.	முழு தினப்படி.

குறிப்பு.—ஒருவர் பின்சொல்லப்படும் பயணங்கள் ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் தலைமையிடத்தை விட்டுப் போயிருக்கும் காலம் நான்கு மணி நேரத்துக்கு மேற்படாவிட்டால், குறிப்பிட்ட ஒரு காலண்டர் நாளில் அல்லது தமிழ்நாடு பயணப்படி விதிகளைச் சேர்ந்த 2 (ஆ) (ii) விதியில் "நாள்" என்பதற்குச் சொல்லப்பட்டுள்ள பொருளின்படி 24 மணி நேரத்துக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட பயணங்கள் செய்திருந்தாலும் அவருக்கு நாட்படி கொடுக்கப்படத் தக்கதாக மாட்டாது.

4. கூட்டங்களுக்குப் போவதற்கான பயணங்களுக்குரிய பயணப்படி உட்பட, எந்த ஓர் ஆண்டிலேனும் உண்மையில் வாங்கப்படக் கூடிய மொத்தப் பயணப்படி, குறிப்பிட்ட மாவட்ட ஆட்சியாளரின் தனி ஒப்பளிப்பு இல்லாமல்—

(அ) ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவருக்கு ஐந்நூறு ரூபாய்க்கும்,

(ஆ) ஊராட்சி ஒன்றிய மன்றத் துணைத் தலைவருக்கு முந்நூறு ரூபாய்க்கும்
மேற்படக் கூடாது.

ஆனால், (அ) பகுதியின்படி அனுமதிக்கப்படத்தக்க பெரும் பயணப்படி, நிலையான பயணப்படி பெறுகிற தலைவர் ஊராட்சி ஒன்றியத்தின் ஆட்சி எல்லைக்குள் செய்யும் பயணங்கள் சம்பந்தமாகப் பொருந்தாது.

5. எந்த ஆண்டிலேனும்—(அ) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவருடைய அலுவல்கள் துணைத் தலைவரைச் சேரும் காலத்துக்கு, அவரும்,

(ஆ) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவருடைய அலுவல்களை எல்லாம் அல்லது அவைகளில் எவற்றையேனும் செய்கிற அம் மன்றத்தின் உறுப்பினரும் வாங்கும் பயணப்படியை, அந்த ஆண்டில் ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவருக்குக் கொடுக்கப்படத்தக்க பெரும் பயணப்படியைக் கணக்கிடும் காரியத்துக்காகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

6. ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவர், அந்த ஊராட்சி ஒன்றியப் பரப்பின் எல்லைக்குள், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் இருக்கிற இடமல்லாத வேறோர் இடத்தில் வசித்தால், அவருடைய பயணப்படியைக் கணக்கிடும் காரியத்துக்காக, அந்த இருப்பிடம் அத் தலைவருடைய தலைமையிடம் என்று கருதப் படும்.

விளக்கம்.—இவ்விதியின் கருத்தில் 'தலைவர்' என்பதில், துணைத் தலைவர் என்பதும் அடங்கும்; ஆனால், மேற்படி சட்டத்தின் 37 ஆவது பிரிவைச் சேர்ந்த (6) உட்பிரிவில் குறிப்பிட்டிருக்கிற 'தலைவர் அதிகாரம் பெற்றவர்' என்பது அடங்காது.

7. ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர், ஊராட்சி ஒன்றியப் பரப்பின் எல்லைக்கு வெளியேயுள்ள ஓரிடத்தில் வசித்தால், ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் அவர் செய்யும் பயணங்களுக்காக மட்டும் பயணப்படி வாங்க அவர் உரிமை யுள்ளவராவார்.

8. ஓர் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராவது துணைத் தலைவராவது தலைவர் அதிகாரம் பெற்றவராவது வேறு உறுப்பினராவது, ஊராட்சி ஒன்றியத்தின் தொடர்புடைய அலுவலின்மேல், அந்த ஊராட்சி ஒன்றிய எல்லைக்கு வெளியே யுள்ள இடங்களுக்குப் பயணம் செய்து, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அனு மதியை முன்னதாகப் பெற்றுக் கொண்டு அப்பயணங்கள் மேற்கொள்ளப் பட்டால், அவ்வாறு செய்யப்பட்ட பயணங்களுக்காகப் பயணப்படிகள் கேட்கலாம்.

9. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது அதன் நிலையான அல்லது வேறு குழுவின் கூட்டம் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கூட்டங்கள், அத்தகைய குழு அல்லது குழுக்களின் கூட்டங்கள் அல்லது அத்தகைய குழுக்களின் இரண்டு அல்லது பல கூட்டங்கள் தொடர்ச்சியாக இரண்டு அல்லது பல நாட்கள் நடந்தால், அக் கூட்டம் அல்லது கூட்டங்கள் சம்பந்தமாக, கூட்டம் நடக்கும் இடத்துக்கும், அங்கிருந்தும் ஒரு தடவை போய் வருவதற்கு மட்டும் பயணப்படி கொடுக்கப்படும்; சம்பந்தப்பட்ட நபர் ஒவ்வொரு நபர் முடிவிலும் அவ்விடத்தை விட்டுபோய், அடுத்த நாள் அங்கே திரும்பி வருவதைக் கவனிக்க வேண்டியதில்லை. ஆனால், மற்றப்படிக் கொடுக்கப் படுமானால், மற்ற நாட்களுக்காகத் தினப்படி கொடுக்க வேண்டும்.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1962 ஏப்ரல் 27 ஆம் தேதியுள்ள 1024 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1962 மே 24 ஆம் தேதியுள்ள 1204 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1963 ஏப்ரல் 3 ஆம் தேதியுள்ள 754 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1963 நவம்பர் 11 ஆம் தேதியுள்ள 2401 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(58) தலைவர் பயணப்படி வாங்குவது பற்றிய விளக்க உரை.—ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தங்கள் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும், தங்கள் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் பயணப்படி கொடுப்பது சம்பந்தமாக, 1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட விதிகளைச் சேர்ந்த (பின்னர் 4. என்று மீண்டும் இலக்கமிடப்பட்ட) 3 ஆவது விதியின்படி, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரும் துணைத் தலைவரும் ஓர் ஆண்டில் வாங்கக் கூடிய மொத்த பயணப்படி முறையே 500 ரூபாய்க்கும் 300 ரூபாய்க்கும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த வரையறைகளுக்கு மேற்பட்ட பயணப்படியை, மாவட்ட ஆட்சியாளரின் தனி ஒப்பளிப்பைப் பெற்றுக் கொண்டு வாங்க வேண்டும். மேற்சொன்ன விதிகளின்படி, தலைவர் எந்தக் காரியத்துக்காகப் பயணப்படி வாங்கலாமோ அது—

(i) மன்றத்தின் அல்லது அதன் குழுக்களின் கூட்டங்களுக்கு வருவதாக, அல்லது

(ii) மேற்படி சட்டத்தின்படி ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவல்களைச் செய்வது அல்லது கடமைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக எதையேனும் செய்வதாக இருக்கலாம். தலைவரைப் பொருத்தவரை அவ்வாறு பயணப்படி கொடுக்கப்படத்தக்க பயணங்களின் நோக்கங்களில் ஒன்று என்னவென்றால், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நிருவாகத்தின் கீழ் உள்ள தொடக்கப் பள்ளிகளைப் பார்வையிடுவது ஆகும்.

2. மேற்சொன்ன விதிகளைச் சேர்ந்த (பின்னர் 6 என்று மீண்டும் இலக்கமிடப்பட்ட) 5 ஆவது விதியின்படி, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவரது இருப்பிடம் அந்த ஊராட்சி ஒன்றியத்தின் அலுவலகம் இருக்கிற இடத்தினின்றும் வேறானதாயிருந்தால், அந்த இருப்பிடமாவது, தலைவருடைய பயணப்படியைக் கணக்கிடும் காரியத்துக்காக அவருடைய தலைமையிடமெனக் கருதப்படும். ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர், தாம் தலைவராயிருக்கிற ஊராட்சி ஒன்றியத்தின் ஆட்சி வரம்புக்கு வெளியிலுள்ள ஓரிடத்தில் வசித்தால், மேற்சொன்ன விதிகளைச் சேர்ந்த 6 ஆவது விதியின்படி தாம் தலைவராயிருக்கிற ஊராட்சி ஒன்றியத்தின் ஆட்சி எல்லைக்குள் செய்யும் பயணங்களுக்காகமட்டும் அவர் பயணப்படி வாங்க உரிமையுள்ளவராவார்.

(1961 நவம்பர் 1-ஆம் தேதியுள்ள 2901 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(59) **தலைவர் ஊராட்சி ஒன்றிய நிறுவனங்களைப் போய்ப் பார்ப்பது.**—1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி, தொடக்கப்பள்ளி, தாய்-சேய் நல விடுதிகள் ஏழைகள் விடுதிகள்—அனாதைச் சிறுவர் காப்பகங்கள்—சத்திரங்கள் ஊராட்சி ஒன்றிய அங்காடிகளென்று வகைப்படுத்தப்பட்ட பொது அங்காடிகள் போன்ற பல்வேறு நிறுவனங்களைப் பேணும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியத்தினிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிறது. இந்த நிறுவனங்கள் சரிவர இயங்கும்படி செய்வதிலும், அந்த நிறுவனங்களின் பாராமரிப்புக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய நிதிகள் பொதுமக்களுக்குப் பெரிதும் நன்மை பயக்கும் வகையில் பயன்படுத்தப்படும்படி செய்வதிலும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குப் பெரும் பொறுப்பு உண்டு. இந்த விளைவுகளை எய்தும் பொருட்டு, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர் தமது ஆட்சி எல்லைக்குட்பட்ட இந்த நிறுவனங்கள் விஷயத்தில் இடைவிடாத கவனிப்புச் செலுத்துவதும், அவசியமானால் அந்த இடங்களுக்கு நேரில் போய்ப்

பார்ப்பது மூலமாக அவற்றின் அன்றாட நடைமுறையைப் பற்றித் தாம் முழுவதும் தெரிந்து வைத்துக் கொண்டிருப்பது அவசியமாகும். ஊராட்சி ஒன்றிய நிருவாகத்துக்குட்பட்ட தொடக்கப் பள்ளிகளை ஊராட்சி ஒன்றியத் தலைவர் போய்ப் பார்ப்பது சம்பந்தமாக 1961 நவம்பர் 1-ஆம் தேதியுள்ள 2901 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் தனியாக விளக்க உரைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. பயணப்படி சம்பந்தமாக அந்த அரசாணையிலுள்ள விளக்க உரைகள், மற்ற நிறுவனத்தைப் போய்ப் பார்ப்பதற்கும் பொருந்தும்.

(1961 நவம்பர் 13 ஆம் தேதியுள்ள 217041L/தனி/61 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைக் கடிதம்.)

(60) **ஊராட்சி நிகழ்ச்சிகளில் தலைவர் பங்கெடுத்துக் கொள்வது.**— ஊராட்சிகள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகள் சம்பந்தமாக, ஊராட்சிகள் ஏற்பாடு பண்ணும் ஏதேனும் நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் பங்கெடுத்துக் கொண்டால், "அலுவல் முறையான கடமை" யைச் செய்வதாக அதைக் கருதவேண்டும்.

(1962 சனவரி 31-ஆம் தேதியுள்ள 194919/C 2/61-3 ஆம் எண் குறிப்பாணை)

(61) **பயணப்படி கொடுப்பதற்குப் பிடிக்கும் செலவைப் பற்றுக எழுதுவது.** —ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவரும் துணைத் தலைவரும் உறுப்பினர்களும், கல்விக் குழு, பொதுக் காரியங்கள் குழு முதலியவை, போன்ற மன்றங்களின் கூட்டங்களுக்குப் போவதற்கு அவர்கள் செய்யும் பயணங்களுக்காக அவர்களுக்குப் பயணப்படி கொடுப்பதை, "அ.பொதுக் கணக்கு-1. நிருவாகம் —3 (i) தலைவர், (ii) துணைத் தலைவர், (iii) உறுப்பினர்கள் ஆகியவர்களின் பயணப்படி" என்பதன் கீழ்ப் பொருத்தமான கணக்குத் தலைப்புக்குப் பற்றுக எழுத வேண்டும்.

(1962 சூன் 15-ஆம் தேதியுள்ள 103018 இராம முன்னேற்றம், கணக்குகள் தனி/61-ஆம் எண் குறிப்பாணை)

(62) **பயணப்படி பெறும் வரம்புக்கு மேற்பட்டுப் போனால் தனி ஒப்பளிப்பு.** —ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் பயணப்படி கொடுப்பது சம்பந்தமாக 1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள 9 ஆம் எண் விளம்பரத்தில் பிறப்பிக்கப்பட்ட விதிகளைச் சேர்ந்த 4 ஆவது விதியில் அந்த விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ஏதாவது

ஓர் ஆண்டில் மொத்த பயணப்படி வரம்புக்கு மேற்பட்டுப்போனால் தனி ஒப்பளிப்பு வழங்க மாவட்ட ஆட்சியாளருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சியாளர்கள் தாங்கள் அவசியமெனக் கருதும்போதெல்லாம் வரம்பை உயர்த்தி தனிப் பொது ஒப்பளிப்பு வழங்கலாம்; இதன் பொருட்டு அவ்விதியைத் திருத்த வேண்டியதில்லை.

1962 அக்டோபர் 18 ஆம் தேதியுள்ள 192186/Lதனி/62-1 ஆம் எண் குறிப்பாணை)

(63) **ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்களுக்கு நிலையான பயணப்படி கொடுப்பது.**—ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலாக அவர்கள் மேற்கொள்ளும் பயணங்களுக்காக, அரசினரால் பிறப்பிக்கப்பட்ட விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட வீதங்களின்படி சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் நிதிகளிலிருந்து பயணப்படி வாங்க இப்போது தகுதியுள்ளவர்களாயிருக்கிறார்கள். மாதத்தில் ஒரு முறையேனும் தலைமையிடத்திலே மன்றத்தின் கூட்டங்களுக்கு தலைவர் போக வேண்டும்; அதுவுமன்றி, அலுவல் முடிப்பதற்காகப் பிற நாட்களிலும் அலுவலகத்துக்குப் போக வேண்டும். ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளுக்கும், உதவி பெறும் மற்ற தொடக்கப் பள்ளிகளுக்கும், தாய்-சேய் நல விடுதிகள்—சத்திரங்கள்—ஊராட்சி ஒன்றிய அங்காடிகள் முதலியவை போன்ற மற்ற நிறுவனங்களுக்கும் போய்ப் பார்க்கவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்களை கருதி நகராட்சி மன்றங்களின் தலைவர்களுக்குக் கொடுப்பது போல, தலைவர்களுக்கு ஊர்திப்படி கொடுக்கலாமா என்னும் பிரச்சினை ஆய்ந்து பார்க்கப்பட்டது. நிர்வாக நலனை முன்னிட்டு அத்தகையபடி அவசியமும் உகந்ததுமென்று தீர்மானிக்கப்பட்டது. அவ்வண்ணமே, ஊராட்சி ஒன்றியத் தூக்குள் செய்யப்படும் பயணங்களுக்காக, 1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள 9 ஆம் எண் அறிவிக்கையில் பிறப்பிக்கப்பட்ட விதிகளின்படி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்குக் கொடுக்கப்படத்தக்க பயணப்படிக்குப் பதிலாக தங்கள் தலைவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்கு மேற்படாமல் நிலையான பயணப் படியைத் தங்கள் நிதிகளிலிருந்து கொடுக்க, அரசினர், ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு அனுமதி வழங்குகிறார்கள். அப்படிப்பட்டவற்றில், நிலையான பயணப்படி வழங்குவதற்கு அவசியமான நிபந்தனையாக, தலைவர்கள் ஊர்தி ஒன்றை வைத்துக் கொள்ள வேண்டுமென

வற்புறுத்த வேண்டியதில்லை. ஊராட்சி ஒன்றியத்துக்கு வெளியே செய்யப் படும் பயணங்கள் சம்பந்தமாக, விதிகளின்படித் தங்களுக்குக் கொடுக்கப்படத் தக்க பயணப்படி வாங்கத் தலைவர்களுக்கு அனுமதி கொடுக்கலாம். விதிகளின் படிக்கான பயணப்படிக்குப் பதிலாக மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் படிக்கு மேற்படாமல் நிலையான பயணப்படியைத் தலைவர்களுக்கு வழங்கலாமா, அல்லது விதிகளின்படி அவருக்குப் பயணப்படி வழங்கலாமா என்று நிர்மானிப்பது, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் முடிவுக்கு விட்டுவிடப்படு கிறது.

(1963 சனவரி 8-ஆம் தேதியுள்ள 73-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சி துறை பல்வகை அரசாணை.)

9. தேர்தல் அதிகாரிகள்.—(இதில் பின்னல் இந்த விதியில் 'மேற்படி சட்டம்' எனக் குறிப்பிடப்படும்) (1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் எல்லாக் காரியங்களுக்காகவும், தங்கள் தங்கள் ஆட்சி எல்லைக்குட்பட்ட பரப்பு களில் மேற்படி சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஒவ்வொரு ஊராட்சி சம்பந்த மாகவும் மாவட்ட ஆட்சியாளரும் கோட்ட ஆட்சியாளரும் கோட்ட ஊராட்சி அலுவலரும், தமது பொறுப்புக்குட்பட்ட மாவட்டத்திலே மேற்படி சட்டத்தின் படி அமைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றின் சம்பந்தமாக வும் மாவட்ட ஆட்சியாளரும் இம் மாநிலத்திலிருக்கிற அத்தகைய ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் சென்னையிலுள்ள துணை வளர்ச்சி ஆணையாளரும் தேர்தல் அதிகாரிகள் ஆவார்கள்.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை)

10. சில போதுகளில் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் உறுப்பினர்களைத் தேர்தெடுப்பது.—1. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் துணைத் தலைவர்களின் தேர்தலுக்காக, இச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட விதிகள், 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 19 ஆவது பிரிவைச் சேர்ந்த (7) உட்பிரிவின்படி ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாக கூடுமான வரையில் பொருந்தும்.

2. மேற்சொன்ன உட்பிரிவின்படி ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் தேர்ந் தெடுக்கப்பட்டவர், சந்தர்ப்பத்துக்கேற்ப எந்த ஊராட்சி அல்லது நகரியக்

குழு சம்பந்தமாகச் சாதாரண அல்லது தற்செயல் காலி நேரிட்டதோ அதன் உறுப்பினராவார்.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சி துறை அரசாணை)

11. ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தொடர்பான தேர்தல் தகராறுகளைத் தீர்த்து வைப்பது.—1. (1) வேறு விதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர், தலைவர் அல்லது துணைத் தலைவர் பதவிக்கு 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி நடந்த தேர்தல் எதையும் (இதில் பின்னுல் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பெற்றுள்ள வேட்பாளரை எதிர்த்து, ஒரு வேட்பாளர் அல்லது வாக்காளர் (2) உள் விதியில் பொருள் சொல்லப்பட்டபடியுள்ள ஒரு தேர்தல் நீதிமன்றத்துக்கு இவ் விதிகளின்படி கொடுத்துக் கொள்ளப்படும். ஒரு தேர்தல் மனு மூலமாகவன்றி மற்றபடி மறுக்கக்கூடாது.

(2) தேர்தல் நீதிமன்றமானது—(i), ii) பகுதியின் கீழ் வருவனவற்றில் தவிர, நீலகிரி அல்லாத மற்ற மாவட்டங்களைப் பொருத்தவரை ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகம் இருக்கிற இடம் சம்பந்தமாக நாட்டுப் பகுதியின் அதிகார வரம்புள்ள முன்சீப் ஆவார், அல்லது அத்தகைய முன்சீப் பலர் இருந்தால் தலைமை முன்சீப் ஆவார். நீலகிரி மாவட்டத்திற்கு உதக மண்டலத்திலுள்ள சார்நிலை நீதிபதியாவார்;

(ii) பொதுவாக ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் சம்பந்தமாக அல்லது ஒரு வகையைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் சம்பந்தமாக அல்லது ஒரே மாவட்டம் அல்லது தாலுகாவிலுள்ள ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் சம்பந்தம்ாக அரசினர் பின்வருமாறு கட்டளையிட்டால், பெயர் குறிப்பிட்டோ பதவி காரணமாகவோ இதன்பொருட்டு அரசினர் நியமித்தனுப்பக் கூடிய அரசாங்க அலுவலர் அல்லது அலுவலர்கள் ஆவார்கள்.

ஆனுல், விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதன்பேரில், ஒரு தேர்தல் மனு—

(அ) (i) பகுதியின்படி முன்சீப்பிடம் கொடுக்கப்பட்டால் சம்பந்தப் பட்ட மாவட்ட நீதிபதியால், தமது ஆட்சி வரம்புக்குட்பட்ட மற்ருெரு முன்சீப்புக்கும்,

(ஆ) (ii) பகுதியின்படி ஓர் அரசாங்க அலுவலரிடம் கொடுக்கப் பட்டால், அரசினரால், மற்ருேர் அரசாங்க அலுவலருக்கும் மாற்றப்படலாம்.

மேலும், தேர்தல் மனு ஒன்று முந்திய விலக்கு நிபந்தனையின்படி ஓர் அதிகாரிக்கு மாற்றப்பட்டால், அந்த அதிகாரி தேர்தல் நீதிமன்றம் எனக் கருதப்படுவார்.

(3) இவ்விதிகளின்படி விசாரணை அதிகாரம் செலுத்துகிற முன்சீப்பாவது சார்நிலை நீதிபதியாவது வேறு அலுவலராவது சந்தர்ப்பத்துக்கேற்ப முன்சீப் பாவது அல்லது சார்நிலை நீதிபதி அல்லது வேறு அரசாங்க அலுவலர் என்னும் தமது முறைமையில்லாமல், இதற்கெனப் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்படுவர் என்னும் முறைமையில் அந்த விசாரணை அதிகாரத்தைச் செலுத்துவதாகக் கருதப்படுவார்.

2. (1) தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட் களுக்குள் தேர்தல், மனு கொடுத்துக் கொள்ள வேண்டும்.

விளக்கம்.—மேற்சொன்ன பதினைந்து நாட்களில் கடைசி நாளன்று தேர்தல் நீதிமன்ற அலுவலகம் மூடப்பட்டிருந்தால், அந்த நீதிமன்றம் திறந்திருக்கிற அடுத்துப் பின்வரும் நாளில் அந்த மனுவைத் தேர்தல் நீதிமன்றத்தில் கொடுத்துக் கொள்ளலாம்.

(2) மனுதாரர் ஆதாரமாகக் கொண்டிருக்கிற முக்கியமான செய்திகளும், நடந்தவையென்று அவர் சொல்கிற ஊழல் நடவடிக்கைகள் பற்றிய விவரங் களும் சுருக்கமான வடிவத்தில் அந்த மனுவில் கண்டிருக்க வேண்டும்; அவசிய யானல் தொடரிலக்கமிடப்பட்டுள்ள பத்திகளாக அது பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். அதில் மனுதாரர் கையெழுத்திட்டிருக்க வேண்டும்; வழக்கு வாத அறிவிப்புகளைச் சரிபார்ப்பதற்காக 1908 ஆம் ஆண்டின் சிவில் வழக்கு நடை முறை விதித் தொகுப்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவிதமாக அந்த மனு சரி பார்க்கப்பட்டிருக்க வேண்டும்

3. தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் தேர்தலை ஆட்சேபிப்பதோடுகூட தாமே முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டுமெனக் கேட்பதற்கு மனுதாரர் விரும்பினல், அவர் அவ்வாறே கேட்கலாம். அப்படிப் பட்டதில் தேர்தலுக்காக நியமனம் செய்யப்பட்டு. வாக்கெடுப்புக்கு முன் விலகிக் கொண்டிராத மற்றெல்லா வேட்பாளர்களையும் அவர் தமது மனுவுக்கு எதிர்வாதிகளாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

4. (i) மனுவைக் கொடுத்துக் கொள்ளும் காலத்தில், மனுதாரர் அதற்குப் பிடிக்கும் செலவுக்கு, ஈடாக ரொக்கமாய் இருபத்தைந்து ரூபாய் தேர்தல் நிதி மன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும்.

(2). (1) உள்விதியின் நிபந்தனைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தேர்தல் நீதிமன்றத்தார் அம் மனுவைத் தள்ளிவிட வேண்டும்.

(3). (1) உள்விதியின் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் தேர்தல் நீதி மன்றத்தார் அம் மனுவைப் பற்றி விசாரிக்கத் தொடங்க வேண்டும்.

5. தேர்தல் நீதிமன்றத்தார், கூடிய விரைவில், மனுவின்படி ஒன்றை எதிர் வாதி ஒவ்வொருவருக்கும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாள ருக்கும் தேர்தல் அதிகாரிக்கும் சேர்ப்பிக்க வேண்டும். தேர்தல் நீதிமன்றம், ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகம் ஆகியவற்றின் அறிவிப்பு பலகையிலும் படிகளை ஒட்டி வைக்க வேண்டும். மேற்கொண்டுள்ளவை எவையேனும் செலவு களைக் கொடுப்பதற்காக, தேர்தல் நீதிமன்றத்தார் கேட்கக் கூடிய தொகைக்கு அவர்கள் கேட்கக் கூடிய பிணைகளுடன் ஒரு பத்திரம் எழுதிக் கொடுக்கும் படியும் அவர்கள் மனுதாரரைக் கேட்கலாம். அவ்வாறு வெளியிட்டதற்குப் பிறகு பதினன்கு நாட்களுக்குள் எப்போதேனும், வேறு எந்த வேட்பாளராகி லும், தேர்தல் நீதிமன்றத்தார் கேட்கக் கூடிய ஈட்டினை அதே மாதிரி செலுத்து வதன் பேரில், எதிர்வாதியாகச் சேர்த்துக் கொள்ளப்பெற உரிமை உள்ளவ ராவர்.

6. (1) 1908 ஆம் ஆண்டின் சிவில் வழக்கு நடைமுறைச் சட்டத்தின்படி வழக்குகள் விசாரிப்பதற்குப் பொருந்தக்கூடிய நடைமுறையைக் கூடியவரை யில் பின்பற்றி, தேர்தல் நீதிமன்றத்தார் தேர்தல் மனு ஒவ்வொன்றையும் விசாரிக்க வேண்டும்.

ஆனல், தேர்தல் நீதிமன்றத்தார் தாங்கள் விசாரணை செய்ய சாட்சி கூறும் சாட்சியத்தின் சுருக்கத்தைப் பற்றிய குறிப்பு ஒன்றை எழுதினல் போதுமானது.

(2) சிவில் வழக்கு ஒன்றை விசாரிக்கும்போது 1908 ஆம் ஆண்டின் சிவில் வழக்கு நடைமுறை விதிச் சட்டத்தின்படி ஒரு நீதிமன்றத்தாருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், பின்வருவனவற்றைப் பொருத்தவரை தேர்தல் நீதிமன்றத்தாருக்கு உண்டு.

(அ) கண்டுபிடிப்பும் ஆய்வும்;

(ஆ) சாட்சிகள் வரவேண்டுமெனக் கட்டாயப்படுத்துவதும் அவர்கள் செலவைக் கட்ட வேண்டுமெனக் கேட்பதும்;

(இ) ஆவணங்களைக் கொண்டு வந்து காட்டும்படி கட்டாயப் படுத்துவது;

(ஈ) ஆணையுறுதியின் (பிரமாணத்தின்) பேரில் சாட்சிகளை ஆய்வு செய்வது;

(உ) உறுதிமொழிப் பத்திர மூலமாக வாங்கிய சாட்சியத்தை ஏற்றுக் கொள்வது;

(ஊ) சாட்சிகளை ஆய்வதற்காக ஆணை பிறப்பித்தல்; மேலும் யாருடைய சாட்சியம் முக்கியமானதென்று தங்களுக்குத் தோன்றுகிறதோ அவரைத் தாங்களாகவே வரவழைத்து ஆய்வு செய்யலாம்.

7. (1) தேர்தல் நீதிமன்றத்தாரின் அனுமதியின்றி, தேர்தல் மனு எதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

(2) ஒருவருக்கு மேற்பட்ட மனுதாரர்கள் இருந்தால், எல்லா மனுதாரர்களின் இசைவையும் பெற்றுக் கொண்டன்றி மற்றப்படி, ஒரு மனுவைத் திரும்பப் பெறுவதற்கான விண்ணப்பம் எதையும் செய்துகொள்ளக் கூடாது.

(3) திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம் செய்து கொள்ளப் பட்டால், அவ் விண்ணப்பத்தை விசாரிப்பதற்கான தேதி ஒன்றை, நிச்சயித்து அதைப்பற்றிய அறிக்கை ஒன்றை, மனுவுக்குச் சம்பந்தப்பட்ட மற்றெல்லாருக்கும் கொடுக்க வேண்டும். 5 ஆவது விதியில் குறிப்பிட்டிருக்கிற விதமாக அதை வெளியிட வேண்டும்.

(4) திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம் ஏதோ பேரம் பேசி அல்லது ஆசை காட்டித் தூண்டப்பட்டிருக்கிறதென்று நீதிமன்றத்தார் கருதி, அதற்கு இடங் கொடுக்கக் கூடாதென அவர்கள் கருதினுல் அவ்விண்ணப்பத்துக்கு அனுமதி வழங்கக்கூடாது.

(5) விண்ணப்பத்துக்கு இசைவு வழங்கப்பட்டால் .....

(அ) எதிர்வாதிக்கு அதற்கு முன் பிடித்த செலவுகளை அல்லது அதில், தேர்தல் நீதிமன்றத்தார் தகுதியெனக் கருதக் கூடிய பாகத்தைச் செலுத்தும்படி மனுதாரருக்கு ஆணையிட வேண்டும்;

(ஆ) அவ்வாறு திரும்பப் பெற்றுக் கொண்டிருப்பதைப் பற்றி, தேர்தல் நீதிமன்றத்தார், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கும் தேர்தல் அதிகாரிக்கும் தெரிவிக்க வேண்டும்.

8. (1) விசாரணைச் செலவுகள் சம்பந்தமாக தேர்தல் நீதிமன்றத்தார் பிறப்பித்த ஓர் ஆணையை—

(i) செலவுகளைக் கொடுக்கும்படி அந்த ஆணையினால் கட்டளையிடப் பெற்றவருக்கு, சென்னை நகரம் அல்லது நீலகிரி மாவட்டமல்லாத வேறு எங்கேனும் இருப்பிடம் அல்லது தொழிலிடம் இருந்தால், விசாரணை அதிகார முள்ள முன்சிப் முன்பும்,

(ii) நீலகிரி மாவட்டத்தில் அவருக்கு இருப்பிடம் அல்லது தொழிலிடம் இருந்தால், உதகமண்டலத்திலுள்ள சார்நிலை நிலை நீதிபதியின் நீதிமன்றத்துக்கு முன்பும்,

(iii) சென்னை நகரத்தில் அவருக்கு இருப்பிடம் அல்லது தொழிலிடம் இருந்தால், சென்னையிலுள்ள சிறு வழக்கு நீதிமன்றத்துக்கு முன்பும், கொண்டு வந்து காட்டலாம்.

(2) அந்த நீதிமன்றத்தார், அந்த ஆணை, ஒரு சிவில் வழக்கிலே பணம் செலுத்தும்படி தாங்களே பிறப்பித்த தீர்ப்பாணையாக (டிக்கிரியாக) இருந்தால் எப்படியோ அதே விதமாகவும் அதே நடைமுறையை அனுசரித்தும் அந்த ஆணையை நிறைவேற்ற வேண்டும் அல்லது நிறைவேற்றுவிக்க வேண்டும்.

9. ஒரே மனுதாரர் அல்லது பல மனுதாரர்களில் எஞ்சியிருந்தவர் இறந்து போவதன் பேரில், தேர்தல் மனு தீர்ந்துபோகும்; தேர்தல் நீதிமன்றத்தார், அவ்வாறு தீர்ந்து போதலை, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கும் தேர்தல் அதிகாரிக்கும் தெரிவிக்க வேண்டும்.

10. ஒரு தேர்தல் மனுவைப் பற்றி நடத்தப்படுகிற விசாரணையின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரல்லாத வேறொரு வேட்பாளர் அந்த இடம் தமக்குரியதென்று கேட்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளராவது நடவடிக்கைகளுக்குச் சம்பந்தப்பட்ட வேறொருவராவது, அந்த வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளராயிருந்து அவர் தேர்தலைப் பற்றிக் குறை கூறி ஒரு மனு கொடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால் அவர் தேர்தல் செல்லாததாகி விட்டிருக்குமென்பதை மெய்ப்பிக்கச் சான்று கொடுக்கலாம்.

11. தேர்தல் நீதிமன்றத்தார் பின்வருமாறு கருதினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வேட்பாளரின் தேர்தல் செல்லாததாகிவிடும்; அதாவது:—

(அ) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வேட்பாளராவது அவருடைய முகவராவது அந்த வேட்பாளரின் அல்லது முகவரின் மறைமுக ஆதரவுடன் வேறொருவராவது இந்தியக் குற்றத் தண்டனை விதிச் சட்டத்தின் IX அ அத்தியாயத்தின் கீழ்வரும் அல்லது தேர்தல் இரகசியத்தை மீறுவதற்குச் சம்பந்தப்பட்ட ஏதேனும் சட்டம் அல்லது விதியின் கீழ் வரும் ஒரு தேர்தல் குற்றத்தைச் செய்திருக்கிறாரென அல்லது அவ்வாறு செய்வதற்கு உடந்தையாயிருக்கிறாரென அபிப்பிராயப்படுவது; அல்லது

(ஆ) அடியிற்கண்ட ஊழல் நடவடிக்கைகளில் ஒன்றினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வேட்பாளரின் தேர்தல் பெறப்பட்டிருக்கிறது அல்லது தூண்டப்பட்டிருக்கிறது, அல்லது தேர்தல் முடிவு முக்கியமாக பாதிக்கப்பட்டிருக்கிறதென அபிப்பிராயப்படுவது; அந்த ஊழல் நடவடிக்கைகளாவன:—

(i) இந்தியக் குற்றத் தண்டனை விதிச் சட்டத்தின் IX அ அத்தியாயத்தின் கீழ் வரும் அல்லது தேர்தல் இரகசியத்தை மீறுவதற்குச் சம்பந்தப்பட்ட ஏதேனும் சட்டம் அல்லது விதியின் கீழ் வரும் ஒரு தேர்தல் குற்றம், ஒரு வேட்பாளராகவோ அவருடைய முகவராகவோ ஒரு வேட்பாளரின் அல்லது அவருடைய முகவரின் மறைமுக ஆதரவுடன் செயலாற்றுகிற ஒருவராகவோ இராத ஒருவரால் செய்யப்படுதல்;

(ii) வாக்காளர் ஒருவர் தமது வாக்கைப் பதிவு செய்வதற்காக ஓரிடத்துக்கு அல்லது ஓரிடத்திலிருந்து அவரை இட்டுச் செல்லும் பொருட்டு எவருக்கேனும் பணம் கொடுப்பது அல்லது பணம் கொடுப்பதாக வாக்குறுதி அளிப்பது;

(iii) வாடகைக்கு விடுவதற்காக அல்லது வாடகை பெற்றுக்கொண்டு பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக வழக்கமாய் வைத்திருக்கப்படும் ஒரு படகு வண்டி அல்லது விலங்கினை தேர்தல் காரியங்களுக்காக வாடகைக்கு எடுத்துக் கொள்வது, அமர்த்திக் கொள்வது கடன் வாங்குவது அல்லது பயன்படுத்துவது :

ஆனால், வாக்காளர் ஒருவர் வாக்குப் பதிவு செய்யப்படும் இடத்துக்கு அல்லது அவ்விடத்திலிருந்து தாமே ஏறிச் செல்வதற்காக ஒரு படகு, வண்டி அல்லது விலங்கை வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம் அல்லது தமது சொந்த உடைமையான படகு, வண்டி அல்லது விலங்கைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; அல்லது

(இ) நியமனத்தாள் சம்பந்தமான முறைகேட்டினுல் அல்லது நியமனத்தாளை அல்லது வாக்கைத் தகாதபடி பெற்றுக் கொண்டதனுல் அல்லது மறுத்ததனுல் அல்லது மேற்படி சட்டத்தில் கண்ட நிபந்தனைகளை அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளை அனுசரிக்காததனுல் தேர்தல் முடிவு முக்கியமாக பாதிக்கப்பட்டிருக்கிறதென அபிப்பிராயப்படுவது :

ஆனுல், இந்த விதியின் (ஆ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஊழல் நடவடிக்கை நடந்திருந்து, அது, இதில் பின்னுல் விளக்கப்பட்டிருக்கிற விருந்தளித்தல் அல்லாத வேறுவித லஞ்சம் ஆகாதெனத் தேர்தல் நீதிமன்றத்தார் கருதி, அதுவன்றியும்—

(அ) வேட்பாளர் அத் தேர்தலில் ஊழல் நடவடிக்கை எதையும் நடத்தவில்லையென்றும், அந்த வேட்பாளரின் ஆணைகளுக்கு மாறுகவும், அவருடைய ஒப்பளிப்பு அல்லது மறைமுக ஆதரவு இல்லாமலும் ஊழல் நடவடிக்கை நடந்திருக்கிறதென்றும்,

(ஆ) அத் தேர்தலில் ஊழல் நடவடிக்கைகள் நடப்பதைத் தடுப்பதற்கு நியாயமான எல்லா ஏற்பாடுகளையும் அவ் வேட்பாளர் செய்தாரென்றும்,

(இ) நடந்த ஊழல் நடவடிக்கைகள் அற்பமானவையென்றும் முக்கியமற்றவையென்றும் வரையறுக்கப்பட்ட தன்மை வாய்ந்தவையென்றும்,

(ஈ) மற்றெல்லாக் கூறுகளிலும் அத் தேர்தலில் அவ் வேட்பாளரோ அவர் பிரதிநிதிகளில் ஒருவரோ ஊழல் நடவடிக்கை நடத்தவில்லையென்றும் அவ் வேட்பாளர் தேர்தல் நீதிமன்றத்தாருக்கு ஐயமற மெய்ப்பித்திருக்கிருரென்று தேர்தல் நீதிமன்றத்தார் கருதினுல், அப்போது அவ்வேட்பாளரின் தேர்தல் செல்லாதது ஆகாதெனத் தேர்தல் நீதிமன்றத்தார் முடிவு செய்யலாம்.

விளக்கம்.—இவ்விதியின் காரியத்துக்காக, 'விருந்தளித்தல்' என்பது வாக்களிக்கும்படி அல்லது வாக்களிக்காமலிருக்கும்படி ஒருவரை அல்லது வேருெருவரை நேரடியாக அல்லது மறைமுகமாகத் தூண்டும் நோக்கத்துடன், அல்லது வாக்களித்ததற்கு அல்லது வாக்களிக்காமலிருந்ததற்குப் பரிசாக அவருக்கு உணவு, பானம், கேளிக்கை அல்லது ஆகாரப் பொருள் கொடுப்பதற்கு அல்லது அதற்காக ஏற்பாடு செய்வதற்குப் பிடிக்கும் செலவை ஒருவர் முழுவதுமோ சிறிது மட்டிலுமோ ஏற்றுக் கொள்வது எனப் பொருள்படும்.

12. (1) விசாரணையின் முடிவில், தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் தேர்தல் 11 ஆவது விதியின்படி செல்லாதது என்று தேர்தல் நீதிமன்றத்தார் அறிவிக்க வேண்டும்.

(2) தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் தேர்தல் செல்லாததென்று தேர்தல் நீதிமன்றத்தார் அறிவித்தால், அவர்கள்—

(அ) மனுவின் ஒரு தரப்பாரும், இவ்விதிகளின்படி அந்த இடம் தமக்குரியதென்று சொல்பவருமான வேறொருவர் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதாக அறிவித்து, அல்லது

(ஆ) புதிதாகத் தேர்தல் நடக்க வேண்டுமென உத்தரவிட்டு மேற் கொண்டு ஆணை பிறப்பிக்க வேண்டும்.

(3). (1), (2) உள் விதிகளின்படி தேர்தல் நீதிமன்றத்தார் பிறப்பிக்கும் ஆணை முடிவானதாகும்.

(4). (1) உள்விதியின்படிக்கான அல்லது (2) உள்விதியின்படிக்கான ஆணை ஒவ்வொன்றுக்கும் ஒரு படியை, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கும் தேர்தல் அதிகாரிக்கும் அனுப்ப வேண்டும்.

13. 12 ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியின்படி ஒரு தேர்தல் செல்லாதென அறிவிக்கப்பட்டு, அந்த விதியின் (2) உள்விதியைச் சேர்ந்த (ஆ) பகுதியின்படி புதிதாகத் தேர்தல் நடத்த வேண்டுமென உத்தரவிடப் பட்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் இடம் தேர்தல் நீதிமன்றத் தாரின் ஆணையின் தேதியிலிருந்து காலியாயிருப்பதாகக் கருதப்படும்; சம்பந்தப்பட்ட அதிகாரியானவர் அவ்வாறு புதிதாகத் தேர்தல் நடத்து வதற்கு அவசியமான ஏற்பாடுகளை உடனே மேற்கொள்ள வேண்டும்.

14. (1) முந்திய விதிகளில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதக மில்லாமலே, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பலர் உரிமை கொண்டாடி அவர்களில் யாருடைய தேர்தலும் 2 ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியில் குறிப்பிட்டுள்ள காலத்துக்குள் தேர்தல் நீதிமன்றத்தாரிடம் கொடுத்துக் கொள்ளப்படும் தேர்தல் மனு மூலமாக ஆட்சேபிக்கப்பட்டிராவிட்டால் அல்லது அத்தகைய தேர்தல் மனு அல்லது தேர்தல் மனுக்கள் கொடுத்துக் கொள்ளப்பட்டிருந்து ஆனால் பின்னர் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந் தால், தேர்தல் அதிகாரியானவர், தாம் அவசியமெனக் கருதும் விசாரணை செய்த பிறகு,

(அ) உரிமை கொண்டாடுபவர்களில் ஒருவர் சந்தர்ப்பத்துக்கேற்ப ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவராக அல்லது துணைத் தலைவராக முறைப் படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கலாம்; அல்லது

(ஆ) உரிமை கொண்டாடுபவர்களில் எவரும் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்படவில்லையென அவருக்குத் தெரியவந்தால், புதிதாகத் தேர்தல் நடத்தும்படி ஆணையிடலாம்.

(2) (1) உள்விதியைச் சேர்ந்த (ஆ) பகுதியின்படிப் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணை முடிவானதாகும்.

(3) (1) ஒரு வேட்பாளராவது வாக்காளராவது (1) உள்விதியைச் சேர்ந்த (அ) பகுதியின்படிப் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையை எதிர்த்து, அந்த ஆணையின் தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள், 1 ஆவது விதியைச் சேர்ந்த (2) உள்விதியில் பொருள் சொல்லப்பட்டபடியுள்ள நீதி மன்றத்தாருக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

(4) அந்த மேல்முறையீடு இந்த விதிகளின்படி கொடுத்துக் கொள்ளப் பட்ட தேர்தல் மனுவாயிருந்தால் எப்படியோ அப்படியே அதற்கு இவ்விதியின் நிபந்தனைகள் கூடுமான வரையில் பொருந்தும்.

(5) (1) உள் விதியைச் சேர்ந்த (அ) பகுதியின்படிப் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணை, (3) உள்விதியின்படி செய்து கொள்ளப்படும் ஏதேனும் மேல்முறையீட்டின் முடிவுக்குட்பட்டு, முடிவானதாகும்.

15. முந்திய விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவராக அல்லது துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பலர் உரிமை கொண்டாடி, அவர்களில் ஒருவர் அல்லது பலருடைய தேர்தல் இவ்விதியின்படி கொடுத்துக் கொள்ளப்பட்ட தேர்தல் மனு மூலமாக ஆட்சேபிக்கப்பட்டிருந்தால், தேர்தல் அதிகாரியானவர், தாம் அவசியமெனக் கருதும் விசாரணை செய்தபிறகு, தேர்தல் மனுவின் மீது தேர்தல் நீதிமன்றத்தார் ஆணைகள் பிறப்பிக்கிற வரையில், உரிமை கொண்டாடுபவர்களில் ஒருவர், சந்தர்ப்பத்துக்கேற்ப ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவருடைய அல்லது துணைத் தலைவருடைய அலுவல்களைச் செய்ய வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(1960 அக்டோபர் 8-ம் தேதியுள்ள 1677-ம் எண், உள்ளாட்சித் துறை பல்வகை அரசாணை.)

(1963 எப்ரல் 3-ம் தேதியுள்ள 754-ம் எண், கிராமமுன்னேற்றம் உள்ளாட்சித் துறை பல்வகை அரசாணை.)

(1962 நவம்பர் 12-ம் தேதியுள்ள 12513, தனி 62-10-ம் எண் குறிப்பாணை.)

12. தேர்தல் இரகசியத்தை வெளிப்படுத்துவது.—(1) வாக்கெடுப்பு அறை யருகே வேலே பார்க்கும் வாக்கெடுப்பு அலுவலராவது எழுத்தராவது வேறொருவராவது, சட்டத்தினுல் அனுமதிக்கப்பட்ட ஒரு காரியத்துக்காகவன்றி மற்றப்படி, ஒரு வாக்காளர் இன்ன வேட்பாளருக்கு வாக்களித்தாரென்பதை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ காட்டும் செய்தியை எவருக்கும் தெரிவிக்கக் கூடாது.

2. 1 ஆவது விதியை மீறினுல், நூறு ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படத்தக்கதாகும்.

(1960 அக்டோபர் 8-ம் தேதியுள்ள 1677-ம் எண் உள்ளாட்சித்துறை பலவகை அரசாணை.)

13. அமலில் இருக்கிற சில ஒப்பந்தங்களேயுடைய ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களுடைய தகவின்மையை நீக்குவது.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்—

(i) அசையாப் பொருளின் குத்தகையில், விற்பனையில் அல்லது கொள் முதலில் அல்லது அதற்கான ஓர் உடன்படிக்கையில் அல்லது

(ii) பணம் கடன் வாங்குவதற்கான ஓர் உடன்படிக்கையில் அல்லது பணம் மட்டும் கொடுப்பதற்கான ஓர் ஈட்டில், அல்லது

(iii) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் விவகாரங்கள் தொடர்பான விளம்பரம் வெளியிடப்பட்டுள்ள ஒரு செய்தித் தாளில், அல்லது

(iv) ஒவ்வொரு விஷயத்திலும், பின்வரும் ஒப்பந்தத்தின் அல்லது பணியின் காலத்திலே எந்த ஆண்டிலேனும் மொத்தத்தில் ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்கு மேற்படாத மதிப்புக்கு தாம் முறையாக வியாபாரம் செய்கிற பொருள்களே ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு விற்பதில் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திடமிருந்து பொருள்களே வாங்குவதில் பங்கு அல்லது பற்று உடையவராயிருக்கிறுர் என்னும் காரணத்தினுல், ஊராட்சி ஒன்றிய மன்றத் துடன் செய்துகொண்டு அமலில் இருக்கிற ஒப்பந்தத்திலே அல்லது அக் குழு வுக்காகச் செய்யப்படும் பணியிலே ஏதேனும் பாத்தியதை அடைகிறுர் என்னும் ஏதுவின் பேரில் அந்த முறைமையில் பதவி வகிக்காமற்போய்விடமாட்டார்.

(1960 அக்டோபர் 8-ம் தேதியுள்ள 1677-ம் எண் உள்ளாட்சித் துறை பல்வகை அரசாணை.)

(1963 ஏப்ரல் 3-ம் தேதியுள்ள 754-ம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை பல்வகை அரசாணை.)

(   ) சேர்த்துக் கொள்ளப்பட்ட பெண் உறுப்பினர்களும் அட்டவணையில் கண்ட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் தொடர்ச்சியான மூன்று மாதங்கள் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கூட்டங்களுக்கு அல்லது அக் காலத்தில் மூன்றுக்குக் குறைவான கூட்டங்கள் நடந்திருந்தால் தொடர்ச்சி யாக மூன்று கூட்டங்களுக்கு வராமற்போனால், அவர்கள், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 26 (ஒ) பிரிவின்படித் தகவின்மை அடைவார்கள்.

சேர்த்துக் கொள்ளப்பட்ட பெண் உறுப்பினர்களும் அட்டவணையில் கண்ட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் களாகத் தங்கள் பதவியினின்று விலகலாம்.

(1963 மார்ச் 8-ம் தேதியுள்ள 34658-ெ L தனி 63-2-ஆம் எண் குறிப்பாணை.)

14. உறுப்பினர்களின் தகவின்மை பற்றிய ஐயப்பாடுகளைத் தீர்ப்பதற்குரிய நீதிமுறை அதிகாரி.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 28 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உள்பிரிவின்படிக்கான விண்ணப்பங் களை யாருக்குச் செய்து கொள்ளலாமோ அந்த நீதிமுறை அதிகாரி, நீலகிரி அல்லாத மற்ற மாவட்டங்களைப் பொருத்தவரை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகம் இருக்கிற இடம் விஷயமாய் நாட்டுப் பகுதி அதிகார வரம்புள்ள முன்சீப் ஆவார் அல்லது அத்தகைய முன்சீப்புகள் பலர் இருந்தால் தலைமை முன்சீப் ஆவார். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை உதகமண்டலத்திலுள்ள துணை நிலை நீதிபதியாவார்.

ஆனால், நீலகிரி அல்லாத மற்ற மாவட்டங்களைப் பார்த்தவரை அத்தகைய ஒரு விண்ணப்பத்தை அம் மாவட்டத்திலிருக்கிற வேறு எந்த முன்சீப்புக் கேனும் மாற்ற மாவட்ட நீதிபதிக்கு அதிகாரமுண்டு.

(1960 அக்டோபர் 8-ம் தேதியுள்ள 1677-ம் எண் உள்ளாட்சித் துறை பல் வகை அரசாணை.)

15. தங்கள் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுக்கு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் விடுமுறைகள் வழங்குவது.—அரசாங்க அலுவலகங்கள், நிறுவனங் கள் சம்பந்தமாய் அவ்வப்போது அரசாங்கத்தாரால் ஒப்பளிக்கப்படக்கூடிய பொது விடுமுறைகளையும் தனி உள்ளூர் விடுமுறைகளையும் மட்டுமே எடுத்துக் கொள்ள, ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட அலுவலகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் அனுமதி கொடுக்கப்படும்.

ஆனல். ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட கல்வி நிலையங்களுக்கு விடுமுறைகள் வழங்குவது, தமிழ்நாடு கல்வி விதிகளின்படி முறைப்படுத்தப்படும்.

மேலும், ஊராட்சி ஒன்றிய மன்றம் தனது கட்டுப்பாட்டுக்குட்பட்ட அலுவலகங்களுக்கும் நிறுவனங்களுக்கும், அரசாங்க அலுவலகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஒப்பளிக்கப்பட்டவையல்லாத மற்ற விடுமுறைகளை, மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், வழங்கக் கூடாது.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1961 நவம்பர் 28-ஆம் தேதியுள்ள 3162 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

16. ஏதேனும் தகவல் முதலியவை கேட்டனுப்ப ஆணையாளருக்குள்ள அதிகாரம்.—(1) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளின்படி வரி விதிப்பது அல்லது ஆய்வு செய்வது அல்லது ஏதேனும் உரிமம் அல்லது அனுமதி வழங்குவதற்குத் தொடர்பான எதைப் பற்றியேனும் தம் முன் வந்து சேர்ந்து சந்தர்ப்பத்துக்கேற்ப சான்று தரும்படி அல்லது ஆவணங்களைக் காட்டும்படி, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் எவருக்கேனும் அழைப்புக் கட்டளை அனுப்பி வரவழைக்கலாம்.

(2). 1 ஆவது விதியின்படி ஆணையாளர் பிறப்பிக்கிற அழைப்புக் கட்டளைக்கிணங்க எவரேனும் வரத் தவறினல் அவருக்குப் பத்து ரூபாய் வரையில் அபராத தண்டனை விதிக்கத்தக்கதாகும்.

(1962 பெப்ரவரி 1- ஆம் தேதிய 260 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

17. நடவடிக்கைக் குறிப்புகள் அல்லது பதிவுகளுக்குப் படிகள் வழங்குவது.—(1) ஓர் ஊராட்சி ஒன்றியக் குழுவின் நடவடிக்கை குறிப்புகளுக்கு அல்லது பதிவுகளுக்குப் படிகள் அல்லது அவைகளினின்றும் எடு குறிப்புகள் வேண்டுமெனக் கேட்கும் ஒருவர், ஆணையாளருக்கு ஒரு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். (அதில் தமது முழுப் பெயரையும் முகவரியையும், நடவடிக்கைக் குறிப்புகளுக்கு அல்லது பதிவுகளுக்குக் கூடிய வரையில் சரியான விவரத்தையும் கொடுக்கவேண்டும்.) எந்த நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து அல்லது பதிவுகளிலிருந்து படிகள் அல்லது எடு குறிப்புகள்

கேட்கப்படுகின்றனவோ அவைகள், நடப்புக் காலெண்டர் (ஆங்கில) ஆண்டுக்கு முந்திய ஓர் ஆண்டைச் சேர்ந்தவைகளாயிருந்தால், அடியிற் கண்ட வீதப்படி தேடு கட்டணத்தை, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப் பட்டானவுடனே ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குச் செலுத்த வேண்டும்.

(அ) ஒரேவொரு ஆவணம் அல்லது பதிவுக்காக ஏதேனும் ஓர் ஆண்டின் பதிவுகளைத் தேடுவதற்காக—ஐம்பது காசு;

(ஆ) மேற்கொண்டு ஒவ்வோர் ஆண்டின் பதிவுகளைத் தேடுவதற்காக இருபத்தைந்து காசு.

குறிப்பு :—(1) "ஒருவர்" என்னும் சொல்லில், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர், துணைத் தலைவர் அல்லது தலைவர் என்பதும் அடங்கும்.

(2) படி அல்லது எடுகுறிப்பு தேவைப்படுகிற நடவடிக்கைக் குறிப்பு அல்லது பதிவு ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் தனியாக விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டியதில்லை.

(3) கடிதங்கள், கணக்குகள் அல்லது வேறு ஆவணங்களின் உள்ளடக்கங்கள் அல்லது இணைப்புகள் அவைகள் சேர்ந்துள்ள ஆவணங்களின் பாகமாகும்; தேடும் காரியங்களுக்காகத் தனி ஆவணங்களென்று அவைகளை கணக்கிடக் கூடாது.

2. பதிவு கிடைக்காவிட்டால், செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது; ஆனால், கேட்கப்படும் ஆவணம் கிடைக்கவில்லையெனக் கண்டுள்ள ஒரு சான்று விண்ணப்பதாரருக்குக் கொடுக்கப்படும்.

3. (1) பதிவு கிடைத்து, அதற்குப் படிகளை அல்லது எடு குறிப்புகளை வழங்க ஆணையாளர் தீர்மானித்தால், விண்ணப்பதாரர் 175 சொற்களுக்கு அல்லது அவற்றின் பாகத்துக்கு பத்தொன்பது காசு வீதம் கட்டணத்தை ரொக்கமாகச் செலுத்த வேண்டும்.

(2) பதிவேடுகளிலிருந்து எடுக்கப்படும் விவரப் பட்டியல்கள் அல்லது குறிப்புகளுக்கு இலக்கங்களைப் படி செய்ய வேண்டியிருந்தால், ஐந்து இலக்கங்கள் ஒரு சொல்லுக்குச் சமம் எனக் கொள்ளப்படும்.

(3) நாட்டுப் படங்களின் அமைப்புப் படங்களுக்கு ஆணையாளர் ஊராட்சி ஒன்றியப் பணிகளின் பொறுப்பு வகிக்கிற பொதுப் பணியாளர்களுடன் கலந்தாலோசித்து நியாயமான ஒரு கட்டணத்தை நிச்சயிக்க வேண்டும்.

4. நடவடிக்கைக் குறிப்புகளின் அல்லது பதிவின் படிக்காக அல்லது எடு குறிப்புக்காக விதிக்கப்படத்தக்க கட்டணங்களை ஆணையாளர் விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்க வேண்டும். கட்டணத்தைப் பெற்றுக் கொண்டதும் அவர் படிகளை, எடுகுறிப்புக்களை அல்லது வரைபடங்களைத் தயாரிக்கச் செய்ய வேண்டும். பின்னர் அந்தப் படிகள் அல்லது எடுகுறிப்புக்கள் அவருடைய அலுவலகத்தில் கூராய்வு செய்யப்பட்ட பிறகு, அவர் அவற்றைச் சரியானவையெனச் சான்றிட்டு, அவற்றைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பதாரர் நேரில் வந்தால், அவருக்குக் கொடுக்க வேண்டும்; அல்லது விண்ணப்பதாரர் இதன் பொருட்டு வேண்டிய அஞ்சல் வில்லைகளை அனுப்பியிருந்தால், அவற்றை அஞ்சல் மூலமாக அனுப்பிவிட வேண்டும்.

5. தேடு கட்டணங்களை அல்லது படி எடுப்பதற்கான கட்டணங்களைச் செலுத்துகிற ஒவ்வொருவருக்கும், ஆணையாளராவது இதன்பொருட்டு அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஒருவராவது கையெழுத்துச் செய்திருக்கிற பற்றுச் சீட்டு ஒன்றைக் கொடுக்க வேண்டும்.

6. நடவடிக்கைக் குறிப்பின் அல்லது பதிவின் படியையாவது எடுகுறிப்புக்களையாவது வழங்குவது மறுக்கத்தக்கதென ஆணையாளர் கருதினால், மேற்குறிப்பு எழுதி அவர் அவ்விண்ணப்பத்தைத் தள்ளிவிட வேண்டும்; அவ்வாறு தள்ளிவிடுவதற்கான காரணங்களைச் சுருக்கமாக அந்த மேற்குறிப்பில் எழுத வேண்டும்.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

(1963 ஏப்ரல் 3-ம் தேதியுள்ள 754-ம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

18. விளம்பரம் அல்லது அறிவிக்கையை வெளியிடும் விதம்.—1. அரசினராவது ஆய்வாளராவது மேற்படி சட்டத்தின்படி பிறப்பிக்கும் அறிவிக்கை ஒவ்வொன்றையும் மாநில அரசிதழில் வெளியிட வேண்டும்.

விளக்கம்.—இவ்விதிகளின் காரியங்களுக்காக, 'மேற்படி சட்டம்' என்னும் சொற்றொடர், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் எனப் பொருள்படும்.

2. மேற்படி சட்டத்திலாவது அதன்படி செய்யப்பட்ட விதிகளிலாவது வேறுவிதமாக வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி,

மேற்படி சட்டத்தின்படி அரசினரால் அல்லது ஆய்வாளரால் பிறப்பிக்கப்படும் விளம்பரம் அல்லாத வேறு ஒவ்வொரு அறிவிக்கையும் அவ்விளம்பரம் பொருந்துகிற மாவட்டத்தின் அரசிதழிலே ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப்பட வேண்டும்.

ஆனால், அத்தகைய அறிவிக்கையை

(i) மேற்படி அரசிதழில் ஆங்கிலத்திலாவது தமிழிலாவது வெளியிட வேண்டுமென, அல்லது

(ii) மேற்படி அரசிதழில் வெளியிடுவதற்குப் பதிலாகத் தாங்கள் குறிப்பிடும் வேறு எவ்விதமாகவேனும் வெளியிட வேண்டுமென, அல்லது

(iii) மேற்படி அரசிதழில் வெளியிடுவதோடு கூட, தாங்கள் குறிப்பிடக்கூடிய விதமாகவும் வெளியிட வேண்டுமெனக் கட்டளையிட அரசினருக்கு அதிகாரமுண்டு.

3. ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் எந்த இடத்தையேனும் எதற்காகவேனும் ஒதுக்கி வைக்கும்போதெல்லாம் அல்லது எவ்விடத்திலாகிலும் எதையேனும் செய்யக் கூடாதெனத் தடுக்கும்போதெல்லாம், ஆணையாளர் இன்ன காரியத்துக்காக அவ்விடம் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று அல்லது இன்ன செயலை அங்கே செய்யக் கூடாதென்று குறிப்பிட்டு அவ்விடத்தில் தமிழில் அறிவுப்பு ஒன்றை வைக்க வேண்டும்.

4. மேற்படி சட்டத்திலாவது அதன்படி செய்யப்பட்ட விதிகளிலாவது வேறு விதமாக வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, மேற்படி சட்டத்தின்படி பொதுமக்கள் அறிய வேண்டும் என உத்தேசிக்கப்பட்ட அறிவிப்பு ஒவ்வொன்றையும்—

(அ) அதன்படி ஒன்றைத் தெளிவாகத் தெரிகிறபடி கீழ்க்கண்ட இடங்களில் ஒட்டுவது மூலமாகவும்;

(i) ஊராட்சி ஒன்றிய மன்றம் அலுவலகத்திலும் சம்பந்தப்பட்ட ஊராட்சி அலுவலகத்திலும்,

(ii) கிராமம் அல்லது பட்டணத்தில் சாவடி அல்லது சாவடி இருந்தால் அங்கேயும் (தெளிவாகத் தெரிகிற ஓரிடத்தில் அதன் படி ஒன்றை ஒட்டுவது மூலமாகவும்),

(ஆ) கிராமம் அல்லது பட்டணத்தில் தண்டோரா மூலமாகவும் வெளியிடவேண்டும்.

(1360 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677-ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1962 ஜுலை 6-ஆம் தேதியுள்ள 1517-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1963 ஏப்ரல் 3-ஆம் தேதியுள்ள 754 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

19. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் ஆணையாளர், அலுவலர்கள் ஆகியோருடைய கையொப்ப அச்சுக்களின் பயனீடு.—1. எந்த உரிமம், அனுமதிச் சீட்டு, அறிவிப்பு, பட்டியல், அட்டவணை, அழைப்புக் கட்டளை அல்லது வேறு ஆவணத்தில் ஆணையாளரின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலர் ஒருவரின் கையெழுத்து இருக்க வேண்டுமென, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் அல்லது அதன்படி செய்யப்பட்ட ஒரு விதியில், துணைச் சட்டத்தில் அல்லது ஒழுங்குமுறை விதியில் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த உரிமம், அனுமதிச் சீட்டு, அறிவிப்பு பட்டியல், அட்டவணை, அழைப்புக் கட்டளை அல்லது வேறு ஆவணம் ஒவ்வொன்றிலும் சந்தர்ப்பத்துக்கேற்ப ஆணையாளரின் அல்லது அலுவரின் கையொப்ப அச்சு போடப்பட்டிருந்தால், அது முறைப்படி கையெழுத்து செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

2. ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து பணம் பெறுவதற்காக எழுதப்பட்ட ஒரு காசோலைக்காவது ஊராட்சி ஒன்றிய மன்றம் செய்துகொண்ட ஓர் ஒப்பந்தப் பத்திரத்துக்காவது 1 ஆவது விதியில் உள்ளது எதுவும் பொருந்துவதாகக் கருதப்பட மாட்டாது.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

20. நுழைவதற்கு ஆய்வு செய்வதற்குமான அதிகாரங்கள் பற்றிய வரையறைகளும் கட்டுப்பாடும்.—1. 162 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கண்ட (அ) பகுதியின் காரியங்களுக்காக—

(அ) ஆணையாளராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள எவராவது சூரியன் மறைவதற்கும் சூரியன் தோன்றுவதற்கும் இடையில் நுழையக் கூடாது;

(ஆ) குடியிருப்பு வீட்டிலும், குடியிருப்பிடமாகப் பயன்படுத்தப்படும் பொதுக் கட்டிடத்தின் எப்பாகத்திலும், ஆணையாளராவது அவரிடமிருந்து

அதிகாரம் பெற்றுள்ள எவராவது, நுழைய போவதாக எண்ணியிருப்பதைக் குறித்துக் குறைந்தது ஆறு மணி நேர முன் அறிவிப்பை அதன் அனுபவதார் பெற்றிருந்தாலொழிய, அந்த அனுபவதாரின் உடன்பாடின்றி நுழையக் கூடாது.

(இ) [2 (ஆ) விதியின்படி அறிவிப்பின்றியே ஒரு மனையிடத்தில் மற்றப் படி நுழைவதாயிருந்தாலுங்கூட] ஒவ்வொரு நிகழ்விலும் பெண்கள் பயன் படுத்தும் அறையிலுள்ளவர்கள், அந்த மனையிடத்தில் தங்கள் தனிநிலை (அந்தரங்கம்) பாதுகாக்கப்படக்கூடிய ஒரு பாகத்துக்குப் போய்விடுவது இயலுமாறு ஆணையாளராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றவராவது போதுமான அறிவிப்பு கொடுக்க வேண்டும்;

(ஈ) ஆணையாளராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றவராவது நுழையும் காரியத்தின் நெருக்கடி நிலைகளுக்குப் பொருத்தமாயிருக்கக் கூடிய வரையில், மனையிடத்தில் இருப்பவர்களின் சமூக சமய வழக்கங்களை முறைப்படி கவனிக்க வேண்டும்.

2. 162 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கண்ட (ஆ) பகுதியின் காரியங்களுக்காக—

(அ) ஆணையாளராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள எவராவது ஒரு மனையிடத்தில் சூரியன் தோன்றுவதற்கும் சூரியன் மறைவ தற்கும் இடையில் நுழையலாம்; அன்றியும் சூரியன் மறைவதற்கும் சூரியன் தோன்றுவதற்கும் இடையில் அது, பொது மக்களுக்குத் திறந்திருந்தால் அல்லது அதில் ஏதேனும் தொழில் நடத்தப்பட்டு வந்தால் அப்போதுங்கூட அதில் நுழையலாம்.

(ஆ) மேற்படி சட்டத்தில் சொல்லியிருக்கிறபடி அல்லது மேற்படி சட்டப்படி உரிமம் அல்லது அனுமதிச் சீட்டு பெற வேண்டியிருந்து, அப்படிப் பெற்றுக் கொள்ளாமல் பின்வரும் காரியங்களில் எதற்காகவேனும் ஒரு மனை யிடம் பயன்படுத்தப்பட்டு வருகிறதென அல்லது அத்தகைய உரிமத்தின் அல்லது அனுமதிச் சீட்டின் நிபந்தனைகளுக்கு ஒத்துப் போகாமல் மற்றப்படி அந்த மனையிடத்தில் ஏதேனும் செய்யப்படுகிறதென நம்ப ஏதுவிருந்தால் ஆணை யாளராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள எவராவது ஏதேனும் சட்ட நிபந்தனை, விதிகள் துணைச் சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறை விதிகள், ஓர் உரிமத்தின் அல்லது அனுமதிச் சீட்டின் ஏதேனும் நிபந்தனை அல்லது நியாய மான கட்டளை அல்லது தடை மீறப்பட்டு வருகின்றனவா என்று தாம் ஐயமறத்

தெரிந்து கொள்ளும் பொருட்டு, இரவு அல்லது பகல் எந் நேரத்திலும் அறிவிப்பின் அந்த மனையிடத்திற்குள் நுழையலாம்.

(i) ஆடு, மாடு முதலியவற்றின் தோல்களைப் பதனிடுதல்;

(ii) வெடிமருந்து அல்லது வெடி வாணங்களைத் தயாரித்தல்;

(iii) கள்வடிப்பது, காய்ச்சி வடிப்பதன் மூலம் (இயல்பு நீக்கப்பட்ட அல்லது நீக்கப்படாத) வெறியம் அடங்கிய சாராயம் அல்லது வேறு மதுவகை தயாரிப்பது;

(vi) வெடிக்கத்தக்க அல்லது தீப்பற்றிக் கொள்ளத்தக்க பொருள்களைச் சேர்த்து வைப்பது.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677-ஆம் எண் உள்ளாட்சித் துறை பல்வகை அரசாணை.)

1962 நவம்பர் 12-ஆம் தேதியுள்ள 12513 தனி 6211-ஆம் எண் குறிப்பாணை.)

21. **தணிக்கையாளர்கள், ஆய்வு அலுவலர்கள், மேற்பார்வை அலுவலர்கள் முதலியோருடைய அதிகாரங்கள்.**—1. விசாரணைகள் நடத்த, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தினல் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளினல் அதிகாரம் பெற்றுள்ள எல்லாரும் மேற்படி சட்டப்படி நியமிக்கப்பட்டு, தங்கள் கடமைகளின் எல்லைக்குள் அடங்கிய விஷயங்களைக் குறித்து விசாரணைகள் நடத்துகிற தணிக்கையாளர்கள் ஆய்வு அலுவலர்கள்—மேற்பார்வை அலுவலர்கள் எல்லாரும் அத்தகைய விசாரணைகள் நடத்தும் காரியத்துக்காகப் பின்வரும் அதிகாரங்களை உடையவர்கள் ஆவார்கள் :—

(i) அந்த மாவட்டத்தில் வசிக்கிற எவருடைய சான்று விசாரணையிலிருக்கிற ஏதேனும் விஷயத்தை ஆய்வு செய்வதற்கு அவசியமெனத் தாங்கள் கருதக்கூடுமோ அவரை அழைப்புக் கட்டளை மூலம் வரவழைக்கவும் விசாரணையிலிருக்கிற விஷயத்துக்குத் தொடர்புள்ளதாய் அவருடைய உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய ஏதேனும் ஆவணத்தைக் கொண்டு வந்து காட்டும்படி ஆணையிடவுமான அதிகாரம்;

(ii) ஒரு சிவில் நீதிமன்றத்தினல் கட்டளை மூலம் வர வழைக்கப்படும் சாட்சிக்குக் கொடுக்கப்படத்தக்க படியை அவருக்கு வழங்கவும், இன்னர் அல்லது இன்ன நிதியிலிருந்து அந்தப் படியைக் கொடுக்க வேண்டுமென்பது பற்றி ஆணைகள் பிறப்பிக்கவுமான அதிகாரம்.

2. அத்தகைய அழைப்புக் கட்டளை, எழுத்து மூலமாயிருக்க வேண்டும்; அதைப் பிறப்பிக்கிற அலுவலரின் கையெழுத்தினலும் அவருக்கு முத்திரை இருந்தால் அதைக் கொண்டும் அது அத்தாட்சிப் படுத்தப்பட வேண்டும்.

கட்டளை மூலம் அழைக்கப்படுபவர் மேற்சொன்ன அலுவலர் முன் குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் வந்திருக்க வேண்டுமென அக் கட்டளையில் சொல்லியிருக்க வேண்டும்; மேலும், அவர் வருவது சாட்சியம் கொடுப்பதற்கா அல்லது ஆவணத்தைக் கொண்டு வந்து காட்டுவதற்கா அல்லது இரண்டுக்குமா என்பதை அழைப்புக் கட்டளையில் குறிப்பிட்டிருக்க வேண்டும்; குறிப்பிட்ட எந்த ஆவணத்தைக் கொண்டு வந்து காட்ட வேண்டுமோ அது அழைப்புக் கட்டளையில் கூடிய வரையில் சந்தேகத்துக்கிடமில்லாதபடி விவரிக்கப்பட்டிருக்க வேண்டும்

3. அழைப்புக் கட்டளையை, கட்டளை மூலம் அழைக்கப்பட்டவரிடம் நேரில் சேர்ப்பிக்க வேண்டும்; அவர் காணப்படாவிட்டால், அதை அவருக்காக, அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் அவரோடு வசித்துக் கொண்டிருக்கும் பெரியவர்களிடமாவது, அவர் வசிக்கிற வருவாய்க் கிராமத்தின் பெரிய தனக்காரரிடமாவது அதைக் கொடுத்துவிட்டு வர வேண்டும்.

4. ஒருவர் சாட்சியம் கொடுப்பதற்குக் கட்டளை மூலம் அழைக்கப்படாமலேயே ஆவணத்தைக் கொண்டு வந்து காட்டுவதற்காகக் கட்டளை மூலம் அழைக்கப்படலாம்; ஆவணத்தைக் கொண்டு வந்து காட்டுவதற்காக மட்டும் கட்டளை மூலம் அழைக்கப்படுபவர், ஆவணத்தைக் கொண்டு வந்து காட்டுவதற்காக நேரில் வருவதற்குப் பதிலாக அதைக் கொண்டு வந்து காட்டுவித்தால், அழைப்புக் கட்டளையை நிறைவேற்றியிருப்பதாகக் கருதப்படுவார்.

5. யாருடைய சாட்சியம் வேண்டியிருக்கக் கூடுமோ அவர் நோய் அல்லது பலவீனம் காரணமாக, அழைப்புக் கட்டளை அனுப்பும் அலுவலர் முன்வர முடியாதவராயிருந்தால், அல்லது அவர் தகுதியுள்ளவராயிருந்து அல்லது பெண்ணாகவிருந்து அது காரணமாக அவரைக் கட்டளை மூலம் அழைப்பது தக்கதாயிராவிட்டால், அழைப்புக் கட்டளை அனுப்பும் அலுவலர், தாமாகவே அல்லது யாருடைய சாட்சியம் தேவைப்படுகிறதோ அவர் விண்ணப்பம் செய்து கொள்வதன் மேல் அவர் வருவது அவசியமில்லையென்று சொல்லி, இதன் பொருட்டு அந்த அலுவலரால் நியமித்தனுப்பப்படும் ஓர் உதவியாளரைக் கொண்டு அவரை விசாரணை செய்வதற்கு உத்தரவிட வேண்டும்.

6. எவரேனும் இவ்விதிகளின்படிப் பிறப்பிக்கப்படும் அழைப்புக் கட்டளைக்குக் கீழ்ப் படியாவிட்டால், அவருக்கு நூறு ரூபாய் வரையில் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கதாகும்.

7. வேறு எந்த விஷயங்களுக்காக 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினால் அல்லது அதன்படி வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்

பட்டுள்ளதோ அவ்விஷயங்களுக்கு இவ்விதிகளில் உள்ளது எதுவும் பொருந்தாது.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித்துறை பல் வகை அரசாணை.)

22. **ஆய்வாளர், மாவட்ட ஆட்சியாளர் ஆகியோருடைய நெருக்கடிக் கால அதிகாரங்கள் மீதான கட்டுப்பாடு.**—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 148 ஆவது பிரிவில் கொடுத்துள்ள அதிகாரங்கள் செலுத்தப்படும் ஒவ்வொன்றைப் பற்றியும்—

(ii) ஆய்வாளர் அந்த அதிகாரங்களைச் செலுத்தினால், அவர் அரசினருக்கு உடனே அறிவிக்க வேண்டும்;

(ii) மாவட்ட ஆட்சியாளர் அந்த அதிகாரங்களைச் செலுத்தினால் அவர் துணை வளர்ச்சி ஆணையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும்; அப்போது அந்த அதிகாரங்களைச் செலுத்துவதற்கான காரணங்களையும் முழுவதும் சொல்ல வேண்டும்; அதே சமயத்தில் அந்த அறிக்கையின் படி ஒன்றை, ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் தெரிந்துகொள்வதற்காக அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ய் 1677-ஆம் எண் உள்ளாட்சித்துறை பல் வகை அரசாணை.)

(1961 நவம்பர் 28-ஆம் தேதியுள்ள 3162-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித்துறை அரசாணை.)

23. **கிராம அலுவலர்களிடமிருந்து கேட்டனுப்பக் கூடிய தகவல்.**—ஓர் ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளர், எழுதியுள்ள ஆணை மூலமாக, ஊராட்சி ஒன்றியக் குழுவின் அதிகார வரம்புக்குள் அடங்கிய ஏதேனும் வருவாய்க் கிராமம் அல்லது அதன் பாகம் அல்லது அதிலுள்ள ஒருவர் அல்லது உடைமை சம்பந்தமாக, பின்வரும் வகைகளின் கீழ் வருகிற எதைப் பற்றியேனும் தமக்குத் தகவல் தெரிவிக்கும்படி, அந்தக் கிராமத்தின் பெரிய தனக்காரரை யாவது கர்ணத்தையாவது இவ்விருவரையுமாவது கேட்கலாம்.

(1) அந்த ஊராட்சி ஒன்றியத்தின் எல்லைகளுக்குள் இருக்கும் நிலத்தைப் பற்றி கிராம ஆவணங்களில் கிடைக்கிற நில அளவை எண், உட்பிரிவு, வகைப் பாடு, நிலம் புன்செய், நன்செய் என்பது போன்ற விவரம் பரப்பு,, வரி விதிப்பு, விதிப்பு, பதிவான கைப்பற்றுதாரரின் அல்லது ஆட்சியாளரின் பெயர் ஆகியவை குறித்த விவரங்கள்,

(2) ஊராட்சி ஒன்றியத்தின் நிருவாக காரியத்துக்காகக் கிராம அலுவலர்கள் வைத்துவரும் பதிவேடுகளிலும் கணக்குகளிலும் கிடைக்கிற வேறு எவையேனும் விவரங்கள்.

ஆனால், (2) வகையின் கீழ் வரும் ஒரு விஷயம் பற்றிய தகவலை, சம்பந்தப்பட்ட தாலூகாவின் தாசில்தாரர் மூலமாகக் கேட்டனுப்ப வேண்டும்.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677-ஆம் எண் உள்ளாட்சித்துறை பல்வகை அரசாணை.)

(1963 ஏப்ரல் 3-ஆம் தேதியுள்ள 754 ஆம் எண் கிராமமுன்னேற்றம் உள்ளாட்சித்துறை பல்வகை அரசாணை.)

24. ஆணையாளர் ஆவணங்களைத் தாக்கல் செய்தல்.—ஆணையாளர் பொறுப்பிலுள்ள ஏதேனும் ஆவணத்தைத் தாக்கல் செய்யும்படி ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் பிறப்பிக்கும் ஆணை ஒவ்வொன்றையும் ஆணையாளர் நிறைவேற்ற வேண்டும்; ஆனால், அந்த ஆணையை உடனே நிறைவேற்றுவது ஊராட்சி ஒன்றியத்தின் அல்லது பொதுமக்களின் நலத்துக்கு உகந்ததன்று என அவர் கருதினால் அவர் அவ்வாறு நிறைவேற்ற வேண்டியதில்லை. அப்படிப்பட்டதில் அவர் அவ்வாறு கண்டு எழுத்து மூலமாக ஓர் அறிவிப்புச் செய்ய வேண்டும்; மேலும் அவர், ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் கட்டளையிட்டால், இப்பிரச்சினையை துணை வளர்ச்சி ஆணையாளரின் அல்லது இதன்பொருட்டுத் துணை வளர்ச்சி ஆணையாளரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஓர் அலுவலரின் ஆலோசனைக்கு அனுப்ப வேண்டும். அந்தத் துணை வளர்ச்சி ஆணையாளரின் அலுவலரின் தீர்ப்பு முடிவானதாகும்.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677-ஆம் எண் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

(1961 நவம்பர் 28-ஆம் தேதியுள்ள 3162 ஆம் எண் கிராம முன்னேற்றம், உள்ளாட்சித்துறைப் பலவகை அரசாணை.)

25. அறிக்கைகள் அல்லாத வேறு ஆவணங்களைச் சேர்ப்பிக்கும் விதம்.—அறிக்கை அல்லாத வேறோர் ஆவணம் ஒருவரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டுமென அல்லது அவருக்கு அனுப்பப்பட வேண்டுமென (1958 ஆம் ஆண்டின் 35 ஆவது தமிழகச் சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில், அல்லது அதன்படி செய்யப்பட்ட ஏதேனும் விதியில், துணைச்

சட்டத்தில், ஒழுங்குமுறை விதியில் அல்லது உத்தரவில் சொல்லப்பட்டிருந்தால, அடியிற் கண்ட விதமாக அதைச் சேர்ப்பிக்கலாம் அல்லது அனுப்பலாம் :—

(i) மேற்படி ஆவணத்தை அவரிடம் கொடுப்பது அல்லது கொடுக்க முன் வருவது மூலமாக; அல்லது

(ii) அவர் காணப்படாவிட்டால், அவர்கடைசியாக வசித்து வந்ததாக அல்லது தொழில் நடத்தியதாகத் தெரியவரும் இடத்தில் அந்த ஆவணத்தை வைத்துவிட்டு வருவது மூலமாக, அல்லது அவர் குடும்பத்தைச் சேர்ந்த யாராவது பெரியவரிடம் அல்லது வேலைக்காரரிடம் அதைக் கொடுப்பது அல்லது கொடுக்க முன்வருவது மூலமாக; அல்லது

(iii) அவர் சந்தர்ப்பத்துக்கேற்ப அந்தக் கிராமத்தில் அல்லது பட்டணத்தில் வசிக்காமலிருந்து, வேறிடத்தில் அவர் முகவரி இன்னதென்று ஆணையாளருக்குத் தெரிந்திருந்தால், அதை அவருக்குப் பதிவு அஞ்சலில் அனுப்புவது மூலமாக; அல்லது

(iv) மேற்சொன்ன வழிகளில் எதுவும் பயன்படாவிட்டால் அந்த இருப்பிடத்தின் அல்லது தொழிலிடத்தின் முதன்மையான ஒரு பாகத்தில் அதை ஒட்டுவது மூலமாக.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677-ஆம் எண் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

26. ஆணையாளருக்கும் நியமனக் குழு உறுப்பினர்களுக்கும் இடையே கருத்து வேற்றுமை இருந்தால் பின்பற்ற வேண்டிய நடைமுறை.—(1958 ஆம் ஆண்டின் 35 ஆவது தமிழகச் சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 53 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கண்ட (அ) பகுதியின்படி அமைக்கப்பட்ட மன்றத்தின் குறைந்தது இரண்டு உறுப்பினர்களேனும்—இவர்களில் ஆணையாளர் ஒருவராயிருக்க வேண்டும்—வந்திருந்து, அவர்கள் இருவரும் அல்லது எல்லா உறுப்பினர்களும் வந்திருந்தால் வந்திருக்கிற உறுப்பினர்களில் இரண்டுக்குக் குறையாத பேர் அம் மன்றத்தின் முடிவை ஒப்புக் கொண்டாலன்றி மற்றப்படி அம் முடிவு செல்லாது.

ஆனால், ஒரு பதவிக்குச் செய்யப்படும் நியமனத்துக்குச் சம்பந்தப்பட்டதில் அம் மன்றத்தினர் அவ்வாறு ஓர் உடன்பாட்டுக்கு வராவிட்டால், ஆணையாளர் அதனை

(அ) அப் பதவி, பள்ளிகளின் மேற்பார்வையாளர் பதவி உட்பட ஒரு கல்வி நிறுவனத்தில் இருந்தால் கல்வி இயக்குநருக்கும்,

(ஆ) அந்தப் பதவி பற்றிய எண்ணிக்கை, உத்தியோகப் பெயர்கள் படித்தரங்கள், சம்பவங்கள், கட்டணங்கள் அல்லது படிகளை நிச்சயிக்க அல்லது மாற்றக் கூட்டு வளர்ச்சி ஆணையாளருக்கு அதிகாரமிருந்தால், கூட்டு வளர்ச்சி ஆணையாளருக்கும்,

(இ) மற்றெல்லாவற்றிலும் அரசினருக்கும் ஆலோசனைக்கனுப்ப வேண்டும்.

எந்த அதிகாரியின் ஆலோசனைக்கு அப்பொருள் அனுப்பப்படுகிறதோ அந்த அதிகாரியின் ஆணைகளுக்கிணங்க நியமனம் செய்ய வேண்டும்.

(1962 பெப்ரவரி 1-ஆம் தேதியுள்ள 261-ஆம் எண் கிராமமுன்னேற்றம், உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

(64) நியமனக் குழுவில் வெளியார்களைச் சேர்த்துக் கொள்வது.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 53 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (அ) பகுதியில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது; அதாவது, ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றுக்கும் நியமனக் குழு ஒன்று இருக்க வேண்டும்; அதில், ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவரும் ஆணையாளரும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தினரால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் உறுப்பினரும் இருக்க வேண்டும். மேற்படி பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் படி, (1) உட்பிரிவின்படி நியமிக்கப்படும் குழுவில், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களாயிராதவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள, ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை, அக் குழுவிலிருக்கிற ஒன்றியக் குழு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பாகத்துக்கு மேற்படக் கூடாது.

53 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் சொல்லமைப்பு மிகப் பொருவானதாயிருந்தபோதிலும், நியமனக் குழுவின் உறுப்பினர்களாக வெளியார்களைக் கூடச் சேர்த்துக் கொள்ள ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அதில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், நோக்கம் என்னவென்றால் சேர்த்துக்கொள்ள (2) உட்பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம், அப் பிரிவின் (1) உட்பிரிவிவைச் சேர்ந்த (ஆ) பகுதியில் குறிப்பிட்டிருக்கிற குழுக்களுக்கு மட்டுமே, அதாவது, கல்விக் குழுவிற்கும் பொதுக் காரியங்கள் குழு

விற்கும் (ஆ) பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற மற்றக் குழுக்களுக்கும் மட்டுமே பொருந்த வேண்டுமேயன்றி, (அ) பகுதியின்படி அமைக்கப்படும் நியமனக் குழுவிற்குப் பொருந்தக் கூடாது என்பதேயாகும். இந்த நோக்கத்தைத் தெளிவாக்கும்பொருட்டு (2) உட்பிரிவைத் தக்கவாறு திருத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும். அந்த உட்பிரிவு மேற்சொன்னவாறு திருத்தப்படுகிற வரையில், மேலே விளக்கப்பட்ட நிலையைக் கவனத்தில் வைக்கும்படியும் நியமனக் குழு உறுப்பினராக எவரையும் சேர்க்காதபடியும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

(1961 பெப்ரவரி 9-ஆம் தேதியுள்ள 375 ஆம் எண் கிராமமுன்னேற்றம், உள்ளாட்சித்துறை அரசாணை.)

(65) நியமனக் குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் பதவிக் காலம்.—(1958 ஆம் ஆண்டின் 35 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 53 (1) பிரிவின்படி, நியமனக் குழுவைச் சேர்ந்த மூவரில் ஒருவர், ஊராட்சி ஒன்றிய மன்றத்தினரால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் அம்மன்ற உறுப்பினராவார். ஆகவே, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் ஓர் உறுப்பினர், அடுத்த ஆண்டில் அம் மன்றத்திற்கு மற்றோர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுகிற வரையில், நியமனக் குழுவின் உறுப்பினராகப் பதவி வகித்து வரலாம்.

(1961 மார்ச் 15 ஆம்தேதியுள்ள 767 ஆம் எண் கிராம முன்னேற்றம், உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(66) நியமனக் குழு உறுப்பினர் என்னும் முறைமையில் ஆணையாளருக்குள்ள உரிமைகள்.—ஓர் ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளர், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 53(1) பிரிவின்படி அமைக்கப்படும் நியமனக் குழுவின் உறுப்பினராகச் சட்டபூர்வமாய் நியமிக்கப் படுகிறார். ஆகையால், மேற்படி சட்டத்தில் கண்ட 44 (4) பிரிவின்படிக்கான தடை அவர் நியமனக் குழு உறுப்பினர் என்னும் முறைமையில் ஆணையாளருக்குப் பொருந்தாது. அவர் நியமனக் குழு உறுப்பினர் என்னும் முறைமையில், நியமனக் குழுத் தலைவருக்கும் மற்ற உறுப்பினருக்கும் உள்ள உரிமைகளையும் சலுகைகளையும் செலுத்தலாம்.

(1962 பெப்ரவரி 27-ஆம் தேதியுள்ள 21494 C1 62-2 ஆம் எண் குறிப்பாணை.)

(67) நியமனக் குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் பதவிக் காலம்—விளக்கம்.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நியமனக் குழுவிற்குத்

தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர் தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலி ருந்து ஓர் ஆண்டு வரையில் மட்டுமே பதவி வகிப்பாரெனக் கொள்ளப் படு மாஞல், குறித்த ஓர் ஆண்டுக்கான தேர்தல் உரிய காலத்தில் நடத்தப் படாவிட்டால், தலைவரும் ஆணையாளரும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இல்லாமலேயே நியமனக் குழுவாய்ச் செயலாற்றுவதாக முடியும். குழுவின் மூன்று உறுப்பினர்களில் இருவர் மட்டும் குழுவாகச் செயலாற்ற விடுவதைக் காட்டிலும், குறித்த ஓர் ஆண்டுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் மற்ருெருவர் தேர்ந்தெடுக்கப்படுகிற வரையில் தொடர்ந்து பதவி வகிக்க விடு வது நல்லதெனக் கருதப்படுகிறது.

(1962 அக்டோபர் 22-ஆம் தேதியுள்ள 169076 தனி 62-2 ஆம் எண் குறிப்பாணை.)

அத்தியாயம் II வரவு செலவுத் திட்டம்—ஆட்சி அறிக்கை. *தணிக்கை*

27. **வரவு செலவுத் திட்டமும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் சம்பந்தமாக நிதிகளின் ஒதுக்கீடு.**—(1) ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றின் வரவு செலவுத் திட்டத்தையும் அதன் சுருக்கத்தையும், அரசினர் அவ்வப்போது குறிப் பிடக்கூடிய படிவத்தில் தயாரிக்க வேண்டும்.

(2) வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப் பெற்றுள்ள ஆண்டின் (கட்டணங் களிலிருந்தும், அரசினர் கொடைகளிலிருந்தும் கடன் தலைப்புகளிலிருந்தும் கிடைப்பவை நீங்கலாக) உத்தேச வரவுகளில் 5 சதவீதத்துக்குக் குறையாத நடைமுறை இருப்புக்காக, வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும்

(3) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், அவ்வாறு தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூன்று படிகளை, வரவு செலவுத் திட்ட ஆண்டுக்கு முந்திய நவம்பர் 30 ஆம் தேதியன்ருவது அதற்கு முன்பாவது சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளர் மூலமாக மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும். அதே சமயத்தில் ஒரு படியைத் தணிக்கையாளருக்கு அனுப்ப வேண்டும். கோட்ட ஆட்சியாளர் ஒரு படியைத் தாமே வைத்துக் கொண்டு எஞ்சிய இரண்டு படிகளைத் தமது குறிப்புரையுடன் மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்.

(4) ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் உத்தேசிக்கப்பட்ட செலவுக்காக வேண்டியிருக்கிற பணம் எங்கிருந்து கிடைக்குமென்பதைக் குறிப்பிடாமல்,

வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிராத அல்லது வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுக்கு மேற்பட்ட ஏதேனும் செலவினத்துக்கு அனுமதி கொடுக்கக் கூடாது.

(5) வரவு செலவுத் திட்டம் ஒப்பளிக்கப்படுவதனுலேயே, அதில் கண்டுள்ள எல்லாச் செலவையும் செய்துவிட ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அதிகாரம் ஏற்பட்டுவிட்டதாகக் கருதப்பட மாட்டாது; எந்த செலவுக்கான ஏற்பாடு வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதோ அந்த செலவு செய்வதற்கு அரசினரின் அல்லது வேறேர் அதிகாரியின் ஒப்பளிப்பு தேவைப்பட்டு அத்த கைய ஒப்பளிப்புத் திட்ட வட்டமாக வழங்கப்பட்டிராவிட்டால், அச் செலவு செய்வதற்கு முன் அந்த ஒப்பளிப்பைப் பெறுவது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கடமையாகும்.

(6) வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டோடு செலவை ஒப்பிட்டுப் பார்த்து, அச் செலவு சம்பந்தமாகத் தணிக்கையாளர் கருத்துரைகள் எவையேனும் தெரிவித்தால் அவைகள் விஷயத்தில் ஆணையாளர் உடனுக்குடன் கவனம் செலுத்த வேண்டும்.

(7) வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் எல்லாம் அந்த ஆண்டின் முடிவில் காலாவதியாகிவிடும். ஆண்டு முடிவில் செலவிப் படாமலிருக்கிற ஒதுக்கீடுகளின் பாகங்களை, ஆண்டு முடிவுக்குப் பிறகு பட்டு வாடாச் செய்வதற்கென ஒதுக்கி வைக்கக் கூடாது; வைப்பீடுகளுக்கோ வேறொரு தலைப்புக்கோ மாற்றுவதன் மூலம் அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது; காலாவதியாவதைத் தவிர்ப்பதற்கு அவைகளை முன்னதாக வாங்கிவிடக் கூடாது.

(8) மாவட்ட ஆட்சியாளர் எவையேனும் மாறுதல்கள் செய்ய வேண்டு மென்று சொன்னுல் அவற்றுடன் அல்லது 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 140 ஆவது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் படி அரசினரால் மாற்றப்பட்டபடி, குறிப்பிட்ட ஆண்டுக்காக ஊராட்சி ஒன்றிய மன்றத்தினரால் ஒப்பளிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் செய்துள்ளபடி ஒதுக்கீடுகளின்படி அந்த ஆண்டில் எல்லாச் செலவுகளையும் முறைப்படுத்த வேண்டும்.

(9). (1) ஆணையாளர் ஒவ்வொரு, வரப்போகும் நிதி ஆண்டுக்காக ஊராட்சி ஒன்றிய (கல்வி) நிதி சம்பந்தமாக வரவையும் செலவையும் காட்டும் வரவு செலவுத் திட்டமொன்றை, அந்த நிதி ஆண்டுக்கு அடுத்து முந்திய

நவம்பர் 30 ஆம் தேதியன்றுவது அதற்கு முன்பாவது அரசினருக்காகிலும், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 140 ஆவது பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவில் அரசினருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தைச் செலுத்த அச் சட்டத்தில் கண்ட 157 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி அரசினரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கக் கூடிய அலுவலருக்காகிலும் அனுப்ப வேண்டும்; எந்த அலுவலர் மூலமாக அந்த வரவு செலவுத் திட்டத்தை அனுப்ப வேண்டுமோ அவர், சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் ஆவார்; அந்த வரவு செலவுத் திட்டம் அரசினர் அவ்வப்போது குறிப்பிடக்கூடிய படிவப்படி இருக்க வேண்டும்.

(2) வரவு செலவுத் திட்டத்துக்கு ஒப்புதல் அளிப்பதற்குமுன்—

(i) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அதிகார வரம்புக்குட்பட்ட பரப்பில் தொடக்கக் கல்விக்காக அம் மன்றம் போதுமான ஏற்பாடு செய்திருக்கிறதா என்றும்,

(ii) வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்துள்ள செலவு அந்த வரவு செலவுத் திட்டம் சம்பந்தப்படுகிற நிதி ஆண்டுக்காக ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் எதிர்பார்த்த வருமானத்துக் குட்பட்டதாயிருக்கும்படியும், அதன் கணக்குகளில் ஏதேனும் துண்டு விழாமலேயே அச் செலவு செய்யக் கூடியதாயிருக்கிறபடியும்,

(iii) ஊராட்சி ஒன்றிய மன்றம் பெற உரிமை பெற்றிராத அரசுக் கொடைகளை அது கணக்கில் எடுத்துக் கொள்ளாதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(1962 பெப்ரவரி 1-ஆம் தேதியுள்ள 261 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துணைப் பல்வகை அரசாணை.)

(68) ஊராட்சி ஏற்பட்டிராத பரப்புகளுக்காகத் தனி நிதியை வைத்து வருவது.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 11 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட விலக்கு நிபந்தனையின்படி, ஓர் ஊராட்சி ஒன்றியத்தின் எப் பாகத்திலேனும் ஊராட்சி இராவிட்டால், ஊராட்சி ஒன்றியக் குழு, வரி விதிக்கும் அதிகாரம் உட்பட ஊராட்சியின் எல்லா அதிகாரங்களையும் செலுத்தவும் ஊராட்சியின் கடமைகளை நிறைவேற்றவும், அலுவல்களைச் செய்யவும் வேண்டும்; மேலும், ஊராட்சியின் வரவினங்கள் மேற்படி குழுவிற்கு வரவு வைக்கப்படும்; அதன் பொறுப்புகள் அம் மன்றத்திற்குப் பற்றாக எழுதப்படும்; ஊராட்சி ஒன்றியத் தலைவரும் ஆணையாளரும், ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தின் அந்தப் பாகத்திலே, முறையே தலைவர்,

நிர்வாக அதிகாரி ஆகியோரின் அதிகாரங்களைச் செலுத்தவும், கடமைகளை நிறைவேற்றவும், அலுவல்களைச் செய்யவும் வேண்டும். அப்படிப்பட்டவற்றில் அரசினர் கட்டளையிடுவது என்னவென்றால் மேற்படி ஊராட்சிக்கு மட்டுமே தொடர்பான தனி நிதி ஒன்றை ஊராட்சி ஒன்றிய மன்றம் வைத்துவர வேண்டும். மேற்படி சட்டத்தின் 137 ஆவது பிரிவில் குறிப்பிட்டிருக்கும் வரவினங்களை அதில் வரவு வைக்க வேண்டும். ஊராட்சி நிதியிலிருந்து செய்யப்படும் செலவை, மேற்படி சட்டத்தில் கண்ட நிபந்தனைகளின்படியும் (மேற்படி சட்டத்தின் 138, 139, 140, 142, 143 ஆவது பிரிவுகள்) அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படியும் முறைப்படுத்த வேண்டும்.

(1963 பெப்ரவரி 13 ஆம் தேதியுள்ள 334 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறை அரசாணை.)

(69) ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் நிதிகளை முதலீடு செய்தல்.— ஊராட்சி ஒன்றிய நிதிகளைப் போட்டு வைப்பது பற்றிய விளக்க உரைகள் "ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குகளை வைத்துவருவதற்கான விளக்க உரைகள் பற்றிய நடைமுறை நூலின்" 6 ஆவது, 7 ஆவது பாராக்களில் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியமன்ற நிதிகளை முதலீடு செய்வது பற்றிப் பின்வரும் விளக்க உரைகள் பிறப்பிக்கப்படுகின்றன :—

1. ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் பின்வரும் ஒதுக்கப்பட்ட நிதிகள் முழுவதையும் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை, ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிட்டுள்ள விதமாக அதில் சொல்லியிருக்கிற முன்னுரிமை வரிசை கிரமப்படி முதலீடு செய்யலாம்.

ஒதுக்கப்பட்ட நிதி.	முதலீடு செய்யும் விதம்.
(1)	(2)
வருங்காலச் சேம நிதி	(1) தமிழ்நாடு அரசுக் கடன் பத்திரங்களும், வட்டி செலுத்தப்படுவது பற்றியும் மூலதனம் திருப்பிக் கொடுக்கப்படுவது பற்றியும் தமிழ்நாடு அரசினால் உத்தரவாதம் செய்யப்பட்ட கடன் பத்திரங்களும்.

ஒதுக்கப்பட்ட நிதி.	முதலீடு செய்யும் விதம்.
	(2) சேமிப்புச் சான்றுகள் உட்பட இந்திய அரசினரால் வெளியிடப்பட்ட கடன் பத்திரங்கள்.
	(3) அஞ்சலகச் சேமிப்பு வைப்புத் தொகைகள் (விரைவில் பட்டுவாடா செய்வதற்கு வேகுவாய் வேண்டியிருக்கக் கூடிய வருங் காலச் சேம நிதி இருப்புகள் விஷயத் தில் மட்டும்).
கட்டடை நிதிகள்	(1) தமிழ்நாடு அரசுக் கடன் பத்திரங்களும், வட்டி செலுத்தப்படுவது பற்றியும் மூலதனம் திருப்பிக் கொடுக்கப்படுவது பற்றியும், தமிழ்நாடு அரசினல் உத்தரவாதம் செய்யப்பட்ட கடன் பத்திரங்களும்.
	(2) சேமிப்புச் சான்றுகள் உட்பட, இந்திய அரசினரால் வெளியிடப்பட்ட கடன் பத்திரங்கள்.
செலவிடப்படாத கடன் நிதிகள்.	இதன் பொருட்டுக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் ஒப்புக் கொள்ளப்பட்ட தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியிலும் மையக் கூட்டுறவு வங்கிகளிலும் மூன்றாண்டுகள் வரையுள்ள கால அளவுகளுக்குத் தவணை வைப்புகள்.

2. அரசினரின் தனி ஒப்பளிப்பு இன்றி, வேறு எந்த நிதியையும், முதலீடு செய்வதற்காக, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றக் கருவூலக் கணக்கிலிருந்து வாங்கக் கூடாது; அந்த ஒப்பளிப்பு வழங்குவதற்கு அசாதாரண தனிக் காரணங்கள் இருந்தாலன்றி, அது வழங்கப்பட மாட்டாது.

3. மேலே குறிப்பிடப்பட்ட தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி மையக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றிலே முதலீடு செய்யக் கருதியுள்ள தொகைகளும், அந்த வங்கியில் ஏதேனும் தொகை ஏற்கெனவே முதலீடு செய்யப்பட்டிருந்தால் அதுவும் சேர்ந்து 5,000 ரூபாய்க்கு மேற்பட்டால், கூட்டு வளர்ச்சி ஆணையாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொண்ட பிறகுதான் அந்த வங்கிகளில் முதலீடு செய்ய வேண்டும். அவ்வாறு முதலீடு செய்வதற்கு அல்லது மீண்டும் முதலீடு செய்வதற்கு ஒப்பளிப்பு வழங்கும்படி கூட்டு வளர்ச்சி ஆணையாளருக்குச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றையும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மூலமாக அனுப்ப வேண்டும்.

4. செலவிடப்படாத கடன்கள், நிதிகள் விஷயத்தில் தவிர, மற்றப்படி ஊராட்சி ஒன்றிய மன்ற முதலீடுகளை தமிழ்நாடு அரசினரால் உத்தரவாதம் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசுக் கடன் பத்திரங்களில் போட வேண்டும்; ஆனால், ஒப்புக் கொள்ளப்பட்ட வேறு வகை முதலீடுகளில் ஒன்றில் முதலீடு செய்வது அதிக அனுகூலமாயிருக்குமெனக் கருதுவதற்குத் தனிக் காரணங்கள் இருந்தால், மேற்படி கடன் பத்திரங்களில் போட வேண்டியதில்லை.

5. ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் நிதிகளை முதலீடு செய்வது சம்பந்தமாக கணக்கு வைத்து வருவதற்கான விளக்க உரைகள் பற்றிய நடைமுறை நூலின் 122 ஆவது பத்தியில் 'முதலீடுகள்' பற்றிக் கண்டிருக்கும் விளக்க உரைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டுமென, ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

(1962 பெப்ரவரி 21 ஆம் தேதியுள்ள 420 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணை.)

70. ஊராட்சி ஒன்றிய வரவு செலவுத் திட்டங்களைக் கூராய்வு செய்தல்.—(1) ஊராட்சி ஒன்றிய வரவு-செலவுத் திட்டங்களை மன்றங்கள் ஒப்புக் கொள்வதற்குமுன், அவைகளைக் கோட்ட ஆட்சியாளர்களும் மாவட்ட ஆட்சியாளர்களும் கூராய்வு செய்ய வேண்டும். கோட்ட ஆட்சியாளர்களும் மாவட்ட ஆட்சியாளர்களும் கடப்பாடான அலுவல்களுக்காகப் போதுமான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்று பார்ப்பதோடுகூட, வரவு-செலவுத் திட்டம் போடுவதில் இயல்பாகவும் நிதி ரீதியாகவும் அடங்கியுள்ள திட்டமிடுவதன் பல்வேறு கூறுகளில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழிகாட்டி ஆலோசனை கூறுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(2) ஊராட்சி ஒன்றிய வரவு-செலவுத் திட்டத்தைக் கூராய்வு செய்வதானது, கடந்த கால சாதனைகளை மதிப்பிடுவதற்காகவும், நடப்பு முன்னேற்றத்தை மறு ஆய்வு செய்வதற்காகவும், எதிர்காலத் தேவைகளை மதிப்பிடுவதற்காகவுமான ஒரு வாய்ப்பாயிருக்க வேண்டும். திட்டமிடுவதன் இயல்புக் கூறுகளும் நிதிக் கூறுகளும் இணைவுறும்படி செய்ய வேண்டும். ஒன்றியத்தின் நிகழ்கால, வருங்கால நிதி நிலைமைகளை மிக நுட்பமாக மதிப்பிடுவதும் அவசியமாகும். கோட்ட ஆட்சியாளர்கள், முதல் மட்ட கண்காணிப்பு அலுவலர்களாயிருக்கிறபடியால், ஒன்றியங்களைக் கூராய்வு செய்யும் போது, அவைகளைப் பற்றிய தங்கள் மறு ஆய்வு அறிவைப் பயன்படுத்தக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

(3) இச் செய்திகளைக் கருத்தில் கொண்டு, அடியில்கண்ட விளக்க உரைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் :—

(i) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், தமது வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளுடன் கூட, I-ஆம் இணைப்பிலுள்ள படிவப் பிரகாரம் நிதி விவரப் பட்டியல் ஒன்றைத் தவறுமல் அனுப்ப வேண்டும். பொதுக் கணக்கின் நிலைமையையும், நிதி உபரி அல்லது பற்றுக்குறை ஏற்படுவதற்குக் காரணமாயிருந்த பல்வேறு வரவின் அல்லது செலவினக் கூறுகளையும் இந்த விவரப் பட்டியல் மேலெழுந்த வாரியாகக் காட்டும் ஓர் ஒன்றியத்தின் அடிப்படை நிதி உறுதிப்பாட்டினை, இந்த விவரப் பட்டியலிலிருந்து உடனே மதிப்பிடலாம்.

(ii) கோட்ட ஆட்சியாளர்கள் ஊராட்சி ஒன்றிய வரவு-செலவுத் திட்டங்களைக் கூராய்வு செய்யும்போது, II-ஆம் இணைப்பிலுள்ள ஆய்வுக் குறிப்புக்குப் பதில் எழுதி, வரவு-செலவுத் திட்டத்துடன்கூட ஆய்வுக் குறிப்பின் படி ஒன்றையும் கலெக்டர்களுக்கு அனுப்பவேண்டும்.

(iii) மாவட்ட ஆட்சியாளர்கள் I-ஆம், II-ஆம் இணைப்புகளில் உள்ள விவரப் பட்டியல்களை யொட்டியும், III-ஆம் இணைப்பிலுள்ள ஆய்வுக் குறிப்பையொட்டியுங் கூட வரவு-செலவுத் திட்டத்தை கூராய்வு செய்ய வேண்டும் வரவு-செலவுத் திட்டம் கூராய்வு செய்து திருப்பி அனுப்பப்படும் போது, II ஆம் III ஆம் இணைப்புகளிலுள்ள ஆய்வுக் குறிப்பின் படி ஒன்றையும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அனுப்பவேண்டும்.

4. கோட்ட ஆட்சியாளர்களும் மாவட்ட ஆட்சியாளர்களும், இப் படிவங்களின் உதவியினால், ஊராட்சி ஒன்றியங்களுக்கு இன்னும் அதிக அளவில் ஆலோசனை கூறி வழிகாட்டுவது இயலுமென்று அரசினர் நம்புகிறார்கள். ஒப்பளிப்புக்குப் பிறகு மறு ஆய்வு செய்வதற்கான தேவைகளை

அரசினர் நிறைவேற்றிக் கொடுப்பார்கள். அவசியமெனக் கருதப்படும் போதெல்லாம் ஆய்வுக் குறிப்புடன் மேற்கொண்டு கேள்விகளைச் சேர்த்துக் கொள்ளலாம்.

5. *1963* அக்டோபர் நவம்பரில் தயாரிக்க வேண்டிய *1964-65* ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டங்களுக்காக இந்த முறையைப் பின்பற்ற வேண்டும்.

(1963 மார்ச் 15 ஆம் தேதியுள்ள 582 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணை.)

இணைப்பு 1.

பொதுக் கணக்கு.

(1)	(2) சாதாரண வரவினங்கள் உள்ளபடி 1960—61, 1961—62.	(3) வரவு — செலவுத் திட்ட மதிப்பீடு—திருத்திய மதிப்பீடு 1962-63.	(4) வரவு — செலவுத் திட்ட மதிப்பீடு 1963-64.
1. நிகர தலவரி.			
2. தலவரித்தண்டமும் ஈடு செய்வதற்கான கொடையும் (வீதம்).			
3. தல அதிகாரிகள் நிதிச்சட்டம்.			
4. தல சாலைகள் கொடை.			
5. பற்றுக்குறையை ஈடு செய்வதற்காக தனிப் பஞ்சப்படிக் கொடை.			

(1)	(2) சாதாரண செலவினம் உள்ளபடி 1960-61, 1961-62.	(3) வரவு — செலவுத் திட்ட மதிப்பீடு திருத்திய மதிப்பீடு 1962-63.	(4) வரவு — செலவுத் திட்ட மதிப்பீடு 1963-64.
1. பணியாளர் (படிகளும் எதிர்பாராச் செலவுகளும் உட்பட).			
2. மகப்பேறு இல்லங்களில் செலவு மிச்சம்.			
3. மருந்தகங்களுக்காக			
4. போக்குவரத்து.			
5. கல்விக்கணக்குக்குத் திருப்புதல்.			

(1)	சாதாரண வரவினங்கள் உள்ளபடி—1960—61, 1961—62. (2)	வரவு — செலவுத் திட்ட மதிப்பீடு—திருத்திய மதிப்பீடு 1962—63. (3)	வரவு — செலவுத் திட்ட மதிப்பீடு 1963—64. (4)
6. பயன் தரும் தொழில்களிலிருந்து நிகர வருமானம்.			
7. பிற இனங்கள் (பெரிய இனங்களைக் குறிப்பிடலாம்).			
மொத்தம்.			

(1)	சாதாரண செலவினம் உள்ளபடி 1960—61, 1961—62. (2)	வரவு — செலவுத் திட்ட மதிப்பீடு—திருத்திய மதிப்பீடு 1962—63. (3)	வரவு — செலவுத் திட்ட மதிப்பீடு 1963—64. (4)
6. மூலதனத்துக்குத் திருப்புதல்.			
7. பணிகளுக்காகவும், உழவுக்காகவும் உதவித் தொகை.			
8. பிற இனங்கள் (பெரிய இனங்களைக் குறிப்பிடலாம்).			
மொத்தம்.			

உபரி அல்லது பற்றுக்குறை

(அ) கழிக்க/சேர்க்க வழிவகைகள் முன்பணம் நிகர உபரி அல்லது பற்றுக்குறை.

(ஆ) எல்லாக் கணக்குகளின் கீழும் செலவு ஈடு செய்யாமலிருக்கும் தொகைகளைச் சேர்க்க/கழிக்க.

குறிப்பு -இப்படிவத்தை நிரப்ப வேண்டிய விதத்தைக் குறித்து ஒரு விளக்கக் குறிப்பு சேர்க்கப்பட்டிருக்கிறது.

சாதாரண வரவினங்கள்.	விளக்கக் குறிப்பு.
7. பிற இனங்கள் (பெரிய இனங்களைக் குறிப்பிடலாம்.)	இந்தப் பத்தியை நிரப்புகையில் பின் வரும் வரவினங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் :— பொது வரி விதிப்பு — பல்வகை வருமானம். நிருவாகம் — தனிப் பஞ்சப்படிக் கொடை அல்லாத வேறு வரவினங்கள். போக்குவரத்து — தலசாலைகள் கொடை அல்லாத வேறு வரவினங்கள். சுகாதாரமும் நலமும் — மகப்பேறு இல்லங்களுக்கான அரசுக் கொடையில் 2/3 பாகமல்லாத வேறு வரவினங்கள். வரப்பெற்ற முதலீடுகள் — இத் தலைப் பின் கீழான வரவினங்கள். மேற்சொன்ன இனங்களுடன்கூட, பொதுக் கணக்கிலிருந்து முதலில் செய்யப் பட்ட செலவை ஈடு செய்வதற்கான தொகையையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.
சாதாரண செலவினம்— 1. பணியாளர் (படிகளும் எதிர் பாராச் செலவுகளும் உட்பட.)	இந்தப் பத்திகளை நிரப்புகையில் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய செல வினங்கள் :— 1. 4. கட்டிடத்துக்கு வாடகை, 5. கட்டிடங்களுக்குச் செப்பனிடு, 6. வழக்குச் செலவுகள் — செலவு கொடுக்கப்பட்டது, 7. கடனைத் திருப்பிச் செலுத்தியதற்கு வட்டி, 8. கடன் களைத் திருப்பிச் செலுத்துவது.

4. போக்குவரத்து	4. சாலைகளைப் பராமரித்து வருவதற்குப் பிடிக்கும் செலவு மட்டும்.
5. கல்விக் கணக்குக்குத் திருப்புதல்	5. கல்வி வரவு-செலவுத் திட்டத்தை நேர்க்கட்டுவதற்காக பொதுக் கணக்கிலிருந்து சாதாரணக் கல்விக்கு மாற்ற அனுமதிக்கப்பட்ட தொகை.
6. மூலதனத்துக்குத் திருப்புதல்	இத் தலைப்பின் கீழ்க் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டிய தொகையில், பொதுக் கணக்கிலிருந்து வளர்ச்சிப் பணிகள் — உற்பத்திக் கணக்குகளுக்கு நிதிகளைத் திருப்புவதைச் சேர்க்கக் கூடாது.
7. பணிகளுக்காகவும் உழவுக்காகவும் உதவித் தொகை.	பொதுக் கணக்கிலிருந்து வளர்ச்சிப் பணிகள் — உற்பத்திக் கணக்குகளுக்கு மாற்றப்பட்ட தொகை.
8. பிற இனங்கள் (பெரிய இனங்களைக் குறிப்பிடலாம்.)	நிருவாகம் என்பதன்கீழ் 4 முதல் 8 வரை அமைந்த இனங்களின்கீழ் செலவு. போக்குவரத்து என்பதன் கீழ் சாலைகளைப் பராமரித்து வருவது அல்லாத மற்றெல்லா இனங்களுக்கும் பிடித்த செலவு. மகப்பேறு இல்லங்களுக்காகவும் மருந்தகங்களுக்காகவும் பிடித்த செலவு நீங்கலாக சுகாதாரமும் நலமும் என்பதன் கீழ் ஆன செலவு செய்யப்பட்ட முதலீடுகள் என்பதன் கீழ்ச் செலவு.

இணைப்பு II

கோட்ட ஆட்சியாளர்கள் பயன்படுத்த வேண்டிய ஆய்வுக் குறிப்புக்கான வினைப் பட்டியல்.

பொது—1. தொடக்கக் கல்விக்குப் பிடிக்கும் செலவை ஈடு பண்ணுவதற்கு ஊராட்சி ஒன்றியத்தின் தேவைகளை முறைப்படிக் கவனித்தும், வளர்ச்சிக்கான பொது வள ஆதாரமாகவுங்கூட தலவாரி தண்டம் விதிக்கப்படுகிறதா ?

2. தல அதிகாரிகள் நிதிச் சட்டத்தின் முழு நன்மைகளை ஊராட்சி ஒன்றியம் பயன்படுத்திக் கொண்டதா ?

3. வளர்ச்சிப் பணிகளுக்காகவென்று ஊராட்சி ஒன்றியங்கள் பிரேரேபித்த உதவித் தொகைகள், கடப்பாடான அலுவல்களுக்காக முறைப்படி ஏற்பாடுகள் செய்த பிறகு கொடுக்கப்பட்டனவா ?

II. கடப்பாடான அலுவல்களுக்காகவும் பிற அலுவல்களுக்காகவும் செய்யப்பட்ட ஏற்பாடு போதுமானதா என்பது—1. மருந்தகங்களுக்கு மருந்துகள் வாங்குவதற்குச் செய்யப்பட்ட ஏற்பாடு போதுமானதா ? தேவைப் பட்டியல்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா ?

2. சுகாதாரப் பாதுகாப்புக்காகவும் மற்ற சேம நலத் திட்டங்களுக்காகவும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடு போதுமானதா ?

3. ஒன்றியத்துக்கான மகப்பேறு நிலையங்கள் பெற உரிமையுள்ள பெருமத் தொகை யாது ? எத்தனை தொடங்கப்பட்டுள்ளன ? எஞ்சியவற்றைத் தொடங்குவதற்கு யோசனைத் திட்டங்கள் உள்ளனவா ? அதிகப்படியாகச் செலவு பிடித்தால் அதைத் தாங்கும் நிலையில் ஊராட்சி ஒன்றியம் இருக்குமா?

ஏற்படுத்தப்பட்டுள்ள மகப்பேறு நிலையங்கள், ஊராட்சி ஒன்றியப் பரப்பு முழுவதன் தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவுக்குப் பரவலாக இருக்கின்றனவா ?

4. தல சாலைகள் கொடை : பராமரித்து வர வேண்டிய சாலையின் மொத்த நீளம்—முந்திய ஆண்டில் பராமரித்து வரப்பட்ட நீளம் யாது ? செலவு என்ன ? இந்த ஆண்டு உத்தேசிக்கப்பட்டுள்ள நீளம் யாது ? நடப்பு ஆண்டில்

பராமரிப்பதற்காகத் திட்டமிடப்பட்ட சாலைகள், சென்ற ஆண்டு கவனிக்கப் பட்ட அதே சாலைகளா? வேறானவையா? உள்ளூர் சாலைகள் கொடை போதா விட்டால், குறைந்தது ஏதாவதொரு சுழல் திட்டத்துக்குள் எல்லாச் சாலைகளும் அடங்கும்படி பார்த்துக்கொள்ளப்படுகிறதா? சாலைப் பராமரிப்புச் செலவு நியாயமானதாயிருக்கிறதா? பிரேரேபிக்கப்படும் பராமரிப்புப் பணி சாதாரணத் தன்மை வாய்த்ததா? அல்லது உயர்தரமான தனிப் பணி ஏதேனும் பிரேரே பிக்கப்பட்டிருக்கிறதா? [உள்ளூர்ச் சாலைகள் கொடை அதிகமாயிருப்பதாகத் தெரிய வருபவைகளில் இது அவசியமாகும். (கணக்குகள்) துணைச் செயலாளர் காஞ்சிபுரம் கோட்டத்துக்குப் போயிருந்தபோது, உள்ளூர்ச் சாலைகள் கொடை உபரியாயிருப்பதாகத் தெரிய வந்ததனால், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத் தினர் மிக உயர்தரமான பணியை மேற்கொண்டிருப்பதை அறிந்தார்]

5. ஊராட்சி ஒன்றியம் நடத்திவரும் பயன்தரும் தொழில்கள் யாவை? வீதங்களைத் தக்கவாறு உயர்த்துவதனால் அல்லது மற்றப்படி அவைகளிலிருந்து அதிக வருமானம் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறதா? ஊராட்சி ஒன்றியத்தார் மேற்கொண்டு பயன்தரும் தொழில்களைத் தொடங்குவதற்காக அரசினரிட மிருந்து கடன் கேட்பதற்கு வாய்ப்பிருக்கிறதா?

6. பராமரித்து வர வேண்டிய ஆதாரங்களும் அணைக் கட்டும், கிடைக்கக் கூடிய உள்ளூர்ப் பாசனக் கொடைத் தொகை, ஒன்றியத்தார் பெற கொடை கவனமாகக் கணக்கிடப்பிட்டிருக்கிறதா? இந்த ஆண்டில் எத்தனை ஆதாரங்கள் பேணிக் காத்துவரப்பட்டன? சுழல் திட்டம் பின்பற்றப்படுகிறதா? (விரிவாகப் பரிசீலனை செய்ய வேண்டும்) சுழல் திட்டம் முன்னதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

7. கிராமப் பணிகள் கொடை.—கிராம நீர் வழங்கு திட்டத்துக்கான தேவை எவ்வளவு மட்டில் கிராமப் பணிகள் கொடையிலிருந்து பூர்த்தி செய்யப் படுகிறது?

இணைப்புச் சாலைகளுக்கான தேவை எவ்வளவு மட்டில் பூர்த்தி செய்யப் பட்டிருக்கிறது? உள்ளூர் நிலைமைகளையொட்டிப் பார்க்கும்போது, எந்தப் பணி இனத்துக்கு முன்னதாகக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது? (கிராம நீர் வழங்கு திட்டமா? இணைப்புச் சாலைகளா?)

அடுத்த ஆண்டுக்கான ஏற்பாடு சரியாகக் கணக்கிடப்பட்டுள்ளதா? ஒப்பளிப்பின் பரிமாணம் செய்யப்பட்ட ஏற்பாட்டுக்குப் பொருத்தமாயுள்ளதா? (அது அதிகமாயிருக்கவும் கூடாது, போதாமலும் இருக்கக் கூடாது) இப்

பரப்பில் சாலைகள் ஏற்படுத்துவதற்குச் சராசரி எவ்வளவு செலவு பிடிக்கும்? வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடு நியாயமானதா? பள்ளிக் கட்டிடங்களுக்கான தேவை எவ்வளவு மட்டில் பூர்த்தியாகியுள்ளது? பள்ளிக் கட்டிடங்கள் பற்றிய மதிப்பீடுகள், அதிகப்படியாக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குத் தொடர்புள்ளவைகளா?

8. உழவுக் கொடையின் கீழ் முன்னேற்றம் யாது? உழவுக் கொடையில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஊராட்சி ஒன்றியத்தின் தனி உள்ளூர்த் தேவைகளையொட்டி மீட்டாய்வு செய்யப்பட்டிருக்கின்றனவா? முழுவதும் அடங்குவதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா?

9. தொழில் திட்டத்தில் முன்னேற்றம்.

10. தொடக்கக் கல்வி பற்றிய மதிப்பீடுகள் மாணவர்கள் சேருவார்களென்று எதிர்பார்ப்பதற்குத் தொடர்புடையனவா? அவ்வாறு எதிர்பார்பது நியாயமானதா? தொடக்கக் கல்விக்குப் பிடிக்கும் செலவில் ஒன்றியத்தின் பங்கு என்ன? இதன்பொருட்டு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

11. அரசினருக்குச் சேர வேண்டிய நிலுவைக் கடன்கள் எவையேனும் உள்ளனவா? அப்படியானால், தவணைகளைத் திருப்பிச் செலுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

12. வரவு செலவுத் திட்டம் பற்றாக் குறையுள்ளதாயிருந்தால், பற்றாக் குறையை ஈடு பண்ணுவதற்குச் சொல்லப்படும் ஆலோசனைகளும் பரிந்துரைகளும் யாவை?

13. குறிப்புரை.

இணைப்பு III.

ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்.

மாவட்டம்.

ஊராட்சி ஒன்றியத்தின் வகை.

தொகுதி.

மக்கள் தொகை

நில வருமானம்.

	திருத்திய வரவு மதிப்பீடு, 1962–63	செலவுத் திட்ட மதிப்பீடு, 1963-64
	ரூ.	ரூ.
ரூ.		
பொது வரிவிதிப்பு—		
1. மொத்த தலவரி எவ்வளவு?		
2. சரியாகக் கல்விக் கணக்குக்கு மாற்றுவதற்காகத் தலவரியில் 4/9 பங்கு எதுவென்று ஊராட்சி ஒன்றியம் கணக்கிட்டிருக்கிறதா?		
3. கிராம ஊராட்சிகளுக்கு மாற்றப்பட்ட தலவரி யாது? அது தலைக்கு 20 காசுக்குக் குறைவாயிருக்கவில்லை?		
4. பேரூராட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட்ட தொகை யாது?		
5. நிகர உள்ளூர் வரி யாது?		
6. மதிப்பிடப்பட்ட உள்ளூர் வரித் தண்டமும் விதிப்பு வீதமும் யாவை?		
7. வட்டாரத்தின் வகைப்பாடு யாது?		
8. வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள தலவரி தண்டத்தை ஈடு செய்வதற்கான கொடை யாது?		

	திருத்திய மதிப்பீடு, 1962–63.	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, 1963–64.
	ரூ.	ரூ.

9. கேளிக்கை வரியின் மீதும் காட்சி வரியின் மீதும் மதிப்பிடப்பட்ட தண்டம் யாது? விதிப்பு வீதமும் யாது

10. பல்வகை வரி விதிப்பு முதலியவைகளி லிருந்து கிடைக்கும் வருமானம் யாது?

11. பொது வரி விதிப்பின் கீழ் மொத்த வரவுகள் யாவை?

II. நிருவாகம்—

1. இந்த இனத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட வருமானம் யாது?

2. தனிப் பஞ்சப்படி கொடையைப் பெற ஒன்றியம் தகுதியுள்ளதாயிருக்குமா? வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள தனி பஞ்சப்படி யாது?

3. நிருவாகத்தின் கீழ் செலவு யாது—
(1) பணியாளர்
(2) எதிர்பாராதச் செலவுகள்
(3) பயணப்படி
(4) பிற இனங்கள்
(5) முன்பணத்தை அரசினருக்குத் திருப்பிச் செலுத்துவது.

மொத்தம்

4. கிடைக்கக் கூடிய நிகர தலவரியி லிருந்து மேற்படி செலவைச் செய்ய முடியுமா? நிகர தலவரிக்கு மேற் கொண்டு பிடிக்கும் நிருவாகச் செலவை ஈடு பண்ணுவதற்கு வேண்டிய தொகை யாது?

5. வழிவகைகள் முன்பணத்தைத் திருப்பிச் செலுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

6. வழிவகைகள் முன்பணத்திலே ஒன்றியத்தினிடம் இருக்கும் இருப்பு யாது ?

III. போக்குவரத்து—

1. வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள தல சாலைகள் கொடை யாது? அது சரியாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறதா ?

2. 1961—62-இல் சாலைகளின் பராமரிப்புச் செலவு யாது ?

3. சாலைகளின் பராமரிப்புக்குப் பிடிக்குமென மதிப்பிடப்பட்ட செலவு யாது ?

4. சாலைகளின் பராமரிப்புக்குத் தல சாலைகள் கொடை உபரியாயிருக்குமா ? பற்றுக்குறையாயிருக்குமா ?

5. இந்த இனத்தின் கீழ் வேறு எவையேனும் வரவினங்கள் இருக்கின்றனவா ?

6. போக்குவரத்து என்னும் தலைப்பின் கீழ் உபரி/பற்றுக்குறை எவ்வளவு ?

IV சுகாதாரமும் சேமநலமும்—

1. கொடுக்கப்படத்தக்கதும் வரவு வைத்துக் கொண்டதுமான பெண்கள், குழந்தைகள் கொடை யாது ?

2. இந்த ஒன்றியம் வைத்துக்கொள்ளத் தகுதியுள்ள மகப்பேறு நிலையங்களின் எண்ணிக்கை.

3. எத்தனை நிலையங்களுக்காகக் கொடை கேட்கப் படுகிறது ?

4. மகப்பேறு நிலையங்களுக்குப் பிடிக்கும் செலவு யாது ?

5. கொடுக்கப்படத்தக்க 2/3 கொடை எவ்வளவு ?

6. மகப்பேறு நிலையங்களுக்காக ஊராட்சி ஒன்றியம் மேற்கொண்ட பொறுப்பு யாது ?

7. சுகாதாரப் பாதுகாப்புக்குப் பிடிக்கும் செலவு யாது ?

(அ) மருந்தகங்களுக்குப் பிடிக்கும் செலவு.

8. பெண்கள்—குழந்தைகள் திட்டத்துக்குப் பிடிக்கும் செலவு யாது ?

9. சுகாதாரத்துக்கும் சேம நலத்துக்கும் பிடிக்கும் மொத்த செலவு யாது ?

10. சுகாதாரத்திலும் சேம நலத்திலும் உபரி/பற்றுக் குறை யாது ?

V பயன்தரும் தொழில்கள்—

1. இந்த இனத்தின் கீழ் வருமான ஆதாரம் யாது ?

2. இந்த இனத்தின் கீழ் வருமானம் யாது ?

3. இந்த இனத்தின் கீழ் செலவு என்ன ?

4. இந்த இனத்தின் உபரிப்/பற்றுக் குறை என்ன

VI முதலீடுகள்—பொது—

பொதுக் கணக்கின் கீழ் மற்றக் கணக்குகளுக்கு மாற்றுவதற்குக் கிடைக்கிற நிகர இருப்பு என்ன ?

(1) பொது வரி விதிப்பு

(2) நிருவாகம்

(3) போக்குவரத்து

(4) சுகாதாரமும் சேமநலமும்

(5) பயன்தரும் தொழில்கள்

மொத்தம்

VII நிதிகளை மாற்றுவது—

1. மூலதனக் கணக்குக்கு மாற்றக் கருதியுள்ள தொகை.

2. கல்விக் கணக்குக்கு மாற்றக் கருதியுள்ள தொகை.

3. கல்விக் கணக்குக்காக உள்ளபடி தேவைப் படும் தொகை.

4. மற்றப் பணிகளுக்கு மாற்றக் கருதியுள்ள தொகை யாது ?

5. மாற்றின பிறகு பொதுக் கணக்கில் இருக்கிற மிச்சம்.

6. ஆரம்ப இருப்பு.

நிகர முடிவு இருப்பு

VIII மூலதனக் கணக்கு—

1. அடியிற்கண்டவைகளின் கீழ் வரவில் எடுத்துக் கொள்ளப்பட்ட கொடை யாது—

(i) இணைப்புச் சாலைகள்

(ii) நீர் வழங்கீடு

(iii) யுத்தப் பணிகள்

2. எடுத்துக் கொள்ளப்பட்ட கொடை அண்மையில் பிறப்பிக்கப்பட்ட விளக்க உரைகளின்படி உள்ளதா ?

3. வெவ்வேறு வகைகளில் சேர வேண்டிய உதவித் தொகைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனவா ?

4. அடியிற் கண்டவைகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள செலவு யாது ?

(1) இணைப்புச் சாலைகள்

(2) நீர் வழங்குத் திட்டம்

5. மூலதனத் தலைப்பின் கீழ் மொத்த செலவு.

6. பொதுக் கணக்கிலிருந்து மாற்றியவை நீங்கலாக மொத்த வரவினங்கள்.

7. உபரி/பற்றுக் குறை என்ன ?

8. வரவில் எடுத்துக் கொள்ளப்பட்ட பள்ளிக் கட்டிடக் கொடை எவ்வளவு ?

9. உதவித் தொகை மதிப்பிடப்பட்டிருக் கிறதா ?

10. இந்த இனத்தின் கீழ் செய்யக் கருது யுள்ள செலவு.

IX பள்ளி உணவுக் கணக்கு—

1. வரவில் எடுத்துக் கொள்ளப்பட்ட கொடை எவ்வளவு ?

2. அது சரியாகக் கணக்கிடப்பட்டிருக்கிறதா ?

X உற்பத்தி நிதிக் கணக்கு—

1. உழவுக் கொடைக்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு என்ன ?

2. தலப் பாசனக் கொடை

3. கதர்த் திட்டம்

4. கிராமக் கலைகளும் தொழில்களும்

XI கல்விக் கணக்கு—

1. 1962-63-க்கான திருத்திய மதிப்பீட்டில் கொடைகள் சரியாக வரவு வைக்கப் பட்டிருக்கின்றனவா?

2. 1962-63-க்கான தொடக்க இருப்பும் 1960-61, 1961-62-இல் விடுவிக்கப்பட்ட அதிகப்படிக் கொடையும் ஒத்திருக் கின்றனவா?

3. 1962-63-இன் கல்விக் கணக்கை நேர் கட்டுவதற்குப் பொதுக் கணக்கிலிருந்து மாற்றப்பட வேண்டிய தொகை எவ்வளவு?

4. 1963-64-க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள செலவு போதுமானதா?

5. 1963-64-க்கான கொடைகள் சரியாக வரவு வைக்கப்பட்டுள்ளனவா?

6. 1963-64-க்கான இறுதி இருப்பு சரியாகக் கணக்கிடப்பட்டுள்ளதா?

7. 1963-64-இல் கல்விச் செலவை நேர் கட்டு வதற்குப் பொதுக் கணக்கிலிருந்து கல்விக் கணக்குக்கு நிதிகளை மாற்றிக் கொள்ள ஒன்றியத்துக்கு அனுமதி கொடுக்க வேண்டுமா?

8. சமூகக் கல்விக்கான கொடை எவ்வளவு?

9. இத் தலைப்பின் கீழ் மதிப்பிடப்பட்ட செலவு என்ன?

10. கல்விக் கணக்கில் உபரி/பற்றுக் குறை எவ்வளவு?

11. பற்றுக் குறையைத் தவிர்ப்பதற்காகப் பொதுக் கணக்கிலிருந்து கல்வி நிதிக் கணக்குக்கு மாற்றக் கருதியுள்ள தொகை என்ன?

(XII) பொதுக் குறிப்புரை.

(1963 மார்ச் 15 ஆம் தேதியுள்ள 582 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

28. **ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் ஆட்சி அறிக்கைகளைத் தயாரித்து அனுப்புதல்.**—(1) ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றின் ஆணையாளரும், ஒவ் வோர் ஆண்டிலும் ஏப்ரல் முதல் தேதிக்குப் பிறகு கூடிய விரைவில், முந்திய ஆண்டிலே அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆட்சி பற்றிய அறிக்கை ஒன்றை, இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள I ஆம் இணைப்பிலுள்ள படிவத்தின்படி தயாரிக்க வேண்டும்.

(2) ஆண்டறிக்கையை இரண்டு பாகங்களில் தயாரிக்க வேண்டும்; அவையாவன:—(1) தன் பெயருக்கொத்த பகுதியாகிய அறிக்கை; (2) புள்ளி விவர உள்ளடக்கங்கள், தன் பெயருக்கொத்த பகுதியாகிய அறிக்கையைப் பாகங்களாகப் பிரிக்க வேண்டும்; ஒவ்வொரு பாகத்தையும், மேற்சொன்ன படிவத்தில் காட்டியுள்ளவாறு பத்திகளாகப் பிரிக்க வேண்டும். அறிக்கை முழுவதிலும் இந்தப் பத்திகளுக்குத் தொடர்ச்சியாக இலக்கமிட வேண்டும்; பத்திகளின் தலைப்புகளும் இலக்கங்களும் மேற்சொன்ன படிவத்தில் கொடுத் துள்ளவைகளோடு ஒத்திருக்கும்படி கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாகத்துக்கும் சம்பந்தப்பட்ட புள்ளி விவர உள்ளடக் கங்களுக்கு, மேற்கண்ட படிவத்தில் காட்டியுள்ளவாறு அப் பாகத்துக்கெனத் தொடர்ச்சியாக எழுத்துக் குறிப்பிட வேண்டும்.

(3) தன் பெயருக்கொத்த பகுதியாகிற அறிக்கையின் பத்தி ஒவ்வொன் றிலும், ஆணையாளர், மேற்சொன்ன படிவத்தில் அந்தப் பத்தியின் கீழ் சொல்லப் பட்டுள்ள விஷயங்களைப் பற்றி சுருக்கமாக் கூறி, அந்தப் பத்திக்குத் தொடர் புடைய புள்ளி விவர உள்ளடக்கம் அல்லது உள்ளடக்கங்களில் உள்ள இலக்கங் கள் பற்றி அவசியமாயிருக்கக் கூடிய விளக்கங்களைக் கொடுக்க வேண்டும்.

மேலும், ஆணையாளர், அந்தப் பத்தியின் பொருளுக்குப் பொருத்தமெனத் தாம் கருதுகிற வேறு எந்தச் செய்திகளையேனும் ஊகங்களையேனும் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

4. ஊராட்சி ஒன்றியக் குழுவின் நிருவாகம் பற்றி இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின்படி ஆணையாளரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையும், அந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எல்லா ஊராட்சிகளின் நிருவாகம் பற்றி இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின்படி ஆணையாளரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையையும் அச்சிட்டு, அந்த அறிக்கையைப் பற்றி ஆலோசிப்பதற்காக ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப்பினர்கள் கூடுவதற்குமுன் அவர்களுக்கு அவற்றின் படிகளை வழங்க வேண்டும்; அந்த அறிக்கையின் இரண்டு படிகளையும் அதன் உள்ளடக்கங்களையும், ஊராட்சி ஒன்றிய மன்றத் தீர்மானத்தின் படியையும், அந்த அறிக்கை சம்பந்தப்படுகிற ஆண்டுக்கு அடுத்துவரும் ஆண்டின் செப்டெம்பர் 1 ஆம் தேதிக்குள் கோட்ட ஆட்சியாளர் மூலமாக மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும். அந்த அறிக்கையையும் அது பற்றிய குழுவின் தீர்மானத்தையும், பொதுமக்கள் வரக்கூடிய இடங்களில் வைத்திருக்க வேண்டும்; அத்தகைய படி ஒன்றை, ஊராட்சி ஒன்றிய மன்றம் அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையில் ஒட்ட வேண்டும்.

5. (1958 ஆம் ஆண்டின் 35 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 55 ஆவது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் குறிப்பிட்டிருக்கிற பொது அறிக்கையை மாவட்ட ஆட்சியாளர் எந்தத் தேதிக்கு முன் அனுப்ப வேண்டுமோ அந்தத் தேதி, நவம்பர் முதல் தேதியாகும்.

இணைப்பு I.

(1 ஆவது விதியைப் பார்க்கவும்.)

ஆண்டுக்கான ன் ஆட்சி அறிக்கை

பாகம் I. தன்பெயருக்கொத்த பகுதியாகிய அறிக்கை.

I அமைப்பும் நிருவாகமும்— (i) அதிகார வரம்பு.—( ) அறிக்கை சம்பந்தப்படுகிற ஆண்டின் மார்ச் 31 ஆம் தேதியன்று இருந்தபடி ஊராட்சி ஒன்றியத்தின் பரப்பு (சதுர மைல் கணக்கில்)

(ii) அறிக்கைக்குட்பட்ட ஆண்டிலே ஊராட்சி ஒன்றியத்தின் அதிகார வரம்பில் மாறுதல்கள் எவையேனும் செய்யப்பட்டிருந்தால் அவை.

(iii) ஒன்றியத்தில் அடங்கியுள்ள ஊராட்சிகளின் இயக்கமும் பெயர்களும்.

(iv) மொத்த மக்கள் தொகை (கடைசியாக எடுக்கப்பட்ட குடிக் கணக்கு இலக்கங்களின்படி)—

(அ) ஆண்

(ஆ) பெண்

(இ) உழவுத் தொழில் செய்பவர்களின் எண்ணிக்கை.

2. ஆட்கள்—(அ) மன்றம்.

மொத்த எண்ணிக்கையில் மாறுதல்கள் இருந்தால், அவை.

அட்டவணையில் கண்ட சாதி

சேர்த்துக் கொள்ளப்பட்ட ———————————————

அட்டவணையில் கண்ட சாதி

உறுப்பினர்கள், பெண் உறுப்பினர்கள்
உறுப்பினர்கள் அல்லது பெண் உறுப்பினர்கள்

——————————————— இருந்தால் அவர்களின் எண்ணிக்கை.

(ஆ) இயக்குநர்களாகிய அலுவலர்கள்.—( ) தலைவர்—தலைவர் பெயர்—தேர்ந்தெடுக்கப்பட்ட தேதி—எந்த ஊராட்சிக்கு அவர் பிரதிநிதியாயிருக்கிறார் என்பது—நம்பிக்கையின்மைத் தீர்மானங்கள் வந்திருந்தால், அவை—பயணப்படி வாங்கப்பட்டிருந்தால், அவை—

(ii) துணைத் தலைவர்—பெயர்—தேர்ந்தெடுக்கப்பட்ட தேதி—எந்த ஊராட்சிக்கு அவர் பிரதிநிதியாயிருக்கிறார்களென்பது—தலைவரால் செய்யப்பட்ட அதிகார ஒப்படைப்பு.

(iii) ஆணையாளர்—பெயர்—எப்போது நியமிக்கப்பட்டார்; எவ்வளவு காலம் பொறுப்பு வகித்தார்.

(iv) வட்டார வளர்ச்சி உதவி அலுவலர்கள்—பெயர்—எப்போது அமர்த்தப்பட்டார்கள்; எவ்வளவு காலம் பொறுப்பு வகித்தார்கள்—(உள்ளடக்கம் 1).

3. தேர்தல்கள் —(i) தேர்தல் தகாராறுகள்.

(ii) தேர்தல் செலவு—(உள்ளடக்கங்கள் 2).

4. கூட்டங்கள்.—(i) கூட்டங்கள் நடத்துவதில் ஒழுங்கு- கூட்டங்களுக்கு உறுப்பினர்கள் வருவது—குறைவெண் இன்மையினுல் ஒத்தி வைக்கப்பட்ட கூட்டங்கள்.

(ii) இனங்களின் மொத்த எண்ணிக்கை—(அ) நிகழ்ச்சி நிரலில் எடுத்துக் கொள்ளப்பட்டவை;

(ஆ) தீர்வு செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை ;

(இ) ஒரு தடவையோ பல தடவைகளோ ஒத்தி வைக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை ; அதற்குரிய காரணங்கள்.

(iii) நடைமுறை விதிகளின் செயற்பாடு—(உள்ளடக்கங்கள் 3).

5. குழுக்கள்.—(i) சட்டப்படி அமைந்த குழுக்களின் எண்ணிக்கை; மற்றக் குழுக்கள்.

ஒவ்வொரு குழுவும் நடத்திய கூட்டங்களின் எண்ணிக்கை.

(iii) குறைவெண் இன்மை முதலியவைகளினுல் ஒத்தி வைக்கப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை.

(iv) குழுக்கள் செயலாற்றுவது பற்றிய பொதுவான சுருக்கக் குறிப்பு.

(v) கூட்டுக் குழுக்கள் இருந்தால் அவையும், அவைகள் செய்த பணியும்.

6. நிருவாகம்.—விதிகளில் பெரும் வரையறை நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பணியாளர் தொகுதி ஒவ்வொன்றுக்கும் உள்ளபடி பிடித்த செலவு—உறுப்பினர்களைப் பிரதிநிதிகளாக அனுப்புவது, மாநாடுகள் முதலியவற்றிற்குச் சந்தாக்கள் செலுத்துவது ஆகியவை சம்பந்தமாகப் பிடித்த, செலவு. அலுவலர்களையும் பணியாளர்களையும் தண்டிப்பது அவர்கள் செய்துகொள்ளும் மேல்முறையீடுகள் ஆகியவை பற்றிய விதிகள் செயற்படுவதன் மறு ஆய்வு ஒன்றையும் எழுதிச் சேர்க்கலாம்—அச்சிடுவதற்குப் பிடித்த செலவு—வழக்குகள்—வழக்குச் செலவுகள்.

7. பொதுச் சிப்பந்தி.—அரசுப் பணியாளர் தொகுதி அமைப்பிலும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர் தொகுதி அமைப்பிலும் அமர்த்திக் கொள்ளப் பட்ட பணியாளர்களைக் காட்டும் 'சிப்பந்திப் பட்டியில்' ஒன்றை இணைக்கலாம். ஒன்றியங்களுக்குள் நடக்கும் மாற்றங்களைப் பற்றிக் குறிப்பிடலாம்.

II. போக்குவரத்துக்கள்.—8. சிப்பந்தி.—பொறியாளர்களும் பார்வையாளர்களும், அவர்கள் தகுதிகளும் பணியும்—தனிப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தால் அவர்கள் பெரும் வரையறை நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அதனுடன் செலவை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

9. சாலைகள், பாலங்கள், தோணித் துறைகள், கட்டிடங்கள்.—
(அ) சாலைகள்—

(i) சாலைகளின் வகைகளும் நீளமும்

(1) தேசிய நெடுஞ்சாலைகள்

(2) மாநில நெடுஞ்சாலைகள்

(3) பெரிய மாவட்டச் சாலைகள்

(4) ஏனைய மாவட்டச் சாலைகள்

(5) ஊராட்சி ஒன்றியச் சாலைகள்

(6) ஊராட்சிச் சாலைகள்.

(ii) பயன்படுத்தப்படும் சல்லிக்கல், அது பொருத்தமானதா என்பது முதலியவை.

(iii) பின்வரும் விஷயங்களைப் பற்றி விரிவான தகவல் கொடுக்க வேண்டும் :—

(1) புதிதாக அமைக்கப்பட்ட கிராம இணைப்புச் சாலைகளின் மொத்த நீளம்.

(2) தூசி எழாமல் மேற்பரப்பு அமைக்கப்பட்ட சாலைகள் ; சல்லிக் கல் போடப்பட்ட சாலைகள், மண்சாலைகள் முதலியவற்றின் மொத்த நீளங்கள்.

(3) புதுப்பிக்கப்பட்ட, இடி நொடி சமமாக்கப்பட்ட் செப்பனிடப்பட்ட சாலைகளின் நீளங்கள் ; மேலே (1) ல் கொடுத்துள்ள மொத்த நீளத்திலிருந்து பிரித்துத் தனியாகக் காட்ட வேண்டும்.

(4) சாலைகள் முதலியவற்றின் பாராமரிப்புக்கான செலவு கடந்த மூன்றாண்டுகளுக்குரிய ஒப்பான இலக்கங்களுடன்.

(5) சல்லிக் கல் போடப்பட்டிராத சாலைகளுக்குச் சல்லிக் கல் போடுவதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா ?

(iv) நிரம்பப் போக்குவரத்து நடக்கும் நெடுகச் செல்லும் மார்க்கங்கள் (சிறப்பாக அகலத்தில்) போதுமானவையாயிருக்கின்றனவா? சாலைகளின் அகலம் போதுமானதாயிருக்கிறதா? அவற்றின் ஆக்கிரமிப்புகள் கட்டுப் படுத்தப்பட்டிருக்கின்றனவா? சாலைகளின் நிலைமையையும், ஆய்வு அலுவலர்களின் குறிப்புரையும்.

(v) உள்ளூர்ச் சாலைகள் கொடையிலிருந்தும் உதவித் தொகையிலிருந்தும் வரவுகள்.

(vi) பராமரிப்புப் பணிகளுக்காக உள்ளூர், சாலைகள் கொடைகளுக்கு மேற்பட்டு ஊராட்சி ஒன்றியக் குழு செலவிடும் தொகை (உள்ளடக்கம்—4).

ஆ. **பாலங்களும் தாம்போகிகளும் சிறு பாலங்களும்.**—(i) பெரிய பணிகள் இருந்தால், அவை—ஒவ்வொன்றுக்கும் மதிப்பிடப்பட்ட செலவு; முந்திய ஆண்டின் இறுதி வரையிலும் அறிக்கைக்குட்பட்ட ஆண்டிலும் செலவிடப்பட்ட தொகை; செலவிடப்பட இருக்கிற தொகை பெரிய பணி ஒவ்வொன்றும் இருக்கிற சாலையின் பெயரையும் சாலை வகையின் பெயரையும் குறிப்பிடவும்.

(ii) சிறு பணிகள்.—கட்டப்பட்ட அல்லது சீர்திருத்தப்பட்ட பாலங்கள், சிறு பாலங்கள் முதலியவற்றின் எண்ணிக்கை.

(அ) புதிய பணிகள் (ஆ) செப்பனீடுகள்—ஆகியவற்றுக்காகச் செலவிடப்பட்ட தொகை.

(iii) மூலதனம் எவ்வாறு எழுப்பப்படுகிறது (உள்ளடக்கம்—5).

(இ) **தோணித் துறைகள்.**—வரவுகளும் செலவுகளும்—கட்டண வீதங்கள் வசூல் முறைகள்—செய்து கொடுக்கப்பட்ட வசதிகள்.

(ஈ) **ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்கள்.**—கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பள்ளிக் கட்டிடங்கள் உட்பட, இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் முக்கியப் பணி; முடிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை; வரப்பற்றிய உதவித் தொகை முதலியன.

10. **சத்திரங்களும் தண்ணீப் பந்தல்களும்.**—( ) புதிதாக ஏற்படுத்தப்பட்ட சத்திரங்கள்; கைவிடப்பட்ட சத்திரங்கள்—சத்திரங்களில் இடம் கொடுக்கப் பெறும் வகுப்புக்கள்.

(ii) அவற்றின் மொத்தப் பராமரிப்புச் செலவு—அவற்றின் நிகரப் பராமரிப்புச் செலவு.

சத்திரங்களுக்கும் தண்ணீர்ப் பந்தல்களுக்கும் கட்டளைகள் இருந்தால், அவை ; அவற்றின் நிலைமை.

இலவச உணவு வழங்கப்பட்டால் அதற்குப் பிடிக்கும் செலவு ; உணவு வழங்கப் பெறுபவர்களின் எண்ணிக்கை (உள்ளடக்கம் 6).

11. **கருவிகளும் யந்திரங்களும் பண்டங்களும்.**— கருவிகளுக்கும் யந்திரங்களுக்கும் பண்டங்களுக்கும் பிடிக்கும் சாதாரண மொத்த செலவு.

அந்த செலவு, விளக்குப் போடுவது நீங்கலாக, போக்குவரத்துக்களுக்குப் பிடிக்கும் மொத்தச் செலவில் என்ன வீதாசாரம் என்பது.

(ii) இந்த ஆண்டில் மூலதனச் செலவு—மோட்டார், பாரவண்டிகள் முதலியவற்றை வாங்குவது.

(iii) ஜீப்பு—பெட்ரோல், செப்பனீடு, பராமரிப்பு ஆகியவற்றிற்குப் பிடிக்கும் செலவு.

12. **விளக்குப் போடுவது.**—சாதாரண வெளிச்சமும் அதிக வெளிச்சமும் தரும் விளக்குகளின் எண்ணிக்கை அதிகமாயிருக்கிறதா ? குறைந்திருக்கிறதா? ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் விளக்குப் போடுவதற்குப் பிடிக்கும் செலவு. மின்சார அமைப்புப்போல் விளக்கு போடுவதற்கான தனித் திட்டங்கள் (உள்ளடக்கம்—7).

III. கல்வி

தொடக்கக் கல்வி

13. **கல்வி வசதிகள் போதுமானவையாயிருத்தல்.**—(1) பள்ளிக்குப்போகும் வயதுடைய, அதாவது 6 வயது முதல் 11 வயது வரையிலும் 11 வயது முதல் 14 வயது வரையிலும் உள்ள, சிறுவர்களின் எண்ணிக்கை, இவர்களில் ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்? இவர்களின் உள்ளபடி பள்ளிக்குப் போகும் பையன்கள் எத்தனை பேர் ? பெண்கள் எத்தனை பேர் ? இன்னும் எத்தனை சிறுவர்களும் எத்தனை சிறுமிகளுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது பள்ளிக்குப் போகும் வயதுடைய சிறுவர்களின் மொத்த எண்ணிக்கையில் உள்ளபடி பள்ளிக்குப் போகும் சிறுவர்களின் எண்ணிக்கை இன்ன சதவீதம் என்பது பையன்கள் என்ன சதவீதம்? பெண்கள் என்ன சதவீதம்? எல்லாம் ஒருங்கிணைந்து எத்தனை சதவீதம்?

இந்த ஆண்டில் தொடக்கத்தில் I முதல் V வரையுள்ள வகுப்புக்களி விருக்கிற மாணவர்களின் எண்ணிக்கை.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் VI, VII, VIII, வகுப்புக்களில் கற்பிக் மாணவர்களின் எண்ணிக்கை.

இந்த ஆண்டிலே VI, VII, VIII, வகுப்புக்களில் சேர்க்கப்பட்ட மாண வர்களின் எண்ணிக்கை.

இந்த ஆண்டின் முடிவில் பள்ளிக்குப்போகும் வயதுடைய சிறுவர்களின் மொத்த எண்ணிக்கையில் பள்ளிக்குப் போகும் சிறுவர்களின் எண்ணிக்கை எத்தனை சதவீதம்?

(ii) இந்த ஆண்டின் தொடக்கத்திலே, இந்த ஒன்றியத்தில் (உயர் தொடக் கப்பள்ளிகள் உட்பட) தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை, இவற்றில், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் எத்தனை? உதவி பெறும் பள்ளிகள் எத்தனை?

இந்த ஆண்டில் (உயர்தொடக்கப்பள்ளிகள் உட்பட) புதிதாக ஆரம்பிக்கப் பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை இவற்றில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் எத்தனை? உதவிபெறும் பள்ளிகள் எத்தனை?

இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட உயர் தொடக்கப்பள்ளிகள் மட்டும் எத்தனை? இவற்றில், ஊராட்சி ஒன்றியப்பள்ளிகள் எத்தனை? உதவி பெறும் பள்ளிகள் எத்தனை?

மாணவர்கள் அதிகப்படியாகச் சேர்த்துக்கொள்வதை யொட்டி, புதிதாக உண்டாக்கப்பட்ட இடவசதி பற்றிய விவரங்கள்.

(iii) இந்த ஆண்டின் தொடக்கத்தில் I முதல் V வரை அமையும் வகுப்பு களுக்குக் கற்பிக்கும் இடைநிலைத்தர ஆசிரியர்களும் மற்றவர்களும் சேர்ந்து ஆசிரியர்கள் எத்தனை பேர்? இவர்களில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் எத தனை பேர் உள்ளனர்? உதவி பெறும் பள்ளிகளில் எத்தனை பேர் உள்ளனர்?

இந்த ஆண்டின் தொடக்கத்தில் VI, VII. VIII வகுப்புக்களில் கற்பிக் கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை இவர்களில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் எத்தனை பேர் உள்ளனர்? உதவி பெறும் பள்ளிகளில் எத்தனை பேர் உள்ளனர்?

இந்த ஆண்டின் தொடக்கத்தில் I, II, III, IV. V வகுப்புக்களில் கற் பிக்கும் இடைநிலைத்தர ஆசிரியர்களின் எண்ணிக்கை இவர்களில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் எத்தனை பேர் உள்ளனர்? உதவி பெறும் பள்ளிகளில் எத்தனை பேர் உள்ளனர்?

இந்த ஆண்டில் VI, VII, VIII வகுப்புகளுக்காகப் புதிதாய் அமர்த்தப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் எத்தனை பேர் உள்ளனர்? உதவி பெறும் பள்ளிகளில் எத்தனை பேர் உள்ளனர்?

(iv) I, II, III. IV, V வகுப்புக்களுக்குக் கற்பிப்பதற்காக ஆசிரியர்களின் மாதச் சமபளப்பட்டியலின் மொத்தம் இந்த ஆண்டுக்கான சராசரி VI, VII, VIII வகுப்புகளுக்குக் கற்பிப்பதற்காக ஆசிரியர்களின் மாதச் சம்பளப்பட்டியலின் மொத்தம். இந்த ஆண்டுக்கான சராசரி.

எல்லா வகுப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கும் மாதச் சம்பளப்பட்டியலின் மொத்த (இந்த ஆண்டுக்கான சராசரி).

இந்த ஆண்டின் தொடத்கத்திலும் இந்த ஆண்டின் முடிவிலும் I, II, III, IV, V வகுப்புகளில் ஒரு மாணவருக்குப் பிடித்த மாதச்செலவு.

இந்த ஆண்டின் தொடக்கத்திலும் இந்த ஆண்டின் முடிவிலும் I, II, III IV, V வகுப்புகளில் ஓர் ஆசிரியருக்குப் பிடித்த மாதச்செலவு.

இந்த ஆண்டின் தொடத்திலும் முடிவிலும் VI, VIIVIII, வகுப்புக்களில் ஒரு மாணவருக்குப் பிடித்த மாதச்செலவு.

இந்த ஆண்டின் தொடக்கத்திலும் முடிவிலும் VI, VII, VIII வகுப்புக்களில் ஓர் ஆசிரியருக்குப் பிடித்த மாதச்செலவு.

இந்த ஆண்டின் தொடக்கத்திலும் முடிவிலும் மொத்தத்தில் ஊராட்சி ஒன்றியத்துக்குத் தொடக்கக் கல்விக்காக ஒருவருக்குப் பிடித்த மாதச் செலவு.

அமைத்த படிவம் ஒன்றின்படி மேற்சொன்ன விவரங்களுக்காகக் கொடுக்க வேண்டும்.

(v) கட்டாயக் கல்வி முறையைப் புகுத்திச் செயற்படுத்துவது பற்றி செய்தி.

(vi) பள்ளிகளில் மருத்துவ ஆய்வு பற்றிய அறிக்கை.

(vii) பிற்பட்ட வகுப்பாளர்களுக்காகச் செய்துள்ள ஏற்பாடு (8, 9, 10, 11 உள்ளடக்கங்கள்).

14. பணியாளர் தொகுதி.—ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இருக்கிற மொத்த ஆசிரியர்களில், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் என்ன வீதாசாரப்படி இருக்கிறார்கள் என்பது.

அவர்கள் பணித் திட்டங்களும் சம்பளங்களும் திறமையும், பயிற்சி பெருத ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான ஏற்பாடுகள், அவர்களுக்கு வழங் கப்படும் பயிற்சி உதவிப் பணங்கள், ஊராட்சி ஒன்றியப்பள்ளிகளில் அவர்களை அமர்த்திக் கொள்வது.

(உள்ளடக்கம் 12)

15. இடவசதியும் தளவாடமும்.—ஊராட்சி ஒன்றியக்குழு வாடகைக்கு எடுத்துக்கொண்ட ஒரு கட்டிடத்தின் வாடகையோடு ஒப்பிடும்போது அம் மன்றத்துக்குச் சொந்தமான ஒரு கட்டிடத்தின் பராமரிப்புச் செலவு.

காற்ருேட்டம் வெளிச்சம், விளையாடுமிடம் போதுமானதா என்பது.

(உள்ளடக்கம் 13)

தொடக்கக் கல்விக்கான செலவைப் பங்கு போட்டுக்கொள்ளும் முறை.

16. 1962 நவம்பர் 8-ம் தேதியுள்ள 2427-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப்பல்வகை அரசாணையில் பிடித்து அவ்வப்போது தெளிவாக் கப்பட்டுள்ள ஆணைகளை யொட்டியது.

அறிக்கைக்குட்பட்ட ஆண்டுக்காக சமூகக்
கல்வி நீங்கலாக 'சாதாரண'
என்பதன் கீழ் தொடக்கக் கல்விக்குப் பிடிக்குமென
எதிர்பார்க்கப்படும் செலவு ரூ.

கழிக்க—தனிப்பஞ்சப்படிக் கொடை

இருப்பு

கழிக்க—இருப்பில் 18 சதவீதப்படி துணைக்கல்விக்கொடை

இருப்பு

கழிக்க—1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 118-ஆவது பிரிவையொட்டி நில வருவாய் ஒப்படைப்பைப்போல் ஒப்பளிக்கப்பட வேண்டிய செலவில் முதல் பகுதி.

இருப்பு

கழிக்க—செலவின் இரண்டாம் பகுதியும் அதற்கும் பிந்திய பகுதியும்.

வட்டாரத்தின் வகைப்பாட்டையொட்டி அரசினர் பங்கு
கழிக்க—தலவரியின் பாகத்திலிருந்து
செய்யப்பட வேண்டிய செலவு

இருப்பு

பொதுநிதிகளிலிருந்து கொடுக்கப்பட வேண்டிய ஊராட்சி ஒன்றியத்தின் பங்கு

IV. சுகாதாரமும் சேமநலமும்

(அ) மருத்துவ உதவி

17. **போதுமானதா என்பது.**—(i) ஊராட்சி ஒன்றியப் பரப்பிலிருக்கிற மருத்துவ நிறுவனங்களில் எண்ணிக்கையும் பெயர்களும், தாலுகா தலைமையிட நிறுவனங்கள் எவையேனும் உள்ளனவா ?

(ii) ஊராட்சி ஒன்றிய நிறுவனங்களில் உள்ள பணியாளர் தொகுதி.

(iii) பெண்களுக்காகவும் குழந்தைகளுக்காகவும் தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால், அவை.

18. **நோயாளிகள்.**—ஒவ்வொரு நிறுவனத்தில் சிகிச்சை செய்யப்பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை, ஒரு நோயாளிக்குப் பிடிக்கும் செலவு (உள்ளடக்கம் 14)

19. **இடவசதியும் தளவாடமும்.**—(i) கட்டிடங்களின் தன்மையும் தகுதியும் அவசியமானால் மருந்தகங்களில் அவசர காலப் படுக்கைகளை அமைப்பதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்பதைக் கண்டெழுதவும்.

(ii) தளவாடம், கீழ்நிலைப் பணியாளர் தொகுதி ஆகியவை போதுமா என்பது.

ஆய்வு அலுவலர்களின் குறிப்புரைகள்

(iv) மூலதனச் செலவும், அதற்கு எப்படிப் பண உதவி படுகிறதென்பதும்.

(ஆ) நோய்த்தடுப்பு மருந்து.

20. **அமைப்பும் பணியாளர் தொகுதியும்.**—சுகாதார ஆய்வாளர்கள் அவர்களுக்குப் பிடிக்கும் செலவு.

பிரசாரம் தானகவே செய்யப்பட்ட வேலை சுகாதார சேமநல அமைப்பு. தேசிய சுகாதார குழந்தைகள் வாரக் கொண்டாட்டங்கள்.

21. பிறப்பு வீதம், மகப்பேறு உதவி குடும்பத்திட்டம்.—(i) பிறப்புப் பதிவும் பிறப்பு வீதமும், பொருத்த மின்மை இருந்தால் விளக்கவும்.

(ii) பணியாற்றுகிற மகப்பேறு கால உதவியாளர்களின் எண்ணிக்கை யும் அவர்கள் திறமையும்.

(1) ஊராட்சி ஒன்றியம்.

(2) பிற.

(iii) தகுதிபெற்ற பேறு கால உதவியாளர்கள் கவனித்த பதிவான பிறப்புக்களின் சதவீதம்.

(iv) தாதிப்பெண்கள் செய்யும் பணியின்தரத்தை உயர்த்த ஊராட்சி ஒன்றியக் குழு செய்த ஏற்பாடுகள்.

(v) குழந்தை மரணம், சுகாதார சேமநலக் கழகம், குழந்தை வளர்ப்பு நிலையம் முதலியவை போன்ற தன் விருப்பார்ந்த கழகங்கள், பிரசாரம், துணைச் சட்டங்களைச் செய்வதும் செயற்படுத்துவதும், சுகாதாரப் பார்வையாளர்கள் —அவர்கள் பயிற்சியும் பணியும்.

(vi) மகப்பேறு, குழந்தை நல நிலையங்கள் 10,000 பேருக்கு ஒன்று என்னும் வீதப்படி, இந்த ஒன்றியம் வைத்துக்கொள்ள உரிமை பெற்றிருக்கிற நிலையங்களின் எண்ணிக்கை இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்தவைகளின் எண்ணிக்கை, இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை, இந்த ஆண்டின் முடிவிலிருந்தவைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நிலையத்திலும் செய்யப்படும் பணியின் தன்மை.

(உள்ளடக்கம் 15)

(vii) குடும்பத் திட்டம்—சொல்லப்படும் ஆலோசனையும் செய்யப்படும் உதவியும், வசதிகள் செய்து கொடுக்கப்பெற்றுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை.

இந்த ஆண்டில் அறுவைகள் செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை (ஆண்கள், பெண்கள், தனித்தனியாக).

'முன்னேடி மலடாக்கம்' பூர்த்தி செய்யப்பெற்றுள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கை.

22. **இறப்பு வீதம் கொள்ளை நோய்கள் குறித்த காணும் கொள்ளை நோய்கள்**—(i) முந்திய ஆண்டின் இலக்கங்களிலிருந்தும் முந்திய ஐந்தாண்டின் சராசரியிலிருந்தும் வேறு பாடுகளையும், வேறுபாடுகளுக்காக காரணங்களையும் குறித்துக் கொள்ளவும்.

(ii) (அ) காய்ச்சல்கள் (ஆ) கழிச்சல், சீதபேதி (இ) சுவாச சம்பந்தமான நோய்கள் ஆகியவற்றினுல் மைல் ஒன்றுக்கு நேரிடும் மரண வீதத்தைக் கணக்கிட்டுப் பொது சுகாதாரத் துறை இயக்குநரின் கடைசி ஆண்டறிக்கையில் இம்மாநிலத்துக்காகக் கொடுக்கப்பட்டுள்ள வீதங்களுடன் ஒப்பிட வேண்டும். சராசரிக்கு மேற்பட்ட வீதங்களுக்கான காரணங்களைக் கண்டறிவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைக் குறிப்பிட வேண்டும்.

(iii) வாந்தி பேதித் தொற்றின் மூலகாரணங்களும் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு முறைகளும்.

(iv) பெரியம்மை வராதபடித் தடுப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள்.

அம்மை குத்தல், அம்மை குத்துபவர்கள் எண்ணிக்கை முதன்முறையாகவும் இரண்டாம் முறையாகவும் பலனளிக்கும் வகையில் அம்மை குத்தப் பெற்றவர்களின் எண்ணிக்கை.

பலனளிக்கும் வகையில் மறுபடியும் அம்மை குத்தப்பெற்றவர்களின் எண்ணிக்கை. மறுபடியும் அம்மை குத்திக் கொள்ள ஊக்கமளிப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள்.

(v) பிளேக்கு நோய்த் தொற்று ஏற்பட்டிருந்தால் அதற்கு மூல காரணங்கள், எந்தெந்த இடங்களில் இந்த நோய் மிக அதிகமாகக் காணுகிற தென்பது.

பிளேக்கு நோய் வராமல் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட (அ) பருவ கால ஏற்பாடுகள் ; (ஆ) நிலையான ஏற்பாடுகள்.

(vi) மலேரியா மிக அதிகமான பெருக்குக் காணும் இடங்களைக் கண்டறிவதற்கும் தொற்றின் மூலகாரணங்களைத் தெரிந்து கொள்வதற்கும் அவற்றை அடியோடு ஒழிப்பதற்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

(vii) கொக்கிப்புழுநோய் காணுவதும் அதற்குச் சிகிச்சையும் பெறப்பட்ட விளைவுகள்.

(viii) துணைச் சட்டங்களும் அவைகள் செயற்படுவதும் (16-ஆவது, 17-ஆவது உள்ளடக்கங்கள்).

23. சுகாதாரத் துப்புரவு.—(அ) உணவுக் கலப்படம் முதலியவை.—

(i) சிற்றுண்டிச் சாலைகள், உணவு வழங்கிடுகள் மிட்டாய்க்கடைகள் முதலிய வற்றிற்கு உரிமம் வழங்குவது மூலமாக உணவுக் கலப்படத்தைத் தடுப்பதற்குச் செய்யப்பட்ட ஏற்பாடுகள், உணவுக்கலப்படச் சட்டம் இப்பரப்பிலும் அமலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா? அப்படியானல், உணவு தூய்மை யாயிருக்கும்படி செய்வதற்காக, மேற்படி சட்டப்பிரகாரம் எடுத்துக் கொள்ளப் பட்ட நடவடிக்கை.

(ii) உரிமத்தின் நிபந்தனைகளும் அவற்றை அமலுக்குக் கொண்டு வருவதும்.

(iii) துணைச் சட்டங்களைச் செயற்படுத்துவது. வெறுப்பைத் தருகிற தீங்கான சட்டத்துக்குப் புறம்பான (இதில் எதனைக் குறிக்கிறது? முடிவு செய்யவும்).

(ஆ) அபாயகரமான அருவருப்பான தொழில்கள்.—(i) மக்கள் தொகை நெருக்கமாயிருப்பதையொட்டி அபாயகரமான அருவருப்பான தொழில்கள் எங்கெங்கே நடக்கின்றன என்று கண்டுபிடிக்கச் செய்யப்படும் ஏற்பாடுகள், சம்பந்தப்பட்ட சமூகங்களுக்கு அமையும் வசதி.

(ii) உரிமங்கள், உரிமங்களின் நிபந்தனைகள்.

(iii) துணைச் சட்டங்கள்.

(இ) சந்தைகளும் திருவிழாக்களும்.—(i) ஊராட்சி ஒன்றியக் குழுவின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட முக்கியமான சந்தைகளும் திருவிழாக்களும், அத் திருவிழாக்களின் தேதிகளின் அவர்களுடைய சுகாதாரத்துக்காகவும் வசதிக் காகவும் செய்யப்பட்ட தனி ஏற்பாடுகளின் தன்மை.

கூட்டுக்குழுக்கள், அவைகளின் அமைப்பும் பணியும், கோயில் அதிகாரிகள் இருந்தால் அவர்கள் கூட்டுறவு தனி ஏற்பாடுகளுக்குப் பிடிக்கும் செலவு.

(iii) அடியிற் கண்டவைகளிலிருந்து வரவுகள் :—

(1) யாத்திரிகர்களுக்கு வரி.

(2) கட்டணங்கள்.

(3) உதவித்தொகை.

(4) அரசுக் கொடைகள்.

(5) செய்யப்பட்ட ஏற்பாடுகளுக்குப் பிடித்த நிகர செலவு.

(iv) செய்யப்பட்ட ஏற்பாடுகளின் விளைவுகள், சந்தை அல்லது திருவிழாவின்போது பொதுச் சுகாதாரம்.

24. நீர்வழங்கீடு.—குழாய் அல்லது பாதுகாக்கப்பட்ட நீர் வழங்கீட்டுத் திட்டத்தின்படி, நீர் வழங்கப்பெறும் கிராமங்கள்—சிற்றூர்கள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை—அமைப்பின் தன்மையும் வழங்கீட்டின் பரப்பும்—கிணற்றிலிருந்தும் உயர நீர்த்தொட்டிகளிலிருந்தும் நீர் வழங்கப்பெறும் கிராமங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை, இந்த ஆண்டுத் தொடக்கத்தில் இருந்தவைகளின் எண்ணிக்கை, இந்த ஆண்டில் தோண்டப் பட்டவைகளின் அல்லது கட்டப்பட்டவைகளின் எண்ணிக்கை, இந்த ஆண்டின் முடிவிலிருந்தவைகளின் எண்ணிக்கை—பிடித்த செலவு முழுக்கொடை அடிப் படையின் பேரிலுள்ள பணிகளின் எண்ணிக்கை, இந்த ஆண்டில் முடிக்கப் பட்டவைகளின் எண்ணிக்கையும் முடிக்கப்படாமலிருப்பவைகளின் எண்ணிக் கையையும் ஒப்பிட்டுப்பார்க்கலாம்—வேறுநீர் வழங்கீட்டு ஆதாரங்கள்.

25. கால்நடை மருத்துவ உதவி.

26. வடிகால் அமைப்புத் திட்டம்.

(இ) பொதுச் சுகாதாரம் (பல்வகை).

27. பொதுச் சுகாதாரமும் பாதுகாப்பும் (பல்வகை).—தீப்பிடிக்காமல் பாதுகாப்புதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள்.

வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பு, தெருச்சுற்றி நாய்களை அழித்து விடுதல் முதலியவை.

28. சமூகக் கல்வித் திட்டம்.—1962 பெப்ரவரி 6-ஆம் தேதியுள்ள 30-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித்துறை அரசாணையுடன் அனுப்பப் பட்ட மாதிரித் திட்டத்தைச் செயற்படுத்துவது பற்றிய விவரங்கள்.

பெண்கள்—சிறுவர் நலம்.

இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்த மாதர் சங்கங்களின் எண்ணிக்கை.

இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை.

இந்த ஆண்டின் முடிவிலிருந்தவைகளின் எண்ணிக்கை

வாங்கப்பட்ட கொடைகள் பற்றிய விவரங்கள்.

கொடையில் செலவு எவ்வளவு சதவீதம் என்பது மேற்கொள்ளப்பட்ட தனி அல்லது முக்கியமான நடவடிக்கை பற்றிய விவரங்கள்.

(v) பயன்தரும் தொழில்கள்.

29. பொது.—தொழில் வளர்ச்சியின் சாத்தியக்கூறு பற்றிய ஆய்வு.

30. அங்காடிகள்.— (i) ஊராட்சி ஒன்றிய அங்காடிகள், ஊராட்சி அங்காடிகள் வார அங்காடிகளின் எண்ணிக்கை, நாளங்காடிகளின் எண்ணிக்கை.

(ii) வரவுகளும் செலவுகளும் உபரி கண்டால் அது எவ்வாறு பயன் படுத்தப்படுகிறது?

(iii) செய்ய வேண்டிய சீரமைப்புக்கள், வளர்ச்சியின் சாத்தியக் கூறுகள், வருங்காலக் கொள்கை.

(iv) தனியார் அங்காடிகள் எண்ணிக்கை, உரிமக் கட்டணங்கள் மூல மாகக் கிடைக்குமென மதிப்பிட்டதில் எவ்வளவு வந்தது ? உரிம நிபந்தனைகளை அமலாக்குவது.

(உள்ளடக்கம் 18.)

(v) தொழிற்சாலைகளும் தொழில்களும் செலுத்தப்படும் கட்டுப்பாடு.

31. மரம் நடுதலும் பூங்காக்களும்.

32. நில அபிவிருத்தி (i) சாலை ஓர விற்பனை மேடைகள்.

(ii) ஆக்கிரமிப்புகள்.

(அ) ஆணையாளர் ஆய்ந்து பார்த்தவைகளின் எண்ணிக்கை.

(ஆ) பின்வரும் வகைகளின் கீழ் தீர்வு செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை—உரிமம் கொடுக்கப்பட்டவை, குத்தகைக்கு விடப்பெற்றவை, புறக்கணிக்கப்பட்டவை, ஒப்படை செய்யப்பெற்றவை, அகற்றப்பட்டவை.

VI. நிலத்தின் பயனிடும் பாசனமும்.

33. நிலப்பரப்பு, சாகுபடியான பரப்பு முதலியவை—

நிலப்பரப்பு—

(அ) நன்செய்.

(ஆ) புன்செய்.

(ii) நிகர சாகுபடியான பரப்பு—

(அ) நன்செய்.

(ஆ) புன்செய்.

(iii) ஒரு தடவைக்கு மேல் சாகுபடி செய்யப்படும் பரப்பு—

(அ) நன்செய்.

(ஆ) புன்செய்.

(iv) நிகர பாசனப்பரப்பு.

(v) ஒரு தடவைக்கு மேல் பாசனம் செய்யப்பெறும் பரப்பு—

(vi) பாசனம் அல்லது வேறு ஆதாரம்—

(அ) கிணறுகள்.

(ஆ) குளங்கள்.

(இ) வாய்க்கால்கள் (மைல் கணக்கில் நீளம்).

(ஈ) பிற.

(vii) உரித்தாக்கப்பட்டுள்ள குளங்களின் எண்ணிக்கை.

(viii) செப்பனிடப்பட்டவைகளின் எண்ணிக்கை.

(ix) செலவிடப்பட்ட தொகை.

(x) குடிமராமத்து நிறைவேற்றம்—நன்செய் பலனடைந்த ஏக்கராப் பரப்பு.

(xi) நீர்ப்பாசனக் கொடையின் மொத்தத்தொகை.

(xii) போதுமானதா?

(xiii) கொடைக்கு மேற்பட்டுச் செலவிடப்பட்ட தொகை.

(xiv) விதித்து வாங்கப்பட்ட தலபாசனக் கட்டணங்கள்.

(xv) அரசினரால் ஒப்பளிக்கப்பட்ட அதிகப்படியான குடி மராமத்துக் கொடையின் தொகை—

(i) ஊராட்சிகளுக்கு.

(ii) ஊராட்சி ஒன்றியங்களுக்கு.

(xvi) குடிமராமத்துக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட ஆதாரங்களின் எண்ணிக்கை; பூர்த்தியானவைகளின் எண்ணிக்கை; எத்தனை ஏக்கரா பரப்பு அவைகளினுல் பயன்படுகிறதென்பது ஊராட்சிகள் விதிக்கும் குடிமராமத்து கட்டணங்களின் தொகை.

VII. உழவுக்கொடையின் படிக்கான திட்டங்கள்.

(i) ஈடு செய்வதற்கான கொடைகளின் கீழும் ஈடு செவதல்லாத கொடையின் கீழும் இந்த ஆண்டில் இயல்பான சாதனைகளும் நிதி சாதனைகளும்.

(ii) ஊராட்சி வளர்ச்சி ஏற்பாட்டு வரவு-செலவு திட்டப்படிக் கிடைக்கிற மொத்த வழிவகை ஏற்பாட்டில் இன்ன சதவீதம் என்பது.

(iii) இன்றியமையாத இனங்கள் முழுவதும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, உள்ளபடி அமலாக்கப்படுகின்றனவா?

VIII. நிதி நிலை.

35. (1) பொது.—(i) நில வருவாய்.

i) உள்ளூர் வரித்தண்ட விதம்.

(iii) கேளிக்கைகள், காட்சி வரிகளின் மீது தண்ட வீதம்.

(iv) உள்ளூர்ப் பாசனக் கட்டண வீதம் (1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 85 ஆவது பிரிவு).

(2) 1963 மார்ச் 14 ஆம் தேதியுள்ள 573-ம் எண் கிராம முன்னேற்றமும் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட ஒருங்கிணைந்த 1 ஆம் எண் படிவப்படி இந்த ஆண்டில் ஆரம்ப இருப்பும் முடிவு இருப்பும் மொத்த வரவுகள், செலவு ஆகியவற்றின் அளவும்.

(3) பயன்தரும் தொழில்கள், அரசுக்கொடைகள் ஒன்றியத்திலிருந்து வர வேண்டிய கடன்கள், இவை தொடர்பான இருப்புகள்.

(4) இந்த ஆண்டில் வழிவகை நிலை.

36. சாதாரண வள ஆதாரங்கள்.—( ) 1963 மார்ச் 14-ஆம் தேதியுள்ள 573-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் சொல்லப்பட்ட ஒருங்கிணைந்த II ஆம் III ஆம் எண் படிவங்களின் பிரகாரம் எல்லா முகாந்தரங்களிலும் வரவும் செலவும்.

(ii) 1963 மார்ச் 15-ஆம் தேதியுள்ள 582-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட அமைத்த படிவத்தில் சாதாரண பொதுக்கணக்கு என்பதன்கீழ் வரவுகளும் செலவும்.

37. மூலதனச் செலவு—மூலதனப் பணிகளுக்கான மொத்தச் செலவு.—

(i) ஒப்படைக்கப்பட்ட வளர்ச்சிப் பணிகளுக்காக—

(அ) இணைப்புச் சாலைகள்.

(ஆ) கிராம நீர் வழங்கு திட்டங்கள்.

(இ) பள்ளிக் கட்டிடங்கள்.

) பிற இனங்களுக்காக.

(iii) மேலே (i) இனத்தில் குறிப்பிடப்பட்ட வளர்ச்சிப் பணிகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அரசுக் கொடையும் இப்பணிகள் சம்பந்தமாய் வரப்பெற்றுக்கொள்ளப்பட்ட உதவித் தொகையும்.

ஏற்பாட்டின்படிக்கான வரவு-செலவுத் திட்டத்தின்படி கிடைக்கிற ஒதுக்கங்களை யொட்டி வளர்ச்சிப்பணிகளினால் ஈட்டிய அரசுக் கொடையின் சதவீதம்.

(v) கடன்களிலிருந்து கொடுக்கப்பட்ட செலவுத்தொகை.

38. கடன்.—இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்த கடன், இந்த ஆண்டில் வாங்கப்பட்ட கடன், இந்த ஆண்டில் திருப்பிச் செலுத்தப்பட்ட கடன், இந்த ஆண்டின் முடிவில் எஞ்சியிருந்த கடன்.

வருவாய் தரும் உடைமைகளை அபிவிருத்தி செய்வதற்காக வாங்கப்பட்ட கடனையும் மற்றக் கடன்களையும் வேறுபடுத்திக்காட்டுக.

முந்திய ஆண்டின் நிலுவைகளின் பொருட்டும், அறிக்கைக்குட்பட்ட ஆண்டுக்காகவும், கடனுக்கு வட்டியாகச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை.

39. முதலீடுகள்.

40. தணிக்கை.—ஆராய்வாளர் ஆய்வுக் குறிப்புரைகள் எழுதியிருந்தால் அவை (19-ஆம், 20-ஆம் உள்ளடக்கங்கள்).

41. பொதுக் குறிப்புகள்.—பிரமுகர்கள் வருகையைப்பற்றிய குறிப்பீடு இந்த ஆண்டில் ஊராட்சி ஒன்றியக் குழுவின் குறிப்பிடத்தக்க செயல்கள்.

ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் ஆட்சி அறிக்கை.

சுருக்கம்.

I. அமைப்பும் நிருவாகமும்.

1. அதிகார வரம்பு.

2. ஆட்களின் தொகுதி.

(அ) மன்றம்.

(ஆ) இயக்குநர்களாயுள்ள அலுவலர்கள்.

3. தேர்தல்கள்.

4. கூட்டங்கள்.

5. குழுக்கள்.

6. நிருவாகம்.

7. பொதுப் பணியாளர் தொகுதி.

II. போக்குவரத்துக்கள்.

8. பணியாளர் தொகுதி.

9. சாலைகள், பாலங்கள், தோணித்துறைகள், கட்டிடங்கள்.

(அ) சாலைகள்.

(ஆ) பாலங்கள், தரம் போகிகள், சிறு பாலங்கள்.

(இ) தோணித் துறைகள்.

(ஈ) ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்கள்.

10. சத்திரங்கள், தண்ணீர்ப்பந்தல்கள்.

11. கருவிகள், இயந்திரங்கள், பண்டங்கள்.

12. விளக்கேற்றுதல்.

III கல்வி தொடக்கக் கல்வி.

13. கல்வி வசதிகள் போதுமானவையா?

14. பணியாளர் தொகுதி.

15. இடவசதி தளவாடம்.

16. செலவைப் பங்கு போட்டுக்கொள்ளும் முறை.

IV சுகாதாரமும் சேமநலமும்.

(அ) மருத்துவ உதவி.

17. போதுமானதா?

18. நோயாளிகள்.

19. இடவசதி தளவாடம்.

(ஆ) நோய்த் தடுப்பு மருந்து.

20. அமைப்பும் பணியாளர் அமைப்பும்.

21. பிறப்பு வீதம், மகப்பேறு உதவி குடும்பத் திட்டம்.

22. இறப்பு வீதம், கொள்ளைநோய்கள் ஒரு வட்டாரத்தில் காணும் கொள்ளை நோய்கள்.

23. சுகாதாரத் துப்புரபிரிவு.

(அ) உணவுக் கலப்படம் முதலியவை.

(ஆ) ஆபத்தான அருவருப்பான தொழில்கள்.

(இ) சந்தைகளும் திருவிழாவும்.

24. நீர் வழங்கிடு.

25. கால்நடை மருத்துவ உதவி.

26. வடிகால் ஏற்பாடு.

(இ) பொதுச் சுகாதாரம்—பல்வகை.

27. பொதுச் சுகாதாரமும் பாதுகாப்பும்.

28. சமூகக் கல்வித் திட்டம்.

V பயன்தரும் தொழில்கள்.

29. பொது.

30. அங்காடிகள்.

31. மரம் நடுதலும் பூங்காக்களும்.

32. நில மேம்பாடு.

VI நிலத்தின் பயனீடும் பாசனமும்.

33. நிலப்பரப்பு, சாகுபடியான பரப்பு முதலியவை.

34. உழவுக்குக் கொடையின் கீழான திட்டங்கள்.

(i) இந்த ஆண்டில் இயல்பான சாதனைகளும் நிதி சாதனைகளும்.

(ii) ஊராட்சி வளர்ச்சி ஏற்பாட்டு ரீதியான வரவு செலவுத் திட்டத்தின் கீழ்க் கிடைக்கிற மொத்த அளவில் இன்ன சதவீதம் என்பது.

நிதி நிலைமை.

35. பொது.

36. சாதாரண வள ஆதாரங்கள்.

37. மூலதனச் செலவு.

38. கடன்.

39. முதலீடுகள்.

40. தணிக்கை.

41. உடைமைகளும் பொறுப்புக்களும்.

42. பொதுக் குறிப்புரை.

பாகம் II. புள்ளி விவர உள்ளடக்கங்கள்.

பொது விளக்க உரைகள்.

1. நிதி இலக்கங்களை மிக அண்மையிலுள்ள ரூபாயாக முழுமையாக்க வேண்டும்.

2. ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்டுகளுக்காக ஆண்டு இலக்கங்களைக் கொடுக்க வேண்டியிருந்தால், அவைகளை இறங்கு வரிசையில் எழுத வேண்டும். அதாவது கடைசி ஆண்டை முதலிலும் முதலாண்டைக் கடைசியிலும் எழுத வேண்டும்.

3. அறிக்கைக்குட்பட்ட ஆண்டு அல்லாத மற்ற ஆண்டுகளுக்கான இலக்கங்களைச் சிவப்பு மையில் எழுதவேண்டும்.

4. அச்சிட்ட படிவம் போதாதென்று தெரிய வந்தால், நேர்த்தியாகக் கோடிட்ட அதிகப்படியான தாள்களை இணைத்துக் கொள்ளவேண்டும்.

1. ஆட்களின் தொகுதி.

ஆண்டு.	மக்கள் தொகை (சென்ற குடிக் கணக்கின்படி)	19 மார்ச் 31 ஆம் தேதியன்று உள்ளபடி மொத்த எண்ணிக்கை.					
		அட்டவணையில் கண்ட சாதியார்கள்.		பெண்கள்.			
		தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.	சேர்த்துக்கொள்ளப் பட்டவர்கள்.	தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.	சேர்த்துக்கொள்ளப் பட்டவர்கள்.	மற்றவர்கள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)

2. தேர்தல்கள்.

ஆண்டு.	தேர்தல்களின் மொத்த எண்ணிக்கை.	போட்டியில்லாத தேர்தல்களின் எண்ணிக்கை.	சம்பந்தப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை.	வேட்பாளர்களின் எண்ணிக்கை.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)

3. கூட்டங்கள்.

ஆண்டு.	கூட்டங்களின் எண்ணிக்கை.			ஒப்படைக்கப்பட்ட உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில், ஒவ்வொரு கூட்டத்துக்கும் வந்திருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை சராசரியில் இன்ன சதவீதம் என்பது.
	கூட்டப்பட்டவை.	குறைவெண் இன்மையால் ஒத்திவைக்கப்பட்டவை.	காலமின்மையால் அல்லது வேறு காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டவை.	
(1)	(2)	(3)	(4)	(5)

4. சாலைகள்

(i) கிராம இணைப்புச் சாலைகள் அமைத்தல்

(1) புதிய சாலைகளின் பெயர்கள்.	(2) இணைக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை.	(3) மைல் தொலைவு.	(4) அமைப்பதற்குப் பிடிக்கும் செலவு.	(5) சாலையின் வகை.	(6) ஒரு மைல் தொலைவு அமைப் பதற்குப் பிடிக் கும் சராசரி செலவு.	(7) மொத்த செலவு.

இன்னவிடத்திலிருந்து உதவித் தொகை வந்ததென்பது.

(8) அரசுக் கொடை.	(9) ஊராட்சி ஒன்றியம்.	(10) ஊராட்சிகள்.	(11) பொதுமக்கள்.	(12) புதிய சாலைகள் உட்பட சாலை களின் மொத்த எண் ணிக்கை.	(13) குறிப்புரை.

(ii) ஊராட்சி ஒன்றிய சாலைகளின் பராமரிப்பு

(1) ஒப்படைக்கப்பட்ட தள சாலைகள் கொடை.

(2) சாலைகளின் எண்ணிக்கை.

(3) மொத்த நீளம்.

(4) இந்த ஆண்டில் பராமரித்து வரப்பட்ட நீளம்.

(5) பராமரிப்பின் வகை.

(6) பராமரிப்புச் செலவு.

(7) மைல் ஒன்றுக்குச் சராசரிச் செலவு.

(8) செய்யப்பட்ட தனி சீரமைப்புகள் எவையேனும் இருந்தால் அவை.

(9) உள்ளூர்ச் சாலைகள் கொடை உபரியாயுள்ளதா? பற்றுக்குறையாயுள்ளதா?

(10) 10,000 ரூபாய்க்கு மேற்படாத மதிப்புள்ள மூலதனத் தன்மை வாய்ந்த பணி ஏதேனும் மேற்கொள்ளப்பட்டதா?

(iii) இந்த ஆண்டில் செய்யப்பட்ட செலவு

புதுக் கட்டமைப்பு.

(1) கற்கலவை.

(2) பிட்டுமென் கலந்த கீல்போட்டது.

(3) நீர் விட்டு உறுதியாக்கிய மெக்கடெம் சாலையும் செங்கல்லாலும் சல்லியாலும் ஆக்கப்பட்ட தளவரிசையும்.

(4) வேறு ஏதேனும் வகை.

(iv) பராமரிப்பு

(5)	(6)	(7)	(8)	(9)	(10)
கற்கலவை.	பிட்டுமென் அல்லது தீல் போட்டது.	நீர் விட்டு உருடியாக்கிய மெக்கடம் சாலையும் செங் கல்லாலும் சல்லியாலும் ஆக்கப்பட்ட தள வரிசை யும்.	வேறு எவ்வகையேனும் வகை கள்.	மொத்த பராமரிப்புச் செலவு (5) (6)(7) (8) பகுதிகள்.	ஒரு மைலுக்கு பராமரிப்புச் செலவு.

குறிப்பு—வெவ்வேறு வகைகளைச் சேர்ந்த சாலைகளுக்கும் ஆன செலவைப் பிரிக்க முடியாவிட்டால் தோராயமான இலக்கங்களைக் குறிப்பிடலாம்.

5. பாலங்களும் சிறு பாலங்களும்.

	கட்டமைப்பு அல்லது சீர் திருத்தங்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை.			அடியிற் கண்டவைகளி லிருந்து எடுத்த தொகை.			
(1) ஆண்டு	(2) பாலங்களும் தரம் போகு களும்.	(3) சிறு பாலங்கள்.	(4) மொத்தம்.	(5) கட்டளைகளும் உதவித் தொகைகளும்.	(6) அரசுக் கொடைகள்.	(7) கடன்கள்.	(8) பொதுக் கணக்கு.

6. சத்திரங்கள்.

ஆண்டு.	எண்ணிக்கை.	வரவுகள்.	செலவுகள்.	
			சாதாரண.	மூலதன.
(1)	(2)	(3)	(4)	(5)

7. விளக்குப் போடுதல்.

விளக்குகளின் எண்ணிக்கை.						மொத்த விளக்குகள்.			ஒரு விளக்குக்குப் பிடித்த செலவு.		
ஆண்டு.	சாதாரணம்.	மிக ஆற்றலுடையவை.	மின்சாரம்.	மொத்தம்.	சாலையின் ஒரு மைலுக்கு.	சாதாரணம்.	மிக ஆற்றலுடையவை.	மின்சாரம்.	சாதாரணம்.	மிக ஆற்றலுடையவை.	மின்சாரம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)

8. போதுமானதாயிருத்தல் எல்லாப் பள்ளிகளும்.

ஆண்டு.	எல்லாப் பள்ளிகளிலும் பள்ளிக்குப் போகும் வயதுள்ள சிறுவர்களின் மொத்த எண்ணிக்கை.			பள்ளிக்குப் போகும் வயதுள்ள சிறுவர்களின் எண்ணிக்கையின் மதிப்பீடு.	பள்ளிக்குப் போகும் வயதுள்ள சிறுவர்களில் இடம் பெறுகி வர்களின் எண்ணிக்கையின் மதிப்பீடு.	(5) பத்தியில் (6) பத்தி இன்ன சதவீதம் என்பது.	மொத்த மக்கள் தொகையின் ஒரு மைலுக்குப் பள்ளிகளின் எண்ணிக்கை.
	ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்.	உதவி பெறுபவை.	மொத்தம்.				
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)

குறிப்பு.—(2) பத்தியிலுள்ள இலக்கத்திலே, பயிற்சிப் பள்ளிகளுடன் மற்ற தனிப் பள்ளிகளுடனும் இணைக்கப்பட்டுள்ள தொடக்கப் பள்ளியில் படிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கையும் அடங்க வேண்டும்.

9. ஊராட்சித் ஒன்றிய தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கையும் அவற்றிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையும்.

	பள்ளிகளின் எண்ணிக்கை.			மார்ச் 31 ஆம் தேதியன்று மாணவர்களின் மொத்த எண்ணிக்கை.		
ஆண்டு.	IV ஆம் வகுப்புக்கு மேல் போதிப்பவை.	IV ஆம் வகுப்பு வரை போதிப்பவை.	IV ஆம் வகுப்புவரை போதிக்காதவை.	பிள்ளைகள்.	பெண்கள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)

		மொத்த எண்ணிக்கை அதிகரித்திருப்பதன் சதவீதம்.	
சராசரி அன்றாட வருகை.	மொத்த எண்ணிக்கையில் சராசரி அன்றாட வருகையின் சதவீதம்.	பிள்ளைகள்.	பெண்கள்.
(8)	(9)	(10)	(11)

10. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி வகுப்புகள் தோறும் பிள்ளைகள்.

ஆண்டு.	முதல் வகுப்பு. எண்ணிக்கை.	முதல் வகுப்பு. சதவீதம்.	இரண்டாம் வகுப்பு. எண்ணிக்கை.	இரண்டாம் வகுப்பு. சதவீதம்.	மூன்றாம் வகுப்பு. எண்ணிக்கை.	மூன்றாம் வகுப்பு. சதவீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)

நான்காம் வகுப்பு. எண்ணிக்கை	நான்காம் வகுப்பு. சதவீதம்.	நான்காவது மேற்பட்ட வகுப்புகள். எண்ணிக்கை.	நான்காவது மேற்பட்ட வகுப்புகள். சதவீதம்.
(8)	(9)	(10)	(11)

(2) (4) (6) (8) (10) பத்திகளில் இந்த ஆண்டில் மார்ச் 31-ஆம் தேதியன்று இருந்த மொத்த எண்ணிக்கையைக் கொடுக்க வேண்டும்.

11. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி வகுப்புகள் தோறும் பெண்கள்

ஆண்டு.	முதல் வகுப்பு.		இரண்டாம் வகுப்பு.		மூன்றாம் வகுப்பு.	
	எண்ணிக்கை.	சதவீதம்.	எண்ணிக்கை.	சதவீதம்.	எண்ணிக்கை.	சதவீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)

நான்காம் வகுப்பு.		நான்காவதற்கு மேற்பட்ட வகுப்புகள்.	
எண்ணிக்கை.	சதவீதம்.	எண்ணிக்கை.	சதவீதம்.
(8)	(9)	(10)	(11)

10-வது விவரப்பட்டியலின் அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

12. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி—பணியாளர் தொகுதி.

ஆண்டு.	பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை.	பயிற்சிபெறாத ஆசிரியர்களின் எண்ணிக்கை.	மொத்தம்.	கொடுக்கப்படும் மொத்த சம்பளம்.	ஆசிரியர் ஒருவருக்குச் சராசரி சம்பளம்.	ஆசிரியர் ஒருவருக்கு இத்தனை மாணவர்கள் என்பது.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)

13. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள்—கட்டிடங்கள்.

		பள்ளிக் கட்டிடங்கள்.								
ஆண்டு.	ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் எண்ணிக்கை.	ஊராட்சி ஒன்றியக் குழுவிற்குச் சொந்தமானவை.	இந்த ஆண்டில் கட்டப்பட்டவை.	வாடகைக்கு எடுத்துக் கொண்டவை.	(3) பத்தியில் உள்ளவைகளின் பராமரிப்புச் செலவு.	(4) பத்தியில் கண்ட பள்ளிகளைக் கட்டுவதற்குப் பிடித்த செலவு.	(5) பத்தியில் கண்டவைகளுக்காகக் கொடுக்கப்பட்ட வாடகை.	கட்டப்பட்டுவரும் பள்ளிக் கட்டிடப் பணிகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடலாம்.	இந்த ஆண்டில் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்குப் பிடித்த மொத்த செலவு.	ஒப்பளிக்கப்பட்ட அரசுக் கொடை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)

14. பொது சுகாதாரம் போதுமானதா என்பது.

	மருந்தகங்களின் எண்ணிக்கை.			ஊராட்சி ஒன்றிய நிறுவனங்களில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை.		
ஆண்டு.	ஊராட்சி ஒன்றியம்.	அரசு.	மற்றவை.	உள் நோயாளிகள்.	வெளி நோயாளிகள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)

அன்றாடம் சிகிச்சை பெறுபவர்கள் சராசரி எண்ணிக்கை.	அன்றாடம் வருபவர்களின் சராசரி.	ஊராட்சி ஒன்றியத்துக்குப் பிடிக்கும் சாதாரண நிகர செலவு.	ஒரு நோயாளிக்குப் பிடிக்கும் செலவு.
(8)	(9)	(10)	(11)
ரூ.காசு.		ரூ.காசு.	ரூ.காசு.

15. பிறப்பு வீதமும் பேறு கால உதவியும்.

(1) ஆண்டு.

(2) பதிவு செய்யப்பட்ட பிறப்புக்களின் மொத்த எண்ணிக்கை.

(3) ஜனத்தொகையின் ஒரு மைலுக்கு வீதம்.

(4) மாநில சராசரி பிறப்பு வீதத்தின் பேரில் மதிப்பிடப்பட்ட பிறப்புக்களின் எண்ணிக்கை.

தகுதிபெற்ற பேறுகால உதவியாளர்களின் எண்ணிக்கை.

(5) ஊராட்சி ஒன்றியம்.

(6) தகுதி பெற்ற பிறர்.

தகுதிபெற்ற பேறுகால உதவியாளர்களால் கவனிக்கப்பட்ட பிறப்புக்களின் மொத்த எண்ணிக்கை.

(7) ஊராட்சி ஒன்றியம்.

(8) தகுதி பெற்ற பிறர்.

(9) மொத்தம்.

(10) ஊராட்சி ஒன்றிய பேறுகால உதவி உதவியாளர் ஒரு வருடைய செய்மானம்.

கீழ்வரும்பத்திகளில் கண்ட பிறப்புக்களில் (9) பத்தியில் கண்ட பிறப்புக்கள் இன்ன சதவீதம் என்பது.

(11) பத்தி. (2)

(12) பத்தி. (4)

கீழ்க்கண்ட பத்திகளின் படி பிறப்புக்களின் ஒரு மைலுக்குச் சிசு மரணம.

(13) பத்தி. (2)

(14) பத்தி. (4)

(15) மகப்பேறு மரணங்கள்.

16. மரண வீதமும் கொள்ளை நோய்களும்.

(1) ஆண்டு

(2) வாந்திபேதி.

(3) பெரியம்மை.

(4) பிளேக்கு.

(5) காய்ச்சல்கள்.

(6) சீதபேதி.

(7) சுவாசம் சம்பந்தமான நோய்கள்.

(8) இன்புளுயன்ஸா.

(9) வெறிநாய கடிநோய்.

(10) மற்றெல்லாக் காரணங்களும்.

(11) மொத்தம்.

(12) மைல் ஒன்றுக்கு மரண வீதம் (எல்லாக் காரணங்களும்).

17. அம்மை குத்தல்.

(1) ஆண்டு.	(2) அம்மை குத்துபவர்களின் எண்ணிக்கை.	அம்மை குத்தல்களின் எண்ணிக்கை. (3) முதல் தடவையும் இரண்டாந் தடவையும்.	(4) மறு அம்மை குத்தல்கள்.	(5) மொத்தம்.	நற்பயனளித்தவை. (6) முதல் தடவையும் இரண்டாந் தடவையும்.	(7) மறு அம்மை குத்தல்கள்.	(8) மொத்தம்.

(9) மக்கள் தொகையில் பிரதி 1000 பேரில் பயன் [illegible] பருவத்தில் அம்மை குத்தப் பெற்றவர்களின் எண்ணிக்கை.	பெரியம்மை கண்டு நேரிட்ட மரணங்கள். (10) ஒரு வயதுக்குட்பட்டவர்கள்.	(11) ஒரு வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.	(12) பத்து வயதுக்கு மேற்பட்டவர்கள்.

18. அங்காடிகள்:

நாளங்காடிகள் (ஊராட்சி ஒன்றியம்).

		சாதாரணம்.		மூலதனம்.	
ஆண்டு.	எண்ணிக்கை.	வரவுகள்.	செலவுகள்.	வரவுகள்.	செலவுகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		ரூ. காசு.	ரூ. காசு.	ரூ. காசு.	ரூ. காசு.

வார அங்காடிகள் (ஊராட்சி ஒன்றியம்).

	சாதாரணம்.		மூலதனம்.	
எண்ணிக்கை.	வரவுகள்.	செலவுகள்.	வரவுகள்.	செலவுகள்.
(7)	(8)	(9)	(10)	(11)
	ரூ. காசு.	ரூ. காசு.	ரூ. காசு.	ரூ. காசு.

தனியார் அங்காடிகள்.

நாள் அங்காடிகள்.		வார அங்காடிகள்.	
எண்ணிக்கை.	உரிமக் கட்டணங்கள்.	எண்ணிக்கை	உரிமக் கட்டணங்கள்.
(12)	(13)	(14)	(15)
	ரூ. காசு.		ரூ. காசு.

19. ரொக்கக் கொடுக்கல் வாங்கல்கள்.

(1) ஆண்டு.	(2) முன் இருப்பு. ரூ.	(3) ரொக்க வரவுகள். ரூ.	(4) ரொக்கப் பட்டுவாடாக்கள். ரூ.	(5) இறுதி இருப்பு. ரூ.

20. முதலீடுகள்.

	(1) ஆண்டு.	(2) முன் இருப்பு. ரூ.	(3) செய்யப்பட்ட முதலீடுகள். ரூ.	(4) வாப்பற்றிய முதலீடுகள். ரூ.	(5) இறுதி இருப்பு பத்தி (2) + பத்தி 3— பத்தி (4). ரூ.	(6) முதலீடுகளுக்கு வட்டியிலிருந்து கிடைக்கும் வருமானட். ரூ.
அரசுக் கடன் பத்திரங்கள்.						
சேமிப்பு வங்கி வைப்புத் தொகைகள்.						
கூட்டுறவுச் சங்க வைப்புத் தொகைகள்.						
மற்ற கடன் பத்திரங்கள்.						
19 க்கான மொத்தம் ..						
19 க்கான மொத்தம் ..						

ஊராட்சி ஒன்றியத்தின் இருப்பும் இறுதி இருப்பும்.

விவரங்கள்.	சாதாரணம்.	மூலதனம்.
(1)	(2)	(3)
	ரூ. காசு.	ரூ. காசு.
முன் இருப்பு.		
1. பொதுக் கணக்கு.		
2. கல்விக் கணக்கு.		
3. பள்ளி உணவுக் கணக்கு.		
4. உற்பத்தி நிதிக் கணக்கு.		
5. வைப்புத் தொகைகள் முன்பணக் கணக்கு.		
6. கட்டளைகள் கணக்கு.		
7. மொத்தம்.		
8. மொத்த முன் இருப்பு.		
9. மொத்த வரவுகள்.		
10. மொத்த செலவு.		
இறுதி இருப்பு.		
11. பொதுக் கணக்கு.		
12. கல்விக் கணக்கு.		
13. பள்ளி உணவுக் கணக்கு.		
14. உற்பத்திக் கணக்கு.		
15. வைப்புத் தொகைகள் முன்பணக் கணக்கு.		

விவரங்கள்.	சாதாரனம்.	மூலதனம்.
(1)	(2)	(3)
	ரூ. காசு.	ரூ. காசு.
16. கட்டளைகள் கணக்கு.		
17. மொத்தம்.		
18. மொத்த இறுதி இருப்பு.		
19. குறிப்புரை.		

........ஊராட்சி ஒன்றியத்தின் வரவுகள்,

வரவுகள்.

விவரங்கள்.	சாதாரணம்.	மூலதனம்.
(1)	(2)	(3)
	ரூ. காசு.	ரூ. காசு.
I. பொதுக் கணக்கு—		
1. பொது வரிவிதிப்பும் பல்வகை வருவாயும்—		
(i) மொத்த தலவரி.		
(ii) தலவரித் தண்டம்.		
(iii) தலவரித் தண்டம்—ஈடு செய்வதற்கான கொடை.		
(iv) கேளிக்கை காட்சிவரியின் மீதான மேல்வரி.		
(v) பல்வகை பிறவருவாய்கள்.		
(vi) மொத்தம்.		
2. நிருவாகம்—		
சாதாரணம்.		
மூலதனம்.		
3. போக்குவரத்து—		
சாதாரணம்.		
மூலதனம்.		

	சாதாரணம்.	மூலதனம்.
	ரூ. காசு.	ரூ. காசு.
4. சுகாதாரமும்—சேமநலமும்—		
சாதாரணம்—		
(i) பேறுகால நிலையங்களுக்கான கொடை.		
(ii) குழந்தைகள் பெண்கள், சேம நலக் கொடை. கொடை		
(iii) பிற இனங்கள்.		
(iv) மொத்த சாதாரணம்.		
மூலதனம்—		
(v) கிராம நீர் வழங்கீடு.		
(vi) பிற.		
(vii) மொத்தம்.		
5. பயன்தரும் தொழில்கள்—		
சாதாரணம்.		
மூலதனம்.		
6. முதலீடுகள்—		
சாதாரணம்.		
மூலதனம்.		
II. கல்விக் கணக்கு—		
சாதாரணம்		
(i) கல்வி.		
(ii) சமூகக் கல்வி.		

(iii) மொத்தம.

மூலதனம்—

III. பள்ளி உணவுக் கணக்கு—

சாதாரணம்

மூலதனம்.

IV. உற்பத்தி நிதிக் கணக்கு—

(i) உழவுத் திட்டம்—

சாதாரணம்.

மூலதனம்.

(ii) பாசனப் பணிகள்—

சாதாரணம்.

மூலதனம்.

(iii) கிராமத் தொழில்கள்—

சாதாரணம்.

மூலதனம்.

(iv) கதர்த் திட்டம்—

சாதாரணம்.

மூலதனம்.

(v) மொத்தம்—

சாதாரணம்.

மூலதனம்.

V. வைப்புத் தொகைகள் முன்பணக் கணக்கு.

VI. கட்டளைகள் கணக்கு—

சாதாரணம்.

மூலதனம்.

மூலதனம்.

VII. மொத்த வரவுகள்—

சாதாரணம்.

மூலதனம்.

VIII பெரு மொத்தம்—

சாதாரணம்.

மூலதனம்.

குறிப்புரை.

............ஊராட்சி ஒன்றியத்தின் செலவு.

செலவு,

விவரங்கள். (1)	சாதாரணம். (2)	மூலதனம். (3)
	ரூ. காசு.	ரூ. காசு.

I. பொதுக் கணக்கு—

1. நிருவாகம்.

2. போக்குவரத்துக்கள்.

3. சுகாதாரமும் சேம நலமும்—

சாதாரணம்—

(i) பேறுகால நிலையங்கள்.

(ii) பெண்கள், சிறுவர்கள் நலத் திட்டம்.

(iii) பிற.

மூலதனம்—

(iv) கிராம நீர் வழங்கீடு.

(v) பிற

4. பயன்தரும் தொழில்கள்.

(1) (2) (3)

I. பொதுக் கணக்கு—தொடர்ச்சி.

5. முதலீடுகள்.

9. மொத்தம்.

II. கல்விக் கணக்கு.

சாதாரணம்.

7. கல்வி.

8. சமூகக் கல்வி.

6. மொத்தம்.

மூலதனம்.

10. பள்ளிக் கட்டிடங்கள்.

11. பிற.

12. மொத்தம்.

13. பள்ளி உணவுக் கணக்கு.

III. உற்பத்தி நிதிக் கணக்கு.

14. உழவுத் திட்டம்.

15. பாசனப் பணிகள்.

16. கிராமத் தொழில்கள்.

17. கதர்த் திட்டம்.

18. மொத்தம்.

IV. வைப்புத் தொகை—முன்பணங்கள் கணக்கு.

V. கட்டளைகள் கணக்கு.

VI. மொத்தம்.

VII. பெருமொத்தம்.

குறிப்புரை.

பொதுக் கணக்கு

சாதாரண வரவுகள் — உள்ளபடி 196..6 196..6 (1)	வரவு செலவுத் திட்ட திருத்திய மதிப்பீடு 196..6. (2)	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 196..6. (3)	சாதாரண செலவுகள் — உள்ளபடி (4)	வரவு செலவுத் திட்ட திருத்திய மதிப்பீடு 196..6. (5)	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 196..6. (6)
1. நிகர தல வரி	....	....	1. பணியாளர் (படிகளும் எதிர்பாராச் செலவுகளும் உட்பட)	....	....
2. தலவரி தண்டமும் ஈடு செய்வதற்கான கொடையும் (வீதம்)	....	....	2. பேறுகால நிலையங்களுக்குப் பிடித்த செலவில் இருப்பு.	....	....
3. தல அதிகாரிகள் நிதிச் சட்டம்.	....	....	3. மருந்தகங்களுக்குப் பிடித்தது.	....	....
. தல சாலைகள் கொடை	....	....	4. போக்குவரத்துக்கள்	....	....
5. பற்றுக்குறையைச் சரிக்கட்டுவதற்குத் தனி பஞ்சப்படிக் கொடை.	....	....	5. கல்விக் கணக்குக்கு மாற்றியது.	....	....

பொதுக் கணக்கு

சாதாரண வரவுகள் உள்ளபடி 106..6 196..6 (1)	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (திருத்திய மதிப்பீடு 196..6.) (2)	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 196..6. (3)	சாதாரண செலவுகள் உள்ளபடி (4)	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு திருத்திய மதிப்பீடு 196..6. (5)	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 196..6. (6)
6. பயன்தரும் தொழில்களிலிருந்து நிகர வருவாய்.	....	....	6. மூலதனத்துக்கு மாற்றியது.	....	....
7. பிற இனங்கள் (பெரிய இனங்களைக் குறிப்பிடலாம்)	....	....	7. பணிகளுக்காகவும் உழவுக்காகவும் உதவித் தொகைகள்.	....	....
			8. பிற இனங்கள் (பெரிய இனங்களைக் குறிப்பிடலாம்)	....	....
மொத்தம்	....	....	மொத்தம்	....	....

உபரி அல்லது பற்றுக்குறை.

(அ) கழிக்கவும்/கூட்டவும் நிலுவை வழிவகை முன்பணம்.

நிகர உபரி அல்லது பற்றுக்குறை.

(ஆ) கூட்டவும்/கழிக்கவும் எல்லாக் கணக்குகளின் கீழும் செலவு ஈடுசெய்யப் பெறுமலிருக்கிற தொகைகள்.

I. (அ) அமைப்பும் நிருவாகமும்.—(1) ஊராட்சிகளின் மொத்த எண்ணிக்கை—அதிகார வரம்பில் மாறுதல்கள்—மக்கள் தொகை.

(2) ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை—மொத்த எண்ணிக்கையில் மாறுதல்கள்—தொகுதிகளைத் திருத்தியமைத்தல்.

(3) அட்டவணை இனத்தவர்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட இடங்களில் மொத்த எண்ணிக்கை (i) தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்களின், (ii) சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை—சாதாரண/தற்செயல் தேர்தலை நடத்துவது—தேர்தல் தகராறுகள்.

(ஆ) தலைவரும் துணைத்தலைவரும் உறுப்பினர்களும்.—(1) தலைவர்களின், துணைத்தலைவர்களின் தேர்தல்—தேர்தல் தகராறுகள்—தலைவர்களை அல்லது துணைத் தலைவர்களை நீக்குவது—உறுப்பினர்களின் தகுதிகளின் தகுதிக் குறைவும் அவர்களை மீண்டும் உறுப்பினர்களாக்குவதும்.

(2) கூட்டங்கள்.—நடந்தவைகளின் மொத்த எண்ணிக்கை (சாதாரணம், அவசரம், தனி) தள்ளி வைக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை—குழுக்களின் அமைப்பு.

(3) நிருவாகம்.—ஊராட்சி அலுவலகங்கள் இருக்குமிடம்—சொந்தக் கட்டிடங்கள் அல்லது வாடகைக்கு வைத்துக்கொள்ளப்பட்டவை செலுத்தப் பட்ட மொத்த வாடகைத் தொகை—நிர்ணயிக்கப்பட்ட பதிவேடுகளையும் படிவங்களையும் வைத்து வருதல்.

(4) பணியாளர் தொகுதி.—எழுத்தர்கள், சிற்றெழுத்தர்கள், தட்டச்சர்கள் ஆகியோரின் மொத்த எண்ணிக்கை—சம்பள வீதங்கள்—பொது அலுவலர்களின் நியமனம்.

II. போக்குவரத்துக்கள்.—(1) புதிதாக அமைக்கப்பட்ட சாலைகள் அல்லது கட்டப்பட்ட பாலங்கள் ஆகியவை பற்றிய விவரங்கள், அவைகளுக்குப் பிடித்த செலவு, அவைகளுக்கு நிதி உதவி செய்யப்பட்ட விதம்—ஊராட்சிகளின் பராமரிப்பிலிருக்கிற சாலைகளின் மொத்த நீளம், அவற்றின் நிலை—இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்த ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை, இந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை, இந்த ஆண்டின் முடிவில் தீர்வு செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை, இருந்தவைகளின் எண்ணிக்கை.

(2) 1959-ம் ஆண்டின் **தமிழ் நாடு** ஊராட்சிகள் சட்டத்தின் தொழிற் படுதலினின்றும் விலக்கப்பட்ட சாலைகள், வடிகால் முதலியன பாராமரிப்பி லிருக்கிற தோணித்துறைகளும் கால்வாய்களும், அவற்றிலிருந்து கிடைக்கும் வருவாய்.

(3) மேல்மாசூல் திரட்டுதல், கிடைக்கிற வருவாய்.

III. விளக்குப்போடுதல்.—தெருக்களில் மின்விளக்குகளையுடைய ஊராட்சிகளின் எண்ணிக்கை—மின்விளக்குகள், மண்ணெண்ணெய் விளக்குகள், பெட்ரோமாக்ஸ் அல்லது ஆவி விளக்குகள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை—விளக்குப் போடுவதற்காகச் செலவிடப்பட்ட தொகை.

I[கல்வி.—(1) இந்தக் கிராமத்திலே அல்லது பட்டணத்திலே ஊராட்சி ஒன்றியக்குழுக்களின் பாராமரிப்பிலிருக்கிற ii) உதவி பெறும் பள்ளிகளின் எண்ணிக்கை—அவை போதுமானவையா? இப்பள்ளிகளுக்கு வரும் சிறுவர் சிறுமிகளின் மொத்த எண்ணிக்கை—இப்பள்ளிகளில் படிக்கும் அட்டவணை இனத்தின் சிறுவர்களின் எண்ணிக்கை கட்டாயக் கல்வி.

(2) படிப்பகங்களின் மொத்த எண்ணிக்கை.

(3) முதியோர் அல்லது இராப்பள்ளிகளின் எண்ணிக்கை, இவை யாரால் நடத்தப்படுகின்றன—மொத்த எண்ணிக்கை—எழுதப் படிக்கத் தெரியாத எத்தனை முதியோர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகிவிட்டார்கள் என்பது.

பொதுச் சுகாதாரம்.—(1) அமர்த்தப்பட்ட பெருக்குபவர்களின் எண்ணிக்கை, இவர்களுக்குப் பிடிக்கும் செலவு.

(2) பொதுக் கழிப்பிடங்களின் எண்ணிக்கை.

(3) நீர் வழங்கீடு.—குடி நீர் ஆதாரங்கள், அவை போதுமானவையா? நீர் அழுக்காக்கப்படாமல் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள், தொடரப்பட்ட வழக்குகள்.

(4) வடிகால் வசதி.—வடிகால்களின் பராமரிப்பும் அவைகளைத் துப்புரவு செய்வதும்—கழிவு நீரைத் தீர்வு செய்வது.

(5) 1889-ம் ஆண்டின் தமிழ் நாடு நகரத்தொல்லைகள் சட்டத்தையும் தமிழ் நாடு பிறப்பு இறப்புக்கள் பதிவுச் சட்டத்தையும் பொருந்தும்படி செய்தல்.

(6) முக்கியமான சந்தைகளும் திருவிழாக்களும். சுகாதாரத்துப்புரவு ஏற்பாடுகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை.

(7) கொள்ளை நோய்கள்.

(8) அபாயகரமான அருவருப்பான தொழில்கள்.—(பேரூராட்சி மன்றங்கள் மாத்திரம்) தொழிற் பரப்புகளை அறிக்கையிடுவது—ஊராட்சிகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட தொழில்கள் வழங்கப்பட்ட உரிமங்களும் கிடைத்த வருவாயும் அபாயகரமான அருவருப்பான தொழில்களைக் கட்டுப்படுத்துவதற்காகத் துணைச் சட்டங்களை அமைத்துக் கொள்ளுதல்.

(8) **அபாயகரமான அருவருப்பான தொழில்கள்.**—பேரூராட்சி மன்றங்கள் மாத்திரம்) தொழிற் பரப்புகளை அறிக்கையிடுவது—ஊராட்சிகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட தொழில்கள் வழங்கப்பட்ட உரிமங்களும் கிடைத்த மிடங்கள் சட்டத்தை அல்லது 1920 ஆம் ஆண்டின் தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை 1920 ஆம் ஆண்டின் தமிழ் நாடு நகரமைப்புச் சட்டத்தைப் பொருந்தும்படி செய்தல்—தோட்டிகள், பெருக்குபவர்கள் ஆகியோரின் வாழ்க்கை நிலைமைகளும் பணி நிலைமைகளும் செய்யப்பட்ட சீர்திருத்தமும்.

IV. **பயன்தரும் தொழில்கள்.**—(1) புதிய அங்காடிகள், வண்டிப்பேட்டை, கால்நடைவெட்டு இடங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவது.

(2) **அங்காடிகள்.**—பொது அங்காடிகளின் எண்ணிக்கையும், ஊராட்சிகளின் பராமரிப்புக்குட்பட்டவைகளின் எண்ணிக்கையும் விற்பனை மேடைகளைக் கட்டுவது—கிடைக்கிறவருமானம்—ஊராட்சி ஒன்றியக்குழுவினிடமிருந்து கிடைக்கும் உதவித்தொகை—தனியார் அங்காடிகளின் எண்ணிக்கை—இந்த ஆண்டில் திறக்கப்பட்டவைகளின் அல்லது மூடப்பட்டவைகளின் எண்ணிக்கை—உரிமக் கட்டணங்கள் மூலமாகக் கிடைக்கும் வருமானம்.

(3) **வண்டிப்பேட்டை.**—ஊராட்சிகளின் பராமரிப்புக்குட்பட்டவைகளின் எண்ணிக்கை—கட்டணங்களை வசூலிக்கும்முறை கிடைக்கிற வருவாய்.

(4) **கால்நடை வெட்டுமிடங்கள்.**—ஊராட்சிகளின் பராமரிப்புக்குட்பட்டவைகளின் எண்ணிக்கை. அவைகளிலிருந்து கிடைக்கிற வருமானம்.

(5) குடிசைத் தொழில்கள்.—குடிசைத் தொழில்களைச் சீர்திருத்துவதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள்.

(6) ஊராட்சிகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஒதுக்கப்பட்டிராத காடுகளுக்காகச் செலுத்தப்பட்ட வாடகை.

(7) **ஊரத்தயாரிப்பும்**, கிடைக்கிற வருமானமும்.

(8) நடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை.

(9) பராமரிப்பு வரப்படும் பொதுப்பூங்காக்களின் தோட்டங்களின் எண்ணிக்கை—வருவாயும் செலவும்.

VII. **பொது வருவாய்கள்.**—(1) வீட்டுவரி, தொழில்வரி, வண்டிவரிகளின் வீதம் கேட்பும் வசூலிக்கப்பட்ட தொகையும் பிறப்பிக்கப்பட்ட வலுக்கட்டாய நிறைவேற்றக் கட்டளைகளின் எண்ணிக்கை வசூல் வேலை கிராமப் பெரிய தனக்காரரிடம் ஒப்புவிக்கப்பட்டதா?

(2) பல்வகை வருவாய்.

VIII. **நிதி நிலை.**—(1) ஊராட்சி நிதிகளைப்போட்டு வைப்பது—முதலீடுகள் கணக்குத் தணிக்கை.

IX. **பல்வகை—**

X. பொது நிருவாகம்.—ஊராட்சிகளைக் கலைத்து விடுதல்—மாவட்ட ஆட்சியாளர்கள் அல்லது நிர்வாக அதிகாரி அவசரகால அதிகாரங்களைச் செலுத்துவது—தீர்மானம், உரிமம் அல்லது அனுமதியை ரத்துசெய்வது எடைகளையும் அளவைகளையும் சோதித்தல்—துணைச்சட்டங்கள் செய்தல்.

ஊராட்சி/பேரூராட்சி மன்றங்களின் முன் இருப்பும் இறுதி இருப்பும்

மொத்த முன் இருப்பு.	மொத்த வரவுகள்.	மொத்த செலவுகள்.	மொத்த இறுதி இருப்பு.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)
ரூ. காசு.	ரூ. காசு.	ரூ. காசு.	ரூ. காசு.	

ஊராட்சி/பேரூராட்சி மன்றங்களின் வரவுகள்

விவரங்கள்.	வரவுகள் ரூ. காசு
I. பொதுக்கணக்கு—	
(1) பொது வரி விதிப்பு.	
(i) வீட்டுவரி.	
(ii) தொழில்வரி.	

(iii) வண்டிக்குவரி.

(iv) உள்ளூர் வரி.

(v) கேளிக்கை வரி.

(vi) கிராம வீட்டுவரியை ஈடு செய்வதற்கான கொடை.

(vii) முத்திரைத் தீர்வைத்தண்டம்.

(viii) பல்வகை வருவாய்.

(ix) மொத்தம்.

2. நிருவாகம்.

சாதாரணம்.

மூலதனம்.

3. போக்குவரத்து.

சாதாரணம்.

மூலதனம்.

4. சுகாதாரமும் சேமநலமும்.

சாதாரணம்.

மூலதனம்.

5. பயன்தரும் தொழில்கள்.

சாதாரணம்.

மூலதனம்.

6. மொத்தம்.

சாதாரணம்.

மூலதனம்.

II. உழவு.

(1) உழவுக்கொடையின்படி ஒப்புவிக்கப்பட்ட திட்டங்கள்.

(2) பிற திட்டங்கள்.

I. பாசனம்.

சாதாரணம்.

மூலதனம்.

IV பிற இனங்கள்.

சாதாரணம்.

மூலதனம்.

V. கட்டணங்கள்.

VI. கடன்கள்.

VII. வைப்புத்தொகைகள்.

VIII. பெருமொத்தம்.

IX. குறிப்புரை.

ஊராட்சி/பேரூராட்சி மன்றங்களின் செலவு.

செலவு.

ரூ. காசு

பொதுக்கணக்கு.

(1) நிருவாகம்.

சாதாரணம்.

மூலதனம்.

(2) போக்குவரத்து.

சாதாரணம்.

மூலதனம்.

(3) சுகாதாரமும் சேமநலமும்.

சாதாரணம்.

மூலதனம்.

(4) பயன்தரும் தொழில்கள்

சாதாரணம்.

மூலதனம்.

(5) மொத்தம்.

சாதாரணம்.

மூலதனம்.

II. உழவு.

உழவுக் கொடையின் படிக்கான திட்டங்கள்.

பிற திட்டங்கள்.

III. ராசனம்.

சாதாரணம்.

மூலதனம்.

IV. பிற இனங்கள்.

சாதாரணம்.

மூலதனம்.

V. கட்டளைகள்.

VI. கடன்கள்.

VII. வைப்புத் தொகைகள்.

VIII. பெருமொத்தம்.

IX. குறிப்புரை.

(1963 அக்டோபர் 19 ஆம் தேதியுள்ள 2160 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

29. **ஊராட்சி ஒன்றியக்குழுக்களின் தணிக்கை அறிக்கைகளை வெளியிடுவதும் தீர்வு செய்வதும்.**—1. 1958-ம் ஆண்டின் XV ஆவது தமிழ்நாடுச் சட்டத்தில் கண்ட 141 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் படி அரசினரால் நியமிக்கப்படும் தணிக்கையாளர், நிதி ஆண்டு ஒவ்வொன்றுக்காகவும் ஊராட்சி ஒன்றியக்குழுவின் கணக்குகளின் தணிக்கைப்பற்றிய கால் ஆண்டு ஆட்சேபணை விவரப்பட்டியலையும் அறிக்கையையும், தணிக்கை முடித்த பிறகு ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். தணிக்கையாளர் அந்த அறிக்கையின்படி ஒன்றைக் கோட்ட ஆட்சியாளருக்கும் மாவட்ட ஆட்சியாளருக்கும் கூட்டு வளர்ச்சி ஆணையாளருக்கும் அனுப்ப வேண்டும். —

2. ஆணையாளர், தணிக்கை அறிக்கையைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள், ஆட்சேபணை விவரப்பட்டியலையும், தணிக்கை அறிக்கையையும், அவைகளுக்குத் தாம் அளித்த பதில்களையும்,

ஊராட்சி ஒன்றியக்குழுவின் முன்னர் வைக்க வேண்டும். அதனையும் தமது பதில்களின் இரண்டுபடிகளையும் அவற்றை ஏற்றுக்கொண்டு ஊராட்சி ஒன்றியக் குழு நிறைவேற்றிய தீர்மானத்தையும் கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்.

3. கோட்ட ஆட்சியாளர், தணிக்கை அறிக்கையையும் ஆட்சேபணை விவரப்பட்டியலையும், ஆணையாளரிடமிருந்து பெற்றுக் கொண்டதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள், ஆணையாளருடைய பதில்களையும் . தாம் குறிப்புரைகள் வழங்கினால் அவைகளையும் அனுப்ப வேண்டும். ஆட்சேபணை விவரப் பட்டியலையும் ஊராட்சி ஒன்றியக் குழுவின் தணிக்கை அறிக்கையையும் மாவட்ட ஆட்சியாளர் மறு ஆய்வு செய்யவேண்டும். கோட்ட ஆட்சியாளர் அறிக்கையைப் பெற்றுக் கொண்டதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள், அந்த மறு ஆய்வின்படியையும் ஆணையாளரின் பதில்களின் படிகளையும் ஊராட்சி ஒன்றியக் குழுவின் தீர்மானத்தையும் தணிக்கையாளருக்கும் துணைவளர்ச்சி ஆணையாளருக்கும் அனுப்ப வேண்டும்.

4. மறு ஆய்வையும் அதன் தொடர்பான ஆவணங்களையும் மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து பெற்றுக் கொண்டதும், துணை வளர்ச்சி ஆணையாளர் அவற்றைக் கூராய்வு செய்ய வேண்டும். மேலும், அவர் அவசியமாயிருக்கக் கூடிய விளக்க உரைகளைப் பிறப்பித்து அவற்றை ஆணையாளருக்கும், கோட்ட ஆட்சியாளருக்கும், மாவட்ட ஆட்சியாளருக்கும் அனுப்ப வேண்டும். படிகளைத் தணிக்கையாளருக்கு அனுப்ப வேண்டும்.

5. உள்ளூர் நிதித்தணிக்கைத்துறைத் தலைமை ஆய்வாளர், ஊராட்சி ஒன்றிய மன்றங்களிடமிருந்து ஆண்டுக்கணக்குகள், தணிக்கை அலுவலகத்தில் வந்து சேர்ந்த தேதியிலிருந்து பன்னிரண்டு மாத காலத்துக்குள், ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் கணக்குகளின் தணிக்கையைப்பற்றி 1965-66 ஆம் ஆண்டு முதற்கொண்டு, ஆண்டுத் தணிக்கை அறிக்கைகளைப் பிறப்பிக்க வேண்டும்.

(1962 பிப்ரவரி 1 ஆம் தேதியுள்ள 21 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித்துறை அரசாணை.)

(1963 ஜூன் 28 ஆம் தேதியுள்ள 1385 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(1966 ஜூன் 30 ம் தேதியுள்ள 1619ம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1966 அக்டோபர் 20 ஆம் தேதியுள்ள 2453 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

தணிக்கையாளர் நியமனம்.—பேரூராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் ஆகியவற்றின் நிதிகளின் வரவு-செலவுக் கணக்குகளின் தணிக்கையாளர்களாக, தலநிதித்துறை தலைமை ஆய்வாளரும் அவருடைய உதவியாளர்களும், 1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 141 (1) பிரிவின்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(**1960 அக்டோபர் 15-ஆம் தேதியுள்ள 1722-ஆம் எண் உள்ளாட்சித் துறைப்** பல்வகை அரசாணை.)

மாதக்கணக்குகளைத் தயாரிப்பதற்கான பொறுப்பு.—ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குகளை வைத்து வருவதற்கான விளக்க உரைகளைச் சேர்ந்த 14 ஆவது விளக்க உரையின்படி, ஆணையாளர், 82 அ. படிவத்தின் பிரகாரம் மாதக்கணக்குகள் சுருக்கம் ஒன்றை, ஒவ்வொரு மாதத்துக்காகவும் தயாரித்து அல்லது தயாரிப்பித்து அடுத்த மாத முடிவுக்குள் அதைத் தல நிதித்துறை மாவட்ட ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும்.

2. ஊராட்சி ஒன்றியங்களின் சில தொடங்கப்பட்ட காலம் முதல் அவைகளிடமிருந்து மாதக்கணக்குகள் வரவில்லையென்றும், வேறு சில ஊராட்சி ஒன்றியக்குழுக்கள் விஷயத்தில் அவைகள் காலங்கடந்து வந்தனவென்றும், உள்ளாட்சி நிதித் துறைத் தலைமை ஆய்வாளர் அரசினருக்குத் தெரிவித்திருக்கிறார்.

3. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு அரசினர் வற்புறுத்திக் கூற விரும்புவது என்னவென்றால் மேற்குறிப்பிட்ட நடைமுறை நூலின் 141-ஆவது, 142-ஆவது பத்திகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள மாதக் கணக்குகளையும் ஆண்டுக் கணக்கையும் தயாரிப்பது அவர்களுடைய நேர்பொறுப்பாகும். அந்த விவரப் பட்டியல்கள் உள்ளாட்சி நிதிக் கணக்குகளின் மாவட்ட ஆய்வாளருக்கு உரிய தேதிகளில் உடனுக்குடன் அனுப்பும்படி அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

[1961 ஆகஸ்ட் 29-ஆம் தேதியுள்ள 149817/R.D. (கணக்குகள் E) 61-ஆம் எண் குறிப்பாணை.]

மாத ஆண்டுக்கணக்குகளைத் தயாரிப்பதில் கால தாமதத்தைத் தவிர்ப்பது.—ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது என்னவென்றால், ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் கணக்குகளை வைத்துவருவதற்கான விளக்க உரைகள் பற்றிய நடைமுறை நூலின் 141-ஆவது, 142-ஆவது பத்திகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள மாத ஆண்டுக்கணக்குகளைத் தயாரிக்கும் வேலை அவர்களுடைய நேர்பொறுப்பாகும், மேற்சொன்ன விவரப்பட்டியல்கள் உரிய தேதியன்று உடனுக்குடன் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிதிக்

கணக்குகளின் மாவட்ட ஆய்வாளருக்கு அனுப்பப்படும்படி அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். சென்னையிலுள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறைத் தலைமை ஆய்வாளர் பின்வரும் செய்திகளை மீண்டும் அரசாங்கத்தாரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார். அதாவது ஏற்கெனவே விளக்க உரைகள் பிறப்பிக்கப்பட்டிருந்துங்கூட ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் சிலவற்றின் மாத ஆண்டுக்கணக்குகள் உரிய தேதியிலிருந்து ஆறு மாதம் கழிந்துபோன பிறகு கூட வரவில்லை. இதன் விளைவாக கணக்குகள் தணிக்கையாகாமலிருக்கின்றன, தணிக்கை செய்யவதற்காகத் தாம் போட்டுள்ள திட்டம் பெரிதும் நிலை குலைந்து போய்விட்டது.

2. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் இவ்வாறு கடமையில் கவனமில்லாதிருப்பதைக் கண்டு அரசினர் வருந்துகிறார்கள். அவர்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மேற்படி கணக்குகளை அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுகிறதென இனிமேல் அரசினருக்குத் தெரிவிக்கப்பட்டால் அரசினர் அதைப் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

3. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு மேலும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கணக்குகள் உரிய காலத்தில் அனுப்பப்படாவிட்டால் அவர்கள் தணிக்கைக்கு கணக்குகளுடன் கூட, காலதாமதத்துக்குத் தாங்கள் கூறும் விளக்கத்தையும் அனுப்ப வேண்டும். இது கணக்குகளில் அடிக்குறிப்பாயிராமல், மேல் கடிதமாயிருக்க வேண்டும். தணிக்கைத் துறையினர் கணக்குகளை நிறுத்தி வைத்துக்கொண்டு ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் விளக்கத்தை மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் விளக்கத்தை மாவட்ட ஆட்சியாளர் கூராய்வு செய்து, தாம் அவசியமெனக் கருதுகிறபடி மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். நடப்பிலுள்ள தவறுகளை அரசினருக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த முக்கியமான வேலையினத்தில் தனிக்கவனம் செலுத்தும்படி மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. மேலே 3-ஆவது பத்தியில் கண்டுள்ளவற்றை உள்ளாட்சி நிதிக் கணக்குகளின் மாவட்ட ஆய்வாளர்கள், உள்ளாட்சி நிதிக் கணக்குகளின் உதவி ஆய்வாளர் முதலில் எல்லாருக்கும் தெரிவிக்கும்படி சென்னையிலுள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை தலைமை ஆய்வாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(1963 பெப்ருவரி 11-ஆம் தேதியுள்ள 251561 கிராம முன்னேற்றம் கணக்குகள் E /62-2-ஆம் எண் குறிப்பாணை.)

1. **தணிக்கை அறிக்கைகளை மறு ஆய்வு செய்வதற்குக் காலவரையறை.—** ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தணிக்கை அறிக்கைகளைப் பிறப்பிப்பதைக் குறித்தும் தீர்வு செய்வதைக் குறித்தும், 1962 பிப்ரவரி 1-ஆம் தேதியுள்ள 261-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட விதிகளின்படி அரசினரால் நியமிக்கப்படும் தணிக்கையாளர் (சென்னையிலுள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைத் தலைமை ஆய்வாளரும் அவருடைய உதவியாளர்களும்) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கணக்குகளின் தணிக்கைப் பற்றிய அறிக்கையை ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். தணிக்கை அறிக்கையின்படி ஒன்றை, கோட்ட ஆட்சியாளருக்கும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சி யாளருக்குங் கூட அனுப்ப வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், தணிக்கை அறிக்கையைப் பெற்றுக் கொண்டதிலிருந்து இரண்டு மாதத்துக்குள், தணிக்கை அறிக்கையையும் தமது பதில்களையும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முன்னர் வைத்து, அதையும் பதில்களை ஒப்புக்கொண்டு ஊராட்சி ஒன்றிய மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தையும் சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும். கோட்ட ஆட்சியாளர் அவைகளைத் தமது குறிப்புரையுடன் மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும். மாவட்ட ஆட்சியாளர் தணிக்கை அறிக்கையை மறு ஆய்வு செய்து தமது மறு ஆய்வின் ஒரு படியையும் தணிக்கை அறிக்கையின் படிகளையும் ஆணையாளரின் பதில்களையும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தீர்மானத்தையும் தணிக்கை யாளருக்கு அனுப்ப வேண்டும். சென்னையிலுள்ள உள்ளாட்சி நிதித் தணிக் கைத்துறைத் துறைத்தலைமை ஆய்வாளர், மாவட்ட ஆட்சியாளர்கள், தணிக்கை அறிக்கையை மறு ஆய்வு செய்து அவற்றைத் தமது துறைக்கு அனுப்புவதற்கு ஒரு கால வரையறையை நிர்ணயிக்கலாமென ஆலோசனை கூறியிருக்கிறார்.

2. அரசினர் இவ்விஷயத்தைப் பரிசீலனை செய்தார்கள். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தணிக்கை அறிக்கைகளை முதல் சில ஆண்டுக்காலம் ஒரு மைய இடத்தில் கூராய்வு செய்யும் பிரச்சினையைப் பற்றிக்கூட ஆலோசனை செய்தார்கள். முதல் இரண்டாண்டுக்காலத்தில் மாநில மட்டத்தில் மறு ஆய்வு செய்வது நல்லதென அரசினர் கருதுகிறார்கள், அப்போதுதான், தணிக்கைத் துறையினரும் ஒன்றியங்களும் கோட்ட அலுவலகங்களும் மாவட்ட ஆட்சி யாளர் அலுவலகங்களும் தக்கவாறு நெறிப்படுத்தப்பட்டு, அதற்குள் பொருத்தமான நடைமுறைகள் படிமானமாகிவிடும். ஆகையால், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தணிக்கை அறிக்கைகளை அனுப்புவது சம்பந்தமாகவும், தீர்வு செய்வது சம்பந்தமாகவும் பின்வரும் நடைமுறையைப் பின்பற்றலாமென அரசினர் கட்டளையிடுகிறார்கள்.

(i) தணிக்கை வேலை முடிந்த பிறகு, தணிக்கையாளர், காலாண்டு ஆட்சேபணை விவரப்பட்டியலையும், ஒவ்வொரு நிதி ஆண்டுக்காகவும் ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கணக்குகளின் தணிக்கை அறிக்கையையும் இரட்டைப்படியாக ஆணையாளருக்கு அனுப்பவேண்டும். தணிக்கையாளர் அந்த அறிக்கையின்படி ஒன்றைக் கோட்ட ஆட்சியாளருக்கும் மாவட்ட ஆட்சியாளருக்கும் துணை வளர்ச்சி ஆணையாளருக்கும் அனுப்ப வேண்டும்.

(ii) ஆட்சேபணை விவரப்பட்டியலை அல்லது தணிக்கை அறிக்கையைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அதையும் தமது பதில்களின் இரண்டு படிகளையும் அவற்றை ஒப்புக்கொண்டு ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தையும் சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்.

கோட்ட ஆட்சியாளர் ஆணையாளரின் அறிக்கையைப்பெற்றுக் கொண்டதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் ஆணையாளரின் பதில்களையும் தாம் குறிப்புரை கூற வேண்டியிருந்தால் அவற்றையும் மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும். மாவட்ட ஆட்சியாளர் ஆட்சேபணை விவரப் பட்டியல்களையும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தணிக்கை அறிக்கைகளையும் மறு ஆய்வு செய்ய வேண்டும். கோட்ட ஆட்சியாளரின் அறிக்கையைப் பெற்றுக் கொண்டதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அந்த மறு ஆய்வையும் ஆணையாளரின் பதில்களின் படிகளையும் ஊராட்சி ஒன்றியக்குழுவின் தீர்மானத்தையும் தணிக்கையாளருக்கும் துணை வளர்ச்சி ஆணையாளருக்கும் அனுப்ப வேண்டும்.

(iv) மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து மறுஆய்வுத் தொடர்பான ஆவணங்களும் வந்து சேர்ந்ததும், கூட்டு வளர்ச்சி ஆணையாளர் அவற்றைக் கூராய்வு செய்ய வேண்டும், விளக்க உரைகள் பிறப்பிக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கும் கோட்ட ஆட்சியாளருக்கும் மாவட்ட ஆட்சியாளருக்கும் அனுப்பப்படும். இவற்றின் படிகள் தணிக்கையாளருக்கு அனுப்பப்படும்.

3. ஊராட்சி ஒன்றியத்தின் தணிக்கை அறிக்கைகளைப் பிறப்பிப்பதையும் தீர்வு செய்வதையுங்குறித்து 1962 பிப்ரவரி 1-ஆம் தேதியுள்ள 261-ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் வெளியிடப்பட்ட விதிகளுக்கு அவசியமான திருத்தங்கள் காலக்கிரமத்தில் செய்யப்படும்.

(1962 ஆகஸ்ட் 19-ஆம் தேதியுள்ள 1796-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

1962 ஆகஸ்ட் 1 ஆம் தேதியுள்ள 1796 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையின் 2 (iii) பத்தியில் பிறப்பிக்கப் பட்ட ஆணைகளின்படி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஆட்சேபணை விவரப் பட்டியலையும் அல்லது தணிக்கை அறிக்கையையும் அவைகளுக்குத் தமது பதில்களையும் ஊராட்சி ஒன்றியக் குழுவின் முன்னர் வைக்க வேண்டும். மேலும் ஆட்சேபணைப்பட்டியல் அல்லது தணிக்கை அறிக்கை வந்து சேர்ந்த தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள், அதையும், தமது பதில்களின் இரண்டு படிகளையும் அவற்றை ஒப்புக்கொண்டு ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் நிறை வேற்றிய தீர்மானத்தையும் சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்.

2. நிர்ணயிக்கப்பட்ட ஒரு மாத காலவரையறை போதாது எனத் தெரிகிறதென்று அரசினருக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஏனென்றால், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கூட்டங்கள் சாதாரணமாக மாதத்துக்கொரு முறை நடத்தப் படுகின்றன, அன்றியும், பதில்கள் தொடுப்பதற்காக விவரங் களைத் திரட்டுவதற்கு இன்னும் அதிக காலம் வேண்டியுள்ளது. இதற்குக் காரணம் யாதெனில் பலவற்றில் வெளி அதிகாரியின் ஒப்பளிப்பைப் பெற வேண்டியுள்ளது. ஆகையால், நிர்ணயிக்கப்பட்ட ஒரு மாத காலவரையறையை அதிகப்படுத்தலாமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

3. அரசினர், சென்னையிலுள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறைத் தலைமை ஆய்வாளருடன் கலந்தாலோசித்து இது பற்றிக் கவனமாக ஆய்ந் திருக்கிறார்கள், ஆட்சேபணை விவரப்பட்டியலுக்கும் தணிக்கை அறிக்கை களுக்கும் பதிலளிப்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள கால வரையறையை ஒரு மாதத்திலிருந்து இரண்டு மாதங்களுக்கு அதிகப்படுத்த வேண்டுமென கட்டளையிடுகிறார்கள்.

(1963 சூன் 6 ஆம் தேதியுள்ள 1229 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

30. **பொறுப்பு ஏற்கும்படி செய்வதையும் ஒப்புக்கொள்ள மறுப்பதையும் பற்றிய விதிகள்.**—1. ஓர் ஊராட்சி ஒன்றியக் குழுவின் ஆணையாளராவது ஓர் ஊராட்சியின் நிர்வாக அதிகாரியாவது, எல்லாக்கணக்குகளையும் மேற்படி சட்டத்தில் கண்ட 141 ஆவது பிரிவின்படி நியமிக்கப்படும் தணிக்கை யாளர்களுக்கு, தணிக்கையாளர்கள் சொல்கிறபடி அனுப்ப வேண்டும்.

2. **தணிக்கையாளர்கள்.**—(அ) அதைப்பார்ப்பது அல்லது ஆய்வு செய்வது அவசியமெனத் தாங்கள் கருதுகிறார்களோ அந்தச் சுவடி, பத்திரம், ஒப்பந்தக் கணக்கு, செலவுச்சீட்டு, பற்றுச் சீட்டு அல்லது வேறு ஆவணங்களைக் கொண்டுவருமாறு, எழுதியுள்ள அழைப்புக்கட்டளை மூலமாகக் கேட்கலாம்.

(ஆ) அத்தகைய ஓர் ஆவணத்தைத் தம் பொறுப்பில் அல்லது கட்டுப் பாட்டில் வைத்திருக்கிற அல்லது அதற்கு முகாந்திரம் வரவேண்டுமென, எழுதியுள்ள அழைப்புக்கட்டளை மூலமாகக் கேட்கலாம்.

(இ) அவ்வாறு வருகிற ஒருவர், அந்த ஆவணம் சம்பந்தமாக உறுதி மொழி கூறிக் கையெழுத்திடும்படி அல்லது அதன் தொடர்பாக ஏதேனும் கேள்விக்கும் பதில் சொல்லும்படி அல்லது விவரப்பட்டியல் ஒன்றைத் தயாரித்துக்கொடுக்கும்படி கேட்கலாம்.

எவரேனும் தமக்கு இவ்விதியின்படி சட்டப்படி பிறப்பிக்கப்பட்ட ஓர் உத்தரவின்படி நடக்கத்தவறினால் அவருக்கு ஐம்பது ரூபாய் வரையில் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கதாகும்.

3. **தணிக்கையாளர்கள்.**—(அ) சந்தர்ப்பத்துக்கேற்ப ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கணக்குகளிலே, செலவில் அல்லது ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றியக்குழுவிற்குச் சேரவேண்டிய பணங்களை வசூலிப்பதில் தாங்கள் பார்க்கக் கூடிய முக்கியமான ஒழுங் கின்மையை அல்லது முறைப்பிக்கினை ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

(ஆ) ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குச் சொந்தமாக அல்லது உரித்தாக்கப் பட்டிருக்கிற பணம் அல்லது வேறு உடைமை இழக்கப்பட்டிருந்து வீணாக்கப்பட்டிருந்து, அல்லது தவறாக வழங்கப்படுத்தப்பட்டிருந்தது, அந்த இழப்பு, விணடிப்பு அல்லது தவறாக வழங்குதல் ஒருவருடைய அசட்டை அல்லது ஒழுங்கின்மையின் நேர்விளை வாயிருந்தால் அதைப்பற்றி ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குத் தெரிவிக்க வேண்டும். அப்போது, அத்தகைய இழப்பு, விணடிப்பு அல்லது துர்வினியோகத்துக்கு அல்லது மற்றப்படி பொறுப்பாளி களாயிருப்பவர்களின் பெயர்களையும் தெரிவிக்க வேண்டும்.

4. தணிக்கையாளர்கள் எடுத்துக்காட்டக்கூடிய குறைகளை அல்லது முறைப் பிசகுகளை ஆணையாளராவது நிர்வாக அதிகாரியாவது உடனே நீக்கி, அதைச் சந்தர்ப்பத்துக்கேற்ப ஊராட்சி ஒன்றியக்குழுவிற்கு அல்லது ஊராட்சிக்குத் தெரிவிக்க வேண்டும்.

5. (1) அரசினரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள தணிக்கையாளர், சட்டத்துக்கு முரண்பாடாயுள்ள இனம் ஒவ்வொன்றையும் ஒப்புக்கொள்ள மறுக்கலாம், சட்ட முரணாகப்பணம் கொடுப்பவர் அல்லது கொடுக்க அனுமதி அளிப்பவர் அதற்குப் பொறுப்பு ஏற்கும்படி செய்யலாம். ஒருவருடைய

அசட்டை அல்லது ஒழுங்கின்மையினுல் நேரிட்ட ஏதேனும் குறைவு, இழப்பு அல்லது இலாபம் மற்ற முதலீட்டுத் தொகையை அல்லது அவர் கணக்கில் காட்டியிருக்க வேண்டிய, ஆனுல் காட்டாத தொகையை அதற்குப் பொறுப் பானவர் செலுத்த வேண்டுமென உத்தரவிடலாம். அத்தகைய ஒவ்வொரு விஷயத்திலும் அவரிடமிருந்து சேரவேண்டிய தொகையைச் சான்றிட வேண்டும்.

விளக்கம்.—யாருடைய அசட்டையினுல் அல்லது ஒழுங்கின்மையினுல் அத்தகைய ஒரு குறைவு அல்லது இழப்பு ஏற்பட்டதோ அல்லது விளைந்ததோ அவர், தாம் அசட்டையாயிருந்துங்கூட அல்லது ஒழுங்கின்மை நடந்துங்கூட, மற்றெருவர் அசட்டையாயிராதிருந்தால் அல்லது ஒழுங்கின்மை நடக்கா திருந்தால் அக்குறைவு அல்லது இழப்பு நேரிட்டிருக்காதென வாதிக்கக்கூடாது.

(2) தணிக்கையாளர் ஒப்புக்கொள்ள மறுத்ததன், பிறர் பொறுப்பேற்க வேண்டுமென அல்லது செலுத்தவேண்டுமெனக் கட்டளையிட்டதன் தொடர் பாகத் தமது தீர்ப்பின் காரணங்களை எழுதி வைத்து, அதன்படி, ஒன்றை யாருக்கு மாருக அக்கட்டளை பிறப்பிக்கப்பட்டதோ அவருக்குப் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

(3) தணிக்கையாளருடைய தீர்ப்பின்படி அவ்வாறு அனுப்பப் பெற்றுள்ளவர் அதை வாங்கிக் கொள்ள மறுத்தாலுங்கூட (2) உபவிதியின் கருத்துப்படி அத்தீர்ப்பின்படி அவருக்கு முறையாக அனுப்பப்பட்டிருப்பதாகக் கருதப்படும் (6), (7) விதிகளில் நிச்சயிக்கப்பட்ட பதினைன்றுக்கு நாள் கால அளவை அவ்வாறு மறுத்த தேதியிலிருந்து கணக்கிட வேண்டும்.

6. (1) ஒப்புக்கொள்ள மறுக்கப்பட்டதனுல் அல்லது தாம் பொறுப் பேற்கும்படி அல்லது தொகை செலுத்தும்படி செய்யப்பட்டதனுல் துன்ப மடைந்த ஒருவர், தணிக்கையாளரின் தீர்ப்பில் தாம் பெற்றுக் கொண்டபிறகு அல்லது அது தம்மிடம் சேர்ப்பிக்கப்பட்ட பிறகு பதினைந்து நாட்களுக்குள்.

(அ) அவ்வாறு ஒப்புக்கொள்ள மறுத்திருப்பதை அல்லது தாம் பொறுப் பேற்கும்படி அல்லது தொகை செலுத்தும்படி செய்யப்பட்டிருப்பதை மறுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு, அசல் விசாரணை அதிகாரமுள்ள தலைமை சிவில் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம். அந்த நீதி மன்றத்தார், அவசியமாயிருக்கிற சாட்சியம் கேட்டபிறகு அவ்வாறு ஒப்புக் கொள்ள மறுத்திருப்பதை அல்லது பொறுப்பேற்கும்படி அல்லது தொகை செலுத்தும்படி செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தலாம், மாற்றியமைக்கலாம் அல்லது தள்ளிக்கொடுக்கலாம். அம்மாதிரி சூழ்நிலையில் தாங்கள் தகுதி

யெனக் கருதக்கூடிய செலவை இன்னார் ஏற்கவேண்டுமெனவும் அப்போது உத்தரவிடலாம்.

(ஆ) அவ்வாறு விண்ணப்பம் செய்து கொள்வதற்குப் பதிலாக அரசினருக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம். அந்த மேல்முறை யீட்டின் மீது அரசினர் பிறப்பிக்கிற ஆணை முடிவானதாகும்.

2. (1) உள்விதியைச் சேர்ந்த (அ) பகுதியின்படி நீதிமன்றத்தார் பிறப்பிக்கும் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதி மன்றத்துக்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம்.

(ஆ) பகுதியின்படி நீதி மன்றத்தாருக்கு விண்ணப்பம் செய்து கொள்வப்பட்டால், தணிக்கையாளர் மட்டும் அதற்கு எதிர்வாதியாவார். அரசினரையாவது வேறொருவரையாவது அந்த நடவடிக்கைகளுக்குச் சம்பந்த முடையவராக ஆக்க விண்ணப்பதாரருக்கு உரிமையில்லை.

7. ஒருவரிடமிருந்து சேரவேண்டியதென இவ்விதிகளின் படி தணிக் கையாளர் சான்றிடுகிற ஒவ்வொரு தொகையையும், அவர், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது ஊராட்சியின் நிதிகள் போட்டு வைக்கப்படுகிற கருவூலத்தில் அல்லது வங்கியில் தணிக்கையாளரின் தீர்ப்பு தமக்குத் தெரிவிக்கப்பட்ட பிறகு பதினைந்து நாட்களுக்குள் செலுத்திவிடவேண்டும். ஆனால் இக்காலத்துக்குள் மேற்படி தீர்ப்பை எதிர்த்து அவர் நீதி மன்றத்துக் காவது அரசினருக்காவது மேல் முறையீடு செய்து கொண்டிருந்தால் அவ்வாறு செலுத்த வேண்டியதில்லை, செலுத்தப்படாத அத்தொகையையும் சேர வேண்டியதென நீதி மன்றத்தார் அல்லது அரசினர் அறிவிக்கிற தொகை யையும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் விஷயத்தில் மாவட்ட ஆட்சியாளரும் ஊராட்சிகள் விஷயத்தில் கோட்ட ஊராட்சி அலுவலரும் நீதி மன்றத்துக்கு விண்ணப்பம் செய்து கொள்வதன் பேரில் அந்த நீதி மன்றத்தினால் உத்தரவான தொகையைப் போலவே வசூலிக்கப்படத்தக்கதாகும்.

8. இவ்விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே அந்த விஷயத்தின் எல்லாச் சந்தர்ப்பங்களையும் கருதிப்பார்க்கும்போது பின்வருமாறு செய்வது அவசியமென அரசினர் கருதினால் அவர்கள், எப்போதேனும், ஒருவரிடமிருந்து சேரவேண்டியதென இவ்விதிகளின்படி தணிக்கையாளரால் சான்றிடப்படுகிற தொகை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தையும் வசூலிக்கவேண்டாமெனக் கட்டளையிடலாம்.

9. இவ்விதிகளில் "அரசினர்" என்பது தமிழ்நாடு அரசினர் எனப் பொருள்படும்.

(1965 மே 18 ஆம் தேதியுள்ள 1127 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1965 அக்டோபர் 10 ஆம் தேதியுள்ள 2178 ஆம் எண் கிராம முன்னேற்றம் —உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(71) மேற்சொன்ன அரசாணையில், ஊராட்சி ஒன்றியக் குழுவின் நிருவாகத்தைப் பற்றியும், அந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எல்லா ஊராட்சிகளின் நிருவாகத்தைப் பற்றியும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் இன்னவிதமாக அறிக்கைத் தயாரித்து அனுப்ப வேண்டுமெனக் கண்டு விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 55 (3) பிரிவின்படி மாவட்ட ஆட்சியாளர் அந்த மாவட்டத்திலிருக்கிற ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், ஊராட்சிகள் ஆகியவற்றின் நிருவாகத்தைப்பற்றிப் பொது அறிக்கையொன்றைத் தயாரித்து மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் முன்னர் அதை வைத்து, அதனையும் மாவட்ட வளர்ச்சி மன்றத் தீர்மானத்தின்படியையும் அரசினருக்கு அனுப்ப வேண்டும். மாவட்டங்களிலிருக்கிற ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், ஊராட்சிகள் ஆகிய வற்றின் நிருவாகத்தைப் பற்றி எல்லா மாவட்டங்களிலும் ஆட்சியாளர்களும் அரசினருக்கு அனுப்ப வேண்டிய பொது அறிக்கைக்காகத் தக்கதொரு படிவம் நிர்ணயிக்கும் பிரச்சினை அரசினரின் கவனத்தில் இருந்து வந்திருக்கிறது. அவர்கள் இப்போது கட்டளையிடுவது என்னவென்றால், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் நிருவாகம் பற்றி எல்லா மாவட்டங்களின் ஆட்சியாளர்களும் அனுப்ப வேண்டிய பொது அறிக்கை இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் படி இருக்க வேண்டும். ஊராட்சிகளின் நிருவாகத்தைப்பற்றி வளர்ச்சி மாவட்டவாரியாக மாவட்ட ஆட்சியாளர்கள் அனுப்ப வேண்டிய ஒருங்கிணைந்த அறிக்கைக்காக 1963 அக்டோபர் 10 ஆம் தேதியுள்ள 2160 ஆம் எண் கிராம முன்னேற்றம், உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையின் II ஆம் இணைப்பில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற படிவத்தைப் பயன்படுத்த வேண்டும். அந்தந்த வளர்ச்சி மாவட்டங்களில் இருக்கிற ஊராட்சி மன்றங் களும் பேரூராட்சி மன்றங்களுங்கூட ஒருங்கிணைந்த அறிக்கையில் அடங்கி யிருக்க வேண்டும். அதே சமயத்தில் மாவட்ட ஆட்சியாளர் அறிக்கையின்படி ஒன்றையும் மாவட்ட வளர்ச்சிக்குழுவின் தீர்மானத்தையும் கிராம முன்னேற்ற இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

2. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் அனுப்புகிற நிருவாக அறிக்கையிலே, இந்த ஆணையின் இணைப்பின் பிந்திய பாகத்தில் கண்டுள்ள வெவ்வேறு தலைப்புகளின் கீழ், சமுதாய வளர்ச்சித் திட்ட நடவடிக்கைகள் பற்றிய தனி அத்தியாயம் ஒன்றைச் சேர்க்கும்படி அந்த ஆணையாளர்கள் எல்லாருக்கும் சொல்லி வைக்குமாறு, கிராம முன்னேற்ற இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அப்படி சேர்த்தால்தான், மாவட்டங்களின் ஆட்சியாளர்கள் வளர்ச்சி மாவட்டம் ஒவ்வொன்றுக்காகவும் இந்த அறிக்கைகளை ஒருங் கிணைப்பது சாத்தியமாகும்.

3. அதே சமயத்தில், நிருவாகம் பற்றிய ஒருங்கிணைந்த அறிக்கையின் படியையும், 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 55 (1) பிரிவின்படி ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றும் அனுப்ப வேண்டிய ஊராட்சி ஒன்றிய மன்றத் தீர்மானத்தையும் கிராம முன்னேற்ற இயக்குநருக்கு அனுப்பும்படியும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கும்ச் சொல்லிவைக்க வேண்டும்.

கே. திரவியம்,
அரசாங்க கூட்டுச் செயலாளர்.

கிராம முன்னேற்ற இயக்குநருக்கு (ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு அனுப்புவதற்காக (400 படிகள்) தலைவர்கள் மூலமாக

மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் (சென்னை மாவட்ட ஆட்சியாளர் தவிர) (ஒவ்வொருவருக்கும் இரண்டு படிகள்) கோட்ட ஆட்சியாளர்கள் எல்லாருக்கும்.

கிராம முன்னேற்றம் உள்ளாட்சித்துறை அலுவலர்கள், பிரிவுகள் எல்லாருக்கும்.

தலைமைச் செயலகத்துறை எல்லாவற்றிற்கும்.

இணைப்பு.

வளர்ச்சி மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் நிருவாகம் பற்றிய ஆண்டுக்கான பொது அறிக்கை.

I அமைப்பும் நிருவாகமும் (i) 1 இந்த அறிக்கை சம்பந்தப்படுகிற ஆண்டின் மார்ச் 31 ஆம் தேதியில் இருந்தபடி வளர்ச்சி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கையும் மொத்தப் பரப்பும்.

(ii) அறிக்கைக்குட்பட்ட ஆண்டிலே வளர்ச்சி மாவட்டம் ஒவ்வொன்றிலும் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் அதிகார வரம்பில் மாறுதல் கள் இருந்தால், அவை

(iii) வளர்ச்சி மாவட்டம் ஒவ்வொன்றையும் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் மொத்த எண்ணிக்கை.

(iv) வளர்ச்சி மாவட்டம் ஒவ்வொன்றிலும் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாவற்றின் மொத்த மக்கள் தொகை கடைசியாக எடுத்த குடிக்கணக்கின்படி (குடிக்கணக்கு எடுக்கப்பட்ட ஆண்டினைக் குறிப்பிட வேண்டும்).

(அ) ஆண்.

(ஆ) பெண்.

(இ) உழவர்களின் எண்ணிக்கை.

2. ஆட்கள்.—(அ) குழுக்கள் (i) வளர்ச்சி மாவட்டம் ஒவ்வொன்றிலும் எல்லாக்குழுக்களிலும் இருக்கிற உறுப்பினர்களின் ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை.

(ii) மார்ச் 31-ஆம் தேதியன்று இருந்தபடி உள்ளபடியான மொத்த எண்ணிக்கை.

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட அட்டவணைச் சாதி உறுப்பினர்களின் எண்ணிக்கை.

சேர்த்துக்கொள்ளப்பட்ட அட்டவணைச் சாதி உறுப்பினர்களின் எண்ணிக்கை.

(iv) தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை.
சேர்த்துக்கொள்ளப்பட்ட பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

(ஆ) நெறிப்படுத்தும் அலுவலர்கள்—(i) தலைவர், துணைத் தலைவர் ஆகியோரின் தேர்தல்கள் பற்றிய விவரங்கள்—

(அ) தேர்தல்களின் மொத்த எண்ணிக்கை.

(ஆ) போட்டியில்லாத தேர்தல்களின் எண்ணிக்கை.

(இ) சம்பந்தப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை.

(ஈ) வேட்பாளர்களின் எண்ணிக்கை.

( ) நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் எவையேனும் வந்தனவா ?

3. வளர்ச்சி மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஊராட்சி ஒன்றியங்களின் கூட்டம்.—( ) கூட்டங்கள் நடக்கும் காலமுறை.

(ii) கூட்டப்பட்ட கூட்டங்களின் மொத்த எண்ணிக்கை.

(iii) குறும் எண் இல்லாததனுல் அல்லது வேறு காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை.

(iv) கூட்டத்துக்கு வந்திருந்தவர்களின் சதவீதம்.

(v) வளர்ச்சி மாவட்டம் ஒவ்வொன்றையும் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்களில் எடுத்துக்கொண்ட தீர்வு செய்யப்பட்ட இனங்களின் மொத்த எண்ணிக்கை.

(vi) ஒரு தடவை அல்லது பலதடவை ஒத்திவைக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கையும் அவற்றின் காரணங்களும்.

4. குழுக்கள்.—(i) சட்டப்படி அமைந்த குழுக்கள், பிற குழுக்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை.

(ii) ஒவ்வொரு குழுவும் நடத்திய கூட்டங்களின் எண்ணிக்கை.

(iii) குறும எண் இல்லாததனுல் அல்லது வேறு காரணங்களினுல் ஒத்திவைக்கப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை.

(iv) குழுக்கள் செயலாற்றியதைப்பற்றிய பொதுவான சுருக்கம்.

(v) கூட்டுக்குழுக்கள் இருந்தால் அவைகளும் அவைகள் ஆற்றிய பணியும்.

5. திருவாகம் (வசூல் செலவுகள் பற்றிய விவரங்கள்).—வசூல் செலவுகள் உட்பட 'திருவாகத்துக்கு' ஆன மொத்த செலவு—

(அ) சாதாரணம்—

(i) பணி அமைப்பு.

(ii) எதிர்பாராச் செலவுகள்.

(iii) தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள், பணியமைப்புகள் ஆகியோரின் பயணப்படி.

(iv) வேறு சாதாரண செலவு.

(ஆ) மூலதனம்.

(இ) பொதுப்பணியமைப்பு.—வளர்ச்சி மாவட்டம் ஒவ்வொன்றிலும் உள்ள ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் அமர்த்திக் கொள்ளப்பட்ட பணித்தொகுதியின் விவரங்கள், வகைவாரியாக விவரங்கள் கொடுக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றியப் பணித்தொகுதி பற்றியும் அரசாங்கத் தொகுதி அமைப்பிலுள்ள பணித்தொகுதி பற்றியும் கூட விவரங்கள் கொடுக்க வேண்டும். வளர்ச்சி மாவட்டம் ஒன்றிலிருந்து வளர்ச்சி மாவட்டம் மற்றொன்றிற்கும், வருவாய்த்துறை மாவட்டம் ஒன்றிலிருந்து வருவாய்த்துறை மாவட்டம் மற்றொன்றிற்கும் செய்யப்பட்ட மாற்றம் பற்றிய விவரங்களைக் குறிப்பிட வேண்டும்.

6. பொது.—(i) ஆணையாளருக்கும் மன்றத்திற்கும் இடைப்பட்ட உறவு ஆணையாளர் நெருக்கடிகால அதிகாரங்களை எப்போதாகிலும் பயன்படுத்தியிருக்கின்றாரா? எத்தனை தடவைகள் அந்த அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டன?

(ii) மன்றங்கள் நிறைவேற்றிய தீர்மானங்களை ஆய்வாளர் ரத்து செய்தது அல்லது சிறிது காலம் நிறுத்தி வைத்தது; அவ்வாறு எத்தனை தடவைகள் செய்தார் என்பது.

(iii) தலைவர் அல்லது துணைத் தலைவர் நீக்கப்பட்டார்களா?

(iv) உறுப்பினர்களின் தகவின்மை.

(v) ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் கலைக்கப்பட்டனவா?

II. போக்குவரத்துகள்.

7. (1) பணியமைப்பு.—சாலைப் பணிகளின் பாமரிப்பை மேற்பார்வையிடுவதற்காக அமர்த்திக் கொள்ளப்பட்ட ஒன்றியப் பொறியாளர்கள், மேற்பார்வையாளர்கள், பார்வையாளர்கள், சாலை ஆய்வாளர்கள், மற்ற தனிப் பணியாளர்கள் முதலியவர்களைப் பற்றிய விவரங்களைக் கொடுக்க வேண்டும். பெரும் வரையறை ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அதனுடன் செலவை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

(2) வளர்ச்சி மாவட்டம் ஒவ்வொன்றிலும் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற சாலைகள், பாலங்கள், தோனித் துறைகள், கட்டிடங்கள்.

(அ) சாலைகள் (1) சாலைகளின் வகைகளும் நீளமும்.—(i) தேசிய நெடுஞ்சாலைகள்.

(2) மாநில நெடுஞ்சாலைகள்.

(3) பெரிய மாவட்டச் சாலைகள்.

(4) மற்ற மாவட்டச் சாலைகள்.

(5) ஊராட்சி ஒன்றியச் சாலைகள்.

(6) ஊராட்சிச் சாலைகள்.

(ii) புதிதாக அமைக்கப்பட்ட கிராம இணைப்புச் சாலைகளின் மொத்த எண்ணிக்கையும் நீளமும், இணைக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை, மைல் ஒன்றுக்குச் சராசரியில் பிடிக்கும் செலவு, அரசுக் கொடைகளும் உதவித் தொகைகளும்.

(iii) புதிய சாலைகள் உட்பட, சாலைகளின் மொத்த எண்ணிக்கை (ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்காகவும் ஊராட்சிச் சாலைகளுக்காகவும் தனித் தனியாக விவரங்கள் கொடுக்க வேண்டும்).

(iv) சாலைகள் போதுமானவையா—இந்த ஆண்டில் பராமரித்துவரப் பட்ட நீளம், பராமரிப்பின் வகை.

(v) அதிகப் போக்குவரத்துள்ள ஊடு மார்க்கங்கள் (முக்கியமாக அகலத்தில்) போதுமானவையா? சாலைகளின் நிலை.

(vi) உள்ளூர்ச் சாலைகள் கொடைகளிலிருந்தும் உதவித் தொகைகளி லிருந்தும் வரவுகள், பராமரிப்புச் செலவு, மைல் ஒன்றுக்குச் சராசரியில் பிடிக்கும் செலவு உள்ளூர்ச்சாலைகள் கொடை உபரியா? பற்றுக்குறையா? கடந்த மூன்றாண்டுகளுக்கான ஒப்பீட்டு இயக்கங்கள்.

(ஆ) பாலங்கள் தாம்போகிகள், சிறு பாலங்கள்.—(i) பெரிய பணி கள் இருந்தால், அவை மதிப்பிடப்பட்ட செலவு முந்திய ஆண்டின் இறுதி வரையிலும் அறிக்கைக்குட்பட்ட ஆண்டிலும் பிடித்த செலவு.

(ii) சிறிய பணிகள்.—கட்டப்பட்ட அல்லது செப்பனிடப்பட்ட பாலங்கள், சிறு பாலங்கள் முதலியவற்றின் எண்ணிக்கை.

அடியிற்கண்டவைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை—

(அ) புதிய பணிகள்.

(ஆ) செப்பனீடுகள், கொடைகள், உதவித் தொகைகள்.

(இ) தோனித்துறைகள், வரவுகளும் செலவுகளும், கட்டணங்களின் வீதங்கள் வசூலிக்கும் விதம், செய்து கொடுக்கப்படும் வசதிகள்.

(ஈ) ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்கள்.

இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் முக்கியமான பணி.

8. **சத்திரங்களும் தண்ணீர்ப்பந்தல்களும்.**—(i) பராமரித்து வரப்படுபவை களின் எண்ணிக்கை.

(ii) வரவுகளும் செலவும்.

(iii) எவையேனும் கட்டளைகள் இருந்தால் அவைகளைப் பற்றிய விவரங்கள்.

(iv) புதிதாக ஏற்படுத்தப்பட்ட சத்திரம் அல்லது கைவிடப்பட்ட பழைய சத்திரம்.

(v) ஏற்படுத்தப்பட்ட ஏழைகள் விடுதிகள் அல்லது ஆதரவற்ற சிறுர் காப்பகங்கள் அவற்றைப் பேணுதற்குப் பிடித்த செலவு.

(vi) ஏற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடை அல்லது பொறுப்புகளும், இன்ன காரியங்களுக்காக அத்தொகை பயன்படுத்தப்பட்டதென்பதும்.

9. **கருவிகளும் யந்திரங்களும் பண்டங்களும்.**—(i) மொத்த சாதாரண செலவு.

(ii) இந்த ஆண்டில் மூலதனச் செலவு (மோட்டார் பார வண்டிகள் முதலியவற்றை வாங்கியது).

(iii) ஜீப்பு, பெட்ரோல் செப்பனீடு, பராமரிப்பு ஆகியவைகளுக்குப் பிடித்த செலவு.

(iv) யந்திரக் கலப்பை முதலியவைகளைப் போல் கிரயத்துக்கு வாங்கப் பட்ட மற்ற இனங்கள். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உடைமையாகவுள்ள தனிக் கருவிகளையும் யந்திரங்களையும் இங்கே குறிப்பிடவும்.

10. **விளக்குப் போடுதல்.**— (i) மின் விளக்குகள், மிகு ஆற்றல் விளக்குகள், சாதாரண விளக்குகள் ஆகியவற்றின் எண்ணிக்கை.

(ii) விளக்குப் போடுவதற்கான செலவு.

(iii) மின்சார அமைப்புப் போன்ற விளக்குப் போடுவதற்கான தனித் திட்டங்கள்.

III. கல்வி தொடக்கக் கல்வி

11. **கல்வி வசதிகள் போதுமானவையா என்பது.**—(i) பள்ளிக்குப் போகும் வயதுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை. அதாவது ஆண்களிலும் பெண்களிலும் 6 முதல் 11 வரையிலும் 11 முதல் 14 வரையிலும் உள்ள

சிறுவர்கள் ஆண்களிலும் பெண்களிலும் உள்ளபடி பள்ளிக்குப் போகும் சிறுவர்களின் எண்ணிக்கை. ஆணிலும் பெண்ணிலும் இன்னும் எத்தனை சிறுவர்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது. பள்ளிக்குப் போகும் வயதுள்ள சிறுவர்களின் மொத்த எண்ணிக்கையில் உள்ளபடி பள்ளிக்குப் போகும் சிறுவர்கள் எத்தனை சதவீதம் என்பது ஆண்களுக்கும் பெண் களுக்குமாக தனித்தனியாய் சதவீதம் ஒருங்கிணைந்த மொத்தத்துக்காக சதவீதம்.

(அ) இந்த ஆண்டின் தொடக்கத்தில் I முதல் V முடிய வகுப்புகளில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை.

(ஆ) இந்த ஆண்டின் தொடக்கத்தில் VI, VII, VIII ஆம் வகுப்புக்களில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை.

(இ) இந்த ஆண்டில் சேக்கர்ப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை (வகுப்புக்கள் VI, VII, VIII)

(ஈ) இந்த ஆண்டின் இறுதியில் பள்ளிக்குப்போகும் வயதுள்ள சிறுவர் களின் மொத்த எண்ணிக்கையில், பள்ளிக்கு போகும் சிறுவர்கள் இத்தனை சதவீதம் என்பது.

(ii) இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒன்றியத்திலே (உயர் தொடக்கப் பள்ளிகள் உட்பட) தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை, மேற்கண்டவற்றுள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் எத்தனை? உதவி பெறும் பள்ளிகள் எத்தனை? அரிசன நலப் பள்ளிகள் எத்தனை.

(அ) இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒன்றியத்தில் இருந்த உயர் தொடக்கப்பள்ளிகள் மட்டும் எத்தனை? மேற்கண்டவற்றுள் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் எத்தனை? உதவிபெறும் பள்ளிகள் எத்தனை? அரிசன நலப்பள்ளிகள் எத்தனை?

(ஆ) இந்த ஆண்டில் (உயர் தொடக்கப்பள்ளிகள் உட்பட) புதிதாகத் திறக்கப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை. மேற்கண்டவற்றுள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் எத்தனை? உதவி பெறும் பள்ளிகள் எத்தனை? அரிசன நலப்பள்ளிகள் எத்தனை?

(இ) இந்த ஆண்டில் திறக்கப்பட்ட உயர் தொடக்கப்பள்ளிகள் மட்டும் எத்தனை? மேற்கண்டவற்றுள், ஊராட்சி ஒன்றியப்பள்ளிகள் எத்தனை? உதவி பெறும் பள்ளிகள் எத்தனை? அரிசன நலப்பள்ளிகள் எத்தனை?

(ஈ) மாணவர்கள் அதிகப்படியாகச் சேர்க்கப்பட்டதையொட்டிப் புதிதாக உண்டாக்கப்பட்ட பள்ளி இடங்கள் பற்றிய விவரங்கள்.

(iii) கட்டாயத் தொடக்கக்கல்வித் திட்டம் செயற்படுத்துவது பற்றிய சுருக்கக் குறிப்பு.

(அ) பள்ளிகளில் மருத்துவ ஆய்வு பற்றிய சுருக்கக் குறிப்பு.

(ஆ) பின்னிலே வகுப்பினர்களுக்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு.

(iv). (அ) ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கையும் சம்பளங்களும் (ஒன்றியப்பள்ளிகளையும் உதவிபெறும் பள்ளிகளையும் பற்றிய விவரங்களைத் தனித்தனியாகக் கொடுக்கலாம்) ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் வீதாசாரம் இன்னதென்பது பயிற்சிபெறாத ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் புதிய ஆசிரியர்களின் நியமனம் பற்றிய விவரங்களைக் கொடுக்கலாம்.

(ஆ) ஓர் ஆசிரியருக்கு இத்தனை மாணவர்கள் என்பது.

(v) இந்த ஆண்டின் தொடக்கத்திலும் முடிவிலும் ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தொடக்கக் கல்விக்காக மாதம் ஒன்றுக்கு ஒருவருக்குப் பிடித்த செலவு.

(vi) பகலுணவு நிலையங்கள்.—(அ) ஒன்றியத்திலுள்ள பகலுணவு நிலையங்களின் எண்ணிக்கை, ஒப்பளிக்கப்பட்ட கொடை பற்றிய விவரங்கள்.

(ஆ) கால் ஆண்டுதோறும் கணக்குகள் ஒழுங்காக வைத்துவரப்பட்டுத் தணிக்கை செய்யப்பட்டிருக்கின்றனவா?

(இ) எக்கால்ஆண்டிலேனும் அது தணிக்கை செய்யப்பட்டிரா விட்டால், அதற்குண்டான காரணம்.

(vii) ஆசிரியைகளின் விடுதிகள்.—(அ) இந்த ஆண்டின் தொடக்கத்தில் முடிவாகாமலிருந்து பணிகளின் எண்ணிக்கை.

(ஆ) இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை.

(இ) மொத்தம்.

(ஈ) இந்த ஆண்டில் முடிக்கபட்ட பணிகளின் எண்ணிக்கை.

(உ) இந்த ஆண்டின் இறுதியில் முடிவாகாமலிருந்த பணிகளில் எஞ்சியவை, அவைகள் முடிவாகாமலிருக்கிற நிலைகள், முடிக்கபடாததற்குக் காரணங்கள்.

(viii) பள்ளிப் பருவத்துக்கு முன் திட்டம் செயற்படுத்தல்.

12. சொந்தக் கட்டிடங்களிலுள்ள பள்ளிகளின் எண்ணிக்கை, வாடகைக் கட்டிடங்களில் உள்ளவைகளின் எண்ணிக்கை, வாடகையில்லாத கட்டிடங்களின் எண்ணிக்கை, அந்தந்த பராமரிப்புச் செலவைத் தெரிவிக்கலாம்.

13. 1962 நவம்பர் 8 ஆம் தேதியுள்ள 2427 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணையில் பிறப்பிக்கப்பட்டு, அவ்வப் போது விளக்கப்பட்ட படியுள்ள உத்தரவுகளை யொட்டி, தொடக்கக்கல்விக் கான செலவுப் பங்கீட்டு விதத்தைக் குறிப்பிடலாம்.

அறிக்கைக்குட்பட்ட ஆண்டுக்காக சமூகக் கல்வி நீங்கலாக சாதாரண தொடக்கக்கல்விக்குப் பிடிக்குமென எதிர்பார்க்கப்படும் செலவு

கழிக்க—தனிப்பஞ்சப்படிக் கொடை.

பாக்கி

கழிக்க—பாக்கியில் 18 சதவீதப்படி துணைக்கல்விக் கொடை.

பாக்கி

கழிக்க—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிக் சட்டத்தில் கண்ட 118 ஆவது பிரிவையொட்டி நில ஒப்படைப்பாக ஒப்பளிக்கப்பட வேண்டிய செலவின் முற்பகுதி.

பாக்கி

கழிக்க.—செலவின் இரண்டாவது பகுதியும் பிற்பட்ட பகுதியும் வட்டாரத தின் வகைப்பாட்டினை யொட்டி அரசினர் பங்கு.

பாக்கி

கழிக்க.—4/9 உள்ளூர் வரியினின்றும் செய்ய வேண்டிய செலவு.

பாக்கி

பொது நிதிகளியிலிருந்து கொடுக்கப்படவேண்டிய ஊராட்சி ஒன்றியங் களின் பங்கு.

(iv) சுகாதாரமும் நல வசதியும். அ. மருத்துவ உதவி.—14.

சுகாதாரமும் நல வசதியும்.

14. போதுமானதாயிருத்தல்: (i) ஊராட்சி ஒன்றியப் பரப்பிலிருக்கிற மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை. தாலுக்கா தலைமையிட நிலையம் ஏதேனும் உள்ளதா?

(ii) ஊராட்சி ஒன்றிய நிலையங்களில் உள்ள பணியாளர் தொகுதி.

(iii) பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் தனி எற்பாடுகள் செய்யப்பட் டிருக்கின்றனவா?

15. நோயாளிகள் : சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை, ஒரு நோயாளிக்குப் பிடித்த செலவு.

16. இடவசதியும் தளவாடமும் (i) கட்டிடங்களின் தன்மையும் தகுதியும், அவசரகாலப்படுக்கைத் தொகுதிகளை மருந்தகங்களில் அமைப்பதற்கான ஏற்பாடுகள்.

(ii) தளவாடங்களும் சார்நிலைப் பணியாளர் தொகுதிகளும் போதுமா என்பது.

(iii) மூலதனச் செலவும், அதற்கு எவ்வாறு பணவுதவி செய்யப்படுகிற தென்பதும்.

ஆ. நோய்த்தடுப்பு மருந்து. 17. பிறப்பு வீதம் மகபேறு உதவி, குடும்பத் திட்டம் :

(i) பதிவான பிறப்பு வீதம்.

(ii) ஊராட்சி ஒன்றியங்களிலும் பிற இடங்களிலும் பணியாற்றுகிற மருத்துவச்சிகளும் பேறுகால உதவியாளர்களும்.

(iii) மருத்துவச்சிகளால் கவனிக்கப்பட்டுப் பதிவான பிறப்புக்களின் எண்ணிக்கை.

(iv) ஒரு மைல் அளவில் பிறந்த குழந்தைகளில் இறந்து போனவை எத்தனை.

(v) பேறு கால—குழந்தைநல நிலையங்கள் :

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்தவைகள்.

இந்த ஆண்டில் தொடக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை, இந்த ஆண்டின் இறுதியில் இருந்தவைகளின் எண்ணிக்கை.

(vi) குடும்பத் திட்டம்.—ஆலோசனை கூறுதல் பணிபுரிதல் வசதி செய்து கொடுக்கப்பெற்றுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை.

இந்த ஆண்டில் அறுவை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை (ஆண்களையும் பெண்களையும் தனித்தனியாகக் குறிப்பிட வேண்டும்.)

முன் முயற்சியாக மலடாக்கும் திட்டம் பூர்த்தியாகியிருக்கிற ஊராட்சிகளின் எண்ணிக்கை.

18. சிறப்பு விதம், கொள்ளைநோய்கள் ஊரிடத்தில் காணும் கொள்ளை நோய்கள்.—(i) பதிவான இழப்பு விதம்.

(ii) கொள்ளை நோய்கள், இந்த ஆண்டில் பின் வரும் நோய்களினால் இறந்து போனவர்களின் எண்ணிக்கை :

(அ) வாந்தி பேதி.

(ஆ) பெரியம்மை.

(இ) பிளேக்கு.

மலேரியா காய்ச்சலும் கொக்கிப்புழு நோயும் காணுதல்.

எத்தனைபேருக்கு முதன்முறையும் இரண்டாமுறையும் அம்மைக் குத்திப்பலனளித்ததென்பது.

இந்த ஆண்டில் எங்கேனும் அவ்வாறு நோய் கண்டதா? அப்படியானால் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டன? அது எவ்வாறு பரவாமல் தடுக்கப் பட்டது? பிடித்த செலவு யாது?

19. சுகாதாரத் துப்புரவு.—(அ) உணவுப்பொருள் கலப்பம், உணவுப் பொருள் கலப்படச் சட்டத்தைச் செயல் படுத்துவது முதலியன.

(ஆ) ஆபத்தான தீங்குண்டாக்கத்தக்க தொழில்கள் : பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, தீர்வு செய்யப்பட்ட விண்ணப்பங் களின் எண்ணிக்கை : முந்திய ஆண்டின் வசூலோடு ஒப்பிட்டுப்பார்க்கும் பொது வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணத்தொகை, ஊராட்சி ஒன்றிய ஆணை யாளரால் கண்டு பிடிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை : தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை முதலியன.

(இ) சந்தைகளும் திருவிழாக்களும் : முக்கிய சந்தைகளும் திருவிழாக் களும் இவைகளுக்கு வருபவர்களின் எண்ணிக்கை, அவர்களுடைய சுகாதா ரத்துக்காகவும் வசதிக்காகவுமான ஏற்பாடுகள். யாத்திரை வரி முதலியவற்றி லிருந்து கிடைக்கும் வரவுகள், ஏற்பாடுகளுக்குப் பிடித்த நிகர செலவு.

20. நீர் வழங்கீடு.—பாதுகாக்கப்பட்ட நீர் வழங்கீடு ஏற்பாடு செய்யப் பெற்றுள்ள கிராமங்கள் சிற்றூர்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையும், அத்தகைய ஏற்பாடு செய்ய வேண்டி இருப்பனவற்றின் மொத்த எண்ணிக்கையும் இந்த ஆண்டின் தொடக்கத்தில் பூர்த்தியாகாமலிருந்த திட்டங்களின் எண்ணிக்கை முடிவடைந்த திட்டங்களின் எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்ட புதிய திட்டங்

களின் எண்ணிக்கை நிறைவேற்றப்பட்டு வருபவைகளின் எண்ணிக்கை—பிடித்த செலவு, முழுக்கொடை அடிப்படையின் பேரில் உள்ள பணிகளின் எண்ணிக்கை.

21. **வடிகால் திட்டம்.**—இந்த ஆண்டின் தொடக்கத்தில் பூர்த்தியாகாமலிருந்த திட்டங்களின் எண்ணிக்கை.

இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டவைகளின் எண்ணிக்கை.

இந்த ஆண்டில் முடிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை.

இந்த ஆண்டின் இறுதியில் நிறைவேற்றப்பட்டு வந்தவைகளின் எண்ணிக்கை.

கட்டப்பட்டு உபயோகத்திலிருக்கிற கிராமக்கழிப்பிடங்களின் எண்ணிக்கை.

விற்பனையான நீர் உட்புகாத கற்பலகைகளின் எண்ணிக்கை.

கட்டப்பட்ட ஊறவைப்புக் குழிகள்.

தலரிசையிடப்பட்ட கிராமச் சந்துகள்.

22. **அமைப்பும் சிப்பந்தியும்.**—சுகாதார ஆய்வாளர்கள் அவர்களுக்குப் பிடிக்கும் செலவு சுகாதார ஆய்வாளர்கள் போய்ப்பார்த்த கிராமங்களின் எண்ணிக்கை, அவர்கள் போய்ப்பார்த்தபோது ஆய்வு செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை போய்ப்பார்த்த பள்ளிகளும் ஆய்விடப்பட்ட உண்டிச்சாலைகளும் கொண்டாடப்பட்ட தேசிய சுகாதார குழந்தைகள் வாரங்கள்.

இ. பொது சுகாதாரமும் பாதுகாப்பும் (பல்வகை) தீப்பிடிக்காமல் பாதுகாப்பதற்குச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பு ஊர் சுற்றி நாய்கள் முதலியவற்றை அழிப்பது.

(v) பயன்தரும் தொழில்கள்.

23. பொது (i) தொழில் வளர்ச்சியின் சாத்தியக் கூறு பற்றி ஆய்தல் அறிக்கைக்குட்பட்ட ஆண்டிலே தொடங்கப்பட்ட ஏதேனும் புதிய இனத்தைச் சேர்ந்த பயன் தரும் தொழில்கள், இத்தகவலை ஊராட்சி ஒன்றிய வாரியாகக் கொடுக்க வேண்டும்

(ii) ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப் பாட்டுக்குட்பட்ட கட்டளைகளைத் தவிர வேறு நிறுவனங்கள் பற்றிய பொதுத் தகவல்கள் (எடுத்துக்காட்டாக) தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியக்குழு மத்திய மருத்தகம்.

24. அங்காடிகள்.—(i) ஊராட்சி ஒன்றிய அங்காடிகள் ஊராட்சி அங்காடிகள் வார அங்காடிகள் நாள் அங்காடிகள் எண்ணிக்கை.

(ii) வரவு, செலவு மிச்சமிருந்தால் அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது.

(iii) செய்ய வேண்டிய சீர்த்திருத்தங்கள், வளர்ச்சிக்கான சாத்தியக் கூறுகள், வருங்காலக் கொள்கை.

(iv) தனியார் அங்காடிகள், எண்ணிக்கை வரப்பற்றிய உரிமக்கட்டணங்களின் மதிப்பிடப்பட்ட வரவு, உரிம நிபந்தனைகளை அமல்படுத்துவது.

(v) தொழிற்சாலைகளும் தொழில்களும்—செலுத்தப்படும் கட்டுப்பாடு.

25. மரம் நடுதலும் பூங்காக்களும்.

26. நில மேம்பாடு.—(i) சாலை ஓர விற்பனை மேடைகள்.

(ii) ஆக்கிரமிப்புகள். (அ) ஆணையாளராலும் ஆய்வு செய்யப்பட்டனவைகளின் எண்ணிக்கை.

(ஆ) அடியிற்கண்ட வகைகளின் கீழ் தீர்வு செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை.

உரிமம் கொடுக்கப்பெற்றவை, குத்தகைக்கு விடப்பட்டவை, புறக்கணிக்கப்பட்டவை, ஒப்படை செய்யப்பட்டவை, அகற்றப்பட்டவை.

(vi) நிலப் பயனீடும் பாசனமும்.

27. நிலப்பரப்பு, சாகுபடியான பரப்புகள் முதலியவை.—(i) நிலப்பரப்பு.

(அ) நன்செய்.

(ஆ) புன்செய்.

(ii) நிகர சாகுபடியான பரப்புகள் :

(1) நன்செய்.

(2) புன்செய்.

(iii) பலமுறை சாகுபடி செய்யப்பட்ட பரப்பு (அ) நன்செய் (ஆ) புன்செய்.

(iv) நிகர பாசனப்பரப்பு.

(v) பலமுறை பாசனம் செய்யப்பட்ட பரப்பு.

(vi) பாசன ஆதாரம்.

(அ) கிணறுகள்.

(ஆ) குளங்கள்.

(இ) வாய்க்கால்கள் (கிலோ மீட்டர் கணக்கில் நீளம்.)

(ஈ) பிற.

(vii) உரித்தாக்கப்பட்டுள்ள குளங்கள் எண்ணிக்கை.

(viii) செப்பனிடப்பட்ட குளங்களின் எண்ணிக்கை.

(ix) செலவிடப்பட்ட தொகை.

(x) குடிமராமத்து நிறைவேற்றம் நன்செய் பயனடைந்த ஏகராப் பரப்பு.

(xi) உள்ளூர்ப்பாசனக் கொடையின் மொத்தத்தொகை.

(xii) போதுமானதா என்பது.

(xiii) கோடைக்குமேல் செலவவிடப்பட்ட தொகை.

தனி சிறு பாசனக் கொடையிலிருந்து கொடுக்கப்பட்ட தொகை செலவிடப் பட்ட தொகை. —

(xiv) விதித்து வாங்கப்பட்ட உள்ளூர்ப் பாசனக் கட்டணங்கள்.

(xv) அரசினரால் ஒப்பளிக்கப்பட்ட அதிகப்படியான குடி மராமத்துக் கொடையின் தொகை (அ) ஊராட்சிகளுக்கு.

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களுக்கு.

(xvi) குடிமராமத்துக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட ஆதாரங்களின் எண்ணிக்கை: முடிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை, பயனடைந்த ஏகராப் பரப்பு, ஊராட்சிகள் விதித்து வாங்கிய குடிமராமத்துக் கட்டணத்தொகை.

(xvii) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பொறுப்பிலிருக்கிற குளங்கள் சம்பந்தமாக மீன் பண்ணை வருமானம் பற்றிய விவரங்கள்.

(VII) நிதி நிலைமை.

2. (1) பொது.

(i) நிலவரி.

(ii) தலவரித்தண்ட விதம்.

(iii) கேளிக்கை காட்சி வரிகளின் மீதான மேல்வரி விதம்.

(iv) தலபாசனக் கட்டண விதம் (1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தின் 85-ஆவது பிரிவு).

(2) 1963 மார்ச் 14 ஆம் தேதியுள்ள '73 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சிதுறைப் பல்வகை அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட ஒருங்கிணைந்த 1 ஆம் எண் படிவத்தின்படி இந்த ஆண்டில் முன் இருப்பும் இறுதி இருப்பும், மொத்த வரவு செலவின் அளவும்.

(3) பயன்தரும் தொழில்கள், அரசுக்கொடைகள், ஒன்றியம் கொடுக்க வேண்டிய கடன்கள் ஆகியவை சம்பந்தமாக இருப்புகள்.

(4) இந்த ஆண்டிலே ஒன்றிய வாரியாக—வழிவகை நிலை.

29. சாதாரண ஆதாரங்கள்.—(i) 1963 மார்ச் 14-ம் தேதியுள்ள 573ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் குறிப்பிடப்பட்ட ஒழுங்கிணைந்த 11ஆம், 111ஆம் படிவங்களின்படி எல்லாக் கணக்கிலும் வரவு செலவு.

(ii) 1963 மார்ச் 15ஆம் தேதியுள்ள 582ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட அமைந்த படிவத்தின்படி சாதாரணப் பொதுக் கணக்கின்படி வரவு செலவு.

30. மூலதனச் செலவு.—மூலதனப் பணிகளுக்குப் பிடித்த மொத்த செலவு

(i) ஒப்பளிக்கப்பட்ட வளர்ச்சிப் பணிகளுக்காக.

(அ) இணைப்புச் சாலைகள்.

(ஆ) கிராம நீர் வழங்கீட்டுத் திட்டங்கள்.

(இ) பள்ளிக் கட்டிடங்கள்.

(ii) பிற இனங்களுக்காக.

(iii) மேலே (i) இனத்தில் குறிப்பிடப்பட்ட வளர்ச்சிப் பணிகளுக்காக வந்து சேர்ந்த அரசுக் கொடையும், அப்பணிகள் சம்பந்தமாய் வரப்பற்றிய உதவித் தொகையும்.

(iv) ஏற்பாடு ரீதியான வரவு செலவுத் திட்டத்தின்படி கிடைக்கிற ஒதுக்கீடுகளையொட்டி வளர்ச்சிப் பணிகளுக்காக ஈட்டிய அரசுக் கொடையின் சத விதம்.

(v) கடன்களிலிருந்து கொடுக்கப்பட்ட செலவுத்தொகை.

31. கடன்.—இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்த கடன், இந்த ஆண்டில் பட்டகடன், இந்த ஆண்டில் திருப்பிச் செலுத்தப்பட்ட கடன், இந்த ஆண்டின் இறுதியில் இருந்த பாக்கி.

வருவாய்தரும் உடைமைகள் அபிவிருத்தி செய்வதற்காகப்பட்ட கடனையும் மற்றக் கடன்களையும் வேறு படுத்திக்காட்டவும்.

முந்திய ஆண்டின் நிலுவைக்காகவும் அறிக்கைக்குட்பட்ட ஆண்டுக் காகவும் கடனுக்கு வட்டியாகச் செலுத்தப்பட்ட மொத்த தொகை.

32. முதலீடுகள்.

33. தணிக்கை.—ஆய்வாளரின் ஆய்வுக் குறிப்புரைகள், தனிக்கூறுகள் எவையேனுமிருந்தால், அவை

34. பொதுக்குறிப்புரை.—இந்த ஆண்டில் பிரமுகர்கள் (மிகச் சீரிய பெரு மக்கள்) வந்தனதப்பற்றிய குறிப்பு, ஊராட்சி ஒன்றியக்குழுவின் குறிப்பிடத் தக்க செயல்கள்.

சமுதாய வளர்ச்சித் திட்டம்.

35. உழவு.—கிராம சகாயப் பணித்திட்டம் செயற்படுதல்—இந்த ஆண்டில் பங்கிடு செய்யப்பட்ட சீர்திருத்தமான விதைகள், உரங்கள், பசுந்தழை எருவுகள், சீர்திருத்தமான கருவிகள்—நடத்திக்காட்டப்பட்ட பரிசோதனைகள் பங்கீடு செய்யப்பட்ட ரசாயனப் பூச்சிக்கொல்லிகள், தோண்டப்பட்ட கலவை உரக்குழிகள்—மீண்டும் சாகுபடிக்குக் கொணரப்பட்ட நிலப்பரப்பு—கரை கட்டித்தள மேடையமைக்கப்பட்ட பரப்பு ஜப்பானிய சாகுபடி முறை கையாளப்படும் ஏகராப்பரப்பு. தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை, கட்டப்பட்டக்குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை—பலனடைந்த ஏகராப் பரப்பு—நிறுவப்பட்ட நீரேற்று யந்திரங்கள் எண்ணெய்ப்பொறிகள் ஆகிய வற்றின் எண்ணிக்கை—இவ்வளவு அதிகமாக விளைச்சல் காணுமென்பது—ஊராட்சி நடவுத் திட்டத்தின்படி இந்த ஆண்டில் தோண்டப்பட்ட பாசனக் கிணறுகளின் எண்ணிக்கை ஒப்பளிக்கப்பட்ட கடன்தொகை—பயன்படுத்தப் பட்ட தொகை.

36. கால்நடை பராமரிப்பு.—வழங்கப்பட்ட சிறந்த கால்நடைகளும் பறவை களும் இந்த ஆண்டில் செயற்படுபவையும் புதிதாய்க் கட்டப்பட்டவையுமான

காற்நடை மருந்தகங்கள், சிகிச்சை பெற்ற கால்நடைகளின் எண்ணிக்கை அம்மை குத்தப்பட்டவையும் ஊசி மருந்தேற்றப்பட்டவையுமான கால்நடைகளின் எண்ணிக்கை—செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை, இந்த ஆண்டில் செயற்கை முறையில் கருத்தரிக்கும்படி செய்யப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை. கோழிப்பண்ணை பற்றிய விவரங்கள் மீன் வளர்ப்பு நிலையங்கள் அமைப்பது உட்பட மீன்பண்ணைகளின் அபிவிருத்தி வளர்ப்பு நிலையம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்ட மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை—கிராமக் கால்நடை அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை வழங்கப்பட்ட மூர்ரா எருமைகளின் எண்ணிக்கை.

37. **கிராமப்பணித் திட்டம்.**

மறு ஆய்வுக்குட்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை.			முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை.			பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை.		
இணைப்புச் சாலைகள் நீளம் பற்றிய விவரங்களையும் கொடுக்க வேண்டும்.	கிராம நீர் வழங்கீடு.	பள்ளிக் கட்டிடங்கள்.	இணைப்புச் சாலைகள் (நீளம் பற்றிய விவரங்களையும் கொடுக்கவேண்டும்).	கிராம நீர் வழங்கீடு.	பள்ளிக் கட்டிடங்கள்.	இணைப்புச் சாலைகள்.	கிராம நீர் வழங்கீடு.	பள்ளிக் கட்டிடங்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)

38. **சமுதாயக் கல்வியும் மகளிர் நலனும்.**—பெப்ரவரி 6ஆம் தேதி யுள்ள 300 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பலவகை அரசாணையுடன் அனுப்பப்பட்ட மாதிரித் திட்டத்தைச் செயற்படுத்தியது பற்றிய விவரங்கள்.

மகளிர் குழந்தைகள் நலன்.

இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்த மாதர் சங்கங்களின் எண்ணிக்கை.

இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை.

இந்த ஆண்டின் இறுதியில் இருந்தவைகளின் எண்ணிக்கை.

வாங்கப்பட்ட கொடைகள் பற்றிய விவரங்கள்.

கொடையில் செலவு இன்ன சதவீதம் என்பது.

மேற்கொள்ளப்பட்ட தனி அல்லது முக்கியமான செயல்கள் பற்றிய விவரங்கள்.

39. கிராமியக் கலைகள், கைவினைகள், தொழில்கள்.—மாவட்ட ஆட்சியாளரின் பொது அறிக்கையில் சேர்க்கப்படவேண்டிய விவரங்கள் III ஆம் இணைப்பிலுள்ள படிவத்திலும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் தெரிவிக்க வேண்டிய விவரங்கள் IV ஆம் இணைப்பிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

40. கூட்டுறவு.—(1) இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை.

(2) இந்த ஆண்டு பதிவான கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை.

(3) இந்த ஆண்டின் இறுதியிலிருந்த கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை.

(4). (அ) கூட்டுறவுச் சங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களால் பயனடையும் மக்களின் சதவீதம்

(இ) கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டுள்ள உழவர்களின் சதவீதங்கள்

5. (அ) கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய கடன்கள்.

குறுகிய காலம்.

நடுத்தர காலம்.

நீண்ட காலம்.

(ஆ) உழவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களின் சதவீதம்.

6. செய்யப்பட்ட மற்ற பணிகள் (குறிப்பிடவும்).

7. இப்பரப்பில் செயலாற்றும் தனிவகைகளைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்கங்களின் பெயர்களும் இந்த ஆண்டில் அந்த ஒவ்வொரு வகையும் செய்த பணியும்.

(ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் தெரிவிக்க வேண்டிய விவரங்கள் ஆம் இணைப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.)

41. ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் இயல்பான சாதனைகளையும் நிதிசாதனைகளையும் பின்வரும் படிவத்தில் தெரிவிக்கலாம் :—

நிதி இலக்குகள் .

திட்டம். (1)	திட்ட ஒதுக்கீடு. (2)	செலவு. (3)	செலவின் சதவீதம். (4)
1. புதுக் கிணறு மானியம், இணைப்புச் சாலைகள்.			
2. பள்ளிக் கட்டிடம்.			
3. உழவு.			
4. கால்நடைப் பராமரிப்பு.			
5. மீன் பண்ணை.			
6. சமுதாயக் கல்வி.			
7. மகளிர் குழந்தைகள் நலன்.			
8. கிராமத் தொழில்கள்.			

இயல்பான சாதனைகள் :

அடியிற்கண்ட வகைகளில்
இந்த ஆண்டிலே முடிக்கப்
பட்ட பணிகளின் எண்ணிக்கை.

1. (அ) கிராம நீர் வழங்கீடு.

(ஆ) இணைப்புச் சாலைகள்.

2. பள்ளிக் கட்டிடம்.

3. உழவு.

(அ) தோட்டப்பயிர் செய்யப்படும் பிரதேசம்.

(ஆ) பசுந்தழை உரம் ப்யிர் செய்யப்படும் பிரதேசம்.

திட்டம்.	திட்ட ஒதுக்கீடு.	செலவு.	செலவின் சதவீதம்.
(1)	(2)	(3)	(4)

(இ) கிராம சகாயத் திட்டம் :

(i) தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமச் சகாயங்களின் எண்ணிக்கை.

(ii) கொள் முதல் அளவு.

(ஈ) விற்பனையான பூச்சிக் கொல்லி மருந்துகளின் அளவு.

4. கால்நடைப் பராமரிப்பு :

(அ) கட்டப்பட்ட கால்நடை மருந்தகங்களின் எண்ணிக்கை.

(ஆ) பங்கீடு செய்யப்பட்ட உயர் ஜாதி எருதுகளின் எண்ணிக்கை.

(இ) பண்ட மாற்றாகப் பங்கீட்டுக் கொள்ளப்பட்ட செம்மறி யாட்டுக் கடாக்களின் எண்ணிக்கை.

(ஈ) பண்ட மாற்று அடிப் படையில் பங்கீட்டுக் கொள்ளப்பட்ட விடைச் சேவல்களின் எண்ணிக்கை.

5. மீன் பண்ணைகள் :

(அ) கட்டப்பட்ட மீன் வளர்ப்புப் பண்ணைகளின் எண்ணிக்கை.

(ஆ) வழங்கப்பட்ட மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை.

6. கிராமத் தொழில்கள் :

தொடங்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை.

42. கிராம சுயேச்சைப்படை.

(1) சேர்க்கப்பட்ட தொண்டர்களின் மொத்த எண்ணிக்கை :

திட்டம்.	திட்ட ஒதுக்கீடு.	செலவு.	செலவின் சதவீதம்.
(1)	(2)	(3)	(4)

(அ) உற்பத்திக்காக.

(ஆ) ஆண் கல்விக்காக.

(இ) கிராமப் பாதுகாப்புக்காக.

(ஈ) மகளிர் பிரிவுக்காக.

(2) பாதுகாப்புத் தொழிலாளர் வங்கி :

(அ) வாக்களிக்கப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கை

(ஆ) பண்டமாகக் கொடுத்த உதவியின் மதிப்பு.

(இ) உழைப்புதவிக்குப் பதிலாக வைப்பீடு செய்யப்பட்ட ரொக்கத் தொகை.

(ஈ) பயனடையும் தனியாட்களின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட பணிக்காகக் கிடைத்த தொகை.

இணைப்பு I.

. . . . வளர்ச்சி மாவட்டத்திலிருக்கிற **ஊராட்சி ஒன்றியங்களின் புள்ளி விவரத் தகவல்கள்.**

ஊராட்சி ஒன்றியத்தின் பெயரும் அது தொடங்கப்பட்ட தேதியும்.	தலைமையிடம்.	கடைசியாக எடுத்த குடிக் கணக்கின்படி மக்கள் தொகை (குடிக் கணக்கெடுத்த ஆண்டினைக் குறிப்பிட வேண்டும்).	பரப்பு, சதுர கிலோ மீட்டர் கணக்கில்.	கிராமங்களின் எண்ணிக்கை.	ஊராட்சிகளின் எண்ணிக்கை.	அஞ்சல் தந்தி அலுவலகம்.	மிக அண்மையிலுள்ள ரயில்வே நிலையம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)

இணைப்பு II.

ரொக்கக் கொடுக்கல் வாங்கல்.

ஆண்டு.	முன் இருப்பு.	ரொக்க வரவுகள்.	ரொக்கப் பட்டுவாடா.	இறுதி இருப்பு.

முதலீடுகள்.

ஆண்டு.	முன் இருப்பு.	செய்யப் பட்ட முதலீடுகள்.	வரப்பற்றிய முதலீடுகள்.	இறுதி இருப்பு. பத்தி (2)+ பத்தி (3)— பத்தி (4).	முதலீடு களுக்கு வட்டியி லிருந்து கிடைத்த வரு மானம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
அரசாங்கக் கடன் பத்திரங்கள்.					
சேமிப்பு வங்கி வைப்பீடுகள்.					
கூட்டுறவுச் சங்க வைப்பீடுகள்.					
பிற ஈட்டுப் பத்தி ரங்கள்.					
19..க்கான மொத்தம்					
19..க்கான மொத்தம்					

இருப்பும் இறுதி இருப்பும்.

விவரங்கள்.	சாதாரணம். ரூ. காசு.	மூலதனம். ரூ. காசு.
(1)	(2)	(3)
முன் இருப்பு.		
1. பொதுக்கணக்கு.		
2. கல்விக் கணக்கு.		
3. பள்ளி உணவுக்கணக்கு.		
4. உற்பத்தி நிதிக்கணக்கு.		
5. வைப்பீடுகள் முன்பணங்கள் கணக்கு.		
6. அறக்கட்டளைகள் கணக்கு.		
7. மொத்தம்.		
8. மொத்த முன் இருப்பு.		

9. மொத்த வரவுகள்.

10. மொத்த செலவு.

இறுதி இருப்பு.

11. பொதுக் கணக்கு.

12. கல்விக் கணக்கு.

13. பள்ளி உணவுக்கணக்கு.

14. உற்பத்திக் கணக்கு.

15. வைப்பீடுகள் முன்பணங்கள் கணக்கு.

16. அறக்கட்டளைகள் கணக்கு.

17. மொத்தம்.

18. மொத்த இறுதி இருப்பு.

19. குறிப்புரை.

வரவுகள்.

I. பொதுக்கணக்கு.

(1) பொது வரி விதிப்பும் பல்வகை வருமானமும்:

(i) மொத்த தலவரி.

(ii) தலவரித்தண்டம்.

(iii) தலவரித்தண்டம்—ஈடு செய்வதற்கான கொடை.

(iv) கேளிக்கை காட்சிவரியின் மீதான மேல்வரி.

(v) பிற பலவகை.

(vi) வரவுகள்.

மொத்தம்.

(2) நிருவாகம்:

சாதாரணம்.

மூலதனம்.

(3) போக்குவரத்து:

சாதாரணம்.

மூலதனம்.

(4) சுகாதாரமும் நலமும்:

சாதாரணம்.

(i) மகப்பேறு நிலையங்களுக்கான கொடை.

(ii) மகளிர், குழந்தைகள் நலக்கொடை.

(iii) பிற இனங்கள்.

(iv) மொத்த சாதாரணம்.

மூலதனம :

(vii) மொத்தம்

(v) கிராம நீர் வழங்கீடு.

(vi) பிற.

(5) பயன்தரும் தொழில்கள் :

சாதாரணம்.

மூலதனம.

(6) முதலீடுகள் :

சாதாரணம்.

மூலதனம்.

(7) மொத்தம் :

சாதாரணம்.

மூலதனம்.

II. கல்விக்கணக்கு—

சாதாரணம்.

(i) கல்வி.

(ii) சமுதாயக் கல்வி.

(iii) மொத்தம்.

மூலதனம்.

III. பள்ளி உணவுக் கணக்கு—

சாதாரணம்.

மூலதனம்.

IV. உற்பத்தி நிதிக்கணக்கு—

(i) உழவுத்திட்டம்.

சாதாரணம்.

மூலதனம.

(ii) பாசனப் பணிகள் :

சாதாரணம்.

மூலதனம்.

(iii) கிராமத்தொழில்கள் :

சாதாரணம்.

மூலதனம்.

(iv) கதர்த் திட்டம் :

சாதாரணம்.

மூலதனம்.

(v) மொத்தம் :

சாதாரணம்

மூலதனம்.

V. வைப்பேடுகள்—முன்பணங்கள் கணக்கு—

சாதாரணம்.

மூலதனம்.

VI. கட்டளைகள் கணக்கீடு—

சாதாரணம்.

மூலதனம்.

VII. மொத்த வரவு—

சாதாரணம்.

மூலதனம்.

VIII. பெருமொத்தம்—

சாதாரணம்.

மூலதனம்.

குறிப்புரை.

செலவு.

I. பொதுக்கணக்கு—

(1) திருவாகம்.

(2) போக்குவாத்துக்கள்.

(3) சுகாதாரமும் நலனும்.

சாதாரணம்.

(i) மகப்பேறு நிலையங்கள்.

(ii) மகளிர் குழந்தை வளர்ச்சித் திட்டம்.

(iii) பிற.

மூலதனம்.

(iv) கிராம நீர் வழங்கிடு.

(v) பிற.

(4) பயன்தரும் தொழில்கள்.

(5) முதலீடுகள்.

(6) மொத்தம்.

II. கல்விக்கணக்கு.

சாதாரணம்.

(7) கல்வி.

(8) சமுதாயக் கல்வி.

(9) மொத்தம்.

மூலதனம்.

(10) பள்ளிக் கட்டிடங்கள்.

(11) பிற.

(12) மொத்தம்.

(13) பள்ளி உணவுக் கணக்கு.

III. உற்பத்தி நிதிக்கணக்கு—

(14) உழவுத் திட்டம்.

(15) பாசனப் பணிகள்.

(16) கிராமத் தொழில்கள்.

(17) கதர்த்திட்டம்.

(18) மொத்தம்.

IV. வைப்பீடுகள் முன்பணங்கள் கணக்கு.

V அறக்கட்டளைகள் கணக்கு.

VI. மொத்தம்.

VII. பெருமொத்தம்.

குறிப்புரை.—

பொதுக் கணக்கு

சாதாரண வரவுகள்

	உள்ளபடி 1960. 6	உள்ளபடி 1960. 6	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு திருத்திய மதிப்பீடு 1960. 6.	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1960. 6.
(1)			(2)	(3)
1. நிகர உள்ளூர் வரி.				
2. உள்ளூர் வரித் தண்டமும் ஈடு செய்வதற்கான கொடையும் (வீதம்).				
3. உள்ளூர் அதிகாரிகள் நிதிச் சட்டம்.				
4. உள்ளூர் சாலைகள் கொடை.				
5. பற்றுக்குறையை ஈடு செய்வதற்காகத் தனிப் பஞ்சப் படிக் கொடை.				
6. பயன்தரும் தொழில்களி லிருந்து இடைக்கும் நிகர வருமானம்.				
7. பிற இனங்கள் (பெரிய இனங் களைக் குறிப்பிடலாம்).				
மொத்தம் ..				

உபரி அல்லது பற்றுக்குறை.

(அ) கழிக்க/சேர்க்க நிலுவை வழிவகை முன்பணம் நிகர உபரி அல்லது பற்றுக்குறை.

சாதாரண செலவு.

உள்ளபடி. 1960. 6 1960. 6 (1)	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு திருத்திய மதிப்பீடு 1960. 6. (2)	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1960. 6. (3)
1. பணியாளர்கள் (படிகளும் எதிர்பாராச் செலவுகளும் உட்பட).		
2. மகப்பேறு நிலையங்களுக்கான செலவில் மிச்சம்.		
3. மருந்தகங்களுக்காக.		
4. போக்குவரத்துக்கள்.		
5. கல்விக் கணக்கு மூலதனத் துக்கு மாற்றம்.		
6. .... க்கு மாற்றம்.		
7. பணிகளுக்கும் உழவுக்கும் உதவித் தொகைகள்.		
8. பிற இனங்கள் (பெரிய இனங் களைக் குறிப்பிடலாம்).		
மொத்தம் ..		

(அ) சேர்க்க/கழிக்க எல்லாக் கணக்குகளின்படியும் செலவுக்காக ஈடு செய்யப்பட்டிராத தொகைகள்.

இணைப்பு III

(அரசினருக்கு விவரங்கள் கொடுப்பதற்காக மாவட்ட ஆட்சியாளர்கள் பயன்படுத்த வேண்டியது.)

வளர்ச்சி மாவட்டத்தின் பெயர்.

ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை.

தொடரிலக்கம்.	தொழிலின் பெயர்.	தொழில்களை நடத்துகிற ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை.	எத்தனை வட்டாரங்களில் அலகு.		உற்பத்தி.	
			ஆதாயத்தில் நடக்கிறது.	இழப்பில் நடக்கிறது.	அளவு.	மதிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)

விற்பனைகள்.		பயிற்சி அளிக்கப்பெற்றவர்களின் எண்ணிக்கை.	பயிற்சி பெற்றவர்களில் எத்தனை பேர் தொழிலில் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள் என்பது.	அமர்த்தப்படுதல்.		
அளவு.	மதிப்பு.			முழு நேரம்.	பகுதி நேரம்.	ஓரோரு சமயம்.
(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)

இந்த ஆண்டில் பிடித்த செலவு.

இந்த ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்கள் செலவை ஈடு செய்வதற்காகக் கொடுத்தத் தொகை,

பிற சுருக்கமான கூறுகள் இருந்தால் அவை.

இணைப்பு IV.

படிவம் I—நிதி விவர அறிக்கை

(மாவட்ட ஆட்சியாளர்களுக்கு விவரங்களைத் தெரிவிப்பதற்காக ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பயன்படுத்த வேண்டியது.)

ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்.

ஒன்றியத்தின் வகைப்பாடு.

		ஒப்புளிக்கப்பட்ட தொகை.		செலவிடப்பட்ட தொகை.			
தொடரிலக்கம்.	செயற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட கிராமத் தொழில்களின் எண்ணிக்கை.	மீள்வது.	மீளாதது.	மீள்வது.	மீளாதது.	இந்த ஆண்டில் திட்டங்களிலிருந்து கிடைத்த வரவு.	இந்த ஆண்டில் செலவு ஈடு செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)

படிவம் II—உற்பத்தியும் விற்பனைகளும்.

			இந்த ஆண்டில் உற்பத்தி.		இந்த ஆண்டில் விற்பனை.		
தொடர்லக்கம்.	கிராமத் தொழில்களின் பெயர்.	தயாரிக்கப்பட்ட செய்பொருள்களின் எண்ணிக்கை.	அளவு.	மதிப்பு.	அளவு.	மதிப்பு.	ஆதாயத்தில் நடக்கிறது.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)

படிவம் III—பயிற்சி.

இந்த ஆண்டில் பயிற்சி அளிக்கப் பெற்றவர்களின் எண்ணிக்கை.	பயிற்சி அளிக்கப் பெற்றவர்களில் எத்தனை பேர் தொழிலில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர் என்பது.
(1)	(2)

படிவம் IV—வேலையில் அமர்த்தல்.

விவரங்கள்.	முழு நேரம்.	பகுதி நேரம்.	ஓரோரு சமயம்.
(1)	(2)	(3)	(4)
1. தொழில் நுட்ப இயலானவை.			
2. ஆட்சி இயலானவை.			
3. தனித்திறமை வேண்டுபவை.			
4. தனித்திறமை வேண்டாதவை.			

இணைப்பு.

கூட்டுறவு.

1. ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சங்கங்களின் எண்ணிக்கை (ஒவ்வொரு வகைக்கும் தனித்தனியாக விவரங்கள் கொடுக்கவும்).
2. இந்த ஆண்டில் தொடங்கப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை.
3. (அ) கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை.

   (ஆ) கூட்டுறவுச் சங்கங்களினால் பலனடையும் மக்களின் சதவீதம்.

   (இ) உறுப்பினர்களின் தொகை செலுத்தப் பட்ட பங்கு மூலதனம்.

   (ஈ) கூட்டுறவுச் சங்கங்களில் சேர்த்துக் உழவர்களின் சதவீதம்.

4. கூட்டுறவுச் சங்கங்கள் செய்த உதவிகள் :—

(அ) இந்த ஆண்டில் கொடுத்த கடன்கள்—

(i) குறுகிய காலம்.

(ii நடுத்தரக் காலம்.

(iii) நெடுங்காலம்.

(iv) உழவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களின் சதவீதம்.

(ஆ) இந்த ஆண்டு விற்கப்பட்ட விளைச்சலின் மதிப்பு.

(இ) இந்த ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் சேர்த்த வைப்பீட்டுத் தொகை.

(ஈ) செய்த மற்ற உதவிகள் :

(i) விற்கப்பட்ட உரவகைகளின் மதிப்பு.

(ii) விற்கப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகளின் மதிப்பு.

(iii) விற்கப்பட்ட நுகர்வோர் பண்டங்களின் மதிப்பு.

(iv) வழங்கப்பட்ட உழவுக் கருவிகளின் வாடகைக் கட்டணத் தொகை.

5. ஆய்வு.

(அ) (கூட்டுறவு) உதவி அலுவலர் வந்து பார்த்த சங்கங்களின் எண்ணிக்கை.

(ஆ) ஆய்வு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை (தனியாகக் கவனிக்க வேண்டிய ஆய்வுக் குறிப்புரைகள்).

(அ) ரசாயன உர வகைகளின் பங்கீட்டு-- வேலையை மேற்கொண்ட சங்கங்களின் எண்ணிக்கை.

(ஆ) இந்த ஆண்டில் வழங்கப்பட்ட
எரு வகைகளின் அளவு.

கிராம சகாய விரைப் பங்கீட்டுத்
திட்டம்.

(i) இந்தத் திட்டத்தின் கீழ்த் தெரிந்
தெடுக்கப்பட்ட நாணயச் சங்கங்களின்
எண்ணிக்கை.

(உழவர்களுக்குக் கொடுக்கப்பட்ட
கடன் தொகை.

கூட்டுறவு விற்பனை நடவடிக்கைகள் :—

(i) கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக
விற்பனையான உறுப்பினர்களின்
விளைபொருளின் அளவும்
மதிப்பும்.

(ii) உறுப்பினர்களின் விளைபொருளை
அடகு வைத்துக் கொண்டு கொடுக்கப்
பட்ட கடன் தொகை.

(iii) ஊராட்சி ஒன்றியப் பரப்பில்
கூட்டுறவுச் சங்கங்கள் கட்டிய
கிடங்குகளின் எண்ணிக்கை.

(iv) சேர்த்து வைப்பதற்குக் கிடைக்கிற
மொத்த இடம் மெட்ரிக் டன்
கணக்கில்.

(v) கூட்டுறவுச் சங்கங்கள் பயன்
படுத்தும் சேர்த்து வைக்கு
மிடத்தின் சத்வீதம்.

9. பிற கனி வகைக் கூட்டுறவுச் சங்கங்கள்.—இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் மேற்கொள்ளப்பட்ட தனிச் செயல் முறைகள்.

(இந்த ஆண்டில் சங்கங்களின் எண்ணிக்கையையும், அடியிற் கண்டவைகளைப் போன்ற அவைகளின் நடவடிக்கைகளையும் குறிப்பிடவும். அவை யாவன.—வீடு கட்டும் கிராமச் சங்கங்களால் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை, தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் விஷயத்தில் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்களின் மதிப்பு, சாகுபடிச் சங்கங்களின் விஷயத்தில்

சாகுபடியின் கீழ்க்கொண்டு வரப்பட்ட நிலப்பரப்பு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் விஷயத்தில் உற்பத்தி செய்து விற்கப்பட்ட கைத்தறித் துணியின் மதிப்பு, பால் கூட்டுறவுச் சங்கங்கள், பிற சங்கங்கள் முதலியவைகளால் உற்பத்தி செய்து விற்கப்பட்ட பாலின் மதிப்பு.

10. (கூட்டுறவு) உதவி அலுவலரால் செய்யப்பட்ட சட்ட ரீதியான வேலையினங்கள்.

11. (i) கிராம மட்டப் பணியாளர்களுக்காக (கூட்டுறவு) உதவி அலுவலரால் (கூட்டுறவுத்துறையில்) நடத்தப்பட்ட பணிப் பயிற்சி பற்றிய விவரங்கள்.

ii) இந்த ஆண்டில் நடத்தப்பட்ட தனிக் கூட்டுறவு நிகழ்ச்சிகள்.

12. கூட்டுறவுப் பணி "பால் தினம்", "உறுப்பினர் வாரம்", "கைத்தறி வாரம்" முதலியவை.

(1965 அக்டோபர் 10 ஆம் தேதியுள்ள 217 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணை)

அத்தியாயம் III —பணியாளர் தொகுதி.

31. தமிழ் நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் பணியாளர் தொகுதிகள் (தேசியக்காப்புறுதியைப் பாதுகாப்பது) பற்றிய விதிகள்.

1. சிறிய தலைப்பும் அது பொருந்துவதும்.—(1) இந்த விதிகளை தமிழ் நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் பணியாளர் தொகுதிகள் தேசியக் காப்புறுதியைப் பாதுகாப்பது பற்றிய 1962-ஆம் ஆண்டின் விதிகள் என்று சொல்லலாம்.

(2) ஆணையாளர்கள் அல்லாத, ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் மற்றெல்லா அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் இவை பொருந்தும்.

2. பொருள் விளக்கம்.—இந்த விதிகளில் "ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணியாளர்கள்" என்பது இந்த விதிகள் பொருந்துகிற ஒருவர் என்று பொருள்படும்.

3. கட்டாயமாக ஓய்வு பெறும்படி செய்தல்.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணியாளர் ஒருவர் நிலை குலைவிக்கும் செயல்களில் ஈடுபட்டிருப்பதாகவும் அல்லது ஈடுபட்டிருப்பதாய் நியாயமாக சந்தேகிக்கப்படுவதாகவும்

அல்லது நிலை குலைவிக்கும் செயல்களில் ஈடுபட்டிருக்கிற மற்றவர்களோடு சேர்ந்திருப்பதாகவும், அது காரணமாக அவரைப் பணியில் வைத்திருப்பது தேசியக் காப்புறுதிக்குப் பாதகம் விளைவிக்குமென்றும் அரசினர் கருதினால், அந்தப் பணியாளர் பணியிலிருந்து கட்டாயமாய் ஓய்வு பெறும்படி செய்வதற்காக அவர்கள் ஆணை பிறப்பிக்கலாம்.

4. நடைமுறை.—3-வது விதியின்படி ஓர் ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்,

(அ) இணை வளர்ச்சி ஆணையாளர், எழுதியுள்ள அறிக்கை மூலமாக சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியக்குழுவின் பணியாளர் சம்பந்தமாக எடுக்க உத்தேசிக்கிற நடவடிக்கையைப் பற்றி அவருக்குத் தெரிவித்து, அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கக்கூடிய காலத்துக்குள் அந்த நடவடிக்கையை எதிர்த்து எழுத்து மூலமாக அரசினருக்கு முறையீடு செய்து கொள்ள அவருக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

(ஆ) சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணியாளர் அவ்வாறு முறையீடு செய்து கொண்டால், அதை அரசினர் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

5. தற்காலிகமாக விலக்கி வைத்தல்: ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணியாளர் சம்பந்தமாக இவ்விதிகளின்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கருதியிருந்தால், இணை வளர்ச்சி ஆணையாளர் அவரைத் தற்காலிகமாக விலக்கி வைப்பதற்கு முன், அவருக்கு அப்போது கொடுக்கப்படக்கூடிய விடுப்பில் போக அவருக்கு அனுமதி வழங்க வேண்டும்.

6. பொது விதிகள் பொருந்தா என்பது.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பொதுப்பணியாளர் தொகுதி அதன் அலுவலர்களையும் பணியாளர்களையும் நியமிப்பது அவர்களைத் தண்டிப்பது ஆகியவை சம்பந்தமாக இவ்விதிகளில் உள்ளது எதுவும், இவ்விதிகளின்படி எடுத்துக் கொள்ளப்பட்ட அல்லது எடுக்கக் கருதியிருக்கிற ஒரு நடவடிக்கைக்கு அல்லது அது சம்பந்தமாகப் பொருந்தாது.

7. ஓய்வூதியம், பணிக்கொடை முதலியன.—3-வது விதியின்படி பணியிலிருந்து கட்டாயமாக ஓய்வு பெறும்படி செய்யப்பட்ட ஒருவர் அவருடைய பதவி எடுக்கப்பட்டு விட்டதனால் தக்க மாற்றுவேலை கொடுக்கப்படாமலேயே அவர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தால், அவ்வாறு ஓய்வுபெறும்படி-

செய்யப்பட்ட தேதியன்று பொருத்தமான விதிகளின்படி அவருக்கு வழங்கப் பட்டிருந்திருக்கக்கூடிய ஈட்டுத்தொகை ஓய்வூதியம், பணிக்கொடை அல்லது வருங்காலச் சேமநிதி அலுவலகங்களைப் பெறுவதற்கு உரிமை உள்ளவராவார்.

(1962 பிப்ரவரி 1-ஆம் தேதியுள்ள 261-ஆம் எண், கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை).

(1964-ஆம் ஆண்டு மார்ச் 9-ஆம் தேதியுள்ள 542-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை)

32. **இரண்டு அல்லது பல ஊராட்சி ஒன்றியக்குழுக்களுக்காகப் பொதுவான அலுவலர் அல்லது பணியாளரை நியமிப்பது.**—1. கூட்டு வளர்ச்சி ஆணையாளர் அவசியமேற்பட்டால், இரண்டு அல்லது பல ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அவை இரண்டிற்காகவும் அல்லது எல்லாவற்றிற்காகவும், ஒரு தன்மைத்தான அதிகாரங்களைச் செலுத்த அல்லது அலுவல்களைச் செய்ய ஆணையாளர் அல்லாத வேறு ஒரே அலுவலரை அல்லது பணியாளரை நியமிக்கும்படி அவைகளுக்குச் சொல்லலாம்.

ஆனால் கூட்டு வளர்ச்சி ஆணையாளர், பொது சுகாதாரப் பணியாளர் தொகுதி சம்பந்தமான யோசனைத் திட்டங்கள் பற்றி பொது சுகாதாரத்துறை இயக்குநரைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

2. சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அந்த அலுவலர் அல்லது பணியாளருக்குக் கொடுக்கப்படத்தக்க சம்பளத்தையும் படிகளையும், அவருடைய விடுப்புச் சம்பளத்துக்காக அல்லது வருங்காலச் சேமநிதிக்காகக் கொடுக்கப்படத்தக்க உதவித் தொகைகளையும் அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் வருமானம் அந்த அலுவலர் அல்லது பணியாளர் செய்த மொத்த வேலை அல்லது கூட்டு வளர்ச்சி ஆணையாளர் இதன் பொருட்டுத் தக்கதெனக் கருதக்கூடிய வேறு ஏதேனும் விவரத்தையொட்டி கூட்டு வளர்ச்சி ஆணையாளர் பொருந்துமென விதிக்கக்கூடிய வீதாசாரப் படியும் கொடுக்க வேண்டும்.

3. கூட்டு வளர்ச்சி ஆணையாளர், 1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சி சட்டத்தின் 61-ஆவது பிரிவில் குறிப்பிட்டிருக்கிற அதிகாரங்களைச் செலுத்தும் பொருட்டு, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் ஒன்றின் ஆணையாளரைக் குறிப்பிட வேண்டும்.

4. 3-ஆவது விதியின்படி குறிப்பிடப்பட்ட ஆணையாளர் அவ்விதியில் குறிப்பிட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துவது பற்றி சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் ஒன்றின் ஆணையாளர் திருப்தியடையாவிட்டால், பின்

சொன்ன ஆணையாளர் அவ்விஷயத்தைக் கூட்டு வளர்ச்சி ஆணையாளரின் ஆலோசனைக்கு அனுப்பலாம். அவ்வாறு அனுப்புவதன் பேரில் அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677-ஆம் எண் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை).

(1962 நவம்பர் 12-ஆம் தேதியுள்ள 12513-62-10-ஆம் எண் குறிப்பாணை).

(1961 நவம்பர் 28-ஆம் தேதியுள்ள 3162-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை).

(72) ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் இருக்க வேண்டியவர்களின் மொத்த எண்ணிக்கையை நிச்சயிப்பது.

1. **வளர்ச்சி வட்டாரம் ஒன்றின் அலுவலகச் சிப்பந்தியின் தற்போதைய மாதிரி.**—சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்படி எல்லை வரையறுக்கப்பட்ட வட்டாரம் ஒவ்வொன்றுக்காகவும், இந்திய அரசினர் விதித்திருக்கிற பணியாளர் தொகுதி மாதிரி, அலுவலகப் பணியாளர் தொகுதி சம்பந்தப்பட்ட வரையில், அடியிற் கண்டபடி இருக்கும்:—

(1) வட்டார வளர்ச்சி அலுவலர் ஒருவர்.
(2) முன்னேற்ற உதவியாளர் ஒருவர்.
(3) கணக்கர் பண்டகக்காப்பாளர் ஒருவர்.
(4) முதுநிலை எழுத்தர் ஒருவர்.
(5) பணப்பொறுப்பாளர் ஒருவர்.
(6) தட்டச்சர் ஒருவர்.
(7) IV ஆம் வகுப்புப் பணியாளர் நால்வர்.

மேற்கண்ட பணியாளர்களுக்குப் பிடிக்கும் செலவை, இந்திய அரசினரும் மாநில அரசினரும் பங்கிட்டுக் கொள்வார்கள்.

2. **வளர்ச்சி வட்டாரம் ஒன்றிற்கு ஊராட்சி ஒன்றியம் அமைப்பதன் விளைவு.**— i) 1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 12-வது பிரிவுடன் சேர்த்துப்படிக்க வேண்டிய 11-வது பிரிவின்படி ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒன்று வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றுக்காகவும் அமைக்கப் படுமானால், அதற்கென்று ஓர் அலுவலகம் இருக்கும். மேற்படி சட்டத்தின்படி, ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் ஒன்றின் சாதாரண வருமானம், பொதுநிதி, தொடக்கக்கல்வி நிதி ஆகிய இரண்டின் கீழும் ஏறத்தாழ மூன்று அல்லது நான்கு லட்ச ரூபாய்க்கு வரலாம். அந்த நிதிகள் தொடர்பான பணியாற்று

அதில் அடங்கியுள்ள வேலைப்பளுவை நிருவகிப்பதற்காக, ஒரு சாதாரண இரண்டாந்தர நகராட்சிக்காக ஒப்பளிக்கப்பட்ட அளவுள்ள பணியாளர் தொகுதி அவசியமாயிருக்கும்.

(ii) சமுதாய வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றி வைக்கும் வேலை மேற்படி சட்டத்தில் கண்ட 66-வது பிரிவின்படி தன்னிடம் ஒப்புவிக்கப்படும் போது, வட்டார வளர்ச்சி அலுவலருக்குட்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகமும் ஊராட்சி ஒன்றிய அலுவலகமும் ஒரே அலுவலகமாக இணைக்கப்பட வேண்டியிருக்கும்.

(iii) அப்போது பின்வருபவைகளைக் குறிப்பிட வேண்டியிருக்கும். அவையாவன :—

(அ) அலுவலகக் காரியங்களுக்காக இலவசமாய் ஊராட்சி ஒன்றியத்தின் வசம் எந்த விரிவாக்கப்பணியாளர் தொகுதியின் பணிகள் விட்டு வைக்கப் படவேண்டுமோ அது அந்தப் பணியாளர் தொகுதியாகுமென்பதும், அந்தப் பணியாளர் தொகுதி சரியான ஊராட்சி ஒன்றியப்பணியாளர் தொகுதியாகுமென்பதும்.

(ஆ) பணியாளர் தொகுதி இரண்டு வகைகளாக ஊராட்சி ஒன்றியப் பணியாளர் தொகுதியும் விரிவாக்கப்பணியாளர் தொகுதியும் எவ்வாறு தெரிந்தெடுக்கப்படுவார்களென்பது.

(இ) பணியாளர் தொகுதி இரண்டு வகைகளுக்கும் என்ன சம்பளங்களும் படிகளும் கொடுக்கப்படுமென்பது.

(ஈ) இருவகைப் பணியாளர் தொகுதிக்கும் பிடிக்கும் செலவு எவ்வாறு கொடுக்கப்படுமென்பது.

இதன்பொருட்டு, தற்போதைய முறையில் பணியாளர் தொகுதியை மாற்றிக் கொடுப்பதும், இப்போதுள்ளபடி செலவை பங்கிட்டுக் கொள்வதும் போதுமானதாகமாட்டாது. மேற்குறிப்பிட்ட விஷயங்கள் சம்பந்தமாக பணியாளர் தொகுதியின் இரண்டு வகைகளின் நிலைமையைத் தெளிவுபடுத்துவதற்காகப் பின்வரும் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

3. **ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளர்.**—மேற்படி சட்டத்தின் 44-ஆவது பிரிவில் சொல்லியிருப்பது என்னவென்றால் ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றிலும் அரசினர் ஓர் ஆணையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும்; அந்த ஆணையாளர் சாதாரணமாக, அந்த ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்துக்கான

சமுதாய வளர்ச்சியின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தை அனுசரித்து நியமிக்கப்படும் வளர்ச்சி அலுவலராக இருப்பார், ஓர் ஆணையாளருக்குக் கொடுக்கப்படும் சம்பளத்துக்காகவும் படிகளுக்காகவும் அல்லது அவருடைய விடுப்புப் படிகள் ஓய்வூதியம் வருங்கால சேமநிதி ஆகியவற்றிற்காகவும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தினிடமிருந்து பணம் எதுவும் வாங்கக்கூடாது. ஊராட்சி ஒன்றியம் ஒன்று அமைக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றிய மன்றம் ஏற்பட்டவுடனே, அந்தந்த வட்டாரத்தின் வட்டார வளர்ச்சி அலுவலரை ஊராட்சி ஒன்றிய ஆணையாளராக நியமிப்பதற்காக அரசினர் ஆணைகள் பிறப்பிப்பார்கள்.

4. **பிற அலுவலகப் பணியாளர் தொகுதி.**—மேற்படி சட்டத்தின் 57 (1) பிரிவில் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கையையும் வேலையின் பெயரையும் தரங்களையும், அவர்களுக்குக் கொடுக்கப்படத்தக்க சம்பளங்களையும் கட்டணங்களையும் படிகளையும் நிச்சயிப்பதற்காக அல்லது மாற்றுவதற்கான யோசனைத் திட்டங்கள் எல்லாவற்றிற்கும் அதன் ஒப்பளிப்பைப் பெறவேண்டும், ஆனால் ஊராட்சி ஒன்றியத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கையும் வேலையின் பெயரையும் தரங்களையும் அவர்களுக்குக் கொடுக்கப்படத்தக்க சம்பளங்களையும் கட்டணங்களையும், படிகளையும் நிச்சயிக்க அல்லது மாற்ற 57(3) பிரிவில் அரசினருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. எவ்வகைப் பதவிகள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் ஆணையிடப்பட்ட பணியாளர் தொகுதியாக இருக்க வேண்டுமென்பதைக் குறித்து அரசினர் ஆலோசனை செய்தார்கள், அந்த ஆலோசனைக்குப் பிறகு, ஓர் ஊராட்சி ஒன்றியத்துக்குரிய ஆணையிடப்பட்ட பணியாளர் தொகுதியின் பின்வரும் அளவை, 1958-ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 57 (3) பிரிவின்படி நிச்சயிக்க அரசினர் கருதியிருக்கிறார்கள்.

வேலையின் பெயர்.	எண்ணிக்கை.
I மேலாளர்	ஒருவர்
(ii) கணக்கர்	ஒருவர்
(iii) தலைமை எழுத்தர்	
(iv) மேல்நிலை எழுத்தர்கள்	இருவர்
(v) கீழ் நிலை எழுத்தர்கள்	ஐவர்
vi) பணப்பொறுப்பாளர் (ஷராப்)	ஒருவர்

(vii) தட்டச்சர் ஒருவர்

(viii) சிற்றெழுத்தர்கள் இருவர் (ஆசிரியர்களின் எண்ணிக்கை 250-க்கு மேற்பட்டால் இன்னும் ஒருவர்)

(ix) ஏவலர்கள் அறுவர்

(x) ஜீப் ஓட்டுநர் ஒருவர்

5. ஊராட்சி ஒன்றியம் வைத்துவரவேண்டிய "தேசிய வளர்ச்சிப் பணியாளர் தொகுதிகளுக்கும்" மற்றப் பணியாளர் தொகுதிகளுக்கும் உள்ள வேறுபாடு.—ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் பணி திறமையாகச் செய்யப்பட வேண்டுமானால் "சமுதாய வளர்ச்சிப்" பணிபற்றியும் "உள்ளூர் நிர்வாகப்" பணி பற்றியும் செயல்தொடர்புடைய ஒருங்கிணைந்த அலுவலகப்பணியாளர் தொகுதி இருக்க வேண்டுவது உசிதமென்றாலும், ஊராட்சி ஒன்றியம் தன் சொந்த செலவில் வைத்திருக்க வேண்டிய பணியாளர் தொகுதிக்கும் மேற்படி சட்டத்தில் கண்ட 66-வது பிரிவின்படி தேசிய விரிவாக்கப் பணித் திட்டத்தை நிறைவேற்றுவதை ஒப்புவிப்பதோடு கூடப்பணி செய்வதற்காக ஊராட்சி ஒன்றியத்தின் வசம் இலவசமாக விட்டுவைக்கப்படும் அரசாங்கப் பணியாளர் தொகுதிக்கும் ஒரு வேறுபாடு தொடர்ந்து இருந்து வரும்படி செய்வது அவசியமாகும். இன்னகாரியத்துக்காக இந்த வேறுபாடு செய்யப்படுமென்பதை கீழே 6, 7, 8, 9-ஆம் பத்திகளில் விவரித்திருக்கிறது. அரசினர் கட்டளையிடுவது என்னவென்றால், மேலே 4-ஆவது பத்தியில் குறிப்பிட்டுள்ள ஒருங்கிணைந்த அலுவலக பணித் தொகுதியில் அடியிற் கண்டிருப்பது தேசிய விரிவாக்கப்பணி சிப்பந்தியாக இருக்கும் :—

(i) மேலாளர் ஒருவர்

(ii) கணக்கர் ஒருவர்.

(iii) மேலநிலை எழுத்தர்கள் இருவர்.

(iv) ஜீப் ஓட்டுநர் ஒருவர்.

எஞ்சியதை, ஊராட்சி ஒன்றியம் தன் சொந்த செலவில் வைத்திருக்க வேண்டிய பணியாளர் தொகுதியெனக் கருத வேண்டும்.

6. ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு உட்பட்ட மாவட்டக் கழகப்பணியாளர் தொகுதியை உட்கொள்வது பற்றிய சட்ட மூலம்பெற்ற நிபந்தனைகள்.—1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின் I ஆம் அட்டவணையில் கண்ட 12-ஆவது விதியில் சொல்லியிருப்பது என்னவென்றால்

(தொடக்கப்பள்ளிகளின் ஆசிரியர்கள் அங்கே வேலையிலமர்ந்திருக்கிற மற்ற வர்கள் ஆசிரியர்களல்லாத வேறு) மாவட்டக் கழகத்தின் அலுவலர், பணியாளர் ஒவ்வொருவரும், அரசினராவது அவர்களிடமிருந்து இதன் பொருட்டு அதிகாரம் பெற்றிருக்கக்கூடிய அலுவலராவது தகுதியெனக் கருதக்கூடிய பதவிகளுக்கு ஊராட்சி ஒன்றியக் குழுவின்கீழ் அல்லது மாவட்ட வளர்ச்சிக் குழுவின்கீழ் நியமிக்கப்படவேண்டும். ஆகையால் ஊராட்சி ஒன்றிய பணியாளர் தொகுதியில் சேர்க்கப்பட்டிருக்கிற எல்லாப்பதவிகளுக்கும் நியமனங்கள் செய்கையில் அந்தப் பணியாளர் தொகுதி தேசிய விரிவாக்கப் பணியாளர் தொகுதியாயிருந்தாலும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர் தொகுதியாயிருந்தாலும், மாவட்டக் கழகங்களில் அமர்ந்திருப்பவர்களுக்கு முதன்மை கொடுத்து அவர்களை நியமிக்க வேண்டும். 1961 ஏப்ரல் 1-ஆம் தேதிக்குள், மாவட்டக் கழக அலுவலகத்தை, ஊராட்சி ஒன்றியங்களுக்கான மையக்கரு அலுவலகங்களாக முழுவதும் பிரிக்கப்பட்டு விடவேண்டுமெனவும், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் முறைப்படி தொடங்குவதற்கு முன்னதாகவே (செயலாற்றுபவைகளாகவும் பெயரளவே உள்ளவைகளாகவும் உள்ள) அந்தந்த வளர்ச்சி வட்டாரங்களில் அந்த முறைமையில் அவைகள் செயற்படத் தொடங்க வேண்டுமெனவும் அரசினர் கருதுகிறார்கள். அப்போது மாவட்டக் கழக அலுவலகத்தைக் கணக்குகளில் போதிய அனுபவமுள்ள மையப்பணியாளர் தொகுதிகளாகச் சுருக்கிவிட வேண்டும். அவ்வண்ணமே அரசினர் கட்டளையிடுவது என்னவென்றால் மாவட்ட ஆட்சியாளரும், ஒவ்வொரு மாவட்டக் கழகத்தின் தனி அலுவலரும் 1960 ஆகஸ்ட் 1-ஆம் தேதியன்று மாவட்டக் கழகத்துக்குட்பட்டு வேலையில் அமர்ந்துள்ள எல்லாரையும் பற்றிய முழுபட்டியல் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்; அவர்களுடைய ஆவணங்களை முழுவதும் கூராய்வு செய்யவேண்டும். வேலையில் அமர்ந்திருப்பவர் ஒவ்வொருவர் விஷயத்திலும் 1961 ஏப்ரல் 1-ஆம் தேதியன்று மேலே குறிப்பிடப்பட்ட கருமைய ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அவர் உரிய இடத்தில் இருக்கும்பொருட்டு, ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு உட்பட்டு அவர் வகிக்க வேண்டிய பதவியை நிச்சயிக்க வேண்டும். வெவ்வேறு வகைகளைச் சேர்ந்த பணியாட்கள் பணி செய்திருக்கிற காலத்தை மனத்துட் கொண்டும், அவர்கள் அரசாங்கத்தின் வருவாய்த் துறையில் இருந்திருந்தால், அவர்களுக்குச் சாதாரணமாக என்ன முன்னேற்ற வாய்ப்புக்கள் கிடைத்திருக்குமென்பதைக் கவனித்தும், அத்தகைய அமர்நீடு விவரப் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். 1960 செப்டம்பர் 1-ஆம் தேதிக்கு முன் அந்த விவரப்பட்டியலைத் தயாரித்து முடித்துவிட வேண்டும். சம்பந்தப்பட்டவர்களுடைய வருங்காலத்தைப் பற்றித் தகுந்தவாறு அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

7. தேசிய வளர்ச்சிப்பணி அலுவலகப் பணியாளர் தொகுதி (முதல் அமைப்பு).—(i) மேலாளர் :—மேலாளர் பதவி புதியது, அதற்கு நியமனம்

செய்கையில், மாவட்டக் கழகங்களின் பணியாளர்களை முதன்மையாகத் தெரிந்தெடுக்க வேண்டும். கண்காணிப்பாளர்கள், முதுநிலை மேல்நிலை எழுத்தர்கள், ஆகியோரின் உரிமைகளைப் பற்றி முதலில் கவனிக்க வேண்டும். பொருத்தமான தகுதி பெற்றவர், மாவட்டக் கழகப் பணியாளர் தொகுதியில் கிடைக்காவிட்டால், நகராட்சி அலுவலகங்களிலிருந்தும் வருவாய்த்துறையிலிருந்தும் ஆட்களைத் தேர்ந்தெடுத்து அமர்த்தலாம். நியமனத்துக்காகத் தெரிந்தெடுக்கப் பட்ட வேட்பாளர்களின் பட்டியலுக்குக்கூட்டு வளர்ச்சி ஆணையாளரின் சம்மதத்தை முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(ii) **கணக்கர்.**—கணக்கர் பதவிக்கு நியமிப்பதற்கான வேட்பாளர்களை உள்ளூர் நிதித் தணிக்கைத் துறையிலிருந்து தெரிந்தெடுக்க வேண்டும்.

(iii) **மேல்நிலை எழுத்தர்கள்.**—மாவட்டக் கழக அலுவலகங்களில், மேலாளர் அல்லது தலைமை எழுத்தர் பதவிக்கு உயர்த்தப்பட்டிராத மேல்நிலை எழுத்தர்கள் இருந்தால், அவர்களை மேல்நிலை எழுத்தர்களாக எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த நிபந்தனைக்குட்பட்டு, வட்டார அலுவலகங்களில்பணியாற்றுகிற மேல்நிலை எழுத்தர்கள் தக்கவர்களாயிருந்தால் அவர்கள் தொடர்ந்து இருக்கும்படி செய்ய வேண்டும். தேசிய வளர்ச்சிப் பணித்திட்டத்துக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னேற்ற உதவியாளருக்கு "உதவி அலுவலர் புள்ளி விவரங்கள்" என மறுபெயர் இடப்பட்டிருக்கிறது. புள்ளி விவரப்பணியாளர் தொகுதிகளைத் திருத்தியமைப்பது பற்றித் தனியாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஆணைகள் தனியாகப் பிறப்பிக்கப்படும். இதற்கிடையில், எந்த வட்டாரத்திலாவது (உதவி அலுவலர் புள்ளிவிவரங்கள் என்னும்) முன்னேற்ற உதவியாளர் இருக்கிற வரையில், மேல்நிலை எழுத்தர்களின் பதவிகளில் ஒன்றுக்கு அவரைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

(iv) **ஜீப் ஓட்டுநர்.**—வட்டார அலுவலகங்களில் உள்ள ஜீப் ஓட்டுநர்கள் அந்தந்த வட்டாரங்களில் அப்படியே தொடர்ந்து பணியாற்றும்படி விட்டுவிட வேண்டும்.

8. **தேசிய வளர்ச்சிப்பணி (அலுவல்) பணியாளர் தொகுதி (வருங்காலத்தில் வைத்திருத்தல்)**—(அ) மேலே 4-ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்ட ஒருங்கிணைந்த அலுவலகப் பணியாளர் தொகுதியில் பின்வரும் பணியாளர்கள், ஊராட்சி ஒன்றியம் வைத்திருக்க வேண்டிய அலுவலகப் பணியாளர்கள் ஆவார்கள், ஊராட்சி ஒன்றியம் நிச்சயிக்கக்கூடிய சம்பள விகிதங்களின்படி அவர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும்.

ஆனால் பின்வரும் சம்பள விதங்களுக்கு மேற்பட்டுக் கொடுக்கக்கூடாது :—

சம்பள விதங்கள்.

(i) தலைமை எழுத்தர் ஒருவர்—ரூ. 125-5-175.

(ii) கீழ்நிலை எழுத்தர்கள் ஐவர்—ரூ. 90-3-120-2-140.

(iii) பணப்பொறுப்பாளர் (ஷராப்) ஒருவர்—ரூ. 90-3-120-2-140.

(iv) தட்டச்சர் ஒருவர்—ரூ. 90-3-120-2-140 கூடுதலாகத் தனிச் சம்பளம் ரூ. 10.

(v) சிற்றெழுத்தர்கள் இருவர்—ரூ. 50-1-70 (கூடுதலாக ஆசிரியர்களின் எண்ணிக்கை 250-க்கு மேற்பட்டால் ஒருவர்).

(vi) குற்றேவலர்கள் அறுவர்—ரூ. 50-1-60.

(ஆ) தலைமை எழுத்தர், கீழ்நிலை எழுத்தர்களில் இருவர் ஆகியோரின் சம்பளத்தையும் படிகளையும், ஊராட்சி ஒன்றியம் (கல்வி) நிதிக்குப் பற்றாக எழுதவேண்டும். எஞ்சிய பணியாளர் தொகுதியாகிய கீழ்நிலை எழுத்தர்கள் மூவர், தட்டச்சர் ஒருவர், பணப்பொறுப்பாளர்,, சிற்றெழுத்தர்கள் இருவர் அல்லது பலர் குற்றேவலர்கள் அறுவர் ஆகியோரின் சம்பளத்தையும் படிகளையும் ஊராட்சி ஒன்றியம் (பொது) நிதிக்குப் பற்றாக எழுதவேண்டும்.

(இ) ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றின் மொத்த எண்ணிக்கையை நிரப்புவதற்கு அவசரமாகத் தேவைப்படக் கூடிய எண்ணிக்கையுள்ள (சிற்றெழுத்தர்கள், குற்றேவலர்கள் பதவிகள் அல்லாத வேறு) அதிகப்படியான பதவிகளை, மாவட்டக் கழகங்களின் தனி அலுவலர்கள் ஏற்கெனவேயுள்ள மாவட்டக் கழகப் பணியாளர் தொகுதிச் சேர்க்கைகளாக, ஊராட்சி ஒன்றியக் குழு அமைக்கப்படுவதற்கு ஒருமாதத்துக்கு முன்பாக உண்டுபண்ண வேண்டும். கீழ்நிலை எழுத்தர்களின் பதவிகளை நிரப்புவதற்காக, மாவட்டக் கழகங்களிலிருந்து அல்லது வட்டார அலுவலகங்களிலிருந்து வேட்பாளர்கள் இடைக்காவிட்டால், வேலை வாய்ப்பகங்களோடு தொடர்பு கொள்ள வேண்டும். வெளிவிண்ணப்பதாரர்களைவிட உள்ளூர் விண்ணப்பதாரர்களை முதன்மையாகக் கருதித் தெரிந்தெடுக்க வேண்டும். புதிதாக அனுமதிக்கப்பெற்றுள்ள சிற்றெழுத்தர்கள் குற்றேவலர்கள் பதவிகளை ஊராட்சி ஒன்றியங்கள் செயலாற்றத் தொடங்கிய பிறகு, பின்னர் நிரப்பும்படி விட்டுவிடலாம். கீழ்நிலை எழுத்தர்களைத் தேர்ந்தெடுத்து நியமிப்பதற்கான அடியிற்கண்டபடித் தரமாக்கப்பட்டதை நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். தனி அலுவலரின் நேர்முக உதவியாளர், மாவட்ட ஆட்சியாளரின் மற்ற நேர்முக உதவியாளர்களில் ஒருவர், எந்தக்கோட்டத்துக்காக ஆட்கள் சேர்க்கப்படுகிறார்களோ அந்தக் கோட்டத்தின் ஆட்சி

யாளரும் கொண்ட அலுவலர்களின் நிமித்தக்குழு ஒன்று வேட்பாளர்களை நேரில் கண்டு தெரிந்தெடுக்கலாம். ஊராட்சி ஒன்றியத்தைத் தொடங்குதற்கு ஒருமாதத்துக்கு முன்னதாகவே பணியாளர் தொகுதிகளைத் தேர்ந்தெடுத்து அமர்த்தலாம்; அப்போதுதான் மாவட்டக் கழக அலுவலகங்களில் அவர்களுக்குப் பயிற்சியளித்து 1960 செப்டம்பர் 1 ஆம் தேதியன்று மேலாளரும் கணக்கருங்கூட மாவட்டக் கழக அலுவலகங்களில் சேரும்போது, பல்வேறு ஒன்றிய அலுவலகங்களுக்கு நிகராகத் தனிப்பிரிவாக அவர்களை அமைக்க முடியும்.

10. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை மூன்று பிரிவுகளாக அமைப்பது.—5 ஆவது, 9 ஆவது பத்திகளில் சொல்லப்பட்டிருக்கிற பணியாளர் தொகுதியை ஒருங்கிணைந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே பின்வரும் மூன்று வெவ்வேறு பிரிவுகளாகப் பங்கிட வேண்டும் :—

I. பொது நிருவாகப் பிரிவு.

(1) மேலாளர்.

(2) மேல்நிலை எழுத்தர்கள் இருவர்.

(3) ஊராட்சிகளுக்குத் தொடர்பான பணிக்காகக் கீழ்நிலை எழுத்தர் ஒருவர்.

(4) பொதுக்கடிதப் போக்குவரத்துக்கும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் தொடர்பான பணிக்காகக் கீழ்நிலை எழுத்தர் ஒருவர்.

(5) பணப் பொறுப்பாளர் ஒருவர் (கீழ்நிலை எழுத்தரின் சம்பள வீதம்).

(6) தட்டச்சர் ஒருவர் (இவர் தபால் பணியையும் செய்ய வேண்டும்).

(7) அலுவலகச் சிற்றெழுத்தர் ஒருவர்.

(8) ஆவணச் சிற்றெழுத்தர் ஒருவர்.

II. வரவு செலவுத் திட்டம்—கணக்குகள் பிரிவு.

(1) கணக்கர்.

(2) கீழ் நிலை எழுத்தர் ஒருவர்.

III. கல்விப் பிரிவு.

(1) தலைமை எழுத்தர்.

(2) கீழ்நிலை எழுத்தர்கள் இருவர்.

(3) ஆசிரியர்களின் எண்ணிக்கை 250-க்கு மேற்பட்டால் சிற்றெழுத்தர் ஒருவர்.

11. ஊராட்சி ஒன்றியம் வைத்து வரவேண்டிய அலுவலகப்பணியாளர் தொகுதி (இனிமேல் வைத்துவரவேண்டியது).—ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்களையும் பணியாளர்களையும் நியமிக்கக்கூடிய அதிகாரிகள், அந்த அலுவலர்கள், பணியாளர்கள் வகைப்பாடு அவர்களைத் தேர்ந்தெடுத்து அமர்த்தும் விதம் அவர்களுடைய சம்பளமும் படிகளும் அவர்களுடைய ஒழுக்க முறை நடத்தை பணித் திட்டங்கள் ஆகியவை தொடர்பாக விதிகள் பிறப்பிக்கும் பொருள்கள் தனியாக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அவைபற்றி நாளாவட்டத்தில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

(1960 ஜூலை 20-ம் தேதியுள்ள 1225-ம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

33. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோருடைய தனிப்பட்ட நடத்தை.—1. நன்கொடைகள், பணிக்கொடைகள், பரிசுகள்.—(1) இவ்விதிகளில் வேறு விதமாக நிபந்தனை கண்டிருக்கிறபடியன்றி மற்றபடி ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது, ஆணையாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக்கொண்டாலொழிய தமக்கு உறவினராயிராத ஒருவரிடமிருந்து, நன்கொடை, பணிக்கொடை அல்லது பரிசினை அல்லது நன்கொடையை, பணிக்கொடையை அல்லது பரிசினைக் கொடுப்பதாகச் சொல்வதை தம் சொந்தச் சார்பிலோ வேறொருவர் சார்பிலோ நேர்முகமாக அல்லது மறைமுகமாக ஏற்றுக் கொள்ளவுங்கூடாது. அவ்வாறு ஏற்றுக்கொள்ளத் தம் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அனுமதி கொடுக்கவுங்கூடாது.

(2) அரசினரின் பொதுவான அல்லது தனி ஆணையின் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது எவரிடமிருந்தேனும் மலர்களையோ பழங்களையோ குறைந்த மதிப்புள்ள அது போன்ற பொருள்களையோ ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் எல்லாரும் அத்தகைய அன்பளிப்புகள் கொடுக்கப்படுவதைத் தவிர்ப்பதற்குத் தங்களாலான முயற்சியெல்லாம் செய்ய வேண்டும்.

(3) அரசினரின் பொதுவான அல்லது தனி ஆணையின் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது அந்த விஷயத்தின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நியாயமான மதிப்புள்ள திருமணப் பரிசை தமது சொந்த நண்பராயிருக்கிற ஒருவரிடமிருந்து ஏற்றுக் கொள்ளலாம், அல்லது அவ்வாறு ஏற்றுக்கொள்ளும்படி தமது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அனுமதி கொடுக்கலாம். ஓர் ஊராட்சி ஒன்றியக் குழுவின்

அலுவலர்கள், பணியாளர்கள், எல்லாரும், அத்தகைய பரிசுகள் கொடுக்கப்படுவதைத் தவிர்க்கத் தங்களால் ஆன முயற்சியெல்லாம் செய்ய வேண்டும்: அவ்வாறு ஏற்றுக் கொள்வதை அல்லது அனுமதி கொடுப்பதை ஆணையாளருக்குத் தெரிவிக்க வேண்டும். பரிசளித்தவருக்கு அப்பரிசுகளைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென ஆணையாளர் சொன்னால் அவ்வாறே செய்ய வேண்டும்.

(4) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது, ஒருவரிடமிருந்து கணிசமான மதிப்புள்ள பரிசினை வாங்க மறுப்பதால் அவர் மனத்தை அதிகமாகப் புண்படுத்துவதைத் தவிர்க்க முடியாதென்று தோன்றினால், அவர் அதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் ஊராட்சி ஒன்றிய மன்றம் வேறுவிதமாகக் கட்டளையிட்டாலன்றி, மற்றப்படி ஊராட்சி ஒன்றிய மன்றத்தினிடம் அப்பரிசை ஒப்புவித்துவிட வேண்டும்.

(5) அரசினரின் தனிப்பட்ட அல்லது பொதுவான ஆணையின் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் மருத்துவ அலுவலராவது கால்நடை வைத்திய அலுவலராவது அவரது தொழில் பணிகளைப் பாராட்டும் வகையில் ஒருவர் அல்லது சிலர் சேர்ந்து நல்ல எண்ணத்துடன் கொடுப்பதாகச் சொல்லும் நன்கொடை, பணிக்கொடை அல்லது பரிசினை ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கால்நடை மருத்துவ அலுவலர், தொற்றுநோய்கள் காணுந்தபடி கால்நடைகளுக்கு ஊசி போடுவதற்காக நன்கொடை, பணிக்கொடை அல்லது பரிசினை ஏற்றுக்கொள்ளக் கூடாது.

(6) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது மற்றவர்களுக்குச் சொந்தமான ஊர்திகளை அல்லது விலங்குகளை வழக்கமாகப் பயன்படுத்தக் கூடாது, வாடகைக்கு ஓடும் வண்டியில் இலவசமாகப் பயணம் செய்யவுங் கூடாது.

2. சந்தாக்கள்.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது பொதுவான அல்லது உள்ளூர்க் காரியத்துக்காக சந்தாக்கள் திரட்டுவதில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது.

ஆனால், ஆணையாளர் ஆண் பிள்ளைகளுக்கான தொடக்கப்பள்ளிகளில் அமர்ந்துள்ள ஆசிரியர்களைப் பொறுத்தவரைப் பள்ளிகளின் முதுநிலைத் துணை ஆய்வாளருடன் கலந்தாலோசித்தும், பெண்பிள்ளைகளுக்கான தொடக்கப் பள்ளிகளில் அமர்ந்துள்ள ஆசிரியர்களைப் பொருத்தவரை மகளிர் பள்ளிகளின்

இளநிலை உதவி ஆய்வாளருடன் கலந்தாலோசித்தும், அடியிற் கண்ட காரியங் களுக்காகச் சந்தாக்கள் திரட்ட ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்கலாம். அக் காரியங்களாவன :—

(i) வகுப்பு வேலைக்கான பரிசுகளும், மாணவர்கள் விளையாட்டுகளும் பள்ளிக்கேளிக்கைகளும் உட்பட பள்ளி நாள் அல்லது பெற்றோர் நாள் கொண்டாட்டங்கள்.

(ii) தகுந்த மாணவர்களுக்குச் சம்பளம் அல்லது புத்தகங்கள் அல்லது உணவு வழங்குவதற்காக ஏழை மாணவர்கள் நிதி.

(iii) பள்ளிச் சுற்றுலாக்கள்.

(iv) கல்விக் காட்சிகளும் பிரசாரமும். அத்தகைய வசூல்கள், அவற்றி னின்றும் செய்யப்படும் செலவு சம்பந்தமாகக் கணக்குகளைத் தக்கபடி வைத்து வருவதற்குப் பள்ளியின் தலைமை ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியை பொறுப் பாளியாவார்.

தலைமை ஆசிரியராவது, தலைமை ஆசிரியையாவது ஒவ்வொரு காரியத் துக்கும் தனித்தனியாக வரவுகளையும் செலவுகளையும் பற்றிய விவரப்பட்டியல் ஒன்றைத் தயாரித்து கொண்டாட்டம் முடிந்தபிறகு அல்லது மற்றவைகளில் கணக்குகள் தீர்வு செய்யப்பட்ட பிறகு ஒரு வாரத்துக்குள் ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். ஆய்வு அலுவலர் பள்ளிகளுக்கு வரும்போது அல்லது ஆய்வு செய்யும்போது அவர்கள் கூராய்வு செய்வதற்காக இக்கணக்குகள் அவர் களுக்குக் கிடைக்கும்படியும் செய்ய வேண்டும். வசூல்களில் மிச்சம் ஏதாகிலும் இருந்தால் அதை அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் போட்டு வைக்க வேண்டும்.

3. பதவி விலகலை விலைக்கு வாங்குதல்.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத் தின் அலுவலராவது பணியாளர்களாவது, தங்களில் ஒருவர் மற்றவர்கள் நன்மையின் பொருட்டு, ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குட்பட்ட ஒரு பதவியி னின்றும் விலகல் செய்வதற்காகப் பணவகையான ஏற்பாடு எதுவும் செய்து கொள்ளக் கூடாது. இவ்விதி மீறப்படுமானால், அவ்வாறு பதவி விலகலின் விளைவாகச் செய்யப்பட்ட நியமனம் ரத்து செய்யப்படும் : அந்த ஏற்பாட்டுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் இன்னும் பணியிலிருந்தால் அவர்கள் ஆணையாளர் ஆணைகள் பிறப்பிக்கிற வரையில் தற்காலிகமாக விலக்கி வைக்கப்படுவார்கள்.

4. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்களும் பணியாளர்களும் வைத்திருக்கிற அல்லது அடைகிற அசையாப்பொருள் மீதான கட்டுப்பாடு.— ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும்,

அல்லது ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கீழிருக்கும் பணிக்கான வேட்பாளர் ஒவ்வொருவரும், தாம் அல்லது தம் மனைவி அல்லது தமது குடும்பத்தைச் சேர்ந்தவராய் தம்முடன் வசித்துக் கொண்டிருக்கிற அல்லது எவ்விதமாக வேனும் தம்மை அடுத்திருக்கிற ஒருவர் அவ்வப்போது வைத்திருக்கக்கூடிய அல்லது அடையக்கூடிய அசையாப்பொருள் எல்லாவற்றையும் பற்றிய அறிவிப்பு ஒன்றை ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். அந்தச் சொத்து இருக்கிற மாவட்டத்தை அந்த அறிவிப்பில் கண்டெழுத வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றம் பொதுவான அல்லது தனி ஆணை மூலமாக மேற்கொண்டு கேட்கக் கூடிய தகவலும் அந்த அறிவிப்பில் அடங்கியிருக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தங்கள் அலுவலர்களுக்கும் பணியாளர் களுக்கும் பணிக்கொடை வழங்குவதை முறைப்படுத்துகிற விதிகளில் கருதப் படுகிற உயர்தரப்பணியிலிருக்கிற அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும், அப்பணிக்கு நியமிக்கப்படுவதற்கான வேட்பாளர்களுக்கும் மாத்திரம் இவ்விதி பொருந்தும்.

குறிப்புகள்.—(i) வைத்திருக்கப்படும் அல்லது அடையப்படும் அசையாப் பொருள் இந்தியாவில் எங்கே இருந்தாலும் அவைகள் எல்லாம் அந்த அறிவிப் பில் சேர்ந்திருக்க வேண்டும். அ. இணைப்பிலுள்ள படிவத்தில் குறிப்பிட்டிருக் கிற விவரங்கள் எல்லாம், கூடிய வரையில் அதில் இருக்க வேண்டும்.

(ii) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் முந்திய காலெண்டர் ஆண்டின் முடிவில் அவர் உடைமையாகப் பெற்றிருந்த அல்லது அவர் பற்று வைத்திருந்த அசையாப்பொருள் எல்லா வற்றையுங் கண்டு, அ. இணைப்பிலுள்ள படிவப் பிரகாரம் விவரப்பட்டியல் ஒன்றை, ஒவ்வோர் ஆண்டிலும் சனவரி 15-ஆம் நாளுக்குள் ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். அப்படிவத்தின் (6) முதல் (16) வரையுள்ள பத்திகளிலும் (19), (20), (21) பத்திகளிலும் உரிமை கைவிடப்பட்ட அல்லது மற்றப்படி தீர்வு செய்யப்பட்ட அசையாப்பொருள் பற்றிய விவரங்களை எழுத வேண்டும்.

(iii) ஓர் ஊராட்சி ஒன்றியக் குழுவின் அலுவலர் அல்லது பணியாளர் எந்த ஆண்டிலேனும் அசையாப்பொருளை அல்லது அசையாப்பொருளில் உள்ள பாத்தியதையை அடையாவிட்டால் அல்லது, அதன் உரிமையைக் கைவிடா விட்டால் அல்லது அதை மற்றப்படி தீர்வு செய்திராவிட்டால் அவர் அ. இணைப் பிலுள்ள படிவத்தின்படி விவர அறிக்கையை அனுப்புவதற்குப் பதிலாக அடியிற்கண்ட படிவப்படி ஒரு சான்றினை அனுப்பலாம்.

"அ. ஆ. என்னும் நான் மனப்பூர்வமாக அறிவிப்பது என்னவென்றால் .... அன்று நான் விவர அறிக்கையை/சான்றினை அனுப்பிய பிறகு, அசையாப்பொருளையாவது அசையாப்பொருளில் பயனுள்ள அல்லது வேறுவித மான பாத்தியதைகளையாவது, நான், என் சொந்தபெயரில் அல்லது வேறொருவர் பெயரில் அடையவில்லை அல்லது உடைமையாக்கிக் கொள்ளவில்லை, அல்லது அதன் உரிமையைக் கைவிடவில்லை அல்லது அதை வேறு விதமாகத் தீர்வு செய்யவில்லை.

இடம் :

நாள் :

(கையெழுத்து) அ. ஆ.

பதவிப் பெயர்.

(iv) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளரின் சொந்த முறைமையிலாவது, அறங்காவலர்—நிறைவேற்றுபவர்—அல்லது நிர்வாகி அல்லது கோயில் நிலக்கிழார் என்னும் முறைமையிலாவது அடையப் பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட அல்லது அவருடைய மனைவியின் அல்லது அவர் குடும்பத்தைச் சேர்ந்தவராய் அவருடன் வசித்துக் கொண்டிருக்கிற அல்லது எவ்விதமாகவேனும் அவரை அடுத்திருக்கிற ஒருவரின் பெயரில் அடையப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட அல்லது அவரால் வைத்திருக்கப் படுகிற அல்லது நிருவகிக்கப்படுகிற அசையாப்பொருள் எல்லாம் அந்த ஆண்டு விவர அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் மருமக்கள் தாயம் அல்லது அலிய சந்தானச் சட்டத்தைப் பின்பற்றுபவராயிருந்தால், அவர் மனைவியினால் அடையப்பட்ட அசையாப்பொருள் அந்த விவரப்பட்டியலில் சேர்க்கப் பட்டிருக்க வேண்டும்.

(v) பணியாளர் அல்லது அலுவலர் ஒவ்வொருவராலும் வைத்திருக்கப் படும் அசையாப் பொருளைக் காட்டும், ஆ. இணைப்பில் கண்டுள்ள படிவப்படி உள்ள விவரப்பட்டியலை, அவருடைய பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். மேலே (ii) குறிப்பின்படி கொடுக்கப்படும் விவரங்களையொட்டி இந்த விவரப்பட்டியலை ஒவ்வோராண்டும் திருத்தியமைக்க வேண்டும். சம்பந்தப் பட்ட பணிப்பதிவேட்டில் ஆண்டு சரிபார்த்தல் சான்றினைப் பதிவு செய்ய அதிகாரமுள்ள அலுவலர், மேற்படி விவரப்பட்டியலில் உள்ள பதிவு அல்லது மாறுதல் ஒவ்வொன்றுக்கும் முறைப்படி, அத்தாட்சிக் கையெழுத்திட வேண்டும்.

(vi) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கீழ் வேலைக்கான வேட்பாளர், அ. இணைப்பில் கண்டுள்ள படிவப்பிரகாரம் உள்ள விவரப்பட்டியல் ஒன்றைத் தமது விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.

(vii) தவறான எண்ணம் தோற்றுவிக்க எத்தனித்தாலும், சரியான தகவலை முழுமையாகக் கொடுக்கத் தவறிப்போனாலும், சம்பந்தப்பட்ட அலுவலர் அல்லது பணியாளர் பணியிலிருந்து விலக்கப்படுவதற்கு உள்ளாவார்.

5. *நிறுமனங்களை முன்னேறச் செய்வதும் நிருவகிப்பதும்.*—(1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும், ஏதேனும் நிறுமத்தில் அல்லது பரிமாற்ற நலச் சங்கத்தில் சம்பளம் பெறும் வேலையை ஏற்றுக் கொள்ளவுங்கூடாது, இந்திய வாழ்க்கை ஈட்டுறுதி சங்கத்துக்கோ ஏதேனும் ஈட்டுறுதி நிறுமம் அல்லது சங்கங்களுக்கோ சம்பளம் அல்லது பணியாளர் பணியிலிருந்து விலக்கப்படுவதற்கு உள்ளாவார்.

(2) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது, ஆணையாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, பரிமாற்ற சங்கம் ஒன்றின் நிருவாகத்தில் பங்கெடுத்துக் கொள்ளலாம்; ஆனால், அதற்காக ஊதியம் எதையும் வாங்கக்கூடாது.

(3) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது, கூட்டுறவுச் சங்கங்கள் முன்னேறச் செய்வதில் பங்கெடுத்துக் கொள்ளலாம்; ஆனால் மேலும் ஆணையாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் பதவி வகிக்கலாம், அதன் நிருவாகத்துக்கென நியமிக்கப்பட்ட குழுவில் பணியாற்றலாம். அல்லது தாம் செய்யும் பணிக்காக அதனிடமிருந்து ஊதியம் பெறலாம்.

(4). (2) அல்லது (3) உள் விதியின்படி எதிலேனும் ஒப்பளிப்பு வழங்குவதற்குமுன், ஆணையாளர் மேற்படி அலுவலராவது பணியாளராவது மேற்கொண்ட பணி அவருடைய அலுவல் முறைக் கடமைகளுக்குக் கேடின்றிச் செய்யப்படுமென்று சந்தேகமின்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

6. *தனிப்பட்ட தொழில் அல்லது வேலை.*—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது, தமது அலுவல் முறைக் கடமைகள் அல்லாத வேறு ஏதேனும் தொழில் ஈடுபடவுங்கூடாது, ஏதேனும் வேலையை மேற்கொள்ளவுங்கூடாது.

(2). (அ) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது, சமுதாய அல்லது அறத்தன்மை வாய்ந்த மதிப்பார்ந்த பணியை

அல்லது ஓரொருகால் இலக்கிய அல்லது கலைத்தன்மை வாய்ந்த பணியை மேற் கொள்ளலாம், ஆனுல் அதனுல் அவருடைய அலுவல் முறைக் கடமைகளுக்குத் தீங்கு விளையக்கூடாது. ஆனுல், விரும்பத்தக்கதல்லவென்று ஊராட்சி ஒன்றிய மன்றம் கருதுகிற ஒரு வேலையை அவர் மேற்கொள்ளக்கூடாதென அக்குழு எப்போதேனும் தடுக்கலாம், அல்லது அத்தகைய வேலையை அவர் கைவிட்டுவிட வேண்டுமென அக்குழு எப்போதேனும் அவருக்கு உத்தரவிடலாம்.

(ஆ) ஆசிரியர் எவரும், ஆணையாளரது எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம், தனிப்போதனை மேற்கொள்ளலாகாது.

(3) ஆணையாளர், ஆண்பிள்ளைகளுக்கான தொடக்கப்பள்ளிகளில் அமர்ந் துள்ள ஆசிரியர்களின் விஷயத்தில் பள்ளிகளின் முதுநிலைத் துணை ஆய்வாள ருடனும், பெண் பிள்ளைகளுக்கான தொடக்கப் பள்ளிகளில் அமர்ந்துள்ள ஆசிரி யர்களின் விஷயத்தில் மகளிர் பள்ளிகளின் இளநிலை உதவி ஆய்வாளருடனும் கலந்தாலோசித்து, பின்வரும் பணி இனங்களை மேற்கொள்ள ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்கலாம். அவையாவன :—

(i) கல்வி பற்றிய வானெலிப் பேச்சுகள் :

(ii) பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, விதி விலக்கானவற்றில், வகுப்புப் பணிகளுக்கான அல்லது நூலகங்களில் பயன்படுவதற்கான பாடப் புத்தகங்களை எழுதுவது, அந்நிபந்தனைகளாவன :—

(அ) இம்மாநிலத்தில் ஏற்பளிக்கப்பட்ட பள்ளியில் பயன்படுத்துவ தற்காக ஆசிரியர் எழுதிய பாடப்புத்தகப் பிரதிகளின் விற்பனையில் அவருக்குப் பதிப்புரிமையோ பாத்தியதையோ இருக்கக்கூடாது. வெளியீட்டு நிலையம் அல்லது வேருெருவரிடமிருந்து ஊதியமாக ஒரு குறிப்பிட்ட தொகையை மட்டுமே அவர் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) பாடப்புத்தகக் குழுவின் உறுப்பினராயுள்ள ஓர் ஆசிரியர், தாம் அக்குழுவின் உறுப்பினராயிருக்கும் காலத்தில், ஏற்பளிக்கப்பட்ட பள்ளியில் பயன்படுத்துவதற்காகப் பாடப் புத்தகங்களை எழுதவுங்கூடாது, பதிப்பிக்கவுங்கூடாது.

விளக்கம்.—ஏற்பளிக்கப்பட்ட பள்ளி என்பது, அரசினரின் ஒப்பளிப் புடன் நடத்தப்பட்டுவரும் அல்லது தொடங்கப்பட்டுள்ள ஒரு பள்ளியென் ருவது, தமிழ்நாடு கல்வி விதிகளின்படி அல்லது 1920 ஆம் ஆண்டின் தமிழ் நாடு தொடக்கக் கல்விச் சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட்ட விதிகளின்படி ஏற்பு அளிக்கப் பெற்றுள்ள பள்ளியென்ருவது பொருள்படும்.

(iii] அரசினர் தேர்வுகளுக்கான தேர்வாளர் பதவி.

(iv) பகுதிநேர அஞ்சலகத் தலைவராக அல்லது ஓர் ஊராட்சியின் பகுதிநேர எழுத்தராகப் பணிசெய்வது, ஆனால் பகுதி நேர அஞ்சலகத் தலைவர் பதவியையும் ஓர் ஊராட்சியின் பகுதிநேர எழுத்தர் பதவியையும் ஒரே சமயத்தில் வகிக்க எந்த ஆசிரியருக்கும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

(4). (அ) (3) உள்விதியில் வேறு விதமாகச் சொல்லியிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, கல்விப் பிரச்சினைகள் பற்றிய வானொலிப் பேச்சுகளில் ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும் மாவட்ட ஆட்சியாளரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், எப்பொருளைப் பற்றியேனும் ஒலிபரப்பு நிலையமொன்றில் பேச்சு ஒலிபரப்பக்கூடாது. எதைப் பற்றியேனும் அரசினரின் ஆலோசனைக்கனுப்பி அவர்கள் ஆணைகள் பெறுவது நல்லதென்று மாவட்ட ஆட்சியாளர் கருதினால் அவர் அப்படியே செய்யலாம்.

(ஆ) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது வானொலிப்பேச்சு நிகழ்த்தும்படி அழைக்கப்பட்டால் அல்லது அவ்வாறு நிகழ்த்த விரும்பினால், தாம் பேசக் கருதும் பொருளைப்பற்றி தக்க வாயிலாக மாவட்ட ஆட்சியாளருக்குத் தெரிவிக்க வேண்டும். அந்தப் பேச்சின் பொருள் தமது அலுவல் முறைக்கடமைகளுக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ தொடர்புடையதாயிருந்தால், அல்லது பின்வருமாறு ஆணையிடப்பட்டால், அப்பேச்சு பேசப்படுவதற்கு முன் மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதலுக்காக அதன் முழுக்கட்டுரைப் பொருளையும் அனுப்ப வேண்டும்.

(இ) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது (தயாரிக்கப்பட்ட ஒப்பளிப்புகள் அல்லது இசைத் தட்டுகளை ஒலிபரப்புவது உட்பட) இசை நிகழ்ச்சிகளை அல்லது வேறு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கு, (அ) (ஆ) பகுதிகளின் நிபந்தனைகள் தக்க மாறுதல்களுடன் பொருந்தும்.

7. **ஒப்பந்தக்காரர்களுடன் பணவிவகாரங்கள்.**—ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்கள், பணியாளர்கள் எல்லாரும், ஊராட்சி ஒன்றிய மன்ற ஒப்பந்தக்காரர்களுடன் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குட்பட்ட ஒரு துடையுடன் எவ்விதமாகவேனும் தொடர்புடைய வேறொருவருடன் எத்தகைய பண விவகாரங்களும் வைத்துக் கொள்ளக் கூடாது.

8. **நொடிப்பும் வழக்கமாகக் கடன்பட்டிருப்பதும்.**—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது, வழக்கமாகக் கடன்பட்டிருப்பதைத் தவிர்க்க வேண்டும். அவர் நொடித்துப் போனவரென்று தீர்ப்பளிக்கப்

பட்டால் அல்லது அறிவிக்கப்பட்டால், அல்லது சாதாரண சந்தர்ப்பங்களில் இரண்டாண்டு காலத்துக்குள் அவர் திருப்பிச் செலுத்த முடியாத மொத்தத் தொகையை அவர் கடன் வாங்கியிருந்தால் அல்லது அவருடைய சம்பளத்தின் ஒரு பாகம் கடனுக்காக அடிக்கடி ஜப்தி செய்யப்பட்டால், அல்லது இரண்டாண்டு காலம் அவ்வாறு தொடர்ச்சியாக ஜப்தி செய்யப்பட்டால் அல்லது சாதாரண சந்தர்ப்பங்களில் இரண்டாண்டு காலத்துக்குள் அவர் திருப்பிச் செலுத்த முடியாத தொகைக்கு ஜப்தி செய்யப்பட்டால் சாதாரண விவேகத்துடனிருந்தும் அவர் எதிர்பார்த்திருக்க முடியாத அல்லது தம் கட்டுப்பாட்டுக்கு மீறிய சந்தர்ப்பங்களின் விளைவாக மேற்படி நொடிப்பு அல்லது கடன் சுமை ஏற்பட்டதேயன்றி, ஊதாரித்தனமான அல்லது ஒழுக்கக் கேடான வழக்கங்களினால் ஏற்படவில்லையென அவர் மெய்ப்பித்தாலொழிய, அவர் இவ்விதியை மீறியிருப்பதாக நிச்சயமாகக் கொள்ளலாம். ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது தாம் நொடித்துப்போனவரென்று தீர்ப்பளிக்க வேண்டுமென அல்லது அறிவிக்க வேண்டுமென விண்ணப்பம் செய்து கொண்டால் அல்லது அவ்வாறு ஒப்பளிக்கப்பெற்றால் அல்லது அறிவிக்கப்பெற்றால், அவர் தாம் வேலையில் அமர்ந்திருக்கிற அலுவலகத்தின் அல்லது துறையில் தலைவருக்குத் தமது நொடிப்பைப்பற்றி உடனே தெரிவிக்க வேண்டும்.

9. அலுவல் முறையான ஆவணங்களை அல்லது செய்தியை அனுப்புவது.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தினிடமிருந்து இதன்பொருட்டு பொதுவாக அல்லது தனியாக அதிகாரம் பெற்றிருந்தாலன்றி மற்றப்படி, அலுவல் முறையான தமதுகடமைகளின் போது தம் வசம் வந்திருக்கிற அல்லது அவ்வலுவலர்களைச் செய்கையில் அலுவல் முறையான ஆதாரங்களிலிருந்தோ மற்றபடியோ தாம் தயாரித்திருக்கிற அல்லது திரட்டியிருக்கிற ஓர் ஆவணம் அல்லது செய்தியை அதைப்பெற்றுக்கொள்ள அதிகாரம் பெற்றிராத ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் வேறோர் அலுவலருக்காவது பணியாளருக்காவது, வேறொரு உள்ளூர் அதிகார சபையின் ஓர் அலுவலருக்காவது பணியாளருக்காவது, அரசுப் பணியாளருக்காவது—அரசுப் பணியாளர் அல்லாத ஒருவருக்காவது பத்திரிகைகளுக்காவது நேர்முகமாகவோ மறைமுகமாகவோ அனுப்பக்கூடாது.

10. பத்திரிகைகளுடன் தொடர்பு.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது பணியாளராவது, ஒரு செய்தித்தாளுக்கு அல்லது பருவ வெளியீட்டுக்கு முழுவதுமோ சிறிது மட்டிலோ சொந்தக்காரர் ஆகிவிடவுங் கூடாது. அதைப் பதிப்பித்தல் செய்தலிலோ அல்லது நிருவகிப்பதிலோ பங்கு கொள்ளுதல் கூடாது.

11. **ஆவணங்களை வெளியிடுவது, பத்திரிகைகளுக்குச் செய்திகள் அனுப்புவது ஆகியவை பற்றிய வரையறைகள்.**—(1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும் வானொலிப் பேச்சிலாவது, எழுதியவர் பெயர் இல்லாமல் அல்லது தமது சொந்தப்பெயரில் அல்லது வேறொருவர் பெயரில் வெளியிடப்படுகிற ஓர் ஆவணத்திலாவது, பத்திரிகைச் செய்தியிலாவது, மேடைப் பேச்சிலாவது—

(i) மைய அரசினரின் அல்லது ஒரு மாநில அரசினரின், ஊராட்சி ஒன்றியக் குழுவினரின் அல்லது ஓர் ஊராட்சியின் அல்லது ஒரு நகராட்சி மன்றத்தின் நிகழ்காலத்திய அல்லது அண்மைக்காலத்திய கொள்கை அல்லது செயலை எதிராகக் கண்டிக்கும் விளைவையுடைய, அல்லது

(ii) மைய அரசு, மாநில அரசு ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவைகளுக்கிடையிலுள்ள உறவுகளைச் சிக்கலாக்கக்கூடிய, அல்லது

(ii) மைய அரசுக்கும், அந்நிய நாடு ஒன்றின் அரசுக்கும் இடையிலுள்ள உறவுகளைச் சிக்கலாக்கக் கூடிய செய்தி அல்லது கருத்துப்பற்றிய எந்த அறிவிப்பையும் வெளியிடக்கூடாது.

ஆனால், ஓர் ஊராட்சி ஒன்றியக்குழுவின் அலுவலர் அல்லது பணியாளர், தமது அலுவல் முறைமையில் அல்லது அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடமைகளை முறைப்படி செய்கையில் வெளியிடும் அறிவிப்புகளுக்கு அல்லது சொல்லும் கருத்துக்களுக்கு இவ்விதியில் உள்ளது எதுவும் பொருந்தாது.

(2) ஓர் ஊராட்சி ஒன்றியக்குழுவின் அலுவலராவது, பணியாளராவது தம் சொந்தப் பெயரில் ஏதேனும் ஆவணத்தை வெளியிட, அல்லது தம் சொந்த பெயரில் பத்திரிகைகளுக்கு ஏதேனும் செய்தி அனுப்ப, அல்லது எந்த அறிவிப்புகள் சம்பந்தமாக (1) உள் விதியில் விதிக்கப்பட்டுள்ள வரையறைகளை பொருந்துவது பற்றிய ஐயம் எழக்கூடுமோ அந்த அறிவிப்புகள் அடங்கியுள்ள மேடைப் பேச்சு நிகழத்தக்க கருதினால், அவர் தாம் வெளியிடக்கருதுகிற ஆவணத்தின் வரைவுக்கு அல்லது தாம் தெரிவிக்கக் கருதுகிற செய்திக்கு அல்லது தாம் நிகழ்த்தக் கருதுகிற பேச்சுக்குப் படி ஒன்றை மாவட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும். மாவட்ட அலுவலரின் ஒப்பளிப்புடனும் அவர் கட்டளையிடக் கூடிய எவ்வையேனும் மாறுதல்களுடனும் அன்றி மற்றப்படி அந்த ஆவணத்தை வெளியிடவோ, செய்தியைத் தெரிவிக்கவோ பேச்சினை நிகழ்த்தவோ கூடாது.

12. **குழுக்கள் முன்பு சான்று கூறுவது.**—ஓர் ஊராட்சி ஒன்றியக்குழுவின் அலுவலர் அல்லது பணியாளர், ஆணையாளரின் அனுமதியை முதலில் பெற்றுக்

கொண்டாலன்றி, ஒரு பொதுக்குழுவின் முன்பு சான்று கூறலாகாது. அவ்வாறு சான்று கூறும்போது, ஊராட்சி ஒன்றியக் குழுவின் அல்லது மாநில அல்லது மைய அரசினரின் கொள்கை அல்லது தீர்மானங்களை அவர் கண்டிக்கக்கூடாது.

வந்திருந்து, பதில் அளிக்கும்படி கட்டாயப்படுத்தும் அதிகாரமுள்ள சட்டபூர்வமான குழுக்களுக்கு முன் கூறப்படும் சான்றுக்கும், நீதி விசாரணைகளில் கூறப்படும் சான்றுக்கும் இவ்விதி பொருந்தாது.

13. தேர்தல்களில் பங்கெடுத்துக் கொள்வது.—ஓர் ஊராட்சி ஒன்றியக் குழுவின் அலுவலராவது பணியாளராவது, ஒரு சட்டசபைக்கு அல்லது உள்ளாட்சிச்சபைக்கு நடத்தப்படும் தேர்தலில் வேட்பாளராக நிற்கவுங் கூடாது, அதில் தலையிடவுங்கூடாது, தமது செல்வாக்கினை எவ்விதமாகவும் பயன்படுத்தவுங்கூடாது, ஒரு வேட்பாளருக்கு ஆதரவாகவோ தடங்கலாகவோ எதையும் செய்யவுங்கூடாது. மேலும் அவர் ஒரு கட்சியின் தேர்தல் பிரசார அமைப்பில் பங்கெடுத்துக் கொள்ளவுங்கூடாது, அதற்கு ஆதரவாகக் கையெழுத்திடவுங்கூடாது.

ஆனால், அந்த ஊராட்சி ஒன்றியக்குழுவின் ஓர் அலுவலராவது பணியாளராவது, அப்படிப்பட்ட ஒரு தேர்தலில் வாக்களிக்கத்தகுதி பெற்றவராயிருந்தால், வாக்களிக்கத் தமக்குள்ள உரிமைச் செலுத்தலாம், ஆனால் அவ் உரிமையைத் தாம் எவ்விதம் செலுத்தக்கருதியிருக்கிறார் என்பதைத் தெரிவிப்பதைக் கூடியவரையில் தவிர்க்க வேண்டும்.

முழுநேர அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் மட்டும் இவ்விதி பொருந்தும்.

14. அரசியலில் பங்கெடுத்துக்கொள்வது.—அரசினரின் பொதுவான அல்லது தனிப்பட்ட ஓர் ஆணைக்குட்பட்டு, ஓர் ஊராட்சி ஒன்றியக்குழுவின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும், இந்தியாவில் உள்ள அல்லது இந்திய விவகாரங்களுக்குத் தொடர்புடைய ஓர் அரசியல் இயக்கத்தில் பங்கெடுத்துக் கொள்ளவும் கூடாது. அதற்கு ஆதரவாகக் கையெழுத்திடவுங்கூடாது, அதற்கு எவ்விதத்திலும் உதவி செய்யவுங்கூடாது, ஓர் அலுவலர் அல்லது பணியாளர் செய்யக் கருதியிருக்கிற செயல் இவ்விதியை மீறுவதாகுமா எனச் சந்தேகங்கொள்வதற்கு இடமிருந்தால், அவர் அவ்விஷயத்தை ஆணையாளர் மூலமாக ஆய்வாளர் ஆலோசனைக்கு அனுப்ப வேண்டும், அதன் பேரில் ஆய்வாளரின் தீர்ப்பு முடிவானதாகும்.

குறிப்பு.—ஓர் அலுவலர் அல்லது பணியாளர் நிலை குலைக்கும் செயல்களில் ஈடுபட்டால், அல்லது விசுவாசமற்ற உணர்ச்சிகளை வெளியிட்டால், அவரைப்

பணியிலிருந்து நீக்கி விடுவதற்கு, அதுவே போதிய காரணமாகக் கருதப் படும்.

15. **தங்களுடைய குடும்பத்தாரின் செயல்களுக்காக அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்குமுள்ள பொறுப்பு.**—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் இவ்விதிகளை மீறும் ஒரு செயலைச் செய்திருந் தால் எவ்வாறு பொறுப்பாளியாவார்களோ அவ்வாறே அவர்களுடைய மனைவியோ, அவர்களுடன் வசித்துக் கொண்டிருக்கிற அல்லது எவ்விதமாக வேனும் அடுத்திருக்கிற தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த வேறொருவரோ செய்த செயலுக்கும் பொறுப்பாளியாவார்கள்.

16. **ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் என்னும் முறைமையில் ஒருவருடைய செயல்கள், நடத்தை ஆகியவற்றின் நேர்மையை நிலைநாட்டுதல்.**—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலராவது, பணியாள ராவது அவதூறான தாக்குதல்களினின்றும் தமது அலுவல் முறையான செயல் களின் அல்லது நடத்தையின் நேர்மையை நிலைநாட்டுவதற்காக ஆணையாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல் நீதி மன்றங்களையாவது பத்திரிகைகளையாவது நாடக்கூடாது.

ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலரின் அல்லது பணியாளரின் தனிப்பட்ட செயல்களின் அல்லது நடத்தையின் நேர்மையை நிறுவுவதற்கு அவருக்குள்ள உரிமையை இவ்விதியில் உள்ளது எதுவும் வரையறுக்காது அல்லது மற்றப்படி பாதிக்காது.

17. **தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டிருக்கும்போது உள்ள முகவரி.**— ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் தற்காலிக மாக விலக்கி வைக்கப்பட்டால், அவர் எங்கு வேண்டுமானாலும் போகலாம்: ஆனால் அவர் தமது முகவரியை ஆணையாளரிடம் கொடுத்து விட்டுச் செல்ல வேண்டும். எந்த அலுவலராவது, தமது நடத்தையைப் பற்றி விசாரணை செய்துவந்தால் அவரிடமும் அவர் தமது முகவரியைக் கொடுத்து விட்டுச் செல்ல வேண்டும்.

அவருடைய நடத்தையைப் பற்றி நடத்தப்படும் விசாரணையின் போது அவர் வந்திருக்க வேண்டுமெனப் பிறப்பிக்கப்படும் எல்லா ஆணைகளுக்கும் அவர் கீழ்ப்படிய வேண்டும். அவர் அப்படி வரத் தவறினால், அவர் வராம லிருக்கும்போதே விசாரணை நடத்தப்படலாம்.

18. **நன்மையைப் பெருக்கிக் கொள்வதற்காக மேலதிகாரிகளிடம் செல்வாக்கைப்பயன் படுத்துவது.**—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின்

அலுவலராவது பணியாளராவது, தமது நன்மையைப் பெருக்கிக் கொள்வதற்காக ஒரு மேலதிகாரியிடம் அரசியல் அல்லது வேறு வெளிப்புறச் செல்வாக்கைப் பயன்படுத்தவுங்கூடாது . பயன்படுத்த எத்தனிக்கவுங் கூடாது. இவ்விதியை மீறுவதற்குரிய தண்டனையாவது, அவருடைய பதவி உயர்வை நிரந்தரமாக அல்லது ஆணையாளர் நிச்சயிக்கக்கூடிய காலத்துக்கு நிறுத்திவிடுவது அல்லது காலச் சம்பள ஏற்ற முறையில் கீழ்நிலைக்குக் குறைத்து விடுவது ஆகும்.

விளக்கம்.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் ஊராட்சி ஒன்றிய மன்றத்திலாவது நாடாளு மன்றத்திலாவது மாநிலச் சட்டப்பேரவையிலாவது தமது சொந்த விஷயத்தையே ஓர் இடைக் கேள்விக்குப் பொருளாயிருக்கும்படி செய்வாரானால், அவர் இவ்விதியை மீறுபவராவார்.

19. மேலதிகாரிகளுக்குக் கடிதம் எழுதுவது அல்லது அவர்களை நேரில் காண்பது.—(1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும் தமது அலுவல் முறையான கடமைகளுக்குச் சம்பந்தப்பட்ட அல்லது அத்தகைய அலுவலர் அல்லது பணியாளர் என்னும் முறைமையில் தம்மைச் சொந்தத்தில் பாதிக்கிற ஒன்றில் தமக்கு அடுத்து மேலிருக்கிற அதிகாரி அல்லாத வேறொரு மேல் அதிகாரிக்கு நேரில் கடிதம் எழுதக் கூடாது.

குறிப்பு.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர், தமக்கு அடுத்த மேலுள்ள அதிகாரி மூலமாகக் கடிதம் எழுதியிருந்து, தமக்கு அடுத்து மேலுள்ள அலுவல் முறை அதிகாரி மூலமாக அனுப்பிய கடிதத்தின் படி ஒன்றை நேரடியாக அந்த மேல் அதிகாரிக்கு அனுப்ப விரும்பினால் அப்படியே செய்யலாம்.

(2) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் என்னும் முறையில் தம்மைச் சொந்தமாகப் பாதிக்கிற ஒரு விஷயம் சம்பந்தமாக ஆதரவு தேடும் பொருட்டு, அல்லது தகுதிப்பத்திரங்களை அல்லது நற்சான்றிதழ்களைப் பெறும் பொருட்டு, தமக்கு அடுத்து மேல் உள்ள அலுவலர் அல்லாத வேறு அரசுப் பணியாளராயுள்ள அல்லது அரசுப் பணியாளர் அல்லாதவராயுள்ள ஒருவரை அணுகக்கூடாது.

(3) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் தமக்கு அடுத்து மேலிருக்கிற அதிகாரியின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொண்டாலன்றி மற்றப்படி, அத்தகைய அலுவலர் அல்லது பணியாளர் என்னும் முறைமையில் தம்மைச் சொந்தமாகப் பாதிக்கிற எது ஒன்றின்

சம்பந்தமாகவேனும் தமக்கு அடுத்து மேல் உள்ளவர் அல்லாத வேறோர் அலுவலரை நேரில் காண முயலக்கூடாது; ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும் ஓர் அமைச்சரையாவது, அரசுச் செயலாளரையாவது அவ்வாறு நேரில் காண முயலக்கூடாது.

(4) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் நியமனத்துக்காக அல்லது பதவி உயர்வுக்காகச் செய்து கொள்ளும் விண்ணப்பம் ஒவ்வொன்றையும் தக்கவாயிலாக அனுப்ப வேண்டும்.

20. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்களையும் பணியாளர்களையும் சிறப்பிப்பதற்காகப் பொது ஆர்ப்பாட்ட நிகழ்ச்சி.—(1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும் பாராட்டு வாழ்த்துரையோ பிரிவு வாழ்த்துரையோ பெறவுங்கூடாது தம்மைச் சிறப்பிப்ப தற்காக நடத்தப்படும் பொதுக்கூட்டத்துக்கோ கேளிக்கைக்கோ போகவுங் கூடாது. ஆயினும் ஓர் அலுவலர் அல்லது பணியாளர் தமது சொந்த நண்பர்கள் அல்லது தாம் உறுப்பினராயுள்ள கழகத்தினர் தமக்குக் கொடுக்கும் பிரிவுபசார விருந்துக்குப் போவதில் தடை ஒன்றுமில்லை. ஆனால் ஓர் அழைப்பை ஏற்றுக் கொள்ளும்போது அந்த அலுவலர் அல்லது பணியாளர் அடியிற்கண்டவற்றைத் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும், அவையாவன: அந்த நிகழ்ச்சி முழுவதும் தனிப்பட்டதாயிருக்க வேண்டுமென்பது, எக் காரணத்தைக் கொண்டும் அது பொதுக் கேளிக்கையின் தன்மையுள்ளதாகி விடக்கூடாதென்பது, தமக்கு வாழ்த்துரை எதுவும் படித்துக் கொடுக்கக் கூடாதென்பது, நிகழ்ச்சிகளைப் பற்றிய அறிவிப்பு எதையும் பொதுப்பத்திரிகை களில் வெளியிடக்கூடாதென்பது.

(2) எந்த வரிசையிலுள்ள அலுவலரும் அல்லது பணியாளரும் தமக்குக் கீழ் உள்ளவர்களிடமிருந்து விருந்து எதையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

21. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்களுக்கும் பணியாளர் களுக்குமான சங்கம் ஒன்றியம் அல்லது கூட்டிணைப்பில், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளராயிராத ஒருவர் உறுப் பினராக, பதவியாளராக அல்லது ஆதரவாளராக இருந்தால் அந்தச் சங்கத்தில், ஒன்றியத்தில் அல்லது கூட்டிணைப்பில், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும் உறுப்பினராயிருக்கக் கூடாது.

22. அரசினரின் கொள்கை அல்லது செயலைப் பற்றி விவாதிப்பது.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர், மைய அரசினராவது ஒரு மாநில அரசினராவது ஓர் ஊராட்சியாவது ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தினராவது ஒரு நகராட்சி மன்றமாவது பின்பற்றும்

கொள்கையைப் பற்றி அல்லது எடுத்துக் கொண்ட நடவடிக்கையைப் பற்றி பேச்சினாலோ எழுத்தினாலோ மற்றவிதமாகவோ விவாதிக்கவுங்கூடாது. வெளிப்படையாக அல்லது ஒரு கழகத்தின் அல்லது சபையின் கூட்டத்தில் கண்டிக்கவுங்கூடாது, அத்தகைய விவாதம் அல்லது கண்டனத்தில் எவ்விதமாக வேனும் பங்கு கொள்ளவுங்கூடாது.

ஆனால் (1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்களையும் பணியாளர் களையும் மாத்திரம் கொண்ட அல்லது ஒப்புக்கொள்ளப்பட்ட தங்களுடைய சொந்தக் கழகத்தின் தனிப்பட்ட கூட்டமொன்றில், தனித்தனியாக அல்லது பொதுவாக அந்த அலுவலர்களின் அல்லது பணியாளர்களின் சொந்த நலனைப் பாதிக்கிற பொருள்களைப் பற்றிய விவாதங்களில் கலந்து கொள்வதை, அல்லது

(2) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர், மாநில அரசின், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஊராட்சியின் அல்லது நகராட்சி மன்றத்தின் ஏதேனும் கொள்கையை அல்லது நடவடிக்கையை தப்பெண்ணங்களை அகற்றுவதற்காக, தவறான அறிவிப்பைத் திருத்துவதற்காக அல்லது அக்கொள்கையை பயனுறுவிதமாக நிறைவேற்றுவதற்காக, பொதுவான அல்லது தனிப்பட்ட கூட்டங்களில் ஆதரிப்பதையும், விளக்கு வதையும் இவ்விதியில் உள்ளது எதுவும் தடுப்பதாகக் கருதப்படமாட்டாது.

விளக்கம்.—மாநில அரசின் கொள்கையை அல்லது நடவடிக்கையைத் தங்களுக்கு விரும்பத்தக்கதென அல்லது அவசியமெனத் தோன்றக்கூடிய விதத்தில் வெளியிட்டு விளக்கும்படி ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலருக்கு அல்லது பணியாளருக்கு ஆணையிட அந்த அரசினருக்குள்ள அதிகாரத்தை இவ்விதியில் உள்ளது எதுவும் வரையறுப்பதாக அல்லது சுருக்குவதாகப் பொருள் கொள்ளுதல் கூடாது.

23. தனியார் வேலைக்காக விண்ணப்பம் செய்து கொள்வது.—(1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும் ஆணை யாளரின் எழுத்து மூலமான அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், தனியார் வேலைக்காக விண்ணப்பம் செய்து கொள்ளவுங்கூடாது, அத்தகைய வேலையை ஏற்றுக் கொள்ளத் தம் விருப்பத்தைத் தெரிவிக்கவுங்கூடாது.

(2). (அ) தனியார் வேலைக்காக விண்ணப்பம் செய்து கொள்வதற்கான அல்லது அதை ஏற்றுக் கொள்வதற்கான அனுமதி ஓய்வுபெறுதற்கு முந்திய விடுப்பிலிருக்கிற ஒருவருக்குச் சாதாரணமாக வழங்கப்படும். ஆனால் அந்த வேலை இந்தியாவிலுள்ள ஒரு தொழில் நிறுவனத்திலிருந்தால், மேற்படி

அனுமதி வழங்கப்படமாட்டாது. இந்தியாவிலுள்ள ஒரு தொழில் நிறுவனத்தில் தனியார் வேலைக்கு விண்ணப்பம் செய்து கொள்வதற்காக அல்லது அவ்வேலையை ஏற்றுக் கொள்வதற்காக, மிகவும் விதி விலக்கான சூழ்நிலைகளில் மட்டும் அனுமதி வழங்கப்படும். அந்த அலுவலர் அல்லது பணியாளர் தொடர்புள்ள ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணியிலிருந்து உடனே விலகிவிட வேண்டுமென்னும், நிபந்தனைக்குட்பட்டு அவ்வாறு அனுமதி வழங்கப்படலாம்.

(ஆ) தனியார் வேலைக்கு விண்ணப்பம் செய்து கொள்வதற்கான அல்லது அவ்வேலையை ஏற்றுக் கொள்வதற்கான அனுமதி, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் வேறு எந்த அலுவலருக்கும் அல்லது பணியாளருக்கும் வழங்கப்படமாட்டாது, ஆனால் அவர் உரிய காலத்துக்கு முன் பதவி விலகுவதை ஒப்புக்கொண்டால், ஊராட்சி ஒன்றிய மன்றப்பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாதென்று ஆணையாளர் சந்தேகமறத் தெரிந்து கொண்டால் அவ்வாறு அனுமதி வழங்கப்படலாம்.

(3) தனியார் வேலைக்கு விண்ணப்பம் செய்து கொள்வதற்கு அல்லது அவ்வேலையை ஏற்றுக் கொள்வதற்கு அனுமதி மறுக்கப்பெற்ற ஒருவர் ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கீழ்த் தமது பதவியினின்று விலக விரும்பினுல் அந்தப் பணி விலகலைச் சாதாரணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(4) ஓய்வு பெறுவதற்கு முந்திய விடுப்பிலிராத ஒருவர் தனியார் வேலைக்கு விண்ணப்பம் செய்து கொள்ள அல்லது அவ்வேலையை ஏற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டால், அவர் அவ்வேலையை ஒப்புக் கொண்டவுடனே ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கீழ் தமது பதவியினின்றும் விலகி விட வேண்டும்.

பிற்சேர்க்கை அ.

19 டிசம்பர் 31 ஆம் தேதியோடு முடிவடைந்த ஆண்டில்.
என்பவர் பெற்றிருந்த அடைந்த அல்லது மாற்றிய அசையாப்பொருள், அசையாப்பொருளில் உள்ள பாத்தியதை ஆகியவை பற்றிய விவரப்பட்டியல்.

குறிப்பு.—எந்த ஆண்டுக்காக விவர அறிக்கை அனுப்பப்படுகிறதோ அந்த ஆண்டுக்கு முன் எந்தச் சொத்தில் அலுவலர் அல்லது பணியாளர் பாத்தியதை அடைந்திருந்து, அந்த ஆண்டிலும் அந்தப் பாத்தியதையை வைத்திருந்தாரோ அந்த சொத்தை முதலில் காட்டவேண்டும். எந்த சொத்துக்கள் சம்பந்தமான விவகாரங்கள் அந்த ஆண்டில் நடைபெற்றனவோ அந்தச் சொத்துக்களைப் பின்னர் காட்ட வேண்டும்.

1. அலுவரின் அல்லது பணியாளரின் பெயர்.

2. வகிக்கிற அலுவல் பதவி.

3. பணியில் சேர்ந்த தேதி.

4. சொத்தின் தன்மை, அதாவது—

(1) வீடுகள் (அவைகளுடன் தோட்டங்கள் இருக்கின்றனவா இல்லையா என்பதைத் தெரிவிக்கவும்). வீடுகள் எப்படி பயன்படுத்தப்படுகின்றன.

(2) நிலங்கள், உழவுக்காரியங்களுக்காக அல்லது தோட்டங்களாக அல்லது வேறு (எவையேனும்) காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவா?

5. 19 -க்கு முன் அல்லது அவ்வாண்டில் பெறப்பட்டதா ?

6. அவற்றின் உரிமை 19 -ல் கைவிடப்பட்டதா?

நிலம் அல்லது வேறு சொத்து இருக்குமிடம்.

7. கிராமம்.

8. தாலூகா.

9. மாவட்டம்.

10. நில அளவை எண்.

நிலங்களின் பரப்பும் தீர்வையும்—

புன்செய்.

11. பரப்பு.

12. தீர்வை.

நன்செய்

13. பரப்பு.

14. தீர்வை.

15. சர்க்கார் அல்லது இனம்.

16. யாரிடமிருந்து பெறப்பட்டது? அல்லது யாருக்காக அதன் உரிமை கைவிடப்பட்டது ?

17. அது பெறப்பட்ட பிறகு அதன் உரிமை கைவிடப்படுவதற்கு முன் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது ?

18. எப்படி, எதற்காகப் பெறப்பட்டது?

19. ஆவணம் எழுதப்பட்ட ஆண்டு மாதம் நாள்.

20. நிலத்தில் வைத்திருக்கப்படும் உரிமை.

21. நிலத்துக்காகக் கொடுக்கப்பட்ட அல்லது வாங்கப்பட்ட விலை.

22. குறிப்புரை.

என்னும் நான் மனப்பூர்வமாய் உறுதி கூறுவது என்னவென்ருல், இந்த விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதல்லாத வேறு அசையாப்பொருளை அல்லது அசையாப்பொருளில் பயனுள்ள அல்லது மற்ற பாத்தியதையை இக்காலத்தில் நான் என் சொந்தப் பெயரிலாவது வேருெருவர் பெயரிலாவது வைத்திருக்கவுமில்லை. 19 -ல் தான் அடையவுமில்லை. பிறருக்குக் கொடுத்துவிடவுமில்லை

இடம்:
நாள்:

(கையெழுத்து)

(பதவி)

குறிப்பு.—(1) இந்த விவரப்பட்டியலை ஒவ்வோர் ஆண்டிலும் சரியாக சனவரி 15-ம் நாளன்று அனுப்பிவிட வேண்டும்.

(2) இந்த ஆண்டில் புதிதாக அடையப்பட்ட அந்தச் சொத்துக்களுக்கு எந்த விவர அறிக்கை சம்பந்தப்படுகிறதோ அவைகளைச் சிவப்பு மையில் எழுத வேண்டும்.

(3) எந்த அசையாப் பொருள் இவ்வாண்டில் ஓர் அலுவலர் வசமிருந்து நீங்கியிருக்குமோ அதைப்பற்றிய விவரங்களையுங் கூட ஆண்டு விவர அறிக்கையில் எழுத வேண்டும்.

பிறசேர்க்கை ஆ.

ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்களும் பணியாளர்களும் வைத்திருக்கும் அசையாப்பொருளையும், அசையாப்பொருளில் உள்ள பாத்தியதையையும் பற்றிய விவரப்பட்டியல்—

1. அலுவலரின் அல்லது பணியாளரின் பெயர்.
2. பணியில் சேர்ந்த தேதி.
3. வகிக்கும் அலுவல் பதவி.
4. சொத்து உள்ள மாவட்டமும் கோட்டமும்.
5. சொத்து பற்றிய விவரங்கள்.
5. சொத்தின் தன்மை.

6. பரப்பு.

7. தீர்வை

8. யார் பெயரில் பதிவாயிருக்கிறது.

9. எப்போது அடையப்பட்டது, வாரிசுரிமையாகப்பெறப்பட்டது முதலியவை.

10. எப்படி? எதறகாக? அடையப்பட்டது.

11. அந்த சொத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர் அல்லது பணியாளருக்குள்ள பாத்தியதையின் தன்மை.

12. குறிப்புரை.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறை பல்வகை அரசாணை)

(1961 நவம்பர் 28 ஆம் தேதியுள்ள 3162 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை பல்வகை அரசாணை)

73. **ஊராட்சி ஒன்றியப் பணியில் சேர்க்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி கொடுப்பது.**—அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப் படத் தக்க புதிய வீட்டு வாடகைப்படி வீதங்களை நிச்சயித்து, 1960 ஜூலை 11 ஆம் தேதியுள்ள 711 ஆம் எண் நிதித்துறை அரசாணையில் ஆணைகள் பிறப் பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசாணையின்படி எல்லா நகராட்சிகள், எல்லாத் தாலுக்காத்தலைமையிடங்கள், எல்லாக் கோட்டத் தலைமையிடங்கள், சில குறிப்பிட்ட தனிப்பரப்புகள் ஆகியவைகளிலுள்ள அரசுப் பணியாளர் களுக்கு வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படத்தக்கதாகும். ஊராட்சி ஒன்றியப் பணிவர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் அதே பரப்புகளில் வேலை செய்பவர்களுமான பணியாளர்களுக்கும் அதே சலுகையை அளிப்பது அவசிய மென அரசினர் கருதுகிறார்கள். அவ்வண்ணமே பின்வரும் ஆணைகள் பிறப்பிக்கப் படுகின்றன.

2. 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 57 (3) பிரிவின்படி அரசினர் கட்டளையிடுவது என்னவென்றால், ஊராட்சி ஒன்றியங் களில் பணிசெய்பவர்களும், ஊராட்சி ஒன்றிய நிதிகளிலிருந்து சம்பளம் கொடுக்கப் பெறுபவர்களும், நகராட்சிகளிலும் தாலுகாத் தலைமை இடங் களிலும் வருவாய்த்துறைக் கோட்டங்களின் தலைமை இடங்களிலும் முதலிற் காட்டப்பட்ட அரசாணையில் சொல்லப்பட்டுள்ள தனிப்பரப்புகளிலும் தலைமை யிட அலுவலகங்கள் பெற்றுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் தலைமை இடங்களில் பணியாற்றுகிறவர்களுமான எல்லாருக்கும் வீட்டு வாடகைப்படி கொடுக்கப்

படத்தக்கதாகும் (1960 ஜூலை 11-ஆம் தேதியுள்ள 711-ஆம் எண் நிதித் துறை அரசாணை) கொடுக்கப்படத் தக்கபடி, வீதங்கள் 1960 ஜூலை 11-ஆம் தேதியுள்ள 711-ஆம் எண் நிதித்துறை அரசாணையில் கண்டு 1961 பெப்ரவரி 24-ஆம் தேதியுள்ள 291-ஆம் எண் நிதித்துறை அரசாணையினால் திருத்தப்பட்டபடியுள்ள வகைப்பாட்டை யொட்டி அந்தப் பரப்புகளுக்குப் பொருந்துகிற வீதங்களாகும்.

(3) பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அந்தப் படி கொடுக்கப்படத் தக்கதாகும் :—

(அ) ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படும் தேதி, அல்லது ஊராட்சி ஒன்றியத்தில் தலைமையிடத்திலே அதில் வேலைக்கமர்ந்த தேதி ஆகியவற்றில் எது பிந்தியதாயிருக்கிறதோ, அது முதற்கொண்டு, படி கொடுக்கப்படத் தக்கதாகும்.

(ஆ) ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் விஷயத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்ட தேதி அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடத்திலே அதில் வேலைக்கமர்ந்த தேதி ஆகியவற்றில் எது பிந்தியதாயிருக்கிறதோ அது முதற்கொண்டு சென்ற காலம் உட்பட அமலில் உள்ளதாக இந்தப் படி கொடுக்கப்படத் தக்கதாகும்.

(இ) ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிட எல்லைகளுக்குள் பணியாற்றுபவர்கள் உள்ளபடி எங்கே குடியிருந்தாலும் அவர்களுக்கு இந்தப் படி கொடுக்கப்படத் தக்கதாகும்.

(ஈ) இலவச விடுதிகள் பெற்றுள்ள பணியாளர்கள் இந்தப் படியைப் பெறத் தகுதி உள்ளவர்களாக மாட்டார்கள் :—

(உ) பின்வரும் வகைகளைச் சேர்ந்த பணியாளர்கள் இந்தப் படியைப் பெறத் தகுதி உள்ளவர்களாக மாட்டார்கள் :—

(i) சில்லறை நிதியிலிருந்து சம்பளம் கொடுக்கப்பெறும் குற்றேவலர்கள் (துப்புரவுப்பணியாளர்கள் தவிர).

(ii) இலவசமாகவோ பெயரளவான வாடகைக்கோ விடுதிகள் கொடுக்கப்பெறும் துப்புரவுப் பணியாளர்கள்.

(iii) தற்செயல் பணியாளர்களாக எப்போதோ ஒரு சமயம் வேலைக்கமர்த்திக் கொள்ளப்படுகிற துப்புரவுப் பணியாளர்கள்.

(iv) பணியாட்கள் பெயர் கண்டுள்ள வருகைப் பட்டியல்களை யொட்டி சம்பளம் கொடுக்கப்பெறும் சிப்பந்தி.

(v) வேலை நிதியில் ஊதியம் பெறுபவர்கள்.

(vi) படி வழங்குவதற்குப் பிடிக்கும் செலவு முழுவதையும் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களின் நிதிகளிலிருந்து கொடுக்க வேண்டும். இந்தப் படி வழங்குவதனால் பற்றுக் குறை ஏற்பட்டால் அதை ஈடு பண்ணுவதற்காக அரசினர் கொடை எதையும் வழங்க மாட்டார்கள்.

(1961 மார்ச் 28-ஆம் தேதியுள்ள 942-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

74. **ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களின் மந்தணக் கோப்புகளில் எழுதுவது.**—வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ஆகியோரின் மந்தணக் கோப்புகளில் எழுதி, அவற்றைக் கூராய்வு செய்து வைத்துவரும் பிரச்சினையை அரசினர் ஆய்ந்து பார்த்துள்ளார்கள். இது பற்றிய முந்திய ஆணைகளை எல்லாம் ஒதுக்கி அவைகளுக்குப் பதிலாக அரசினர் கட்டளையிடுவது என்னவென்றால், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்/ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ஆகியோரின் மந்தணக் கோப்புகளில் எழுதி, அவற்றைக் கூராய்வு செய்து வைத்து வருவது சம்பந்தமாக அடியிற் கண்ட நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் :—

(1) மந்தண அறிக்கைகளை ஆண்டுதோறும், டிசம்பர் 31-ஆம் தேதியோடு முடிவாகும் கால அளவுக்காக எழுத வேண்டும்.

(2) வட்டார வளர்ச்சி அலுவலர்கள்/ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ஆகியோரைப்பற்றி சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளர்கள் மந்தண அறிக்கைகளை எழுதி, அவற்றைத் துணை வளர்ச்சி ஆணையாளருக்கு ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர் மூலமாகவும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர் மூலமாகவும் அனுப்ப வேண்டும்.

(3) மாவட்ட வேளாண்மை அலுவலர்கள், மாவட்டக் கால்நடைப் பராமரிப்பு அலுவலர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர்கள் முதலியவர்களைப் போன்ற மாவட்டத் துறைத் தலைவர்கள் அவசியமானால், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்/ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ஆகியோரின் வேலையைப் பற்றியும் நடத்தையைப் பற்றியும் மாவட்ட ஆட்சியாளருக்குத் தனியாக அறிவிக்கலாம்.

(4) தலைவரிடமிருந்து பெற்றுக்கொண்ட மந்தண அறிக்கைகளை மாவட்ட ஆட்சியாளர் கூட்டு வளர்ச்சி ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். அந்த அறிக்கைகளை அனுப்புகையில் அவர் தாம் அவசியமெனக் கருதினால் மேலே (3) இனத்தில் குறிப்பிட்டுள்ள மாவட்டத் தலைவர்களிடமிருந்து வந்து சேர்ந்த அறிக்கைகளைப் பற்றி ஆலோசித்த பிறகு தமது சொந்தக் குறிப்புகளை எழுதிச் சேர்க்கலாம்.

(5) மந்தண அறிக்கையில் ஒரேவொரு படியைக் கூட்டு வளர்ச்சி ஆணையாளருக்கு அனுப்பினுல் போதும். கோட்ட ஆட்சியாளர்களாவது, மாவட்ட ஆட்சியாளர்களாவது, தலைவர்களாவது கோப்பின் இரண்டாம் படி ஒன்றை வைத்திருக்க வேண்டியதில்லை.

(6) வட்டார வளர்ச்சி அலுவலர்கள்—ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ஆகியோரின் முக்கியமான மந்தணக் கோப்புகளைக் கூட்டு வளர்ச்சி ஆணையாளர் வைத்து வருவார்.

(7) கூட்டு வளர்ச்சி ஆணையாளர் மந்தண அறிக்கைகளைக் கூராய்வு செய்யும் அதிகாரியாக இருப்பார். எதிரிடையான குறிப்புரைகள் எவையேனும் இருந்தால் அவற்றை அவர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ஆகியவர்களுக்கு அனுப்பி அவர்களுடைய ஏற்றுக்கோடல்களைப் பெற்றுக்கொண்டு அவற்றை மந்தணக் கோப்புகளுடன் சேர்த்துவிட வேண்டும்.

(1961 நவம்பர் 13-ஆம் தேதியுள்ள 3040-ஆம் எண் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

75. ஊராட்சி ஒன்றியங்களின் (பள்ளி ஆசிரியர்கள் அல்லாத வேறு) பணியாளர்களின் கழகங்களை அமைப்பது பற்றியும் அங்கீகரிப்பது பற்றியும் விளக்க உரைகளைப் பிறப்பிக்கும் பிரச்சினையைப் பற்றி அரசினர் ஆய்ந்து பார்த்திருக்கிருர்கள். 1948 செப்டம்பர் 8-ஆம் தேதியுள்ள 1671-ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட விளக்க உரைகளை இது சம்பந்தமாகக் கவனித்துப் படிக்கும்படி சம்பந்தப்பட்ட எல்லாரும் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள். உள்ளாட்சி கழகங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவைகளின் பணியாளர்களின் கழகங்களை அமைப்பதை, அந்த விளக்க உரைகள் முறைப்படுத்துகின்றன. மாவட்டக் கழகங்களின் பணியாளர்களுக்கு இந்த விளக்க உரைகள் பொருந்துகின்றன. 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 197 பிரிவையும் கவனித்துப் படிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதனுல் தெளிவுபடுத்தப்படுவது என்னவென்ருல், 1948 செப்டம்பர் 8-ஆம் தேதியுள்ள 1961-ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையினுல் பிறப்பிக்கப்பட்ட விளக்க உரைகள் (தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் தவிர) ஊராட்சி ஒன்றிய நிதிகளிலிருந்து சம்பளம் கொடுக்கப்பெறும் ஊராட்சி ஒன்றியங்களின் (வேறு) பணியாளர்கள் எல்லோருக்குங்கூடப் பொருந்தும்.

(1961 மே 17-ஆம் தேதியுள்ள 53209/74, 64-1-ஆம் எண் குறிப்பாணை.)

(திருத்தப்பட்ட படியிருக்கிற 1948 செப்டம்பர் 8-ஆம் தேதியுள்ள 1671-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணையின்படி.)

76. 1945 அக்டோபர் 31-ஆம் தேதியுள்ள 2366-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணையில் பிறந்து 1947 அக்டோபர் 17-ஆம் தேதியுள்ள 1760-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணையினுல் திருத்தப்பட்ட படியுள்ள உத்தரவு களை ரத்து செய்து அவைகளுக்குப் பதிலாக (பள்ளி ஆசிரியர்கள் தவிர) உள்ளாட்சிக் கழகங்கள்—நகராட்சி மன்றங்கள் ஆகியவைகளின் (வேறு) பணியாளர்களின் கழகங்களை அமைப்பதற்கும் அங்கீகரிப்பதற்குமான திருத்தி யமைக்கப்பட்ட விளக்க உரைகள் இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சிக் கழகங்கள்—நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் நிர்வாக அதிகாரிகள் இவ்விளக்க உரைகளைத் தங்கள் பணியாளர்களின் கவனத்துக்குக் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

பிற்சேர்க்கை.

(தல ஆட்சிக் கழக நகராட்சிப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் தவிர) உள்ளாட்சிக் கழகங்களின் கீழும் நகராட்சி மன்றங்களின் கீழும் உள்ள (வேறு) பணியாளர்களின் கழகங்களை அங்கீகரிப்பதற்காக விளக்க உரைகள்.—

1. (அ) ஒரு நகராட்சி மன்றம்—ஊராட்சிக் கழகம் அல்லது மாவட்டக் கழகத்தின்கீழ் உள்ள குறிப்பிட்ட ஒரு வகையைச் சேர்ந்த பணியாளர் களுக்காக, தனியாய் அல்லது

(ஆ) நகராட்சி மன்றம், ஊராட்சிக் கழகம், அல்லது மாவட்டக் கழகம் ஒவ்வொன்றின்கீழும் பணி செய்கிற மேல் நிலைப்பணியாளர்கள் எல்லாருக்கு மாக அல்லது

(இ) எந்த மாவட்டத்திலேனும், நகராட்சி மன்றங்கள் ஊராட்சிக் கழகம்—மாவட்டக் கழகம் ஆகியவைகளின் குறிப்பிட்ட ஒரு வகையைச் சேர்ந்த பணியாளர்களுக்குக் கூட்டாகக்—

கழகம் அமைக்கலாம்.

ஒரு மாவட்டத்துக்கு மேற்பட்ட பரப்பில் உறுப்பினர்களையுடைய ஒரு கழகத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்படமாட்டாது. தொழில் பணியாளர்களின் கழகம், இந்தியத் தொழிற் சங்கங்கள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட வேண்டும்.

(2) அந்தக் கழகத்தின் நோக்கம் எதுவாயிருக்க வேண்டுமென்றுல், அதில் இருக்கிற வகையைச் சேர்ந்த பணியாளர்களின் ஊழிய நிலைமை சம்பந்தமாக அவர்களுடைய தேவைகளை அவர்கள் உள்ளாட்சிக் கழகங்களுக்காவது

அரசினருக்காவது அரசாங்க அலுவலர்களுக்காவது தெரிவிப்பது சாத்திய மாயிருக்கும்படி செய்வதேயாகும். அரசினராவது ஓர் அரசாங்க அலுவல ராவது எந்த உள்ளாட்சி அதிகார சபை அல்லது சபைகளிலிருந்து அதன் உறுப்பினர்கள் வருகிறார்களோ அந்தச் சபையாவது, சபைகளாவது அதன் ஆலோசனைக்கு அனுப்புகிற விஷயங்களைப் பற்றிக்கூட அது தன் கருத்துக் களைத் தெரிவிக்கலாம்.

(3) அந்தக் கடிதம் எந்த வகைக்குப் பிரதிநிதியாயிருக்கிறதோ அந்த வகையில் உள்ளபடி வேலை செய்கிற பணியாளர் ஒவ்வொருவரும் அல்லது ஒரு உள்ளாட்சிக் கழகத்தின் பணியிலிருந்து கௌரவமாக விலகி ஓய்வு பெற்றிருக் கிற அந்த வகையைச் சேர்ந்த பணியாளர் அக்கழகத்தில் உறுப்பினராயிருக்க லாம். வேறு எவரையும் அக்கழகத்தின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளக் கூடாது. உள்ளாட்சிக் கழகத்தில் உள்ளபடி பணி செய்யாதவர்கள் அக்கழகத் தில் பதவி வகிப்பவர்களாக இருக்கக்கூடாது.

(4). அக்கழகம் தன் கூட்டங்களில் எதிலேனும் அரசியல் தொடர்பான வைகளை விவாதிக்கக்கூடாது, அல்லது அரசியல் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளக் கூடாது, அது அரசியல் நிதி ஒன்றை வைத்து வரவும் கூடாது.

(5). கழகத்தின் நடவடிக்கைகளை நடத்துவது, அதன் பதவியாளர்களின் அதிகாரங்கள், கடமைகள், அலுவல்கள் ஆகியவை தொடர்பான எல்லா விஷயங்களைப் பற்றியும் இந்த ஒழுங்கு முறை விதிகளுக்குப் பொருத்த மற்றவையாயிராத ஒழுங்கு முறை விதிகளைத் தனக்கென்று செய்து கொள்ளலாம். அத்தகைய ஒழுங்கு முறை விதிகளுக்குப் படி ஒன்றை அனுப்பும்படி அரசினர் கேட்டால், அதை அவர்களுக்கு அனுப்ப வேண்டும்; அந்த ஒழுங்கு விதிகள் அரசினர் குறிப்பிடக் கூடிய திருத்தங்களுக்குட் பட்டவையாகும்.

(6). கழகத்தின் உறுப்பினர்களும் பதவியாளர்களும் மட்டும் அதன் கூட்டங்களுக்கு வரலாம், ஆனால் கழகத்தின் ஆண்டு விழாவில் அல்லது வேறு தனிக்கொண்டாட்டங்களில் சொற்பொழிவாற்ற அல்லது கலந்து கொள்ள வேறொருவர் அழைக்கப்பட்டிருந்தால் அவர் வந்திருப்பதற்கு அனுமதி கொடுக்கலாம். கழகமானது அரசினரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல் அதன் செயல் முறைகளின்போது பத்திரிகைக்காரர்கள் வந்திருக்க அனுமதி கொடுக்கக்கூடாது.

(7). கழகமானது சாதாரணமாக விடுமுறை நாட்களில் தன் திட்டங்களை நடத்த வேண்டும். அவ்வாறு நடத்த இயலாத சந்தர்ப்பங்களில், சம்பந்தப் பட்ட பணியாளருக்கு விடுப்பு வழங்கத் தகுதிபெற்றிருக்கிற அதிகாரியானவர்,

கழகத்தின் முறைப்படி கூட்டப்பட்ட கூட்டங்களுக்கு வந்திருக்க கழகத்தின் உறுப்பினராயிருக்கிற அல்லது பதவியாளராயிருக்கிற பணியாளருக்குச் சாத்தியமாயிருக்கிற வரையில் தற்செயல்விடுப்பு வழங்குவார். அவ்வாறு விடுப்பு வழங்குவதானது, பணியின் அவசரத் தேவைகளுக்கு உட்பட்டதாகும், அவசரத் தேவைகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்பதைத் தீர்மானிக்க மேலே குறிக்கப்பட்ட அதிகாரி மட்டுமே தகுதி உடையவராவார்.

8. கழகத்தின் ஒவ்வொரு கூட்டமும் நடந்த பிறகு பத்து நாட்களுக்குள் அக்கூட்டத்தின் நடவடிக்கைகளுக்குப் படி ஒன்றை சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக் கழகத்தின் அல்லது கழகங்களின் நிர்வாக அதிகாரிக்கு அனுப்ப வேண்டும். அவர் அவற்றைச் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக் கழகங்களுக்கு முன் வைக்க வேண்டும். அவர்கள் அவைகளைப்பற்றி ஆலோசனை செய்து, அவசியமானல் தாங்கள் தகுதியெனக் கருதுகிற பரிந்துரையுடன் அவற்றை அரசினருக்காவது அரசாங்க அலுவலர்களுக்காவது அனுப்புவார்கள். அதன் கணக்குகளின் ஆண்டு விவரப்பட்டியலுக்கு ஒரு படியையும், அதன் நடவடிக்கைகள் பற்றிய சுருக்கமான அறிக்கையும், அதன் உறுப்பினர்கள் பதவியாளர்கள் ஆகியோரின் பட்டியலையும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக் கழகத்தின் அல்லது கழகங்களின் நிருவாக அதிகாரிக்கு அவர்கள் குறிப்பிடக் கூடிய தேதிகளில் அனுப்ப வேண்டும். ஆட்கள் மாறினல் அதையுங் கூட, அவ்வாறு மாறியவுடனே, சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக் கழகத்துக்கு அல்லது கழகங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

9. உள்ளாட்சிக் கழகங்களின் பணியாளர்கள் மனுக்களையும் கருணை விண்ணப்பங்களையும் அனுப்புவதற்குச் சம்பந்தப்பட்ட விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே அத்தகைய கழகங்களின் முறையீடுகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக் கழகத்தின் நிருவாக அதிகாரியினிடம், தூதுக்குழு மூலமாய் வாய்மொழியாக அல்லது எழுத்து மூலமாகத் தெரிவித்துக் கொள்ளலாம்.

ஆனல், (அ) அரசினருக்குச் செய்து கொள்ளப்படும் முறையீடுகளை அரசினர் குறிப்பிடக்கூடிய வாயிலாக மட்டுமே அனுப்ப வேண்டும்.

(ஆ) அவைகள் ஒரு மனுவின் வடிவத்திலிருக்க வேண்டும். ஒவ்வொரு முறையீட்டின் ஆதாரங்களையும் சந்தர்ப்பங்களையும் அவைகளில் கண்டெழுத வேண்டும்.

(இ) அரசினரால் நியமிக்கப்படக்கூடிய அதிகாரியிடம் மட்டுமே முறையீடு செய்து கொள்ள வேண்டும்.

(ஈ) அந்தக் கழகம் பிரதிநிதியாயிருக்கிற வகைக்குரிய பொதுநலனு யிருக்கிற அல்லது பொது நலனுதற்குரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிற ஒரு செயல் சம்பந்தமாகவன்றி மற்றப்படி, முறையீடு எதுவும் பெற்றுக் கொள்ளப் படவுமாட்டாது, தூதுக்குழு எதுவும் வரவேற்கப்படவுமாட்டாது.

அதிகார முறைப்படி அங்கீகாரம் அளிக்கப்பெற்றிராத கழகங் களிலிருந்து வரும் முறையீடுகள் கவனிக்கப்படமாட்டா.

ஒரு கழகத்தினிடமிருந்து தூதுக்குழு ஒன்றை வரவேற்பதா வேண்டாமா என பொருந்துமாறு அறிந்து தீர்மானிக்க அரசினருக்காவது, ஒரு துறையின் தலைவருக்காவது, சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக் கழகத்தின் அல்லது கழகங் களின் நிருவாக அதிகாரிக்காவது உள்ள அதிகாரத்தை, இவ்விளக்க உரைகளில் உள்ளது எதுவும் பாதிக்காது.

10. உள்ளாட்சிக் கழகங்களின் பணியாளர்கள் தங்கள் தேவைகளையும் குறைகளையும் உள்ளாட்சிக் கழகங்களுக்கும் அரசினருக்கும் எடுத்துச் சொல்வது சாத்தியமாயிருக்கும்படி செய்வதற்காகத்தான் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் அத்தேவைகளையும் குறைகளையும் எடுத்துச் சொல்வதற்கு வேறுமுறைகளைக் கையாண்டால் அங்கீகாரம் மறுக்கப்படலாம் அல்லது ரத்து செய்யப்படலாம்.

குறிப்பு.—இந்த விளக்க உரையின் காரியத்துக்காக, "வேறுமுறைகள்" என்பதில் அரசுக்கு எதிர்ப்பான பிரச்சாரம், அரசுப் பகையான உணர்ச்சியைக் காட்டுவது, பத்திரிகைகளில் வெளியிடுவது, குறைகளை எடுத்துச்சொல்வதற்காக அரசியல் கட்சிகளுடையவும் மற்றக்கட்சிகளுடையவுமான உதவியை ஈடு படுத்துவது அல்லது வேண்டுவது வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அச்சுறுத்துவது என்பதையும் அடங்கும்.

11. கழகங்களை அங்கீகரிப்பதற்கான விண்ணப்பத்தை உள்ளாட்சி அதிகார சபை அல்லது சபைகள் மூலமாகவும் சம்பந்தப்பட்ட அரசுத்துறை களின் தலைவர் மூலமாகவும் அரசினருக்கு அனுப்ப வேண்டும்; அப்போது 5 ஆவது விளக்க உரையில் குறிப்பிட்டிருக்கிற, கழகத்தின் ஒழுங்குமுறை விதிகளுக்கு ஒரு படியையும் அனுப்ப வேண்டும்.

12. கழகமானது தன் உறுப்பினர்களின் குறைகளை எடுத்துச் சொல்வ தற்கு ஓர் அரசியல் கட்சியின் அல்லது அமைப்பின் உதவியை நாடக்கூடாது.

13. கழகமானது, தனது ஒழுங்குமுறை விதிகளில் பின்வரும் ஒழுங்கு முறை விதியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

" கழகத்தின் நோக்கங்களில் எதையேனும் எய்தப்பெறுவதற்கு உள்ளாட்சிக் கழகத்துக்கு முரணுக வேலை நிறுத்தமோ வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அச்சுறுத்துவதோ ஒரு சாதனமாக ஒரு போதும் கையாளப்படமாட்டாது."

14. இந்த விளக்க உரைகளின்படி அரசினருக்குள்ள அதிகாரங்களில் எதையேனும் அவர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்ட ஓர் அதிகாரியினிடம் ஒப்படைக்கலாம்.

(1948 செப்டம்பர் 8-ம் தேதியுள்ள 1671-ம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1951 மார்ச் 27-ம் தேதியுள்ள 559-ம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

34. **ஊராட்சி ஒன்றியக்குழுப் பணித்தொகுதியின் உரிமைக் கோரிக்கைப் பண நிலுவைகளைக் கொடுப்பது.**—1. (1) நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சம்பளம், படிகள் அல்லது சம்பள உயர்வுகள் ஆகியவற்றின் நிலுவைகளுக்காக, ஓர் ஊராட்சி ஒன்றியக் குழுவின் அலுவலர் அல்லது பணியாளர் செய்து கொள்ளும் உரிமைக் கோரிக்கையை அதற்காகப் பணம் கொடுப்பதற்கு முன் ஆணையாளர்—

(i) ஆறு மாதத்துக்கு மேற்பட்டு இரண்டாண்டுகளுக்கு மேற்படாத காலத்துக்குச் சம்பந்தப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் பற்றி ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஒப்பளிப்பையும்,

(ii) இரண்டாண்டுக்கு மேற்பட்ட காலத்துக்குச் சம்பந்தப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் பற்றி, ஊராட்சி ஒன்றியக் குழு மாவட்ட ஆட்சியாளர் ஆகியோரின் ஒப்பளிப்பையும் பெற்றுக் கொண்டு ஆய்ந்து பார்க்க வேண்டும்.

(2) பயணப்படிக்கான கோரிக்கை எந்தப் பயணத்துக்குச் சம்பந்தப் படுகிறதோ அது முடிந்த தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குப் பிறகு செய்து கொள்ளப்பட்டால் அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது. எந்தப் பயணத்துக்காகப் பயணப்படி கேட்கப்படுகிறதோ அது முடிந்த தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குப் பிறகு கொடுக்கப்படும் பட்டியல்களில் மேலொப்பமிட மேலொப்பமிடும் அலுவலர்கள் மறுத்துவிட வேண்டும்.

2. 1 ஆவது விதியின்படி உத்தரவான நிலுவைக் கோரிக்கைத் தொகை யானது, குறைவாகத் தொகை கொடுக்கப்பட்டதெனக் கண்டுபிடித்த தேதிக்கு அடுத்து முந்திய ஓராண்டுக் காலம் சம்பந்தமாகக் கோரிக்கையின்படி உள்ளபடி

சேர வேண்டியதெனத் தெரியவரும் தொகைக்கு மேற்படக்கூடாது. குறிப்பிட்ட எதிலேனும் அதிகச் சலுகை காட்டுவதற்குத் தனிக் காரணங்கள் இருக்கின்றன எனக் கருதப்பட்டால், ஆணையாளர் முதற்கண்ட உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறைத்தலைமை ஆராய்வாளருடன் கலந்தாலோசித்து பிறகு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைத் தலைமை ஆராய்வாளர் பின்வருமாறு ஆலோசனை கூறினால், ஓர் ஆண்டுக்கு மேற்பட்ட காலத்துக்கான நிலுவைகளைக் கொடுப்பதற்கு மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பைப் பெற வேண்டும்.

ஆனால் ஒவ்வொன்றிலும் இருபத்தைந்து ரூபாய்க்கு மேற்படாத தொகை உள்ளடங்கிய நிலுவைக் கோரிக்கைகள் விஷயத்தில் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறைத் தலைமை ஆராய்வாளருடன் கலந்தாலோசிப்பது அவசியமாகமாட்டாது.

விளக்கம்.—இவ்விதியின் காரியத்துக்காக, குறைவாகத் தொகை கொடுக்கப்பட்டதெனக் கண்டுபிடிக்கப்படும் தேதியானது, குறைவாகத் தொகை கொடுக்கப்பட்டதென ஆணையாளர் கண்டுபிடித்த அல்லது அவரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட தேதியாகும் அல்லது அது தணிக்கையின் போது முதலில் கண்டு பிடிக்கப்பட்டால், தணிக்கைத்துறையினர் கண்டு பிடித்த தேதியாகும். சென்ற காலம் உட்பட அமலில் இருக்கும்படி பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையின் விளைவாக எற்படும் நிலுவைக்கோரிக்கை, அந்த ஆணை பிறப்பிக்கப்படுகிற வரையில் எழுவதில்லை, ஆகையால் அந்த ஆணையின் தேதிக்கு முந்திய காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட கோரிக்கை என அதைக் கருதலாகாது. சென்ற காலம் உட்பட அமலில் இருக்கும்படிப் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணை இந்த விளக்கத்தின் காரியங்களுக்காக குறிப்பிட்ட விஷயத்தின் சந்தர்ப்பங்களில், முன்னதாகப் பிறப்பிக்கப் பட்டிருந்திருக்க முடியாத அல்லது ஆலோசனை செய்யப்படுகிற வரையில் வேண்டுமென்றே நிறுத்தி வைக்கப்பட்ட ஆணையென்று கருதப்படும்.

3. 1 ஆவது விதியில் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் பிறரிடம் ஒப்படைக்கக் கூடாது.

(1960 அக்டோபர் 8-ம் தேதியுள்ள 1677-ம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

77. உதவி அலுவலர்களுக்கு ஊதிய உயர்வுகள் அளிப்பதற்கான ஒப்பளிப்பு.—1954 ஆகஸ்ட் 9-ம் தேதியுள்ள 1310-ம் எண் பொது (கிராம முன்னேற்றத் திட்டங்கள்) துறைப்பல்வகை அரசாணையில் உதவி

அலுவலர்கள் உட்பட, வட்டாரங்களில் பணியாற்றுகிற அரசிதழ் பதிவு பெருச் சிப்பந்திகள் எல்லாருக்கும் ஊதிய உயர்வுகளுக்கு ஒப்பளிப்பு வழங்க, வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2. 1969 ஜூலை 28-ம் தேதியுள்ள 2095-ம் எண் பொது (கிராம முன்னேற்றத் திட்டங்கள்) துறைப் பல்வகை அரசாணையில், பின்வருமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது :—அரசிதழ் பதிவு பெருத வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணி செய்ய அமர்த்தப்பெற்றுள்ள வட்டாரங் களில் வேலைசெய்யும் அரசிதழ் பதிவு பெருத நிலைப் பணியாளர்கள் விஷயத்தில் அவர்களுடைய ஊதிய உயர்வுகளுக்குக் கோட்ட ஆட்சியாளர்கள் ஒப்பளிப்பு வழங்குவார்கள், அரசிதழ்ப் பதிவு பெற்று வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணி செய்ய அமர்த்தப்பெற்றுள்ள வட்டாரங்களில் வேலை செய்யும் அரசிதழ்ப் பதிவு பெருத நிலைப் பணியாளர்கள் பொருத்த மட்டில் அவர்களுடைய ஊதிய உயர்வுகளுக்கு அரசிதழ்ப் பதிவு பெற்ற வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முன்போலவே ஒப்பளிப்பு வழங்குவார்கள். 1951 செப்டம்பர் 3-ம் தேதியுள்ள 2656-ம் எண் உணவு வேளாண்மைத்துறைப் பல்வகை அரசாணையில் உணவு வேளாண்மைத்துறையிலே பின்வருமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது : அதாவது :—

(உழவு) உதவி அலுவலர்களுக்குரிய ஊதிய உயர்வுகளுக்கு மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் ஒப்பளிப்பு வழங்குவார்கள்.

3. உதவி அலுவலர்கள் வேறு தொழில் நுட்பத் துறைகளின் பணியாளர் தொகுதி அமைப்புகளைச் சேர்ந்தவர்களாயிருக்கிறபடியால் அவர்களுடைய ஊதிய உயர்வுகளுக்குச் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலர்களே ஒப்பளிப்பு வழங்குவது, நல்லதென்று இப்போது கருதப்படுகிறது. அவ்வண்ணமே அரசினர் கட்டளையிடுவது என்னவென்ருல், வட்டாரங்களில் வேலைசெய்கிற உதவி அலுவலர்களுக்கான ஊதிய உயர்வுகளுக்கு அந்தந்த மாவட்ட அலுவலர்கள் ஒப்பளிப்பு வழங்க வேண்டும்.

(1960 பிப்ரவரி 26-ம் தேதியுள்ள 144-ம் எண் கிராம முன்னேற்றத் துறை அரசாணை.)

78. ஊராட்சிகளின் உதவி அலுவலர்களுக்குரிய ஊதிய உயர்வுகளுக்கு ஒப்பளிப்பு.—ஊராட்சிகளின் உதவி அலுவலர்களுக்குரிய ஊதிய உயர்வுகளுக்கு அவர்கள் யாருடைய அதிகார வரம்புக்குட்பட்டுப் பணியாற்றுகிருர்களோ

அந்தக் கோட்ட ஆட்சியாளர்கள் இனிமேல் ஒப்பளிப்பு வழங்கவேண்டுமென அரசினர் கட்டளையிடுகிருர்கள்.

(1962 பெப்ரவரி 13-ம் தேதியுள்ள 2714-ம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித்துறை அரசாணை.)

35. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் பணியாளர் தொகுதி சம்பந்தமாக விதி அல்லது ஒழுங்குமுறையைத் தளர்த்த அரசினருக்குள்ள அதிகாரம்.—ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் விஷயத்தில் அல்லது ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணியில் நியமிக்கப்படுவதற்கான ஒரு வேட்பாளர் விஷயத்தில் நியாயமும் நேர்மையும் எனத் தங்களுக்குத் தோற்றக்கூடிய விதத்தில் விவகரிக்க அரசினருக்குள்ள அதிகாரத்தை வரையறுப்பதாக அல்லது சுருக்குவதாக (1958-ஆம் ஆண்டின் 35-வது தமிழ் நாடு சட்டமாகிய) 1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது ஒழுங்குமுறை எதற்கும் பொருள் கொள்ளுதல் கூடாது.

ஆனல் ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அத்தகைய ஓர் அலுவலர் அல்லது பணியாளர் விஷயத்துக்காவது, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணிக்கு நியமிக்கப்படுவதற்கான ஒரு வேட்பாளர் விஷயத்துக்காவது, அத்தகைய ஒரு விதி அல்லது ஒழுங்குமுறை பொருந்துவதாயிருந்தால் சந்தர்ப்பத்துக்கேற்ப, அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அத்தகைய அலுவலர் அல்லது பணியாளருக்கு, அல்லது அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணிக்கு நியமிக்கப்படுவதற்கான வேட்பாளருக்கு அந்த விதியில் அல்லது ஒழுங்கு முறையில் சொல்லப்பட்டிருப்பதை விட எவ்விதமாகவேனும் குறைவான அனுகூலத்துடன் அவ்விஷயத்தை விவகரிக்கக் கூடாது.

(1960-ம் ஆண்டு அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677-ஆம் எண் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

36. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர்களையும் பணியாளர்களையும் மாற்றுவது.—1. ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் தங்கள் நிதிகளிலிருந்து சம்பளம் கொடுக்கப்பெறும் தங்கள் அலுவலர்களிலும் பணியாளர்களிலும் எவராகிலும், தங்கள் பணியை நிலையாக விட்டு நீங்கி அதே மாவட்டத்துக்குள் வேருெரு ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணியில் சேர அனுமதி கொடுக்கலாம்.

ஆனல் எந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணியில் அந்த அலுவலர் அல்லது பணியாளர் சேரக் கருதுகிருரோ அந்தக் குழுவினர், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் ஒப்புக் கொள்ளக்கூடிய வரையறைகளுக்கும்

நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, அந்த அலுவலரை அல்லது பணியாளரைத் தங்கள் பணியில் சேர்த்துக் கொள்ள விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும்: அந்த வரையறைகளிலும் நிபந்தனைகளிலும், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கீழ் அந்த அலுவலரின் அல்லது பணியாளரின் முந்திய பணியின்போது அவருக்குச் சேர்ந்து வந்திருக்கிற ஈட்டிய விடுப்பினையும் வேறு குறிப்பிட்ட நன்மைகளையும், அந்த அலுவலர் அல்லது பணியாளர் சேரக் கருதுகிற ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கீழ் உள்ள பணிக்குக் கொண்டு போவது பற்றிய திட்டங்களும் அடங்கும்.

மேலும், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் சம்பந்தப்பட்ட அலுவலரின் அல்லது பணியாளரின் விருப்பத்தை எழுத்து மூலமாகப் பெற்ற பிறகுதான் அவ்வாறு மாற்ற வேண்டும்.

அல்லாமலும், அவ்வாறு மாற்றும் விஷயத்தில் ஆணைகள் பெறுவதற்காக அதை மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்புவது அவசியமாகமாட்டாது.

2. மேற்படி அலுவலர் அல்லது பணியாளர் எந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணியை விட்டு நீங்குகிருரோ, அந்தக் குழுவினர், அவர் பணியில் சேரப்போகிற ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் 1-ஆவது விதியில் கண்ட உடன்படிக்கையின்படி பொறுப்பு ஏற்க வேண்டிய அந்த அலுவலரின் அல்லது பணியாளரின் விடுப்புக்காலத்தையும் விடுப்புப்படிகளின் தொகையையும் நிச்சயித்து, அக்குழுவினர்க்குத் தெரிவிக்க வேண்டும். அந்த அலுவலர் அல்லது பணியாளர் பணியில் சேரப்போகிற ஊராட்சி ஒன்றிய மன்றத்தினருக்கு அவருடைய பணிப்பதிவேடு அனுப்பப்படுவதற்கு முன், அவருக்கு வரவில் இருக்கிற விடுப்பின் அளவையும் அவர் மாற்றப்படும் தேதியன்று அவருக்குக் கொடுக்கப்படத்தக்க விடுப்புப்படி வீதத்தையும் அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் பொறுப்பு ஏற்றுக் கொண்ட விடுப்புப்படிகளின் மொத்தத் தொகையையும் அப்பதிவேட்டில் எழுத வேண்டும்.

3. அந்த அலுவலர் அல்லது பணியாளர் பணியில் சேருகிற ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் தங்கள் பணி ஒழுங்குமுறை விதிகளின்படி அவருக்குக் கொடுக்கப்படத் தக்க விடுப்பினையும் விடுப்புப்படியையும் வழங்கலாம்; ஆனல், அவர்கள், 2-ஆவது விதியின்படித் தெரிவிக்கப்பட்டதை விட அதிக கால விடுப்புக்காக அல்லது அதிக தொகையுள்ள விடுப்புகளுக்காக, அந்த அலுவலர் அல்லது பணியாளர் பணியைவிட்டு நீங்கின ஊராட்சி ஒன்றிய மன்றத்தினரைப் பொறுப்பாளிகளாக்கக்கூடாது. அந்த அலுவலருக்கு அல்லது பணியாளருக்குச் சேரவேண்டிய விடுப்புப்படிகளை ஈடுசெய்வதற்கு வேண்டியிருக்கக்கூடிய வித்தியாசத்தொகை ஏதேனுமிருந்தால், அதை விடுப்பு வழங்குகிற ஊராட்சி ஒன்றியக்குழுவினர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

4. விடுப்பு வழங்குகிற ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் அந்த அலுவலரின் அல்லது பணியாளரின் விடுப்புப்படிகளை முதலில் தங்கள் நிதியிலிருந்தே கொடுக்க வேண்டும்; அந்த அலுவலர் அல்லது பணியாளர் பணிவிட்டு நீங்கிய ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் கொடுப்பதற்குட்பட்ட விடுப்புப்படிகளின் தொகையை அக்குழுவினரிடமிருந்து வசூலிக்க ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

5. விடுப்பு வழங்குந்தோறும் அவ்வப்போது சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத்தினரிடமிருந்து உள்ளபடி வசூலிக்கப்படும் விடுப்புப்படிகளின் தொகையை அவருடைய பணிப்பதிவேட்டில் எழுத வேண்டும்.

(1962, 1-ஆம் தேதியுள்ள 1051-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணை.)

79. 1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தின் 60 (2) பிரிவில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது, அதாவது; (ஆணையாளர் உட்பட) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர், வேறொரு ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது 1920-ஆம் ஆண்டின் தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஒரு நகராட்சியின் பணிக்குச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத்துடன் அல்லது நகராட்சியுடன் கலந்தாலோசித்த பிறகு மாற்றப்படலாம். ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலரை அல்லது பணியாளரை, வேறொரு ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது இந்த மாநிலத்திலுள்ள ஒரு நகராட்சியின் பணிக்கு மாற்றும் அதிகாரத்தைச் செலுத்த, சென்னையிலுள்ள கூட்டு வளர்ச்சி ஆணையாளருக்கும், ஒரு மாவட்டத்துக்குள் மாற்றல்களுக்குச் சம்பந்தப்படுகிற வரையில் அந்த அதிகாரத்தைச் சென்னையிலுள்ள வளர்ச்சி ஆணையாளரின் கட்டுப்பாட்டுக்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டு, செலுத்த மாவட்ட ஆட்சியாளருக்கும் அரசினர் அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள்.

(1960 சனவரி 12-ஆம் தேதியுள்ள 76-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை)

(1961 பிப்ரவரி 15-ஆம் தேதியுள்ள 28569/ L 2-61-1-ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

80. ஊராட்சி ஒன்றியப் பணித்தொகுதியினருக்குப் பயணப்படியும் முன்பணமும் கொடுப்பது.—அடியிற் கண்ட பிரச்சினைகளைத் தெளிவுபடுத்த வேண்டுமென அரசினர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் :—

(அ) (குற்றேவலர்கள், பணப் பொறுப்பாளர்கள், முதலியவர்களைப் போல்) ஊராட்சி ஒன்றியப் பணியைச் சேர்ந்தவர்களாயிருந்தும், வட்டாரம்

சம்பந்தமான வேலைக்காக நியமித்தனுப்பப்படுகிற பணியாளர்களுக்கு, அவர்கள் நியமித்தனுப்பப்படுகிற காரியம் ஊராட்சி ஒன்றியத்துக்கு நேர்த்தொடர்பள்ளதாயிராவிட்டாலும், ஊராட்சி ஒன்றிய நிதிகளிலிருந்து பயணப்படி கொடுக்கலாமா என்பது.

(ஆ) முன்பு தேசிய வளர்ச்சித் திட்டப் பணியமைப்பின் பாகமாயிருந்தவர்களும் இப்போது ஊராட்சி ஒன்றியப் பணியைச் சேர்ந்தவர்களுமான பணித் தொகுதியினருக்கு அரசாங்க நிதிகளிலிருந்து கொடுக்கப்படும் பண்டிகை முன்பணம் போன்ற முன்பணங்களை எப்படி வசூலிக்க வேண்டுமென்பது.

2. எழுப்பப்பட்ட பிரச்சினைகளைப்பற்றி அரசினர் கவனமாக ஆலோசனை செய்து பார்த்த பிறகு, பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்கள் :—

பிரச்சினை :—(அ) தேசிய வளர்ச்சித் திட்டப் பணியமைப்பைச் சேர்ந்த பணியாளர்களுக்கு அல்லது ஊராட்சி ஒன்றியப் பணியைச் சேர்ந்த பணியாளர்களுக்குப் பயணப்படி முதலியவைகளை, எந்த நிதிகளிலிருந்து மற்றப்படி அவர்களுடைய சம்பளமும் படிகளும் கொடுக்கப்படுகின்றனவோ அந்தந்த நிதிகளிலிருந்து மட்டுமே கொடுக்கவேண்டும். அவர்கள் செய்கிற அலுவல் முறையான குறிப்பிட்ட ஒரு வேலையினம், சந்தர்ப்பத்துக்கேற்ப, வட்டாரத்தின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவல்களுக்கு நேர்முகத் தொடர்புடையதாயில்லை என்பதைக் கவனிக்க வேண்டியதில்லை. தேசிய வளர்ச்சித் திட்டப் பணியமைப்பைச் சேர்ந்த பணியாளர்கள், ஊராட்சி ஒன்றியப்பணியைச் சேர்ந்த பணியாளர்கள் ஆகியவர்களின் பணிகள், அவர்களுடைய அலுவல் முறையான வேலை எல்லாவற்றிலும் ஒவ்வொருவருக்கும் தாராளமாய்க் கிடைக்கக்கூடியவைகளாயிருக்க வேண்டும்; அப்படிப்பட்ட எல்லாவற்றிலும் கொடுக்க வேண்டிய படிகள் எவையேனுமிருந்தால் அவற்றை, எந்த மூலக் கணக்குத் தலைப்பிலிருந்து அவர்களுடைய சம்பளமும் படிகளும் வாங்கப்படுகின்றனவோ அந்தத் தலைப்புக்குப் பற்றுக எழுத வேண்டும். 1960 ஜூலை 20-ஆம் தேதியுள்ள 1225-ஆம் எண் உள்ளாட்சித் துறைப்பல்வகை அரசாணையில் குறிப்பிடப்பட்ட பணித்தொகுதியின் இரண்டு வகைகளுக்கிடையிலுள்ள வேறுபாடு, அன்றாட நிருவாகங்களை எவ்விதமாகவும் பாதிக்கக் கூடியதாக இருக்கக்கூடாது.

பிரச்சினை.—(ஆ) முன்பு அரசுப் பணியைச் சேர்ந்தவர்களாயிருந்து இப்போது ஊராட்சி ஒன்றியப் பணியைச் சேர்ந்துள்ள பணித் தொகுதியினருக்கு அரசினரால் கொடுக்கப்பட்டு வசூலிக்கப்பட வேண்டி இருக்கிற முன் பணங்களை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், சம்பந்தப்பட்ட பணியாளர்

களின் சம்பளத்திலிருந்தும் படிகளிலிருந்தும், அந்த முன்பணங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி வசூலித்து, அரசாங்கக் கணக்குகளில் பொருத்தமான கணக்குத் தலைப்புக்கு வரவு வைக்க வேண்டும்.

(1962 பிப்ரவரி 22-ஆம் தேதியுள்ள 203498/ 4/60-3-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

81. **அலுவலர்களையும் பணியாளர்களையும் மாற்றுவது பற்றிய விதிகளைத் தெளிவுபடுத்துவது.**—ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்களையும் பணியாளர்களையும் மாற்றுவது பற்றிய விதிகள், 1962, 1-ஆம் தேதியுள்ள 1051-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதன் தொடர்பாக மேற்கொண்டு பின்வரும் விளக்க உரைகள் பிறப்பிக்கப்படுகின்றன :—

(i) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர்களையும் பணியாளர்களையும் மாற்றுவது பற்றிய விதிகளைச் சேர்ந்த 1-ஆவது விதியின்படி, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தங்கள் சொந்த நிதிகளிலிருந்து சம்பளம் கொடுக்கப்பெறும் தங்கள் அலுவலர்களிலும் பணியாளர்களிலும் எவராவது தங்கள் பணியை நிலையாக விட்டு நீங்கி, வேறொரு ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணியில் சேருவதற்கு அதில் குறிப்பிட்டிருக்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு, அனுமதி கொடுக்கலாம். அப்படிப்பட்டவற்றில் தனித்தனி இரண்டு ஆணைகள் இருக்கவேண்டும்—எந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் பணியை விட்டு அந்த அலுவலர் அல்லது பணியாளர் நீங்குகிறாரோ அவர்கள், தங்கள் பணியை நிலையாக விட்டு நீங்க சம்பந்தப்பட்ட அலுவலர் அல்லது பணியாளருக்கு அனுமதி கொடுத்துப் பிறப்பிக்கும் ஆணை ஒன்று, சம்பந்தப்பட்ட எந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தினரின் பணியில் அந்த அலுவலர் அல்லது பணியாளர் சேருகிறாரோ அவர்கள் தங்கள் பணியில் சேர அந்த அலுவலர் அல்லது பணியாளருக்கு அனுமதி கொடுத்துப் பிறப்பிக்கும் ஆணை மற்றொன்று.

(ii) ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்களையும் பணியாளர்களையும் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொன்றுக்கு மாற்றுவதற்கான யோசனைத் திட்டங்களைச் சென்னையிலுள்ள கூட்டு வளர்ச்சி ஆணையாளரின் ஒப்புதலுக்காக அனுப்ப வேண்டும். 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 60 (2) பிரிவின்படி அந்த அதிகாரங்களைச் செலுத்த 1961, மே 10-ஆம் தேதியுள்ள 1335-ஆம் எண் உள்ளாட்சித்துறை அரசாணையில் அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(iii) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 60 (2) பிரிவின்படி ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்களையும் பணியாளர்களையும் மாற்றம் செய்வது குறிப்பிட்ட மாவட்டத்துக்குள் நடக்கிறவரையில், அவ்வாறு மாற்றும் அதிகாரங்களைச் செலுத்த, 1960 சனவரி 12 ஆம் தேதியுள்ள 76 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணையில், அரசினர் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப் பட்டவற்றில் மாவட்ட ஆட்சியாளர்கள் ஆணைகள் பிறப்பிக்கும்போது, இன்ன ஒன்றியத்தில் அமர்த்துவது என்று மட்டும் அந்த ஆணையில் சொல்லப் பட்டிருக்க வேண்டும். அந்த ஒன்றியத்தில் குறிப்பிட்ட இன்ன இடத்திற்கு அல்லது நிறுவனத்திற்கு அந்த அலுவலர் அல்லது பணியாளர் அமர்த்தப்பட வேண்டுமென அதில் சொல்லியிருக்கக்கூடாது. அவ்வாறு மாற்றப்பட்ட அலுவலர் அல்லது பணியாளர் ஒன்றியத்தில் இன்ன இடத்துக்கு அல்லது நிறுவனத்துக்கு அமர்த்தப்பட வேண்டுமென்பதை நிச்சயிக்கும் பொறுப்பைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்துக்கு விட்டு விட வேண்டும்.

(1962 மே 1 ஆம் தேதியுள்ள 1052 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

37. **ஊராட்சி ஒன்றியக்குழுக்களுக்குட்பட்ட பூங்காக் கண்காணிப்பாளர்களின் தகுதிகளை நிர்ணயிப்பதற்கான விதி.**—பின்வரும் தகுதிகளை ஒருவர் பெற்றிருந்தாலொழிய, அவரை ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கீழ்ப் பூங்காக் கண்காணிப்பாளர் பதவிக்கு நியமிக்கக் கூடாது.

(i) பூர்த்தியான இடை-நிலைப்பள்ளி விட்டு நீங்கும் சான்று (S.S.L.C.) வைத்திருக்க வேண்டும், மேலும்

(ii) (அ) தமிழ்நாடு வேளாண்மைத் துறைக் கீழ் நிலைப்பணியில் குறைந்தது ஐந்தாண்டுக்காலம் களப்பணியாள் பதவியை வகித்திருக்க வேண்டும். இதில் குறைந்தது ஆறு மாத காலம் வேளாண்மைத் துறையினர் நடத்தும் பழத் தோட்டத்தில் அல்லது நந்தவனத்தில் பணி செய்திருக்க வேண்டும் ; அல்லது

(ஆ) வேளாண்மைத் துறையினர் நடத்தும் குறுகிய கால தோட்டக்காரர் பயிற்சி பெற்றிருக்க வேண்டும், குறைந்தது மூன்றாண்டுக்காலம் களப் பணியாள் பதவியை வகித்திருக்க வேண்டும்.

38. **ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குட்பட்ட நில அளவையாளர்களின் தகுதிகளை நிர்ணயிப்பதற்கான விதி.**—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தினால் நில அளவையாளராக நியமிக்கப்பட்ட ஒருவர், தமது தகுதி காண் பருவ காலத்துக்குள், கீழ் கண்ட இணைப்பில் விவரிக்கப்பட்டிருக்கிற துணை நில அளவையாளர் தேர்வில் தேறவேண்டும்.

ஆனால், கிண்டி பொறியியல் கல்லூரியின் உயர்தர அல்லது தாழ்ந்த கீழ் நிலைச் சான்றினை வைத்திருக்கும் ஒருவருக்கு இந்த விதியில் உள்ளது எதுவும் பொருந்தாது; எனினும், அவர் துணை நில அளவையாளர் தேர்வில் தேறினாலன்றி, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின்கீழ் நில அளவையாளரென்னும் தமது நியமனத்தில் உறுதிப்படுத்தப்பெறுவதற்குத் தகுதியுள்ளவராக மாட்டார்.

இணைப்பு.

துணை நில அளவையாளர் தேர்வு.

1. கணிதம்—தசாம்ச பின்னங்கள், மிகைப்பெருக்க மூலம் வரையில்.

2. கையெழுத்தும், சொல்லுவதை எழுதுவதும்.

3. கிராமக் கர்ணங்களுக்கான "நில அளவை இயல்" என்னும் புத்தகம் முழுவதும்.

4. நில அளவை நடைமுறை நூல் 1923, அத்தியாயங்கள், I, II, III, VI, VII, முழுவதும்.

அத்தியாயம் X விதிகள் 3 முதல் 13 வரையில்.

அத்தியாயம் XI விதிகள் 1 முதல் 6 வரையில்.

அத்தியாயம் XII விதிகள் 1 முதல் 30 வரையில்.

அத்தியாயம் XIII விதிகள் 1 முதல் 133 வரையில்.

அத்தியாயம் XIX விதிகள் 16 முதல் 36 வரையில்.

அத்தியாயம் XVII விதிகள் 241 முதல் 279 வரையில்.

அத்தியாயம் XIX விகிதாசாரமான தண்டு வடிவமான வில்வடிவமான வட்டம் வரையும் கருவிகளும் புகைப்படமும் நீங்கலாக மற்றெல்லா நில அளவைக் கருவிகளும்.

அத்தியாயம் XX கணக்குகள்.

5. வருவாய்த்துறைக் கழக நில ஆணைகள் எண் 34 அ.ஆ.இ. III, IV, V, VI, VII, X, XI, XII, XV, XVI-ஆம் பிற்சேர்க்கை நீங்கலாக.

39. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்களும் பணியாளர்களும் வெறிவிலங்குக்கடி மருத்துவம் செய்து கொள்ள அவர்களுக்கு விடுப்பும் விடுப்புப் படிகளும் வழங்குவதை முறைப்படுத்துவதற்கான விதி.

ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர், அல்லது அதற்கு உதவியாக அனுப்பப்பட்ட ஓர் அரசாங்க அலுவலர் அல்லது பணியாளர் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய்க்கு மேற்படாமல் சம்பளம் வாங்கு பவராயிருந்து, வெறிவிலங்குகளின் அல்லது வெறி பிடித்தவையென்று சந்தேகிக்கப்படும் விலங்குகளின் தொற்றுக்கு ஆளாகியிருந்து, குன்னூரில் உள்ள பாஸ்டர் நிறுவனத்துக்காவது அவர் வீட்டுக்கு மிக அண்மையிலுள்ள அரசினரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற, மிஷன் மருத்துவமனைகள் அல்லது வேறு வெறி விலங்குக்கடி மருத்துவ நிறுவனத்துக்காவது போவதாயிருந்து சிகிச்சை நிலையமுள்ள ஓரிடத்தில் அவர் வேலையிருந்தால் ஒருவருக்கு 20 நாள் நேர்வு விடுப்பு வழங்கலாம், சிகிச்சை நிலையம் இல்லாத ஓரிடத்தில் அவர் வேலையிலிருந்தால் அவருக்கு 20 நாள் நேர்வு விடுப்பும் மிக அண்மையிலுள்ள சிகிச்சை நிலையத்துக்குப் போகவும் அங்கிருந்து திரும்பி வரவும் பிடிக்கும் காலமும் வழங்கவேண்டும். ஆனல் அந்த அலுவலர் அலுவலகத்தில் இல்லாம லிருந்து அந்தக் காலத்தில் பதிலாள் ஒருவரை நியமிக்க வேண்டியிருந்தால், அவர் அவ்வாறு போயிருக்கும் காலத்தை, அரசினரின் ஆணைகளின்படி நேர்வு விடுப்பு எனக்கருதாமல் அவர் விடுப்புக்கணக்கில் பற்றுக எழுதக் கூடாது. முழுச்சராசரிச் சம்பளத்துடன் கூடிய அதிகப்படி விடுப்பு எனக் கருத வேண்டும்.

விளக்கம்.—இவ்விதியில் "சம்பளம்" என்னும் சொல்லுக்கு அடிப்படை விதிகளைச் சேர்ந்த 9 (28) விதியில் விளக்கப்பட்டிருக்ற "நிலையான சம்பளத்தைக்" குறிப்பதாக பொருள் கொள்ள வேண்டும்.

(1965 ஏப்ரல் 21 ஆம் தேதியுள்ள 933 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(82) 1961 பிப்ரவரி 9-ஆம் தேதியுள்ள 375 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணையில் அடியிற்கண்டவாறு விளக்க உரை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது : அதாவது—53 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட் பிரிவின் சொல்லமைப்பு மிகப் பொதுப்படையாயிருந்த போதிலும், நியமனங் கள் குழுவிற்குக் கூட வெளியார்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு அதிகாரம் கொடுத்த போதிலும், சேர்த்துக் கொள்ள (2) உட்பிரிவில் கொடுத்துள்ள அதிகாரம், அந்தப் பிரிவைச் சேர்ந்த (1) உட் பிரிவின் (ஆ) பகுதியில் குறிப்பிட்டிருக்கிற குழுக்களுக்கு மாத்திரமே அதாவது கல்விக்குழு பொதுக்காரியங்கள் குழு (ஆ) பகுதியில் குறிப்பிட்டிருக்

கிற மற்றக் குழு ஆகியவைகளுக்கு மாத்திரமே பொருந்த வேண்டுமேயல்லாமல் (அ) பகுதின்படி அமைக்கப்பட்ட நியமனங்கள் குழுவிற்குப் பொருந்தக் கூடாது என்பதே அதன் நோக்கமாகும். இந்த நோக்கத்தைத் தெளிவாக்கும் பொருட்டு (2) உட் பிரிவினருக்குத் தக்கபடி திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். அவ்வுட்பிரிவு அவ்வாறு திருத்தப்படுகிற வரையில் மேலே விளக்கப்பட்ட நிலையைக் கவனித்துப் பார்க்கும்படியும் நியமனங்கள் குழுவிற்கு உறுப்பினராக எவரையும் சேர்த்துக் கொள்ள வேண்டாம் என்று ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கின்றன.

2. மேற்படி சட்டத்தில் கண்ட 53 ஆவது பிரிவின் (2) உட்பிரிவிலுள்ள நிபந்தனைகளின் உட்கருத்து இப்போது மறுபரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி சட்டத்தில் கண்ட 53 ஆவது பிரிவின் (2) உட்பிரிவுக்கு எழுத்துக்கு எழுத்து பொருள் கொள்வதாயிருந்தால் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களாயிராதவர்களைக் குழுவின் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளும் அதிகாரத்தை ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் தாங்களாகவே அல்லது அரசினர் கட்டளையின் பேரில் நியமிக்கும் குழுக்களுக்கு மாத்திரம் வரையறுத்துக் கொள்ள வேண்டும் என்றும், சேர்த்துக் கொள்ளவதற்கான மேற்படி அதிகாரமானது சட்டப்படி அமைக்கப்பட்ட நியமனங்கள் குழு—கல்விக்குழு—பொதுக் காரியங்கள் குழு ஆகிய மூன்று குழுக்களைப் பொருத்தவரை பொருந்தாது என்றும் அரசினருக்கு ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஆகையால் 1961 பிப்ரவரி 9 ஆம் தேதியுள்ள 375 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையின் 2-ஆவது பத்தியில் கண்ட உத்தரவுகளைத் திருத்தி ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால் மேலே 2-ஆவது பத்தியில் காட்டப்பட்ட கண்டிப்பான சட்ட நிலைமையை உத்தேசித்து, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களாகயிராதவர்களை, நியமனங்கள் குழு, கல்விக் குழு—பொதுக்காரியங்கள் குழு ஆகிய மூன்று சட்ட பூர்வமான குழுக்களில் சேர்த்துக்கொள்ளக் கூடாது.

(1965 மே 29-ஆம் தேதியுள்ள 1240-ஆம் எண் கிராம முன்னேற்றம்—
உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(83) சட்டம்—1958ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம்—ஆணையாளர்—அதிகாரங்களை ஒப்படைத்தல்.விளக்க உரைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

1958ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 44 (6) பிரிவின்படி அரசினர் கட்டளையிடுவது என்னவென்றால் ஓர் ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளர் தேர்வு விடுப்பு எடுத்துக்கொண்டு, அலுவல் இடத்தை விட்டுப்

போகும்போதெல்லாம், அவர் மேற்படி சட்டத்தில் கண்ட 44 (6) பிரிவின்படி தமது அலுவலர்கள் எல்லாவற்றையும், முறைமையான ஓர் ஆணை மூலமாக ஊராட்சி ஒன்றியத்தின் மிக்க முதுநிலையில் உள்ள விரிவாக்க அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். பலராக உள்ள உதவி அலுவலர்களாவது அலுவலக மேலாளராவது வாலாய வேலையைத் தீர்வு செய்வதற்கு அவசியமெனத் தோன்றும் விரிவாக்க அலுவலர் பலருக்கும் அல்லது அலுவலக மேலாளருக்கும் உள்ள துணை ஆணைகளை ஒப்படைப்பு ஆணையுடன் பிறப்பிக்க வேண்டும். அத்தகைய உடன் சேர்க்கையான ஆணை ஒன்றைத் தெளிவாக்க வேண்டும். அதாவது அதிகாரம் ஒப்படைக்கப்பெற்றிருக்கிற விரிவாக்க அலுவலர் ஏதேனும் நெருக்கடி சமயத்தில் ஆணையாளரின் முழு அதிகாரங்களைப் பெற்றிருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட விரிவாக்க அலுவலர் அத்தகைய நெருக்கடி சமயங்களில் மாத்திரமே அந்த அதிகாரங்களைச் செலுத்த வேண்டும். சம்பந்தப்பட்ட விரிவாக்க அலுவலர் முக்கியமான எல்லாச் செயல்களையும் ஆணையாளர் திரும்புகிற வரையில் கூடிய மட்டில் தள்ளிப்போட வேண்டும். ஒப்படைப்பு ஆணை, உடன் சேர்க்கையான ஆணைகள் ஆகியவற்றின் படி ஒன்றை முறைப்படி தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

2. ஆணையாளர் சிறிது காலங்களுக்கு அலுவல் இடத்தில் இல்லாமற் போதல், நேர்வு விடுப்பு முதலியவற்றின்போது பின்வரும் அலுவல்களிலும் அதிகாரங்களிலும் எவற்றையேனும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர்கள் அல்லது பணியாளர்களுக்கேனும் அரசினருக்கேனும் ஒப்படைக்கக்கூடாது.

(i) தேசிய வளர்ச்சித் திட்டத்தைச் சேர்ந்த அல்லது ஊராட்சி ஒன்றியப் பணியைச் சேர்ந்த அலுவலர்களையும் பணியாளர்களையும் நியமித்தல், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடங்குதல், அவர்களுக்குத் தண்டனை விதித்தல் அல்லது அவர்களை மாற்றுதல்;

(ii) அங்காடிகள் முதலியவற்றின் குத்தகைகளின் ஆண்டு விற்பனைகளையும் 200 ரூபாய்க்கு மேற்பட்ட வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் வேறு ஏதேனும் விற்பனையையும் பகிரங்க ஏலத்தில் விடுதல்;

(iii) ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதல்;

(iv) மேற்படி சட்டத்தில் கண்ட 45 ஆவது பிரிவின்படிக்கான நெருக்கடிக்கால அதிகாரங்கள்;

(v) சட்டபூர்வமான குழுக்கள் பற்றிய அலுவல்கள்.

3. அன்றியும் ஆணையாளர், அதிகாரங்கள் ஒப்படைக்கப் பெற்றுள்ள விரிவாக்க அலுவலரை—

(i) மேல்முறையீடுகள், பதவி உயர்வுகள், மாற்றங்கள் முதலியவை தொடர்ப்பான கோப்புகளைக் கவனிக்கவும்.

(ii) கோப்புகளின் மீது முடிவான தீர்வு ஆணைகளைப் பிறப்பிக்கவும்.

(iii) ஊராட்சி ஒன்றியப் பணித் தொகுதிகளுக்கு நேர்வு விடுப்பு அல்லாத வேறு விடுப்பு வழங்கவும்.

(iv) ஆணையாளரின் முந்திய ஆணைகளைத் திருத்தவும் விடக்கூடாது.

4. வட்டார வளர்ச்சி அலுவலர்—ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பதவியை அதிகப்படியாக முழுப்பொறுப்புடன் வகிக்க ஓர் விரிவாக்க அலுவலர் அமர்த்தப்பட்டிருக்கிற விஷயங்களில் இந்த அரசாணையில் கண்ட விளக்க உரைகள் பொருந்தமாட்டா.

(1962 ஜனவரி 30 ஆம் தேதியுள்ள 236 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறை அரசாணை)

4. தமிழ் நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் பணியாளர் தொகுதி விதிகள்.

விதிகள்.

1. **சிறுபெயர்:** இவ்விதிகளை 1964 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் பணியாளர் தொகுதி விதிகள் என்று சொல்லலாம்.

2. **வரையறைகள்.**—இவ்விதிகளில், (அ) "மேற்படி சட்டம்" என்பது 1958ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் எனப்பொருள்படும்.

(ஆ) "அரசினர்" என்பது தமிழ் நாடு அரசினர் எனப் பொருள்படும்.

(இ) "போர்ப்பணி" என்பதற்குத் தமிழ்நாடு மாநில கீழ்நிலைப் பணி விதிகளின் 1-ஆம் பாகத்தில் கூறப்பட்டுள்ள பொருளையே அது உடையதாகும்.

(ஈ) "இராணுவ அலுவல்" என்பது கடற்படை, இராணுவப்படை அல்லது விமானப்படைச் சட்டத்துக்கு உட்படுவது உள்ளடங்கிய (பயிற்சிக் காலம் உட்பட) ஒருவகையான அலுவல் என்றுவது, அரசினரால் குறிப்பிடப் படும் ஊர்ப்பாதுகாப்பு அமைப்பில் முழுநேரம் அலுவல் என்றுவது பொருள் படும்.

(உ) "ஆணையாளர்" என்பது ஓர் ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளர் எனப்பொருள்படும்.

3. **விதிகள் பொருந்துவது:** மேற்படி சட்டப்படி செய்யப்பட்ட எந்த விதியிலேனும் வேறு விதமாய்ச் சொல்லியிருந்தாலன்றி மற்றப்படி (ஆணையாளர் அல்லாத) ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குட்பட்ட நிலையான, தற்காலிகமான அல்லது பதவியாகவுள்ள பணியாளர் தொகுதியைச் சேர்ந்த (வேறு) எவர்கள் சில்லறை நிதியிலிருந்து சம்பளம் கொடுக்கப்பெறுமல், மாதம் 50 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகிறுர்களோ அல்லது அவர்கள் வகிக்கும் பதவிகளின் உச்ச சம்பளம் மாதம் 50 ரூபாய்க்கு மேற்படுகிறதோ அவர்கள் எல்லாருக்கும் இவ்விதிகள் பொருந்தும்.

4. **இன்ன திட்டங்களுக்குட்பட்டு ஒழுங்குமுறைகளைச் செய்ய வேண்டுமென்பது.**—(1) மேற்படி சட்டத்தில் கண்ட 58 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படி ஒழுங்கு முறைகளைச் செய்ய ஓர் ஊராட்சி மன்றத்திற்குள்ள அதிகாரம் பின்வரும் திட்டங்களுக்குட்பட்டதாகும், அவையாவன.

(அ) அந்த விதிமுறைகளின் வரைவினை ஆங்கிலத்திலும் தமிழிலும் மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டும். அவைகளினுல் வெகுவாய்ப் பாதிக்கப்படக் கூடியவர்களுக்குத் தெரியும் பொருட்டு ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகத்தின் அறிக்கைப் பலகையிலும் அந்த வரைவினை ஒட்ட வேண்டும்.

(ஆ) அந்த வரைவு வெளியிடப்பட்டதிலிருந்து ஆறு வாரங்களுக்குப் பிறகு அது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்று கண்டுள்ள அறிக்கை ஒன்றை அதனுடன் வெளியிட வேண்டும்.

(இ) அக்கால அளவு கழிவதற்கு முன் அந்த வரைவு சம்பந்தமாக எவரிடமிருந்தேனும் வரக்கூடிய ஆட்சேபணை அல்லது ஆலோசனையைக் குறித்து ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் யோசிக்க வேண்டும்.

(ஈ) ஊராட்சி ஒன்றிய மன்றத்தினரால் செய்யப்படும் ஒழுங்கு முறைகள் எல்லாவற்றையும், ஆங்கிலத்திலும் தமிழிலும் மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டும். மேலும் அவற்றை ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகத்தின் அறிக்கைப் பலகையில் ஒட்ட வேண்டும்.

(உ) ஊராட்சி ஒன்றிய மன்றத்தினரால் செய்யப்படும் ஒழுங்கு முறையில் ஏதேனும் மாறுதல், சேர்க்கை அல்லது விடுபாடு சம்பந்தமாக (1) உள் விதியில் கண்டுள்ள நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

5. **57ஆவது பிரிவின்படிக்கான யோசனைத் திட்டத்தின் படிவமும் உள்ளுரையும்.**—மேற்படி சட்டத்தின் கண்ட 57-ஆவது பிரிவின்படிக்கான

யோசனைத் திட்டம் ஒவ்வொன்றுடனும், யோசனை விவரம் ஒன்றை அனுப்ப வேண்டும். அது அவ்வப்போது அரசினர் விதிக்கக்கூடிய படிவப்படி இருக்க வேண்டும். அதில் அடியிற் கண்டவை அடங்கியிருக்க வேண்டும்.

(i) யோசனைத் திட்டம் சம்பந்தப்படுகிற பணித் தொகுதிக்கு அல்லது அதன் பாகத்துக்குத் தற்போது பிடிக்கும் செலவு;

(ii) யோசனைத் திட்டம்-அமலுக்குக் கொண்டு வரப்படுமானால், அந்தப் பணித் தொகுதிக்கு அல்லது பாகத்துக்குப் பிடிக்கும் செலவு;

(iii) சேர்க்க அல்லது மாற்றக் கருதியிருக்கிற பதவி அல்லது பதவி களின் எண்ணிக்கை, சம்பளம், கட்டணங்கள், படிகள் பற்றிய விவரங்கள்.

6. பதவிகளை உண்டாக்குகிற தேதி.—நிலையாகவோ தற்காலிகமாகவோ உள்ள எந்தப் பதவிகளை உண்டாக்குவதற்கு ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறார்களோ அந்தப் பதவிகள் எல்லாம் குழுவினரின் தீர்மானம் வேறு தேதியைக் குறிப்பிட்டாலன்றித் தீர்மானத்தின் தேதிக்கு அடுத்து வரும் ஏப்ரல் முதல் தேதியன்று அமலுக்கு வரத் தொடங்கும்.

7. தற்காலிகப் பதவிகளுக்குரிய சம்பளமும் கட்டணங்களும் படிகளும்.—குழுவினரால் உண்டாக்கப்பட்ட ஒரு தற்காலிகப் பதவிக்குரிய சம்பளமும் கட்டணங்களும் படிகளும்:

(அ) அதே கடமைகளையுடைய நிலையான பதவி ஏதேனும் இருந்தால் அதற்குரிய குறைந்த பட்ச சம்பளத்துக்கும் கட்டணங்களுக்கும் படிகளுக்கும் மேற்படக்கூடாது.

(ஆ) குழுவினரின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், கொள்ளை நோய் கண்டிருப்பதுபோன்ற அசாதாரண நிலைகளில் வேண்டிய தனித்தகுதிகளைப் பெற்றிருக்கிற ஒருவர் குறைந்த ஊதியத்துக்குக் கிடைக்காவிட்டால், இவ்விதியின்படிக் கொடுக்கப்படத்தக்க ஊதியத்துடன் அதில் கால்பங்குக்கு மேற்படாத தொகையைக் கூட்டித் தரலாம்.

8. நேரடியாகத் தேர்ந்தெடுத்து நியமிக்கப் படுபவர்களின் வயது முதலியவை இணங்கியிருத்தல்.—முப்பது வயதுக்கு மேற்பட்டிருக்கிற அல்லது நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிராத எவரையும் ஓர் ஊராட்சி ஒன்றியக்குழுவின் கீழ் (கடைநிலைப் பணியிலுள்ள எந்தப் பதவியின் சம்பளம் அல்லது உச்ச சம்பளம் மாதமொன்றுக்கு ஐம்பது ரூபாய்க்கு மேற் படுகிறதோ அந்தப் பதவி அல்லாத வேறு) ஒரு பதவிக்கு நியமிக்கக்கூடாது.

ஆனால், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கீழ் அல்லது தமிழ்நாடு மாநிலத்திலிருக்கிற வேறொரு தல அதிகார சபையின் கீழ் உள்ள ஒரு பணியிலிருந்து மாற்றம் மூலமாக ஒருவரை நியமிப்பதற்கு இவ்விதியில் உள்ளது எதுவும் பொருந்தாது.

9. **உருது ஆசிரியர்களின் பதவிகளுக்கு நியமனங்கள்.**—தொடக்கப் பள்ளிகளில் உருது ஆசிரியர்களின் பதவிகளுக்கு உருதுப் பயிற்சி பெற்ற வேட்பாளர்களை மட்டுமே நியமிக்க வேண்டும். ஆனால், தகுதி பெற்றவரும், தக்க உருதுப் பயிற்சி பெற்றவருமான வேட்பாளர் ஒருவர் கிடைக்காவிட்டால், தகுதி பெற்றவரும் தக்க உருது பயிற்சி பெற்றவருமான வேட்பாளர் ஒருவர் கிடைக்கிறவரையில் உருதுப் பயிற்சி பெற்றிராத ஆசிரியர் ஒருவர் மற்றபடி தகுதிபெற்ற ஆசிரியராயிருந்து உருது எழுதப்படிக்கத் தெரிந்தவராயிருந்தால் அவரை நியமிக்கலாம்.

10. இவ்விதிகளில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதக மில்லாமலே போர்ப்பணி செய்த வேட்பாளர்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட வெற்றிடங்களுக்குப் போர்ப்பணி செய்த வேட்பாளர்களை நியமிக்க வேண்டும் : அப்படி நியமிக்கையில், அந்த வெற்றிடங்களில் ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ள தகுதி காண் பருவத்தினர்களையும் தகுதி காணப்பெற்றவர்களையும் 15-ஆவது விதியில் குறிக்கப்பட்ட வரிசை முறையில் நீக்கிவிட வேண்டும்.

11. **தகுதி காண் பருவம் பற்றிய சான்று.**—(1) கடைநிலைப் பணியிலுள்ள எந்தப் பதவியின் சம்பளம் அல்லது பெரும் சம்பளம் மாதம் ஐம்பது ரூபாய்க்கு மேற்படுகிறதோ அந்தப் பதவியில்லாத வேறொரு பதவிக்கு நியமிக்கப்படுகிற ஒவ்வொருவரும், தொடர்ச்சியாக மூன்றாண்டுக் காலத்துக்குள் அலுவல் பார்க்கிற இரண்டாண்டுக் காலத்துக்குத் தகுதிகாண் பருவத்திலிருக்க வேண்டும்.

ஆனால், ஒரு தட்டச்சர் கீழ்நிலை எழுத்தராக நியமிக்கப்படும் அவரும், கீழ் நிலை எழுத்தர் தட்டச்சராக நியமிக்கப்படும்போது அவரும், தொடர்ச்சியாக மூன்றாண்டுக் காலத்துக்குள் மொத்தத்தில் அலுவல் பார்க்கிற இரண்டாண்டுக் காலம், சந்தர்ப்பத்துக்கேற்ப, கீழ்நிலை எழுத்தர் வகுப்பில் அல்லது தட்டச்சர் வகுப்பில் தனித்தனியாகத் தகுதிகாண் பருவத்திலிருக்க வேண்டும்.

மேலும், மருத்துவர்களாகவும், பேறுகால உதவியாளர்களாகவும் முறைமையான நிறுவனங்களில் நியமிக்கப்படும் கிராம மருந்தகங்களில் உள்ள கிராம மருத்துவர்களும், பேறு கால உதவியாளர்களும், தொடர்ச்சியாக இரண்டாண்டுக் காலத்துக்குள் அலுவல் பார்க்கிற ஓர் ஆண்டுக்காலம் தகுதிகாண் பருவத்திலிருக்க வேண்டும்.

(2) ஒரு பதவிக்கு நியமிக்கப்படும் ஒருவர், அந்தப் பதவியில் தகுதி காண் பருவத்துக்காகப் பின்னர் வேருெருவர் பதவியில் பணி செய்திருந்தால், அப்பணியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தகுதி உள்ளவராவார்: ஆனுல், அந்த வேருெரு பதவிக்கு நியமிக்கப்படுவதனுல், முந்திய பதவிக்குரியவை களுக்குச் சமமான அல்லது அவற்றை விட அதிகமான முக்கியத்துவம் வாய்ந்த அலுவல்களையும் பொறுப்புகளையும் வகிக்க வேண்டியதாயிருக்க வேண்டும்.

12. இராணுவப் பணிக்கு அனுப்பப்படும் தகுதி காண் பருவத்தினர்.—எப்பதவியிலேனும் தகுதிகாண் பருவத்திலிருக்கும் ஒருவர் இராணுவப் பணிக்கு அனுப்பப்பட்டிருந்தால் அல்லது அனுப்பப்படக்கூடுமானுல், அந்தப் பதவியில் தகுதி காண் பருவத்தினிமித்தம், இராணுவப் பணியில் அவர் கழித்த காலத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ள உரிமை உள்ளவராவார்.

13. தகுதிகாண் பருவத்தை இறுதி செய்தல்.—(அ) ஆணையாளர் ஒருவருடைய தகுதிகாண் பருவம் கழிந்து போவதற்கு முன், எழுதிவைக்க வேண்டிய காரணங்களுக்காக, அவருடைய தகுதிகாண் பருவத்தை இறுதி செய்து, அவர் ஏற்கெனவே நிலையான அலுவலர் அல்லது பணியாளராயிருந்தால் அவருடைய நிலையான பதவிக்கு அவரை மீள அனுப்பிவிடலாம், அல்லது அவர் ஒரு நிலையான அலுவலர் அல்லது பணியாளராயில்லாதிருந்து ஆனுல் அப்பகுதியிலுள்ள ஒரு கீழ்ப்பதவியில் அவர் தகுதிகாண் பருவத்தினராயிருந்து அல்லது தகுதி காணப்பெற்றவராயிருந்து அக்கீழ்ப்பதவியில் வெற்றிடம் இருந்தால் அல்லது அவருக்குப் பின்னுல் வந்த ஒருவர் அக்கீழ்ப்பதவியை வகித்துக் கொண்டிருந்தால், அக் கீழ்ப்பதவிக்கு அவரை மீள அனுப்பிவிடலாம்; அல்லது மற்ற விஷயங்களில் அவரை ஊராட்சி ஒன்றிய மன்றப் பணியிலிருந்து நீக்கிவிடலாம்.

ஆனுல் தகுதிகாண் பருவத்தை இறுதி செய்வது பற்றி ஆணையாளர் தற்காலிக ஒரு முடிவுக்கு வந்தபிறகு, தகுதிகாண் பருவத்தை இறுதி செய்யக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டத் தொடர்புடைய ஒருவருக்கு அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

(ஆ) நிர்ணயிக்கப்பட்ட தகுதி காண் பருவம் அல்லது 14-ஆவது நீட்டிக்கப்பட்ட தகுதிகாண் பருவம் முடிந்தவுடன், தகுதிகாண் பருவத்தினர் எந்தத் தரத்துக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டாரோ அந்தத் தரத்தில் உறுதிப் படுத்தப்படுவதற்கு அவர் தகுதியுடையவர்தானு என்பதை ஆணையாளர் ஆலோசித்துப்பார்க்க வேண்டும். தகுதிகாண் பருவத்தினர் உறுதிப்படுத்தப் படுவதற்குத் தக்கவரென்று ஆணையாளர் தீர்மானித்தால், தகுதிகாண்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட அல்லது நீட்டிக்கப்பட்ட காலம் கழிவாகும் தேதியன்று, தகுதிகாண் பருவத்தினர் தமது தகுதிகாண் பருவத்தைத் மனநிறைவு கொள்ளுமாறு முடித்திருக்கிருரென அறிவித்து, ஆணையாளர் கூடிய விரைவில் ஓர் ஆணை

பிறப்பிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கப்பெறுவதற்கு அவர் தகுதியுடைய வாராகும் தேதியிலிருந்து ஆறு மாதத்துக்குள் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படவில்லையானால் தகுதிகாண்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட அல்லது நீட்டிக்கப்பட்ட காலம் கழிவாகும் தேதியன்று அவர் தமது தகுதிகாண் பருவத்தை மனநிறைவு கொள்ளுமாறு முடித்திருப்பதாகக் கருதப்படுவார்; ஆனால் அவர்மீது பெருங்குற்றச்சாட்டுகளிலிருந்தால், அவ்வாறு கருதப்பட மாட்டார்.

(இ) தகுதிகாண் பருவத்தினர் உறுதிப் படுத்தப்படுவதற்குத் தகுதியற்ற வரென ஆணையாளர் தீர்மானித்தால், ஆணையாளர், தகுதிகாண் பருவம், 14 ஆவது விதியின்படி நீட்டிக்கப்பட்டாலன்றித் தகுதி காண் பருவத்தை இறுதி செய்வதற்காக (அ) பகுதியில் சொல்லியிருக்கிறபடி ஆணை மூலமாக, பழைய பதவிக்கே அவரை மீள அனுப்பிவிட வேண்டும், அல்லது பணியிலிருந்து அவரை நீக்கிவிட வேண்டும்.

(ஈ) தகுதி காண்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட காலம் கழிவான பிறகு, தகுதிகாண் பருவத்தினருடைய வேலையை அல்லது நடத்தையை முழுவதும் அல்லது சிறிது மட்டில் ஆதாரமாகக் கொண்டு (இ) பகுதியின்படி ஆணை எதையும் பிறப்பிக்கக் கூடாது.

(உ) தகுதி காண்பருவத்துக்குள், அப் பருவத்துக்குள் தேறவேண்டுமென விதிகளில் அல்லது விதிகளின் படி சொல்லியிருக்கிற ஏதேனும் தேர்வில் தேறத் தகுதிகாண் பருவத்தினர் தவறிப்போனால், தகுதிகாண் பருவம் 14-ஆவது விதி யின்படி நீட்டிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றபடி, சந்தர்ப்பத்துக்கேற்ப ஓர் ஊராட்சி ஒன்றியக் குழுவில் அல்லது வேறு உள்ளாட்சி அதிகார சபையில் அவர் ஏற்கெனவே ஒரு நிலையான அலுவலராக அல்லது பணியாளராக இருந் தால், ஆணையாளர் அவரது தகுதிகாண் பருவத்தை உடனே இறுதி செய்து, அவருடைய நிலையான பதவிக்கு அவரை மீள அனுப்பிவிட வேண்டும், அல்லது மற்ற விஷயங்களில் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணியிலிருந்து அவரை நீக்கிவிட வேண்டும். தகுதிகாண் பருவம் மேற்சொன்னவாறு நீட்டிக்கப் பட்டிருந்து, நீட்டிக்கப்பட்ட தகுதிகாண் பருவத்துக்குள் தகுதிகாண் பருவத் தினர் தேர்வில் தேறாமற்போனால், அவருடைய தகுதிகாண் பருவத்தை ஆணையாளர் இறுதி செய்துவிட வேண்டும்.

ஆனால் தகுதிகாண் பருவகாலத்துக்குள் அவர் தேர்விற்குப் போயிருந்து, அக்காலம் கழிவதற்குமுன் தேர்வின் முடிவுகள் தெரியாவிட்டால், தேர்வின் முடிவுகள் வெளியாகிற வரையில் அவர் தொடர்ந்து தகுதிகாண் பருவத்தி

விருந்து வருவார், அவர் அவ்வாறு எழுதியிருக்கிற தேர்வில் அவர் தேருமற் போனால், 14-ஆவது விதியின்படி தகுதிகாண் பருவம் நீட்டிக்கப்பட்டாலன்றி, ஆணையாளர் அவருடைய தகுதிகாண் பருவத்தை உடனே இறுதி செய்து சந்தர்ப்பத்துக்கேற்ப, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது வேறு உள்ளாட்சி அதிகார சபையின் நிலையான அலுவலராக அல்லது பணியாளராக அவர் ஏற்கெனவே இருந்தால், அவருடைய நிலையான பதவிக்கு அவரை மீள அனுப்பிவிட வேண்டும் அல்லது ஊராட்சி ஒன்றியக் குழுவின் பணியிலிருந்து அவரை நீக்கிவிட வேண்டும்.

14. **தகுதிகாண் பருவத்தை நீட்டிப்பது.**—வரையறுக்கப்பட்ட தகுதிகாண் பருவ காலத்தின் முடிவில், தகுதிகாண் பருவத்தினர் உறுதிப்படுத்தப்படுவதற் குத் தகுதி உடையவர் அல்லர் என்று ஆணையாளர் கருதினால், ஆணையாளர் அவருடைய தகுதிகாண் பருவத்தைச் சிறிதுகாலம் நீட்டிக்கலாம், இக்கால மானது 11 ஆவது விதியில் வரையறுக்கப்பட்ட தகுதிகாண் பருவக்காலம் கழிந்துபோன தேதியிலிருந்து, எச்சந்தர்ப்பத்திலும் ஓர் ஆண்டுக்கு மேற்படக் கூடாது, தகுதிகாண் பருவம் நீட்டிக்கப்படும் சந்தர்ப்பங்களில் நீட்டிப்பு ஆணையுடன் ஒரு நிபந்தனையைச் சேர்க்கவேண்டும்; அதாவது தகுதிகாண் பருவத்தினர் தமது தகுதிகாண் பருவத்தை மனநிறைவு கொள்ளுமாறு பூர்த்தி செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறவரையில் அவருடைய ஊதிய உயர்வு நிறுத்தப்படுமென்பதே அந்த நிபந்தனையாகும்; ஆனால் இவ்வாறு நிபந் தனையைச் சேர்க்கக்கூடாதென்பதற்குத் தனிக் காரணங்கள் இருந்தால் அவ் வாறு சேர்க்கவேண்டியதில்லை. ஊதிய உயர்வை அவ்வாறு நிறுத்துவதானது, ஒரு தண்டனையாகக் கருதக்கூடாது ; தகுதிகாண் பருவகால நீட்டிப்புக்கு ஒரு நிபந்தனையாக மட்டுமே அதைக் கருதவேண்டும்; அவர் தமது தகுதிகாண் பருவத்தை மனநிறைவு கொள்ளுமாறு முடித்திருப்பதாக அறிவிக்கப்பட்ட பிறகு மேற்கொண்டு அவருடைய ஊதிய உயர்வுகளைத் தள்ளிப்போடும் விளைவை அது உடையதாகமாட்டாது.

15. **வெற்றிடம் இல்லாததனால் தகுதிகாண் பருவத்தினர்களை நீக்கிவிடு வதற்கான அல்லது மீளவும் பழைய பதவிக்கு அனுப்பிவிடுவதற்கான ஆணை.**— தகுதிகாண் பருவத்தில் இருப்பவர்களும் தங்கள் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்திருப்பவர்களும், சம்பந்தப்பட்ட அலகில் வெற்றிடம் இல்லா மையால் நீக்கப்பெறவேண்டிய அல்லது பழைய பதவிக்கு மீள அனுப்பப் பெறவேண்டிய வரிசைமுறை அடியிற்கண்டபடியாகும்:

முதலாவதாகத் தகுதிகாண் பருவத்திலிருப்பவர்கள் இளநிலை வரிசை முறையில்:

இரண்டாவதாக தங்கள் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்திருப்ப வர்கள்; இளநிலை வரிசைக் கிரமத்தில்:

ஆனால் தொடக்கப்பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்களின் தொடர்பாக நீக்கப்படவேண்டியவர் ஓர் உருது ஆசிரியராயிருந்து அவரை நீக்கி விடுவதனால் உருது தொடக்கப்பள்ளிகளில் உருது வழிப்போதனை தொடர்ந்து நடைபெறு வது பாதிக்கப்படுமானால், அவருக்கு அடுத்து மேல் உள்ள உருது ஆசிரியர் அல்லாதவரை நீக்கிவிட வேண்டும்.

விளக்கம் (1).—இவ் விதியின் காரியத்துக்காக, ஒரு தரத்தில் தகுதிகாண் பருவத்திலிருக்கிறவர்களுக்கிடையேயுள்ள இளநிலையையும் ஒரு தரத்தில் தங்கள் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்திருப்பவர்களுக்கிடையேயுள்ள இளநிலையையும் அத்தரத்தில் 21-வது விதியின் படிக்கான நியமனமல்லாத ஏனையவற்றில் முதலில் செய்யப்பட்ட நியமனத்தில் தேதியை யொட்டி நிச்ச யிக்கவேண்டும்.

எந்தத் தேதியைக் கொண்டு முதுநிலை நிச்சயிக்கப்படுகிறதோ அது ஒரு தரத்திலுள்ள இருவர் அல்லது பலருக்கு ஒன்றாகவே இருந்தால், அவர்களுக் கிடையில் முதுநிலையை அவர்கள் தொடர்பாக இதற்கு முன்னுரிமை வரிசைக் கிரமம் விதிக்கப்பட்டிருந்தால் அதைக்கொண்டு நிச்சயிக்க வேண்டும். அத்தகைய முன்னுரிமை வரிசைக்கிரமம் எதுவும் விதிக்கப்பட்டிராவிட்டால், அல்லது ஐயத்துக்கிடமான சந்தர்ப்பங்களில் முதுநிலையை ஆணையாளர் நிச்ச யிக்க வேண்டும்.

விளக்கம் (2).—நீக்கி விடுவதற்காக அல்லது மீளப்பழைய பதவிக்கு அனுப்பி விடுவதற்காக ஆட்களைத் தெரிந்தெடுப்பதற்கான யூனிட்டானது (அலகானது) ஒரே தரத்தைச் சேர்ந்த அல்லது உயர்தரங்களைச் சேர்ந்த எந்தப் பதவிகளுக்கு மாற்றங்கள், நியமனங்கள் அல்லது நியமன உயர்வுகள் சாதாரணமாகச் செய்யப்படுகின்றனவோ அத்தகைய பதவி இடங்கள் இருந்தால் அவற்றை வகிப்பவர்களின் தொகுதியாகும்.

விளக்கம் (3).—இருவர் அல்லது பலரை ஒரே சமயத்தில் ஒரு தரத்துக்கு நியமித்து ஆணை பிறப்பிக்கும்போது, ஆணையாளர், எக்காரணத்துக்காக வேனும் அவர்களுக்கிடையில் முன்னுரிமை வரிசைக்கிரமத்தை நிச்சயிக்கலாம்; அத்தகைய வரிசைக்கிரமம் நிச்சயிக்கப்பட்டிருந்தால், அதன்படி, முதுநிலையை நிச்சயிக்க வேண்டும்; தகுதிகாண் பருவத்துக்காக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய நியமனத் தேதியை கவனிக்க வேண்டியதில்லை.

16. நீக்கிவிடப்பட்டவர்களை அல்லது மீளப்பழைய பதவிக்கு அனுப்பிவிடப்பட்டவர்களை மறுபடியும் நியமித்தல்.—(1) வெற்றிடங்கள் இல்லாமையினால் 15 ஆவது விதியின்படி நீக்கிவிடப்பட்டிருப்பவர்கள் அல்லது மீளப்பழைய பதவிக்கு அனுப்பிவிடப்பெற்றிருப்பவர்கள், வெற்றிடங்கள் உண்டாகுந்தோறும், அந்த விதியில் கண்டுள்ள வரிசைக்கிரமத்துக்கு எதிர் வரிசைக்கிரமத்தில் மறுபடியும் நியமிக்கப்பட வேண்டும்:

ஆனால் அத்தகைய ஒருவருக்கு 34 ஆவது விதியைச் சேர்ந்த (அ) உள்விதியில் கண்ட (1), (3) அல்லது (4) பகுதிகளின்படி பின்னர் நீக்கப்பட்டிருந்து அல்லது மீளப்பழைய பதவிக்கு அனுப்பிவிடப்பட்டிருந்து 38 ஆவது விதியின்படி மீண்டும் நியமிக்கப்பெறப்பாத்தியதையுள்ள மற்றொருவரைக்காட்டிலும் மறுபடியும் நியமிக்கப்படுவதற்கு முன்னுரிமை ஏற்படுவதாக, இந்த உள்விதியில் உள்ளது எதனாலும் கருதப்படமாட்டாது.

(2) ஒரு பதவியில் தகுதிகாணப்பெற்றவர் அல்லது தகுதிகாண் பருவத்திலிருப்பவர், வெற்றிடம் இல்லாமையால் நீக்கிவிடப்பட்டிருந்து, அந்தப் பதவியில் மறுபடியும் நியமிக்கப்படும்போது வேலையில் வந்து சேராவிட்டால், சந்தர்ப்பத்துக்கேற்ப, தகுதிகாணப் பெற்றவர்களின் அல்லது தகுதிகாண் பருவத்திலிருப்பவர்களின் பட்டியலிலிருந்து அவர் பெயரை ஏன் நீக்கக்கூடாதென்பதற்குக் குறிப்பிட்ட ஒரு தேதிக்குமுன் காரணம் காட்டும்படி அவரைக் கேட்கவேண்டும். அவ்வாறு நீக்கக்கூடாதென்பதற்குக் குறிப்பிட்ட காலத்துக்குள் காரணம் எதுவும் காட்டப்படாவிட்டால், அல்லது காட்டப்பட்ட காரணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கவையாயிராவிட்டால், ஆணையாளர் எழுத்து மூலமான ஆணை பிறப்பித்து அதன் மூலமாகச் சந்தர்ப்பத்துக்கேற்பத் தகுதிகாணப் பெற்றவர்களின் அல்லது தகுதிகாண் பருவத்தினர்களின் பட்டியலிலிருந்து அவர் பெயரை நீக்கிவிட்டு அதற்குரிய காரணங்களை எழுதி வைத்து நீக்குவதற்கான ஆணையின்படி ஒன்றை அவருக்கனுப்பவேண்டும். நீக்குவதற்கான அத்தகைய ஆணையை எதிர்த்து இதன் பொருட்டு அரசினர் குறிப்பிடக்கூடிய மேல்முறையீட்டு அதிகாரிக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம் (அந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து இரண்டு மாதத்துக்குள் அந்த மேல் முறையீட்டைச் செய்து கொள்ள வேண்டும்).

17. பணப்பொறுப்பாளர் ஒருவர் தகுதியுடையவராகவும் பொருத்தமானவராகவும் இருந்து, பணப்பொறுப்பாளராகத் தமது தகுதிகாண் பருவத்தை மனநிறைவு தருமாறு நிறைவு செய்திருந்தால் கீழ்நிலை எழுத்தராக நியமிக்கப்பட உரிமை உள்ளவராவார்.

18. உறுதிப்படுத்தல்.—தாம் ஒன்றில் 1 (1) விதியின்படி தமது தகுதி காண் பருவத்தை நிறைவு செய்திருக்கும் ஒருவர், 15 ஆவது விதியைச் சேர்ந்த (1), (3) விளக்கங்களின்படி நிச்சயிக்கப்பட்ட அவருடைய முதுநிலைக்கிணங்க மிக விரைவில் வாய்ப்பு நேரிடும்போது உறுதிப்படுத்தப்படவேண்டும்; எந்தத் தேதியைக்கொண்டு முதுநிலை நிச்சயிக்கப்படுகிறதோ அது அத்தாரத்தைச் சேர்ந்த இருவர் அல்லது பலர் விஷயத்தில் ஒன்றாகவே இருந்தால், அவர்களுக் கிடையில் முதுநிலையை, 15 விதியைச் சேர்ந்த (1) விளக்கத்தின் கடைசி இரண்டு வாக்கியங்களில் அல்லது அவ்விதியின் (3) விளக்கத்தில் கண்டுள்ள விதமாக நிச்சயிக்க வேண்டும்.

விளக்கம்.—தகுதிகாணப்பெற்றவர் ஒருவரை, வெற்றிடம் ஏற்பட்ட தேதி அல்லது ஒரு பதவியில் அல்லது அதற்கு மேலான பதவியில் எந்தத் தேதியி லிருந்து அவர் தொடர்ச்சியாகப் பணி செய்தாரோ அந்தத் தேதி ஆகிய இவற்றில் எது பிந்தியதாயிருக்கிறதோ அந்தத் தேதியிலிருந்தே அமலாகும்படி அப்பதவியில் உறுதிப்படுத்த வேண்டும். இவ்விதியின் காரியங்களுக்காக, விடுப்பிலிருக்கிற தகுதி காணப்பெற்றவர், அவர் விடுப்பில் போயிராவிட்டால் சம்பந்தப்பட்ட தாத்தில் அல்லது அதைவிட மேலானதரத்தில் பணி செய்திருந் திருப்பாராளுல் அத்தரத்தில் பணி செய்திருப்பதாகக் கருதப்படுவார்.

19. **போர்ப்பணி வேட்பாளர்களை உறுதிப்படுத்தல்.**—18 ஆவது விதியில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே போர்ப்பணி வேட்பாளர் களுக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட வெற்றிடங்களில் எதற்காகவேனும் தெரிந் தெடுக்கப்பட்டு அதில் நியமிக்கப்பட்டுள்ள போர்ப்பணி வேட்பாளர் ஒருவரை, அவருடைய தகுதிகாண் பருவம் 13 ஆவது விதியின்படி இறுதி செய்யப் பட்டாலன்றி அல்லது 14 ஆவது விதியின்படி நீட்டிக்கப்பட்டாலன்றி மற்றப் படி வரையறுக்கப்பட்ட தகுதிகாண் பருவம் நிறைவு பெறுவதன்பேரில், அந்த வெற்றிடத்தில் உறுதிப்படுத்த வேண்டும்.

20. **தகுதிகாண் பருவத்தினர்கள் முதல் ஊதிய உயர்வு வாங்குதல்.**—(1) ஒரு தகுதிகாண் பருவத்தினர், ஊதிய உயர்வினை ஈட்டுவதற்கு அவசியமான காலம் பணி செய்தபிறகு அந்தப் பதவிக்குப் பொருந்தக்கூடிய காலக்கிரம சம்பள ஏற்ற முறை ஏதேனும் இருந்தால் அதற்கிணங்க முதல் ஊதிய உயர்வு வாங்க உரிமை உள்ளவராவார் ; ஆயினும் அவர் தமது தகுதிகாண் பருவத்தை மனநிறைவு பெறுமாறு நிறைவு செய்திருப்பதாக அறிவிக்கப்படும் தேதியிலி ருந்து மாத்திரம் அவருடைய அடுத்த ஊதிய உயர்வு வாங்கப்படவேண்டும்; ஆனல் முதல் ஊதிய உயர்வுத் தேதியிலிருந்து பணி செய்த காலத்தை அடுத்து வரும் ஊதிய உயர்வுகளுக்காகக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

(2) தமது தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்து, உறுதிப்படுத்தப்பட இருப்பவர், அவருடைய தகுதிகாண் பருவம் உட்பட, அந்தப்பதவிக்குப் பொருந்தக்கூடிய காலக்கிரம சம்பள ஏற்ற முறை ஏதேனும் இருந்தால் அதற் கிணங்க அவ்வப்போது தாம் ஈட்டிய ஊதிய உயர்வுகளை வாங்க உரிமை உள்ள வராவார்.

21. தற்காலிக நியமனங்கள்.—இவ்விதிகளிலாவது வேறு எந்த விதிகளி லாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே பொதுநலனை முன்னிட்டு அல்லது நிருவாக காரணங்களுக்காகப் பதவியிலுள்ள வெற்றி டத்தை உடனே நிரப்புவது அவசியமாயிருந்து இவ்விதிகளின்படி அல்லது அந்த நியமனத்தை முறைப்படுத்துகிற வேறு எவையேனும் விதிகளின்படி அந்த நியமனத்தைச் செய்வதில் காலதாமதமாகுமானால், ஆணையாளர், மேற்படி விதிகளின்படியன்றி மற்றபடி தற்காலிகமாக ஒருவரை நியமிக்கலாம்; அவர் அதற்கான காரணங்களைத் தெளிவாய் எழுதிவைக்க வேண்டும்.

ஆனால் அத்தகைய நியமனங்கள், கிரமமான நியமனங்களைப் போலவே நியமனக்குழுவின் சம்மதத்தை முன்னதாகப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

மேலும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பொது சுகாதார மருத்துவ நிறுவனங்களில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களைப் பொறுத்தவரை அந்த நியமனத்தின் காலம் மூன்றுமாதத்துக்கு மேற்பட்டால், அரசினரால் குறிப்பிடப்படும் அதிகாரியின் முன்சம்மதத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அத்தகைய ஒரு பதவியில் வெற்றிடம் ஏற்பட்டு, தகுதி பெற்றிராத வேட்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டால், ஆணையாளர் அச்செய்தி யைப் பொருத்தமான அதிகாரிக்கு உடனே தெரிவிக்க வேண்டும்.

அன்றியும், மேற்படி விதியில் சொல்லப்பட்டதல்லாத வேறொரு பதவிக்கு நியமனங்களைப் பொருத்தவரை நியமனக்காலம் மூன்று மாதத்துக்கு மேற்பட் டால் இணை வளர்ச்சி ஆணையாளரின் முன்சம்மதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அல்லாமலும், இவ்விதியின்படி செய்யப்படும் நியமனம் ஒரு சமயத்தில் ஓர் ஆண்டுக்கு மேற்படக்கூடாது.

(2). (1) உள்விதியின்படி நியமிக்கப்படுவருக்கு சந்தர்ப்பத்துக்கேற்ப அவருடைய நிலையானசம்பளம் அல்லது அப்பதவிக்குப் பொருத்தமான சம்பளத்தின் காலக்கிரம ஏற்ற முறையில் குறைந்த பட்ச சம்பளம் ஆகியவற் றில் எது அதிகமாயிருக்கிறதோ அதைக் கொடுக்கவேண்டும். (1) உள்விதி யின்படி அந்தப் பதவியில் செய்யப்படும் பணிக்காலத்தை அப்பதவியில் ஊதிய உயர்வுக்காகக் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது.

(3). (1) உள் விதியின்படி நியமிக்கப்படுபவர், அப் பதவியில் தகுதிகாண் பருவத்தினரென்று கருதப்படமாட்டார்.

(4). (1) உள்விதியின்படி நியமிக்கப்படுபவருடைய பணிகள், அறிவிப்பின்றியும் காரணம் எதுவும் சொல்லாமலும் எப்போதேனும் இறுதி செய்யப்படுவதற்குட்பட்டவையாகும்.

22. தேர்வுப் பதவிகளுக்கும் தேர்வு இல்லாத பதவிகளுக்கும் உயர்த்துவது—(அ) தலைமை எழுத்தர் பதவி தேர்வுப்பதவியாகும். மற்றெல்லாப் பதவிகளும் தேர்வு இல்லாத பதவிகளாகும்.

(ஆ) தகுதிகளையும் திறமையையும் கொண்டு தேர்வுப்பதவிக்கு உயர்த்த வேண்டும்; தகுதிகளும் திறமையும் ஏறத்தாழ சமமாயிருந்தால்தான் முதுநிலையைக் கவனிக்க வேண்டும்.

(இ) தேர்வு இல்லாத பதவிகளுக்குக் கண்டிப்பான முதுநிலைக் கிணங்க உயர்த்த வேண்டும்; ஆனல்

(i) முதுநிலையாளர் ஒருவர் உயர் பதவி வகிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட தகுதியைப் பெற்றிராவிட்டால் அல்லது அப்பதவியை வகிப்பதற்குத் தகுதியற்றவரெனத் திட்டமாக காண்பிக்கப்பட்டால், அல்லது

(ii) அவர் பெரிதும் நெறி தவறி நடந்திருக்கிருரென மெய்ப்பிக்கப்பட்டிருப்பது காரணமாக அவரை உயர்த்துவது உசிதமன்று எனக் கருதப்பட்டால், முதுநிலையைக் கவனிக்க வேண்டியதில்லை.

(ஈ) தேர்வு இல்லாத பதவிக்கு உயர்த்தப் படாமலிருப்பது, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர்களையும் பணியாளர்களையும் நியமிப்பதற்கும் தண்டிப்பதற்கும் சம்பந்தப்பட்ட விதிகளின் பொருளின்படி உத்தியோக உயர்வை நிறுத்தி வைப்பது எனக் கருதப்படும்.

(உ) கூட்டு வளர்ச்சி ஆணையாளர், தலைமை எழுத்தர்களை நியமிப்பது பற்றிய ஆவணங்களைக் கேட்டனுப்பி, தமக்குத் தகுதியாகத் தோன்றக்கூடிய ஆணைகளைப் பிறப்பிக்கலாம். இணை வளர்ச்சி ஆணையாளர் பிறப்பித்த ஆணைகளை ஆணையாளர் நிறைவேற்றவேண்டும்.

23. இராணுவ வேலையிலிருக்கிற மருத்துவ அலுவலர்களும் மருந்து கலப்பவர்களும்.—(1) அடியிற் கண்டதற்கு முரணுக இவ்விதிகளிலாவது வேறு எந்த விதிகளிலாவது ஒழுங்குமுறைகளிலாவது என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே, ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு

உட்பட்ட மருத்துவ அலுவலர்களும் மருந்து கலப்பவர்களும் இராணுவ வேலையிலிருந்தாலும் அவ்வேலைக்குத் தாங்களே சென்றாலும் நியமித்தனுப்பப் பட்டாலும், அவர்களுக்குப் பின்வரும் நிபந்தனைகள் பொருந்தும்.

(அ) அத்தகைய ஒரு மருத்துவ அலுவலர் அல்லது மருந்து கலப்பவர் செய்யும் களப்பணிக்காலமானது தகுதிகாண் பருவம், ஊதிய உயர்வு ஆகிய வற்றின் காரியங்களுக்காக சந்தர்ப்பத்துக்கேற்ப மருத்துவ அலுவலரின் அல்லது மருந்து கலப்பவரின் பதவியில் அக்காலத்தைப்போல் இரு மடங்குக் காலம் வேலையிலிருப்பதாகக் கருதப்படும்.

விளக்கம்.—இப்பகுதியின் காரியத்துக்காகப் "பொதுப் பணிப் பொறுப்பு"டன் இராணுவத்தில் செய்யப்படும் எல்லாப் பணிகளும், சம்பந்தப் பட்டவர் போர் நடவடிக்கை அலகில் உள்ளபடி அமர்த்தப்பட்டாலும் படா விட்டாலும், "களப்பணி" என்று கருதப்படும்.

(ஆ) இராணுவ வேலை செய்திருப்பவர்கள், சந்தர்ப்பத்துக்கேற்ப மருத்துவ அலுவலர்கள் அல்லது மருந்து கலப்பவர்கள் பதவியில் காயமான வெற்றிடங்களிலே இராணுவ வேலை செய்யாதவர்களை விட முன்னுரிமை உள்ள வர்களாகப் பாவித்து நியமிக்கப்படுவதற்கு உரியவர்களாவார்கள். இராணுவ வேலை செய்தவர்களுக்கிடையே, முன்னதாக இராணுவ வேலைக்குச் சென்றவர் களுக்குச் சலுகை காட்ட வேண்டும்.

(இ) மருத்துவ அலுவலர்கள் அல்லது மருந்து கலப்பவர்கள் பதவிகளில் பதிலியாக வேலை பார்ப்பவர்களும் இராணுவ வேலை செய்தவர்களுமான இராணுவ வேலை செய்யாதவர்களுமான எல்லா ஆட்களையும் நீக்குகிற வரையில், வெற்றிடங்கள் இன்மை காரணமாக நீக்கப்படக்கூடாது. இராணுவ வேலை செய்திருப்பவர்களுக்கிடையே, முன்னதாக இராணுவ வேலைக்குச் சென்றவர் ஒருவர், பின்னர் இராணுவ வேலைக்குச் சென்றவர் ஒருவர், நீக்கப்படுவதற்கு முன், வெற்றிடம் இன்மையால் நீக்கப்படக்கூடாது.

(ஈ) வெற்றிடங்கள் இன்மையால் நீக்கி விடப்பட்டிருப்பவர்கள், வெற் றிடங்கள் ஏற்படுந்தோறும், அவர்கள் நீக்கப்பட்ட வரிசைக் கிரமத்துக்கு எதிர்வரிசைக் கிரமத்தில் மீண்டும் நியமிக்கப்படவேண்டும்.

(உ) அத்தகைய ஒரு மருத்துவ அலுவலர் அல்லது மருந்து கலப்பவர் இராணுவ வேலையில் கழித்த காலமானது, அவருக்குப் பொருந்துகிற விதி களின்படி விடுப்பு சேர்ந்து வருவதற்காகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இராணுவ வேலையின்போது விடுப்பு எடுத்திருந்தால் அவ்விடுப்புக் காலத்தை ஈட்டியவிடுப்பிலிருந்து கழித்துவிட வேண்டும்.

(ஊ) இராணுவ வேலைக்கென நியமித்தனுப்பப்படும் மருத்துவ அலுவலர்களும் மருந்து கலப்பவர்களும் குறிப்பிட்ட காலத்தில் அமலில் இருக்கிற விதிகளின்படி ஓய்வூதியம் பெறத்தகுதி உள்ளவர்களாயிருந்தால், அவர்கள் தங்கள் ஓய்வூதியம் விஷயத்தில் எதிரிடையாகப் பாதிக்கப்படமாட்டார்கள்.

(3) தற்காலிகப் பணியில் பணி செய்ய அரசினரால் ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் விட்டு வைக்கப்படுபவர்கள், தங்களுக்குட்பட்டுப் பணி செய்ய அரசினர் அவர்களைத் திருப்பி அழைக்கும்போது, ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குட்பட்ட அவர்களுடைய தற்காலிகப் பணியினின்றும் விடுவிக்கப்பட வேண்டும்.

24. வேலைக்கு வரவொட்டாமல் விலக்கப்பட்டவர்களும் வேலையிலிருந்து தள்ளிவிடப்பட்டவர்களுமான அரசுப்பணியாளர்களும் முதலியவர்களை அமர்த்தக்கூடாதென்பது.—ஒருவர் மத்திய அல்லது மாநில அரசின் அல்லது ஒரு உள்ளாட்சி அதிகார சபையின் பணியிலிருந்து தள்ளிவிடப்பட்டிருந்தால், அல்லது நொடிப்பு காரணமாக அப்பணியிலிருந்து நீக்கப்பட்டிருந்தால், அல்லது மத்திய அல்லது மாநில அரசுப் பணியில் அமர்த்தவொட்டாமல் விலக்கப்பட்டிருந்தால், அவரை, அரசினரின் முன் ஒப்பளிப்புடனன்றி மற்றப்படி, ஊராட்சி ஒன்றிய பணித்தொகுதியில் சேர்க்கக்கூடாது.

25. உடல்நிலைச் சான்றும் நன்னடத்தைச் சான்றும்.—(1) ஊராட்சி ஒன்றிய பணியிலுள்ள ஒரு பதவிக்கு முதன் முறையாக நியமிக்கப்படும் அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரிடமிருந்தும், வயது, உடல் நலம் அம்மை குத்திக் கொண்டது பற்றிய சான்றினை ஆணையாளர் பெற வேண்டும்.

ஆனால், 21 ஆவது விதியின்படி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்து, அந்த நியமனத்தின் காலம் மூன்று மாதத்துக்கு மேற்படாவிட்டால், அவரைப் பொருத்தவரை சான்று காட்டவேண்டுமென ஆணையாளர் வற்புறுத்தாமலிருந்து விடலாம்.

(2). (1) உபவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றானது 150 ரூபாய்க்கு மேற்படாத குறுமச் சம்பளமுடைய ஒரு பதவிக்கு நியமிக்கக் கருதியிருக்கிற ஒருவர் விஷயத்தில் சிவில் உதவி மருத்துவரின் தகுதிக்குக் குறையாத தகுதியிலுள்ள ஓர் அலுவலராலும் (அல்லது M.B.B.S பட்டம்பெற்று, நகராட்சி அல்லது தலநிதி மருத்துவ மனையில் அல்லது மருந்தகத்தில் வேலையில் அமர்ந்திருக்கிற ஓர் உதவி மருத்துவராலும்) அல்லது பட்டம்பெற்று அரசினர் மருத்துவமனை ஒன்றில் பணியாற்றுகிற ஒரு கௌரவ உதவி மருத்துவ

அலுவலராலும், மற்றவற்றில் ஆணைபெற்ற ஒரு மருத்துவ அலுவலராலும் மாவட்ட மருத்துவ அலுவலராலும் அல்லது சிவில் மருத்துவராலும் அல்லது கௌரவ மருத்துவ அலுவலராலும் கையெழுத்திடப்படவேண்டும்.

(3) ஒருவர் பின்வருவனவற்றில் ஆணையாளருக்கு மனநிறைவு அளித்தாலன்றி மற்றபடி, அவர் நேர்முக ஆட் சேர்ப்பு மூலமாக ஊராட்சி ஒன்றியப் பணியிலுள்ள ஒரு பதவிக்கு நியமிக்கப்பெறத் தகுதி உள்ளவர் ஆகமாட்டார்: அவையாவன :—

(i) தாம் நல்ல உடல் நலம் உடையவராகவும், சுறுசுறுப்பாகச் செயலாற்றுபவராகவும், அவ்வேலைக்குத் தம்மைத் தகுதியற்றவராக்கும் உடற்குறை அல்லது பலவீனம் இல்லாதவராகவும் இருக்கிறாரென்பது :

(ii) அவ்வேலைக்குத் தம்மைத் தகுதியுள்ளவராக்குகிற நடத்தையும் முன்வரலாறுகளும் தாம் பெற்றிருக்கிறாரென்பது.

26. சிலவற்றில் செலுத்த வேண்டிய ஈடு.—ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஓர் அலுவலர் அல்லது பணியாளர், ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் அவசியமெனக் கருதக்கூடிய ஈட்டினைச் செலுத்தும்படி ஆணையாளர் கேட்கவேண்டும். ஆனால் அவ்வாறு கேட்கப்படும் ஈட்டுத் தொகையானது, அந்த அலுவலர் அல்லது பணியாளர் கையாளுகிற அல்லது கையாளக்கூடிய ரொக்கத் தொகைக்கும் மதிப்புள்ள பொருள்களின் பண மதிப்புக்கும் மேற்படக் கூடாது.

(அ) இவ்விதிகளின்படி வாங்கப்படுகிற ஈடு—

(i) ரொக்கமாக அல்லது

(ii) அஞ்சலகச் சேமிப்பு வங்கி வைப்புத் தொகைகளாக அல்லது

(iii) அஞ்சலக ஐந்தாண்டு ரொக்கச் சான்றுகளாக :

இச்சான்றுகள் (அவற்றின் முகப்பு மதிப்புக்காகவல்லாமல்) விலைக்கு வாங்கப்படுகிற தொகைக்காக இருக்கவேண்டும். ஆனால் வைப்பீட்டாளர் அஞ்சல் துறைத்தலைவரின் ஒப்பளிப்புடன் அந்தச் சான்றுகளை ஆணையாளருக்கு முறைப்படி மாற்றவேண்டும்.

(iv) அஞ்சலக 10 ஆண்டு பாதுகாப்புச் சான்றுகளாக, அல்லது

(v) அஞ்சலக 5, 7 அல்லது 12 ஆண்டு தேசியச் சேமிப்புச் சான்றுகளாக அல்லது

(vi) அரசினரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஈட்டுறுதி நிறுவனங்களின் நம்பிக்கைப் பத்திரங்களாக இருக்க வேண்டும்.

(ஆ) குறிப்பிட்ட அலுவலர் அல்லது பணியாளர் ரொக்கமாக அல்லது ஒரு மொத்தமாக அல்லது (அ) பகுதியில் குறிப்பிட்ட வகைகளில் எதன் மூலமாக ஈடுகாட்ட முடியாமலிருக்கிற விலக்கான நிகழ்வுகளில் அவருடைய சம்பளத்தில் பத்து சதவீதம் அல்லது நாலாண்டுகளில் அந்த ஈட்டினை நிரப்பக் கூடிய தொகை ஆகிய இவைகளில் எது அதிகமாயிருக்கிறதோ அதை அச்சம்பளத்திலிருந்து கழித்துக் கொள்வது மூலமாக சேரவேண்டிய ஈட்டினைத் தவணைகளில் அவரிடமிருந்து பெறவேண்டும்.

ஆனால், ரொக்கமாகக் கட்டவேண்டிய ஈட்டுத் தொகை முழுவதும் வசூலிக்கப்பட்டாகிற வரையில், ரொக்கமாகக் கட்ட வேண்டிய ஈட்டுத் தொகையைப்போல் இரண்டு மடங்குக்குக் குறையாத தொகைக்கு ஆள் பிணையங்கள் வாங்கவேண்டும். அத்தொகையைச் செலுத்தக்கூடியவர்களென்று ஆணையாளருக்குச் சந்தேகமறத் தெரிகிறவர்களிடமிருந்து அவ்வாறு வாங்க வேண்டும்; அல்லது ரொக்கமாகக் கட்ட வேண்டிய ஈட்டுத் தொகையைப்போல் இரண்டு மடங்குக்குக் குறையாத மதிப்புள்ள அசையாப்பொருள் வடிவமாக ஈடுவாங்க வேண்டும். பிந்தியுள்ளதில் ஈடாக ஏற்றுக் கொள்ளப்படுகிற அச்சொத்தின் பேரில் எவ்வித வில்லங்கங்களும் இல்லையென்றும், அதை ஈடு காட்டுகிற அலுவலருக்கு அல்லது பணியாளருக்கு அதனிடம் முழு உரிமை இருக்கிறதென்றும் ஆணையாளர் சந்தேகமறத் தெரிந்து கொள்ள வேண்டும்: இழப்பு நேரிட்டால், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நலன் போதுமானபடி பாதுகாக்கப்படும் விதத்தில் அந்தச் சொத்தைக் கவனமாக மதிப்பிட வேண்டும்.

27. அரசுப் பணியாளர்களுக்குள்ளவைகளைப்போன்ற பணி நிபந்தனைகள்.— (1) இவ்விதிகளிலாவது குறிப்பிட்ட காலத்தில் அமலில் இருக்கிற வேறு எந்த விதிகளிலாவது வேறு விதமாகச் சொல்லப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகிய எல்லாருடைய பணி நிபந்தனைகள், மேற்படி சட்டத்தில் கண்ட 58-ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட் பிரிவின்படி அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் ஒழுங்கு முறைகள் எவற்றையும் செய்திராவிட்டால், பின்வருபவைகள் சம்பந்தமாக, அதே நிலையும் தகுதியும் உள்ள அரசுப் பணியாளர்களுக்கு உள்ளவற்றைப் போலவே இருக்கும், அவையாவன்:

(அ) சம்பளமும் படிகளும்.

(ஆ) விடுப்பும் விடுப்புப் படியும்.

(இ) பயணப்படி.

(ஈ) வயது முதிர்வும் ஓய்வு பெறலும்.

(2) அத்தகைய அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்துகிற நிபந்தனைகளில் அரசினருக்கும் துறைத்தலைவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள எவையேனும் அதிகாரங்களை, முறையே ஊராட்சி ஒன்றியக் குழுவினரும் ஆணையாளரும் செலுத்த வேண்டும்.

(3) ஊராட்சி ஒன்றிய மன்றப் பணியில் அமர்ந்திருக்கிற முன் சந்தர்ப்பத்துக்கேற்ப வேறொரு தல ஆட்சிக் கழகத்தின் அல்லது அரசினரின் பணியில் சேர்ந்தால், அவர்களைப் பொருத்தவரை அடிப்படை விதிகளின்படிக்கான விடுப்பு விதிகள் பொருந்தும். 1933, செப்டம்பர் 4 ஆம் தேதியன்றாவது அதற்குப் பிறகாவது சந்தர்ப்பத்துக்கேற்ப வேறொரு உள்ளாட்சிக் கழகத்தின், ஊராட்சி ஒன்றிய மன்றத்தினரின் அல்லது அரசினரின் கீழ் பணியில் சேர்ந்தால், அவர்களைப் பொருத்தவரை தமிழ் நாடு விடுப்பு விதிகள் பொருந்தும்.

28. ஊதிய உயர்வு முன் பணம் கொடுப்பதற்கான நடைமுறை.—ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஓர் அலுவலருக்கு அல்லது பணியாளருக்கு ஊதிய உயர்வு முன் பணத்துக்கு ஒப்பளிக்கும் ஆணை எதுவும், அரசினரால் அல்லது அந்த அலுவலர் அல்லது பணியாளருக்குக் கொடுக்கப்படத்தக்க சம்பளங்கள், கட்டணங்கள், படிகள் ஆகியவற்றை நிச்சயிக்க அல்லது மாற்ற அதிகாரம் பெற்றுள்ளவரால், உறுதிபடுத்தப்பட்டாலன்றி மற்றப்படியும் உறுதிப்படுத்தப் படுகிற வரையிலும், அமலுக்கு வரமாட்டாது.

29. ஓய்வு பெறும் வயது.—நிலையானதாகவோ நிலையில்லாததாகவோ உள்ள உயர்தரப் பணியிலிருக்கிற ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலர் அல்லது பணியாளர் எவரையும், அவருக்கு ஐம்பத்தைந்து வயது ஆன பிறகு பணியில் வைத்திருக்கக்கூடாது.

ஆனால் தமிழ் நாடு மாநிலத்திலிருக்கிற ஒரு தல ஆட்சிக் கழகத்தின் அல்லது அரசினரின் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருப்பவர்களுக்கு ஐம்பத்தைந்து வயது ஆன பிறகு அவர்களை, ஒரு சமயத்தில் ஓர் ஆண்டுக்கு மேற்படாத காலம் வரையில், அரசினரின் முன் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொண்டு, ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் பொதுநலனை முன்னிட்டு அமர்த்திக் கொள்வதற்கு இவ் விதியில் உள்ளது எதுவும் பொருந்தாது.

மேலும், ஓர் அலுவலரின் அல்லது பணியாளரின் பேரிலான பெருங்குற்றச் சாட்டுகள் விசாரணை செய்யப்படுகிற வரையில் அவர் தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டிருந்தால் அவரை, அக்குற்றச் சாட்டுகள் பேரில் ஆணைகள் பிறப் பிக்கப்படுகிற தேதி வரையில் 55 வயதுக்கப்பாலும், மாநில அரசினரின் முன் ஒப்பளிப்புடன் பணியில் வைத்துக் கொள்ளலாம்.

அன்றியும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர்களால் நடத்தப்படும் தொடக்கப் பள்ளிகள் இருக்கிற பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் பொருத்தவரை பணியி லிருந்து ஓய்வுபெறும் வயது ஐம்பத்தெட்டாகும். மறு அமர்வு, நிபந்தனை களின் பேரில் பணியிலிருந்தவர்கள் உட்பட, 1963 மார்ச் 31 ஆம் தேதியன்று பணியிலிருந்த எல்லா ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகை பொருந்தும்: ஆனால் 1963 மார்ச் 31 ஆம் தேதியன்று அவர்கள் ஐம்பத்தெட்டு என்னும் வயது வரையறைக்குட்பட்டவர்களாயிருந்திருக்க வேண்டும்.

விளக்கம்.—"உயர்தரப் பணி" என்பதற்கு அடிப்படை விதிகளில் என்ன பொருள் சொல்லப்பட்டிருக்கிறதோ அதே பொருளை அது இவ்விதியின் காரியங் களுக்காக உடையதாயிருக்கும்.

30. ஓய்வு பெற்ற ஆசிரியர்களை மறுபடியும் அமர்த்திக் கொள்வது.— 29 ஆவது விதியில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே தொடக்கப் பள்ளிகளில் இருக்கிற தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட ஆசிரியர்கள் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தால் அவர்களை, அவ்வப்போது அரசினர் பிறப்பிக்கும் பொதுக் கட்டளைகளுக்கிணங்கவும், அக்கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரி களின் ஒப்பளிப்புடனும், ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் பணியில் மீண்டும் அமர்த்திக் கொள்ளலாம்.

31. பணிப்பதிவேடு வைத்து வருதல்.—(1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத் தின் அலுவலர் அல்லது பணியாளர் ஓய்வூதியம் பெற உரியவராயிருந்தால் அல்லது அக்குழுவினர் ஏற்படுத்தி வைத்துவரும் வருங்காலச் சேமிப்பு நிதிக்குச் சந்தா செலுத்தினால், அப்படிப்பட்ட ஒவ்வொருவருக்காகவும், அரசி னரால் அவ்வப்போது விதிக்கப்படக் கூடிய படிவப்படி பணிப்பதிவேடு ஒன்று வைத்து வரவேண்டும்.

(2) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஓர் அலுவலர் அல்லது பணியாளர் பிறந்த தேதியன்று அவருடைய பணிப்பதிவேட்டில் ஏற்கெனவே எழுதப் பட்டுள்ள தேதியைப் பள்ளிகளில் அமர்ந்திருக்கிற தலைமை ஆசிரியர்கள், தலைமை ஆசிரியைகள், ஆசிரியர்கள் ஆகியவர்கள் விஷயத்தில் கல்வித் துறை

இயக்குநரின் முன் ஒப்பளிப்புடன் அல்லது கட்டளையின் படி அன்றி மற்றப் படியும், மற்ற விஷயங்களில் இணை வளர்ச்சி ஆணையாளரின் முன் ஒப்பளிப்புடன் அல்லது கட்டளையின்படி அன்றி மற்றப்படியும் மாற்றக்கூடாது. அத்தகைய மாறுதல்கள் செய்வதற்கான நடைமுறையானது, தமிழ் நாடு மாநில கீழ்நிலைப் பணிகளுக்குச் சம்பந்தப் பட்ட பொது விதிகளின் 11-ஆம் பாகத்தைச் சேர்ந்த 49 ஆவது விதியில் கண்ட நடைமுறையேயாகும்.

32. **பணிப்பதிவேடுகள் வைத்து வருவதற்கு ஆணையாளர் பொறுப்பாளியாவாரென்பது.**—(1) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவருடைய பணிப்பதிவேட்டைச் சரியாகவும் நாளது தேதி வரையில் எழுத வேண்டியவற்றை எழுதியும் வைத்து வருவதற்கு ஆணையாளர் பொறுப்பாளியாவார். ஒவ்வோராண்டும் முடிந்த பிறகு கூடிய விரைவில் சரி பார்த்ததைப் பற்றிய ஆண்டுச் சான்று ஒன்றை அவர் பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

(2) தொடக்கப்பள்ளிகளிலும் மருந்தகங்களிலும் வேலை செய்யும் பணியாளர்களின் பணிப்பதிவேடுகளில் ஆண்டுச் சரிபார்த்தல் சான்றுகளைப் பதிவு செய்ய, ஆணையாளர் இதன் பொருட்டு வேறு யாருக்கேனும் அதிகாரம் வழங்கலாம்.

33. **ஆணையாளர் அனுப்ப வேண்டிய பணியாளர் பட்டியல் பற்றிய விவரப் பட்டியல்.**—(1) ஆணையாளர் அக்கவுண்டன்ட் ஜெனரலுக்கு

(அ) ஒவ்வோர் ஆண்டிலும் மே 15 ஆம் தேதிக்குள் ஊராட்சி ஒன்றிய மன்றப் பணித்தொகுதியைச் சேர்ந்த எந்தப் பதவிகள் சம்பந்தமாக, முந்திய ஆண்டில் அரசினரின் முன் ஒப்பளிப்புடன் ஓய்வூதிய உதவித்தொகை கொடுக்கப்பட்டு வந்ததோ அத்தகைய எல்லாப் பதவிகளையும் காட்டும் ஒருங்கிணைந்த விவரப்பட்டியலையும்.

(ஆ) ஒவ்வொரு மாதத்திலும் 15 ஆம் தேதிக்குள் (அ) பகுதியில் குறிப்பிட்டுள்ள பதவிகளின் ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையிலும் சம்பள வீதங்களிலும் அடுத்து முந்திய மாதத்தில் செய்யப்பட்ட எல்லா மாறுதல்களையும் பற்றிய ஒருங்கிணைந்த விவரப்பட்டியலையும் அனுப்ப வேண்டும்.

(2). (1) உள்விதியைச் சேர்ந்த (அ) (ஆ) பகுதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கிற விவரப் பட்டியல்கள், அவ்வப்போது மாநில அரசினர் விதிக்கக்கூடிய படிவப்படி இருக்க வேண்டும்.

34. பதவிகள் எடுத்துவிடப்படுவதன் பேரில் அனுப்பி விடுவதற்காக அல்லது பழைய பதவியில் மீள அமர்த்துவதற்காக இன்ன வரிசைக் கிரமப்படி ஆளைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்பது.—(அ) ஏதேனும் பதவி அல்லது பதவிகள் எடுத்துவிடப்பட்டால் சம்பந்தப்பட்ட பகுதியிலிருந்து அனுப்பி விடுவதற்காக அல்லது பழைய பதவியில் மீள அமர்த்துவதற்காகப் பின்வரும் வரிசைக் கிரமப்படி ஆட்களைத் தேரிந்தெடுக்க வேண்டும்; அதாவது.—

(1) தங்கள் தகுதி காண் பருவத்தை நிறைவு செய்திராத பதவி ஆட்கள், இளநிலை வரிசைக்கிரமப்படி;

(2) தங்கள் தகுதிகாண் பருவத்தைப் பூர்த்தி செய்திருப்பவர்கள்; இளநிலை வரிசைக் கிரமப்படி:

(3) நிலையான அலுவலர்கள் அல்லது பணியாளர்கள், இளநிலை வரிசைக் கிரமப்படி;

ஆனல், ஒரு பதவி எடுத்துவிடப் படுவதன் பேரில், ஓர் அலுவலருக்கு அல்லது பணியாளருக்கு வேறு விதமாய் வேலை கொடுக்க முடியாமலிருந்தாலன்றி மற்றப்படி, அவரை அனுப்பிவிடக்கூடாது.

மேலும், தொடக்கப்பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்கள், விஷயத்தில் அனுப்பிவிட வேண்டியவர் உருது ஆசிரியராயிருந்து, அவர் அனுப்பிவிடப்படுவதனல் உருதுத் தொடக்கப்பள்ளிகளில் உருது மூலம் தொடர்ந்து போதனை வழங்குவது பாதிக்கப்படுமானல் அவருக்கு அடுத்து மேலுள்ள உருது ஆசிரியர் அல்லாத ஒருவரை அனுப்பிவிட வேண்டும்.

விளக்கம் (1) எந்தப் பதவியின் சம்பளம் குறைக்கப்படுகிறதோ அந்தப் பதவி இவ்வுள் விதியின் பொருளின்படி நீக்கிவிடப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

விளக்கம் (2) அனுப்பிவிடுவதாக அல்லது மீளவும் பழைய பதவியில் அமர்துவதற்காக ஆட்களைத் தெரிந்தெடுக்கும் காரியங்களுக்கான யூனிட்டானது எந்தத் தரத்துக்கு அல்லது உயர்தரங்களிலிருந்தால் அவற்றிற்கு ஒரே அதிகாரி சாதாரணமாக மாற்றல்கள், நியமனங்கள் அல்லது உத்தியோக உயர்வுகள் செய்கிருரோ அதே தரத்தைச் சேர்ந்த அல்லது உயர்தரங்களைச் சேர்ந்த பதவிகளை வகிப்பவர்களின் தொகுதியாகும்.

ஆனல், தொடக்கப்பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்கள் ஒரு தனி யூனிட் ஆவார்கள்.

விளக்கம் (3) இவ்வுள் விதியின் காரியத்துக்காக, இளநிலையை அல்லது முதுநிலையை—

(i) (1) பகுதியின் கீழ்வரும் விஷயத்தில், சம்பந்தப்பட்ட தாத்திலே 21 (1) விதியின்படிக்கான நியமனமல்லாத வேறு முதல் நியமனத்தின் தேதியைக் கொண்டும்,

(ii) (2) பகுதியின் கீழ் வரும் விஷயங்களில், சம்பந்தப்பட்ட தாத்திலே 21(1) விதியின்படிக்கான நியமனமல்லாத வேறு முதல் நியமனத்தின் தேதியைக் கொண்டும்;

(iii) (3) பகுதியின் கீழ் வரும் விஷயங்களில் பணிப்பட்டியலில் உள்ள நிலையைக் கொண்டும் நிச்சயிக்க வேண்டும்.

மேலும், தொடக்கப்பள்ளிகளில் ஆசிரியர்களின் பதவிகள் நீக்கிவிடப்பட்டால் (1) (2) (3) பகுதிகளின்படி அனுப்பிவிடுவதற்காக ஆட்கள் தெரிந்தெடுக்கப்படுவதற்கு முன் பயிற்சி பெருமலும் பயிற்சி பெற்றுமுள்ள கீழ்த்தாத் தொடக்க நிலை ஆசிரியர்களைப் பின்வரும் வரிசை முறைப்படி அனுப்பிவிட வேண்டும்—

(i) கீழ்த்தாத் தொடக்க நிலையிலுள்ள பயிற்சி பெருத ஆசிரியர்கள்; இளநிலைவரிசைக்கிரமப்படி :

(ii) கீழ்த்தாத் தொடக்க நிலையிலுள்ள பயிற்சி பெற்ற எந்த ஆசிரியர்கள் நிறைவாக 50 வயது அடைந்திருக்கிருர்களோ அல்லது ஓய்வூதியம், வருங்காலச் சேமிப்பு நிதி அல்லது பணிக்கொடைக்குத் தகுதிபெறச் செய்யும் 20 ஆண்டுப் பணி நிறைவு செய்திருக்கிருர்களோ அந்த ஆசிரியர்கள், இளநிலை வரிசைக்கிரமப்படி

(ஆ) (அ) உள்விதியைச் சேர்ந்த (3) பகுதியின்படி அனுப்பிவிட வேண்டிய ஒருவர், கீழ்த்தரம் ஒன்றிலிருந்து சாதாரணமாக பணி உயர்வுகள் செய்யப்படுகிற ஒரு தாத்திலுள்ள பதவி ஒன்றை வகித்தால், அவர் தாம் விரும்பினல், அனுப்பிவிடப்படுவதற்குப் பதிலாக, அந்தக் கீழ்த்தாத்தில் மீளவும் அமர்த்தப்பட்டு அதன் உச்சியில் இடம் பெறச் செய்ய வேண்டும்; அப்போது அந்தக் கீழ்த்தாத்திலிருந்து அனுப்பிவிடுவதற்காக அல்லது மீளவும் பழைய பதவியில் அமர்த்துவதற்காக ஆட்களைத் தெரிந்தெடுப்பதற்கு (அ) உள் விதி பொருந்துவதாகும்.

35. அனுப்பிவிடுவது பற்றிய அறிக்கை.—நிலையான பணியிலிருக்கிற ஓர் அலுவலரை அல்லது பணியாளரை 33 ஆவது விதியின்படி அனுப்பிவிடுவத்ற்கு முன், அவருக்கு நியாயமான அறிக்கை கொடுக்க வேண்டும்.

எதிலேனும் குறைந்தபட்சம் மூன்று மாத அறிக்கை கொடுக்கப்படாமலிருந்து அந்த அலுவலர் அல்லது பணியாளர் பணியிலிருந்து நீக்கப்பட்ட தேதியன்று அவருக்கு வேறு வேலை கொடுக்கப்படாவிட்டால், அந்த அறிக்கை மூன்று மாதத்தைவிட உள்ளபடி எவ்வளவு குறைவாயிருக்கிறதோ அந்தக்கால அளவுக்குரிய அவருடைய ஊதியத்துக்கு மேற்படாத பணிக்கொடையை தொடர்புள்ள அலுவலரை அல்லது பணியாளரைப் பணியிலிருந்து நீக்கிவிட ஆற்றலுடைய அதிகாரியின் ஒப்பளிப்புடன், அதன் பொருட்டு விதிகளின்படி அவர் பெற உரியராயிருக்கக்கூடிய பணிக்கொடைக்குக் கூடுதலாக அவருக்குக் கொடுக்க வேண்டும்.

36. பதவியை நீக்கி விடுவது அல்லது ஊதியங்களைக் குறைப்பது பற்றிய அறிக்கை.—(1) அடியிற் கண்டதற்கு முரணாக வெளிப்படையான அறிவிப்பு ஒன்று அதில் அடங்கியிருந்தாலொழிய, ஒரு பதவியை நீக்கி விடுவதற்கான அல்லது ஓர் உத்தியோகத்தின் ஊதியங்களைக் குறைப்பதற்கான ஓர் ஆணையை, அவ்வாறு எடுத்துவிடுவதன் பேரில் அல்லது குறைப்பதன் பேரில் பணியிலிருந்து நீக்கப்போகிற அலுவலருக்கு அல்லது பணியாளருக்கு அறிக்கை கொடுத்தான பிறகு மூன்று மாதம் கழிவதற்கு முன் அமலுக்குக்கொண்டு வரக் கூடாது.

(2) அத்தகைய அறிக்கை கொடுப்பதில் தேவையற்ற காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு ஆணையாளர் பொறுப்பாளியாவார்.

(3) விடுப்பிலிருக்கிற ஓர் அலுவலர் அல்லது பணியாளரைப் பொருத்தவரை அந்த விடுப்பு கழிந்துபோவதற்கு முன் அந்த ஆணையை அமலுக்குக் கொண்டுவரக் கூடாது.

37. 34ஆவது விதியின்படி அனுப்பிவிடுவதை மீளப் பழைய பதவியில் அமர்த்துவதை எதிர்த்து மேல் முறையீடு.—34-ஆவது விதியைச் சேர்ந்த (அ) உள் விதியின்படி அனுப்பிவிடப்பட்ட அல்லது மீளப் பழைய பதவியில் அமர்த்தப்பட்ட ஒருவர், அனுப்பி விடுவதற்கான அல்லது மீளப் பழைய பதவியில் அமர்த்துவதற்கான ஆணையைப் பற்றித் தமக்குத் தெரிவிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு இரண்டு மாதத்துக்குள் அவ்வுள் விதி அனுசரிக்கப்படவில்லை என்னும் எதுவின் பேரில் அந்த ஆணையை எதிர்த்து, தம்மை வேலையிலிருந்து தள்ளிவிடுவதற்கான ஆணையின்பேரில் எந்த அதிகாரிக்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாமோ அந்த அதிகாரிக்கு மேல் முறையீடு செய்து கொள்ள உரிமை உள்ளவராவார்.

38. ஒரு யூனிட்டிலுள்ள பதவியில் அமர்த்தப்பெறுவதற்கு முன்னுரிமை வரிசைக் கிரமம்.—ஒரு யூனிட்டிலுள்ள ஒரு பதவியில் அமர்த்தப்பெறுவதற்கு வேட்பாளர்கள் தேவைப்பட்டால், அந்த யூனிட்டிலுள்ள பதவிகளிலிருந்து அனுப்பிவிடப்பட்ட அல்லது மீளப்பழைய பதவியில் அமர்த்தப்பட்டவர்கள் அவ்வாறு நியமிக்கப்பெற விருப்பமுள்ளவர்களாயிருந்து அவர்களும் கிடைக்கக் கூடியவர்களாயிருந்தால், அவர்களுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும்; அந்த யூனிட்டிலிருந்து எந்த வரிசைக் கிரமத்தில் அவர்கள் அனுப்பிவிடப்பட்டார்களோ, அல்லது மீளப்பழைய பதவியில் அமர்த்தப்பட்டார்களோ அதற்கு எதிர்வரிசைக் கிரமத்தில் நியமனங்கள் செய்யவேண்டும்.

ஆனால் அனுப்பிவிடப்பட்ட அல்லது மீளப்பழைய பதவியில் அமர்த்தப்பட்ட தேதியன்று பதவி;ய நிலையாக வகித்திராத ஒருவர் விஷயத்தில், அப்பதவிக்குத் தகுதிகள் எவையேனும் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அவற்றை அவர் பெற்றிருக்க வேண்டும் அல்லது அனுப்பிவிடப்படுவதற்கு அல்லது மீளப்பழைய பதவியில் அமர்த்தப்படுவதற்கு முன், அத்தகுதிகளைப் பெற்றிருப்பதனின்றும் தகுதிவாய்ந்த அதிகாரியால் விலக்களிக்கப்பெற்றிருக்க வேண்டும்.

மேலும், ஆணையாளர் தற்காலிகமான நிருவாகக் காரணங்களுக்காக இவ் விதியின்படி அவரை நியமிக்க மறுக்கலாம்; அக்காரணங்களை எழுதிவைத்து தொடர்புடையவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்; அவ்வாறு மறுத்துவிட்டதை அது பதவி விலக்கு ஆணையாயிருந்தால் எப்படியோ அப்படி எதிர்த்துப் பொருத்தமான மேல்முறையீட்டதிகாரிக்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம்.

சம்பந்தப்பட்டவரை நியமிக்க ஆணையாளர் மறுத்தாமல் அவ்வாறு மறுத்ததை எதிர்த்துச் செய்து கொள்ளப்பட்ட மேல்முறையீட்டை தள்ளிவிட்டதாலும், பின்னர் ஒரு வெற்றிடம் நேரும்போது அவரை இவ்விதியின்படி நியமிக்கக் கருதுவதற்கான அவருடைய உரிமைக்குத் தடையுண்டாக மாட்டாது.

அல்லாமலும், 34 ஆவது விதியைச் சேர்ந்த (அ) பகுதியில் கண்ட (1) அல்லது (2) பகுதியின்படி அனுப்பிவிடப்பட்ட அல்லது மீளப்பழைய பதவியில் அமர்த்தப்பட்ட ஒருவருக்கு 15 ஆவது விதியின்படி பின்னர் அனுப்பிவிடப்பட்டு 16 ஆவது விதியின்படி மீண்டும் நியமிக்கப்பெற உரிமையுள்ளவராயிருக்கிற மற்றொருவரைக் காட்டிலும், மறுபடியும் நியமிக்கப்படுவதற்கு முன்னுரிமையுள்ளவராக இவ்விதியில் உள்ளது எதனாலும் கருதப்படமாட்டாது.

அன்றியும், 34-வது விதியைச் சேர்ந்த (அ) உள் விதியில் கண்ட கடைசி விலக்கு நிபந்தனையின்படி பணியிலிருந்து அனுப்பிவிடப்பட்ட கீழ்த்தர தொடக்கநிலை ஆசிரியர் ஒருவருக்கு மீண்டும் நியமனம் உரிமை ஏற்படுவதாக, இவ்விதியில் உள்ளது எதனுலும் கருதப்படமாட்டாது.

39. 38 வது விதியின்படி மீண்டும் அமர்த்தப் பெறத் தகுதியுள்ளவர்கள் மேல்முறையீடு செய்து கொள்வது.—38 ஆவது விதியின்படி மீண்டும் அமர்த்தப் பெறத் தகுதியுள்ள ஒருவர் தமக்குப் பின்னே மீண்டும் அமர்த்திக் கொள்ளப்படவேண்டிய ஒருவர் தமக்குமுன் மீண்டும் அமர்த்திக் கொள்ளப்பட்டார் என்னும் ஏதுவின் பேரில், தம்மைப் பதவியினின்றும் விலக்கப்பட்ட ஆணையை எதிர்த்து யாருக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாமோ அந்த அதிகாரிக்கு மேல் முறையீடு செய்து கொள்ள உரிமையுள்ளவராவார். மற்றொருவர் மீண்டும் அமர்த்தப்பட்ட தேதிக்குப் பிறகு இரண்டு மாதத்துக்குள் அவ்வாறு முறையீடு செய்து கொள்ள வேண்டும்.

40. சில விஷயங்களில் 38-வது, 39-வது விதிகள் பொருந்துவது.—38 ஆவது, 39-வது விதிகளில் கண்ட நிபந்தனைகள் இவ்விதி அமலுக்கு வரத் தொடங்குகிற தேதியன்றும் அத்தேதியிலிருந்தும், அத்தேதிக்குமுன் அனுப்பி விடப்பட்ட அல்லது மீளப்பழைய பதவியில் அமர்த்தப்பட்டவர்களுக்குப் பொருந்தும்; ஆனல் 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் அப்பரப்பில் அமலுக்கு வரத்தொடங்கிய தேதியன்று அல்லது அத்தேதிக்குப் பிறகு 15-வது விதியில் கண்ட நிபந்தனைகளின்படி அவர் அனுப்பிவிடப்பட்டிருந்தால் அல்லது மீளப்பழைய பதவியில் அமர்த்தப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே அவருக்குப் பொருந்தும்.

விளக்கம்.—இவ்விதி அமலுக்கு வரத்தொடங்கிய தேதிக்கு முன் செய்யப்பட்ட மறு வேலையமர்வு, அல்லது நியமனம், இவ்விதியில் உள்ளது எதனுலும் செல்லாமற்போவதாகக் கருதப்படமாட்டாது.

41. பதவி விலகச் செய்வதன் விளைவுகள்.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர், தமது பதவி விலகல் செய்தால், அவ்வாறு செய்த காலத்தில் அவர் வகித்துவந்த குறிப்பிட்ட பதவியில் அவர் செய்த பணியை மாத்திரமல்லாமல் இதன்பொருட்டு, ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குட்பட்டு அல்லது வேறொரு உள்ளாட்சிக் கழகத்துக்குட்பட்டு அவர் இதற்குமுன் செய்த எல்லாப் பணியையும் இழந்து விடுவார். அத்தகையவர்கள் ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குட்பட்ட ஒரு பதவியில் மீண்டும் நியமிக்கப்படுவது அப்பதவியில் முதன்முதல் நியமிக்கப்பட்டாற் போலவே கருதப்படும்; அத்தகைய

நியமனத்தை முறைப்படுத்துகிற எல்லா விதிகளும் இதற்குப் பொருந்தும்; அவ்வாறு மீண்டும் நியமிக்கப்படுவதன்பேரில் எந்த விதியின்கீழ் அல்லது ஆணையின்கீழ் பெறத்தக்க எந்தவிதமான நன்மை அல்லது சலுகைக்காக அவருக்குள்ள முந்திய பணியின் எந்தப்பாகத்தையும் கணக்கில் சேர்த்துக் கொள்ளும் உரிமை உள்ளவராக மாட்டார்.

(1964 நவம்பர் 10-ம் தேதியுள்ள 2343-ம் எண் கிராம முன்னேற்றம், உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

41. ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குட்பட்ட பணியாளர் தொகுதிகளில் பின்னிலை வகுப்பினர்களுக்கும் அட்டவணையில் கண்ட இனங்களுக்கும் அட்டவணையில் கண்டபடி பழங்குடிகளுக்கும் நியமனங்களை ஒதுக்கி வைப்பது பற்றிய விதிகள்.—

1. சிறு தலைப்பு.—இவ்விதிகளை, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (பின்னிலை வகுப்பினர்களுக்கும் அட்டவணையில் கண்ட இனங்களுக்கும் அட்டவணையில் கண்ட பழங்குடிகளுக்கும் நியமனங்களை ஒதுக்கி வைப்பது) பற்றிய 1964-ம் ஆண்டின் விதிகள் என்று சொல்லலாம்.

2. ஒதுக்கி வைக்கும் விதம்.—ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குட்பட்ட பதவிகளுக்கு ஆட்களைத் நேரடியாகத் தேர்ந்தெடுத்து நியமனங்கள் செய்கையில், ஒரே வகைப் பதவிகளில் ஏற்படும் ஒவ்வொரு இருபத்தைந்து வெற்றிடங்களில், 4-வது, 7-வது, 12-வது, 14-வது, 19-வது, 24-வது வெற்றிடத்தை இவ்விதிகளின் 1-ம் இணைப்பில் குறிப்பிட்டிருக்கிற பின்னிலை வகுப்பார்களுக்கு ஒதுக்கி வைக்க வேண்டும்; 2-வது, 9-வது, 16-வது, 22-வது வெற்றிடத்தை இவ்விதிகளின் 11-ம் இணைப்பில் குறிப்பிட்டிருக்கிற அட்டவணையில் கண்ட இனங்களுக்கும் அட்டவணையில் கண்ட பழங்குடிகளுக்கும் ஒதுக்கி வைக்க வேண்டும்.

ஒவ்வொரு நான்காவது சுற்று வட்டத்திலும், இருபத்தைந்தாவது முறையைப் பின்னிலை வகுப்பார்களுக்கு ஒதுக்கி வைக்க வேண்டும்.

3. பொது வெற்றிடங்களைப் பெற, அட்டவணையில் கண்ட இனங்களுக்கும் அட்டவணையில் கண்ட பழங்குடிகளுக்கும் பின்னிலை வகுப்பார்களுக்குமுள்ள உரிமைகள்.—2-வது விதியின் கீழ் ஒதுக்கி வைக்கப்பட்டவையல்லாத வேறு பதினைந்து வெற்றிடங்களுக்குக்கூட அட்டவணையில் கண்ட இனங்கள், அட்டவணையில் கண்ட பழங்குடிகள் பின்னிலை வகுப்பார்கள் ஆகியவர்களின் உரிமை

களைப்பற்றி ஆலோசனை செய்ய வேண்டும். அட்டவணையில் கண்ட இனம் அட்டவணையில் கண்ட பழங்குடி அல்லது பின்னிலை வகுப்பு வேட்பாளர் ஒருவர், ஒதுக்கிவைக்கப்படாத ஒரு வெற்றிடத்துக்குத் திறமை அடிப்படையின் பேரில் நியமனத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால், சந்தர்ப்பத்துக்கேற்ப, அட்டவணையில்கண்ட இனங்களுக்காகவும் அட்டவணையில் கண்ட பழங்குடிகளுக்காகவும் அல்லது பின்னிலை வகுப்பார்களுக்காகவும் ஒதுக்கிவைக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாது.

4. **தகுதி பெற்ற வேட்பாளர்கள் கிடைக்காவிட்டால் ஒதுக்கி வைக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவது.**—அட்டவணையில் கண்ட இனங்கள் அட்டவணையில் கண்ட பழங்குடிகள் அல்லது பின்னிலை வகுப்பார்கள் ஆகியவர்களைச் சேர்ந்தவரும் தகுதி பெற்றவரும் பொருத்தமானவருமான வேட்பாளர் ஒருவர், அவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட முறையில் நியமிப்பதற்கு கிடைக்காவிட்டால், அந்த முறை அற்றுப்போய்விடும்; இந்த வகுப்புகளைச் சேர்ந்த ஒரு வேட்பாளரைக் கொண்டல்லாமல் மற்றப்படி அந்த வெற்றிடம் நிரப்பப்படும். அட்டவணையில் கண்ட இனங்கள் அட்டவணையில் கண்ட பழங்குடிகள் அல்லது பின்னிலை வகுப்பார்கள் ஆகியவர்களின் அற்றுப்போன முறைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

5. **அவசரக்கால நியமனங்கள்.**—(1) பொது நலனை முன்னிட்டு ஒரு வெற்றிடத்தை உடனே நிரப்புவது அவசியமாயிருந்து 2-வது விதியின்படி அவ்வெற்றிடத்தை நிரப்புவதில் அதிக காலதாமதமானால், ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் அவ்விதியின்படி ஒருவர் நியமிக்கப்படுகிற வரையில், 2-வது விதியின்படியன்றி மற்றபடி ஒருவரைத் தற்காலிகமாக நியமிக்கலாம். ஆனால் அந்தத் தற்காலிக நியமனம், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், எக்காரணத்தைக் கொண்டும் மூன்று மாதத்துக்கு மேற்படக்கூடாது.

(2). (1) உள்விதியின்படி நியமிக்கப்பட்ட ஒவ்வருக்கு பதிலாக அந்த வெற்றிடத்துக்கு நியமிக்கப்பெறத் தகுதியுள்ள ஒருவரைக் கூடிய விரைவில் நியமிக்க வேண்டும்; முந்தியவர் அந்தத் தற்காலிக நியமனத்தில் தமது பணிக் காலத்தைத் தகுதிகாண் பருவத்திற்காகக் கணக்கிடப்பெற உரியவராக மாட்டார்.

6. **விலக்குகள்.**—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குட்பட்ட பதவிகளின் ஒரே வகைக்குள் பணி உயர்வுகள் அளிப்பதற்கு, இவ்விதிகளில் உள்ளது எதுவும் பொருந்துவதாகக் கருதப்படமாட்டாது.

இணைப்பு.

(2 ஆவது விதியைப் பார்க்கவும்)

பாகம் பின்னிலை வகுப்பார்கள்

கன்னியாகுமரி மாவட்டமும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை (தாலுக்காவும்) வட்டமும்
நீங்கலாக இந்த மாநிலம் முழுவதும்.

1. அகமுடையார்கள் (துளுவ வேளாளர் உட்பட).
2. அகாசா.
3. அடகாரா.
4. அம்பலக்காரன்.
5. அம்பிகா.
6. அர்ச்சுகட்லவாண்டு.
7. அரேமராட்டி.
8. அன்னதான்.
9. ஆண்டி பண்டாரம்.
10. ஆர்யா (தென் கன்னடம்).
11. இடிவேளாளர் அல்லது மேளக்காரர்.
12. இருவர்.
13 இல்லுவன் (எழுவன்.)
14. ஈயாசிகா (செட்டிபலிஜா உட்பட.)
15. உப்பர.
16. ஊரல் கவுண்டன்.
17. ஏரவல்லா.
18. ஏருகுலா.
19. ஏனாதி.
20. ஒட்டன் (டோங்கா.)
21. ஓட்டே (ஒட்டி அல்லது வட்டி அல்லது ஓட்டை.)
22. ஒதியா.
23. ஓமனேடோ.

24. ஓய்யுது.

25. ஓரியா.

26. கங்கவார்.

27. கூட்டி.

28. கடையன்.

29. கண்ட்லா.

30. கனிகா (நாகவம்சம் உட்பட.)

31. கப்போரா.

32. கம்மாளர் (கம்சாலர், விசுவபிராமணர்கள் விசுவகர்மா.)

33. கலடகொண்கனி.

34. கவரை (கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கவரை நாயுடு உட்பட).

35. கவுடா (காமல்லா அல்லது கலாலி உட்பட).

36. கவுத்தியன்.

37. கள்ளன் (ஈசநாட்டுக்கள்ளர் உட்பட.)

38. களவந்துலா.

39 கன்னடியன்.

40. காட்ரி.

41. காடுபட்டான் (மலபார்).

42. கனிகள் அல்லது கனியல், கனிசு அல்லது கனியர் பணிக்கர்.

43. கார்வி.

44. காலிங்கி.

45. கிராமணி, சானார்.

46. குட்ருபா அல்லது குறுபர் (தமிழ் மாவட்டங்கள்.)

47. குடிகாரா.

48. குயவர்.

49. குலாலர் (குசலர்-மட்கலத் தொழிலர்.)

50. குறுச்சினி செட்டி.

51. குறும்பா.

52. குன்னுவர் மன்னதி.

53. கைக்கோளன் (செங்குந்தர்).

54. கொங்கு செட்டியார் (கோயம்புத்தூர் மாவட்டம்).

55. கொடாபா.

56. கொப்பலவேலர்.

57. கொரசா.

58. கொலாசி.

59. கோதபா.

60. கோடியார் (தென் கன்னடத்தைச் சேர்ந்த ஷெரகார க்ஷத்திரியர்).

61. கோண்டோ.

62. கோலரிகள் அல்லது முனியானிகள்.

63. சப்தேகரா.

64. சாடன்.

65. சாத்தாதி (சாத்தாத ஸ்ரீ வைஷ்ணுவர்.)

66. சாதுசெட்டி (தெலுங்கு செட்டி அல்லது 24 மனை தெலுங்கு செட்டி).

67. சாலியன்.

68. சிவியர்.

69. சுகலிகள்.

70. சேனைத்தலைவர் (சேனைக் குடையான்).

71. சோழிய செட்டி.

72. சௌராஷ்டிரா.

73. தக்கட.

74. தாசிரி.

75. தாதபு.

76. திகலா (திக்லா).

77. தூதேகுலா.

78. தூர்ப்பு காபுக்கள்.

79. தெரிவன்.

80. தெலுங்கு பதிசெட்டி.

81. தெளுவநாய்க்கர் வேட்டலக்கார நாயக்கர்.

82. தேகடா வீர க்ஷத்திரியர்.

83. தேவல்கார்.

84. தேவாங்கர்.

85. தேவாதிகா.

86. தொண்டமான்.

87. தொம்மரா.

88. தொவிக்குலம்.

89. தோதநாய்க்கன் (ராஜாகம்பவன், கொல்லவார், சில்லவார், தொக்கலவார், தொளுவு நாய்க்கர் உட்பட).

90. நரிக்குறவன்.

91. நவுண்டன்.

92. நாக்காலே.

93. நாகரம்.

94. நாம்தேவ் மராட்டா.

95. நால்கேதயா.

96. நொக்கா.

97. பங்காதிகாரா.

98. பட்டணவன்.

99. பட்டுநூல்காரன்.

100. பட்ராசு.

101. படையாச்சி.

102. பண்டாரி.

103. பண்ணன் வேட்டுவ கவுண்டர்

104. பண்ணியார் அல்லது பண்ணையார்.

105. பர்கவகுலம் (சுருத்திமான், மலையமான், நத்தமான், மூப்பனார், நைனார்).

106. பரவதராஜகுலம்.

107. பரவர்கள் (கன்னியாகுமரி மாவட்டமும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டைத் தாலுக்காவும் அல்லாத வேறு இடங்களில்).

108. பரவன் கிருஸ்துவர்கள் (கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டைத் தாலுக்காவிலும்).

109. பன்னி.

110. பனேல் மதிவாலா.

111 பாமுலா.

112. பாலோலிக.

113. பிச்சிகுன்டா.

114. பில்லவா.

1115. பிஸ்லோய்.

116. புள்ளுவன்.

117. பூசலா (பூசலவாடு).

118. பெந்தியர்.

119. பெருவண்ணன்.

120. பெஸ்தா.

121. பேரிக்கி.

122. பெடகா.

123. பொந்தில்.

124. பொறயர்.

125. போயா.

126. மகேந்திரா (மேதகா)

127. மங்களா.

128. மணியக்காரர்.

129. மதிவாலா.

130. மதுகர் அல்லது மேடவர் அல்லது சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த வெத்தக்காரர்).

131. மராட்டா (பிராமணரல்லாதார்).

132. மராட்டி மாவட்டம் (மலைவாசி). தென்கன்னடம்.

133. மருத்துவர்.

134. மலையன்.

135. மலையாளி.

136. மறவர் (திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த கருமறவர் உட்பட).

137. மாப்பிள்ளா.

138. மாலே.

139. முக்குவன் அல்லது முகையன் என்னும் மொகயா (போவிகள் உட்பட).

140. முகாரி.

141. முத்திரியன் அல்லது முத்திரியர்.

142. முத்ரசா அல்லது முத்து ராஜா.

143. முத்வாகம்பட்டி.

144. முதுவா.

145. மேலக்குடி அல்லது குட்டியான்.

146. மொகவீரா.

147. மொவீரா.

148. மோடிபந்தா.

149. மோண்ட் கொல்லா.

150. யாதவர்.

151. யொக்கேஸ்வரா.

152. ராஜகா.

153. ராஜபூர் (தென் கன்னடம்.)

154. ரெட்டி (கஞ்சம்.)

155. ரோஞக்கள்.

156. லப்பை.

157. லம்பாடிகள்.

158. வடுவன் (வடுகன்).

159. வண்ணுன்.

160. வன்னியகுல க்ஷத்திரியர் [வன்னியகுல க்ஷத்திரிய சாதியைச் சேர்ந்த (வேளாள கவுண்டர் அல்லாத மற்ற வன்னியா, வன்னியர் அல்லது கவுண்டர், கந்தர் அல்லது வன்னிய கவுண்டர், வன்னிய கந்தர் உட்பட].

161. வாக்கிலிகா.

162. வானியர் (மாநிலம் முழுவதிலும் உள்ள எண்ணெய் வாணிகர் சாதி.)

163. வரத்திகள்.

164. வில்குருப்பு.

165. வீரக்கொடி வேளாளர்.

166. வேட்டல்காரர்.

167. வேட்டுவ கவுண்டர்.

168. வேலக்கடலவன்.

169. வேலுதாதன்.

170. வைனியன்.

171. ஜங்கம்.

172. ஜந்தரா.

173. ஜாம்புவனேண்டை.

174. ஜெட்டி.

175. ஜோகி.

176. ஹெக்டே.

177. ஸ்ரீசாயனு.

178. அட்டவணைச் சாதியார்களிலிருந்து கிறிஸ்துவ சமயத்துக்கு மாறியவர் (தாங்களே சமயம் மாறியவர்கள் மாத்திரம்).

பாகம் II

கன்னியாகுமரி மாவட்ட—திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை (தாலுகாவும்) வட்டமும்.

1. அரயர்கள்.
2. இந்து நாடார்கள்.
3. ஏழுவர்கள்.
4. எழுவாதி.
5. எழுத்தச்சன்கள்.
6. எஸ்.ஐ.யு.சி.
7. ஓட்டர்கள்.
8. கனியன்.
9. கம்மாவர்கள் (விசுவகர்மாளர்).
10. களரிகருப்புகள் (களரி பணிக்கர்).
11. கிருஷ்ணவாகா.
12. குசவர்கள்.
13. குடும்பிகள்.
14. கும்பரான்கள்.
15. கோளமுதலி.
16. சலகாரன்கள்.
17. சாலியர்கள்.
18. சி.எஸ்.ஐ. கிறிஸ்தவர்கள்—கன்னியாகுமரி மாவட்டத்தையும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை தாலுக்காவையும் சேர்ந்தவர்கள் முதலில் எஸ்.ஐ.யு.சி.
19. செக்காளர் (இவர்களுடைய வழக்கமானதொழில் வாணியர்களைப்போல் எண்ணெய்யாட்டுதலாகும்).
20. செட்டிகள்.

21. சேனைத்தலைவர் (இளவாணியர்கள்.)

22. சேனராஷ்டிரர்கள்.

23. தோல் சொலவார்கள்.

24. நாய்க்கர்கள்.

25. பட்டாரியர்கள்.

26. பெருங்கொல்லர்கள்.

(உழுப்பினராயிருந்தவர்கள்.)

27. போயன்கள்.

28. மறவன்கள்.

29. முக்குவன்கள்.

30. யாதவர்.

31. லத்தீன் கத்தோலிக்கர்கள்.

32. லப்பைகள்.

33. வாணியர்.

34. வாலன்கள்.

35. விளக்கத்தில நாயர்கள்.

36. வீரசைவர்கள்.

37. வேலன்கன்.

38. சேனராஷ்டிரர்கள்.

பின் இணைப்பு.

(2-ஆவது விதியைப் பார்க்கவும்)

பாகம் அ.

அட்டவணை இனங்கள்.

1. இந்த மாநிலம் முழுவதிலும்

(1) சக்கிலியன்.

(2) குறவன், சித்தனர்.

(3) நாயாடி.

(4) பள்ளன்.

(5) பறையன் சாம்பவர் (பறயன்.)

(6) வள்ளுவன்.

கன்னியாகுமரி மாவட்டமும் **திருநெல்வேலியிலுள்ள**

நீங்கலாக இந்த மாநிலம் முழுவதிலும்—

நீங்கலாக இந்த மாநிலம் முழுவதிலும்.

(1) அருந்ததியர்.

(2) அஜிலா.

(3) ஆதி ஆந்திரர்.

(4) ஆதி கர்னுடகர்.

(5) ஆதி திராவிடர்.

(6) கடையன்.

(7) கரிம்பாலம்.

(8) கல்லாடி.

(9) குடும்பன்.

(10) கூசா.

(11) கோட்டா.

(12) கொடகாலி.

(13) கோசானி.

(14) சண்டாலர்.

(15). சபாரி.

(16) சமகாரா.

(17) சலவாதி.

(18) சாம்பன்.

(19) சாமார் அல்லது முச்சி.

(20) செம்மான்.

(21) செருமான்.

(22) திருவள்ளுவர்.

(23) தேவேந்திரகுலத்தான்.

(24) தொம், தொம்பரா, பைதி அல்லது பானே.

(25) தோட்டி.

(26) நளகேயவா.

(27) பகடை.

(28) பகுடா.

(29) பஞ்சமா.

(30) பண்ணியாண்டி

(31) பந்தி.

(32) பாம்பாடா.

(33) புதிரை வண்ணன்

(34) பெல்லாரா.

(35) பைரா.

(36) மதரி.

(37) மாதிகா.

(38) மாலா.

(39) மாவிலன்.

(40) முண்டலா.

(41) மைலா.

(42) மொகேர்.

(43) ரானேயர்.

(44) ஜக்கலி.

(45) ஜாம்புவுலு.

(46) ஹொளயா.

3. நீலகிரி மாவட்டத்தில்.—

கணக்கன் அல்லது பதண்ணு.

4. கோயம்புத்தூர், சேலம் மாவட்டத்தில்.—

(1) பன்னுடி.

(2) வாத்திரியன்.

5. கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலியிலுள்ள செங்கோட்டை தாலுக்காவிலும்.—

(1) அய்யனவர்.

(2) உள்ளாடன்.

(3) ஊராலி.

(4) சுக்காளன்.

(5) காவரி.

(6) கொட்டன் (கூடன்).

(7) தொம்பன்.

(8) பதன்னன்.

(9) பரதர்.

(10) பரவன்கள்.

(11) பள்ளுவன்.

(12) பாணன்.

(13) பாதியன்.

(14) புலையன் அல்லது சேரமார்.

(15) பெருமன்னன்.

(16) தாண்டன்.

(17) மன்னன்.

(18) வண்ணன்.

(19) வல்லோன்.

(20) வேட்டுவன்.

(21) வேடன்.

(22) வேலன்.

6. தஞ்சாவூர் மாவட்டத்தில்.—

(1) கோலியன்.

(2) வெட்டியான்.

பாகம் ஆ.

அட்டவணைப் பழங்குடிகள்.

1. இந்த மாநிலம் முழுவதிலும்.—

(1) இருளர்.

(2) காடர்.

2. கன்னியாகுமரி மாவட்டமும் திருநெல்லிவேலியிலுள்ள செங்கோட்டைத் தாலுகாவும் நீங்கலாக இந்த மாநிலம் முழுவதிலும்.—

(1) அதியன்

(2) அரநாதன்

(3) கம்மாரா

(4) காட்டுநாயகன்

(5) குடியா அல்லது மேலக்குடி

(6) குறிச்சான்

(7) குறுமன்கள்

(8) கொண்டகாப்பூர்

(9) கொண்டரெட்டிகள்

(10) கொரகா

(11) கோட்டா

(12) தோடர்

(13) பணியன்

(14) பள்ளியன்

(15) புலேயன்

(16) மலசார்

(17) மலயேகாந்தி

(18) மஹாமலசார்

(19) முதுகர் அல்லது முதுவன்

(20) ஷோலகா.

3. வட ஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில்.—

மலேயாளி.

4. கோயம்புத்தூர் மாவட்டத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டைத் தாலுக்கா நீங்கலாக—

கணியன் அல்லது கன்யன்

5. நீலகிரி மாவட்டத்தில்—

குறும்பர்கள்

6. கன்னியாகுமரி மாவட்டத்திலும்
செங்கோட்டைத் தாலுக்காவிலும்—

(1) உள்ளாடன் (மலைவாசிகள்)

(2) ஊரலி

(3) எறவல்லான்

(4) கணிக்காரன் அல்லது கணிக்கர்

(5) கெச்சுவேலன்

(6) பல்லேயன்

(7) பள்ளியார்

(8) மலை அரையன்

(9) மலைக்குறவன்

(10) மலைப்பண்டாரம்

(11) மலைப்புலையன்

(12) மலையராயர்

(13) மலையன்

(14) மலைவேடன்

(15) மன்னன்

(16) மதுவன்

(17) விஷாவான்.

(1964 டிசம்பர் 29-ஆம் தேதியுள்ள 2758-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

42. ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தங்கள் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் பணிக் கொடைகள் வழங்குவதை முறைப்படுத்துவதற்கான விதிகள்.

1. சிறு தலைப்பு.—இவ்விதிகளைத் 'தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் (பணிக் கொடை வழங்குவது) பற்றிய 1965-ஆம் ஆண்டின் விதிகள்' என்று சொல்லலாம்.

2. பொருள் விளக்கங்கள்.—இவ்விதிகளில் பொருள்லாவது சந்தர்ப்பத்திலாவது முரண்பாடு ஏதேனும் இருந்தாலன்றி மற்றப்படி,—

(i) 'சம்பளம்' என்பது நிலையான மாதச் சம்பளம் எனப் பொருள் படும்; மேலும் அதில் தனிப்பட்ட சம்பளம் என்பதும் அடங்கும்;

(ii) 'பணியாளர்' என்பது யாருக்கு 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஆசிரியர்கள் உதவித் தொகையான வருங்காலச் சேம நிதி—ஈட்டுறுதி ஓய்வூதிய விதிகள் பொருந்துகின்றனவோ அவரை அல்லாமல், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குட்பட்டுப் பதவி வகிக்கிற வேறொரு அலுவலர் அல்லது பணியாளர் என்று பொருள்படும்.

(iii) 'கடைநிலைப் பணி', 'உயர்தரப்பணி' என்பவை, இவ் விதிகளின் I ஆம் இணைப்பில் முறையே கடைநிலையெனவும் உயர்தரம் எனவும் வகைப் படுத்தப்பட்டுள்ள பதவியிடங்களின் பணி எனப் பொருள்படும்.

3. பணிக் கொடை வழங்கப்படுவதற்குரிய நிபந்தனைகள்.—படிப் பணத்துடன் கூடிய விடுப்பின் மேல் போயிருக்கும் காலங்கள் உட்பட, நிலையாகவோ தற்காலிகமாகவோ காயமாகவோ பதிலியாகவோயிருந்து ஆற்றிய பணிக் காலத்திற்கு இவ்விதிகளின்படி பணிக் கொடை வழங்கப்படத்தக்கதாகும். பணி செய்த நிறைவான ஆண்டுகளுக்காக மாத்திரமே பணிக் கொடை வழங்கப்படத்தக்கதாகும்.

4. பணியின் எந்தக் கால அளவு சம்பந்தமாக வருங்காலச் சேம நிதி நன்மைகளைப் பெறப் பணியாளர் ஒருவருக்கு உரிமை இருக்கிறதோ அந்தக் கால அளவுக்கு அவருக்குப் பணிக் கொடை வழங்கப்படத்தக்கதாக மாட்டாது.

5. யாருடைய பணி, ஓய்வூதியத்தோடு கூடியதாகவும் அவர் சேர்த்துக் கொள்ளப் பெற்றிருக்கிற ஓய்வூதியத் திட்டத்தின்படி அவருக்கு வழங்கப்படத் தக்க பணிக் கொடையோடு கூடியதாகவும் இருக்கிறதோ அந்தப் பணியாளருக்கு இவ்விதிகளின்படி பணிக்கொடை வழங்கப்படத்தக்கதாக மாட்டாது.

6. பணியாளர் ஒருவர்.—(அ) ஊராட்சி ஒன்றியப் பணியிலிருந்து விலக்கி விடப்பட்டிருந்தால் அல்லது

(ஆ) கெட்ட நடத்தை அல்லது திறமையின்மை காரணமாக நீக்கப் பட்டிருந்தால் அல்லது பதவி விலகும்படி ஆணையிடப்பட்டிருந்தால், அல்லது

(இ) தமது பதவி விலகல் செய்திருந்தால், அவருக்குப் பணிக் கொடை வழங்கப்படத்தக்கதாக மாட்டாது.

7. (1) பணியாளர் ஒருவர் ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குட்பட்டு மொத்தத்தில் ஐந்தாண்டுக்குக் குறைவாகப் பணி செய்திருந்தால் அவருக்குப் பணிக் கொடை வழங்கப்படத்தக்கதாக மாட்டாது.

(2) பணியாளர் ஒருவர் வருங்காலச் சேம நிதி நன்மைகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டதற்கு முன்செய்த பணி ஐந்தாண்டுக்குக் குறைவா யிருந்தபோதிலும், அப் பணிக்காக அவருக்குப் பணிக் கொடை வழங்கப் படத்தக்கதாகும்; ஆனால் அவர் மொத்தத்தில் ஐந்தாண்டுக்குக் குறையாமல் பணி செய்திருக்க வேண்டும். தொடர்ச்சியாயிராத பணி சம்பந்தமாகவுங் கூடப் பணியாளர் ஒருவருக்குப் பணிக் கொடை வழங்கத்தக்கதாகும்.

8. **பணிக் கொடை கொடுப்பது.**—உயர்தர அல்லது கடைநிலைப் பணியி லுள்ள பணியாளர் ஒருவருக்குப் பின்வரும் சந்தர்ப்பங்களில் பணிக் கொடை கொடுக்கலாம் :—

(அ) வயது முதிர்ச்சியினால் அல்லது நலிவுற்றிருப்பது காரணமாக அவர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போதும் அல்லது முப்பதாண்டுகள் பூர்த்தி யாய்ப் பணி செய்த பிறகு அவர் தாமாகவே ஓய்வுபெறும்போதும்;

(ஆ) பணியாளர்களைக் குறைப்பது காரணமாக அல்லது கெட்ட நடத்தை அல்லது திறமையின்மை தவிர வேறு காரணங்களுக்காக அவர் பணியிலிருந்து அனுப்பிவிடப்படும்போதும்.

9. **உயர்தரப் பணியிலுள்ள பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் பணிக் கொடை வீதம்.**—3, 4, 5, 6, 7, 8, 14-வது விதிகளின் நிபந்தனைகளுக்குட் பட்டு, உயர்தரப் பணியிலுள்ள பணியாளர்கள் வருங்காலச் சேம நிதி நன்மைகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிராவிட்டால், அடியிற் கண்ட வரையறைகளுக்குட்பட்டு பணியில் ஒவ்வொரு ஆண்டுக்காகவும் அரைமாதச் சம்பள வீதப்படி அவருக்குப் பணிக் கொடை கொடுக்கலாம்; அவ்வரையறை களாவன :

(1) மாதம் 300 ரூபாய்க்கு மேற்பட்டுச் சம்பளம் வாங்கும் பணியாளர்கள் விஷயத்தில், அவர் பதினெட்டு ஆண்டுக்குக் குறைவாகப் பணி செய்திருந்தால் ஆறு மாதச் சம்பளத்திற்கும் பதினெட்டு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்டு அவர் பணி செய்திருந்தால் பன்னிரண்டு மாதச் சம்பளத்துக்கும் மேல் பணிக் கொடை இருக்கக்கூடாது.

(2) மாதம் 300 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் சம்பளம் வாங்கும் பணியாளர்கள் விஷயத்தில், பதினைந்து ஆண்டுக்குக் குறைவாக அவர் பணி செய்திருந்தால், ஆறு மாதச் சம்பளத்துக்கும் பதினைந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்டு அவர் பணி செய்திருந்தால் பதினைந்து மாதச் சம்பளத்துக்குமேல் பணிக் கொடை இருக்கக் கூடாது.

இவ் விதியின்படிக்கான பணிக் கொடையை, 8 ஆவது விதியின்படி பணிக் கொடை செலுத்தப்படத்தக்கதாகும் காலத்தில் வாங்கப்படுகிற சம்பளத்தைக் கொண்டு கணக்கிட வேண்டும்.

10. 3, 4, 5, 6, 7, 8, 14-வது விதிகளின் நிபந்தனைகளுக்குட்பட்டு, உயர்தரப் பணியிலுள்ள பணியாளர்கள் அவர்களுடைய பணிக் காலத்தில் வருங்காலச் சேம நிதி நன்மைகளுக்கு மாத்திரம் சேர்த்துக் கொள்ளப் பட்டிருந்தால் வருங்காலச் சேம நிதி நன்மைகளுக்குச் சேர்த்துக் கொள்ளப் படுவதற்குமுன் பணியின் ஒவ்வோர் ஆண்டுக்காகவும் அரை மாதச் சம்பள வீதப்படி அடியிற்கண்ட வரையறைகளுக்குட்பட்டு அவர்களுக்குப் பணிக் கொடை கொடுக்கலாம்; இதோடுகூட, வருங்காலச் சேம நிதியிலிருந்து அவர்கள் பெற உரியவர்களாயிருக்கக்கூடிய தொகைகளையும் அவர்களுக்குக் கொடுக்கலாம்; அவ் வரையறைகளாவன :—

(1) மாதம் 300 ரூபாய்க்கு மேற்பட்டுச் சம்பளம் வாங்கும் பணியாளர்கள் விஷயத்தில், அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன் பதினெட்டு ஆண்டுக்குக் குறைவாக அவர் பணி செய்திருந்தால் ஆறு மாதச் சம்பளத்துக்கும், பதினைந்து ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்டு அவர் பணி செய்திருந்தால் பன்னிரண்டு மாதச் சம்பளத்துக்குமேல் பணிக் கொடை இருக்கக் கூடாது.

(2) மாதம் 300 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் சம்பளம் வாங்கும் பணியாளர்கள் விஷயத்தில், அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படுவதற்குமுன் பதினைந்து ஆண்டுக்குக் குறைவாக அவர் பணி செய்திருந்தால் ஆறு மாதச்

சம்பளத்துக்கும், பதினெட்டு ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்டு அவர் பணி செய்திருந்தால் பதினைந்து மாதச் சம்பளத்துக்குமேல் பணிக் கொடை இருக்கக் கூடாது.

இவ் விதியின்படிக்கான பணிக் கொடையை, வருங்காலச் சேம நிதியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அடுத்து முன் வாங்கின சம்பளத்தைக் கொண்டு கணக்கிட வேண்டும்.

11. கடைநிலைப் பணிகளில் உள்ளவர்களுக்குப் பணிக்கொடை கொடுப்பது.—3, 4, 5, 6, 7, 8, 14-வது விதிகளின் நிபந்தனைகளுக்கும் பின்வரும் வரையறைகளுக்கும் உட்பட்டுக் கடைநிலை ஊழியப் பணியாளர்கள் வருங்காலச் சேமிப்பு நிதி நன்மைகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிரா விட்டால், அவர்களுக்குப் பணியின் ஒவ்வோர் ஆண்டுக்காகவும் ஒரு மாதச் சம்பளம் விதம் பணிக் கொடை கொடுக்கலாம்—

(அ) பணியின் முதல் ஐந்தாண்டுக் காலம் சம்பந்தமாகப் பணிக்கொடை கொடுக்கக் கூடாது;

(ஆ) எச் சந்தர்ப்பத்திலும் பணிக் கொடை பன்னிரண்டு மாதச் சம்பளத்துக்கு மேற்படக் கூடாது. இவ்விதியின்படிக்கான நன்கொடையை, 8 ஆவது விதியின்படி பணிக்கொடை செலுத்தப்படத்தக்கதாகிவிடுகிற காலத்தில் வாங்கப்படும் சம்பளத்தைக் கொண்டு கணக்கிட வேண்டும்.

12. 3, 4, 5, 6, 7, 8, 14 ஆவது விதிகளின் நிபந்தனைகளுக்கும், கீழ்க் கண்ட வரையறைகளுக்கும் உட்பட்டுக் கடைநிலைப் பணியிலுள்ள பணியாளர் கள் தங்களுடைய பணிக் காலத்தில் வருங்காலச் சேம நிதி நன்மைகளுக்கு மட்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தால், வருங்காலச் சேம நிதி நன்மை களுக்கும் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன் பணியின் ஒவ்வோர் ஆண்டுக் காகவும் ஒரு மாதம் சம்பள விதப்படி அவர்களுக்குப் பணிக் கொடை கொடுக்கலாம்; அதோடு கூட, வருங்காலச் சேம நிதியிலிருந்து பெற அவர்கள் உரிமை பெற்றிருக்கக்கூடிய தொகைகளையும் கொடுக்கலாம்.

(அ) பணியின் முதல் ஐந்தாண்டுக் காலம் சம்பந்தமாகப் பணிக்கொடை கொடுக்கக் கூடாது;

(ஆ) பணிக் கொடை எச் சந்தர்பத்திலும் இருபது மாதச் சம்பளத் துக்கு மேற்படக் கூடாது.

இவ்விதியின்படியான பணிக்கொடையை, வருங்கால சேம நிதியில் சேர்க்கப்பட்டதற்கு அடுத்து முன் வாங்கின சம்பளத்தைக் கொண்டு கணக்கிட வேண்டும்.

13. ஒப்பளிக்கும் அதிகாரி.—இவ் விதிகளின்படியான பணிக் கொடையை ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் வழங்க வேண்டும். 9, 10, 11 ஆவது விதிகளில் கண்ட வீதங்கள் பெருமம் என்று கருதப்படும்; செய்யப்பட்ட பணி முழுவதும் மனநிறைவு தருவதாயிருந்தாலொழிய, அவ் வீதங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கக் கூடாது. பணி முழுவதும் மனநிறைவு தருவதாயிரா விட்டால், ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் செலுத்தப்படத்தக்க தொகையைத் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி குறைத்துவிட வேண்டும்.

14. பணிக்கொடையைக் கணக்கிடுவதற்கான வயது.—உயர்தாப் பணியிலும் கடைநிலைப் பணியிலும் உள்ள பணியாளர் ஒருவருக்குக் கொடுக்கப் படத்தக்க பணிக்கொடையைக் கணக்கிடுகையில், 18 வயதுக்குப் பிறகு அவர் செய்த பணியை மாத்திரம் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

15 சிறிது மட்டில் கடைநிலைப் பணியிலும் சிறிது மட்டில் உயர்தாப் பணியிலும் செய்யப்பட்ட பணிக்காகப் பணிக்கொடை கொடுப்பது.—பணியாளர் ஒருவர் சிறிதளவு கடைநிலைப் பணியிலும் சிறிதளவு உயர்தாப் பணியிலும் பணி செய்திருந்தால், அவர்—

(அ) கடைநிலைப் பணி வீதத்திலான பணிக்கொடையினிமித்தம், முழுக் காலத்தையும் கடைநிலைப் பணியாக அல்லது

(ஆ) உயர்தா வீதத்திலான பணிக்கொடையினிமித்தம் உயர்தாப் பதவியையும், கடைநிலைப் பணி வீதத்திலான பணிக்கொடையினிமித்தம் கடைநிலைப் பணிப் பகுதியையும் கணக்கில் எடுத்துக்கொள்ளலாம்.

'(அ)' பகுதியின்படி, சந்தர்ப்பத்துக்கேற்ப, 8 ஆவது விதியின்படி பணிக்கொண்ட செலுத்தப்படத்தக்கதாகிவிடுகிற காலத்தில் அல்லது வருங்காலச் சேம நிதியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அடுத்து முன் அந்தப் பணியாளர் (உயர்தாப் பணியிலோ கடைநிலைபணியிலோ) வாங்கின சம்பளத்தைக் கொண்டு பணிக் கொடையைக் கணக்கிட வேண்டும்.

'(ஆ)' பகுதியின்படி, ஒவ்வொரு வீதத்திலுமான பணிக் கொடையை முறையே கடைநிலைப் பணியிலிருந்து உயர்தாப் பணிக்கு அல்லது உயர்தாப் பணியிலிருந்து கடைநிலைப் பணிக்கு மாற்றப்பட்ட காலத்திலும், 8 ஆவது

விதியின்படி பணிக் கொடை செலுத்தப்படத்தக்கதாகிவிடுகிற காலத்திலும் அல்லது வருங்காலச் சேம நிதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டதற்கு அடுத்து முன்னும் அந்தப் பணியாளர் வாங்கின சம்பளத்தைக் கொண்டு கணக்கிட வேண்டும். பணியாளர் ஒருவர் கெட்ட நடத்தைக்காக உயர்தரப் பணியிலிருந்து கடைநிலைப் பணிக்குத் தாழ்த்தப்பட்டால், அரசினரின் தனி ஒப்பளிப்புடனன்றி மற்றபடி, இவ் விதியின்படி அவருக்குப் பணிக் கொடை கொடுக்கக் கூடாது.

விளக்கம்.—கடைநிலைப் பணிக்கான பணிக் கொடையும் உயர்தரப் பணிக்கான பணிக் கொடையும் சேர்ந்து, முழுப் பணியும் உயர்தரப் பணியென்று கருதப்பட்டால் எவ்வளவு பணிக் கொடை வழங்கப்பட்டத்தக்கதாயிருந்திருக்குமோ அந்தத் தொகைக்கு மேற்படக் கூடாது.

16. **பணியிலிருக்கும்போது இறந்துபோனால் பணிக் கொடை கொடுப்பது.**—பணியாளர் ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்துபோனால், அவருடைய குடும்பம் வறுமை நிலையில் இருக்கிறதென்று ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் சந்தேகமறத் தெரிந்துகொண்டால், அவர் இறந்துபோன தேதியன்று 8 ஆவது விதியின்படி பணிக் கொடை செலுத்தப்படத்தக்கதாயிருந்தால் எப்படியோ அப்படியே, அவர் குடும்பத்துக்குப் பணிக் கொடை கொடுக்கலாம்.

விளக்கம்.—இவ் விதியின் காரியங்களுக்காக 'குடும்பம்' என்பதில் பணியாளருடைய மனைவி, அவருடைய தக்க முறையான பிள்ளைகள் இச் சொற்றொடரில் சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட மகன் என்பதும் அடங்கும்—அவருடன் வசித்துக்கொண்டு அவரையே அடுத்திருக்கிற மாற்றுரிமை மக்கள், அவரையே அடுத்து அவருடன் வசித்துக் கொண்டிருக்கிற அவருடைய பெற்றோர்கள், சகோதரிகள், வயதடையாத சகோதரர்கள் என்பதும் அடங்கும். மேலே வரையறுக்கப்பட்டவாறு குடும்பம் எதுவும் பணியாளருக்கு இல்லாமற் போய் வருங்காலச் சேம நிதிக்கு அவர் சந்தாதாரராக இருந்தால் அவருக்குப் பணிக் கொடை ஏதேனும் கொடுக்கப்படத்தக்கதாயிருந்தால், அதை வருங்காலச் சேம நிதித் தொகையைப் பெறுகிற நியமனதாரருக்குக் கொடுத்து விடலாம்; ஆனால் அந்த நியமனதாரர் வறுமை நிலையிலிருக்கிறாரென்று ஊராட்சி ஒன்றிய மன்றத்தினர் சந்தேகமறத் தெரிந்துகொள்ள வேண்டும்.

17. **வெவ்வேறு உள்ளாட்சிக் கழகங்களில் செய்யப்பட்ட பணிக்கான பொறுப்பைப் பகிர்வு செய்வது.**—பணியாளர் ஒருவர் வெவ்வேறு உள்ளாட்சிக் கழகங்களில் பணி செய்திருந்தால், இவ் விதிகளின்படிக் கொடுக்கப்படத்தக்க பணிக் கொடையைக் கணக்கிடுவதற்காக, வெவ்வேறு உள்ளாட்சிக் கழகங்

களில் செய்யப்பட்ட பணியை ஒருங்கிணைத்து, முழுமையாகக் கருத வேண்டும். பணிக் கொடை கொடுப்பதற்கான பொறுப்பைப் பணியாளருடைய தகுதியுண்டாக்கும் முழுப் பணிக் காலத்தில் அவர் வாங்கின மொத்தச் சம்பளம் வெவ்வேறு உள்ளாட்சிக் கழகங்களால் கொடுக்கப்பட்டிருக்கிற விதாசாரங்களில் அக்கழகங்களிடையே பகிர்வு செய்ய வேண்டும். அவ்வாறு பகிர்வு செய்கையில், பணிக் கொடைத் தொகையில் முக்காலுக்கு மேற்பட்ட பாகம் ஒரே தல ஆட்சிக் கழகத்தால் செலுத்தப்படத்தக்கதாயிருக்கிறதெனத் தெரிய வந்தால், அந்த உள்ளாட்சிக் கழகமே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்; பகிர்வு எதுவும் செய்ய வேண்டியதில்லை.

விளக்கம்.—ஒரு உள்ளாட்சிக் கழகத்தின் கீழ் வேலையில் அமர்வதற்காக மற்றொரு உள்ளாட்சிக் கழகத்தினின்றும் பதவி விலகல் செய்யும் விஷயங்களுக்கு இவ்விதி பொருந்தாது.

18. (1) **பணிக் கொடையைக் கேட்பது.**—(அ) இவ்விதிகளின்படி பணிக் கொடை பெற உரிமையுள்ள பணியாளர் ஒருவர், அதைக் கொடுக்கும்படி ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) பணியாளர் ஒருவர் பணியிலிருக்கும்போதே, அல்லது பணிக் கொடைக்கான தமது விண்ணப்பபதை அனுப்புவதற்கு முன் இறந்துபோனால், பணிக் கொடைக்கான விண்ணப்பத்தை, 16 ஆவது விதியின்படி பணிக் கொடை பெற உரிமை உள்ளவராவது, அவர் வயது வாராதவராயிருந்தால் அல்லது மற்றபடி இயலாதவராயிருந்தால், அவருடைய காப்புப் பொறுப்பாளராவது செய்துகொள்ள வேண்டும்.

(இ) பணிக் கொடை கொடுக்கும்படி செய்து கொள்ளப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றையும், பணியாளர் ஒருவர்—

(i) பணியிலிருந்து ஓய்வு பெறுகிற,

(ii) பணியிலிருந்து அனுப்பிவிடப்படுகிற, அல்லது

(iii) இறந்து போகிற

தேதியிலிருந்து ஆறு மாதத்துக்குள் அனுப்ப வேண்டும்.

ஆனால், காலதாமதத்துக்கு நியாயமான காரணம் இருந்ததென்று இணை வளர்ச்சி ஆணையாளர் சந்தேகமறத் தெரிந்துகொண்டால் மேற்சொன்ன கால அளவு கழிந்துபோன பிறகும் வந்து சேருகிற பணிக் கொடைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கு அவர் ஒப்பளிப்பு வழங்கலாம்.

(2) கேட்கப்படுகிற பணிக் கொடையை வழங்க ஆணையாளர் கருதினால், இவ்விதிகளின் II ஆம் இணைப்பிலுள்ள படிவப் பிரகாரம் பணிக் கொடைக்கான விண்ணப்பத்தை அவர் எழுத வேண்டும்.

19. உயர்தரப்பணியை அல்லது கடைநிலையைப் பணியைச் சேர்ந்தவர்களாயிராமல் முறையான பணித் தொகுதியைச் சேர்ந்த பணியாளர்களுக்குப் பணிக் கொடை கொடுப்பது.—உயர்தரப் பணியை அல்லது கடைநிலைப் பணியைச் சேர்ந்தவர்களென்று வகைப்படுத்தப்பட்டிராமல், கிரமமான பணித் தொகுதியைச் சேர்ந்த பணியாளர்களுக்குச் சாதாரணமாகப் பணிக் கொடை கொடுக்கப்படத்தக்கதாக மாட்டாது. ஆயினும், தகுதியுள்ள பேர்களுக்குப் பணிக் கொடை கொடுக்கலாமென ஊராட்சி ஒன்றிய மன்றம் கருதினால், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அவ்வாறு கொடுப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கலாம்; அவையாவன :—

(அ) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கீழ் அப் பணியாளரின் பணி இருபதாண்டுக்குக் குறையாமலிருக்க வேண்டும்;

(ஆ) ஒப்பளிக்கப்படுகிற பணிக் கொடையின் மொத்தத் தொகையானது, முந்திய விதிகளின்படி கடைநிலைப் பணியாளர்களுக்குக் கொடுக்கப் படத் தக்கதற்கு மேற்படக் கூடாது;

(இ) அவ்வாறு கொடுப்பதற்குச் சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளரின் முன் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இணைப்பு I

[2 (iii) விதியைப்பார்க்கவும்]

உயர்தரப் பணி.

1. சிற்றெழுத்தர்.
2. பணப் பொறுப்பாளர்.
3. எழுத்தர் (கீழ்நிலை).
4. தலைமை எழுத்தர் (மேல்நிலை) (கல்விப் பிரிவு).
5. சுகாதார உதவியாளர்.
6. சுகாதாரப் பார்வையாளர்.
7. விரிவுரையாளர்.

8. மருத்துவ அலுவலர்.

9. பேறுகால உதவியாளர்.

10. செவிலி.

11. தொழிற் கல்வி முன்னிலே விரிவுரையாளர்.

12. உதவி மருத்துவர்.

13. இளநிலே உதவி மருத்துவர்.

14. ஆசிரியர் (இடைநிலேயும் உயர்நிலேயும்).

15. தட்டச்சர்.

16. பெண் மருத்துவ அலுவலர்.

கடைநிலேப் பணி.

1. ஆயா.
2 சமையற்காரர்—தண்ணீர் வழங்குபவர்.
3. மருந்தகப் பணியாளர்.
4. செவிலிப் பணியாள் (ஆண், பெண்).
5. இரவுக் காவற்காரர்—பெருக்குபவர்.
6. பகுதி நேரக் காவற்காரர்.
7. பெருக்குபவர்.
8. பெருக்குபவர்—தோட்டி.
9. பெருக்குபவர்—காவற்காரர்.
10. பெருக்குபவர்—தோட்டி.
11. பெருக்குபவர்—தண்ணீர் வழங்குபவர்
12. தோட்டி (ஆண், பெண்).
13. காவற்காரர்.
14. அங்காடிக் காவற்காரர்.
15. காவற்காரர்—தோட்டக்காரர்.
16. தண்ணீர் வழங்குபவர்—தோட்டக்காரர்.

இணைப்பு II

[18 (2) விதியைப் பார்க்கவும்]

பணிக் கொடைக்கான விண்ணப்பம்.

1. விண்ணப்பதாரர் பெயர்
2. தகப்பனுர் பெயர்.
3. இருப்பிடம் (ஊரையும் மாவட்டத்தையும் குறிப்பிட வேண்டும்.)
4. தற்போதைய அல்லது முந்திய வேலே பணியமைப்பின் பெயரையும் குறிப்பிட வேண்டும்.
5. பணி தொடங்கிய தேதி.
6. பணி முடிவடைந்த தேதி.
7. பணி செய்த காலம், இடையீடுகள் உட்பட, இவற்றில்—

   (i) உயர்தரம் எவ்வளவு?

   (ii) கடைநிலே எவ்வளவு?

   (iii) தகுதி அளிக்காதவையும், இடையீடுகளும் எவ்வளவு?
8. கேட்கப்படும் பணிக் கொடையின் வகை, விண்ணப்பத்துக்கான காரணம்.
9. (சராசரி) சம்பள ஊதியங்கள்.
10. கொடுக்கக் கருதியுள்ள பணிக்கொடை.
11. கொடுக்குமிடம்.
12. கிறித்துவ சகாப்தத்தின்படி விண்ணப்பதாரர் பிறந்த நாள்.
13. உயரம்.
14. அடையாளங்கள்.
15. தேதி.

ஆணேயாளர் கையொப்பம்.

(ஈ) ஓய்வூதியம் அல்லது பணிக்கொடைக்காக விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதாயிருந்தால், பணியமைப்பில் எந்த மாறுதலினுல் உரிமைக் கோரிக்கை எழுந்ததோ அந்த மாறுதலின் தன்மையை முழுமையாகக் கண்டெழுத வேண்டும்.)

பணியின் வரலாறு (இடையீடு குறிப்பிடப்பட்டுள்ளது).

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
பணியாளர் தொகுதி.	நியமனம்.	சம்பளம்.	பதிலிச் சம்பளம்.	தொடக்க நாள்.	முடிவு நாள்.	பணியாகக் கணக்கிடப்படும் காலம்.	பணியாகக் கணக்கிடப்படாத காலம்.	எப்படி சரிபார்க்கப்பட்டது.	உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைத் தலைமை ஆராய்வாளரின் குறிப்புகள்.
	ரூ	காசு				ஆமாநா	ஆமாநா		

உயர்தரப் / கடைநிலைப் பணியின் மொத்தக் காலம்.

அலுவலகத் தலைவரின் குறிப்புக்கள்.

1. விண்ணப்பதாரரின் தன்மை, முந்திய நடத்தையைப் பற்றி.
2. தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கியது அல்லது வேலையில் தாழ்த்தியது பற்றிய விளக்கம்.
3. விண்ணப்பதாரர் ஏற்கெனவே பெற்றுக் கொண்ட பணிக் கொடை அல்லது ஓய்வூதியத்தைப் பற்றி.
4. வேறு எவையேனும் குறிப்புக்கள்.
5. கேட்கப்படும் பணி உறுதிப்படுத்தப்பட்டதா, அதை ஒப்புக்கொள்ள வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி அலுவலகத் தலைவரின் திட்டவட்டமான கருத்து.

சான்றும் அறிக்கையும்.

உயர்தரத்தில்/கடைநிலையில் ஆண்டு மாதம் நாட்கள் தகுதியுண்டாக்கும் பணி புரிந்திருக்கிறாரெனச் சரியாக மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறதென்று (பின்னர் எழுதப்பட்டுள்ள குறிப்புகளுக்குட்பட்டு) சான்றிடப்படுகிறது; ரூபாய்க்கு மேற்படாத பணிக்கொடை கொடுக்கலாம். கணக்கீடுகள் முறைப்படி சரிபார்க்கப்பட்டுள்ளன.

ஆணையாளர்.

பணிக் கொடைக்கான விண்ணப்பம்.

விண்ணப்பத்தின் தேதி.

விண்ணப்பதாரர் பெயர்.

கடைசி நியமனம்.

பணிக் கொடையின் வகை.

ஒப்பளிக்கப்பட்ட பணிக் கொடைத் தொகை.

தொடக்கத் தேதி.

ஒப்பளித்த தேதி.

ஆணையாளர்.

(1965 பிப்ரவரி 6 ஆம் தேதியுள்ள 275 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

43. **கால்நடை மருத்துவர்களின் நியமனத்தையும் தகுதிகளையும் பற்றிய விதி.**—கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரைக் கலந்தாலோசித்த பிறகன்றி, மற்றப்படியும் குறித்த ஆள் 32 வயது அடையாதிருந்து, தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்பு இளநிலைப் பணிகள் வகுப்பு I கால்நடை உதவி மருத்துவர்களாக நியமிக்கப்படுவதற்கு, அந்தந்த காலத்தில் நடைமுறையில் இருக்கிற வயது பற்றிய தகுதி அல்லாத வேறு தகுதிகளைப் பெற்றிருந்தாலன்றி, அவரை ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குட்பட்டுக் கால்நடை மருத்துவராக நியமிக்கக்கூடாது.

(1965 பிப்ரவரி 6 ஆம் தேதியுள்ள 276 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

44. **தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியப் பணியமைப்பில் உள்ளவரை (நியமிப்பதையும் தண்டிப்பதையும்) பற்றிய விதிகள்.**—1. **சிறு தலைப்பு.**—இவ்விதிகளைத் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியப் பணியமைப்பிலுள்ளவரை (நியமிப்பதையும் தண்டிப்பதையும்) பற்றிய 1965 ஆம் ஆண்டின் விதிகள் என்று சொல்லலாம்.

2. **பொருந்துதல்.**—ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத பெரும் சம்பளமுடைய எந்தப் பதவிகளுக்குச் சில்லறை நிதியிலிருந்து சம்பளம் கொடுக்கப்படுகிறதோ அந்தப் பதவிகள் நீங்கலாக (ஆணையாளர் தவிர) ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குட்பட்டு நிலையானவையாகப் பதிலியானவையாக அல்லது தற்காலிகமானவையாக உள்ள மற்ற எல்லாப் பதவிகளையும் வகிப்பவர்களுக்கு இவ்விதிகள் பொருந்தும்.

3. மருத்துவ அலுவலர்கள் உடல்நல உதவியாளர்கள் முதலியவர்களை நியமிப்பது.—எவரையும்—

(அ) மருத்துவத் துறை இயக்குநரோடு கலந்தாலோசிக்காமல், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஆயுர்வேத, யுனானி, சித்த அல்லது ஓமியோபதி மருந்தகத்திலாவது வேறொரு மருத்துவ நிறுவனத்திலாவது மருத்துவ அலுவலராக அல்லது ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றப் பணியில் இருப்பு மருத்துவ அலுவலராக நியமிக்கக்கூடாது.

ஆனால், தேதிய நெருக்கடிக் காலத்திலே, சம்பந்தப்பட்ட மாவட்ட மருத்துவ அலுவலரைக் கலந்தாலோசித்து அத்தகைய நியமனங்கள் செய்யலாம்;

(ஆ) மாவட்ட உடல்நல அலுவலருடன் கலந்தாலோசிக்காமல், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குட்பட்டு சுகாதார உதவியாளராக நியமிக்கக் கூடாது;

(இ) மாவட்ட மருத்துவ அலுவலருடன் கலந்தாலோசிக்காமல், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குட்பட்ட மருத்துவ நிலையத்தில் மருந்து கலப்பவராகவும், பேறுகால உதவியாளராகவும் செவிலியாகவும், செவிலிப் பணியாளராகவும் (பகுதிப் பணியாளராகவும்) நியமிக்கக் கூடாது;

(ஈ) பொது உடல்நலத் துறை இயக்குநரைக் கலந்தாலோசிக்காமல், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குட்பட்ட உடல்நல நிலையத்தில் பெண் மருத்துவ அலுவலராக, உடல்நலப் பார்வையாளராக அல்லது பேறு கால அல்லது குழந்தை நலப் பணிக்கான பேறுகால உதவியாளராக நியமிக்கக் கூடாது; ஆனால், மூன்று மாதத்துக்கு மேற்படாத காலத்துக்கான தற்காலிக நியமனங்களைச் சம்பந்தப்பட்ட மாவட்ட உடல்நல அலுவலரைக் கலந்தாலோசித்து செய்யலாம்; அந்த உத்தியோகம் மூன்று மாத காலத்துக்கும் அப்பாலும் நீடிப்பதாயிருந்தால், பொது உடல்நலத் துறை இயக்குநரைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

4. இருப்புப் பணித் தொகுதியிலிருந்து தற்காலிக வெற்றிடங்களை நிரப்புவது.—மருத்துவ அலுவலர்கள், செவிலிகள், மருந்து கலப்பவர்கள், பேறுகால உதவியாளர்கள் அல்லது உடல்நல உதவியாளர்கள் கொண்ட இருப்புப் பணித் தொகுதி ஒன்றை ஊராட்சி ஒன்றிய மன்றம் வைத்திருந்தால், அந்தந்த வகைகளைச் சேர்ந்த உத்தியோகங்களில் ஏற்படும் காயமில்லாத வெற்றிடங்களை நிரப்புவதற்கு, அந்த இருப்புப் பணித் தொகுதியிலிருந்து ஆட்கள் கிடைத்தால் அவர்களையே நியமிக்க வேண்டும்.

5. ஒழுக்கக் கேடு சம்பந்தமான குற்றம் செய்தாரெனத் தீர்மானிக்கப் பெற்ற ஒருவரை வைத்துக் கொள்வது அல்லது மீண்டும் நியமிப்பது.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தைச் சேர்ந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒழுக்கக் கேடு சம்பந்தமான குற்றம் செய்தாரெனத் தீர்மானிக்கப் பெற்றால் அரசினரின் தனி ஒப்பளிப்புடனன்றி மற்றப்படி அவரைப் பணியில் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது; அவ்வாறு தீர்மானிக்கப் பெற்ற எவரையும் அத்தகைய ஒப்பளிப்புடனன்றி மற்றப்படி, மன்றத்தின் கீழுள்ள எந்தப் பதவிக்கும் நியமிக்கக் கூடாது.

6. **பண இழப்பை ஈடு செய்ய வேண்டுமென்பது.**—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர், அசட்டை, மோசடி அல்லது விதிகளையோ ஆணைகளையோ மீறுதல் ஆகிய குற்றங்களைச் செய்திருப்பதாகத் தெரிய வந்து, அதன் விளைவாக ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குப் பண இழப்பு நேரிட்டிருந்தால், ஆணையாளர், அச் செயல்கள் சம்பந்தமாக விதிக்கப்படக் கூடிய வேறு ஏதேனும் தண்டனையுடன்கூட, அந்த இழப்பு முழுவதையுமோ அல்லது ஒரு பாகத்தையோ அந்த அலுவலர் அல்லது பணியாளர் ஈடு செய்ய வேண்டுமென ஆணையிடலாம்.

7. **தற்காலிகமாக விலக்கி வைத்தல்.**—(1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலரை அல்லது பணியாளரை, ஆணையாளர் பின்வரும் சந்தர்ப்பங்களில், மூன்று மாதத்துக்கு மேற்படாத காலம் வரையில் பணியிலிருந்து தற்காலிகமாக விலக்கி வைக்கலாம்:—

(i) அவருக்கு எதிராகப் பெருங் குற்றச் சாட்டுகளைப் பற்றி விசாரணை செய்யக் கருதியிருக்கும்போது அல்லது அத்தகைய விசாரணை நடந்து கொண்டிருக்கும்போது; அல்லது

(ii) அவர் மீதான பெருங் குற்றச் சாட்டு ஒன்று ஆய்விலிருந்து அல்லது விசாரணையிலிருந்து, பொதுநலனை முன்னிட்டு அவ்வாறு தற்காலிகமாக நீக்கி வைப்பது அவசியமாயிருக்கும்போது.

ஆனால், தற்காலிகமாக நீக்கி வைத்த தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள் விசாரணையை முடிக்க முடியாத அசாதாரணமான விஷயங்களில், பொருத்தமான மேல்முறையீட்டு அதிகாரியின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொண்டு, அந்த அலுவலரை அல்லது பணியாளரை மேலும் மூன்று மாதத்துக்கு மேற்படாத பின்னுமொரு காலத்துக்கு தற்காலிகமாக நீக்கி வைக்கலாம்.

மேலும், ஆறு மாதத்துக்கு மேற்பட்டு ஓர் அலுவலரை அல்லது பணியாளரைத் தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கு அரசினரின் ஒப்பளிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(2) பெருங் குற்றச் சாட்டில் பேரிலோ மற்றப்படியோ நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குமேற்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள ஒரு பணியாளர் இவ் விதியின்படி தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுவார்.

(3) தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டுள்ள காலத்தில், ஓர் அலுவலருக்கு அல்லது பணியாளருக்கு, அடிப்படை விதிகளில் கண்டுள்ள பெருமங்களுக்கும் குறுமங்களுக்கும் உட்பட்டு, ஆணையாளர் கட்டளையிடக்கூடிய விதங்களின்படி பிழைப்பு ஊதியம் கொடுக்க வேண்டும்.

(4) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தைச் சேர்ந்தவரும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டுள்ள பணியிலிருந்து தள்ளி விடுதல் அல்லது அகற்றி விடுதல் தண்டனை, மேல்முறையீட்டில் அல்லது இவ்விதிகளின்படி மறு ஆய்வு செய்ததன் பேரில் நிராகரிக்கப்பட்டு, மேற்கொண்டு விசாரணைக்காக அல்லது நடவடிக்கைக் காக அல்லது வேறு எவையேனும் கட்டளைகளுடன் அவ்விஷயம் திருப்பி அனுப்பப்பட்டால் அவரைத் தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கான ஆணை, விலக்குவதற்கான அல்லது நீக்குவதற்கான முதல் ஆணையின் தேதியன்றும் அத் தேதியிலிருந்தும் தொடர்ந்து அமலில் இருந்து வந்திருப்பதாகக் கருதப்படுவ தோடு அது மறு ஆணை வரையிலும் அமலில் இருந்துவரும்.

(5) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர்மீது விதிக்கப்பட்ட பணியிலிருந்து விலக்கி விடுதல் அல்லது நீக்கிவிடுதல் தண்டனையானது, ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பின் விளைவாக அல்லது அத் தீர்ப்பினால் ரத்து செய்யப்பட்டால் அல்லது செல்லாதென அறிவிக்கப்பட்டால் அல்லது செல்லாததாக்கப்பட்டு, ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி குறிப்பிட்ட விஷயத்தின் சந்தர்ப்பங்களைக் கருத்தில் கொண்டு எந்தக் குற்றச் சாட்டுகளின் பேரில் விலக்கி விடுதல் அல்லது நீக்கிவிடுதல் தண்டனை முதலில் விதிக்கப் பட்டதோ அந்தக் குற்றச் சாட்டுகளைப் பற்றி அவர் மீது மேற்கொண்டு விசாரணை நடத்தத் தீர்மானித்தால், அந்த அலுவலர் அல்லது பணியாளர் விலக்கிவிடுவதற்கான அல்லது நீக்கிவிடுவதற்கான முதல் ஆணையின் தேதி யிலிருந்து ஆணையாளரால் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுவார்; மேலும், மறு ஆணை வரையில் தற்காலிகமாக நீக்கி வைக்கப் பட்ட நிலையில் இருந்து வருவார்.

(6) இவ்விதியின்படி பிறப்பிக்கப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்டிருப்ப தாகக் கருதப்படும் தற்காலிக நீக்க ஆணையானது, அந்த ஆணையைப் பிறப்பித்த அல்லது பிறப்பித்ததாகக் கருதப்படுகிற அதிகாரியினால் அல்லது அந்த அதிகா ரிக்கு மேற்பட்ட அதிகாரியினால் எப்போதாகிலும் ரத்து செய்யப்படலாம்.

8. **சிலவற்றில் ஆசிரியர்களைத் தற்காலிகமாக நீக்கி வைத்தல், அல்லது விலக்குதல்.**—ஓர் ஊராட்சி ஒன்றியப் பள்ளியிலுள்ள ஆசிரியரின் பயிற்சிப் பள்ளி இறுதிச் சான்று பள்ளிகளின் கோட்ட ஆய்வாளரால் அல்லது தமிழ்நாடு கல்வித் துறை இயக்குநரால் நிறுத்தி வைக்கப்பட்டால் அல்லது பிந்தியவரால் ரத்து செய்யப்பட்டால், ஆணையாளர் சந்தர்ப்பத்துக்கு வேண்டியபடி அந்த ஆசிரியரின் சான்று அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காலத்திற்கு அவரைத் தற்காலிகமாக நீக்கி வைக்க வேண்டும் அல்லது அவரை விலக்கிவிட வேண்டும். இவ்விதியின்படி ஓர் ஆசிரியர் தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுவதற்கு அல்லது விலக்கி விடப்படுவதற்கு 9 ஆவது விதியின் நிபந்தனைகள் பொருந்தமாட்டா. இவ்விதியின்படி தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டுள்ள காலத்திலே, படி ஏதுவும் பெற அந்த ஆசிரியருக்கு உரிமையில்லை.

9. **தண்டனைகளை விதிப்பதற்கான நடைமுறை.**—(1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர்மீது, கண்டனம், அபராதம் அல்லது ஊதிய உயர்வையோ பதவி உயர்வையோ நிறுத்தி வைப்பது அல்லது அசட்டையினால், மோசடியினால் அல்லது விதிகளை ஆணைகளை மீறியதனால் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு ஏற்பட்ட பண இழப்பு முழுவதையும் அல்லது அதன் ஒரு பாகத்தை வசூலிப்பது ஆகிய தண்டனைகளை விதிக்கக் கருதும் ஒவ்வொன்றிலும் அவர் சொல்ல விரும்பும் முறையீடுகளைச் சொல்லிக் கொள்ள அவருக்கு நியாயமான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்; அத்தகைய முறையீடுகளை ஆணை பிறப்பிப்பதற்குமுன் ஆய்ந்து பார்க்க வேண்டும்.

ஆனால், ஊதிய உயர்வுகளை நிறுத்தி வைக்கும் தண்டனையை விதிப்பது சாத்தியமாயிராவிட்டால், நிறுத்தி வைக்க வேண்டுமென ஆணையிடப்படுகிற ஊதிய உயர்வுகளின் தொகைக்குச் சமமான பண மதிப்புக்கு அவசியமான அளவுக்குச் சம்பளத்திலிருந்து வசூலித்துக் கொள்ளலாம்.

விளக்கம்.—திரண்ட பயனுண்டாகும் வகையில் ஊதிய உயர்வை நிறுத்தி விடுவதில் நிறுத்தி வைக்க வேண்டுமென ஆணையிடப்படுகிற ஊதிய உயர்வுகளின் தொகையைப்போல் மூன்று மடங்குக்குச் சமமான பண மதிப்பை வசூலிக்கலாம்.

ஆனால், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கடைநிலைப் பணியாளருக்கு மட்டுமே அபராதத் தண்டனை விதிக்க வேண்டும்.

(2) (அ) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளருக்கு, முதுநிலைப் பட்டியலில் கீழ்த்தரத்துக்கு அல்லது கீழ்ப் பதவிக்கு அல்லது காலமுறைச் சம்பள ஏற்றமுறையில் கீழ்நிலைக்கு அல்லது காலமுறைச்

சம்பள ஏற்றமுறையில் கீழ்த் தசைக்குத் தாழ்த்துவது 7 ஆவது விதியின்கீழ் அல்லாத ஏனைய தற்கால வேலை நீக்கம் செய்வது, வேலையிலிருந்து நீக்குவது அல்லது விலக்குவது ஆகிய தண்டனைகளை விதிக்கக் கருதியிருக்கிற ஒவ்வொரு விஷயத்திலும், நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கருதுவதற்கு ஏதுவாயுள்ள காரணங்களை, திட்டவட்டமான குற்றச் சாட்டு அல்லது குற்றச் சாட்டுகள் வடிவத்தில் எழுத வேண்டும்; குற்றம் சாட்டப் பெற்றவருக்கு அவைகளை அனுப்ப வேண்டும்; அவற்றோடுகூட ஒவ்வொரு குற்றச் சாட்டுக்கும் ஆதார மாயுள்ள சாட்டுரைகள் பற்றியும் குறித்த நிகழ்வில் ஆணை பிறப்பிக்கையில் ஆலோசனைக் கெடுத்துக் கொள்ளக் கருதியிருக்கிற வேறு எந்த சூழ்நிலைகள் பற்றியும் உள்ள விவரப் பட்டியல் ஒன்றையும் அனுப்ப வேண்டும். நியாய மான காலத்துக்குள், தமது எதிர்வாதத்தை எழுதி அனுப்பும்படியும், வாய் மொழி விசாரணையை விரும்புகிறார்களா அல்லது நேரில் சொல்லிக் கொள்வதற்கு மட்டும் விரும்புகிறாரா என்று தெரிவிக்கும்படியும் அவரைக் கேட்க வேண்டும். குற்றம் சாட்டப் பெற்றவர் வாய்மொழி விசாரணையை விரும்பினால் அல்லது அத்தகைய விசாரணை நடக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரி கட்டளை யிட்டால், வாய்மொழி விசாரணையே நடத்த வேண்டும். அவ் விசாரணையின் போது, சாட்டுரைகளில் அனுமதிக்கப்படாதவை பற்றி வாய்மொழிச் சாட்சி யத்தைக் கேட்க வேண்டும்; சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவும் நேரில் சாட்சி சொல்லவும், தாம் விரும்பக்கூடிய சாட்சியை வரவழைக்கவும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு உரிமையுண்டு. ஆனால், விசாரணை நடத்துகிற அலுவலர், போதிய தனிக் காரணத்துக்காக, ஒரு சாட்சியைக் கூப்பிட மறுத்துவிடலாம்; அதற்கான காரணத்தை எழுதி வைக்க வேண்டும். விசாரணை முடிந்த பிறகு, குற்றம் சாட்டப் பெற்றவர், தமது எதிர்வாதம் பற்றிய மேலும் ஒரு எழுத்து மூலமான விவரப் பட்டியலை அனுப்ப விரும்பினால், அவ்வாறே அனுப்ப உரிமை உள்ளவராவார். விசாரணை எதுவும் நடத்தப்படாமல், நேரில் சொல்லிக் கொள்ள அவர் விரும்பினால், அவர் சொல்வதை நேரில் கேட்க வேண்டும். நடவடிக்கைக் குறிப்புக்களில், போதுமான அளவு எழுதப்பட்டுள்ள சாட்சிய மும், முடிவுகளைப் பற்றிய விவரப் பட்டியலும், அதற்கான ஏதுக்களும் அடங்கி யிருக்க வேண்டும்.

குறிப்பு.—ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலருக்கு அல்லது பணியாள ருக்கு விதிக்கக் கருதியுள்ள தண்டனையின் அளவைப் பற்றிக் குற்றச் சாட்டுக் குறிப்பிலேயே குறிப்பிடுதல் கூடாது.

(ஆ) (அ) பகுதியில் சொல்லப்பட்டுள்ள விசாரணை முடிந்த பிறகு ஆணை யாளர் ஒவ்வொரு குற்றச் சாட்டின் மீதும் தமது முடிவுகளை எழுதி வைத்துக் குற்றச் சாட்டுகள் மெய்ப்பிக்கப்பட்டனவா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். குற்றச் சாட்டுகள் மெய்ப்பிக்கப்பட்டன என்று கொள்ளப்பட்டால்

அப்போது, விதிக்க வேண்டிய தண்டனையைக் குறித்து அவர் ஒரு தற்காலிக முடிவுக்கு வர வேண்டும். அதன் பேரில், விசாரணை செய்யும் அதிகாரியின் அறிக்கைக்குப் படி ஒன்றைக் குற்றம் சாட்டப்பட்டவருக்குக் கொடுக்க வேண்டும்; விதிக்கக் கருதியுள்ள குறிப்பிட்ட தண்டனைக்கு எதிராகச் சாதாரண மாய் ஒரு மாதத்துக்கு மேற்படாத நியாயமான காலத்துக்குள் காரணம் காட்டும்படி அவரைக் கேட்க வேண்டும். குற்றம் சாட்டப் பெற்றவர் இது பற்றி அனுப்பிய முறையீட்டை, முடிவான ஆணைகள் பிறப்பிக்கப்படுவதற்கு முன், ஆலோசனைக் கெடுத்துக்கொள்ள வேண்டும்; ஆனால், விசாரணையின் போது காட்டப்பட்ட சாட்சியத்தை ஆதாரமாகக் கொண்டுதான் அந்த முறை யீடு இருக்க வேண்டும்.

மேலும், ஏதேனும் தண்டனை விதிப்பதற்குமுன், ஆணையாளர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவரைக் கலந்தாலோசிக்க வேண்டும்; அவர்களுக் கிடையே கருத்து வேறுபாடு இருந்தால், ஆணையாளர் அது பற்றி சம்பந்தப் பட்ட கோட்ட ஆட்சியாளரின் ஆலோசனைக்கனுப்ப வேண்டும்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

அல்லாமலும், கீழ்க் கண்ட அட்டவணையின் (1) ஆவது பத்தியில் குறிப்பிட் டிருக்கிற பணி அமைப்பைச் சேர்ந்த தொழில் நுட்பப் பணித் தொகுதியிலுள்ள ஒருவருக்கு, அதன் (2) ஆவது பத்தியில் அதற்கு நேரான பதிவில் குறிப்பிட் டுள்ள அலுவலரைக் கலந்தாலோசித்த பிறகன்றி மற்றப்படி, இவ்வுள் விதியில் குறிப்பிட்டிருக்கிற தண்டனைகளில் எதையும் விதிக்கக் கூடாது.

அட்டவணை.

பணி அமைப்பு (1)	அலுவலர். (2)
மருத்துவப் பணியமைப்பு	மாவட்ட மருத்துவ அலுவலர்
பொறியியல் பணியமைப்பு	கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலைகள் —கிராமப் பொறியியல் பணிகள்)
சுகாதாரப் பணியமைப்பு	மாவட்டச் சுகாதார அலுவலர்
கல்விப் பணியமைப்பு	மாவட்டக் கல்வி அலுவலர்
தண்ணீர்ப் பொறியியல் பணி அல்லது வடிகால் பணி அமைப்பு	அரசினர் துப்புரவுப் பொறியாளர்

(3) ஓர் அலுவலர் அல்லது பணியாளருக்கு, ஒரு குற்ற விசாரணை நீதி மன்றத்தில் அல்லது படைத் துறை நீதிமன்றத்தில் அவருடைய குற்றத் தீர்ப்புக்குக் காரணமாயிருந்த செய்திகளின் அடிப்படையின் பேரில், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 61 ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ள தண்டனைகளில் எதையேனும் விதிக்கக் கருதினால் அல்லது சம்பந்தப்பட்ட அலுவலர் தலைமறைவாய் இருந்தால் அல்லது எழுதி வைக்கப்பட வேண்டிய வேறு காரணங்களினால் அவருடன் தொடர்பு வைத்துக் கொள்ள முடியாமலிருந்தால், (1) உள்விதியின் நிபந்தனைகள் பொருந்த மாட்டா.

(4) (2) உள்விதியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றுவது இந்த மாநிலத்தின் பாதுகாப்பு நலனுக்கு உகந்ததல்லவென்று கூட்டு வளர்ச்சி ஆணையாளர் சந்தேகமறத் தெரிந்துகொண்டால், அவ்வுள்விதியின் நிபந்தனைகள் பொருந்த மாட்டா.

(5) (1) அல்லது (2) உள்விதியின் தேவைகளை அப்படியே அனுசரிப்பதில் இடர்ப்பாட்டிருந்தால் விலக்கான நிகழ்வுகளில் எழுத்து மூலமாகப் பதிய வேண்டிய போதிய தனிப்பட்ட காரணங்களுக்காக இணை வளர்ச்சி ஆணையாளரின் ஒப்பளிப்பைப் பெற்று அவ்வுள் விதியின் தேவைகள் எல்லாவற்றையுமாவது அவைகளில் எதையாவது அனுசரிக்காமல் விட்டுவிடலாம். குற்றம் சாட்டப்பட்டவருக்கு நியாயத் தவறு ஏற்படாதவாறு அத் தேவைகளை அனுசரிக்காமல் விட்டுவிடலாம்.

விளக்கம் I.—(அ) தகுதிகாண் பருவத்தில் நியமிக்கப்பட்ட ஒருவரை நிர்ணயிக்கப்பட்ட அல்லது நீட்டிக்கப்பட்ட தகுதிகாண் பருவம் கழிவாவதற்கு முன் அல்லது அது முடிவதன் பேரில் அல்லது

(ஆ) ஒப்பந்தத்தின்படி அமர்த்திக் கொள்ளப்பட்ட ஒருவரை, அவருடைய ஒப்பந்தக் கூறுகளின்படி அல்லது

(இ) ஒப்பந்தத்தின்படியன்றி மற்றப்படி தற்காலிக நியமனம் வகிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஒருவரை, அந்நியமன காலம் கழிவதன்பேரில், அனுப்பிவிடுவதானது, இவ்விதியின் தாற்பரியப்படி நீக்கிவிடுவதாகாது அல்லது விலக்கி விடுவதாகாதது.

விளக்கம் II.—ஒரு பதவியில் பதிலியாகப் பணியாற்றும் ஒருவரை அதன் பொருட்டு அரசினர் பிறப்பிக்கக்கூடிய பொது அல்லது தனி விதிகளுக்கு அல்லது ஆணைகளுக்கு இணங்க அனுப்பிவிடுவதானது அல்லது கீழ்ப் பதவியில்

மீளவும் அமர்த்துவதானது, இவ்விதியின் தாற்பரியப்படி நீக்கிவிடுவதாக அல்லது விலக்கிவிடுவதாக அல்லது தாழ்த்துவதாக ஆகமாட்டாது.

விளக்கம் III—ஊராட்சி ஒன்றியக் குழுவின் பணியிலிருந்து ஒருவரை நீக்கிவிடுவதனுல், இனிமேல் அமர்த்திக் கொள்ளப்படுவதற்கு அவர் தகுதியற்ற வராகிவிடமாட்டார்; ஆனுல், நீக்கப்படும்போது அல்லது அதற்குப் பின்னர், இனிமேல் அவரை அமர்த்திக் கொள்ளக் கூடாதென திட்டவட்டமாகத் தடை விதிக்கப்பட்டிருந்தால், அவர் தகுதியற்றவராவார். ஊராட்சி ஒன்றியக் குழு வின் பணியிலிருந்து ஒருவரைத் தள்ளிவிடின், இனிமேல் அமர்த்திக் கொள்ளப் படுவதற்கு அவர் தகுதியற்றவராகிவிடுவார்.

10. பதிவுகளைப் பேணி வருவது.—(1) இவ்விதிகளின்படி தண்டனை விதிக் கிற அதிகாரியானவர், அடியிற் கண்டவைகளைக் காட்டும் பதிவு ஒன்றைப் பேணி வைத்துவர வேண்டும்; அவையாவன :—

(i) எந்தச் சாட்டுரைகளின்பேரில் அவர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டதோ அந்தச் சாட்டுரைகள்.

(ii) தயாரிக்கப்பட்ட குற்றச் சாட்டுகள்.

(iii) அவர் ஏதேனும் முறையிட்டிருந்தால், அதுவும் சாட்சியம் எடுக்கப் பட்டிருந்தால் அதுவும்.

(iv) முடிவுகளும், அவற்றிற்கு ஏதுக்கள் இருந்தால் அவையும்.

(2) தண்டனை விதித்துப் பிறப்பிக்கப்படும் எல்லா ஆணைகளிலும், அவை களுக்கு ஆதாரமாயுள்ள ஏதுக்களும் சொல்லப்பட்டிருக்க வேண்டும்; யாருக்கு விரோதமாக அந்த ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றனவோ அவருக்கு அவை களை எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும்.

11. மேல்முறையீடுகள்.—(1) (அ) ஓர் ஊராட்சி ஒன்றியக் குழுவின் அலு வலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அடியிற் கண்டவையல்லாதமற்றத் தண்டனைகளில் ஒன்றை அல்லது பலவற்றைத் தமக்கு விதித்து ஆணையாளர் பிறப்பிக்கும் ஆணையை எதிர்த்து, இதில் பின்னுல் சொல்லியிருக்கிறபடி மேல் முறையீடு செய்து கொள்ள உரிமையுள்ளவராவார்; அவையாவன :—

(i) கண்டனம்;

6 ஆவது விதியின்படி ஐந்து ரூபாய்க்கு மேற்படாத அபராதம் அல்லது ஐந்து ரூபாய்க்கு மேற்படாத தொகையை வசூலிப்பது.

(iii) 7-ஆவது விதியின்படி விசாரணை நடந்துகொண்டிருக்கையில் தற்காலிகமாக நீக்கிவைத்தல் அல்லது 8-ஆவது விதியின் படி தற்காகலிகமாக் நீக்கி வைத்தல் அல்லது விலக்கி விடுதல்.

(ஆ) தகுதிகாண் பருவத்தில் நியமிக்கப்படும் ஒருவரை அனுப்பி விடுவதற்காக அல்லது கீழ்ப் பதவியில் அமர்த்துவதற்காகப் பிறப்பிக்கப்படும் எல்லா ஆணைகளையும் எதிர்த்தும் மேல்முறையீடு செய்துகொள்ளலாம்.

ஆனால், ஒருவரை அனுப்பிவிடுவது அல்லது பழைய பதவியில் மீள அமர்த்துவது, இவ்வுபவிதியின் தாற்பரியப்படி ஒரு தண்டனை விதிக்கும் ஆணையென்று கருதப்பட மாட்டாது. 9 (5) விதியின் I,II ஆவது விளக்கங்களின் கீழ் வரும் விஷயங்களில் மேல்முறையீடு செய்துகொள்ளலாகாது.

(2) (அ) 9 (2) (ஆ) விதியில் சொல்லியிருக்கிறபடி கோட்ட ஆட்சியாளருடன் கலந்தாலோசித்து ஆணையாளர் பிறப்பிக்கும் உத்தாவைப் பொருத்தவரை மாவட்ட ஆட்சியாளரும்.

(ஆ) மற்றெல்லாவற்றிலும் கோட்ட ஆட்சியாளருக்கும் (1) உள்விதியின்படி மேல்முறையீடு செய்துகொள்ளலாம்.

(3) (அ) மேல்முறையீட்டு அதிகாரியானவர்—

(i) ஆணைக்கு ஆதாரமாயுள்ள செய்திகள் மெய்ப்பிக்கப்பட்டிருக்கின்றனவாவென்றும்,

(ii) மெய்ப்பிக்கப்பட்ட செய்திகள் நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்குப் போதிய ஏதுக்களைத் தருகின்றனவா என்றும்,

(iii) தண்டனை அதிகமானதா, போதுமானதா, போதுமானதாயில்லையா என்றும்,

ஆலோசித்துப் பார்க்க வேண்டும்; அவ்வாறு ஆலோசித்துப் பார்த்த பிறகு, தமக்குத் தகுதியாகத் தோன்றுகிற ஆணை பிறப்பிக்க வேண்டும்.

(ஆ) ஒரு தண்டனை விதிக்கையில் பின்பற்றப்பட்ட நடைமுறையில் உண்டான தவறு அல்லது குறைபாடு முக்கியமானதல்லவென்றும், அதனால் சம்பந்தப்பட்ட ஆளுக்கு நியாயத் தவறு நேரிடவில்லையென்றும், குறிப்பிட்ட விஷயத்தில் செய்யப்பட்ட தீர்ப்பு பாதிக்கப்படவில்லையென்றும், சில காரணங்களினால் இக் காரணங்களை எழுதி வைக்க வேண்டும். மேல்முறையீட்டு அதிகாரி கருதினால், அந்த அதிகாரி அத் தவறு அல்லது குறைபாட்டை கவனியாது விட்டுவிடலாம்.

12. மேல்முறையீடுகளைத் தனித்தனியாகவும் ஒருவர் சொந்தப் பெயரிலேயும் செய்துகொள்ள வேண்டுமென்பது.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் மேல்முறையீடு செய்து கொண்டால், அதைத் தனியாகவும் தன் சொந்தப் பெயரிலும் செய்துகொள்ள வேண்டும்.

13. மேல்முறையீடு செய்துகொள்வதற்கான காலவரையறை.—எந்த ஆணையை எதிர்த்து மேல்முறையீடு செய்து கொள்ளப்படுகிறதோ அந்த ஆணையை மேல்முறையீடு செய்வோர் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து இரண்டு மாதத்துக்குள் அதைச் செய்துகொண்டாலொழிய அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது.

ஆனால், கால தாமதத்துக்குப் போதுமான காரணம் இருந்ததென்று மேல்முறையீட்டதிகாரி சந்தேகமறத் தெரிந்துகொண்டால், அவர், மேற்சொன்ன கால அவவு கழிந்தபின்னரும் மேல்முறையீட்டை ஏற்றுக் கொள்ளலாம்.

14. தண்டனைகளை ரத்து செய்வது அல்லது மாற்றியமைப்பது.—ஆணையாளர் தம்மாலேயோ அல்லது பதவியில் தமக்கு முன் இருந்தவர்களின் ஒருவரால் பிறப்பிக்கப்பட்ட தண்டனை ஆணையை; 11-ஆவது விதியின் (2)-ஆவது உள்விதியில் குறிப்பிட்டிருக்கிற பொருத்தமான மேல்முறையீட்டு அதிகாரியின் முன் ஒப்பளிப்பு இல்லாமல் ரத்து செய்யவும் கூடாது, மாற்றியமைக்கவும் கூடாது.

15. (1) மேல்முறையீடுகள் செய்து கொள்வதற்கான நடைமுறை.—மேல்முறையீடு ஒவ்வொன்றிலும், மேல்முறையீடு செய்வோர் ஆதாரமாகக் கொண்டுள்ள எல்லா முக்கியமான செய்திகளும் வாதங்களும் அடங்கியிருக்க வேண்டும்; மரியாதைக் குறைவான அல்லது தகுதியற்ற சொற்கள் அதில் இருக்கக் கூடாது, அது தன்வரையில் முழுமையாக இருக்க வேண்டும். அத்தகைய மேல்முறையீடு ஒவ்வொன்றும், யாருக்குச் செய்துகொள்ளப்படுகிறதோ அவருக்கு விலாசமிடப்பட்டிருக்க வேண்டும்; மேல்முறையீடு செய்தவர் இருக்கிற அல்லது இருந்த அலுவலகத் தலைவர் மூலமாகவும், யாருடைய ஆணையை எதிர்த்து மேல்முறையீடு செய்து கொள்ளப்படுகிறதோ அந்த அதிகாரியின் மூலமாகவும் அதை அனுப்பவேண்டும். ஆயினும், மேல்முறையீட்டின் ஒரு படியை, மேல்முறையீட்டதிகாரிக்கு நேரடியாக அனுப்பலாம்.

(2) ஆணையாளர், 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 53 (1) (அ) பிரிவின்படி அமைக்கப்பட்ட நியமனக் குழுவினர் முன் மேல்முறையீட்டை வைத்து, அதைக் குறித்து அக் குழுவினரின் பரிந்துரைகளைப் பெற்று அவற்றை மேல்முறையீட்டுடன் மேல்முறையீட்டதிகாரிக்கு அனுப்ப வேண்டும்.

16. மேல்முறையீடுகளை நிறுத்தி வைப்பது.—யாருடைய ஆணையை எதிர்த்து மேல்முறையீடு செய்து கொள்ளப்படுகிறதோ அந்த அதிகாரியின் வரிசைக் குறையாத வரிசையில் உள்ள ஓர் அதிகாரியானவர்—

(1) இவ் விதிகளின்படி மேல்முறையீடு செய்து கொள்ளக் கூடாத ஒன்றில் அது செய்து கொள்ளப்படுவதாயிருந்தால்; அல்லது

(2) 15 (1) விதியின் நிபந்தனைகளை அது அனுசரிக்கா விட்டால்; அல்லது

(3) 13-ஆவது விதியில் நிர்ணயிக்கப்பட்ட கால வரையறைக்குள் அது செய்து கொள்ளப்படாமலிருந்து, காலதாமதத்துக்கு நியாயமான காரணம் எதுவும் காட்டப்பாடாவிட்டால்; அல்லது

(4) முந்திய மேல்முறையீட்டினையே அது மீண்டும் கூறுவதாயிருந்து எந்த மேல்முறையீட்டதிகாரி அந்த மேல்முறையீட்டில் முடிவு செய்தாரோ அவருக்கு அது செய்து கொள்ளப் பட்டிருந்து அவ்விஷயத்தை மறுபடியும் ஆலோசனை செய்வதற்கு ஏது அளிக்கும் வகையில் புதிய செய்திகளோ சூழ்நிலைகளோ காட்டப்பாடாவிட்டால்; அல்லது

(5) இவ்விதிகளின்படி யாருக்கு மேல்முறையீடு செய்து கொள்ளக் கூடாதோ அந்த அதிகாரிக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்டால்;
அந்த மேல்முறையீட்டை நிறுத்தி வைக்கலாம்.

ஆனால் மேல்முறையீடு நிறுத்தி வைத்துக் கொள்ளப்படுகிற ஒவ்வொன்றிலும் அச் செய்தியையும் அதற்கான காரணங்களையும் மேல்முறையீடு செய்தவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

மேலும், (2) பகுதியின்படி அல்லது (5) பகுதியின்படி நிறுத்தி வைக்கப்பட்ட ஒரு மேல்முறையீட்டை நிறுத்தி வைத்துக் கொண்டது பற்றி மேல்முறையீடு செய்தவருக்குத் தெரிவித்த தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் எப்போதாகிலும் அம் மேல்முறையீட்டினை மறுபடியும் அனுப்பலாம்; 15-ஆவது விதியின் நிபந்தனைப்படி யிருக்கிற படிவத்தில் பொருத்தமான மேல்முறையீட்டதிகாரிக்கு அது மீண்டும் அனுப்பப் பட்டால், அதை நிறுத்தி வைத்துக் கொள்ளக் கூடாது.

17. மேல்முறையீட்டை நிறுத்தி வைத்துக் கொண்டதை எதிர்த்து மேல்முறையீடு.—தகுதி வாய்ந்த அதிகாரி மேல்முறையீட்டை நிறுத்தி வைத்துக் கொண்டதை எதிர்த்து மேல்முறையீடு செய்து கொள்ளலாகாது.

18. மேல்முறையீடுகளை அனுப்புவதற்கான நடைமுறை.— இவ் விதிகளின்படி நிறுத்தி வைத்துக் கொள்ளப்பட்டிராத மேல்முறையீடு ஒவ்வொன்றையும் எவருடைய ஆணையை எதிர்த்து மேல்முறையீடு செய்து கொள்ளப்படுகிறதோ அந்த அதிகாரியானவர், கருத்தைத் தெரிவித்து, மேல் முறையீட்டதிகாரிக்கு அனுப்ப வேண்டும்.

(2) 16-ஆவது விதியின்படி நிறுத்தி வைத்துக் கொள்ளப்பட்ட மேல் முறையீடுகளின் பட்டியலையும் அவற்றை நிறுத்தி வைத்துக் கொண்டதற்கான காரணங்களையும், நிறுத்தி வைத்துக் கொள்ளும் அதிகாரி மேல்முறையீட்டதி காரிக்குக் கால் ஆண்டுக்கொருமுறை அனுப்ப வேண்டும்.

(3) மேல்முறையீட்டதிகாரியானவர், இவ் விதிகளின்படி ஏற்றுக் கொள் ளத்தக்கதும் கீழ் அதிகாரி ஒருவரால் நிறுத்தி வைத்துக் கொள்ளப்பட்டிருப் பதுமான மேல்முறையீடு ஒன்றை வரவழைத்து, அதன் பேரில் தமக்குத் தகுதி யாகத் தோன்றுகிற ஆணைகள் பிறப்பிக்கலாம்.

19. ஏற்பு அல்லது ஒப்பளிப்பை எழுத்து மூலமாய் வழங்க வேண்டு மென்பது.—(1) இவ்விதிகளின்படி ஓர் அதிகாரியின் ஏற்பு அல்லது ஒப்பளிப்பு தேவைப்பட்டால், அல்லது அவருடன் கலந்தாலோசிக்க வேண்டியிருந்தால் அந்த ஏற்பு அல்லது ஒப்பளிப்பை எழுத்து மூலமாய் வழங்க வேண்டும்; அவ்வாறு கலந்தாலோசித்தல் எழுத்து மூலமாயிருக்க வேண்டும்.

(2) கலந்தாலோசிக்க வேண்டிய அதிகாரியின் ஆலோசனையை ஆணை யாளர் ஏற்றுக் கொள்ளாவிட்டால், ஆணையாளர் அதற்காகத் தமக்குண்டான காரணங்களை எழுதி வைத்து, அதற்கு ஒரு படியைக் கலந்தாலோசிக்க வேண்டிய அதிகாரிக்கும் அரசினருக்கும் அனுப்ப வேண்டும்.

20. லஞ்சம் வாங்கிய காரியங்களை ஒழுங்கு நடவடிக்கைகளுக்காகத் தீர்ப்பாயத்திற்கு அனுப்புதல்.—(1) இவ்விதிகளில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே, ஆணையாளர், மாநில அரசினரின் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொண்டு, தனிப்பட்ட விஷயத்திலேனும் அல்லது ஒரு வகையைச் சேர்ந்த விஷயங்களிலேனும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர்களும் பணியாளர்களும் தங்கள் அலுவல் முறையான கடமைகளைச் செய்யும்போது லஞ்சம் வாங்கிய காரியங்களில் அரசாங்கப் பணியாளர்களுடன் கூட்டாகச் சம்பந்தப்பட்டிருந்து, அந்த அரசாங்கப் பணியாளர்களுடைய காரியங்கள் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கான தீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட்டால், மேற் படி அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட காரியங்களை

அந்தத் தீர்ப்பாயத்திற்கு அனுப்பி, அச்செய்தியை அரசாங்கத்தின் பொது (பணிகள்) துறைக்குத் தெரிவிக்கலாம்; மாநில அரசினர் ஆணையிட்டால் மேற்சொன்னவாறு அனுப்பித் தெரிவிக்க வேண்டும்.

(2) ஓர் அலுவலர் அல்லது பணியாளர் லஞ்சம் வாங்கிறைரென்றும் சாட்டுரைகள் பற்றிய பதிவுகள் வந்து சேர்ந்தவுடனே, அந்தத் தீர்ப்பாயம் பொருத்தமான குற்றச்சாட்டுகளை உருவாக்கி, அவற்றைச் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அல்லது பணியாளருக்குத் தெரிவிக்க வேண்டும்; அதோடு கூட, அக்குற்றச்சாட்டுகளைப் பற்றி விசாரிக்கும் தேதி பற்றிய தகவலையும், அக்குற்றச்சாட்டுகளில் ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் விசாரிக்கப் போகும் சாட்சிகளின் பட்டியலையும் அனுப்ப வேண்டும். ஒவ்வொரு சாட்சியும் வழக்குத் தொடர்வோரால் விசாரிக்கப்படுவதற்கு அடுத்து முன்னதாக அத் தீர்ப்பாயம் சாட்டசியினிடமிருந்து பெறப்பட்ட எந்த வாக்குமூலத்தை ஆதாரமாகக் கொண்டு தீர்ப்பாயம் அவர் மீது குற்றச் சாட்டுகளைத் தயாரித் திருக்கிறார்களோ அந்த வாக்குமூலத்துக்குப் படி ஒன்றை குற்றம் சாட்டப் பட்டவருக்குக் கொடுக்க வேண்டும். விசாரணையின்போது, வாய்மொழிச் சாட்சியத்தைக் கேட்க வேண்டும்; சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவும், நேரில் சான்று கூறவும், தாம் விரும்பக் கூடிய சாட்சிகளை அழைப்பிக்கவும் உரிமை உள்ளவராவார். ஆனல், நியாய சபையார் போதுமான தனிக் காரணங்களை முன்னிட்டு, ஒரு சாட்சியை அழைக்க மறுத்துவிடலாம்; அக் காரணங்களை எழுதி வைக்க வேண்டும். விசாரணை முடிந்த பிறகு, குற்றம் சாட்டப்பட்டவர், தாம் விரும்பினுல், தமது எதிர் வாதத்தை எழுதிக் கொடுக்க அல்லது நேரிலோ வழக்கறிஞர் மூலமாகவோ நமது வழக்கை எடுத்துச் சொல்ல உரிமை உள்ளவராவர். நடவடிக்கைக் குறிப்புகளில், சாட்சியத்தைப் பற்றிய போதிய பதிவும், முடிவுகளைப் பற்றிய அறிக்கையும் அதற்கான காரணங்களும் அடங்கியிருக்க வேண்டும்.

(3) விசாரணை முடிந்த பிறகு, நியாய சபையார் தங்கள் முடிவுகளையும் பரிந்துரைகளையும் ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். விதிக்கப்பட வேண்டிய தண்டனையைக் குறித்து, ஆணையாளர் ஒரு தற்காலிக முடிவுக்கு வந்த பிறகு, நியாய சபையாரின் அறிக்கைக்கு ஒரு படியைக் குற்றம் சாட்டப் பட்டவருக்குக் கொடுக்க வேண்டும். (தண்டனையைக் குறித்து அவர்கள் பரிந்துரைகள் செய்திருந்தால் அவற்றை அந்த அறிக்கையில் சேர்க்க வேண்டி யதில்லை); விதிக்கப்படவிருக்கிற குறிப்பிட்ட தண்டனையை எதிர்த்துச் சாதாரணமாய் ஒரு மாதத்துக்கு மேற்படாத நியாயமான காலத்துக்குள், காரணம் காட்டும்படி அவரைக் கேட்க வேண்டும்; ஆனல், போதுமான

காரணங்களை முன்னிட்டு, நியாய சபையின் முடிவுகள் எல்லாவற்றையும் அல்லது அவைகளில் சிலவற்றை ஆணையாளரால் ஒப்புக்கொள்ளாவிட்டால் அவ்வாறு ஒப்புக் கொள்ளாததன் கூறு அல்லது கூறுகளையும் அவற்றின் காரணகளையும் பற்றிய சுருக்கமான அறிக்கையையுங்கூட அவருக்கு அனுப்ப வேண்டும். ஆணையாளர் முடிவான ஆணைகள் பிறப்பிப்பதற்கு முன், குற்றம் சாட்டப்பட்டவர் இது விஷயமாய்ச் சொல்லிக் கொள்ளும் எதைப்பற்றியேனும் அவர் ஆலோசிக்கவேண்டும்.

(4) சம்பந்தப்பட்ட ஆள் தலை மறைவாய்ப் போய்விட்டிருந்தாலும், வேறு காரணங்களுக்காக அவரோடு தொடர்பு வைத்துக் கொள்வது சாத்திய மாயிராவிட்டாலும், அவர் விசாரணையில் பங்கு கொள்ளாவிட்டாலும், அப் போதுங்கூட விசாரணை நடக்க வேண்டும்.

(5). (2), (3) உள்விதிகளில் சொல்லியிருப்பவைகளை அனுசரிப்பதில் இடர்ப்பாடிருந்தாலும், அவ்வாறு சொல்லியிருப்பவைகளை வற்புறுத்தாது விடுவதனால் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அநியாயம் செய்வதாக இல்லா விட்டாலும், விலக்கான சூழ்நிலைகளிலும் போதுமான தனிக் காரணங்களை முன்னிட்டும், அவ்வுள்விதிகளின் நிபந்தனைகள் எல்லாவற்றையுமாவது அவை களில் எவற்றையாவது வற்புறுத்தாமல் விட்டுவிடலாம்; அக்காரணங்களை எழுதி வைக்க வேண்டும்.

(6) ஆணையாளர் சாதாரணமாக நியாய சபையாரின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டும். நியாய சபையின் ஆலோசனையைத் தள்ளிவிட வேண்டுமென அல்லது அதிலிருந்து மாறுபட வேண்டுமென ஆணையாளர் கருதினால், அவ்வாறு தள்ளிவிடுவதற்கான அல்லது மாறுபடுவதற்கான காரணங்களை அரசினருக்குத் தெரிவிக்க வேண்டும்; அவர்கள் தீர்ப்பாயத் தாருடன் கலந்தாலோசித்து ஆணைகள் பிறப்பிப்பார்கள்.

21. 20 ஆவது விதியின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை எதிர்த்து மேல் முறையீடு.—(1) 20 ஆவது விதியில் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றிய பிறகு, ஆணையாளர் தண்டனை விதித்துப் பிறப்பிக்கும் ஆணையை எதிர்த்து மாநில அரசினருக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

(2). (1) உள்விதியின்படி செய்து கொள்ளப்படும் மேல்முறையீட்டின் பேரில் ஆணைகள் பிறப்பிப்பதற்கு முன், ஒழுங்கு நடவடிக்கைகளுக்கான தீர்ப்பாயத்தாரைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

ஆனால், தீர்ப்பாயத்தை கலந்தாலோசிப்பது—

(i) பிறப்பிக்க வேண்டிய ஆணையைக் குறித்து தீர்ப்பாயம் முந்திய ஒரு கட்டத்தில் ஆலோசனை சொல்லியிருந்து, அதன் பிறகு தீர்வுக்காகப் புதிய பிரச்சினை எதுவும் ஏற்பட்டிராவிட்டால்; அல்லது

(ii) அந்த மேல்முறையீட்டைத் தள்ளிவிட்டு ஆணை பிறப்பிக்க மாநில அரசினர் கருதியிருந்தால்;

அவசியமாக மாட்டாது.

22. **இணைவளர்ச்சி ஆணையாளர் சீராய்வு செய்யும் அதிகாரம்.**—இந்த விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளருடைய நடத்தையைப் பற்றி நடந்து முடிந்துபோன விசாரணைக்குத் தொடர்பான பதிவுகளை இணை வளர்ச்சி ஆணையாளர் வரவழைத்துத் தகுதியாகத் தோற்றக் கூடிய ஆணைகளைப் பிறப்பிக்கலாம். ஆணையாளர் தண்டனை விதிக்காதிருந்து இந்த உள்விதியின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையில் தண்டனை விதித்தாலும், ஆணையாளர் விதித்த தண்டனையை இந்த ஆணையின் மூலம் அதிகப்படுத்தினாலும், இந்த ஆணையை எதிர்த்து மாநில அரசினருக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

(1965 பெப்ரவரி 6 ஆம் தேதியுள்ள 277 ஆம் எண் கிராமமுன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

45. தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்களின் வருங்காலச் சேம நிதி விதிகள்.

1. **சிறு தலைப்பு:**—இவ் விதிகளை, 1965 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்களின் வருங்காலச் சேம நிதி விதிகள் என்று சொல்லலாம்.

2. **வரையறைகள்.**—இவ்விதிகளில், பொருளிலாவது சந்தர்ப்பத்திலாவது முரண்பாடு எதுவும் இருந்தாலன்றி மற்றப்படி—

(1) "குடும்பம்" என்பது—

(அ) ஆண் சந்தாதாரரைப் பொருத்தவரை சந்தாதாரரின் மனைவி அல்லது மனைவிமார்கள், குழந்தைகள் என்றும், சந்தாதாருடைய இறந்து போன குமாரரின் விதவை அல்லது விதவைகள், குழந்தைகள் என்றும் பொருள்படும்.

ஆனால், தம் மனைவி நீதிமன்றம் மூலம் தம்மிடமிருந்து பிரிக்கப் பட்டிருக்கிறாரென, அல்லது அவர் சேர்ந்துள்ள சமூகத்தின் மாமூல் சட்டத் தின்படி வாழ்க்கைப் பொருளுதவி பெறுதற்கான உரிமையை இழந்துவிட்டிருக் கிறாரென ஒரு சந்தாதாரர் மெய்ப்பித்தால், அதற்குப் பிறகு அம் மனைவி இவ்விதிகள் சம்பந்தப்படுகிற விஷயங்களில் சந்தாதாரரின் குடும்பத்தைச் சேர்ந்தவராகக் கருதப்பட மாட்டார். ஆனால் அம்மனைவி தம் குடும்பத்தைச் சேர்ந்தவரெனத் தொடர்ந்து கருதப்பட வேண்டுமென்று சந்தாதாரர் பின்னர் எழுதியுள்ள வெளிப்படையான அறிக்கை மூலமாகத் தெரிவித்தால் அம்மனைவி அவ்வண்ணமே கருதப்படுவார்.

(ஆ) பெண் சந்தாதாரரைப் பொருத்தவரை சந்தாதாரரின் கணவரும், குழந்தைகளும், சந்தாதாரரின் இறந்துபோன மகனுடைய விதவை அல்லது விதவைகளும் குழந்தைகளும் :

ஆனால், தம் குடும்பத்திலிருந்து தம் கணவரை விலக்கி விடத் தாம் விரும்புவதாகச் சந்தாதாரர் எழுதியுள்ள அறிக்கை மூலமாக ஆணையாளருக்கு தெரிவித்தால், அது முதல் அக் கணவர், இவ்விதிகளுக்குச் சம்பந்தப்படுகிற விஷயங்களில், சந்தாதாரரின் குடும்பத்தைச் சேர்ந்தவராகக் கருதப்பட மாட்டார். ஆனால் பின்னர் சந்தாதாரர், தம் கணவரை விலக்குவதற்கான தமது அறிக்கையை எழுத்து மூலமாக முறையாய் ரத்து செய்தால், அக் கணவர் சந்தாதாரரின் குடும்பத்தைச் சேர்ந்தவரென்றே கருதப்படுவார்.

குறிப்பு :—1. "குழந்தைகள்" என்பது முறையாகப் பிறந்த குழந்தைகள் எனப் பொருள்படும்.

குறிப்பு :—2. சுவீகாரக் குழந்தையை குழந்தையெனவே ஆணையாளர் கருத வேண்டும்; ஆணையாளர் மனத்தில் ஏதேனும் ஐயம் தோன்றினால், அவர் சட்ட ஆலோசனை பெற்ற பிறகு அதைத் தீர்மானிக்க வேண்டும்.

(ii) "படிவம்" என்பது இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் எனப் பொருள்படும் ;

(iii) "நிதி" என்பது, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தினால் ஏற்படுத்தப் பட்ட கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்களின் வருங்காலச் சேம நிதி எனப் பொருள்படும் ;

(iv) "கடைநிலைப் பணியாளர்" என்பது, யாருடைய பதவி, பணிக் கொடைகள் வழங்குவதை முறைப்படுத்துவதற்கான விதிகளில் கடைநிலைப் பணியைச் சேர்ந்ததென வகைப்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்தப் பணியாளர் எனப்பொருள்படும் ;

(v) "உள்ளாட்சிக் கழகம்" என்பது (1958 ஆம் ஆண்டின் 35 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழநாடு ஊராட்சிச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஓர் ஊராட்சி அல்லது ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் என்றாவது, (1920 ஆம் ஆண்டின் 5 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைக்கப் பட்ட ஒரு நகராட்சி மன்றம் என்றாவது சந்தர்ப்பத்துக்கேற்ப (1958 ஆம் ஆண்டின் 35 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி அல்லது வேறு ஏதேனும் தனிச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட நகரியம் என்றாவது பொருள்படும்;

(v ஆண்பாலைக் குறிக்கும் சொற்களில் பெண்களும் அடங்குவதாகக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டால் அவ்வாறே கொள்ள வேண்டும்.

(vii) "வேலையாள்" என்பது முறையான பணித் தொகுதியைச் சேர்ந்த எந்த வேலையாள், பணிக் கொடைகள் வழங்குவதை முறைப்படுத்துவதற்கான விதிகளில் உயர்தரப் பணியை அல்லது கடை நிலைப் பணியைச் சேர்ந்தவரென வகைப்படுத்தப்படவில்லையோ அந்த வேலையாள் எனப் பொருள்படும்.

3. நிதிக்குப் பங்குத் தொகை செலுத்துவதற்கான தகுதி.—இவ் விதிகளின் படி பங்குத் தொகை செலுத்துவது, 13 (iii) விதியின் நிபந்தனைக்குட்பட்டு, எந்த நிலையான பணிக்காகச் சந்தாதாரரிடமிருந்து சந்தா வசூலிக்கப்படு கிறதோ அந்த நிலையான பணி சம்பந்தமாக மாத்திரமே சாதாரணமாய் அனுமதிக்கப்படத்தக்கதாகும்.

ஆனால், தற்காலிகமான அல்லது பதிலிப் பணி சம்பந்தமாகவுங்கூட பங்குத் தொகை செலுத்துவதற்கு ஊராட்சி ஒன்றிய மன்றம் அனுமதி கொடுக்கலாம்.

4. பணிக் கொடை அல்லது வேறு ஈடு பெறுவதற்கு ஆன தகுதி.—இவ் விதிகளின் நன்மைகளைப் பெறுவதற்கு அனுமதிக்கப் பெற்றிருக்கிற ஒருவர், இவ்விதிகளின்படிக்கான நன்மையைப் பெறுதற்கு அவர் உரியவராயிருக்கிற கால அளவு சம்பந்தமாக வேறு எந்த விதிகளின்படியும் பணிக் கொடை அல்லது ஈடு பெறுவதற்கு உரியவராக மாட்டார்.

5. நிதியை ஏற்படுத்திப் பேணி வருதல்.—(1) ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றும், தனது கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்களின் நன்மைக்காக வருங்காலச் சேம நிதி ஒன்றை ஏற்படுத்தி வைத்துவர

வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நிலையான கடைநிலைப் பணியாளர்கள் வேலையாட்கள் எல்லாம் இந்த நிதிக்குச் சந்தா செலுத்தக் கடமைப் பட்டவர்களாவார்கள்.

(2) இந்த நிதி ஊராட்சி ஒன்றிய மன்றத்தினால் நிருவகிக்கப்பட்டு, ரூபாய்க் கணக்கில் வைத்துவரப்பட வேண்டும்.

6. நியமனம்.—(1) சந்தாதாரர் ஒவ்வொருவரும், சேர்த்துக் கொள்ளப் படுவதன் பேரில், பணியை விட்டு விலகுவதற்குமுன் தாம் இறந்து விட்டால், அல்லது ஓய்வு பெற்ற பிறகு ஆனால் பணம் வாங்குவதற்கு முன்பு தாம் இறந்துவிட்டால், தம் பெயரில் வரவாயிருக்கக் கூடிய தொகையைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையை வழங்குவதற்காக, அரசினரால் விதிக்கப்படக் கூடிய படிவத்தின்படி நியமனம் ஒன்று செய்ய வேண்டும்.

(2) சந்தாதாரர் ஒருவர் நிதியில் சேருகிற காலத்தில் அவருக்குக் குடும்பம் இருந்தால், தமது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அல்லது பலருக்குச் சாதகமாக I ஆம் படிவப் பிரகாரம் நியமனம் ஒன்றை ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும்.

(3) ஒரு சந்தாதாருக்குக் குடும்பம் இல்லாவிட்டால், அவர் II ஆம் படிவப் பிரகாரம் ஒருவர் அல்லது பலரை அதே மாதிரி நியமனம் செய்யலாம்; ஆனால், அவ்வாறு செய்யப்படும் நியமனம் அச்சந்தாதாருக்குக் குடும்பம் இல்லாதிருக்கிற வரையில் மட்டும் இவ்விதிகளின்படி முறையாகச் செய்யப் பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(4) II ஆம் படிவப் பிரகாரம் நியமனம் செய்திருக்கிற ஒரு சந்தா தாரருக்குப் பின்னர் குடும்பம் உண்டானல், முறைப்படி அந்த நியமனத்தை ரத்து செய்து (2) உள்விதியின்படி புதிதாக நியமனம் செய்யுமாறு அவரைக் கேட்க வேண்டும்.

(5) ஒரு நியமனத்தை ஆணையாளர் ஒப்புக் கொண்டால்தான் அது அமலுக்கு வரும்.

7. சந்தா.—(1) கடைநிலைப் பணியாளர் அல்லது வேலையாள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் நிதிக்குச் சந்தா செலுத்த வேண்டும்; ஆனால் ஒரு சந்தாதாரர் ஒரு மாதத்தில் முழுமாதப் பணி செய்யாமலிருந்து, முழு மாதச் சம்பளம் வாங்காவிட்டால், அம்மாதத்தின் சந்தா செலுத்தாமலிருந்துவிடலாம்.

(2) சந்தாதாரரே சந்தாத் தொகையைப் பின்வரும் திட்டங்களுக்குட்பட்டு நிச்சயிக்க வேண்டும்—

(அ) அது இருபத்தைந்து காசின் மடங்குகளாக இருக்க வேண்டும்.

(ஆ) குறும சந்தா மாதம் ஒன்றுக்கு ஐம்பது காசு ஆகும்; பெரும சந்தா அடியிற்குறிப்பிட்டவாறு இருக்க வேண்டும் :—

	மாதம் ஒன்றுக்குச் சந்தாவின் பெரும வீதம்.
(i) மாதம் 12 ரூபாய்க்கு மேற்படாமல் சம்பளம் வாங்கும் சந்தாதாரர்கள்	1
(ii) மாதம் 12 ரூபாய்க்கு மேற்பட்டு 16 ரூபாய்க்கு மேற்படாமலும் சம்பளம் வாங்ம் சந்தாதாரர்கள்	2
(iii) மாதம் 16 ரூபாய்க்கு மேற்பட்டும் 20 ரூபாய்க்கு மேற்படாமலும் சம்பளம் வாங்கும் சந்தாதாரர்கள்	4
(iv) மாதம் 20 ரூபாய்க்கு மேற்பட்டுச் சம்பளம் வாங்கும் சந்தாதாரர்கள்	4

(3) சந்தாதாரர் ஒவ்வோர் ஆண்டிலும் தமது மாதச் சந்தாத் தொகை நிச்சயித்திருப்பதைத் தெரிவிக்க வேண்டும்; அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட தொகை அந்த ஆண்டு முழுவதும் மாறுமலேயே இருந்து வரும்.

(4) ஆணையாளர் சந்தாதாரர்களின் சம்பளப் பட்டியலிலிருந்து தொகையைக் கழித்துக் கொள்வது மூலமாகச் சந்தாவை வசூலிக்க வேண்டும்.

(5) மேலும், ஊராட்சி ஒன்றிய மன்றம் சந்தாதாரரின் சம்பளம் எந்த நிதிக்குப் பற்றுக எழுதப்படுகிறதோ அந்த நிதியிலிருந்து, இவ்விதியில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற குறும வீதத்தின்படியுள்ள சந்தாவுக்குச் சமமான தொகையைப் பங்குத் தொகையாக வழங்க வேண்டும்; அப்பங்குத் தொகையைச் சந்தர்ப்பத்துக்கேற்ப, ஆண்டுதோறும் மார்ச் 31 ஆம் தேதிக்குமுன் அல்லது 13 ஆவது விதியின்படி கணக்கு முடிடிக்கப்படும்போதெல்லாம், அவருடைய கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

8. சந்தாத் தொகையை முதலீடு செய்வது.—(1) ஒரு சந்தாதாரர் எழுத்து மூலமாய்க் கேட்டுக் கொள்வதன்பேரிலும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஒப்புதலுடனும், ஊராட்சி ஒன்றிய மன்றம் அவருடைய சந்தாவின் ஒரு பாகத்தை அல்லது அது முழுவதையும், சந்தாதாரரும் ஊராட்சி ஒன்றிய மன்றமும் எழுத்து மூலமாக ஒருவருக்கொருவர் ஒப்புக்கொள்ளக் கூடிய அலுவலகத்திலும், தொகைக்கும் வரையறைகளின் பேரிலும், உயிர் ஈட்டுறுதிப் பத்திரத்தில் முதலீடு செய்யலாம்.

(2) அப்பத்திரத்தைச் சந்தாதாரர் பெயரில் எழுத வேண்டும்; அவர் அதை, ஆணையாளருக்கு அல்லது ஊராட்சி ஒன்றியமன்றம் இதன்பொருட்டு அவ்வப்போது நியமிக்கக் கூடியவருக்குச் சாதகமாக உரிமைப்படுத்த வேண்டும். அதை ஊராட்சி ஒன்றிய மன்றம் வைத்திருந்து, விலக்கு நிபந்தனையின் (இ) பகுதியில் அல்லது (ஈ) பகுதியில் சொல்லியுள்ளவாறு அது மீண்டும் உரிமைப்படுத்தப்பட்டாலன்றி அதனைக் கைவரப் பெற வேண்டும்; கைவரப் பெறுவதனால் கிடைக்கும் நிகர தொகையை (3) உள்விதியின் (அ) பகுதிக்குட்பட்டு, சந்தாதாரரின் கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

ஆனால் எப்போதும்—(அ) அத்தகைய பத்திரம் ஒவ்வொன்றும், சந்தாதாரர் உள்ளபடி ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நியமனத்திலிருக்கிற வரையில், ஊராட்சி ஒன்றியமன்றத்திற்குச் சொந்தமானதாகும்; அக்கால அளவிலே அதிலுள்ள எந்த பாத்தியதையும், அது யார் வாழ்க்கை பற்றி எழுதப் பட்டிருக்கிறதோ அந்தச் சந்தாதாரருக்காவது அவருடைய நியமனதாரர்களுக்காவது உரிமையாக மாட்டாது; அதில் தலையிடச் சந்தாதாரருக்காவது அவர் நியமனதாரர்களுக்காவது எவ்வித உரிமையும் இல்லை.

(ஆ) இவ்விதியின்படி ஒரு பத்திரம் பெறப்படுவதனால் ஏற்படக் கூடிய அல்லது விளையக்கூடிய இழப்பு அல்லது சேதத்துக்கு ஊராட்சி ஒன்றிய மன்றம் பொறுப்பாளியாக மாட்டாது.

(இ) சந்தாதாரர் பணியிலிருந்து விலகி ஓய்வு பெறுவதன் பேரில் அல்லது பதவி விலகுவதின் மூலம் அல்லது தண்டனை மூலம் அவருடைய பணிகள் இறுதி செய்யப்படுவதன் பேரில், அல்லது வேறு எந்தத் தல ஆட்சிக் கத்துக்கேனும் அவர் மாற்றப்படுவதன்பேரில், அவர் வாழ்க்கையின் மேல் எடுக்கப்பட்ட பத்திரத்தை மீண்டும் அவருக்கே உரிமையாக்க வேண்டும்.

(ஈ) ஒரு சந்தாதாரர் வேறொரு உள்ளாட்சிக் கழகத்தின் கீழ்ப் பணிசெய்ய ஏற்றுக் கொண்டு அல்லது தகுதி வாய்ந்த அதிகாரியால் அதற்கு

மாற்றப்பட்டிருந்து, இந்த விலக்கு நிபந்தனையின் பிரகாரம் வருங்காலச் சேம நிதியில் அவர் பெயரில் வரவாயிருக்கிறதொகை அந்த உள்ளாட்சிக் கழகத்தின் வருங்காலச் சேமநிதிக்கு மாற்றப்பட்டிருந்து, அவருடைய வாழ்வு ஈட்டுறுதிப் பத்திரம் அவருக்கே மீண்டும் உரிமையாக்கப்பட்டிருந்தால், சந்தர்ப்பத்துக்கேற்ப அவர் பணி செய்ய ஏற்றுக் கொண்ட அல்லது அவர் மாற்றப் பெற்றிருக்கிற உள்ளாட்சிக் கழகத்தின் ஆணையாளருக்கு அவர் அதை உரிமையாக்க வேண்டும்.

(உ) ஒரு சந்தாதாரர் பணியிலிருக்கும்போதே இறந்துபோனால், அவர் வாழ்வின் பேரில் எடுக்கப்பட்ட பத்திரத்தை, 6 ஆவது விதியின்படி அவரால் நியமிக்கப்பட்ட நியமனதாரருக்காவது அவ்விதியின்படி அவரால் கூட்டமாக நியமிக்கப்பட்ட நியமனதாரர்கள் எல்லாருக்குமாவது மீண்டும் உரிமையாக்க வேண்டும்; அவ்வாறு உரிமையாக்கும்போது, நியமனதாரர் ஒவ்வொருவரும் பெறுவதற்கு உரிமையுள்ள பங்கினைக் குறிப்பிட வேண்டும்.

(3) சந்தாதாரர் பணியை விட்டு விலகுவதற்கு முன் அந்தப் பத்திரம் முதிர்வடைந்தால், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்—

(அ) ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகையும் சேர்ந்து வந்திருக்கிற அதிகப்படி ஊதியங்களின் தொகையும் சேர்ந்து. அப் பத்திரம் சம்பந்தமாக நிதியிலிருந்து வாங்கப்பட்ட முழுத் தொகையை விட அதிகமாயிருந்தால், பத்திரத்தைச் சந்தாதாரருக்கு மீண்டும் உரிமையாக்கி, அவருக்குக் கொடுத்து விட வேண்டும்; அவர், ஈட்டுறுதி நிறுவனத்திலிருந்து தொகை பெற்றுக் கொண்டவுடனே, வாங்கப்பட்ட தொகை முழுவதையும் நிதிக்குத் திருப்பிச் செலுத்திவிட வேண்டும்; அவர் அப்படி செய்யத் தவறினால், ஊராட்சி ஒன்றிய மன்றம் கட்டளையிடக்கூடியபடி தவணைகளாகவோ மற்றப்படியோ சந்தாதாரரின் ஊதியவகளிலிருந்து கழித்துக் கொள்வது மூலமாக மேற்படி தொகையை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்;

(ஆ) ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகையும் சேர்ந்து வந்திருக்கிற அதிகப்படி ஊதியங்களின் தொகையும் சேர்ந்து அப் பத்திரம் சம்பந்தமாக நிதியிலிருந்து வாங்கப்பட்ட முழுத் தொகையைவிடக் குறைவாயிருந்தால், ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகையையும் சேர்ந்து வந்திருக்கிற அதிகப்படி ஊதியங்களையும் (2) உள்விதியின்படி வரப்பற்றி, அவ்வாறு வரப் பற்றிய தொகையை நிதியிலே சந்தாதாரின் பெயருக்கு வரவு வைக்க வேண்டும்.

(4) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், இவ்விதியின்படி எடுக்கப்பட்ட வாழ்வு ஈட்டுறுதிப் பத்திரங்களின் பதிவேடு ஒன்றையும், அப் பத்திரங்கள்

சம்பந்தமாகச் செலுத்தப்பட்ட தவணைக் கட்டணத்தின் பதிவேடு ஒன்றையும், இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள முறையே VIII ஆவது, IX ஆவது படிவங்களின்படி வைத்திருக்கும்படி செய்ய வேண்டும்.

9. **நிதியைப் போட்டு வைக்கும் விதம்.**—(1) வருங்காலச் சேமநிதிக் கழிவுத் தொகைகளாகச் சந்தாதாரர்களின் சம்பளப் பட்டியல்களிலிருந்து கழித்துக் கொள்ளப்படும் தொகைகளையும், ஊராட்சி ஒன்றிய மன்றம் கொடுத்த பங்குத் தொகைகளையும், ஊராட்சி ஒன்றிய மன்றம் பேரூராட்சி மன்றங்கள் ஆகிய வற்றின் விஷயத்தில் அரசுக் கருவூலத்திலும், ஊராட்சி மன்றங்கள் விஷயத்தில் ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் வைத்துவரப்படும் உள்ளாட்சி நிதி வைப்புக் கணக்கு II-லும் போட்டு வைக்க வேண்டும்; தனி ரொக்கக் கணக்குச் சுவடி ஒன்றை வைத்துவர வேண்டும். வருங்காலச் சேமிப்பு நிதிக்குச் சம்பந்தப்பட்ட அத்தகைய கழிவுகள், பங்குத் தொகைகள், மன்றத் தொகைகள் ஆகியவை முழு வதையும் அல்லது அவற்றில் ஏதேனும் பாகத்தை உள்ளாட்சி அதிகார சபை களின் மற்ற வருங்காலச் சேமநிதிக் கணக்குகளின் வைப்புத் தொகைகளை முதலீடு செய்வதற்காக அரசினரால் நிர்ணயிக்கப்படக்கூடிய விதத்தில் முதலீடு செய்யும்பொருட்டு, அவசியமாயிருக்கக் கூடிய இடைக்காலங்களில், II ஆம் எண் கணக்கிலிருந்து எடுக்கலாம். கருவூல உள்ளாட்சி நிதி வைப்பு

(2) சந்தாதாரர்கள் செலுத்திய சந்தாக்களுக்காக, அல்லது ஊராட்சி ஒன்றிய மன்ற நிதியில் வரவு வைத்த பங்குத் தொகைக்காகச் சந்தாதாரர் களுக்கு வட்டி கொடுக்கப்பட மாட்டாது. சந்தாவையும் பங்குத் தொகை யையும் அஞ்சலகச் சேம பாங்கியிலிருந்தாவது வேறு எந்தப் பாங்கியிலாவது வைப்பீடு செய்வதனாலும், வைப்புக் கணக்கிலிருந்து எடுக்கப்படும் ஏதேனும் தொகையை முதலீடு செய்வதனாலும் சம்பாதிக்கப்பட்ட வட்டியை, நிதி சம்பந்தமான கணக்குகளை வைத்து வருவதற்கு அமர்த்தப்பட்டுள்ள பணித் தொகுதிச் செலவை ஈடு செய்வதற்காக, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பொது நிதிக்கு வரவு வைக்க வேண்டும்.

(3) ஒரு மாதத்திலே தற்காலிக முன்பணங்கள் கொடுப்பதற்கு வேண்டி யிருக்கிற தொகைகளை, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் பேரூராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் விஷயத்தில் இவ் விதியின்படி அரசுக் கருவூலத்தில் போட்டு வைத்துள்ள தொகைகளிலிருந்தும், ஊராட்சி மன்றங்கள் விஷயத்தில் இவ் விதியின்படி உள்ளாட்சி நிதி வைப்பு ஆம் எண் கணக்கில் போட்டு வைத்துள்ள தொகைகளிலிருந்தும் எடுக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் பேரூராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் விஷயத்தில் அரசுக் கருவூலத்திலும், ஊராட்சி மன்றங்கள் விஷயத்தில் உள்ளாட்சி நிதி வைப்பு

II ஆம் எண் கணக்கிலும் ஒரு மாதத்தின் இறுதி வரையில் வைக்கப்பட்ட வைப்புத் தொகைகளில் அடுத்த மாதத் தொடக்கத்தில் அவைகளில் உள்ள இருப்பை, அம் மாதத்தின் நான்காம் தேதிக்குள் அஞ்சலகச் சேம வங்கியில் செலுத்திவிட வேண்டும்.

10. *தற்காலிக முன்பணங்கள்.*—சந்தாதாரர் ஒருவர் செலுத்திய சந்தாக்கள் காரணமாக அவருக்கு வரவாயிருக்கிற தொகையிலிருந்து அவருக்குத் தற்காலிக முன்பணங்கள் வழங்குவது இன்றியமையாததென ஆணையாளர் கருதினால் அவர் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அவ்வாறே வழங்கலாம்.—

(அ) அத்தகைய முன்பணங்கள் வழங்குவதற்கான காரணங்களை எழுதி வைக்க வேண்டும்.

விளக்கம்.—முன்பணங்கள் வழங்குதற்குரிய நியாயமான காரணங்களாக அடியிற் கண்டவைகளை ஒப்புக் கொள்ளலாம்—

(1) சந்தாதாரரின் அல்லது அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் (பிள்ளைப்பேறு உட்பட) அபாயமான நோய் சம்பந்தமாகப் பிடித்த செலவுகளைக் கொடுப்பது.

(2) சந்தாதாரரின் சமயக் கோட்பாட்டின்படி எந்தத் திருமணங்களை ஈமக் கடன்களை அல்லது சடங்குகளைச் செய்ய அவர் கடமைப்பட்டிருக்கிறாரோ எவை சம்பந்தமாகக் கட்டாயமாய்ச் செலவு செய்ய வேண்டுமோ அவைகள் சம்பந்தமான செலவுகளைக் கொடுப்பது.

(ஆ) இவ்விதியின்படி வழங்கப்படும் முன்பணம், சந்தாதாரரின் மூன்று மாதச் சம்பளம் அல்லது நிதிக்கு அவர் செலுத்திய சந்தாத் தொகையில் பேர்பாதி ஆகியவற்றில் எது குறைவாயிருக்கிறதோ அதற்கு மேற்படக் கூடாது.

(இ) முந்திய எல்லா முன்பணங்களும், அவற்றிற்குரிய வட்டியும் முடிவாகத் திருப்பிச் செலுத்தப்பட்ட பிறகு குறைந்தது ஆறு மாதம் கழிவாகிற வரையில், தனிக் காரணங்களுக்காகவன்றி மற்றப்படியும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தனி ஒப்பளிப்புடனன்றி மற்றப்படியும், முன்பணம் வழங்கக் கூடாது; அக் காரணங்களை எழுதி வைக்க வேண்டும்.

(ஈ) இவ்விதியின்படி வழங்கப்பட்ட முன்பணத்தைச் சந்தாதாரரின் சம்பளப் பட்டியல்களிலிருந்து, பன்னிரண்டுக்கு மேற்படாத தொடர்ச்சியான சமமான மாதத் தவணைகளில் வசூலிக்க வேண்டும். சந்தாதாரர் முன்பணம்

வாங்கிய பிறகு முழுச் சம்பளம் பெறும் மாதத்திலிருந்து அதை வசூலிக்கத் தொடங்க வேண்டும்.

11. சந்தாத் தொகை ஜப்திக்கு உள்ளாகமாட்டாதென்பது.—நிதியில் சந்தாதாரரின் பெயருக்கு வரவாயிருக்கிற தொகையானது, எவ்விதமாக வேனும் ஒப்படைக்கப்படவோ பொறுப்பேற்றப்படவோ கூடாது; சந்தாதாரர் பெற்ற கடன் அல்லது பொறுப்பு சம்பந்தமாக, உரிமை, வருவாய்த் துறை அல்லது குற்ற விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது ஆணையின்படி ஜப்திக்கு உள்ளாக மாட்டாது; நொடித்தவர் சொத்துப் பொறுப்பாளராவது (1920-ஆம் ஆண்டின் 5-ஆவது மைய சட்டமாகிய) 1920-ஆம் ஆண்டின் மாகாண நொடிப்புச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட உடைமைக் காப்பாள ராவது அத் தொகையைப் பெற உரியவராகவுமாட்டார்; அதைக் கொடுக்கும் படி கேட்கவுங் கூடாது.

12. கணக்குகளை முடித்துவிடுவது.—ஒரு சந்தாதாரரின் கணக்கைப் பின் வரும் சந்தர்ப்பங்களில் முடித்துவிட வேண்டும்:—

(அ) அனுப்பிவிடுவது, நீக்கிவிடுவது அல்லது விலக்கி விடுவது மூலமாக அவரது பணிகள் இறுதி செய்யப்பட்டால்; அல்லது

(ஆ) அவர் பதவி விலகல் செய்தால்; அல்லது

(இ) அவர் பணியை விட்டு விலகி ஓய்வு பெற்றால்; அல்லது

(ஈ) அவர் இறந்துபோனல்.

13. கணக்குகளை முடித்துவிடுவதன் பேரில் தொகையைத் திருப்பிச் செலுத்துவது.—(i) 12 ஆவது விதியில் விவரிக்கப்பட்டிருக்கிற சந்தர்ப்பங் களில் ஒரு சந்தாதாரரின் கணக்கு முடித்துவிடப்பட்டால், சந்தாதாரர் நிதிக்குச் செலுத்தி, கணக்கு முடித்துவிடப்படும் தேதியன்று அவர் பெயரில் வரவாயிருக்கிற தொகையைச் சந்தர்ப்பத்துக்கேற்ப சந்தாதாருக்காவது அவ ருடைய நியமனத்தாரர்களுக்காவது கொடுத்துவிட வேண்டும்.

(ii) சந்தாதாரர் பணியை விட்டு விலகுவதற்கு முன் இறந்துபோனல், அவருக்குக் குடும்பம் இருந்து, அக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அல்லது பலருக்குச் சாதகமாக நியமனம் எதுவும் அமலில் இல்லாவிட்டால் அல்லது நிதியில் அவர் பெயருக்கு வரவாயிருக்கிற தொகையில் ஒரு பாகத்துக்கு மட்டும் அந்த நியமனம் சம்பந்தப்பட்டதாயிருந்தால், தொகை முழுவதும்

அல்லது சந்தர்ப்பத்துக்கேற்ப அந்த நியமனத்துக்குச் சம்பந்தப்படாத அதன் பாகம், அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அல்லது பலர் அல்லாத வேறொரு ஆள் அல்லது ஆட்களுக்குச் சாதகமாக இருப்பதாகப் பொருள்படும் ஒரு நியமனம் ஏற்பட்டிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சமமான பங்குகளில் கொடுக்கப்படத்தக்கதாகிவிடும்.

ஆனால், கீழே (1), (2), (3), (4) பகுதிகளில் குறிப்பிடப்பட்டவர்களாயிராமல் குடும்பத்தைச் சேர்ந்த வேறொருவர் இருந்தால் அடியிற் கண்டவர்களுக்கு எந்தப் பங்கும் கொடுக்கப்படத்தக்கதாக மாட்டாது :—

(1) சட்டப்படி தகுபருவம் அடைந்திருக்கிற குமாரர்கள் ;

(2) இறந்துபோன ஒரு குமாரரின் குமாரர்கள் சட்டப்படி தகுபருவம் அடைந்திருந்தால் அவர்கள் ;

(3) திருமணமான புதல்விகளின் கணவர்கள் உயிரோடிருந்தால் அப்புதல்விகள்.

(4) இறந்துபோன குமாரரின் புதல்விகளுக்குத் திருமணமாயிருந்து, அவர்களுடைய கணவர்கள் உயிரோடிருந்தால், அப்புதல்விகள்.

மேலும், இறந்துபோன ஒரு குமாரரின் விதவை அல்லது விதவைகளும் குழந்தை அல்லது குழந்தைகளும், அக் குமாரர் சந்தாதாரருக்குப் பின் உயிரோடிருந்திருந்தால் என்ன பங்கு பெற்றிருப்பாரோ அப்பங்கை மாத்திரம் சம பாகங்களாகத் தங்களுக்கிடையில் பெறுவார்கள்.

(iii) அதுபோலவே, சந்தர்ப்பத்துக்கேற்ப சந்தாதாருக்காவது அவருடைய நியமனதாரருக்காவது, ஊராட்சி ஒன்றிய மன்றம் கொடுத்த பங்குத் தொகையிலிருந்து, எக் காரணத்தினலேனும் அவரிடமிருந்து வசூலித்து ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு வரவு வைப்பது அவசியமெனத் தெரியவரக்கூடிய தொகைகளைக் கழித்துக் கொண்ட பிறகு எஞ்சி நிற்கும் தொகையைக் கொடுக்கலாம். ஆணையாளர், சந்தர்ப்பத்துக்கேற்ப, சந்தாதாரருக்காவது அவர் நியமனதாரருக்காவது பங்குத் தொகையைக் கொடுப்பதற்கு முன், பங்குத் தொகையை முழுவதும் கொடுப்பது சரியென்னுமளவுக்குச் சந்தாதாரின் வேலையும் நடத்தையும் இருந்திருக்கின்றன என்று பணிப் பட்டியலில் எழுதி வைக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியக் குழுவினர், மேற் சொன்ன நிபந்தனைகளுக்குட்பட்டு, தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி முழுமையாகவோ சிறிதுமட்டிலோ பங்குத் தொகையைக் கொடுக்கலாம்.

(iv) மொத்தத்தில் ஐந்தாண்டுக்குக் குறைவாகப் பணி செய்திருப்பவர்களுக்குப் பங்குத் தொகை எதுவும் கொடுக்கப்படத்தக்கதாகமாட்டாது; ஆனால், எவ்வளவு காலம் பணி செய்திருந்தபோதிலும், சந்தாதாருடைய சொந்தச் சந்தாத் தொகையைக் கொடுத்துவிட வேண்டும்.

ஆயினும், நிர்ணயிக்கப்பட்ட ஐந்தாண்டுக் காலத்தை முடிப்பதற்குமுன் இறந்துபோகிற அல்லது உடல் நலிவு காரணமாகக் கட்டாயமாய் ஓய்வு பெறும்படி செய்யப்படுகிற ஒருவர் விஷயத்துக்கு இந்த வரையறை பொருந்தாது.

(v) போதுமான நியாயமான காரணமின்றி வேலை நிறுத்தம் செய்வது, அனுமதியின்றிப் பணிக்கு வராமல் நின்றுபோவது ஆகியவை, பங்குத் தொகையை நிறுத்தி வைப்பதற்குப் போதிய காரணங்களெனக் கருதப்படலாம்.

14. சந்தாதாரர்களுக்குத் தெரிவிப்பது.—ஒவ்வோர் ஆண்டும் முடிந்த பிறகு கூடிய விரைவில் பங்குத் தொகை உட்பட ஒவ்வொரு சந்தாதாரரின் பெயரில் வரவாயிருக்கிற தொகையைக் காட்டும் IIIஆம் படிவப் பிரகாரம் உள்ள விவரப் பட்டியல் ஒன்றை அவருக்கு அனுப்ப வேண்டும். விவரப் பட்டியல்களில் கண்டுள்ள தொகை சரிதான் என்பதைப் பற்றிச் சந்தாதாரர்கள் சந்தேகமறத் தெரிந்துகொள்ள வேண்டும்; அவைகளில் தவறுகள் இருந்தால் அவற்றை, அவைகளைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் ஆணையாளருக்குத் தெரிவிக்க வேண்டும். அதன் பேரில், ஆணையாளர், அவசியமெனக் கருதப்படக்கூடிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

15. பதிவேடுகள் வைத்துவருவது.—ஆணையாளர் அடியிற்கண்டவற்றை வைத்துவரும்படி செய்ய வேண்டும். IVஆம் படிவப் பிரகாரம் சந்ததாரர்களின் .:திவேடு; V ஆம் படிவப் பிரகாரம் ரொக்கக் கணக்குச் சுவடி; ஆம் படிவப் பிரகாரம் தற்காலிக முன்பணங்களையும் அவைகளின் வசூலையும் பற்றிய பதிவேடு; VII ஆம் படிவப் பிரகாரம் ஒரு தொகுப்பு.

16. 1963 ஆம் ஆண்டின் உள்ளாட்சிக் கழகங்களின் வருங்காலச் சேம நிதி விதிகள் பொருந்தும்படி செய்தல்.—இவ் விதிகளில் வேறுவிதமாகச் சொல்லப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, உள்ளாட்சிக் கழகங்களின் வருங்காலச் சேம நிதி விதிகளிலே கீழ்க் குறிப்பிடப்பட்ட விதிகளின் நிபந்தனைகள், அவற்றில் விவரிக்கப்பட்டுள்ள விஷயங்கள் சம்பந்தமாகப் பொருந்தும் :—

(1) உள்ளாட்சிக் கழகங்களின் வருங்காலச் சேம நிதி விதிகளிலே நியமனங்கள் செய்வதற்கும் நியமனங்களை ரத்து செய்வதற்குமான 5 (1), (4), (5), (6), (8), (9), (10) விதிகள்.

(2) உள்ளாட்சிக் கழகங்களின் வருங்காலச் சேம நிதி விதிகளிலே நியமனங்களின் பங்கு பற்றிய 5 (2) விதி.

(3) உள்ளாட்சிக் கழகங்களின் வருங்காலச் சேம நிதி விதிகளிலே கணக்குகளை முடித்துவிடுவதற்கும் தொகைகள் கொடுப்பதற்குமான 24-ஆவது விதி.

(4) உள்ளாட்சிக் கழகங்களில் வருங்காலச் சேம நிதி விதிகளிலே வயதடையாத பயனடைபவர்களுக்குப் பணம் கொடுப்பதற்கான 28-ஆவது விதி.

I- ஆவது படிவம்.

[(1958-ஆம் ஆண்டின் 35-வது தமிழ்நாடு சட்டமாகிய) 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 58 (1) பிரிவு.]

[6 (2)-ஆவது விதியைப் பார்க்கவும்]

நியமனச் சான்று.

நான் இறந்துபோனால், கடைநிலைப் பணியாளர்களின் வேலையாட்களின் வருங்காலச் சேம நிதியிலிருந்து எனக்குச் சேர வேண்டிய எல்லாத் தொகைகளையும் கொடுக்கப் பெறுவதற்கு உரிமையுள்ள என் குடும்பத்தைச் சேர்ந்தவரின் அல்லது சேர்ந்தவர்களின் பெயர்களும், முகவரிகளும் அடியிற் கண்டவையாகுமென நான் இதனால் அறிவிக்கிறேன்; மேற்சொன்ன தொகைகள் சம்பந்தப்பட்டவரை, நான் இந்த என்னுடைய விருப்புறுதியை ஏற்படுத்துகிறேன் :—

(1) முழுப் பெயர்.	(2) சந்தாதாருக்கு இன்ன உறவு என்பது.	(3) வயது.	(4) தொழில்.	(5) முகவரி.	(6) சேரவேண்டிய தொகைகளை என்ன வீதாசாரங்களின்படி கொடுக்கலாமென்பது.	(7) வயதடையாதவர்கள் விஷயத்தில் காப்புப் பொறுப்பாளரின் பெயரும் முகவரியும்.	(8) எந்த எதிர்பாராச் சம்பவங்கள் நேர்ந்தால் இந்த நியமனம் செல்லாததாகி விடுமென்பது.	(9) நியமனதாரர் சந்தாதாரருக்கு முன் இறந்துவிட்டால், நேமகதாரரின் உரிமை யாரிடமாவது செல்லுமானால் அவர் பெயரும் முகவரியும் உறவின் முறையும்.	(10) குறிப்புரை.

இடம்.

தேதி.

முதல் சாட்சியின் கையெழுத்தும் அல்லது

கைப்பெருவிரல் அடையாளமும் முகவரியும்.

இரண்டாம் சாட்சியின் கையெழுத்தும் அல்லது

கைப்பெருவிரல் அடையாளமும் முகவரியும்.

(சந்தாதாரரின் கையெழுத்தும்
அல்லது கைபெருவிரல் அடையாளமும்
பணியின் பெயரும்.)

இரண்டாவது படிவம்.

[6 (3), (4) விதியைப் பார்க்கவும்.]

நியமனச் சான்று.

நான் இறந்துபோனால், கடைநிலைப் பணியாளர்களின் வேலையாட்களின் வருங்காலச் சேம நிதியிலிருந்து எனக்குச் சேர வேண்டிய எல்லாத் தொகைகளையும் கொடுக்கப் பெறுவதற்கு உரிமை உள்ளவரின் அல்லது உள்ளவர்களின் பெயர்களும் முகவரிகளும், அடியிற் கண்டவையாகுமென நான் இதனால் அறிவிக்கிறேன்; மேற்சொன்ன தொகைகள் சம்பந்தப்பட்டவரை நான் இந்த என்னுடைய விருப்புறுதியை ஏற்படுத்துகிறேன்.

2. நான் மேற்படி தொகையை ஒப்படைப்பதைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்குக் குடும்பம் இல்லையென்றும் நான் அறிவிக்கிறேன்.

(1) முழுப் பெயர்.	(2) வயது.	(3) தொழில்.	(4) முகவரி.	(5) சேரவேண்டிய தொகையை என்ன வீதாச்சாரங்களின்படி கொடுக்கலாமென்பது.	(6) வயது வராதவர்கள் விஷயத்தில் காப்பாளரின் பெயரும் முகவரியும்.	(7) எந்த எதிர்பாரா நிகழ்ச்சிகள் நேர்ந்தால் இந்த நியமனம் செல்லாததாகி விடுமென்பது.	(8) நியமனதாரர் சந்தாதாரருக்குமுன் இறந்துவிட்டால் நியமனதாரரின் உரிமை யாரிடமாவது செல்லுமானால் அவர் பெயரும் முகவரியும் உறவின் முறையும்.	(9) குறிப்புரை.

இடம்.

தேதி.

முதலாவது சாட்சியின் கையெழுத்தும்
அல்லது கைப்பெருவிரல் அடையாளமும்
முகவரியும்.

இரண்டாவது சாட்சியின் கையெழுத்தும்
அல்லது கைப்பெருவிரல் அடையாளமும்
முகவரியும்.

(சந்தாதாரரின் கையெழுத்தும்
அல்லது கைப்பெருவிரல் அடையாள
மும் பதவிப் பெயரும்.)

III ஆவது படிவம்.

(14 ஆவது விதியைப் பார்க்கவும்.)

கடைநிலைப் பணியாளர்களின் வேலையாட்களின் வருங்காலச் சேம நிதி.

19 ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதியோடு முடிவடைந்த ஆண்டுக்கான
(பதவி பெயர்) என்பவரின் வைப்புக் கணக்கு.

கணக்கு எண்.	சந்தா. ரூ. காசு.	பங்குத்தொகை. ரூ. காசு.	குறிப்புரை.
முன் இருப்பு			
* இந்த ஆண்டில் வரவாக வைக் கப்பட்டவை.			
	————	————	
	————	————	
இந்த ஆண்டில் எடுக்கப்பட்டவை.			
19 மார்ச் 31-ம் தேதியன்று இருப்பு.**			

கடைநிலைப் பணியாளர்களின் வேலையாட்களின் வருங்காலச் சேமநிதி விதிகளைச் சேர்ந்த 14ஆவது விதியில் சொல்லியிருக்கிறபடி சந்தாதாரருக்கு அனுப்பப்படுகிறது.

* எப்ரல் முதல் மார்ச் வரையிலுள்ள மாதங்களில் செய்யப்பட்ட வசூல்கள் உட்பட.

** ஒப்புக்கொள்ளப்பட்ட இருப்பு.

விவரப் பட்டியல் சரிதான் என்று தாம் சந்தேகமறத் தெரிந்து கொள்ளும் படியும், தவறுகள் இருந்தால் அவற்றை, அப் பட்டியல் வந்து சேர்ந்த தேதியி லிருந்து ஒரு மாதத்துக்குள் அடியிற் கையொப்பமிடப்பட்டிருப்பவருக்குத் தெரிவிக்கும்படியும் அவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கடைநிலைப் பணியாளர்கள் வேலையாட்கள் வருங்காலச் சேம நிதி விதிகளைச் சேர்ந்த 6 ஆவது விதியின்படி செய்யப் பட்ட நியமனத்தில் ஏதேனும் மாறுதல் செய்ய விரும்புகிறாரா எனத் தெரிவிக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

அச் சமயத்தில் சந்தாதாரருக்கு குடும்பம் இல்லாத காரணமாகத் தம் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அல்லது பலருக்குச் சாதகமாய் அவர் நியமனம் எதுவும் செய்யாதிருந்தால், அதற்குப் பிறகு அவருக்குக் குடும்பம் ஏற்பட்டதா என்பதையும் தெரிவிக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

.... ன் அலுவலகம்.

19 . மாதம் தேதி.

கையெழுத்து

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்

சந்தாதாரர்.

IV ஆவது படிவம்.

(15 ஆவது விதியைப் பார்க்கவும்.)

கடைநிலைப் பணியாளர்களின் வேலையாட்களின் வருங்காலச் சேம நிதிக்குச் சந்தாதாரர்கள்

அவர்களுடைய நியமனதாரர்கள் பற்றிய பதிவேடு.

(1) தொடரிலக்கம்.	(2) முழுப் பெயர்.	(3) தகப்பனுர் பெயர்.	(4) முகவரி.	(5) கிறித்துவ சகாப்தப்படி பிறந்த நாள்.	(6) சாதி, இனம் அல்லது சமயம்.	(7) சேர்த்துக் கொள்ளப்பட்ட தேதி.	(8) சேர்த்துக்கொள்ளப்பட்ட தேதியன்று வயது.	(9) சேர்த்துக்கொள்ளப்பட்ட தேதியன்று வகித்த பதவியின் பெயர்.	(10) பதவிக்குரிய சம்பளம்.	(11) நியமனச் சான்றின் எண்ணும் தேதியும் (இதைத் தனியாகச் சேர்க்க வேண்டும்.)	(12) தொடரிலக்கம்.	(13) முழுப் பெயர்.	(14) சந்தாதாரருக்கு இன்ன உறவு என்பது.	(15) வயது.	(16) தொழில்.	(17) முகவரி.	(18) சேரவேண்டிய தொகைகளை என்ன வீதாச்சாரங்களின்படி கொடுக்க வேண்டுமென்பது.	(19) சான்றுக்கு அத்தாட்சிக் கையொப்பமிடும் சாட்சிகளின் பெயர்களும் முகவரிகளும்.	(20) நிர்வாக அதிகாரியின் சுருக்கொப்பம்.	(21) குறிப்புரை.

V ஆவது படிவம்

(15 ஆவது விதியைப் பார்க்கவும்.)

கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்கள் வருங்காலச் சேமிப்பு நிதியின் 19....ஆம் ஆண்டுக்கான ரொக்கக் கணக்குச் சுவடி.

வரவினங்கள்.							கொடுக்கப்பட்ட தொகைகள்.				
சந்தாக்கள்.	பங்குத் தொகைகள்.	முதலீடு.	பலவகை.	மாதம்.	தேதி.	விவகாரங்களின் விவரங்கள்.	சந்தாக்கள்.	பங்குத் தொகைகள்.	முதலீடு.	பலவகை.	அஞ்சலகச் சேமப் வங்கியில் ஒவ்வொரு மாதமும் மொத்த நிகர இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)
ரூ.காசு.	ரூ.காசு.	ரூ.காசு.	ரூ.காசு.				ரூ.காசு.	ரூ.காசு.	ரூ.காசு.	ரூ.காசு.	ரூ.காசு.

VIஆவது படிவம்

(15ஆவது விதியைப் பார்க்கவும்.)

தற்காலிக முன் பணங்களையும் வசூல்களையும் பற்றிய பதிவேடு

எடுக்கப்பட்ட தொகைகள்.						வசூல்கள்.													
பெயரும் பதவிப் பெயரும்.	கணக்கு எண்.	சான்று வலிமை.	ஒப்பளிக்கப்பட்ட தொகை.	எடுக்கப்பட்ட தொகை.	வசூலுக்கான தவணைகளின் எண்ணிக்கை.	ஆண்டு.	ஏப்ரல்.	மே.	ஜூன்.	ஜூலை.	ஆகஸ்ட்.	செப்டம்பர்.	அக்டோபர்.	நவம்பர்.	டிசம்பர்.	ஜனவரி.	பிப்ரவரி.	மார்ச்.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)	(20)
			ரூ.காசு.	ரூ.காசு.															
			19	19															
			19	19															
			19	19															
			19	19															
			19	19															

VII ஆவது படிவம்

(15 ஆவது விதியைப் பார்க்கவும்.)

கடைநிலைப் பணியாளர்களின் வேலையாட்களின் வருங்காலச் சேம நிதியின் 19 —19 ஆம் ஆண்டுக்கான தொகுப்பு.

			முன் இருப்பு.	
சந்தாதாரர்களின் பதிவேட்டின் படி தொடரிலக்கம்.	சந்தாதாரர் பெயர்.	அலுவல் முறையான பதவிப் பெயர்.	சந்தா கணக்கு.	பங்குத் தொகைக் கணக்கு.
(1)	(2)	(3)	(4)	(5)
			ரூ.காசு.	ரூ.காசு.

வரவு வைக்கப்பட்ட தொகைகள்.

அடியிற்கண்ட மாதங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட சந்தாக்களின் அல்லது எடுத்ததைத் திருப்பிச் செலுத்தியவைகளின் தொகை.							
ஏப்ரல்.	மே.	ஜூன்.	ஜூலை.	ஆகஸ்ட்.	செப்டம்பர்.	அக்டோபர்.	நவம்பர்.
(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
ரூ.கா.	ரூ.கா.	ரூ.கா.	ரூ.கா.	ரூ.கா.	ரூ.கா.	ரூ.கா.	ரூ.கா.

வரவு வைக்கப்பட்ட தொகைகள்—தொடர்ச்சி.

டிசம்பர். (14)	ஜனவரி. (15)	பிப்ரவரி. (16)	மார்ச். (17)	மொத்தம். சந்தாக் கணக்கு([(6) முதல் (17) வரையுள்ள பத்திகளின் மொத்தம்.] (18)
ரூ.கா.	ரூ.கா.	ரூ.கா.	ரூ.கா.	ரூ.கா.

	எடுக்கப்பட்ட சந்தாவும் பங்குத் தொகையும் அல்லது இழக்கப்பட்ட தற்காலிக எடுப்புகள் அல்லது பங்குத் தொகை.			இறுதி இருப்பு.	
இந்த ஆண்டுக்கான பங்குத் தொகை. (19)	சந்தா. (20)	பங்குத் தொகை. (21)	செல்லுச் சீட்டு எண். (22)	சந்தாக் கணக்கு. (23)	பங்குத் தொகைக் கணக்கு. (24)
ரூ.கா.	ரூ.கா.	ரூ.கா.	ரூ.கா.	ரூ.கா.	ரூ.கா.

VIII ஆவது படிவம்.

[8 (3) விதியைப் பார்க்கவும்.]

ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கடைநிலைப் பணியாளர்கள் வேலையாட்களின் வருங்காலச் சேமநிதி விதிகளைச் சேர்ந்த 8-வது விதியின்படி . . . . . .

பெயரில் எடுக்கப்பட்ட வாழ்வு ஈட்டுறுதிப் பத்திரங்களின் பதிவேடு.

(1) தொடரிலக்கம்.	(2) பத்திரம் வைத்திருப்பவரின் பெயர்.	(3) வாழ்வு ஈட்டுறுதி நிறுவன அலகின் பெயர்.	(4) பத்திரத்தின் எண்.	(5) பத்திரம் முதிர்வடையும் தேதி.	(6) பத்திரத் தொகை.	(7) தவணைக் கட்டணத் தொகை.	(8) தவணைக் கட்டணங்கள் பதிவேட்டில் இருபுற இணைப் பக்க எண்.	(9) பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட தேதி.	(10) நிர்வாக அதிகாரியின் சுருக் கொப்பத் தேதி.	(11) உரிமைப்படுத்திய தேதி.	(12) பத்திரத்தை அனுப்பும் கடிதத்தின் எண்ணும், தேதியும்.	(13) பத்திரத்தைப் பெற்றுக் கொண்டதாக அறிவிக்கும் தேதி.	(14) நிர்வாக அதிகாரியின் தேதியுடன் கூடிய சுருக்கொப்பம்.

IX ஆவது படிவம்

[8 (3) விதியைப் பார்க்கவும்.]

தவணைக் கட்டணங்கள் பதிவேடு.

1. பத்திரம் வைத்திருப்பவரின் பெயர்.

2. கடைநிலைப் பணியாளர்களின் வேலையாட்களின் வருங்காலச் சேமநிதித் தொகுப்பின் பக்க எண்.

3. வாழ்வு ஈட்டுறுதி நிறுவன அலகின் பெயர்.

4. பத்திரத்தின் எண்.

5. பத்திரம் முதிர்வடையும் தேதி.

6. ஆண்டுத் தவணைக் கட்டணம் இத்தனை தவணைகளில் செலுத்தப்படத் தக்கதாகுமென்பது.

7. தவணைக் கட்டணத் தவணை ஒவ்வொன்றின் தொகை.

8. தவணையை (அல்லது தவணைகளை) இன்ன தேதியில் (அல்லது தேதிகளில்) செலுத்தவேண்டுமென்பது.

செலுத்திடுகளின் தொடரிலக்கம்.	செலுத்தப்பட்ட தொகை.	செலுத்திய தேதி.	நிர்வாக அதிகாரியின் சுருக் கொப்பம்.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)

(1965 ஜூலை 19 ஆம் தேதியுள்ள 1605 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

அத்தியாயம் IV— வரிகளையும் மற்றவருவாய்களையும் விதிப்பதும் வசூலிப்பதும்.

46. **ஊராட்சி பரப்புகளில் நெடுஞ்சாலை—கிராமப் பொதுப்பணித்துறையினரிடம் உரித்தாக்கப்பட்டுள்ள சாலை ஓரங்களில் பந்தல்களுக்கும் தற்காலிகக் கட்டுக்கோப்புகளுக்கும் உரிமம் வழங்குவது.**—1. கிராமத்தின் எல்லைகளுக்குள், நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறையினரிடமும் அரசினர் பொதுப் பணித்துறையினரிடமும் உரித்தாக்கப்பட்டுள்ள சாலைகளின் ஓரங்களில் சந்தைகள், திருவிழாக்கள் சம்பந்தமாக, ஊராட்சி ஒன்றியக் குழுவினர் பொது நிபந்தனைகள் விதித்தால் அவைகளுக்குட்பட்டும், அவற்றுடன் கூட நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித்துறையையும் அரசினர் பொதுப் பணித்துறையையும் சேர்ந்த அலுவலர்கள் அவ்வப்போது பிறப்பிக்கக்கூடிய பொதுக் கட்டளைகளுக்கும் உட்பட்டு, பந்தல்களையும் மற்ற தற்காலிகக்கட்டுக்கோப்புகளையும் எழுப்புவதற்கு உரிமம் வழங்க ஓர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு உரிமை உண்டு.

2. ஒரு சந்தை அல்லது திருவிழா நடக்கும்போது தற்காலிகமாக மாத்திரமே அத்தகைய மனைகளை அனுபோகத்தில் வைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்படும். அவ்வாறு அனுபோகத்தில் வைத்துக்கொள்ள அனுமதிக்கப் படுகிற கால அளவானது, அந்தச் சந்தை அல்லது திருவிழா உள்ளபடி நடக்கும் கால அளவு நீங்கலாக அதன் தொடக்கத்துக்கு முன் மூன்று நாட்களுக்கும் அது முடிந்தபிறகு மூன்று நாட்களுக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மேற்படக்கூடாது.

3. உரிமக்கட்டணத்தை, ஊராட்சி ஒன்றியக்குழுவிற்கு முன்னதாகச் செலுத்திவிட வேண்டும்; செலுத்தாவிட்டால், கேட்கப்படும் உரிமம் மறுக்கப் படும். முன்னதாகச் செலுத்தப்படுகிற உரிமக்கட்டணத்தை ஏற்றுக்கொள்வதனாலேயே, அவ்வாறு முன்னதாகச் செலுத்துகிறவர் உரிமத்தைப்பெற உரிமை உள்ளவராகிவிடமாட்டார்; ஆனால் உரிமம் மறுக்கப்பட்டால், அக்கட்டணத்தைத் திரும்பப் பெறுவதற்கு மட்டுமே உரிமை உள்ளவராவார்.

4. அவ்வாறு அனுபோகத்தில் வைத்துக்கொள்வதற்கான கட்டணங்களை வாங்குவதனால் கிடைக்கிற வருமானத்தைச் சந்தைகள் அல்லது திருவிழாக்கள் சம்பந்தமாகத் தனிச்சுகாதாரத்துப்புரவு ஏற்பாடுகள் செய்வதற்காகவும், விளக்குப்போடுவதற்காகவுமே முதன்மையாகப் பயன்படுத்தவேண்டும்; எஞ்சியது ஏதாகிலும் இருந்தால் அதைச் சந்தைகள் அல்லது திருவிழாக்கள் நடக்கிற கிராமத்தின் பொதுச்சுகாதாரத்துப்புரவு நிலைமையைச் செம்மைப் படுத்துவதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

உரிமக் கட்டணங்கள் விதிப்பதனுல் கிடைக்கிற வருமானத்தையும், அதிலிருந்து செய்யப்படுகிற செலவையும் தனிக் கணக்குகளின் கீழ்க்காட்ட வேண்டும்.

5. அந்த மனையில் மரங்கள் இருந்தால் அவற்றையாவது அவற்றிலிருந்து கிடைக்கிற மேல்மாசூலையாவது பெற ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு உரிமையில்லை. அந்த மனை அனுபோகத்தில் வைத்துக்கொள்ளப்படுகிற காலத்தில் உரிமக்காரரால் மரங்களுக்காவது விலைபொருளுக்காவது ஏற்படுகிற இழப்பு அல்லது சேதத்துக்கு அக்குழுவினரே பொறுப்பாளிகளாவார்கள். அந்த இழப்பு அல்லது சேதம் சம்பந்தமாக நெடுஞ்சாலை கிராமப்பொதுப் பணித்துறையினரும், அரசினர் பொதுப்பணித்துறையினரும் நிச்சயிக்கக் கூடிய இழப்பீட்டினை அவர்கள் செலுத்துவதற்குட்பட்டவர்களாவார்கள்.

6. அந்த மனையின் பேரில் செங்கல் கட்டுக்கோப்புகளையோ. வேறு நிலையான கட்டுக்கோப்புகளையோ எழுப்பக்கூடாது.

7. சந்தைகள் அல்லது திருவிழாக்கள் சம்பந்தமாக அந்த மனையின் மீது எழுப்பப்பட்ட தற்காலிகக் கட்டுக்கோப்புகளையெல்லாம், அந்தச் சந்தை அல்லது திருவிழா முடிந்ததும் அகற்றி விடுவதற்கும், அந்த மனையை அது முன்னிருந்த நிலைமையில் அரசினரிடம் மீண்டும் ஒப்புவிப்பதற்கும் ஊராட்சி ஒன்றிய மன்றம் பொறுப்பாளிகள் ஆவார்கள்.

8. உரிமத்துக்காக விண்ணப்பம் செய்துகொள்ளும் ஒருவர், உரிமக் கட்டணம் செலுத்துவதோடு கூட, அக்கட்டணத்தில் கால்பங்குக்குச் சமமான தொகையைக் கட்டவேண்டும், அவர் மனையைக் காலிசெய்யுங்காலத்தில் அது அவருக்குத் திருப்பிக் கொடுத்துவிடப்படும்: ஆனுல் அவர் அந்த மனையை அது முன் இருந்ததுபோல் செய்தமைக்க வேண்டும்: அவர் அப்படிச் செய்யாவிட்டால், முன் இருந்தபடி செய்வதற்குண்டான செலவை அந்த வைப்புத் தொகையிலிருந்து கொடுத்த மிச்சம் ஏதேனும் இருந்தால் அதை அவருக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

9. ஊராட்சி ஒன்றிய மன்றம் அந்த மனையை அல்லது அதன பாகத்தை அனுபோகத்தில் வைத்துக்கொள்ள ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் அனுமதிக்கப் பெற்றுள்ளவராவது எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசினரிடமிருந்து இழப்பீடு கேட்க உரியவர் ஆக மாட்டார்.

10. அனுமதி பெறுமல் அனுபோகத்தில் வைத்திருப்பவர்களைப் பற்றி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் வருவாய்த்துறையைச் சேர்ந்தவராய் வருவாய் ஆய்வாளரின் வரிசைக்குக் குறையாத வரிசையிலுள்ள ஓர் அலுவலருக்குத் தெரிவிக்கவேண்டும் (1905-ஆம் ஆண்டின் III-ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1905 -ஆம் ஆண்டின் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின்படி அவசியமெனக் கருதப்படும் நடவடிக்கையை அந்த அலுவலர் எடுத்துக்கொள்வது சாத்தியமாயிருக்கும் பொருட்டு அவ்வாறு தெரிவிக்க வேண்டும்.

(1962 பிப்ரவரி 1-ஆம் தேதியுள்ள 261 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில்.)

47. **பொதுவான அல்லது தனியார் அங்காடி சம்பந்தமாக அதன் அனுபவ பாத்தியதைச் சம்பந்தமாக ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது ஆணையாளர் செலுத்தக்கூடிய அதிகாரங்கள்.**—1. யார் அல்லது யாருடைய பணியாளர், ஒரு பொதுஅங்காடியில் அச்சமயம் அமலில் இருக்கிற துணைச்சட்டங்களை மீறிய தற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கிறாரோ அவரை ஊராட்சி ஒன்றிய மன்றம் ஆணையாளர் அந்த அங்காடியிலிருந்து வெளியேற்றலாம். அந்த ஆளேயாவது அவருடைய பணியாளர்களாவது முகவர்களாவது அந்த அங்காடியில் மேற்கொண்டு தொழில் அல்லது வியாபாரம் நடத்தாதபடி அல்லது அதிலுள்ள கடை, விற்பனை மேடை அல்லது வேறிடத்தை அனுபோகத்தில் வைத்துக் கொள்ளாதபடி தடுக்கலாம்; அத்தகைய ஒரு கடையில் விற்பனை மேடையில் அல்லது இடத்தில் அவருக்கு இருக்கக்கூடிய குத்தகை அல்லது உரிமை நிலையை இறுதி செய்துவிடலாம்.

2. தனியார் அங்காடி ஒன்றின் சொந்தக்காரர், அனுபோகதாரர் அல்லது குத்தகை உரிமைக்காரர் பின்வருமாறு செய்ய வேண்டுமென ஊராட்சி ஒன்றிய மன்றம் அறிக்கை மூலமாக ஆணையிடலாம்:—

(அ) அந்த அங்காடிக்கு அணுகுவழிகள், நுழைவாயில்கள், பாதைகள், கதவுகள், வடிகால்கள், சாக்கடைக் குழிகள் கட்டுவதும், அங்கே ஊராட்சி ஒன்றிய மன்றம் தகுதியென்று கருதக்கூடிய எண்ணிக்கையும் விவரமும் உள்ள கழிப்பிடங்களை, அவ்வாறு கருதக்கூடிய இடங்களில் ஏற்படுத்துவதும்;

(ஆ) அது முழுவதுக்கும் அல்லது அதன் ஒரு பாகத்துக்குக் கூரை போட்டுத் தளவரிசையிடுவது அல்லது ஈரம் உட்புக முடியாமற் செய்து,

எளிதில் சுத்தம் செய்வதற்கு வசதியளிப்பதென ஊராட்சி ஒன்றிய மன்றம் கருதுகிற பொருளைக் கொண்டு தரையின் எப்பாகத்துக்கேனும் தள வரிசை யிடுவது;

(இ) அதில் சரிவரக் காற்றோட்டமிருக்கச் செய்வதும் அங்கே நீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதும்;

(ஈ) விற்பனை மேடைகளுக்கிடையே போதுமான அகலமுள்ள பாதை களைப்போடுவதும், விற்பனை மேடைகள், பாதைகள்—கடைகள், கதவுகள் அல்லது அங்காடியின் வேறு பாகங்களில் ஊராட்சி ஒன்றிய மன்றம் கட்டளை யிடக்கூடிய மாற்றங்கள் செய்வதும்.

(உ) ஊராட்சி ஒன்றிய மன்றம் அவசியமெனக் கருதக்கூடிய மற்ற சுகாதாரத்துப்புரவு ஏற்பாடுகளைச் செய்வதும்.

(2) அதைத் துப்புரவான தகுந்த நிலையில் வைத்திருப்பதும், அதி லிருந்து எல்லா அழுக்குகளையும் குப்பைக்கூலங்களையும் அகற்றுவதும், ஊராட்சி ஒன்றிய மன்றம் கட்டளையிடக்கூடிய இடத்திலும், விதமாகவும், அவற்றை தீர்வு செய்வதும்;

(3) ஊராட்சி ஒன்றிய மன்றம் இதன்பொருட்டு ஒருவருக்கு அறிக்கை கொடுத்த பிறகு அவர் 2 ஆவது விதியில் குறிப்பிட்டுள்ள பணியை, அந்த அறிக்கையில் கண்டுள்ள காலத்துக்குள்ளும் விதமாகவும் செய்து, முடிக்கத் தவறிப்போனால், ஊராட்சி ஒன்றிய மன்றம் அவருடைய உரிமத்தைத் தற்காலிக மாக நிறுத்தி வைக்கலாம் அல்லது அப்பணிகள் முடிக்கப்பட்டாகிற வரையில் அவருக்கு உரிமம் வழங்க மறுத்துவிடலாம்.

(4) அவ்வாறு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காலத்தில் அல்லது உரிமம் புதுப்பிக்கப்படுகிறவரையில் ஒருவர் தனியார் அங்காடி ஒன்றைத் திறந்து வைத்திருப்பது சட்ட சம்மதமாக மாட்டாது.

(5) ஒரு தனியார் அங்காடியின் அல்லது அதிலுள்ள ஒரு கடை, விற்பனை மேடை, கொட்டகை அல்லது வேறு இடத்தில் பொறுப்பு வகிக்கிற சொந்தக்காரராவது, அனுபோகதாராவது, முகவராவது, மேலாளராவது, அது தொல்லையாயிருக்கும் வகையில் அதை வைத்திருக்கவுங் கூடாது, தொல்லையா யிருப்பதை, ஊராட்சி ஒன்றிய மன்றம் குறிப்பிடுகிற ஓரிடத்துக்கு உடனே அப்புறப்படுத்துவிக்கத் தவறவுங்கூடாது.

6. (1) எவராகிலும் 2 ஆவது விதியின்படிக்கான அறிக்கையின் ஷரத்துக்களை நிறைவேற்றத் தவறினாலும், கீழ்க்கண்ட அட்டவணையின் முதலாவது பத்தியில் குறிப்பிட்டிருக்கிற மற்ற விதிகளில் ஒன்றின் நிபந்தனைகளை மீறினாலும் அவருக்கு அந்த அட்டவணையின் இரண்டாவது பத்தியில் இதன் பொருட்டு கண்டுள்ள தொகைக்கு மேற்படாமல் அபராதத் தண்டனை விதிக்கப் படத்தக்கதாகும்.

(2) எவரேனும், (1) உள்விதியில் குறிப்பிட்டுள்ள குற்றங்களில் எதையேனும் செய்தவரெனத் தீர்மானிக்கப்பெற்ற பிறகு தொடர்ந்து அக் குற்றங்களைச் செய்துவந்தால், முந்திய குற்றத்தீர்ப்பின் தேதிக்குப் பிறகு அவர் அவ்வாறு தொடர்ந்து குற்றம் செய்துவருகிற ஒவ்வொரு நாளுக்கும் கீழே II ஆவது அட்டவணையின் இரண்டாவது பத்தியில் இதற்கெனக் கண்டுள்ள தொகைக்கு மேற்படாமல் அபராதத் தண்டனை விதிக்கப்படத் தக்கவராவார்.

அட்டவணை I

சாதாரண தண்டனைகள்

[6-ஆவது விதியைச் சேர்ந்த (1) உள் விதியைப் பார்க்கவும்.]

குற்றம்.	விதிக்கப்படக்கூடிய அபராதம்.
(1)	(2)
2 ஆவது விதியின்படிக்கான அறிக்கையின் வரையறைகளை அனுசரிக்கத் தவறுவது.	நூறு ரூபாய்.
4 ஆவது விதியை மீறுதல்.	ஐம்பது ரூபாய்.
[5 ஆவது விதியை மீறுதல்.	இருபது ரூபாய்.

அட்டவணை II

தொடர்ந்து மீறுவதற்காகத் தண்டனைகள்

6-ஆவது விதியைச் சேர்ந்த (2) உள் விதியைப் பார்க்கவும்.]

குற்றம்.	விதிக்கப்படக்கூடிய அன்றாட அபராதம்.
(1)	(2)
2 ஆவது விதியின்படிக்கான அறிக்கையின் வரையறைகளை அனுசரிக்கத் தவறுவது.	பத்து ரூபாய்.

4 ஆவது விதியை மீறுதல். பதினைந்து ரூபாய்.
5 வது விதியை மீறுதல். பத்து ரூபாய்.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

(1963 ஏப்ரல் 3 ஆம் தேதியுள்ள 754 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

ஊராட்சிகள் அங்காடிகளை ஏற்படுத்துவது.—1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சி சட்டத்தில் கண்ட 65 (ஓ) பிரிவின்படி, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கடப்பாடான செயல்களில் ஒன்று பொது அங்காடிகளை ஏற்படுத்திப் பேணி வருவதாகும்; இவை ஊராட்சி ஒன்றிய அங்காடிகளென வகைப் படுத்தப்படும். ஓர் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருக்கிற பொது அங்காடிகளையும் தனியார் அங்காடிகளையும் ஊராட்சி ஒன்றிய அங்காடிகளெனவும் ஊராட்சி அங்காடிகளெனவும் வகைப்படுத்தவும் ஓர் அங்காடியிலிருந்து கிடைக்கிற வருமானத்தைப் பங்கீடு செய்வது உட்பட அதன் கட்டுப்பாட்டுக்காக ஏற்பாடு செய்யவுமான அதிகாரம், மேற்படி சட்டப் பிரகாரம் அரசினரிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிறது. (194-வது பிரிவைப் பார்க்கவும்). இந்த அதிகாரம் துணை வளர்ச்சி ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

2. ஓர் ஊராட்சி அங்காடி ஒன்றை ஏற்படுத்த விரும்பினால், அந்த யோசனைத் திட்டத்தை ஊராட்சி ஒன்றிய மன்றம் தொடங்கவேண்டுமெனவும், ஆய்வாளரின் ஒப்பளிப்பைப் பெற்றுக்கொண்ட பிறகு அந்த அங்காடிகளை ஊராட்சி அங்காடிகளென்று வகைப்படுத்தும்படி அக்குழுவினர் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டுமெனவும் ஓர் அனுமானம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

3. ஏற்கெனவேயுள்ள பொது அங்காடிகளை, ஊராட்சி அங்காடிகள் என அல்லது ஊராட்சி ஒன்றிய அங்காடிகளென வகைப்படுத்துவதைத்தான் மேற்படி சட்டத்தின் 104 ஆவது பிரிவு குறிப்பிடுகிறது. புதிய பொது அங்காடிகளை ஏற்படுத்தும் விஷயத்தில், அதற்கான யோசனைத் திட்டத்தை ஊராட்சி ஒன்றிய மன்றம் தொடங்கின பிறகுதான் வகைப்பாடு செய்ய முடியும்; ஏனென்றால், பொது அங்காடிகளை ஏற்படுத்துவது ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கடப்பாடான செயல்களில் ஒன்றாகும். அப்போது அரசினர் (துணை வளர்ச்சி ஆணையாளர்) அவசியமானால் மாவட்ட வளர்ச்சிக்குழுவுடன் கலந்தாலோசித்து, ஊராட்சி அங்காடியென்று அல்லது ஊராட்சி ஒன்றிய அங்காடியென்று அது வகைப்படுத்தப்படவேண்டுமென உத்தரவிடலாம். இக்

கருத்தில் மேலே 2 ஆவது பத்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிற அனுமானம் சரியானது.

(1962 அக்டோபர் 23 ஆம் தேதியுள்ள 103178 தனி 62-3 ஆம் எண் குறிப்பாணை.)

48. **தனியார் அங்காடிகளின் கணக்குகள்—வைத்து வருதல், தணிக்கை ஆய்வு.**—(1) தனியார் அங்காடிகளின் சொந்தக்காரர்கள், அனுபோகதாரர்கள் அல்லது குத்தகை உரிமைக்காரர்கள், அந்த அங்காடிகளைப் பயன்படுத்துவதற்காக அன்றாடம் செய்யப்படும் வசூல்களுக்காகச் சீட்டுகளையும், அவ்வப்போது செய்யப்படும் வசூல்களுக்காகப் பற்றுச் சீட்டுகளையும் கொடுக்க வேண்டும்.

(2) பற்றுச் சீட்டுகளையும், சீட்டுச் சுவடிகளையும் பின்னிணைப்பில் கண்டுள்ள ஆம், ஆம் படிவங்களின் பிரகாரம் அச்சிடவேண்டும்.

(3) சீட்டுச் சுவடிகளை விதிக்கப்படும் கட்டண வீதம் ஒவ்வொன்றுக்காகவும் தனியாக அச்சிட வேண்டும்.

(4) அந்த அங்காடிகளின் சொந்தக்காரர்கள், அனுபோகதாரர்கள் அல்லது குத்தகை உரிமைக்காரர்கள், அந்த அங்காடிகளிலிருந்து கிடைக்கும் வரவுகள், அவைகளை வைத்து வருவதற்குப் பிடிக்கும் செலவு ஆகியவற்றிற்கு உண்மையான முழுமையான கணக்குகளை வைத்து வரவேண்டும்; ஊராட்சி ஒன்றிய ஆணையாளராவது ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடமிருந்து இதன் பொருட்டு அதிகாரம் பெற்றிருக்கக்கூடிய மற்றவர்களாவது, ஆய்வுக்காக, சரிபார்ப்பதற்காக அல்லது தணிக்கைக்காகக் கேட்கும்போதெல்லாம் அவைகளைக் காட்டவேண்டும்.

(5) வசூல்களையும் பட்டுவாடாக்களையும் பற்றிய பதிவேடு ஒன்றை இணைப்பில் முறையே கண்டுள்ள III ஆம், IV ஆம் படிவங்களின் பிரகாரம் வைத்துவரவேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையாளராவது ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கக்கூடிய வேறொருவராவது, ஒவ்வொரு மாதமும் ஒரு தடவைக்குக் குறையாமல், அந்தப் பதிவேடுகளையும், சீட்டு-பற்றுச் சீட்டுச் சுவடிகளையும் சரிபார்க்க வேண்டும்; தேவைப்படுகிற குறிப்புரைகளை அதில் எழுதவேண்டும். கணக்குகள் சரியாக வைத்துவரப்படுகின்றன எனத் தெரியவந்தால், அவ்வாறு கண்டுள்ள சான்று ஒன்றை அப்பதிவேடுகளில் எழுதவேண்டும்.

(6) முந்திய ஆண்டுக்காக (அல்லது உரிமத்துக்கான விண்ணப்பத்தின் தேதிக்கு முந்திய முழு பன்னிரண்டு மாத காலத்துக்காக) அங்காடிகளுக்குத்

தொடர்ப்பான வரவுகளையும் செலவுகளையும் காட்டும் விவரப்பட்டியல் ஒன்றை, அங்காடியைத் திறந்து வைத்திருப்பதற்கான உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் அனுப்ப வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு முன், மேற்குறிப்பிட்ட விவரப் பட்டியலை, அங்காடிகளின் சொந்தக்காரரின், அனுபோகதாரரின் அல்லது குத்தகை உரிமைக்காரரின் சுவடிகளோடு வைத்துச் சரிபார்க்க வேண்டும்.

(7) 4, 5 அல்லது 6 வது விதியின் நிபந்தனைகளில் எவையேனும் நிறைவேற்றப்படாவிட்டால், ஊராட்சி ஒன்றியம் உரிமத்தைப் புதுப்பிக்க மறுத்து விடலாம்.

இணைப்பு :

படிவம் I

(2 ஆவது விதியைப் பார்க்கவும்.)

அடிச்சீட்டு

அங்காடி

19 காசு

ம் எண் அறைக்காக

விற்பனை மேடைக்காக.

விற்பனை

வாடகை

19 அன்று ரூ. காசு

பெற்றுக் கொள்ளப்பட்டது.

வாடகை வசூலிப்பவர்.

வெளிச்சீட்டு.

அங்காடியிலுள்ள ம்

எண் அறைக்கு

விற்பனை மேடைக்கு

19 கான வாடகையாகிய

ரூபாய் திரு.

அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது

வாடகை வசூலிப்பவர்.

படிவம் II

(2 ஆவது விதியைப் பார்க்கவும்)

அடிச்சீட்டு   வெளிச்சீட்டு

தொடரிலக்கம்.   சீட்டு

அங்காடி

சீட்டு

தொடரிலக்கம்.

நாள் ஒன்றுக்கு

(இங்கே வீதத்தை எழுதவும்)

அங்காடி

(இங்கே வீதத்தை எழுதவும்.)

படிவம் II

வசூல்கள்பற்றிய பதிவேடு.

(5-ஆவது விதியைப் பார்க்கவும்.)

வீட்டுகள் மூலம் வசூல்கள்.									பிற வரவுகள்.					
கையிருப்பு			தொகுக்கப் பட்டவை.				மீதி.		வாடகைகள்.				பலவகை.	
தேதி.	பதிப்பு.	. . . முதல் . . . . வரை தொடரிலக்கங்கள்.	எண்.	. . . முதல் . . . வரையில் தொடரிலக்கங்கள்.	எண்கள்.	குவிக்கப்பட்ட தொகை.	. . . முதல் . . . வரை தொடரிலக்கங்கள்.	எண்.	பற்றுச் சீட்டின் எண்.	தொகை.	பற்றுச் சீட்டின் எண்.	தொகை.	அன்றாடம் பொதுக வசூல்.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)

படிவம் IV

பணம் கொடுப்புப் பதிவேடு

(5 ஆவது விதியைப் பார்க்கவும்.)

தேதி . . . செலவு பற்றிய விவரங்கள் தொகை குறிப்புரை.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் அரசாணை.)

(1963 ஏப்ரல் 3 ஆம் தேதியுள்ள 754 ஆம் எண் கிராம முன்னேற்றம் **உள்ளாட்சித்துறை அரசாணை.)**

49. உரிமங்கள், அனுமதிகள் முதலியவற்றின் படிவமும், உள்ளடக்கங் களும்.—1. மேற்படி சட்டத்தின் பிரகாரம் அல்லது அதன்படி செய்யப்பட்ட ஏதேனும் விதி அல்லது துணைச் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்படும் அல்லது கொடுக்கப்படும் உரிமங்கள், அனுமதிகள், அறிக்கைகள் எல்லாம் எழுத்து மூலமாயிருக்கவேண்டும்.

2. மேற்படி சட்டத்தின் பிரகாரம் அல்லது அதன்படி செய்யப்பட்ட ஏதேனும் விதி அல்லது துணைச்சட்டத்தின் பிரகாரம் வழங்கப்படுகிற உரிமம் அல்லது அனுமதி ஒவ்வொன்றிலும், கால அளவு ஏதாகிலும் இருந்தால் எந்தக் கால அளவுக்கும், எந்த வரையறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டும் அது வழங்கப்படுகிறதோ அவைகளைக் குறிப் பிடவேண்டும்; ஆணையாளராவது ஆணையாளரிடமிருந்து இதன்பொருட்டு முறைப்படி அதிகாரம் பெற்றுள்ள ஒருவராவது அதில் கையெழுத்திட வேண்டும். அந்த உரிமம் அல்லது அனுமதியை வழங்கும் ஆணை ஒவ்வொன் றையும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அறிக்கைப் பலவகையில் வெளியிட வேண்டும்.

3. (1) மேற்படி சட்டத்தின் பிரகாரம் அல்லது அதன்படி செய்யப்பட்ட ஏதேனும் விதி அல்லது துணைச் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்படுகிற ஏதேனும் உரிமம் அல்லது அனுமதி அதன் வரையறைகள் கட்டுப்பாடுகள் அல்லது நிபந்தனைகளில் எவையேனும் அது வழங்கப்பெற்றவரால் நழுவப் பட்டாலும், மீறப்பட்டாலும், அந்த உரிமம் அல்லது அனுமதி சம்பந்தப் படுகிற ஒரு விஷயத்தில் மேற்படி சட்டத்தில் கண்ட அல்லது அதன் படி செய்யப்பட்ட விதி, துணைச்சட்டம் அல்லது ஒழுங்குமுறை விதியில் கண்ட நிபந்தனைகளில் எவற்றையேனும் மீறிய குற்றம் செய்திருப்பதாக வழங்கப் பெற்றவர் தீர்மானிக்கப் பெற்றிருந்தாலும், வழங்கப் பெற்றவர் பொய் சொல்லி அல்லது மோசடியாக அதைப்பெற்றிருந்தாலும், ஆணையாளரால்

எப்போதேனும் திருத்தப்படலாம், நிறுத்திவைக்கப்படலாம் அல்லது ரத்து செய்யப்படலாம். உரிமம் ஒன்றைத் திருத்தி, நிறுத்தி வைத்து அல்லது ரத்து செய்து இவ்விதியின்படி ஆணையாளர் பிறப்பிக்கும் ஓர் ஆணையின் மீது ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு மேல் முறையீடு உண்டு: எந்த ஆணையின்மீது மேல்முறையீடு செய்து கொள்ளப்படுகிறதோ அந்த ஆணையை "வழங்கப் பெற்றவர்" பெற்றுக்கொண்ட தேதிக்கு பிறகு பத்து நாட்களுக்குள் அது ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வந்து சேர்ந்தாலன்றி, அத்தகைய மேல் முறையீடு எதுவும் விசாரிக்கப் படமாட்டாது.

(1) உள் விதியின்படி ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் எந்த ஆணைகளின் மீது மேல் முறையீடு செய்து கொள்ளப்படுகிறதோ அவற்றை வழங்கப் பெற்றவர் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அவற்றின் மீது கோட்ட ஆட்சியாருக்கு இரண்டாவது மேல் முறையீடு உண்டு.

4. ஓர் உரிமத்தை அல்லது அனுமதியைக் கொடுக்க மறுத்து, அதை மாற்றியமைத்துச் சிறிதுகாலம் நிறுத்திவைத்து அல்லது அதை ரத்துச் செய்து ஓர் ஆணை பிறப்பிக்க, மேற்படி சட்டத்தின் பிரகாரம் அல்லது அதன் படிச் செய்யப்பட்ட ஏதேனும் விதியின் அல்லது துணைச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரம் வாய்ந்த அதிகாரியினுடைய ஆணை ஒவ்வொன்றும் எழுத்து மூலமாயிருக்க வேண்டும். மேலும் அது பிறப்பிக்கப்பட்ட காரணங்களும் அதில் கண்டிருக்க வேண்டும்.

5. ஏதேனும் உரிமம் ரத்து செய்யப்பட்டாலும், சிறிது காலம் நிறுத்தி வைக்கப்பட்டாலும், எந்தக்காலத்துக்கு அது வழங்கப்பட்டதோ அந்தக்காலம் அல்லது புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் எந்தக்காலத்துக்குள் செய்து கொள்ள வேண்டுமோ அந்தக்காலம் இவையிரண்டில் எது பிந்தியதாகக் கழிகிறதோ அது அவ்வாறு கழிந்து போய்விட்டாலும் வழங்கப்பெற்றவர், மேற்படி சட்டத்தின் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட ஏதேனும் விதி அல்லது. துணைச்சட்டத்தின் எல்லாக்காரியங்களுக்காகவும், உரிமம் அல்லது அனுமதி இல்லாதவறென்று கருதப்படுவார்: ஆனல் சந்தர்ப்பத்துக்கேற்ப, அந்த உரிமத்தை அல்லது அனுமதியை ரத்துச் செய்யும் அல்லது சிறிது காலம் நிறுத்திவைக்கும் ஆணை ரத்துச் செய்யப்பட்டால் அல்லது அந்த உரிமம் அல்லது அனுமதி புதுப்பிக்கப்பட்டால் அவர் அவ்வாறு கருதப்படமாட்டார்.

6. உரிமம் அல்லது அனுமதி ஒவ்வொன்றும் வழங்கப் பெற்றவர் அந்த உரிமம் அல்லது அனுமதி அமலில் இருந்து வருகையில் ஆணையாளர் கேட்டுக் கொள்வதன் பேரில், நியாயமான எல்லாக் காலங்களிலும் அதைக்காட்ட வேண்டும்.

7. ஏதேனும் அறிக்கை, ஒருவரிடம் சேர்ப்பிக்க வேண்டும் அல்லது அவருக்கு அனுப்ப வேண்டும் என மேற்படி, சட்டத்தில் அல்லது அதன்படி செய்யப்பட்ட ஏதேனும் விதி, துணைச்சட்டம், ஒழுங்குமுறை விதி அல்லது ஆணையில் சொல்லப்பட்டிருந்தால், பின்வரும் விதத்தில் அதைச் சேர்ப்பிக்கலாம் அல்லது அனுப்பலாம் :—

(i) அந்த அறிக்கையை அவரிடம் கொடுப்பது அல்லது கொடுப்பதாகச் சொல்வது மூலமாக; அல்லது

(ii அவர் காணப்படாவிட்டால், கடைசியாகத் தெரிந்துள்ள அவருடைய இருப்பிடத்திலாவது தொழிலிடத்திலாவது அந்த அறிக்கையை விட்டுவிடுவது மூலமாக, அல்லது அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரிடம் அல்லது பணியாள் ஒருவரிடம் அதைக்கொடுப்பது அல்லது கொடுப்பதாகச் சொல்வது மூலமாக ; அல்லது

(iii) அவர் அந்தக் கிராமத்திலே அல்லது பட்டணத்திலே வசிக்காமல், வேறிடத்தில் வசிக்கும் அவருடைய முகவரி ஆணையாளருக்குத் தெரிந்திருந்தால், பதிவு அஞ்சலில் அதை அவருக்கு அனுப்புவது மூலமாக, அல்லது ;

(iv) மேற்சொன்ன விதங்களில் எதுவும் பயன்படாவிட்டால், மேற்படி இருப்பிடத்தில் அல்லது தொழிலிடத்தில் முதன்மையான ஒரு பாகத்திலே அதை ஒட்டுவது மூலமாக.

8. ஒருவர் ஒரு கட்டிடத்தின் அல்லது நிலத்தின் சொந்தக்காரராக அல்லது ஆட்சியாளராக இருந்தால் அச்சொந்தக்காரருடைய அல்லது ஆட்சியாளருடைய பெயரை அறிக்கையில் குறிக்க வேண்டியதில்லை ; கூட்டுச் சொந்தக்காரர்கள் அல்லது ஆட்சியாளர்கள் விஷயத்தில், அத்தகைய சொந்தக்காரர்களில் அல்லது ஆட்சியாளர்களில் ஒருவரிடம் அதைச் சேர்ப்பிப்பது அல்லது ஒருவருக்கு அதை அனுப்புவது போதுமானது.

9. மேற்படி சட்டத்தின் பிரகாரம் சேர்ப்பிக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட ஒரு பட்டியலில் அல்லது அறிக்கையில் படிவத்தில், அல்லது வேறு ஆவணத்தில், இன்ன காலத்துக்குள் ஏதேனும் வரியை அல்லது வேறு தொகையைச் செலுத்த வேண்டும் அல்லது ஏதேனும் பணியை முடிக்க வேண்டும் அல்லது எதையாவது ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என நிச்சயிக்கப்பட்டிருந்தால், அக்காலத்தை அடியிற் கண்டதற்கு மாறாக மேற்படி சட்டத்திலாவது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலாவது அறுதியான

நிபந்தனை இராவிட்டால், அவ்வாறு சேர்ப்பிக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடவேண்டும்.

10. எவராகிலும் 6 ஆவது விதியின்படி கேட்டுக் கொள்ளப்படுவதன் பேரில் உரிமம் அல்லது அனுமதி ஒன்றைக் காட்டத் தவறினால், அவருக்கு ஐந்து ரூபாய் வரையில் அபராதத்தண்டனை விதிக்கப்படத்தக்கதாகும்.

11. இவ்விதிகளில், "மேற்படி சட்டம்" என்னும் சொற்றொடர், 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம் எனப்பொருள்படும்.

(1962 பெப்ரவரி 1-ஆம் தேதியுள்ள 261-ம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித்துறை அரசாணை)

50. இயந்திர நிறுவனம்—அனுமதியினின்றும் விலக்கு.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 112 ஆவது பிரிவின் நிபந்தனைகளினின்றும் பின்வரும் இயந்திரங்களுக்கு விலக்களிக்கப்படும்; அவை யாவன :—

(1) வீட்டு அல்லது சொந்தக்காரியங்களுக்காக அல்லது வசதிக்காக மட்டுமே பயன்படுத்தக் கருதியுள்ள மின் உபகரணங்களும், அக்காரியங்களுக் காக அல்லது வசதிக்காகப் பயன்படுத்தக் கருதியுள்ள மின் இயந்திரங்களும் ;

(2) வீட்டு அல்லது சொந்தக்காரியங்களுக்காக அல்லது வசதிக்காக மட்டுமே பயன்படுத்தக் கருதியுள்ள இரண்டு குதிரைத்திறனுக்கு மேற்படாத மின்தொடர்பற்ற கருவிகளும், அக்காரியங்களுக்காக அல்லது வசதிக்காகப் பயன்படுத்தக் கருதியுள்ள இரண்டு குதிரைத் திறனுக்கு மேற்படாத மின் தொடர்பற்ற யந்திரங்களும் ;

(3) உண்மையான உழவுக்காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும் விசைப் பொறிகள் உட்பட மின்சார அமைப்புகள் ;

(4) உழவுக்காரியங்கள் தொடர்பாக அமைக்கப்படும் இரண்டு குதிரைத் திறனுக்கு மேற்படாத மின்தொடர்பற்ற அமைப்புகள்.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677-ஆம் எண் உள்ளாட்சித்துறை அரசாணை)

51 மின்சாரத்தினால் அல்லது வேறு ஆற்றலினால் செலுத்தப்படும் யந்திரங் களுக்கான பெறும் உரிமக்கட்டணம்.

1. மின்சாரத்தினால் செலுத்தப்படும் யந்திரங்கள்.—(1) ஏதேனும் வளவில் மின் ஆற்றலினால் செலுத்தப்படும் இயந்திரங்களையோ உற்பத்தி நிலையத்

தளவாடங்களையோ அமைப்பதற்காக 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 112 வது பிரிவின்படி வழங்கப்படும் அனுமதிக்காக விதிக்கப்படக்கூடிய கட்டணங்கள், இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள I ஆம் அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பெருமங்களுக்கு மேற்படலாகாது.

ஆனால், இவ்விதியின்படி விதிக்கப்படக்கூடிய கட்டணங்கள், மின்சாரத்தினால் அல்லது மற்றபடி செலுத்தப்படுகிற அதே குதிரைத் திறனுள்ள யந்திரங்களையாவது உற்பத்தி நிலையத் தளவாடங்களையாவது அமைப்பதற்காக விதிக்கப்படும் கட்டணங்களுக்கு மேற்படலாகாது.

2. மின் ஆற்றலினால் செலுத்தப்படும் யந்திரங்கள் அல்லது உற்பத்தி நிலையத்தளவாடங்கள் பயன்படுத்தப்படுகிற ஓர் இடத்துக்காக, ஓர் ஆண்டுக் காலத்துக்கு, மேற்படி சட்டத்தில் கண்ட III வது பிரிவின்படி வழங்கப்படுகிற அல்லது புதுப்பிக்கப்படுகிற ஓர் உரிமத்துக்காக விதிக்கப்படக்கூடிய கட்டணங்களை இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டிருக்கிற 1-ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெருமங்களுக்கு மேற்படலாகாது.

ஆனால், ஓர் ஆண்டுக்குறைவான காலங்களுக்கு அத்தகைய உரிமம் வழங்கப்பட்டால் அல்லது புதுப்பிக்கப்பட்டால் ஓர் ஆண்டில் அதே யந்திரங்கள் அல்லது உற்பத்தி நிலையத் தளவாடங்கள் சம்பந்தமாக, அதே இடத்துக்காக விதிக்கப்படும் மொத்த உரிமக்கட்டணங்கள், ஓர் ஆண்டுக்காலத்துக்கு அவை சம்பந்தமாக வழங்கப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் உரிமத்துக்காக விதிக்கப்படக்கூடிய கட்டணங்களுக்கு மேற்படலாகாது.

மேலும், இவ்விதியின்படி விதிக்கப்படக்கூடிய கட்டணங்கள், மின்சாரம் அல்லது மற்றபடி செலுத்தப்படுகிற அதே குதிரைத்திறனுள்ள யந்திரங்களுக்காக அல்லது உற்பத்தி நிலையத்தளவாடங்களுக்காக விதிக்கப்படும் கட்டணங்களுக்கு மேற்படலாகாது.

3. இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள II-ஆம் அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பெருமங்கள், உரியகாலத்தில் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களுக்கு மட்டுமே பொருந்தும்; காலந்தாழ்ந்து செய்து கொள்ளப்படும் ஒரு விண்ணப்பத்தின் விஷயத்தில், அந்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெருமக் கட்டணத்தில் கால்பங்குக்கு மேற்படாமல் அதிகப்படியான கட்டணம் வாங்கலாம்.

II. மின்சாரம் அல்லாத வேறு ஆற்றலினுல் செலுத்தப்படும் யந்திரங்கள்.

4. மின்சாரம் அல்லாத வேறு ஆற்றலினுல் செலுத்தப்படும் யந்திரங்களை அல்லது உற்பத்தி நிலையத் தளவாடங்களை ஒரு இடத்தில் அமைப்பதற்காக, மேற்படிச் சட்டத்தில் கண்ட 112 ஆவது பிரிவின்படி வழங்கப்படும் அனுமதிக்காக விதிக்கப்படக்கூடிய கட்டணங்கள், இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள II ஆம் அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பெருமங்களுக்கு மேற்படலாகாது.

5. மின்சாரம் அல்லாத வேறு ஆற்றலினுல் செலுத்தப்படும் யந்திரங்கள் அல்லது உற்பத்தி நிலையத்தளவாடங்கள் பயன் படுத்தப்படுகிற ஓர் இடத்துக்காக ஓர் ஆண்டுக்காலத்துக்கு மேற்படி சட்டத்தில் கண்ட 111 ஆவது பிரிவின்படி வழங்கப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் ஓர் உரிமத்துக்காக விதிக்கப்படக்கூடிய கட்டணங்கள், இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள II- ஆம் அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பெருமங்களுக்கு மேற்படலாகாது.

ஆனல் ஓர் ஆண்டுக்குக் குறைவான காலங்களுக்கு அத்தகைய உரிமம் வழங்கப்பட்டால் அல்லது புதுப்பிக்கப்பட்டால், ஏதேனும் ஆண்டில் இதே யந்திரங்கள் அல்லது உற்பத்தி நிலையத்தளவாடங்கள் சம்பந்தமாக அதே இடத்துக்காக விதிக்கப்படும் மொத்த உரிமக்கட்டணங்கள், ஓர் ஆண்டுக் காலத்துக்கு அவை சம்பந்தமாக வழங்கப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் உரிமத்துக்காக விதிக்கப்படக்கூடிய கட்டணங்களுக்கு மேற்படலாகாது.

6. இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள II- ஆம் அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பெருமங்கள், உரிய காலத்தில் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களுக்கு மட்டுமே பொருந்தும்: காலந்தாழ்ந்து செய்து கொள்ளப்படும் விண்ணப்பத்தின் விஷயத்தில், அதை அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெரும் வீதத்தில் கால்பங்குக்கு மேற்படாமல் அதிகப்படியான கட்டணம் விதிக்கலாம். விதிக்கலாம்.

III. பொது

7. மேற்படி சட்டத்தில் கண்ட 112 ஆவது பிரிவின்படி செய்யப்பட்ட விதிகளினுல் விலக்களிக்கப் பெற்ற அல்லது மேற்படி சட்டத்தில் கண்ட 11-ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் விலக்களிக்கப்பெற்ற யந்திரங்கள் அல்லது உற்பத்தி நிலையத் தளவாடங்கள் சம்பந்தமாகச் சந்தர்ப்பத்துக்கேற்ப, அனுமதிக்காக அல்லது உரிமத்துக்காகக் கட்டணம் விதித்து வாங்குவதற்கு, இவ்விதிகளில் உள்ளது எதனுலும் அதிகாரம் ஏற்படுவதாகக் கருதப்படமாட்டாது.

இணைப்பு

அட்டவணை I

அமைப்பின் குதிரைத் திறன் (1)	விதிக்கப்படத்தக்க பெரும கட்டணம் (2) ரூ. காசு.
திரைப்படக் காரியங்களுக்காக, மின்னோட்ட மாற்றுக் கருவிகளை அமைத்தல்—குதிரைத்திறன் இன்னதென்று கவனிக்க வேண்டியதில்லை.	1 00
ஒரு குதிரைத்திறனுக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	1 00
ஒரு குதிரைத்திறனுக்கு மேற்பட்டும் ஐந்து குதிரைத்திறனுக்கு மேற்படாமலுமுள்ள அமைப்புகள்.	5 00
ஐந்து குதிரைத்திறனுக்கு மேற்பட்டும் பத்து குதிரைத்திறனுக்கு மேற்படாமலுமுள்ள மற்ற அமைப்புகள்.	15 00
பத்து குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் 20 குதிரைத் திறனுக்கு மேற்படாமலுமுள்ள மற்ற அமைப்புகள்.	25 00
20 குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் 30 குதிரைத் திறனுக்கு மேற்படாமலுமுள்ள மற்ற அமைப்புகள்.	40 00
30 குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் 40 குதிரைத் திறனுக்கு மேற்படாமலுமுள்ள மற்ற அமைப்புகள்.	50 00
40 குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் 50 குதிரைத் திறனுக்கு மேற்படாமலுமுள்ள மற்ற அமைப்புகள்.	75 00

அட்டவணை I—தொடர்ச்சி

அமைப்பின் குதிரைத் திறன். (1)	விதிக்கப்படத்தக்க பெரும் கட்டணம். (2)
	ரூ. காசு.
50 குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் 100 குதிரைத் திறனுக்கு மேற்படாமலுமுள்ள மற்ற அமைப்புகள்.	100 00
100 குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் 200 குதிரைத் திறனுக்கு மேற்படாமலுமுள்ள மற்ற அமைப்புகள்.	100 குதிரைத் திறனுக்கு 100 ரூபாயும் அதிகப்படியான குதிரைத் திறன் ஒவ்வொன்றுக்கும் ஒரு ரூபாயும்.
200 குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் 500 குதிரைத் திறனுக்கு மேற்படாமலுமுள்ள மற்ற அமைப்புகள்.	200 குதிரைத் திறனுக்கு 200 ரூபாயும், அதிகப்படியான குதிரைத் திறன் ஒவ்வொன்றுக்கும் ஐம்பது காசும்.
500 குதிரைத் திறனுக்கு மேற்பட்ட மற்ற அமைப்புகள்.	500 குதிரைத் திறனுக்கு 350 ரூபாயும், 450 ரூபாய்க்கு மேற்படாமல் அதிகப்படியான குதிரைத் திறன் ஒவ்வொன்றுக்கும் இருபத்தைந்து காசும்.

அட்டவணை II

அமைப்பின் குதிரைத் திறன். (1)	விதிக்கப்படத்தக்க பெரும கட்டணம். (2)
	ரூ. காசு.
இரண்டு குதிரைத் திறனுக்கு மேற்பட்ட வீட்டுக்காரியங்களுக்கான அமைப்புகள்.	0 50
ஒரு குதிரைத் திறனுக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	1 50
ஒரு குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் ஐந்துக்கு மேற்படாமலும் உள்ள மற்ற அமைப்புகள்.	7 50

அட்டவணை II—தொடர்ச்சி

அமைப்பின் குதிரைத் திறன். (1)	விதிக்கப்படத்தக்க பெரும கட்டணம். (2)
ஐந்து குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் பத்துக்கு மேற்படாமலும் உள்ள மற்ற அமைப்புகள்.	22 50
பத்து குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் 20-க்கு மேற்படாமலும் உள்ள மற்ற அமைப்புகள்.	35 00
20 குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் 30-க்கு மேற்படாமலுமுள்ள மற்ற அமைப்புகள்.	60 00
30 குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் 40-க்கு மேற்படாமலுமுள்ள மற்ற அமைப்புகள்.	75 00
40 குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் 100-க்கு மேற்படாமலும் உள்ள மற்ற அமைப்புகள்.	100 00
100 குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் 200-க்கு மேற்படாமலுமுள்ள மற்ற அமைப்புகள்.	100 குதிரைத் திறனுக்கு 100 ரூபாயும், அதிகப்படியான குதிரைத் திறன் ஒவ்வொன்றுக்கும் ஒரு ரூபாயும்.
200 குதிரைத் திறனுக்கு மேற்பட்டும் 500-க்கு மேற்படாமலுமுள்ள மற்ற அமைப்புகள்.	200 குதிரைத் திறனுக்கு 200 ரூபாயும் அதிகப்படியான குதிரைத் திறன் ஒவ்வொன்றுக்கும் ஐம்பது காசும்.
500 குதிரைத் திறனுக்கு மேற்பட்ட மற்ற அமைப்புகள்.	500 குதிரைத் திறனுக்கு 350 ரூபாயும் 450 ரூபாய்க்கு மேற்படாமல் அதிகப்படியான குதிரைத் திறன் ஒவ்வொன்றுக்கும் இருபத்தைந்து காசும்.

(1960 அக்டோபர் 8-ம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை)

52. உரிமங்களுக்கும் அனுமதிகளுக்குமான விண்ணப்பங்களின்மீதான ஆணைகளை அனுப்புவதற்குரிய காலவரையறை.—(1958 ஆம் ஆண்டின் 35 ஆம் தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் படியாவது, அல்லது அதன் பிரகாரம் செய்யப்பட்ட ஏதேனும் விதி, துணைச்சட்டம் அல்லது ஒழுங்குமுறை விதியின்படியாவது ஓர் உரிமத்துக்காக அல்லது அனுமதிக்காக அல்லது, அதைப் புதுப்பிப்பதற்காகச் செய்து கொள்ளப்படும் ஒரு விண்ணப்பத்தின் மீது ஆணைகள் பிறப்பிப்பதற்குமுன், மாவட்ட சுகாதார அலுவலர் அல்லது தொழிற்சாலைகளின் ஆய்வாளர் அல்லது வேறொரு அலுவலர் போன்ற வெளி அதிகாரி ஒருவருடன் கலந்தாலோசிக்க வேண்டியவைகளில் அவ்விண்ணப்பம்பற்றிய ஆணைகளை, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆணையாளர் அவ்விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு அறுபது நாட்களுக்குள் விண்ணப்பதாரருக்கு அனுப்பவேண்டும்.

(1960 அக்டோபர் 8-ம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

53. ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் குடி மராமத்து செய்வதுபற்றிய வரையறைகளும் கட்டுப்பாடும் ஊராட்சி ஒன்றிய குழுக்கள் கட்டணங்களை விதித்து வாங்குவது.—1. ஊராட்சி ஒன்றிய மன்றம் ஏதேனும் பாசனக் கட்டுவேலையினால் பயன்பெறும் நிலங்களின் பதிவான எல்லாக் கைப்பற்றுதார்களிடமிருந்தும், அந்த வருவாய்த்துறை மாவட்ட ஆட்சியாளர் ஏக்கர் ஒன்றுக்கு அவ்வப்போது நிச்சயிக்கக்கூடிய வீதப்படி ஆண்டுக்கட்டணம் விதித்து வாங்கலாம்.

2. நேர்ப்பாய்ச்சல் மூலமாகச் சம்பந்தப்பட்ட பாசனக்கட்டு வேலையிலிருந்து நீர்ப்பாய்ச்சப்பெறும் நன்செய் புன்செய் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ஒத்த வீதப்படியும் இறைப்பது மூலமாக அக்கட்டு வேலையிலிருந்து நீர்ப்பாய்ச்சப்பெறும் நன்செய், புன்செய் நிலங்களுக்கு அந்த வீதத்தில் பாதி வீதப்படியும் அக்கட்டணத்தை விதிக்க வேண்டும்.

விளக்கம்.—அந்நிலத்தின்மீது விதிக்கப்படத்தக்க நன்செய் அல்லது புன்செய்த் தீர்வையும், தண்ணீர் வரியும் எவையேனுமிருந்தால் அவைகளுக்கு அதிகப்படியாக அக்கட்டணத்தை விதிக்க வேண்டும்.

2. அந்தக் கிராமத்தில் அல்லது அதன் ஒரு பாகத்தின் மீது விசாரணை அதிகாரமுடைய நிலவருவாய்த்துறைச் சிப்பந்தியைச் சேர்ந்த கிராமப் பெரியதனக்காரர் அல்லது வேறொருவர் மூலமாக ஊராட்சி ஒன்றியக்குழுவினர் அக்கட்டணத்தை வசூலிக்கவேண்டும். மாவட்ட ஆட்சியாளரின் பொது அல்லது

தனி ஆணைகளின்படி, ஊராட்சி ஒன்றிய மன்றம் அக்கட்டணத்தை நிருவகித்துச் செலவிட வேண்டும். கிராமப் பெரியதனக்காரர் தொகையை வசூலிப்பது சாத்தியமாயிருக்கும்பொருட்டு, அக்கட்டணம் சம்பந்தமான கேட்புக் கணக்கைக் கர்ணம் வழங்கவேண்டும். நிலவருவாய்த்துறைப்பணித் தொகுதியைச் சேர்ந்த கிராமப் பெரியதனக்காரருக்கு அல்லது வேறொருவருக்கு, 1958 ஆம் ஆண்டின், தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 126 ஆவது பிரிவின்படி இதன்பொருட்டுப் பொது அல்லது தனி ஆணை மூலமாக மாவட்ட ஆட்சியாளர் நிச்சயிக்கக்கூடிய ஊதியம் கொடுக்க வேண்டும்.

3. அக்கட்டணம், கேட்கப்படுவதன் பேரில், சந்தர்ப்பத்துக்கேற்பப் பதிவான கைப்பற்றுதாரரால் அல்லது பதிவான கூட்டுக் கைப்பற்றுதாரர்களில் ஒருவரால் செலுத்தப்படத்தக்கதாகும்; அது செலுத்தப்படாவிட்டால், அந்தக் கைப்பற்றுதாரரிடமிருந்து அல்லது அக்கைப்பற்றுதாரர்களில் ஒருவரிடமிருந்து நிலவரி பாக்கியைப் போல் அதை வசூலிக்கலாம்.

4. அக்கட்டணத்திலிருந்து கிடைக்கும் தொகையை ஒரு தனி நிதியாக அமைக்க வேண்டும். சம்பந்தப்பட்ட பாசனக்கட்டுவேலையின் பராமரிப்புக்காக அல்லது செப்பனிட்டுக்காக, ஊராட்சி ஒன்றிய மன்றம் அதைத் தங்கள் உசிதம் போல் செலவிடவேண்டும். அதை வேறு எதற்காகவும் பயன்படுத்தக் கூடாது.

5. அந்த நிதி சம்பந்தமான விவகாரங்களுக்காக ஊராட்சி ஒன்றிய மன்றம் சரியான கணக்குகள் வைத்துவரவேண்டும். 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 141-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி அரசினரால் நியமிக்கப்படும் தணிக்கையாளர் அக்கணக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டும்.

6. அரசாங்கப் பொதுப்பணித்துறையையும் வருவாய்த்துறையையும் சேர்ந்த அலுவலர்கள், அப்பாசனக்கட்டு வேலையையும் அதன் தொடர்பான மற்றெல்லாக்கட்டுவேலைகளையும் அல்லது அவற்றில் எதையேனும் பார்வையிட ஊராட்சி ஒன்றிய மன்றம் அவர்களுக்கு எல்லாக் காலங்களிலும் அனுமதி கொடுக்க வேண்டும்.

7. பாசனக்கட்டு வேலையை அல்லது அதன் தொடர்பான மற்றக்கட்டு வேலைகளைச் செப்பனிடுவதற்காக, அரசாங்கத்தின் பொதுப் பணித்துறையினரால் அல்லது வருவாய்த்துறையினரால் அமர்த்தப்படக்கூடிய ஒப்பந்தக்

காரருக்கு ஊராட்சி ஒன்றிய மன்றம் எல்லாக்காலங்களிலும் வசதியளிக்க வேண்டும்.

(1960 அக்டோபர் 8-ம் தேதியுள்ள 1677-ம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

துணை விதிகள்.

1. *தொழிலாளர்களைத் திரட்டுவது.*— குடிமராமத்து வேலைகளின் பின்வரும் கூறுகளை நிறைவேற்றுவதற்காகச் சம்பந்தப்பட்ட உள்ளூர்ப்பரப்பிலுள்ள ரயத்துகளிலிருந்து தொழிலாளர்களை திரட்டுவது ஊராட்சியின் பொறுப்பாகும்; அக்கூறுகளாவன :—

(i) குளங்கள், வாய்க்கால்களின் கரைகள் மேல் மழையினால் அல்லது கால்நடை முதலியன மிதித்ததனால் உண்டான அறுத்தோடிகளை அல்லது மேடுபள்ளங்களை இட்டு நிரப்புதல்.

(ii) சப்பாத்திக்கள்ளி அல்லது அது போன்ற வேறு களைகள் செறிந்த தீங்குண்டாக்கும் பூண்டுகள் கரைகளின் மேல் வளர்வதை தடுப்பது;

(iii) குளங்கள், மற்றக்கட்டு வேலைகள் ஆகியவற்றின் பத்திரத்துக்கு தீங்குண்டாக்குபவையென்று கோட்டப் பொறியாளரும் உதவிப் பொறியாளரும் ஒன்றியப் பொறியாளரும் கருதக்கூடிய தூறுகளை அந்த குளங்கள், கட்டு வேலைகள் ஆகியவற்றின் கரைகளிலிருந்து அகற்றுவது ;

(iv) வயல்களுக்குப் பாய்வதற்கு நீர் வழங்குவதற்காகப் போதுமான வாய்ப்பிடம் இருக்கும்படி செய்வதற்காக, குளத்தின் மடைகளிலிருந்தும் வாய்க்கால்களிலிருந்தும் வண்டல்களை அகற்றுவது.

(v) சிறு கிளைக்கால்வாய்களின் மண்வேலையிலுள்ள அடைப்புகளை அகற்றிச் செப்பனிடுவதும், குளங்களிலிருந்து பிரியும் எல்லா வாய்க்கால்களிலும், வயல்களுக்குத் தண்ணீர் பாய்வதைத் தடைசெய்யும் படி பொருள்களை அகற்றுவதும்.

(vi) குளங்களின் அல்லது மற்றக் கட்டுவேலைகளின் நீர் வழங்கு வாய்க்காலைத் தல வழக்கம் அனுமதிக்கும் அளவுக்கு ஒழுங்காக வைத்திருப்பது.

(vii) மழைக்காலத்தில் எல்லாக் குளங்கள், மற்றக் கட்டுவேலைகள் ஆகியவற்றின் கரைகளைக் கவனமாய்ப்பார்த்துக் கொள்வதும், அலைகளால் தாக்கப்பட்டு ஒழுகுவது போலத்தோன்றுகிற பாகங்களைக் காவிட்டு

மூடுவதும், கலிங்கல்களைத் திறப்பதும், மூடுவதும், உடைப்பு முதலிய தற்செயல் விபத்துக்களைத் தடுக்கும் பொருட்டு பொதுவாக அதைப் போன்ற சிறு வேலைகளைச் செய்வதும் :

(viii) உடைப்புகளுக்குச் சுற்று அணைகளைக் கட்டுவதும், அவசியமானால் சாகுபடிக் காலத்தில் குளங்களின் கரைகளையும் மற்றக் கட்டு வேலைகளையும் வலுப்படுத்துவதும் அற்பமான எந்தத் தீங்குகளைத் தடுக்காவிட்டால் பேரிழப்பும் செலவும் ஏற்படக்கூடுமோ அந்தத் தீங்குகளினின்றும், ஊராட்சி ஒன்றிய மன்றம் பொது அக்கறை கொண்டுள்ள பாசனக் கட்டுவேலைகளைப் பாது காப்பதும்.

2. தூர்வாரும் வேலை :—தூர்வாரும் வேலையை, ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது ஊராட்சியின் நேர் மேல் விசாரணையின் கீழ்ச் செய்ய வேண்டுமே யல்லது, அவ்வேலையை ஒப்பந்தத்துக்கு விடக்கூடாது.

3. குடிமராமத்து வேலையை எப்போது செய்ய வேண்டுமென்பது :—ஓர் ஆண்டிலே இன்ன பருவத்தில் குடி மராமத்து வேலையை மேற்கொள்ள வேண்டு மென நிச்சயிப்பது, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கடமையாகும்.

4. மதிப்பீடு தயாரித்தல் :—குடி மராமத்து வேலையைச் செய்யக் கருதி யிருப்பதற்குக் குறைந்தது ஒரு மாதத்துக்கு முன்பாக, ஓர் ஆண்டில், அத்தகைய வேலைக்குப் பிடிக்கும் தோராயமான செலவைத் தயாரிப்பது கூட, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் வேலையாகும். அப்போதுதான், ரயத்துக்களின் பங்குத்தொகையை வசூலிப்பதும், கூடுதலாகச் செலவு செய்யவேண்டி யிருந்தால், கூடுதலான குடிமராமத்து உதவித்தொகையை அரசினரிடமிருந்து பெறுவதும் சாத்தியமாகும்.

5. கூடுதலான குடிமராமத்து உதவித்தொகை.—கூடுதலான குடிமராமத்து உதவித் தொகையானது நிறைவேற்றியபின் கொடுக்கப்பட வேண்டிய உதவித் தொகையாகும். இதற்கு அரசினர் ஒப்பளிப்பு வழங்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றம் இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

6. நீர்ப்பிடிப்புப் பரப்புகளின் ஓரத்தில் மரம் நடுதல்.—ஊராட்சி ஒன்றிய மன்றம் வேலமரம், அரேபிகா (Arabica) மரம், கூரைவேய்வதற்குப் பயன்படும் புல்வகைகள், எருமைகளுக்கும் கறவைப் பசுக்களுக்கும் உணவாகப் பயன்படுத்தப்படும், 'தண்டான் குட்டை' என்று வழங்குகிற புல்வகை ஆகிய வற்றைக் குளங்கள், மற்றக் கட்டு வேலைகள் ஆகியவற்றின் நீர்ப்பிடிப்பின்

வெளி ஓரத்தில் நடவு செய்ய வேண்டும். அந்த மரங்களிலிருந்தும் புல் வகைகளிலிருந்தும் கிடைக்கும் வருமானத்தை, ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் வரவு வைக்க வேண்டும்.

(1962 ஜூலை 26 ஆம் தேதியுள்ள 1708-ம் எண் கிராம முன்னேற்றம், உள்ளாட்சித் துறை அரசாணை.)

54. குத்தகைதாரர்களுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் வஜா வழங்குவது.— 1. ஊராட்சி ஒன்றிய மன்றங்களிலிருந்து குத்தகைகள் பெற்ற குத்தகைதாரர்கள் அனைவரும், ஊராட்சி ஒன்றிய மன்றங்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்ட அனைவரும், அவர்களுடைய குத்தகைகளின் அல்லது ஒப்பந்தங்களின் ஷரத்துக்களுக்கிணங்க கண்டிப்பாக நடந்து கொள்ள வேண்டும். 2 ஆவது 3 ஆவது விதிகளில் கண்ட நிபந்தனைகளின் பிரகாரம் அன்றி மற்றப்படி வஜாக்கள் எவையும் வழங்கப்படமாட்டா.

2. பின்வரும் வரையறைகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு, குத்தகைதாரர்களுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் வஜாக்கள் வழங்கப்படும்: அவையாவன :—

(அ) நியாயமாக எதிர்பார்த்திருக்க முடியாத ஏதோ ஒரு இயல் மீறிய புறம்பான காரணம் நேரிட்டிருப்பதனால், குத்தகைதாரர் அல்லது ஒப்பந்தக்காரர் குத்தகையில் அல்லது ஒப்பந்தத்தில் தமது பங்கை நிறைவேற்ற முடியாமல் தடுக்கப்பட்டிருந்தால் மட்டும் வஜா வழங்கப்படும்: எடுத்துக்காட்டாகக் குத்தகைக்கு விடப்பட்டுள்ள அங்காடி ஒன்று கொள்ளை நோய் கண்டிருப்பது காரணமாகக் கட்டாயமாய் மூடப்படுதல்;

(ஆ) வஜா செய்யப்படும் தொகையானது, அத்தகைய இயல் மீறிய காரணத்தினால் குத்தகைதாரர் அல்லது ஒப்பந்தக்காரர் குத்தகையில் அல்லது ஒப்பந்தத்தில் தமது பங்கை நிறைவேற்ற முடியாதபடி தடுக்கப்பட்டுள்ள காலத்துக்குக் குத்தகையின்படி அல்லது ஒப்பந்தத்தின் படி கொடுக்கப்படத் தக்க வீதாசாரத் தொகைக்கு மேற்படலாகாது.

(இ) வஜா செய்யப்படும் தொகை ஐம்பது ரூபாய்க்கு மேற்பட்டால் கலெக்டரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

3. குத்தகையில் அல்லது ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிற தண்டனைகள் குத்தகையின் அல்லது ஒப்பந்தத்தின் ஷரத்துகளுக்கிணங்கக் கண்டிப்பாக நிறைவேற்றப்படும். குத்தகையின்படி அல்லது ஒப்பந்தத்தின்படி ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குச் சேரவேண்டிய தொகையைத் தாமதித்துச்

செலுத்துவதற்கான தண்டனைகள் வஜா செய்யப்படமாட்டா: ஆனால் சேர வேண்டிய தொகை தவணைகளாக ஒழுங்காகவே செலுத்தப்படுகிறதென ஊராட்சி ஒன்றிய மன்றம் அபிப்பிராயப்பட்டு குத்தகையின்படி அல்லது ஒப்பந்தத்தின்படி ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குச் சேரவேண்டிய தொகை முழுவதும் அந்தக் குத்தகை அல்லது ஒப்பந்தம் சம்பந்தப்படுகிற காலம் முடிவதற்கு முன் செலுத்தப்பட்டால் தண்டனைகள் வஜா செய்யப்படும்.

ஆனால் வஜா செய்யப்படும் ஒவ்வொரு தொகை ரூ. 50-க்கு மேற்பட்டால் மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை; 1963 ஏப்ரல் 3 ஆம் தேதியுள்ள 754 ஆம் எண் கிராமமுன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணை.)

55. **பொதுச் சாலைகளில் அல்லது அவைகளின் மீதுள்ள தடங்கல்களுக்குத் தடை, ஆக்கிரமிப்புகளை அகற்றுவது முதலியன.**—1. (1) ஓர் ஊராட்சி ஒன்றியக்குழுவினரிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிற அல்லது அவர்களுக்குச் சொந்தமான பொதுச் சாலையிலிருந்து அல்லது வேறு அசையாப் பொருளிலிருந்து இருபது கெஜ தூரத்துக்குள் இருக்கும் ஓர் இடத்திலே எவரும் கல்வெட்டி எடுக்கும் வேலை செய்யவுங்கூடாது. அவ்விடத்திலிருந்து கல், மண் அல்லது வேறு பொருளை அப்புறப்படுத்தவுங்கூடாது.

ஆனால் ஊராட்சி ஒன்றிய மன்றம், தாங்கள் நிச்சயிக்கக்கூடிய வரையறைகள் நிபந்தனைகள் பேரிலும், அல்லது நிச்சயிக்கக்கூடிய வரையறைகளுக்குட்பட்டும், அத்தகைய வேலைக்காக உரிமம் ஒன்று வழங்கலாம்; அத்தகைய உரிமம் வழங்க அவர்கள் மறுத்தால், அவர்கள் மறுத்ததற்குரிய காரணங்களைச் சம்பந்தப்பட்டபேருக்கு அல்லது பேர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும், நல்லெண்ணத்தோடு செய்யும் உழவு வேலை சம்பந்தமாக ஆய்வாளர் கருதுகிற ஏதேனும் வேலைக்கு இவ்விதியில் உள்ளது எதுவும் பொருந்துவதாகக் கருதப் படமாட்டாது.

(2) ஓரிடத்தில் கல்வெட்டியெடுக்கும் வேலை செய்வதனால் அல்லது அவ்விடத்திலிருந்து கல், மண் அல்லது வேறு பொருளை அப்புறப்படுத்துவதனால் அதன் அக்கம் பக்கத்தில் வசிப்பவர்களுக்கு அல்லது அங்கே சட்டப்படி போகக் கூடியவர்களுக்கு ஆபத்து நேருமென்று அல்லது தொல்லை விளையுமென்று அல்லது வெகுசாய் விளையக்கூடுமென்று ஊராட்சி ஒன்றிய மன்றம் கருதினால், ஊராட்சி ஒன்றிய மன்றம் கல்வெட்டியெடுக்கும் வேலையை நிறுத்தும்படி

அல்லது அந்த இடத்திலிருந்து கல், மண் அல்லது வேறு பொருளை அகற்று வதை நிறுத்தும்படி அல்லது அதிலிருந்து எழுகிற அல்லது வெருவாய் எழக் கூடிய ஆபத்தைத் தடுப்பதற்கு அல்லது தொல்லையைத் தணிப்பதற்குத் தாங்கள் அவசியமெனக் கருதும் ஏற்பாட்டை அந்தக் கல்வெட்டியெடுக்குமிடம் அல்லது வேறு இடம் சம்பந்தமாகச் செய்யும்படி அந்தக் கல்வெட்டியெடுக்கு மிடத்தின் அல்லது வேறு இடத்தின் சொந்தக்காரருக்கு அல்லது அது பற்றி மேல் விசாரணை செய்பவருக்கு ஆணை பிறப்பிக்கலாம்.

(i) ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் உரித்தாக்கப்பட்டிருக்கிற ஒரு பொதுச் சாலையின் மீது வெளிப்புறமாகத் திறக்கும்படியாக, ஆணையாளரிட மிருந்து உரிமம் பெற்றுக் கொள்ளாமல், கதவு, வாயில், கம்பித்தடுப்பு அல்லது அடித்தள ஜன்னல் ஆகியவற்றைத் தொங்கவிடவோ அமைக்கவோ கூடாது.

(ii) ஆணையாளர் அறிக்கை பிறப்பித்து அதன் மூலமாக, அந்தக் கதவு, வாயில், கம்பித்தடுப்பு அல்லது ஜன்னலின் பாகம் திறக்கப்படும்போது பொதுச் சாலையின் மீது நீட்டிக்கொண்டிருக்காத வகையில் அதை மாற்றி யமைக்கும்படி அதன் சொந்தக் காரரைக் கேட்கலாம்.

(3) (i) ஆணையாளர் அறிக்கை பிறப்பித்து, அதன் மூலமாக ஒருவரின் எதிரில் அல்லது அதன் முகப்பில், ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் உரித் தாக்கப்பட்டுள்ள ஒரு பொதுச் சாலையில் அல்லது அதன் மீது இருக்கிற (கதவு, வாயில், கம்பித் தடுப்பு அல்லது அடித்தள ஜன்னல் அல்லாத வேறு) பிதுக்கம், ஆக்கிரமிப்பு அல்லது தடங்கலை அகற்றும்படி அல்லது மாற்றும்படி அந்த வளைவின் சொந்தக்காரரை அல்லது ஆட்சியாளரைக் கேட்கலாம்.

(ii) அத்தகைய ஏதேனும் பிதுக்கம், ஆக்கிரமிப்பு அல்லது தடங்கல், அதற்குரிய அனுபோக பாத்தியதையை ஒருவருக்குக் கொடுக்கும் வகையில் காலவரையறைச் சட்டத்தின்படி போதிய காலமாக ஏற்பட்டிருந்ததென்றாவது இதற்கென கிரமப்படி அதிகாரம், பெற்றுள்ள ஒரு தல அதிகாரியின் அனுமதி அல்லது உரிமத்தைக்கொண்டு அது நிறுவப்பட்டு அல்லது அமைக்கப்பட்டு, அந்த அனுமதி அல்லது உரிமம் செல்லுபடியாகிற ஏதேனும் காலம் கழிந்து போகவில்லை யென்றாவது அந்த வளைவின் சொந்தக்காரர் அல்லது ஆட்சியாளர் எண்பித்தால், அதனை அகற்றுவதனால் அல்லது மாற்றுவதனால் இழப்புக் குள்ளாகும் ஒவ்வொருவருக்கும் ஊராட்சி ஒன்றிய மன்றம் நியாயமான இழப்பீடு செய்து கொடுக்க வேண்டும்.

4. (i) ஆணையாளர், ஊராட்சி ஒன்றிய மன்றம், ஒப்புதலுடன், தாம் தகுதியெனக் கருதக்கூடிய திட்டங்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு, ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் உரித்தாக்கப்பட்டுள்ள பொதுச் சாலையின்

மீது பிதுங்கிவரும்படி தாழ்வாரங்கள், முகப்பு மாடங்கள் நிழல்தட்டிகள், சாரல்தாங்கிகள் முதலியவைகளைக் கட்டிக்கொள்ளவோ, அந்த வளவுக்குப் போவதற்கு அவசியமான படிக்கட்டு அல்லது வடிகால் மூடி கட்டிக் கொள்ளவோ அந்த வளவின் சொந்தக்காரருக்கு அல்லது ஆட்சியாளருக்கு உரிமம் வழங்கலாம்.

(ii). (i) உள்விதியின்படி ஓர் உரிமத்துக்கான விண்ணப்பம் ஒவ் வொன்றிலும், இன்னபொருள்களைக் கொண்டு அந்தக்கட்டுக் கோப்பினைக் கட்டக் கருதியிருக்கிறதென்பதைப் பற்றியும், இன்னகாலத்துக்காக உரிமம் தேவைப்படுகிறதென்பதையும் தகவல் கொடுக்கவேண்டும்.

(iii) பனை ஓலை, தென்னை ஓலை, மூங்கில், அல்லது வேறு பாய்முடை பொருள் அல்லது சாக்குத்துணி முதலியவை போன்ற சொற்ப காலப் பொருள்களால் அந்தக் கட்டுக்கோப்பு ஆக்கப்படுவதாகயிருந்து அல்லது அந்தக் கட்டுக்கோப்பு அன்றாடம் மாற்றக்கூடிய தன்மை வாய்ந்ததாயிருந்து, உரிமக் காலம் பன்னிரண்டு மாதத்துக்கு மேற்படாவிட்டால், ஊராட்சி ஒன்றிய மன்றம் அந்த உரிமத்தை வழங்கலாம் அல்லது புதுப்பிக்கலாம்.

(iv) மாவட்ட ஆட்சியாளரின் முற்சம்மதத்துடனன்றி மற்றப்படி (3) உள்விதியில் கண்ட விவரப்படியிராத ஒரு கட்டுக் கோப்புக்காக அல்லது பன்னிரண்டு மாதத்துக்குமேற்பட்ட காலத்துக்காக ஊராட்சி ஒன்றிய மன்றம் உரிமம் வழங்கக் கூடாது; மாவட்ட ஆட்சியாளர் சம்மதம் அளிக் கையில் தாம் அவசியமெனக் கருதக்கூடிய இன்ன திட்டங்களுக்குட்பட்டு ஊராட்சி ஒன்றிய மன்றம் உரிமம் வழங்கலாமென்பதை விதிக்கலாம். உரிமம் வழங்குவதற்கு முன், ஊராட்சி ஒன்றிய மன்றம் அந்தத் திட்டங்களை அதில் சேர்க்க வேண்டும்.

இந்த உபவிதியின்படி வழங்கப்படும் ஓர் உரிமத்தின் விஷயத்தில், அதைப் புதுப்பிப்பதனல், அந்த உரிமம் மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்டு நீடிக்காமலிருக்குமானல், அதைப் புதுப்பிப்பதற்கு மாவட்ட ஆட்சியாளரின் சம்மதம் அவசியமாகமாட்டாது.

(v) வளவுக்குப் போவதற்கு வசதியாயிருப்பதற்கு அவசியமாகப் படிக்கட்டுகள் அல்லது வடிகால் மூடி கட்டுவதற்கான உரிமம், மேற்கொண்டு பின்வரும் திட்டங்களுக்குட்பட்டு வழங்கப்படும்: அத்திட்டங்களை உரிமங்களில் குறிப்பிடவேண்டும்:—

(1) வடிகால்களின் மேல் உள்ள படிக்கட்டுகள் அல்லது பலகைகள் சாலைக்குள்ளே அல்லது வடிகாலின் தாங்கு சுவருக்கப்பால் நீட்டிக்கொண்டிருக் கக்கூடாது. சாலையை அடுத்தாற்போல் ஒட்டியிருக்கும் வளவுக்கு அழைத்து

செல்லும் வடிகாலின் மீதான படிக்கட்டு அல்லது பலகையின் நீளம் குடித்தன வளவிடத்தைப் பொருத்தவரை மூன்று அடிக்கும் கடைகள் அல்லது தொழிலிடங்களைப் பொருத்தவரை ஐந்து அடிக்கும் மேற்பட்டிருக்கக்கூடாது. ஆனால், 20 அடி நீளத்துக்குக் குறையாத முகப்புத்தளமுடைய கடைகள் அல்லது தொழிலிடங்களைப் பொருத்தவரை ஒரு வரிசைப் படிக்கட்டுகள்தான் அனுமதிக்கப்படும். முகப்பில் சுற்றிடமிருந்து வண்டி முதலியன அதற்குள் போவதற்கு வடிகாலின்மேல் வெகுசாய்ப்போக வேண்டும் போலிருந்தால், ஆணையாளர் மூடியின் நீளத்தை நிச்சயிக்கவேண்டும்.

(ii) வடிக்கால்களின் மேலுள்ள மூடிகளும் வடிகால்களின் தாங்கு சுவர்களின் மேல்பாகமும் ஒரே மட்டத்திலிருக்க வேண்டும், ஆனால் ஊராட்சி ஒன்றியக்குழுவினர் கருத்தில் மூடிகளுக்குக் கீழே வடிகாலின் ஆரம்பமானது மழை வெள்ளத்தை அடித்துச் செல்வதற்குப் போதுமானதாயிருக்க வேண்டும். வடிகாலில் நீர் செல்லும் வழியில் தடங்கல் இராதிருக்கும் பொருட்டுத் தாங்குசுவர்களின் உச்சியில் மூடுபலகை ஒன்றை அமைப்பது அவசியமாயிருக்கிற அரிதான சந்தர்ப்பங்களில், அல்லது உரிமம் கொடுக்கும் அதிகாரிக்கு ஆட்சேபணை இல்லையென்றால் அப்படியே அமைக்கலாம்; ஆனால் மாவட்ட ஆட்சியாளரின் முற்கூட்டிய சம்மதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும், மேலும், உயர்ந்திருக்கிற பலகையின் உச்சி மட்டத்திலிருந்து சாலை மட்டத்துக்கு இட்டுச் செல்லும் அப்பலகையில் சாலைப்பக்கத்தில், தகுந்த சிமிட்டிக்கற் கலவைச் சாய்தளம் ஒன்றைக் கட்டவேண்டும்.

(iii) சாலையை ஒட்டியுள்ள வளவைப் பொருத்தவரை கால்வாய் மூடியானது, 6 அங்குலம் 36 அங்குலம் வரை அகலமுள்ள வடிகால்களுக்கு, 2, 3 அல்லது 4 அங்குல அகலமுள்ளதாயிருக்கவேண்டும். ஒரு வளவின் முகப்பில் வளாகம் இருந்து, வடிகாலின் மீது பளுவான வண்டிகள் வெகு சாய்ப் போக்குவரத்தாயிருந்தால், மூடியானது, பின்வரும் கனமுள்ள கருங் கல்லாக அல்லது வலுவேற்றப்பட்ட கற்கலவைப் பலகைகளாக இருக்கலாம்:—

அங்குலக் கணக்கில் அகலம்	வலுவேற்றப்பட்ட கற்கலவைப் பலகைகள். அங்குலக்கணக்கில் கனம்.	கருங்கல் பாளங்கள். அங்குலக்கணக்கில் கனம்.
(1)	(2)	(3)
6 முதல் 12 வரையுள்ள வடி கால்கள் மீது	4	5

அங்குலக் கணக்கில் அகலம்.	வலுவேற்றப்பட்ட கற்கலவைப் பலகைகள். அங்குலகணக்கில் கனம்,	கருங்கல் பாலங்கள், அங்குலகணக்கில் கனம்.
(1)	(2)	(3)
13 முதல் 24 வரையுள்ள வடிகால்கள் மீது	6	7
25 முதல் 36 வரையுள்ள வடிகால்கள் மீது	7	9

இன்னும் பெரிய வடிகால்கள் விஷயத்தில், மூடியின் கனமும் அது ஆக்கப் பெற்றுள்ள பொருளும்—

(அ) பயன்படுத்தப்படும் கல்லின் அல்லது வேறு மூடிப் பொருள்களின் வகைக்கும்,

(ஆ) சுமையைக் கடத்துகிற தனித்தனிப் பாளங்களின் அகலத்துக்கும்

(இ) எதிர்பார்க்கப்படும் சுமைச் செறிவுக்கும்,

(ஈ) பாளத்தின் மீது நிரப்பு பொருள் ஏதேனும் இருந்தால் அதன் ஆழத்துக்கும், பொருந்தும்படி, ஒவ்வொன்றிலும் ஆணையாளர் தீர்மானிக்கக் கூடியபடி இருக்க வேண்டும்.

அசாதாரணமானவற்றில் மாவட்ட ஆட்சியாளரின் முன் இசைவைப் பெற்றுக் கொண்டு இந்த நிபந்தனையைத் தளர்த்தலாம்.

(iv) வடிகாலை ஆய்வு செய்யும் பொருட்டு அல்லது செப்பனிடும் பொருட்டு, அவசியமாயிருக்கிற போதெல்லாம், உரிமம் பெற்றவரின் செலவில் அவை அகற்றப்படுவதற்குட்பட்டவையாகும்.

(v) ஆணையாளர், தாம் தகுதியெனக் கருதும்போதெல்லாம், எழுதியுள்ள ஆணை மூலமாகப் படிக்கட்டு அல்லது வடிகால் மூடிகளை முழுவதும் அகற்றிவிட வேண்டுமெனவும், அதற்கு ஈட்டுப்பணம் கொடுக்கப்பட மாட்டாதெனவும் கட்டளையிடலாம்.

ஆனால் எடுக்கக்கருதியுள்ள நடவடிக்கைக்கான காரணத்தை மேற்சொன்ன ஆணையில் குறிப்பிட்டிருக்க வேண்டும்; தொடர்புடையவர்களுக்கு அறிக்கை கொடாமல் அந்த ஆணையைப் பிறப்பிக்கக்கூடாது.

(vi) வடிகால் மூடியின் உச்சிப் பாகத்தை ஒரு கடையின் பாக மாகப் பயன்படுத்தவோ மற்றப்படி அதன்மீது ஆக்கிரமிப்புச் செய்யவோ கூடாது.

(6) உரிமம் கொடுக்கப்பெற்றுள்ள பிதுக்கம் கட்டமைப்பு அல்லது கட்டுக்கோப்பு ஆட்சேபகரமானதாகிவிட்டிருக்கிறதென்று மாவட்ட அலுவலர் கருதினுல், அல்லது பொது நலனை முன்னிட்டு அந்தப் பிதுக்கம் கட்டமைப்பு அல்லது கட்டுக்கோப்பை அகற்றிவிட வேண்டுமென அவர் கருதினுல்;

(3) (4) அல்லது (5) உள்விதியின்படி வழங்கப்பட்ட உரிமத்தை ரத்துச் செய்ய அவருக்கு அதிகாரமுண்டு; அந்த ஆணையின்பேரில், ஊராட்சி ஒன்றிய மன்றம் அந்தப் பிதுக்கத்தைக் கட்டமைப்பை அல்லது கட்டுக் கோப்பை அகற்றும்படி செய்ய வேண்டும்.

(7) (3) (4) அல்லது (5) உள்விதியின்படி வழங்கப்பட்ட உரிமம் ஒவ் வொன்றுக்கும் அடியிற்கண்டது ஒரு நிபந்தனையாகும்; அதாவது :—

(i) (6) உள்விதியில் குறிப்பிட்டிருக்கிற சந்தர்ப்பங்களில் எப்போ தேனும் அது ரத்து செய்யப்படுவதற்குட்பட்டதாகும்;

(ii) ஆண்டுக்கட்டணம் ஒன்று விதிக்கப்பட்டால், அதை உரிமம் அமலில் இருக்கிறவரையில், ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்; அக்கட்டணங்களைச் செலுத்தத் தவறினுல், உரிமம் ரத்து செய்யப்படுவதற்குட்பட்டதாகும்.

5. ஊராட்சி ஒன்றிய மன்றத்தினிடம் உரித்தாக்கப்பட்டுள்ள பொதுச் சாலையிலாவது, வேறு எந்தப் பொதுவிடத்தின் கட்டுப்பாடு ஊராட்சி ஒன்றிய மன்றத்துடன் உரித்தாக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடத்திலாவது, தற்காலிக மாகப் பந்தல்களையும் மற்றக்கட்டுக் கோப்புகளையும் எழுப்புவதற்காக, ஆணை யாளர், தாம் தகுதியெனக் கருதக்கூடிய நிபந்தனைகளுக்கும் வரையறை களுக்கும் உட்பட்டு, உரிமம் வழங்கலாம்.

6. ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் உரித்தாக்கப்பட்டுள்ள சாலையோரங் களை அனுபோகத்தில் வைத்துக்கொள்வதற்காக, ஊராட்சி ஒன்றிய மன்றம் நிச்சயிக்கக்கூடிய வரையறைகள் நிபந்தனைகள் பேரிலும் கால அளவுக்கும்; ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் இசைவுடன் குத்தகைக்கு விட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

7. ஆனால் சந்தர்ப்பத்துக்கேற்பப் பிதுக்கத்தினால் கட்டிடத்தினால் அல்லது அனுபோகத்தினால், மக்கள் உடல் நலனுக்கு கேடு விளையும்போலிருந்தால் அல்லது பொதுமக்களுக்கு வசதிக்குறைவு உண்டாகும் போலிருந்தால் அல்லது சாலையை அம்முறையில் பயன்படுத்துவதற்கு மற்றப்படி பெரிதும் 6 ஆவது விதியின்படி குத்தகையாவது வழங்கப்படமாட்டாது.

8. ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் 4 ஆவது 6 ஆவது விதிகளின் படிக்கான அதிகாரங்களைச் செலுத்துவதை, அரசினர் விளம்பரம் மூலமாக வரையறுத்துத் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய கட்டுப்பாட்டுக்குட் படுத்திவைக்கலாம்.

9. 4, 5 ஆவது விதிகளின்படி உரிமம் அல்லது குத்தகை வழங்கப் பெற்ற கால அளவு கழிந்து போனதும், ஆணையாளர், 4 ஆவது அல்லது 5 ஆவது விதியின்படி அமைக்கப்பட்ட பிதுக்கத்தை அல்லது கட்டிடத்தை, அறிக்கை கொடாமலேயே அகற்றுவிக்கலாம், அவ்வாறு செய்வதற்குப் பிடிக்கும் செலவு உரிமம் வழங்கப்பெற்றவரிடமிருந்து வசூலிக்கப்படத்தக்கதாகும்.

10. (1) ஒரு சாக்கடையின் அல்லது வடிகாலின் மீது அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் உரித்தாக்கப்பட்டிருப்பதும், தெருவில் பெருக்கப் பட்டவைகளினால் அல்லது வேறு குப்பை கூளத்தினால் முழுவதும் அல்லது சிறிது மட்டில் மூடப்பட்டதும், எழுப்பப்பட்டதும் அல்லது மட்டமாக்கப் பட்டதுமான ஒரு நிலத்தின்பேரில், ஆணையாளருடைய அல்லது ஆணையாளரிட மிருந்து அதிகாரம் பெற்றுள்ள வேறொருவருடைய எழுத்து மூலமான அனுமதி யின்றிக் கட்டிடம் எதையும் எழுப்பக்கூடாது.

(2) அத்தகைய அனுமதியின்றி அல்லது அத்தகைய அனுமதியின் வரையறைகளுக்கு மாறுத அல்லது முரணைக் கட்டிடம் ஒன்றை எழுப்பியிருக் கிற ஒருவர், அதை இடித்துவிட வேண்டுமென, ஆணையாளரும், அவ்வாறு அதிகாரம் பெற்றுள்ளவரும் அறிக்கை மூலமாக அவருக்கு ஆணையிடலாம்.

11. ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் உரித்தாக்கப்பட்டிருக்கிற ஒரு பொதுச்சாலையை அடுத்துள்ள அல்லது வேறு நிலம் அல்லது நீர் நிலையை அடுத்துள்ள ஒரு நிலத்தின் சொந்தக்காரர், அல்லது அனுபோகதாரர், சப்பாத்திக்கள்ளி, விரைவில் பரவும் களைச் செடி முதலிய தீயவையான

புல் பூண்டுகள் அவ் உடைமையின் மீது ஆக்கரமித்தாலும், அந்நிலத்தைவிட்டு அவ்வுடைமையின் பேரில் அவை பரவியிருக்கிற வரையிலும், அவற்றை அகற்றவேண்டுமென, அறிக்கை மூலமாக ஆணையாளர் ஆணையிடலாம்.

12. (1) எவரேனும் ஆணையாளரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொண்டு, ஆணையாளர் விதிக்கக்கூடிய நிபந்தனைகளை நிறைவேற்றினலன்றி, ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் உரித்தாக்கப்பட்டுள்ள ஒரு பொதுச் சாலையில் குழி தோண்டவுங்கூடாது ஏதேனும் தடங்கல் ஏற்படுத்தவுங்கூடாது.

(2) அத்தகைய அனுமதி வழங்கப்பட்டால் அவர், தமது சொந்தச் செலவில், அந்தக் குழி தூர்க்கப்படுகிற வரையில் அல்லது தடங்கல் அகற்றப் படுகிறவரையில், அந்தக் குழி அல்லது தடங்கலுக்குப் போதுமான வேலி போட்டு வளைத்து, இரவில் அக்குழி அல்லது தடங்கலண்டை போதுமானபடி விளக்கேற்றி வைக்கும்படி செய்ய வேண்டும்.

(3) எவராகிலும் இவ்விதியின் நிபந்தனைகளை மீறினல், ஆணையாளர் சந்தர்ப்பத்துக்கேற்ப, அக்குழியைத்தூர்த்து அல்லது தடங்கலை அகற்றி, அந்தக் குழி அல்லது தடங்கலின் அருகே விளக்கேற்றி வைக்கும்படி செய்து, அவ்வாறு செய்ததற்குப் பிடித்த செலவை அவரிடமிருந்து வசூலிக்கலாம்.

13. (1) ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் உரித்தாக்கப்பட்டிருக்கிற அல்லது அவர்களுக்குச் சொந்தமான ஒரு பொதுச் சாலையிலே, ஆணையாளர் விதிக்கக்கூடிய நிபந்தனைகளின்பேரில் மரம் நடுவதற்கு எவருக்கேனும் அனுமதி வழங்க ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

14. (1) எவரேனும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முன் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொள்ளாமல், ஏதேனும் பொதுக்காரியத்துக்காக ஒதுக்கி வைக்கப் பட்டிருப்பதும் அம்மன்றத்தினிடம் உரித்தாக்கப்பட்டிருப்பதும் அல்லது அதற்குச் சொந்தமானதுமான ஒரு நிலத்தை அனுபோகத்தில் வைத்துக் கொண்டால், அவர் அவ்வாறு அனுபோகத்தில் வைத்துக்கொண்டது சம்பந்த மாக, அபராதம் என்னும் வகையில் ஊராட்சி ஒன்றிய மன்றம் கேட்கக்கூடிய தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டவராவார்.

(2) ஆணையாளர் விதிக்கக்கூடிய நிபந்தனைகளின்பேரில் 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 82 (1) (f) பிரிவில் குறிப் பிட்டிருக்கிற எந்த மரத்தையேனும் வெட்டிவிட, அகற்ற, அழிக்க அதன்கிளை களை வெட்ட, அதிலிருந்து பட்டைகளை அல்லது இலைகளைத் தறிக்க அல்லது மற்றபடி அதைச் சேதப்படுத்த எவருக்கேனும் அனுமதி வழங்க ஆணை யாளருக்கு அதிகாரம் உண்டு.

(2) ஆணையாளர், அறிக்கை மூலமாக (1) உள் விதியின்படி அபராதம் விதிக்கப்பெற்றிருக்கிற அல்லது விதிக்கப்பெறக் கூடிய நபர், அந்த நிலத்தைக் காலி செய்ய வேண்டுமெனவும், அதன் பேரில் உள்ள கட்டிடத்தை அல்லது வேறு கட்டுமானத்தை அல்லது யாதொன்றை அகற்றிவிட வேண்டுமெனவும் உத்தரவு செய்யலாம்.

(3) ஏதேனும் நிலத்தை அனுபோகத்தில் வைத்துக் கொண்டிருப்பவரும், அதற்காக (1) உள்விதியின்படி அபராதம் செலுத்துவதற்குட்பட்டவருமான ஒருவரால் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உடைமைக்குச் சேதம் நேரிட்டால், அவருக்கு விதிக்கப்படக் கூடிய அல்லது அவரிடமிருந்து வசூலிக்கப்படக்கூடிய அபராதத்துடன் கூடவும் அதைப் பொருட்படுத்தாமலும் அவர் அச்சேதத்துக்காக, ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு ஈட்டுத் தொகை செலுத்துவதற்குட்பட்டவராவார்.

(4) இவ்விதியின்படி எவரிடமிருந்தேனும் சேரவேண்டியுள்ள ஈட்டுத் தொகையையும் அபராதத்தையும் பட்டி (பில்) மூலமாகக் கேட்டு, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் வரவுகளையும் செலவையும் பற்றிய விதிகளுக்கிணங்கப் பல்வகைப் பாக்கிகளைப்போல் வசூலிக்க வேண்டும்.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677-ஆம் எண் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

(1963 ஏப்ரல் 3 ஆம் தேதியுள்ள 154-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

56. ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குச் சேரவேண்டிய தொகைகளை வசூலிப்பது.—(1958 ஆம் ஆண்டின் 35 ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச்சட்டத்தின் படி அல்லது அதன் பிரகாரம் செய்யப்பட்ட வேறு ஏதேனும் சட்டம், அல்லது விதிகள் அல்லது துணைச் சட்டங்களின்படி எவரிடமிருந்தேனும் ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குச் சேரவேண்டிய செலவுகள், இழப்பீடுகள், ஈட்டுத் தொகை, தண்டப் பணங்கள், சிறு செலவினங்கள் (பள்ளிக் கட்டணங்கள் அல்லாத வேறு), கட்டணங்கள், கைப்பணங்கள் (ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலங்களுக்கும் கட்டிடங்களுக்குமான வாடகைகளாயிராத) வாடகைகள், உதவித் தொகைகள், மற்ற தொகைகள் ஆகியவை அனைத்தும் அவைகளை வசூலிப்பதற்காக மேற்படி சட்டத்திலாவது அதன்படி செய்யப்பட்ட விதிகளிலாவது தனி-ஏற்பாடு எதுவும் கண்டிராவிட்டால், சம்பந்தப்

பட்டவரிடம் சேர்ப்பிக்கப் படவேண்டிய பட்டியல் மூலமாகக் கேட்கப்பட்டு, மேற்படி சட்டத்தின் பிரகாரம் வரிகளை வசூலிப்பதற்கான விதிகளில் ஏற்பாடு செய்துள்ள விதமாக வசூலிக்கப்படவேண்டும்.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677 எண் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

(84) **1371-ஆம் பசலியிலிருந்து தலவரியை வசூலிப்பது.**—தலவரி விதிப்பதையும் பங்கிடுவதையும் ஓர் ஆண்டின் இடையிலிருந்து அமலுக்குக் கொண்டு வருவது எளிதல்லவாகையால், 1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட வரிவிதிப்பு ஏற்பாடுகளை ஓர் அலுவல் முறை ஆண்டின் தொடக்கத்திலிருந்து அமலுக்குக் கொண்டுவருவது உகமூந்ததாகும். 1370-ஆம் பசலியில், அதாவது 1960-61-ஆம் ஆண்டுக்காக ஏற்கெனவேயுள்ள சட்டங்களின் படி பழைய அடிப்படையின் பேரில் உள்ளூர் வரியை வசூலிக்க வேண்டு மெனவும் புதிய சட்டத்தின் நிபந்தனைகளை 1371-ஆம் பசலி முதல், அதாவது 1961-62-ஆம் ஆண்டு முதல் செயற்படுத்த வேண்டுமெனவும் அரசினர் தீர்மானித் திருக்கிறார்கள்.

(1960 செப்டம்பர் 7-ஆம் தேதியுள்ள 1499 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(35) **உள்ளூர் வரியை மாதந்தோறும் சரிக்கட்டல்.**—ஏற்கெனவேயுள்ள ஆணைகளின்படி, 1920 ஆம் ஆண்டின் தமிழ் நாடு மாவட்டக் கழகங்கள் சட்டத் தின்படி வசூலிக்கப்படத்தக்க நிலவருவாயில் ரூபாய்க்கு இரண்டணா நிலவரி 3 : 1 விதப்படி மாவட்டக் கழகங்களுக்கும் ஊராட்சி களுக்கும் இடையில் பங்கிடப்படுகிறது. மாவட்டக் கழகங்களுக்குச் சேரவேண்டிய தொகைகள் மாதத்தவணைகளில் ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதிக்குள் செலுத்தப்படத் தக்கவையாகும். ஊராட்சிகளுக்குச் சேரவேண்டிய தொகைகள், (கிராமம் அல்லது பட்டணமாக உள்ள) ஊராட்சி ஒவ்வொன்றுக்கும், அரையாண்டுத் தவணைகளில், சனவரி 15 ஆம் தேதிக்குள்ளும் ஜூலை 15 ஆம் தேதிக்குள்ளும் நேரடியாகச் செலுத்தப்படத் தக்கவையாகும். அது போலவே, 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு தொடக்கக் கல்விச் சட்டத்தின்படி வசூலிக்கப்படத்தக்க கல்வி வரித்தொகை, மாவட்டக் கழகங்களுக்கு மாதத் தவணைகளில் செலுத்தப் படத்தக்கதாகும். நில வருவாய் பேரில் கூடுதலான மேல்வரியில், மாவட்டக் கழகங்களுக்குரிய மூன்றிலிரண்டு பங்கு, மாவட்டக் கழகங்களுக்கு ஒரு மொத்தமாகச் செலுத்தப்படுவதற்கு அரசினர் ஒப்பளித்திருக்கின்றனர்.

ஊராட்சிகளுக்குரிய மூன்றில் ஒரு பங்கோ எனில், அது சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு மொத்தமாய் நேரடியாகச் செலுத்தப் படத்தக்கதாகும்.

2. 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி மேலே 1 ஆவது பாராவில் குறிப்பிடப்பட்டிருக்கிற, நில வருவாயின்பேரிலான மூன்று விதிப்பு இனங்களாகிய (i) நிலவரி (ii) கல்வி வரி (iii) நிலவருவாயின் பேரிலான கூடுதலான மேல்வரி ஆகியவை உள்ளூர் வரி" என்னும் பெயரில் ஒரே இனமாக ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றன; இது 45 புதுக்காசு வீதம் விதிக்கப்படத்தக்கதாகும். மேற்படி சட்டத்தின் 115 (1) பிரிவைப்பார்க்கவும். ஒருங்கிணைக்கப்பட்ட வரியிலிருந்து ஊராட்சிகளின் பங்கைக் கணக்கிட்டு, அதை ஊராட்சி ஒன்றியம் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்குக் கொடுக்க வேண்டும். மேற்படி சட்டத்தின் 115 (4) பிரிவைப்பார்க்கவும்.

3. நடப்பு பசலியின்போது (1370) மேலே 1-ஆவது பத்தியில் குறிப்பிட்டிருக்கிற மூன்று தனித்தனி விதிப்புகளைத் தொடர்ந்து விதித்து வருவதற்காக, 1960 செப்டம்பர் 7-ஆம் தேதியுள்ள 1499-ஆம் எண் உள்ளாட்சித்துறை அரசாணையில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஒருங்கிணைந்த வரி விதிப்புக்காக, மேற்படி சட்டத்தின் 115-ஆவது பிரிவில் கண்டுள்ள நிபந்தனையும், திருத்தி யமைக்கப்பட்ட அடிப்படையின்பேரில் . ஊராட்சிகளுக்குப் பணம் கொடுப்பதும், 1371-ஆம் பசலியிருந்து அமலுக்கு வரத்தொடங்கும்.

4. புதிய ஏற்பாட்டின்படி ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் சேரவேண்டிய தொகைகளை எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பது பற்றிப் பிரச்சினை ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது. அதற்காக வேண்டி பின்வரும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

5. 1370-ஆம் பசலி சம்பந்தப்பட்ட வரையில் மாவட்டக் கழகங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் சேரவேண்டிய தொகைகளைக் கணக்கிடுவதற்குரிய தற்போதைய அடிப்படை தொடர்ந்து இருந்துவரும், ஆனால் நடப்பு நிதியாண்டின் இரண்டாவது அரையாண்டுக்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சிகளுக்கும் சேரவேண்டிய தொகைகளின் பாகம், அந்தந்த நிதிகளில், அதாவது ஊராட்சி ஒன்றிய (பொது) நிதி, ஊராட்சி ஒன்றிய (கல்வி) நிதி, ஊராட்சி மன்ற ஒருங்கிணைந்த நிதி ஆகியவைகளில் வரவு வைப்பதற்காகச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சேரவேண்டிய தொகைகள் (நிலவரியும் கல்வி வரியும்) மாவட்டக் கழகங்களில் செய்யப்படுவதைப்போல, மாதத் தவணைகளில் கொடுக்கப்பட வேண்டும். ஊராட்சிகளுக்குச் சேரவேண்டிய தொகைகளை அரையாண்

டுத் தவணைகளில் கொடுக்கலாம். 1371 ஆம் பசலி முதற்கொண்டு, 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி வசூலிக்கப்பட்ட உள்ளூர் வரி முதற்கண், ஊராட்சி ஒன்றியப் (பொது) நிதியில் மாதந்தோறும் வரவு வைக்கப் பட்டுப் பின்னர், மேற்படி சட்டத்தில் விதித்துள்ளவாறு அந்தந்த நிதிகளுக்குச் சரிக்கட்ட வேண்டும்.

(1960 அக்டோபர் 1-ஆம் தேதியுள்ள 1615-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(86) 1. உள்ளூர் வரியைச் சரிக்கட்டுதல்.—உள்ளூர் வரியை, ஊராட்சி ஒன்றியப் (பொது) நிதிக்கு மாதந்தோறும், சரிக்கட்டுதலைப் பற்றி, 1960 அக்டோபர் 1-ஆம் தேதியுள்ள 1615-ஆம் எண் (உ.ஆ.) கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் சொல்லப்பட்டிருக்கிறது. உள்ளூர் வரியை, எதிர்ப்பார்க்கப்படும் வசூலின் அடிப்படையின் பேரில் 12 தவணைகளில் முன்னதாகச் சரிக்கட்ட வேண்டும்; தவணை ஒவ்வொன்றையும் மாதந்தோறும் சரிக்கட்ட வேண்டும். ஜமாபந்தியின் முடிவில், அந்தந்த தலைப்புகளின்கீழ் நிலவருவாய்க் கேட்பு உள்ளூர் வரிக்கேட்பு வசூல்கள் ஆகி யவற்றின் முடிவான கணக்குகள் தீர்வு செய்யப்படும்; அப்போது அடுத்து வரும் தவணைகளில் மேற்கொண்டு வரவு வைப்பது மூலமாக அல்லது குறைத்து வாங்குவது மூலமாக மிகைப்படியான தொகைகளின் சரிக்கட்டல்கள் செய்யப் படும். இதுவரையில் இம்முறையில்தான் நிலவரி சரிக்கட்டப்பட்டு வந்தது, தடவை நிலவரியின் ஒரு பகுதியை மாவட்டக் கழகத்துக்கு வரவாக ஒவ்வொரு நிலவரியின் ஒரு பகுதியை மாவட்டக் கழகத்துக்கு வரவாக ஒவ்வொரு மாதமும் இன்னொரு பகுதியை ஊராட்சிக்கு வரவாக ஆறு மாதத்துக்கொரு தடவையும் சரிக்கட்டுவது சம்பந்தமாக இதுவரையில் கையாளப்பட்டுவந்த நடைமுறைக்கும், சேரவேண்டிய நிலவரித்தொகைகளின் மாதத்தவணைகளைச் சரிக்கட்டுவது சம்பந்தமாகப் பின்பற்ற வேண்டிய நடை முறைக்கும் உள்ள குறிப்பிடத்தக்க வேற்றுமையைக் காட்டுவதே, 1960 அக்டோபர் 1-ஆம் தேதி யுள்ள 1615-ஆம் எண் (உ.ஆ.) கிராம முன்னேற்றம் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணையின் நோக்கமாகும், ஏற்பாடு செய்துள்ள உள்ளூர் வரித் தவணைத் தொகை முழுவதையும் இப்போது ஊராட்சி ஒன்றிய (பொது) நிதிக்குச் சரிக்கட்டவேண்டும்; அதன்பேரில் ஊராட்சி ஒன்றியம், தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தின் 115-ஆவது பிரிவில் விதித்துள்ளவாறு, தனது சொந்தக் கல்வி நிதிக்கும், பேரூராட்சி மன்றம் ஊராட்சி மன்றம் ஆகியவைகளுக்கு வர வாகவும் சரிக்கட்டுதல்கள் செய்ய வேண்டும்.

2. உள்ளூர் வரியை நிலவருவாயோடு வசூலிக்க வேண்டும். மேலும் அதை நிலவருவாயைப் போலவே அது கணக்குத் தலைப்பின் கீழ் மாநில அரசுக் கணக்குகளில் வரவு வைக்கவேண்டும். நிலவரியில் கூட இதுவரை இவ்வாறு செய்வதுதான் வழக்கமாயிருந்து வந்திருக்கிறது. நில வருவாயினின்றும் வேறாக உள்ளூர் வரி சம்பந்தமாகத் தனியான விவரமான வரவுத்தலைப்பை வைத்து வருவதைப் பற்றி அக்கறையாக ஆலோசிக்கப்பட்டது. இதில் நடைமுறையில் உள்ளடங்கிய இடர்ப்பாடுகளைக் கருதி நிலவருவாயோடு உள்ளூர் வரியைச் சுவடிகளில் பதிவு செய்யும் தற்போதைய நடை முறையைத் தொடர்ந்து கையாள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. உள்ளூர் வரியை ஊராட்சி ஒன்றிய (பொது) நிதிக்கு மாதந்தோறும் வரவு வைத்துச் சரிக்கட்டுதலை மாதத் தவணையை மாநில அரசுக் கணக்குகளில் VII நில வருவாய்—சாதாரண வருவாய் உள்ளாட்சிக் கழகங்களுக்குச் செலுத்தப்படும் தொகையைக் கழிக்கவும். அவைகள் சார்பில் வசூலிக்கப்படும் வரிகள்" என்னும் தலைப்புக்குப் பற்றாக எழுதுவதுன் மூலம் செய்யப்படும்.

(1961 செப்டம்பர் 8-ஆம் தேதியுள்ள 153175 கணக்குகள்
61-1 எண் குறிப்பிணை.)

(87) **உள்ளூர் வரியையும் உள்ளூர் மேல்வரியையும் தள்ளிக் கொடுத்தல்.—** நிலவருவாய் தள்ளிக் கொடுக்கப் படுமானால், நிலத்துக்குடையவரிடமிருந்து வரிகளை முழுவதும் வசூலிப்பது நியாயமன்று, உள்ளூர் வரியையும் உள்ளூர் மேல்வரியையும் விதித்து வாங்குவதற்கான அடிப்படையானது, நிலவருவாயின் கீழ் நிகரக் கேட்பு ஆகும். அதாவது, தள்ளிக் கொடுக்கப்பட்ட நில வருவாயைக் கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகு நிற்கும் தொகையாகும்.

(1962 ஆகஸ்ட் 31-ஆம் தேதியுள்ள 151022 கிராம முன்னேற்றம்,
கணக்குகள் (62-2 எண் குறிப்பாணை.)

(88) (1) இன்னதேதியிலிருந்து உள்ளூர் வரி மேல் வரியை விதித்து வாங்கலாமென்பது.—1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 115-ஆவது பிரிவின்படியுள்ள உள்ளூர் வரியை, ஏற்கெனவேயுள்ள சட்டங்களின் படி பழைய அடிப்படையின் பேரில் 1370-ஆம் பசலியில், அதாவது 1960-61-ஆம் ஆண்டுக்காக வசூலிக்கப்படவேண்டுமெனவும், புதுச்சட்டத்தின் நிபந்தனைகளை 1371-ஆம் பசலியிலிருந்து அதாவது 1961-62-ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்த வேண்டுமெனவும் ஏற்கெனவே ஆணையிடப்பட்டிருக்கிறது. (புதிய ஒருங்கிணைந்த வடிவத்தில்) உள்ளூர் வரிவிதிப்பு, ஊராட்சி ஒன்றியங்களில் செயற்படுத்தப்படுகிற வரையில் உள்ளூர் வரிமேல் வரியை விதிக்க முடியாதாகையால், உள்ளூர் வரி மேல்வரியை 1371-ஆம் பசலியிலிருந்து விதிக்கத் தொடங்கவேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள்.

(i) **உள்ளூர் மேல்வரிவிதிப்பின் பெருமவீதம்.**—பெருமம் எதையும் தற்போதைக்கு நிர்ணயிக்க வேண்டியதில்லையெனவும், இப்பிரச்சினையைக் கொஞ்சகாலத்துக்குப் பிறகு எடுத்துக் கொள்ளலாமெனவும் அரசாங்கத்தார் கருதுகிறார்கள். அரசினர் பெரும வீதத்தை நிச்சயிக்கிற வரையில், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் உள்ளூர் வரிமேல் வரியை, 1371-ஆம் பசலி முதல் நிலவருவாயில் ரூபாயில் 25 காசு வரையில் விதிக்கலாம்.

(1961 பிப்ரவரி 18-ஆம் தேதியுள்ள 444-ஆம் எண் கிராமமுன்னேற்றம் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

(89) ஊராட்சி ஒன்றிய மன்றங்களால் விதித்து வாங்கப்படுவதற்குரிய உள்ளூர் வரி மேல் வரியின் பெரும வீதத்தை இப்போதைக்கு நிர்ணயிக்க வேண்டாமென்பதும், ஆனால் உள்ளூர் வரி விதிப்பதற்கு ஊராட்சி ஒன்றிய மன்றங்களிடம் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களை இயன்றவரை முழு அளவுக்குப் பயன்படுத்தி, அம்முறையில் தங்கள் வருவாய்களைப் பெருக்கிக்கொள்ள அவைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்பதுமே அரசினருடைய நோக்கமாகும். 1961 பிப்ரவரி 18-ஆம் தேதியுள்ள 444-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணையில் குறிப்பிட்டுள்ள 25 காசு வரையறையாவது, மாநிலத்துக்கான சராசரியைத்தான் குறிப்பிடுகிறது. அரசினரால் நிர்ணயிக்கப்பட்ட பெரும வீதத்துக்குட்பட்டு, யுக்தப்படி உள்ளூர் வரி மேல் வரி விதிக்கும் அதிகாரத்தை, 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டமானது, ஊராட்சி ஒன்றியங்களுக்கு உரித்தாக்குகிறது. பெரும வீதம் எதையும் அரசினர் குறிப்பிடாவிட்டால் ஊராட்சி ஒன்றியங்கள் தாங்கள் அவசியமென அல்லது உசிதமெனக் கருதும் எவ்வீதத்தின்படியேனும் மேல்வரி விதிக்கலாம். ஆகையால் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் நிலவரியில் ரூபாய்க்கு 25 காசுக்கு அதிகமான வீதப்படி உள்ளூர் வரி விதிப்பதற்குத் தடை ஒன்றுமில்லை. ஆனால் அதிக வீதப்படி வரி விதிப்பதனால் மக்களுக்குப் பெரிதும் பண முட்டுப்பாடு நேரிடுமென மாவட்ட அதிகாரி கருதினால், வீதத்தைக் குறைக்கும்படி அவர் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு ஆலோசனை கூறலாம்.

(1961 மார்ச் 23-ஆம் தேதியுள்ள 868-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித்துறை அரசாணை.)

(90) 1. உள்ளூர் மேல் வரி விதிப்பு தவிர்க்கவொண்ணாதது.—முதல் தொகுதியைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் 1961-62 க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைக் கூராய்வு செய்கையில், 1961-62-ல் பல ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு 200 ரூபாய்க்குக் குறைவான தொகை முதல் 63,000 ரூபாய்க்கு மேற்பட்ட தொகை வரையில் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறதெனத் தெரிய

வந்தது. ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், அதிகப்படியான உள்ளூர் வரி விதிப்புச் செய்தாலன்றி, இந்தப் பெரிதான பற்ருக்குறைகளை அவைகள் ஈடுசெய்ய முடியாது. அன்றியும், இந்த ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குக் கூடுதலான பொறுப்புகள் இருக்கின்றன. உணவு உற்பத்தி, எல்லார்க்கும் தொடக்கக்கல்வி முதலியவற்றின்கீழ், மூன்ருவது திட்டத்திலே, அவைகள் சில இலக்குகளை எய்த வேண்டியிருக்கிறது. எனவே, கூடுதலான தலவரி விதிப்பினை அவைகள் மேற்கொள்ள வேண்டியதாகிறது.

2. தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 116-ஆவது பிரிவில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றும் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நிலம் சம்பந்தமாக அரசினருக்கு நில வருவாய் செலுத்துவதற்குட்பட்ட ஒவ்வொருவர் மீதும், 115-ஆவது பிரிவின்படி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நிலம் சம்பந்தமாக அரசினருக்கு நில வருவாய் செலுத்துவதற்குட்பட்ட ஒவ்வொருவர் மீதும், 115-ஆவது பிரிவின்படி ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தில் விதிக்கப்படுகிற உள்ளூர் வரிக்குக் கூடுதலாகத் தகுதியெனக் கருதப்படக்கூடிய வீதங்களின்படி தலவரி மேல்வரியை விதிக்கலாம். ஆனுல் உள்ளூர் வரி மேல் வரியின் வீதமான நிர்ணயிக்கப்படக்கூடிய பெருமத்துக்குட்பட்டதாயிருக்க வேண்டும்.

3. யுக்தப்படி உள்ளூர் வரி மேல்வரி விதிக்கப்படுவதாயிருந்து, முழுவதும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் விருப்பத்துக்கு விடப்பட்டிருந்தபோதிலும் இந்த விதிப்பு தவிர்க்க முடியாதென்பது 1961 சனவரி 25 ஆம் தேதியுள்ள 211-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித்துறை (கிராம முன்னேற்றம்) பல்வகை அரசாணையின் பிற்சேர்க்கையைச் சேர்ந்த 20-ஆவது, 27-ஆவது பாராக்களில் பிறப்பிக்கப்பட்ட உரைகளில், ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு நன்கு உணர்த்தப்பட்டிருக்கிறது.

(1961 மே 20-ஆம் தேதியுள்ள 65783 கி.மு. கணக்குகள் 61-1-ஆம் எண் குறிப்பாணை.)

(1961 சனவரி 5-ஆம்2 தேதியுள்ள 211-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித்துறை பல்வகை அரசாணையின் பிற்சேர்க்கையைச் சேர்ந்த 20-ஆவது, 27-ஆவது பத்திகளின் ஏடு குறிப்புகள்.)

20. ஊராட்சி ஒன்றியங்கள் வாய்ப்பு வளங்களை ஏற்படுத்திக் கொள்வது சாத்தியமாயிருக்கும்படி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 129-ஆவது பிரிவின்படி உள்ளூர் வரி மேல் வரி விதிப்பதற்கு, அச்சட்டத்தில் கண்ட 116-ஆவது பிரிவின்படி அவைகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தலவரி மேல்வரி வசூலானது குறிப்பிட்ட வட்டாரம்

முறையே, அ, ஆ, இ, ஈ என்று வகைப்படுத்தப்படுவதைப் பொறுத்து, 75, 100, 125, 150 சதவீதம் என்னும் நிர்ணயிக்கப்பட்ட சதவீதங்களாகக் கணக்கிடப் பட்ட அரசாங்க உதவித்தொகை என்னும் முறைமையில் அதனல் சரியீடு செய்யப்படும். ஊராட்சி ஒன்றிய குழுக்கள் உள்ளூர் மேல்வரி மூலமாக வாய்ப்பு வளங்களை ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால், மூன்ருவது திட்டக் காலத்தில் தொடக்கக்கல்வி சம்பந்தமான இலக்குகளை அவைகள் எய்த முடியா தென்பதை அவைகள் உணரவேண்டும்.

27. உள்ளூர் வரி மேல்வரி.—ஊராட்சி ஒன்றியக் குழு ஒவ்வொன்றும், 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 105-ஆவது பிரிவின்படி விதிக்கப்படும் உள்ளூர் வரியுடன் கூட, தக்கதெனக் கருதப்படக் கூடிய வீதப்படி உள்ளூர் வரி மேல்வரியொன்றை நிர்ணயிக்கப்படக்கூடிய பெருமத்துக்குட்பட்டு விதிக்கலாமென்று 116-ம் பிரிவில் சொல்லப்பட்டிருக் கிறது. அவ்வாறு விதிக்கப்படும் மேல்வரி முதற்கண் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் வரவு வைக்கப்படும். ஆனல், உள்ளூர் வரி மேல்வரியிலிருந்து கிடைக்கும் வரவுகளின் பாகமும் (நிகரான சரியீட்டு உதவித் தொகையும்) ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்கு மாற்றப்பட வேண்டும். தொடக்கக் கல்விக்கு பிடிக்கும் இரண்டாம் கூருன செலவில், ஊராட்சி ஒன்றியத்தின் பங்கினைக் கொடுப்பதற்காக இவ்வாறு மாற்றப்பட வேண்டும். 1965-க்குள் எல்லார்க்கும் கட்டாயத் தொடக்கக் கல்வி என்னும் இலக்குகளை ஊராட்சி ஒன்றியம் எய்த வேண்டுமானல் உள்ளூர் வரி மேல்வரி விதிப்பு தவிர்க்க முடியாதென்று மேலே 20-வது பாராவில் ஏற்கெனவே விளக்கப்பட்டிருக்கிறது.

ஒப்படைக்கப்பட்ட வருவாய்களையும் உதவித் தொகைகளையும் விடுவிப்பது.— ஊராட்சி ஒன்றியங்களின் வழிவகை நிலைமையானது, அவைகளின் வளர்ச்சி முதலிய நடவடிக்கைகளுக்குப் பிடிக்கும் செலவுக்குப் பணம் கொடுப்பதற்கு வசதிப்படுத்த வேண்டியது இன்றியமையாததென அரசினர் கருதுகிருர்கள். இதன் பொருட்டு, ஒப்படைக்கப்பட்ட வருவாய்களையும், அவைகளுக்குக் கொடுக்கப்படத்தக்க சட்டபூர்வமானவையும் அல்லாதவையுமான உதவித் தொகைகளை, வசதியான காலமுறை இடைவேளைகளில் விடுவிப்பது அவசிய மாகும்.

2. ஒப்படைக்கப்பட்ட வருவாய்கள், ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சேர வேண்டிய (சட்டபூர்வமானவையும் அல்லாதவையுமான) அரசு உதவித் தொகை கள் ஆகியவற்றின் முக்கிய ஆதாரங்கள் இன்னவையென்று அடியிற் காட்டப் பட்டிருக்கின்றன :—

I. ஒப்படைக்கப்பட்ட வருவாய்கள்.—

(1) உள்ளூர் வரி

(2) உள்ளூர் வரி மேல்வரி

II- அரசு உதவித் தொகைள் (சட்ட பூர்வமானவை)—

(3) நில வருவாய் ஒப்படை

(4) தல பாட்டைகள் உதவித் தொகை

(5) உள்ளூர் வரி மேல் வரியைச் சரியீடு செய்வதற்கான உதவித் தொகை.

(6) தலக் கல்வி உதவித் தொகை

II. அரசு உதவித் தொகைகள் (சட்ட பூர்வமல்லாதவை)—

(7) துணைக் கல்வி உதவித் தொகை

(8) பள்ளி உணவு உதவித் தொகை

(9) கிராமப் பணிகள் உதவித் தொகை

(10) தலப்பாசன உதவித் தொகை

(11) உழவு உதவித் தொகை

(12) சமூகக் கல்வி உதவித் தொகை

(13) பெண்கள்-குழந்தைகள் நல உதவித் தொகை.

3. ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படுவதற்குரிய நிதி உதவிக்கான நடைமுறையைப் பற்றிப் பின்வரும் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

4. நில வருவாயிலே ரூபாயில் 45 காசு என்னும் ஒருங்கிணைந்த தல வரியை 1371-ம் பசலியிலிருந்து அதாவது 1961 ஜூலை 1-ம் தேதியிலிருந்து வசூலிப்பதற்காக, 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 115-ஆவது பிரிவின் நிபந்தனைகளைச் செயற்படுத்தும்பொருட்டு, 1960 செப்டெம்பர் 7-ம் தேதியுள்ள 1499-ம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படத்தக்க உள்ளூர் வரித் தொகைகளை மாதத் தவணைகளில் சரிக்கட்ட வேண்டுமென 1960 அக்டோபர் 1-ம் தேதியுள்ள 1615-ம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையிடப்பட்டிருக்கிறது.

5. தல பாட்டைகள் உதவித் தொகை நில வருவாய் ஒப்படை ஆகியவை பொறுத்தவரை, முறையே அரையாண்டு மாதத் தவணைகளில் தொகைகளைக் கொடுப்பதற்கு அனுமதியளித்து, 1960 செப்டம்பர் 24-ம் தேதியுள்ள 1595-ம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையிலும், 1960 செப்டம்பர் 27-ம் தேதியுள்ள 2075-ம் எண் கல்வித் துறைப் பல்வகை அரசாணை

யிலும், 1961 மார்ச் 27 தேதியுள்ள 668-ம் எண் கல்வித் துறைப் பல்வகை அரசாணையிலும், 1961 சூன் 23-ம் தேதியுள்ள 1588-ம் எண் கல்வித் துறைப் பல்வகை அரசாணையிலும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

6. உள்ளூர்க் கல்வி உதவித் தொகை, துணைக்கல்வி உதவித் தொகை, பள்ளி உணவு உதவித் தொகை ஆகியவை பொருத்தவரையிலுங்கூட இவ் உதவித் தொகைகளைக் கொடுக்கும் முறையைப் பற்றி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

7. உள்ளூர் வரியை வசூலித்து, ஊராட்சி ஒன்றிய நிதிகளுக்கு அதைச் சரிக்கட்டுவதற்காக விதிக்கப்பட்ட கோட்பாடுகளைப் பின்பற்றி ஊராட்சி ஒன்றியங்களால் விதிக்கப்படுகிற உள்ளூர் வரி மேல்வரியை வசூலிப்பதற்கு முன்னதாக அவைகளுக்குத் தொகை கொடுக்க வேண்டுமென அரசினர் தீர்மானித்து, அவ்வண்ணமே கட்டளையிடுகிறார்கள். உள்ளூர் வரி மேல்வரி விதிக்கத் தீர்மானிக்கும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தீர்மானங்களை யொட்டியும், அத்தகைய விதிப்புக்காக மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும் விளம்பரத்தையொட்டியும், அவ்வாறு முன்னதாகப் பணம் கொடுக்கப்படும். உள்ளூர் வரி மேல்வரி கிஸ்தியுடன் கூடவும், உள்ளூர் வரி கிஸ்திபந்தியின் போதும் வசூலிக்கப்படத்தக்க வகையாகும். ஜமாபந்தி முடிந்து போனபிறகு பசலியின் இறுதியில், உள்ளூர் வரி மேல்வரியை முடிவாகச் சரிக்கட்டுவதற்காக, வருவாய்த் துறை அலுவலர்கள் ஆணைகள் பிறப்பிப்பார்கள்.

8. உள்ளூர் வரி மேல் வரியைச் சரியீடு செய்வதற்கான உதவித் தொகையைப் பொருத்தவரை, உள்ளூர் வரி மேல்வரியின் விஷயத்தில் போலவே ஊராட்சி ஒன்றியத்துக்கு முன்னதாகப் பணம் கொடுக்கலாமெனவும், ஆனால், கொடுக்க வேண்டிய தொகையை ஏப்ரல், சூலை, அக்டோபர், டிசம்பர் மாதங்களில் நான்கு காலாண்டுத் தவணைகளில் சரிக்கட்ட வேண்டுமென்றும் அரசினர் கட்டளையிடுகிறார்கள். சேரவேண்டிய தொகைகளை முடிவாகச் சரிக்கட்டுவதை ஒவ்வோர் ஆண்டிலும், அது சம்பந்தப்படுகிற பசலி ஆண்டு ஜமாபந்தியும் முடிந்த பிறகு, சூலை மாதத்தில் செய்ய வேண்டும்.

9. அபிவிருத்திக் காரியங்களுக்காக அல்லது பாசன ஆதாரங்களைப் பராமரித்து வருவதற்காக அரசினரால் கொடுக்கப்படத்தக்க மற்றெல்லா உதவித் தொகைகளும், குறிப்பிட்ட பணிக்காக ஊராட்சி ஒன்றியத்துக்குப் பிடித்த செலவின் அளவுக்கு வரையறுக்கப்படும். ஆகையால், குறிப்பிட்ட திட்டங்கள் சம்பந்தமாகக் கொடுக்கப்படத்தக்க உதவித் தொகைகள் எல்லாம் குறிப்பிட்டதோர் உதவித் தொகை, பிடித்த செலவில் சதவீத உதவித் தொகையாயிருந்

தாலுஞ்சரி, முழு உதவித் தொகையாயிருந்தாலுஞ்சரி, நிறைவேற்றுதலுக்குப் பின்னதான உதவித் தொகையாக விடுவிக்கப்பட வேண்டுமெனக் கட்டளை யிடுகிருர்கள்.

ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் எந்த வெவ்வேறு திட்டங்களுக்காக மாநில அரசிடமிருந்து உதவித் தொகைகள் சேர வேண்டுமோ அந்தத் திட்டங்களுக்குப் பிடித்த செலவு பற்றிய எடு குறிப் புகளைச் சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்ப வேண்டும். கோட்ட ஆட்சியாளர் மாநிலக் கணக்குகளின் பொருத்தமான தலைப்புகளுக்குப் பற்ருக எழுதுவதன் மூலமாக, அந்த உதவித் தொகைகளுக்கு ஒப்பளிப்பு வழங்க வேண்டும். கணக்கு வைக்கும் நடைமுறை பற்றிய விவரமான ஆணைகள் தனியாகப் பிறப்பிக்கப்படும்.

மார்ச் 20-ம் தேதி வரையில் பிடித்த செலவை அடிப்படையாகக் கொண்டு, மார்ச் மாதத்தில் அவ்வாறு செலவை ஈடு செய்யயும்படி கேட்க வேண்டும். செலவை ஈடு செய்யும் தொகையில் எஞ்சியதை ஏப்ரல் மாதத்தில் கேட்க வேண்டும்.

காலாண்டுத் தணிக்கையின்போது, உரிமையுடன் கேட்கப்பட்ட ஈடு செய் யப்பெற்ற உதவித் தொகைகளைப் பெறுவதற்கான தகுதியைச் சரிபார்க்க வேண்டும்.

(1961-ம் ஆண்டு ஆகஸ்டு 9-ம் தேதியுள்ள 2228-ம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை)

(91) முன்னதாகச் செலுத்தப்படும் உள்ளூர் வரி மேல்வரியையும், தலவரி மேல்வரியைச் சரியீடு செய்வதற்கான உதவித் தொகையையும் பற்ருக எழுதுவது.—1961 ஆகஸட் 9-ம் தேதியுள்ள 2228-ம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையின் 9-வது, 10-வது பத்திகளில் அரசினர் பின்வருமாறு கட்டளையிட்டிருக்கிருர்கள்; அதாவது உள்ளூர் வரி விஷயத்தில் செய்வதைப் போலவே, உள்ளூர் வரி மேல்வரியை ஊராட்சி ஒன்றி யத்துக்கு முன்னதாகக் கொடுக்கலாம்; உள்ளூர் வரி மேல்வரியை சரியீடு செய் வதற்காகக் கொடுக்க வேண்டிய உதவித் தொகையை, ஒவ்வோர் ஆண்டிலும் ஏப்ரல், ஜூலை, அக்டோபர், டிசம்பர் மாதங்களில் நான்கு காலாண்டுத் தவணை களில் சரிக்கட்ட வேண்டும். சேர வேண்டிய தொகைகளை முடிவாகச் சரிக்கட் டுதலை, ஒவ்வோர் ஆண்டிலும் ஜூலை மாதத்தில், அது சம்பந்தப்படுகிற பசலி ஆண்டும் ஜமாபந்தியும் முடிந்த பிறகு செய்ய வேண்டும்.

ஓர் ஒன்றியத்துக்குச் சேர வேண்டிய உள்ளூர் வரி மேல்வரியை முன்ன தாகக் கொடுப்பதற்காகப் பிடிக்கும் செலவை, VII செலவருவாய்—சாதாரண வருவாய்—உள்ளாட்சிக் கழகங்கள் சார்பில் வசூலிக்கப்படும் நில வரியையும் மற்ற வரிகளையும் அவைகளுக்குக் கொடுப்பதைக் கழிக்கவும்—உள்ளூர் வரி மேல்வரியினிமித்தம் கொடுக்கப்படும் தொகைகள்" என்னும் தலைப்புக்குப் பற்றாக எழுத வேண்டும். உள்ளூர் வரி மேல்வரியைச் சரியீடு செய்வதற்கான உதவித் தொகைகளை முன்னதாகக் கொடுப்பதற்காகப் பிடிக்கும் செலவானது, "57. பலவகை—(F) உதவிக் கொடைகள்—C ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ளூர் வரி மேல்வரியைச் சரியீடு செய்வதற்கான உதவித் தொகைகள்" என்னும் தலைப்புக்குப் பற்றாக எழுதப்படத்தக்கதாகும்.

(1961 ஆண்டு ஆகஸ்டு 17-ம் தேதி 149375/கணக்கு C ?61-2-ம் குறிப்பாணை)

(92) உள்ளூர் வரி மேல்வரி விதிப்புப் பற்றிய விளம்பரம்.—உள்ளூர் வரி மேல் வரி விதிப்புப் பற்றி விளம்பரம் வெளியிடுவது சம்பந்தமாக ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் பின்வரும் நடைமுறையை மேற்கொள்ள வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள்.

(i) உள்ளூர் மேல்வரி விதிப்பதற்கு ஊராட்சி ஒன்றிய மன்றம் தீர்மானித்த உடனே, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், தீர்மானத்தின்படி ஒன்றை மேல் கடிதத்துடன் சம்பந்தப்பட்ட தாசில்தாருக்கு அனுப்ப வேண்டும்.

(ii) அக் கடிதம் கிடைப்பதன்பேரில், தாசில்தாரரானவர், தண்டோராப் போட்டும், முதன்மையான ஓரிடத்திலே ஒரு தமிழ் அறிக்கையை ஒட்டியும், சம்பந்தப்பட்ட கிராமங்களிலும் அவைகளின் சிற்றூர்களிலும் விதிப்பு விதத்தை வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்து, அவ்வாறு வெளியிட்டதற்கு அடையாளமாக சில முதன்மையான குடியானவர்களின் கையெழுத்துக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளூர் தலவரி மேல்வரி விதிப்பைப் பற்றி எல்லோரும் தெரிந்துகொள்ளும்பொருட்டு, அதை மாவட்ட அரசிதழிலும் வெளியிடலாம்.

(1961-ம் ஆண்டு ஆகஸ்டு 18-ம் தேதியுள்ள 2280-ம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(93) உள்ளூர் வரியை மாதந்தோறும் சரிக்கட்டுதலைப் பற்றிய விவர அறிக்கை.—1961 ஜூலை 1-ம் தேதி முதல் (1371-ம் பசலி) உள்ளூர் வரியானது பிரஸ்தாப பசலிக்காக எதிர்பார்க்கப்பட்ட நில வருவாய் வசூலில் ரூபாய்க்கு 3¾ காசு வீதம் மாதந்தோறும் ஊராட்சி ஒன்றிய நிதிகளில் வரவு

வைக்கப்பட்டத்தக்கதாகும். அது போலவே, எதிர்பார்க்கப்பட்ட நில வருவாய் அடிப்படையின் பேரில் வசூலிக்கப்படத்தக்க தலவரி மேல்வரியில் 1-12 பாகத்தையும், ஊராட்சி ஒன்றியத்துக்கு வரவாக மாதந்தோறும் சரிக்கட்ட வேண்டும். மாதந்தோறும் செய்யப்பட்ட சரிக்கட்டல்களைப் பற்றிய விவர அறிக்கை ஒன்றை இதன் உள்ளடக்கமான படிவத்தில் உள்ளபடி சரிபார்த்து, கிராம முன்னேற்றம்—உள்ளாட்சிக் கணக்குகள் பிரிவுக்கு அனுப்ப வேண்டும்.

2. இந்த விவர அறிக்கையை, கீழ்நிலைக் கருவூலங்களிலிருந்து வரும் அறிக்கைகளையொட்டிக் கருவூலங்களில் தயாரித்து, அந்த மாதத்துக்கான கருவூலக் கணக்குகளோடு சரிக்கட்டி, கிராம முன்னேற்றம்—உள்ளாட்சிக் கணக்குகள் பிரிவுக்கு அனுப்ப வேண்டும்; சரிக்கட்டல்கள் எந்த மாதத்துக்குச் சம்பந்தப்படுகின்றனவோ அதற்கடுத்த மாதத்தின் 15 தேதியன்று அவ்வாறு அனுப்ப வேண்டும்.

(1961 செப்டம்பர் 8-ம் தேதி 156422/கி.மு. கணக்குகள் 61-1 எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

மாவட்டத்தின் பெயர்

மாதத்துக்கான உள்ளூர் வரி, உள்ளூர் வரி மேல் வரி, உள்ளூர் வரி மேல்வரியைச் சரியீடு செய்வதற்கான உதவித் தொகை ஆகியவற்றைச் சரிக்கட்டுவது பற்றிய மாத விவர அறிக்கை.

ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்.	1371-ஆம் பசலிக்குரிய எதிர் பார்க்கப்பட்ட நில வருவாய்.	இப்பசலியில் வசூலிக்கப்படத்தக்க எதிர்பார்க்கப்பட்ட தலவரி.	இம் மாதத்தில் சரிக்கட்டப்பட்ட தலவரி.	நடப்பு நிதியாண்டிலே இம்மாதம் வரை சரிக்கட்டப்பட்ட தலவரி.
(1)	(2)	(3)	(4)	(5)

இம்மாதத்தில் சரிக்கட்டப்பட்ட உள்ளூர் வரி மேல்வரி.	நடப்பு நிதியாண்டில் இம்மாதம் வரையில் சரிக்கட்டப்பட்ட உள்ளூர் வரி மேல் வரி.	இம் மாதத்தில் வரவு வைக்கப் பட்ட காலாண்டுக்கான உள்ளூர் வரி மேல் வரிச் சரியீட்டு உதவித் தொகை.	நடப்பு நிதியாண்டில் இம்மாதம் வரையில் வரவு வைக்கப்பட்ட காலாண்டுக்கான உள்ளூர் மேல் வரிச் சரியீட்டு உதவித் தொகை.	குறிப்புரை
(6)	(7)	(8)	(9)	(10)

மேற்படி சரிக்கட்டல்கள் மாதத்துக்கான கருவூலக் கணக்கில் வந்திருக்கின்றன என்று சான்றிடப்படுகிறது.

உள்ளூர் வரி, உள்ளூர் வரி மேல்வரி ஆகியவற்றை வசூலித்து அவற்றிற்குக் கணக்கு வைப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடைமுறையும், ஊராட்சி வருவாய்களை வசூலிப்பது சம்பந்தமாகக் கிராம அலுவலர்களின் கடமைகளைக் குறிப்பிடுதலும்.—1960 ஆகஸ்டு 9-ஆம் தேதியுள்ள 644-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தமாகக் கிராம அலுவலர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் இன்னவையென்று அரசினர் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1961 பிப்ரவரி 16-ஆம் தேதியுள்ள 411-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறை பல்வகை அரசாணையில் மேற்கொண்டு விளக்கங்கள் பிறப்பிக்கப் பட்டன. 1961 ஆகஸ்ட் 28-ஆம் தேதியுள்ள 2339-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில், பகுதி நேர அல்லது முழு நேர அடிப்படையின் பேரில் ஊராட்சி எழுத்தர் ஒருவரை அமர்த்திக் கொள்ள ஊராட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது; அவர்களுக்கு அதிக பட்சமாக இவ்வளவு ஊதியம் கொடுக்க வேண்டுமென்பது பற்றிய சில வரை முறைகளுக்குட்பட்டு அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது. ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றியத்துக்கு அவ்வப்போது சேர வேண்டியதாக ஏற் படுகிற எல்லா வரிகளையும் கட்டணங்களையும் வசூலிக்கும் வேலையானது கிராமப் பெரியதனக்காரரின் சாதாரண கடமைகளின் பாகமாகக் கருதப்பட வேண்டு மென்றும், கிராமக் கர்ணம் தமது சாதாரணக் கடமைகளின் பாகமாக, ஊராட்சிக்கும் ஊராட்சி ஒன்றியத்துக்கும் சேரவேண்டிய வரிகளையும் கட்டணங் களையும் வசூலிப்பதை வசதிப்படுத்தும்பொருட்டு, வரிவிதிப்புப் பதிவேடு

களையும் அவ்வப்போது நிர்ணயிக்கப்படக்கூடிய வேறு பதிவுகளையும் வைத்து வரவேண்டுமென்றும், 644-ஆம் எண் அரசாணையின் 9-ஆவது பத்தியில் அறிவிக்கப்பட்டது. பிறப்பிக்கப்படக்கூடிய பொதுவான அறிவுரைக்குட்பட்டு, சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்களுக்கு இடையே கடமைகளின் பங்கீட்டைத் தங்களுக்குத் தோன்றுவதுபோல் குறிப்பிட மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் கொடுக்கலாமென்று, 644-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணையின் 22-ஆவது பத்தியில் சொல்லப்பட்டிருக்கிறது. 1961 ஆகஸ்ட் 28-ஆம் தேதியுள்ள 2339-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணையின் துணைக்கொண்டு பார்க்கையில், எல்லா மாவட்டங்களிலும் இதன் பொருட்டு ஒரு சீரான நடைமுறையை மேற்கொள்வது அவசியமாகிறது.

2. ஊராட்சி வருவாய்களை வசூலிப்பது சம்பந்தமாகக் கிராம அலுவலர்களின் கடமைகளைக் குறிப்பிடுவது பற்றிய வரைவுக் குறிப்பாணை ஒன்றும், உள்ளூர் வரியையும் உள்ளூர் வரி மேல்வரியையும் வசூலித்து அவைகளுக்குக் கணக்கு வைப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடைமுறை பற்றிய வரைவுக் குறிப்பாணை ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த விளக்க உரைகளை முடிவானவைகளாக்கி, ஆணைகளாகப் பிறப்பிப்பதற்கு முன், ஒரு வசூல் பருவத்திலே அவைகள் களத்தில் செயல்படுவதைக் கவனித்து வர உத்தேசித்திருக்கிறது.

(1961 அக்டோபர் 23-ஆம் தேதியுள்ள 206144 கி.மு. கணக்குகள் C /61-1 ஆம் எண் குறிப்பாணை.)

இணைப்பு.

(94) ஊராட்சி வருவாய்களை வசூலிப்பது சம்பந்தமாக கிராம அலுவலர்களின் கடமைகளைக் குறிப்பிடுவது பற்றிய குறிப்பாணை.—1960 ஆகஸ்ட் 9-ஆம் தேதியுள்ள 644-ஆம் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தமாகக் கிராம அலுவலர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் இன்னவையென்று அரசினர் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1961 பிப்ரவரி 16-ஆம் தேதியுள்ள 411-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் மேற்கொண்டு விளக்கங்கள் பிறப்பிக்கப்பட்டன. 1961 ஆகஸ்ட் 28-ஆம் தேதியுள்ள 2339-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில், பகுதி நேர அல்லது முழு நேர அடிப்படையின்பேரில் ஊராட்சி எழுத்தர் ஒருவரை அமர்த்திக் கொள்ள ஊராட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அவர்களுக்கு அதிகபட்சமாக இவ்வளவு ஊதியம் கொடுக்க வேண்டுமென்பது பற்றிய சில வரையறைகளுக்குட்பட்டு அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது.

2. ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றியத்துக்கு அவ்வப்போது சேர வேண்டியதாக ஏற்படுகிற எல்லா வரிகளையும் கட்டணங்களையும் வசூலிக்கும் வேலையானது கிராமப் பெரியதனக்காரரின் சாதாரணக் கடமைகளின் பாதகமாக கருதப்பட வேண்டுமென்றும், கிராமக் கர்ணம் தமது சாதாரணக் கடமைகளின் பாகமாக, ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்துக்கும் சேர வேண்டிய வரிகளையும் கட்டணங்களையும் வசூலிப்பதை வசதிப்படுத்தும் பொருட்டு, வரி விதிப்புப் பதிவேடுகளையும் அவ்வப்போது நிர்ணயிக்கப்படக்கூடிய வேறு பதிவுகளையும் வைத்து வர வேண்டுமென்றும், 644-ஆம் எண்ணுள்ள அரசாணையின் 9-ஆவது பத்தியில் அறிவிக்கப்பட்டது. பிறப்பிக்கப்படக்கூடிய பொதுவான அறிவுரைக்குட்பட்டு சம்பந்தப்பட்ட கிராம அலுவலர்களுக்கிடையே கடமைகளின் பங்கீட்டைத் தங்களுக்கு யுக்தம்போல் குறிப்பிட மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் கொடுக்கலாமென்று 644-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணையின் 22-ஆவது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது. 1961 ஆகஸ்ட் 28-ஆம் தேதியுள்ள 2339-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணையின் துணைக் கொண்டு, மேற்சொன்னவாறு கடமைகளைப் பங்கிடு செய்வது சம்பந்தமாக விரிவான விளக்க உரைகளைப் பிறப்பிப்பது அவசியமும் உசிதமும் என்று இப்போது கருதப்படுகிறது.

3. ஊராட்சி மன்றங்கள் வைத்துவர வேண்டிய படிவங்கள், பதிவேடுகள் ஆகியவற்றின் எண்ணிக்கையை 100-லிருந்து 60-க்குக் குறைப்பதற்காக, 1960 செப்டம்பர் 12-ஆம் தேதியுள்ள 756-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

4. இப்போது, இந்தப் படிவங்களையும் பதிவேடுகளையும் மூன்றாக வகைப்படுத்துவது அவசியமாகும்; அவையாவன :—

(1) வரிகளையும் கட்டணங்களையும் விதித்து வசூலிப்பதற்குச் சம்பந்தப்பட்ட படிவங்களும் பதிவேடுகளும்; (அ) கர்ணம் வைத்துவர வேண்டியவை; (ஆ) ஊராட்சியின் நிர்வாக அதிகாரி என்னும் முறைமையில் தலைவர் சார்பாகக் கிராம முன்சீப் வைத்துவர வேண்டியவை;

(2) ஊராட்சியின் பொது நிருவாகம் சம்பந்தமான படிவங்களும் பதிவேடுகளும்; பகுதி நேர எழுத்தர் ஒருவரின் துணைக்கொண்டு தலைவர் வைத்துவர வேண்டியவை.

5. மேற்சொன்ன கோட்பாடுகளைப் பின்பற்றி, அடியிற்கண்ட **பதிவேடு**களையும் படிவங்களையும் கர்ணம் வைத்துவர வேண்டும் :—

I. வீட்டுவரி சம்பந்தமான படிவங்களும் பதிவேடுகளும்.

(1) வீட்டு வரி விதிப்புப் பட்டியல் (ஊ.ம. படிவம் எண் 15).

(2) வீட்டு வரி கேட்புப் பதிவேடு (ஊ.ம. படிவம் எண் 3).

(3) **வீட்டு வரி, புதிய மதிப்பீடு** அல்லது திருத்தம் பற்றிய தனி அறிக்கை (ஊ.ம. **படிவம் எண்** 1). .

(4) வீட்டு வரிப் **பட்டியல்,** பற்றுச் சீட்டு, அடிச் சீட்டு—கர்ணம் எழுதிக் கிராமப் பெரிய தனக்காரரிடம் கொடுக்க வேண்டியவை (ஊ.ம. படிவம் எண் 5, 6).

(5) நிலுவைக் கேட்புப் பதிவேடு (ஊ.ம. படிவம் எண் 4).

II. தொழில் வரிக்குத் தொடர்பானப் படிவங்களும் பதிவேடுகளும்.

(6) தொழில் வரிக் கேட்புப் பதிவேடு (ஊ.ம. படிவம் எண் 17).

(7) தொழில் வரி செலுத்துவதற்குட்பட்டவர்களின் பட்டியல் (ஊ. ம. படிவம் எண் 19).

(8) தொழில் வரி விவர அறிக்கை பற்றிய அறிவிப்பு (ஊ. ம. படிவம் எண் 20).

(9) தொழில் வரி விவர அறிக்கை பற்றிய அறிவிப்பு (ஊ.ம. படிவம் எண் 21).

(10) தொழில் வரிபற்றி சீட்டுப் பாட்டியலும் (ஊ.ம. படிவம் எண் 18).

III, ஊர்திகள் வரிக்குத் தொடர்பான படிவங்களும் பதிவேடுகளும்.

(11) வரிக்குட்பட்ட **ஊர்தி**களின் பதிவேடு (ஊ. ம. படிவம் எண் 101).

(12) ஊர்தி வரி பற்றிய அறிக்கை (ஊ.ம. படிவம் எண் 102).

(13) ஊர்தி**கள்** வரிக் **கேட்பு** உரிமம் அடிச் சீட்டு (ஊ.ம. படிவம் எண் 103).

ஆக்கிரமிப்புகள் தொடர்பான படிவங்களும் பதிவேடுகளும்.

(குத்தகைத் தொகைகளும் உரிமக் கட்டணங்களும்)

(14) ஆக்கிரமிப்புகள் பதிவேடு (ஊ.ம. படிவம் எண் 81).

(15) ஆக்கிரமிப்பு, கட்டணங்கள் முதலியவற்றிற்கான அறிக்கை (ஊ.ம. படிவம் எண் 23).

6. கிராம முன்சிப்பு, பின்வரும் பதிவேடுகளையும் படிவங்களையும் வைத்து வரவேண்டும் :—

1. அனுபோகதாரருக்கு அறிக்கை (ஊ. ம. படிவம் எண் 8).

2. வரி வசூலிப்பவரின் வசூல் பதிவேடு (ஊ.ம. படிவம் எண் 9).

3. கைப்பற்றாணை (ஊ. ம. படிவம் எண் 10).

4. ஆணைப் பதிவேடு (ஊ. ம. படிவம் எண் 11).

5. சரக்குகளைக் கைப்பற்றுவது பற்றிய ஆணை (ஊ.ம. படிவம் எண் 12).

6. கைப்பற்றிய உடைமைகள் பதிவேடு (ஊ.ம. படிவம் எண் 13).

7. பலவகைப்பட்ட வரவினம் (ஊ.ம. படிவம் எண் 35).

7. மற்றெல்லாப் படிவங்களும் பதிவேடுகளும், ஊராட்சித் தலைவரால் அல்லது அவருடைய மேற்பார்வைக்குட்பட்டு அமர்த்தப்படும் பகுதி நேர எழுத்தரால் வைத்து வரப்பட வேண்டும். இந்தக் கட்டத்தில் வற்புறுத்தப்பட வேண்டியது என்னவென்றால், வரிகளையும் கட்டணங்களையும் விதித்து வசூலிப்பதற்குச் சம்பந்தப்பட்ட அலுவல்கள் நிருவாக அதிகாரியைச் சேர்ந்தவையாகும் : கர்ணமும் கிராம முன்சீப்பும் ஊராட்சி நிருவாக அதிகாரியின் சார்பில் செயலாற்றுபவர்களேயாவார்கள். கர்ணமும் கிராம முன்சீப்பும் வைத்துவரும் பதிவேடுகள் எல்லாம், ஊராட்சித் தலைவரால் எப்போதேனும் கேட்டு வரவழைக்கப்படுவதற்குட்பட்டவையாகும். அச் சமயத்தில் பயன்படுத்தப்படாத பதிவேடுகள் எல்லாவற்றையும் ஊராட்சி அலுவலகத்தில் சேர்த்து வைக்க வேண்டும். வரி விதிப்புப் பதிவேடுகளை வரி செலுத்துபவர்கள் பார்க்கலாம். ஊராட்சி உறுப்பினர்கள் இப் பதிவுகளை அலுவலக நேரங்களில் தாராளமாகப் பார்க்கக் கூடியவர்களாயிருக்க வேண்டும். கர்ணம், கிராம முன்சீப் ஆகியோரின் பொறுப்பு வசத்திலிருக்கிற இந்தப் பதிவேடுகளும் பதிவுகளும், வருவாய்த் துறை அதிகாரிகளாலும் கோட்ட ஊராட்சி அலுவலராலும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளராலும் வட்டார வளர்ச்சி உதவி அலுவலராலும் கூட சரிபார்க்கப்படுவதற்கும் உட்பட்டவையாகும். கிஸ்தி கேட்பு நிலையங்களை நடத்தும்போது, ஊராட்சி வருவாய்களை வசூலிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைச் சரி பார்க்கும்படி, 1961 ஜூலை 13 ஆம் தேதி

யுள்ள 1944 ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் வட்டாட்சியர்களுக்கும் வருவாய் ஆய்வாளர்களுக்கும் கட்டளை யிடப்பட்டிருக்கிறது. இதன் தொடர்பாக அந்த அரசாணையைக் கவனித்துப் படிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8. கர்ணம் வரி மதிப்பிடுதல், கிராம முன்சீப் வரி வசூலித்துச் செலுத்துதல் ஆகியவை சம்பந்தமான நடைமுறை, இந்த அரசாணையின் II ஆம் பிற்சேர்க் கையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. கிராம அலுவலர்கள் இந்த நடைமுறை களைத் தெரிந்துகொள்ளும்படிச் செய்வதும், மதிப்பீட்டு வேலையும் வசூல் வேலை யும் இடையூறின்றி இசைவாக நடக்கும்படிப் பார்த்துக் கொள்வதும், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்ட ஆட்சியாளர், வட்டாட்சியர் வருவாய் ஆய்வாளர் ஆகியோருடைய பொறுப்பாகும். அவசியமானல், வட்டாட்சியர்கள் கிராம அலுவலர்களுக்கு நடைமுறைகளை விளக்கும்பொருட்டு விளக்கவுரை வகுப்பு கள் நடத்தலாம்.

9. உள்ளூர் வருவாய் வசூலை, கிராம மட்டத்தில் செலவுக்காகப் பயன் படுத்தாதிருக்கும்படிப் பார்த்துக் கொள்வது அவசியமாகும். ஆகையால், ஊராட்சிகளுக்குக் கொடுக்க வேண்டிய தொகைகளையெல்லாம் பெரிய தனக் காரரிடம் மட்டும் கொடுக்க வேண்டுமென்றும், அவர் அத் தொகைகளை ஊராட்சி ஒன்றிய ரொக்கக் கருவூலத்தில் செலுத்துவிட வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

10. மேற்பார்வை பணியாளர்கள், ஊராட்சி வருவாய்களைப் பரிசோதிப் பதும், அவற்றை உடனுக்குடன் ஒழுங்காக வசூலித்து ஊராட்சி ஒன்றிய ரொக்கக் கருவூலத்தில் செலுத்தும்படிச் செய்வதும் சாத்தியமாக்கும் பொருட்டு, வருவாய்த் துறைப் பணியாளர்கள், ஊராட்சியின் கேட்பு வசூல் நிலுவையை மீட்டாய்வு செய்ய வேண்டும். தலைவராவது அவருடைய கட்டளை யின்படி ஊராட்சி எழுத்தராவது 42 ஆம் எண் ஊ.ம. படிவத்தின் பிரகாரம் தயாரிக்கிற ஊராட்சிக் கேட்பு வசூல் நிலுவையானது, வருவாய் ஆய்வாள ருக்கும் வட்டாட்சியாளருக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும். வசூல்கள் ஊராட்சி ஒன்றிய ரொக்கக் கருவூலத்தில் செலுத்தப்படுகிறபடியால், அதில் உள்ளபடி செலுத்தப்படுகிற தொகைகளை கேட்புடன் வைத்து ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஆகையால், கேட்பு வசூல் நிலுவையின்படி ஒன்றை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்துக்கும் அனுப்பவேண்டும். வட்ட (தாலுகா) அலுவலகத்தில் இந்தக் கேட்பு வசூல் நிலுவைகளை ஊராட்சி வாரியாக எழுதலாம், ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றுக்கும் தனித் தனிப் பக்கங்களில் அவ்வாறு எழுதலாம். இதனல், வட்டாட்சியர் வசூலில் ஏற்படும்

மூன்னேற்றத்தை மாதந்தோறும் மீட்டாய்வு செய்வதும், ஒழுங்காக வசூலாகும் படிச் செய்வதும் சாத்தியமாயிருக்கும். ஆகையால், ஒவ்வொரு ஊராட்சியும், தனது கேட்பு, வசூல், நிலுவையின் படி ஒன்றை வருவாய் ஆய்வாளருக்கும் வட்டாட்சியருக்கும் ஊராட்சி ஆணையாளருக்கும் அனுப்ப வேண்டும்.

11. இந்தக் கேட்பு வசூல் நிலுவைகளை முதற்கண் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றுக்காகவும், அதற்குப் பிறகு தாலுகா ஒவ்வொன்றுக்காகவும் ஒருங்கிணைக்க வேண்டும்; இவற்றை கோட்ட அலுவலர் மூன்று மாதத்துக்கொரு முறையும், மாவட்ட வருவாய் அலுவலர் ஆறு மாதத்துக்கொரு முறையும் மீட்டாய்வு செய்ய வேண்டும்.

பிற்சேர்க்கை I

1. ஊ.ம. படிவம் எண் 1—வீட்டு வரிக்கான தனி அறிக்கை.
2. ஊ.ம. படிவம் எண் 2—மேல்முறையீடுகள் பதிவேடு.
3. ஊ.ம. படிவம் எண் 3—வீட்டுவரிக் கேட்புப் பதிவேடு.
4. ஊ.ம. படிவம் எண் 4—நிலுவைக்கேட்புப் பதிவேடு.
5. ஊ.ம. படிவம் எண் 5—வீட்டு வரிப் பட்டியல் சுவடிக் குறிப்பு.
6. ஊ.ம. படிவம் எண் 6—வீட்டு வரிப் பட்டியல்.
7. ஊ.ம. படிவம் எண் 7—கொடுக்கப்பட்ட பட்டியல்கள் பற்றிய பதிவேடு.
8. ஊ.ம. படிவம் எண் 8—அனுபோகதாருக்கு அறிக்கை.
9. ஊ.ம. படிவம் எண் 9—வரி வசூலிப்பவரின் வசூல் பதிவேடு.
10. ஊ.ம. படிவம் எண் 10—கைப்பற்றுணை.
11. ஊ.ம. படிவம் எண் 11—ஆணைகள் பதிவேடு.
12. ஊ.ம. படிவம் எண் 12—சரக்குகளைக் கைப்பற்றுதல் பற்றிய அறிக்கை.
13. ஊ.ம. படிவம் எண் 13—கைப்பற்றப்பட்ட சொத்து பற்றிய பதிவேடு.
14. ஊ.ம. படிவம் எண் 14—குடியின்மை வரித் தள்ளுபடிப் பதிவேடு.
15. ஊ.ம. படிவம் எண் 15—வீட்டு வரி விதிப்பு பட்டியல்.
16. ஊ.ம. படிவம் எண் 16—வீட்டு வரி வஜா மனுப் பதிவேடு.
17. ஊ.ம. படிவம் எண் 17—தொழில் வரி கேட்புப் பதிவேடு.
18. ஊ.ம. படிவம் எண் 18—தொழில் வரிப் பற்றுச் சீட்டும் பட்டியலும்.
19. ஊ.ம. படிவம் எண் 19—தொழில் வரிக்குட்பட்டவர்களின் பட்டியல்.

506—18—28a

20. ஊ.ம. படிவம் எண் 20—தொழில் வரி விவர அறிக்கை பற்றிய அறிவிப்பு.

21. ஊ.ம. படிவம் எண் 21—தொழில் வரி விவர அறிக்கை பற்றிய அறிவிப்பு.

22. ஊ.ம. படிவம் எண் 23—ஆக்கிரமிப்புக் கட்டணங்கள் முதலியவைகளுக்கான அறிக்கை.

23. ஊ.ம. படிவம் எண் 24—தற்காலிக நிறுவனங்களுக்கு உரிமத்துக்கான விண்ணப்பம்.

25. ஊ.ம. படிவம் எண் 26—ஆக்கிரமிப்புக் கட்டணங்கள் பதிவேடு.

26. ஊ.ம. படிவம் எண் 35—பலவகைப் பற்றுச் சீட்டுப் படிவம்.

27. ஊ.ம. படிவம் எண் 36—பலவகைக் கேட்புப் பதிவேடு.

28. ஊ.ம. படிவம் எண் 37—பலவகைப் பட்டியல்.

29. ஊ.ம. படிவம் எண் 38—துறை மூலமாக நிருவகிக்கப்படும் கட்டணங்கள் பற்றிய கணக்கு.

30. ஊ.ம. படிவம் எண் 39—பழம் தரும் மரங்கள் பதிவேடு.

31. ஊ.ம. படிவம் எண் 41—முதலீடுகள் பதிவேடு.

32. ஊ.ம. படிவம் எண் 42—கே.வ.நி. விவரப் பட்டியல்.

33. ஊ.ம. படிவம் எண் 43—பட்டியல்கள், உரிமங்கள், சீட்டுச் சுவடிகள் இருப்புக்கணக்கு.

34. ஊ.ம. படிவம் எண் 45—தள்ளுபடி செய்யப்பட்டவைகள், தற்காலிக வஜாக்கள் பற்றிய பதிவேடு.

35. ஊ.ம. படிவம் எண் 47—பெரிய பணிகளுக்கான ஒப்பந்த உடன்படிக்கை.

36. ஊ.ம. படிவம் எண் 48—சிறிய பணிகளுக்கான ஒப்பந்த உடன்படிக்கை.

37. ஊ.ம. படிவம் எண் 50—சம்பளச் செல்லுப் பட்டிப் பதிவேடு.

38. ஊ.ம. படிவம் எண் 51—பயணப்படிப் பட்டியல்.

39. ஊ.ம. படிவம் எண் 54—வசூலிக்கப்படத்தக்க முன்பணங்கள் பதிவேடு.

40. ஊ.ம. படிவம் எண் 55—பட்டியல்கள் வைப்புத் தொகைகள் பற்றிய பதிவேடு.

41. ஊ.ம. படிவம் எண் 57—ஏற்றுக் கொள்ளப் பெற்ற பட்டியல்களின் பதிவேடு.

42. ஊ.ம. படிவம் எண் 58—அஞ்சல் வில்லைக் கணக்கு.

43. ஊ.ம. படிவம் எண் 61—ரொக்கக் கணக்கு.

44. ஊ.ம. படிவம் எண் 62—குறிப்பேடு.

45. ஊ.ம. படிவம் எண் 67—என்.எம்.ஆர். (N.M.R.)

46. ஊ.ம. படிவம் எண் 68—மதிப்பீட்டுப் படிவம்.

47. ஊ.ம. படிவம் எண் 69—மதிப்பீடுகளின் சுருக்கம்.

48. ஊ.ம. படிவம் எண் 70—எம்.சுவடி.

49. ஊ.ம. படிவம் எண் 71—ஒப்பந்தச் சான்று.

50 ஊ.ம. படிவம் எண் 72—கருவிகள்—தளவாடங்கள் பதிவேடு.

51. ஊ.ம. படிவம் எண் 77—பணிப் பதிவேடு.

52. ஊ.ம. படிவம் எண் 78—சாலைகள் பற்றிய பதிவேடு.

53. ஊ.ம. படிவம் எண் 79—அசையாப் பொருள் பதிவேடு.

54. ஊ.ம. படிவம் எண் 80—வழக்குப் பதிவேடு.

55. ஊ.ம. படிவம் எண் 81—ஆக்கிரமிப்புப் பதிவேடு.

56. ஊ.ம. படிவம் எண் 82—வழக்குக் தொடர்வுப் பதிவேடு.

57. ஊ.ம. படிவம் எண் 83—ஊராட்சிகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட புறம்போக்குகள் பற்றிய பதிவேடு.

58. ஊ.ம. படிவம் எண் 101—வரிக்குட்பட்ட ஊர்திகளின் பட்டியல்.

59. ஊ.ம. படிவம் எண் 102—ஊர்திவரி அறிக்கை.

60. ஊ.ம. படிவம் எண் 103—ஊர்தி வரிக் கேட்பு உரிமம், அடிச்சீட்டு.

பிற்சேர்க்கை

ஊராட்சி நடைமுறை நூலின் நிபந்தனைகள், அடியிற் கண்ட விளக்க உரைகளை அவைகள் திட்டவட்டமாக மீறினாலன்றி, கிராம அலுவலர்கள் ஊராட்சி வரிகளை விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் பொருந்தும். இந்த விளக்க உரைகள், ஊராட்சி நிருவாக அதிகாரியின் கடமைகளைக் கிராம அலுவலர்களுக்குப் பகிர்ந்தளிப்பதை மட்டுமே செய்கின்றனர். ஆகையால், நடைமுறை நூலின் நிபந்தனைகள், நிருவாக அதிகாரியைக் கட்டுப்படுத்தும் அளவுக்குக் கிராம அலுவலர்களையும் கட்டுப்படுத்துகின்றன.

2. கர்ணம் வைத்துவர வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவங்களும் பதிவேடுகளும், நான்கு வகைப்படுகின்றன :—

(i) வீட்டுவரி விதிப்புப் பற்றிய படிவங்களும் பதிவேடுகளும். இவை 1, 3, 4, 5, 6, 14, 15-ன் எண்ணுள்ள ஊ.ம., படிவங்கள் ஆகும்.

(ii) தொழில் வரி விதிப்பு பற்றிய படிவங்களும் பதிவேடுகளும் இவை 17, 18, 19, 20, 21 எண்ணுள்ள ஊ.ம., படிவங்கள் ஆகும்.

(iii) ஊர்தி வரி பற்றிய படிவங்களும் பதிவேடுகளும். இவை 101, 102, 103 எண்ணுள்ள ஊ.ம. படிவங்கள் ஆகும்.

(iv) பலவகை வருவாய்கள் பற்றிய மற்றப் படிவங்களும் பதிவேடுகளும். இவை 23, 24, 25, 39, 81, 83 எண்ணுள்ள ஊ.ம. படிவங்கள் ஆகும்.

16 எண்ணுள்ள ஊ.ம. படிவமானது, முதல் மூன்று வகைகளுக்குப் பொதுவானது.

வரி விதிப்புப் பட்டியல் தயாரித்தல்.

3. **வீட்டு வரி விதிப்புக்கான நடைமுறை**—15 எண்ணுள்ள ஊ.ம. படிவமானது, நடைமுறை நூலில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிற வீட்டு வரி விதிப்புப் பட்டியலாகும். இதனைக் கர்ணம் தயாரித்தனுப்ப வேண்டும். கர்ணம் 1 முதல் 12 வரையுள்ள பத்திகளை நிரப்பி, வீட்டு வரி, தண்ணீர் வரிக்கான நடப்பு விதிகளைத் தலைவரிடமிருந்து தெரிந்துகொண்டு, 13, 14 பத்திகளை நிரப்ப வேண்டும். நூலக வரி தீர்மானமான செலவாகும். 16 ஆம் பத்தியில் மொத்தம் போட்ட பிறகு, ஆணைகள் பிறப்பிப்பதற்காகப் பதிவேட்டைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். 18 ஆம் பத்தியில், தலைவர், விதிப்பு சரியானதென்று ஒப்புக் கொண்டதற்கடையாளமாகக் கையெழுத்திட வேண்டும். அல்லது அதை எவ்வாறு திருத்தியமைக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட வேண்டும். பொதுவாக மீட்டாய்வு செய்யும்போது அல்லது முதல் தடவையாக வீட்டு வரி விதிக்கும்போது இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். விதிப்புச் சுவடிகள் தயாரிக்கப்பட்டானவுடனே, தலைவர், அதைப் பற்றியும் எந்த இடம் அல்லது இடங்களில் சுவடிகளைப் பார்வையிடலாமென்பது பற்றியும், கிராமத்தில் தண்டோரா போட்டுப் பொது அறிவிப்புச் செய்ய வேண்டும்.

வீட்டு வரி பற்றிய தனி அறிக்கை—புதிய விதிப்பு அல்லது திருத்தம்.—ஊராட்சித் தலைவரின் கட்டளைக்கிணங்க, கர்ணம் இந்த அறிக்கைகளைத்

தயாரித்து, அவற்றில் தலைவரின் கையெழுத்து வாங்கி, பிறகு அவைகளை அனுப்ப வேண்டும். மீட்டாய்வு மனுவைத் தலைவர் தீர்வு செய்ய வேண்டும். மீட்டாய்வு மனுவின் முடிவைத் தலைவர் கர்ணத்துக்குத் தெரிவிக்க வேண்டும்.

வீட்டு வரிக் கேட்புப் பதிவேடு.—கர்ணம் இந்தப் பதிவேட்டில் வீட்டு விதிப்புப் பட்டியலிலிருந்தும், மீட்டாய்வு மனுக்களின் பேரில் பிறப்பிக்கப் பட்ட ஆணைகளின்படி பின்னர் திருத்தப்பட்ட விதிப்புகளிலிருந்தும் பதிவு செய்ய வேண்டும். இப் பதிவேட்டை ஐந்தாண்டுக் காலம் வைத்துவர வேண்டும்.

வீட்டு வரிக் கேட்புப் பதிவேட்டிலிருந்து, நிலுவைக் கேட்புப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

வீட்டு வரிப் பட்டியல், பற்றுச் சீட்டு, அடிச் சீட்டு.—5, 6 எண்கள் உள்ள ஊ. ம. படிவங்கள் ஒரே படிவமாக ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றன. கர்ணம், பட்டியல்—பற்றுச் சீட்டு—அடிச் சீட்டுப் படிவங்களை நிரப்பி, அவற்றில் சுருக்குக் கையொப்பமிட்டு அவற்றைத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். இப் படிவத்துக்கு வேண்டிய பொருத்தமான விரவங்கள், வீட்டு வரிக் கேட்புப் பதிவேட்டிலிருந்து எடுத்துப் பதிவு செய்யப்படுகின்றன. பட்டியலிலும் பற்றுச் சீட்டிலும் அடிச் சீட்டிலும் தலைவர் கையெழுத்திட்டு அல்லது கையொப்ப அச்சிட்டு, பொறியிலக்கமிடப்பட்ட படிவச் சுவடியைச் சேர்ப்பித்து வசூலிப்பதற்காகக் கிராமப் பெரியதனக்காரரிடம் கொடுக்க வேண்டும். கிராமப் பெரியதனக்காரர் வீட்டு வரிப் பட்டியலைச் சேர்ப்பித்து, வரி விதிக்கப் பெற்றவரின் ஏற்றுக் கோடல் கையெழுத்தை, பற்றுச் சீட்டின் பின்புறத்தில் வாங்க வேண்டும். சேர்ப்பதற்கு முன், அவர், சேர்பித்த விதத்தையும் தேதியையும் எழுதிய பிறகு, பட்டியலில் கையெழுத்திட வேண்டும். வரி விதிக்கப் பெற்றவர் வரித் தொகையைக் கொடுத்தால் பெரியதனக்காரர் பற்றுச் சீட்டில் கையெழுத்திட்டு, அதை, வரி விதிக்கப் பெற்றவரிடம் கொடுத்துவிட வேண்டும். பெரியதனக்காரர் பற்றுச் சீட்டில் கையெழுத்து செய்தால்தான், அப் பற்றுச் சீட்டு செல்லுபடியாகும். அடிச் சீட்டிலும் பெரியதனக்காரர் கையெழுத்திட வேண்டும். பற்றுச் சீட்டுச் சுவடி தீர்ந்து போய்விட்டால், படிவங்கள் அடங்கிய சுவடியைத் தலைவருக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். கிராமப் பெரியதனக்காரர் வசூலையும், வரி விதிக்கப் பெற்றவர் பற்றிய முழு விவரங்களையும் 9 ஆம் எண்ணுள்ள ஊ.ம. படிவத்தில் எழுத வேண்டும். அவர் வசூலை அவ்வப்போது, ஊராட்சி ஒன்றிய ரொக்கக் கருவூலத்தில் ஊராட்சிக்கு வரவாக, 1 ஆம் எண்ணுள்ள

ஊ.ம. படிவத்தைப் பயன்படுத்திச் செலுத்த வேண்டும். பற்றுச் சீட்டாகிய செலுத்துச் சீட்டு கிராமப் பெரியதனக்காரருக்குத் திருப்பி அனுப்பிவிடப் படும். கிராமப் பெரியதனக்காரர் பணம் செலுத்தும் தேதியன்று வசூல் பதிவேட்டை முடித்துப் பணம் செலுத்திய செய்தியை எழுத்தால் எழுத வேண்டும். பற்றுச் சீட்டாகிய செலுத்துச் சீட்டையும் வசூல் பதிவேட்டையும் தலைவருக்கு அனுப்ப வேண்டும்; அவர், சரி பார்த்ததற்கடையாளமாகப் பதிவேட்டிலும் பற்றுச் சீட்டாகிய செலுத்துச் சீட்டிலும் கையெழுத்திட வேண்டும். பிறகு அவற்றைக் கர்ணத்துக்கு அனுப்ப வேண்டும்; அவர் வசூல்களைக் கேட்புப் பதிவேட்டிலும் நிலுவைக் கேட்புப் பதிவேட்டிலும் குறித்துக் கொள்வார் குறித்துக் கொண்ட பிறகு வசூல் பதிவேட்டையும் பற்றுச் சீட்டாகிய செலுத்துச் சீட்டுகளையும் ஒரு வாரத்துக்குள் கிராமப் பெரியதனக்காரருக்குத் திருப்பி அனுப்பிவிடவேண்டும். அவர், அதற்குப் பிறகு பற்றுச் சீட்டாகிய செலுத்துச் சீட்டினை 1-6 எண்ணுள்ள ஊ.ம. படிவத்தின் பிரகாரம் உள்ள அடிச் சீட்டுடன் ஒட்ட வேண்டும்.

தொழில் வரி மதிப்பீடு.—தொழில் வரி விதிப்புக்குட்பட்டவர்களின் பட்டியல் ஒன்றைக் கர்ணம் 19 ஆம் எண்ணுள்ள ஊ.ம. படிவத்தின் பிரகாரம் தயாரிக்க வேண்டும். இப் பட்டியலைத் தயாரிப்பதற்கு வேண்டிய தகவலைச் சேகரிக்கும் பொருட்டு, 20, 21 ஆம் எண்ணுள்ள ஊ.ம. படிவங்களைப் பயன் படுத்த வேண்டும். அவசியமானபோதெல்லாம், கர்ணம் இப் படிவங்களை நிரப்பிக் கொடுப்பதற்குமுன் தலைவருடைய கையெழுத்தை வாங்க வேண்டும். பதில்கள் கிடைத்தவுடன், அவற்றைக் கர்ணத்துக்கு அனுப்ப வேண்டும்; அவர் தொழில் வரி விதிப்புப் பட்டியலை 19 ஆம் படிவத்தின் பிரகாரம் தயாரித்து, வரி விதிப்புகளின் பேரில் தலைவரின் ஆணைகளைப் பெற வேண்டும். இந்த வரி விதிப்பு, ஆணைகளை அடிப்படையாகக் கொண்டு, 17 ஆம் எண்ணுள்ள ஊ.ம. படிவத்தில் தொழில் வரிக் கேட்புப் பதிவேட்டில் பதிவுகள் செய்து, 8 ஆவது கலத்தில் தலைவருடைய சுருக்கொப்பத்தைப் பெற வேண்டும். 17 ஆம் எண்ணுள்ள ஊ.ம. படிவத்தின் பிரகாரம் உள்ள கேட்புப் பதிவேட்டிலுள்ள பதிவுகளிலிருந்து கர்ணம் 18 ஆம் எண்ணுள்ள ஊ.ம. படிவத்தை நிரப்பி, கையெழுத்துக்காக தலைவருக்கு அனுப்ப வேண்டும். தலைவர், பட்டியல்களி லும் பற்றுச் சீட்டுகளிலும் கையெழுத்திட்ட பிறகு, வசூலுக்காகப் பட்டியல் சுவடியைக் கிராமப் பெரியதனக்காரருக்கு அனுப்ப வேண்டும். பெரியதனக் காரர் வரி விதிக்கப் பெற்றவர்களிடம் கேட்புப் பட்டியலைச் சேர்ப்பித்து, பற்றுச் சீட்டுகளின் பின்புறத்தில் அவர்களுடைய ஏற்றுக் கோடல்களைப் பெற வேண்டும். தொகை கொடுக்கப்படும்போது, பெரியதனக்காரர் பற்றுச் சீட்டினை நிரப்பி, அதைக் கொடுத்துவிட்டு, அடிச் சீட்டை மாத்திரம்

வைத்துக் கொள்ள வேண்டும். அடிச் சீட்டுகளிலிருந்து அவர், 9 ஆம் எண்ணுள்ள ஊ.ம. படிவமாகிய வசூல் சுவடியில் பதிவுகள் செய்து, வசூலை ஊராட்சி ஒன்றிய ரொக்கக் கருவூலத்தில் செலுத்தும் விஷயத்தில், வீட்டு வரியைப் போல அதே நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். வரிவசூல் ஒவ்வொன்றுக்காகவும், வேறு செலுத்துச் சீட்டினைப் பயன்படுத்த வேண்டும். பணம் செலுத்திய பிறகு, அவர், வசூல் பதிவேட்டையும் பற்றுச் சீட்டாகிய செலுத்துச் சீட்டையும் தலைவருக்கும், அவர் மூலமாக கர்ணத்துக்கும் அனுப்ப வேண்டும். தலைவர் வசூல் சுவடியிலும் பற்றுச் சீட்டாகிய செலுத்துச் சீட்டின் பின்புறத்திலும் கையெழுத்திட்டு, அதைக் கர்ணத்துக்கு அனுப்ப வேண்டும்; 17 ஆம் எண்ணுள்ள ஊ.ம. படிவமாகிய கேட்புப் பதிவேட்டில் கர்ணம் வசூலைப் பதிவது சாத்தியமாயிருக்கும்பொருட்டு, அதை அவ்வாறு அவருக்கு அனுப்ப வேண்டும்; பிறகு வசூல் சுவடியையும் பற்றுச் சீட்டாகிய அவருக்கு அனுப்ப வேண்டும் ; பிறகு வசூல் சுவடியையும் பற்றுச் சீட்டாகிய வேண்டும். பற்றுச் சீட்டாகிய செலுத்துச் சீட்டினை 1 ஆம் எண்ணுள்ள ஊ.ம. படிவத்தின் பிரகாரம் உள்ள அடிச் சீட்டுடன் ஒட்டி வைக்க வேண்டும்.

ஊர்திவரி விதிப்பு.—ஊர்தி வரிக்குட்பட்டவர்களின் பட்டியலை 101 ஆம் எண்ணுள்ள ஊ.ம. படிவத்தின் பிரகாரம் கர்ணம் தயாரிக்க வேண்டும். விவரங்களைச் சேகரிக்கும்பொருட்டு, கர்ணம், 102 ஆம் எண்ணுள்ள படிவத்தில் தலைவருடைய கையெழுத்து வாங்கி, ஊர்தி ஒன்றை வைத்திருப்பதாகத் தெரிந்துள்ள ஒருவருக்கு அதை அனுப்ப வேண்டும். முறைப்படி நிரப்பப் பட்டு அது திரும்பியவுடன் அதைக் கர்ணத்துக்கு அனுப்ப வேண்டும்; அவர் வரி விதிப்புப் பட்டியலைத் தயாரிப்பது சாத்தியமாயிருக்கும் பொருட்டு அதை பதிவேடாகவும் பயன்படுகிறது. (ஊ.ம. படிவம் எண் 10). கர்ணம் இப் பதிவேடாகவும் பயன்படுகிறது (ஊ.ம. படிவம் எண் 101). கர்ணம் இப் அவருக்கு அவ்வாறு அனுப்ப வேண்டும். இந்த விஷயத்தில் அதுவே கேட்புப் மத்துக்கான படிவங்களையும் அடிச் சீட்டையும் நிரப்பி, இப் படிவங்களில் தலைவர் கையெழுத்து வாங்கி, வசூலுக்காக அவற்றைப் பெரியதனக்காரரிடம் ஒப்புவிக்கச் செய்ய வேண்டும்.

பெரியதனக்காரர் கேட்பு அறிக்கையை வரி விதிக்கப் பெற்றவர்களிடம் சேர்ப்பித்து, பற்றுச்சீட்டுகளின் பின்புறத்தில் அவர்களுடைய ஏற்றுக்கோடல் களைப் பெறவேண்டும். வரித் தொகை கொடுக்கப்பட்டால், பெரியதனக்காரர் பற்றுச் சீட்டை நிரப்பி அதைக் கொடுத்துவிட்டு, அடிச் சீட்டைமட்டும் வைத்துக் கொள்ளவேண்டும். அடிச் சீட்டுகளிலிருந்து, அவர், 9-ஆம் எண் ஊ.ம. படிவத்தில் (வசூல் சுவடியில்) பதிவுகள் செய்து, ஊராட்சி ஒன்றிய ரொக்கக் கருவூலத்தில் வசூலைச் செலுத்துவதற்காக, வீட்டுவரி வசூல் விஷயத்தில்

மேற்கொண்ட நடைமுறையினையே பின்பற்ற வேண்டும். ஊர்தி வரியாக வசூலிக்கப்பட்ட தொகையைச் செலுத்துவதற்காக, ஒரு தனிச் செலுத்துச் சிட்டினைப் பயன்படுத்த வேண்டும். செலுத்திய பிறகு, அவர், வசூல் பதிவேட்டையும், பற்றுச் சீட்டாகிய செலுத்து சீட்டையும் தலைவருக்கும் அவர் மூலமாகக் கர்ணத்துக்கும் அனுப்ப வேண்டும். தலைவர் வசூல் சுவடியிலும் பற்றுச் சீட்டாகிய செலுத்துச் சீட்டின் பின்புறத்திலும் கையெழுத்திட்டு 101 ஆம் எண் ஊ.ம. படிவமாகிய கேட்புப் பதிவேட்டில் வசூலைப் பதிவு செய்யும் பொருட்டு அதைக் கர்ணத்துக்கு அனுப்பி பிறகு வசூல் சுவடியையும் பற்றுச் சீட்டாகிய செலுத்து சீட்டையும் பெரியதனக்காரருக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். பற்றுச் சீட்டாகிய செலுத்து சீட்டினை, 1 ஆம் எண் ஊ. ம. படிவத்தி உள்ள அடிச் சீட்டுடன் ஒட்டி வைக்க வேண்டும்.

குத்தகைத் தொகைகளும் உரிமக் கட்டணங்களும்.—81 ஆம் எண் ஊ. ம. படிவத்தை (ஆக்கிரமிப்புகள் பதிவேட்டை) வைத்துவருவதற்கு மிகப் பொருத்தமானவர் கர்ணந்தான். ஏதேனும் ஆக்கிரமிப்பை அவர் கண்டால், அவர் 23 ஆம் எண் படிவத்தை நிரப்பி, அதில் ஊராட்சித் தலைவரின் கையெழுத்துவாங்கி அதை அனுப்புவிக்க வேண்டும். அறிக்கை சேர்ப்பிக்கப்படும் போது அது சேர்ப்பிக்கப் பெறுகிறவரின் ஏற்றுக்கோடலை அசல் படிவத்தின் பின்புறத்தில் வாங்க வேண்டும்.

பெரியதனக்காரர் உரிமக் கட்டணங்களை அல்லது குத்தகைத் தொகையை வசூலிக்க வேண்டும்; தலைவர் உரிமம் வழங்க வேண்டும்.

பெரியதனக்காரர் வைத்துவர வேண்டிய படிவங்களும் பதிவேடுகளும்.— பெரியதனக்காரர், கர்ணத்திடமிருந்து, ஊராட்சித் தலைவர் மூலமாக, 5, 6-ஆம் எண் ஊ. ம. படிவத்திலும், 18 ஆம் எண் ஊ. ம. படிவத்திலும், 103 ஆம் எண் ஊ. ம. படிவத்திலும் உள்ள பட்டியல் பற்றுச் சீட்டுச் சுவடிகளைப் பெறுகிறார். இச் சமயங்களில் எல்லாம், வசூலுக்குப் பிறகு, பற்றுச் சீட்டுச் சுவடி தீர்ந்துபோனதும் அடிச் சீட்டு முறித்துண்டுகளுடன் கூடிய அச் சுவடியைத் திருப்பி அனுப்பிவிட வேண்டும்.

கர்ணம் வீட்டுச் சொந்தக்காரரிடமிருந்து வரி வசூலிக்க முடியாதவராயிருந்தால், அவர், அனுபோகதாரருக்கான அறிக்கையில் ஊராட்சித் தலைவரின் கையெழுத்து வாங்கி , அதை அனுபோகதாரருக்கு அனுப்ப வேண்டும். அறிக்கை அனுப்பப்படும்போது, பெரியதனக்காரர் அனுபோகதாரரின் ஏற்றுக் கோடலை, அடிச் சீட்டின் பின்புறத்தில் பெற வேண்டும்.

9-ஆம் எண் ஊ.ம. படிவமானது பெரியதனக்காரர் வைத்துவர வேண்டிய மிக முக்கியமான ஆவணமாகும். வசூல் பதிவேட்டினை, ஒவ்வொரு மாதமும் 25-ஆம் தேதியன்று, தலைவருக்கும், பிறகு, வெவ்வேறு வரித் தொகைகளைச் செலுத்தியது பற்றிய பற்றுச் சீட்டாகிய செலுத்து சீட்டுடன் கர்ணத்துக்கும் அனுப்ப வேண்டும். வசூல் பதிவேட்டினை, ஒரு வாரத்துக்குள் பெரிய தனக்காரருக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும். வசூல் சுவடி தலைவரிடமாவது, கர்ணத்திடமாவது இருக்கும்போது, அந்த வாரத்தில் செய்யப்பட்ட வசூல்களை, கொடுக்கப்பட்ட பற்றுச் சீட்டுகளின் அடிச் சீட்டுகளிலிருந்து, வசூல் சுவடி திரும்பி வந்த பிறகு அதில் எழுதலாம். தலைவராவது, கர்ணமாவது வசூல் பதிவேட்டைத் தம்மிடம் வைத்துக்கொள்ளாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

கைப்பற்றாணை.—கிராமப் பெரியதனக்காரர் 10-ஆம் எண் ஊ.ம. படிவத்தின் பிரகாரம் உள்ள கைப்பற்றாணையை நிரப்பி அதில் நிர்வாக அதிகாரியின் கையெழுத்தை வாங்க வேண்டும். அந்த ஆணையில் கிராமப் பெரியதனக்காரரின் முகவரியிட்டெழுத வேண்டும். கைப்பற்றுவதற்கான நடைமுறை, ஊராட்சி நடைமுறை நூலின் IV ஆம் அத்தியாயத்தில், 25 முதல் 33 வரையுள்ள பத்திகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

11-ஆம் எண் ஊ.ம. படிவத்தின் பிரகாரம் உள்ள ஆணைகள் பதிவேட்டையும் கிராமப் பெரியதனக்காரர் வைத்துவர வேண்டும். நிருவாக அதிகாரி ஆணை ஒன்று பிறப்பிக்கும்போது, 1 முதல் 8 வரையுள்ள பத்திகளை நிரப்பி, பதிவேட்டின் 9-ஆம் பத்தியில் நிருவாக அதிகாரியின் சுருக்கொப்பத்தை வாங்க வேண்டும். ஆணைக் கட்டணங்களை வசூலிப்பதும், அதை ரொக்கக் கருவூலத்தில் செலுத்துவதும், மற்ற வரியை வசூலிப்பதற்காக விதிக்கப்பட்ட நடைமுறையையே பின்பற்ற வேண்டும். (9-ஆம் எண் ஊ.ம. படிவமாகிய) வசூல் பதிவேட்டில் இதற்கென ஒரு தனிப் பத்தி விடப்பட்டிருக்கிறது. 12, 13-ஆம் எண் ஊ.ம. படிவங்கள் தாமே விளங்கக் கூடியவை; அவைகளைப் பெரியதனக்காரர் வைத்துவர வேண்டும்.

35-ஆம் எண் படிவத்தின் பிரகாரம் உள்ள பல்வகைப் பற்றுச் சீட்டையும் கிராமப் பெரியதனக்காரர் கொடுக்க வேண்டும். பலவகைக் காரியங்களுக்காக வெல்லாம் ஊராட்சியின் சார்பில் வசூல்களையெல்லாம் கிராமப் பெரிய தனக்காரர் செய்து, 35-ஆம் எண் படிவத்தின் பிரகாரம் பற்றுச் சீட்டு கொடுக்க வேண்டும். அன்றியும், இந்த வசூல்களுக்கு, 9-ஆம் எண்ணிலிருந்து வசூல் சுவடியில் தனிபத்தியிலே அன்றாடம் கணக்குக் காட்ட வேண்டும். இதன் பொருட்டு 16 ஆவது பத்தியைத் தற்காலிகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பொருத்தமான இடைக்காலம் விட்டு, பலவகைப்பட்ட இந்த வரவினங்களை, 1-ஆம் எண் ஊ.ம. படிவத்தின் பிரகாரம் உள்ள தனிச் செலுத்துச் சீட்டு மூலமாக, ஊராட்சி ஒன்றிய ரொக்கக் கருவூலத்தில் செலுத்திவிட வேண்டும். மற்ற வரி வசூல் விஷயத்தைப் போல இங்கேயுங்கூட, வசூல் சுவடியையும் பற்றுச் சீட்டாகிய செலுத்து சீட்டையும் தலைவருக்கு அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட இதில் பல்வகைக் கேட்புப் பதிவேட்டினை கர்ணம் வைத்துவராதபடியால், கேட்புக்கு எதிராக வசூல்களை எழுதும் வேலையை ஊராட்சி அலுவலகத்திலேயே செய்ய வேண்டும்.

கவனக் குறைவாகக்கூட, உள்ளூர் வரவினங்களை செலவுக்குப் பயன்படுத்தாதபடிப் பார்த்துக் கொள்ளும்பொருட்டு, ஊராட்சிக்குச் செலுத்த வேண்டிய தொகைகளையெல்லாம் பெரியதனக்காரரிடம் கொடுத்துவிட வேண்டுவது அவசியமாகும்.

உள்ளூர் வரியையும், உள்ளூர் மேல்வரியையும் வசூலித்து, அவைகளுக்குக் கணக்கு வைப்பதில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை பற்றிய குறிப்பாணை.

முகப்புரை.

(1) தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 115 ஆவது பிரிவின்படி தல வரி விதித்து வாங்கப்படத்தக்கதாகும். இந்தத் தல வரியானது முந்திய நிலவரி, கல்வி வரி, கூடுதலான மேல்வரி ஆகியவற்றை ஒருங்கிணைத்து, அவைகளைப் பதிலமர்த்தீடு செய்கிறது. நில வருவாயில் ரூபாய்க்கு 45 காசு வீதம் உள் வரியை வசூலித்து, ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதிக்கு அதற்கு வரவாகச் சரிக்கட்ட வேண்டும். ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் அவ்வாறு வசூலிக்கப்படும் உள்ளூர் வரியிலிருந்து கிடைக்கும் தொகையிலிருந்து, அதில் ஒன்பதில் நான்கு பாகம் கொண்ட தொகையை, ஊராட்சி ஒன்றிய (கல்வி) நிதிக்கு வரவு வைக்க வேண்டும். ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் ஒன்றிலுள்ள பேரூராட்சி ஒவ்வொன்றிலும் வசூலிக்கப்படுகிற உள்ளூர் வரியினின்றும் கிடைக்கிற தொகையிலிருந்து, அதில் ஒன்பதில் இரண்டு பங்குகொண்ட தொகையைப் பேரூராட்சி நிதிக்கு வரவு வைக்க வேண்டும். ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தில் வசூலிக்கப்படுகிற உள்ளூர் வரியிலிருந்து கிடைக்கும் தொகையில் எஞ்சிய பாகத்திலிருந்து, ஊராட்சி ஒன்றிய மன்றம் நிச்சயிக்கக்கூடிய சதவீதமுள்ள தொகையை ஊராட்சி மன்ற நிதிக்கு வரவு வைக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஊராட்சி மன்றங்கள்

எல்லாவற்றிற்கும் கிடைக்கும் மொத்த வருமானமானது ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கிராம மக்கள் தொகையில் ஒவ்வொருவருக்கும் 20 காசு வீதம் கணக்கிட்டு வரும் தொகைக்கு, கூடுமான வரையில் ஏறத்தாழக் குறையாமலிருக்கும்படி செய்யும் வகையில் அந்தச் சதவீதத்தை நிச்சயிக்க வேண்டும். ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தில் வசூலிக்கப்பட்ட தலவரியிலிருந்து கிடைத்த தொகையில் எஞ்சிய பாகத்தை, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நிதிகளில் வரவு வைக்க வேண்டும்.

(2) 1956-ஆம் ஆண்டின் ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 116 ஆவது பிரிவின்படி உள்ளூர் வரி மேல்வரி விதித்து வாங்கப்படத்தக்கதாகும். பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்கள் மேல்வரி விதித்து வாங்கத் தீர்மானித்திருக்கின்றன. உள்ளூர் வரி மேல் வரியைப் பற்றி அறிக்கையிடுவதற்கான நடைமுறையை நிர்ணயிப்பதற்காக, 1961 ஆகஸ்ட் 18-ஆம் தேதியுள்ள 2280-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் தனியாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் வசூலிக்கப்படும் உள்ளூர் வரி மேல்வரியை அரசினர் வழங்கும் தலவரி மேல்வரிச் சரியீட்டு உதவித் தொகையைக் கொண்டு சரியீடு செய்ய வேண்டும். சரியீட்டுச் சதவீதமானது, வட்டாரம் அ, ஆ, இ, ஈ என வகைப்படுத்தப்பட்டிருப்பதைப் பொறுத்து, வசூலிக்கப்படும் மேல்வரியில் 75 சதவீதம் முதல் 150 சதவீதம் வரையில் மாறுபடுகிறது.

(3) 1960 ஆகஸ்ட் 9-ஆம் தேதியுள்ள 644-ஆம் எண் அரசாணையின் 9 ஆவது பாராவிலே, உள்ளூர் வருவாய்களை வசூலிக்கும் வேலையானது, கிராம அலுவலர்களின் சாதாரண கடமைகளின் பாகமாகச் செய்யப்பட்டிருக்கிறது. உள்ளூர் வரி, உள்ளூர் வரி மேல்வரி ஆகிய இரண்டையும், கிராம அலுவலர்கள், கிஸ்திபந்தியின்போது நில வருவாயோடு வசூலிக்க வேண்டும். நில வருவாயில் எப்படியோ அப்படியே அதே ஏற்பாட்டின்படி கேட்பு வசூல் பாக்கியை மீட்டாய்வு செய்ய வேண்டும்.

2. நிலவரி—கல்வி வரி—கூடுதலான மேல்வரி ஆகியவற்றை வசூலித்துச் சரிக்கட்டுவதற்கான தற்போதைய நடைமுறை.—(1) இதுவரையில் நிலவரியும் கல்வி வரியும் ஒருங்கிணைக்கப்பட்டு, நிலவருவாயோடு கூட வசூலிக்கப்படுகின்றன. மொத்தத்தில் சேரவேண்டிய தொகை 9, 10, 12, 13, 14, 14 அ, 14 இ, 15, 16, 17, 18-வது கிராமப் பதிவேடுகளில் ஒரு தனிப்பத்தியில் காட்டப்படுகிறது. ஒரே செலுத்துச் சீட்டில் "VII அ—நில வருவாய் சாதாரண வருவாய்" என்னும் தலைப்பின் கீழ், நில வருவாயோடுகூட, மொத்தத் தொகையாக கருவூலத்தில் தொகை செலுத்தப்படுகிறது. பின்னர், முடிக்கப்பட்ட

கணக்குகளின் அடிப்படையின்பேரில், சேர வேண்டிய வரிகள், மாவட்டக் கழகம்—ஊராட்சிகள் (அவைகள் ஏற்பட்டிருந்தால்) ஆகியவற்றிற்கு வரவாகச் சரிக்கட்டப்பட்டன. எதிர்பார்க்கப்பட்ட வசூல்களின் அடிப்படையின் பேரில், மாத முன்பணத் தொகைகள் மூலமாக உள்ளபடி சரிக்கட்டல் செய்யப்பட்டது. ஜமாபந்திக் கணக்கு முடிக்கப்பட்ட பிறகு முடிவான சரிக்கட்டுதல் செய்யப்படும். மாநிலக் கணக்குகளில், மொத்த வசூல்கள் வரவினமென்று கண்டெழுதப்பட்டது; உள்ளாட்சிக் கழகங்களுக்குச் சரிக்கட்டுதல் செய்யப்பட்டமை, VIIஅ—நில வருவாய் சாதாரண வருவாய்" என்னும் தலைப்பின் கீழ் பற்றுப் பதிவாகக் கண்டெழுதப்பட்டது.

(2) இந்த ஏற்பாடு திருப்திகரமாகச் செயற்படவில்லை. முடிவான சரிக்கட்டுதல்கள் ஆண்டுதோறும் செய்யப்படவில்லை. மாநிலக் கணக்குகளில் பற்றுப் பதிவு மூலமாக மட்டுமே சரிக்கட்டப்பட்டபடியால் வரவினப் பக்கத்தில் ஆண்டுச் சரிக்கட்டுதல்கள் செய்யப்படுகின்றனவா என்று, மாநில மட்டத்தில் சரிபார்ப்பதற்கு வழியில்லாமற்போயிற்று.

(3) கூடுதலான மேல்வரி விஷயத்தில், 1955-ஆம் ஆண்டின் தமிழ் நாடு நிலவருவாய் (கூடுதலான மேல்வரிச்) சட்டத்தின்படி இது விதித்து வாங்கப்பட்டது. இந்த வசூலானது, கிராமக் கணக்குகளில், நிலவரி—கல்வி வரி ஆகியவற்றினின்றும் வேறாக வைக்கப்பட்டது. கருவூலத்தில் செலுத்துவதுகூட, தனி செலுத்துச் சீட்டின் மூலம் செய்யப்பட்டது. இந்த இனம் மாநிலக் கணக்குகளில் தனிப் பதிவாகக் கண்டெழுதப்பட்டது. VII அ. நிலவருவாய் சாதாரண வருவாய்—1954-ஆம் ஆண்டின் மேல்வரிகள் சட்டத்தின் கீழ் வருமானங்கள், 1955-ஆம் ஆண்டின் மேல்வரிகள் சட்டத்தின் கீழ் வருமானங்கள்." இந்த வசூலானது மாநில மட்டத்தில் பொதுவாகக் கொள்ளப்பட்டது; மூன்றில் இரண்டு பாகம் மக்கள் தொகை—சாலை மைல் தொலைவு அடிப்படையின் பேரில் மாவட்டக் கழகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது; மூன்றில் ஒரு பாகம் பரப்பின் அடிப்படையின் பேரில் ஊராட்சிக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இங்கேயுங்கூட, எதிர்பார்க்கப்பட்ட வசூல்களின் பேரில் மாநில மட்டத்தில் மாவட்டக் கழகங்களுக்கு முன்னதாகச் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட்டன; பின்னர்முடிவான சரிக் கட்டுதல் செய்யப்பட்டது. எவ்வளவு பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று மாநிலக் கணக்குகளில் உள்ள தனி வரவினப் பதிவு காட்டியபடியால், இங்கே, முடிவான சரிக்கட்டுதல்களைச் செய்வதில் இடர்ப்பாடு எதுவும் இருக்கவில்லை.

3. 1960 ஆகஸ்ட் 9-ஆம் தேதியுள்ள 644-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணையின் துணை கொண்டு பார்க்கையில் கிராமக்

கணக்குகளில் செய்ய வேண்டிய மாறுதல்கள்.—(1) மேற்கண்டவற்றிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், உள்ளூர் வரியையும், உள்ளூர் வரி மேல்வரியையும் சரிக்கட்டுதலை, நிலவரியைச் சரிக்கட்டுவதில் இது வரையில் ஏற்பட்டிருக்கிற கஷ்டங்கள் இல்லாமல் நிறைவேற்ற வேண்டுமானால், அப்போது உள்ளூர் வரியை அல்லது உள்ளூர் வரி மேல்வரியைக் கணக்குகளில், நில வருவாயோடு கூட ஒன்றாகச் சேர்த்துவிடக் கூடாது ; ஆனால், 1954, 1955-ஆம் ஆண்டுகளின் மேல்வரிச் சட்டங்களின்படி விதித்து வாங்கப்படுகிற மேல்வரியில் செய்யப்பட்டு வந்திருப்பதைப் போலவே, ஒரு தனிப் பதிவாகக் காட்ட வேண்டும். வரவினங்களை விவரமான தனித் தலைப்புகளின் கீழ்ப் பதியும்படி செய்ய வேண்டுமானால், தனிச் செலுத்துச் சீட்டுகள் மூலமாகக் கீழ்க் கருவூலத்தில் தொகைகளைச் செலுத்துவதும், அவைகளைத் தனியாகக் கிளைச் சிட்டாக்களில் பதிவு செய்வதும் அவசியமாகும். இதனால், தற்காலிகக் கேட்பில் மாத்திரமல்லாமல் 13, 14, 14 அ, 14 ஆ, 14 இ, 15, 16, 17, 18-ஆம் எண்களுள்ள கிராமப் பதிவேடுகளிலுங்கூட உள்ளூர் வரி மேல்வரி வசூல்களுக்குத் தனித்தனியாக மொத்தங்கள் கூட்டி வைத்திருப்பது அவசியமாக ஏற்படும். இந்தப் பதிவேடுகளில் எல்லாம் இதற்கெனத் தனித் தனிப் பத்திகளை விடுவது மூலமாய் இதற்காக ஏற்பாடு செய்யலாம்.

(2) மேற்படி யோசனைத் திட்டத்தைச் செயல் முறையில் கையாள்வதில் பின்வரும் இடர்ப்பாடு இருக்கிறது. சாதாரணமாக, தற்காலிகக் கேட்புப் பதிவேட்டில், வெவ்வேறு தலைப்புகளின் கீழ் கேட்பு விவரமாகக் கணக்கிட்டுப் பிரிக்கப்படுகிறபோதிலும், அவ்வாறு விவரமாகப் பிரிக்கப்பட்டுள்ள கேட்பினைக் கிராம அலுவலர் குடியானவர் ஒவ்வொருவருக்கும் காட்டுவதில்லை. பொதுவாக, குடியானவர் என்ன செலுத்த வேண்டுமென்பதைக் கிராம அலுவலர்கள் அவருக்குச் சொல்கிறார்கள், அவர் அதைக் கிஸ்திபந்தியின் போது தவணைகளாகச் செலுத்திவிடுகிறார். இந்தத் தவணைத் தொகைகள், குடியானவரிடமிருந்து மொத்தத்தில் சேர வேண்டிய மொத்தக் கேட்புக்கெதிராக வரவு வைக்கப்படுகின்றன. உள்ளூர் வரிக்காகவும், உள்ளூர் வரி மேல்வரிக்காகவும் கருவூலத்தில் தனியாகத் தொகைகள் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்வதாயிருந்தால், கிராம அலுவலர்கள், செலுத்தப்பட்ட கிஸ்தித் தவணைகளை உள்ளூர் வரித் தவணையாக உள்ளூர் வரி மேல்வரித் தவணையாகவும் நில வருவாய்த் தவணையாகவும் பிரிக்க வேண்டிவரும்; அல்லது அதற்கு மாறாக, செலுத்தப்பட்ட கிஸ்தித் தவணை முழுவதையும் மூன்று பத்திகளில் அடுத்தடுத்து ஒவ்வொன்றுக்கும் எதிரே பதிவு செய்து, பிறகு மூன்று பத்திகளையும் கூட்டி, செலுத்தப்பட்ட தொகைகளைத் தனியாகக் கிளைக் கருவூலத்துக்கு அனுப்ப வேண்டி வரும்.

(3) இந்த நடைமுறைக்கு மாறாக, நில வருவாய், உள்ளூர் வரி, உள்ளூர் வரி மேல்வரி ஆகியவற்றிற்குரிய கேட்புகளை 10, II -ல் ஒன்றாக இணைத்து, கிராமத்திலிருந்து சேர வேண்டிய மொத்தக் கேட்பினிமித்தம் ஒரே செலுத்துச் சீட்டில் தொகைகளைச் செலுத்தலாம். எப்படியும், எதிர்பார்க்கப்பட்ட வசூல்களை முன்னிட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு முன்பணம் கொடுக்கப்படுகிறபடியால், முடிவாகச் சரிக்கட்டுவது, ஜமாபந்திக் காலத்தில் தான் ஏற்படும். நிலவருவாய், தலவரி, தலவரி மேல்வரி ஆகிய மூன்று தலைப்புகளின் கீழ் மொத்தங்கள் எந்த விதாசாரப்படி முடிக்கப்பட்ட கேட்பில் இருக்கின்றனவோ அதே விதாசாரப்படி வசூல்களை அத்தலைப்புகளுக்கு பகிர்வு செய்வதற்கும், அதற்குப் பிறகு, ஒன்றியங்களுக்கு ஏற்கனவே வரவு வைக்கப்பட்ட முன்பணங்களுக்கும், அவைகளுக்கு உள்ளபடி சேரவேண்டிய தொகைகளுக்கும் இடையில், உள்ளபடி வசூலானவைகளை அடிப்படையாகக் கொண்டு விடு மிகை சரிக்கட்டுதல்களைச் செய்வதற்கும் ஜமாபந்தி ஒரு வாய்ப்பளிக்கும்.

4. ஒன்றியங்களுக்குத் தனியாகச் செய்தி தெரிவிக்க வேண்டுமென்பது.—உள்ளூர் வரியையும், உள்ளூர் வரி மேல்வரியையும் கிராமவாரியாகத் தனித் தனியாகப் பிரிப்பதை ஒன்றிய மன்றங்கள் தெரிந்துகொண்டிருக்க வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. உள்ளூர் வரிக்காகவும் உள்ளூர் வரி மேல்வரிக்காகவும் 10 II -ல் தனித் தனிப் பத்திகள் மட்டும் இருந்து விட்டால், தனித் தனிக் கிராமங்கள் சம்பந்தமாக இந்த உள்ளூர் வரியையும் உள்ளூர் வரி மேல் வரியையும் கண்டறிவதில் இடர்பாடு எதுவும் இராது. தற்போது நிலவரிக்காக ஒரு பத்தி இருக்கிறது; இதற்குப் பதிலாகத் தலைவரிக்கான ஒரு பத்தியை அமைத்துக் கொள்ளலாம். உள்ளூர் வரி மேல் வரிக்காக, ஒரு தனி பத்தியைக் கூடுதலாக ஏற்படுத்த வேண்டும். உள்ளூர் வரிக்காகவும் உள்ளூர் வரி மேல் வரிக்காகவுமான கேட்புகளைக் கிராமவாரியாகப் பிரிப்பதைப் பற்றி ஊராட்சி ஒன்றியத்துக்குத் தெரிவிப்பது அவசியமாகும். அப்போதுதான், குழுவானது, இந்தக் கேட்புகளுக்காக வரவினங்களை முன்னதாகச் சரிக்கட்டுதல்களைக் கவனித்து வருவதும், பேரூராட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் சேர வேண்டிய உள்ளூர் வரித் தொகைகளைச் சரியானபடி சரிக்கட்டுவதுங்கூட சாத்தியமாகும். ஒரு கிராமம் முழுவதும் ஒரு பேரூராட்சி மன்றத்தில் சேர்க்கப்பட்டிராவிட்டால், பேரூராட்சி மன்றங்களில் சேர்க்கப்பட்டிருக்கிற பாகத்துக்கான கேட்பினை, ஊராட்சி எல்லைகளுக்குள் சேர்க்கப்பட்டிராத பாகங்களுக்கான கேட்பினின்றும் தனியாகப் பிரிப்பது அவசியமாயிருக்கலாம்.

5. நிருவாக மேற்பார்வையில் கவனிக்கப்பட வேண்டிய சரிக்கட்டுதல்கள்.—மேற்கண்டவற்றை ஏற்றுக் கொள்வதாயிருந்தால் 10 II , 12, 13, 14

ஆகியவற்றில் சிறு மாறுதல்கள் செய்ய வேண்டிவரும்; மற்றப் பதிவேடு களில் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. ஆனால், இந்த ஏற்பாட்டின்படி, உள்ளூர் வரியையும் உள்ளூர் மேல்வரியையும் முடிவாகச் சரிக்கட்டுவதைக் கவனிக்கும் வேலை நிருவாக மேற்பார்வைக்கு விட்டுவிடப்படுகிறது; கணக்கு இலக்கங்கள் மூலமாகத் தானாகவே சரிபார்ப்பது சாத்தியமில்லை. கேட்பினைக் கிராமவாரியாகப் பிரிப்பது ஒன்றிய அலுவலகத்துக்குப் போய்ச் சேரும்படி செய்யக்கூடுமானால், முடிவான சரிக்கட்டுதல்களைப் பற்றி ஒன்றியம் விழிப்பா யிருக்கும்படி செய்ய முடியும். இந்தக் கணக்குகளின் பேரிலான கேட்புகள், வசூல்கள் ஆகியவைகளையொட்டி உள்ளூர் வரி, உள்ளூர் வரி மேல்வரித் தொகைகளை முடிவாகச் சரிக்கட்டுதல்களைக் கவனித்து வருவதற்காக, கால முறை விவர அறிக்கை ஒன்றையும் நிர்ணயிக்கலாம். உள்ளூர் வரி-உள்ளூர் வரி மேல் வரி ஆகியவற்றின் கிராமவாரி வசூல்கள் பகிர்வு செய்யப்படும்படியும், மீதியுள்ளதைச் சரிக்கட்டுதல்கள் செய்யப்படும்படியும் பார்த்துக் கொள் வதற்காக முடிவான ஜமாபந்தி ஆய்வுக் குறிப்புடன் கேள்வி ஒன்றைச் சேர்க்கலாம்.

6. உள்ளூர் வரியையும் உள்ளூர் வரி மேல் வரியையும் சரிக்கட்டுவதற்கான புதிய தனி விவரத் தலைப்புகள்.—ஆயினும், ஆண்டுதோறும் ஒன்றியங்களுக்கு வரவாகச் சரிக்கட்டப்படுகிற உள்ளூர் வரி, உள்ளூர் வரி மேல்வரி ஆகிய வற்றிற்குத் தனி இலக்கங்களை வைத்துக் கொள்வது உகந்ததாகும். வரவுகளை முன்னதாகச் சரிக்கட்டுகையில், கணக்குகளின் இரண்டு வெவ்வேறான விவர மான தலைப்புகளை நிர்ணயிப்பதன் மூலம் இந்த இலக்கங்களைக் கணக்குகளில் பதிவு செய்விப்பது சாத்தியமாகும். இதனால் ஏற்படுவது என்னவென்றால்— நில வருவாய், உள்ளூர், உள்ளூர் வரி மேல்வரி ஆகியவைகளிலிருந்து கிடைக் கும் எல்லா வரவுகளும், இப்போது செய்யப்படுவதைப் போலவே "VII அ. நிலவருவாய்" என்பதன் கீழ், அந்தந்த விவரமான வரவுத் தலைப்புகளின் கீழ் பதிவு செய்யப்படும். ஆனால், உள்ளூர் வரி, உள்ளூர் வரி மேல்வரி ஆகிய வற்றின் வரவுகளை முன்னதாகச் சரிக்கட்டுதல்கள், இரண்டு வெவ்வேறான விவரமான தலைப்புகளின் கீழ்த் தனியாகப் பதிவு செய்யப்படும்—

கழிக்கவும்.—ஊராட்சி ஒன்றியங்களுக்குச் செலுத்தப்பட்ட உள்ளூர் வரித் தொகைகள்.

கழிக்கவும்.—ஊராட்சி ஒன்றியங்களுக்குச் செலுத்தப்பட்ட உள்ளூர் வரி மேல்வரித் தொகைகள்.

(94) மாவட்ட ஆட்சியாளர்கள் பிறப்பிக்க வேண்டிய ஒப்பளிப்பு ஆணைப் படிவத்தை நிர்ணயிப்பது.—உள்ளூர் வரி மேல்வரிச் சரியீட்டு உதவித் தொகைகளை முன்னதாய்க் கொடுப்பதற்காக, இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் ஒப்பளிப்பு ஆணையை மாவட்டக் கலெக்டர்கள் பிறப்பிக்க வேண்டும். சுத்தப்படிகளில் மாவட்ட ஆட்சியாளராவது, அவர் சார்பில் மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவி அலுவலராவது கையெழுத்திட வேண்டும்.

(1961 செப்டம்பர் 21 ஆம் தேதியுள்ள 182060/கி.மு. கணக்குகள் /61-2 ஆம் எண் குறிப்பாணை)

(1961 டிசம்பர் 13 ஆம் தேதியுள்ள 182060/கி.மு. கணக்குகள் /61-2 ஆம் எண் குறிப்பாணை)

பிற்சேர்க்கை.

. . . . மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்,

நாள் :

அனுப்புவோர் : — *பெறுபவர்—*

மாவட்ட ஆட்சியாளர். — *கீழ்க் கருவூல அலுவலர்.*

தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பு I ஆம் தொகுதியில் கண்ட கருவூல விதி 17-ஐச் சேர்ந்த 2-ஆவது விளக்க உரையின்படி, இந்த ஆணை கிரமப்படி பற்றுச் சீட்டு எழுதப்பெற்று இணைக்கப்பட்டுள்ள பட்டியல் ஆகியவற்றின் அதிகாரத்தின்பேரில்,
ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளருக்கு ரூ. (ரூபாய்) கொடுக்கும்படி இதனால் நான் உமக்கு அதிகாரம் கொடுக்கிறேன்.

2. உமது கருவூலத்தில் அல்லது கீழ்க் கருவூலத்தில் வைத்து வரப்படுகிற ஆம் எண்ணுள்ள உள்ளூர் நிதி வைப்புக் கணக்கிலே அந்த ஊராட்சி ஒன்றியத்தின் கணக்குகளில் சரிக்கட்டுவது மூலமாக அத் தொகையைக் கொடுக்க வேண்டும்; ரொக்கமாகப் பணம் எதுவும் கொடுக்கக் கூடாது. இத் தொகையானது, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 129 ஆவது பிரிவின்படி அந்த ஊராட்சி ஒன்றியத்துக்குக் கொடுக்கப்படத்தக்க உள்ளூர் வரி மேல்வரி சரியீட்டு உதவித் தொகைகளி நிமித்தம் . . . . யோடு முடியும் காலாண்டுக்கான முன்பணம் முடிவான தொகையைக் குறிப்ப

தாகும். இது, "57. பல்வகை (ஊ) உதவிக் கொடைகள் உதவித் தொகைகள் முதலியவை X ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ளூர் வரி மேல்வரி சரியீட்டு உதவித் தொகைகள்" என்பதற்குப் பற்றுக எழுதப்படத் தக்கதாகும்.

3. சரிக்கட்டியது பற்றிய செய்தியை, ஒவ்வொரு மாதமும், 1961 ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் தேதியுள்ள 156422/கணக்குகள்/இ/61-1-ஆம் எண்ணுள்ள அரசுக் குறிப்பாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அமைத்த படிவத்தில் அரசினருக்கும், தொகை செலுத்தியது பற்றிய சான்றுடன் கருவூல அலுவலர் மூலமாக சென்னை அக்கவுண்டன்ட் ஜெனரலுக்கும் அனுப்ப வேண்டும்.

படி.—தலைவர் மூலமாக ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு.

படி.—சென்னை அக்கவுண்டன்ட் ஜெனரலுக்கு.

குறிப்பு.—தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பு I ஆம் தொகுதியில் கண்ட கருவூல விதி 17-ஐச் சேர்ந்த 2-ஆவது விளக்க உரையின்படி, உதவித் தொகையை இந்த ஆணைப் பத்திரத்தின் அதிகாரத்தின்பேரில் சரிக்கட்ட வேண்டும். அக்கவுண்டன்ட் ஜெனரலிடமிருந்து அதிகாரமளிப்பு எதுவும் தேவையில்லை.

(95) முன்னதாகச் செலுத்தப்படும் தலவரி மேல்வரிக்கு முன் தணிக்கைகளிலிருந்து விலக்களிக்கப்படுமென்பது.—முன்னதாகச் செலுத்தப்படும் தலவரி மேல்வரிச் சரியீட்டு உதவித் தொகைகளுக்கு மாவட்டக் கருவூலத்தில் முன் தணிக்கையினின்றும் விலக்களிக்கப்பட வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள்.

(1962 மார்ச் 21-ம் தேதியுள்ள 673 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை பல்வகை அரசாணை.)

(96) உள்ளூர் வரி மேல்வரி விதிப்பு பற்றிய தீர்மானங்கள்.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 116-ஆவது பிரிவின்படி உள்ளூர் வரி மேல்வரி விதித்து வாங்குவதற்காக ஊராட்சி ஒன்றியக் குழு நிறைவேற்றிய தீர்மானம் மாற்றியமைக்கப்படுகிற வரையில் அல்லது ரத்து செய்யப்படுகிற வரையில் அது செல்லக்கூடியதெனக் கருதலாமா, அல்லது ஒவ்வோர் ஆண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றுவது அவசியமா என்பது பற்றி விளக்கம் கோரப்பட்டது.

1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 115-ஆவது பிரிவின்படிக்கான உள்ளூர் வரி ஒவ்வொரு பசலியிலும் செலுத்தப்படத் தக்கதாகும். 116-ஆவது பிரிவின்படி ஊராட்சி ஒன்றியக் குழு ஒவ்வொன்றும் உள்ளூர் வரி மேல்வரி ஒன்றை விதித்து வாங்கலாம்; அது அவ்வாறு ஊராட்சி ஒன்றியக் குழு ஒன்றின் தீர்மான மூலமாக விதித்து வாங்கப்பட்டால், அத் தீர்மானம் ரத்து செய்யப்படுகிறவரையில் அல்லது மற்றப்படி மாற்றியமைக் கப்படுகிற வரையில் உள்ளூர் வரிக்குக் கூடுதலாக அது வசூலிக்கப்படத்தக்க தாகும். ஆகவே, உள்ளூர் வரி மேல்வரி விதிப்பு, குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு மட்டுமே—ஒரு பசலி ஆண்டுக்கு மட்டுமே—என்று அத் தீர்மானத்தில் சொல் லப்பட்டிருந்தாலன்றி, மற்றொரு தீர்மானத்தினால் அது மாற்றி அமைக்கப் படுகிற வரையில் அல்லது ரத்து செய்யப்படுகிற வரையில், அது செல்லக்கூடிய தெனக் கொள்ளப்பட வேண்டும். உள்ளூர் விதிப்பைக் குறிப்பிட்ட ஓர் ஆண்டுக்கோ பல ஆண்டுகளுக்கோ வரையறுக்காமல் உள்ளூர் வரி மேல்வரியை விதித்து வாங்குவதற்கான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டால், அவ்வரி விதிக்கப்பட்டு, ஆண்டுதோறும் உள்ளூர் வரியுடன் வசூலிக்கப்படும். நிலைமை அவ்வாறு இருப்பதனால், குறிப்பிட்ட ஒரு வீதப்படித் தலவரி மேல்வரியை விதித்து வாங்குவதற்காக ஒரு பொதுத் தீர்மானத்தை நிறைவேற்றுவதும் குறிப்பிட்ட எந்த ஆண்டிலேனும் அவ் விதிப்பு வீதத்தை மாற்றுவதாயிருந் தால் தனித் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதும் வசதியுடையதாகும். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு அவ்வண்ணமே அறிவித்து விடலாம்.

(1962 நவம்பர் 30-ஆம் தேதியுள்ள 181287/கி.மு. கணக்குகள் தனி.
62-2 ஆம் எண் குறிப்பாணை)

57. **வசூலிக்க முடியாத வரிகள், கட்டணங்கள் முதலியவற்றைத் தள்ளுபடி செய்ய அதிகாரம்—வரையறைகளும் கட்டுப்பாடும்.**—(1) ஓர் ஒப்பந்தத்தின் படியோ மற்றப்படியோ ஓர் ஊராட்சி ஒன்றியக் குழுவிற்குச் சேர வேண்டிய ஏதேனும் வரி, கட்டணம் அல்லது வேறு தொகை வசூலிக்க முடியாதென்று தள்ளுபடி செய்ய, 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 127-ஆவது பிரிவின்படி அக் குழுவிற்குள்ள அதிகாரமானது, அடியிற் கண்ட விதிகளில் குறிப்பிட்டிருக்கிற வரையறைகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டதாகும்.

(2) வரி வசூலிப்பவராவது கிராமப் பெரியதனக்காரராவது நில வரு வாய்த் துறைப் பணித் தொகுதியைச் சேர்ந்த வேறொருவருக்கு மேற்படிச் சட்டத்தில் கண்ட 126-ஆவது பிரிவின்படி வரிகளை அல்லது கட்டணங்களை வசூலிக்கும் வேலை ஒப்புவிக்கப்படும்போது அந்த வேறொருவராவது வசூலிக்க

முடியாதவையென்று தெரியவரும் தொகைகளைப் பற்றியும் அதற்குண்டான காரணங்களைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும். ஆணையாளர் அவற்றைச் சரி பார்க்க வேண்டும். அத்தகைய எல்லாத் தொகைகளையும் பற்றிய பட்டியல் ஒன்றைக் கால் ஆண்டுக்கொருமுறை தயாரித்து ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் ஒப்பளிப்புக்காக அதற்கு முன் வைக்க வேண்டும்; அவற்றைத் தள்ளுபடி செய்வதற்காக ஆணையாளர் கூறும் காரணங்களையும் பரிந்துரைகளையும் அவற்றோடு வைக்க வேண்டும். தொகையைத் தள்ளுபடி செய்யலாமென்று ஆணையாளர் பரிந்துரைப்பதற்குமுன், அந்தக் கிராமம் அல்லது பட்டணத்தில் கைப்பற்றத்தக்க சொத்து எதுவும் பாக்கிதாரருக்கு இல்லையென்றும், வசூலிப்பதற்கான எல்லா உபாயங்களும் கையாண்டு பார்த்துப் பயனில்லையெனத் தெரிய வந்ததென்றும் ஆணையாளர் நிச்சயப் படுத்திக் கொள்ளவேண்டும்.

(3) தள்ளுபடி செய்யப்பட்ட தொகைகளை எழுதி வைப்பதற்கான பதிவேடு ஒன்றை, அரசினர் குறிப்பிடக்கூடிய படிவத்தில் வைத்துவர வேண்டும்.

(4) ஏதேனும் தொகை தள்ளுபடி செய்யப்படுவதற்கு ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒப்பளிப்பு வழங்கினால், வரி, கட்டணம் அல்லது வேறு தொகை ஆகியவற்றின் தன்மை (வரிக்குச் சம்பந்தப்பட்ட இனங்களில் வரி விதிப்பு இலக்கம் கூட) தள்ளுபடி செய்யப்பட்ட தொகை, அது சம்பந்தப்படுகிற கால அளவு ஆகியவை பற்றிய விவரங்களை நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் விவரமாக எழுத வேண்டும். இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தடவையும் தள்ளுபடி செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட மொத்தத் தொகையை எழுத்தால் எழுத வேண்டும்.

(5) தள்ளுபடி செய்யப்பட்ட வரிகள், கட்டணங்கள் அல்லது வேறு தொகைகளுக்கான பட்டியல்களிலும் ஆணைகளிலும் (புறச் சீட்டு, அடிச் சீட்டு இரண்டிலும்) தள்ளுபடி செய்ய ஒப்பளிப்பு வழங்கிய பிறகு இயன்ற விரைவில், "தள்ளுபடி செய்யப்பட்டது" என முத்திரையிட வேண்டும்; அதே சமயத்தில் கேட்புப் பதிவேடுகளில் அவசியமான பதிவுகளை எழுத வேண்டும்.

(6) வசூலிக்க முடியாதெனத் தள்ளிவிடப்படுவதற்குரிய ஒரே இனத்தைச் சேர்ந்த வரி, கட்டணம் அல்லது வேறு தொகை 50 ரூபாய்க்கு மேற்பட்டால், அதற்காக மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பைப் பெற வேண்டும்.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1963 மார்ச் 30 ஆம் தேதியுள்ள 713 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1963 ஏப்ரல் 3 ஆம் தேதியுள்ள 754 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

58. 111 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட (i) பகுதியின் காரியங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி.—(1958 ஆம் ஆண்டின் 35 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 111 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் காரியங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி மாவட்ட ஆட்சியாளர் ஆவார்.

(1960 அக்டோபர் 8-ம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை)

(1961 நவம்பர் 28-ஆம் தேதியுள்ள 3162 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணை).

59. உரிமங்களையும் அனுமதிகளையும் வழங்குவதைத் தடுப்பதற்கான அல்லது முறைப்படுத்துவதற்கான விதிகள்.

. 111 ஆவது பிரிவின்படி உரிமம் வழங்க வேண்டுமெனச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பம்.—1. ஒரு கிராமத்தின் எல்லைகளுக்குள் இருக்கிற ஏதேனும் இடத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 159 (1) பிரிவில் குறிப்பிட்டுள்ள காலத்துக்குள், மேற்படி சட்டத்தில் கண்ட 111 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி அறிக்கையிடப்பட்ட காரியங்களில் எதற்காகவேனும் அந்த இடத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமம் வழங்கும்படி அல்லது உரிமத்தைப் புதுப்பிக்கும்படி, ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

2. ஆணையாளர், எழுதியுள்ள ஆணை மூலமாக, அத்தகைய உரிமம் வழங்கலாம், அல்லது வழங்க மறுக்கலாம். முந்திய விஷயத்தில், அவர் பொதுவாக மனித உயிருக்கு உடல்நலத்துக்கு அல்லது சொத்துக்கு தீங்கு நேரிடாமலிருக்கும்படி செய்யும் பொருட்டும், முக்கியமாகப் பின்வருபவை சம்பந்தமாகவும் தாம் தகுதியெனக் கருதுகிற வரையறைகளையும் நிபந்தனைகளையும் ஒழுங்கு முறைகளையும் விதிக்கலாம் :—

(i) இடத்தின் துப்புரவு.

(ii) சரியான வடிகால் ஏற்பாடு

(iii) சரியான காற்றேட்டமும் வெளிச்சமும்.

(iv) ஒலி அல்லது நாற்றம், அபாயகரமான வாடையுடைய தீயாவி, நீரியற்கழிவு ஆகியவற்றினுல் உண்டாகும் தொல்லேயைத் தவிர்ப்பது அல்லது குறைப்பது.

(v) வேலேயாட்களின் பாதுகாப்பு.

(vi) வாழ்க்கைத் தொழில் தொடர்பான இன்னல்களேத் தடுப்பது.

(vii) உணவு நிறுவனங்களில் உணவு, பானம் ஆகியவற்றின் தீங்கின்மை.

(viii) தொத்து நோய்கள் பரவுவதைத் தடுப்பது.

பிந்திய விஷயத்தில் பொதுவாக மனித உயிர் உடல் நலம் அல்லது சொத்துக்கு தீங்கு நேரிடுமென்னும் காரணங்களினுலும், முக்கியமாக—

(i) காற்றேட்டமும் வெளிச்சமும் இல்லாதிருப்பது அல்லது மக்கள் நெருக்கம் காரணமாகக் குறிப்பிடப்பட்ட காரியத்துக்கு அந்த இடம் தகுதியற்றதாயிருந்தாலும், அல்லது

(ii) அது ஒரு குடியிருப்பு வீட்டின் பாகமாயிருந்தாலும், அல்லது

(iii) அதில் சரியான வடிகால் ஏற்பாடுகள் இராமலிருந்தாலும், அல்லது.

(iv) குறிப்பிட்ட காரியத்துக்காக அந்த இடத்தைப் பயன் படுத்திணுல், ஒலி, அதிர்ச்சி, புகை, தூசி ஒவ்வாத வாடையுடைய தீயாவி, அல்லது நீரியற் கழிவுகள் காரணமாக அக்கம்பக்கத்திலிருப்பவர்களுக்குத் தொல்லே உண்டாவதாயிருந்தாலும், அல்லது

(v) குறிப்பிட்ட தொழிலே நடத்துவதானது, வேறு ஏதேனும் சட்டத்தின்படி அல்லது அதன் பிரகாரம் செய்யப்பட்ட விதிகள் அல்லது துணைச் சட்டங்களின்படி, அனுமதிக்கத்தக்கதாயிராவிட்டாலும்,

உரிமம் வழங்க மறுத்து விடலாம்; மறுப்பதற்கான காரணங்களேச் சம்பந்தப்பட்ட ஆள் அல்லது ஆட்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

3. அத்தகைய உரிமம் ஒவ்வொன்றும் அந்த ஆண்டின் இறுதியில் காலாவதியாகிவிடும்; ஆனுல், தனிப்பட்ட சில காரணங்களினுல் அதற்கு முன்னதாகவே அது காலாவதியாக வேண்டுமென ஆணேயாளர் கருதினுல், அதில் குறிப்பிடப்படக்கூடிய அந்த முன்னதான தேதியன்று அது காலாவதியாகி விடும்.

11. 112 ஆவது பிரிவின்படி அனுமதி வழங்க வேண்டுமெனச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பம்.—

(அ) ஏதேனும் தொழிற்சாலையில் பட்டறையில் அல்லது வேலைச்சாலையில் நீராவி ஆற்றல், நீராற்றல், அல்லது வேறு யந்திர ஆற்றல் அல்லது மின் ஆற்றலைப் பயன்படுத்தக் கருதி அதைக் கட்டுவதற்கு அல்லது நிறுவுவதற்கு அல்லது ;

(ஆ) மேற்சொன்னவாறுள்ள ஏதேனும் ஆற்றலால் செலுத்தப்படுவதும், மேற்படி சட்டத்தின் செய்யப்பட்ட விதிகளினால் விலக்களிக்கப்பெற்ற யந்திரங்கள் அல்லது உற்பத்தி நிலையத் தளவாடங்கள் அல்லாதவைகளுமான யந்திரங்களை அல்லது உற்பத்தி நிலையத்தளவாடங்களை எவ்விடத்திலேனும் அமைப்பதற்கு உத்தேசித்திருக்கிற ஒவ்வொருவரும் அவ்வாறு கட்டுவதற்கு, நிறுவுவதற்கு அல்லது அமைப்பதற்கு முன், உத்தேசிக்கப்பட்ட வேலையை மேற்கொள்ள அனுமதிக்காக, ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு எழுத்து மூலமாக ஒரு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

விளக்கம்.—இவ்விதிகளின் காரியங்களுக்காக, "கட்டுவது, நிறுவுவது" என்னும் சொற்றொடர்களில், முறையே "புதுப்பிப்பது, விரிவாக்குவது", என்பவைகளும் அடங்கும்.

5. 4 ஆவது விதியின்படிக்கான விண்ணப்பத்துடன் அடியிற்கண்டவைகளையும் அனுப்ப வேண்டும் :

(i) தொழிற்சாலை, பட்டறை, வேலைச்சாலை அல்லது வளவின் அமைப்புப் படத்துக்கு ஐந்து படிகள்; இவற்றில் ஒன்றை, மாவட்டச் சுகாதார அலுவலருக்கும், இரண்டை நகரமைப்புத்துறை இயக்குநருக்கும், இவற்றில் ஒன்று அவருடைய குறிப்புரையோடு திருப்பி அனுப்பப்படவேண்டும்; மற்றொன்று அவருடைய அலுவலகத்தில் வைத்துக் கொள்ளப்படவேண்டும்—ஒன்றை ஊராட்சி ஒன்றிய மன்றம் அலுவலகத்தில் வைத்திருப்பதற்கும், ஒன்றை ஊராட்சி ஒன்றிய மன்றம் ஆணைகளுடன் விண்ணப்பதாரருக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்காகவும் அனுப்ப வேண்டும்;

(ii) ஆற்றலை, யந்திரங்கள், தளவாடங்கள், அல்லது வளவு சம்பந்தமாக இதன்பொருட்டுச் செய்யப்பட்ட துணைச்சட்டங்களின் படி ஊராட்சி ஒன்றிய மன்றம் கேட்கக்கூடிய விவரங்கள் ;

(iii) 1948 ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டமும், 1950 ஆம் ஆண்டின் தமிழ் நாடு தொழிற்சாலைகள் விதிகளும் பொருந்துவனவற்றில் 1948 ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டத்தில் சொல்லியிருக்கிறபடி

தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் வழங்கிய ஏற்பைப்பெற்றிருக்கிற அத்தொழிற்சாலை, பட்டறை, வேலைச்சாலை அல்லது வளவின் அமைப்புப் படங்களின் ஒரு தொகுதி ; ஆனால், அரசினர் எந்தத் தொழிற்சாலை, பட்டறை அல்லது வேலைச்சாலைக்கேனும், இவ்விதியின் பிரயோகத்திலின்றும் விலக்களிக்கலாம்.

II 6 (1) 1948 ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டமும், 1950 ஆம் ஆண்டின் தமிழ் நாடு தொழிற்சாலை விதிகளும் பொருந்தாத, தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை ஊராட்சி ஒன்றிய மன்றம் அனுமதி வழங்கப்படுவதற்கு முன், ஏதேனும் தொழிற்சாலை, பட்டறை அல்லது வேலைச்சாலையைக் கட்டுவது அல்லது நிறுவுவது அல்லது புதிய அல்லது கூடுதலான யந்திரங்களை அமைப்பது யந்திரங்களைப் பதிலமர்த்தீடு செய்வது ஆகியவற்றிற்கான அமைப்புப் படங்கள் எல்லாவற்றிற்கும் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் ஆய்வாளரின் முன் ஒப்புதலை ஆணையாளர் பெறவேண்டும். தொழிற்சாலைகளின் ஆய்வாளர், ஒப்புதல் வழங்கும்போது, பின்வரும் அம்சங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும் :—

(i) காற்றோட்டத்துக்கும் வெளிச்சத்துக்குமான ஏற்பாடுகள் போதுமானவையா என்பது.

(ii) அறைகள், கதவுகள், ஆகியவற்றின் உயரமும் பரிமாணங்களும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் போதுமானவையா என்பது.

(iii) தீப்பிடித்துக் கொண்டால் பயன் படுத்துவதற்குரிய வெளியே போகும் வழிகள் தகுந்தவையா என்பது.

(2) 1948 ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள், சட்டமும், 1950 ஆம் ஆண்டின் தமிழ் நாடு தொழிற்சாலைகள் விதிகளும் பொருந்துகிற தொழிற் சாலைகளைப் பொறுத்தவரை ஆணையாளர், அனுமதிக்காக விண்ணப்பத்துடன் வருவதும் தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளரால் ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப் பட்டிருப்பதுமான அமைப்புப் படத்தை ஆதாரமாகக் கொண்டும், அது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிற மேல் கடிதத்தை ஆதாரமாகக் கொண்டும், அவ்விண்ணப்பத்தைப் பற்றி விவரிக்கத் தொடங்க வேண்டும்.

(3) தொழிற்சாலைகளின் ஆய்வாளர் தமது அலுவலகத்தில் அவ்விண்ணப்பம் வந்து சேர்ந்ததிலிருந்து முப்பது நாட்களுக்குள் (1) உள்விதியில் குறிப்பிட்டுள்ள ஒப்புதலை அளிக்க வேண்டும், அல்லது அளிக்க மறுக்க வேண்டும்.

4 (3) உள்விதியில் குறிப்பிட்டுள்ள முப்பது நாள் கால அளவுக்குள், தொழிற்சாலேகளின் ஆய்வாளர் (3) உள்விதியின்படிக்கான தமது தீர்மானத்தைத் தெரிவிக்காவிட்டால், அவர் (3) உள் விதியின் குறிப்பிட்டுள்ள ஒப்புதலே வழங்கியிருப்பதாகக் கொள்ளப்படும்.

7. ஊராட்சி ஒன்றிய மன்றம், விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு கூடியவிரைவிலும், பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளும்—

(அ) கேட்கப்பட்ட அனுமதியை முழுமையாகவேனும், விதிக்கத் தகுதியெனத் தாங்கள் கருதுகிற நிபந்தனைகளுக்குட்பட்டேனும் வழங்கலாம்; அல்லது

(ஆ) அவ்வாறு கட்டுவது, நிறுவுவது அல்லது அமைப்பது அக்கம்பக்கத்தில் மக்கள் நெருக்கம் காரணமாக ஆட்சேபகரமானதென்று அல்லது அதனுல் தொல்லே உண்டாகக்கூடுமென்று அவர்கள் கருதினுல், அனுமதி வழங்க மறுக்கலாம்.

3. 7 ஆவது விதியைச் சேர்ந்த (அ) பகுதியின்படி அனுமதி வழங்குவதற்கு முன் ஊராட்சி ஒன்றிய மன்றம்.

(அ) (i) தொழிற்சாலே, பட்டறை, வேலேச்சாலே அல்லது வளவின்மனே குறிப்பிட்ட காரியத்துக்குத் தகுதியாவதா, போதுமானதா என்பதைப் பற்றியும்) மனேப்பிரிவு ஏற்பாடுகள் கட்டிடங்களின் சிறப்பக்கலே சார்ந்த தோற்றம் ஆகியவை பற்றியும் நகரமைப்புத்துறை இயக்குநரின் ஒப்புதலேப் பெறவேண்டும்.

(ஆ) பொது மக்கள் நலனே முன்னிட்டுப் பார்க்கும்போது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள காரியத்துக்காக, குறிப்பிட்ட, தொழிற்சாலே, பட்டறை, வேலேச்சாலே அல்லது வள்வின் மனேயின் தகுதியைப்பற்றி மாவட்டச் சுகாதார அலுவலரைக் கலந்தாலோசிக்க வேண்டியதுமல்லாமல் அவர் கருத்துக்கு உரிய வகையில் கவனம் செலுத்த வேண்டும்.

நகரமைப்புத்துறை இயக்குநராவது மாவட்ட சுகாதார அலுவலராவது குறித்து கேட்புக்குறிப்பு பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து நாற்பது நாட்களுக்குள் தமது ஒப்புதலே அல்லது கருத்தைத் தெரிவிக்க வேண்டும்.

மேற்சொன்ன நாற்பது நாள் கால அளவுக்குள், நகர அமைப்புத்துறை இயக்குநராவது மாவட்ட சுகாதார அலுவலராவது, தமது ஒப்புதலேயோ கருத்தையோ தெரிவிக்காவிட்டால், அவர் தமது ஒப்புதலேத் தெரிவித்திருப்பதாகக் கருதப்படும்.

9. சந்தர்ப்பத்துக்கேற்ப தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளரால் அல்லது தொழிற்சாலைகளின் ஆய்வாளரால் ஏற்கெனவே ஆட்சேபிக்கப் பட்டிருக்கிற கட்டிடங்களில் இருக்கிற, தொழிற்சாலைகளுக்காவது, தொழிற் சாலையின் அமைப்புப்படம் அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டிரா விட்டால் அந்தத் தொழிற்சாலைகளுக்காவது 1948-ம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டத்தின்படி வேண்டியிருக்கிற வெளிச்சம் காற்றோட்டம்—தட்ப வெப்ப நிலைமைகள் ஆகியவற்றின் தரத்தைக் கருதும்போது, தொழிற்சாலைகளைக் கொண்டிருக்க வெளிப்படையாய்த் தகுதி மற்றவைகளாயிருக்கிற கட்டிடங் களில் உள்ள தொழிற்சாலைகளுக்காவது அனுமதி வழங்கக்கூடாது.

10. 1958-ம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 112 ஆவது பிரிவின்படி அனுமதி வழங்கப்படுவதனாலேயே, 1958-ம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 178 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (xxxiii) பகுதியின்படி செய்யப்பட்ட எவை யேனும் விதிகளையோ ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அதிகார வரம்புக்குட் பட்ட பரப்பில் அமலில் இருக்கிற எவையேனும் கட்டிட ஒழுங்குமுறை களையோ அனுசரிக்க வேண்டிய அவசியமில்லையெனக் கருதப்படமாட்டாது.

11. (1) நீராவி ஆற்றல் அல்லது வேறு யந்திர ஆற்றல் அல்லது மின் ஆற்றல் பயன்படுத்தப்படுகிற ஏதேனும் ஒரு தொழிற்சாலை பட்டறை அல்லது வேலைச்சாலையில் குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த எரிபொருள் படும் ஒலி அல்லது அதிர்ச்சி காரணமாகத் தொல்லை உண்டானால், ஊராட்சி ஒன்றிய மன்றம் இதற்கெனக் குறிப்பிடப்படும் நியாயமான காலத்துக்குள் தொல்லையைக் குறைப்பதற்காகத் தாங்கள் தகுதியெனக் கருதுகிற கட்டளைகளைப் பிறப்பிக் கலாம்.

(2) அத்தகைய கட்டளைகளை நிறைவேற்றுவதில் வேண்டுமென்றே, அல்லது தொல்லையைக் குறைப்பது இயலாதெனத் தெரியவந்தால், ஊராட்சி ஒன்றிய மன்றம்—

(அ) குறிப்பிட்ட அவ்வகையைச் சேர்ந்த எரிபொருள் பயன்படுத்தப் படுவதைத் தடுக்கலாம்; அல்லது

(ஆ) இரவு 9.30 மணி முதல் காலை 5.30 மணி வரையில் அத்தொழிற் சாலை, பட்டறை அல்லது வேலைச்சாலையில் வேலை நடப்பதைத் தடுப்பது மூலமாக ஒலி அல்லது அதிர்ச்சியைக் குறைக்கலாம்.

12. (1) ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றும் மாவட்டச் சுகாதார அலுவலர், நகரமைப்புத்துறை இயக்குநர் ஆகியோரின் ஒப்புதலுடன்,

தொழில் காரியங்களுக்காக தன் அதிகார வரம்புக்குட்பட்ட கிராமங்களில் குறிப்பிட்ட பரப்புகளை ஒதுக்கி வைக்கலாம்; அல்லது சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளர் அவ்வாறு ஆணையிட்டால் அவ்வண்ணமே ஒதுக்கி வைக்க வேண்டும்.

(2) (1) உள்விதியின்படி கைத்தொழில் பரப்புகள் ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தால், ஊராட்சி ஒன்றிய மன்றம் அப்பரப்புகளுக்கு வெளியே ஏதேனும் தொழிற்சாலை, பட்டறை அல்லது வேலைச் சாலையைச் கட்டுவதற்காக அல்லது நிறுவுவதற்காக அல்லது (20 குதிரைத்திறனுக்கு மேற்படாத மின் பொறி அல்லாத வேறு) எவையேனும் யந்திரங்களை அல்லது உற்பத்தி நிலையத் தளவாடங்களை அமைப்பதற்காக அனுமதி வழங்க மறுத்து விட வேண்டும்.

குறிப்பு.—1948-ம் ஆண்டின் தொழிற்சாலைகள், சட்டத்தில் கண்ட 6(1) பிரிவின்படி செய்யப்பட்ட விதிகளுக்கிணங்க நிறுவப்பட்ட தொழிற் சாலைகளுக்கு இவ்விதி பொருந்த மாட்டாது.

(1962 பிப்ரவரி 1-ஆம் தேதியுள்ள 261-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

(1962 சூலை 7-ஆம் தேதியுள்ள 40292 எல். தனி 62-3 ஆம் எண்ணுள்ள குறிப்பாணை.)

(1962 டிசம்பர் 29-ஆம் தேதியுள்ள 2815-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

(1964 மார்ச் 11-ஆம் தேதியுள்ள 568 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

(1962 டிசம்பர் 29-ஆம் தேதியுள்ள 2815-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

(1964 மார்ச்சு 11 ஆம் தேதியுள்ள 568 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை பல்வகை அரசாணை)

(97) 1958-ம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 111(2) பிரிவின்படி விளம்பரங்கள் பிறப்பிப்பதற்கு முன் ஊராட்சிகளுடன் கலந்தாலோசிப்பது.—1. மனித உயிருக்கு அல்லது உடல் நலத்துக்கு அல்லது சொத்துக்கு வெகுவாய்த் தீங்குண்டாக்கக்கூடிய அல்லது ஆபத்து விளைவிக்கக்கூடிய காரியங்களைக் குறிப்பிட்டு, 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 111(1) பிரிவின்படிக்கான விளம்பரம் ஒன்று 1961 சனவரி 12-ம் தேதியுள்ள 113-ம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையுடன் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

(2) அச்சட்டத்தில் கண்ட 111 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (i) பகுதியின்படி ஊராட்சி மன்றங்கள் விஷயத்தில் ஊராட்சி ஒன்றிய மன்றம் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியின் ஒப்புதலை முன்னதாகப் பெற்றுக் கொண்டு ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலுள்ள ஊராட்சி மன்றத்தின் எல்லைக்குள் அல்லது விளம்பரத்தில் குறிப்பிடப்படக்கூடிய ஊராட்சி மன்றத்தின் அல்லது மன்றங்களின் எல்லைக்குள் இருக்கிற எந்த இடத்தையும், மேற்படி சட்டத்தில் கண்ட 111 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிட்டிருக்கிற காரியங்களில் எதற்காக வேனும், ஓர் உரிமம் இல்லாமலும், அந்த உரிமத்தில் குறிப்பிட்டிருக்கிற நிபந்தனைகளின் படியன்றி மற்றப்படியும் பயன்படுத்தக்கூடாதென அறிக்கை யிடலாம். ஆகவே, ஏதேனும் ஊராட்சி மன்றத்தை அல்லது அந்த மன்றத்தி லுள்ள ஏதேனும் ஓர் இடத்தை, மேலே 1-ஆவது பத்தியில் குறிப்பிட்டிருக்கிற அரசாணையுடன் பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தில் சொல்லப்பட்டுள்ள காரியங் களில் எதற்காகவேனும் பயன்படுத்தக்கூடாதென யுக்தப்படி அறிக்கையிடுவதற் கான அதிகாரம் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றிய மன்றம் தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட ஓர் ஊராட்சி மன்றம் சம்பந்தமாகச் சில காரியங்களையும் வேறு ஊராட்சி மன்றங்கள் சம்பந்தமாக வேறு சில காரியங்களையும் குறிப்பிடலாம்.

3. மேற்படிச் சட்டத்தில் கண்ட 111 (2) (i) பிரிவின்படி ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தைச் செலுத்து வதற்கு முன் அக்குழுக்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சியைக் கலந்தாலோசிக்க வேண்டுமென மேற்படி சட்டத்தில் திட்டவட்டமான நிபந்தனை எதுவும் இல்லாதபோதிலும் அக்குழுக்கள் அவ்வாறு கலந்தாலோசிக்கலாமென்று ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

4. அரசினர் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்கிறார்கள். ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மேற்படிச் சட்டத்தில் கண்ட 111 (2) (i) பிரிவின்படி விளம்பரம் பிறப்பிப்பதற்கு முன் சம்பந்தப்பட்ட ஊராட்சியைக் கலந்தாலோ சிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி யானவர், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் யோசனைத் திட்டங்களை ஒப்புக்கொள் வதற்கு முன், சம்பந்தப்பட்ட ஊராட்சிகளின் கருத்துக்களைக் கவனித்துப் பார்க்க வேண்டும்.

(1961 மே 29-ம் தேதியுள்ள 154-ம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(98). அபாயகரமானவையும் தீங்குண்டாக்குபவையுமான தொழில்கள்
1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படியுள்ள நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1950-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி மன்றங்கள்

சட்டத்தின் படியுள்ள நிலைமை.—1. மனித உயிருக்கு அல்லது உடல் நலனுக்கு அல்லது சொத்துக்குத் தீங்குண்டாக்குபவை அல்லது ஆபத்தானவை என்று அரசினர் கருதுகிற காரியங்களைக் குறிப்பிட்டு விதிகள் செய்ய, (1950-ம் ஆண்டின் X ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1950-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி மன்றங்கள் சட்டத்தின் 91 ஆவது பிரிவில் அரசினருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (1958-ம் ஆண்டின் XXXV வது தமிழ் நாடு சட்டமாகிய) 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 111 ஆவது பிரிவின் அத்தகைய விதி எதுவும் தேவையில்லை. ஆபத்தானவையும தீங்குண்டாக்குபவையுமான காரியங்களை அரசினரால் பிறப்பிக்கப்படும் ஒரு விளம்பரத்தில் குறிப்பிடப்படும்.

2. கிராமத்தின் எல்லைகளுக்குள் இருக்கிற எந்த இடத்தையும் ஆபத்தானவையும், தீங்குண்டாக்குபவையுமான காரியங்களுக்கான உரிமம் இல்லாமல் பயன்படுத்தக் கூடாதென நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியின் (உள்ளாட்சித் துறை மண்டல ஆய்வாளரின்) முன் ஒப்புதலுடன் அறிக்கையிட, மேற்படி 91 ஆவது பிரிவு ஊராட்சிக்கு அதிகாரம் கொடுக்கிறது. ஆபத்தானவையும் தீங்குண்டாக்குபவையுமான தொழில்கள் மீது கட்டுப்பாடு செலுத்துதல், அவைகள் மீது கட்டணங்கள் விதித்து வாங்குதல் ஆகியவை பற்றி 1 ஆம் வகுப்பு (பேரூராட்சி) மன்றத்துக்கும் 11 ஆம் வகுப்பு (ஊராட்சி) மன்றத்துக்கும் இடையில் வேற்றுமை பாராட்டுவதில்லை. 1958 ஆம் ஆண்டிய XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி நிலைமை அடியிற் கண்டதாகும் :—

ஊராட்சியின் விஷயத்தில், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அதிகார வரம்புக்குட்பட்ட ஓர் ஊராட்சியின் எல்லைக்குள் அல்லது விளம்பரத்தில் குறிப்பிடப்படக்கூடிய ஊராட்சி அல்லது ஊராட்சிகளின் எல்லைகளுக்குள் எந்த இடத்தையும், அபாயமானவை அல்லது தீங்குண்டாக்குபவை என்று அரசினர் குறிப்பிடும் காரியங்களில் எதற்காகவேனும் உரிமம் இல்லாமல் பயன்படுத்தக்கூடாதென்று, அறிக்கையிடும் அதிகாரம் குழு ஊராட்சி ஒன்றியத்திற்குரியதாகும். உரிமம் வழங்குவதற்கு அல்லது வழங்க மறுப்பதற்கு உரிய அதிகாரி, ஊராட்சி ஒன்றிய ஆணையாளராவார்.

பேரூராட்சி மன்றங்களைப் பொருத்தவரை மேலே குறிப்பிட்ட விளம்பரத்தைப் பிறப்பிக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட ஊராட்சிக்குரியதாகும் : உரிமம் வழங்க அல்லது மறுப்பதற்குரிய அதிகாரம் அதன் நிர்வாக அலுவலருக்கு உண்டு.

3. உரிமக் கட்டணங்களிலிருந்து கிடைக்கும் வருமானமானது, ஊராட்சி ஒன்றிய மன்றங்களால் விதிக்கப்பட்டபோதிலும் ஊராட்சிகளின் விஷயத்தில் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு வரவு வைக்கப்படும் ;

பேரூராட்சி மன்றங்களால் விதிக்கப்படுவதை, இப்போதிருப்பது போலவே, பேரூராட்சி மன்ற நிதிக்கு வரவு வைக்கப்படும்.

4. (1958-ம் ஆண்டின் X ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1959-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 126 ஆவது பிரிவின்படி, 1959 மே 6-ம் தேதியுள்ள 940-ம் எண் (உள்ளாட்சித் துறைப்) பல்வகை அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணையை அனுசரித்து, மேற்படி சட்டத்தின் 91 ஆவது, 92 ஆவது பிரிவுகளினால் சில ஊராட்சிகளிடம் உரித்தாக்கப்பட்டுள்ள அலுவல்கள், சில நிபந்தனைகளுக்குட்பட்டு, சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் மாவட்டக் கழகங்களினால் செலுத்தப்படத்தக்கவையாகும். (1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 11 (1) பிரிவின்படி ஊராட்சி ஒன்றியக் குழு ஒன்றை அமைப்பதற்கான விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து (1920 ஆம் ஆண்டின் XIV ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட கழகங்கள் சட்டமும் 1950 ஆம் ஆண்டின் X ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1950 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சி மன்றங்கள் சட்டமும் சம்பந்தப்பட்ட ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தில் நீக்கப்பட்டு விடும். அதற்குப் பிறகு அந்த ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் ஒரு மாவட்டக் கழகத்தின் அதிகார வரம்புக்குள் சேர்க்கப்படாமற் போய்விடும். எனவே 1960 அக்டோபர் 2 ஆம் தேதியிலிருந்து ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக்கப் பெற்றிருக்கிற ஊராட்சி வளர்ச்சி வட்டாரங்கள் சம்பந்தமாக, மேற்குறிப்பிட்டுள்ள அரசாணையை அனுசரித்து, 1950 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 91 ஆவது, 92 ஆவது பிரிவுகளின்படி சம்பந்தப்பட்ட மாவட்டக் கழகங்களால் செலுத்தப்படத்தக்க அலுவல்கள் அக்கழகங்களிடமிருந்து எடுத்து விடப்படும்.

5. (1920 ஆம் ஆண்டின் V ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1920 ஆம் ஆண்டின் தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் கண்ட 249 (1) பிரிவின்படி, அந்த நகராட்சி எல்லைகளிலிருந்து மூன்றுமைல் தொலைவுக்குள் இருக்கிற கிராமப்பகுதிகளில் நகராட்சி மன்றங்கள் அத்தகைய தொழில்களைக் கட்டுப்படுத்தலாம். அந்தப் பிரிவில் 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 192 (ஆ) பிரிவினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாக அப்பகுதிகளுக்கு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக்கப்படுகிற தேதியிலிருந்து, அக்கிராமப்பகுதிகள் மீது கட்டுப்பாடு செலுத்தவும், அவைகளில் ஆபத்தானவையும் தீங்குண்டாக்குபவையுமான தொழில்கள் மீது, கட்டணங்கள் விதிக்கவுமான அதிகாரம் நகராட்சி மன்றங்களுக்கு இல்லாமற் போய்விடும்.

6. ஊராட்சி ஒன்றிய மன்றம் அமைக்கப்படுகிற தேதியிலிருந்து, சம்பந்தப்பட்ட ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தின் எல்லைகளுக்குள் இருக்கிற ஏதேனும் ஊராட்சி அல்லது கிராமப் பகுதியில் மாவட்டக் கழகங்களாலும், நகராட்சி மன்றங்களாலும் செலுத்தப்படத்தக்க அதிகாரங்களைச் செலுத்தும் ஆற்றல் அவைகளுக்கு இல்லாமற் போய்விடும்; அந்த அதிகாரங்கள் 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 111 ஆவது பிரிவின் நிபந்தனைகளின் பிரகாரம், ஊராட்சிகளின் விஷயத்தில் ஊராட்சி ஒன்றியக் குழுவினராலும் ஆணையாளராலும் பேரூராட்சி மன்றத்தின் விஷயத்தில் பேரூராட்சி மன்றத்தினாலும், நிருவாக அலுவலராலும் செலுத்தப்படத்தக்கவையாகும்.

7. மனித உயிருக்கு அல்லது உடல் நலனுக்கு அல்லது சொத்துக்கு வெகுவாய்த் தீங்குண்டாக்குபவரை அல்லது ஆபத்தானவை என்று அரசினர் கருதும் காரியங்களைக் குறிப்பிட்டு 1958-ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ் நாடு சட்டத்தில் கண்ட 111 (1) பிரிவின்படிக்கான விளம்பரம் ஒன்று காலக்கிரமத்தில் தனியாகப் பிறப்பிக்கப்படும். அத்தகைய விளம்பரமும் விதியும் பிறப்பிக்கப்படுகிற வரையில், அபாயமானவையெனவும் தீங்குண்டாக்குபவை எனவும் கருதப்பட்டிருக்கிற காரியங்களைக் குறிப்பிட்டு (1950-ஆம் ஆண்டின் X ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1950-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 91 ஆவது பிரிவின்படி அரசினரால் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட விதிகளும் (1951 மார்ச் 24-ஆம் தேதியுள்ள 520 ஆம் எண் உள்ளாட்சித்துறை அரசாணையுடன் இணைக்கப்பட்டிருப்பதும், ஊராட்சி நடைமுறை நூலின் 67 ஆவது பாராவில் மீண்டும் வெளியிடப்பட்டிருப்பதுமான XXVI ஆம் எண் விளம்பரத்தைப் பார்க்கவும்) அபாயமானவையும் தீங்குண்டாக்குபவையுமான தொழில்களைக் கட்டுப்படுத்தி அவைகளுக்கு உரிமம் கொடுப்பதற்காக, ஒரு ஊராட்சியினால் அல்லது மாவட்டக் கழகத்தினால் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட ஏதேனும் விளம்பரமும், பிந்திய கட்டத்துக்குப் பொருத்தமாயிருக்கிற வரையில், ஊராட்சி ஒன்றிய மன்றங்களும் பேரூராட்சி மன்றங்களும் 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி திருத்தியமைக்கப்பட்ட விளம்பரங்களைப் பிறப்பிக்கிற வரையில் தொடர்ந்து அமலில் இருந்துவரும்.

(1961 சனவரி 4-ஆம் தேதியுள்ள 31-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

மனித உயிருக்கு தீங்குண்டாக்கத்தக்க அல்லது அபாயமான காரியங்கள்.— அடியிற் கண்ட காரியங்கள், மனித உயிருக்கு அல்லது உடல் நலனுக்கு அல்லது சொத்துக்குத் தீங்குண்டாக்கும் அல்லது அபாயமான காரியங்களாகுமெனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன :—

அப்பளம்—தயாரிப்பது, சேர்த்து வைப்பது, அல்லது விற்பது.

ஆடைகள் (அழுக்கடைந்தவை)—அழுக்கடைந்த ஆடைகளைச் சுத்தம் செய்வது, அழுக்கடைந்த ஆடைகளைச் சுத்தம் செய்வதற்காக வைத்திருப்பது, சுத்தம் செய்யப்பட்ட ஆடைகளைச் சொந்த உபயோகத்துக்காகவல்லாமல் மற்றக்காரியங்களுக்காக அல்லது குடியிருப்பு வீடுகளிடையே இராத ஓரிடத்திலே வைத்திருப்பது.

ஆடைகள் (எல்லா வகைப் பழைய ஆடைகளும்), பழைய ஆடைகள், போர்வைகள், முரட்டு மெத்தைகள், தலையணைகள் அல்லது மெத்தை விரிப்புகளை சேர்த்து வைப்பது, விற்பனை அல்லது வாடகைக்குக் கொடுப்பது.

இரத்தம்—சேர்த்து வைப்பது அல்லது மற்றபடி விவகரிப்பது.

இரும்புப் பெட்டிகள்—செய்வது.

இறந்து போன விலங்குகள்—தோல் உரிப்பதும் புதைப்பதும்.

இன்கொழுநீர் (சர்பத்து) குளிர்பானங்களாக அல்லது தண்ணீருடன் கலந்து விற்பனை செய்தல்.

இன்கொழுநீர் (சர்பத்து) சாறு வடிப்பவர்கள் அல்லது மரங்களை அனுபோகத்தில் வைத்திருப்பவர்கள், தங்களுடைய சொந்த மனைகளில் அல்லது இடங்களில், இதன்பொருட்டு (மின்சார அல்லது யந்திர) ஆற்றல் எதையேனும் கொண்டு செலுத்தப்படும் யந்திரங்களின்றி நடத்துகிற குடிசைத் தொழிலாகவல்லாமல் மற்றப்படி தயார் செய்தல்.

உண்டிச்சாலை தங்குமிடத்துக்குச் சம்பந்தப்பட்ட பதிவைப் பார்க்கவும்.

உணவுப் பொருள்கள்—மாவு, கொட்டைகள், சர்க்கரை அல்லது வெல்லத்திலிருந்து செய்யப்படுவை—மனிதர் உட்கொள்வதற்காகத் தயாரித்தல் அல்லது விற்றல்.

உணவு விடுதி—தங்குமிடத்துக்குச் சம்பந்தப்பட்ட பதிவைப் பார்க்கவும்.

உரிவைகள்—பதனிடுதல், சேர்த்து வைத்தல் அல்லது மற்றப்படி விவகரித்தல்.

உலர்புல்—சொந்த உபயோகத்துக்காகவல்லாமல் மற்றப்படி அல்லது குடியிருப்பு வீடுகளிடையே இராத ஊரிடத்தில் விற்பது அல்லது சேர்த்து வைப்பது.

உலோகக் கலங்கள்—தயாரித்தல்.

உலோகங்கள்—அடிப்பது அல்லது உருக்குவது.

எண்ணெய்—கொதிக்க வைத்தல் அல்லது அழுத்தல்.

எரிபொருள்—ஏதேனும் தொழில் காரியங்களுக்காகப் பயன்படுத்துதல்.

எரு—(செயற்கை) தயாரித்தல்.

எரு—சேர்த்து வைத்தல் அல்லது மற்றபடி விவகரித்தல். எலிகளை கவரத்தக்க விவசாய விளைபொருள்—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த அல்லது சில்லறை வியாபாரத்துக்காக அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகத்துக்காக அல்லாமல் வேறு காரியங்களுக்காகச் சேர்த்து வைப்பது.

எலும்புகள்—சேர்த்து வைத்தல் அல்லது மற்றப்படி விவகரித்தல்.

ஓடுகள்—சூளை போடுதல்.

கட்டைக்கரி—சொந்த உபயோகத்துக்காகவல்லாமல் மற்றப்படி அல்லது குடியிருப்பு வீடுகளிடையே இல்லாத ஊரிடத்தில் விற்பது அல்லது சேர்த்து வைப்பது.

கண்ணாடி—தொழில்.

கந்தகம்—உருக்குவது.

கந்தகம் கலந்து வலிவூட்டு வேலைகள்—வைத்திருப்பது.

கந்தைத் துணி—சேர்த்து வைத்தல் அல்லது மற்றபடி விவகரித்தல்

கம்பளி—சுத்தம் செய்வது அல்லது உலர்த்துவது.

கற்கண்டு—சாறு வடிப்பவர்கள் அல்லது மரங்களை அனுபோகத்தில் வைத்திருப்பவர்கள், தங்களுடைய சொந்த மனைகளில் அல்லது இடங்களில் இதன்பொருட்டு (மின்சார அல்லது யந்திர) ஆற்றல் எதையேனும் கொண்டு செலுத்தப்படும் யந்திரங்களின்றி நடத்துகிற குடிசைத் தொழிலாக அல்லாமல் மற்றப்படி தயார் செய்தல்.

கற்பூரம்—கொதிக்க வைத்தல்.

கனிப்பொருள் எண்ணெய்—1934 ஆம் ஆண்டின் கல்லெண்ணெய்ச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளினால் அல்லது அதன்படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகளினால் அல்லது விளம்பரங்களினால் எந்த அளவுகளுக்கு இச்சட்டத்தின்படி வரையறுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவுகளுக்கு மேற்பட்ட

அளவுகளில் சேர்த்து வைப்பதற்காகவல்லாமல் மற்றப்படி (மொத்தமாக அல்லது சில்லறையாகச்) சேர்த்து வைப்பதும் விற்பதும்.

காப்பி விடுதி—தங்குமிடம் சம்பந்தமான பதிவைப் பார்க்கவும்.

கால்நடைகள்—இருபது அல்லது அதற்கு மேற்பட்ட செம்மறியாடுகளை அல்லது வெள்ளாடுகளை பத்து அல்லது அதற்கு மேற்பட்ட பன்றிகளை அல்லது கால்நடைகளை ஒன்ருக வைத்திருத்தல்.

காற்று ஏற்றிய நிர்வகைகள்—(சோடா வகைப் பானங்கள்) தயாரித்தல்.

கூரை வேய்வதற்கான பொருள்கள்—மூங்கில்கள் உட்பட, விற்பது அல்லது சொந்த உபயோகத்துக்காகவல்லாமல் மற்றப்படி அல்லது குடியிருப்பு வீடுகளிடையே இல்லாத ஊரிடத்தில் சேர்த்து வைப்பது.

கெம்புக்கள்—சாணையிட்டுத் தீட்டுதல்.

கொப்பரை—சேர்த்து வைத்தல்—அல்லது மற்றப்படி விவகரித்தல்.

கொப்பரை—சேர்த்து வைத்தல் அல்லது மற்றப்படி விவகரித்தல்.

கொழுப்பு—(விலங்கு அல்லது தாவரம்) சேர்த்து வைத்தல் அல்லது மற்றப்படி விவகரித்தல்.

கோணிப்பைகள்—சேர்த்து வைத்தல் அல்லது மற்றப்படி விவகரித்தல்.

சர்க்கரை—தயாரித்தல் அல்லது தூய்மைப்படுத்துதல்.

சரளை மண்—சரளைக்கல் அல்லது சரளை மண்ணைத் தோண்டியெடுப்பது.

சலவைத்தூள்—பாசிக நீர்க்கரைசலுக்குச் சம்பந்தப்பட்ட பதிவைப் பார்க்கவும்.

சவ்வரிசி—தயாரித்தல் அல்லது வடித்திறக்குதல்.

சாப்பாட்டு விடுதி—தலையிடத்துக்குச் சம்பந்தப்பட்ட பதிவைப் பார்க்கவும்.

சாயந்தோய்த்தல்—

சாராவி வடித்திறக்குவது மூலமாக (இயல்பு மாற்றப்பட்டோ படாமலோ உள்ள) வெறியம் அடங்கிய சாராயம் அல்லது மற்ற சாராவிகளைத் தயாரித்தல்.

சிற்றுண்டிச்சாலை—தங்குமிடத்துக்குச் சம்பந்தப்பட்ட பதிவைப் பார்க்கவும்.

சுண்ணம்—நீருக்குதல் அல்லது சுண்ணும்பு தயாரித்தல்.

சுருட்டு—(சிகரெட்டுகள்(தயாரித்தல், சேர்த்து வைத்தல் அல்லது விற்பனை செய்தல்.

செங்கல் சூளை போடுதல்.

சேமப்பெட்டிகள்—(இரும்பு) தயாரித்தல்.

சோப்பு—செய்தல்.

தங்குமிடம் (1939-ஆம் ஆண்டின் X ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படாதது. அரசின ரால் அல்லது உள்ளூர் அதிகாரிக்குழுவினரால் வைத்து வரப்படாத உண்டிச் சாலை, உணவு விடுதி, சத்திரம் தருமசாலை, அல்லது இளைப்பாறுமிடத்தையாவது, உரிமம் கொடுக்கப் பெருத குடிபெயர் சாலையையாவது, தற்செயலாக வருபவர் கள் பணம் கொடுப்பதன்பேரில் வரவேற்கப்பட்டு உணவுடனோ உணவில்லா மலோ தூங்குவதற்கான வசதியிடம் கொடுக்கப்பெறுகிற இடத்தையாவது வைத்திருத்தல், ஆனால் அதில் அடியிற்கண்டவை அடங்கமாட்டா—

(அ) அரசினரின் அல்லது ஏற்புடைத்தான கட்டுப்பாட்டுக்குட்பட்ட மாணவர் விடுதி, அல்லது

(ஆ) சந்தை அல்லது திருவிழாவுக்கு வருபவர்களுக்கு இடம் கொடுப் பதற்காக, தமிழ் நாடு பொது சுகாதாரச் சட்டத்தில் கண்ட 125 ஆவது பிரிவின் படி உரிமம் கொடுக்கப்பெற்ற வீடு, அல்லது

(இ) இருப்புப் பாதை ஆட்சியினரால் ஏற்படுத்தி வைக்கப்பட்டு, பயனி களால் அல்லது இருப்புப் பாதைப் பணியாளர்களால் அல்லது இவ்விரு திறத் தாராலும் சாதாரணமாகப் பயன்படுத்தப்படுகிற ஓய்வு அறைகளும் இளைப் பாறுமிடங்களும்.

தவிடு—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது வீட்டு உப யோகமல்லாத மற்றக் காரியங்களுக்காக) சேர்த்து வைப்பது.

தானியம்—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகமல்லாத மற்றக் காரியங்களுக்காக) சேர்த்து வைப்பது.

துணி—அச்சிடுதல்.

துப்பாக்கி மருந்து தயாரித்தல்.

தோல் வகைகள்—பதனிடுதல், சேர்த்து வைத்தல் அல்லது மற்றப்படி விவகரித்தல்.

தார்—விற்றல் அல்லது சொந்த உபயோகத்துக்காகவல்லாமல், மற்றப்படி அல்லது குடியிருப்பு வீடுகளிடையே இராத ஓரிடத்திலே சேர்த்து வைத்தல்.

நிலக்கரி—விற்பது அல்லது சொந்த உபயோகத்துக்காகவல்லாமல் மற்றப்படி அல்லது குடியிருப்பு வீடுகளிடையே இராது ஓரிடத்தில் சேர்த்து வைப்பது.

நிறமூட்டுவதும்—சாயந்தோய்ப்பதும்,

நெல்—சொந்த உபயோகத்துக்காகவல்லாமல் மற்றக்காரியங்களுக்காக அல்லது குடியிருப்பு வீடுகளிடையேயிராத ஓரிடத்திலே கொதிக்க வைப்பது.

படச்சுருள்கள்—சேர்த்து வைத்தல்.

பதனிட்ட தோல்—சேர்த்து வைத்தல் அல்லது மற்றப்படி விவகரித்தல்.

பருத்தி—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த அல்லது சில்லறை வியாபாரத்துக்காக அல்லது நூலாக மாற்றுவதற்காகச் சேர்த்து வைப்பது.

பலகைக்கல்—தயாரித்தல்.

பனிக்கட்டி—தயாரித்தல், சேர்த்து வைத்தல் விற்றல்.

பனிக்கட்டிப்பொருள்கள் :—பனிக்கட்டியிலிருந்து தயாரிக்கப்படுபவை இவற்றின் தயாரிப்பில் பனிக்கட்டி முக்கிய சரக்காயிருக்கும்—சேர்த்து வைத்தல் அல்லது விற்றல்.

பருப்பு வகைகள் : மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த அல்லது சில்லறை வியாபாரத்துக்காக அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகத்துக்காக வல்லாமல் மற்றக் காரியங்களுக்காகச் சேர்த்து வைத்தல்.

பற்ற வைப்பு—வாயு அல்லது மின்சாரத்தைக் கொண்டு, பாசிக நீர்க் கரைசலும் சலவைத்தூளும்—சேர்த்து வைத்தல் அல்லது மற்றபடி விவகரித்தல்.

பின்னாக்கு—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது

வீட்டு உபயோகமல்லாத வேறு காரியங்களுக்காக) சேர்த்து வைப்பது அல்லது விற்பது.

பீடிகள்—(பீடி இலைகள்) தயாரிப்பது; சேர்த்து வைப்பது அல்லது விற்பது.

பீர்—காய்ச்சுதல்.

புகையிலை—சேர்த்து வைத்தல் பதப்படுத்துதல், உலர்த்துதல் அல்லது மற்றப்படி விவகரித்தல்.

புல்—விற்பது அல்லது சொந்த உபயோகத்துக்காகவல்லாமல் மற்றப்படி அல்லது குடியிருப்பு வீடுகளிடையே இல்லாத ஓரிடத்தில் சேர்த்து வைப்பது.

புளி—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோக மல்லாத வேறு காரியங்களுக்காக)ச் சேர்த்து வைப்பது.

பொதுத் தங்குமிடம்—தங்குமிடம் சம்பந்தப்பட்ட பதிவைப் பார்க்கவும்.

மண்கலங்கள்—சூளைபோடுதல்.

மயிர்—கழுவுதல் அல்லது உலர்த்தல்.

மழிப்பு அல்லது மயிர் ஒப்பனை நிலையம்—வைத்திருத்தல்.

மாவு—மனிதர் உட்கொள்வதற்காக மாவையும் மாவுப் பண்டங்களையும் தயாரித்தல்.

மாவு—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகமல்லாத மற்றக் காரியங்களுக்காக)ச் சேர்த்து வைப்பது.

மிட்டாய்கள்—தயாரித்தல்.

மிளகுகள்—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த அல்லது சில்லறை வியாபாரத்துக்காக அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகமல்லாத வேறு காரியங்களுக்காகச் சேர்த்து வைப்பது.

மின் பிரிப்பூச்சுமானம் அல்லது பொன் மெருகிடுதல்.

மீன்—சேர்த்து வைப்பது அல்லது மற்றப்படி விவகரிப்பது.

மீன் எண்ணெய்—தயாரித்தல், விற்றல் சேர்த்து வைத்தல்.

முந்திரிக் கொட்டைகள்—வறுத்தலும் அவைகளிலிருந்து முந்திரிப் பருப்பை எடுப்பதும்,

மூட்டு மெத்தைகள்—ஆடைகள் (பழமையானவை) சம்பந்தப்பட்ட பதிவைப் பார்க்கவும்.

மூக்குதூள்—தயாரித்தல்.

மெழுகு வர்த்திகள்—தயாரித்தல்.

இயந்திரங்கள்—ஏதேனும் தொழில் காரியத்துக்காகப் பயன்படுத்தப்படுமே (அவ்வப்போது மாநில அரசினரால் விளம்பர மூலமாக விலக்களிக்கப்பெறக் கூடிய இயந்திரங்கள் அல்லாத வேறு) இயந்திரங்கள்.

வானவெடிகள்—தயாரித்தல்.

விலங்கின் நிணம்—உருக்குதல்.

விலங்குடல் கழிவு—சேர்த்து வைத்தல் அல்லது மற்றப்படி விவகரித்தல்.

விறகு—விற்பது அல்லது சொந்த உபயோகத்துக்காகவன்றி மற்றப்படி அல்லது குடியிருப்பு வீடுகளிடையேயிராத ஓரிடத்திலே சேர்த்து வைத்தல்.

வெட்டுமரம்—விற்பது அல்லது சொந்த உபயோகத்துக்காகவன்றி மற்றப்படி அல்லது குடியிருப்பு வீடுகளிடையே இராத ஓரிடத்திலே சேர்த்து வைப்பது.

வெடிக்கத்தக்க அல்லது தீப்பற்றி எரியக்கூடிய பொருள்கள்—கல்லெண்ணெயையும் அதிலிருந்து கிடைக்கும் பொருள்களையும், 1934-ஆம் ஆண்டின் கல்லெண்ணெச் சட்டத்தின் நிபந்தனைகளினால் அல்லது அதன்படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகளினால் அல்லது விளம்பரங்களினால் எந்த அளவுகளுக்கு இச்சட்டத்தின் பிரயோகம் வரையறுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவுகளுக்கு மேற்பட்ட அளவுகளில் சேர்த்து வைப்பது, அல்லது சேர்த்து வைப்பதற்காகவல்லாமல் மற்றப்படி விற்பது.

வெல்லம்—சாறு வடிப்பவர்கள் அல்லது மரங்களை அனுபோகத்தில் வைத்திருப்பவர்கள், தங்களுடைய சொந்த மனைகளில் அல்லது இடங்களில், இதன்பொருட்டு (மின்சார அல்லது யந்திர) ஆற்றல் எதையேனும் கொண்டு செலுத்தப்படும் இயந்திரங்களின்றி நடத்துகிற குடிசைத் தொழிலாக அல்லாமல் மற்றபடி(தயார் செய்தல்.

வெல்லம்—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகத்துக்காகவல்லாமல் மற்றக் காரியங்களுக்காக)ச் சேர்த்து வைப்பது.

வேர்க்கடலை—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகமல்லாத மற்றக் காரியங்களுக்காக)ச் சேர்த்து வைப்பது.

வைக்கோ—விற்பது அல்லது சொந்த உபயோகத்துக்காகவல்லாமல் மறறப்படி, அல்லது குடியிருப்பு வீடுகளிடையே இல்லாத ஓரிடத்தில் சேர்த்து வைப்பது.

அருவருப்பான அல்லது உடல்நலத்துக்கு ஒவ்வாத நாற்றம் எழுப்புகிற ஏதையேனும் தயாரித்தல்.

(1961 சனவரி 12-ஆம் தேதியுள்ள 113-ஆம் எண் கிராம முன்னேற்றம், உள்ளாட்சித்துறைப்பல்வகை அரசாணை.)

அத்தியாயம் V வரவினங்களும் செலவும்.

60. ஊராட்சி ஒன்றியக்குழுவின் வரவினங்களும் செலவும்.

பாகம் 1—வரவினங்கள்.

(1) மேற்கண்ட சட்டத்தின் பிரகாரம் அல்லது அதன்படி செய்யப்பட்ட ஏதேனும் விதி அல்லது துணைச்சட்டத்தின்படி வழங்கப்படுகிற உரிமம் அல்லது அனுமதி ஒவ்வொன்றின் விஷயமாகவும் செலுத்தப்படத்தக்க கட்டணத்தை, அல்லது உரிமம் அல்லது அனுமதிக்கான விண்ணப்பம் கொடுத்துக் கொள்ளப் படும்போது முன்னதாக வசூலித்துவிட வேண்டும்.

(2) கட்டண வசூலுக்கும் அந்த உரிமம் அல்லது அனுமதி வழங்குவதற்கும் சம்பந்தப்பட்ட விவரங்களை, உரிமங்களையும் அனுமதிகளையும் பற்றிய பதிவேட்டில் தொடர்ச்சியாக எழுதவேண்டும்; அவ்வப்போது அரசினரால் விதிக்கப் படக்கூடிய படிவத்தின் பிரகாரம் அப்பதிவேட்டை வைத்துவரவேண்டும்.

(3) அத்தகைய உரிமம் அல்லது அனுமதி வழங்கப்பெறும் ஒவ்வொரு வருக்கும் எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு, அதுகொடுக்கப்படுகிறதோ அந்த நிபந்தனைகளுக்குப்படி ஒன்றைக் கொடுக்க வேண்டும்.

2. கட்டளைகளிலிருந்தும் பொறுப்பு நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கும் வருமானம்.—(1) ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளர், அவ்வொன்றிய மன்றத்தினால் நிருவகிக்கப்படுகிற கட்டளை அல்லது பொறுப்பு நிறுவனம் ஒவ்வொன்றினுடைய நாளது வரையிலான பதிவு ஒன்றை ஊராட்சி ஒன்றிய

மன்ற அலுவலகத்தில் வைத்துவர வேண்டும் அல்லது வைத்துவரும்படி செய்ய வேண்டும். அப்பதிவில் பின்வருபவை காட்டப்பட்டிருத்தல் வேண்டும் :—

(அ) கட்டளையின் அல்லது பொறுப்பு நிறுவனத்தின் நிருவாகம் இன்ன அதிகாரத்தின்படி ஊராட்சி ஒன்றிய மன்றத்தினிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிற தென்பது ;

(ஆ) கட்டளையின் அல்லது பொறுப்பு நிறுவனத்தின் உடைமைகளும் வருமான ஆதாரங்களும் ;

(இ) கட்டளைக்கு அல்லது பொறுப்பு நிறுவனத்துக்குச் சார்த்தப்படத் தக்க செலவு.

(2) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் (1) உள்விதியில் குறிப்பிட்டிருக்கிற பதிவுடன் கூட, கட்டளைகளையும் பொறுப்பு நிறுவனங்களையும் பற்றிய பதிவேடு ஒன்றை, ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகத்தில் வைத்துவர வேண்டும் அல்லது வைத்துவரும்படி செய்ய வேண்டும், கட்டளை அல்லது பொறுப்பு நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் சம்பந்தப்பட்ட ஆண்டு விவகாரங்கள் அப்பதி வேட்டில் தனித்தனிப் பக்கங்களில் காட்டப்படவேண்டும்.

(3) உதவித் தொகைகள்.—ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குச் செலுத்தப் படத்தக்க உதவித் தொகைகள், அரசினர், பிற ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், பிற தல அதிகாரிகள், தனிப்பட்டவர்கள் ஆகியோரிட மிருந்து வருவதை, பலவகைக்கேட்புப் பதிவேடு மூலமாகக் கவனித்துப் பார்க்க வேண்டும்.

(4) நிழற்சாலை வரவுகள்.—மரங்களின் மேல் மாசூல் விளைபொருளின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வரவுகளை ஆணையாளர், பல்வகைக் கேட்புப் பதிவேடு மூலமாகக் கவனித்துப் பார்க்க வேண்டும்.

(5) கருவிகள், தளவாடங்கள், பெருக்கிய குப்பைகள், பழம் பண்டங்கள், சாமான்கள் ஆகியவற்றை விற்று தொகைகள்.—பயன்படாத பழைய கருவிகள், தளவாடங்கள், பண்டங்கள், பொருள்கள், பெருக்கிய குப்பைகள் ஆகியவற்றைத் தீர்வு செய்வதற்கு, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆணைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எழுதி வைக்கப்படவேண்டிய திட்டவட்டமான காரணங்களுக்காக ஊராட்சி ஒன்றிய மன்றம் வேறுவிதமாக ஆணையிட்டா லன்றி, அந்தக் கருவிகள், தளவாடங்கள், பண்டங்கள், பொருள்கள், பெருக்கிய குப்பைகள் ஆகியவற்றைப் பகிரங்க ஏலத்தில் விற்க வேண்டும். அவ்விற்பனை கள் ஊராட்சி ஒன்றிய மன்றத்தினால் உறுதிப் படுத்தப்படுவதற்குட்பட்ட தாகும். அத்தகைய எல்லா விற்பனைகளிலிருந்தும் கிடைக்கிற வரவுகளை பல்வகை விற்பனைகள் பதிவேட்டில் காட்ட வேண்டும்.

6. அங்காடிகள் வண்டிப்பேட்டைகள், இறக்குமிடங்கள் அல்லது தங்குமிடங்கள், கால்நடை வெட்டுமிடங்கள், மீன்பண்ணைகள், தோணித் துறைகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் கட்டணங்கள்.—(1) ஏதேனும் அங்காடி, வண்டிப்பேட்டை, இறக்குமிடம் அல்லது தங்குமிடம், கால்நடை வெட்டுமிடம், மீன்பண்ணை அல்லது தோணித்துறையை உபயோகிப்பது சம்பந்தமாகக் கட்டணங்கள் வசூலிக்கும் உரிமையைக் குத்தகைக்குவிட ஊராட்சி ஒன்றிய மன்றம் கருதினல், இன்னதிட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டுக் குத்தகை வழங்கப்படுமென்று கண்டுள்ள பூர்வாங்க அறிக்கை ஒன்றை ஆணையாளர் தயாரிக்க வேண்டும்.

(2) பூர்வாங்க அறிக்கையில் கண்டுள்ள திட்டங்களையும் நிபந்தனைகளையும் ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

ஆனல், அந்த அறிக்கை ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்டிருந்து, அதன் திட்டங்களிலும், நிபந்தனைகளிலும் எவையேனும் மாறுதல்கள் இருந்தாலன்றி, அவ்வாறு ஒப்புக் கொள்வது அவசியமாகமாட்டாது.

(3) அடியிற்கண்ட திட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டுக் குத்தகை வழங்கப்படுமென்று பூர்வாங்க அறிக்கையில் கண்டிருக்க வேண்டும். அவையாவன :—

(அ) ஒருவர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிற தொகையைப் பிணையமாகச் செலுத்தினலன்றி, அல்லது முந்திய ஏதேனும் குத்தகை சம்பந்தமாக ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு அவர் பாக்கி செலுத்த வேண்டியிருந்தால், அவர் ஏலத்தில் விலைகேட்க அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) குத்தகைக்காலம் ஓர் ஆண்டுக்கு மேற்படாவிட்டால்—

( ) குத்தகைதாரர் தமக்குச் சாதகமாகக் குத்தகை உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள், எந்தத் தொகையோடு (அ) பகுதியில் குறிப்பிட்டிருக்கிற பிணையத்தைச் சேர்த்தால் மொத்த குத்தகைத் தொகையில் கால்பங்கு ஆகுமோ அந்தத் தொகையைக் கட்ட வேண்டும். இந்தத் தொகையானது, ஆண்டின் கடைசி மூன்று மாதங்களுக்கு சேர வேண்டிய குத்தகை தொகைத் தவணைகளுக்காகச் சாதாரணமாய்ச் சரிக்கட்டப்படும். ஆனல், குத்தகைதாரர் கெடுகடந்தும் செலுத்தாமலிருக்கிற

குத்தகைத் தொகையின் எந்தத் தவணையின் பொருட்டும், மறு விற்பனை அல்லது துறையினர் நிர்வாகம் காரணமாக இழப்பு நேரிட்டால் அதன் பொருட்டும் அது சரிக்கட்டப்படலாம், மேலும்

(ii) குத்தகைத் தொகையின் எஞ்சிய பாகத்தை, ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியன்று தொடங்கி ஒன்பது மாத காலத்துக்குள் குத்தகைப் பத்திரத்தில் குறிப்பிட்டிருக்கிற தேதிகளில் அல்லது அவைகளுக்கு முன்னதாகச் செலுத்திவிட வேண்டும்.

(இ) குத்தகைக்காலம் ஓர் ஆண்டுக்கு மேற்பட்டால்—

(i) குத்தகைதாரர், தமக்குச் சாதகமாகக் குத்தகை உறுதிப் படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள், எந்தத் தொகையோடு (அ) பகுதியில் குறிப்பிட்டிருக்கிற பிணையத்தைச் சேர்த்தால், குத்தகைத் தொகையின் மூன்று தவணைக்குச் சமமான தொகை ஆகுமோ அந்தத் தொகையைக் கட்டவேண்டும். இந்தத் தொகையானது சேரவேண்டிய குத்தகைத் தொகையின் கடைசி மூன்று தவணைகளுக்காகச் சாதாரணமாய்ச் சரிக்கட்டப்படும். ஆனால் குத்தகைதாரர் கெடுகடந்தும் செலுத்தாமலிருக்கிற குத்தகைத் தொகைத் தவணைகளின்பொருட்டும், மறு விற்பனை அல்லது துறையினர் நிர்வாகம் காரணமாக இழப்பு நேரிட்டால் அதன்பொருட்டும், அது சரிக்கட்டப்படலாம். மேலும்

(i) குத்தகைத் தொகையின் எஞ்சிய பாகத்தை, ஊராட்சி ஒன்றிய மன்றம் நிச்சயிக்கக்கூடிய தேதிக்குள் முழுவதும் செலுத்திட வேண்டும்.

ஆனால், அவ்வாறு நிச்சயிக்கப்படுகிற தேதியானது, குத்தகைக்காலம் காலாவதியாவதற்கு முன் மூன்று மாதங்களுக்குப் பிந்தியதாயிருக்கக்கூடாது.

(ஈ) ஊராட்சி ஒன்றிய மன்றம் குத்தகையை உறுதிப்படுத்துகிற தேதி யிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் குத்தகைப் பத்திரத்தைச் சாதாரணமாக எழுதிப் பதிவு செய்து விடவேண்டும்.

(உ) குத்தகைகளின்படி சேரவேண்டிய ஏதேனும் தவணை அது செலுத்தப்படத்தக்கதாகிவிட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் செலுத்தப் படாவிட்டால், ஆணையாளர் அச்செய்தியை ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு உடனே தெரிவிக்க வேண்டும். அதன் பேரில், அவர்கள், குத்தகையை இறுதி செய்து, மறுவிற்பனை ஆணையிடப்பட்டால், அது மறு விற்பனையாகிற வரையில்

குத்தகைதாரரின் இழப்புப் பொறுப்பில் துறையினர் அதை நிர்வகிக்க வேண்டுமென ஆணையிட வேண்டும்.

(4) பூர்வாங்க அறிக்கையானது, ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு, மாவட்ட அரசிதழில் வெளியிடப்படவேண்டும். அறிக்கையின் ஒன்றை, ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகத்தின் அறிக்கைப் பலகையிலும் கிராம/பட்டண எல்லைக்குள் சில முதன்மையான இடங் களிலும் கூட ஒட்டி வைக்க வேண்டும்.

ஆனால் ஊராட்சி ஒன்றிய மன்றம், குத்தகையிலிருந்து, கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் வருமானத்தையும், குத்தகையின் தன்மையையும் கவனித்து பூர்வாங்க அறிக்கையை வெளியிடுவதை, இந்த உள்விதியில் கண்டுள்ளபடி செய்யலாமா வேறெவ்விதமாகவேனும் செய்யலாமா என்பதைத் தீர்மானிக்கலாம். பிந்தியதில் இன்ன விதம் அல்லது விதங்களில் வெளியிட வேண்டும் என்பதை குறிப்பிட வேண்டும்.

(5) ஆணையாளராவது அவரிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற் றுள்ள ஒருவராவது ஏலத்தை நடத்த வேண்டும். பூர்வாங்க அறிக்கையில் குறிப்பிடப்படக்கூடிய தொகையைப் பிணையமாகக் கட்டத்தவறிப்போகிற அல்லது முந்திய ஒரு குத்தகை சம்பந்தமாக ஊராட்சி ஒன்றியக் குழுவிற்குப் பாக்கி செலுத்தவேண்டியிருக்கிற ஒருவரை ஏலத்தில் விலை கேட்க விடக் கூடாது.

(6) ஆணையாளர், ஏலம் முடிந்தபிறகு, ஏலத்தில் கேட்கப்பட்ட விலை களின் பட்டியல் ஒன்றை, ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு முன் வைக்க வேண்டும். ஏலத்தில் கேட்கப்பட்ட நிலைகளில் எதை ஒப்புக் கொள்ள வேண்டுமென்பதை ஊராட்சி ஒன்றிய மன்றம் தீர்மானிக்க வேண்டும். ஒப்புக் கொள்ளப்பட்ட விலை மிக அதிக விலைக்குரியதாயிராவிட்டால், ஒப்புக் கொள்ளப்பட்ட விலையைக் காட்டிலும் அதிக மதிப்புள்ள விலை அல்லது விலை களைத்தள்ளி விட்டதற்கான காரணங்களை எழுதி வைக்க வேண்டும்.

(7) பகிரங்க ஏல மூலமாக விற்பனை செய்வது விலை கேட்பவர்கள் இல்லாமையினாலோ இவர்களிடையே வலுவான ஒற்றுமையினாலோ வேறு ஏதேனும் காரணத்தினாலோ குறைந்தது இரண்டு சமயங்களிலேனும் வெற்றி பெறுமற்போயிருக்கிற விலக்கான சந்தர்ப்பங்களில் ஆணையாளர், மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொண்டு, குத்தகைக்காக முத்திரையிட்ட ஒப்ப அறிவிப்புகளை வரவழைத்து, அந்த ஒப்ப அறிவிப்புகளை

ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு முன் வைக்க வேண்டும். அந்த ஒப்ப அறிவிப்புகளில் எதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதை ஊராட்சி ஒன்றிய மன்றம் தீர்மானிக்க வேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்ப அறிவிப்பு மிக அதிகத்தொகைக்கான ஒப்ப அறிவிப்பாயிராவிட்டால், ஒப்புக் கொள்ளப் பட்டதைக் காட்டிலும் அதிக மதிப்புள்ள ஒப்ப அறிவிப்பினை அல்லது ஒப்ப அறிவிப்புகளைத் தள்ளி விட்டதற்கான காரணங்களை எழுதி வைக்க வேண்டும்.

(8) பின்னர், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் சார்பில், ஆணையாளர் பூர்வாங்க அறிக்கையில் கண்ட நிபந்தனைகள், திட்டங்களின் பிரகாரம், யாருடைய கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதோ அவருடன் எழுத்து மூலமாக ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

(9) சேரவேண்டிய தொகைகள் வசூலாவதை, பல்வகைக் கேட்புப் பதிவேடு மூலமாகக் கவனித்து வரவேண்டும்.

(10) குத்தகை ஒவ்வொன்றின் விஷயத்திலும், குத்தகைப் பத்திரம் ஒன்று எழுதப்படவேண்டும்: அதில், அடியிற் கண்டவைகள் குறிப்பிடப் பட்டிருக்க வேண்டும் :—

(அ) குத்தகை நீடிக்கும் காலம் ;

(ஆ) வாடகைத்தவணை ஒவ்வொன்றின் தொகையும், இன்ன தேதி யன்று அல்லது அதற்கு முன் அது செலுத்தப்படத்தக்கதாகுமென்பது ;

(இ) உரிய தேதிக்குப் பிறகு எந்தத் தவணையாவது செலுத்தப் பட்டால், செலுத்தப்படத்தக்க ஈடு ;

(ஈ) மறுவிற்பனையினாலும் அல்லது துறையினர் நிர்வாகம் மூலமாகவும் குத்தகைதாரர் தமது ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறிப் போனதனால் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்ய குத்தகைதாரருக்குள்ள பொறுப்பு ;

(உ) அங்காடிகள், இறக்குமிடங்கள், தங்குமிடங்கள், வண்டிப் பேட்டைகள், கால்நடை வெட்டுமிடங்கள், மீன் பண்ணைகள், தோணித் துறைகள் ஆகியவை சம்பந்தமாகக் குத்தகைதாரர் விதிப்பதற்குரிய கட்டணங் களின் வீதம்.

(11) (அ) அவ்வப்போது மாவட்ட ஆட்சியாளர் நிச்சயிக்கக்கூடிய மனைத்தீர்வையைச் செலுத்தக் குத்தகைத்தாரர் பொறுப்பாளியாவார் எனக்

கண்டுள்ள வெளிப்படையான நிபந்தனை ஒன்று குத்தகைப்பத்திரம் ஒவ்வொன்றிலும் இருக்க வேண்டும்.

(ஆ) ஒருவர் குத்தகைப்பத்திரம் எழுதிக் கொடுத்தாகிற வரையில், குத்தகையின்படி அவருக்குள்ள உரிமைகளை அவர் செலுத்திவிடக் கூடாது.

7. கட்டணங்களை வசூலிப்பது.—(1) ஏதேனும் அங்காடி வண்டிப் பேட்டை, இறக்குமிடம், தங்குமிடம், கால்நடை வெட்டுமிடம், மீன் பண்ணை அல்லது தோணித்துறையைத் துறையினர் நிருவகித்தால், அதைப் பயன்படுத்துவது சம்பந்தமாக விதிக்கப்படும் எல்லாக் கட்டணங்களையும் ஆணையாளர் அச்சிட்டு வழங்கும் சீட்டுகள் மூலமாக வசூலிக்க வேண்டும்.

(2) இச்சீட்டுக்களை வெவ்வேறு கட்டண வீதங்களுக்காக வெவ்வேறு நிறங்களில் புறச்சீட்டாகவும் அடிச் சீட்டாகவும் அச்சிட வேண்டும். ஒவ்வொன்றிலும் வீதங்களை அச்சிடவேண்டும். ஒவ்வொருவகைச் சீட்டையும் ஒவ்வொன்றும் 100 கொண்ட சுவடிகளாகக் கட்டவேண்டும். இயந்திரத்தைக் கொண்டு அவைகளுக்குத் தொடர்ச்சியாக இலக்கமிடவேண்டும். வசூலிக்கும் அலுவலர்களிடம் கொடுக்கப்படுவதற்குமுன், ஆணையாளரின் அல்லது இதன் பொருட்டு அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஒருவரின் முன்னிலையில், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பொது முத்திரையைக் கொண்டு அவைகளுக்கு முத்திரையிட வேண்டும்.

(3) இந்தச் சீட்டுகள் சம்பந்தமாக, ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகத்திலே இரண்டு பாகங்கள் கொண்ட பதிவேடு ஒன்றை வைத்துவர வேண்டும்.

முதல்பாகம் இருப்புப்பதிவேடாகும்: வரவினங்களுக்கான பதிவுகளுக்கு, ஆணையாளராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஓர் அலுவலராவது சான்றுக் கையொப்பமிட வேண்டும்: கொடுப்பதற்கான பதிவுகளுக்கு, சம்பந்தப்பட்ட வசூலிக்கும் அலுவலர் சான்றுக் கையொப்பமிட வேண்டும்.

இரண்டாம் பாகமானது, இந்தச் சீட்டுகள் மூலமாக வருவாய் வசூலிக்கும் வேலை ஒப்புவிக்கப்பெற்றுள்ள அலுவலர் ஒவ்வொருவருக்குமுரிய தனிப்பட்ட பேரேட்டுக் கணக்காகும். வசூலிக்கும் அலுவலர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வகைச் சீட்டின் எண்ணிக்கையையும் மதிப்பையும் அதில் பற்றாக எழுதவேண்டும். அவர் ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகத்தில் செலுத்திய வசூல்களின் தொகையை அதில் வரவாக வைக்க வேண்டும். வசூலிக்கும் அலுவலர் ஒவ்வொரு நாளும் பணம் கட்ட வேண்டும்: அதோடு கூட அவர் கொடுத்த ஒவ்வொருவகைப் பயணச்சீட்டின் எண்ணிக்கையையும் மதிப்பையும் பற்றிய விவரங்களையும் அனுப்ப வேண்டும்.

(4) சீட்டுச் சுவடி ஒன்று முழுவதும் பயன்படுத்தப்பட்டிருந்தால் உள்ளபடியான வரவுகளுடன் வைத்துச் சரிபார்ப்பதற்காக, அடிச் சீட்டை, ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும்.

(5) அன்றியும், வசூலிக்கும் அலுவலர், தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட சீட்டுகள், தாம் செய்த வசூல் ஆகியவைகளுக்குக் கணக்கு வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு வகையையும் சேர்ந்த சீட்டு மூலம் அன்றாடம் செய்யப்பட்ட வசூல்களை அந்தக் கணக்கில் எழுதி, ஒவ்வொரு நாள் முடிவிலும் இருப்புக் கட்டவேண்டும். ஆணையாளராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஓர் அலுவராவது அந்தக் கணக்கையும் சீட்டுகளின் இருப்பையும் முறையான இடைக்காலங்களில் சரிபார்க்க வேண்டும் : அவ்வாறு சரிபார்த்த தற்கு அவர் சான்றிட வேண்டும்

8. **கட்டிடங்கள், நிலங்கள், மற்ற அசையாப் பொருள் கிடைக்கும் வருமானம்.**—(1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குச் சொந்தமான ஒரு கட்டிடம் வாடகைக்கு விடப்பட்டால், அல்லது அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குச் சொந்தமான ஏதேனும் நிலம் அல்லது மற்ற அசையாப் பொருள் குத்தகைக்கு விடப்பட்டால், அக்கட்டிடத்தின் வாடகை அல்லது, அக்குத்தகையின்படிச் சேரவேண்டிய தொகை உடனுக்குடன் வசூலாவதை, பல்வகைக் கேட்புப்பதிவேடு மூலமாகக் கவனித்து வரவேண்டும்.

(2) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பயண மாளிகை, ஓய்வு விடுதி அல்லது சத்திரம் ஒவ்வொன்றிலும், அவ்வப்போது அரசினர் விதிக்கக் கூடிய படிவப் பிரகாரம் உள்ள பதிவேடு ஒன்றை வைத்து வர வேண்டும் : அந்தப் பயண மாளிகை, ஓய்வு விடுதி அல்லது சத்திரத்தை அனுபோகத்தில் வைத்திருப்பவர், அப்பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள விவரங்களை எழுதும்படி அவருக்குச் சொல்ல வேண்டும். அவ்வாறு அனுபோகத்தில் வைத்திருப்பதற்காக, ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் நிச்சயிக்கப்படுகிற வீதங்களின்படி கட்டணங்கள் விதிக்க வேண்டும்.

9. **செய்யப்பட்ட பணிகளுக்கான வசூல்கள்.**—(1958 ஆம் ஆண்டின் XXXV வது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் வேறு விதமாகச் சொல்லப்பட்டிருந்தாலன்றி, மற்றப்படி, தனிப் பட்ட ஆள் அல்லது மன்றத்துக்கான பணியின் மதிப்பீட்டுச் செலவு முன்ன தாக செலுத்தப்பட்டிருந்தாலன்றி, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் அப் பணியை மேற்கொள்ளக் கூடாது.

10. பல்வகைப்பட்டியல் பதிவேடு.—பலவகையாகச் சேரவேண்டிய எந்தத் தொகைகளுக்காகப் பட்டியல்கள் அனுப்பப்படுகின்றனவோ அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களையும் பல்வகைப்பட்டியல் பதிவேட்டில் எழுதி வைக்க வேண்டும்.

11. வருவாய்களைத் திருப்பிக்கொடுப்பது.:ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வருவாய் இனம் எதையும், அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஒப்பளிப்பின்றித் திருப்பிக் கொடுக்கக் கூடாது. ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் வழங்கப்பட்ட ஒப்பளிப்பு, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்குப் பிறகு கலாவதியாகிவிடும்; அதற்குப் பிறகு புதிதாக ஒப்பளிப்பு வாங்கவேண்டும்.

வருவாயைத் திருப்பிக்கொடுப்பதற்கான பட்டியல்களை அரசினர் அவ்வப்போது விதிக்கக்கூடிய படிவத்தின் பிரகாரம் எழுதவேண்டும். தொகை திருப்பிக் கொடுக்கப்பட்டவுடனே, அது வழங்கப்பட்டது பற்றியகுறிப்பு ஒன்றை, பொருத்தமான கணக்குகளில் முதல் வரவுப் பதிவுக்கு எதிரே எழுத வேண்டும்.

12. மரங்கள், காற்றடித்து விழுந்த மரங்கள் முதலியவற்றின் மேல் மாசூலை விற்பது.—(1) (அ) மரங்களின் விளைபொருள் அல்லது மேல் மாசூல்.

(ஆ) காற்றடித்து விழுந்த மரங்கள், பட்டுப் போன மரங்கள்.

(இ) பெருக்கிய குப்பைகள்.

(ஈ) கருவிகள், தளவாடங்கள்.

(உ) பழைய பண்டங்கள், சாமான்கள்.

(ஊ) ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குச் சொந்தமான கட்டிடங்கள், நிலங்கள் ஆகியவற்றின் குத்தகைகள்.

ஆகிய இவைகளின் சகல விற்பனைகளையும், பகிரங்க ஏலம் மூலமாகச் செய்ய வேண்டும். ஆணையாளராவது அவரிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்றுள்ள ஒருவராவது அந்த ஏலத்தை நடத்தவேண்டும். அவர் அந்த ஏலத்தைப்பற்றித் தாம் தகுதியெனக்கருதுகிற விதமாக முழு விளம்பரம் செய்ய வேண்டும். ஆணையாளர் ஏலத்தில் கேட்கப்பட்ட விலைகளை ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முன் வைக்க வேண்டும்: அவ்விலைகளில் எதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதை அவர்கள் தீர்மானிக்க வேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட்ட விலை, மிக உயர்ந்த மதிப்புள்ள விலையாயிராவிட்டால் ஏற்றுக்

கொள்ளப்பட்டதைக் காட்டிலும் அதிக மதிப்புள்ள விலே அல்லது விலேகளைத் தள்ளிவிட்டதற்குண்டான காரணங்களை எழுதி வைக்க வேண்டும்.

ஆனல் (ஊ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிலங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றின் விஷயத்தில், முதலில் குத்தகை வழங்கப் பெற்றவருக்கே குத்தகையைப் புதுப்பித்துக் கொடுப்பது ஆதாயமுள்ளதாக இருந்தால், ஊராட்சி ஒன்றிய மன்றம், மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாக பெற்றுக் கொண்டு, பகிரங்க ஏலம் வேண்டாமென்று சொல்லிவிடலாம்.

(2) தாம் கேட்ட விலே ஒப்புக்கொள்ளப் பெற்றவர், தாம் செலுத்தத்தக்க முழுத்தொகையையும் செலுத்தியாகிற வரையில், விற்கப்பட்ட பொருள்களை அவர் தம் வசப்படுத்திக் கொள்ளவிடக் கூடாது.

(3) விற்பனைகளையெல்லாம், பல்வகை விற்பனைகள் பதிவேட்டில் காட்ட வேண்டும்: வரப்பற்றிய விற்பனைத் தொகைகளையெல்லாம் அதில் எழுத வேண்டும்.

13. கட்டணங்களை வசூலிப்பதற்காகப் பிணையம்.—மரங்களுடைய விளை பொருள்களின் அல்லது மேல்மாசூலின் அல்லது அங்காடிகள்—வண்டிப் பேட்டைகள்—இறக்குமிடங்கள் அல்லது தங்குமிடங்கள், கால்நடை வெட்டு மிடங்கள் அல்லது மீன் பண்ணைகள் சம்பந்தமாகக் கட்டணங்கள் வசூலிக்கும் உரிமையின் அல்லது அதே மாதிரியான வேறு ஏதேனும் உரிமையின் குத்தகை யின் நிபந்தனைகள் முறைப்படி நிறைவேற்றுவதற்காக, ஆணையாளர் போது மானதென்று கருதுகிற பிணையத்தை எல்லா விஷயங்களிலும் வாங்க வேண்டும். குத்தகைதாரர் குத்தகையின் நிபந்தனைகள் எல்லாவற்றையும் திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தாலன்றி மற்றப்படியும் நிறைவேற்றுகிற வரையிலும், அவ்வாறு வாங்கப்பட்ட பிணையத்தை அவருக்குத் திருப்பிக் கொடுக்கக் கூடாது. ஆனல், குத்தகையின்படி சேரவேண்டிய கடைசித் தவணைக்காகப் பிணையத்தொகையைச் சரிக்கட்டிவிடலாம்.

14. பணத்தொகைகளைப் பெற்றுக்கொள்வது.—ஆணையாளராவது அவரு டைய அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு அரசுப் பணியாளர் ஒருவருடைய சேவைகள் அந்த முறைமையில் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் வசம் விட்டு வைக்கப்பட்டிருந்தால் அத்தகைய பணியாளர் உட்பட, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஓர் அலுவலர் அல்லது பணியாளராவது, பெற்றுக் கொள்ளும் சகல பணத்தொகைகளையும், அவர்கள் பெற்றுக் கொள்ளப்பட்டவுடனே கணக்கில் எழுதவேண்டும். அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் சகல பணத் தொகைகளையும் ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகத்தில் அன்றாடம் செலுத்தி விடவேண்டும்.

15. **பணத் தொகைகளைப் பயன்படுத்துவது.**—ஊராட்சி ஒன்றிய மன்றச் சார்பில் பெற்றுக்கொள்ளப்படும் பணத் தொகைகளை, முதலில் கணக்கில் எழுதி, அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நிதிகள் போட்டு வைக்கப்படுகிற கருவூலத்தில், பாங்கியில் அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் செலுத்தப்பட்டாலன்றி, அல்லது கட்டப்பட்டாலன்றி, அக்குழுவின் செலவுக்காக அதைப்பயன் படுத்துக் கூடாது.

16. **கருவூலத்தில், வங்கியில் அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் செலுத்துவது.**—கருவூலத்தில் வங்கியில் அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் செலுத்துச் சீட்டு மூலமாகத்தான் ஒவ்வொரு தடவையும் பணம் செலுத்த வேண்டும். செலுத்தப்படும் தொகை, அதன் தன்மை, இன்னாருக்காக அல்லது இன்ன அலுவலகத்துக்காக அது செலுத்தப்படுகிறதென்பது ஆகிய விவரங்களைச் செலுத்தச் சீட்டில் கண்டிருக்க வேண்டும்.

17. **மூலதன வரவுகளைச் சாதாரண செலவுக்குப் பயன் படுத்துவது.**—ஊராட்சி ஒன்றிய மன்றமும் மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், நிலம் கட்டிடங்கள் அல்லது யந்திரங்களை விற்றுவந்த தொகைகளைப் போன்ற தனது மூலதன வரவுகளை சாதாரண செலவுக்குப் பயன்படுத்தக் கூடாது.

18. **வசூல் சுவடி வழங்குதல்.**—ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் முன்னதாகக் கொடுக்கப்பட்ட பட்டியல்களின் பேரில் ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு சேரவேண்டிய வருவாயை வசூலிக்கும் வேலை ஒப்புளிக்கப்பெற்றுள்ள ஊராட்சி ஒன்றியப் மன்றப் பணியாளர் ஒவ்வொருவருக்கும் அல்லது கிராமப் பெரிய தனக்காரருக்கு வசூல் சுவடி ஒன்றை வழங்குதல் வேண்டும்.

19. **வரிகளையும் மற்ற வருவாய்களையும் வசூலிப்பது.**—வரி வசூலிப்பவர்களாவது, மற்றப் புறமுகக்கீழ்நிலை அலுவலர்களாவது, கிராமப் பெரியதனக்காரர்களாவது வசூலிக்கிற வரிகளையும் மற்ற ஊராட்சி ஒன்றிய மன்றம் வருவாயையும் ஊராட்சி ஒன்றிய மன்றம் அலுவலகத்தில் வைத்து வரப்படும் வசூல் பதிவேடு மூலமாக, ஊராட்சி ஒன்றியக்குழு அலுவலகத்தில் செலுத்திவிட வேண்டும்.

20. **பற்றுச் சீட்டுகள் கொடுப்பது.**—அலுவலக வசூல் பதிவேட்டில் ஏற்றுக் கொள்ளப்படும் வரவுகள் விஷயத்தில் தவிர மற்றப்படி, பொது மக்களிடமிருந்து ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் சகல பணத் தொகைகளுக்காகவும், அரசினரால் விதிக்கப்பட்ட படிவப்பிர

காரம் உள்ள பற்றுச் சீட்டுகளைக் கொடுக்கவேண்டும். ஆணையாளராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள வேறொருவராவது அப்பற்றுச் சீட்டு களில் கையெழுத்திட வேண்டும்.

21. **ரொக்கக் கணக்கும் கிளைப்பதிவேடும்.**—ஆணையாளர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே பின்வரும் கணக்குகளையும் பதிவேடுகளையும், அவ்வப்போது அரசினரால் விதிக்கப்படக் கூடிய படிவப்பிரகாரம் வைத்து வரவேண்டும் அல்லது வைத்து வரும்படிச் செய்ய வேண்டும்

(1) ரொக்கக் கணக்கு.

(2) ஊர்திகளின் பேரியான வரி வசூல் பதிவேடு.

(3) உரிமங்கள் அனுமதிகள் பதிவேடு.

(4) பல்வகைக் கேட்புப் பதிவேடு.

(5) வருவாய் தரும் சொத்துக்கள் பதிவேடு.

(6) வசூல் சுவடி.

(7) பணம் கொடுக்கலாமென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பட்டியல்கள் பதிவேடு.

(8) பல்வகை விற்பனைகள் பதிவேடு.

(9) பல்வகைப்பட்டியல் பதிவேடு.

(10) கட்டளைகள் பொறுப்பு நிறுவனங்கள் பதிவேடு.

(11) சிட்டா.

(12) சம்பளச் செல்லும் பதிவேடு

(13) பல்வகை வரவுகள்.

(14) தணிக்கைப் பதிவேடு.

பாகம் II. செலவு.

22. **ஊராட்சி ஒன்றிய மன்ற நிதியிலிருந்து பணம் கொடுப்பது.**—ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் கொடுத்துக் கொள்ளப்படும் பட்டியல்கள் சம்பந்தமாக, ஊராட்சி ஒன்றிய மன்ற நிதியிலிருந்து கொடுக்கப்படும் சகல பணத் தொகை களையும், ஆணையாளராவது, ஆணையாளரிடமிருந்து இதன் பொருட்டுக் கிரமப் படி அதிகாரம் பெற்றுள்ள ஒருவராவது அப்பட்டியல்களை ஏற்றுக்கொண்ட பிறகுதான் கொடுக்கவேண்டும்.

23. **காசோலை மூலமாகப் பணம் கொடுப்பது.**—ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நிதிகள் போட்டு வைக்கப்படுகிற கருவூலம், பாங்கி அல்லது கூட்டுறவுச் சங்கத்துக்கு ஆணையிட்டு தரப்பினர்களின் பெயரில் எழுதப்படுகிற காசோலைகள் மூலமாகத்தான் பணம் கொடுக்க வேண்டும். பணியாளர்களுக்கும் தமக்கும் பணம் கொடுப்பதற்காக மாத்திரமே ஆணையாளர் தன் பெயரிலேயே காசோலைகள் எழுதவேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நிதிகள் அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் போட்டு வைக்கப்பட்டால், ஆணையாளர், பணம் கொடுப்பதற்கு வேண்டிய தொகையை எடுத்து, அதை சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பகிர்வு செய்ய வேண்டும்.

24. **நிலையான முன்பணத்துக்கு ஒப்பளிப்பு.**—எதிர்பாராச் சில்லறைச் செலவு செய்வதற்காக, ஊராட்சி ஒன்றிய மன்றம் ஆணையாளருக்கு நிலையான முன்பணம் ஒப்பளிக்கலாம். அந்த விவகாரங்களை, எதிர்பாராச் செலவுகள் பதிவேட்டில் எழுதிவைக்க வேண்டும். நிலையான முன்பணம் தீர்ந்து போகும் போதெல்லாம் அதை ஈடுசெய்து கொள்ள வேண்டும்.

25. **காசோலைகள் எழுதுவது.**—ஆணையாளராவது, ஓர் அரசுக் கருவூலத்திலாவது, பாங்கியிலாவது, கூட்டுறவுச் சங்கத்திலாவது போட்டு வைக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய மன்ற நிதிகள் பேரில் காசோலைகள் எழுத அதிகாரம் பெற்றுள்ள ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் வேறு அலுவலராவது தற்காலிகமாகவோ நிலையாகவோ தமது பதவிப் பொறுப்பை மற்றொருவருக்கு மாற்றினால் அவர், விடுவிக்கும் அலுவலருடைய மாதிரிக் கையெழுத்தையும், கீழ்க்கண்ட படிவப் பிரகாரம் உள்ள ஒரு சான்றினையும், சந்தர்ப்பத்திர்க்கேற்ப, கருவூல அலுவலருக்காவது அனுப்ப வேண்டும்.

சான்றின் படிவம்.

* * * * * * * *

அ.ஆ.

விடுவிக்கும் அலுவலரின் கையெழுத்தும் உத்தியோகப் பெயரும்.

நான் என் பதவிப் பொறுப்பை 19 . . . . .

(மாதம்)

(தேதி) முற்பகல்/பிற்பகல் முதல் மாற்றிக் கொடுத்து விட்ட அலுவலரின் கையெழுத்துதான் மேலே இருப்பது எனச் சான்றிடுகிறேன்.

இ.ஈ.

பொறுப்பினை மாற்றிக் கொடுத்துவிட்ட அலுவலரின் கையெழுத்தும் தேதியும்.

26. காசோலைச் சுவடிகளை **வைத்து** வருதல்.—பணம் எடுக்க ஒப்பமிடும் அதிகாரியின் நேர்ப் பொறுப்பில் காசோலைச் சுவடிகளை வைத்திருக்க வேண்டும். பொறுப்பு மாற்றம் நிகழும்போது, ரொக்கக்கணக்கில் ஒரு குறிப்பெழுதி, அதில் விடுவிக்கப்படும் அலுவலரும் விடுவிக்கும் அலுவலரும் கையெழுத்திடவேண்டும். அந்தக் குறிப்பானது முறையே தாங்கள் கொடுத்தவையும் பெற்றுக் கொண்டவையுமான உபயோகிக்கப்படாத காசோலைகள், காசோலைச் சுவடிகள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் காட்ட வேண்டும்.

27. ஊராட்சி ஒன்றிய மன்ற நிதியின் பேரிலான உரிமைக்கோரிக்கைகளுக்குரிய நடைமுறை.—(1) ஊராட்சி ஒன்றிய மன்ற நிதியின் மீது உரிமைக் கோரிக்கையுடைய ஒவ்வொருவரும், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே பட்டியல் ஒன்றைக் கொடுக்க வேண்டும். சாத்தியமானபோதெல்லாம், அந்தப் பட்டியலானது, இதற்கெனப்படிவம் ஏதேனும் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அதன் பிரகாரம் இருக்க வேண்டும். உரிமை கொண்டாடுபவர், அவசியமானல், அதில் கிரமப்படி தேதி போட்டுக் கையெழுத்திட்டு முத்திரையிட வேண்டும்

(2) சாத்தியமானபோதெல்லாம், பட்டியல்களைத் தயாரிப்பதற்கு அச்சிட்ட படிவங்களைப் பயன்படுத்த வேண்டும்.

(3) உரிமை கொண்டாடுபவர் ஒருவர், இதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள படிவமல்லாத வேறொரு படிவத்தில் பட்டியலைக் கொடுத்தால், செலவு செய்யும் அலுவலர் சரியான படிவப்பிரகாரம் தனிப்பட்டியல் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். உரிமை கொண்டாடுபவருடைய பட்டியலை செலவுத் துணைச் சீட்டாக அதனுடன் இணைக்க வேண்டும்.

(4) பட்டியல் ஒவ்வொன்றையும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைமை நிலைப்பணியாளரிடம் கொடுக்க வேண்டும். அவர் அதைப் பட்டியல்களின் பதிவேட்டில் எழுதிக்கொண்டு, பிறகு ஒப்பளிப்பு அல்லது மற்ற ஆவணங்கள், உரிமைக்கோரிக்கையின் நேர்மை, சரிநுட்பமான கணக்கீடு ஆகியவைகளை யொட்டிப் பார்க்கும்போது, அது ஏற்றுக்கொள்ளத் தக்கதா என்பது சம்பந்தமாக அந்தப்பட்டியலைச் சரிபார்த்துப் பரிசீலனை பண்ணவேண்டும். அவ்வாறு சரிபார்த்துப் பரிசீலனை செய்வதன் பேரில், அந்தப்பட்டியல் சரியாகவும் ஒழுங்காகவும் இருக்கிறதெனத் தெரியவந்தால் பட்டியலில் உள்ள பணம் கொடுப்பதற்கான ஆணையில் கையெழுத்திடுவதற்காக அதை ஆணையாளர் முன் வைக்க வேண்டும்.

28. பணம் பெற்றுக் கொண்டதற்கான ஏற்றுக் கோடல்கள்.—(1) பட்டியல் எழுதுகிறவர் தாம் மட்டும் பணம் பெறுவாரயிருந்து, அந்தப்பட்டியலிலேயே (அவசியமானல் முத்திரை ஒட்டி) ஏற்கெனவே ஒரு பற்றுச் சீட்டுக்

கொடுத்திருந்தால [illegible] சம்பளம் அல்லது [illegible] கொடுக்கப் பெறுகிற ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரிடமிருந்தும் சம்பளச் செல்லுப்பதிவேட்டில் (அவசியமானல் முத்திரை ஒட்டி) தனித்தனி ஏற்றுக் கோடல்களைப் பெறவேண்டும்.

(2) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் ஒருவர் தாம் வாங்கிய தொகையிலிருந்து ஏதேனும் பணம் செலுத்தினல், அவர் பட்டியலிலேயே (அவசியமானல் முத்திரையிட்டு) ஒரு பற்றுச் சீட்டு கொடுத்தாலன்றி (அவசியமானல் முத்திரையிட்டு) தனிப்பற்றுச் சீட்டு ஒன்றைப் பெற்று பட்டியலுடன் இணைக்க வேண்டும்.

29. செலவுக்கு ஒப்பளிப்பு.—ஏதேனும் செலவினத்துக்குப் பட்டியல் எழுதுகிற அலுவலர் அல்லது பணியாளரை விட உயர்வான ஓர் அதிகாரியின் ஒப்பளிப்பு வேண்டியதாயிருந்தால், அத்தகைய ஒப்பளிப்பைப் பெற்று, அதன் நிபந்தனைகளைப்பட்டியலில் கண்டெழுத வேண்டும்.

30. செலவுக்கு ஒப்பளிப்பதற்கான சான்று.—(1) ஒரு செலவினம் சம்பந்தமாக அடியிற் கண்ட படிவப் பிரகாரம் உள்ள ஒரு சான்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி ஊராட்சி ஒன்றிய மன்றம் அந்தச் செலவினத்துக்கு ஒப்பளிப்பு வழங்கக்கூடாது :—

இத்தொகையை தலைப்பின் கீழ் . . . . .

ரூபாய் கொண்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து கொடுக்கலாம் :—

ரூ. காசு.

நாளது தேதி வரையில் இத்தலைப்பின் கீழ் செலவிடப்பட்ட தொகை.

நாளது தேதிவரையில் ஒப்பளிக்கப்பட்டு ஆனல் செலவிடப்படாத தொகை.

இப்போது ஒப்பளிக்கப்பட வேண்டிய தொகை.

மொத்தம்.

பாக்கியிருப்பது . . . . . ஆகும்.

சம்பந்தப்பட்ட தலைப்பின்கீழ் வரவு-செலவுத் திட்ட ஏற்பாடு செய்யப் படாதிருந்து, மற்றொரு தலைப்பிலிருந்து மறு ஒதுக்கல் மூலமாக அத்தொகையைக் கண்டெடுக்க ஊராட்சி ஒன்றிய மன்றம் தீர்மானித்தால், கொடுக்கப் பட்டது என்னும் சொல்லுக்கு முன் மறு ஒதுக்க மூலமாக என்னும் சொற்களை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

சான்றினைப்பற்றி நிகழ்ச்சி நிரலில் எழுத வேண்டும். கூட்டத்துக்கு முன் சுற்றறிக்கையாக அனுப்ப வேண்டும்: ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், நிகழ்ச்சிக்கு குறிப்பேட்டிலே தீர்மானத்தின் பாகமாக அதை மறுபடியும் எழுத வேண்டியதில்லை. ஆயினும், ஊராட்சி ஒன்றிய மன்றம் செலவுத் தொகையிலாவது எந்தத் தலைப்பிலிருந்து செலவைக் கொடுக்க வேண்டுமோ அந்தத் தலைப்பிலாவது ஏதேனும் மாறுதல் செய்தால், திருத்தப்பட்டபடியுள்ள சான்று ஊராட்சி ஒன்றிய மன்றத் தீர்மானத்தின் பாகமாயிருக்கும்: அதை அவ்வாறே நிகழ்ச்சிக்குறிப்பேட்டில் எழுத வேண்டும்.

(2) ஏதேனும் புதிய செலவுக்கான ஒப்பளிப்பு ஓர் ஆண்டுக்காலம் வரையில் செயற்படுத்தப்பட்டிராவிட்டால், அது திட்ட வட்டமாகப் புதுப்பிக்கப் பட்டாலன்றி, காலாவதியாகிவிட்டிருப்பதாகக் கொள்ளப்படும்:

ஆனால் இந்த உள் விதியானது—(அ) ஒரு வகை அலுவலர்களின் நியமனத்துக்காக ஒப்பளிக்கப்பட்டபடி, நியமனம் செய்யப்பட்ட குறிப்பிட்ட ஒருவரால் அல்லது குறிப்பிட்ட சில அலுவலர்களால் வாங்கப்படாதிருக்கிற விஷயத்துக்கும்,

(ஆ) தகுந்த அதிகாரியால் ஒப்பளிக்கப்பெற்றிருக்கிற ஒரு பொதுத் திட்டத்தின்படி நிலையான பணி அமைப்பில் ஆண்டுதோறும் கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்க்கப்படும் பணியாளர்களுக்கும்,

(இ) (3) உள் விதியில் கண்டுள்ள நிபந்தனைகளினால் முறைப்படுத்தப் படுகிற பணிகளுக்கும் பொருந்தாது.

(3) (அ) சாதாரண ஆண்டுப் பராமரிப்பு மதிப்பீட்டுக்கான ஒப்பளிப்பு, அது சம்பந்தப்படுகிற நிதியாண்டின் கடைசிநாளன்று காலாவதியாகி விடும். ஆயினும் அத்தேதியன்று பணியை நிறுத்தி விடுவதனால் அசாதாரணமான எவ்விஷயத்திலேனும் வசதிக்குறைவு உண்டாகுமென்றால் செப்பனிட்டுப் பணிகளை முடிகிற வரையில் செய்து கொண்டு போகலாம்: அத்தேதிக்குப் பிறகு பிடிக்கும் செலவை, அடுத்த ஆண்டுக்கான புதிய செப்பனிட்டு மதிப்பீட்டுக்காகச் செய்யப்படும் செலவு எனக் கருதவேண்டும்.

(ஆ) விசேஷ செப்பனிடுகளுக்கான மதிப்பீடுகள், முதற் பணிகளுக்கான மதிப்பீடுகளைப் போலவே, செப்பனிடுகள் நிறைவேறுகிற வரையில் அமலில் இருந்து வரும்.

(இ) ஆண்டுப் பராமரிப்பு அல்லாத வேறு ஏதேனும் பொதுப்பணிக்கான மதிப்பீட்டுக்கு, இசைவு அல்லது ஒப்பளிப்பு, அப்பணி தொடங்கப்பட்டிருந்தாலன்றி, அது எந்தத் தேதியிலிருந்து அளிக்கப்பட்டதோ, அந்தத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலத்துக்குப் பிறகு அமலற்றுப் போய்விடும்.

31. **உரிமைக்கோரிக்கைகளுக்கு வரையறை.**—(ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர் அல்லது பணியாளர் சம்பந்தமாக அக்குழுவின் மீதான உரிமைக் கோரிக்கை, அதன்பொருட்டுத் தனியாகச் செய்யப்படும் விதிகளினால் முறைப்படுத்தப்படும். அத்தகைய உரிமைக்கோரிக்கையாயிராமல்) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் மீதான (வேறு) உரிமைக் கோரிக்கைக்காக (1) அதன் தொடர்பான பட்டியல் அந்த உரிமைக்கோரிக்கைக்குப் பணம் கொடுக்க வேண்டியதாகி விட்ட தேதியிலிருந்து ஆறு மாதத்துக்கு மேற்பட்டும் ஆனால் ஓராண்டுக்கு மேற்படாமலும் கொடுத்துக் கொள்ளப்பட்டால், ஆணையாளரின் ஆணையின்றியும் (2) அந்தப் பட்டியல், அந்த உரிமைக்கோரிக்கைக்குப் பணம் கொடுக்க வேண்டியதாகிவிட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்கு மேற்பட்டுக் கொடுத்துக் கொள்ளப்பட்டால், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆணையின்றியும், பணம் கொடுக்கக்கூடாது.

32. **மிகையாகக் கொடுப்பது.**—மிகையாகப் பணம் கொடுத்ததற்கான பொறுப்பு, பட்டியல் எழுதியவரை முதன்மையாகச் சாரும்: மிகையாகக் கொடுத்ததை அவர் ஈடு செய்ய வேண்டியவராவார். அவரிடமிருந்து வசூலிக்கத் தவறினால், மிகையாகக் கொடுக்கப்பட்ட பணத்தை, மேலொப்பமிடும் அலுவலர் ஒப்புக்கொள்ளும் அலுவலர் ஆகிய இவர்களில் ஒருவர் தண்டனைக்குரிய கவனமின்மை யாயிருந்தால் மாத்திரமே அவரிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

33. **பணத்தை அல்லது முத்திரைவில்லைகளைக் கையாடல் அல்லது அவற்றின் இழப்பு.**—(1) ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குச் சொந்தமான பணம் அல்லது முத்திரை வில்லைகள் கையாடப்பட்டதைப்பற்றி அல்லது அவைகள் காணமற் போனதைப்பற்றித் தெரிந்தவுடனே, 1958 ஆம் ஆண்டின் XXXI ஆவது தமிழ்நாடுச் சட்டத்தில் கண்ட 141 ஆவது பிரிவின்படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளருக்கு அறிவிக்க வேண்டும். இதைப்பற்றி விசாரணை செய்தானபிறகு கூடிய விரைவில், பின்னும் முழுமையான அறிக்கை ஒன்றையுங்கூட அந்தத் தணிக்கையாளருக்கு அனுப்ப வேண்டும்: அப்போது

கையாடல் அல்லது இழப்பின் இயல்பும் அளவும், எந்தத்தவறுகளினால் அல்லது விதிகளை எவ்வாறு அசட்டை செய்ததனால் அந்தக் கையாடல் அல்லது இழப்பு சாத்தியமாயிற்றென்பது, அவற்றைத் திரும்பப் பெறும் வாய்ப்புகள் ஆகியவை பற்றி அந்த அறிக்கையில் குறிப்பிட வேண்டும்.

(2) ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குச் சொந்தமான பத்து ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள மற்ற சொத்து களவாடப்பட்டதனால் அல்லது மற்றப் படி காணமற் போனவைப்பற்றிக் கூட தணிக்கையாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(3) (1) (2) உள்ளவிதிகளினால் நிர்ணயிக்கப்பட்ட அறிக்கைகளை அனுப்பி விடுவதனாலேயே, ஊராட்சி ஒன்றிய மன்றமாவது ஆணையாளராவது, அவசியமெனக் கருதப்படக்கூடிய நடவடிக்கையை மேற்கொண்டு எடுத்துக் கொள்வதற்குத் தடை உண்டாவதாகக் கருதப்பட மாட்டாது.

குறிப்பு.—(i) ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குச் சொந்தமான அசையாப் பொருளுக்கு, நியாயமான தேய்வு, மாய்வு தவிர, நெருப்பு அல்லது வெள்ளம்போன்ற விபத்தினால் நேரிடுகிற இழப்பைப்பற்றி கூட, இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் தணிக்கையாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(ii) ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குச் சொந்தமான அசையாப் பொருளின் ஏதேனும் பாகம் சேதமாவதனால் இழப்பு நேரிடும் விஷயங்களில், சேதமான அந்தப்பாகம், அவ்வாறு சேதமடைந்த தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலத்துக்குள் பதிலமர்த்தீடு அல்லது புதுப்பித்தல் செய்யப்பட்டால் சேதமடைந்த பாகத்தின் மதிப்பைத் தள்ளுபடி செய்ய வேண்டியதில்லை.

(iii) சேதமடைந்த அல்லது அழிந்துபோன எந்தத் தற்காலிகக் கட்டுக் கோப்புகள் உத்தேசிக்கப்பட்ட கால அளவுக்குப் பயன்பட்டிருந்து, அதனால் பதிலமர்த்தீடு செய்ய அல்லது புதுப்பிக்க கருதப்படவில்லையோ அந்தக் கட்டுக்கோப்புகளின் மதிப்பை, சேதமடைந்த அல்லது அழிந்து போன தேதியன்று இருந்தபடி மதிப்பிட வேண்டும்.

34. **பணித்தொகுதியின் சம்பளப்பட்டியல்கள்.**—அவ்வப்போது அரசினரால் **விதிக்கப்படக் கூடிய படிவத்தின் பிரகாரம் சம்பளப்பட்டியல்களைத்** தயாரிக்க வேண்டும். பணித்தொகுதியின் மாத சம்பளப்பட்டியலுக்கு, அவ்வப்போது அரசினரால் விதிக்கப்படக் கூடிய படிவத்தின் பிரகாரம் வாரதவர் விவரப்பட்டியல் அல்லது பணித்தொகுதியைச் சேர்ந்த எவருக்கும் விடுப்பு

வழங்கப்பட வில்லையென்று பட்டியலில் கண்டுள்ள 'சான்று' ஆதாரமாக இருக்க வேண்டும்.

35. **ஊதிய உயர்வுச் சான்றுப்படிவம்.**—பருவமுறை ஊதிய உயர்வு எழுதிக் கேட்கப்படுகிற முதல் சம்பளப்பட்டியலுடன்கூட, அவ்வப்போது அரசினரால் விதிக்கப்படக் கூடிய படிவப்பிரகாரம் உள்ள 'ஊதிய உயர்வுச் சான்று' ஒன்றை இணைத்தனுப்ப வேண்டும்.

36. **அலுவலர்களின் சம்பளத்தை எழுதி வாங்குதல்.**—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அரசினரால் இரவலாகக் கொடுக்கப்பட்ட அல்லது வேறு ஏதேனும் உள்ளாட்சிக் கழகத்தினிடமிருந்து அதற்கு மாற்றப்பட்ட ஓர் அலுவலரின் அல்லது பணியாளரின் சம்பளத்தை, அவருடைய, முந்திய அலுவலகத் தலைவரால் வழங்கப்பட்ட முன் ஊதியச் சான்று (இது அவ்வப் போது அரசினரால் விதிக்கப்படக் கூடிய படிவப்பிரகாரம் இருக்கவேண்டும்) கிடைத்த பிறகுதான் எழுதி வாங்கவேண்டும். அந்தச் சான்றினை மேற்படி இரவல் அல்லது மாற்றத்துக்குப் பிறகு எழுதப்படும் முதல் சம்பளப் பட்டியலுடன் இணைத்தனுப்ப வேண்டும்.

37. **இறந்துபோன அலுவலருக்கு அல்லது பணியாளருக்குச் சேரவேண்டிய தொகை.**—(1) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஓர் அலுவலர் அல்லது பணி யாளர் இறந்துபோன நாளுக்காக சம்பளம், விடுப்புச் சம்பளம், படிகள் ஆகிய வற்றை எழுதி வாங்கலாம். இன்ன மணி நேரத்தில் இறந்து போனரென்பது, உரிமைக் கோரிக்கையைப் பாதிக்காது.

(2) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் இறந்து போன ஓர் அலுவலருக்கு அல்லது பணியாளருக்குச் சேரவேண்டிய தொகையை (1925 ஆம் ஆண்டின் XXXIX வது மைய சட்டமாகிய) 1925 ஆம் ஆண்டின் இந்திய வரியுரிமைச் சட்டத்தில் கண்ட 214 ஆவது பிரிவின் (1) உட்பிரிவைச் சேர்ந்த (i)(ii) (iii) (iv)) அல்லது (v) பகுதிகளில் குறிப்பிட்டிருக்கிற தன்மை வாய்ந்த அதிகாரபத்திரம் காட்டப்பட்டாலன்றிக் கொடுக்கக் கூடாது.

ஆனல்—( ) ஊராட்சி ஒன்றிய மன்றம் போதுமானதென்று, தாங்கள் கருதக் கூடிய விசாரணை செய்தபிறகு உரிமைக் கோரிக்கையாளருடைய உரிமையைப் பற்றியும் பிரதியதையைப் பற்றியும் ஐயமறத் தெரிந்து கொண்டால், அவர்களுடைய ஆணைப்படி 25 ரூபாய் வரையிலும்,

) மாவட்ட ஆட்சியாளர் தாம் போதியதென்று கருதக் கூடிய விசாரணை செய்தபிறகு, உரிமைக் கோரிக்கையாளருடைய உரிமையைப் பற்றியும் பாத்தியதையைப் பற்றியும், ஐயமறத் தெரிந்துகொண்டு, அத்தகைய

அதிகாரப்பத்திரத்தைக் காட்டவேண்டுமென வற்புறுத்துவதனுல் மட்டும் மீறிய காலதாமதமும் இடர்ப்பாடும் விளையுமென்று கருதினுல், அவர் கேட்கக் கூடிய பிணையத்துடன் அல்லது பிணையங்களுடன் இழப்பீட்டு உத்தரவாதப் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுக்கப்படுவதன் பேரில் மாவட்ட ஆட்சியாள ருடைய ஆணைப்படி 25 ரூபாய்க்கு மேற்பட்டும் அத்தகைய அதிகார பத்திரம் காட்டப்படாமலேயே பணம் கொடுக்கப்படலாம்.

38. **நிலுவைச் சம்பளத்தை எழுதி வாங்குதல்.**—நிலுவைச் சம்பளத்தை மாதப்பட்டியலில் எழுதி வாங்கக் கூடாது: ஆனுல், ஒரு தனிப்பட்டியலில் எழுதி வாங்க வேண்டும். எந்தப் பட்டியலிலிருந்து அச்செலவு விட்டுவிடப் பட்டது அல்லது நிறுத்தி வைக்கப்பட்டது அல்லது எந்தப்பட்டியலில் கழித்துக் கொள்வது மூலமாக அது திருப்பிக் கொடுக்கப்பட்டது என்பதை அத்தனிப்பட்டியலில் குறிப்பிட வேண்டும்.

39. சம்பளப்பட்டியல்களில் கையெழுத்திட்டு அவைகளுக்கு இசைவளிப் பதற்கான அதிகாரி.—ஆணையாளர் சம்பளப்பட்டியல்களில் கையெழுத்திட்டு அவைகளுக்கு இசைவளிக்க வேண்டும்.

40. சம்பளங்களையும் படிகளையும் கொடுப்பதற்கான தேதி.—சம்பளங்களும் நிலைப்படியும் எந்த மாதத்துக்குச் சம்பந்தப்படுகின்றதோ அதற்கு அடுத்த மாதத்தின் முதல் அலுவல் நாளுக்கு முன் அவைகளைக் கொடுக்கக்கூடாது.

ஆனுல் ஓர் அலுவலர் அல்லது பணியாளர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பணியை முடிவாக விட்டு விட்டுப் போவதாயிருந்தால் அல்லது மற்றொரு உள்ளாட்சி கழகத்தின் அல்லது அரசினரின் பணிக்கு மாற்றப்படுவதா யிருந்தால், அந்த நிகழ்வின் தேதியன்று பணம் கொடுக்கலாம்.

மேலும், ஒரு மாதத்தின் முதல் ஆறு நாட்கள் பொது விடுமுறை நாட் களாயிருந்து, அந்நாட்களில் கருவூலத்திலாவது பாங்கியிலாவது பணம் கொடுக்கப்படாவிட்டால், அந்த விடுமுறை நாட்களுக்கு முன் உள்ள அலுவல் நாளில் பணம் வாங்கிக் கொடுக்கலாம்.

41. பட்டியல் எழுதுபவரின் பொறுப்பு.—சம்பளப் படிகளுக்கான பட்டியல் எழுதுபவர், அவ்வாறு எழுதி வாங்கப்படும் தொகை, சம்பந்தப்பட்ட சரியான ஆள் அல்லது ஆட்களுக்குக் கொடுக்கப்பட்டு, அவர்களுடைய ஏற்றுக் கோடல் கள் பெறப்படுகிற வரையில், அந்தத் தொகைக்கு நேர் பொறுப்பு வாய்ந்த வராவார்.

பணம் பெறுதற்குரியவர், பணம் வாங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வாராவிட்டால், அவருக்காக வாங்கப்பட்ட தொகையை,

அடுத்த பட்டியலில் குறைத்து வாங்குவதன் மூலம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். சம்பளம் படிகள் ஆகியவற்றின் தொகையை எச்சந்தர்ப்பத்திலும் வைப்புத் தொகையாக வைத்திருக்கக் கூடாது.

42. **தணிக்கைப்பதிவேடு.**—சிப்பந்தி வீட்டு வாடகை ஊர்தி படிபோன்ற மீறும் செலவுகளுக்கான மாதப்பட்டியல்களைச் சரி பார்ப்பதை வசதியாக்கும் பொருட்டு, ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றின் அலுவலகத்திலும் தணிக்கைப் பதிவேடு ஒன்றை வைத்து வரவேண்டும்.

43. **பயணப்படி எழுதி வாங்குவது.**—நிலையான பயணப்படிகள் அல்லாத வேறு பயணப்படிகளை அவ்வப்போது அரசினரால் விதிக்கப்படக் கூடிய பிரகாரம் உள்ள தனிப்பட்டியல் ஒன்றில் எழுதி வாங்க வேண்டும்.

44. **ஊர்திப்படி எழுதி வாங்குவது.**—சம்பந்தப்பட்ட அலுவலரின் அல்லது பணியாளரின் சம்பளப் பட்டியலில் ஊர்திப்படியை எழுதி வாங்க வேண்டும்; பயணப்படிப் பட்டியல்களில் அதை எழுதி வாங்கக் கூடாது. ஊர்திப்படிக்கான பட்டியல் ஒவ்வொன்றுடனும் சான்று ஒன்றை இணைத்தனுப்ப வேண்டும்; அந்த ஊர்தி உள்ளபடி நல்ல நிலையில் வைத்திருக்கப்பட்டதென்றும், அந்த மாதத்தில் அவரால் பயன்படுத்தப்பட்டதென்றும் அந்தச் சான்றில் கண்டிருக்க வேண்டும்.

45. **எல்லாப் பட்டியல்களையும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முன் வைத்தல்.**—ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஒப்பளிப்பைப் பெற்றோ பெறாமலோ ஒரு மாதத்தில் செய்யப்பட்ட செலவுக்கான எல்லாப் பட்டியல்களையும், அவசியமென அக் குழு கருதக்கூடிய ஆராய்வுக்குப் பிறகு ஒப்புக் கொள்ளப்படுவதற்காக, இயன்ற விரைவில் அக் குழுவின் முன்னர் வைக்க வேண்டும்.

இணைப்பு.

[33 ஆவது விதியில் கண்ட (2) உள் விதியின் (i) குறிப்பை பார்க்கவும்.]

ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குச் சொந்தமான அசையாப் பொருளுக்கு நேரிட்ட சேதம் பற்றிய அறிக்கை.

1 துறை.

2 இடம்.

3 சேதமடைந்த அல்லது அழிந்துபோன சொத்தின் விவரம்.

4 சேதத்துக்கு அல்லது அழிவுக்குக் காரணம் .

5 சேதம் அல்லது அழிவு நேரிட்ட காலத்தில் சொத்தின் சேதமடைந்த அல்லது அழிந்துபோன பாகத்தின் மதிப்பு.

6. (அ) சேதமடைந்த அல்லது அழிந்துபோன பாகத்தைப் பதிலமர்த்தீடு செய்ய அல்லது புதுப்பிக்க கருதியிருக்கிறதா ?

(ஆ) அப்படியானால், பதிலமர்த்தீடு செய்வதன் அல்லது புதுப்பிப்பதன் மதிப்பீட்டின் செலவு யாது ?

7. சொத்தின் சேதமடைந்த அல்லது அழிந்துபோன பாகத்தைப் பதிலமர்த்தீடு செய்ய அல்லது புதுப்பிக்க உத்தேசித்திராவிட்டால், கணக்குகளில் அச் சொத்தின் மூலதன மதிப்பிலே தள்ளுபடி செய்ய வேண்டிய தொகை யாது ?

8. அவ்வாறு தள்ளுபடி செய்வதாயிருந்தால், அப்படிச் செய்ய என்ன ஏற்பாடு செய்யப்படுகிறது ?

(1962 பெப்ரவரி 1 ஆம் தேதியுள்ள 261 ஆம் எண் கிராமமுன்னேற்றம்-உள்ளாட்சி துறை அரசாணை.)

(1965 மார்ச் 16 ஆம் தேதியுள்ள 638 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

1948 மே 17 ஆம் தேதியுள்ள 969 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் பிறந்த உத்தரவுகளை அகற்றிவிட்டு அவைகளுக்குப் பதிலாக, நகராட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் அரசாங்கத்தார் அனுமதி கொடுப்பது என்னவென்றால், அவைகள் தமிழ்நாடு மாநில அமைச்சர்களுக்கு வரவேற்பிதழ்கள் அளிக்கும்பொருட்டு, இதழை அச்சிட்டு வழங்குதல்—தேவையான அழைப்புகளை அச்சிட்டு விநியோகித்தல், அதன் தொடர்பான அஞ்சல் செலவையும் மற்ற சாதாரண செலவுகளையும் செய்தல் ஆகியவற்றின் அளவுக்கு, கீழ்க் குறிப்பிட்ட பெரும் வரையறைக்கு மேற்படாமல் செலவு செய்யலாம் :—

	ரூ.
நகராட்சி மன்றங்கள்	50
ஊராட்சி ஒன்றிய மன்றங்கள்	50
ஊராட்சிகள்	20

2. ஆயினும், கேளிக்கைகளுக்காகவாவது, இதழ்களை வைத்துக் கொடுப்பதற்கும் பேழைகள் வாங்குவதற்காகவாவது, எந்தச் செலவும் செய்யக் கூடாது. நிகழ்ச்சி கூடிய வரையில் எளிமையாயிருக்க வேண்டும். அனுவசியமான செலவு—பகட்டையெல்லாம் தவிர்க்க வேண்டும்.

(1961 மே 17 ஆம் தேதியுள்ள 1384 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

1961 மே 17-ஆம் தேதியுள்ள 1384 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளைத் திருத்தி, அரசாங்கத்

தார் கட்டளையிடுவது என்னவென்றால், தமிழ்நாடு மாநில அமைச்சர்களுக்கு வரவேற்பிதழ்கள் படித்துக் கொடுக்கத் தல ஆட்சிக் கழகங்கள் செலவு செய்ய அந்த ஆணையில் கொடுக்கப்பட்டிருக்கும் ஒப்பளிப்பு, இந்திய மைய அரசின் அமைச்சர்களுக்கு அளிக்கப்படும் இதழ்களுக்குக் கூட பொருந்தும்.

(1961 டிசம்பர் 29 ஆம் தேதியுள்ள 13884-எப் 1/61-2 ஆம் எண் குறிப்பாணை.)

உள்ளாட்சிக் கழகங்கள் தேசியத் தலைவர்களின் படங்களை வாங்கித் தங்கள் வளவுகளில் மாட்டி வைத்துக் கொள்வது சம்பந்தமாக, இதற்கு முன் பிறப்பிக்கப்பட்ட எல்லா ஆணைகளையும் அகற்றி அவைகளுக்குப் பதிலாகப் பின் வரும் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

மாவட்டக் கழகங்களும் ஊராட்சிகளும் சென்னை மாநகராட்சி உள்ளிட்ட நகராட்சி மன்றங்களும் வேறு எவர்களுடைய படங்களையும் வாங்காமல் மகாத்துமா காந்தி, இந்தியக் குடியரசுத் தலைவர் ஆகியோரின் படங்களை மட்டும் வாங்கித் தங்கள் வளவுகளில் மாட்டிக் கொள்ளத் தங்கள் நிதிகளிலிருந்து செலவு செய்யலாம். இன்னும் மேலதிகாரிகளின் ஒப்பளிப்பு இன்றியே, படம் ஒன்றுக்கு ரூ. 50 (ஐம்பது ரூபாய்)க்கு மேற்படாமல், அவ்வாறு செலவு செய்யலாம். உள்ளாட்சிக் கழகங்களின் தலைமை அலுவலகக் கட்டிடங்கள் அல்லாமல் மற்றப்படித் தங்கள் பள்ளிக்கூடங்களுக்கும் நிறுவனங்களுக்கும் அந்தப் படங்களை வாங்குவது உத்தேசமாயிருந்தால் அவைகள் அப் படங்களின் அச்சிட்ட படங்களையே வாங்க வேண்டும்.

2. உள்ளாட்சிக் கழகங்களின் புகழ்பெற்ற பெருந்தலைவர்கள், தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோரின் சேவைகளை, அந்தந்த உள்ளாட்சிக் கழகங்களின் வளவுகளில் அவர்களுடைய படங்களை மாட்டி வைப்பது மூலமாகக் கொண்டாடலாம். ஆனால், அதற்குப் பிடிக்கும் செலவைச் சொந்த நிதிகளிலிருந்து செய்து கொள்ள வேண்டும்.

3. உள்ளாட்சிக் கழகங்களின் வரவுகளில் மற்ற இந்திய தேசியத் தலைவர்களின் படங்களை மாட்டி வைப்பதற்குப் பிடிக்கும் முழுச் செலவையும் சொந்த நிதிகளிலிருந்து செய்து கொள்வதாயிருந்தால், அவ்வாறு மாட்டி வைப்பதற்கு அரசினர் அனுமதி கொடுப்பார்கள். உள்ளாட்சிக் கழகங்கள் சம்பந்தப்பட்ட தலைவரின் இசைவைப் பெற்றுக் கொண்ட பிறகுதான் அந்தப் படங்களை மாட்டி வைக்கக் கருத வேண்டும்.

4. இந்த ஆணையை எல்லா ஊராட்சிகளின் கவனத்துக்கும் கொண்டு வரும்படி, உள்ளாட்சித் துறைத் தலைமை ஆய்வாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(1953 சனவரி 3 ஆம் தேதியுள்ள 17 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

மார்பளவான அரைச் சிலைகளை அல்லது முழுச் சிலைகளை உள்ளாட்சிக் கழகங்கள் வாங்கி நிறுவுவது பற்றிப் பின்வரும் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன :—

மாவட்டக் கழகங்களும், ஊராட்சி ஒன்றியங்களும், சென்னை மாநகராட்சி உள்ளிட்ட நகராட்சி மன்றங்களும் ஊராட்சிகளும் மார்பளவான அரைச் சிலைகளை அல்லது முழுச் சிலைகளை வாங்கி தங்கள் வளவுகளிலாவது தங்களிடம் உரித்தாக்கப்பட்டுள்ள பொதுத் தெரு, இடம் அல்லது சாலையிலாவது அவைகளை நிறுவுவது சம்பந்தமாக, அரசினரின் திட்டவட்டமான ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல் எவ்விதக் கடப்பாடு நிலையையும் மேற்கொள்ளக் கூடாது. அவைகளுக்கு மேலும் தெரிவிப்பது என்னவென்றால், குறிப்பிட்ட எவ்விஷயத்திலேனும் முற்றும் அசாதாரண சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்தாலன்றி, அத்தகைய ஒப்பளிப்பு சாதாரணமாக வழங்கப்பட மாட்டாது.

2. மாவட்ட ஆட்சியாளர்கள் தங்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள எல்லா ஊராட்சிகளுக்கும் இந்த ஆணையில் அடங்கிய செய்திகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(1960 டிசம்பர் 2 ஆம் தேதியுள்ள 1915 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

1928 சனவரி 6 ஆம் தேதியுள்ள 71 ஆம் எண் உள்ளூர் நகராட்சித் துறைப் பல்வகை அரசாணையை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக அரசினர் கட்டளையிடுவது என்னவென்றால்,—தமிழ்நாடு ஆளுநரை வரவேற்பதாகவும் அவருக்கு வரவேற்பிதழ் அளிப்பதற்காக, மாவட்டக் கழகங்களும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களும் நகராட்சி மன்றங்களும் செய்தற்குரிய செலவு ரூ. 200 (இருநூறு ரூபாய்)க்கு மேற்படக் கூடாது.

2. கேளிக்கைகளுக்காக அல்லது இதழ் வைத்துக் கொடுப்பதற்கான பேழைகளை வாங்குவதற்காக எவ்விதச் செலவும் செய்யக் கூடாது. நிகழ்ச்சி கூடியவரை எளிமையாயிருக்க வேண்டும்; அனாவசியமான எல்லாச் செலவையும் பகட்டையும் தவிர்க்க வேண்டும்.

(1961 பிப்ரவரி 25 ஆம் தேதியுள்ள 540 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

61. **ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் வெளியார் ஒப்பளிப்பின்றிச் செய்தற்குரிய வழக்குச் செலவுகளுக்கு வரையறை.**

(1) **வெளியார் ஒப்பளிப்பின்றி வழக்கறிஞருக்குக் கட்டணங்கள் கொடுப்பது.**—ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், வெளியார் ஒப்பளிப்பின்றி அடியிற் கண்ட விதத்தின்படி வழக்கறிஞருக்குக் கட்டணங்கள் கொடுக்கலாம் :—

(i) உரிமையியல் வழக்குகளில்—ஒழுங்குமுறைக் கட்டணம் அல்லது ஒழுங்குமுறைக் கட்டணத்துக்கு மேற்பட்டிருப்பதும் 100 ரூபாய்க்கு மேற்படாததுமான கட்டணம்.

(ii) குற்ற இயல் வழக்குகளில்—செய்ய வேண்டியுள்ள பணியின் அளவையும் இடர்ப்பாட்டையும் அனுசரித்து நிச்சயிக்கப்படுவதற்குரிய கட்டணம் ; ஆனுல், இது வழக்கறிஞர் மூன்று மணி நேரத்துக்குக் குறையாமல், அல்லது மூன்று மணி நேரத்துக்குக் குறைவாக ஆனுல் அவர் வழக்கமாகத் தொழில் நடத்துகிற இடமல்லாத வேருேரிடத்தில் வழக்கு சம்பந்தமாக அவர் நீதிமன்றத்தில் ஈடுபட்டிருக்கிற ஒவ்வொரு நாளுக்காகவும் 25 ரூபாய்க்கும், மற்றெல்லாவற்றிலும் ஒவ்வொரு நாளுக்காகவும் 15 ரூபாய்க்கும் மேற்படக் கூடாது.

ஆனுல், வழக்கறிஞர் ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகளில் நீதி மன்றத்திலே ஈடுபட்டிருந்தால், எல்லா வழக்குகளுக்காகவும் அந் நாளுக்காக அவருக்குச் கொடுக்கப்படத்தக்க மொத்த கட்டணம் 35 ரூபாய்க்கு மேற்படக் கூடாது.

3. வெளியார் ஒப்பளிப்பின்றிக் கொடுக்கப்படும் பணத்துக்கு வரையறை.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் வெளியார் ஒப்பளிப்பின்றி—

(i) ஆவணங்களை ஆய்ந்து பார்ப்பதில் செய்யப்பட்ட வேலைக்காகவும், நீதிமன்றத்துக்கு வெளியே செய்யப்பட்ட பணிகளுக்காகவும் ஒவ்வொன்றிலும் 100 ரூபாய் வரையில் கட்டணம் செலுத்தலாம்; ஆனுல் அவ்வாறு ஆய்ந்து பார்த்ததற்கு அல்லது பணிகள் செய்ததற்குத் தொடர்ச்சியாக உரிமையியல் வழக்கு அல்லது வழக்கு எதுவும் தொடரவுங் கூடாது, எதிர்வாதி பக்க வழக்கு நடவடிக்கை எடுக்கவுங் கூடாது ; அவ்வாறு உரிமையியல் வழக்கு அல்லது வழக்குத் தொடரப்பட்டால் அல்லது எதிர்வாதி பக்க வழக்கு நட வடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டால், ஆவணங்களை ஆய்ந்து பார்த்ததில் செய்யப்பட்ட வேலைக்காகவும், நீதிமன்றத்துக்கு வெளியே செய்யப்பட்ட பணி களுக்காகவும், நீதிமன்றத்தில் செய்த வேலைக்காகவும் வழக்கறிஞருக்குக் கொடுக்கப்படத்தக்க மொத்த கட்டணங்கள், நூறு ரூபாய் அல்லது 1 ஆவது விதியின்படி செலுத்தப்படத்தக்க கட்டணம் ஆகிய இவைகளில் எது அதிக மாயிருக்கிறதோ அதற்கு மேற்படக் கூடாது ; மேலும்,

(ii) உரிமைக் கோரிக்கையின் உட்கிடைப் பொருளுக்கு மதிப்புப் போட முடியாமலிருக்கிற ஒவ்வொன்றிலும் 100 ரூபாய் வரையில் கட்டணம் செலுத்த லாம்.

3. தனிப்பட்ட காரியங்களில் கட்டணங்கள் செலுத்துவது.—1 ஆவது, 2 ஆவது விதிகளில் உள்ள எதுவும், தனிப்பட்ட விஷயங்களில் செலுத்தப்படத் தக்க தொகையைக் குறைப்பதாகக் கொள்ளக் கூடாது ; ஆனுல் மேற்படி விதி களில் நிச்சயிக்கப்பட்ட வரையறைகளை மீறக் கருதினுல், மாவட்ட ஆட்சியாள ரின் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேல்முறையீடு அல்லது மீட்டாய்வு.—ஒரு நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்ப்பு, ஆணை, அல்லது தீர்ப்பு சாரத்தை எதிர்த்து மேல்முறையீடு அல்லது மீட்டாய்வு மனு செய்துகொள்ள ஊராட்சி ஒன்றிய மன்றம் விரும்புவதில் மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பு முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(1963 மே 21-ஆம் தேதியுள்ள 1137-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

62. சிலவற்றில் வழக்கறிஞர் நியமனமும் கட்டணங்கள் செலுத்துவதும்

(1) உரிமையில் வழக்கு ஒன்றில் அரசினரும் ஊராட்சி ஒன்றிய மன்றமும் தரப்பினராயிருந்து, அவ் வழக்கில், ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் உரிக்கப்பட்டுள்ள நிலங்களின் அளவை சரியல்லவென்று ஆட்சேபிக்கப்பட்டு, இரு தரப்பினருடைய பாத்தியதைகளும் ஒன்றுகவே இருந்தால், அரசினர் தரப்பில் மாவட்ட ஆட்சியாளரால் நியமிக்கப்படும் வழக்கறிஞரைத்தான், ஊராட்சி ஒன்றிய மன்றம் தங்கள் தரப்பில் அமர்த்திக் கொள்ள வேண்டும். அப்படிப் பட்டவற்றில் வழக்கறிஞருக்குக் கொடுக்கப்படத்தக்க கட்டணமானது, அரசினராலும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தாலும் முறையே மூன்றிலிரண்டு பாகம், மூன்றிலொரு பாகம் என்னும் வீதப்படி ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

(2) 1-ஆவது விதியில் சொல்லப்பட்டவையெல்லாத மற்ற உரிமையியல் வழக்குகளில், அரசினரும் ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றமும் தரப்பினர்களாயிருந்து, அவர்களுடைய வாதங்கள் ஒத்தவையாயிருந்தால், அரசினர் தரப்பில் நியமிக்கப்படும் வழக்கறிஞரைத்தான் அந்த ஊராட்சி ஒன்றிய மன்றம் தங்கள் தரப்பில் அமர்த்திக் கொள்ள வேண்டும். அத்தகையவற்றில் வழக்கறிஞருக்குக் கொடுக்கப்படத்தக்க கட்டணம் மற்ற இடைநிகழ் செலவுகள் அரசினர் சார்பிலும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தரப்பிலுமான நடவடிக்கைகள் கூட்டாகிவிட்ட பிறகும் அக் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு நடத்தும் பொருட்டும் செய்யப்படும் செலவுகள் ஆகியவை அரசினராலும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தாலும் சம பங்குகளில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

(3) உரிமையில் நீதிமன்றங்களின் தீர்மானங்களை எதிர்த்து ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தாக்கல் செய்யும் மேல்முறையீடுகளுக்கு இவ் விதிகள் பொருந்தமாட்டா.

(1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

அத்தியாயம்.

அரசினர் பொதுப் பணிகளும் பலவகையும்.

63. தமிழ்நாடு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் (அமைப்புப் படங்கள், மதிப்பீடுகள் முதலியவற்றைத் தயாரிப்பது) பற்றிய விதிகள்.

1. சிறுதலைப்பு.—இவ்விதிகளை, தமிழ்நாடு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் (அமைப்புப் படங்கள், மதிப்பீடுகள் முதலியவற்றைத் தயாரிப்பது) பற்றிய 1963-ஆம் ஆண்டின் விதிகள் என்று சொல்லலாம்.

2. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் எந்தப் பணிகளுக்காக அரசினர் உதவித் தொகை கொடுக்கிறார்களோ அந்தப் பணிகள் சம்பந்தமாக நடைமுறை அடியிற் கண்டதாகும் :—

(1) (i) மதிப்பீடுகளைத் தயாரித்தல்.—3,000 ரூபாய் வரையில் செலவு பிடிக்கிற (முதல் பணியானாலுஞ்சரி பராமரிப்புப் பணியானாலுஞ்சரி) ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியப் பணி சம்பந்தமான மதிப்பீடுகளை, அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களின் ஒன்றியப் பார்வையாளர்கள் தயாரிக்க வேண்டும்; அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் ஒன்றியப் பொறியாளர் தொழில் நுட்ப ரீதியாக அவைகளுக்கு ஒப்பளிப்பு வழங்க வேண்டும்.

(ii) ஒன்றியப் பொறியாளர், ஒன்றியப் பார்வையாளரின் உதவியைக் கொண்டு, 3,000 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிக்கிற எல்லா மதிப்பீடுகளையும் தயாரித்து, சம்பந்தப்பட்ட (நெடுஞ்சாலை—கிராமப் பொதுப் பணித் துறை) உதவிப் பொறியாளருக்கு அனுப்ப வேண்டும்; அவர் கீழ்க் கண்ட (2) விதியின்படி மதிப்பீடுகளுக்கு நிருவாக ஒப்பளிப்பும் தொழில் நுட்ப ஒப்பளிப்பும் வழங்கப்படும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

(2) மதிப்பீடுகளுக்கு நிருவாக ஒப்பளிப்பும் தொழில் நுட்ப ஒப்பளிப்பும் வழங்குதல்.—பணிகளுக்கான (திருத்திய மதிப்பீடுகள் உள்ளிட்ட) மதிப்பீடுகள் சம்பந்தமாக, நிருவாக ஒப்பளிப்பும் தொழில் நுட்ப ஒப்பளிப்பும் வழங்குவதற்குரிய அதிகாரிகள் கீழ்க் குறிப்பிட்டவர்களாவார்கள்.

மதிப்பீடுகளின் தன்மை. (1)	நிருவாக ஒப்பளிப்பு வழங்குவதற்குரிய அதிகாரி. (2)	தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்குவதற்குரிய அதிகாரி. (3)
I. கட்டுமானம் சம்பந்தமான முதல் பணிகள் அல்லது பராமரிப்புப் பணிகள்.		
1. 3,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப் பட்டிருக்கிற பணிகள் சம்பந்தமாக, சந்தர்ப்பத்துக்கேற்ப— (i) ஊராட்சி (பட்டணம் அல்லது கிராமம்) அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	ஒன்றியப் பொறியாளர்.
2. 3,000ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 10,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப் பட்டிருக்கிற பணிகள் சம்பந்தமாக, சந்தர்ப்பத்துக்கேற்ப— (i) ஊராட்சி (பட்டணம் அல்லது கிராமம்) அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	உதவிப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை).
3. 10,000 ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் 25,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப் பட்டிருக்கிற பணிகள் சம்பந்தமாக சந்தர்ப்பத்துக்கேற்ப— (i) ஊராட்சி (பட்டணம் அல்லது கிராமம்) அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை).

மதிப்பீடுகளின் தன்மை.	நிருவாக ஒப்பளிப்பு வழங்குவதற்குரிய அதிகாரி.	தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்குவதற்குரிய அதிகாரி.
(1)	(2)	(3)
4. 25,000 ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் 1,00,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப் பட்டிருக்கிற பணிகள் சம்பந்தமாக, சந்தர்ப் பத்துக்கேற்ப— (i) ஊராட்சி (பட்டணம் அல்லது கிராமம்) அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	மேற்பார்வைப் பொறியாளர் (கிராமப் பொதுப் பணித் துறை).
5. 1,00,000 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப் பட்டிருக்கிற பணிகள் சம்பந்தமாக, சந்தர்ப் பத்துக்கேற்ப, (i) ஊராட்சி (பட்டணம் அல்லது கிராமம்) அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை).

II. கட்டுமானப் பணிகள் அல்லாத வேறு பராமரிப்புப் பணிகள் (செப்பனீடுகள் உட்பட).

1. 3,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப் பட்டிருக்கிற பணிகள் சம்பந்தமாக சந்தர்ப் பத்துக்கேற்ப— (i) ஊராட்சி (பட்டணம் அல்லது கிராமம்.) அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	ஒன்றியப் பொறியாளர்.

மதிப்பீடுகளின் தன்மை	நிருவாக ஒப்பளிப்பு வழங்குவதற்குரிய அதிகாரி.	தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்குவதற்குரிய அதிகாரி.
(1)	(2)	(3)
2. 3,000 ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் 1,0000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிற பணிகள் சம்பந்தமாக, சந்தர்ப்பத்துக்கேற்ப. (i) ஊராட்சி (பட்டணம் அல்லது கிராமம்) அல்லது (ii) ஊராட்சு ஒன்றியம் மன்றம்.	உதவிப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை).
3. 10,000 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிற பணிகள் சம்பந்தமாக, சந்தர்ப்பத்துக்கேற்ப. (i) ஊரட்சி பட்டணம் அல்லது கிராமம். அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை).

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் பணிகளை அளப்பதும், அளவு சரிபார்ப்பதும்—ஒப்பந் மூலமாகவோ துறையினரைக் கொண்டோ செய்யப்படும் எல்லாப் பணிகளையும் அல்லது வழங்கப்படும் எல்லாச் சாமான்களையும் அளப்பதற்கும், அவைகளின் அளவு சரிபார்ப்பதற்கும் உரிய அதிகாரிகள் அடியிற் குறிப்பிட்டவர்களாவார்கள் :—

1. ஊராட்சி மன்றங்களிடத்தில், பேரூராட்சி மன்றங்களிடத்தில் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றங்களிடத்தில் உரிதாக்கப்பட்டிருப்பவையும், 3,000 ரூபாய்க்கு மேற்படாமல செலவு பிடிப்பவையுமான (முதல் அல்லது பராமப்பு) அரசினர் பொறியியல் பணிகள் எல்லாம்.	ஊராட்சி ஒன்றிய மேற்பார்வையாளர்.	ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்.

பணியின் பெயர்.	அளவெடுக்கும் அலுவலர்.	அளவு சரிபாரக்கும் அலுவலர்.
(1)	(2)	(3)
2. ஊராட்சி மன்றங்களிடத்தில் பேரூராட்சி மன்றங்களிடத்தில் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றங்களிடத்தில் உரித்தாக்கப்பட்டிருப்பவையும், 3,000 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிப்பவையுமான (முதல் அல்லது பராமரிப்பு) அரசினர் பொதுப்பணிகள் எல்லாம்.	ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்.	உதவிப் பொறியாளர் (நெடுஞ்சாலே கிராமப் பொதுப் பணித் துறை).

குறிப்பு :—(அ) ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்களால் அளவு சரிபார்க்கப்பட்ட, 3,000 ரூபாய்க்குக் குறைவாகச் செலவு பிடிக்கிற பணிகளில் கால் பங்குக்குக் குறையாதவற்றை (நெடுஞ்சாலே கிராமப் பொதுப் பணித் துறை), உதவிப் பொறியாளர் மேல் சரிபார்க்கவும் வேண்டும்.

(ஆ) (நெடுஞ்சாலே-கிராமப் பொதுப் பணித்துறை) உதவிப் பொறியாளர்கள், 3,000 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிக்கிற பணிகளுக்கான முதல் பட்டியல்கள், முடிவான பட்டியல்கள் சம்பந்தமாகப் பணிகளின் அளவைச் சரி பார்த்து, அட்டவணையைச் சரிபார்த்த பிறகு, அதாவது, கணக்கீட்டையும், கையாளப்பட்ட விதங்கள் சரியா என்பதையும் கூராய்வு செய்த பிறகு, மற்ற இடைநிலேப் பட்டியல்களில் எல்லாம் மேலொப்பமிட வேண்டும். அவர்கள், இடைநிலேப் பட்டியல்களின் அட்டவணையைச் சரிபார்க்கும் காலத்தில், (i) பட்டியல் சம்பந்தப்படுகிற பணியின் பாகத்தின் இயல்பையும் முக்கியத்துவத்தையும் உத்தேசித்து, அல்லது (ii) உள்ளடங்கிய பெருந் தொகையை உத்தேசித்து ஏதேனும் பணி சம்பந்தமான அளவெடுப்புகளில் எவற்றையேனும் தாங்கள் நேரில் சரி பார்க்க வேண்டுமோ என்பதைத் தவருமல் ஆய்ந்து பார்க்க வேண்டும். அவ்வாறு நேரில் அளவு சரிபார்ப்பது அவசியமென அவர்கள் கருதினுல், அவர்கள் அவ்வாறே அளவு சரிபார்த்தல் வேண்டும்.

(இ) (நெடுஞ்சாலே-கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளர் கூட ஆண்டுதோறும், ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் (நெடுஞ்

சாலை—கிராமப் பொதுப் பணித் துறை) உதவிப் பொறியாளரால் அளவு சரி பார்க்கப்பட்ட முக்கியமான பணிகளில் எந்த ஒன்றையேனும் சோதனை செய்து சரிபார்க்க வேண்டும்.

(4) முதல் மதிப்பீடுகளுக்கு மேற்பட்ட தொகைகளை அனுமதிக்கத் தகுதி வாய்ந்த அதிகாரிகள்.—(i) (நெடுஞ்சாலை-கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளர், தம்மால் அல்லது அரசினரால் ஒப்பளிக்கப்பெற்ற பணிகளின் முதல் மதிப்பீடுகளின் தொகைகளில் கால் பங்குக்கு மேற்படாத மிகைகள் எல்லாவற்றையும் குறித்து முடிவாக விவகரித்து, ஒப்பளிக்கப்பெற்ற மதிப்பீடுகளின் மொத்தம் எதுவாயிருந்தபோதிலும், ஏதேனும் பணிக்காக 2,000 ரூபாய் வரையில் மிகைச் செலவுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(ii) (கிராமப் பொதுப் பணித் துறை) மேற்பார்வைப் பொறியாளர், தம்மால் அல்லது ஒரு கீழ்நிலை அதிகாரியால் ஒப்பளிக்கப் பெற்ற பணிகளின் முதல் மதிப்பீடுகளின் தொகைகளில் கால்பாகத்துக்கு மேற்படாத எல்லா மிகைகளைப் பற்றியும் முடிவாக விவகரிக்க வேண்டும்; எனினும், மிகையின் மொத்தத் தொகையானது, தொழில் நுட்ப ரீதியாக மதிப்பீடுகளுக்கு ஒப் பளிக்க அவருக்குள்ள அதிகாரங்களின் எல்லைக்கு உட்பட்டிருக்க வேண்டும்; ஆனால் அவர், ஒப்பளிக்கப் பெற்ற மதிப்பீடுகளின் மொத்தம் எதுவாயிருந்த போதிலும், ஏதேனும் பணிக்காக 1,000 ரூபாய் வரையில் மாத்திரமே மிகைச் செலவுக்கு அவர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(iii) (நெடுஞ்சாலை-கிராமப் பொதுப் பணித் துறை) உதவிக் பொறி யாளர், ஒப்பளிக்கப் பெற்ற மதிப்பீடுகளின் மொத்தத் தொகை எதுவாயிருந்த போதிலும், தம்மால் அல்லது ஒரு கீழ்நிலை அதிகாரியால் ஒப்பளிக்கப்பெற்ற தொகைகளுக்கும் மேற்பட்டு 500 ரூபாய் வரையில் எல்லா மிகைகளுக்கும் முடி வாக ஒப்புதல் அளிக்க வேண்டும்; மற்றவைகளில் மிகையில் மொத்தத் தொகை யானது, ஒப்பளிக்கப் பெற்ற மதிப்பீடுகளில் 5 சதவீதத்திற்கும், தொழில்நுட்ப முறையில் மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்க அவருக்குள்ள அதிகாரத்தின் எல்லைக்கும் உட்பட்டிருந்தால், அவ்வாறு முடிவாக ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(iv) (நெடுஞ்சாலை-கிராமப் பொதுப்பணித் துறை) கோட்டப் பொறி யாளர் ஒப்பளிக்கப்பெற்ற மதிப்பீடுகளின் மொத்தத் தொகை எதுவாயிருந்த போதிலும் தம்மால் அல்லது ஊராட்சி ஒன்றியப் பொறியாளரால் ஒப்பளிக்கப் பெற்ற தொகைகளுக்கு மேற்பட்டு 250 ரூபாய் வரையில் எல்லா மிகைகளுக்கும் முடிவாக ஒப்புதல் அளிக்க வேண்டும்; மற்றவற்றில் மிகையின் மொத்தத் தொகையானது, ஒப்பளிக்கப்பெற்ற மதிப்பீடுகளில் 5 சதவீதத்துக்கும் தொழில்

நுட்ப முறையில் மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்க அவருக்குள்ள அதிகாரத்தின் எல்லைக்கும் உட்பட்டிருந்தால், அவ்வாறு முடிவாக ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(v) ஒப்பளிக்கப் பெற்ற மதிப்பீடுகளுக்கு மேற்பட்டுப்போகிற மற்றெல்லா மிகைகளிலும் அம் மிகைகளைக் கொடுப்பதற்கு அரசினர் ஒப்பளிப்பு வழங்க வேண்டும்.

(3) ஊராட்சிகளின் சொந்த நிதிகளைக் கொண்டு நிறைவேற்றுவதற்கான அவைகளால் மேற்கொள்ளப்பட்ட ஊராட்சிப் பணிகளில் அடியிற் கண்ட நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

(1) **மதிப்பீடுகளைத் தயாரித்தல்.**—(i) (முதல் பணியாயிருந்தாலும் பராமரிப்புப் பணியாயிருந்தாலும்) 3,000 ரூபாய் வரை செலவு பிடிக்கிற ஊராட்சிப் பணிகள் சம்பந்தமான மதிப்பீடுகளை, அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களின் ஒன்றிய மேற்பார்வையாளர்கள் தயாரிக்க வேண்டும்.

(ii) 3,000ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிக்கிற எல்லா மதிப்பீடுகளையும், ஒன்றிய மேற்பார்வையாளரின் உதவியைக் கொண்டு, ஒன்றியப் பொறியாளர் தயாரிக்க வேண்டும்.

(2) **நிருவாக ஒப்பளிப்பும் தொழில் நுட்ப முறையான ஒப்பளிப்பும் வழங்குதல்.**—பணிகளுக்கான (திருத்திய மதிப்பீடுகள் உள்ளிட்ட) மதிப்பீடுகள் பற்றிய நிருவாக ஒப்பளிப்பும் தொழில் நுட்ப முறையான ஒப்பளிப்பும் வழங்குவதற்குரிய அதிகாரிகள் அடியிற் குறிப்பிட்டவர்களாவார்கள் :—

மதிப்பீடுகளின் இயல்பு.	நிர்வாக ஒப்பளிப்பு வழங்குதற்குரிய அதிகாரி.	தொழில் நுட்ப ரீதியான ஒப்பளிப்பு வழங்குதற்குரிய அதிகாரி.
(1)	(2)	(3)
(சாலைகளுக்குச் சரளையிடுவது அல்லாத) மற்ற முதல் பணிகள் ம்பந்தமாக, 1000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்	ஊராட்சி.	ஊராட்சி.

மதிப்பீடுகளின் இயல்பு. (1)	நிர்வாக ஒப்பளிப்பு வதிங்குதற்குரிய அதிகாரி. (2)	தொழில் நுட்ப ரீதியான ஒப்பளிப்பு வழங்குதற்குரிய அதிகாரி. (3)
2. சாலைகளுக்குச் சாணையிடுவது உட்பட, செப்பனிட்டு அல்லது பராமரிப்புப் பணிகள் சம்பந்தமாக, 1,500 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	ஊராட்சி.	ஊராட்சி.
3. முதல் பணிகள் சம்பந்தமாக, 1,000 ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 3,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	ஊராட்சி.	ஊராட்சி ஒன்றியப்பொறியாளர்.
4. பராமரிப்புப் பணிகள் சம்பந்தமாக 1,500 ரூபாய்க்கு மேற்பட்டும் 3,000 ரூபாய்க்கு மேற்படாமலும் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	,,	,,
5. முதல் பணிகள், பராமரிப்புப் பணிகள் ஆகிய இரண்டும் சம்பந்தமாக, 3,000 ரூபாய்க்கு மேற்பட்டும் ஆனால் 10,000 ரூபாய்க்கு மேற்படாமலும் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	,,	உதவிப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறை).
6. முதல் பணிகள், பராமரிப்புப் பணிகள் ஆகிய இரண்டும் சம்பந்தமாக 10,000 ரூபாய்க்கு மேற்பட்டும், ஆனால் 25,000 ரூபாய்க்கு மேற்படாமலும் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	,,	கோட்டப் பொறியாளர்(நெடுஞ்சாலை கிராமப பொதுப்பணித் துறை).
7. முதல் பணிகள், பராமரிப்புப் பணிகள் ஆசிய இரண்டும் சம்பந்தமாக 25,000 ரூபாய்க்கு மேற்பட்டும், ஆனல் 1,00,000 ரூபாய்க்கு மேற்படாமலும் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	,,	மேற்பார்வை பொறியாளர்.

மதிப்பீடுகளின் இயல்பு. (1)	நிர்வாக ஒப்பளிப்பு வழங்குதற்குரிய அதிகாரி. (2)	தொழில் நுட்ப ரீதியான ஒப்பளிப்பு வழங்குதற்குரிய அதிகாரி. (3)
8. 1,00,000 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிக்கிற எல்லா மதிப்பீடுகளும்.	ஊராட்சி	தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை).

(3) **பணிகளை அளப்பதும் அளவு சரிபார்ப்பதும்.**—ஒப்பந்த மூலமாகவோ துறையினரைக் கொண்டோ செய்யப்படும் எல்லாப் பணிகளையும் அல்லது வழங்கப்படும் எல்லாச் சாமான்களையும் அளப்பதற்கும், அவைகளின் அளவு சரிபார்ப்பதற்கும் உரிய அதிகாரிகள் அடியிற் குறிப்பிட்டவர்களாவார்கள்.

பணியின் இயல்பு. (1)	அளவெடுக்கும் அலுவலர். (2)	அளவு சரிபார்க்கும் அலுவலர். (3)
1. 1000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற (சாலைகளுக்குச் சரளை யிடுவது அல்லாத மற்ற) முதல் பணிகள் எல்லாம்.	சந்தர்ப்பத்துக் கேற்ப, பேரூராட்சி மன்றத்தின் நிருவாக அலுவலர் அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்.	ஊராட்சி ஒன்றிய மேற்பார்வையாளர்.
2. 1,500 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற (சாலைகளுக்குச் சரளை யிடுவது உட்பட) பராமரிப்புப் பணிகள் எல்லாம்.	சந்தர்ப்பத்துக் கேற்ப பேரூராட்சி மன்றத்தின் நிருவாக அலுவலர் அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்.	,,
3. 1,000 ரூபாய்க்கு மேற்பட்டும் 3,000 ரூபாய்க்கு மேற்படாமலும் இருக்கிற மதிப்பீடுகளின் முதல் பணிகள் எல்லாம்.	ஊராட்சி ஒன்றிய மேற்பார்வையாளர்.	ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்.

பணியின் இயல்பு. (1)	அளவெடுக்கும் அலுவலர். (2)	அளவு சரிபார்க்கும் அலுவலர். (3)
4. 1,500 ரூபாய்க்கு மேற்பட்டும் 3000 ரூபாய்க்கு மேற்படாமலும் இருக்கிற மதிப்பீடுகளின் பராமரிப்புப் பணிகள் எல்லாம்.	ஊராட்சி ஒன்றிய மேற்பார்வையாளர்.	ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்.
5. 3,000 ரூபாய்க்கு மேற்பட்டு செலவு பிடிக்குமென மதிப்பிடப்படுகிற முதல் அல்லது பராமரிப்பு வேலைகள் எல்லாம்.	ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்.	உதவிப் பொறியாளர் (நெடுஞ்சாலை— கிராமப் பொதுப் பணித் துறை).

குறிப்பு :—ஊராட்சி ஒன்றிய மேற்பார்வையாளரால் அளவு சரிபார்க்கப்பெற்ற பணிகளில் குறைந்தது கால் பாகத்தையேனும் ஊராட்சி ஒன்றியப் பொறியாளர் மேல் சரிபார்க்க வேண்டும்.

(4) முதல் மதிப்பீடுகளுக்கு மேற்பட்ட மிகைகளுக்கு இசைவளிப்பதற்குரிய **அதிகாரங்கள்.**— i (நெடுஞ்சாலை-கிராமப் பொதுப் பணித்துறை) தலைமைப் பொறியாளர், தம்மால் அல்லது அரசினரால் ஒப்பளிக்கப்பெற்ற பணிகளின் முதல் மதிப்பீடுகளின் தொகைகளில் கால் பாகத்துக்கு மேற்படாத மிகைகள் எல்லாவற்றைப் பற்றியும் முடிவாக விவரிக்க வேண்டும்; மேலும் அவர், ஒப்பளிப்பு வழங்கப் பெற்ற மதிப்பீடுகளின் மொத்தம் எதுவாயிருந்த போதிலும், ஏதேனும் பணிக்காக 2,000 ரூபாய் வரையில் மிகைச் செலவுக்கு இசைவளிக்கலாம்.

(ii) (கிராமப் பொதுப் பணித் துறை) மேற்பார்வைப் பொறியாளர் தம்மால அல்லது ஒரு கீழ்நிலை அதிகாரியால் ஒப்பளிக்கப் பெற்ற பணிகளின் முதல் மதிப்பீடுகளின் தொகைகளில் கால்பாகத்துக்கு மேற்படாத எல்லா மிகைகளைப் பற்றியும் முடிவாக விவரிக்க வேண்டும்; ஆனால் மிகையின் மொத்தத் தொகையானது தொழில் நுட்ப முறையான மதிப்பீடுகளுக்கு ஒப்

பளிப்பு வழங்க அவருக்குள்ள அதிகாரங்களின் எல்லைக்கு உட்பட்டிருக்க வேண்டும்; எனினும், ஒப்பளிக்கப் பெற்ற மதிப்பீடுகளின் மொத்தம் எதுவா யிருந்தபோதிலும் எதேனும் பணிக்காக 1,000 ரூபாய் வரையில் மட்டும் மிகைச் செலவுக்கு அவர் இசைவளிக்கலாம்.

(iii) (நெடுஞ்சாலை கிராமப் பொது பணித் துறை) கோட்டப் பொறி யாளர், தம்மால் அல்லது ஒரு கீழ்நிலை அதிகாரியால் ஒப்பளிக்கப்பெற்ற தொகைகளுக்கு மேற்பட்ட எல்லா மிகைகளுக்கும், ஒப்பளிக்கப் பெற்ற மதிப் பீடுகளின் மொத்தத் தொகை எதுவாயிருந்தபோதிலும், 500 ரூபாய் வரையில் முடிவாக இசைவளிக்க வேண்டும்; மற்றவற்றில் மிகையின் மொத்தத் தொகை யானது, ஒப்பளிக்கபெற்ற மதிப்பீடுகளில் 5 சதவீதத்துக்குட்பட்டும், தொழில் நுட்ப முறையில் மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்க அவருக்குள்ள அதிகாரங் களின் எல்லைக்கு உட்பட்டும் இருந்தால், அவ்வாறு முடிவாக இசைவளிக்க வேண்டும்.

(vi) (நெடுஞ்சாலை-கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறி யாளர், தம்மால் அல்லது ஊராட்சி ஒன்றியப் பொறியாளரால் ஒப்பளிக்கப் பெற்ற தொகைகளுக்கு மேற்பட்ட எல்லா மிகைகளுக்கும், ஒப்பளிக்கப் பெற்ற மதிப்பீடுகளின் மொத்தத் தொகை எதுவாயிருந்தபோதிலும், 250 ரூபாய் வரையில் முடிவாக இசைவளிக்க வேண்டும்; மற்றவைகளில் மிகையின் மொத்தத் தொகையானது, ஒப்பளிக்கப் பெற்ற மதிப்பீடுகளில் 5 சதவீதத்துக் குட்பட்டும், தொழில் நுட்ப முறையில் மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்க அவருக்குள்ள அதிகாரத்தின் எல்லைக்குட்பட்டும் இருந்தால், அவ்வாறு முடி வாக இசைவளிக்க வேண்டும்.

(v) ஒப்பளிக்கப் பெற்ற மதிப்பீடுகளுக்கு மேற்பட்ட மற்றெல்லாவற்றி லும் அம் மிகைகளைக் கொடுப்பதற்கு அரசினர் ஒப்பளிப்பு வழங்க வேண்டும்.

(1963 ஜூலை 19-ஆம் தேதியுள்ள 1515-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

64. தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் ஒப்பந்தங்கள் (முறையும் நிபந்தனைகளும்) பற்றிய விதிகள்.

விதிகள்.

ஒப்பந்தங்கள் (முறையும் நிபந்தனைகளும்) பற்றிய 1961 ஆம் ஆண்டின் விதிகள்

1. சிறு தலைப்பு :—இவ்விதிகளை, தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் எல்லாச் சாமான்களையும் அளப்பதற்கும், அவைகளின் அளவு சரிபார்ப்பதற்கும் என்று சொல்லலாம்.

2. ஊராட்சி ஒன்றிய மன்றங்களினால் அல்லது அவைகள் சார்பில் ஒப்பந்தத்தின் பேரில் நிறைவேற்றப்படவேண்டிய எப்பணியின் மதிப்பு அல்லது தொகை 1,500 ரூபாய்க்கு மேற்படுகிறதோ அத்தகைய பணி ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் ஒப்ப அறிவிப்புகளை வரவழைக்க வேண்டும்.

ஆனால், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் அடியிற் கண்டவைகளில் ஒப்ப அறிவிப்புகள் வேண்டியதில்லையெனச் சொல்லிவிடலாம்; அவையாவன :—

(அ) ஏதேனும் பணி ஊராட்சி ஒன்றியத்துக்குள் நிறைவேற்றப்படுவதற்காக ஊராட்சியினிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்து, அப்பணியின் மதிப்பு அல்லது தொகை 3,000 ரூபாய்க்கு மேற்படாதவற்றில்;

(ஆ) உள்ளாட்சிக் கழகங்கள் நடைமுறை நூலின் (402) விளக்க உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிற பராமரிப்புக்கான ஒப்பந்தங்களின் 'அ' ஏற்பாட்டின் பேரில் நிறைவேற்றப்படுவதற்காக ஒப்பவிக்கப்பட்டுள்ள ஏதேனும் பணியைப் பொருத்தவற்றில்;

(இ) ஒரு சாலைக்கான ஆண்டுப் பராமரிப்பு ஒப்பந்தம் தீர்மானம் செய்யப்பட்டான பிறகு அந்த சாலை சம்பந்தமாக அவசியமெனத் தெரிய வருகிற துணைப் பராமரிப்புப் பணியின் ஒப்பந்தத் தொகை, முதல் பராமரிப்புத் தொகையில் 50 சதவீதம் அல்லது 2,500 ரூபாய் ஆகிய இவற்றில் எது குறைவாயிருக்கிறதோ அதற்கு மேற்படாவிட்டால், அந்தத் துணைப் பராமரிப்புப் பணியை பொருத்தவற்றில்;

(ஈ) வளர்ச்சிப் பணிகளுக்காகப் பொதுமக்களிடமிருந்து அல்லது பொதுமக்களில் தனிப்பட்ட ஒருவரிடமிருந்து ரொக்கமாகவோ பொருளாகவோ உதவித் தொகை எதிர்பார்க்கப்பட்டால், அத்தகைய வளர்ச்சிப் பணிகளைப் பொருத்தவரை எந்த ஊராட்சிக்குள் அப்பணி இருக்கிறதோ அந்த ஊராட்சியின் தலைவரிடம் அப் பணியை ஒப்புவிக்க வேண்டுமென ஊராட்சி ஒரு தீர்மானம் நிறைவேற்றினால், அதை அவ்வாறே அவரிடம் ஒப்புவிக்கலாம்.

(உ) தனிப்பட்ட எவராலேனும் ஆதரிக்கப்பட்ட வளர்ச்சிப் பணியைத் தாமே நிறைவேற்றிக் கொடுக்க ஆதரவாளர் விரும்பினால், அத்தகைய வளர்ச்சிப் பணியின் விஷயத்தில்; அந்த ஆதரவாளர், அப் பணியின் ஒப்பளிக்கப்பெற்ற உத்தேச மதிப்பில் கால் பாகத்துக்குக் குறையாமல் உதவித் தொகையாகக் கொடுத்தால், அப் பணியை அவரிடமே ஒப்பளிக்கலாம்;

ஆனால், அந்த ஆதரவாளர் அப்பணியை நிறைவேற்றும் வேலையை வேறொரு ஒப்பந்தக்காரரிடம் ஒப்புவிக்கக்கூடாது.

3.2 ஆவது விதியின் விலக்கு நிபந்தனையில் கண்ட (அ) முதல் (உ) வரையுள்ள பகுதிகளின் கீழ் வராதவைகளில் அடியிற்கண்ட தறுவாய்களில், அவசரம் காரணமாக அல்லது வேறு ஏதேனும் தனிக் காரணத்துக்காக ஒப்ப அறிவிப்புகள் அவசியமில்லையெனச் சொல்லிவிடலாம்; அந்த வேறு தனிக் காரணத்தை ஆணையாளர் எழுதி வைக்க வேண்டும்; அத்தறுவாய்களாவன :—

(i) பணியின் மதிப்பு அல்லது தொகை 10,000 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால் (நெடுஞ்சாலை-கிராமப் பொதுப் பணித் துறை) உதவிப் பொறியாளர் பரிந்துரையின்பேரில், (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளரின் ஒப்புதலை முன்னதாகப் பெற்றுக்கொண்டு;

(ii) பணியின் மதிப்பு அல்லது தொகை 10,000 ரூபாய்க்கு மேற் ஆனால் 25 ரூபாய்க்கு மேற்படாவிட்டால்; (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) மேற்பார்வைப் பொறியாளரின் ஒப்புதலை முன்னதாகப் பெற்றுக் கொண்டு ;

(iii) பணியின் மதிப்பு அல்லது தொகை 25,000 ரூபாய்க்கு மேற்பட்டால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளர்; (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) மேற் பார்வைப் பொறியாளர் ஆகியோரின் பரிந்துரையின்பேரில், (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளரின் ஒப்புதலை முன்னதாகப் பெற்றுக் கொண்டு.

4. ஒப்ப அறிவிப்புகள் வரவழைக்கப்படாவிட்டால் அல்லது அவசியமில்லையெனச் சொல்லப்பட்டால் ஆணையாளர், 2 ஆவது விதியின் விலக்கு நிபந்தனையில் கண்ட (அ) முதல் (உ) வரையுள்ள பகுதிகளின் கீழ் வருவனவற்றில் தவிர, ஒப்பந்தக்காரர்களின் பதிவேட்டிலிருந்து தெரிந்தெடுக்கப்படும் ஓர் ஒப்பந்தக்காரரைக் கொண்டு, ஒப்பளிக்கப் பெற்ற மதிப்பீட்டு வீதங்களுக்குச் சாதாரணமாக மேற்படாத வீதங்களில் அப்பணியைச் செய்து முடிப்பிக்க வேண்டும். அவசரம் காரணமாக அல்லது வேறு தனிப்பட்ட காரணங்களுக்காக, ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீட்டு வீதங்களுக்கு மேற்பட்ட வீதங்களை வைத்துக் கொள்ளக் கருதினால், அந்த வீதங்களில் ஒப்ப அறிவிப்புகளை ஏற்றுக் கொள்வதை ஒப்புக் கொள்ள 18 ஆவது விதியின்படித் தகுதி வாய்ந்த அதிகாரியின் எழுத்து மூலமான ஒப்புதலை முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஆனால், அந்த வட்டாரத்திலிருப்பவரும் பதிவான ஒப்பந்தக்காராாயிராதவருமான ஒருவர் அப்பணி நிறைவேற்றப்படுவதில் அக்கறை உடையவராயிருந்தால், அவரிடம் அத்தகைய ஏதேனும் பணியை ஒப்புவிக்கலாம்.

எனினும், அவர் மூலமாக அப் பணியைச் செய்து முடிப்பித்துக் கொள்வது நல்லதென்று ஆணையாளர் கருத வேண்டும்; அன்றியும், மதிப்பு அல்லது தொகை 250 ரூபாய்க்கு மேற்படாமலிருக்க வேண்டும்.

அல்லாமலும், எந்தப் பணிகளின் மதிப்பு அல்லது தொகை 250 ரூபாயாகவோ அதற்குக் குறைவாகவோ இருக்கிறதோ அந்தப் பணிகளுக்கான ஒப்பந்தக்காரர்களைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பொறியாளர் தெரிந்தெடுக்க வேண்டும்.

மேலும், 2 ஆவது விதியின் விலக்கு நிபந்தனையில் கண்ட (இ) பகுதியின் கீழ் வருபவைகளில் துணைப் பராமரிப்புப் பணியை, முதல் பராமரிப்புப் பணிக்கான ஒப்பந்தக்காரரிடம், முதல் பராமரிப்புப் பணிக்கான அதே விதங்களின் படி ஒப்புவிக்க வேண்டும்.

5. ஒப்பந்தக்காரர்களின் பதிவேடு ஒன்றை I ஆம் படிவப்படி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வைத்துவர வேண்டும். அப் பதிவேட்டை மறைவடக்கமாகக் கருத வேண்டும். அப்பதிவேட்டின் படி ஒன்றை, ஆணையாளர் சம்பந்தப்பட்ட (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளருக்கு ஆண்டுதோறும் அனுப்ப வேண்டும்.

6. (1) ஒப்பந்தக்காரர்களின் பதிவேட்டை, நாளது தேதி வரையில் எழுதி வைத்திருக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியப் பொறியாளர் ஆறு மாதங்களில் குறைந்தது ஒரு தடவையாகிலும் அப் பதிவேட்டைக் கூராய்வு செய்து, தாம் கூராய்வு செய்ததற்கடையாளமாக அதில் கையெழுத்திட வேண்டும். அப் பதிவேட்டில் எவற்றையேனும் மாறுதல்கள் செய்வது அவசியமென ஊராட்சி ஒன்றியப் பொறியாளர் கருதினால், அவர் அதைப் பற்றி ஆணைகள் பெறுவதற்காக ஆணையாளருக்கு எழுதிக் கேட்க வேண்டும். ஊராட்சி ஒன்றியப் பொறியாளர் கூறிய எவையேனும் மாறுதல்களின்பேரில் ஆணையாளர் ஆணைகள் பிறப்பிக்க வேண்டும்; மேலும் அவர், தாம் ஆணையிட்ட எவையேனும் மாறுதல்களுக்கான தமது காரணங்களை எழுதி வைக்க வேண்டும் ஆணையாளர் எழுத்து மூலமாக ஆணையிட்ட எவையேனும் மாறுதல்களைப் பதிவேட்டில் எழுதிக் கொள்ள வேண்டும். பதிவேட்டில் செய்யப்பட்ட திருத்தங்களின் படி ஒன்றை, சம்பந்தப்பட்ட (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளருக்கு அனுப்ப வேண்டும்; அது அவருடைய அலுவலகத்திலுள்ள பதிவேட்டுடன் கோர்த்து வைக்கப்பட வேண்டும்.

(2) பதிவேட்டின் குறிப்புரைப் பத்தியில், ஒப்பந்தக்காரரின் தகுதிகள், அவர் இதற்குமுன் செய்து முடித்த பணிகளின் தரம்—பரிமாணம் மற்றெல்லாப் பொருத்தமான விவரங்கள் ஆகியவற்றை எழுத வேண்டும்.

(3) ஒப்பந்தக்காரராகப் பதிவு பெற விரும்புகிற ஒருவர், தமது தகுதிகளையும் முன் அனுபவத்தையும் தெரிவித்து, ஊராட்சி ஒன்றியப் பொறியாளருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்; அப்போது (7) உள் விதியின்படி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து பெற்ற பற்றுச் சீட்டு ஒன்றையும் வைத்தனுப்ப வேண்டும். ஊராட்சி ஒன்றியப் பொறியாளர் முழு விசாரணை செய்து, தாம் செய்த விசாரணையின் பதிவுடனும், பதிவேட்டின் (4), (5) பத்திகளில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் சம்பந்தமாகத் தமது பரிந்துரையுடனும் அவ் விண்ணப்பத்தை ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும். ஆணையாளர் அவ் விண்ணப்பத்தின் மீது ஆணைகள் பிறப்பித்து அதைப் பதிவேட்டில் பதிவு செய்வித்துக் கொண்டு, ஊராட்சி ஒன்றியப் பொறியாளருக்குத் தெரிவிக்க வேண்டும்; ஊராட்சி ஒன்றியப் பொறியாளர், ஆணையாளரால் அடியிற் கண்டவாறு எழுத்து மூலமாய்க் கட்டளையிடப்பட்டால், பதிவேட்டின் (4), (5) பத்திகளில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் சம்பந்தமாக ஆணையாளரின் ஆணைகளை மறைவடக்கமாக ஒப்பந்தக்காரருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(4) ஆணையாளரின் ஆணைகளை எதிர்த்து (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளர் மூலமாக (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளருக்கு மேல்முறையீடு உண்டு. தமது விண்ணப்பத்தின்பேரிலான ஆணைகளை ஒப்பந்தக்காரர் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள், ஊராட்சி ஒன்றியப் பொறியாளர், ஆணையாளர் இவர்கள் மூலமாக அந்த மேல்முறையீட்டைச் செய்துகொள்ள வேண்டும். அந்த மேல்முறையீட்டின்பேரில் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளரின் ஆணைகள் முடிவானவையாகும்.

(5) பதிவேடும் அதற்குத் தொடர்பான பதிவுகளும், தணிக்கை அல்லது மேற்பார்வை அலுவலர் பார்ப்பதற்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்; அந்த அலுவலர் எவையேனும் முக்கியமான கிரமப் பிசகுகளை (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளரின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

(6) (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளர், ஓர் ஒப்பந்தக்காரரின் பெயரைப் பதிவேட்டில் சேர்க்க வேண்டுமென அல்லது அதிலிருந்து எடுத்துவிட வேண்டுமென அல்லது அப் பதிவேட்டின்

(4), (5) பத்திகளில் உள்ள பதிவுகளுடன் எதையேனும் சேர்க்க வேண்டுமென அல்லது அப்பதிவுகளில் மாறுதல் செய்ய வேண்டுமெனக் கட்டளையிடலாம். எண்பிக்கப்பட்ட துர்நடத்தைக்காக, அல்லது நிதி நிலை போதாமைக்காக அல்லது வேறு எவையேனும் காரணங்களுக்காக (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளர், ஒப்பந்தக்காரர்களின் பெயர்களைப் பதிவேட்டிலிருந்து எடுத்துவிடலாம். ஆனால், ஓர் ஒப்பந்தக்காரருடைய பெயரைப் பதிவேட்டிலிருந்து எடுத்துவிட ஆணையிடுவதற்குமுன், அவ்வாறு அகற்றுவதை எதிர்த்துக் காரணம் காட்டும்படி அவருக்கு எழுத்து மூலமாய் அறிக்கை கொடுக்க வேண்டும்; அவருடைய எழுத்து மூலமான சமாதானத்தைப் பெற்று, அதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். தலைமைப் பொறியாளரிடமிருந்து அக்கட்டளை கிடைத்தவுடன், (1) உள்விதியின் அல்லது (3) உள்விதியின் பிரகாரம் ஆணையாளர் இவைகளை ஆணையிட்டாற்போலவே, அவசியமான பதிவுகளை அல்லது திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

(7) ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யும்படி விண்ணப்பம் செய்து கொள்பவர் செலுத்த வேண்டியதென 10 ரூபாய்க்கு மேற்படாத கட்டணத்தை ஊராட்சி ஒன்றிய மன்றம் நிச்சயிக்கலாம். ஒப்பந்தக்காரர்களின் பதிவேட்டில் சேர்க்க வேண்டுமென (6) உள் விதியின்படி (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளரால் கட்டளையிடப்பட்ட பெயரை யுடையவர், அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட கட்டணத்தை ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குச் செலுத்த வேண்டும்.

(8) மெய்ப்பிக்கப்பட்ட கெட்ட நடத்தைக்காக அல்லது நிதி நிலைமை போதாமைக்காக அல்லது வேறு எவையேனும் காரணங்களுக்காக, ஆணையாளர், ஒப்பந்தக்காரர்களின் பெயர்களைப் பதிவேட்டிலிருந்து எடுத்துவிடலாம். ஆனால், ஓர் ஒப்பந்தக்காரருடைய பெயரைப் பதிவேட்டிலிருந்து எடுத்துவிட ஆணையிடுவதற்குமுன், அவ்வாறு அகற்றுவதை எதிர்த்துக் காரணம் காட்டும்படி அவருக்கு எழுத்து மூலமாய் அறிக்கை கொடுக்க வேண்டும்; அவருடைய எழுத்து மூலமான சமாதானத்தைப் பெற்று அதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும்.

7. (1) 2 ஆவது விதியின் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஆணையாளர், முத்திரையிட்ட உறைகளில் ஒப்ப அறிவிப்புகளை, அடியிற் கண்ட முறைகளில், கூடிய வரையில் மிகவும் வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் வரவழைக்க வேண்டும் ; அம் முறைகளாவன :—

(அ) ஒப்ப அறிவிப்பு அறிக்கையைத் தமிழில்—

(i) ஊராட்சி ஒன்றிய அறிக்கைப் பலகையிலும்,

(ii) தாலுக்கா அலுவலக அறிக்கைப் பலகையிலும்,

(iii) ஆணையாளர் கட்டளையிடக் கூடிய மற்ற இடங்களிலும் தெரியும் படி எழுதி வைப்பது மூலமாக;

(ஆ) சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அறிக்கைப் பலகையில் தெரியும் படி எழுதி வைப்பதற்காக, மாவட்டத்திலுள்ள மற்றெல்லா ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்களுக்கு ஒப்ப அறிவிப்பின்படிகளை அனுப்புவது மூலமாக;

(இ) மாவட்டத்திலுள்ள (நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறை) கோட்டப் பொறியாளர்களின் சம்பந்தப்பட்ட அலுவலகங்களின் அறிக்கைப் பலகையில் எழுதி தெரியும்படி எழுதி வைப்பதற்காக, ஒப்ப அறிவிப்பு அறிக்கையின் படிகளை அப் பொறியாளர்களுக்கு அனுப்புவது மூலமாக;

(ஈ) சாத்தியமானால், ஒப்ப அறிவிப்பு அறிக்கையை மாவட்ட அரசிதழில் வெளியிடுவது மூலமாக;

(2) (1) உள்விதியின்படி வெளியிடப்படும் அறிக்கை ஒவ்வொன்றிலும் பின் வருபவை கண்டிருக்க வேண்டும்; அவையாவன :—

(i) எப்போது, எங்கே ஒப்பந்த ஆவணங்களைப் பார்வையிடலா மென்பது;

(ii) ஒப்ப அறிவிப்புச் சரியாக இன்ன வடிவத்திலிருக்க வேண்டு மென்பது, அதாவது, மதிப்பீட்டு வீதங்களுக்குக் குறைவாக அல்லது அதிக மாக ஒரு குறிப்பிட்ட சதவீதப்படி அது இருக்க வேண்டுமா அல்லது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள வேலை இனம் ஒவ்வொன்றுக்காகவும் திட்ட வட்டமான வீதம் சொல்லப்பட வேண்டுமா என்பது;

(iii) எப்போது, எவ்விடத்துக்கு ஒப்ப அறிவிப்புகளை அனுப்ப வேண்டுமென்பது;

(iv) எப்போது, எவ்விடத்தில் அவைகள் திறக்கப்படும் என்பது;

(v) ஒப்ப அறிவிப்புடன் அனுப்பப்பட வேண்டிய பிணைப் பணத் தொகையும், ஒப்ப அறிவிப்பு ஏற்றுக் கொள்ளப்படுமானால் செலுத்த வேண்டிய பிணையத்தின் தொகையும் தன்மையும்;

(vi) ஒப்ப அறிவிப்பினை ஏற்றுக் கொள்வதற்கு தகுதி வாய்ந்த அதிகாரியானவர், வந்து சேர்ந்த ஒப்ப அறிவிப்புகளில் எவற்றையாவது

அவைகள், எல்லாவற்றையுமாவது காரணம் எதுவும் சொல்லாமலேயே தள்ளி விடுவதற்கான உரிமையைத் தாமே வைத்துக் கொண்டிருக்கிறுரேன்பது.

8. (1) ஒப்ப அறிவிப்புச் சரியாக இன்ன வடிவத்திலிருக்க வேண்டு மென்பதை, அதாவது, மதிப்பீட்டு வீதங்களுக்குக் குறைவாக அல்லது அதிக மாக ஒரு குறிப்பிட்ட சதவீதப்படி அது இருக்க வேண்டுமா அல்லது ஒப்பளிக்கப் பெற்ற மதிப்பீட்டில் கண்டுள்ள வீதங்களுக்குத் தொடர்பில்லாமல் அட்டவணையில் சேர்க்கப்பட்டிருக்கிற வேலை இனம் ஒவ்வொன்றுக்காகவும் திட்டவட்டமான வீதங்கள் சொல்லப்பட வேண்டும் என்பதை (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளருடன் கலந்தா லோசித்து ஆணையாளர் தீர்மானிக்க வேண்டும்.

(2) சதவீத அடிப்படையின்பேரில் ஒப்ப அறிவிப்பு அனுப்பும்படிக் கேட்கப்படுகிற ஒப்பந்தக்காரர்கள், ஒரு பணிக்கான மதிப்பீடுகளை ஆய்ந்து பார்க்கலாம்; ஆனால், சாமான்களின் உள்ளபடியான விலையைக் காட்டும் விவரப் பட்டியலும், செயற்கை நீர்க்கால்களின் எந்தத் தொலைவை மதிப்பீடு உள்ளபடி ஆதாரமாகக் கொண்டிருக்கிறதோ அந்தத் தொலைவும் அவர்களுக்குக் காட்டப் பட மாட்டா; அது ஒப்பந்த ஆவணங்களின் பாகம் ஆகவுமாட்டாது.

9. ஒப்பந்தத்தின் பேரில் ஒரு பணியை நிறைவேற்றுவதற்காக ஒப்ப அறிவிப்புகளை வரவழைப்பதற்குமுன், ஆணையாளர் "ஒப்பந்த ஆவணங் களைத்" தயாரிக்க வேண்டும்; அவைகளில் அடியிற் கண்டவை அடங்கியிருக்க வேண்டும் :—

(1) கருதியுள்ள பணியின் பொதுவான பரிமாணங்களையும், அவசியமா யிருக்கிற வரையில் பல்வேறு பாகங்களின் விவரங்களையும் காட்டும் வரைபடங் களின் முழுத் தொகுப்பு;

(2) எவையேனும் வேலை முறை அளவு நிலைக் குறிப்புகளைப் பார்க்கக் கூடியதாயிருந்தாலன்றி, செய்ய வேண்டியுள்ள பணி, பயன்படுத்தப் போகும் சாமான்கள் ஆகியவை பற்றிய முழு விவரக் குறிப்புகள்;

(3) பணியின் பல்வேறு விவரங்களின் அளவுகளைக் காட்டும் அட்டவணை.

(4) ஒப்ப அறிவிப்பாளருடைய ஒப்ப அறிவிப்பு ஏற்றுக் கொள்ளப் பட்டால், அவர் நிறைவேற்ற வேண்டிய "ஒப்பநத நிபந்தனைகளின்" ஒரு தொகுப்பு.

குறிப்பு.—மொத்தத் தொகை ஒப்பந்தங்களில் அளவுகளைப் பற்றிய அட்டவணை எதுவும், சந்தர்ப்பத்துக்கேற்ப, ஊராட்சி ஒன்றியப் பொறியாள ரால் அல்லது (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) உதவிப் பொறி யாளரால் அல்லது கோட்டப் பொறியாளரால் தயாரிக்கப்பட மாட்டாது.

10. ஒப்ப அறிவிப்புடன் கூட ஒப்ப அறிவிப்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பிணைப் பணமாவது, ஒப்ப அறிவிப்பாளர் பிணைப் பணத் தொகையை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் செலுத்தியதற்கடையாளமாயுள்ள பற்றுச் சீட்டாவது அனுப்பப்பட்டாலன்றி, அது செல்லும்படியாவதாகச் சாதாரண மாய்க் கருதப்பட மாட்டாது.

பார்ப்பது எளிதாயிருக்கும்பொருட்டு, பிணைப் பணமாக வைப்பீடு செய்யப்படுகிற எல்லாத் தொகைகளின் தனிப் பட்டியல் ஒன்றை, ஒப்ப அறிவிப்பைத் திறக்கும் அலுவலரின் கையெழுத்துடன் வைத்துவர வேண்டும்.

11. பதிவான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரும் ஒப்ப அறிவிப்புகள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். 20,000 ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்பு அல்லது தொகையுள்ள மூலதனப் பணிகளில் அல்லது எஃகுப் பணியில் அல்லது குறிப்பிட்ட பணியில் தனிப்பட்ட யந்திர தளவாடங்களையும் அல்லது சாமான்களையும் தனிப் பயிற்சி பெற்ற தொழிலாளர்களையும் பயன் படுத்த வேண்டியிருக்கிறதென்றும், பதிவு பெறாத ஒப்பந்தக்காரர்களிட மிருந்து வரும் ஒப்ப அறிவிப்புகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாமென்றும் ஊராட்சி ஒன்றியப் பொறியாளர் சான்றிடுபவைகளில் இந்த நிபந்தனை செயற் படுத்தப்பட மாட்டாது. 20,000 ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்பு அல்லது தொகையுள்ள மூலதனப் பணிகள் விஷயத்தில், நிலைபெற்ற பொறியியல் நிறுவனங்களிடமிருந்தும் அத்தகைய மூலதனப் பணிகளுக்காகவென்று ஊராட்சி ஒன்றியப் பரப்பில் அல்லது அதற்கு வெளியே பதிவாகியுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரும் ஒப்ப அறிவிப்புகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம். பதிவு பெறாத ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரும் ஒப்ப அறிவிப்புகளுடன் கூட, சான்றுகளின் படிகளும் அல்லது அத்தகைய ஏதேனும் மூலதனப் பணியை அவர்கள் இதற்கு முன் செய்து முடித்திருப்பதைப் பற்றிய பதிவும், அத்தகைய மூலதனப் பணிகளைச் செய்து முடிப்பதற்குரிய திடமான நிதி நிலைமையும் ஆற்றலும் அவர்களுக்கிருக்கிறதெனக் காட்டும் சான்றும் அனுப்பப்பட்டால், அந்த ஒப்ப அறிவிப்புகளைக் கூட ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம்.

12. பிணைப் பணத் தொகையானது, சந்தர்ப்பத்துக்கேற்ப, ஒப்பந்தக் காரருடைய ஒப்ப அறிவிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு குறித்த காலத் துக்குள் வேண்டிய பிணையத்தை அவர் கொடுக்கத் தவறிப்போகும் விஷயத்தில் ஏற்படும் இழப்பை ஈடுசெய்யும் வகையில், அல்லது அவரிடமிருந்து சேரவேண்டிய தொகைகள் போதிய உத்தரவாதமாகிற வரையில், பிணைய மாயிருக்கும் அளவிற்கு அதிகமாயிருக்க வேண்டும்.

13. ஆணையாளராவது இதன்பொருட்டு அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள பொறுப்பு வாய்ந்த ஒருவராவது, இதற்கெனக் குறிப்பிடப்பட்ட காலத்திலும் இடத்திலும், அங்கே வந்திருக்கக் கூடிய ஒப்ப அறிவிப்பாளர் களின் அல்லது அவர்களுடைய அதிகாரம் பெற்ற முகவர்களின் முன்னிலையில், ஒப்ப அறிவிப்புகள் அடங்கிய முத்திரையிட்ட உறைகளைத் திறக்க வேண்டும். முத்திரையிட்ட உறைகள் அவ்வாறு திறக்கப்படுகிற வரையில், ஆணையாளரின் அல்லது இதன்பொருட்டு அவரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கக் கூடியவரின் நேர் வசத்தில் அவைகள் வைத்திருக்கப்பட வேண்டும். ஒப்ப அறிவிப்புகள் திறக்கப்படுவதன்பேரில், ஆணையாளராவது ஒப்ப அறிவிப்புகளைத் திறக்க அவரிடமிருந்து அதிகாரம் பெற்றிருப்பவராவது, ஒப்ப அறிவிப்பு ஒவ்வொன் றிலும் ஒப்ப அறிவிப்பாளரால் செய்யப்பட்டு அவர் சான்றுக் கையொப்ப மிட்டிருக்கக்கூடிய திருத்தங்கள் எல்லாவற்றிற்கும் சுருக்கொப்பமிட வேண்டும். ஒப்ப அறிவிப்பாளரால் சான்றுக் கையொப்பமிடப்பட்டிராத திருத்தங்கள் ஒப்ப அறிவிப்பில் இருந்தால், அந்த ஒப்ப அறிவிப்பு திறக்கப் படும்போது அத் திருத்தங்களைப் பற்றிய குறிப்பு ஒன்றை அதிலேயே எழுத வேண்டும். ஆணையாளரது ஒப்ப அறிவிப்புகளைத் திறக்க அவரிடமிருந்து அதிகாரம் பெற்றிருப்பவராவது வந்து சேர்ந்த ஒப்ப அறிவிப்புகளின் மொத்த எண்ணிக்கையை ஒப்ப அறிவிப்புப் பதிவேட்டில் ஒவ்வொரு பணிக்கும் எதிரே எழுத வேண்டும்.

14. (1) ஒப்ப அறிவிப்புகள் திறக்கப்பட்ட பிறகு, அவைகளை அட்டவணைப் படுத்தி, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் II ஆம் படிவப் பிரகாரம் வைத்து வரப்படுகிற ஒப்ப அறிவிப்புப் பதிவேட்டில் குறித்துக்கொள்ள வேண்டும். ஆணையாளர் பதிவேட்டிலுள்ள பதிவுகளைக் கூராய்வு செய்து, மூல ஒப்ப அறிவிப்புகளையொட்டிப் பார்க்கும்போது அட்டவணை சரியானதென்று சான்றிட வேண்டும்; அந்த மூல ஒப்ப அறிவிப்புகளைப் பத்திரமாக வைத் திருந்து, தணிக்கையின்பொருட்டுக் கிடைக்கும்படிச் செய்யவேண்டும்.

(2) நியாயமான காரணங்கள் இல்லாமல் தமது ஒப்ப அறிவிப்பைத் திரும்பப் பெற்றுக்கொள்கிற ஓர் ஒப்பந்தக்காரர், ஓராண்டு முதல் ஐந்தாண்டுக் காலம் வரையில் ஒப்பந்தக்காரர்களின் பதிவேட்டிலிருந்து தம்

பெயர் நீக்கப்படுவதற்கு உள்ளாவார். (காரணங்கள் நியாயமானவையா அல்லவா என்பதை ஆணையாளர் தீர்மானிக்க வேண்டும்.) அப் பதிவேட்டி லிருந்து ஒப்பந்தக்காரருடைய பெயரை நீக்குவதற்காக ஆணையாளர் பிறப் பிக்கும் ஆணைகளை, சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு ஆணையாளர் அனுப்ப வேண்டும். ஆணையாளரின் ஆணைகளை எதிர்த்து, (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளருக்கு மேல்முறையீடு உண்டு. ஆணையாளரின் ஆணைகளை ஒப்பந்தக்காரர் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள், ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்—ஆணையாளர், (நெடுஞ் சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளர் ஆகியோர் மூலமாக அந்த மேல்முறையீடு செய்துகொள்ள வேண்டும். அந்த மேல் முறையீட்டின் பேரில் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளரின் ஆணைகள் முடிவானவையாகும்.

15. (1) மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பையே சாதாரண மாக ஏற்றுக்கொள்ள வேண்டும். மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பை ஏற்றுக்கொள்வது சரியல்ல எனக் கருதப்படுமானால், ஒப்ப அறிவிப்பை ஏற்றுக்கொள்வதற்குரிய அதிகாரியானவர் காரணங்களைத் தெளிவாக எழுதி வைக்க வேண்டும்; 16 ஆவது 17 ஆவது விதிகளில் குறிப் பிட்டிருக்கிற விதமாக அதைத் தீர்வு செய்ய வேண்டும்.

(2) ஒப்ப அறிவிப்பாளர் ஒருவரின் பணியாற்றும் நேர்மையும் இத்தகையன என்று தெரியாவிட்டால், அவருடைய ஒப்ப அறிவிப்பினைத் தள்ளிவிடத்தான் வேண்டுமென்பதில்லை; ஆயினும், குறிப்பிட்ட சந்தர்ப்பங் களில் பின்வருமாறு செய்ய வேண்டியிருந்தால், ஒப்பந்தத் தொகையில் 10 சதவீதத்துக்கு மேற்படாமல், ஒப்ப அறிவிப்பை ஏற்றுக் கொள்ளுதற்குரிய அதிகாரி அவசியமெனக் கருதுகிற அதிகப்படியான பிணையத்தை ஒப்ப அறிவிப்பாளரிடமிருந்து வாங்க வேண்டும்.

(3) மிகக் குறைந்த தொகைக்கான ஒப்பு அறிவிப்புத் தள்ளிவிடப் பட்டால், அடுத்தபடி மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். அந்த ஒப்ப அறிவிப்பை ஏற்றுக் கொள்வது கூட உசிதமல்லயெனக் கருதப்பட்டால், அடுத்தபடி அதிகத் தொகைக்கான ஒப்ப அறிவிப்பைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். இந்த உள் விதியின்படி ஓர் ஒப்ப அறிவிப்பினைத் தள்ளிவிடும் ஒவ்வொன்றிலும் அதற்கான காரணங்களை, ஒப்ப அறிவிப்புகளை ஏற்றுக் கொள்ளுதற்குரிய அதிகாரி எழுதி வைக்க வேண்டும்.

(4) ஓர் ஒப்ப அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கிற வீதங்களல்லாத வேறு வீதங்களில் அந்த ஒப்ப அறிவிப்பைச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ளக் கூடாது; ஆயினும் (1) உள்விதியின்படி அல்லது (3) உள்விதியின்படி ஆலோசிக்கப்பட்டு வருவதும் மற்றப்படி குறைந்த தொகைக்கான உள்ளதுமான ஓர் ஒப்ப அறிவிப்பில் சில இனங்களுக்கான வீதங்கள் மிக அதிகமாகக் குறிக்கப்பட்டுள்ளன என்று, ஒப்பு அறிவிப்பினை ஏற்றுக் கொள்ளுதற்குரிய அதிகாரி கருதினால், அவர், அடுத்த மேலதிகாரியின் ஒப்புதலுடன், அடுத்து மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பாளருடன் பேரம்பேசி, மேல் ஒப்பளிப்பின்றியே அந்த இனங்களுக்காக நியாயமான வீதங்களைப் பெறலாம்.

(5) ஒப்ப அறிவிப்புகளைத் திறந்த பிறகு, அவைகளைத் தீர்வு செய்வதில் தவிர்க்கக் கூடிய தாமதம் எதுவும் இருந்தலாகாது. மற்றவர்கள் ஒப்புதலைப் பெறுமல் ஆணையாளர் ஒப்ப அறிவிப்புகளைத் தீர்வு செய்யக் கூடிய வராயிருக்கிற விஷயங்களில் ஆணையாளர், அவைகள் திறக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள் அவைகளைச் சாதாரணமாகத் தீர்வு செய்ய வேண்டும்; ஒரு மாதத்துக்கு மேற்படாத காலத்துக்குள் எப்படியும் தீர்வு செய்துவிட வேண்டும். மற்றவைகளில் ஒப்ப அறிவிப்புகள் திறக்கப் பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதத்துக்கு மேற்பட்ட காலம் வரையில், ஒப்ப அறிவிப்புகள் எவையும் தீர்வு செய்யப்படாமலிருக்கக் கூடாது.

16. 2,500 ரூபாய்க்கு மேற்படாத மதிப்பு அல்லது தொகையுள்ள பணிகளில் 15 ஆவது விதியின் நிபந்தனைகளின்படி ஆணையாளர் ஆணைகள் பிறப்பிக்க வேண்டும். மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பு ஏற்றுக் கொள்ளப் படாமலிருந்து, அந்த ஒப்ப அறிவிப்பை அனுப்பியவர், ஒப்பந்தக்காரர்களின் பதிவேட்டின் பிரகாரம், பணிகளைச் செய்து முடிக்கக் கூடியவராயிருந்தால், (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளரின் ஆலோசனைக்கு குறிப்பிட்ட விஷயத்தை அனுப்ப வேண்டும்; (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளரின் தீர்ப்பு முடிவான தாகும். அவருக்கு அனுப்பிய கடிதத்திலும், அதன் பேரில் பிறப்பிக்கப்பட்ட ஆணையிலும், மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பை ஏற்றுக் கொள்ளாததற்குத் தெளிவான நம்பத்தக்க காரணங்கள் அடங்கியிருக்க வேண்டும்.

17. இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 10,000 ரூபாய்க்கு மேற்படாத மதிப்பு அல்லது தொகையுள்ள பணிகளில் சம்பந்தப் பட்ட (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) உதவிப் பொறியாளரின் சம்மதத்தைப் பெற்று ஆணையாளர் ஆணைகள் பிறப்பிக்க வேண்டும். (நெடுஞ்

சாலை கிராமப் பொதுப் பணித் துறை) உதவிப் பொறியாளருக்கும் ஆணையாளருக்கும் இடையே கருத்து வேற்றுமை இருந்தால், (நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறை) கோட்டப் பொறியாளரின் ஆலோசனைக்கு அந்த ஒப்ப அறிவிப்பை அனுப்ப வேண்டும்; அவருடைய தீர்ப்பு முடிவான தாகும், 10,000 ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 50,000 ரூபாய்க்கு மேற்படாத மதிப்பு அல்லது தொகையுள்ள பணிகள் விஷயத்தில், (நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறை) கோட்டப் பொறியாளரின் சம்மதத்தைப் பெற்று, ஆணையாளர் ஆணைகள் பிறப்பிக்க வேண்டும். (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித்துறை) கோட்டப் பொறியாளர் ஆணையாளரினின்றும் மாறுபடுகிற அல்லது மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பில்லாத வேறு ஒப்ப அறிவிப்பை ஏற்றுக்கொள்ளக் கருதியிருக்கிற விஷயங்களை, (நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறை) கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறை) மேற்பார்வைப் பொறியாளரின் ஆலோசனைக்கு அனுப்ப வேண்டும். நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறை மேற்பார்வை பொறி யாளரின் தீர்ப்பு முடிவானதாகும்.

18. (1) ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 3 லட்சம் ரூபாய்க்கு மேற்படாத மதிப்பு அல்லது தொகையுள்ள ஒப்ப அறிவிப்புகள் விஷயத்தில், ஒப்ப அறிவிப்புகளை (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளரின் பரிந்துரைகளுடன் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) மேற்பார்வைப் பொறியாளருக்கு அனுப்ப வேண்டும்; அவருடைய சம்மதத்தைப் பெற்றுக் கொண்டவுடன், 15 ஆவது விதியின் நிபந்தனைகளின் பிரகாரம் ஆணையாளர் ஆணைகள் பிறப்பிக்க வேண்டும்.

(2) மூன்று லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 5 லட்சம் ரூபாய்க்கு மேற் படாத மதிப்பு அல்லது தொகையுள்ள பணிகளுக்கான ஒப்ப அறிவிப்புகளில் அந்த ஒப்ப அறிவிப்புகளை ஆணையாளர், (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளர் ஆகியோரின் பரிந்துரைகளுடன், (நெடுஞ் சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளருக்கு அனுப்ப வேண்டும். (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளர், 15 ஆவது விதியின் நிபந்தனைகளின்படி ஆணைகள் பிறப்பிக்க வேண்டும்.

(3) ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்பு அல்லது தொகையுள்ள ஒப்ப அறிவிப்புகளில் அந்த ஒப்பு அறிவிப்புகளை, (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளரின் பரிந்துரைகளுடன் மாநில அரசினருக்கு அனுப்ப வேண்டும்; மாநில அரசினரின் ஆணைகள் முடிவானவை யாகும்.

19. மதிப்பீட்டு வீதத்துக்கோ, தொகைக்கோ மேற்பட்டுள்ள ஒப்ப அறிவிப்புகளைச் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது. அவசரம் காரணமாக அல்லது வேறு தனிப்பட்ட காரணங்களுக்காக அந்த ஒப்ப அறிவிப்புகளை ஏற்றுக்கொள்ளக் கருதினால், கீழ்க்கண்ட அதிகாரியின் ஒப்புதலை முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பணியின் மதிப்பு அல்லது தொகை.	மதிப்பீட்டு வீதங்களுக்கு மேற்பட்ட ஒப்ப அறிவிப்புகளை ஏற்றுக்கொள்வதற்கு இன்ன அதிகாரியின் முன் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது.
(1)	(2)
1. 10,000 ரூபாய்க்கு மேற்படாதவை.	(அ) ஒப்ப அறிவிப்பு வீதம் மதிப்பீட்டு வீதத்தை விட 5 சத வீதத்துக்கு மேற்படாமல் அதிகமாகயிருந்தால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறை) உதவிப் பொறியாளர்.
	(ஆ) ஒப்ப அறிவிப்பு வீதம் மதிப்பீட்டு வீதத்தைவிட 5 சத வீதத்துக்கு மேற்பட்டு ஆனால் 25 சதவீதத்துக்கு மேற்படாமல் அதிகமாயிருந்தால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) மற்பார்வைப் பொறியாளர்.
	(இ) ஒப்ப அறிவிப்பு வீதம் மதிப்பீட்டு வீதத்தைவிட 25 சத வீதத்துக்கு மேற்பட்டு ஆனால் 40 சதவீதத்துக்கு மேற்படாமல் அதிகமாயிருந்தால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளர்.

பணியின் மதிப்பு அல்லது தொகை.	மதிப்பீட்டு வீதங்களுக்கு மேற்பட்ட ஒப்ப அறிவிப்புகளை எற்றுக்கொள்வதற்கு இன்ன அதிகாரியின் முன் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள வேண்டு மென்பது.
(1)	(2)
	(ஈ) ஒப்ப அறிவிப்பு வீதம் மதிப்பீட்டு வீதத்தைவிட 40 சதவீதத்துக்கு மேற்பட்டு அதிகமாயிருந்தால், மாநில அரசினர்.
2. 10,000 ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் 50,000 ரூபாய்க்கு மேற்படாதவை.	(அ) ஒப்ப அறிவிப்பு வீதம் மதிப்பீட்டு வீதத்தைவிட 5 சதவீதத்துக்கு மேற்படாமல் அதிகமாயிருந்தால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளர்.
	(ஆ) ஒப்ப அறிவிப்பு வீதம் மதிப்பீட்டு வீதத்தைவிட 5 சதவீதத்துக்கு மேற்பட்டு ஆனால் 25 சதவீதத்துக்கு மேற்படாமல் அதிகமாயிருந்தால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) மேற்பார்வைப் பொறியாளர்.
	(இ) ஒப்ப அறிவிப்பு வீதம் மதிப்பீட்டு வீதத்தைவிட 25 சதவீதத்துக்கு மேற்பட்டு ஆனால் 40 சதவீதத்துக்கு மேற்படாமல் அதிகமாயிருந்தால் (நெடுஞ்சாலை பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளர்.
	(ஈ) ஒப்ப அறிவிப்பு வீதம் மதிப்பீட்டு வீதத்தைவிட 40 சதவீதத்துக்கு மேற்பட்டு அதிகமாயிருந்தால், மாநில அரசினர்.

பணியின் மதிப்பு அல்லது தொகை.	மதிப்பீடு வீதங்களுக்கு மேற்பட்ட ஒப்ப அறிவிப்புகளை ஏற்றுக்கொள்வதற்கு இன்ன அதிகாரியின் முன் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது.
(1)	(2)
3. 50,000 ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் 3 லட்சம் ரூபாய்க்கு மேரபடாதவை.	(அ) ஒப்ப அறிவிப்பு வீதம் மதிப்பீட்டு வீதத்தைவிட 25 சத வீதத்துக்கு மேற்படாமல் அதிகமாயிருந்தால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) மேற்பார்வைப் பொறியாளர்.
	(ஆ) ஒப்ப அறிவிப்பு வீதம் மதிப்பீட்டு வீதத்தைவிட 25 சத வீதத்துக்கு மேற்பட்டு ஆனால் 40 சதவீதத்துக்கு மேற்படாமல் அதிகமாயிருந்தால (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளர்.
	(இ) ஒப்ப அறிவிப்பு வீதம் மதிப்பீட்டு வீதத்தைவிட 40 சத வீதத்துக்கு மேற்பட்டு அதிகமாயிருந்தால், மாநில அரசினர்.
4. 3 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 5 லட்சம் ரூபாய்க்கு மேற்படாதவை.	(அ) ஒப்ப அறிவிப்பு வீதம் மதிப்பீட்டு வீதத்தைவிட 40 சத வீதத்துக்கு மேற்படாமல் அதிகமாயிருந்தால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளர்.
	(ஆ) ஒப்ப அறிவிப்பு வீதம் மதிப்பீட்டு வீதத்தைவிட 40 சத வீதத்துக்கு மேற்பட்டு அதிகமாயிருந்தால் மாநில அரசினர்.
5. 5 லட்ச ரூபாய்க்கு மேற்பட்டவை.	மாநில அரசினர்.

20. (1) இவ் விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே மாநில அரசினர் பொதுவான அல்லது தனிப்பட்ட ஆணை மூலமாக அவ்வப்போது குறிப்பிடக்கூடிய தேதி வரையில் ஆணையாளர்—

(i) முதற்கண் ஒப்ப அறிவிப்பு எதுவுமே வராவிட்டாலும் அல்லது அதிக தொகைக்கான ஒப்ப அறிவிப்புகள் மட்டுமே வந்திருந்து அவை நியாயமற்றவை எனக் கருதப்பட்டுத் தள்ளிவிடப்பட்டாலும்—

(அ) பணியின் மதிப்பு அல்லது தொகை 2,500 ரூபாய்க்கு மேற்படாவிட்டால், மேல்அதிகாரியைக் கேட்காமலும்,

(ஆ) பணியின் மதிப்பு அல்லது தொகை 2,500 ரூபாய்க்கு மேற்பட்டு 10,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித்துறை) உதவிப் பொறியாளரின் ஒப்புதலுடனும்,

(இ) பணியின் மதிப்பு அல்லது தொகை 10,000 ரூபாய்க்கு மேற்பட்டு 25,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளரின் ஒப்புதலுடனும்,

(ஈ) பணியின் மதிப்பு அல்லது தொகை 25,000 ரூபாய்க்கு மேற்பட்டால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறை) மேற்பார்வைப் பொறியாளரின் ஒப்புதலுடனும், மேற்கொண்டு ஒப்ப அறிவிப்புகளை வரவழைப்பதை வேண்டாமென்று சொல்லிவிடலாம்.

(2) ஒப்ப அறிவிப்புகள் (1) பகுதியின்படி வேண்டாமென்று சொல்லப்படாமலிருந்தால் ஆணையாளர் உள்ளூர் நிலைமைகளையெல்லாம் கவனித்து, மிகத் தகுதி வாய்ந்த ஒப்ப அறிவிப்பாளரிடம் பணியை ஒப்புவிக்கும் பொருட்டு ஒப்ப அறிவிப்பாளர்களுடன் பேரம் பேசி—

(i) பணியின் மதிப்பு அல்லது தொகை 2,500 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) உதவிப் பொறியாளரின் ஒப்புதலுடனும்,

(ii) பணியின் மதிப்பு அல்லது தொகை 2,500 ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 25,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளரின் ஒப்புதலுடனும்,

(iii) பணியின் மதிப்பு அல்லது தொகை 25,000 ரூபாய்க்கு மேற்பட்டால் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) மேற்பார்வைப் பொறியாளரின் ஒப்புதலுடனும்.

(iv) ஒப்ப அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள விதமல்லாத வேறொரு விதப்படியுள்ள கோரிக்கையை ஏற்றுக் கொள்ளலாம்.

படிவம் I

ஒப்பந்தக்காரர்கள் பதிவேடு.

(5-வது விதியின்படி நிர்ணயிக்கப்பட்டது)

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
தொடரிலக்கம்.	ஒப்பந்தக்காரர் பெயர்.	முகவரி.	ஓராண்டின்போது எதாவதொரு காலத்தில் செய்து முடிப்பதற்காக அவரிடம் பத்திரமாட் ஒப்புவிக்கப்படக்கூடிய அமலில் இருக்கிற ஒப்பந்தங்களின் பண வரையறை.	சாமான்கள் வழங்குவதற்காக மட்டும் அல்லது சாலைப் பணிகளுக்காக அல்லது கட்டுமானப் பணிகளுக்காக அல்லது பொதுவாக எல்லாப் பணிகளுக்கும் தகுதி பெற்றவரா என்பது.	பதிவுக் கட்டணம் செலுத்தப்பட்ட செலுத்துச் சீட்டின் எண்ணும் தேதியும்.	குறிப்புரை.

படிவம் II

ஒப்ப அறிவிப்புப் பதிவேடு.

[14-ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியின்படி நிர்ணயிக்கப்பட்டது.]

பணியின் பெயர்.

ஒப்பந்தத்தின் மதிப்பீட்டுத் தொகை

வந்து சேர்ந்த ஒப்ப அறிவிப்புகளின் மொத்த எண்ணிக்கை.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
தொடரிலக்கம்.	ஒப்ப அறிவிப்பாளரின் பெயர்.	பதிவான ஒப்பந்தக்காரரா அல்லவா ? பதிவானவராயிருந்தால் ஒப்பந்தக்காரர்களின் பதிவேட்டில் தொடரிலக்கம்.	ஒப்ப அறிவிப்புச் சதவீதம்.	வைப்பீட்டுத் தொகை.	பொறியாளரின் பரிந்துரைகள்.	ஒப்ப அறிவிப்பை ஏற்றுக்கொள்ளுதற்குரிய அதிகாரியின் ஆணைகள்.

(1961 மே 22-ஆம் தேதியுள்ள 1441-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை)

(1962 ஜூலை 9-ஆம் தேதியுள்ள 1532-ஆம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(99) ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பொதுப் பணியாளர்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு வெளியேயுள்ள கிராமப் பொதுப் பணியாளர்களாகிய உதவிப் பொறியாளரின் பணியாளர்களைச் சேர்ந்த மேல்நிலைத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கும் இடையே அதிக பயனுடைய ஒத்திசைவு இருக்கும்படிச் செய்தால் ஊராட்சி ஒன்றியங்களில் பணிகள் திட்டத்தை விரைவுபடுத்தலாமென அரசினர் கருதுகிறார்கள். ஊராட்சி வளர்ச்சி வட்டாரங்களில் பணிகள் திட்டத்தை நிறைவேற்றுவதில் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) உதவி பொறியாளருக்குப் பெரும் பங்கு உண்டு. (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) உதவிப் பொறியாளர் பணியின் மேம்பட்ட சிறப்புடைய பாகம், கிராமப் பொதுப் பணிகள் பக்கமே உள்ளது. ஏனென்றால், அவர் செயற்படுத்த வேண்டியுள்ள கிராமப் பொதுப் பணிகள் திட்டமானது, வாய்ப்பெல்லையில், அவரிடம் ஒப்புவிக்கப்படும் நெடுஞ்சாலைத் திட்டத்தை விட மிகப் பெரிதாயிருக்கிறது.

2. (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித்துறை) பொறியாளருக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் பொறியாளருக்கும் இடையில் இன்னும் நல்ல முறையில் ஒத்திசைவு இருக்கும்படிச் செய்யும்பொருட்டு, மாதந்தோறும் கூட்டங்கள் நடப்பதற்கான முறை ஒன்றை வகுத்தமைக்கும்படி (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித்துறை) தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப் படுகிறார்; இம் முறையின்படி, உதவிப் பொறியாளர், தமது அதிகார வரம்புக் குட்பட்ட ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்துக்கும் மாதம் ஒரு தடவை ஒழுங்காகப் போவார். அப்போது அவர், ஊராட்சி ஒன்றியத்தின் பெருந் தலைவரையும் ஆணையாளரையும் இளநிலைப் பொறியாளரையும் சந்திப்பார். அவர்கள் ஒருங்கமர்ந்து, அந்த வட்டாரத்தில் பணிகள் திட்டத்தின் முன்னேற்றத்தைப் பற்றி விவாதித்து, அம் முன்னேற்றத்திலிருந்து எழும் முதன்மையான பிரச்சினைகளைத் தீர்வு செய்வார்கள். இது சம்பந்தமாகத் தக்க விளக்க உரைகளை வெளியிட்டு அரசினருக்கும் தெரிவிக்கும்படி தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(1961 டிசம்பர் 20 ஆம் தேதியுள்ள 245327/ 'தனி/61-1 ஆம் எண் குறிப்பாணை.)

(100) பணிகளுக்காகவும், சரக்குகளையும் சாமான்களையும் வழங்குவதற்காகவும் சிலவற்றில் ஊராட்சி ஒன்றியங்கள் அறிக்கைகள் வெளியிடுவதைப் பற்றி, 1960 டிசம்பர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப்

பல்வகை அரசாணையில் கண்ட 44 ஆம் விளம்பரத்திலுள்ள 7(1) (ஆ) விதியிலும், 1961 மே 22 ஆம் தேதியுள்ள 1441 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் கண்ட விளம்பரத்திலுள்ள 6(1) (இ) விதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் இந்த நிபந்தனைகளைத் தாராளமாகவே பயன்படுத்தி வந்திருக்கின்றன என்பதை அறிய அரசினருக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறு, பயன்படுத்தியதன் விளைவாக, பெரும்பான்மையானவற்றில் அத்தகைய அறிக்கைகளை வெளியிடும்பொருட்டு, ஊராட்சி ஒன்றியங்களின் நிதிகளிலிருந்து ஏராளமாகப் பணம் செலவாகியிருக்கிறது. மேற்கண்டவற்றில் ஊராட்சி ஒன்றியங்களின் நிருவாக அதிகாரிகள் செய்தித் தாள்களில் அறிக்கைகள் வெளியிடுவதைச் சாத்தியமாக்கும் நிபந்தனைகளை நீக்கிவிடும்பொருட்டு மேற்படி விதிகளைத் திருத்துவது அவசியமென அரசினர் கருதுகிறார்கள். இது பற்றித் திருத்தப்பட்ட விதிகள் பிறப்பிக்கப்படுகிற வரையில் பின்வரும் விளக்கவுரைகள் பிறப்பிக்கப்படுகின்றன. ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் பணிகளுக்காகவும் சாமான்கள், சரக்குகள் முதலியவை தங்களுக்கு வழங்கப்படுவதற்காகவும் ஒப்ப அறிவிப்புகளை வரவழைத்து ஏற்றுக் கொள்வது சம்பந்தமான ஒப்ப அறிவிப்பு அறிக்கைகளுக்கு இந்த விளக்க உரைகள் பொருந்தும்.

2. ஊராட்சி ஒன்றியங்களில் ஒப்ப அறிவிப்பு அறிக்கையானது (i) ஊராட்சி ஒன்றிய அறிக்கைப் பலகையிலும், (ii) தாலுகா அலுவலக அறிக்கைப் பலகையிலும், (iii) சாத்தியமானால் மாவட்ட அரசிதழிலும், (iv) (பணிகளைப் பொருத்தவரை) ஊராட்சி ஒன்றியப் பொறியாளரும் (மற்றவைகளில்) ஊராட்சி ஒன்றிய ஆணையாளரும் அவசியமெனக் கருதக் கூடிய மற்ற இடங்களிலும் வெளியிடப்பட வேண்டும். இதோடுகூட, ஒப்ப அறிவிப்பு அறிக்கையின் படிகளை குறிப்பிட்ட மாவட்டத்திலுள்ள மற்றெல்லா ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்களுக்கும் அனுப்ப வேண்டும்; சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் அறிக்கைப் பலகையில் வெளியிடுவதற்காக அவ்வாறு அனுப்ப வேண்டும்.

3. ஓர் ஊராட்சி ஒன்றியத்தால் பிறப்பிக்கப்படுகிற ஒப்ப அறிவிப்பு அறிக்கையை, எச்சந்தர்ப்பத்திலும் ஒரு செய்தித்தாளில் வெளியிடக் கூடாது.

(1962 மே 29 ஆம் தேதியுள்ள 67987/ தனி/62-1 ஆம் எண் குறிப்பாணை.)

(101) 1961 மே 22 ஆம் தேதியுள்ள 1141 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில், ஊராட்சி ஒன்றியப் பணிகள் சம்பந்தமாக ஒப்ப அறிவிப்புகளை வரவழைப்பது பற்றிய விதிகள் பிறப்பிக்கப்

பட்டிருக்கின்றன. இவற்றின்படி ஒப்பந்தத்தின்பேரில் ஊராட்சி ஒன்றிய மன்றங்களால் அல்லது அவைகள் சார்பாக நிறைவேற்றப்பட வேண்டிய எந்த வேலையின் மதிப்பும் தொகையும், அவ் விதிகளின் (1) விதியில் கண்ட விலக்கு நிபந்தனையின் கீழ் வருபவைகளில் தவிர மற்றபடி 1,500 ரூபாய்க்கு எவை மேற்படுகின்றனவோ அத்தகைய பணி ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் ஒப்ப அறிவிப்புகளை வரவழைக்க வேண்டும். 1961 ஜூலை 25 ஆம் தேதியுள்ள 2103 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையின் 6 (vii) பத்தியில் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்புவிக்கப் பட்ட கிராமப் பணிகள் திட்டத்தின்படி பணிகளை நிறைவேற்றுவதற்கான நடைமுறை வகுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அட்டவணை வீதங்களின் படி, இப்பணியை மேற்சொன்ன சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒரு தீர்மானம் நிறைவேற்றுவதன் பேரில் இப்பணிகள் கூடியவரையில் ஒப்ப அறிவிப்புகளை வரவழைக்காமலேயே நிறைவேற்றப்படுவதற்காக அட்டவணை வீதங்களின்படி ஊராட்சிகளிடம் ஒப்புவிக்கப்படவேண்டும். ஊராட்சி அவ்வாறு நிறை வேற்ற முடியாத நிலையிலிருந்தால், ஒப்ப அறிவிப்புகளை வரவழைக்காமலேயே, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளால் நேமகம் செய்யப்பட்ட ஒரு மானியக்கார ரிடம் அவைகளை ஒப்புவிக்கலாம். பணிகளை மேற்கொள்ளவோ மானியக்காரர் ஒருவரை நியமனம் செய்யவோ தங்களால் முடியாதென்று ஊராட்சிகள் தெரிவித்தால், இவ் விதிகளின்படி ஒப்ப அறிவிப்புகளை வரவழைத்தபிறகு ஓர் ஒப்பந்தக்காரரைக் கொண்டு பணிகளைச் செய்து முடிப்பித்துக் கொள்ளலாம். இனிமேல், மேற்படி விதிகளையும் அரசாணைகளையும் கண்டிப்பாகப் பின்பற்றும் படி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1962 பிப்ரவரி 1 ஆம் தேதியுள்ள 260 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில், ஊராட்சிப் பணிகளுக்காக ஒப்ப அறிவிப்புகளை வரவழைத்து ஏற்றுக் கொள்வது பற்றிய விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக் கின்றன. பணிகளைச் செய்து முடிக்கும் வேலை ஒப்புவிக்கப் பெற்றுள்ள ஊராட்சிகள் அவ் விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

(1962 ஜூன் 20 ஆம் தேதியுள்ள 225030 கி.மு. கணக்குகள் இ/61-2 ஆம் எண் (குறிப்பாணை.)

65. சாமான்கள், சரக்குகள் முதலியவற்றை ஊராட்சி ஒன்றிய மன்றங் களுக்கு வழங்குவது.—(1) பணிகளைச் செய்து முடிப்பதற்குரியவையல்லாத மற்ற சாமான்களை, சரக்குகளை அல்லது பணியாளர்களை வழங்குவது சம்பந்த மாக, 400 ரூபாய்க்கு மேற்படாமல் செலவின் எந்த எல்லை வரையில் ஒப்ப அறிவிப்புகள் வேண்டாமென்று சொல்லிவிடலாமென்பதை ஊராட்சி ஒன்றிய மன்றம் தீர்மானிக்கலாம். ஒப்ப அறிவிப்புகள் வரவழைக்கப்பட்டால், ஆணை

யாளர் அவைகளை அட்டவணைப்படுத்திக் கூராய்வு செய்ய வேண்டும்; பின்னர் அவைகள், ஆணைகள் பெறுவதற்காக, ஆணையாளரின் பரிந்துரைகளுடன் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முன்னர் வைக்கப்பட வேண்டும்.

2. மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பையே சாதாரண மாக ஏற்றுக் கொள்ள வேண்டும். மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பை ஏற்றுக் கொள்வது உகந்ததல்லவெனக் கருதப்பட்டால், அதற் கான காரணங்களைத் தெளிவாக எழுதி வைத்து, தணிக்கைக் காரியங்களுக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்.

குறிப்பு.—ஓர் ஒப்ப அறிவிப்பு எழுதுபொருள்களைப் போல ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைப் பற்றியதாயிருந்தால், மிக்க குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகிறவரையில், ஒப்பீட்டு விலைகளை ஒவ்வொரு பொருளுக்காகத் தனித்தனியாகவேனும் எல்லாப் பொருள்களுக் காகவும் ஒருங்கு சேர்த்தேனும் குறிப்பிட்ட தொகுப்புகளைச் சேர்ந்த பொருள் களுக்காகவேனும் கருதிப் பார்க்கலாம்; ஆனால், மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பைத் தெரிந்தெடுக்க ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குள்ள எண்ணத்தை, இந்த வழிகளில் எதன் மூலமாகவேனும், ஒப்ப அறிவிப்பு அறிக்கையில் தெளிவுபடுத்தியிருக்கவேண்டும். ஒப்ப அறிவிப்பானது, எல்லாப் பொருள்களுக்காகவும் அல்லது பொருள்களின் தொகுப்புகளுக் காகவும் ஒருங்கு சேர்த்துக் கருதப்படுமானால், சந்தர்ப்பத்துக்கேற்ப எல்லாப் பொருள்களின் அல்லது ஒவ்வொரு தொகுப்பிலுமுள்ள எல்லாப் பொருள் களின் உத்தேசத் தேவைகளின் விலையை, ஒப்ப அறிவிப்பு ஒவ்வொன்றிலும் கொடுக்கப்பட்டுள்ள வீதங்களையொட்டிக் கணக்கிடவேண்டும்; மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பு என்பது, எதில் எடுத்துக் கொள்ளக் கருதியுள்ள எல்லாப் பொருள்களின் உத்தேசத் தேவைகளின் மொத்த விலை மிகக் குறைவாகக் கணக்கிட்டு வருகிறதோ அதுவாகும்.

3. ஒப்ப அறிவிப்பாளரின் வழங்கீட்டு ஆற்றலும் நேர்மையும் தெரியா விட்டால், அவருடைய ஒப்ப அறிவிப்பைத் தள்ளிவிடத்தான் வேண்டுமென்ப தில்லை; ஆயினும், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களை நோக்கும்போது அடியிற் கண்டபடி செய்ய வேண்டியிருந்தால், ஊராட்சி ஒன்றியமன்றம் அவசியமெனக் கருதுகிறபடி அதிகப்படியான பிணையத்தை ஒப்ப அறிவிப்பாளரிடமிருந்து பெற வேண்டும்.

4. மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பு தள்ளிவிடப்பட்டால் அதற்கு அடுத்து அதிக தொகைக்கான ஒப்ப அறிவிப்பையும் தள்ளிவிடுவ

தற்குப் போதிய காரணங்களை எழுதி வைக்கக் கூடுமானாலன்றி, அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

5. ஓர் ஒப்ப அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கிற வீதங்கள் அல்லாத வேறு வீதங்களில் அந்த ஒப்ப அறிவிப்பை எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

6. ஒப்ப அறிவிப்புகள் திறக்கப்பட்ட பிறகு அவைகளைத் தீர்வு செய்வதில் தவிர்க்கக் கூடிய தாமதம் எதுவும் இருக்கக் கூடாது.

7. (1) ஆணையாளர், கூடிய வரையில், மிக வெளிப்படையாகவும் பொதுவாகவும், முத்திரையிட்ட உறைகளில், அடியிற் கண்ட விதங்களில், ஒப்ப அறிவிப்புகளை வரவழைக்க வேண்டும் ; அவ்விதங்களாவன:—

(அ) தமிழில் உள்ள ஒப்ப அறிவிப்பு அறிக்கையை—

(i) ஊராட்சி ஒன்றிய அறிக்கைப் பலகையிலும்,

(ii) தாலூகா அலுவலக அறிக்கைப் பலகையிலும்,

(iii) ஆணையாளர் கட்டளையிடக்கூடிய வேறு இடங்களிலும், தெரியும்படி எழுதி வைப்பது மூலமாக;

(ஆ) ஒப்ப அறிவிப்பு அறிக்கைகளின் படிகளை, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அறிக்கைப் பலகையில் தெரியும்படி எழுதி வைப்பதற்காக, குறிப்பிட்ட மாவட்டத்திலுள்ள மற்றெல்லா ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்களுக்கு அனுப்புவது மூலமாக; மேலும்,

(இ) சாத்தியமானால் ஒப்ப அறிவிப்பை மாவட்ட அரசிதழில் வெளியிடுவது மூலமாக.

(2) (1) உள் விதியின்படி வெளியிடப்படும் அறிக்கை ஒவ்வொன்றிலும், மற்றவைகளுடன் கூட, பின்வருபவைகளும் கண்டிருக்க வேண்டும்:—

(அ) பல்வகைப் பொருள்களின் அளவுகள் கண்டுள்ள அட்டவணையின் படி ஒன்றை இன்ன நிபந்தனைகளுக்குட்பட்டும், இன்ன அலுவலரிடமிருந்தும் ஏதேனும் விலை இருந்தால் இன்ன விலைக்கும் பெறலாமென்பதை அறிக்கையிலேயே விவரமாகச் சொல்ல முடியாவிட்டால், அந்தத் தகவல்கள் ;

(ஆ) சரியாக இன்ன விதத்தில் ஒப்ப அறிவிப்பு அனுப்ப வேண்டுமென்பது, அதாவது, பல்வேறு பொருள்களுக்கான விலைகளைச் சொல்ல வேண்டுமா என்பதும், ஒப்ப அறிவிப்பின் ஒப்பீட்டு மதிப்பு அளவுகளின்

அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளையுமொட்டி அல்லது ஒருங்கு சேர்த்து அப்பொருள்கள் எல்லாவற்றிற்காகவும் அல்லது அப்பொருள்களின் தொகுப்புகளுக்காக ஆய்ந்து பார்க்கப்படுமா என்பதும்;

(இ) எப்போது, எங்கே ஒப்ப அறிவிப்புகளை அனுப்ப வேண்டுமென்பது; அறிக்கை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து குறைந்தது பதினைந்து நாள் காலம் விடவேண்டும்;

(ஈ) எப்போது, எங்கே ஒப்ப அறிவிப்புகள் திறக்கப்படுமென்பது;

(உ) ஒப்ப அறிவிப்புடன் அனுப்பப்பட வேண்டிய பிணைப் பணத் தொகையும், ஒப்ப அறிவிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டால் வேண்டியிருக்கும் பிணையத்தின் தொகையும், இயல்பும்;

(ஊ) ஒப்ப அறிவிப்பை ஏற்றுக் கொள்ளுவதற்குரிய அதிகாரி;

(எ) ஒப்ப அறிவிப்பை ஏற்றுக் கொள்ளுவதற்குரிய அதிகாரி, வந்து சேர்ந்த ஒப்ப அறிவிப்புகளில் எதையேனும் அல்லது அவைகள் எல்லாவற்றையும் காரணங்கள் சொல்லாமலேயே தள்ளிவிடும் உரிமையை தமக்கே வைத்துக் கொண்டிருக்கிறார் என்பது;

(ஏ) நியாயமான காரணங்கள் இன்றித் தமது ஒப்ப அறிவிப்பினைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் ஓர் ஒப்ப அறிவிப்பாளர், பின்னர் அனுப்பும் ஒப்ப அறிவிப்புகள் சுருக்க வகையாய்த் தள்ளிவிடப் பெறுவதற்கு உட்பட்டவராவாரென்பது (அக் காரணங்கள் நியாயமானவைதாமா என்பதை, ஒப்ப அறிவிப்பை ஏற்றுக் கொள்ளுதற்குரிய அதிகாரி தீர்மானிக்க வேண்டும்).

8. இவ் விதிகளில் உள்ளது எதுவும், பின்வருபவைகளை வாங்குவதற்குப் பொருந்தமாட்டா; அவையாவன :—

(i) இந்தியப் பண்டங்கள் துறையினரிடமிருந்து வாங்கப்பட்ட பண்டங்கள்;

(ii) முன்பு போர்ப்பணி செய்தவர்களின் புனரமைப்புக்காக அரசினரால் தொடங்கப்பட்ட உலோக, வெட்டுமரப் பட்டறைகளிலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும் வரும் பொருள்கள்;

(iii) துப்புரவு முதலிய காயங்களுக்கான காளைகள்;

(iv) அரசினரின் அல்லது அவர்களுடைய முகவர்களின் ஆணைகளின் பேரில் பிறப்பிக்கப்பட்ட ஓர் அனுமதி மூலமாகக் கட்டுப்பாட்டு விதங்களின்படி கட்டுப்பாட்டுப் பொருள்கள்;

(v) பெட்ரோலை பகிர்வதற்கும் வழங்குவதற்குமான நிலைத்த தொழில் நிறுவனங்களிலிருந்து, அல்லது அவைகளிடமிருந்து அதிகாரம்பெற்ற முகவர்களிடமிருந்து, அச்சமயம் அமலில் உள்ள விதங்களின்படிவரும் பெட்ரோல்;

(vi) மாநில அரசின் தொழில் துறையைச் சேர்ந்தப் பகுதிகளினால் தயாரிக்கப்படும் பொருள்கள்.

9. முந்திய விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதக மில்லாமலே, கோட்ட ஆட்சியாளர், போதிய காரணத்துக்காக, குறிப்பிட்ட ஏதேனும் ஒன்றில் அல்லது வகையைச் சேர்ந்தவைகளில் ஒப்ப அறிவிப்புகள் வேண்டாமென்று சொல்லிவிட, அல்லது மேற்படி விதிகளில் கண்டுள்ள நிபந்தனைகளில் எதையேனும் அனுசரிக்காமலிருப்பதைப் பொறுத்துக் கொள்ள ஊராட்சி ஒன்றிய குழுவிற்கு அனுமதி கொடுக்கலாம்.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(1961 நவம்பர் 28 ஆம் தேதியுள்ள 3162 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(1962 நவம்பர் 13 ஆம் தேதியுள்ள 12513/L (தனி 62 ஆம் எண் குறிப்பாணை.]

66. குற்றங்களை இணக்கம் செய்து கொள்ளுதல்.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்டவையும், கீழ்க்கண்ட அட்டவணையின் முதல் பத்தியில் குறிப்பிட்டிருப்பவையுமான பிரிவுகளின்படி தண்டிக்கப் படத்தக்க குற்றங்கள், அந்த அட்டவணையில் நான்காம் பத்தியில் சொல்லியுள்ளபடி, இணக்கம் செய்து கொள்ளப்படத்தக்கவையாகும் அல்லது எந்த நீதிமன்றத்தின் முன் அக் குற்றத்துக்கான வழக்குத் தொடர்பு நடத்து

கொண்டிருக்கிறதோ அந்த நீதிமன்றத்தின் இசைவுடன் இணக்கம் செய்து கொள்ளப் படத்தக்கவையாகும் :—

அட்டவணை

பிரிவும், உட்பிரிவும் அல்லது பகுதியும். (1)	குற்றம். (2)	சட்டத்தின் படிக்கான தண்டனை. (3)	இணக்கம் செய்து கொள்ளத் தக்கதா அல்லது நீதி மன்றத்தின் அனுமதியுடன் ராஜி செய்து கொள்ளத் தக்கதா. (4)
82 (1) (அ)	பொதுச் சாலையில் அல்லது அதன் மீது சட்ட விரோதமான கட்டிடம் அல்லது சுவர் அல்லது வேலி போடுவது முதலியன.	நூறு ரூபாய்.	இணக்கம் செய்து கொள்ளத்தக்கது.
82 (1) (இ)	பொதுச்சாலை முதலியவற்றின் அருகிலுள்ள எவ்விடத்திலேனும் சட்ட விரோதமாகக் கல் வெட்டி எடுப்பது.	ஐம்பது ரூபாய்.	,,
82 (1) (ஈ)	வடிகாலின் பேரில் சட்டத்திற்கு முரணாகக் கட்டிடம் எழுப்புதல்.	இருநூறு ரூபாய்.	எந்த நீதிமன்றத்தின் முன் அக் குற்றத்துக்கான வழக்கு தொடர்பு நடந்து கொண்டிருக்கிறதோ அந்த நீதி மன்றத்தின் அனுமதியுடன் இணக்கம் செய்து கொள்ளத் தக்கது.
82 (1) (உ)	ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் உரித்தாக்கப்பட்டுள்ள பொதுச் சாலையிலோ அல்லது வேறு சொத்திலோ அனுமதியில்லாமல் மரங்களை நடுவது.	,,	இணக்கம் செய்து கொள்ளத் தக்கது.

பிரிவும், உட்பிரிவு, அல்லது பகுதியும். (1)	குற்றம். (2)	சட்டத்தின் படிக்கான தண்டனை. (2)	இணக்கம் செய்து கொள்ளத் தக்கதா அல்லது நீதிமன்றத்தின் அனுமதியுடன் நாளில் செய்து கொள்ளத்தக்கதா. (4)
100 (1)	உரிமம் இல்லாமல் அல்லது உரிமத்துக்கு மாருக தனியார் அங்காடி ஒன்றைப் புதிதாய்த் திறப்பது அல்லது தனியார் அங்காடி ஒன்றை தொடர்ந்து திறந்து வைத்துக் கொண்டிருப்பது.	ஐந்நூறு ரூபாய்.	இணக்கம்செய்து கொள்ளத் தக்கது.
100 (3)	சான்றில்லாமல் தனியார் அங்காடியில் கட்டணங்கள் விதித்து வாங்குவது.	நூறு ரூபாய்.	,,
102	அனுமதியின்றி ஏதேனும் விலங்கினை அல்லது பொருளை பொது அல்லது தனியார் அங்காடியில் விற்பது அல்லது விற்பனைக்காகக் காட்டி வைப்பது.	இருபது ரூபாய்.	,,
103	தடுக்கப்பட்ட பிறகு அல்லது உரிமம் இல்லாமல் அல்லது ஒழுங்கு முறைகளுக்கு மாருக, பொது சாலைகளில் அல்லது இடங்களில் பொருள்களை விற்பது முதலியன.	பத்து ரூபாய்.	எந்த நீதிமன்றத்தின் முன் அக் குற்றத்துக்கான வழக்குத் தொடர்பு நடந்து கொண்டிருக்கிறதோ அந்த நீதிமன்றத்தின் அனுமதியுடன் இணக்கம் செய்து கொள்ளத் தக்கது.

பிரிவும், உட்பிரிவும் அல்லது பகுதியும். (1)	குற்றம். (2)	சட்டத்தின் படிக்கான தண்டனை. (3)	இணக்கம் செய்து கொள்ளத் தக்கதா அல்லது நீதிமன்றத்தின் அனுமதியுடன் ராஜி செய்து கொள்ளத்தக்கதா. (4)
109 (அ)	விதிகளுக்கு மாருக, கால் நடைகளை வெட்டுவதற்கான பொது இடங்களுக்கு வெளியே விலங்குகளை கொள்வது துண்டு போடுவது அல்லது தோல் உரிப்பது முதலியவை.	இருநூறு ரூபாய்.	எந்த நீதிமன்றத்தின் முன அக்குற்றத்துக்கான வழக்குத் தொடர்பு நடந்து கொண்டிருக்கிறதோ அந்த நீதி மன்றத்தின் அனுதிமயுடன் இணக்கம் செய்து கொள்ளத்தக்கது.
109 (ஆ)	உரிமம் இல்லாமல் அல்லது உரிமத்துக்கு மாருக, விற்பனையின் பொருட்டு விலங்குகளைக் கொல்வது.	இருபது ரூபாய்.	,,
110 (2)	கட்டிடங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள இலக்கத்தைச் சட்டத்திற்கு முரணுக அழிப்பது முதலியவை.	ஐந்து ரூபாய்.	,,
110 (3)	இலக்கத்தைப் பதிவேடு செய்யும்படி ஆணையிடப்படும்போது அவ்வாறு செய்யத் தவறுவது.	இருபது ரூபாய்.	இணக்கம் செய்து கொள்ளத்தக்கது.
111	உரிமம் இல்லாமல் அல்லது உரிமத்துக்கு மாருக, அருவருப்பான அல்லது அபாயமான தொழிலுக்காக ஓர் இடத்தைப் பயன்படுத்துவது.	நூறு ரூபாய்.	,,

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(102) சில குற்றங்களை இணக்கம் செய்து கொள்வது.—எந்தப் பொதுச் சாலையின் அல்லது வேறு சொத்தின் அல்லது எந்தப் புறம்போக்கு நிலத்தின் பயனீடு ஊராட்சியினால் மட்டும் முறைப்படுகுப்படுகிறதோ அந்தப் பொதுச் சாலையில் அல்லது வேறு சொத்தில் அல்லது புறம்போக்கு நிலத்தில் மரங்களை வெட்டுவது, அகற்றுவது முதலியவற்றைத் தடுப்பதற்கு, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 82 (ஊ) பிரிவு சம்பந்தப்படுகிறது. ஆகவே, அப்பிரிவின்படிக்கான குற்றங்கள், ஊராட்சிகள் சம்பந்தமாக 1961 ஏப்ரல் 26 ஆம் தேதியுள்ள 1248 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள 69 ஆம் எண் விளம்பரத்தில் வெளியிடப்பட்ட விதிகளின்படி இணக்கம் செய்து கொள்ளப்படத் தக்கவைகளாக்கப்பட்டிருக்கின்றன. மேற்படி நிபந்தனை ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குச் சம்பந்தப்படாதபடியால், 1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையுடன் இணைக்கப்பட்டிருக்கும் 45 ஆம் எண் விளம்பரத்தில் வெளியிடப்பட்ட விதிகளிலிருந்து அது விட்டுவிடப்பட்டிருக்கிறது.

(1963 சனவரி 5 ஆம் தேதியுள்ள 155320/L தனி/62-1 ஆம் எண் குறிப்பாணை.)

67. மேல்முறையீடுகளுக்கான காலவரையறை.—(1958 ஆம் ஆண்டில் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலாவது அதன்படி செய்யப்பட்ட விதிகளிலாவது வேறு விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருக்கிறபடியன்றி மற்றப்படி, அச் சட்டத்தின்படிக்கான அல்லது அத்தகைய ஒரு விதியின்படிக்கான மேல்முறையீடு ஒவ்வொன்றும் (1908 ஆம் ஆண்டின் IX ஆவது மையச் சட்டமாகிய) 1908 ஆம் ஆண்டின் இந்தியக் கால வரம்புச் சட்டத்தில் கண்ட 5 ஆவது பிரிவின் நிபந்தனைகளுக்குட்பட்டு,—

(அ) ஓர் உரிமம் அல்லது அனுமதி வழங்கி பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையை எதிர்த்து அந்த மேல்முறையீடு செய்து கொள்ளப்பட்டால், ஊராட்சி ஒன்றிய மன்றம் அறிக்கைப் பலகையில் அந்த ஆணை வெளியிடப்பட்ட தேதிக்குப்பிறகு முப்பது நாட்களுக்குள்ளும்

(ஆ) மற்றவைகளில், எந்த ஆணையை அல்லது நடைமுறையை எதிர்த்து மேல்முறையீடு செய்து கொள்ளப்படுகிறதோ அது கிடைத்து

தேதிக்குப் பிறகு முப்பது நாட்களுக்குள்ளும் மாவட்ட ஆட்சியாளரிடம் கொடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

1961 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.

(1962 நவம்பர் 10 ஆம் தேதியுள்ள 12313, L /62-1 ஆம் எண் குறிப்பாணை.)

68. **ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் துணைச் சட்டங்கள் செய்வது.—(1)** ஊராட்சி ஒன்றிய மன்றம் துணைச் சட்டங்களை செய்வதற்கு அல்லது மாற்று வதற்குமுன், செய்யக் கருதியுள்ள துணைச் சட்டங்களின் அல்லது மாற்றங் களின் வரைவு ஒன்றையும் இன்ன தேதியன்று அல்லது அதற்குப் பிறகு அந்த வரைவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுமெனக் குறிப்பிட்டுள்ள அறிக்கை ஒன்றையும் வெளியிட வேண்டும்; மேலும், அந்தத் துணைச் சட்டங்களை அல்லது மாற்றங்களைச் செய்வதற்குமுன், அந்த வரைவில் அக்கறையுடைய எவரேனும், அது பற்றி, மேல்குறிப்பிட்ட தேதிக்கு முன் செய்யக்கூடிய ஆட்சேபணை அல்லது ஆலோசனை குறிப்பைப் பெற்று ஆய்ந்து பார்க்க வேண்டும்.

இவ் விதியின்படிக்கான அறிக்கையை, 3 ஆவது விதியில் கண்டுள்ளவித மாக வெளியிடவேண்டும்; ஆட்சேபணைகள் அல்லது ஆலோசனைக் குறிப்புகள் வருவதற்காகக் குறிப்பிடப்பட்ட காலம் முப்பது நாட்களுக்குக் குறைவா யிருக்கக்கூடாது.

(2) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் செய்யப்பட்ட துணைச் சட்டம் அல்லது நீக்கம் அல்லது மாற்றம் எதுவும், நீர் வழங்கீடு வடிகால் பணிகள் ஆகியவைகளுக்குச் சம்பந்தப்பட்டவையல்லாத மற்ற துணைச் சட்டங்களைப் பொருத்தவரை சம்பந்தப்பட்ட ஆய்வாளராலும், நீர் வழங்கீடு வடிகால் பணிகள் ஆகியவைகளுக்குச் சம்பந்தப்பட்ட துணைச் சட்டங்களைப் பொருத் தவரை துப்புரவுப் பிரிவுப் பொறியாளராலும் அவை ஒப்புக் கொண்டு உறுதிப் படுத்துகிற வரையில், அவை செயல் திறன் உடையவையாகமாட்டா.

(3) ஒரு துணைச் சட்டமானது, ஒரு துணைச் சட்டத்தின் நீக்கம் அல்லது மாற்றமாவது முறைப்படி உறுதிப்படுத்தப்பட்டிருந்து, அது தமிழில் இல்லா விட்டால், அதைத் தமிழில் மொழிபெயர்த்து ஊராட்சி ஒன்றிய மன்ற அலுவ லகத்தில் வைத்திருக்க வேண்டும்; அதன்படி ஒன்றை, அந்த அலுவலகத்தின் அறிக்கைப் பலகையிலும், ஊராட்சி ஒன்றியக் குழு கட்டளையிடக்கூடிய இடங் களிலும் தெரியும்படி எழுதி வைக்கவும் வேண்டும். அந்தப்படி அவ்வாறு

எழுதி வைக்கப்பட்டிருக்கிறதென்றும், அதன் மூலப்படியை ஊராட்சி ஒன்றிய மன்றம் அலுவலகத்தில் பார்வையிடலாமென்றும் தண்டோரா போட்டோ மற்றப்படியோ, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் விசாரணை அதிகாரப் பரப்பு முழுவதிலும் பொது அறிவிப்பு ஒன்றையும் செய்ய வேண்டும்.

(4) ஒரு துணைச் சட்டமாவது, ஒரு துணைச் சட்டத்தின் நீக்கம் அல்லது மாற்றமாவது, ஊராட்சி ஒன்றிய மன்றம் அலுவலகத்தில் அது வைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதம் கழிந்துபோவதன் பேரில் செயற்படத்தொடங்கும்.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(1961 நவம்பர் 28 ஆம் தேதியுள்ள 3162 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(103) **தமிழை ஆட்சிமொழியாகக் கொள்வதற்கு துணைச் சட்டங்கள் செய்தல்.**—உள்ளாட்சிக் கழகங்கள், தமிழைத் தங்கள் ஆட்சிமொழியாக்கிக் கொள்வதற்குச் சம்பந்தப்பட்ட சட்டங்களின்படி தக்க துணைச் சட்டங்கள் செய்துகொள்ளலாமென, 1958 நவம்பர் 29 தேதியுள்ள 1745 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணையில் அவைகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. தக்க துணைச் சட்டங்களைப் பரிந்துரைப்பது மூலமாகத் தமிழைத் தங்கள் ஆட்சிமொழியாக்கிக் கொள்வதில் உள்ளாட்சிக் கழங்களுக்குக்கூட உதவி புரியும்படி ஆட்சிமொழி குழுவிற்குச் சொல்லலாமென்று அரசினருக்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. தமிழ் ஆட்சிமொழியாக்கப்பட்டுள்ள அரசுத் துறைகள் சம்பந்தமாக, அடியிற் கண்டவைகளில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாமென்று விளக்க உரைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன; அவையாவன :—

(1) கருவூலங்களுக்கும் சென்னையிலுள்ள அக்கவுன்டன்ட் ஜெனரலுக்கும் முகவரியிட்டனுப்பப்படும் சம்பளப் பட்டியல்கள், சில்லரைச் செலவுப் பட்டியல்கள், பயணப்படிப் பட்டியல்கள், பயிற்சி உதவிப் பணப் பட்டியல்கள், மூற்றக் கடிதங்கள் ஆகியவைகளைத் தயாரிப்பதில்,

(2) துறைத் தலைவர்கள், மாநில அரசு, கிராம நீதிமன்றங்கள் அல்லதா மற்ற நீதிமன்றங்கள், மைய அரசு அலுவலகங்கள் ஆகியவைகளுக்கு முகவரியிட்டனுப்பப்படும் எல்லாக் கடிதங்களிலும்,

(3) எந்தச் சட்டபூர்வமான ஆணைகள், ஓர் அதிகாரிக்கு மேல்முறையீடு செய்யப்படுவதற்குட்பட்டவையாயிருந்து அல்லது அந்த அதிகாரியினால் திருத்தப்படுவதற்குட்பட்டவையாயிருந்து, அந்த அதிகாரியின் அலுவலகம் சம்பந்

தமாக, 1956 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டத்தில் கண்ட 4 ஆவது பிரிவின்படி ஒரு விளம்பரம் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லையோ (அதாவது, தமிழ் ஆட்சிமொழியாக்கப்பட்டிருக்கவில்லையோ) அத்தகைய ஆணைகள் எல்லாவற்றிலும்.

2. ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் எல்லாம், மேற்கண்ட அரசு அலுவலகங்களுக்காகக் கையாளப்படும் மாதிரியில், தமிழைத் தங்கள் ஆட்சிமொழியாக்கிக் கொள்வதற்காகத் துணைச் சட்டங்கள் செய்து, மேலே 1 ஆவது பத்தியில் குறிப்பிட்டிருக்கிற (1), (2), (3) இனங்களில் கண்ட காரியங்களுக்காக ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாமென அவைகளில் நிபந்தனை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

(1962 ஆகஸ்ட் 2 ஆம் தேதியுள்ள 174 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(104) 'மொழிவாரி சிறுபான்மையினர்களின் பாதுகாப்புகள்' பற்றிய மண்டல நிலைப் பணிக்குழுவின் தீர்மானங்களில் ஒன்றாயிருப்பதும், அரசினரால் ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதுமான தீர்மானம், இந்த மாநிலத்தின் அலுவல் முறைக் காரியங்களுக்காச் சிறுபான்மை மொழிகளைப் பயன்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்டதாகும். சில அலுவல்முறைக் காரியங்களுக்காகச் சிறுபான்மை மொழிகளைப் பயன்படுத்துவது சம்பந்தமாக, அந்த உள்ளூர் பரப்புகளின் மக்கள் தொகையில் இப்போதிருப்பதைப்போல் குறைந்தபட்சம் 20 சதவீதம் என்றிருப்பதற்குப் பதிலாக 15 சதவீதமுள்ள சிறுபான்மை மொழியினர் மக்கள் தொகையை ஆதாரமாகக் கொண்டு உள்ளூர்ப் பரப்புகளை நிர்ணயிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. அவ்வண்ணமே, இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டவாறு மேற்சொன்ன காரியத்துக்காக அரசினர் உள்ளூர்ப் பரப்புகளைத் திருத்தி அமைத்திருக்கிறார்கள்.

2. ஆட்சிமொழியைப் பயன்படுத்துவதோடுகூட மேற்படி உள்ளூர்ப் பரப்புகளில், சிறுபான்மையினர் மொழி அல்லது மொழிகளைப் பயன்படுத்துவது சம்பந்தமாகப் பின்வரும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்:—

(i) முக்கியமான அறிக்கைகள், வாக்காளர் பட்டியல்கள் முதலியவற்றை எல்லாம் சிறுபான்மையினர் மொழி அல்லது மொழிகளில் வெளிட வேண்டும்.

(ii) பொதுமக்கள் பயன்படுத்தும் படிவங்கள் முதலியவற்றை வட்டார மொழியிலும் சிறுபான்மையினர் மொழியிலும் அச்சிட வேண்டும்.

(iii) அரசு அலுவலகங்களுடன் சிறுபான்மையினர் மொழியில் கடிதப் போக்குவரத்து நடத்த அனுமதி கொடுக்கவேண்டும்.

(iv) முக்கியமான ஒழுங்குமுறைகளையும் துணைச் சட்டங்களையும் மொழிவாரி சிறுபான்மைத் தொகுதியினர்களின் தாய்மொழியில்பெயர்க்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

3. இந்த அரசாணையில் அடங்கியுள்ள செய்திகளை, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கும் தெரிவிக்கும்படி, சென்னையிலுள்ள கிராம முன்னேற்ற இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

பிற்சேர்க்கை.

(1961 குடிக் கணக்கின்படி).

தொடரிலக்கம். (1)	மாவட்டத்தின் பெயர். (2)	தாலுக்காவின் பெயர். (3)	(3) பத்தியில் குறிப்பிட்டுள்ள தாலுக்காவின் நகராட்சி ஏற்பட்டிராத பரப்பின் பெயர். (4)	சிறுபான்மையினரின் மொழி/மொழிகளின் பெயர்/பெயர்கள். (5)
1	செங்கற்பட்டு	(அ) திருத்தணி	திருத்தணி	தெலுங்கு
		(ஆ) திருவள்ளூர்	திருவள்ளூர்	,,
		(இ) பொன்னேரி	பொன்னேரி	,,
2	கன்னியாகுமரி	விளவன் கோடு	விளவன் கோடு	மலையாளம்
3	ராமநாதபுரம்	சாத்தூர்	சாத்தூர்	தெலுங்கு
4	மதுரை	(அ) கோடைக் கானல்	கோடைக் கானல்	,,
		(ஆ) பழனி	பழனி	,,
5	நீலகிரி	கூடலூர்	கூடலூர்	மலையாளம்
6	தர்மபுரி	...	ஓசூர்	தெலுங்கு கன்னடம்

தொடரிலக்கம். (1)	மாவட்டத்தின் பெயர். (2)	தாலுகாவின் பெயர். (3)	பத்தியில் (3) குறிப்பிட்டுள்ள தாலுக்காவின் நகராட்சி பட்டிராகதி பாப்பின் பெயர். (4)	சிறுபான்மையினரின் மொழியின் பெயர்! மொழிகளின் பெயர்கள், (5)
7	கோயம்புத்தூர்	(அ) கோயம் புத்தூர்	கோயம் புத்தூர்	தெலுங்கு
		(ஆ) உடுமலைப் பேட்டை	உடுமலைப் பேட்டை	,,
		(இ) பல்லடம்	பல்லடம்	,,
		(ஈ) அவிநாசி	அவிநாசி	,,
		(உ) பொள்ளாச்சி	பொள்ளாச்சி	கன்னடம் தெலுங்கு
		(ஊ) கோபிசெட்டி பாளையம்	கோபிசெட்டி பாளையம்	,,

(1966 செப்டம்பர் 22 ஆம் தேதியுள்ள 2223 ஆம் எண் கிராம முன்னேற்றம்— உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

69. அசையாப் பொருளை அடைவதும் மாற்றுவதும்.—அசையாப் பொருளை அடைவது (1) அடியிற் கண்ட நிபந்தனைகள் நிறைவேறினாலன்றி, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் அசையாப் பொருள் எதையும் அடையக் கூடாது; அவையாவன [—

(அ) சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், கல் வெட்டியெடுக்குமிடங்கள் ஆகியவைகள் அல்லாத வேறு ஏதேனும் காரியத்துக்காக அந்த சொத்து உத்தேசிக்கப்பட்டால், அது எதற்காக உத்தேசிக்கப் படுகிறதோ அக் காரியத்துக்காக, சுகாதாரத் துப்புரவுக் கண்கொண்டு பார்க்கும்போது அது தகுதியான தென்று மாவட்ட சுகாதார அலுவலர் ஒப்புக்கொள்ள வேண்டும்;

(ஆ) மதிப்பீட்டுச் செலவு 1,000 ரூபாய்க்கு மேற்படுகிற வைகளில், அச்சொத்து எதற்காக உத்தேசிக்கப்படுகிறதோ அக்காரியத்துக்குத்

தகுதியானதென்று (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளர் ஒப்புக்கொள்ள வேண்டும்;

(இ) அச் சொத்தின் மதிப்பு 1,000 ரூபாய்க்கு மேற்பட்டிருந்து, அது கல்விக் காரியங்களுக்கு உத்தேசிக்கப்பட்டால், மாவட்டக் கல்வி அலுவலர் கூட அதை ஒப்புக் கொள்ள வேண்டும்;

(ஈ) அச் சொத்தின் மதிப்பு 1,000 ரூபாய்க்கு மேற்பட்டிருந்து அது மருந்தகங்களுக்காக உத்தேசிக்கப்பட்டால், மாவட்ட மருத்துவ அலுவலர் கூட அதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

(உ) அதற்காக மாவட்ட ஆட்சியாளரின் இசைவை முன்னதாகப் பெற்றுக் கொண்டாலன்றி (1894 ஆம் ஆண்டின் 1 ஆவது மைய சட்டமாகிய) 1894 ஆம் ஆண்டின் நிலம் எடுத்துக் கொள்வதற்கான சட்டத்தின்படியின்றி மற்றப்படி அச் சொத்தை அடையக் கூடாது;

(ஊ) மேற்படி சட்டத்தின்படி அல்லாமல் மற்றபடி அடையப்படுகிற நிலங்களைப் பொருத்தவரை வருவாய்த் துறையினரிடமிருந்து மதிப்பீடு ஒன்றைப் பெற வேண்டும்; இதன்பொருட்டு மாவட்ட ஆட்சியாளரின் திட்ட வட்டமான ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளாமல், அந்த மதிப்பீட்டுக்கு மேற்பட்ட எத்தொகையையும் கொடுக்கக் கூடாது.

(எ) கட்டிடங்களைப் பொருத்தவரை மதிப்பீடு ஒன்றையும் கட்டுக் கோப்பு உறுதியைப் பற்றிய சான்று ஒன்றையும் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளரிடமிருந்து அல்லது கோட்டப் பொறியாளரின் ஆணைப்படி செயலாற்றுகிற (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) உதவிப் பொறியாளரிடமிருந்து பெற வேண்டும். இதன் பொருட்டு மாவட்ட ஆட்சியாளரின் திட்ட வட்டமான ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளாமல், அந்த மதிப்பீட்டுக்கு மேற்பட்ட எத் தொகையையும் கொடுக்கக் கூடாது;

(ஏ) அச் சொத்துக்கான ஈடு 200 ரூபாய்க்குக் குறையாமலிருக்கிற ஒவ்வொன்றிலும் அச் சொத்துப் பற்றிப் பத்திரப் பதிவு அலுவலகத்திலிருந்து வில்லங்கச் சான்று ஒன்றைப் பெற்று, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் சட்ட ஆலோசகர் அதை ஆய்ந்து பார்க்க வேண்டும்; ஆனால், விவகாரத்தின் தன்மையை நோக்கும்போது, எவ்வித வில்லங்கங்களுமின்றி அச் சொத்து சட்டப்படி செல்லக்கூடியதாயிருந்தால், அவ்வாறு செய்ய வேண்டியதில்லை.

ஆனால், (இ) பகுதியிலாவது (ஈ) பகுதியிலாவது உள்ளது எதுவும் ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குப் பொருந்தாது.

(2) ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குச் சொத்தை மாற்றுவதற்கான பத்திர மானது, இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவது அட்டவணையில் கண்ட பொருத்தமான படிவத்தின்படி இருக்க வேண்டும்; சந்தர்ப்பத்துக்கு வேண்டியிருக்கிறபடி அதில் மாறுதல்கள் செய்து கொள்ளலாம்.

(3) ஊராட்சி ஒன்றிய மன்றத்தினுல் பெறப்பட்ட ஒரு தீர்ப்பினை நிறை வேற்றும் வகையில் விற்பனைக்கு வந்த அசையாப் பொருளை அக்குழு வாங்க வேண்டியுள்ளவற்றில் (1), (2) உள்விதிகளின் நிபந்தனைகள் பொருந்த மாட்டா.

அசையாப்பொருளை மாற்றம் செய்வது.

2. ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குச் சொந்தமாயிராமல் அதனிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிற அசையாப் பொருளைக் குத்தகை மூலமாகவல்லாமல் மற்றப்படி மாற்றம் செய்தல்.—(1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குச் சொந்தமாயிராமல் அதனிடம் உரித்தாக்கப்பட்டுள்ள அசையாப்பொருளை எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அப்பொருள் ஊராட்சி ஒன்றிய மன்றத்தி னிடம் உரித்தாக்கப்பட்டதாகிவிட்டதோ அந்த நிபந்தனைகளுக்கு மாறாக அதை மாற்றம் செய்யவுங்கூடாது, அதன்மீது பொறுப்பேற்றவுங்கூடாது.

(2) மாற்றப் பத்திரம், இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள II ஆம் அட்டவணையில் கண்ட பொருத்தமான படிவப் பிரகாரம் இருக்க வேண்டும்; சந்தர்ப்பத்துக்கு வேண்டியிருக்கிறபடி அதில் மாறுதல்கள் செய்து கொள்ள லாம்.

3. ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குச் சொந்தமான அசையாப்பொருளைக் குத்தகை மூலமாகவல்லாமல் மற்றப்படி மாற்றம் செய்தல்.—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம், மாவட்ட ஆட்சியாவரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், தங்களுக்குச் சொந்தமான ஏதேனும் அசையாப் பொருளைக் குத்தகை மூலமாக வல்லாமல் மற்றப்படி மாற்றம் செய்யவுங்கூடாது, மாற்றம் செய்வதற்கு ஒப்பளிக்கவுங்கூடாது, அத்தகைய ஏதேனும் சொத்தின் மீது பொறுப்பேற்றவுங்கூடாது, பொறுப்பேற்ற ஒப்பளிக்கவுங்கூடாது. அவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட சொத்தில் மதிப்பு அல்லது எத்தொகைக்காக அவ் வாறு பொறுப்பு எற்றப்படுகிறதோ அத்தொகை 10,000 ரூபாய்க்கு மேற்பட் டால், அந்த விவகாரத்துக்காக அரசினரின் ஒப்பளிப்பைக்கூட முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(2) மாற்றம் பத்திரம், இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள ஆம் அட்டவணையில் கண்ட பொருத்தமான படிவப் பிரகாரம் இருக்க வேண்டும்; சந்தர்ப்பத்துக்கு வேண்டியிருக்கிறபடி அதில் மாறுதல்கள் செய்து கொள்ள லாம்.

4. ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குச் சொந்தமான அசையாப்பொருளைக் குத்தகை மூலம் மாற்றம் செய்தல்.—(1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் தங்களுக்குச் சொந்தமான ஏதேனும் அசையாப்பொருளைக் குத்தகைக்கு விடலாம்.

ஆனல், குத்தகையின் கால அளவு மூன்ருண்டுகளுக்கு மேற்பட்டிருந் தால், அல்லது கல்கட்டு, செங்கல், மரம், மண், அல்லது வேறு ஏதேனும் பொருளால் ஆன ஒரு கட்டிடம் அல்லது கட்டுக்கோப்பினை எழுப்பிக் கொள்ளக் குத்தகைதாரருக்கு அனுமதி கொடுக்கப்பட்டால், அத்தகைய குத்தகை எதுவும் செல்லாது; ஆனல் அவைகளுக்காக மாவட்ட ஆட்சி யாளரின் ஒப்பளிப்புப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் அந்தக் குத்தகை செல்லும்.

(2) குத்தகைப் பத்திரம் இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள III ஆம் அட்டவணையில் கண்ட III (அ) படிவப் பிரகாரம் இருக்க வேண்டும், சந்தர்ப்பத்துக்கு வேண்டியிருக்கிறபடி அதில் மாறுதல்கள் செய்து கொள்ள லாம்.

5. ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குச் சொந்தமாயிராமல், அதனிடம் உரித்தாக்கப்பட்டுள்ள அசையாப்பொருள்களைக் குத்தகை மூலம் மாற்றம் செய்தல்.—(1) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம், சாலைப் பக்கங்கள், தெரு ஓரங்கள் அல்லாத, அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குச் சொந்தமாயிராமல் அதனிடம் உரித்தாக்கப்பட்டுள்ள வேறு எந்த சொத்தையேனும் குத்தகைக்கு விடலாம்.

ஆனல் (அ) எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அச் சொத்து ஊராட்சி ஒன்றிய மன்றத்தினிடம் உரித்தாகிவிட்டதோ அந்த நிபந்தனைகளுக்கு மாருக, அல்லது

(ஆ) மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், பன்னிரண்டு மாதத்துக்கு மேற்பட்ட காலத்துக்கு குத்தகை எதுவும் வழங்கக்கூடாது.

மேலும், கல்கட்டு, செங்கல், மரம், மண் ஏதேனும் பொருளாலான ஒரு கட்டிடம் அல்லது கட்டுக்கோப்பினை எழுப்பிக் கொள்ளக் குத்தகைதாரருக்கு

அனுமதி கொடுக்கப்பட்டால், அத்தகைய குத்தகை எதுவும் செல்லாது; ஆனால் அதற்காக மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பு பெற்றுக் கொள்ளப் பட்டிருந்தால், அந்தக் குத்தகை செல்லும்.

(3) குத்தகைப் பத்திரம் இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள III ஆம் அட்டவணையில் கண்ட III (அ) படிவப் பிரகாரம் இருக்க வேண்டும்; சந்தர்ப்பத்துக்கு வேண்டியிருக்கிற படி அதில் மாறுதல்கள் செய்து கொள்ளலாம்.

6. (1) **சாலைப் பக்கங்கள், தெரு ஓரங்கள் ஆகியவற்றின் குத்தகைகள்.**—ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தினிடம் உரித்தாக்கப்பட்டுள்ள சாலைப் பக்கங்கள், தெரு ஓரங்கள் ஆகியவற்றின் குத்தகைகள், பின்வரும் வரையறைகள், கட்டுப்பாடு ஆகியவைகளுக்குட்பட்டவையாகும் :—

(i) குத்தகைக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றிலும், நிலம் இன்ன விதமாகப் பயன்படுத்தப்படும் என்ற விவரம் குத்தகை வேண்டியிருக்கிற காலம் ஆகியவை பற்றித் தகவல் தெரிவிக்க வேண்டுமென, ஊராட்சி ஒன்றியக் குழு ஒவ்வொன்றும் கேட்க வேண்டும். அதன் மீது ஏதேனும் கட்டுக்கோப்பு எழுப்பக் கருதியிருந்தால், கட்டுவேலையில் பயன்படுத்தவிருக்கிற சாமான்களைப் பற்றிய தகவலையும் தெரிவிக்க வேண்டும்.

(ii) பனை அல்லது தென்னை ஓலைகள், மூங்கில் அல்லது வேறு பாய் முடைபொருள் அல்லது கோணித்துணி அல்லது அதுபோன்ற வேறு பொருள்கள் ஆகியவை போன்ற தற்காலிகப் பொருள்களால் அல்லது அன்றாடம் அகற்றக்கூடிய தன்மையுள்ள பொருள்களால் கட்டுக்கோப்பினை எழுப்புவதாயிருந்தது, குத்தகைக்காலம் பன்னிரண்டு மாதத்துக்கு மேற்படாவிட்டால் ஊராட்சி ஒன்றிய மன்றம் குத்தகை வழங்கலாம் குத்தகை ஒவ்வொன்றுக்காகவும் முன்னதாகக் கட்டணம் விதித்து வாங்க வேண்டும்.

(iii) (ii) இனத்தில் சொல்லப்பட்டவை அல்லாது வேறு பொருள்களால் ஆன கட்டுக்கோப்புக்கான அல்லது பன்னிரண்டு மாதத்துக்கு மேற்பட்ட காலத்துக்கான குத்தகை எதையும், ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதலை முன்னதாகப் பெற்றுக்கொண்டன்றி, மற்றப்படி, வழங்கக்கூடாது. மாவட்ட ஆட்சியாளர் ஒப்புதல் அளிக்கையில், தாம் அவசியமெனக் கருதக்கூடிய எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு ஊராட்சி ஒன்றிய மன்றம் குத்தகை வழங்கலாமோ அந்த நிபந்தனைகளை விதிக்கலாம். ஊராட்சி ஒன்றியக்குழுவினர் குத்தகை வழங்குவதற்கு முன், அதில் அந்த நிபந்தனைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும், குத்தகை அமலில்

இருக்கிற வரையில், குத்தகைத் தொகையை முன்னதாக ஊராட்சி மன்றத்திற்குச் செலுத்திவிடவேண்டுமென்றும், அத்தொகையைச் செலுத்தத் தவறினால் குத்தகை ரத்து செய்யப்படுவதற்குள்ளாகுமென்றும் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருக்க வேண்டும்.

(iv) சாதாரணமாக, ஒரு சமயத்தில் மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட காலத்துக்குக் குத்தகை வழங்கக்கூடாது. இவ்விதியின்படி வழங்கப்பட்ட ஒரு குத்தகையைப் புதுப்பிப்பதற்கு மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதல் தேவையில்லை.

(v) (ii) அல்லது (iii) இனத்தின்படியுள்ள குத்தகை ஒவ்வொன்றிலும் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருக்க வேண்டும், அதாவது—நிலத்தின் மேல் எழுப்பப்பட்ட ஏதேனும் கட்டுக்கோப்பினை, பொது நலனை முன்னிட்டு அகற்றுவது அவசியமென ஊராட்சி ஒன்றிய மன்றமானது மாவட்ட ஆட்சியாளராவது கருதினால், குத்தகைக்கால அளவுக்குள் எப்போதேனும், குத்தகைதாரருக்கு ஈடு செலுத்தாமலேயே குத்தகை இறுதி செய்யப்படுவதற்குட்பட்டதாகும்.

(vi) சாலை ஓரத்தை உழவுக்காகக் குத்தகைக்கு விடக்கூடாது.

(2) குத்தகைப் பத்திரம் இவ்விதிகளுடன் இணைக்கப் பட்டிருக்கிற III ஆம் அட்டவணையில் கண்ட III (ஆ) படிவப் பிரகாரம் இருக்க வேண்டும்; சந்தர்ப்பத்துக்கு வேண்டியிருக்கிற படி அதில் மாறுதல்கள் செய்து கொள்ளலாம்.

7. உத்தேச மாற்றங்களையும் குத்தகைகளையும் வெளியிடுதல்.—3, 4, 5 அல்லது 6 ஆவது விதியின் கீழ் வரும் மாற்றத்தின் அல்லது குத்தகையின் ஒவ்வொரு விஷயத்திலும், ஊராட்சி ஒன்றிய மன்றம் உத்தேச மாற்ற அல்லது குத்தகை பற்றிய அறிக்கை ஒன்றை

(அ) மாற்றத்துக்கான ஈட்டுத்தொகை 1,000 ரூபாய்க்கு மேற்பட்டால், அல்லது குத்தகையின்படி ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகை ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய்க்கு மேற்பட்டால், மாவட்ட அரசிதழிலும்,

(ஆ) (i)[1]ஊராட்சி ஒன்றிய மன்றம் மாவட்ட ஆட்சியாளர் கோட்ட ஆட்சியாளர் ஆகியோரின் அலுவலகத்திலும்,

(II)) தாலூகா அலுவலகத்திலும்;

(iii) சொத்து இருக்கிற கிராமத்தின் அல்லது பட்டணத்தின் கிராமச் சாவடியிலும்,

(iv) மாற்றம் செய்யப்படுகிற அல்லது குத்தகை விடப்படுகிற சொத்திலும்;

முதன்மையான ஓரிடத்தில் ஒட்டுவது மூலமாகவும் வெளியிட வேண்டும்; அப்போது, மாற்றம் செய்ய இருக்கிற அல்லது குத்தகைக்கு விட இருக்கிற சொத்தின் முழு விவரங்களையும், உத்தேச மாற்றம் பெறுவரின் அல்லது குத்தகைதாரின் பெயரையும், மாற்றத்துக்கான ஈட்டுத்தொகையையும் அல்லது குத்தகையின்படி ஒதுக்கி வைக்கப்படும் வாடகையையும் கண்டெழுத வேண்டும்.

(2) பகிரங்க ஏலம் மூலமாக அவ்வாறு மாற்றம் செய்யப்படுகிற அல்லது குத்தகைக்கு விடப்படுகிற ஒவ்வொரு விஷயத்திலும் மாற்றம் செய்ய அல்லது குத்தகைக்கு விட இருக்கிற சொத்தின் முழு விவரங்களுடன்கூடிய அறிக்கை ஒன்றை

(அ) மாவட்ட அரசிதழிலும், மாற்றத்துக்கான ஈட்டுத் தொகை 1,000 ரூபாய்க்கும் அல்லது குத்தகையின்படி ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகை ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய்க்கும் மேற்பட்டால், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் விசாரணை அதிகாரப் பரப்பிற்குள் வழங்கும் ஒன்று அல்லது இரண்டு முதன்மையான உள்ளூர்ச் செய்தித்தாள்களிலும்,

(ஆ) (1) உள் விதியின் (ஆ) பகுதியில் குறிப்பிட்டிருக்கிற விதமாகவும்.

(இ) தக்க இடங்களில் தண்டோரா போட்டும் வெளியிட வேண்டும்.

(3) முதல் குத்தகைதாரர் தமது குத்தகையின் வரையறைகளை நிறைவேற்றத் தவறிப்போனதால் ஒரு நிதி ஆண்டு நடந்து கொண்டிருக்கும்போது வழங்கப்பட்ட குத்தகைகளின் விஷயத்தில் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் (1) (2) உள்விதிகளில் சொல்லியிருக்கிறபடி மாவட்ட அரசிதழில் வெளியிடுவதை வேண்டாமென்று சொல்லிவிடலாம்.

8. மாற்றங்களும் குத்தகைகளும், மாற்றம் பெற்றவராவது, குத்தகைதாரராவது அரசினருக்கு வரி மனைத் தீர்வை, பேஷ்கஷ் அல்லது விடுவரி செலுத்த வேண்டுமென்றும் நிபந்தனைக்குட்பட்டவையாகுமென்பது.—(1) இவ்விதியின்

(3) (4) உள்விதிகளில் கீழ்வரும் விஷயங்களில் தவிர மற்றப்படி, ஓர் அசையாப் பொருள் சம்பந்தமாகச் செலுத்தப்படத் தக்கதென்று மாவட்ட ஆட்சியாளர் நிச்சயிக்கக்கூடிய வரி, மனைவரி பேஷ்கஷ் அல்லது விடுவரியை மாற்றும் பெற்ற வர் அல்லது குத்தகைதாரர் அரசினருக்குச் செலுத்துவதற்கு உட்பட்டவரென் பதும், ஊழிய நிலையினின்றும் விடுவிக்கப்பெற்ற இனம் நிலங்களின் மீதான விடுவரி, ஜமீன் இனம் கிராமங்களில் உள்ளவையும் ஊராட்சி ஒன்றிய மன்றத் தின் தனியாகப் பேரம் பேசி அடைந்தவையுமான நிலங்களின் மீதான பேஷ் கஷ் ஆகியவை சம்பந்தமாகவன்றி, மற்றப்படி, அந்த வரி மனைவரி பேஷ்கஷ் அல்லது விடுவரி, திருத்தப்படும் காலத்தில் அமலில் இருக்கிற விதிகளின்படி அவ்வப்போது திருத்தப்படுவதற்கு உட்பட்டதாகுமென்பதும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் செய்யப்பட்ட, அந்த அசையாப்பொருளின் மாற்றத்தின் அல்லது குத்தகையின் ஒரு நிபந்தனையாயிருந்தாலன்றி மற்றப்படி, அந்த மாற்றம் அல்லது குத்தகை செல்லாது.

(2) விற்பனை அல்லது பரிவர்த்தனை மூலமாக மாற்றம் செய்யப்பட்டிராத அல்லது மாற்றப்படி நிலையாகப் பராதீனம் (உரிமை மாற்றம்) செய்யப் பட்டிராத விடுவரியை, ஊராட்சி ஒன்றிய மன்றத்திடமிருந்து வசூலிக்க அரசாங்கத்தாருக்குள்ள உரிமையை இவ்விதியில் உள்ளது எதுவும் பாதிக்காது

(3) மாற்றத்துக்குப் பிறகு நிலத்தின் மீது விதிக்கப்படத்தக்க வரி மனை வரி பேஷ்கஷ் அல்லது விடுவரி ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் ஏற்கெனவே செலுத்தப்பட்டுவந்து, அந்த நிலம் விற்பனை அல்லது பரி வர்த்தனை மூலமாக மாற்றம் செய்யப்படாதிருந்தால், நிலையாகக் குத்தகைக்கு விடப்படாதிருந் தால் அல்லது மற்றப் படி நிலையாகப் பராதீனம் செய்யப்பாடாதிருந்தால், ஊராட்சி ஒன்றிய மன்றம் அந்த வரி மனைவரி பேஷ்கஷ் அல்லது விடுவரியைத் தொடர்ந்து செலுத்திவரவேண்டும் அப்பொறுப்பை மாற்றம் பெற்றவர் மீது சுமத்தக்கூடாது.

(4) 6 ஆவது விதியின் கீழ்வரும் குத்தகைகளின் விஷயத்தில் ஊராட்சி ஒன்றிய மன்றம் அத்தகைய குத்தகைகளின் விவர அறிக்கை ஒன்றை மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்; அதன்பேரில், மாவட்ட ஆட்சியாளர் விவர அறிக்கையிலுள்ள தகவலை அடிப்படையாகக் கொண்டு, வரி அல்லது மனைவரியை நிச்சயித்து, ஊராட்சி ஒன்றியக் குழுவினரிடமிருந்து அதை வசூலிக்க வேண்டும்.

அட்டவணை I

[(1) (2) விதியைப் பார்க்கவும்]

படிவம் 1 (அ)

விற்பனை மூலமாக மாற்றம்.

19 ஆண்டு மாதம்
தேதியன்று (இதில் பின்னால் "விற்பவர்" சந்தர்ப்பம் இடம் கொடுத்தால் அவருடைய வாரிசுகள் நிறைவேற்றுபவர்கள்—செயலாற்றுபவர்கள், சட்டப் பிரதிநிதிகள் பேற்றுரிமையாளர்கள் என்பதும் இச்சொல்லில் அடங்கும் என்று சொல்லப்படும்).

ல் வசிக்கிற
என்பவருடைய குமாரராகிய என்பவருக்கும் (இதில் பின்னால் "வாங்குபவர்" சந்தர்ப்பம் இடம் கொடுத்தால் அதனுடைய வழியுரிமையாளர்கள், உரிமை மாற்றம் பெறுபவர்கள் என்பதும் அடங்கும் என்று சொல்லப்படும்) 1958-ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ன் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் ஏற்பட்ட இந்த உடன்படிக்கைப் பத்திரம் என்னவென்றால்

விற்பவர் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டிருக்கிற நிலத்துக்கும் வளவுக்கும் நன்றாகப் போதுமானபடி உரிமைபெற்றிருக்கிறபடியாலும்.

வாங்குபவர் அதனுடைய அதிகாரங்களைக் கொண்டு இதன் மூலம் வழங்கி—கொடுத்து—ஒப்படை செய்யக் கருதப்படும் மேற்படி நிலத்தையும் வளவையும், அது சம்பந்தமாகச் செலுத்தப்படத்தக்க (ஏதேனும்) விடுவரிக்குட்பட்டு, ஆனால் மற்றப்படி வில்லங்கங்கள் இல்லாமல் ரூபாய் விலைக்கு வாங்க, விற்பவருடன் உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறபடியாலும்,

இப்போது இந்த உடன்படிக்கைப் பத்திரத்தின் கூறுகள் என்னவென்றால் மேற்படி உடன்படிக்கையை அனுசரித்தும், இந்தப்பத்திரம் எழுதப்பட்டதன் பேரில் அல்லது அதற்கு முன் வாங்குபவர் விற்பவருக்குச் செலுத்திய ரூபாயுள்ள தொகையைக் கருத்தில் கொண்டும் (அதைப்பெற்றுக் கொண்டதாக வாங்குபவர் இதன் மூலம் ஒப்புக் கொள்கிறார்) விற்பவராகிய அவர், ல் இருப்பதும், இதன் கீழ் எழுதப்பட்டுள்ள அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப் பட்டிருப்பதுமான நிலத்துண்டு அல்லது பாகம் எல்லாவற்றையும் வாங்குபவருக்கு இதனால் வழங்கி கொடுத்து—

ஒப்படை செய்கிறுர். அந்த நிலமும் அதன் மேல் எழுதப்பட்டுள்ள குடியிருப்பு வீடு அல்லது குடியிருப்பும் சேர்ந்து எனச் சாதாரணமாக வழங்கப்படும்; மேற்படி நிலத்துண்டு அல்லது பாகம் குடியிருப்பு வீடு வளவு ஆகியவற்றுடன் எவ்விதமாகவேனும் சேர்ந்துள்ள எல்லாக் கட்டிடங்கள்—கிடங்குகள்—மரங்கள்—சாதாரண வகுப்புகள், குழிகள்—வேலிகள்—வழிகள் நீர்நிலைகள்—நீர்க்கால்கள்—சுதந்தரங்கள்—சிறப்புரிமைகள்—புழக்க உரிமைகள்—அனுகூலங்கள் சார்ந்தவைகள் ஆகியவற்றையும் அல்லது அவற்றுடன் எவ்விதமாகவேனும் சேர்ந்துள்ள அல்லது இதுவரை ஆட்சிக்குட்படுத்தப்பட்ட அல்லது அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட அவைகளில் எவற்றையாகிலும் சேர்த்து அவ்வாறு கொடுத்து வழங்கி—ஒப்படை செய்கிறுர்; மேலும் மேற்படி வளவிலும் அதன்பேரிலும் விற்பவருக்குள்ள எவ்விதமான சகல உடைமை—உரிமை மூலம் பாத்தியதை—சொத்துக் கோருரிமை—கேட்புரிமை ஆகியவற்றையும் அவ்வாறு வழங்கிகொடுத்து—ஒப்படை செய்கிறுர்; வாங்குபவருக்கு இதனுல் வழங்கி—கொடுத்து—ஒப்படை செய்யப்பட்ட மேற்படி நிலத்துண்டு அல்லது பாகத்தையும் குடியிருப்பு வீட்டையும்—வளவையும் என்றென்றும் பெற்று வைத்திருப்பதற்காக அவ்வாறு வழங்கி கொடுத்து—ஒப்படை செய்கிறுர்; அன்றியும், விற்பவர் வாங்குபவருடன் இதனுல் உடன்படிக்கை செய்து கொள்வது என்னவென்றுல்—மேற்சொன்னவிதமாக வாங்குபவருக்கு இதனுல் வழங்கி கொடுத்து—ஒப்படை செய்யப்பட்ட வளவை வழங்கி—கொடுத்து—ஒப்படை செய்ய விற்பவராகிய அவருக்கு இப்போது நல்ல உரிமை உண்டு; அல்லாமலும் வாங்குபவர், இனிமேல் எல்லாக் காலங்களிலும் எவ்வித சகல வில்லங்கங்களும் இன்றி மேற்படி வளவைச் சமாதானமாகவும் அமைதியாகவும் வைத்திருந்து அனுபவிக்க வேண்டியதுமல்லாமல், அவ்வாறு அனுபவிக்கவும் செய்யலாம்; விற்பவரிடமிருந்து அல்லது வேறு ஒருவரிடமிருந்து அல்லது பலரிடமிருந்து அல்லது அவரால் அல்லது அவர்களால் சட்டப்படியான எவ்வித வெளியேற்றம் இடையுறு கோருரிமை அல்லது கேட்பு இன்றி அதன் வாடகைகளையும் ஆதாயங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டியதுமல்லாமல் அவ்வாறு பெற்றுக்கொள்ளவும் செய்யலாம்; பின்னும் விற்பவராகிய அவரும், மேற்படி வளவிலாவது அவற்றில் எதிலாவது அவற்றின் எந்தப் பாகத்திலாவது விற்பவரிடமிருந்தோ அவருக்குட்பட்டோ, அவருக்குப் பொறுப்பாகவோ அவருடைய முன்னேர்களில் ஒருவரிடமிருந்தோ அவருக்குட்பட்டோ ஏதேனும் உடைமையை அல்லது பாத்தியதையை உடைய அல்லது சட்டப்படி அல்லது நியாயமாகக் கேட்கிற எல்லாரும், அவ்வப்போதும் இனிமேல் எல்லாக் காலங்களிலும், வாங்குபவர் கேட்டுக்கொள்வதன் பேரிலும் அவர் செலவிலும், மேற்படி வளவையும் அதன் ஒவ்வொரு பாகத்தையும்,

வாங்குபவருக்கு, மேற்சொன்ன விதமாக அல்லது நியாயமாகக் கேட்கப்படும் அல்லது கேட்கப்படக்கூடியவாறு, மேற்கொண்டு இன்னும் பூரணமாக உறுதிப் படுத்தும்பொருட்டு, அத்தகைய எல்லாச் செயல்களையும் பத்திரங்களையும் காரியங்களையும் நிறைவேற்றப் பதிவு செய்வார்கள் அல்லது நிறைவேற்றுவித்துப் பதிவு செய்யும்படி செய்வார்கள்

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை

பதிவு மாவட்டத்தின்

பதிவுக்கிளை மாவட்டத்தில் கிராமம்
பட்டணத்தில் இருப்பதும், வடக்கில் தெற்கில்
கிழக்கில் மேற்கில் ஆகிய
இந்த நாற்பாங்கு எல்லைக்குட்பட்டிருப்பதும், ரீ சர்வே
எண்ணும் பழைய சர்வே எண்ணும் உள்ளதும், அளக்கும்
போது மொத்தத்தில் (ஏறத்தாழ) உள்ளதுமான நிலத்
துண்டு அல்லது பாகம், வளவு எல்லாம்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால் என்பவர் முன்னிலையில் கையெழுத்திட்டு, முத்திரைபோட்டு ஒப்புவிக்கப்பட்டது.

இதற்குச் சான்றாக, விற்பவர் மேலே முதலில் எழுதப்பட்டுள்ள தேதியிலும் தமது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிறார்.

படிவம் 1 (ஆ)

ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டு மாதம் தேதியன்று (இதில் பின்னால் "குத்தகை விடுபவர்" இந்த சொற்றொடரில், சந்தர்ப்பம் இடங்கொடுத்தால், அவருடைய வாரிசுகள் நிறைவேற்பவர்கள்—நிருவாகம் செய்பவர்கள்—சட்ட முறையான பிரதிநிதிகள்—உரிமைப் பெற்றவர்கள் என்பதையும் அடங்கும் என்று சொல்லப் படும்) ல் வசிக்கும் ல் தொழில் நடத்துகிற என்பவருக்கும் (இதில் பின்னால் "குத்தகை எடுப்பவர்" இந்த சொற்றொடரில், சந்தர்ப்பம் இடங் கொடுத்தால், அதனுடைய பதவி வழியுரிமையாவார்கள், உரிமைப்பேற்றுவர்கள் என்பதும் அடங்கும் என்று சொல்லப்படும்) 1958-ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ் நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கும் ஏற்பட்ட இந்த உடன்படிக்கைப் பத்திரம் என்னவென்றால் :—

1. இதனால் ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகையையும், குத்தகை எடுப்பவருடையவையென்று இதில் கண்டுள்ள உடன்பாடுகளையும் கருத்தில் கொண்டு,

குத்தகை விடுபவர் பதிவு மாவட்டத்திலே
பதிவுக்கிளை மாவட்டத்தில் இருப்பதும், சர்வே எண்
கொண்டதும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில்
இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதும்
என்று வழங்கப்படுவதுமான கட்டிடம் வளவு ஆகியவற்றுடன் கூடிய நிலத் துண்டு அல்லது பாகம் எல்லாவற்றையும் 19 ஆண்டு
மாதம் நாளிலிருந்து ஆண்டுக் காலத்துக்குக் குத்தகை எடுப்பவருக்கு உரிமையைமாற்றிக் கொடுக்கிறார்; அதற்காக, கழிவுத் தொகைகள் எல்லாவற்றையும் நீக்கி ரூபாய் மாத வாடகையை முன்னதாகச் செலுத்துகிறார்; அவ்வாறு செலுத்தும் வகையில்
ஆண்டு மாதம் நாள் அன்று
முதலாவதாகச் செலுத்தவேண்டும்.

2. குத்தகை எடுப்பவர் குத்தகை விடுபவருடன் உடன்படிக்கை செய்து கொள்வது என்னவென்றால் :—

(1) ஒதுக்கிவைக்கப்பட்ட வாடகையை மேற்சொன்ன விதமாகவும், ஒவ்வொரு மாதத்திலும் முன்னதாக முதல் தேதியன்றும் அல்லது அதற்கு முன் பாகவும் செலுத்திவிடவேண்டும்.

(2) மேற்படி வளவு சம்பந்தமாய்ச் செலுத்தப்படத்தக்க தற்போதைய வருங்காலத்திய வரிகள் பொறுப்புகள் தீர்வைகள் செலவு எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு செலுத்தித் தீர்க்கவேண்டும்.

(3) உரிமைமாற்றிக் கொடுக்கப்பட்ட வளவின் வெளிப் புறத்தையும் உட்புறத்தையும், அதனுடன் சேர்க்கப்பட்ட எல்லாப் பாகங்களையும், அதன் எல்லைச் சுவரையும் வேலிகளையும் அதன் வடிகால்களையும் தரைக்குழாய் களையும் மற்றக் குழாய்களையும் சுகாதார நீர்க்கருவி கலங்களையும், மின்சாரப் பொருத்துகளையும் இசைப்புகளையும் தங்கி வாழத்தக்க நல்ல நீரமைப்பிலும் நிலையிலும் வைத்திருக்க வேண்டும்.

(4) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட கட்டிடங்களில், குத்தகை விடு பவருடைய எழுத்து மூலமான இசைவை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், எவையேனும் மாறுதல்களை அல்லது சேர்ப்புகளை எக்காரணங்கொண்டும் செய்யவுங்கூடாது, செய்ய அனுமதிக்கவுங்கூடாது; ஆனால் எப்போதும் அவையேனும் மாறுதல்கள் செய்வதற்கு, குத்தகை விடுபவர் குத்தகை எடுப்பவருக்கு அனுமதி கொடுத்தால், அதற்காக ஈடு எதுவும் பெற குத்தகை எடுப்பவர் உரிமை உள்ளவர் ஆகமாட்டார்.

(5) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவில் நுழைந்த அதன் நிலைமையைப் பார்வையிட, ஒரு நாள் முன்னதாக அறிக்கை கொடுத்துவிட்டு, நியாயமான எல்லாக் காலங்களிலும், வேலையாட்களுடனே மற்றவர்களுடனே, அவர்கள் இல்லாமலோ குத்தகை விடுபவருக்கு அனுமதி கொடுக்க வேண்டும்; குத்தகை விடுபவர் அறிக்கை கொடுப்பதன்பேரில், அறிக்கை சேர்ப்பிக்கப்பட்ட திலிருந்து ஒரு மாதத்துக்குள், அதன் பிரகாரம் செப்பனிடவேண்டும்.

(6) குத்தகை விடுபவருடைய எழுத்து மூலமாக இசைவை முதலில் பெற்றுக் கொள்ளாமல், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவை, அல்லது அதன் ஏதேனும் பாகத்தை வேறொருவருக்கு உரிமைப்படுத்தவுங்கூடாது, கீழ்க் குடிக்கூலிக்கு விடவுங்கூடாது, அதன் உடைமையை விட்டு விடவுங் கூடாது.

(7) குடிவாரம் இறுதி செய்யப்படுவதன் பேரில், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவை, அதன் கண் உள்ள எல்லா இணைப்புகளுடனும் சேர்க்கைகளுடனும், இதில் கண்டுள்ள உடன்படிக்கையின்படி குடியிருக்கத்தக்க சீரமைப்பிலும் நிலையிலும் கொடுத்துவிட வேண்டும்.

3. குத்தகை விடுபவர் குத்தகை எடுப்பவருடன் உடன்படிக்கை செய்து கொள்வது என்னவென்றால் :—

(i) குத்தகை எடுப்பவர் இதனால் ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகையைக் கொடுத்துக் கொண்டு, அதுபற்றி இதில் கண்டுள்ள பற்பல உடன்படிக்கைகளை நிபந்தனைகளையும் கடைப்பிடித்துச் செய்து வருவதன்பேரில், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவை, மேற்படி, கால அளவிலே, குத்தகை விடுபவரின் அல்லது அவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப்பாகச் சரியாய் உரிமை கொண்டாடும் ஒருவரின் குறுக்கீடு இல்லாமல், அமைதியாக வைத்திருந்து அனுபவிக்க வேண்டும்.

(ii) நியாயமான தேய்வுமாய்வு காரணமாக, முக்கியமான சுவர்களுக்கும் கூரைக்கும் அடிப்படைகளுக்கும் எல்லாச் செப்பனீடுகளையும் செய்ய வேண்டும்; அத்தகைய செப்பனிடுகளுக்கான அவசியத்தைப் பற்றி, அச்சமயம் கோட்டத்தின் நிருவாகப் பொறியாளராயிருப்பவருடைய தீர்ப்பு முடிவானதாகும்.

4. ஆனால் எப்போதும் இதற்குரிய சாரார்களாலும் அவர்களுக்கிடையிலும் இதனால் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்படுவது என்னவென்றால்—

(1) இதனால் ஒதுக்கிவைக்கப்பட்ட வாடகை அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்படத்தக்கதாகிவிட்ட பிறகு (முறைப்படி கேட்கப்பட்டாலும் படாவிட்டாலும்) 14 நாள் வரை செலுத்தப்படாமலிருந்தால், அல்லது குத்தகை எடுப்பவருடையதென்று இதில் கண்டுள்ள ஏதேனும் உடன்படிக்கை செய்யப்படாவிட்டால் அல்லது நிறைவேற்றப்படாவிட்டால், அப்போது அத்தகைய விஷயங்களில் எதிலேனும், குத்தகை விடுபவர் அதற்குப் பிறகு எப்போதேனும், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவில் அல்லது முழுவதின் பெயரிலுள்ள அதன் ஏதேனும் பாகத்தில் மீண்டும் நுழைவது சட்ட சம்மதமாகும்; அதன்பேரில் இந்த உரிமை மாற்றம் முழுவதும் இறுதியாகிவிடும்; ஆனால் இதில் கண்டுள்ள குத்தகைதாரரின் உடன்படிக்கைகளில் எதுவேனும் மீறப்பட்டது சம்பந்தமாகக் குத்தகை விடுபவருடைய செயலுரிமைக்குப் பாதகம் உண்டாக மாட்டாது.

(2) குத்தகை எடுப்பவர் இந்த உரிமை மாற்றத்தை இறுதி செய்ய விரும்பி அத்தகைய விருப்பத்தைப் பற்றி எழுத்து மூலமாக முன்னதாக மூன்று காலண்டர் மாத அறிக்கையைக் குத்தகை விடுபவருக்குக் கொடுத்தால், அப்போது மூன்று காலண்டர் மாதங்கள் கழிவானவுடன், இந்த உரிமை மாற்றமும் இதில் கண்டுள்ள ஒவ்வொன்றும், அற்றுப்போய்ச் செல்லாததாகிவிடும்; ஆனால், முன்னதான ஏதேனும் உரிமைக்கோரிக்கை அல்லது உடன்படிக்கை மீறல் சம்பந்தமாக எந்தத் தரப்பினருக்கும் ஏனைய தரப்பினருக்கு மீதான பரிகாரங்களுக்குப் பாதகம் உண்டாகமாட்டாது.

(3) குத்தகை விடுபவர், இதனால் வழங்கப்பட்ட காலம் கழிந்து போவதற்கு முன் மூன்று காலண்டர் மாதத்துக்குள் குத்தகை எடுப்பவர் எழுத்து மூலமாகக் கேட்டுக் கொள்வதன் பேரில், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவில் குத்தகையை, மேற்கொண்டு
காலத்துக்குக் குத்தகை எடுப்பவருக்கு வழங்க வேண்டும்; புதுப்பிப்பதற்கான ஒப்பந்தம் நீங்கலாக/உட்பட இதில் கண்டுள்ளவைகளைப்போன்ற ஒப்பந்தங்களும் விலக்கு நிபந்தனைகளுமே அந்தக் குத்தகையிலும் அடங்கியிருக்கும்.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை.

பதிவு மாவட்டத்தில்

பதிவுக்கிளை மாவட்டத்தில், கிராமத்தில்/

பட்டணத்தில் இருப்பதும் வடக்கில்

தெற்கில் கிழக்கில் மேற்கில்

ஆகிய இந்த நாற்பாங்கெல்லைக்குட்பட்டிருப்பதும்

(ரீசர்வே) மறுநில அளவை எண்ணும் பழைய சர்வே எண்ணும்

கொண்டிருப்பதும் அளக்கும்போது மொத்தத்திலே (ஏறத்தாழ)

உள்ளதுமான நிலத்துண்டு அல்லது பாகம் வளவுஎல்லாம்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால்
என்பவர் முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரை போட்டு ஒப்புவிக்கப்பட்டது.

என்பவர் முன்னிலையில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் கையெழுத்திடப்பட்டது.

இதற்குச் சான்றுக மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும், நாளிலும், குத்தகை விடுபவராகிய என்பவர் தமது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிறுர். குத்தகை எடுப்பவராகிய ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முத்திரைச் சின்னம் இதில் போடப்பட்டது.

படிவம் 1 (இ).

அடைமான மூலம் மாற்றம்

19 . . . ஆண்டு மாதம் தேதியன்று (இதில் பின்னுல் "அடைமானம் வைப்பவர்" இச்சொற்ருெடரில் சந்தர்ப்பம் இடங்கொடுத்தால் அவருடைய வாரிசுகள், நிறைவேற்றுளர்கள், நிருவாகம் செய்பவர்கள், சட்ட முறையான பிரதிநிதிகள், உரிமைப் பேற்றுளர்கள் என்பதையும் அடங்கும் என்று சொல்லப்படும்) . . . . . ல் வசிக்கிற . . . . . என்பவருடைய குமாரராகிய . . . . என்பவருக்கும் (இதில் பின்னுல் "அடைமானம் பெறுபவர்" இச்சொற்ருெடரில், சந்தர்ப்பம் இடம் கொடுத்தால், அதனுடைய வழியுரிமையாளர்கள், உரிமைப் பேற்றுளர்கள் என்பதும் அடங்கும் என்று சொல்லப்படும்) 1958-ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட . . . . . ன் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கைப் பத்திரம் என்னவென்ருல்:

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டிருக்கிற நிலத்துண்டு அல்லது பாகம், வளவு ஆகியவற்றிற்கு, அடைமானம் வைப்பவர் நன்ருகவும் உண்மையாகவும் உரிமை உடையவராயிருந்து, அவற்றை உடைமையில் வைத்திருக்கிறபடியாலும் . . . ரூபாய் உள்ள தொகையை இதில் பின்னுல் கண்டுள்ள விதமாகத் திருப்பிச் செலுத்துவதென்பதன்பேரில், அடைமானம் பெறுபவர் அத்தொகையை அடைமானம் வைப்பவருக்குக் கடனுகக் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறபடியாலும்

இப்போது இந்த உடன்படிக்கைப் பத்திரத்தின் வரையறைகள் என்னவென்றால்: இந்தப் பத்திரம் எழுதப்படுவதன் பேரில் அல்லது அதற்குமுன் அடைமானம் பெறுபவர் அடைமானம் வைப்பவருக்குச் செலுத்திய . . . . . . ரூபாய் உள்ள தொகையைக் கருத்தில் கொண்டு (அதைப் பெற்றுக்கொண்டதாக அடைமானம் வைப்பவர் இதனால் ஒப்புக் கொள்கிறார்) அடைமானம் வைப்பவராகிய அவர் . . . . . ல் இருப்பதும், இதன்கீழ் எழுதப்பட்டுள்ள அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதும், அதன்மேல் எழுப்பப்பட்டுள்ள குடியிருப்பு வீடு அல்லது குடியிருப்புடன் சேர்த்து சாதாரணமாக . . . . . . என்று வழங்கப்படுவதும் அல்லது சொல்லப்படுவதும் ஆன நிலத்துண்டு அல்லது பாகம் எல்லாவற்றையும் உடைமை அடைமானமாக அடைமானம் பெறுபவருக்கு அதனால் கொடுத்து, வழங்கி உரிமை மாற்றுகிறார்: அதோடு கூட மேற்படி நிலத்துண்டு அல்லது பாகம் குடியிருப்பு வீடு வளவு ஆகியவற்றுடன் எவ்விதமாகவேனும் சேர்ந்துள்ள கட்டிடங்கள்—கிடங்குகள் மரங்கள் போது நிலங்கள் வரப்புகள் குழிகள் வேலிகள் வழிகள் நீர்நிலைகள் நீர்க்கால்கள் சுதந்திரங்கள் சிறப்புரிமைகள் புழக்க உரிமைகள் அனுகூலங்கள் சார்ப்பொருள்கள் ஆகிய எல்லாவற்றையும், அல்லது அவற்றுடன் எவ்விதமாகவேனும் சார்ந்துள்ள அல்லது அவற்றுடன் இதுவரை அல்லது இனிமேல் ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக்கொள்ளப்படவிருக்கிற அவற்றில் எதையேனும் அவ்வாறு கொடுத்து வழங்கி உரிமை மாற்றுகிறார்; மேலும் அந்த வளவில் அல்லது அதன்பேரில் அடைமானம் வைப்பவருக்குள்ள எவ்விதமான சொத்து உரிமை மூலம் பற்று சொத்துக் கோருரிமை, கேட்பு எல்லாவற்றையும் அவ்வாறு கொடுத்து வழங்கி உரிமை மாற்றுகிறார்: மீட்டுக் கொள்வது பற்றி இதில் பின்னால் கண்டுள்ள விலக்கு நிபந்தனைக்குட்பட்டு எப்போதுமே அடைமானம் பெறுபவருக்கு இதனால் வழங்கிக் கொடுத்து உரிமை மாற்றப்பட்ட அல்லது அவ்வாறு சொல்லப்பட்ட மேற்படி நிலத்துண்டு அல்லது பாகத்தையும் குடியிருப்பு வீட்டையும் வளவையும் பெற்றுக்கொண்டு வைத்திருப்பதற்காக அவ்வாறு கொடுத்து வழங்கி உரிமை மாற்றுகிறார். அடைமானம் வைப்பவர் இதனால் அறிவிப்பது என்னவென்றால்: அடைமானம் வைக்கப்பட்ட சொத்தினை அடைமானம் பெறுபவரிடம் தாம் ஒப்பித்து விட்டிருக்கிறார். மேற்சொன்ன . . . . ரூபாயுள்ள தொகை அடைமானம் பெறுபவருக்குத் திருப்பிச் செலுத்தப்படுகிறவரையில், அடைமானம் பெறுபவர் அச்சொத்தினைத் தொடர்ந்து உடைமையில் வைத்திருக்க வேண்டும்: மேலும், அடைமானம் பெறுபவர், அடைமானக் கடன்தொகை சம்பந்தமாகச் சேர வேண்டிய வட்டிக்குப் பதிலாக, சொத்திலிருந்து சேர்ந்து வரும் வாடகைகளையும் ஆதாயங்களையும் தாமே பயன்படுத்திக்கொள்ள வேண்டும்: அன்றியும் அடைமானம் வைப்பவர் அடைமானம் பெறுபவருடன் இதனால் உடன்படிக்கை செய்து

கொள்வது என்னவென்றால்: அடைமானம் வைப்பராகிய அவர், இப்பத்திரத்தின் பிணையத்தின்பேரில் ஏதேனும் பணம் சேர வேண்டியதாயிருக்கிற வரையில், இதனால் வழங்கிக் கொடுத்து உரிமை மாற்றப்பட்டதென்று இதில் முன்னால் சொல்லப்பட்ட மேற்படி வளவின்பேரில் இப்போதிருக்கிற அல்லது இனிமேல் எழுப்பப்படவிருக்கிற குடியிருப்பு வீடுகள், கட்டிடங்கள் எல்லாவற்றையும் நல்ல கணிசமான சீரமைப்பில் வைத்திருந்து, தீயினால் ஏற்படும் இழப்பு அல்லது சேதத்தினிமித்தம் குறைந்தது . . . . ரூபாய்க்கு அடைமானம் பெறுபவர் பெயரில் அவரால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஏதேனும் அலுவலகம் அல்லது அலுவலகங்களில் ஈட்டுறுதி செய்து, அக்காரியத்துக்காகவும் ஈட்டுறுதி அமலில் இருக்கும்படி செய்வதற்காகவும் அவசியமான எல்லாத் தவணைத் தொகைகளையும் பணத்தொகைகளையும் கிரமமாகவும் காலந் தவறாமலும் செலுத்தி வருவார்: மேலும் மேற்படி வளவுகள் அல்லது அவைகளில் யாதொன்று சம்பந்தமாக அச்சமயம் செலுத்தப்படத்தக்க அல்லது அவைகளின் அல்லது அதன்மீது சார்த்தப்பட்டுள்ள விடுவரி, தீர்வை, வீதங்கள், வரிகள், மற்றச் செலவுகள் ஆகியவை எல்லாவற்றையுங்கூட கிரமமாகவும் காலந் தவறாமலும் செலுத்தி வருவார்: அல்லாமலும், ஈட்டுறுதிப் பத்திரம் அல்லது பத்திரங்களையும் மேற்சொன்னவாறு செலுத்தப்படத்தக்க ஒவ்வொரு தொகைக்குமான பற்றுச் சீட்டையும் அடைமானம் பெறுபவரிடம் உடனே ஒப்புவித்து விடவேண்டும். மேற்படி கட்டிடங்களை அவ்வாறு சீரமைப்பில் வைத்திருப்பதில் அல்லது அவ்வாறு ஈட்டுறுதிகள் செய்வதில் அல்லது அவற்றை அமலில் இருக்கும்படி செய்வதில் அல்லது மேற்சொன்ன ஏதேனும் விடுவரி, தீர்வை, வீதங்கள், வரிகள், மற்ற செலவுகள் ஆகியவற்றைச் செலுத்துவதில் அல்லது மேற்சொன்னவாறு ஏதேனும் பத்திரம் அல்லது பத்திரங்களை அல்லது பற்றுச் சீட்டை ஒப்புவிப்பதில் தவறிப்போனால், அடைமானம் பெறுபவர், மேற்படி வளவைத் தக்கவாறு கணிசமாக சீரமைப்பில் வைத்திருப்பது அல்லது (சந்தர்ப்பத்துக்கேற்ப) மேற்சொன்ன தொகைக்கு மேற்படாத ஏதேனும் தொகைக்கு அக்கட்டிடங்களை ஈட்டுறுதி செய்து அந்த ஈட்டுறுதி அமலில் இருக்கும்படிச் செய்து, தவணைத் தொகைகளையும் அவ்வாறு செய்வதில் பிடிக்கும் எல்லாச் செலவுகளையும் செலுத்துவது, அல்லது (சந்தர்ப்பத்துக்கேற்ப) மேற்சொன்னவாறு ஏதேனும் விடுவரி, தீர்வை, வீதங்கள், வரிகள் அல்லது மற்ற செலவுகளைச் செலுத்துவது சட்ட சம்மதமாகும். ஆனால் அவர் அப்படியெல்லாம் செய்யக் கடமைப்பட்டவராக மாட்டார். மேலும் அடைமானம் வைப்பவர், அத்தகைய எல்லாத் தவணைத் தொகைகளையும் செலவுகளையும் மற்றப் பணத்தையும், ஒவ்வொரு தடவையும் பணம் செலுத்தியதிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு . . . . சதவீதப்படி அவற்றின் மீதான வட்டியையும் அடைமானம் பெறுபவருக்கு உடனே திருப்பிச் செலுத்த வேண்டும்: திருப்பிச் செலுத்துகிறவரையில்,

இதனுல் அடைமானம் வைக்கப்படுகிற வளவின் பேரில், திருப்பிச் செலுத்த வேண்டியதொகையும் அதன் பேரில் மேற்சொன்ன வீதப்படி வட்டியும் பொறுப்பாக ஏற்றப்படும். ஏதேனும் ஈட்டுறுதி சம்பந்தமாகப் பெற்றுக் கொள்ளப்படும் எல்லாப் பணமும், அடைமானம் பெறுபவரின் விருப்பப்படி, ஈட்டுறுதி செய்யப்பட்ட கட்டிடங்களை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு அல்லது இப்பத்திரத்தின் பிணையத்தின் பேரில் அச்சமயம் பணம் செலுத்துவதில் அல்லது செலுத்தும் பொருட்டுப் பயன்படுத்தப்படும். **அன்றியும்** அடைமானம் வைப்பவர் அடைமானம் பெறுபவருடன் இதனுல் உடன்படிக்கை செய்து கொள்வது என்னவென்ருல்— அடைமானம் வைப்பவராகிய அவர், அடைமானம் பெறுபவருக்கு இந்த உடைமை அடைமானத்தைக் கொடுத்து வழங்க இப்போது அதிகாரம் பெற்றிருக்கிருர், அல்லாமலும் இதனுல் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு அறிவிக்கப்படுவது என்னவென்ருல், அடைமானம் வைப்பவர், மேற்சொன்ன . . . . ரூபாயுள்ள தொகையையும் இப்பத்திரத்தின்படி சேர வேண்டிய வேறு பணங்கள் இருந்தால் அவைகள் எல்லாவற்றையும் அடைமானம் பெறுபவருக்கு எப்போதேனும் கொடுப்பதன் பேரில், அடைமானம் பெறுபவர், அடைமானம் கேட்டுக்கொள்வதன் பேரிலும் அவர் செலவிலும், வழங்கப் பட்டதாக, கொடுக்கப்பட்டதாக அல்லது உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டதாக இதனுல் சொல்லப்படுகிற நிலத்துண்டு அல்லது பாகம் வளவு எல்லாவற்றையும் மொத்தமாகவும், அடைமானம் வைப்பவருக்கு அல்லது அவர் கட்டளையிடக் கூடியபடி மீண்டும் கொடுத்து, மீண்டும் உரிமை மாற்றிக் கொடுக்க வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை.

. . . . . . [redacted] . . . . . . பதிவு மாவட்டத்தில் [redacted] . . கிளைப் பதிவு மாவட்டத்தில் . . . . [redacted] . . . . கிராமத்தில்/பட்டணத்தில் இருப்பதும் வடக்கில் . . [redacted] . . . . தெற்கில் [redacted] . . . . . . கிழக்கில் . . . . . . [redacted] மேற்கில் . . . . . . ஆகிய இந்த நாற்பாங்கு எல்லைக்குட்பட்டதும், ரீசர்வே . . . . எண்ணும் பழைய சர்வே. . . . . . எண்ணும் கொண்டிருப்பதும் அளக்கும்போது (ஏறத்தாழ) உள்ளதுமான நிலத்துண்டு அல்லது பாகம் வளவு எல்லாம்

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால் . . . . என்பவர் முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரை போட்டு ஒப்புவிக்கப்பட்டது.

இதற்குச் சான்ருக அடைமானம் வைப்பவர் மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் தேதியிலும் தமது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிருர்.

படிவம் 1 (ஈ).

கொடை வழி மாற்றம்.

ஆயிரத்துத் தொளாயிரத்து . . . . . ஆண்டு . . . . . மாதம் . . . . தேதியன்று (இதில் பின்னல் "கொடையளிப்பவர்" இச்சொற்ருெடரில் சந்தர்ப்பம் இடங்கொடுத்தால், அவருடைய வாரிசுகள், நிறைவேற்ருளர்கள், நிருவாகிகள், சட்டமுறையான பிரதிநிதிகள், உரிமைப் பேற்ருளர்கள் என்பதும் அடங்கும் என்று சொல்லப்படும்) . . . . ல் வகிக்கிற . . . . . . என்பவருடைய குமாரராகிய. . . . . . என்பவருக்கும் (இதில் பின்னல் "கொடை பெறுபவர்" இச்சொற்ருெடரில் சந்தர்ப்பம் இடங்கொடுத்தால் அதன் வழியுரிமையாளர்கள், உரிமைப் பேற்ருளர்கள் என்பதும் அடங்கும்—என்று சொல்லப்படும்). 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட. . . . . ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் இடையில் ஏற்பட்ட இந்த உடன்படிக்கைப் பத்திரம் என்னவென்ருல் :

இதில் பின்னல் விவரிக்கப்பட்டு, இதனுல் வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்துண்டு அல்லது பாகம், வளவுகள் ஆகியவற்றிற்கு, கொடையளிப்பவர், வில்லங்கங்களின்றிப் போதிய அளவு நன்கு உரிமை பெற்றிருக்கிறபடியாலும்

மேற்படி நிலத்துண்டு அல்லது பாகம், வளவு ஆகியவை சம்பந்தமாக இப்போதும் இனிமேலும் வரிகள், செலவுகள், தீர்வைகள், மனைவரி ஆகிய எல்லாவற்றையும் கொடை பெறுபவர் செலுத்துவதற்குட்பட்டு, கொடையளிப்பவர் மேற்படி நிலத்துண்டு அல்லது பாகம், வளவு ஆகியவற்றைக் கொடை பெறுபவருக்குக் கொடையாக மாற்ற ஒப்புக் கொண்டிருக்கிறபடியாலும் அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அவற்றை ஏற்றுக் கொள்ளக் கொடை பெறுபவர் ஒப்புக் கொண்டிருக்கிறபடியாலும்

மேற்படி நிலத்துண்டு அல்லது பாகம் வளவு ஆகியவை முத்திரைத் தீர்வையின் காரியத்துக்காக . . . . ரூபாய் மதிப்புள்ளதாயிருக்கிறபடியாலும் :

இப்போது இந்த உடன்படிக்கைப் பத்திரத்தில் வரையறுகள் என்னவென்ருல் கொடையளிப்பவர் . . . . பதிவு மாவட்டத்திலே . . . . பதிவுக்கிளை மாவட்டத்திலே . . . . கிராமத்தில் இருப்பதும் சர்வே . . . . எண் கொண்டிருப்பதும், இதன் கீழ் எழுதப்பட்டுள்ள அட்டவணையில் இன்னும் விவரமாய்ச் சொல்லப்பட்டிருப்பதுமான நிலத்துண்டு அல்லது பாகம் எல்லா

வற்றையும் கொடைபெறுபவருக்கு இதனல் அளித்து, வழங்கி, உரிமை மாற்றிக் கொடுக்கிருர் : கொடை பெறுபவர் அவற்றை இதனல் ஏற்றுக் கொள்கிருர் : அவற்ருேடு கூட மேற்படி நிலத்துண்டு அல்லது பாகம், கட்டிடங்கள், வளவுகள், ஆகியவற்றை எவ்விதமாகவேனும் சேர்ந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பொது நிலங்கள், சுதந்திரங்கள், சலுகைகள், புழக்க உரிமைகள், அனுகூலங்கள், சார் பொருள்கள் ஆகிய எல்லாவற்றையும் அவற்றுடன் எவ்விதமாகவேனும் சேர்ந் துள்ள அல்லது இதுவரையில் ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட அவற்றில் யாதொன்றை அவ்வாறு அளித்து வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கிருர் : மேலும் மேற்படி வளவில் அல்லது அதன்பேரில் கொடை யளிப்பவருக்குள்ள எவ்விதமான சொத்து உரிமை, உரிமை மூலம் பற்று, சொத்துக் கோருரிமை—கேட்பு ஆகிய எல்லாவற்றையும் அவ்வாறு அளித்து வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட மேற்படி நிலத்துண்டு அல்லது பாகம், வளவு ஆகியவற்றை என்றென்றும் பெற்றுக் கைப்பற்றில் வைத்திருப்பதற்காக அவ்வாறு அளித்து வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கிருர்: அன்றியும், கொடை யளிப்பவர் கொடை பெறுபவருடன் இதனல் உடன்படிக்கை செய்து கொள்வது என்னவென்ருல்—மேற்சொன்ன விதமாகக் கொடை பெறுபவருக்கு இதனல் வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவை வழங்கி உரிமை மாற்றிக் கொடுப்பதற்குக் கொடையளிப்பவருக்கு நல்ல உரிமை இருக்கிறது ; அல்லா மலும், கொடை பெறுபவர் இனிமேல் எப்போதும், மேற்படி வளவை, கொடை யளிப்பவரிடமிருந்து அல்லது அவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப் பாக உரிமை கொண்டாடுகிற ஒருவரிடமிருந்து அல்லது அவரால் எவ்விதமான சட்டப்படியுள்ள வெளியேற்றம், குறுக்கீடு, கோருரிமை அல்லது கேட்பு இன்றி, எவ்விதமான சகல வில்லங்கங்களும் இல்லாமல், சமாதானமாகவும் அமைதி யாகவும் தம் வசப்படுத்திக் கொண்டு அனுபவிக்க வேண்டும் அல்லது அனுப விக்கலாம் : மேலும், கொடையளிப்பவரும் கொடையளிப்பவரிடமிருந்து அவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப்பாக அல்லது அவருடைய முன்ஞேர்களில் ஒருவரிடமிருந்து அல்லது அவருக்குட்பட்டு, மேற்படி வளவில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் ஏதேனும் சொத்து அல்லது பற்று உடைய அல்லது சட்டப்படி அல்லது நியாயமாக அதைக்கேட்கிற எல்லாரும், அவ்வப் போதும் இனிமேல் எப்போதும் கொடைபெறுபவர் கேட்டுக் கொள்வதன் பேரிலும், அவர் செலவிலும், மேற்படி வளவையும் அதன் ஒவ்வொரு பாகத் தையும், மேற்சொன்னவாறு அல்லது நியாயமாகக் கேட்கப்படுகிற அல்லது கேட்கப்படக்கூடியவாறு கொடைபெறுபவருக்கு மேற்கொண்டு இன்னும் செம்மையாக இருக்கும்படி செய்வதற்காக, எவ்விதமான சகல செயல்களேயும் பத்திரங்களேயும் காரியங்களேயும் செய்யவும் எழுதிக்கொடுக்கவும் பதிவு செய்யவும் அல்லது செய்விக்கவும் எழுதிக்கொடுப்பிக்கவும் பதிவு செய்விக்கவும் வேண்டும். அல்லது அவ்வாறெல்லாம் செய்யும்படி செய்யலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை.

பதிவு மாவட்டத்தில் . . . . .பதிவுக்கிளை மாவட்டத்தில் கிராமத்தில், பட்டணத்தில் இருப்பதும் வடக்கில். . . . . . . தெற்கில் . . . . கிழக்கில் . . . . மேற்கில் . . . . ஆகிய இந்த நாற்பாங்கு எல்லைக்குட்பட்டிருப்பதும், ரீசர்வே . . . . எண்ணும் பழைய சர்வே . . . . எண்ணும் கொண்டிருப்பதும், அளக்கும்போது மொத்தத்தில் (ஏறத்தாழ) . . . . உள்ளதுமான நிலத்துண்டு அல்லது பாகம், வளவு எல்லாம் மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால் என்பவர் முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரைபோட்டு ஒப்புவிக்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் . . . .[redacted]. . . . . . என்பவர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

இதற்குச் சான்றாக மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் தேதியிலும், கொடையளிப்பவர் தமது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிறார் : கொடை பெறுபவராகிய . . . . . . ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முத்திரைச் சின்னம் இதில் போடப்பட்டது.

அட்டவணை II

[2 (2), 3 (2) விதிகளைப் பார்க்கவும்]

படிவம் (II அ)

விற்பனை மூலமாக மாற்றம்.

19 . . . . ஆண்டு . . . . . . மாதம் . . . . . . தேதியன்று (இதில் பின்னால் "விற்பவர்"—இச்சொல்லில், சந்தர்ப்பம் இடங்கொடுத்தால், அதனுடைய வரியுரிமையாளர்கள், உரிமைப் பேற்றாளர்கள், என்பதும் அட,ங்கும் என்று சொல்லப்படும்) 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட. . . . . . ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் (இதில் பின்னால் "வாங்குபவர்"—இச்சொல்லில் சந்தர்ப்பம் இடங்கொடுத்தால், அவருடைய வழியுரிமையாளர்கள், நிறைவேற்றாளர்கள், நிருவாகிகள், சட்ட முறையான பிரதிநிதிகள், உரிமைப் பேற்றாளர்கள் என்பதும் அடங்கும் என்று சொல்லப்படும்) . . . ல் வசிக்கிற . . . . என்பவருடைய குமாரராகிய

. . . . என்பவருக்கும் இடையில் ஏற்பட்ட இந்த உடன்படிக்கைப் பத்திரம் என்னவென்றால்:—

விற்பவர், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப் பட்டுள்ள நிலத்துண்டு அல்லது பாகம் வளவு ஆகியவற்றைத் தம் வசம் வைத்துக்கொண்டு அவற்றிற்கு உரிமை உள்ளவராயிருக்கிறபடியாலும், அவை சம்பந்தமாகச் செலுத்தப்படத்தக்க (ஏதேனும்) விடுவரிக்குட்பட்டு, ஆனால் மற்றப்படி வில்லங்கங்கள் இல்லாமல் . . . . . . ரூபாய்க்கு அவற்றை வாங்குபவருக்கு விற்க அவருடன் உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிற படியாலும்

மாவட்ட ஆட்சியாளர் ஆண்டு மாதம் தேதியுள்ள எண் ஆணை மூலமாக, இதில் பின்னால் கண்டுள்ள சொத்தினை விற்பதற்கு ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்

* தமிழ்நாடு அரசினர் கூட ஆண்டு மாதம் தேதியுள்ள எண் ஆணை மூலமாக, இதில் பின்னால் கண்டுள்ள சொத்தினை விற்பதற்கு ஒப்பளிப்பு வழங்கியிருக்கிற படியாலும்,

இதில் பின்னால் கண்டுள்ள சொத்தின் விற்பனையைப் பற்றி, அதற்குச் சம்பந்தப்பட்ட விதிகளின் நிபந்தனைகளின்படி முறையாக அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறபடியாலும், இப்போது இந்த உடன்படிக்கைப் பத்திரத்தின் வரையறைகள் என்னவென்றால், மேற்படி உடன்படிக்கையைப் பின்பற்றியும், இந்தப் பத்திரம் எழுதப்பட்டதன்பேரில் அல்லது அதற்கு முன் வாங்குபவர் விற்பவருக்குக் கொடுத்த ரூபாய் உள்ள தொகையைக் கருத்தில் கொண்டும் (அதைப்பெற்றுக் கொண்டதாக விற்பவர் இதனால் ஒப்புக் கொள்கிறார்) பயனடையும் சொந்தக்காரர் என்ற முறையில், விற்பவர், இதனைச் செய்வதகு அதற்கு ஆற்றல் அளிக்கிற சட்டபூர்வமான மற்றபடியான அதிகாரம் ஒவ்வொன்றையும் கொண்டும் இதன்கீழ் எழுதப்பட்டுள்ள அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதும் ல் இருப்பதும் அதன் மேல் எழுப்பப்பட்டுள்ள குடியிருப்பு வீடு அல்லது குடியிருப்புடன் கூட என்று சாதாரணமாகச் சொல்லப்படுவதும் அல்லது வழங்கப்படுவதுமான நிலத்துண்டு அல்லது பாகம் எல்லாவற்றையும் வாங்கு

* மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால் மாத்திரம் வைத்துக் கொள்ளவும்.

பவருக்கு இதனுல் வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கிறுர். அவற்றேடு கூட, மேற்படி நிலத்துண்டு அல்லது பாகம், குடியிருப்பு வீடு, வளவு ஆகியவற்றுடன் எவ்விதமாகவேனும் சேர்ந்துள்ள எல்லாக் கட்டிடங்கள், கிடங்குகள், மரங்கள், பொதுநிலங்கள், வரம்புகள், குழிகள், வேலிகள், வழிகள், நீர் நிலைகள், நீர்க் கால்கள், சுதந்திரங்கள், சலுகைகள், புழக்க உரிமைகள், அனுகூலங்கள், சார்பொருள்கள் ஆகியவற்றையும் அல்லது அவற்றை எவ்விதமாகவேனும் சேர்ந்துள்ள அல்லது அவற்றுடன் இதுவரையில் ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக்கொள்ளப்பட்ட அவைகளில் யாதொன்றையும் அந்த வளவிலும் அதன்பேரிலும் விற்பவருக்குள்ள எவ்விதமான சகல சொத்து உரிமை, உரிமை மூலம் பற்று, சொத்து கோருரிமை, கேட்புரிமை ஆகிய வற்றையும் வாங்குபவருக்கு இதனுல் வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட மேற்படி நிலத்துண்டு அல்லது பாகம், குடியிருப்பு வீடு வளவு ஆகியவற்றை என்றென்றும் பெற்று வைத்திருப்பதற்காக அவ்வாறு வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கிறுர். மேலும் விற்பவர் வாங்குபவருடன் இதனுல் உடன் படிக்கை செய்துகொள்வது என்னவென்றுல் மேற்சொன்ன வீதமாக வாங்கு பவருக்கு இதனுல் வழங்கிய உரிமை மாற்றிக் கொடுக்கபட்ட வளவை வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்க விற்பவருக்கு இப்போது நல்ல உரிமை இருக்கிறது. அல்லாமலும் வாங்குபவர், இனிமேல் எப்போதும், விற்பவரிடமிருந்து அல்லது வேறு ஒருவர் அல்லது பலரிடமிருந்து அல்லது அவர்களால் எவ்விதமான சட்டப் படிக்கான வெளியேற்றம் இடையூறு கோருரிமை அல்லது கேட்பு இன்றி, எவ்வித வில்லங்களும் இல்லாமல், மேற்படி வளவைச் சமாதானமாக வும், அமைதியாகவும் தம் வசத்தில் வைத்துக்கொண்டு அனுபவித்து, அதன் வாடகைகளையும் இலாபங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது பெற் றுக்கொள்ளலாம். அன்றியும் விற்பவரும், விற்பவரிடமிருந்து, அவருக்குட் பட்டு அல்லது அவருக்காகப் பொறுப்பாகி மேற்படி வளவுகளில் அல்லது அவை களில் யாதொன்றில் அல்லது அவைகளில் ஏதேனும் பாகத்தில் சொத்து அல்லது பற்று உடைய அல்லது சட்டப்படி அல்லது நியாயமாக அதைக் கேட்கிற எல்லாரும், அவ்வப்போதும் இனிமேல் எப்போதும் வாங்குபவர் கேட்டுக் கொள்வதன் பேரிலும், அவர் செலவிலும், மேற்சொன்ன விதமாக அல்லது நியாயமாகக் கேட்கப்படுகிற அல்லது கேட்கப்படக்கூடியவாறு வாங்கு பவருக்கு மேற்படி வளவும் அதன் ஒவ்வொரு பாகமும் மேற்கொண்டு இன்னும் செம்மையாக இருக்கும்படி செய்யும் பொருட்டு, எவ்விதமான சகல செயல் களையும் பத்திரங்களையும் காரியங்களையும் செய்யவும் எழுதிக் கொடுக்கவும் பதிவு செய்யவும் அல்லது செய்விக்கவும் எழுதிக் கொடுப்பிக்கவும், பதிவு செய்விக்கவும் வேண்டும் அல்லது அவ்வாறு செய்யும்படி செய்யலாம்; மற்றும் வாங்குபவர் விற்பவருடன் இதனுல் உடன்படிக்கை செய்து கொள்வது என்ன வென்றுல் மேற்சொன்ன வாங்குபவராகிய அவர், இனிமேல் எப்போதும்,

இப்போது செலுத்தப்படத்தக்கவையாயிருக்கக்கூடிய அல்லது, இனிமேல், எப்போதேனும், அதைப்போன்ற நிலங்கள் வளவுகள் ஆகியவற்றின் மீது தீர்வைகளையும் வரிகளையும் விதிப்பதற்காக இப்போது அமலில் இருக்கிற அல்லது இனிமேல் அமலில் இருக்கக்கூடிய எவையேனும் விதிகளின்படி தமிழ் நாடு அரசினரால் இதனுல் மாற்றப்படுகிற மேற்படி வளவின் பேரில் விதித்து வாங்கப்படுகிற எல்லாத் தீர்வைகளையும் வரிகளையும் செலுத்த வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை.

பதிவு மாவட்டத்திலே

பதிவுக் கிளை மாவட்டத்திலே கிராமத்தில்/பட்டணத்தில் இருப்பதும் மறு நில அளவை எண்ணும் பழைய நில அளவை எண்ணும் கொண்டிருப்பதும், வடக்கில்

தெற்கில் கிழக்கில் மேற்கில்

ஆகிய இந்த நாற்பாங்கு எல்லைக்குட்பட்டிருப்பதும், அளக்கும்போது அல்லது ஏறத்தாழ அவ்வளவு இருப்பதுமான நிலத்துண்டு அல்லது பாகம் எல்லாம்.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் என்பவர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பொது முத்திரை என்பவர் முன்னிலையில் இதில் போடப்பட்டது.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால் என்பவர் முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரை போட்டு ஒப்புவிக்கப் பட்டது.

இதற்குச் சான்றுக மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் நாளிலும் ன் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முத்திரைச் சின்னம் இதில் போடப்பட்டது என்பவர் தமது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிறுர்.

படிவம் II (ஆ)

பரிவர்த்தனை மூலமாக மாற்றம்.

19 ஆண்டு மாதம் தேதியன்று (இதில் பின்னுல் "ஊராட்சி ஒன்றிய மன்றம்—இச்சொற்றெடரில், சந்தர்ப்பம் இடங் கொடுத்தால், அதன் வழியுருமையாளர்கள், உரிமைப்பெற்றவர்கள் என்பதும்

அடங்கும்—என்று சொல்லப்படும்) 1958-ம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ன் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும், (இதில் பின்னல் "இரண்டாம் சாரார்" இச்சொற்றொடரில், சந்தர்ப்பம் இடங்கொடுத்தால், அவருடைய வாரிசுகள், நிறைவேற்றுளர்கள், நிருவாகிகள், சட்டமுறையான பிரதிநிதிகள், உரிமைப் பேற்றுளர்கள் என்பதும் அடங்கும் என்று சொல்லப்படும்) ல் வசிக்கிற என்பவருடைய குமாரராகிய என்பவருக்கும் இடையில் ஏற்பட்ட இந்த உடன் படிக்கைப் பத்திரம் என்னவென்றால்:—

ஊராட்சி ஒன்றிய மன்றம், இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள முதலாவது அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிற நிலத்துண்டு அல்லது பாகத்துக்கும் அதன்மேல் இருக்கிற கட்டிடங்களுக்கும் வில்லங் கங்கள் இல்லாமல் நன்றாகவும் உண்மையாகவும் உரிமைபெற்று அவைகளைத் தம் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிறபடியாலும் அதைப்போலவே இரண் டாம் தரப்பினரும் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள இரண்டாம் அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிற நிலத்துண்டு அல்லது பாகத்துக் கும் அதன் மேல் இருக்கிற கட்டங்களுக்கும் வில்லங்கங்கள் இல்லாமல் நன் றாகவும் உண்மையாகவும் உரிமைபெற்று அவைகளைத் தம் வசத்தில் வைத்துக் கொண்டிருக்கிறபடியாலும்

இதற்குச் சம்பந்தப்பட்டசாரார்கள், முறையே இதனுடன் சேர்க்கப் பட்டிருக்கிற முதலாவது இரண்டாவது அட்டவணைகளில் இன்னும் விவர மாகச் சொல்லப்பட்டிருக்கிற மேற்படி நிலத்துண்டுகளை அல்லது பாகங்களை இதில் பின்னல் கண்டுள்ளவாறு பரிவர்த்தனை செய்து கொள்ள ஒப்புக் கொண்டிருக்கிறபடியாலும்

மாவட்ட ஆட்சியாளர் ஆண்டு மாதம் தேதியுள்ள ம் எண் ஆணை மூலமாக, இதில் பின்னல் கண்டுள்ள விதமாக அச் சொத்துக்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்கு ஒப்பளிப்பு வழங்கி யிருக்கிறபடியாலும்

* தமிழ்நாடு அரசினர்கூட ஆண்டு மாதம் தேதியுள்ள ம் எண் ஆணை மூலமாக இதில் பின்னல் கண்டுள்ள விதமாக அச்சொத்துக்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்கு ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்

---

* மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால் மாத்திரம் வைத்துக்கொள்ளவும்.

இதில் பின்னுல் கண்டுள்ள விதமாகப் பரிவர்த்தனே செய்துகொள்வதைப் பற்றி, அதற்குச் சம்பந்தப்பட்ட விதிகளின் நிபந்தனேகளுக்கிணங்க முறையான அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறபடியாலும்

இப்போது இந்த உடன்படிக்கைப் பத்திரத்தின் வரையறைகள் என்னவென்ருல்: இதில் பின்னுல் கண்டுள்ளவாறு இரண்டாம் சாரார் உரிமை மாற்றம் செய்வதைக் கருத்தில் கொண்டு, ஊராட்சி ஒன்றிய மன்றம், இதன் பொருட்டு அதற்கு ஆற்றல் அளிக்கும் சட்டபூர்வமான—மற்றப்படியான ஒவ்வோர் அதிகாரத்தைக் கொண்டும், ல் இருப்பதும், இதன் கீழ் எழுதப்பட்டுள்ள முதலாவது அட்டவணேயில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதும், இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள அ என்று அடையாளமிடப்பட்ட தரைப்படத்தில் அல்லது அமைப்புப்படத்தில் நிறம் கொடுக்கப்பட்டிருப்பதும் ரூபாய் அல்லது ஏறத்தாழ அவ்வளவு மதிப்புள்ளதுமான நிலத்துண்டு அல்லது பாகம் எல்லாவற்றையும் இரண்டாம் தரப்பினருக்கு இதனுல் வழங்கி, உரிமை மாற்றிக் கொடுக்கிறது. அவற்ருேடு கூட மேற்படி நிலத்துண்டு அல்லது பாகம், வளவு ஆகியவற்றை எவ்விதமாகவேனும் சேர்ந்த எல்லாக் கட்டிடங்கள், மரங்கள். பொது நிலங்கள், வரப்புகள், குழிகள், வேலிகள், நீர்நிலேகள், நீர்க்கால், சுதந்திரங்கள், சலுகைகள், பழக்க உரிமைகள், அனுகூலங்கள், சார பொருள்கள் ஆகியவற்றையும், அல்லது அவற்றுடன் எவ்விதமாகவேனும் சேர்ந்துள்ள அல்லது இதுவரையில் ஆட்சியில் அல்லது, அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட அவைகளில் யாதொன்றையும் அந்த வளவுகளிலும் அவற்றின் பேரிலும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குள்ள எவ்விதமான சகல சொத்து உரிமை உரிமைமூலம் பற்று சொத்துக் கோருரிமை கேட்பு ஆகியவற்றையும், இரண்டாம் தரப்பினருக்கு இதனுல் வழங்கி உரிமை மாற்றிக்கொடுக்கப்பட்ட அல்லது அவ்வாறு சொல்லப்பட்ட மேற்படி நிலத்துண்டு அல்லது பாகம், வளவு ஆகியவற்றை என்றென்றும் பெற்று வைத்திருப்பதற்காக அவ்வாறு வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கிறது; மேலும் இரண்டாம் சாரார் ஊராட்சி ஒன்றிய மன்றத்துடன் உடன்படிக்கை செய்து கொள்வது என்னவென்ருல் இரண்டாம் தரப்பினராகிய அவர் இனிமேல் எப்போதும். . . தொகையுள்ள தீர்வையையும் அல்லது மனேவரியையும் அல்லது ன் மாவட்ட ஆட்சியாளர் அவ்வப்போது நிச்சயிக்கக்கூடிய வேறு தொகையையும், மேற்படி நிலத்துண்டு அல்லது பாகத்தின் மீது அல்லது வளவின் மீது மைய அரசினர் அல்லது தமிழ்நாடு அரசினர் அல்லது ஒரு தல அதிகாரி அல்லது வேறு அதிகாரி விதிக்கிற அல்லது அவ்வப்போது விதிக்கக்கூடிய வேறு எவையேனும் மனேவரி தீர்வை வரிகள் ஆகியவற்றையும் செலுத்தவேண்டும்; அன்றியும் இந்த உடன்படிக்கை பத்திரத்தில் மேற்கொண்டுள்ள வரையறைகள்

என்னவென்ருல், ஊராட்சி ஒன்றிய மன்றம் இதில் முன்னல் கண்டுள்ளவாறு உரிமை மாற்றம் செய்வதைக் கருத்தில் கொண்டு, இரண்டாம் சாரார். . . ல் இருப்பதும், இதன்கீழ் எழுதப்பட்டுள்ள இரண்டாவது அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதும் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள ஆ என்று அடையாளமிடப்பட்டுள்ள தரைப்படத்தில் அல்லது அமைப்புப் படத்தில் நிறம் கொடுக்கப்பட்டிருப்பதும். . . ரூபாய் அல்லது ஏறத்தாழ அவ்வளவு உரிமை மாற்றம் செய்வதைத் கருத்தில் கொண்டு, இரண்டாம் சாரரர். . . நிறம் கொடுக்கப்பட்டிருப்பது. . . ரூபாய் அல்லது ஏறத்தாழ அவ்வளவு வரப்புகள், குழிகள், வேலிகள், வழிகள், நீர்நிலைகள், நீர்க்கால்கள், சுதந்திரங் கள், சலுகைகள், புழக்க உரிமைகள், அனுகூலங்கள், சார் பொருள்கள் ஆகிய வற்றையும், அல்லது அவற்றுடன் எவ்விதமாகவேனும் சேர்ந்துள்ள அல்லது இதுவரையில் ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட அவைகளில் யாதொன்றையும், கடைசியாகச் சொன்ன அந்த வளவிலும் அதன் பேரிலும் இரண்டாம் தரப்பினருக்குள்ள எவ்விதமான சகல சொத்து உரிமை, உரிமை மூலம் பற்று சொத்துக் கோருரிமை, கேட்பு ஆகியவற்றையும், ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு இதனல் வழங்கி உரிமைமாற்றிக் கொடுக்கப்பட்டதாக இதில் முன்னல் கடைசியாகச் கொல்லப்பட்ட நிலத்துண்டு அல்லது பாகம், வளவு ஆகியவற்றை என்றென்றும் பெற்று வைத்திருப்பதற்காக அவ்வாறு வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கிருர், மேலும் ஊராட்சி ஒன்றிய மன்றம இரண்டாம் தரப்பினருடன் இதனல் உடன்படிக்கை செய்து கொள்வது என்ன வென்ருல்—ஊராட்சி ஒன்றிய மன்றம் இனிமேல் எப்போதும், மேற்படி நிலத் துண்டு அல்லது பாகம் அல்லது வளவின் மீது மைய அரசினர் அல்லது தமிழ் நாடு அரசினர் அல்லது ஓர் தல அதிகாரி அல்லது வேறு அதிகாரி விதிக்கிற அல்லது அவ்வப்போது விதிக்கக்கூடிய தீர்வைகளையும் வரிகளையும் செலுத்த வேண்டும்; அல்லாமலும், இதற்குச் சம்பந்தப்பட்ட இரு தரப்பினர்களும் ஒருவருக்கொருவர் ஒப்பந்தம் செய்து கொண்டு, தங்களில் ஒவ்வொருவரும் மற்றவருடன் உடன்படுவது என்னவென்ருல்—இதற்கு மாருகச் செய்யப்பட்ட அல்லது எழுதிக் கொடுக்கப்பட்ட அல்லது தெரிந்திருந்தும் செய்யவிடப்பட்ட ஏதேனும் செயல், பத்திரம் அல்லது காரியம் ஏற்பட்டிருந்த போதிலும் பாதக மில்லாமலே, மேற்சொன்னவாறு இதனல் வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டதென்று சொல்லப்படும் மேற்படி வளவை, முறையே வழங்கி உரிமை மாற்றிக் கொடுப்பதற்கு அவர்களுக்கு இப்போது நல்ல உரிமை இருக்கிறது: இருசாரர்களில் ஒவ்வொருவரும், இனிமேல் எப்போதும், மற்ற சாராரிடமிருந்து, அல்லது அந்த மற்ற சாராரிடமிருந்தேனும் அவருக்கு உட்பட்டேனும் அவருக்குப் பொறுப்பாகவும் சட்டப்படி அல்லது நியாயமாக உரிமை கொண்டாடுகிற ஒருவர் அல்லது பலரிடமிருந்து அல்லது அவரால்

எவ்வித சட்டப்படியான வெளியேற்றம், குறுக்கீடு கோருரிமை அல்லது கேட்பு இன்றியும், இரு தரப்பினரில் ஒருவரால் அல்லது மேற்சொன்னவாறு சட்டப்படி அல்லது நியாயமாக உரிமை கொண்டாடுகிற ஒருவரால் அல்லது பலரால் செய்யப்பட்ட அல்லது செய்யவிடப்பட்ட எவ்விதமான சகல வில்லங்கங்கள் இன்றியும், கடைசியாகச் சொன்ன அந்த வளவைச் சமாதானமாகவும் அமைதியாகவும் தம் வசத்தில் வைத்துக் கொண்டு அனுபவித்து, அவற்றின் வாடகைகளையும் இலாபங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டியதுமல்லாமல், அப்படியே செய்யலாம்: மற்றும் தரப்பினர்களும் தரப்பினர்களில் எவரிடமிருந்தேனும் அவருக்கு உட்பட்டேனும் பொறுப்பாகவேனும் மேற்படி வளவில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் சொத்து அல்லது பற்று உடைய அல்லது சட்டப்படி அல்லது நியாயமாக கேட்கிற எல்லாரும், அவ்வப்போதும் இனிமேல் எப்போதும், மற்ற தரப்பினர் கேட்டுக்கொள்வதன்பேரிலும் அவர் செலவிலும், கடைசியாகச் சொன்ன அந்த வளவையும் அதன் ஒவ்வொரு பாகத்தையும் மற்ற தரப்பினருக்கு மேற்சொன்ன விதமாக அல்லது நியாயமாகக் கேட்கப்படுகிற அல்லது கேட்கப்படக்கூடியவாறு மேற்கொண்டு இன்னும் செம்மையாக உறுதிப் படுத்தும் பொருட்டு, எவ்விதமான சகல செயல்களையும் பத்திரங்களையும் காரியங்களையும் செய்து எழுதிக் கொடுத்துப் பதிவு செய்ய வேண்டியது மல்லாமல் அல்லது செய்வித்து எழுதிக் கொடுப்பித்துப் பதிவு செய்விக்கவேண்டும் அல்லது செய்யும்படி செய்யலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை.

பதிவு மாவட்டத்தில் பதிவுக்கிளை மாவட்டத்தில் கிராமத்தில்/பட்டணத்தில் இருப்பதும், மறுநில அளவை எண்ணும் பழைய நில அளவை எண்ணும் கொண்டிருப்பதும், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அ அடையாளமிட்ட அமைப்புப் படத்தில் நிறம் கொடுக்கப்பட்டிருப்பதும், வடக்கில் மறுநில அளவை எண், கிழக்கில் மறு நில அளவை எண், தெற்கில் மறுநில அளவை எண், மேற்கில் மறு நில அளவை எண், ஆகிய இந்த நாற்பாங்கு எல்லைக் குட்பட்டிருப்பதும், அளக்கும்போது அல்லது ஏறத்தாழ அவ்வளவு உள்ளதுமான நிலத்துண்டு அல்லது பாகம் எல்லாம்

மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை.

பதிவு மாவட்டத்தில் பதிவுக்கிளை மாவட்டத்தில் கிராமத்தில்/பட்டணத்தில் இருப்

பதும் மறு நில அளவை எண்ணும் பழைய சர்வே எண்ணும் கொண்டிருப்பதும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆ அடையாளமிட்ட அமைப்புப்படத்தில் நிறம் கொடுக்கப்பட்டிருப்பதும், வடக்கில் மறுநில அளவை எண், கிழக்கில் மறு நில அளவை எண், தெற்கில் மறுநில அளவை எண், மேற்கில் மறு நில அளவை எண் ஆகிய இந்த நாற்பாங்கு எல்லைக்குட்பட்டிருப்பதும், அளக்கும் போது அல்லது ஏறத்தாழ அவ்வளவு உள்ளதுமான நிலத்துண்டு அல்லது பாகம் எல்லாம்

இன் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பொது முத்திரை என்பவர் முன்னிலையில் இதில் போடப்பட்டது.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் என்பவர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால் என்பவர் முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரைபோட்டு, ஒப்புவிக்கப் பட்டது.

இதற்குச் சான்ருக மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் தேதியிலும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முத்திரைச் சின்னம் இதில் போடப்பட்டது. என்பவர் தமது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிருர்.

படிவம் 11 (இ).

அடைமான மூலமாக மாற்றம்.

19 ஆண்டு மாதம் தேதியன்று (இதில் பின்னல் "அடைமானம் வைப்பவர்" இச்சொற்ருெடரில் சந்தர்ப்பம் இடம் கொடுத்தால் அதனுடைய வழியுரிமைக்காரர்கள் உரிமைப் பேற்ருளர்கள் என்பதும் அடங்கும் என்று சொல்லப்படும்.) 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மான்றத்திற்கும் (இதில் பின்னல் "அடைமானம் பெறுபவர்"—இச்சொற்ருெடரில், சந்தர்ப்பம் இடம் கொடுத்தால் அவருடைய வாரிசுகள், நிறைவேற்ருளர்கள், நிருவாகிகள், சட்ட முறையான பிரதிநிதிகள், உரிமைப் பேற்ருளர்கள் என்பதும் அடங்கும்—என்று சொல்லப்படும்) ல் வசிக்கிற என்பவருடைய குமாரராகிய என்பவருக்கும் ஏற்பட்ட இந்த உடன்படிக்கைப் பத்திரம் என்னவென்ருல்

அடைமானம் வைப்பவருக்கு, இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிற அட்டவணையில் சொல்லப்பட்டிருக்கும் நிலத்துண்டு அல்லது பாகம், வளவு ஆகியவை விஷயமாக உண்மையாய் நல்ல உரிமை இருக்கிறபடியாலும் அவற்றை அவர் சுவாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறபடியாலும்,

இதில் பின்னல் கண்டுள்ள விதமாகப் பிணையம் கொடுக்கப்பட்டுள்ள ரூபாயை இதில் பின்னல் சொல்லப்பட்டிருக்கிற வீதப்படியுள்ள வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டுமென்பதன்பேரில், அடைமானம் பெறுபவர் அத்தொகையை அடைமானம் வைப்பவருக்குக் கடனுகக் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறபடியாலும்,

மாவட்ட ஆட்சியாளர் ஆண்டு மாதம் தேதியுள்ள எண் ஆணைமூலமாக இதில் பின்னல் கண்டுள்ள விதமாக அச்சொத்துக்களை அடைமானம் வைப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்,

* தமிழ்நாடு அரசினர்கூட ஆண்டு மாதம் தேதியுள்ள எண் ஆணை மூலமாக, இதில் பின்னல் கண்டுள்ள விதமாக அச்சொத்துக்களை அடைமானம் வைப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்,

இதில் பின்னல் கண்டுள்ள விதமாக அடைமானம் வைப்பதைப் பற்றி, அதற்குச் சம்பந்தப்பட்ட விதிகளின் நிபந்தனைகளுக்கிணங்க முறையாக அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறபடியாலும்

இப்போது இந்த உடன்படிக்கைப் பத்திரத்தின் வரையறைகள் என்னவென்றல்—இந்தப் பத்திரம் எழுதப்படுவதன்பேரில் அல்லது அதற்குமுன் அடைமானம் பெறுபவர் அடைமானம் வைப்பவருக்குக் கொடுத்த ரூபாயுள்ள தொகையைக் கருத்தில் கொண்டு (அடைமானம் வைப்பவர் அதைப் பெற்றுக் கொண்டதாக இதனல் ஒப்புக் கொள்கிருர்) அடைமானம் வைப்பவர் அடைமானம் பெறுபவருடன் இதனல் உடன்படிக்கை செய்து கொள்வது என்னவென்றல்—அடைமானம் வைப்பவர், கேட்கப்படுவதன் பேரில் ரூபாயுள்ள தொகையையும் அதற்கு ஆண்டு ஒன்றுக்கு நூற்றுக்கு ரூபாய் வீதம் வட்டியையும் அடைமானம் பெறுபவருக்குச் செலுத்த வேண்டும்.

மேற்கொண்டு இந்த உடன்படிக்கைப் பத்திரத்தின் ஷரத்துக்கள் என்னவென்றல்—அதனையே கருத்தில் கொண்டு அடைமானம் வைப்பவர் ல்

* மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால் மாத்திரம் வைத்துக் கொள்ளவும்.

இருப்பதும், இதன்கீழ் எழுதப்பட்டுள்ள அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதும், அதன் மேல் எழுப்பப்பட்டுள்ள குடியிருப்பு வீடு அல்லது குடியிருப்புடன் சேர்ந்து எனச் சாதாரணமாய்ச் சொல்லப்படுவதும் அல்லது வழங்கப்படுவதுமான நிலத்துண்டு அல்லது பாகம் எல்லாவற்றையும் சாதாரண அடைமானமாக அடைமானம் பெறு பவருக்கு இதனால் கொடுத்து வழங்குகிறார். அவற்றோடுகூட, மேற்படி நிலத் துண்டு அல்லது பாகம், குடியிருப்பு வீடு, வளவு ஆகியவற்றை எவ்விதமாக வேனும் சேர்ந்த எல்லாக் கட்டிடங்கள், கிடங்குகள், மரங்கள், பொது நிலங்கள் வரம்புகள், குழிகள், வேலிகள், வழிகள், நீர்நிலைகள், நீர்க்கால்கள், சுதந்திரங்கள், சலுகைகள், புழக்க உரிமைகள், அனுகூலங்கள், சார் பொருள்கள் ஆகியவற்றையும், அல்லது அவற்றுடன் எவ்விதமாகவேனும் சேர்ந்துள்ள இது வரையில் அல்லது இனிமேல் ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்படுகிற அவைகளில் யாதொன்றையும், அதே வளவிலும் அதன் பேரிலும் அடைமானம் வைப்பவருக்குள்ள எவ்விதமான சகல சொத்து உரிமை, உரிமை மூலம், பற்று சொத்துக் கோருரிமை, கேட்பு ஆகியவற்றையும் இதனால் கொடுத்து வழங்குகிறார் :

மேலும், அடைமானம் வைப்பவர் அடைமானம் பெறுபவருடன் இதனால் உடன்படிக்கை செய்து கொள்வது என்னவென்றால் அடைமானம் வைப்பவர், இந்தப்பத்திரத்தின் பிணையத்தின் பேரில் ஏதேனும் பணம் இன்னும் சேர வேண்டியதாயிருக்கிறவரையில், இதனால் வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கப் படுவதாக இதில் முன்னால் சொல்லப்பட்ட மேற்படி வளவின் மீது இப் போதுள்ள அல்லது இனிமேல் எழுப்பப்படவிருக்கிற குடியிருப்பு வீடுகள், கட்டிடங்கள் எல்லாவற்றையும் நல்ல கணிசமான சீரமைப்பில் வைத்திருக்க வேண்டியதுமல்லாமல், தீயினால் இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதனிமித்தம், குறைந்தது . . . ரூபாய்க்கு அடைமானம் பெறுபவரின் பெயர் அல்லது பெயர்களில் அவரால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஏதேனும் அலுவலகம் அல்லது அலுவலகத்தில் ஈட்டுறுதி செய்து, அதன்பொருட்டும் அந்த ஈட்டுறுதி அமலில் இருக்கும்படி செய்வதற்காகவும் அவசியமான எல்லாத் தவணைக் கட்டணங் களையும் பணத்தொகைகளையும் முறையாகவும் காலந்தவறாமலும் செலுத்த வேண்டும்; மேலும், மேற்படி வளவுகள் அல்லது அவைகளில் யாதொன்று சம்பந்தமாக அச்சமயம் செலுத்தப்படத்தக்க அல்லது அவற்றின் அல்லது அதன்மீது அச்சமயம் சார்த்தப்படுகிற விடுவரி தீர்வை வீதங்கள், வரிகள் மற்ற செலவுகள் ஆகியவற்றையெல்லாம் அவ்வாறே செலுத்த வேண்டும்; அல்லாமலும், ஈட்டுறுதிப்பத்திரம் அல்லது பத்திரங்களையும் மேற்சொன்னவாறு செலுத்தப்படத்தக்க ஒவ்வொரு தொகைக்குமான பற்றுச் சீட்டையும், அடை மானம் பெறுபவரிடம் உடனே ஒப்புவிக்க வேண்டும். மேற்படி கட்டிடங்களை

அவ்வாறு சீரமைப்பில் வைத்திருப்பதில் அல்லது அந்த ஈட்டுறுதிகளை ஏற்படுத்துவதில் அல்லது அவைகளை அமலில் இருக்கும்படி செய்வதில் அல்லது மேற்சொன்னவாறுள்ள ஏதேனும் விடுவரி தீர்வை வீதங்கள் வரிகள் மற்றச் செலவுகள் ஆகியவற்றைச் செலுத்துவதில் அல்லது மேற்சொன்னவாறு ஏதேனும் பத்திரம் அல்லது பத்திரங்களை அல்லது பற்றுச்சீட்டை அவ்வாறு ஒப்புவிப்பதில் தவறிப்போனால், அடைமானம் பெறுபவர் மேற்படி வளவிலும் அதன்பேரிலும் பிரவேசித்து, அதை நல்ல கணிசமான சீரமைப்பில் வைத்து அல்லது (சந்தர்ப்பத்துக்கேற்ப) மேற்படி கட்டிடங்களை மேற்சொன்ன தொகைக்கு மேற்படாத தொகைக்கு ஈட்டுறுதி செய்து, அந்த ஈட்டுறுதி அமலில் இருக்கும்படி செய்து, தவணைக் கட்டணங்களையும் அவ்வாறு செய்வதற்குப் பிடித்த எல்லாச் செலவுகளையும் அல்லது (சந்தர்ப்பத்திற்கேற்ப) மேற்சொன்னவாறுள்ள ஏதேனும் விடுவரி தீர்வை வீதங்கள் வரிகள் அல்லது மற்ற செலவுகளைக் கொடுப்பது சட்ட சம்மதமாகும். ஆனால் அவர் அப்படி யெல்லாம் செய்யக் கடமைப்பட்டவராகமாட்டார். மேலும், அடைமானம் வைப்பவர், அத்தகைய எல்லாத் தவணைக் கட்டணங்களையும் செலவுகளையும் மற்றப் பயணங்களையும், அவற்றின்பேரில், ஒவ்வொரு கொடுப்பீட்டுக் காலத்திலிருந்து மேற்சொன்ன வீதப்படியுள்ள வட்டியையும், அடைமானம் பெறுபவருக்கு உடனே திருப்பிச் செலுத்த வேண்டும். அவ்வாறு திருப்பிச் செலுத்தப்படுகிற வரையில், இதனால் அடைமானம் வைக்கப்பட்ட வளவின் பேரில், திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய தொகையையும் அதற்கு மேற் சொன்ன வீதப்படி வட்டியும் சார்த்தப்படும். ஏதேனும் ஈட்டுறுதி சம்பந்தமாகக் கிடைக்கும் பணம் எல்லாம், அடைமானம் பெறுபவரின் விருப்பம்போல் ஈட்டுறுதி செய்யப்பட்ட கட்டிடங்களைப் புதுப்பிப்பதில் அல்லது செப்பனிடுவதில் அல்லது இந்தப் பத்திரத்தின் பிணையத்தின் பேரில் அச்சமயம் சேரவேண்டிய பணத்தைச் செலுத்துவதில் அல்லது செலுத்துவதினிமித்தம் பயன்படுத்தப்படும். அன்றியும் அடைமானம் வைப்பவர் அடைமானம் பெறுபவருடன் இதனால் உடன்படிக்கை செய்து கொள்வது என்னவென்றால் அடைமானம் பெறுபவருக்குச் சாதாரணமாக அடைமானத்தைக் கொடுத்து வழங்க அடைமானம் வைப்பவருக்கு இப்போது அதிகாரம் உண்டு. மற்றும் இதனால் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு அறிவிக்கப்படுவது என்னவென்றால்—இந்த அடைமானத்தின்படிச் சேர வேண்டிய தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு, விற்கப்படும் போது, இதனுடன் சேர்த்துள்ள அட்டவணையில் சொல்லப்பட்டிருக்கிற சொத்துக்கள் போதாவிட்டால், அடைமானம் வைப்பவர், இந்த அடைமானத்தின்படி அச்சமயம் சேரவேண்டியதாகவும் கொடுக்கப்பட வேண்டியதாகவும் உள்ள தொகைக்காக நேர் பொறுப்பாளியாவார்.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை.

பதிவு மாவட்டத்தில் பதிவுக் கிளை மாவட்டத்தி கிராமத்தில்/பட்டிணத்தில். இருப்பதும் வடக்கில் தெற்கில் கிழக்கில் மேற்கில் ஆகிய இந்த நாற்பாங்கு எல்லைக்குட்பட்டிருப்பதும் மறுநில அளவை எண்ணும் பழைய நில அளவை எண்ணும் கொண்டிருப்பதும், அளக்கும்போது மொத்தத்தில் (ஏறத்தாழ) , உள்ளதுமான நிலத்துண்டு அல்லது பாகம்/வளவு எல்லாம்

ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் என்பவர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பொது முத்திரை என்பவர் முன்னிலையில் இதில் போடப்பட்டது.

இதற்குச் சான்றுக மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் தேதியிலும், அடைமானம் வைப்பவரின் முத்திரைச் சின்னம் இதில் போடப்பட்டிருக் கிறது.

படிவம் II (ஈ).

கொடை மூலமாக மாற்றம்.—19 ஆண்டு மாதம் தேதியன்று (இதில் பின்னுல் "கொடையளிப்பவர்"—இச்சொற் ருெடரில், சந்தர்ப்பம் இடங்கொடுத்தால், அதன் வழியுரிமையாளர்கள், உரிமைப்பேற்றுளர்கள் என்பதும் அடங்கும்—என்று சொல்லப்படும்) 1959 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ் நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ன் ஊராட்சி ஒன்றியக்குழுவிற்கும் (இதில் பின்னுல் "கொடை பெறுபவர்" இச்சொற்ருெடரில், சந்தர்ப்பம் இடங்கொடுத்தால், அவருடைய வாரிசுகள், நிறைவேற்றுளர்கள், நிருவாகிகள் சட்டமுறையான பிரதிநிதிகள் உரிமைப்பேற்றுளர்கள் என்பதும் அடங்கும் என்று சொல்லப்படும்) ல் வசிக்கிற என்பவர் குமாரராகிய என்பவருக்கும் ஏற்பட்ட இந்த உடன்படிக்கைப்பத்திரம் என்னவென்ருல்.—

இதில் பின்னுல் விவரித்துச் கொல்லப்பட்டிருப்பதும், இதனுல் வழங்கி, உரிமை மாற்றிக் கொடுக்கக் கருதியிருப்பதுமான நிலத்துண்டு வளவு ஆகிய வற்றிற்கு, கொடையளிப்பவர் வில்லங்கங்கள் இன்றி நன்கு போதுமானபடி உரிமை பெற்றிருக்கிறபடியாலும்,

கொடைபெறுபவர் அந்த நிலத்துண்டு வளவு சம்பந்தமாக இப்போதும் இனிமேலும் வரிகள், செலவுகள், தீர்வைகள் மனைவரி ஆகியவை எல்லா வற்றையும் செலுத்துவதற்குட்பட்டு என்னும் காரியத்துக்குப் பயன்படுத்துவதற்காக கொடையளிப்பவர் அந்த நிலத்துண்டையும் வளவையும் கொடையாக கொடைபெறுபவருக்கு மாற்ற உடன்பட்டிருக்கிறபடியாலும், கொடைபெறுபவர் அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அந்த நிலத்துண்டையும் வளவையும் ஏற்றுக் கொள்ள உடன்பட்டிருக்கிறபடியாலும்,

மேற்படி நிலத்துண்டும் வளவும் முத்திரைத் தீர்வையின் காரியத்துக்காக ரூபாய் மதிப்புடையதாயிருக்கிற படியாலும்,

மாவட்ட ஆட்சியாளர் ஆண்டு மாதம் தேதியுள்ள எண் ஆணை மூலமாக இதில் பின்னால் கண்டுள்ள சொத்தின் கொடைக்கு ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்,

இதில் பின்னால் கண்டுள்ளவிதமாகக் கொடையைப்பற்றி, அதற்குச் சம்பந்தப்பட்ட விதிகளின் நிபந்தனைகளின்படி முறையாக அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறபடியாலும்,

* தமிழ் நாடு அரசினர் கூட ஆண்டு மாதம் தேதியுள்ள எண் ஆணை மூலமாக, இதில் பின்னால் கண்டுள்ள சொத்தின் கொடைக்கு ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்,

இப்போது இந்த உடன்படிக்கைப் பத்திரத்தின் வரையறைகள் என்ன வென்றால், கொடையளிப்பவர் பதிவு மாவட்டத்தில் பதிவுக் கிளை மாவட்டத்தில் கிராமத்தில் இருப்பதும் நில அளவை எண் கொண்டிருப்பதும் இதன் கீழ் எழுதப்பட்டுள்ள அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதுமான நிலத்துண்டு அல்லது பாகம் எல்லாவற்றையும் கொடைபெறுபவருக்கு இதனால் வழங்கி உரிமை மாற்றிக்கொடுக்கிறார்; கொடைபெறுபவரும் அவற்றை இதனால் ஏற்றுக் கொள்கிறார். அவற்றோடு கூட மேற்படி நிலத்துண்டு அல்லது பாகம் கட்டிடங் கள் வளவுகள் ஆகியவற்றை எவ்விதமாகவேனும் சேர்த்துள்ள கட்டிடங்கள் மரங்கள் பொதுநிலங்கள் வரப்புகள் குழிகள் வேலிகள் வழிகள் நீர்நிலைகள் நீர்க்கால்கள் சுதந்தரங்கள் சலுகைகள் புழக்க உரிமைகள் அனுகூலங்கள் சார் பொருள்கள் ஆகிய எல்லாவற்றையும், அல்லது அவற்றுடன் எவ்விதமாகவேனும் சேர்ந்துள்ள அல்லது இதுவரை ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக்

* மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால் மாத்திரம் வைத்துக் கொள்ளவும்

கொள்ளப்பட்ட அவற்றில் யாதொன்றையும், அந்த வளவிலும் அதன்பேரிலும் கொடையளிப்பவருக்குள்ள எவ்விதமான சகல சொத்துரிமை, உரிமை மூலம் பற்று சொத்தும் கோருரிமை கேட்பு ஆகியவற்றையும், கொடை பெறுப வருக்கு இதனுல் வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட மேற்படி நிலத் துண்டு அல்லது பாகம் வளவு ஆகியவற்றை என்றென்றும் பெற்றுக்கைப் பற்றில் வைத்திருப்பதற்காக அவ்வாறு வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கிருர். அன்றியும், கொடையளிப்பவர் கொடைபெறுபவருடன் இதனுல் உடன்படிக்கை செய்து கொள்வது என்னவென்றுல்—மேற்சொன்னவிதமாகக் கொடை பெறுப வருக்கு இதனுல் வழங்கி உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவை வழங்கி உரிமை மாற்றிக் கொடுப்பதற்குக் கொடையளிப்பவருக்கு இப்போது நல்ல கொடையளிப்பவரிடமிருந்து அல்லது அவரால் எவ்விதமான சட்டப்படிக்குற்ற வெளியேற்றம் குறுக்கீடு கோரி அல்லது கேட்பு இன்றி எவ்விதமான சகல வில்லங்கங்களும் இல்லாமல்—மேற்படி வளவைச் சமாதானமாகவும் அமைதி யாகவும் தம்வசம் வைத்துக் கொண்டு அனுபவிக்க வேண்டியதுமல்லாமல் உரிமை உண்டு, அல்லாமலும், கொடைபெறுபவர் இனிமேல் எப்போதும் அப்படியும் செய்யலாம். மற்றும், கொடையளிப்பவரும், கொடையளிப்பவரிட மிருந்து அவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப்பாக மேற்படி வளவில் அல்லது அதன் எதேனும் பாகத்தில் சொத்து அல்லது பற்று உடைய அல்லது சட்டப்படி அல்லது நியாயமாகக் கேட்கிற எல்லாரும் அவ்வப்போதும் இனி மேல் எப்போதும், கொடைபெறுபவர் கேட்டுக் கொள்வதன் பேரிலும் அவர் செலவிலும், மேற்படி வளவையும் அதன் ஒவ்வொரு பாகத்தையும் மேற் சொன்னவிதமாக அல்லது நியாயமாகக் கேட்கப்படுகிற அல்லது கேட்கப்படக் கூடியவாறு கொடைபெறுபவருக்கு மேற்கொண்டு இன்னும் செம்மையாக இருக்கும்படிச் செய்யும் பொருட்டு, எவ்விதமான சகல செயல்களேயும் பத்திரங்களேயும் காரியங்களேயும் செய்து எழுதிக் கொடுத்துப் பதிவு செய்ய வேண்டும் : அல்லது செய்வித்து எழுதிக் கொடுப்பித்துப் பதிவு செய்விக்க வேண்டும் : அல்லது அப்படியெல்லாமும் செய்வார் ; மேலும், கொடைபெறு பவர் கொடையளிப்பவருடன் இதனுல் உடன்படிக்கை செய்துகொள்வது என்ன வென்றுல், அவர் இனிமேல் எல்லாக் காலங்களிலும், மேற்சொன்ன நிலம் வளவு ஆகியவை சம்பந்தமாக இப்போதும் இனிமேலும் செலுத்தப்பட்த்தக்க வரிகள் செலவுகள் அல்லது தீர்வைகள் எல்லாவற்றையும்

ரூபாய் மனே வரியையும் அல்லது தீர்வையையும் அல்லது அந்த நிலத்துண்டு அல்லது பாகத்தின் மீது மைய அரசினர் அல்லது தமிழ்நாடு அரசினர் சார்பாகக் குறிப்பிட்ட மாவட்ட ஆட்சியாளரால் அந்த முறைமையில் அவ்வப் போது விதிக்கப்படக் கூடிய வேறு ஏதேனும் தொகையையும் ஏற்றுக்கொண்டு கொடுத்துத் தீர்க்க வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை.

பதிவு மாவட்டத்தில்
பதிவுக்கிளை மாவட்டத்தில் கிராமத்தில்/பட்டணத்தில் இருப்பதும், வடக்கில்
தெற்கில் கிழக்கில்
மேற்கில் ஆகிய இந்த நாற்பாங்கு எல்லைக்குட்பட்டிருப்பதும்,
சர்வே எண் கொண்டிருப்பதும், அளக்கும்போது மொத்தத்தில் அல்லது ஏறத்தாழ அவ்வளவு உள்ள நிலத்துண்டு அல்லது பாகம் வளவு எல்லாம்.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால்
என்பவர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால்
என்பவர் முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரை போட்டு ஒப்புவிக்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றியக்குழுவின் பொது முத்திரை
என்பவர் முன்னிலையில் இதில் போடப்பட்டது.

இதற்குச் சான்றாக மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் நாளிலும், கொடையளிப்பவராகிய ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முத்திரைச் சின்னம் இதில் போடப்பட்டது: கொடை பெறுபவர் தமது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிறார்.

அட்டவணை III.

படிவம் III (அ).

[4 (2), 5 (2) விதிகளைப் பார்க்கவும்.]

குத்தகை மூலமாக மாற்றம்.

19 ஆண்டு மாதம் தேதியன்று, (இதில் பின்னால் "குத்தகை விடுபவர்"—இச்சொற்றொடரில், சந்தர்ப்பம் இடங் கொடுத்தால், அதனுடைய வழியுரிமையாளர்கள், உரிமை பேற்றுள்ளர்கள் என்பதும் அடங்கும்—என்று சொல்லப்படும்) 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ன் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் (இதில் பின்னால் "குத்தகை எடுப்பவர்"—

இச் சொற்ருெடரில், சந்தர்ப்பம் இடங்கொடுத்தால், அவருடைய வாரிசுகள் நிறைவேற்ருளர்கள் நிருவாகிகள் சட்டமுறையான பிரதிநிதிகள் அனுமதிக்கப் பட்ட உரிமைப் பெற்ருேர்கள் என்பதும் அடங்கும்—என்று சொல்லப்படும்)

ஆகத் தொழில் நடத்துகிற, -ல் வசிக்கிற

என்பவருடைய குமாரராகிய என்ப வருக்கும்இடையில் ஏற்பட்ட இந்த உடன்படிக்கைப் பத்திரம், என்ன வென்ருல்,—

இதனுடன் சேர்த்துள்ள முதல் அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிற சொத்தினை, இதில் பின்னல் கண்டுள்ள காலத்துக்கும் வாடகை வீதத்துக்கும் வரையறைகள் நிபந்தனைகள் ஆகியவைகளுக்குட் பட்டும் குத்தகைக்குவிடும்படி, குத்தகை எடுப்பவர் குத்தகை விடுபவருக்கு விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறபடியாலும்,

குத்தகை விடுபவர் இதில் பின்னல் கண்டுள்ள விதமாக மேற்படி சொத்தினைக் குத்தகைக்குவிட ஒப்புக் கொண்டிருக்கிறபடியாலும்,

* மாவட்ட ஆட்சியாளர் ஆண்டு மாதம் தேதியுள்ள எண் ஆணை மூலமாக, இதனுடன் சேர்த்துள்ள இரண்டாவது அட்டவணையில் கண்டிருக்கிற தனி நிபந்தனைகளின் பேரிலும் அவைகளுக்குட்பட்டும் அச்சொத்தினைக் குத்தகைக்கு விடுவதற்கு ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்,

அச் சொத்தினைக் குத்தகைக்கு விடுவது பற்றி, அதற்குச் சம்பந்தப்பட்ட விதிகளில் கண்ட நிபந்தனைகளின்படி கிரமமாக அறிக்கை கொடுக்கப்பட்டிருக் கிறபடியாலும்,

இப்போது இந்த உடன்படிக்கைப் பத்திரத்தின் வரையறைகள் என்ன வென்ருல்,—

1. இதனல் ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகையையும், குத்தகை எடுப்ப வருடையவையென்று இதில் கண்டுள்ள உடன்படிக்கைகளையும் கருத்தில் கொண்டு, குத்தகை விடுபவர், பதிவு மாவட்டத்தில் பதிவுக் கிளை மாவட்டத்தில் இருப்பதும் நில அளவை எண் உள்ளதுமான நிலத் துண்டு அல்லது பாகம் எல்லா வற்றையும், அவற்ருேடு கூட என்று சொல்லப்படும் கட்டிடங்களையும் வளவையும் 19 ஆண்டு மாதம் தேதியிலிருந்து ஆண்டுக் காலத்துக்கு, குத்தகை எடுப்ப வருக்கு உரிமை மாற்றிக் கொடுக்கிருர்: அதற்காகக் கழிவுத் தொகைகள்

* மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால் மாத்திரம் வைத்துக் கொள்ளவும்.

எல்லாம் நீங்கலாக ரூபாய் மாத வாடகை முன்னதாகக் கொடுக்கப்பட வேண்டும்; 19 ஆண்டு மாதம் தேதியன்று முதலில் அவ்வாறு தொகை செலுத்த வேண்டும்.

2. குத்தகை எடுப்பவர் குத்தகை விடுபவருடன் பின்வருமாறு உடன்படிக்கை செய்து கொள்கிறார் :—

(1) ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகையை, ஒவ்வொரு மாதத்திலும் முதல் தேதியன்றும் அல்லது அதற்கு முன்பும் மேற்சொன்ன விதமாகவும் முன்னதாய்ச் செலுத்தி விட வேண்டும்.

(2) மேற்படி வளவு சம்பந்தமாக இப்போதும் இனிமேலும் செலுத்தப் படத்தக்க கட்டணங்கள், தீர்வைகள், செலவுகள் எல்லாவற்றையும் ரூபாய் மனை வரியையும் அல்லது அந்த முறைமையில் அந்த நிலத் துண்டு அல்லது பாகத்தின் மீது மைய அரசினரின் அல்லது தமிழ்நாடு அரசினரின் சார்பாக மாவட்ட ஆட்சியாளரால் அவ்வப்போது விதிக்கப்படக் கூடிய வேறு ஏதேனும் தொகையையும் ஏற்றுக்கொண்டு கொடுத்துத் தீர்க்க வேண்டும்.

(3) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவின் வெளிப்புறத்தையும் உட்புறத்தையும், அதனுடன் சேர்க்கப்பட்ட எல்லாப் பாகங்களையும், அதன் எல்லைச் சுவர்களையும் வேலிகளையும், அதன் வடிகால்களையும் தரைக் குழாய்களையும் மற்றக் குழாய்களையும், சுகாதார நீர்க் கருவிகலங்களையும், அதன்மீது பொருத்துகளையும் இசைப்புகளையும் குடியிருக்கத்தக்க நல்ல சீரமைப்பிலும் நிலையிலும் வைத்திருக்க வேண்டும்.

(4) குத்தகை விடுபவரின் அல்லது அதனிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்ற அலுவலர்களின் எழுத்து மூலமான இசைவை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல் உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட கட்டிடங்களின் எவையேனும் மாறுதல்களை அல்லது அவைகளுடன் எவையேனும் சேர்க்கைகளை எச் சந்தர்ப்பங்களிலும் செய்யவும் கூடாது; செய்யவிடவுங் கூடாது ஆனால் எப்போதும், எவையேனும் மாறுதல்களைச் செய்யக் குத்தகை எடுப்பவர் குத்தகை விடுபவரால் அல்லது அதனிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்ற அலுவலர்களால் அனுமதிக்கப்பட்டிருந்தால், குத்தகை எடுப்பவர் அதற்காக ஏதேனும் ஈடு பெற உரிமை உள்ளவர் ஆக மாட்டார்.

(5) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவில் வேலையாட்களுடனோ மற்றவர்களுடனோ அவர்கள் இல்லாமலோ நுழைந்து, அதன் நிலைமையைப்

பார்வையிட, ஒரு நாள் முன்னதாக அறிக்கை கொடுத்துவிட்டு, நியாயமான எல்லாக் காலங்களிலும், குத்தகை விடுபவருக்கும் அதனிடமிருந்து அதிகாரம் பெற்ற அலுவலர்களாவது அறிக்கை கொடுப்பதன்பேரில், அறிக்கை சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்துக்குள், அதன் பிரகாரம் செப்பனிட வேண்டும்.

(6) ஆய்வாளரால் நிர்ணயிக்கப்படுபவையும், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள இரண்டாவது அட்டவணையில் கண்டுள்ளவையுமான ஷரத்துக்களையும் நிபந்தனைகளையும் கடைப்பிடித்து நிறைவேற்ற வேண்டும்.

(7) குத்தகை விடுபவருடைய அல்லது அதனிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள அலுவலர்களுடைய எழுத்து மூலமான இசைவை முதலில் பெற்றுக்கொள்ளாமல் உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை, வேறொருவருக்கு உரிமைப்படுத்தவுங் கூடாது, கீழ்க் குடிக்கூலிக்கு விடவுங்கூடாது. அதன் கைப்பற்றை விடவுங்கூடாது.

(8) குடிவாரம் இறுதி செய்யப்படுவதன்பேரில், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவை, அதன் கண் உள்ள எல்லா இசைப்புகளுடன்படி நல்லமுறையில் குடியிருக்கத்தக்க சீரமைப்பிலும் நிலையிலும் கொடுத்துவிட வேண்டும்.

3. குத்தகை விடுபவர் குத்தகை எடுப்பவருடன் உடன்படிக்கை செய்து கொள்வது என்னவென்றால்,—

(1) குத்தகை எடுப்பவர் இதனால் ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகையைக் கொடுத்துக்கொண்டு, அவருடையனவென்று இதில் கண்டுள்ள பற்பல உடன்படிக்கைகளையும் நிபந்தனைகளையும் கடைப்பிடித்துச் செய்து வருவதன் பேரில், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவை மேற்படி கால அளவிலே, குத்தகை விடுபவரின் அல்லது அவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப்பாகச் சரியாய் உரிமை கொண்டாடும் ஒருவரின் குறுக்கீடு இல்லாமல், அமைதியாக வைத்திருந்து அனுபவிக்க வேண்டும்.

(2) நியாயமான சரியான தேய்மாய்வுக் காரணமாக, முக்கியமான சுவர்களுக்கும் கூரைக்கும் அடிப்படைகளுக்கும் எல்லாச் செப்பனீடுகளையும் செய்ய வேண்டும்; அத்தகைய செப்பனீடுகளுக்கான அவசியத்தைப் பற்றி, அச்சமயம் கோட்டத்தின் நிருவாகப் பொறியாளராயிருப்பவருடைய தீர்ப்பு முடிவானதாகும்.

4. ஆனால் எப்போதும், இதற்குரிய சாரார்களாலும் அவர்களுக்கிடையிலும் இதனால் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்படுவது என்னவென்றால் :—

(1) இதனால் ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகை அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்படத்தக்கதாகிவிட்ட பிறகு (முறைப்படி கேட்கப்பட்டாலும் படாவிட்டாலும்) 14 நாள் வரை செலுத்தப்படாமலிருந்தால், அல்லது குத்தகை எடுப்பவருடையதென்று இதில் கண்டுள்ள ஏதேனும் உடன்படிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் அல்லது கடைப்பிடிக்கப்படா விட்டால் அல்லது குத்தகை எடுப்பவராவது இதனால் உண்டாக்கப்படும் வரையறை சமயம் வேறு யாரிடம் உரித்தாக்கப்படுகிறதோ அவராவது நொடித்துப் போய்விட்டால், அப்போது, அத்தகைய விஷயங்களில் எதிலேனும் குத்தகை விடுபவராகிலும் அதனிடமிருந்து அதிகாரம் பெற்ற அலுவலர்களாகிலும் அதற்குப் பிறகு எப்போதேனும், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட அளவில் அல்லது முழுவதன் பெயரில் அதன் ஏதேனும் பாகத்தில் மீண்டும் நுழைவது சட்ட சம்மதமாகும்; அதன் பேரில், இந்த உரிமை மாற்றம் முழுவதும் இறுதியாகிவிடும்; ஆனால் அதனால், குத்தகை எடுப்பவருடையவையென்று இதில் கண்டுள்ள உடன்படிக்கைகளில் எதுவேனும் மீறப்பட்டது சம்பந்தமாகக் குத்தகை விடுபவருடைய சொல்லுரிமைக்குப் பாதகம் உண்டாகமாட்டாது.

(2) பொதுநலனை முன்னிட்டு இக் குத்தகையை இறுதி செய்வது அவசியமென மாவட்ட ஆட்சியாளராவது குத்தகை விடுபவருக்காவது எப்போதேனும் தோன்றினால் (அவருடைய தீர்மானம் முடிவானதாகும்), மாவட்ட ஆட்சியாளராவது குத்தகை விடுபவராவது குத்தகை எடுத்தவர் கடைசியாக வசித்திருந்ததாகத் தெரியவரும் இடத்திலே அவருக்கு முகவரியிட்டு எழுதியனுப்பப்படும் அறிக்கை மூலமாக இக் குத்தகையை உடனே ரத்து செய்வது சட்ட சம்மதமாகும்; அதன்பேரில் இந்த உரிமை மாற்றம் முழுவதும் இறுதியாகிவிடும்; குத்தகை எடுப்பவர் அவ்வாறு இறுதியாவது சம்பந்தமாக, குத்தகை எடுப்பவர் முன்னதாகச் செலுத்தியிருக்கக்கூடிய ஏதேனும் வாடகை விகிதாசாரப்படி குறைக்கப்படுவதைத் தவிர, வேறு எவ்விதமான ஈடும் பெற உரிமை உள்ளவராகமாட்டார்.

மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை.

பதிவு மாவட்டத்தில் பதிவுக்
கிளை மாவட்டத்தில் கிராமத்தில்/பட்டணத்தில்
இருப்பதும், வடக்கில் தெற்கில் ,

மேற்கில் கிழக்கில் ஆகிய இந்த நாற்பாங்கு எல்லைக்குட்பட்டிருப்பதும் நில அளவை எண்ணும் கதவிலக்கமும் கொண்டதும், அளக்கும்போது மொத்தத்தில் ஏறத்தாழ உள்ளதுமான நிலத் துண்டு, அல்லது பாகம்எல்லாம்.

மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை.

மாவட்ட ஆட்சியாளரால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள்.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் என்பவர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பொது முத்திரை என்பவர் முன்னிலையில் இதில் போடப்பட்டது.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால் என்பவர் முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரை போட்டு ஒப்புவிக்கப்பட்டது.

இதற்குச் சான்றாக மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் நாளிலும் குத்தகை விடுபவராகிய ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முத்திரைச் சின்னம் இதில் போடப்பட்டது ; குத்தகை எடுப்பவர் தமது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிறார்.

படிவம் III (ஆ).

[6 (2) விதியைப் பார்க்கவும்.]

குத்தகை மூலமாக மாற்றம்.

19 ஆண்டு மாசம் தேதியன்று, (இதில் பின்னால் "குத்தகை விடுபவர்" இச் சொற்றொடரில், சந்தர்ப்பம் இடங் கொடுத்தால், அதனுடைய வழியுரிமையாளர்களும் உரிமைப் பேற்றாளர்களும் அடங்கும்—என்று சொல்லப்படும்) 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ன் சொற்றொடரில் சந்தர்ப்பம் இடங் கொடுத்தால், அவருடைய வாரிசுகளும் சொற்றொடரில், சந்தர்ப்பம் இடங் கொடுத்தால், அவருடைய வாரிசுகளும் நிறைவேற்றுநர்களும் நிருவாகிகளும் சட்டமுறையான பிரதிநிதிகளும் அனுமதிக்கப்பட்ட உரிமைப் பேற்றாளர்கள் அடங்கும்—என்று சொல்லப்படும்)
ஆகத் தொழில் நடத்துகிற,

வசிக்கிற என்பவருடைய குமாரராகிய
என்பவருக்கும் இடையில் ஏற்பட்ட இந்த உடன்படிக்கைப் பத்திரம் என்னவென்றால் :—

இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள முதலாவது அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிற சொத்தினை, இதில் பின்னால் கண்டுள்ள கால அளவுக்கும் வாடகை வீதத்திலும் வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டும் குத்தகை கொடுக்கும்படி குத்தகை எடுப்பவர் குத்தகை விடுபவருக்கு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறபடியாலும், குத்தகை விடுபவர் இதில் பின்னால் கண்டுள்ள விதமாக மேற்படி சொத்தினை குத்தகை வழங்க ஒப்புக் கொண்டிருக்கிறபடியாலும்,

*(மாவட்ட ஆட்சியாளர் ஆண்டு மாதம் தேதியுள்ள எண் ஆணை மூலமாக இதனுடன் சேர்க்கப்பட்டுள்ள இரண்டாவது அட்டவணையில் கண்டுள்ள தனி நிபந்தனைகளின்பேரிலும் அவைகளுக்குட்பட்டும் அச்சொத்தினைக் குத்தகை விடுவதற்கு ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்),

அச்சொத்தினை குத்தகையைப் பற்றி, அதற்குச் சம்பந்தப்பட்ட விதிகளின் நிபந்தனைகளுக்கிணங்கக் கிரமமான அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறபடியாலும்,

இப்போது இந்த உடன்படிக்கைப் பத்திரத்தின் வரையறை என்னவென்றால் :—

1. இதனால் ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகையையும், குத்தகை எடுப்பவருடையவையென்று இதில் கண்டுள்ள உடன்படிக்கைகளையும் கருதி, குத்தகை விடுபவர், சாலைப் பக்கத்தின்/தெரு ஓரத்தின் பாகமாயிருப்பதும், இதனுடன் சேர்த்துள்ள அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதுமான நிலத் துண்டு எல்லாவற்றையும், 19 ஆண்டு மாதம் தேதி முதல் ஆண்டுக் காலத்துக்கு குத்தகை எடுப்பவருக்கு உரிமை மாற்றிக் கொடுக்கிறார்; அதற்காக, கழிவுத் தொகைகள் எல்லாம் நீங்கலாக, ஒவ்வோர் ஆண்டுக்காகவும் ரூபாய் வாடகை முன்னதாகச் செலுத்தப்படும்; 19 ஆண்டு மாதம் தேதியன்று அவ்வாறு முதல் தடவையாகச் செலுத்தப்பட வேண்டும்.

---

* அவசியமானால் வைத்துக்கொள்ளவும்.

2. குத்தகை எடுப்பவர் குத்தகை விடுபவரோடு அடியிற் கண்டபடி உடன்படிக்கை செய்துகொள்கிறார் :—

(அ) ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகையை, ஒவ்வோர் ஆண்டிலும் மாதம் முதல் தேதியன்றாவது அதற்கு முன்பாவது முன்னதாகவும் மேற்சொன்ன விதமாகவும் செலுத்த வேண்டும்.

(ஆ) (மைய அரசினரின் அல்லது தமிழ்நாடு அரசினரின் சார்பில் மாவட்ட ஆட்சியாளரால் அந்த நிலத் துண்டு அல்லது பாகத்தின் மீது அநத முறைமையில் அவ்வப்போது விதிக்கப்படக் கூடிய ரூபாய் மனை வரி அல்லது வேறு ஏதேனும் தொகை உட்பட) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலம் சம்பந்தமாக இப்போதும் இனிமேலும் செலுத்தப்படத்தக்க வரிகள், கட்டணங்கள், தீர்வைகள், செலவு எல்லா வற்றையும் ஏற்றுக் கொண்டு செலுத்தித் தீர்க்க வேண்டும்.

(இ) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தை நல்ல நிலைமையில் வைத்திருக்க வேண்டும்.

(ஈ) குத்தகை விடுபவருடைய அல்லது அதனிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்ற அலுவலர்களுடைய எழுத்து மூலமான இசைவை முன்ன தாகப் பெற்றுக் கொள்ளாமல், எச்சநதர்ப்பத்திலும், உரிமை மாற்றக் கொடுக்கப்பட்ட நிலத்தில், எவையேனும் மாறுதல்களைச் செய்யவுங் கூடாது, அதனுடன் எவற்றையேனும் சேர்க்கவுங் கூடாது, அவ்வாறு செய்யவோ சேர்க்கவோ அனுமதி கொடுக்கவுங் கூடாது; ஆனால் எப்போதும், எவையேனும் மாறுதல்கள் செய்வதற்கு, குத்தகை விடுபவராவது அதனிடமிருந்து முறைப் படி அதிகாரம் பெற்ற அலுவலர்களாவது குத்தகை எடுப்பவருக்கு அனுமதி கொடுத்திருந்தால், குத்தகை எடுப்பவர் அதற்காக ஈடு எதுவும் பெற உரிமை உள்ளவர் ஆக மாட்டார்.

(உ) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட வளவில் வேலையாட்களுடனோ அவர்கள் இல்லாமலோ நுழைந்து அதன் நிலைமையைப் பார்வையிட ஒரு நாள் முன்னதாக அறிக்கை கொடுத்துவிட்டு, நியாயமான எல்லாக் காலங் களிலும் குத்தகை விடுபவருக்கும் அதனிடமிருந்து அதிகாரம் பெற்ற அலுவலர் களுக்கும் அல்லது முகவர்களுக்கும் அனுமதி கொடுக்க வேண்டும்.

(ஊ) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலம் எக் காரியங்களுக்காகக் குத்தகைக்குவிடப்பட்டதோ அவைகளுக்காக மாத்திரமே அதைப் பயன் படுத்த வேண்டும்.

(எ) குத்தகை விடுபவருடைய அல்லது அதனிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள அலுவலர்களுடைய எழுத்து மூலமான இசைவை முதலில் பெற்றுக் கொள்ளாமல், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை வேறொருவருக்கு உரிமைப்படுத்தவுங் கூடாது, கீழ்க் குடிக் கூலிக்கு விடவுங் கூடாது. அதன் சுவாதீனத்தை விடவுங் கூடாது.

(ஏ) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தை, இதில் கண்டுள்ள உடன்படிக்கைகளின்படி நல்ல நிலைமையில் கொடுத்துவிட வேண்டும்.

3. குத்தகை விடுபவர் குத்தகை எடுப்பவருடன் உடன்படிக்கை செய்து கொள்வது என்னவென்றால்,—குத்தகை எடுப்பவர் இதனால் ஒதுக்கப்பட்ட வாடகையைக் கொடுத்துக்கொண்டு, அவருடையனவென்று இதில் கண்டுள்ள பற்பல உடன்படிக்கைகளையும் நிபந்தனைகளையும் கடைப்பிடித்துச் செய்து வருவதன் பேரில், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தை, மேற்படி காலஅளவிலே, குத்தகை விடுபவரின் அல்லது குத்தகை விடுபவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப்பாகச் சரியாய் உரிமை கொண்டாடும் ஒருவரின் குறுக்கீடு இல்லாமல், அமைதியாக வைத்திருந்து அனுபவிக்க வேண்டும்.

4. உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தின் மீது எழுப்பப்பட்ட ஏதேனும் கட்டுக் கோப்பினை அகற்றுவது, பொதுநலத்தை முன்னிட்டு அவசியமென, குத்தகை விடுபவராவது மாவட்ட ஆட்சியாளராவது கருதினால், குத்தகை எடுப்பவருக்கு ஈடு எதுவும் கொடுக்காமலேயே, குத்தகைக் கால அளவுக்குள் எப்போதேனும், இக் குத்தகை இறுதி செய்யப்படுவதற்குட் பட்டதாகும்.

5. இதனால் ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகை அல்லது அதன் ஏதேனும் பாகம், முறைப்படி கேட்கப்பட்டாலும் படாவிட்டாலும், இதில் கண்டுள்ள நிபந்தனையின்படி செலுத்தப்படாவிட்டால், அல்லது குத்தகை எடுப்பவருடையதென்று இதில் கண்டுள்ள ஏதேனும் உடன்படிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் அல்லது கடைப்பிடிக்கப்படாவிட்டால், அல்லது குத்தகை எடுப்பவராவது இதனால் உண்டாக்கப்படும் வரையறை அச்சமயம் வேறு யாரிடம் உரித்தாக்கப்படுகிறதோ அவராவது நொடித்துப் போய்விட்டால், அப்போது அத்தகைய விஷயங்களில் எதிலேனும் குத்தகை விடுபவராகிலும் அதனிடமிருந்து அதிகாரம் பெற்ற அலுவலர்களாகிலும் அதற்குப் பிறகு எப்போதேனும், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தில் அல்லது முழுவதன் பெயரில் அதன் ஏதேனும் பாகத்தில் மீண்டும் நுழைவது சட்ட

சம்மதமாகும் ; அதன் பேரில் இந்த உரிமை மாற்றம் முழுவதும் இறுதியாகி விடும் ; ஆனால் குத்தகை எடுப்பவருடையவையென்று இதில் கண்டுள்ள உடன்படிக்கைகளில் ஏதேனும் மீறப்பட்டது சம்பந்தமாக, குத்தகை விடுப வருடைய செயலுரிமைக்கு அதனால் பாதகம் உண்டாக மாட்டாது.

6. இரு தரப்பினர்களில் ஒருவர் இந்த உரிமை மாற்றத்தை இறுதி செய்ய விரும்பி, அவ்விருப்பத்தைப் பற்றி மற்ற தரப்பினருக்கு மூன்று காலண்டர் மாதங்களுக்கு முன்னதாக எழுத்து மூலமான அறிக்கை கொடுத்தால், அப்போது, மூன்று காலண்டர் மாதங்கள் முடிந்தவுடனே, இந்த உரிமை மாற்றமும் இதில் கண்டுள்ள ஒவ்வொன்றும் அற்றுப்போய் இல்லாததாகி விடும். ஆனால், ஏதேனும் முன்னதான கோருதலுரிமை அல்லது உடன் படிக்கை மீறல் சம்பந்தமாக, இரு தரப்பினரில் ஒருவருக்கு மற்றவர் மீதுள்ள பரிகாரங்களுக்கு இதனால் பாதகம் உண்டாக மாட்டாது.

7. குத்தகைவிடப்பட்டிருக்கிற கால அளவு கழிந்துபோவதன் பேரில், குத்தகை விடுபவர் இக் குத்தகையைப் புதுப்பித்தாலன்றி, அல்லது 4-ஆவது பகுதியின்படி இக் குத்தகை இறுதி செய்யப்பட்டால், குத்தகை எடுப்பவர், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ள நிலத்தின் மீதிருக்கிற கட்டுக்கோப்புகள் எல்லாவற்றையும் அகற்றிவிடக் கடமைப்பட்டவராவார். குத்தகை எடுப்பவர் அந்தக் கட்டுக்கோப்பினை குத்தகை காலாவதியான தேதியிலிருந்து மூன்று மாதம் அல்லது 4-ஆவது பகுதியின்படிக்கான அறிக்கை கிடைத்த தேதி யிலிருந்து மூன்று மாதம் ஆகிய இவைகளில் எது முன்னதாக உள்ளதோ அதற்குள் அகற்றத் தவறினால், குத்தகை விடுபவர், குத்தகை எடுப்பவருக்குத் தெரிவிக்காமலேயே அதை அகற்றுவதற்குப் பிடிக்கும் செலவுகளுக்குத் தம்மை இதனால் உட்படுத்திக் கொள்கிறார் : மேலும் குத்தகை எடுப்பவர், அவ்வாறு அகற்றப்பட்ட கட்டுக்கோப்புக்காக அல்லது அவ்வாறு அகற்றியதனால் உண்டான ஏதேனும் சேதம் அல்லது இழப்புக்காக ஈடு எதையும் கேட்கக் கூடாது.

மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை.

பதிவு மாவட்டத்திலே பதிவுக்

கிளை மாவட்டத்தில் கிராமத்தில்/பட்டணத்தில் இருப்பதும்,

வடக்கில் , தெற்கில் ,

மேற்கில் கிழக்கில் ஆகிய இந்த நாற்

பாங்கு எல்லைக்குட்பட்டிருப்பதும், நில அளவை எண்ணும்

கதவிலக்கமும் கொண்டது, அளக்கும்போது மொத்தத்
தில் ஏறத்தாழ உள்ளதுமான நிலத் துண்டு அல்லது
பாகம், வளவு எல்லாம்.

மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை.

மாவட்ட ஆட்சியாளரால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள்.
ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால்
என்பவர் முன்னிலையில் கையெழுத்திடபபட்டது.

ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பொது முத்திரை
என்பவர் முன்னிலையில் இதில் போடப்பட்டது.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால் என்பவர்
முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரை போட்டு ஒப்புவிக்கப்பட்டது.

இதற்குச் சான்ருக, மேலே எழுதப்பட்ட ஆண்டிலும் நாளிலும் குத்தகை விடுபவராகிய ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் முத்திரைச் சின்னம் இதில் போடப்பட்டது; குததகை எடுப்பவர் தமது கையெழுத்தை இதில் போட்டிருக்கிருர்.

(1962 பெப்ரவரி 1-ஆம் தேதியுள்ள 261-ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணை.)

70. பொதுச் சாலைகள், காட்சிக் கடைகள், திருவிழாக்கள் ஆகியவற்றின் வகைப்பாடு.—(1) ஊராட்சி ஒன்றிய மன்றத்தை அல்லது ஊராட்சியைச் சார்ந்துள்ள ஓர் ஊராட்சிப் பரப்பில் பொதுச் சாலைகள், காட்சிக் கடைகள், திருவிழாக்கள் ஆகியவற்றின் வகைப் பாட்டினை—

(i) பொதுச் சாலைகள் விஷயத்தில் மாவட்ட ஆட்சியாளருடனும் (நெடுஞ்சாலைகள்) தலைமைப் பொறியாளருடனும்.

(ii) காட்சிக் கடைகள், திருவிழாக்கள் விஷயத்தில் பொதுசுகாதாரத் துறை இயக்குநருடனும் கலந்தாலோசித்து, இணை வளர்ச்சி ஆணையாளர் உத்தரவிட வேண்டும்.

(2) 1-ஆவது விதியின்படி வகைப்பாட்டினை உத்தரவிடுவதற்கு முன், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றம் ஊராட்சியும் தங்கள் கருத்தைத் தெரிவிக்க அவைகளுக்கு நியாயமான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

(3) 1-ஆவது விதியின்படி, துணை வளர்ச்சி ஆணையாளர் உத்தரவிட்ட ஏதேனும் வகைப்பாட்டினை, சம்பந்தப்பட்ட மாவட்ட வளர்ச்சி மன்றத்துடன் கலந்தாலோசித்துத் திருத்தியமைக்க அரசினருக்கு அதிகாரமுண்டு.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1961 நவம்பர் 28 ஆம் தேதியுள்ள 3162 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பலவகை அரசாணை.)

(105) ஊராட்சி ஒன்றிய சாலைகள் என்றும் ஊராட்சிச் சாலைகள் என்றும் வகைப்படுத்துதல்.—கட்டுப்பாடு பராமரிப்பு ஆகியவற்றின் காரியங்களுக்காக, இந்த மாநிலத்திலுள்ள சாலைகள் அரசினரால் அடியிற்கண்டவாறு வகைப் படுத்தப்படுகின்றன :—

(i) தேசிய நெடுஞ்சாலைகள் ;

(ii) மாநில நெடுஞ்சாலைகள் ;

(iii) பெரிய மாவட்ட சாலைகள் ;

(iv) பிற மாவட்ட சாலைகள் ;

(v) கிராமச் சாலைகள்.

தேசிய நெடுஞ்சாலைகளைப் பராமரித்துச் சீர்திருத்துவதற்கு ஒன்றிய அரசினர் பொறுப்பாளிகள் ஆவார்கள்; மாநில நெடுஞ்சாலைகளையும் பெரிய மாவட்டச் சாலைகளையும் பராமரித்துச் சீர்திருத்துவதற்கு மாநில அரசினர் பொறுப் பாளிகள் ஆவார்கள்.

2. 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்டக் கழகங்கள் சட்டத்தில் கண்ட 60 (1) பிரிவின்படி, மாவட்டத்திலே "மாவட்ட சாலைகள்" என வகைப்படுத்தப்படும் எல்லாப் பொதுச் சாலைகளும், மாவட்டத்திலே ஊராட்சி ஏற்பட்டிராத பரப்புகளில் உள்ள எல்லாப் பொதுச் சாலைகளும் மாவட்டக் கழகத்தினிடம் உரித்தாக்கப்பட்டுள்ளன. ஆகையால், மேலே 1 ஆவது பத்தியில் குறிப்பிட்டுள்ள பிற மாவட்ட சாலைகளிலும் கிராமச் சாலைகளிலும் ஊராட்சிப் பரப்புகளில் மாவட்டச் சாலைகளென வகைப்படுத்தப்பட்டிருப் பவைகளும், மாவட்டத்திலே ஊராட்சி ஏற்பட்டிராத பரப்புகளில் உள்ள எல்லாச் சாலைகளும் மாவட்டக் கழகத்தின் பொறுப்பிலிருக்கின்றன. மற்றெல்லாப் பொதுச் சாலைகளும் (அதாவது, மாவட்டச் சாலைகளும், தேசிய நெடுஞ்சாலைகளும், மாநில நெடுஞ்சாலைகளும், பெரிய மாவட்ட சாலைகளும் அல்லாத மற்ற சாலைகள்) ஊராட்சிப் பரப்புகளில் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளின் பொறுப்பிலிருக்கின்றன.

3. 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டத்தில் கண்ட 5 (2) (இ) பிரிவின்படி மாவட்ட வளர்ச்சி மன்றத்தினல் செய்யப்பட வேண்டிய அலுவல்களின் ஒன்று என்னவென்ருல் (தேசிய நெடுஞ் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், பெரிய மாவட்ட சாலைகள் என அரசினரால் வகைப்படுத்தப்பட்ட சாலைகள் அல்லாத மற்ற) பொதுச் சாலைகளை "ஊராட்சி ஒன்றிய சாலைகள்", "ஊராட்சி சாலைகள்" என வகைப்படுத்தும் பிரச்சினை பற்றி அரசினருக்கு ஆலோசனை கூறுவதாகும். 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 77 (1) பிரிவின்படி, "ஊராட்சி ஒன்றிய சாலைகள்" என வகைப்படுத்தப்படுகிற பொதுச்சாலைகள் எல்லாம் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத்தினிடம் உரித்தாக்கப் பட்டுள்ளன; 65 ஆவது பிரிவின்படி, ஊராட்சி ஒன்றியச் சாலைகள் எல்லா வற்றையும் கட்டுவது செப்பனிடுவது, பராமரிப்பது ஆகியவற்றிற்காக நியாயமான ஏற்பாடு செய்வது, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கடமையாகும். 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 76 (1) பிரிவின் படி, ஓர் ஊராட்சிப் புரப்பிலே, தேசிய நெடுஞ்சாலைகள்—மாநில நெடுஞ் சாலைகள்—பெரிய மாவட்ட சாலைகள்—ஊராட்சி ஒன்றிய சாலைகள் என வகைப் படுத்தப்பட்டுள்ளவையல்லாத மற்ற பொதுச்சாலைகள் எல்லாம் சம்பந்தப் பட்ட ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்டுள்ளன; 63 ஆவது பிரிவின்படி, ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்டுள்ள அத்தகைய சாலைகள் எல்லாவற்றையும் கட்டுவது—செப்பனிடுவது—பராமரிப்பது ஆகியவற்றிற்காக நியாயமான ஏற்பாடு செய்வது அதன் கடமையாகும்.

4. சாலைகளை வெவ்வேறு வகைகளாக வகைப்படுத்தி, அவற்றைப் பராமரித்துக் கட்டுப்படுத்தும் பொறுப்பை வெவ்வேறு அதிகாரக் கழகங் களிடம் விட்டு வைக்கும் திட்டத்தின் அடிப்படையிலுள்ள நோக்கம் என்ன வென்ருல் (ஒன்றிய மாநில) அரசினர், அனைத்திந்திய மாநிலப் பரப்பு முக்கி யத்துவம் வாய்ந்த சாலைகள் எல்லாவற்றையும் போதுமான அளவுக்கு உயர் தரமாகப் பராமரித்துவர வேண்டுமென்பதேயாகும். அதோடுகூட, மாநில அரசினர், மாவட்டங்களிடையே மட்டும் முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளில் எத்தனை சாலைகளை பொருத்தமான தரத்தில் திறமையாகப் பராமரித்துவர முடியுமோ அத்தனை சாலைகளை, அதற்காகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் நிதிகளைக் கொண்டு பிராமரித்துவர வேண்டும். இது படிப்படியாக அதிகமாகிக் கொண்டு போகிற கூருயிருக்குமென எதிர்பார்க்கலாம்; அரசினரால் பராமரித்து வரப்படும் பெரிய மாவட்டச் சாலைகள் என வகைப்படுத்தப்படும் சாலைகளுடன், ஐந்தாண்டு இடைக்காலங்களில், புதிய சாலைகளைச் சேர்க்கலாம். இதிலிருந்து ஏற்படுவது என்னவென்ருல், கிராமப் பரப்புகளில் அந்தந்தக் காலத்தில்

அவ்வாறு பராமரித்துவர முடியாத சாலைகள் எல்லாம், ஊராட்சி ஒன்றியங்களின் அல்லது ஊராட்சிகளின் பொறுப்பில் இருக்க வேண்டும் என்பதுதான்.

5. எனவே, குறிப்பிட்ட ஒரு காலத்திலே, மொத்தத்தில் இத்தனை மைல் நீளமுள்ள சாலைகளை ஊராட்சி ஒன்றியமாவது ஊராட்சியாவது பராமரித்துவர வேண்டியதாக ஏற்படும். இவ்விரண்டு நிறுவனங்களின் நிதி வளங்கள் புதிய சட்டத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. கிடைக்கிற நிதி வளங்களையொட்டியே, சில சாலைகளை ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என்றும், மற்றெல்லாச் சாலைகளையும் ஊராட்சி, கிராம/பட்டண சாலைகள் என்றும் வகைப்படுத்த வேண்டுமென்பது வெளிப்படை. வகைப்படுத்தும் காரியங்களுக்காக, குறிப்பிட்ட எந்த நிர்ணய விதியும் அச் சட்டத்தில் சொல்லப் படவில்லையென்றாலும், புதிய சட்டத்தில் 131 ஆவது பிரிவைக் கவனிக்க வேண்டும்; ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பராமரிப்பதற்காகவென்றே, "உள்ளூர் சாலைகள் உதவித் தொகையைப் பற்றி அப்பிரிவில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த உதவித் தொகையானது, அது பதிலமர்த்திடு செய்கிற மாவட்டக் கழகத்துக்குச் செலுத்தப்படத்தக்க பழைய "சாலைச் சுங்க சட்டுத் தொகை" யைவிட (ஒவ்வொரு வட்டாரத்திலும்) அதிகமாயிருக்கும். இந்த உதவித் தொகையைக் கூட, ஐந்தாண்டுக்கொரு முறை நிச்சயித்து, மீட்டாய்வு செய்ய வேண்டும். இந்த ஏற்பாட்டைப் பரிந்துரைத்த உள்ளாட்சி பற்றிய சட்ட மன்றக் குழுவின் நோக்கம் என்னவென்றால், அச்சாலைகளை ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என்று வகைப்படுத்த வேண்டுமென்பதேயாகும்; ஏனென்றால், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் வட்டாரங்களிடையே முக்கியத்துவம் வாய்ந்தவையென ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன; மேலும், அதற்காகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் நிதிகளைக் கொண்டு, பொருத்தமான தரத்தில் அவற்றைப் பராமரித்துவர முடியும்; அதாவது, தலைக்கு 40 காசு வீதம் கணக்கிடப்பட்ட தொகையும் (மாவட்டக் கழக நிருவாகத்தின் முன் அனுபவத்தின் அடிப்படையின் பேரில்) ஊராட்சி ஒன்றிய (பொது) நிதியிலிருந்து கூடுதலாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் எதுவேனும் இந்த அடிப்படையின் பேரில் ஊராட்சி ஒன்றியச் சாலையென்று வகைப்படுத்தப்படாததெல்லாம், புதிய சட்டத்தின்படி அறிக்கையிடப்பட்ட ஊராட்சிக்குள் (அல்லது பேரூராட்சிக்குள்) இருக்கிற அதன் பாகம் சம்பந்தமாக ஊராட்சி/பேரூராட்சி சாலைகள் எனத் தாமாகவே வகைப் படுத்தப்பட்டுவிடும்.

6. * *

7. * *

8. * *

(1960 மார்ச் 8 ஆம் தேதியுள்ள 406 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

சாலைகள் இப்போது இருக்கிறபடி வகைப்படுத்த எத்தனித்ததற்குமுன், மாநிலத்தில் வகைப்படுத்தப்பட்ட சாலைகள் எல்லாம் பின்வரும் வகைகளின் கீழ் வந்தன—

தேசிய நெஞ்சாலைகள் ;

மாநில நெடுஞ்சாலைகள் ;

பெரிய மாவட்ட சாலைகள் ;

பிற மாவட்ட சாலைகள் ;

கிராமச் சாலைகள்.

தேசிய நெடுஞ்சாலைகள் விஷயத்தில், பொறுப்பு ஒன்றிய அரசினிடம் இருக்கிறது. மாநில நெடுஞ்சாலைகளும் பெரிய மாவட்டச் சாலைகளும் மாநில அரசின் பொறுப்பிலிருக்கின்றன ; மற்றெல்லாப் பொதுச் சாலைகளும் மாவட்டக் கழகங்கள் ஊராட்சிகள் ஆகியவற்றின் பொறுப்பிலிருக்கின்றன. இத்தனை மைல் நீளமுள்ள சாலைகள் என்னும் கணக்கில் மாநில அரசினர் ஆண்டுதோறும் சில சாலைகளை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள், இவை பெருந்து வழிகளாகும் ; இனிமேல் இவற்றை மாநில நெடுஞ்சாலைத் துறையினர் பராமரிப்பதற்காக அவ்வாறு எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள் எவ்வளவு மட்டில் அவ்வாறு எடுத்துக் கொண்டு செயலாற்றலாமென்பது முழுவதும் அத்தகைய சாலைகளின் பராமரிப்புக்கு மாநில அரசினர் வசமுள்ள நிதியைப் பொறுத்த தாகும். ஆகையால், மாநில அரசினர் எடுத்துக் கொள்வதை அவசியமாக்கும் அளவுக்கு முக்கியத்துவம் அடைந்திருக்கிற நீளமுள்ள பேருந்து வழிகளை மாநில அரசினர் ஆண்டுதோறும் தொடர்ந்து எடுததுக் கொண்டு பராமரித்து வரும். அதே சமயத்தில் மாநில அரசினர் குறித்த ஒரு தேதியன்று குறித்த இத்தனை மைல் நீளமுள்ள சாலைகளை அல்லது இவைகளில் குறித்த எவையேனும் சாலைகளை எடுத்துக்கொள்வார்களென்று மாநில அரசினர் எவ்வித உத்தரவாதமும் கொடுக்க முடியாது. ஊராட்சி ஒன்றியங்களின் வசமுள்ள நிதிகளைக் கொண்டு சாலைகளைப் பராமரித்துவர அவைகள் மறுத்துவிட்டால் அவைகளை அரசினர் எடுத்துக் கொள்வார்களென்று அந்த ஒன்றியங்களில் சில மேலீடாகத் தவறாக நம்பும்படிச் செய்யப்பட்டிருப்பதனால் மட்டுமே, இச் சாலைகளைப் பராமரிக்கும் பொறுப்பினை மாநில அரசினர் ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசினர் வெளிப்படையாகத் தெளிவாக்க விரும்புவது என்னவென்றால், முன்னாள் மாவட்டக் கழகச் சாலைகளையெல்லாம், ஊராட்சி ஒன்றியமாவது ஊராட்சியாவது பராமரித்து வர வேண்டும் ; அத்தகைய ஏதேனும் சாலையை

மாநில அரசினர் எடுத்துக் கொள்வது சம்பந்தமாக முன்னதாய் எவ்விதப் பொறுப்பும் மேற்கொள்வதற்கில்லை.

அவ்வாறு கிடைக்கிற நிதிகளைக் கொண்டு திறமையாகப் பராமரித்து வரக்கூடிய கண்டிப்பான அத்தனை மைல் நீளமுள்ள சாலைகளைப் பராமரித்து வருவதற்கான பொறுப்பை ஊராட்சி ஒன்றியம் தானே மேற்கொள்ள வேண்டும். இதற்கு மேற்பட்டு எத்தனை மைல் சாலைகள் இருந்தாலும் அதை ஊராட்சிச் சாலை என்று தான் வகைப்படுத்த வேண்டும்; இந்த சாலைகளை எந்தத் தரத்தில் பராமரித்து வருவது ஊராட்சிகளால் முடியுமோ அந்தத் தரத்தில் பராமரித்து வரும் பொறுப்பைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி மேற்கொள்ளும்படிச் செய்ய வேண்டும். ஆகையால், இன்னும் அதிகமான அல்லது குறைவான மைல் நீளமுள்ள சாலைகளை ஒன்றியச் சாலைகளாக வகைப்படுத்த வேண்டுமா என்னும் பிரச்சினை, ஊராட்சி ஒன்றியம் மட்டுமே தீர்க்க வேண்டிய விஷயமாகும் என்பது தெளிவு. இத்தனை மைல் நீளமுள்ள சாலைகளைத் தனது சொந்தப் பொறுப்பில் எடுத்துக் கொள்வதென்று ஊராட்சி ஒன்றியம் தீர்மானித்து விட்ட பிறகு, மாநில நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறையின் எல்லைக்குள் வராத எஞ்சிய மைல் நீளமுள்ள சாலைகள் ஊராட்சிகளின் பொறுப்புக்குப் போய்விடும்.

* * * *

(1961 பெப்ரவரி 17 ஆம் தேதியுள்ள 488 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணை.)

71. மரங்களைக் கள்ளத்தனமாக வெட்டுவது.—சாலை ஓரங்களில் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திடம் உரித்தாக்கப்பட்டுள்ள நிலத்தில் உள்ள மரங்கள் கள்ளத்தனமாக வெட்டப்படும் ஒவ்வொரு தடவையும் அதைப் பற்றிக் கிராமப் பெரிய தனக்காரர், சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளர் மூலமாகத் தாசில்தாரருக்கு அனுப்ப வேண்டும்; அந்த அறிக்கையின்படி ஒன்றை ஆணையாளருக்கு அனுப்பவும் வேண்டும். அதன் பேரில் ஆணையாளர் அந்த அறிக்கையின் தேதியிலிருந்து இரண்டு வாரத்துக்குள், கள்ளத்தனமாக வெட்டுவதற்குக் காரணமாக இருந்த ஆள் அல்லது ஆட்களின்பேரில் எடுத்துக் கொள்ளப்பட்ட அல்லது எடுக்கக் கருதியிருக்கிற நடவடிக்கையைப் பற்றித் தாசில்தாருக்குத் தெரிவிக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட காலத்துக்குள் ஆணையாளரிடமிருந்து தாசில்தாருக்குச் செய்தி ஒன்றும் வராவிட்டால், அவர், ஊராட்சி ஒன்றிய மன்றம் இது விஷயமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வில்லையெனக் கண்டறிந்த பிறகு, தாமே அக் குற்றத்தைப் பற்றி சம்பந்தப் பட்ட நீதித் துறைக் குற்றவியல் நீதிபதிக்கு முன் முறையீடு செய்ய வேண்டும்.

(1962 பெப்ரவரி 1 ஆம் தேதியுள்ள 266 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணை.)

72. **பாசன அலுவல்களை ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு மாற்றுவது.**—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 85 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் குறிப்பிட்டிருக்கிற கிராமப் பாசனப் பணிகள் சம்பந்தமான அலுவல்களை எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு மாற்றலாமோ அந்த நிபந்தனைகள் அடியிற் கண்டவையாகும்:—

(1) ஏதேனும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு மாற்றுவதென்பதை வருவாய்த் துறையினரின் பொறுப்பிலிருப்பவையும், அந்த ஊராட்சி ஒன்றியத்துக்குள் இருப்பவையுமான சிறு பாசன ஆதாரங்களுக்கு மட்டுமே என வரையறுத்துக் கொள்ள வேண்டும். அரசினர் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட குளங்கள், ஓர் ஆற்றுப் பாசன திட்டத்தோடு தொடர்பற்ற வைகளாயிருந்தபோதிலும், அவைகளை மாற்றக் கூடாது.

(2) ஊராட்சி ஒன்றிய மன்றம் ஏதேனும் கிராமப் பாசனப் பணி சம்பந்தமான அலுவல்கள் தங்களுக்கு மாற்றப்படுகிற தேதி முதற்கொண்டு அவைகளைச் செய்வதற்கு தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்; அவசியமானல், தங்களுடைய சொந்தப் பணியாளர்களை அமர்த்திக் கொள்ள வேண்டும். அந்த அலுவல்களைச் செய்கையில், அரசினரால் அமர்த்தப் பட்டுள்ள எவர்களேனும் நீர்க் கட்டிகள் மீது கூட ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குப் பொதுக் கட்டுப்பாட்டு அதிகாரம் இருந்துவரும். ஆயினும், நீர்க் கட்டிகளை அமர்த்துதல், தண்டித்தல், நீக்கிவிடுதல், அவர்களுக்கு சம்பளம் அல்லது பிறபடிகள் கொடுத்தல் ஆகியவற்றிற்கான அதிகாரம் வருவாய்த் துறையினரிடமே இருந்துவரும்.

(3) கிராமத்திலே, பாசனப் பணியின் கீழ் உள்ள நிலங்களுக்கு நீர் பாய்ச்ச வேண்டிய விதத்தையும் வரிசைக் கிரமத்தையும், நீர் வழங்கீடு தொடங்குவதற்குரிய காலத்தையும் நீர் வழங்கீடு தொடர்ந்து நடைபெறுதற்குரிய கால அளவையும், வழங்குவதற்குரிய நீரின் மொத்த அளவையும் முறைப்படுத்த ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அதிகாரமுண்டு. ஆனல், ஊராட்சி ஒன்றிய மன்றம் முறைப்படுத்துவதற்கான தங்கள் அதிகாரத்தை, சலுகையாக அல்லது விகிதாசாரமாக வழங்கப் பெறுவதற்குள்ள நிலைபெறுன அல்லது மாமூலான ஏதேனும் உரிமைக்குத் தடை ஏற்படாதவாறு செலுத்த வேண்டும். பாசன முறைகளை ஒழுங்குபடுத்துவது பற்றிய எல்லா விவரங்களிலும் தீர்ப்பெடுக்க, ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒரு மொத்தமாகப்

பொறுப்பாளிகள் ஆவார்கள். மதகுப் பலகைகளை உள்ளபடி இயக்குதலுக்குக் கிராமப் பெரியதனக்காரர் மட்டும் பொறுப்பு வகிக்க வேண்டும்; ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பொதுக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட அவர் அவ்வாறு பொறுப்பு வகிக்க வேண்டும்.

(4) ஊராட்சி ஒன்றிய மன்றம் பாசனமுறைகளை ஒழுங்குபடுத்த, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 85 (1) பிரிவின்படி தங்களுக்குள்ள கடமைகளையும் அலுவல்களையும் திறமையாகச் செய்வதற்காக அச் சட்டத்தில் கண்ட 53 (3) பிரிவின்படி தங்களால் அமர்த்தப்பட்ட ஏதேனும் குழுவிற்கு அதிகாரம் கொடுக்கக் கூடாது.

(5) ஊராட்சி ஒன்றிய மன்றம் பாசனப் பணியின் மதகுகளில் மாறுதல் எதுவும் செய்யவும் கூடாது, அப் பணி சம்பந்தமாகக் குளம் புதுப்பிக்கும் திட்டக் குறிப்புகளில் கண்டுள்ள தரத்திலும் விவரக் குறிப்பீட்டிலும் தலையிடவுங் கூடாது, சிற்றணைகளை அல்லது கலிங்கல்களை உயர்த்தவுங் கூடாது, தாழ்த்தவுங் கூடாது, அகலப்படுத்தவுங் கூடாது, வாய்க்கால்கள் எவையேனு மிருந்தால் அவைகளின் முகப்புக் கட்டு வேலைகளில் முக்கியமான மாறுதல்கள் எவற்றையும் செய்யவும் கூடாது, தலையிடவுங் கூடாது.

(6) மழைக்காலத்தில் பாசனப் பணியின் கரையைப் பற்றிக் கவனம் செலுத்திவருவது, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பொறுப்பாகும்.

(7) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தவறு அல்லது பிழைபாடு காரணமாக பாசனப் பணியின் பாகமாயிருக்கிற அல்லது அதற்குச் சம்பந்தப் பட்ட மதகுகள், சிற்றணைகள், கலிங்கல்கள், வாய்க்கால்கள், முகப்புப் பணிகள், கரை அல்லது மற்றப் பணிகளுக்கு நேரிடும் ஏதேனும் சேதத்திற்கு அக் குழு ஈடு செய்ய வேண்டும்; ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தவறு அல்லது பிழைபாடு காரணமாகக் குறிப்பிட்ட ஏதேனும் சேதம் ஏற்பட்டதா என்பது பற்றி மாவட்ட ஆட்சியாளரின் தீர்ப்பு முடிவானதாகும்.

(8) பாசனப் பணிக் கரையின் அடி முனைகளில் ஒன்றிலிருந்து முப்பது அடிக்குள் எப்போதேனும் எக் காரியத்துக்காகவும் ஊராட்சி ஒன்றிய மன்றம் மண்ணைத் தோண்டி எடுக்கக் கூடாது.

(9) ஒரு கிராம அல்லது பட்டணப் பாசனப் பணிக்குச் சம்பந்தப் பட்டதும் ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு மாற்றப்பட்டதுமான ஏதேனும் அலுவலை, அரசினராவது 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள்

சட்டத்தில் கண்ட 157 ஆவது பிரிவின்படி அதிகாரங்கள் ஒப்படைக்கப் பெற்றிருக்கக்கூடிய அதிகாரியாவது, காரணம் எதுவும் சொல்லாமலேயே எப்போதேனும் தாங்களே மீண்டும் மேற்கொள்ளலாம்.

(10) ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு மாற்றப்பட்ட சகல பாசனப் பணிகளின் பராமரிப்பு, ஊராட்சி ஒன்றியப் பொறியாளரின் (சந்தர்ப்பத்துக் கேற்ப வட்டாரப் பொறியாளரின் அல்லது மேற்பார்வையாளரின்) கட்டுப் பாட்டிற்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டிருக்க வேண்டும்; மேலும் அது, மாவட்ட ஆட்சியாளரின் ஆய்வுக்குட்பட்டிருக்க வேண்டும்.

(1960 அக்டோபர் 8 ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1961 ஆகஸ்ட் 4 ஆம் தேதியுள்ள 2185 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1961 டிசம்பர் 26 ஆம் தேதியுள்ள 3374 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1963 ஏப்ரல் 30 ஆம் தேதியுள்ள 754 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

துணை விதிகள்.

1. **சிறு பாசனப் பணிகளின் மாற்றம்.**—200-க்கு மேற்படாத ஏக்கராக் களுக்கு நீர் பாய்ச்சுபவையும், வருவாய்த் துறையினரின் கட்டுப்பாட்டுக்குட் பட்டவையுமான எந்த சிறு பாசனப் பணிகள் ஆற்றுப் பாசனத் திட்டத்தின் பாகமாயிராமல் தனிக் காரணங்களுக்காக அரசினர் பொறியியல் பணித் துறை யினரின் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டிருக்கின்றனவோ அவையல்லாத மற்றப் பணிகள் எல்லாம், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழுவின் ஒப்பு தலுக்குட்பட்டு அந்த ஊராட்சி ஒன்றியக் குழுவினிடம் உரித்தாக்கப்பட வேண்டும். அப் பணிகளில் அரசினரின் மீன்பிடி உரிமைகளிலிருந்து கிடைக்கிற வருமானம் முழுவதும் ஊராட்சி ஒன்றிய (பொது நிதிக்கு) வரவு வைக்கப்பட வேண்டும்.

2. **சிறு பாசன ஆதாரங்களின் பட்டியல்.**—ஊராட்சி ஒன்றியங்களின் ஒன்றியப் பொறியாளர்களும், நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை சார்ந்த உதவிப் பொறியாளர்களும், தங்கள் தங்கள் அதிகார வரம்புக்குட் பட்ட சிறுபாசன ஆதாரங்களின் முழுப் பட்டியல் ஒன்றை வைத்துவர வேண்டும். அது இவ் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள I-ஆம் படிவத்தின்

பிரகாரம் இருக்கவேண்டும். ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட புதிய ஆதாரங்களை அப் பட்டியலில் சேர்ப்பது மூலமாக, அதை நாளது தேதி வரையில் சரியாயிருக்கும்படிச் செய்ய வேண்டும். ஓர் ஆதாரம் ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கட்டுப்பாட்டிலிருந்து போய்விட்டால், அச்செய்தியை பட்டியலின் குறிப்புரைப் பத்தியில் எழுதி வைக்க வேண்டும். இவ் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள II- ஆம் படிவப் பிரகாரம் இருக்கிற சிறு பாசன ஆதாரங்களின் நிலைப் பேரேட்டுக்கு அப் பட்டியல் ஓர் அட்டவணையாகப் பயன்படும்.

3. **சிறு பாசன ஆதாரங்களின் நிலைப் பேரேடு.**—பணம் செலவிடப் பெற்றிருக்கிற ஆதாரம் ஒவ்வொன்றும், ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவுத் தொகை, அந்த ஆதாரத்துக்குச் சம்பந்தப்பட்ட பணிகளைப் பராமரிப்பது பற்றிய மற்ற விவரங்கள் ஆகியவைகளைக் காட்டும் ஆதாரங்களின் நிலைப் பேரேடு ஒன்றை, ஊராட்சி ஒன்றிய மன்றம் இவ் விதிகளுடன் இணைக்கப் பட்டுள்ள II ஆம் படிவப் பிரகாரம் வைத்துவர வேண்டும் அந்த ஆதாரத்தின் செப்பனிடுகளுக்காக மதிப்பீடுகளைத் தயாரிக்கிற மேற்பார்வையாளராவது, ஒன்றியப் பொறியாளராவது, மேற்படி நிலைப் பேரேட்டில் எழுதப்பட்டுள்ள விவரங்களையொட்டி, முன்பு செய்யப்பட்ட செப்பனிடுகளின் தன்மை, அதற்காகச் செய்யப்பட்ட செலவு ஆகியவற்றை அளவுக் குறிப்பு அறிக்கையில் திட்டவட்டமாகக் காட்ட வேண்டும். மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டவுடன், பேரேட்டின் 1, 2, 3 பத்திகளை நிரப்ப வேண்டும். ஒவ்வோர் ஆண்டிலும் உள்ளபடி செலவிடப்பட்ட தொகை பற்றிய விவரங்கள் கிடைத்த பிறகு, அந்த ஆண்டில் பிற பத்திகளை நிரப்ப வேண்டும்.

4. **பணிகளைப் பராமரித்து வருவதும் செப்பனிடுவதும்.**—(1858 ஆம் ஆண்டின் I ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1858 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கட்டாய உழைப்புச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளுக்கும் (1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 85 (2) பிரிவின் விலக்கு நிபந்தனைக்கும் உட்பட்டு, ஊராட்சி ஒன்றியக் குழுவினர், தங்கள் கட்டுப் பாட்டுக்குட்பட்ட சிறு பாசன ஆதாரங்கள் எல்லாவற்றையும், நியாயமான அளவுக்குப் பயனுறுதியுடைய நிலையில் வைத்திருக்கக் கடமைப்பட்டவர் களாவார்கள். இதற்காக வேண்டியிருப்பவையும் குடிமராமத்துப் பணிகளென்று செய்யப்படாதவையுமான எல்லாப் பணிகளையும் ஊராட்சி ஒன்றிய மன்றம் நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை அலுவலர்களின் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டுக்குட்பட்டுச் செய்து முடிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் சிறுபாசனப் பணிகளைப் பராமரித்து

வருவதென்பது, முக்கியமாகக் கல் கட்டிட வேலையையும் மண் கட்டிட வேலையையும் பழுதுபார்ப்பதும் சேதமடைந்த கட்டுவேலைகளைப் புதுப்பிப்பது மேயாகும். ஊராட்சி ஒன்றிய மன்றம் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) கோட்டப் பொறியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொண்டாலன்றி மற்றப்படி, பாசனப் பணியின் மதகுகளில் மாறுதல் எதையும் செய்யவும் கூடாது, அப் பணிகள் சம்பந்தமாகக் குளம் புதுப்பிக்கும் திட்டக் குறிப்புகளில் கண்டுள்ள வேலை முறை அளவுக்குறிப்புகள் விஷயத்தில் தலையிடவும் கூடாது, வாய்க்கால்களின் சிற்றணைகளை அல்லது கலிங்கல்களை உயர்த்தவும் கூடாது, தாழ்த்தவும் கூடாது, அகலப்படுத்தவும் கூடாது, அல்லது முகப்புக் கட்டு வேலைகளில் முக்கியமான எந்த மாறுதல்களையும் செய்யவும் கூடாது, அவைகள் விஷயத்தில் தலையிடவும் கூடாது, ஆனால் குறிப்பிட்ட குளமானது அதே அடிப்படையைக் கொண்ட குளங்களின் தொடரில் ஒன்றாயிருக்கக் கூடாது. மற்றெல்லாவற்றிலும் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) மேற்பார்வைப் பொறியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். அத்தகைய செப்பனீடுகள் அவசிய மெனக் கருதப்படுகிற எல்லா விஷயங்களிலும், புதிய பணிகள் பற்றிய முழு விளக்கத்தையும் அவற்றின் அவசியத்தை லாபந்தரும் மதிப்பையும் மதிப்பீடு களின் வருகிற அறிக்கைகளில் கண்டெழுத வேண்டும். கட்டுவேலைகளின் முக்கியமாகப் பெரிதும் சீரழிந்துபோன கட்டுவேலைகளின் செப்பனீடுகளுக் கான, அல்லது வெள்ளத்தினால் சேதமடைந்த கட்டுவேலைகளைப் புதுப்பிப்பதற் கான மதிப்பீடுகளுக்கு, மூலதன மதிப்பையும் லாபகரமான மதிப்பையும் கருத்தில் கொண்டு ஒப்பளிப்பு வழங்கப்படும்.

5. உதவித் தொகை.—ஏதேனும் சிறுபாசனப் பணியின் சீரமைப்புக்கான அல்லது செப்பனீட்டுக்கான மதிப்பீட்டைக் கூராய்வு செய்கையில், ஊராட்சி ஒன்றியக் குழுவினர், இந்த சீரமைப்புகளுக்கு அல்லது செப்பனீடுகளுக்குப் பிடிக்கும் செலவினிமித்தம் சம்பந்தப்பட்ட குடியானவர்களிடமிருந்து உதவித் தொகை கேட்பதன் சாத்தியக் கூறு பற்றி ஆலோசித்து. செய்யக் கருதியுள்ள சீரமைப்புகளில் யாதொன்றின் அல்லது அவை எல்லாவற்றின் செலவில் ஏதேனும் பாகத்தை ஆயக் கட்டுதாரர்களிடமிருந்து வசூலிக்க வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு யுக்தமாகத் தோற்றினால் அத்தகைய உதவித் தொகை கொடுக்கும்படிக் கேட்கலாம். குறிப்பிட்ட எந்த விஷயத்திலேனும் ஒரு மதிப்பீட்டின் செலவு அதிகமாயிருக்கிறபடியால், குறிப்பிட்ட விஷயத்தில் சூழ்நிலைகளில் அது விரும்பத்தக்கதாயிராவிட்டால் அல்லது அவசியமாயிராவிட்டால், அத்தகைய உதவித் தொகை கொடுக்கும்படி ஊராட்சி ஒன்றிய மன்றம் கேட்கக் கூடாது.

ஊராட்சி ஒன்றியக் குழுவினர் உதவித் தொகையை நிச்சயிப்பது சாத்தியமாயிருக்கும்பொருட்டு, ஒருவிதமாகத் தீர்மானிப்பதற்குப் பொருத்த மாகக் கேட்கலாமென ஊராட்சி ஒன்றிய மன்றம் தீர்மானித்தால் விவரமான வருகிற அறிக்கையில் கண்டெழுத வேண்டும். உதவித் தொகையை நியாய மாகக் கேட்கலாமென ஊராட்சி ஒன்றிய மன்றம் தீர்மானித்தால். விவரமான அறிக்கையின் அடிப்படையின்பேரில் அவர் அத்தொகையை நிச்சயித்து, அத் தொகையை முன்னதாகக் கட்டும்படி அல்லது குறித்த ஒரு காலத்துக்குள் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் நிச்சயிக்கக் கூடிய தவணைகளில் அல்லது உழைப்பாகவோ பொருள்களாகவோ இவ்விரண்டுமாகவோ அவர்கள் அதைச் செலுத்துவார்களென்று கண்டு ஓர் உடன்படிக்கை எழுதிக் கொடுக்கும்படி ஆயக்கட்டுதாரர்களைக் கேட்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றும், சில ஆண்டுகளின் திட்டவட்டமான சுழற்சிக்குள் எல்லா வட்டங்களும் அடங்கும்படியாக, ஒரு வட்டத்திலே சிறுபாசனப் பணிகளைச் செப்பனிட்டுப் பராமரித்து வருவதற்கு அவசியமாயிருக்கக் கூடிய (ஐந்துக்கு மேற்படாத) எண்ணிக்கையுள்ள வட்டங்களாக, தனது அதிகார வரம்புக்குட் பட்ட பிரதேசப் பரப்பைப் பிரிக்க வேண்டும்.

6. மதிப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.—ஊராட்சி ஒன்றிய மன்றம் ஊராட்சி ஒன்றிய (உற்பத்தி) நிதியிலிருந்து வகை வளங்கள் கிடைப்பதற்குட்பட்டு, ஒரு நிதி ஆண்டில் செய்து முடிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் எண்ணிக்கையையும் பெயர்களையும் உரிய காலத்தில் தீர்மானிக்கவேண்டும். ஊராட்சி ஒன்றிய மேற்பார்வையாளராவது ஒன்றியப் பொறியாளராவது, அத்தகைய பணிகளுக்கு வேண்டிய மதிப்பீடுகளைத் தயாரித்து, மதிப்பீடுகளின் தொகைகளின் அடிப்படையின்பேரில் தொழில் நுட்ப ஒப்பளிப்புக்காக அவற்றைத் தக்க அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும். தக்க தொழில் நுட்ப அதிகாரி அத்தகைய ஒப்பளிப்புக்குப் பிறகு, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் நிருவாக ஒப்பளிப்புக்காக அந்த மதிப்பீடுகளை அவர்களுக்கு அனுப்ப வேண்டும். மதிப்பீடுகளில் செய்யப்பட்டுள்ள வழிவகைகள் குறிப்பிட்ட ஆதாரத்தைத் தக்கவாறு பராமரித்து வருவதற்கு இன்றியமையாதவை எனக் கண்டுள்ள சான்று ஒன்றினை மதிப்பீடுகளுடன் இணைத்தனுப்ப வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றம் பணிகள் செய்து முடிக்கப்படும் விஷயத்தில் திறமையாகக் கட்டுப்பாடு செலுத்துவது சாத்தியமாயிருக்கும்படிச் செய்யும் பொருட்டு, அவர்கள் இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள III ஆம் படிவத்தின் பிரகாரம், சம்பந்தப்பட்ட ஒன்றியப் பொறியாளர்களிடமிருந்து மாத அறிக்கைகளைப் பெற வேண்டும். அப் பொறியாளர்கள் அவற்றைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்துக்கு அனுப்பி, அவற்றின் படிகளை

(நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை) உதவிப் பொறியாளருக்கு அனுப்பி, முன்னேற்றத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும். நிருவாக தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கத் தகுதி வாய்ந்த அதிகாரிகள் அடியிற்கண்டவர்கள் ஆவார்கள் :—

அட்டவணை.

மதிப்பீடுகளின் தொடரிலக்கமும் தன்மையும்.	நிருவாக ஒப்பளிப்பு.	இன்னூர் தொழில்நுட்ப ஒப்பளிப்பு வழங்கவேண்டு மெனபது.
(1)	(2)	(3)
1. 3,000 ரூபாய் வரையில் செப்பனீடுகளுக்கான அல்லது முதல் பணிகளுக்கான மதிப்பீடுகள்.	ஊராட்சி ஒன்றியக் குழு.	ஒன்றியப் பொறியாளர்.
2. 3,000 ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 10,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற செப்பனீடுகளுக்கான அல்லது முதல் பணிகளுக்கான மதிப்பீடுகள்.	ஊராட்சி ஒன்றியக் குழு.	உதவிப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறை).
3. 10,000 ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 25,000 ரூபாய்க்கு மேல்படாமல் செலவு பிடிக்கிற செப்பனீடுகளுக்கான அல்லது முதல் பணிகளுக்கான மதிப்பீடுகள்.	ஊராட்சி ஒன்றியக் குழு.	கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறை).
4. 25,000 ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 1,00,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற செப்பனீடுகளுக்கான அல்லது முதல் பணிகளுக்கான மதிப்பீடுகள்.	ஊராட்சி ஒன்றியக் குழு.	மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித்துறை).

அட்டவணை—தொடர்ச்சி.

மதிப்பீடுகளின் தொடர்லக்கமும் தன்மையும். (1)	நிருவாக ஒப்பளிப்பு. (2)	இன்னார் தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கவேண்டு மென்பது. (3)
5. 1,00,000 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிக்கிற செப்பனீடுகளுக்கான அல்லது முதல் பணிகளுக்கான மதிப்பீடுகள்.	ஊராட்சி ஒன்றியக் குழு.	தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறை).

ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றும், ஒவ்வொரு நிதி ஆண்டுக்காகவும், முந்திய ஆண்டின் டிசம்பர் 1 ஆம் தேதிக்கு மேற்படாமல், அந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் திட்டத்தையும், அவைகளுடைய அவசரத்தின் வரிசை முறையையும் நிச்சயித்து, நிச்சயிக்கப்பட்ட வரிசை முறையில் பணிகளுக்காக நிதிகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும். பணிகளின் திட்டத்துக்கும், பின்னர் மாறுதல்கள் செய்யப்பட்டால் அவைகளுக்கும் படி ஒன்றைக் கோட்ட ஆட்சியாளர், மாவட்ட ஆட்சியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப்பணித் துறை), உதவிப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொதுப் பணித் துறை), கோட்டப் பொறியாளர் ஆகியோருக்கு இயன்ற விரைவில் அனுப்ப வேண்டும்.

7. **பணிகளைச் செய்து முடித்தல்.**—மேற்பார்வையாளரின் துணைகொண்டு ஒன்றியப் பொறியாளர் எல்லாப் பணிகளையும் கவனிக்க வேண்டும். ஒன்றியத்தின் அதிகார வரம்புக்குள் அத்தகைய எல்லாப் பணிகளையும் தக்கவாறு மேற்பார்வையிடுவதற்கு ஒன்றியப் பொறியாளர் பொறுப்பாளி யாவார். தொழில் நுட்பத் திறமை வேண்டியிராதவையும் 1,000 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் செலவு பிடிப்பவையுமான பணிகளை, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஆயக்கட்டுக்காரர்களுக்கு ஒப்பந்தத்துக்கு விடலாம். மற்ற விஷயங்களில், பிற ஊராட்சி ஒன்றியப் பணிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையின்பிரகாரம், பணிகளை ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்புவிக்க வேண்டும்; செய்யப்பட்ட பணிக்காக, பிற ஒன்றியப் பணிகளுக்கென விதிக்கப் பட்ட நடைமுறையின்படி பணம் கொடுக்க வேண்டும்.

8. **சிறுபாசனப் பணிகளின் பாதுகாப்பு.**—(1) தனியார் குளங்களின் சொந்தக்காரர்கள் அவைகளைச் செப்பனிட்டு வைப்பதில் அசட்டையாயிருப்பது

காரணமாக ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பொறுப்பிலிருக்கிற ஏதேனும் சிறு பாசனப் பணிக்குச் சேதம் நேரிடக் கூடுமென அஞ்சுவதற்கு ஏது இருந்தால், கோட்டப் பொறியாளராவது, உதவிப் பொறியாளராவது, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆணையாளராவது, தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்காக அது செய்தியை மாவட்ட ஆட்சியாளரின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

(2) மேற்சொன்ன அலுவலர்கள், குளங்களின் கரைகளையும் பிற சிறு பாசனப் பணிகளையும் கவனமாக ஆய்ந்து பார்க்க வேண்டும்; துவாரங்களை அல்லது வேறு சில சேதங்கள் எவையேனும் இருந்தால் அவைகளை நிர்ணயமான வழக்கப்படி செப்பனிடுவதற்கு அவர்கள் போதுமான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

(3) பெருமழை பெய்தால், (1) உள்விதியில் குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் குளங்களின் கரைகளையும் பிற சிறுபானப் பணிகளையும் கவனிப்பதற்காக கிராமப் பணித் தொகுதியையும் ஊராட்சிப் பணித் தொகுதியையும் சேர்ந்த கடைநிலைப் பணியாளர்களின் உதவியைப் பெற வேண்டும்; ஏதேனும் ஆபத்து தோன்றுவதாயிருந்தால் அதைப் பற்றி உடனே தெரிவிக்கவேண்டும்.

(4) உடைப்புக் காணும் போலிருந்தால், (1) உள்விதியில் குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் கிராமவாசிகளைக் கூப்பிட்டு, அதைத் தடுப்பதற்காக வழக்கமான வழிவகைகளைக் கையாள்வதில் அவர்களைப் பயன்படுத்த வேண்டும்.

(5) உள்ளபடி உடைப்பு ஏற்பட்டுவிட்டால், மேற்சொன்ன அலுவலர்கள் அந்த உடைப்பினால் பாதிக்கப்படக்கூடிய சாகுபடியை காப்பாற்றும் பொருட்டு, சுற்றுக்கரை எழுப்புவதற்குக் கிராம வாசிகளை உடனே அமர்த்த வேண்டும்.

(6) வாய்க்காலில் அல்லது குளக்கரைகளில் உடைப்புகளைச் செப்பனிடுவதற்காக மதிப்புள்ள நிலத்திலிருந்து மண் எடுத்துக் கொள்ளப்பட்டால், சம்பந்தப்பட்ட சொந்தக்காரர்களுக்கு ஈடு கொடுக்க வேண்டும். ஈட்டுத் தொகையானது (1858 ஆம் ஆண்டின் I ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1858 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கட்டாய உழைப்புச் சட்டத்தில் கண்ட 6 ஆவது பிரிவின்படி செலுத்தப்படத்தக்க தொகை நிச்சயிக்கப்படுவது போலவே ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் நிச்சயிக்கப்பட வேண்டும்.

9. குளங்களின் கலிங்கல்கள், பிற சிறு பாசனப் பணிகள் ஆகியவற்றின் மீது தற்காலிக அணைகள்.—(1) எந்த உபரி வழிந்தோடணைகளின் உச்சிகள் முழுக் குளமட்டத்தில் இருக்கின்றனவோ அந்த வழிந்தோடும் அணைகள் மீது அல்லது அவற்றின் எதிரில் கரைகளை கண்டிப்பாக எழுப்பாதபடிப் பார்த்துக்கொள்வது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கடமையாகும்; ஆனால், கலிங்கல்களின் உச்சி முழு குளமட்டத்துக்குக் கீழே இருந்தால், குளங்களில் கலிங்கல்கள் மீது அல்லது பிற சிறு பாசனப் பணிகள் மீது தற்காலிக அணைகளை எழுப்பலாம் :

ஆனால், கலிங்கல்களின் அணைக்கற்களுக்கிடையிலுள்ள வெற்றிடத்தை அடைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பொருள்கள், அணைக்கு ஆபத்து நேரும்போது நீர் பீறிட்டுப் பாய்வதனால் சுலபமாக அகற்றப்படக்கூடியவாறு அல்லது அடித்துக் கொண்டு போகப்படக்கூடியவாறு இருக்க வேண்டும்; மேலும் அவைகள், முழுக் குளமட்டத்துக்கு மேலே ஆறடிக்கு அதிகமான உயரத்திலிருக்ககூடாது.

(2) நீர் வழிந்தோடும் ஆபத்து குளத்துக்கு ஏற்பட்டிருக்கிறதென்பதைக் காட்டும் அளவுக்கு நீர்மட்டம் உயர்வதனால் சந்தர்ப்பத்துக்கு வேண்டியிருக்கிறபடி தற்காலிக அணையைச் சிறிதுமட்டிலோ முழுவதுமோ எடுத்துவிட வேண்டும்.

(3) அணைக் கற்களுக்கிடையிலுள்ள அடைப்புப் பொருள், நீர் பீறிட்டுப் பாயும்போது சுலபமாக அகற்றப்படாத அல்லது அடித்து கொண்டு போகப் படாத அளவுக்குக் கெட்டியாகிப் போவதைத் தடுப்பதற்காக, ஆண்டுக்குக் குறைந்தது ஒரு தடவையாகிலும் கலிங்கல்கள் எல்லாவற்றிலும் உள்ள அடைப்புகளை அகற்ற வேண்டும்.

(4) தொடர்களாயுள்ள குளங்கள், பொதுச் சால்களையும் இருப்புப்பாதை லைன்களையும் அடுத்துள்ள குளங்கள் போன்ற பணிகள் விஷயத்தில் பருவமழை பெய்யத் தொடங்கும் வழக்கமான தேதிக்குக் குறைந்தது இரண்டு வாரத்துக்கு முன்னதாக, கலிங்கல்கள் எல்லாவற்றிலும் உள்ள அடைப்புகளை அகற்ற வேண்டும்.

(5) குளக் கரைகளின் கீழ் உள்ள நிலங்களின் கைப்பற்றுதாரர்கள் அக் கரைகள் மீது ஆக்கிரமிப்புச் செய்ய விடக்கூடாது.

பின் இணைப்பு

படிவம் I

(2 ஆவது விதியைப் பார்க்கவும்.)

..................வளர்ச்சி மாவட்டத்திலே..................ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சிறுபாசன ஆதாரங்களின் பட்டியல்.

			குளம் புதுப்பிக்கும் திட்டக் குறிப்புகளுக்கு ஆதாரம்.		நிலைப் பேரேடு.		
கிராமத்தின்/ஊராட்சியின் இலக்கமும் பெயரும்.	ஆதாரத்தின் பெயர்.	ஆயக்கட்டு.	சிறிய நீர் நிலையின் பெயர்.	பக்கம்.	தொகுதி.	பக்கம்.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)

குறிப்புகள்.—(i) இப் பட்டியல் நிலைப் பேரேட்டிற்கு ஓர் அட்டவணையாக அமையும்.

(ii) கிராமங்கள் ஊராட்சி ஒன்றியத்துக்குள் அகர வரிசையாக எழுத வேண்டும்.

(iii) இருப்புப் பாதையைப் பாதிக்கிற ஆதாரங்களுக்கு, (2) பத்தியில் ஆதாரங்களின் பெயருக்கு எதிரே நடசத்திரக் குறி (*) யிட்டு அடையாளமிட வேண்டும்.

படிவம் II

(2 ஆவது, 3 ஆவது விதிகளைப் பார்க்கவும்.)

சிறுபாசன ஆதாரங்களின் நிலைப்பேரு ஆதாரம் இருக்கிற ஊராட்சி மன்றத்தின் பெயர். (சர்வே எண்).

வளர்ச்சி மாவட்டம் ஊராட்சி ஒன்றியம் (பெயர்)

ஆதாரத்தின் பெயர்

ஆதாரத்தின் வகையும் கொள்ளளவும் தன்மையும். சிறு நிலையின் பெயரும், குளம் புதுப்பிக்கும் திட்ட விவரமும் பணியின் விளக்கம் கொடுக்கப் பெற்றுள்ள குறிப்புச் சுவடி.

பாசனம் பெறத்தக்க மொத்த ஆயக்கட்டும் தீர்வையும்.	எக்கரா.	ரூ. காசு.	எக்கரா.	ரூ. காசு.	எக்கரா.	ரூ. காசு.

மதிப்பீட்டுச்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்ட ஆண்டு	மதிப்பீட்டு ஒப்பளிப்பின் இலக்கமும் தேதியும் அதன் தன்மையும் அதாவது முதல் பணிகள் அல்லது செப்டனீடுகள், பராமரிப்பு.	செப்பனீட்டின் தன்மையின் சுருக்கமான விவரம்.	மதிப்பீட்டுத் தொகையும் நிதிகள் உள்ளடி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆண்டும்.	அடியிற்கண்ட ஆண்டில் உள்ள படி செலவிடப் பட்ட தொகை.			குறிப்புரை.
				ஆண்டு.	ஆண்டு.	ஆண்டு.	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)

விளக்க உரைகள்.—இந்தப் பேரேடு, ஊராட்சி ஒன்றியக் குழுவின் கட்டுப் பாட்டுக்குட்பட்ட ஒன்றியம் ஒவ்வொன்றிலும் பாசன ஆதாரங்களின் பராமரிப்பு அல்லது புதுப்பிக்கும் பணி பற்றிய நிலையான பதிவாக இருக்கும்; ஒவ்வொரு பணிக்கும் செய்யப்பட்ட செப்பனீடுகள் பற்றிய தொடர்ச்சியான வரலாற்றையும் அது காட்டும். ஏதேனும் ஆதாரத்தின் செப்பனீடுகளுக்காக, சீரமைப்புக்காக அல்லது புதுப்பித்தலுக்காக மதிப்பீட்டுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டவுடன், இப் பதிவேட்டில் அவசியமான பதிவுகள் செய்து, தொகுதி பக்கம் பற்றிய நிகரான பதிவினை சிறு பாசன ஆதாரங்களின் பட்டியலின் XIஆம் படிவத்தின்) (6), (7) பத்திகளில் எழுத வேண்டும். ஆதாரம் ஒவ்வொன்றுக்கும் ஒரு பக்கம் விட வேண்டும். மதிப்பீடு ஒவ்வொன்றுக்கும் சம்பந்தப்பட்ட பதிவுகளைத் தனி வரி ஒன்றில் எழுத வேண்டும். பின்னர் செய்யப்படும் மாறுதல்களை எழுதுவதற்காக ஒவ்வொரு பதிவுக்கும் கீழே போதுமான இடம் விட வேண்டும். துணை மதிப்பீடுகளின் தொகைகளை, முதல் மதிப்பீடுகளுக்குக் கீழே எழுத வேண்டும். திருத்திய மதிப்பீடுகளின் விஷயத்தில், தள்ளிவிடப்பட்ட முதல் மதிப்பீடுகளுக்கு சம்பந்தப்பட்ட பதிவுகளை அடித்துவிட்ட பிறகு, வேண்டிய விவரங்களை எழுத வேண்டும்.

பணியின் தன்மையைப் பற்றி (அதாவது, 'புதிய மதகு கட்டுதல்', 'மண் வேலை' முதலியவை) ஒரு சுருக்கமான விவரத்தை (3) பத்தியில் கொடுக்க வேண்டும். செப்பனீடுகளின் விளைவாக, நீர் பாய்ச்சக்கூடிய ஆற்றல் நிலையாக அதிகப்படுத்தப்பட்டால் அப்போது, 'பாசனம் பெறத்தக்க மொத்த ஆயக் கட்டும் தீர்வையும்' என்பதன் எதிரே கொடுக்கப்பட்டுள்ள தகவலைத் திருத்த வேண்டும். திருத்தப்பட்ட ஆயக்கட்டு இலக்கங்கள் மதிப்பிடப்பட்டவைகளாயிராமல், உள்ளபடி இருப்பவைகளாயிருக்க வேண்டும். திருத்தம் செய்த ஆண்டினை இவ்வாறு அடைப்புக்களில் காட்ட வேண்டும். 140 ஏக்கரா (1950), (2) பத்தியை நிரப்புகையில், முதல் பணிகளுக்காகவும் செப்பனீடுகளுக்காகவும் 'மு' அல்லது 'செ' என்னும் அடையாளத்தைப் பயன்படுத்த வேண்டும்.

புதிய மதகுகள் அல்லது பாசனப் பணிகள் முதலியவற்றின் ஏற்கெனவேயுள்ள மதகுகளில் மாறுதல்கள் உள்ளடங்கிய மதிப்பீடுகளைக் கூட இப் பதிவேட்டில் எழுத வேண்டும். 8 ஆவது பத்தியில், விதிக்கப்பட்ட கட்டணங்கள் பற்றிய தொழில் நுட்ப விவரங்களை எழுதலாம்.

படிவம் III.

(6 ஆவது விதியைப் பார்க்கவும்.)

........................ஊராட்சி ஒன்றியத்தில் பணிகளைச் செய்து முடிப்பதில் முன்னேற்றம்.

கிராமத்தின் தொடரிலக்கமும் பெயரும்.	ஆதாரத்தின் பெயர்.	ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீட்டின் இலக்கமும் தேதியும் தொகையும்.	பணியின் விவரம் முதல் வேலை அல்லது பராமரிப்பு செட பணிடுகள், செப்பனிடுகளின் தன்மை.	செய்யப்படுகிற பணியில் முன்னேற்றம் பற்றிய விவரம்.	செய்யப்படாமலிருக்கிற வேலை பற்றிய விவரங்கள்.	குறிப்புகள் (மேற்படி முன்னேற்றத்துக்கான காரணங்கள் முதலியவை).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)

(1962 ஜூலை 26 ஆம் தேதியுள்ள 1708 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(1965 செப்டம்பர் 30 ஆம் தேதியுள்ள 2194 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(106) பாதுகாப்புக்காகவும் பராமரிப்புக்காகவும் குடிமராமத்துச் செய்து முடிப்பதற்காகவும் சிறு பாசன ஆதாரங்களை மாற்றுவது—முகப்புரை.—உழவு, கால்நடை வளர்ப்பு முதலியவை பற்றி 1957 ஆம் ஆண்டு அக்டோபரில் ஸ்ரீநகரில் நடைபெற்ற முதல் தேசிய உட்கிடைப்பொருள் கருத்தரங்கு, மற்றவைகளுடன் கூட, பின்வரும் பரிந்துரையும் செய்தது. அதாவது, வயலுக்கு வயல் சிக்கனமாகத் தண்ணீர் பங்கிட ஏற்பாடு செய்வதற்கு ஊராட்சிகள் பொறுப்பாகக் கொள்ளப்படலாம் என்பதே அப் பரிந்துரையாகும். 1958 ஜூலையில் ஐதராபத்தில் நடைபெற்ற மண்டலச் சிறு பாசனம் மாநாட்டின் தீர்மானங்களில் ஒன்று என்னவென்றால்; உள்ளாட்சிக் கழகம் நிச்சயமாகப் பராமரித்துவரும் ஆற்றல் பெற்றதென்று தகுந்த அதிகாரி ஒருவர் ஐயமறத் தெரிந்துகொள்ளும் விஷயங்களில் சிறுபாசனப் பணிகளைப் பராமரித்து வரும் பொறுப்பை ஊராட்சியினிடம் அல்லது கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்புவிக்க வேண்டுமென்பதேயாகும்.

2. சட்டங்களின் நிபந்தனைகள்.—1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி மன்றங்கள் சட்டத்தில் கண்ட 59 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) ஆவது உட்பிரிவில் அடியிற்கண்டவாறு நிபந்தனை கண்டிருக்கிறது; அதாவது —அரசினர் நிர்ணயிக்கப்படக்கூடிய திட்டங்களுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு, (i) ஏதேனும் கிராமப் பாசனப் பணியின் பாதுகாப்பையும் பராமரிப்பையும், அல்லது (ii) பாசன முறை வரவுகளை நிருவகிப்பதை அல்லது (iii) ஏதேனும் பாசனப் பணியிலிருந்து அதை நம்பியிருக்கிற வயல்களுக்குத் தண்ணீர்ப் பங்கீட்டை ஒழுங்குபடுத்துவதை எந்த ஊராட்சிக்கேனும் மாற்றலாம். அதே பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படி, நிர்ணயிக்கப்படக்கூடிய வரையறைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு, (i) கிராமத்திலுள்ள ஏதேனும் பாசன ஆதாரம் சம்பந்தமாக "குடிமராமத்து" செய்து முடிப்பதற்கும் (ii) அதன் காரியங்களுக்காக, நிர்ணயிக்கப்படக்கூடிய கட்டணத்தை விதிக்கவும் ஊராட்சிக்கு அதிகாரமுண்டு. 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 85 ஆவது பிரிவில், அதே மாதிரி நிபந்தனை ஒன்று மேலும் சில மாறுதல்களுடன் காணப்படுகிறது; அம் மாறுதல்களாவன :— (i) குறிப்பிட்ட விஷயத்தில் தன்மைக்கிணங்க, ஊராட்சியாவது ஊராட்சி ஒன்றிய மன்றமாவது பொறுப்பினை அவ்வாறு மேற்கொள்ளலாம்; (ii) ஏதேனும் பாசனப் பணியின் பராமரிப்பு மாற்றப்பட்டால், அப் பணியில் அரசினருக்குள்ள மீன் பிடி உரிமைகள், சந்தர்ப்பத்துக்கேற்ப, ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு மாற்றப்பட்டு அதனிடம் உரித்தாக்கப்பட வேண்டும்; ஆயினும், வருமானத்தைப் பயன்படுத்துவது சம்பந்தமானவை உட்பட; அரசினரால் குறிப்பிடப்படக்கூடிய வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டுத்தான் அவ்வாறு மாற்றப்பட்டு உரித்தாக்கப்பட வேண்டும்.

3. *தற்போதைய நிலை.*—ஆகவே, மேலே 1 ஆவது பத்தியில் குறிப்பிடப் பட்ட 'முதல் தேசிய உட்கிடைப்பொருள் கருத்தரங்கு', 'மண்டல சிறு பாசன மாநாடு' ஆகியவற்றின் பரிந்துரைகளையொட்டிய இயலச் செய்யும் சட்ட பூர்வமான நிபந்தனைகள் போதுமான அளவுக்கு இருக்கின்றன. ஆயினும், பல இடங்களில் ரயத்துகள் தங்கள் குடிமராமத்துப் பொறுப்பினை நிறைவேற்ற முடியாதவர்களாயிருந்தபோதிலும், ஊராட்சிகள் அப் பணியை மேற்கொள் வதற்கு உண்மையான தேவை இருந்தபோதிலும், பழைய சட்டத்தின் நிபந்தனைகள் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை.

4. **புதிய ஊராட்சிச் சட்டத்தைச் செயற்படுத்துவது சம்பந்தமாக அரசி னரின் கருத்துக்கள்.**—(i) **விவசாய வளர்ச்சிப் பணியை ஊராட்சி** ஒன்றியங் களிடம் ஒப்படைப்பதற்கு அடிப்படையிலுள்ள கொள்கையின் கூறாக, பாசனப் பணிகளின் மாற்றம் சம்பந்தமாக, புதிய சட்டத்தின் 85 (1) பிரிவில் கண்டுள்ள நிபந்தனைகள் போதுமான அளவுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

(ii) புதிய சட்டத்தைச் செயற்படுத்துகிற சூழ்நிலையில், ஒவ்வொன் றிலும் தங்கள் கிராமங்களில் குடிமராமத்தை மேற்கொள்ளும்படி ஊராட்சிக்கு ஆலோசனை கூறுவது மிக முக்கியமானதென்று கூட அரசினர் கருதுகிறார்கள். கூட்டாக ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களின் ரயத்துகள் மீது குடிமராமத்துப் பொறுப்பு சார்ந்து, சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் தங்களுக்கிடையே அப் பொறுப்பைப் பங்கிட்டுக் கொள்ள முடியாமலிருக்கிற விலக்கான நிகழ்வுகளில் மட்டும் ஊராட்சி ஒன்றியங்கள் குடிமராமத்தினை மேற்கொள்வதற்கான அவசியம் உண்டாகும்.

5. ஆகவே, **அரசினர் பின்வரும் ஆணைகளைப் பிறப்பிக்கிறார்கள் :**—(1) (அ) பாசனப் பணிகளின் பாதுகாப்பும் பராமரிப்பும், (ஆ) பாசன முறை வரவு களின் நிருவாகம், (இ) பாசனப் பணியை நம்பியிருக்கிற வயல்களுக்கு அப் பணியிலிருந்து தண்ணீர் பங்கிடுவதை ஒழுங்குபடுத்துவது ஆகியவைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவல்களை ஊராட்சிக்காவது ஊராட்சி ஒன்றியத்துக்காவது மாற்ற, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 5 (1) பிரிவில் அரசினருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அலுவல்களை ஊராட்சிகளுக்கு மாற்றக் கூடாதென்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கே மாற்ற வேண்டுமென்வும் அரசினர் தீர்மானித்திருக்கிறார்கள். ஆயினும், பணிகளைச் செய்து முடித்தல் அல்லது பராமரித்தல், பாசன முறை வரவுகளின் நிருவாகம், பாசனப் பணியிலிருந்து தண்ணீர்ப் பங்கீட்டை ஒழுங்குபடுத்துவது ஆகியவற்றை மேற்படி சட்டத்தில் கண்ட 71 (2) பிரிவின்படி உள்ளூர்

ஊராட்சியினிடம் ஒப்புவிக்க வேண்டுமென அப்பாசன ஆதாரத்தின் ஆயக்கட்டுதாரர்கள் எழுத்து மூலமாகக் கேட்டுக்கொண்டு, அந்த அலுவல்களை மேற்கொள்ளவும் பாசன ஆதாரம் எந்த நிபந்தனைகளின்பேரில் ஊராட்சி ஒன்றியத்துக்கு மாற்றப் பட்டிருக்கிறதோ அந்த நிபந்தனைகளின்படி நடக்கவும் சம்பந்தப்பட்ட ஊராட்சி (இதற்கென்றே கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் அதனால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மான மூலமாக) ஒப்புக்கொண்டால் ஊராட்சி ஒன்றியம் அவ்வாறு ஒப்புவிப்பதற்கு அரசினர் தடை சொல்ல மாட்டார்கள்.

(2) மேற்படி சட்டத்தில் கண்ட 85 (1) பிரிவின்படி அரசினரிடம் உரித்தாக்கப்பட்டிருப்பதும், மேலே (1) உள்பத்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதுமான அதிகாரம் 1960 சனவரி 12-ஆம் தேதியுள்ள 76 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணையில் வெளியிடப்பட்ட விளம்பரத்தின்படி மாவட்ட ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பின்வரும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு இந்த அதிகாரத்தைச் செலுத்தும்படி மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(i) ஓர் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்துக்காக அமைக்கப்பட்ட ஓர் ஊராட்சி ஒன்றியத்துக்கு, வருவாய்த் துறையினரின் பொறுப்பிலிருப்பவையும் அந்த வட்டாரத்தில் உள்ளவையுமான சிறுபாசன ஆதாரங்களை மட்டுமே மாற்ற வேண்டும். ஆனால், அந்த ஆதாரங்கள் ஆற்றுப் பாசனத் திட்டத்தின் பாகமாயிருக்கக்கூடாது. தற்போதைக்கு, அரசினர் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டிலிருக்கிற குளங்கள் ஓர் ஆற்றுப்பாசனத் திட்டத்துடன் தொடர்பற்றவைகளாயிருந்தபோதிலுங்கூட, அவைகளை மாற்றவேண்டியதில்லை.

(ii) அவ்வாறு ஒப்புவிக்கப்பட்ட பொறுப்பினை ஊராட்சி ஒன்றியம் நிறைவேற்றுவது சாத்தியமாயிருக்கும்படிச் செய்யும் பொருட்டு, ஆண்டுதோறும் ஒரு தனி உதவித்தொகை ஊராட்சி ஒன்றியத்துக்குக் கிடைக்கும்படிச் செய்யவேண்டும்: இதனை "உள்ளூர்ப்பாசன உதவித் தொகை" என்று சொல்லலாம். மாவட்ட ஆட்சியாளர் ஒவ்வொரு வட்டாரத்துக்காகவும் அடியிற்கண்ட அடிப்படையின்பேரில் இந்த உதவித் தொகையின் அளவை நிச்சயிக்க வேண்டும் :—

(அ) குறிப்பிட்ட வட்டாரத்திலுள்ள சிறு பாசன ஆதாரங்கள் எல்லாவற்றையும் செப்பனிடும் வகையில் ஆண்டுதோறும் செலவிடப்பட்ட சராசரித் தொகையை 1959-60 ஆம் ஆண்டோடு முடிவடைந்த ஐந்தாண்டுக் காலத்தில் உள்ளபடிச் செலவான தொகைகளையொட்டி நிச்சயிக்கவேண்டும். அத்தொகையானது, அந்த ஆதாரங்களிலிருந்து நீர்பாய்ச்சப்பெறும் ஏக்கரா

ஒன்றுக்கு 2.50 ரூபாய்க்கு மேற்படாமலிருந்து, அந்த ஆதாரங்களிலிருந்து நீர் பாய்ச்சப் பெறும் ஏக்கரா ஒன்றுக்கு 1.50 ரூபாய்க்குக் குறைவாகவும் இல்லாவிட்டால், அத்தொகையை உள்ளூர்ப்பாசன உதவித் தொகையாக நிச்சயிக்க வேண்டும்.

(ஆ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட சராசரி ஆண்டுத்தொகை, அந்த ஆதாரங்களிலிருந்து நீர் பாய்ச்சப்பெறும் ஏக்கரா ஒன்றுக்கு 2.50 ரூபாய்க்கு மேற்பட்டால், அப்போது ஏக்கரா ஒன்றுக்கு 2.50 ரூபாயைக் குறிக்கும் தொகையை உள்ளூப்பாசன உதவித் தொகையாக நிச்சயிக்க வேண்டும் ; மேலும்

(இ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட சராசரி ஆண்டுத் தொகை எல்லா ஆதாரங்களிலிருந்தும் நீர் பாய்ச்சப்பெறும் ஏக்கரா ஒன்றுக்கு 1.50 ரூபாய்க்கும் குறைவாயிருந்தால், அப்போது, ஏக்கரா ஒன்றுக்கு 1.50 ரூபாயைக் குறிக்கும் தொகையைத் தலபாசன உதவித்தொகையாக நிச்சயிக்க வேண்டும்.

அவ்வாறு கொடுக்கப்படும் உதவித் தொகையை தனி நிதி ஒன்றில் வரவு வைக்க வேண்டும் : இது "ஊராட்சி ஒன்றிய (உற்பத்தி) நிதி" என்று சொல்லப்படும் ; இதற்கு ஊராட்சி ஒன்றியத்தின் பொது கல்வி நிதிகளிலிருந்து வேருகக் கணக்கு வைத்துவரவேண்டும். சிறு பாசனப் பணிகளுக்குப் பிடிக்கும் செலவைக்கொடுப்பதற்கு மட்டும் அந்த உதவித்தொகை பயன்படுத்தப் படும்படிக் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(iii) ஊராட்சி ஒன்றிய மன்றம் பாசனப் பணியின் மதகுகளில் ஏதேனும் மாறுதலைச் செய்யவுங்கூடாது, அப்பணி சம்பந்தமாகக் குளம் புதுப்பிக்கும் திட்டக் குறிப்புகளில் கண்டுள்ள தரத்திலும் விவரக்குறிப்புகளிலும் தலையிடவும் கூடாது, சிற்றணைகளை அல்லது கலிங்கல்களை உயர்த்தவுங்கூடாது, தாழ்த்தவுங்கூடாது, அகலப்படுத்தவுங்கூடாது, வாய்க்கால்களில் முகப்புப்பணிகள் இருந்தால் அவைகளில் முக்கியமான மாறுதல்கள் செய்யவுங்கூடாது, தலையிடவுங்கூடாது.

(iv) மழைக்காலத்தில் பாசனப்பணியின் கரையைக் கவனமாகப் பார்த்துக் கொள்வது ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பாகும்.

(v) ஊராட்சி ஒன்றியத்தின் தவறு அல்லது பிழைபாடு காரணமாக, பாசனப் பணியின் பாகமாயிருக்கிற அல்லது அதற்குச் சம்பந்தப்பட்ட மதகுகள், சிற்றணைகள், கலிங்கல்கள், வாய்க்கால்கள், முகப்புப்பணிகள், கரை

அல்லது மற்றப் பணிகளுக்கு நேரிடும் ஏதேனும் சேதத்துக்கு அந்த ஒன்றியம் ஈடு செய்ய வேண்டும்: ஊராட்சி ஒன்றியத்தின் தவறு அல்லது பிழைபாடு காரணமாகக் குறிப்பிட்ட ஏதேனும் சேதம் ஏற்பட்டதா என்பது பற்றி மாவட்ட ஆட்சியாளரின் தீர்ப்பு முடிவானதாகும்.

(vi) பாசனப் பணிக்கரையின் அடிமுனைகளில் ஒன்றிலிருந்து முப்பது அடிக்குள், எப்போதேனும் எக்காரியத்துக்காகவும் ஊராட்சி ஒன்றியம் மண்ணைத்தோண்டி எடுக்கக்கூடாது.

(vii) ஊராட்சி ஒன்றியப் பொறியாளரின் (வட்டாரப் பொறியாளரின் அல்லது மேற்பார்வையாளரின்) கட்டுப்பாட்டுக்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டு, எல்லாப் பணிகளையும் செய்து முடிக்க வேண்டும்; அப்பணிகள் கோட்ட ஆட்சியாளரின் மேற்பார்வைக்குக் கூட உட்பட்டவையாகும்.

(viii) பாசனப் பணியின் கீழ் உள்ள நிலங்களுக்கு நீர் பாய்ச்ச வேண்டிய விதமும் வரிசைக் கிரமமும், தொடர்ந்து நீர் வழங்கப்பட வேண்டிய காலம், வழங்கப்படவேண்டிய நீரில் மொத்த அளவு ஆகியவற்றை ஒழுங்கு படுத்த ஊராட்சி ஒன்றியத்துக்கு அதிகாரமுண்டு ஆனால், முற்சலுகையாக அல்லது விகிதாசாரப்படி நீர் வழங்கப்பெறுவதற்குரிய நிலைபெறுன அல்லது மாமூலான ஏதேனும் உரிமை பிரதி கூலமாகப் பாதிக்கப்படும் அளவிற்கு இந்த அதிகாரத்தைச் செலுத்தக்கூடாது.

(ix) ஒரு கிராமப் பாசனப் பணிக்குச் சம்பந்தப்பட்டதும் ஓர் ஊராட்சி ஒன்றியத்துக்கு மாற்றப்பட்டதுமாக ஏதேனும் அலுவலை அரசின ராவது அவர்களுடைய பிரதிநிதியாகிய மாவட்ட ஆட்சியாளராவது காரணம் எதுவும் சொல்லாமலேயே, எப்போதேனும் தாங்களே மீண்டும் எடுத்துக் கொள்ளலாம்.

(x) சிறு பாசன ஆதாரங்கள் ஊராட்சிகளுக்கு மாற்றப்படுவதற்கு முன், மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின்படி நடக்க உடன்பட்டு ஊராட்சி ஒன்றிய மன்றம் நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றைப் பெறவேண்டும்.

(6) குடிமராமத்து : (i) பாசன ஆதாரங்களில் சில வகைகளைச் சேர்ந்த வேலைக்காக இலவசமாகத் தொழிலாளர்களை அனுப்புவது பற்றிய மாமூலான கடப்பாடு ஏற்பட்டிருப்பது பற்றி, 1959 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கட்டாய உழைப்புச் சட்டம் குறிப்பிடுகிறது. மாமூலான கடப்பாடு நிறைவேற்றப்படா விட்டால், தாசில்தார் அவசியமான பணிகளைச் செய்து முடித்து, செலவை, பொறுப்புள்ள நிலத்துக்குடையவர்களிடையே பங்கிட்டு, அதை நிலவரிப் பாக்கியைப் போல் அவர்களிடமிருந்து வசூலிக்கலாமென அச்சட்டத்தில்

சொல்லப்பட்டிருக்கிறது. 1950 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சி மன்றங்கள் சட்டத்தின் 59 (2) பிரிவுக்கு நிகராயுள்ள 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 85 (2) பிரிவானது, ஊராட்சிகள் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் இந்த மாமூலான கடப்பாடுகளை மேற்கொண்டு, அவற்றைச் செய்து முடித்து, இதற்கென்று சட்ட பூர்வமான ஒரு கட்டணத்தை விதிப்பது மூலமாகச் செலவை ஈடுசெய்வதைச் சாத்திய மாக்குகிறது. சந்தர்ப்பத்துக்கேற்ப ஊராட்சிகளாவது ஊராட்சி ஒன்றிய மன்றமாவது பொறுப்பை இவ்வாறு மேற்கொண்டு, தாங்கள் மேற்கொண்ட கடப்பாட்டினைச் செய்து முடிக்க ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தவறிப்போகும் பட்சத்தில், வட்டாட்சியர் இவ்விதிகளைச் செய லாற்றுவதற்கு உட்படுவதனின்றும், நிலத்துக்குடையவர்கள் விலக்களிக்கப் படமாட்டார்களென்று, 1950, 1958 ஊராட்சிச் சட்டங்கள் இரண்டும் தனி யாகச் சொல்லுகின்றன.

(ii) மேற்படி சட்டத்தில் கண்ட 85 (2) பிரிவின் நிபந்தனைகளை ஒவ்வொரு ஊராட்சியின் கவனத்துக் கொண்டு வருவதற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படியும் பாசனம் பணியை நல்ல நிலைமையில் வைத்திருக்கும் பொருட்டு, குடிமராமத்தினைச் செயலாற்றுவதற்காகவும் காலமுறைப்படி தங்கள் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்காகவுமான பொறுப்பை மேற் கொள்ளுமாறு ஊராட்சிகளை ஊக்குவிக்கும்படியும் மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். குடிமராமத்தினைச் செயலாற்றுவதற்காகத் தக்க கட்டணங்களை விதிப்பதற்கு ஊராட்சிகளுக்கு அதிகாரமளிக்கும். மேற்படி சட்டத்தின் நிபந்தனைகளைப் பற்றி அவைகளுக்குத் தெரிவிக்கலாம். ஊராட்சிகளை அணுகிப் பார்த்ததன் விளைவு இன்னதெனத் தெளிவாகத் தெரிகிறவரையில், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் இக்கடப்பாட்டினை மேற் கொள்ளும் பிரச்சினையைப் பற்றிக் கருத வேண்டியதில்லை.

(iii) மாமூலான கடப்பாடு கையாளப்படாததனால் வழக்கற்றுப் போவதைத் தடுக்கும் பொருட்டு, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்பதிவு ஒன்றை வைத்து வரவேண்டும்: மாமூலான கடப்பாடு ஏற்பட்டிருப்பதையும், எந்த ஆதாரத்தில் அது உள்ளதோ அத்தகைய ஆதாரம் ஒவ்வொன்றின் சம்பந்த மாகவும் அதன் சரி நுட்பமான இயல்பையும் அப்பதிவில் குறிப்பிட்டிருக்க வேண்டும். மாமூலான கடப்பாட்டின் இயல்பு இன்னதென்று, கிராமத்தின் நிலத்தீர்வைப் பதிவேடுகளிலிருந்தும், வட்ட அலுவலகத்திலுள்ள பதிவேடு களிலிருந்தும், தெரியவரும். ஆதாரம் ஒவ்வொன்றின் சம்பந்தமாகவுமான விவரங்களை வட்டாட்சியரிடமிருந்து பெற்று, மேற்படி பதிவேடுகளில் எழுத வேண்டும்.

(iv) வட்ட அலுவலகத்தில் இரண்டு பதிவேடுகளை வைத்து வர வேண்டுமென வருவாய்த்துறை வாரியத்தின் 86 ஆவது நிலையாணையில் கண்ட (5) உள் பத்தியிலும், அந்த நிலையாணையின் I ஆம் இணைப்பிலும் II ஆம் இணைப்பிலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; அவையாவன :—

(அ) குறிப்பிட்ட வட்டத்திற்கான குடிமராமத்துப் பதிவேடு, ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு பக்கத்துடன்;

(ஆ) மேற்படி சட்டத்தின்படி வசூலிக்கப்பட்ட அபராதங்களையும் அவற்றின் தீர்வையும் காட்டும் பதிவேடு;

குடிமராமத்தினைச் செயலாற்றும் பொறுப்பை ஊராட்சிகள் மேற்கொள்ளும்போது அவைகளுக்கு இந்த இரண்டு பதிவேடுகளும் உபயோகமாயிருக்குமென்றும், எந்தெந்தப் பணிகள் குடிமராமத்துப் பொறுப்பின் வரம்பின் கீழ் வருவதாகக் கருதப்படவேண்டுமென்பதைக் காட்டுவதற்கு அப்பதிவேடுகளைப் பராமரித்து வருவது அவசியமென்றும் வருவாய்த்துறை வாரியத்தினர் அறிவித்திருக்கிறார்கள். தாலுகா அலுவலகத்தில் இப்போது வைத்துவரப் படுகிற இந்த இரண்டு பதிவேடுகளையும், வருவாய்த்துறை வாரியத்தினர் அவசியமெனக் கருதக்கூடிய மாறுதல்களுடன், ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றுக்காகவும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் வைத்து வரவேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள். வட்டாரத்திலிருக்கிற எந்த ஊராட்சியேனும் ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 85 (2) பிரிவின்படி அதிகாரத்தையும் பொறுப்பையும் மேற்கொண்ட பிறகு ஏதேனும் பாசன ஆதாரம் சம்பந்தமாகக் குடிமராமத்தினைச் செயலாற்றத்தவறிப் போனால், அப்போது, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவ்விஷயத்தை ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்குத் தெரிவித்து, அக்குழுவினர் அதிகாரத்தையும் பொறுப்பையும் மேற்கொண்டு குடிமராமத்தினைச் செயலாற்றலாமென ஆலோசனை கூறவேண்டும். இந்த முயற்சியும் தவறிப்போகிற மிக அபூர்வமான விஷயத்தில்தான், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், 1858 ஆம் ஆண்டின் தமிழ் நாடு கட்டாய உழைப்புச் சட்டத்தின் நிபந்தனைகளைச் செயற்படுத்துவதற்காக இச்செய்தியை வட்டாட்சியாளரின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டியிருக்கும்.

7. ஊராட்சி ஒன்றிய மன்றம் அமைக்கப்பட்ட பிறகு கூடிய விரைவில் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலுள்ள சிறுபாசன ஆதாரங்களைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்துக்கு மாற்ற ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இது சம்பந்தமாக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கையை அடுத்த இரண்டு ஜமாபந்திகளின் போது ஜமாபந்தி அலுவலர் மனு ஆய்வு செய்ய வேண்டும்:

அந்த மறு ஆய்வின் முடிவுகளை மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக வருவாய்த் துறை வாரியத்தினருக்கு அறிவிக்க வேண்டும். அடுத்த இரண்டு ஜமாபந்தி ஒவ்வொன்றுக்கும் பிறகு, இந்த ஆணையின்படி எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கையைக் குறித்து அரசினருக்கு ஒரு தனி அறிக்கை அனுப்பும்படி வருவாய்த் துறை வாரியத்தினர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(1960 ஏப்ரல் 16 ஆம் தேதியுள்ள 716 ஆம் எண் உள்ளாட்சித்துறை அரசாணை)

(107) **சிறுபாசன ஆதாரங்களை மாற்றுவது பற்றிய நிபந்தனைகள்.**—பாசன அலுவல்களை ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு மாற்றுவதற்கான விதிகளில் கண்டுள்ளவையும், 1960 அக்டோபர் 8-ஆம் தேதியுள்ள 1677 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறை (உ.ஆ.) பல்வகை அரசாணையில் வெளியிடப் பட்ட 24 ஆம் எண் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டவையுமான நிபந்தனை களில் ஒன்று பின்வருமாறு உள்ளது :—

"ஆயக்கட்டுதாரர்களில் பெரும்பான்மையோர் மாற்றத்தை விரும்பி னாலன்றி மாற்றம் செய்யக் கூடாது".

2. 1961 இல் சென்னையில் மாவட்ட ஆட்சியாளர்களுடன் நடத்தப்பட்ட துறை ரீதியான கூட்டத்திலே, சிறுபாசன ஆதாரங்களை ஊராட்சி ஒன்றியங் களின் ஒப்புவிப்பதற்கு முன் ஆயக்கட்டுதாரர்களின் இசைவைப் பெற வேண்டு மென்றே மேற்படி நிபந்தனையை ரத்து செய்து விட வேண்டுமென ஒப்புக் கொள்ளப்பட்டது.

3. அவ்வண்ணமே, மேலே (2) பத்தியின் குறிப்பிடப்பட்ட நிபந்தனையை எடுத்து விடுவதற்காகவும், தற்போதைய விதிகளில் தக்க திருத்தங்களைச் செய்வதற்காகவும், 1961 ஆகஸ்ட் 4 ஆம் தேதியுள்ள 2185 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் ஆணைகள் பிறப் பிக்கப்பட்டிருக்கின்றன.

4. 1961 ஆகஸ்ட் 4-ஆம் தேதியுள்ள 2185 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறை அரசாணையில் வெளியிடப்பட்ட திருத்தங் களைக் குறித்துக் கொள்ளும்படியும், 1960 ஏப்ரல் 16-ஆம் தேதியுள்ள 711 ஆம் எண் உள்ளாட்சித் துறை அராசாணையில் கண்டுள்ளவாறு, சிறுபாசன ஆதாரங் கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இது வரையில் மாற்றப்படாத இடங்களிலெல்

லாம் அவ்வாறு மாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யும்படியும் மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(1961 செப்டம்பர் 6 ஆம் தேதியுள்ள 25061/பி-2/61-1 ஆம் எண் குறிப்பாணை)

வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவையும், சிரமமான பாசனத்திட்டத்தின் பாகமாயிராதவையுமான சிறு பாசன ஆதாரங்களையெல்லாம், பராமரிப்புக்காகவும், பாதுகாப்புக்காகவும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்ற வேண்டுமெனக் கண்டு, 1960 ஏப்ரல் 16-ஆம் தேதியுள்ள 711 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு ஒப்புவிக்கப்பட்ட பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்கள் நிறைவேற்றுவது சாத்தியமாயிருக்கும்படி செய்யும் பொருட்டு, உள்ளூர்ப் பாசன உதவித் தொகை என்று சொல்லப்படும் தனி உதவித் தொகை ஒன்று, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒவ்வொன்றுக்கும் ஆண்டுதோறும் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென உத்தரவிடப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சியாளர் இந்த உதவித் தொகையின் அளவை, பின்வரும் அடிப்படையின் பேரில் ஒவ்வொரு வட்டாரத்துக்காகவும் நிச்சயிக்க வேண்டும் :—

(அ) குறிப்பிட்ட வட்டாரத்திலுள்ள சிறுபாசன ஆதாரங்கள் எல்லாவற்றையும் செப்பனிடுவதற்காக ஆண்டுதோறும் செலவழிக்கப்பட்ட சராசரித் தொகையை, 1959-60 ஆண்டோடு முடிவடைந்த ஐந்தாண்டுக் காலத்தில் உள்ளபடி செலவான தொகைகளையொட்டித் தீர்மானிக்க வேண்டும். இத்தொகையானது, அந்த ஆதாரங்களிலிருந்து நீர்ப்பாய்ச்சப் பெறும் எக்கரா ஒன்றுக்கு 2.50 ரூபாய்க்கு மேற்படாதிருந்து, அந்த ஆதாரங்களிலிருந்து நீர்பாய்ச்சப் பெறும் எக்கரா ஒன்றுக்கு 1.50 ரூபாய்க்கு குறைவாகவும் இராவிட்டால், அத் தொகையை உள்ளூர்ப் பாசன உதவித் தொகையாக நிச்சயிக்க வேண்டும்;

(ஆ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட சராசரி ஆண்டுத் தொகை அந்த ஆதாரங்களிலிருந்து நீர்ப்பாய்ச்சப் பெறும் எக்கரா ஒன்றுக்கு 1.50 ரூபாய்க்கு மேற்பட்டால், அப்போது, எக்கரா ஒன்றுக்கு 2.50 ரூபாயைக் குறிக்கும் தொகையை, தலபாசன உதவித் தொகையாக நிச்சயிக்க வேண்டும்;

(இ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட சராசரி ஆண்டுத் தொகை, அந்த ஆதாரங்களிலிருந்து நீர்ப்பாச்சப் பெறும் எக்கரா ஒன்றுக்கு 2.50 ரூபாய்க்குக் குறைவாயிருந்தால், அப்போது, எக்கரா ஒன்றுக்கு 1.50 ரூபாயைக் குறிக்கும் தொகையை, தலஉதவித் தொகையாக நிச்சயிக்க வேண்டும்.

அவ்வாறு கொடுக்கப்படும் உதவி தொகையை "ஊராட்சி ஒன்றிய (உற்பத்தி) நிதி"க்கு வரவாக வைக்க வேண்டும்; இதற்கு, ஊராட்சி ஒன்றியத் தின் பொது-கல்வி நிதிகளிலிருந்து வேறாகக் கணக்கு வைக்க வேண்டும். சிறுபாசனப் பணிகளுக்குப் பிடிக்கும் செலவைக் கொடுப்பதற்கு மட்டுமே அந்த உதவித் தொகை பயன்படுத்தப்படும்படி கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

2. இது சம்பந்தமாகப் பின்வரும் கூறுகளைப் பற்றி விளக்கங்களும் அறிவுரைகளும் தேவை எனக் கேட்கப்பட்டன :—

(i) உதவித் தொகைகள் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் மூலமாக ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மூலமாக ஊராட்சிகளுக்கும் கொடுக்கப்படுமா? அல்லது ஊராட்சிகளுக்கும் மன்றங் களுக்கும் ஊராட்சிகளுக்கு அல்லது மன்றங்களுக்கு நேரடியாகக் கொடுக்கப் படுமா? என்பது.

(ii) உதவித் தொகைகளுக்கு ஒப்பளிப்பு வழங்குகிற ஆணைகளிலே, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (அல்லது ஊராட்சிகள்) அவசியமான தீர்மானங் களை நிறைவேற்றியிருக்கின்றன என்று சான்றிடும்படி மாவட்ட ஆட்சியாளர் களுக்குச் சொல்லப்படுமா? என்பது;

(iii) அவ்வப்போது கொடுக்கப்படுகிற உதவித் தொகைகள் பயன் படுத்தப்பட்டதைப் பற்றி, (ஒன்றியக் குழுக்கள் அனுப்ப வேண்டிய செலவின் தணிக்கை செய்யப்பட்ட விவரப் பட்டியல்களை ஆதாரமாகக் கொண்டு) சான்று வழங்கும்படி கலெக்டர்களுக்குச் சொல்லப்படுமா என்பது;

(iv) உதவித்தொகை முன்னதாக கொடுக்கப்படுமா? அல்லது ஒவ்வோர் ஆண்டின் முடிவில் மட்டுமே அதற்கு ஒப்பளிப்பு வழங்கப்படுமா? என்பது;

(v) ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்ளபடி பிடித்த செலவு, அல்லது 1960 எப்ரல் 16-ஆம் தேதியுள்ள 711 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை யின் 5 (2) பத்தியில் வெளியிடப்பட்டுள்ள விளக்க உரைகளின் (அ), (ஆ), (இ) பகுதிகளையொட்டிக் கணக்கிடப்பட்ட தொகைகள் ஆகிய இவற்றில் எது குறைவாயிருக்கிறதோ அதன் அளவுக்கு உதவித் தொகைகள் வரையறுக் கப்படுமா என்பது;

(vi) மேலே (அ) பகுதியில் அடங்குகிற விஷயங்களில், செலவிடப் படாமல் எஞ்சி நிற்கும் ஏதேனும் தொகையை மாநில நிதிகளுக்குத் திருப்பித்

கொடுத்துவிட வேண்டுமா ? அல்லது அடுத்துவரும் ஆண்டு அல்லது ஆண்டு களில் செலவுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாமா ? என்பது ;

(vii) "உள்ளூர்ப் பாசன உதவித் தொகை"யை இன்ன கணக்குத் தலைப்புக்குப் பற்றாக எழுத வேண்டுமென்பது.

அரசினர் மேற்படி கூறுகளை ஆய்ந்து பார்த்தார்கள்; அவர்கள் பின் வரும் ஆணைகளைப் பிறப்பிக்கிறார்கள் :—

இனம் ( ).—*1960 ஏப்ரல் 16-ஆம் தேதியுள்ள 711 ஆம் எண் உள்* ளாட்சித் துறை அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளின்படி பாசனப் பணிகளைப் பாதுகாப்பது, பராமரிப்பது முதலியவை பற்றிய அலுவல் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டும் மாற்றப்பட்டிருக்கிறதேயல்லாமல், ஊராட்சிகளுக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள், அந்த ஆணைகளில் கண்டுள்ள சில வரையறைகளுக்குப்பட்டு, தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட எந்த ஊராட்சிக்கேனும் அந்த அலுவலை ஒப்புவிக்கலாம். உதவித் தொகைகள் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு நேரடியாகக் கொடுக்கப் படும்; அந்த ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், அவசியமானால், அந்த உதவித் தொகைகளை, அந்த அலுவல் மேற்கொண்ட ஊராட்சிகளிடையே பகிர்ந்து கொடுக்கலாம்.

இனம் (ii).—*1960 ஏப்ரல் 16-ஆம் தேதியுள்ள 711 ஆம் எண் உள்* ளாட்சித் துறை அரசாணையின் 5( ) பத்தியிலுள்ள விளக்க உரையையொட்டி ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அந்த அலுவலை மாற்றுவதற்கு முன் மாவட்ட ஆட்சியாளர், அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தீர்மானம் ஒன்றைப் பெற வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு முதல் தடவையாக உதவித் தொகையை ஒப்பளிப்பதற்கான நடவடிக்கைக் குறிப்புகளில், இத்தீர்மானம் கிடைத்ததைப் பற்றிக் கலெக்டர் குறிப்பிட வேண்டும்.

இனம் (iii)—ஒவ்வொரு நிதி ஆண்டின் முடிவிலும், மாவட்ட ஆட்சி யாளருக்கு சான்று ஒன்றை ஊராட்சி ஒன்றிய மன்றம் வழங்க வேண்டும். மாவட்ட ஆட்சியாளர் ஒவ்வொரு நிதி ஆண்டிலும், ஊராட்சி ஒன்றிய மன்றத் தினிடமிருந்து தாம் பெற்றுக் கொண்ட சான்றினை ஆதாரமாகக் கொண்டு, அவ் வப்போது கொடுக்கப்பட்ட உதவித் தொகைகள் பயன்படுத்தப்பட்டதைப் பற்றி அக்கவுன்டன்ட்-ஜெனரலுக்கு ஒரு சான்று கொடுக்க வேண்டும்.

இனங்கள் (iv) (v) (vi) உள்ளூர்ப் பாசன உதவித் தொகை, அரை யாண்டுக் கொரு முறை மீளும் தொகையாகும்; இது ஒவ்வோர் ஆண்டிலும்

ஜூலை சனவரி மாதங்களில், 1960 ஏப்ரல் 16-ஆம் தேதியுள்ள 711 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணையின் 5 (2) (ii) பத்தியில் வெளியிடப்பட்ட விளக்க உரைகளின் அடிப்படையின் பேரில் முன்னதாகக் கொடுக்கப்படத்தக்க தாகும். மாவட்ட ஆட்சியாளர்கள் தங்கள் மாவட்டங்களின் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு இந்த உதவித் தொகையை வழங்குவார்கள். ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தங்கள் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், "ஊராட்சி ஒன்றிய (உற்பத்தி) நிதி" என்னும் தலைப்பின் கீழ் இந்த உதவித் தொகையை வரவாகக் காட்ட வேண்டும். இந்த உதவித் தொகைக்குத் தனியாகக் கணக்கு வைத்து வரவேண்டும். இந்த சிறுபாசனப் பணிகளுக்குப் பிடிக்கும் செலவைக் கொடுப்பதற்கு மட்டும் இதைப் பயன்படுத்த வேண்டும். ஆயினும், செலவிடப் படாத மிச்சம் ஏதாகிலும் இருந்தால் அதை, ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டியதில்லை. ஒப்பளிக்கப்படுகிற உதவித் தொகையானது, சராசரிச் செலவை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்டுப் பெறப்படுகிறது; ஆகையால், ஒரு கால அளவு வரையில் மாத்திரமே அதைப் பயன்படுத்த முடியும். ஆகையால், பயன்படுத்துவது பற்றிய சான்று, பராமரிப்புச் செலவில் காணப்படும் பொது முன்னேற்றத்தை யொட்டியதாகவே இருக்க வேண்டும்.

இனம் (vii).—உள்ளூர் பாசன உதவித் தொகையை, "பாசனம் முதலியவை—சாதாரண வருவாயிலிருந்து பணம் கொடுக்கப்படுகிற பிற வருவாய்த் துறைச் செலவு—பாசனப் பணிகள்—பணிகள் (வாணிகம் சார்ந்திராதவை)—சிறு பாசனம்—வருவாய்த் துறை—1. உதவி மானியங்கள் 2. ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ளூர்ப் பாசன உதவித் தொகை" என்பதன் கீழ் "உதவி மானியங்கள்" என்னும் தற்போதைய சிறு தலைப்புக்குப் பற்றாக எழுத வேண்டும்.

3. பாசன ஆதாரங்களின் பராமரிப்புக்காக இப்போது செய்யப்படுகிற செலவுக்குப் பதிலாக, ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கு அந்த உதவித் தொகையைக் கொடுக்க வேண்டுமென்னும் (அக்கவுண்டன்ட்-ஜெனரலின்) ஊகம் சரியானது தான்.

4. வருவாய்த் துறை வாரியத்தின் 1961 ஏப்ரல் 29-ம் தேதியுள்ள 3140 ஆம் எண் வாலாயமான நடவடிக்கைகளில், 1961-62 ஆம் ஆண்டிலே சிறுபாசன ஆதாரங்களின் பராமரிப்புக்கும் பாதுகாப்புக்கும் பிடிக்கும் செலவினிமித்தம், மாவட்ட ஆட்சியாளர்கள் வசம் 40 லட்சம் ரூபாய் விட்டு வைக்கப்பட்டிருந்தது. ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சேர வேண்டிய சிறுபாசன உதவித் தொகையை மேற்படித் தொகையிலிருந்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சி

யாளர்கள், பராமரிப்புக்காகவும் பாதுகாப்புக்காகவும் சிறுபாசன ஆதாரங்கள் மாற்றப்பெற்றிருக்கிற தங்கள் மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியங் களுக்கு, 1960 ஏப்ரல் 16 ஆம் தேதியுள்ள 711 ஆம் எண் உள்ள உள்ளாட்சித் துறை அரசாணையில் கண்டிருப்பவையும் மேலே 1 ஆவது பத்தியில் குறிப்பிடப் பட்டிருப்பவையுமான கோட்பாடுகளின் அடிப்படையின்பேரில் பகிர்ந்தளிக்க வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள். மாவட்ட ஆட்சியாளர்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் பெற உரிமை உள்ளவை களாயிருக்கிற சரியான தொகை இன்னதென்பதைப் பற்றி அந்த ஒன்றியங்கள் ஒவ்வொன்றினிடமிருந்தும் அறிக்கைகளைப் பெற்று, அவற்றைக் கூராய்வு செய்து, ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் திட்ட வட்ட மான ஒப்பளிப்பு ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும். தனக்கு மாற்றப்பட்ட சிறுபாசன ஆதாரங்களின் பராமரிப்புக்காகவும் பாதுகாப்புக்காகவும் பொறுப் பினை ஏற்றுக்கொண்டு ஊராட்சி ஒன்றியம் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பற்றியும் சிறு பாசன ஆதாரங்களை மாற்றுவதற்காக மாவட்ட ஆட்சியாளர் பிறப்பித்த ஆணையைப் பற்றியும் ஒப்பளிப்பு ஆணையில் குறிப்பிட வேண்டும்.

5. மாவட்ட ஆட்சியாளர்களால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் ஒவ் வொன்றுக்கும் படி ஒன்றை, (i) ஊராட்சி நிதி இயக்குநருக்கும், (ii) அரசினரின் கிராம முன்னேற;ம்-உள்ளாட்சித்)துறையினருக்கும், (iii) (நில வருவாய்) வருவாய்த் துறை வாரியத்தினருக்கும் அனுப்ப வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கிடைக்கும்படிச் செய்யப்படும் தொகைகள் அவைகளிடம் ஒப்புவிக்கப்பட்ட சிறுபாசன ஆதாரங்களின் பராமரிப்புக்கும் பாதுகாப்புக்கும் மட்டும் பயன்படுத்தப்படும்படி மாவட்ட ஆட்சியாளர்கள பார்த்துக் கொள்ள வேண்டும்.

(1961 அக்டோபர் 12 ஆம் தேதியுள்ள 4459 ஆம் எண் வருவாய்த் துறைப் பல்வகை அரசாணை.)

வருவாய்த் துறையினரின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட சிறுபாசனக் குளங் களைப் பாதுகாப்புக்காகவும் பராமரிப்புக்காகவும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இக்குளங்களைப் பராமரித்து வரும் காரியங்களுக்காக, ஊராட்சி ஒன்றியங் களுக்கு உள்ளூர்ப் பாசன உதவித் தொகை கொடுக்கப்படுமென்றும்கூட அதில் ஆணையிடப்பட்டிருக்கிறது; அந்த உதவித் தொகையின் ஆய்வானது, வட்டாரம் ஒவ்வொன்றுக்காகவும், 1959-60 ஆம் ஆண்டோடு முடிவடைந்த ஐந்தாண்டுக் காலத்தில் அந்த ஆதாரங்களுக்காக உள்ளபடி பிடித்த செலவின் அடிப்படையின்பேரிலும், அந்த ஆதாரங்களிலிருந்து நீர்ப்பாய்ச்சப் பெறும்

ஏக்கரா ஒன்றுக்கு 2.50 ரூபாய்க்கு மேற்படாமலும் 1.50 ரூபாய்க்குக் குறையாமலும் கலெக்டரால் நிச்சயிக்கப்பட வேண்டும்.

முன்னாள் ஜமீன் பரப்புகளில் உள்ள குளங்களின் இப்போதைய நிலையில் அவைகளைப் பராமரிப்புக்காக ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்பளிப்பது நல்லதல்ல. எல்லா மாவட்டங்களிலும் எடுத்துக் கொள்ளப்பட்ட பரப்புகளில் இருக்கிற குளங்களுக்கு மேற்சொன்ன விளக்க உரைகள் பொருந்தமாட்டா.

நெடுஞ்சாலைத் துறையை, நெடுஞ்சாலை—கிராமப் பொறியியல் பணி என்னும் புதிய துறையாக மாற்றியமைப்பதற்காக, 1960 மே 9-ம் தேதியுள்ள 851-ம் எண் அரசாணையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது; மாவட்ட ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட சிறுபாசன சிப்பந்தி முழுவதும் இந்தப் புதிய துறையில் அடங்கும்படி செய்யப்பட்டது. இந்தப் பணித் தொகுதியை வருவாய்த் துறையினரின் கட்டுப்பாட்டிலிருந்து நெடுஞ்சாலை—கிராமப் பொறியியல் பணித் துறைக்கு மாற்றுவதானது 1961 ஏப்ரல் 1-ம் தேதி முதல் அமலுக்கு வரத் தொடங்கவேண்டுமென்றுங்கூட பின்னர் உத்தரவிடப்பட்டிருக்கிறது. சிறுபாசன ஆதாரங்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்படுகிற வரையில் அவைகளைப் பார்வையிடுவது செப்பனிடுவது முதலியவை சம்பந்தமாய் வருவாய்த் துறையினருக்குள்ள தொழில் நுட்பப் பொறுப்புகள் கூட, 1961 ஏப்ரல் 11-ம் தேதியுள்ள 1590 எண் வருவாய்த் துறைப் பல்வகை அரசாணையில், நெடுஞ்சாலை—கிராமப் பொதுப் பணித் துறையினருக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. ஆயினும், இப்பணிகள் சம்பந்தமாய் நிருவாக ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரங்கள், குளங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ளபடி மாற்றப்படுகிறவரையில், மாவட்ட ஆட்சியாளர்களிடமும் கோட்ட ஆட்சியாளர்களிடமும் தொடர்ந்து இருந்து வரும்.

ஆயினும், (உணவு உற்பத்தி) வருவாய்த் துறை வாரியத்தினரால் நிருவகிக்கப்படுகிற தனிச் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் அமர்த்திக் கொள்ளப்பட்டுள்ள தனிச் சிறுபாசன சிப்பந்திகள் வேறு படிநிலையில் இருக்கிறார்கள் தனிச்சிறுபாசனச் சிப்பந்திகள் இது வரையில் இருந்தது போலவே, எவ்வித மாறுதலும் இன்றித் தொடர்ந்து இருந்து வருவார்கள். முன்னாள் ஜமீன் குளங்களை வழக்கமான தரங்களுக்கு மீண்டும் கொண்டு வருவதற்கான பொறுப்புத் தனி சிறுபாசனப் பணித் தொகுதிகளிடம் உரித்தாக்கப்பட்டிருக்கும்.

தனி சிறுபாசனத் திட்டத்தின்படி, படி முறைத் திட்ட அடிப்படையின் பேரில் சீரமைப்புக்காகக் குளங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தனிச்

சிறுபாசனப் பணித் தொகுதிகளால் குளம் ஒன்று அவ்வாறு எடுத்துக் கொள்ளப்படுகிற வரையில், குளங்களின் நிருவாகப் பொறுப்பு மாவட்ட ஆட்சியாளர்களிடம் இருக்கும்; அக்குளங்களுக்கான தொழில் நுட்ப உத்தரவாதம் நெடுஞ்சாலை-கிராமப் பொதுப் பணித் துறையினரிடம் உரித்தாக்கப் பட்டிருக்கும்.

குளங்கள் வழக்கமான தரங்களுக்குச் சீரமைக்கப்படுந்தோறும், சீரமைக் கப்பட்டாலும், அக்குளங்கள் 1960 ஏப்ரல் 16-ம் தேதியுள்ள 711-ம் எண் உள் ளாட்சித் துறை அரசாணையின் கீழ் வரும்.

(108) பராமரிப்புப் பணியைச் செய்து முடிப்பது சம்பந்தமாக விதிகளைப் பொருந்தும்படி செய்தல்.—மேற்கண்டவாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்ட சிறுபாசனப் பணிகளின் பராமரிப்பைச் செய்து முடிக்கும் விஷயத்தில், 1961 மே 22-ம் தேதியுள்ள 1441-ம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறை அரசாணையில் அல்லது 1961 ஜூலை 25-ம் தேதியுள்ள 2103-ம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் பிறப் பிக்கப்பட்ட விதிகளைப் பின்பற்ற வேண்டுமா என்னும் பிரச்சினை ஒன்று எழுப் பப்பட்டிருக்கிறது. 1961 ஜூலை 25-ம் தேதியுள்ள 2103-ம் எண் கிராம முன் னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையானது, கிராமப் பணிகள் உதவித் தொகையின்கீழ் மட்டும் எடுத்துக் கொள்வதற்குப் பொருந்தக் கூடிய தனி ஆணையாகும்; ஆகையால் அது, சிறுபாசனப் பணிகளின் பராமரிப்பைச் செய்து முடிப்பதற்குப் பொருந்தக்கூடியதல்லாத ஊராட்சி ஒன்றிய மன்றங் களால் அல்லது அவைகள் சார்பில், இன்ன நிபந்தனைகளின் பேரிலும் இன்ன விதமாகவும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம் என்பது பற்றிய பொது விதிகள், 1961 மே 22-ம் தேதியுள்ள 1441-ம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறை அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்பளிக்கப்பட்ட சிறுபாசனப் பணிகளின் பராமரிப்பைச் செய்து முடிக்கும் விஷயத்தில் இவ்விதிகளைப் பின்பற்ற வேண்டுமென அரசினர் கட்டளையிடுகிறார்கள்.

(1961 சனவரி 9-ம் தேதியுள்ள 222883 கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறை P2-61-3-ம் எண் குறிப்பாணை.)

(109) ஆற்றுப் பாசனத் திட்டத்தின் பாகமாயிருக்கிற சிறுபாசன ஆதாரங்களின் பாதுகாப்பையும் பராமரிப்பையும் மாற்றுவது.—சிறுபாசன சிப்பந்திகளை 1961 ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து நெடுஞ்சாலை—கிராமப் பொதுப் பணித் துறையுடன் சேர்த்து விட்டபடியால், ஆற்றுப் பாசன திட்டத்தின்

பாகமாயிருக்கிற பாசன ஆதாரங்களின் பாதுகாப்பையும் பராமரிப்பையும் கவனித்துக் கொள்வதற்காக, வருவாய்த் துறையைச் சேர்ந்த தொழில் நுட்ப பணித் தொகுதியினர் இருக்கிறார்கள். இந்த ஆதாரங்களை இனிமேல் பாது காத்துப் பராமரிப்பதற்காக, நெடுஞ்சாலை—கிராமப் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டுக்கு மாற்ற வேண்டுமென ஊகிக்கப்பட்டது.

2. 1961 ஏப்ரல் 11-ம் தேதியுள்ள 1590-ம் எண் வருவாய்த் துறைப் பல்வகை அரசாணையில் உள்ள உத்தரவுகளைக் கவனிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறது; சிறுபாசன ஆதாரங்களின் பராமரிப்புக்கும் சீரமைப்புக் கும் சம்பந்தப்பட்ட பெரிய நிருவாகப் பணி இனங்களை 1961 ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து நெடுஞ்சாலை-கிராமப் பொதுப் பணித் துறைக்கு மாற்றிவிட லாமென்று அவ்வுத்தரவுகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இத்தகைய சூழ் நிலையில், ஆற்றுப் பாசனத் திட்டத்தின் பாகமாயிருக்கிற சிறுபாசன ஆதாரங் களின் பாதுகாப்பையும் பராமரிப்பையும் வருவாய்த் துறையினரிடமிருந்து நெடுஞ்சாலை-கிராமப் பொதுப் பணித் துறையினரின் கட்டுப்பாட்டுக்கு மாற்றி விட வேண்டுமென்னும் ஊகம் சரியானது தான்.

(1962 சனவரி 18-ம் தேதியுள்ள 240659 கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறை P 2-61-3-ம் எண் குறிப்பாணை.)

(110) "ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்ட சிறுபாசன ஆதாரங்கள் சாதாரண பராமரிப்பும் சீரமைப்புகளும் வழக்கமான சுற்று முறையில் பொதுவாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்றும், அந்தச் சுற்று முறையில் குளம் ஒவ்வொன்றும் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கொரு முறை கவனிக்கப் படுமென்றும், முதல் பணி சரியாகச் செய்யப்பட்டு, சாதாரண பராமரிப்பும் தக்கபடி கவனிக்கப்பட்டால், அந்தக் குளமானது அடுத்த தடவை செப்பனிடு வதற்காக அதன் முறை வருகிற வரையில் நீடித்திருக்க வேண்டும்" என்றும், (உணவு உற்பத்தி) வருவாய்த் துறை வாரியத்தினர், 1962 செப்டம்பர் 4-ம் தேதியுள்ள 24678/62 (FP II A) எண் இட்ட தங்கள் கடிதத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். உள்ளூர் பாசன உதவித் தொகை போதாது என்று ஊராட்சி ஒன்றியங்கள் முறையிட்டுக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வோர் ஆதாரத்தையும் ஒவ்வோர் ஆண்டிலும் செப்பனிட வேண்டுமென்ற தப் பெண்ணத்தின் பேரில் அவ்வாறு அவைகள் முறையிட்டுக் கொண்டிருப்பதாக தெரிகிறது.

2. ஆகையால், பராமரிப்புக்காகவும், சீரமைப்புக்காகவும் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றினிடமும் ஒப்பளிக்கப்பட்ட குளங்களைச் சுற்றுவ

செய்தல், சந்தர்ப்பத்துக் கேற்ப மூன்று, நான்கு அல்லது ஐந்து வருட காலத்துக்குப் பரவலாக செப்பனிடுகளின் சுழற்சி முறையைத் தயாரித்துப் பராமரிப்புக்காகவும் செப்பனிடுகளுக்காகவும் அவ்வாறு தயாரிக்கப்பட்ட திட்டத்தை அனுசரித்து மட்டுமே பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் அவசியத்தை ஊராட்சி ஒன்றியத்துக்கு வற்புறுத்திச் சொல்லும்படி மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் அத்தகைய சுழற்சி முறையை முறைப்படி பின்பற்றுகின்றனவா என்று கவனித்துப் பார்க்கும்படியும் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுப்பப்பட்ட விளக்க உரைகளின் படி ஒன்றை, அரசினருக்கும் (நில வருவாய்) வருவாய்த் துறைக் கழகத்திலிருக்கும் (நெடுஞ் சாலை-கிராமப் பொதுப் பணித் துறை) தலைமைப் பொறியாளருக்கும் அனுப்ப வேண்டும்.

(1962 நவம்பர் 24-ம் தேதியுள்ள 214036/P 2-62-2-ம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

தமிழ்நாடு அரசு

சுருக்கங்கள்.

73. **இணை வளர்ச்சி ஆணையாளர், கூட்டு வளர்ச்சி ஆணையாளர் பற்றிய குறிப்பீடுகளுக்குப் பொருள் பண்ணுவது.**—“(1958-ம் ஆண்டின் 35 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் படி வெளியிடப்பட்ட விதிகளில், விளம்பரங்களில், துணைச் சட்டங்களில், ஆணைகளில், படிவங்களில் அல்லது திட்டங்களில் இணை வளர்ச்சி ஆணையாளர் அல்லது கூட்டு வளர்ச்சி ஆணையாளர் பற்றிய ஏதேனும் குறிப்பீட்டுக்கு, கிராம வளர்ச்சி இயக்குநர் பற்றிய குறிப்பீடு என்று பொருள் பண்ண வேண்டும்.”

(1965 டிசம்பர் 3-ம் தேதியுள்ள 2585-ம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

74. ஊராட்சிகளிடம் உரித்தாக்கப்பட்டுள்ள நிலங்களில் கல்வெட்டி யெடுக்கும் உரிமைகளின் பயனீட்டை முறைப்படுத்துவது.

1. **சிறு தலைப்பு.**—இவ்விதிகளை, தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (ஊராட்சிகளிடம் உரித்தாக்கப்பட்டுள்ள நிலங்களில்) கல்வெட்டியெடுக்கும் உரிமைகளின் பயனீட்டை முறைப்படுத்துவதற்கான 1963-ம் ஆண்டின் விதிகள் என்று சொல்லலாம்.

2. 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 72-ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படியும், 76-ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படியும், 84-ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படியும், 86-ஆவது பிரிவைச் சேர்ந்த (2), (4) உட்பிரிவுகளின்படியும் ஓர் ஊராட்சியிடம் உரித்தாக்கப்பட்டுள்ள ஏதேனும் பொது நிலத்திலே கனிப்பொருள்களை அகற்றுவதற்கான அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிறது.

3. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், மேலே 1-ஆவது விதியின்படி கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களை, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஒப்புதலுடன், 1959-ஆம் ஆண்டின் தமிழ்நாடு சிறு கனிப்பொருள்கள் சலுகை விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கிற விதிகளுக்கு ஒழுங்குமுறைகளுக்கும் உட்பட்டும் செலுத்த வேண்டும்.

(1963 சூலை 2-ஆம் தேதியுள்ள 1400-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1965 மார்ச் 2-ஆம் தேதியுள்ள 697-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

1961 பிப்ரவரி 9-ஆம் தேதியுள்ள 375-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையில் பின்வரும் விளக்க உரைகள் பிறப்பிக்கப்பட்டன; அவையாவன :—53-ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு சொல்லமைப்பில் மிகப் பொதுப்படையாயிருந்த போதிலும், நியமனக் குழுவிற்குக் கூட உறுப்பினர்களாக வெளியார்களையும் சேர்த்துக்கொள்ள ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அதிகாரம் கொடுத்தபோதிலும், கருத்து என்னவென்றால், சேர்த்துக் கொள்வதற்காக (2) உட்பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம், அப்பிரிவின் (1) உட்பிரிவைச் சேர்ந்த (ஆ) பகுதியில் குறிப்பிட்டிருக்கிற குழுக்களுக்கு மாத்திரம், அதாவது, கல்விக் குழு—பொதுக் காரியங்கள் குழு—(ஆ) பகுதியில் குறிப்பிட்டிருக்கிற மற்றக் குழுக்கள் ஆகியவைகளுக்கு மாத்திரம் பொருந்த வேண்டுமேயல்லாமல், (அ) பகுதியின்படி அமைக்கப்படும் நியமனக் குழுவிற்குப் பொருந்தாது என்பதேயாகும்; இக்கருத்தைத் தெளிவாக்கும் பொருட்டு, (2) உட்பிரிவைத் தக்கவாறு திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். அந்த உட்பிரிவு அவ்வாறு திருத்தப்படுகிற வரையில், மேலே விளக்கப்பட்ட நிலையைக் கருத்தில் கொள்ளும்படியும், நியமனக் குழுவின் உறுப்பினராக எவரையும் சேர்த்துக் கொள்ளாதிருக்கும்படியும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

2. மேற்படிச் சட்டத்தின் 53-ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட நிபந்தனைகளின் உட்கருத்து இப்போது மீண்டும் ஆய்ந்து பார்க்கப் பட்டது. மேற்படி சட்டத்தின் 53-ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரி விற்குத் திரிபு தளர்வில்லாமல் பொருள் கொள்வதாயிருந்தால் பின்வரும் நிலை ஏற்படுமென்று அரசினருக்கு ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது; அதாவது, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களாயிராதவர்களை மன்றத்தின் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்வதற்கான அதிகாரமானது, தாங்களாகவே அல்லது அரசினர் கட்டளையிடுவதன் பேரில் ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் நியமிக்கப்படுகிற குழுக்களுக்கு மட்டுமே வரையறுக்கப்படும்; சேர்த்துக் கொள்வதற்கான மேற்சொன்ன அதிகாரம், சட்டப்படி அமைக்கப்படுகிற நியமனக் குழு, கல்விக் குழு, பொதுக் காரியங்கள் குழு ஆகிய மூன்று குழுக் கள் சம்பந்தமாகப் பொருந்தாது.

3. ஆகையால், 1961 பிப்ரவரி 9-ஆம் தேதியுள்ள 375-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணையின் 2-ஆவது பத்தியில் கண்ட உத்தரவுகளை மாற்றி, ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், மேலே 2-ஆவது பத்தியில் காட்டப்பட்ட கண்டிப்பான சட்ட நிலைமையை உத்தேசித்து, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களாயிரா தவர்களை, நியமனக் குழு, கல்விக் குழு, பொதுக் காரியங்கள் குழு ஆகிய மூன்று சட்டப் பூர்வமான குழுக்களில் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

(1965 மே 29-ஆம் தேதியுள்ள 1240-ஆம் எண் கிராம முன்னேற்றம்-
உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களை வகைதொகையின்றி அடிக்கடி மாற்றிக் கொண்டிருப்பதனால் அந்த ஆசிரியர்களுக்குப் பெரிதும் தொல்லையும் பள்ளிகளில் வேலைச் சீர்குலைவும் உண்டாகின்றன என்று அரசினருக்குப் பல முறையீடுகள் வந்திருக்கின்றன. ஆகையால், இத்திட்டத்தைப் பகுத்தறிவுக் கேற்ற வகையில் சீர்திருத்தம் செய்வதன் அவசியத்தைப் பற்றி அரசினர் கவன மாக ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள்; ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களை மாற்றுவது சம்பந்தமாகப் பின்வரும் நடைமுறையை அனுசரிக்க வேண்டுமெனக் கட்டளையிடுகிறார்கள். பள்ளி ஆண்டின் தொடக்கத்துக்குமுன், மாற்றங்கள் கோரி ஆசிரியர்கள் செய்து கொள்ளும் விண்ணப்பங்களும், நிருவாகக் காரணங்களை முன்னிட்டு, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் எடுத்துக் கூறும் மாற்றுவதற்கான செயல் குறிப்புகளும் அதற்கென அமைக்கப்பட்ட ஒரு சபையின் முன்னர் வைக்கப்படும்; இச்சபைக்குக் கோட்ட ஆட்சியாளர் தலைவ ராகவும், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பெருந் தலைவரும் அப்பிரதேசத்தின் விசாரணை அதிகாரமுடைய மாவட்டக் கல்வி அலுவலரும் உறுப்பினர்களாகவும்,

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் செயலாளராகவும் இருப்பார்கள். அதற்கென அமைக்கப்பட்ட இச்சபை செயற்குறிப்புகளைக் கூராய்வு செய்து, தீர்மானங்கள் செய்ய வேண்டும்; இத்தீர்மானங்கள் எழுதி வைக்கப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் சற்றும் பிறழாமல் இத்தீர்மானங்களைச் செயற்படுத்த வேண்டும்.

2. அதற்கென அமைக்கப்பட்ட இச்சபை, சாதாரணமாக, ஏப்ரல், மே மாதங்களில் கூடி, ஆண்டுத் தொடக்கத்துக்கு முன் மாற்றச் செயற் குறிப்புகளை முடிவு செய்ய வேண்டும்.

3. மாற்றம் கோரும் விண்ணப்பங்களையும் மாற்றத்துக்கான செயற் குறிப்புகளையும் பள்ளி ஆண்டின் தொடக்கத்துக்குப் பிறகு சாதாரணமாக ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஆண்டு நடந்து கொண்டிருக்கையில் அத்தகைய செயற்குறிப்புகளைப் பற்றி ஆலோசிக்க வேண்டியிருக்கிற அசாதாரண சந்தர்ப்பங்களில், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அச்செயற்குறிப்புகளை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் மூலமாக மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பி, அவர் இசைவைப் பெற்றுக்கொண்ட பிறகு மட்டுமே மாற்றம் செய்ய வேண்டும்.

இந்த நடைமுறை உடனே அமலுக்கு வரத் தொடங்கும். அதற்கென அமைக்கப்பட்ட சபை இந்த ஆண்டுக்காகக் கூடிய விரைவில் கூடி, மாற்றச் செயற்குறிப்புகளை முடிவு செய்யலாம்.

(1965 மே 29-ஆம் தேதியுள்ள 1238-ஆம் எண் கிராமமுன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(i) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி ஆய்வாளருக்குள்ள அதிகாரங்களையும் கடமைகளையும் செலுத்துவதற்காக நியமிக்கப்படும் அலுவலர்கள்

அலுவலர்கள்.	1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகள்.	ஊராட்சிகள் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றங்கள்.
(1)	(2)	(3)
தமிழ்நாடு கிராம வளர்ச்சி இயக்குநர்.	(அ) பிரிவுகள் 28 (1), 49, 51 (1), 51 (2), 55 (3), 99(1), 99(2), 100(2) (ஈ), 100 (3) (அ), (ஆ) 139 (1), 139 (4), 142, 145 (1), 146, 147, 148, 149, 155 (4), 156, 157 (2), 158, 173, 180(1), IV-ஆம் அட்டவணையில் 14-ஆவது விதி.	பொதுவாக, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் சம்பந்தமாக.
	(ஆ) பிரிவுகள் 3 (2), 6, 16, 60 (1), 157 (3).	பொதுவாக ஊராட்சிகள் சம்பந்தமாக.

(1965 செப்டம்பர் 29 ஆம் தேதியுள்ள 2191 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

மாவட்ட ஆட்சியாளர்.	(அ) பிரிவுகள் 3 (1), 3 (4), 8, 10 (1), 10 (2), 15, 17 (1), 17 (3) (இ), 18 (1), 28 (1), 34 (3), 49, 51 (1), 51 (2), 52 (1), 57 (3), 82 (1) (இ), 99 (2), 100 (2) (ஈ), 100 (3) (அ), (ஆ), 106 (ஆ), 119 (3), 139 (1), 139 (4), 140 (3), 142, 145 (1), 146, 147, 148, 149, 150 (1), 150 (2), 150 (11), 150 (12), 152 (12), 152 (13), 156, 157 (13), 158, 173, 180 (1), 182 (1), 188 (3), IV ஆம் அட்டவணையின் 7 (2), 11 (5) விதிகள்.	ஊராட்சி சம்பந்தமாக.

(ஆ) பிரிவு 157 (2). ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் சம் பந்தமாக.

(1961 மே 10-ம் தேதியுள்ள 1334-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1961 டிசம்பர் 5-ஆம் தேதியுள்ள 3202-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1963 நவம்பர் 19-ஆம் தேதியுள்ள 2420-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1965 ஏப்ரல் 26-ஆம் தேதியுள்ள 962-ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி அரசினரிடம் உரித்தாக்கப்பட்டவையும், தமிழ் நாடு கிராம வளர்ச்சி இயக்குநருக்கு ஒப்படைக்கப்பட்டவையுமான அதிகாரங்கள் :—

சட்டத்தின் பிரிவு	அதிகாரங்களின் தன்மை.
(1)	(2)
3 (3)	உள்ளூர்ப் பரப்புக்களை பேரூர் ஆட்சிகள் என்றும் ஊராட்சிகள் என்றும் வகைப்படுத்தி அறிவிப்பது சம்பந்தமாக, மேற்படிச் சட்டத்தில் கண்ட 3 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படிக்கான அல்லது (2) உட்பிரிவின் படிக்கான விளம்பரங்களை எதிர்த்துச் செய்து கொள்ளப்படும் மேல்முறையீடுகளைத் தீர்வு செய்வதற்கான அதிகாரம்.
4 (1)	மேற்படி சட்டத்தில் கண்ட 3 (1) பிரிவின்படி அறிக்கையிடப்பட்ட பேரூர் ஆட்சியாக அல்லது ஊராட்சியாக ஒரு உள்ளூர்ப் பரப்பு வகைப்படுத்தப்பட்டிருப்பதை மாற்றுவதற்கான அதிகாரம்.

சட்டத்தின்பிரிவு (1)	அதிகாரங்களின் தன்மை (2)
17 (2) உட்பிரிவின் விலக்கு நிபந்தனை	காலி நேரிட்ட பிறகு சாதாரணத் தேர்தல் நடத்தும்படி கட்டளையிடுவதற்கான அல்லது அனுமதி கொடுப்பதற்கான அதிகாரம்.
20 (2)	ஊராட்சிகளின் வாக்காளர் பட்டியல்களை இன்ன விதமாக வெளியிட வேண்டுமெனக் கட்டளையிட அதிகாரம்.
20 (4)	ஊராட்சியின் வாக்காளர் பட்டியல்களை அல்லது அப் பட்டியலின் ஏதேனும் பாகத்தை இன்ன விதமாக மாற்றியமைத்து மீண்டும் வெளியிட வேண்டுமெனக் கட்டளையிட அதிகாரம்.
21	ஊராட்சியின் வாக்காளர் பட்டியலுக்குத் திருத்தங்களை இன்ன விதமாக வெளியிட வேண்டுமெனக் கட்டளையிட அதிகாரம்.
44 (1)	ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்களின் நியமனம்.
57 ( )	ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கை, பதவிப் பெயர், படித்தரங்கள், சம்பளங்கள், கட்டணங்கள், படிகள் ஆகியவற்றை நிச்சயிப்பதற்கும் அல்லது மாற்றுவதற்கும், மேற்படி அதிகாரத்தைக் கொண்டு நிச்சயிக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட எண்ணிக்கை, பதவிப் பெயர்கள், படித்தரங்கள், சம்பளங்கள், கட்டணங்கள் அல்லது படிகளை மாற்ற ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு முன் ஒப்பளிப்பு வழங்குவதற்கும் அதிகாரம்.
60 (2)	ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலரை அல்லது பணியாளரை, இம்மாநிலத்திலிருக்கிற வேறு எந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது நகராட்சியின் பணிக்கு மாற்றுவதற்கான அதிகாரம்.

சட்டத்தின்பிரிவு (1)	அதிகாரங்களின் தன்மை (2)
101	ஓர் இடம் அங்காடியா அல்லவா என்பதை நிச்சயிக்க அதிகாரம்.
104	பொது அங்காடிகளையும், தனியார் அங்காடிகளையும் ஊராட்சி ஒன்றிய அங்காடிகள் எனவும், ஊராட்சி அங்காடிகள் எனவும் வகைப்படுத்துவதற்கும், அந்தகைய ஏதேனும் அங்காடி விஷயமாக மேல் விசாரணை செய்யவும் அதிலிருந்து கிடைக்கிற வருமானத்தை ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும் ஊராட்சிக்கும் இடையில் பகிர்ந்தளிக்கவும் அல்லது அது சம்பந்தமாக ஓர் உதவித் தொகையைச் சந்தர்ப்பத்துக்கேற்ப ஊராட்சிக்காவது ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்காவது கொடுக்கவும் ஏற்பாடு செய்வதற்குமான அதிகாரம்.
121 (5)	ஒரு வருவாய்த் துறை மாவட்டத்தில் விசாரணை அதிகாரமுடைய ஒரு உள்ளாட்சிக் கழகத்துக்கும், மற்றொரு வருவாய்த் துறை மாவட்டத்தில் விசாரணை அதிகாரமுடைய மற்றொரு உள்ளாட்சிக் கழகத்துக்கும் இடையே தொழில் வரியைப் பகிர்ந்தளிக்க அதிகாரம்.
125	குறிப்பிட்ட எவ்விஷயத்திலேனும் மேற்படி சட்டத்தில் குறித்துள்ள மேல் வரியை அல்லது வரியைச் செலுத்துவதனின்றும் விலக்களிக்க அதிகாரம்.
128	உள்ளூர்க் கல்வி உதவித் தொகையை ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றுக்கும் ஆண்டுதோறும் கொடுப்பது.
136	ஊராட்சி ஒன்றியப் (பொது) நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றியக் (கல்வி) நிதிக்குப் பண உதவி செய்வது பற்றித் தீர்மானித்தல்.
139 (1)	ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்துக்குள் இருக்கிற ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் நிதிகளிலிருந்து செலவு செய்வது பற்றித் தனி ஆணைகள் பிறப்பிக்க அதிகாரம்.

சட்டத்தின் பிரிவு. (1)	அதிகாரங்களின் தன்மை. (2)
140 (6)	ஊராட்சி ஒன்றிய வரவு செலவுத் திட்டங்களின் பேரில் ஆணைகள் பிறப்பிக்க அதிகாரம்.
140 (7)	ஊராட்சி ஒன்றியக் (கல்வி) நிதிக் கணக்குகளின் தணிக்கை அறிக்கைகள் பற்றி விளக்க உரைகள் பிறப்பிக்க அதிகாரம்.
151 (1), (2) (13)	வேண்டுமென்றே தவறு செய்வதற்காக அல்லது சட்டம் விதிகள் முதலியவற்றின் நிபந்தனைகளை நிறைவேற்ற மறுப்பதற்காக அல்லது அவைகளை மீறி நடப்பதற்காக அல்லது தம்மிடம் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்காக ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பெருந்தலைவரை அல்லது துணைப் பெருந்தலைவரை நீக்குவதற்கான அதிகாரம்.
153 (13)	ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பெருந் தலைவரிடம் அல்லது துணைப் பெருந் தலைவரிடம் நம்பிக்கையின்மை தெரிவித்து, அந்த ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களின் ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டால், அவரை நீக்குவதற்கான அதிகாரம்.
177 (1)	ஒரு வருவாய்த் துறை மாவட்டத்தில் விசாரணை அதிகாரமுடைய ஒரு உள்ளாட்சிக் கழகத்துக்கும், மற்றொரு வருவாய்த் துறை மாவட்டத்தில் விசாரணை அதிகாரமுடைய மற்றொரு உள்ளாட்சிக் கழகத்திற்கும் இடையிலான தகராறுகளில் தீர்ப்புக் கூறுவதற்கான அதிகாரம்.

(1965 செப்டம்பர் 29-ம் தேதியுள்ள 2191-ம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

(1965 அக்டோபர் 11-ம் தேதியுள்ள 2238-ம் எண் கிராம முன்னேற்றம்—உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாணை.)

1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி அரசினரிடம் உரித்தாக்கப்பட்டவையும் மாவட்ட ஆட்சியாளரிடம் ஒப்படைக்கப்பட்டவையு மான அதிகாரங்கள்.

சட்டத்தின் பிரிவு	அதிகாரங்களின் தன்மை
(1)	(2)
40 (1)	ஒரு பேரூராட்சி மன்றத்துக்கு முழு நேர நிருவாக அலுவலர் ஒருவரை நியமிக்க அதிகாரம்.
60 (2)	ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஓர் அலுவலர் அல்லது பணியாளரை, அந்த மாவட்டத்துக்குள் வேறொரு ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது ஒரு நகராட்சியின் ஊழியத் துக்கு மாற்ற அதிகாரம்.
76 (2)	ஓர் ஊராட்சியிடம் உரித்தாக்கப்பட்டுள்ள ஏதேனும் பொதுச் சாலை, சாக்கடை, வடிகால் முதலியவைகளைச் சட்டத்தின் பிரயோகத்தினின்று மட்டும் விலக்க அதிகாரம்.
77 (2)	ஓர் ஊராட்சி ஒன்றியச் சாலை, சாக்கடை, வடிகால் முதலியவற்றைச் சட்டத்தின் பிரயோகத்தினின்றும் விலக்க அதிகாரம்.
78	சட்டத்தின் பிரயோகத்தினின்றும் விலக்கப்பட்ட பொதுச் சாலைகளில் தண்ணீர் தெளித்தல் முதலியவைகளுக்காக ஏற்பாடு செய்யும்படி ஓர் ஊராட்சிக்கு உத்தரவு செய்ய அதிகாரம்.
83	ஏதேனும் சொத்து அல்லது வருமானம் ஓர் ஊராட்சி யிடம் உரித்தாக்கப்படுமென்று அறிவித்தல்.
84 (2)	பொது நீர்க்கால்கள், ஊற்றுகள் முதலியவை மீதான மேல் விசாரணையை வரையறுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவ தற்கு அல்லது ஏதேனும் நீர் வழங்கீட்டுப் பொது ஆதாரம் இரண்டு பரிபாலனத்தாருக்குப் பயன்படும்படி செய்வதற்கு அதிகாரம்.
85	ஏதேனும் பாசனப் பணியின் பாதுகாப்பையும் நிருவாகத் தையும், அல்லது பாசன முறை வரவுகளின் நிருவாகத்தை அல்லது ஏதேனும் பாசனப் பணியை நம்பியிருக்கிற வயல்

சட்டத்தின் பிரிவு. (1)	அதிகாரங்களின் தன்மை. (2)
	களுக்கு அதிலிருந்து தண்ணீர் பகிர்ந்தளிப்பதை முறைப்படுத்துவதை ஓர் ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு மாற்ற அதிகாரம்.
86	புறம்போக்கின் பயனீட்டை முறைப்படுத்த ஓர் ஊராட்சிக்கு அனுமதி அளிப்பதற்கான அதிகாரம்.
90	யாத்திரைத் தலங்கள் பற்றி மேல் விசாரணை அதிகாரமுள்ளவர்கள் ஓர் ஊராட்சியின் நிதிகளுக்குப் பண உதவி செய்யும்படிக் கேட்க அதிகாரம்.
119	நில வருவாய் ஒப்படைப்புத் தொகையை ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றுக்கும் கொடுப்பது.
121 (5)	ஒரே வருவாய்த் துறை மாவட்டத்திலிருக்கிற உள்ளாட்சிக் கழகங்களிடையே தொழில் வரியைப் பங்கிடு செய்ய அதிகாரம்.
123	உள்ளூர் வரி மேல் வரி ஈட்டுத் தொகையை ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றுககும் ஒவ்வோர் ஆண்டும் கொடுப்பது.
131	தல சாலைகள் உதவித் தொகையை ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் ஆண்டும் கொடுப்பது.
132	கிராம வீட்டு வரி ஈட்டுத் தொகையை ஊராட்சி மன்றங்களுக்குக் கொடுப்பது.
139 (1)	ஓர் ஊராட்சிக்குள் அல்லது பேரூராட்சிக்குள் இருக்கிற ஊராட்சி மன்றத்தின் அல்லது பேரூராட்சி மன்றத்தின் நிதிகளிலிருந்து செய்யப்படும் செலவு சம்பந்தமாகத் தனி ஆணைகள் பிறப்பிக்க அதிகாரம்.
140 (3)	ஊராட்சி ஒன்றிய வரவு செலவுத் திட்டத்தை மாற்றியமைக்க அதிகாரம்.
140 (7)	சம்பந்தப்பட்ட மாவட்டத்திலே ஊராட்சி ஒன்றியக் (கல்வி) நிதியின் கணக்குகள் பற்றிய தணிக்கை அறிக்கைகள் மீது விளக்க உரை பிறப்பிக்க அதிகாரம்.

சட்டத்தின் பிரிவு (1)	அதிகாரங்களின் தன்மை (2)
143	அரசினர் கொடுத்த கடன்களையும் முன்பணங்களையும் வசூலிப்பதற்காகக் கட்டளைகள் பிறப்பிக்க அதிகாரம்.
154 (5)	ஓர் ஊராட்சியின் கலைப்புக் காலத்தில் அதன் சார்பில் ஊராட்சி ஒன்றிய மன்றம் அடைந்த சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அல்லது நிறுவனங்களையும் ஊராட்சி ஒன்றிய மன்றத்திலிருந்து ஊராட்சிக்கு மாற்றுவது பற்றி ஆணைகள் பிறப்பிக்க அதிகாரம்.
154 (6)	கலைப்புக்குப் பிறகு மீண்டும் அமைக்கப்பட்ட ஓர் ஊராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் கழிவாகும் தேதியை நிச்சயிக்க அதிகாரம்.
169 (3)	ஓர் ஊராட்சியின் தலைவர் அல்லது நிருவாக அதிகாரி அல்லது உறுப்பினர் மீது வழக்குத் தொடர்வதற்கு ஒப்பளிப்பு வழங்க அதிகாரம்.
177 (1)	ஒரே வருவாய்த் துறை மாவட்டத்துக்குள் இருக்கிற உள்ளாட்சிக் கழகங்களிடையே தகராறுகளில் தீர்ப்புச் சொல்ல அதிகாரம்.

(1960 சனவரி 12 ஆம் தேதியுள்ள 76 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1960 சூலை 29 ஆம் தேதியுள்ள 1278 ஆம் என் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1962 பெப்ரவரி 7 ஆம் தேதியுள்ள 305 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1965 மார்ச் 2 ஆம் தேதியுள்ள 500 ஆம் எண் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

75. ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் பெண்களையும் அட்டவணையில் கண்ட இனங்களைச் சேர்ந்தவர்களையும் அட்டவணையில் கண்ட பழங்குடிகளைச் சேர்ந்தவர்களையும் சேர்த்துக் கொள்வது.—ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பெருந்தலைவரையும் துணைப் பெருந்தலைவரையும் தேர்ந்தெடுத்த பிறகு, ஊராட்சி ஒன்றிய

மன்றத்தில் பெண்களையும் அட்டவணையில் கண்ட இனங்களைச் சேர்ந்தவர்களையும் அட்டவணையில் கண்ட பழங்குடிகளைச் சேர்ந்தவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் (நியமனங்கள் குழு அல்லாத வேறு) குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றிய 1966 ஆம் ஆண்டின் விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நடைமுறையானது, ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பெண்களையும் அட்டவணையில் கண்ட இனங்களைச் சேர்ந்தவர்களையும் அட்டவணையில் கண்ட பழங்குடிகளைச் சேர்ந்தவர்களையும் சேர்த்துக் கொள்வதற்குப் பொருந்தும்.

(1966 ஜுன் 21 ஆம் தேதியுள்ள 1552 ஆம் என் கிராம முன்னேற்றம்-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

76. ஊராட்சி ஒன்றியங்களில் (நியமனங்கள் குழு அல்லாத வேறு) குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெகுப்பது பற்றிய 1966 ஆம் ஆண்டின் விதிகள்.

1. சிறு தலைப்பு.—இவ்விதிகளை, ஊராட்சி ஒன்றியங்களின் நியமனங்கள் குழு அல்லாத வேறு குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது என்று சொல்ல வேண்டும்.

2. உறுப்பினர்களின் தேர்தல் நடத்தல்.—ஊராட்சி ஒன்றியத்தின் நியமனங்கள் குழு அல்லாத வேறு) குழுக்களுக்கு உறுப்பினர்களின் தேர்தலை, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர்களிலிருந்து, இதற்கெனத் தனியாகக் கூட்டப்பட்ட கூட்டத்திலே நடத்த வேண்டும்.

3. கூட்டத்தைக் கூட்டுவது.—(அ) ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதாயிருந்தால் அது முடிந்த பிறகு கூடிய விரைவில் அல்லது தற்செயல் காலி நேரிடுவதன் பேரில் அம்மன்றத்தின் பெருந்தலைவர் அக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

(ஆ) கூட்டத்தின் தேதியையும் நேரத்தையும் பற்றிய அறிக்கையை, கூட்டத்தின் தேதிக்குக் குறைந்தது தெளிவாக ஏழு நாட்களுக்கு முன் கொடுக்க வேண்டும்.

4. கூட்டத்துக்குத் தலைமை வகிப்பது.—பெருந்தலைவராவது, துணைப் பெருந்தலைவராவது, பெருந்தலைவர்,-துணைப் பெருந்தலைவர் இருவரும் வந்திரா விட்டால் தேர்தலில் வேட்பாளராக நிற்கக் கருதாதவரும் அச்சமயம் தலைமை வகிப்பதற்காக கூட்டத்தில் வந்திருக்கிற உறுப்பினர்களால் தெரிந்தெடுக்கப் பட்டவருமான ஓர் உறுப்பினராவது கூட்டத்துக்குத் தலைமை வகிக்க வேண்டும்.

5. முன்மொழிபவரும் வழிமொழிபவரும்.—(அ) தேர்தலுக்கான வேட்பாளர் ஒவ்வொருவரும் ஓர் உறுப்பினரால் முன்மொழியப் பெறவும் மற்றோர் உறுப்பினரால் வழிமொழியப் பெறவும் வேண்டும்;

(ஆ) கூட்டத்தின் தலைவர், அவ்வாறு முன்மொழியப் பெற்று வழிமொழியப் பெற்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட குழுவில் பணி செய்ய விருப்பமுள்ளவர்களாயிருப்பதை எழுத்து மூலமாகத் தெரிந்து கொண்ட பிறகு, அவர்கள் பெயரை எழுதி வைக்க வேண்டும்.

விளக்கம்.—இவ்விதிகளில், "கூட்டத்தின் தலைவர்" என்னும் சொற்றொடர் சந்தர்ப்பத்துக்கேற்ப, உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டத்தில் தலைமை வகிக்கிற பெருந்தலைவர், துணைப் பெருந்தலைவர் அல்லது உறுப்பினர் எனப் பொருள்படும்.

6. போட்டியுள்ள தேர்தலிலும் போட்டியிராத தேர்தலிலும் நடைமுறை.—(அ) போட்டியிடும் வேட்பார்களின் எண்ணிக்கை, நிரப்ப வேண்டிய இடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாயிருந்தால் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

(ஆ) போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்ப வேணடிய இடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாயிருந்தால், கூட்டத் தலைவர், அந்த வேட்பாளர்கள் எல்லோரும் குழுவிற்கு முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக உடனே வறிக்க வேண்டும்.

(இ) போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்ப வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்குத் குறைவாயிருந்தால், கூட்டத்தலைவர், போட்டியிடும் வேட்பாளர்கள் எல்லாம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக உடனே அறிவித்து, எஞ்சிய இடங்கள் சம்பந்தமாகத் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

7. வாக்களிப்பு அறையை ஏற்படுத்தி வைப்பது.—கூட்டத் தலைவர், கூட்டம் நடத்தப்படுகிற இடத்திலே, பிறர் பார்க்காதபடி உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளைப் பதியக் கூடிய வாக்களிப்பு அறை ஒன்றை ஏற்படுத்தி வைக்க வேண்டும். அன்றியும், கூட்டத் தலைவர், வாக்குச் சீட்டுகளைப் போடுவதற்காக, கூட்டத் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் பார்வையில், வாக்குச் சீட்டுப் பெட்டி ஒன்றை வைக்க வேண்டும். வாக்குச் சீட்டு பெட்டியானது வாக்குச் சீட்டுகளை அதில் போடக் கூடியபடியும், ஆனால், பூட்டினை அகற்றாமல் அல்லது பெட்டியைச்

திறக்காமல் அச்சீட்டுகளை அதிலிருந்து எடுக்க முடியாதபடியும் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

8. வாக்குச் சீட்டுப் பெட்டி வெறுமையாயிருப்பதைக் காட்ட வேண்டுமென்பது.—கூட்டத் தலைவர், வாக்கெடுப்பதற்கு அடுத்த முன், அங்கே வந்திருக்கக் கூடிய உறுப்பினர்கள் வாக்குச் சீட்டுப் பெட்டி வெறுமையாயிருப்பதைப் பார்க்கும்பொருட்டு அது வெறுமையாயிருப்பதை அவர்களுக்குக் காட்டி, பிறகு அதைப் பூட்டி, முத்திரையை உடைக்காமல் அதைத் திறக்க முடியாதபடி அதன் மேல் முத்திரை வைக்க வேண்டும்.

9. வாக்குச் சீட்டு.—வாக்களிக்க விரும்புகிற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் வாக்குச் சீட்டு ஒன்றைக் கொடுக்க வேண்டும்; அதில் வேட்பாளர்கள் எல்லாருடைய பெயர்களையும், ஆங்கிலத்திலும் தமிழிலும் அடியிற் கண்ட படிவத்தில் தெளிவாக எழுத வேண்டும்.

வாக்குச் சீட்டு.

ஊராட்சி ஒன்றிய மன்றம்.

மன்றத்தின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காகக் கிராமப்படி நேமகம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள்.

அ.

ஆ.

இ.

ஈ.

கூட்டத் தலைவர்.

வாக்குச் சீட்டை உறுப்பினரிடம் கொடுப்பதற்கு முன், கூட்டத் தலைவர் அதில் கையெழுத்துச் செய்ய வேண்டும்.

10. வாக்களிப்பதற்கான நடைமுறை.—உறுப்பினர், வாக்குச் சீட்டைப் பெற்றுக்கொண்டதும், தமது வாக்கைப் பதிவதற்காக வாக்கெடுப்பு அறைக்குச் சென்று, தாம் வாக்களிக்க விரும்புகிற வேட்பாளரின் பெயருக்கு எதிரில் வாக்குச் சீட்டில் சிலுவைக் குறிபோட வேண்டும். ஒருவருக்கு மேற்பட்ட வேட்பா

வர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்கள் எத்தனை பேர் இருக்கிறார்களோ அத்தனைக் குறிகளை உறுப்பினர் வாக்குச் சீட்டில் போடலாம்; ஆனால் ஒரு வேட்பாளரின் பெயருக்கு எதிரே ஒன்றுக்குமேற்பட்ட குறிகளைப் போடக்கூடாது. அவர், வாக்களிப்பு அறையி லிருந்து வெளியேறுவதற்குமுன், குறி மறைந்திருக்கும்படியாக வாக்குச் சீட்டை மடித்து, அவ்வாறு மடிக்கப்பட்ட வாக்குச் சீட்டை, கூட்டத் தலைவர் முன்னிலையிலுள்ள வாக்குச் சீட்டுப் பெட்டிக்குள் போட்டுவிட வேண்டும்.

11. எழுதப் படிக்கத் தெரியாதவர்கள், குருடர்கள் முதலியோர் வாக்க ளிப்பது.—(அ) எழுதப்படிக்கத் தெரியமலிருப்பது அல்லது குருடாயிருப் பது அல்லது வேறு உடல்குறை காரணமாக, ஓர் உறுப்பினர் வாக்குச் சீட்டைப் படித்து அதில் குறியிட முடியாமலிருந்து, அவ்வாறு செய்வதற்கு உதவி கோரினால் கூட்டத் தலைவர், அந்த உறுப்பினரின் விருப்பத்திற்கிணங்க வாக்குச் சீட்டில் வாக்கைப் பதிவு செய்து வாக்கு தெரியாமலிருக்கும்படி அதை மடிக்க வேண்டும்.

(ஆ) பின்னர், அந்த உறுப்பினர் தாமே அல்லது கூட்டத் தலைவர் உதவி யுடன், வாக்குச் சீட்டை வாக்குச் சீட்டுப் பெட்டிக்குள் போட்டுவிடவேண்டும்.

(இ) கூட்டத் தலைவர் இவ்விதியின்படி செயலாற்றுகையில் எவ்வளவு இயலுமோ அவ்வளவு இரகசியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்; அப்படி நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியைப் பற்றியும் சுருக்கமாக எழுதி வைக்க வேண்டும்; ஆனால், ஏதேனும் வாக்கு எவ்விதமாக அளிக்கப்பட்டிருக்கிறதென்பதைக் குறித்து அதில் குறிப்பிடக் கூடாது.

12. வாக்குகளைப் பதிவு செய்தல்.—உறுப்பினர் வாக்களித்து முடித்தபிறகு கூட்டத் தலைவர் வந்திருக்கிற உறுப்பினர்கள் முன்னிலையில் வாக்குச் சீட்டுப் பெட்டியைத் திறந்து, அதிலிருந்து வாக்குச் சீட்டுகளை வெளியே எடுத்து, வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையை ஓர் விவர அறிக்கையில் பதிய வேண்டும்.

13. வாக்குச் சீட்டுகள் செல்லாமற்போதல்.—ஒரு வாக்குச் சீட்டு—

(அ) அதில் சிலுவைக் குறி இல்லாவிட்டால், அல்லது

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய எண்ணிக்கையுள்ள வேட்பாளர்களை விட அதிகமான வேட்பாளர்களுக்குச் சாதகமாக அதில் வாக்குகள் அளிக்கப் பட்டிருந்தால், அல்லது

(இ) அதில் ஒரே வேட்பாளரின் பெயருக்கு எதிரே சிலுவைக் குறியும் வேறு ஏதேனும் குறியும் இடப்பட்டிருந்தால், அல்லது

(ஈ) அதில் ஏதேனும் குறி இடப்பட்டிருந்து அதைக் கொண்டு பின்னர் உறுப்பினரை இனங் கண்டுகொள்ள முடியுமானல், செல்லாததாகிவிடும்.

14. **தேர்தல் முடிவை அறிவிப்பது.**—வாக்குகளை எண்ணி முடித்ததும், கூட்டத் தலைவர், செல்லும்படியாகும் வாக்குகளை மிக அதிகமாகப் பெற்றுள்ள வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக உடனே அறிவிக்க வேண்டும்.

15. **வாக்குகள் சமமாக இருந்தால் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை.**—வாக்குகளை எண்ணி முடித்த பிறகு, வேட்பாளர்கள் எவர்களுக்கேனும் சமமான எண்ணிக்கையுள்ள வாக்குகள் கிடைத்திருப்பதாகத் தெரிய வந்து, ஒரு வாக்குச் சேர்ப்பதனல் அந்த வேட்பாளர்களில் எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுவதற்கு உரிமை உள்ளவராகி விடுவாராளுல், கூட்டத் தலைவர், திருவுளச் சீட்டுப் போட்டு அந்த வேட்பாளர்களில் யார் என்பதை உடனே தீர்மானித்து, சீட்டு விழுகிற வேட்பாளர் ஒரு வாக்கு அதிகமாகப் பெற்றிருந்தால் எப்படியோ அப்படியே செயற்படத் தொடங்க வேண்டும்.

16. **வாக்களிப்பு முடிந்த பிறகு தலைமை வகிக்கும் அலுவலரின் கடமைகள்.**—கூட்டம் முடிந்த உடனே கூட்டத் தலைவர்.—(அ) கூட்டத்தின் நடவடிக்கைகளை நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் பதிவு செய்து, அதில் கையெழுத்திடவேண்டும்; அதில் செய்யப்படும் ஒவ்வொரு திருத்தத்தையும், தமது சுருக்கொப்பத்தால், அத்தாட்சிப்படுத்த வேண்டும்; அன்றியும், கூட்டத்துக்கு வந்திருக்கி; ஓர் உறுப்பினர் அப் பதிவில் தாம் கையெழுத்துச் செய்ய விரும்புகிறரென்பதைத் தெரிவித்தால் அப்படியே செய்ய அவருக்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

(ஆ) தேர்தல் முடிவு பற்றிய அறிக்கை ஒன்றை, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளருக்கும், தமிழ்நாடு கிராம முன்னேற்ற இயக்குநருக்கும், பொதுவான அல்லது தனி ஆணை மூலமாக அரசினர் குறிப்பிடக்கூடிய வேறு அலுவலருக்கும் அல்லது அதிகாரிக்கும் அனுப்ப வேண்டும்.

(இ) குழுவின் உறுப்பினராக (னர்களாக) த் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் (ர்களின்) பெயரை(ர்களை)க் கண்டு தாம் கையெழுத்துச் செய்துள்ள விளம்பரம் ஒன்றை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அறிக்கைப் பலகையில் வெளியிட வேண்டும்.

17. வாக்குச் சீட்டுகளைத் தீர்வு செய்தல்.—(அ) பிறகு கூட்டத் தலைவர், வாக்குச் சீட்டுகளைத் தனிச் சிப்பமாகக் கட்டி, சிப்பத்துக்கு முத்திரைவைத்து, அதில் உள்ளவைகளைப் பற்றிய விவரத்தையும் அது சம்பந்தப்படுகிற தேர்தலையும் அதன் தேதியையும் அதில் குறிக்க வேண்டும்.

(ஆ) தகுதி வாய்ந்த ஒரு நீதிமன்றத்தின் ஆணைப்படியன்றி மற்றப்படி, இச் சிப்பங்களைத் திறக்கவுங் கூடாது, அவைகளில் உள்ளவைகளைப் பார்வையிடவுங்கூடாது, கொண்டு வந்து காட்டவுங் கூடாது.

(இ) இச் சிப்பங்களை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே ஓர் ஆண்டுக் காலம் பத்திரப்படுத்தி வைத்திருக்க வேணடும்; பிறகு தகுதி வாய்ந்த நீதி மன்றம் வேறுவிதமாகக் கட்டளையிட்டாலன்றி இவைகளை அழித்துவிட வேண்டும்.

(1966 மார்ச் 7 ஆம் தேதியுள்ள 556 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1966 மே 31 ஆம் தேதியுள்ள 68017/ 1/66-1 ஆம் எண் குறிப்பாணை.)

77. ஊராட்சி ஒன்றியத்தின் நியமனக் குழுவிற்கு உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது.—ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் துணைப் பெருந் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட நடைமுறை, ஊராட்சி ஒன்றியத்தின் நியமனக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கும் பொருந்தும்.

(1964 நவம்பர் 12 ஆம் தேதியுள்ள 2376 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(1966 மார்ச் 7 ஆம் தேதியுள்ள 555 ஆம் எண் கிராம முன்னேற்றம் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை.)

(112) ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பெருந் தலைவர் பதவி விலகல்—மாநில அரசுத் தலைமை வழக்கறிஞரின் கருத்து.—பெருந்தலைவர் ஒருவர் பதவி விலகும் பிரச்சினை பற்றி (1958 ஆம் ஆண்டின் 35 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படியும், (1920 ஆம் ஆண்டின் 5 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிச் சட்டத்தின்படியும் நிலைமை ஒன்றாயிருப்பதாகவே தெரியவரும். அந்த நிபந்தனைகளின்படி (அதாவது, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பெருந்தலைவர் சம்பந்தமாக 2 ஆவது விதியின்படியும்,

நகராட்சி மன்றத்தின் பெருந் தலைவர் சம்பந்தமாக மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் கண்ட 3 ஆவது பிரிவின்படியும்) பதவி விலகுவது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் மாவட்ட நகராட்சி மன்றத்தின் முன் அது வைக்கப்படு கிற தேதியிலிருந்து செயற்படத் தொடங்கும்.

2. மன்றத்தின் முன் ஒரு முறை இந்தப் பதவி விலகல் கடிதம் வைக்கப் பட்டு விட்டால், பிறகு அதைத் திரும்பப் பெறும்படி பெருந் தலைவரைக் கேட்டுக்கொண்டு அம்மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றுவதற்கு வாய்ப்பில்லை. பதவி விலகல் செய்தவரை பெருந் தலைவராக வைத்துக்கொள்ள மன்றம் விரும்பினால், அதற்குண்டான ஒரே வழி அவரை, மீண்டும் பெருந்தலைவராகத் தேர்ந்தெடுப்பதுதான். இப்படிச் செய்யப்பட்டுவிட்டால், அவர் மீண்டும் மன்றத்தின் பெருந் தலைவராகத் தம் பதவியை மறுபடியும் வகிப்பார்.

3. பதவி விலகலைப் பற்றி மறு யோசனை செய்யும்படி பெருந்தலைவரைக் கேட்டுக் கொள்வதற்கான தீர்மானம் எவ்வாற்றாலும் சட்டச் செல்லுமையை உடையதாகாது; அதனால் எவ்விதப் பலனுமில்லை.

4. ஆகவே, நிலையைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

(அ) ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் பெருந் தலைவர் தமது பதவி விலகலைப் பற்றி மன்றத்திற்கு அறிக்கை அனுப்புவது மூலமாக பதவி விலகல் செய்கிறார்.

(ஆ) அந்தப் பதவி விலகல் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு முன் வைக்கப்படுகிற தேதியன்றும் அத் தேதிமுதற்கொண்டும் அந் நிலையிலேயே செயல்படத் தொடங்குகிறது; அதற்குப் பிறகு, அந்தப் பெருந்தலைவர் மன்றத் தின் பெருந்தலைவராகத் தொடர்ந்து இருந்து வருவது சாத்தியமாயிருக்கும் பொருட்டு, பதவி விலகலைத் திரும்பப் பெறுவதற்கு இடமில்லை.

5. மன்றக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் அவ் விஷயம் சேர்க்கப்பட வில்லை என்னும் செய்தி பொருத்தமற்றது; ஏனென்றால் பெருந் தலைவரின் பதவி விலகல் பற்றி மன்றத்தினர் ஆலோசனை செய்வதற்கு அவசியமில்லை. ஒரு விஷயம் மன்றத்தால் ஆலோசிக்கப்பட வேண்டியிருந்தால் மட்டுமே அதை நிகழ்ச்சி நிரலில் சேர்க்க வேண்டும். பெருந் தலைவரின் பதவி விலகல் அத்த கைய ஒரு விஷயமன்று. செய்ய வேண்டியதெல்லாம் என்னவென்றால், பதவி விலகல் பற்றி மன்றத்துக்குத் தெரிவிக்க வேண்டும். "மன்றத்தின்முன் வைத்தல்" என்பதற்கு இதுதான் உண்மையான பொருள்.

6. 27 உறுப்பினர்களில் 22 பேர்தான் வந்திருந்தார்கள் என்று கூட ஆட்சேபனை செய்வதும் பொருளுள்ள ஆட்சேபனை அன்று. வந்திருந்தவர்களின் எண்ணிக்கையானது, கூட்டத்துக்கென ஏற்பட்ட குறைவெண் வரம்புக்கு மேற்பட்டதாகையால், மன்றத்தின் கூட்டம் செல்லுபடியாகும் கூட்டம் என்பதற்கு ஐயமில்லை. ஆகவே, பெருந் தலைவரின் பதவி விலகலை அத்தகைய ஒரு கூட்டத்துக்கு முன் வைப்பதானது, 2 ஆவது விதியை நிறைவேற்றியதாக ஏற்படும்.

(1966 செப்டம்பர் 2 ஆம் தேதியுள்ள 218966/ 1/65-9 ஆம் எண் குறிப்பாணை.)

[illegible]